1032

# சித்த மருத்துவம்

இயற்றியோன்:
க. ந. குப்புசாமி முதலியார், H.P.I.M.
பேராசிரியர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி, சென்னை.

©
தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரிய வெளியீடு
1987

# சித்த மருத்துவம்

இயற்றியோன் :

க. நா. குப்புசாமி முதலியார், H.P.I.M.

பேராசிரியர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி, சென்னை

©

தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரிய வெளியீடு

1987

முதற்பதிப்பு : 1954
இரண்டாம் பதிப்பு : 1987

விலை : ரூ. 86-90.

அச்சிட்டோர் :
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை.

1032

TO

## Dr. M. R. GURUSWAMY MUDALIAR, B.A., M.D.

*Honorary Director of Indigenous Medicine, Madras.*

This work is with permission Dedicated by the Author



சென்னை-106

நாள் : 12-9-86

## பதிப்புரை.

மதிப்புமிகு மருத்துவர் ம. ரா. குருசாமி முதலியார் அவர்களால் உருவாக்கப்பட்ட 'சித்த மருத்துவம்' எனும் இந்நூல் மறுபதிப்பாக வெளிவந்து உங்கள் கரங் களிலே தவழ்கிறது.

தமிழ் மருத்துவம் என்று போற்றப்படும் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துவரும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த என் நன்றி உரித்தாகட்டும். முதல்வர் வழிநின்று செவ்வனே செயல்புரிந்து வரும் மாண்புமிகு நலத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களுக்கு என் நன்றிகள்.

சித்த மருத்துவம் சிறக்க சிந்தித்து செயல்படும் எம் வாரியத் தலைவர் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவ நாதம் அவர்களை என் இதயம் என்றென்றும் நின்று பணியும். விரும்பி இன்முகத்தோடு கேட்டவைகள் அனைத்தையும் எங்களுக்களித்திடும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் மற்றும் அரசு செயலர் திருமிகு டி. முருகராஜ், இ.ஆ.ப., அவர்களுக்கும் நன்றியை உரியதாக்குகிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்கு பெரிதும் துணைநின்ற ஆய்வு மருத்துவ அலுவலர் மற்றும் தனியலுவலர் டாக்டர். வெ. அருணாசலம் அவர்கட்கு என் அன்புநிறை நன்றி நிறைக. அவருக்கு துணைநின்று இந்நூல் உருவாக் கத்தில் பங்கு கொண்ட தமிழ்ப் புலவர்கள், அலுவலகப் பணியாளர்கள் அனைவர்க்கும் நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த அரசு மைய அச்சகத்தார்க்கும் நான் நன்றியுடை யேன்.

ஒப்பம்
குத்சியா காந்தி

# சித்த மருத்துவம்

## சிறப்புப்பாயிரம்

### நிலைமண்டில ஆசிரியப்பா

முப்பண் புடையாய் முச்செயல் முதல்வ
முப்பண் பொன்றில் மொழியுமைம் பொருளை
நுண்பொருள் பருப்பொருள் நுவல்வன யாவும்
உண்டைப் பகுதிக ளுள்ளவும் படைத்ததில்
உயிர்ப்பொரு ளுடனே உயிரில் பொருளும்
இயங்கியற் பொருளும் இயங்காப் பொருளுமாய்
வையகத் தோரேழ் வகையத் தனையும்
உய்யு மறிவையும் உவப்பத் தந்தே
உயிருக் குயிராய் உயர்சிவப் பொருளே!
உயரிய மருத்துவம் உலவிடச் செய்த
நந்தி முதலோர் நயம்பட விளக்கப்
பன்னாள் நிலைத்துப் பயன்பெறு மருத்துவம்
சீர்பெற் றோங்கிடச் சீகா ளத்திப்
பேர்பெறும் அமைச்சரில் பெரும்புகழ் வாய்ந்தோர்
இனமெலாம் போற்றிட இலங்கிய வாண்மைப்
பனகால் அரசர் பாருளோர் வியக்க
ஆண்டுகள் இருபத் தேழின் முன்னர்
ஈண்டிய மேன்மை இந்திய மருத்துவப்
பள்ளி யமைத்தும் பண்புறு சித்தர்நூல்
தெள்ளிய முறையிற் றிகழ்ந்திடத் தலைவர்
சீனி வாச மூர்த்தி முயற்சியின்
நானில மேற்க நன்முரு கேசவேள்
மூந்தை முறையின் வெளியிட மற்றவை

சிந்தையிற் கொண்டு செவ்வே நிலவ
எல்லோர் தமக்கும் இனிதே யுளுற்றும்
எல்லெனத் தோன்றிய வேந்த லாய
சித்தஞ் சிவமாத் திகழ்குரு சாமியின்
நத்திய மொழியி னன்குப்பு சாமீ
கரவாண்டு தன்னில் கலந்த மாசியில்
திரம்பெறு சிவராத் திரிநா டன்னில்
சித்த மருத்துவந் திகழ்பெரு நூலைப்
பொத்தறு மருத்துப் புலவோ ரேற்கச்
செழித்தோங் கிடவே சீர்மைப் படுத்தி
மொழிந்தனன் மேதினி முன்னுதற் கெனவே.

# முன்னுரை

சித்த மருத்துவம் பெருத்தோங்குதற்கெனவே மருத்துவப் பேராசிரியர் உயர் திருவாளர் M. R. குருசாமி முதலியார், B.A., M.D., அவர்கள் நம் இந்திய மருத்துவ இயக்குநராக வந்து அமைந்தனர் போலும். இன்னவர் இத்தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டமையின், சித்த வகுப்புக்கான நூல்கள் பல இல்லாதிருப்பதைக் கண்டு, அவைகளைத் தொகுத்து அச்சிடுவதற்கான எல்லா உதவிகளையும் எங்களுக்கு அளித்து, இதுவரை நான்கு நூற்களை வரைந்து அச்சிட்டு வெளியிடுதற்குத் துணைபுரிந்தார். இன்னவர்க்கு யாமேயன்றி, சித்த மருத்துவரும், தமிழ்நாடும் என்ஞான்றும் நன்றி செலுத்தக் கடப்பாடுடையதாகும்.

இந்நூலைத் தொகுத்து வரைதற்கு, முன்னாள் அரசியல் இந்திய மருத்துவப்பள்ளி, சித்த வகுப்புத்தலைமை ஆசிரியராக இருந்த வைத்திய ரத்தினம் க. ச. முருகேச முதலியார் அவர்கள் எழுதிவைத்த சித்த மருத்துவ குறிப்பினைக் கொண்டும், யான் அவர்க்குப்பின் பத்தாண்டுகளாகப் பிள்ளைகட்கு மருத்துவம் கற்பித்துக்கொண்டு வந்தபோது, சிறிது சிறிதாக அப்போதைக்கப்போது கண்டனவற்றைச் சேர்த்து, இதுவரைக் கண்ட நூலன்றிக் காணா நூற்கள் பலவற்றைத்தேடிச் சேமித்து வைத்து அவைகளை ஆராய்ந்து தொகுக்குங்கால் ஓர் ஐயம் எம்மனதிற் றோன்றிற்று. அஃது தமிழில் வரைந்த எந்நூற்களைப் பார்க்கினும் வடமொழிப் கலப்புடன் கூடியிருத்தலோடு, நோயின் பெயர்கள் முதலியனயாவும் வடமொழிப்பெயரிட்டு அமைந்திருத்தலின், பாமர மக்கள் இதன் பொருளை எளிதில் அறியக் கூடா நிலையில் இருக்க, அவைகளை உள்ளது உள்ளவாறு தொகுத்துத் தமிழில் வரைந்து, இஃது பண்டைத் தமிழ் மருத்துவமென வெளியிடுவோமாயின், அஃது எவ்வாறு பொருந்தும்? எவ்வகையில் தமிழ் மக்கள் யாவர்க்கும் பயன்படும்? எனச் சிந்தித்து நின்ற நிலையில், ''துணிந்தவனே ஞானியாவன்'' என ஓர் துணிவு

கொண்டனம். அத் துணிபின்படி எழுதிய இச் சித்த மருத்துவம் என்னும் நூலில் நோயின் பெயர் முதலிய யாவையும் தமிழ் முகமன் எவரும் அறியும் நிலையில் தமிழ்ப் பெயர்களாகவே அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு வடமொழிச் சொற்களைத் தமிழ் ஆக்கி எழுதிய தற்கு அகப்புற எதிர்ப்புகள் எத்துணையதாக இருக்கக் கூடுமென இனிச் சிந்திக்கவுமான ஓர் நிலையும் வருதல் கூடும்.

நமக்கு இன்றைக்குக் கிடைக்கக்கூடும் சைவ நூற்கள், சித்த மருத்துவ நூற்கள் யாவையும் நோக்கின், அவற்றுள் அடங்கிய சொற்கள் பெரும் பாலும் இருமொழிக் கலப்பாக உள்ளனவற்றில், வடமொழிச் சொற்களை உள்ளது உள்ளவாறு அமைத்து வரையின், தமிழ் மக்கள் எவ்வாறு அவ்வடமொழிச் சொற்களின் பொருளினை அறிவர்? அல்லது வடமொழியாளர் அறிவரோ?

அவ்வகையில் எழுதிய நூற்கள், சில மக்கட்கே பயன் அளிக்குமே யொழிய பொது மக்கட்குப் பயன் அளிக்காதெனவே யாம் முதற் கொண்ட துணிபோடு இந்நூலை முடித்தனம்.

நாட் செல்லச் செல்ல எல்லா எதிர்ப்புகளும் தாழ்ந்து, இனி வரை யும் நூற்களை வடசொற்கலவாது தூய்மையான தமிழ்ச் சொற்கள் அமைந்த நூற்களாக ஆக்கப் பலரும் முயல்வாரென்பதே யெமது நோக்கம்.

மக்கட்டோற்றமே தமிழ்நாட்டில் என, நில நூலோர் முதல் எல்லா அறிஞரின் கூற்றாகலின், தமிழ் மொழி, கலை, பேரறிவியல் (சைவ சித்தாந்தம்) சித்த மருத்துவம் யாவும் எவற்றிற்கும் முற்பட்டதென இருக்க, பண்டைய தமிழ் நூற்கள் யாவும் வடமொழி வழித்து எனக் கூறு வார்க்குத் துணையாக இருந்தவர்கள் தமிழர்களே, அவர்கள் எழுதிய நூற்களில் வட சொற்களைப் பெரிதும் ஆண்டது தம் வடமொழிப் புலமையைக் காட்ட வந்த இழுக்கத்தாலன்றோ இக்கேடு விளைந்தது! இனியாகிலும் தமிழ் மக்கள் எழுதும் நூற்களைத் தூய தமிழில் எழுதத் துணிவராயின் நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டியவராவர்.

சித்த மருத்துவத்தின் சிறப்பு, சித்த மருத்துவத்திற்கும் சைவப்பேரறிவிய லுக்கும் உள்ள தொடர்பு, தமிழ் நாட்டின் பெருமை யாவும் இந்நூலின் அணிந்துரையில் விளக்கியுள்ளமையைக் காண்க.

இந்நூலை வரைந்து அச்சிட்டு வருங்கால் பிழைகளைக் களைந்து அவ்வப்போதைக்கெழும் ஐயப்பாடுகளை நீக்கிப் பிழையின்றியும் அழகாகவும் அச்சிட்டு வெளியாக்கத் துணையாயிருந்தோர்களாகிய பண்டிதை திருவாட்டி எஸ். கிருட்டிணவேணி அம்மைக்கும், மருத்துவப் புலவர், தமிழ்ப் புலவர் திரு. சி. குமரகுரு செட்டியார் அவர்கட்கும், அரசியலார் அச்சகம் சூப்பரின் டென்டெண்ட் அவர்கட்கும் எம் நன்றி நன்னன்றியாகுக.

அரசகம், சென்னை–10, க. ந. குப்புசாமி.
சிவராத்திரி, கர ஆண்டு.

# அணிந்துரை

"சீவ னென்னச் சிவனென்ன வேறிலை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே" (திருமந்திரம்.)

சீவன் சிவனே எனக் கொண்ட தமிழ் நாடு தொன்றுதொட்டு வந்த நாடாகும். நிலப் பரப்பிலே முதன்மையுடையது இந்நாடே என்பது நில நூலார் கொள்கை.

மக்கள் நீடூழி உய்ந்து பிறவாநிலை யெய்தற் பொருட்டாகச் செய்த சித்தாந்த நூற்களும், மணி மந்திர மவிழ்தமெனும் மருத்துவ நூற்களும் தமிழ் நாட்டிலே பிறந்து பிற நாட்டினரும் அவைகளைப் பின்பற்றி வந்திருக்க, தமிழரின் கலை, கடவுள் வழிபாடு, அவைகளுக்கான முதற் நூற்களும், மருத்துவமும் பிறவும் வட நூலின் பகுதிகளென்று கூறுவது வியக்கத்தக்கதேயாம்.

அதனினும் வியப்பு, தமிழ் மருத்துவம் (சித்த மருத்துவம்) இருபத்தைந்தாண்டுகட்கு மேல், சென்னை அரசினரால், சென்னையில் மருத்துவப் பள்ளியொன்றமைத்து, அப்பள்ளியில் சித்த மருத்துவமோர் பகுதியாக வமைத்து, அன்று முதல் இன்றுவரையில் பல மாணவர்கட்குச் சித்த மருத்துவம் கற்பித்து, அவர் தேர்தலிற்றேறி, நற்பெய ரெடுத்து வரும் இந்நாளில், சித்த மருத்துவமென்பதென்ன? இஃது ஆயுர்வேத மருத்துவத்திற் கெவ்வாறு வேறுபாடுடையது என அரசினரும், மற்று மேனையோரும் கேட்பதேயாகும். இக் கடாவுக்கு விடையாக இந்நூல் அணிந்துரையில் தென்னாட்டின் தொன்மை, மக்கள் வாழ்க்கை, கலை வளர்ச்சி, கடவுளின் இயல், கடவுள் வழிபாட்டிலக்கணம், மருத்துவம் இவைகளின் சிறப்பு முதலியவற்றை விரித்துக்கூற வேண்டியதாயிற்று.

**தமிழ் நாட்டின் தொன்மை.**—தமிழ்நாட்டின் தொன்மை, வாழ்க்கை நிலை, மொழியின் சிறப்பு, கலை வளர்ச்சி, கடவுளின் வழிபாடு முதலியவற்றின் அருமை பெருமைகளை நம்மனோரே அறியாது, பிறநாட்டின் தொன்மை, வாழ்க்கை நிலை, மொழி, கடவுளியல் முதலியவைகளைக் கண்டு மகிழ்ந்த நாளும் ஒன்றிருந்தது. அஃது தமிழ்நாடு தொன்று தொட்டு இருந்து வந்தமையாலும் பல்வேறு நிலவேற்றுமைகள் இயற்கையிற்றோன்றினமையாலும், அரசியல் மாறி மாறி வந்தமையாலும், தமிழ் மக்கள் தங்கள் உண்மை நிலையை அறிதற்குப் போதிய நூற்கள் கிடைக்காமையாலும், அந்நாளில் தங்களிடமிருந்து கற்றுணர்ந்தாரைப் போற்றுவாராயினர். தமிழர் தாழ்ந்தாராயினர். அவ்வாறுறங்கிக் கிடந்த நாட்கள் போய், உண்மை நிலையை நம்மனோரும் மற்ற யாவரும் அறியும்படி முதல் முதல் நம்நாட்டின் தொன்மை, நாகரீகம், கலை வளர்ச்சி, மொழியின் நிலை, கடவுளியல், வழிபாடு முதலியவைகள் என்னாட்டிற்கும் முற்பட்டதென அறிவித்தோர் மேனாட்டு அறிஞரேயாவார். அவர்கட்கு நாம் எஞ்ஞான்றும் கடமைப் பாடுடையோம். நம் நாட்டின் நில அமைப்பு (Geology), புதை பொருள் (Excavations and fossil), மக்களுடலமைப்பு (Anthropology) சிற்ப முதலிய கலையின் சிறப்பு (Archaelogy) பொருளியல், அரசியல் அறிவு முதலியவைகளை நன்கு ஆராய்ந்து கூறியதனால் இன்றைக்கு நம் நாட்டினைப் பற்றி வலியுறுத்திப் பேசுதற்கும் எழுதுதற்கும் இடந்தந்தது.

வையகத்துள் மக்கட்டோற்றமே முதன் முதல் தென்னாட்டில் (Deccan) எனக் கூறுதற்குச் சான்றுகள், நம் நாட்டின் தட்பவெப்ப நிலையைக் கொண்டும் புதைப் பொருள்களைக் கொண்டும் ஆராய்ந்த அறிஞர் கூற்று. இன்றைக்கு இச்சிறு அளவில் காணும் நம் நாடு பன்னாட்கு முன் மிகப் பெரிய நிலப் பரப்போடு, இப்போதைக்குள்ள தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆத்திரேலியா முதலிய நாடுகள் மேற்கு, கிழக்கு, தெற்காக ஒன்றாய் இணைந்திருந்த நாடெனக் கூறுவதற்குச் சான்று, இப்போதைக்குக்காணும் தென் அமெரிக்கா, தென்ஆப்பிரிக்கா, சாவா, சுமத்ரா, மலேயா, ஆத்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளில், இந்நாளில் கிடைக்கும் மண்படு பொருள்களில், நடப்பன, பறப்பன போன்றவைகளின் சிதைவுகள் (Fossils) யாவும் ஒன்றுபட்டிருத்தலாலென்க.

ஒன்று கூடியிருந்த இந்நாட்டினை, லெமூரியாவென்றும் கோண்ட்வானா வென்றும் முறையே உயிர்ப்பொருள் அறிஞரும் நில அமைப்பியல் நூலோரும் கூறுவர்.'' [1]

இந்நிலப் பரப்பில் சற்றேறக்குறைய நூற்றைம்பதாயிரம் ஆண்டு கட்கு முன் வாழ்ந்த மக்கள் வீடு வாசலின்றி ஓரிடமில்லாது திரிந்தன ரென்றும் அறியக்கிடக்கும்.

மாபெரும் இந்நிலப் பரப்பு நாளடைவில் கடல்கோள்களாலும், நில அதிர்ச்சிகளாலும், எரி மலைகளாலும் சிதைவுண்டு பல பிரிவுகளாகச் சிறிதும் பெரிதுமான தீவுகளாகப் பிரிந்தன. ஓர் பெரிய நிலம் சிதைந்து கடலால் பிரிக்கப்பட்டு நின்ற நிலையில், அந்நிலங்களில் தட்பவெப்பத் திற்கேற்ப அதில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையும் அமைந்தன. இவற்றுள் நடுப்பகுதியில் நின்ற தீவுகளில் நிலைத்த மக்கள் (தமிழர்) நாளுக்கு நாள் திருத்தமடைந்து நாடுகளைச் சீர்மைப்படுத்தி உணவுப் பொருள்களைப் பயிரிடவும், இருக்க வீடுகள் அமைத்தும், நல்வாழ்வோடு வாழ்ந்து வரும் நிலையை அடைந்தனர். பின்னர், அவர்கள் மக்கள் ஒழுங்கோடு வாழும் பொருட்டு அரசும் அமைத்து வாழ்ந்தனர். அரசையே கடவுளாகவும் வணங்கினர். இத்தீவுகளில் நாவல் மரமடர்ந்த நாட்டினை நாவலந்தீவெனவும், பெண்ணரசியல் நாட்டினை குமரி நாடெனவும் வழங்கலாயினர். அக்காலத்தில் அரசையே கடவுளாகக் கொண்டு தொழுதனர். அஃது ஆண் அரசாகினும் பெண்ணரசா கினும் அதற்கேற்பத் தொழுதனர்.

பின்னர் அரசுக்கு மேன்மையான ஒரு பொருளுண்டெனக் கொண்டு அம்மை வழிபாடுண்டாய், அதற்கு மேலானது ஆண் எனக்கொண்டு அப்பன் வழிபாடும் கொண்டனர். ஆண் தனியாகவும், பெண் தனி யாகவும் கொள்ளின் ஒன்றின்றி மற்றொன்று இயங்காதென இரண்டையு மொன்று கூட்டி இலிங்க வழிபாடுண்டாக்கினர்.

இந்நாடுகளில் வாழ்ந்த மக்கள் நாளுக்கு நாள் சீர்மையடைந்து தம் மொழியில் (தமிழ்) வல்லுனராகி எல்லாக் கலைகளிலும் தேர்ச்சியடைந்து நிலங்களைப் பாகுபாடு செய்து நாட்டையாளுந் திறமை பெற்றோங்கி வரும் நாளில், அந்நாட்டைச் செங்கோன் என்னும் அரசன் ஆண்டு

---

1 Deccan itself is one of the most ancient geological formations in the world since the dawn of history, the home of Dravids the oldest of Indian ace, P-2 The people of India S. H. RISLEY.

வந்தானென இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் (செங்கோன்றரைச் செலவு என்னும் நூலால் அறியக் கிடக்கும். இந்நூலில் நாட்டின் சிறப்பு, அதைச் சுற்றி யிருந்த நாடு, மலை, ஆறு, ஊரின் பெயர்கள் அந்நாளிற் செய்த இலக்கிய நூல்கள், கடவுள் வழிபாட்டிற்காகச் செய்த நூல் (Siva Sidchantha Philosophy) யாவற்றையும் பற்றிய குறிப்பு களைக் காணக் கூடும். அந்நாளில் தமிழில் செய்த சைவ நூலினை, வடமொழியில் மிருகேந்திர ஆகமம் என்னும் பெயரால் செய்த நூலிலும் அந்நாட்டைச் சுற்றியிருந்த ஏழு தீவின் நடுவிலிருந்த நாவலந் தீவும், குமரி நாடும் மிகப் பெரிதெனவும் அவைகளின் பெருமைகளையும் கூறும். குமரி நாட்டில், பஃறுளி ஆறு, குமரி ஆறு, மேருமலை முதலியவை களைப் பற்றியும், பஃறுளி ஆற்றங்கரையில் அமைந்த மதுரையில் செங் கோன் ஆண்டு, ஆங்கு முதற் குழாமமைத்து எண்ணெண் கலையிலும் மக்கள் நலமடையுமாறு, பல நூல்களைத் தமிழ் அறிஞரைக் கொண்டு செய்வித்தானென அறியக்கிடக்கும். இந்நாடும் கடற்கோள் வாய்ப் பட்டுச் சிதைந்தது. இதனை இரண்டாம் ஊழியெனக் கொள்வர் இதனை :—

" சம்புத்தீவினுட்டமிழக மருங்கில் "
(மணிமேகலை.)

" இமிழ் கடல் வரைப்பில் றமிழக மறிய "
(சிலப்பதிகாரம்.)

" நாவலப் பெருந்தீவில் வாழ்பவர் "
(அப்பர்.)

" இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க "
(பத்துப்பாட்டு.)

என இந்நாடுகளைப்பற்றிக் கூறியதோடு பஃறுளி யாற்றுடன் " பன் மலையடுக்கத்துக்குக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" எனச் சிலப் பதிகாரத்தால் அறியப்படும்.

இரண்டாங் கடல் கோளுக்குப் பிறகு, கபாடபுரம் தமிழ் நாட்டின் தலை நகராக விளங்கிற்று. ஆங்கும் ஓர் தமிழ் குழாம் அமைத்தனர். இஃது இடைச்சங்க காலமாகும். அந்நாளில் ஒழுக்கம், கலை வளர்ச்சி, நாகரீகம் யாவும் தலை சிறந்து விளங்கின. அக்காலத்து வாழ்ந்த மக்களின் மொழி, கல்விப்பெருக்கு, அறம், பொருள், இன்பம் யாவை யுங்கொண்டு வாழ்ந்த வாழ்க்கை, நில வகுப்பு, நாட்டரசியல் ஆகிய யாவற்றையுங் கூறுவாம்.

மொழி.—உண்டைப் பகுதிகளின் பிறக்கமே, பெரியோனின் (கடவு ளின்) செயலாலும் அன்பினாலும் பிறந்த அணுவிலிருந்து (சுரை) நுண் திரளாகக்கூடி, பருப்பொருளாகத் திரண்டு உண்டாய், அதில் பிறந்த உயிர்ப்பொருளும் வடிவிலும் அறிவிலும் சிறிதாகத் தோன்றி அவைகளின் பண்பிற்கும் செயலுக்கேற்ப நாளடைவில் பெருக்கத்தை யடைந்து, ஓரறிவு முதல் ஆறறிவோடு நிலைத்து விடுதலுமான பெருக்கத்தை யடைந்த மக்கள், அந்நாளில் தம் மனதிற் றோன்றிய எண்ணங்களைப் பிறர் அறியுமாறு தலை, கால், கை முதலியவைகளை அசைத்துக் காட்டியும், வாயால் ஒலித்துக் காட்டியும் அறிவுறுத்தி வந்திருத்தல் வேண்டும். இவ்வகையை நாம் இன்றும் உயிர்ப்பொருள்களில் புள் முதலியவைகள் தம் குரலொலியாலும் தலை, கால், இறகு முதலியவை களைக் கொண்டும் அவைகளின் இனங்கட்குத் தம் எண்ணங்களைக் காட்டி அறிவிப்பதை நாம் காணக்கிடக்கும்.

மக்களின் அறிவு தெளியத் தெளியப் பேச்சொலி சீர்மை யடைந்து மக்களின் ஒலிக்குறியை அக்கூட்டத்தினர் யாவரும் நன்கறியும் நிலையை யடைந்த போது, மொழிந்த ஒலியதனின் பொருள் எதிரிலிருந்து கேட் போரன்றி, கேளாதாரும் அறியும்படி அவ்வொலிக்கேற்ப வடிவு வேண்டும் என்னும் ஓர் எண்ணம் தோன்றியபோது எழுத்துண்டாயது.

மொழிவது மொழி எனப்படும் ; மொழிந்த ஒலியின் குறியை எழுது வதால் எழுத்தெனப்படும் ; எழுதியது மொழிந்ததின் வடிவேயாகையால் இதனையும் மொழியெனக் கொண்டனர்.

பேச்சொலி தட்பவெப்பத்திற் கேற்பவும், மொழிபவரின் பண்பிற்கேற் பவும் ஒலி வேறுபாட்டையும் எடுத்துக் காட்டாகக் கூறின், குளிர் நாட்டி லுள்ளோர் பேச்சொலி மெல்லியதாகவும், வெப்ப நாட்டினருடைய பேச் சொலி கடினமாகவும், பண்பில் தூய்மையோடிருப்பின் பேச்சொலி நயப் பாகவும், சினப் பண்புடையோர் பேச்சொலி உரத்தும் இருக்கும். அதற் கேற்ப வடிவும் அதன் இனமும் (எழுத்தும்) அமையும்.

முதல் முதல் பிறந்த நாடு தமிழ் நாடாகையால், முதல் முதல் மண்ணிற் றோன்றியவர் தமிழ் மக்களாதலானும் தமிழ் மொழி ஒன்றே எம்மொழிக்கும் முற்பட்டதென மொழிதல் மிகையாகா. இதனை,

" இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூத மைந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி

அந்தரத்தின் தேவர்க்கும் அறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட்டு அந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தில் மறவா தென்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ் சம்மே. "

திருமங்கை ஆழ்வார்.

நாலாயிரப் பிரபந்தத்தாலும் ஏனையோர் கூறுவதாலும் அறிக.

*Mail* 12–2–51

"The Tamil which seems to be the oldest language of the so called Dravidian group of languages grew independently of any language." Declared Professor U. R. Ramachandra Dikshitar Professor, Indian History, University of Madras, as he speaks of South Indian languages.

"It is certain Vetta eluthu could not have been derived from Asokan charters, nor the Asokan charters from Vetta eluthu; so both Brahman and Vetta eluthu are independent, the first more allied to Sanskrit and the second to Tamil"

"And distinct contribution of the ancient Dravidian to world culture is the Dravidian tongue. The group of agglutinative dialects with few exceptions bore to the ancient Tamil language primarily as their parent. Can we say that services of Dravida was to give tongue to the tongueless?"

Origion and spread of Tamils—P. 39

"And this will confirm the conclusion that Dravidian tongue prevailed in North India before Ariyan came and occupied it. The same conclusion is forced upon us by the examination of the Vernaculars of north that even the Vernacular Bengalee which bristles with Sanskrit and derivative words, is indebted to Dravidian language for pretty large portion of vocabulary and structural peculiarities. What is strange is, even in Hindi, Dravidian word can be traced." (Lecture on Ancient History of India.)

(Sd.) Dr. Bandarkar.

எம் மொழியேனும் நாளுக்கு நாள் தம்மோடு கூடி வாழ்ந்தவரோடு பேசிப் பழகி வருங்கால், அவர்களின் சொற்களில் சிலவற்றை யாண்டு தம் மொழியோடு கூட்டிப் பேசுவதும், எழுதுவதும் இயற்கையாம். இதிலும் சில மக்கள் புதிதாகக் கூடிய மக்களோடு மிகுந்த தொடர்பு கொண்டு வந்த அன்பினால், அவர்களைப் போல் பேசவும் எழுதவும்கூட விரும்புவதுண்டு.

இவ்வாறு தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்கள் பாகுபாடடைந்து தமிழும் வட மொழியுங் கூட்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, வங்கம், மராத்தியம் முதலிய மொழிகள் உண்டாயின. இஃதன்றி பிற்காலத்தில் ஒரு மொழியோடு மற்ற மொழி கலவாது ஒருவர் கொண்ட பொருளின் சொற்களை மற்றவர்கள் தம்மொழியிற் கூட்டிக் கொள்வதும், அம்மொழிக்கான ஒலி வடிவு (எழுத்து) கண்டு பிடித்தலும் இயல்பேயாதலால், தமிழ் முதல் எழுத்தின் தொகையே முப்பதாகை யாலும் பிறர் எழுத்தினைத் தம்மெழுத்தோடு கூட்டி வைக்க மனமில் லாமையாலும் புதிதாகக் கூட்டவேண்டி ஒலிகட்கு வடிவிட்டு (எழுத் திட்டு), தனித்துக் கிடத்தினர். அவ்வாறு செய்தவர் தமிழராவர். அவ் வெழுத்துக்கள் ஸ, ஷ, க்ஷ, ஜ போன்றவைகளாம். அல்லது அவ் வொலிக்குச் சற்றேறக்குறைய பொருந்தும் வகையில் தம் எழுத்திலேயே அமைத்தலுமாம். பாஷாணம் என்பதற்குப் பாடாணம் என்றும், ஜாதிக் காய் என்பதற்குச் சாதிக்காய் என்றும் தமிழில் உள்ளது போல், வட நாட்டார் சுழுமுனை என்பதை சுஷூமுனா என்றும் அமைத்துக் கொள் வதாகும். அதற்குப் பின் இலக்கணமும் அமைப்பதுண்டு (பாணினி).

குமரி நாடு, நாவலந் தீவு போன்ற ஏழு தீவுகளில், கலைவளர்ச்சிகள் கூடியிருந்த தமிழ் நாடு பன்னிரண்டு ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே, அதில் வாழ்ந்த தமிழர் சீர்மையை யடைந்து, இயல், இசை, நாடக மெனச் செந்தமிழ் நடையில், முதல் குழாம் பஃறுளியாற்றங் கரையில் அமைந்திருந்த மதுரை யெனும் பதியிலிருந்த முதற் சங்கத்தின் காலத் திலேயே அந்நாடுகளை ஆண்ட அரசின் பெயரால் (செங்கோன்றரைச் செலவு) என்னும் பாடல்களில் இதனைப் பற்றியும் சில பகுதிகள் இன்றைக்கும் காணக்கூடும். அந்நாளிலேயே தமிழர் சித்நாந்த நூற் களைச் செய்தனரென்றும் பஃறுளியாறு, மதுரை, குமரிக்கோடு ஆகிய யாவும் கடல் கொண்டது என்றும் கூறுகின்றன. இக் கடற் கோட்குச் சற்று முன்னும், கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ் குழாம் அமைப்பதற்கு இடையிலும் உள்ள காலத்து இயற்றிய முழு முதல் நூல் தொல்காப்பியம் எனக் கொள்ளுவதற்குச் சான்றுகள் பலவுள. அவைகள், தொல்காப்பி யம் நூலுக்கு உரையிட்டோர் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக் களத்தில் அவரது நூலை அரங்கேற்றினார் என்பதாலும், இடைச் சங்கம் நிலை பெற்றிருந்த கபாடபுரமாகிய பாண்டியன் தலைநகரை, வான்மீக இராமாயணத்திற் கூறியதாலும், பொருளதிகாரத்துக் கற்பியலின் உரையில் " இவ்வாசிரியர் முதல் ஊழியின் கடையில் (அந்தத்தே) இந் நூல் செய்தலின் " எனக் கூறியதாலும் அறிக.

இத் தொல்காப்பிய மென்னும் நூல், எழுத்து, சொல், பொருள் என்னும் பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவைகட்குப் பனம்பாரனார் முக உரை எழுதியிருப்பினும், எழுத்துப் பகுதிக்கு நச்சினார்க்கினியரும், சொல் பகுதிக்கும் பொருளதிகாரத்திற்கும் சேனாவரையரும் மேன்மை யாகக் கொள்ளப்பட்டது.

இன்றைக்குக் கிடைக்கக் கூடிய தமிழ் நூற்களில் தொல்காப்பியமே முழுமுதல் நூலாகக் கொள்ளக் கிடைக்குமாயினும் இதற்கு முன்பே முதற் குழாமுள்ள நாடுகளில் இயல், இசை, நாடக மென்னும் முத்தமிழும் இருந்ததென இந் நூல் சிறப்புப்பாயிரத்துள் " தமிழ் நிலத்துச் செய்யுள் வழக்கு, உலக வழக்கு ஆய்ந்தும் ", " முதல் நூல் கண்டு " என்றதா லும் " அளவிற்கோடல் அந்தணர் மறைத்தே " என்றதாலும், " நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் ...... " என்பதாலும், " இசை யோடு சிவணிய நரம்பின் மறைய என்மனார் புலவர் " என்றதாலும், இந் நூற்கள் யாவும் இவர்க்கும் கிடைத்துள்ளமையால் அந் நூற்களைக் கொண்டு நான் கூறினேன் என்பதற்கு, " என்மனார் புலவர் " எனப்

பலவிடங்களில் கூறியதால் தெளிவுறுத்தும். இஃது இப்படி இருக்க இதற்குச் சிறப்புப் பாயிரம் எழுதிய பனம்பாரனார், " மங்குநீர் வரைப் பின் ஐந்திரம் நிறைந்த, தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றி " என வரைந்ததைக்கொண்டு, இவர் முதல் நூலாகக் கொண்டது, ஐந் திரம் என்னும், இந்திரனால் ஆக்கப் பெற்ற வடமொழிக்காக வந்த இலக்கணம் கண்டு அவர் தொல்காப்பியம் வரைந்தார் எனக் கொள்வர்; அன்றியும்,

" ஆனுப் பெருமை யகத்திய னென்னும்,
மருத்துவ முனிவ னுக்கிய முதநூல்
பொருந்தக் கற்றுப் புரைதபவு ணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும் "

எனக் கூறியதால், தொல்காப்பியர், அகத்தியர் மாணவரெனவுங் கொள் வர். இவைகள் உண்மையெனக் கொள்ளுதற்கு இடந்தரா.1

ஐந்திரத்தைக் கண்டபின், தொல்காப்பியத்தை இயற்றி இருந்தால், அந் நூலோரைப் பற்றிக் கூறியிருப்பாராகலின் பின் வந்தோர் தமிழின் பெருமையைத் தாழ்த்தும் பொருட்டு, பிறர் கூறியதைக் கொண்டு பாயிரம் வரைந்தபோது, இந்திரனை இணைத்தனர் போலும், அகத்தி யன் மாணவனெனக் கூறின், தொல்காப்பியன் தன் நூலில் ஏன் அகத்தி யன் பெயரைக் குறிப்பிடவில்லை? இக்கேள்வி எழாதிருக்க, ஓர் கதையையும் அதற்காகக் கட்டி விட்டனர்.

ஈதன்றியும் வட நாட்டில் முதல் தோன்றிய பாலி மொழிக்கும், அதனைச் சீர்மைப்படுத்தி, சமைக்கப்பட்ட சமக்கிருதத்திற்கும் இலக் கணம் வரைந்தோராகிய பாணினி இலக்கணத்தின் முதல்நூற்பாவில்—

---

1 According to Nachinarkiniar, the commentator of this grammer (Thol kappiyam was composed even before Vedavesasa arranged Veda into Rig, Yajur, Sama, Adharvana. It is, at any rate anterior to Panini, as there is no reference to this work in Tholkappiyam............................................

In the opinion of Tamil Scholars of present day Tholkappiyam is atleast 8,000 years old.

| | | |
|---|---|---|
| अ इ उ ण् | = | அ இ உ ண் |
| ऋ लृ क् | = | ரு ளு க் |
| ए ओ ङ् | = | ஏ ஓ ங் |
| ऐ औ च् | = | ஐ ஔ ச் |
| ह य व र ट् | = | ஹ ய வ ர ட் |
| ल ण् | = | ல ண் |
| ञ म ङ ण न म् | = | ஞ ம் ங ண ன ம் |
| झ म ञ् | = | ஜ$^{2}$ ப$^{4}$ ஞ் |
| घ ढ ध ष् | = | க$^{4}$ ட$^{4}$ த$^{4}$ ஷ் |
| ज ब ग ड द श् | = | ஜ$^{3}$ ப$^{3}$ க$^{3}$ ட$^{3}$ த ச |
| ख फ छ ठ थ च ट त व् | = | க$^{2}$ ப$^{2}$ ச$^{2}$ ட$^{2}$ த$^{2}$ ச ட தவ் |
| क प य् | = | க ப ய் |
| श ष स र् | = | ச ஷ ஸ ர் |
| ह ल् | = | ஹ ல் |

इति माहेश्वराणिसूत्राणि अणादिसंज्ञार्थानि இதி மாஹேச்வராணி சூத்திராணி அணாதிஸம்ஞார்தானி என்றது. இது போல மகேஸ்வரனான (சிவன்) சூத்திரத்துள் உள்ளது எனக்கூறி இருக்க, தமிழ்க் கடவுளாகிய சிவன் வரைந்த சூத்திரத்தை (முன்நூலை)க் கண்டறிந்த பின்னரே பாணினி வட மொழிக்கு இலக்கணம் கூறினாரெனின் ; தமிழ், எம் மொழிக்கும் முதற் பட்டது என்பதற்கு வேறு சான்றுகள் எதற்கு ?

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பு எஞ்சிய நாட்டின் தலை நகர மாகிய கபாடபுரம் என்னுமிடத்தில் மீண்டும் ஓர் குழாம் அந்நாள் ஆண்ட அரசனால் அமைக்கப்பெற்றது. இதனை இரண்டாம் தமிழ்க் குழாமெனக் கொண்டனர். இக் குழாம் தொடர்ந்து வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திரு மாறன் கடையாக மூவாயிரத்து எழு நூறு பாடல்களைத் தமிழ்ப் பேரறிஞரைக் கொண்டு பலவகையான பாக்களால் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலியவைகளால் பாடி வைத்தனர். இசைக்கான பல இலக்கணங்களை அந்நாளிலேயே அமைத்து வைத்தனர். இந்நாடுகளும் கடற் கோள்களிலீடுபட்டு, தென் புலம் தாழ, வடபுலம் மேலெழ, மக்கள் வாழுமிடம் போதாது, புதிதாகத்

தோன்றிய நிலத்தை நோக்கி மேற்சென்று வாழத் தொடங்க இமைய மலை வரையிலும் சென்று வாழ்ந்தனர். அதன் அறிகுறியாக சிந்து வெளியில் கண்டெடுத்த அரப்பா,மோகஞ்சாதாரோ புதையல்கள் எடுத்துக் காட்டும். வடபுலத்தில் வாழ்ந்தோர், அந்நாடு முழுமையும் பரவி, சீர்மையாக வாழ்ந்து வரும் அந் நாளில் புதியதான ஓர் மக்கள் வெளி நாட்டிலிருந்து இந்நாட்டை யணுகினர். வந்த மக்கள் வெண்மையாக வும், உடல் வன்மை மிகுந்தும், எண்ணில் பெருத்தும் இருந்தமையின் சண்டையிட்டுப் பின் ஒன்றுகூடிக் கலந்தனர்.

இவ்வாறு வந்த மக்கள், அங்கு வாழ்ந்திருந்த தமிழ் மக்களோடு ஒன்று கூடி வாழ்ந்து வந்தபோது, அவர்கள் பின்னர், தங்களை ஆரியர் என்று கூறிக் கொண்டு இமய முதல் விந்திய மலை வரையிலுள்ள நாடுகளை ஆரியாவர்த்தம் என அழைத்தனர்.

அந்நாளில் தமிழ் மக்கள், நிலவகுப்பு, கல்வி, இல் வாழ்க்கை, பொருளீட்டல், அறம் யாவையுங் கைக்கொண்டு வாழ்ந்த வாழ்வை ஈண்டுக் கூறுவாம்.

மக்கள் வகுப்பு.—தமிழர் தொன்று தொட்டு ஒருவருக்கொருவர் வேறுபாடின்றி ஒன்றுகூடி வாழ்ந்தாராயினும், நில வேறுபாட்டிற்கேற்ப நிலங்களின் பெயரும் அந்நிலங்களில் வாழ்பவருக்கு அப்பெயரையே அமைத்தனர் ஆயினும், உயர்வு தாழ்வின்றி ஓர் நிலத்துள் ளோர் மற்ற நிலத்து மக்களோடு வேற்றுமையின்றிக் கூடி, திரு மணம் நடத்தி வந்தமையின், திருமூலர் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' எனக் கூறியது போல் கலப்பற்ற காலத்தில் இவ்வாறு வாழ்ந்திருந்தார் எனப் புலனாகும்.

நில வகுப்பும் அவற்றுள் வாழும் மக்களையும் கூறுவோமாயின் மலை நாட்டை, குறிஞ்சி என்றும், அதில் வாழும் மக்களைக் குறவர் என்றும், காடுள்ள நிலத்தை, முல்லை என்றும், அதில் வாழ்ந்தோரை (ஆயர்) இடையர் என்றும், வயல் உள்ள நாட்டை, மருதம் என்றும், அதில் வாழும் மக்களை உழவரென்றும், நீர் சூழ்ந்த கடற்கரை யோரங்களை, நெய்தலென்றும், அங்கு வாழ்ந்தாரைப் பரதவர் (செம் படவர்) எனவும், சுர (பாலை) நிலத்தில் வாழ்வாரை மறவர் என்றும் கூறுவாராயினர்.

இவ்வகையாகக் குலவகுப்பின்றி அவரவர் செய்யும் தொழிலுக் கேற்ப மக்கள் குலப்பிரிவினை யுண்டாயிற்று. அஃது நாடாள்வோரை அரசர் என்றும், வாணிபம் செய்வோரை வணிகரென்றும், உழவை நடத்தியோர் வேளாளர் என்றும், இவர்கட்கு வேண்டிய தொழில் செய் வோர்கட்குப் பணியாளர் என்றும் பிரிவுகள் ஏற்பட்டன. இவ்வகையான பிரிவு இன்றும் சில ''மிராசு'' என வழங்கும் ஊர்களில் காணக்கூடும். அவ்வூர் மிராசுக்காரர்கள், அவரவர் பங்குக்கேற்ப நிலங்களைப் பணி யாட்களுக்கு ஒதுக்கிவைத்து இலவசமாக (மிராசாக) பணியாள் பெயரின் மீது பட்டா செய்துள்ள பார்ப்பான் மான்யம், கணக்கன் மான்யம், தச்சன் மான்யம், இடையன் மான்யம், பணி செய்பவன் மான்யம், தாசி மான்யம் எனப் பயிர் செய்யும் நிலங்களை ஒதுக்கி வைத்ததோடு, அவர்கள் வாழ்தற்கான நிலங்களை ஒதுக்கி வீடுகட்ட, சிறு சிறு சேரி களை அமைத்து அவைகட்கு அந்தணன் சேரி, இடையன் சேரி, கொல்லன் சேரி, பறைச்சேரி எனவும் பெயரிட்டனர்.

மக்கள் வாழ்வு.—தமிழ் நாட்டில் (மக்கள் வாழ்க்கை) எந்நிலையில் இருந்ததென்பதை ஆராய்வோம்.

''இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு
அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்''
எனத் (களவியல் I) தொல்காப்பியரும்,

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனு மது''

''அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

எனத் திருவள்ளுவரும் பல்லாயிர ஆண்டுகட்கு முன்பே கூறிப் போந் தது, அந்நாளில் மக்கள் வாழ்க்கையில் அடைதற்குரிய உண்மைப் பொருள்கள் இன்பமும், பொருளும், அறனும் ஆகிய இப்பொருளை நிலைப் பொருளாக அமையப்பெற்று வாழ்ந்தனர் என்பது புலனும்.
இம் மூன்றும் மக்கள் வாழ்விற்கான துணையாம்.

இன்பம்.—

''சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணும் உணர்குண குணியு மாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லா
மித்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்''

''நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாகியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே''
(சிவஞான சித்தியார் சுபக்கம்)

எனக் கூறியதால், சிவப் பேரறிவியலில் உண்டைப் பகுதிகளைத் தோற்றுவித்து அதனில் ஆண் பெண் ஆகியனவற்றோடு உயிருக்குயிராய் நின்று இன்ப துன்பங்களை நுகர்தற்கான பொறி புலன்களையும், உணவு முதலான வற்றையும், உய்யும் அறிவையும் அமைத்துள்ளார் எனக் கூறியது, இப் பெரும் மக்கள் இன்பம் நுகர்வதற்கேயாம்.

''அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு'', எனவும்

இன்ப வாழ்க்கை அன்பினால் வேண்டுமென இதனையே எதிர் மறையானும்,

''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று'' எனவும்

திருவள்ளுவர் திருக்குறளில், அன்பின் சிறப்பைத் தெரிவித்தார். இவ்வன்பே இல்லறப் பேற்றுக்கும், துறவறப் பேற்றுக்கும் இடமாம். இவ்விரண்டின் ஒழுக்கம் மெய்யன்பின் வழியேகுமாயின் அதனைக் காதல் என்பர். அஃது உண்மை அன்பு இல்லாதாயின் இழிந்த காமமென்பர். இக்கற்பு தமிழ் நாட்டில் தலைசிறந்து ஓங்கிற்று. பெண் ஒருத்தி தான் கருதிய கொழுநனைத் தவிர வேறொருவனைக் கண் நோக்காள். தன் கற்பினை எவரேனும் அழிக்க முயலின் கற்பினைக் காக்கவல்ல வழியினைத் தேடி, தப்பித்துக் கொள்ளுவாள். முடியாதாயின் தன் உயிரையும் மாய்ப்பளேயன்றி தன் கற்பழிய விடாள். மாப்பிள்ளையைப் பெறுவது, தன் தோழியின் வழியே அறிந்து, தனக்கு உவந்தவனைத் தன் தாய்க்கு அறிவித்து தாய் தந்தையர்கள் ஒப்பத் திருமணம் முடியும். இருவர்கள் காணுமிடம், பிரியுமிடம் முதலியவைகளின் ஐந்திணைகளும், மலர்களும் உள. அவைகளை நூலிற் காண்க.

அக்காலத்துக் கற்பொழுக்கம் காதலனுக்குப்பின் மனைவியும் உயிர் விடுவது வழக்காம். கோவலன் பின் கண்ணகியும், பூதப்பாண்டியன் பின் அவர் மனைவி தீப்பாய்ந்தது போலாம்.

பொருள். —இன்ப வாழ்க்கையை நடாத்துவதற்குப் பொருள் இன்றியமையாதாகையால் அதுவின்றி உலகில் வாழ்தலரிது எனக்காட்ட ; நம்நாடு—

''அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு''

''அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்''

எனத் திருக்குறட்பா தோற்றுவிக்கும்.

ஆதலின், கிடைத்த பொருளை இம்மை மறுமைப் பேறுகளை, அறிவால் நன்முறையிற் செலவிட்டு வாழ்தற்குக் கல்வியும், வேண்டுதலாய், இஃதும் ஓர் பொருளாகக் கொண்டதில் அடங்கும். இதனைக் ''கல்விப் பொருள் மாட்சி'' என்பர். இக் கல்விமாட்சி பொருட் செல்வத்திற்கும் குலப் பெருமைக்கும் மேன்மையதாகக் கொண்டது தமிழ் நாடேயாகும். ஆதல்பற்றியே பொருளினைப் பற்றிக் கூறவந்த தொல்காப்பியனாரும், திருவள்ளுவரும் செல்வப் பொருளைக் கூறியதோடு கல்விப் பொருள் மாட்சியையும் சிறப்புறுத்திக் கூறினர், அதனை—

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.''

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''.

திருவள்ளுவர் திருக்குறளில் கூறியதால் அறிக.

கல்விப் பொருள் மாட்சியை மிகப் பெரிதாகக் கொண்ட தமிழ்நாடு அதனைத் தமிழ் மக்கள் யாவரும் பயன் பெறுமாறு வேந்தன் முதல் ஏனையோரும் பல திறப்பட்ட வகையினரும், முதல் குழாம் காலத்திலிருந்து மூன்றாம் குழாம் வரை எண்ணிறந்த நூற்களைத் திரட்டி வந்ததோடு இக் காலத்தும் பேரறிஞர் பலரும் மக்கள் பயன் பெறுமாறு பலநூற்களைச் செய்தனராவர்.

தமிழர் பொருளெனக் கொண்டது, செல்வப் பொருள், கல்விப் பொருள் என இரண்டாகக் கொண்டு, இனிது உய்ப்பதற்குச் செல்வப் பொருளும், அதனை அறிவோடு செலவிடுவதற்குக் கல்விப் பொருளும்

வேண்டுவனவாதலால், கல்விப் பொருளையே முதன்மையாகக் கொண்டனர். இவ்விரண்டுங் கொண்டு வையகத்துள் அன்பினால் உந்தப்பட்டு மேலும் மேலும் அன்பினை வளர்த்து அன்பே சிவமென்றிருத்தல் பொருட்டேயாம்.

அறம்.—

"இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"

எனத் தொல்காப்பியனார் கூறியதில், இன்பமும் பொருளும் அறனும் என்பதில், இன்பத்தைத் தரும் அன்பினை முன்னும் அறனைப் பின்னுமாகக் கொண்டு தொடர்ந்து வழங்கி அறமும் அன்பினையே முதலாகக் கொண்டு நிகழ்ந்து, பலனளிக்குமா போலென்க. அறம், இல்லறம், துறவறம் என இருவகைப்படும். இல்லறம் துறவறம் என இரண்டாக வகுக்கப்பட்டு, இல்லறம் நடாத்தி, மனைவி மக்களோடு கூடி இல்வாழ்க்கையிலீடுபட்டு வையகத்தின் இன்பங்களை ஆண்டு, மகப்பேறு பெற்று, வாழ் நாட்களின் கடையில் தமக்குக் காவலனாய் அமைந்துள்ள மக்கள் அவ்வறத்தைச் செய்யுமாறு விடுத்து, கிழவனும் கிழவியும் அந்நாளில் இல்லற வாழ்க்கையின் பேற்றினை (அன்பும், பொருளும், இன்பமும்) நுகரப் பெற்றது போல, இந்நாளில் அன்பும் அறனுங் கொண்டு துறவற வாழ்க்கையை நடத்திவைக்க வேண்டிய எல்லாத் துணைகளையும் அமைத்துவைக்க மக்களிருக்க, கிழவன் கிழவி இருவரும் சிவ நிலையடையத் துணை புரிவர் என்பது தமிழ் நாட்டின் கொள்கை. இதனை

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழவியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

எனத் தொல்காப்பியனார் கற்பியல் பாவாலறிக. இல்லற அன்பே சிவப்பேற்றினை யடையும் துறவற அன்பாக முடியும் என்பது தமிழரின் கொள்கைக்கு மாறுபாடாக, இல்லறத்தில் கிழவி கொண்ட அன்பினை நீக்கி விடுத்து, கிழவன் தனித்து, துறவறம் நடாத்தல் வேண்டுமென்பது பௌத்த சமணர்களைப் பின்பற்றி வந்த வடபுலத்தோர் கொள்கை பொருந்தத் தகாததாம். இதனை

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்'',
''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று'' எனத்

திருக்குறளால் அறிக. மேலும்,

''நெஞ்சிற் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்'' என்றும்

''யான்எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்''

எனவும் திருவள்ளுவர் கூறியாங்கு, ''துறவு'' என்பது நெஞ்சினால் துறத்தல் எனவும் ''யான்'' எனது, என மனம் இறுமாப்புக் கொள்ளாது, அகப்பற்று, புறப்பற்றுகளைக் களைந்து நிற்றலுமெனக் கொள்ளக் கிடக்கும்.

இன்பம், பொருள், அறம் என்பதில், இன்பத்தை முதற் கொண்ட தொல்காப்பியனாரும் அறத்தை முதன்மையாகக் கொண்டு இன்பம், பொருளின் இயல்பினைக் கூறிய திருவள்ளுவரும், ஆக்கியோன் (இறைவன்) ஆக்கப்பட்டவை (தோன்றிய பொருள்) ஆக்கப்பட்டவையின் இழுக்கம் (உயிரின் இழுக்கம்) ஆகிய இவைகளின் இயலினைப் பகுத்துணர்ந்தாலொழிய வீட்டுப் பேற்றைப் பெற இயலாவாம் எனக் கூறினர். இவைகளின் விளக்கம் கீழ் வருமாறு :—

''அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி யென்மனார் புலவர்''

எனச் சிவஞானபோதம் முதல் நூற்பா கூறியதில், ஆண், பெண், இவை இரண்டுமில்லா மற்றைய பொருள்கள் யாவும் தோன்ற நிலைத்து அவைகளின் வினைக்கேற்ப அழியும். அழிக்கும் அப்பொருளே முதற் பொருளாமெனவும் ;

''பூதாதி யூறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையின்—ஓதாரோ
ஒன்றொன்றிற் றோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து''

— சிவஞானபோதம்

முதற் பாவுக்கு எடுத்துக் காட்டாக வந்த பாவாலும் ;

''நிலந்தீ நீர்வளி விசும்பொடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலக மாதலின்''

எனத் தொல்காப்பியனார் மரபியலில் கூறியதாலும், உலகமும், அதி லுள்ள பொருள்களும், இறைவன் செயலால் ஐம்பெரும் பொருள்களால் ஆக்கப் பெற்று, ஒருங்கு தோன்றி, நிலை பெற்று, ஒருங்கே அழிவடை யும் எனக்கூறுவது, உலகில் எப்பொருளாவது முற்றும் ஒடுங்கும் நிலைமை இல்லையெனக் கூறுவர். இவ்வொடுக்கமும், தோற்றமும் பொருள் அழிவின்றி உருமாறி வருவதேயாம் எனக் கொள்வதாம். இதை,

''பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி''

எனத் திருமூலர் கூறியதாலறிக.

உயிர் (ஆன்மா) தோன்றிய உயிர்களை ஓரறிவு முதல் ஆறறி வுடையதென வகுத்து அவைகளின் இயல்பினை

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனமே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுந் திறனே''

எனத் தொல்காப்பியனார் சிற்றறிவுடைய இவ்வுயிர்கள் யாவும் நல் வினை தீவினைக் கீடாய் மூவினையி லீடுபட்டுத் தோன்றுகையில் முறையே தொடுதல் உணர்வைப் பெற்ற புல், பூண்டு, மரங்கள் தொடுதலறிவையும், சுவையறிவுடைதலுமான புழு, நத்தை, கிளிஞ் சல் முதலியவைகளும் அவைகளைக் காட்டிலும் சிறிது அறிவு மேலும் பெற்று இரண்டொடு மூன்றும் கூடிய முகரும் அறிவு பெற்ற கரையான், எறும்பு முதலியவைகளும், அதன் பின் அம்மூன்றோடு காணும் அறிவிற் குக் கண்கூடிய நண்டு, தும்பி முதலியவைகளும், நான்கோடு ஐந்தான கேட்கும் அறிவிற்குக் காதுங்கூடிய ஆடு, மாடு முதலியவைகளும், பொறி புலன்களோடு கூடிய அறிவோடு பகுத்தறிவுடைய மனதும்

கொண்டது மக்களுமெனக் கூறியது, தோற்றத்தில் (evolution) ஐந்து நுண்பொருள்களில் ஒன்றிலிருந்தொன்றாய்த் தோன்றி ஒன்றோடொன்று கூடி ஐந்து பருப் பொருளாய் ஒரறிவு கொண்ட பொருள் தொடங்கி ஆறறிவு கொண்ட மக்கள் வரை வந்த தோற்ற நிலையின் பெருக்கத்தைக் காட்ட வந்த தமிழரின் அறிவைத் தெளிவுறுத்துதற்கே போலும்.

''கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்''

எனத் திருவள்ளுவரும்,

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்''

எனப் பவணந்தி முனிவரும் கூறிப் போந்ததில் கடவுளைத் தூய அறிவினன் எனப் பொருள்படுத்த வாலறிவன் எனக் கூறி அவன் தோற்றிய பொருள்களின் வினைகளை நீக்கி அறிவை விளக்கி முழு முதற் கடவுளைக் கண்டறியச் செய்விக்கும் என விளங்கும், இதனையே,

''விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே''

''ஒளியு மிருளு மொருகாலுந் தீரா
ஒளியுளோர்க் கன்றோ வொழிய தொழியும்
ஒளியிருள் கண்டகண் போலவே றாயுள்
ஒளியிரு ணீங்க உயிர்சிவம் ஆமே''

எனத் திருமூலரும் கூறியதால் அறியக் கிடக்கும். ஆதலின் உயிர், ஆன்மா என்னும் பொருளும் சிவம் என்னும் பொருளும் ஒன்றெனக் கொண்டது தமிழ்நாடு. கடவுள் பேரறிவுடையது, மக்கள் சிற்றறிவுடையவர் ஆகையால் மக்கள் உயிர் கடவுள் தன்மையதெனக் கொண்டிருப்பினும் அதனை, சீவாத்மா எனவும், கடவுளைப் பரமாத்மா எனவும் இரண்டாக வகுப்பார் சிலர். தமிழர் அவ்வாறன்றி,

''அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னோடு வல்வினை யின்றே''

எனச் சிவஞானபோதப் பத்தாவது நூற்பா கூறியவாறு கடவுள், தோன்றிய பொருளில் தான் என்று சொல்லக் கூடியதாய் உயிருக் குயிராய் நின்று, தன்னொடு கூடிய நான் வேறு, கடவுள் வேறு என இன்றி ஒருவனாய் ஆணவம், காமம், மாயைகளை நீக்கி நிற்கில் இருக்கலாம் என்பது தமிழர் கொள்கை.

## சிவப் பேரறிவியல் (Siva Philosophy)

சைவ சித்தாந்தம் என்னும் சிவப்பேரறிவியல் தோன்றிய நாள் எஃதெனக் கூறக்கூடா நாளாயினும், பன்னிரண்டு ஆயிரம் ஆண்டு கட்குமுன் குமரி நாட்டை ஆண்ட செங்கோன் என்பவரின் பெயரால் வரைந்த ''செங்கோன் தரைச்செலவு'' என்னும் நூலில் ''ஆகமம்'' என்பதைப் (சைவ சித்தாந்தம்) பற்றிச் சில குறிப்புகள் அடங்கியுள்ள தெனக் கூறியுள்ளமையாலும், இன்றைக்கும், தென்கடைகோடி தமிழ்நாடாகிய இலங்கை முதல் வட எல்லையாகிய இமயம் வரை யிலும் சிவ வழிபாடும், அதனைப் பின்பற்றி வந்த வைணவ, சாங்கிய, புத்த, சமண முதலிய பல வழிபாடுகளும் நிலைத்திருத்தலாலும், எல்லாம் வல்ல செம்பொருளைத் தமிழர் சிவமென வழங்கியதை, பின் தோன்றியோர் பல பெயரால் அதனைத் தொழத் தொடங்கினர் என்பது ''மலைமேற்பதி விளக்கம்'' என இவ்வுண்மையை எடுத்துக் காட்டும்.

''சிவம்'' என்னுஞ் சொல், சிவப்பு, செம்மை என்னுஞ் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியதெனக் கொள்ளுதற்கு; செம்பழம்= முதிர்ந்த பழம்; செங்கோல்=மேன்மை தங்கியகோல் என வழக்கிலும்; ''தேமொழி உரைத்தது'' ''செவ்வை'' நற்சிலம்பு ''(சிலப்பதிகாரம்), செம்பொருள் கண்டவர் வாய்ச்சொல் ''(திருக்குறள்)'' ஆகிய இவ் விரண்டு பண்டை நூற்களை நோக்கின் ''சிவ'' ''செம்'' ''செவ்'' என்னுஞ் சொற்களை அடைமொழியாக பொருள்கட்கு அமைப்பது அவைகளின் மேன்மையைக் காட்டும் பொருட்டே எனத்தெளியக் கிடக்க, இதனை, ''சிவம்'' வடமொழித்து என கூறுதல் எவ்வாறு பொருந்தும் ? மேலும்

''பவழ மானது கனிந்து பழுத்தசெம் பழமி தென்ன
உவமமில் லாமற் றோன்று உயர்பொரு ளதனை யார்க்கும்
சிவமெனும் பொருளி தென்னச் செப்புமே தகுநன் மைந்தா
நவமணி நவம ணிப்பொன் நவநிதி என்ன லாமே.''

எனத் தேரையர் ரசமணியை (குருகுளிகையை) க்கூற வந்தவர் அதனை பவழம் (இயற்கையிலேயே செந்நிறமாயினும்) அஃது பழுத்துக் கனிந்து செம்பழம் போல் முதிர்ச்சியடையுமானால் எவ்வளவு அழகாய் இருக்குமோ அவ்வாறு ரசமணி ஒப்பில்லாப் பொருளாகிய சிவப் பொருளொன்றுளது இது எனச் சொல்லத்தக்கதாகும் எனக் கூறிய தாலும் அறிக. சிவத்தின் இயலையும் அதனால் தோற்றப்படும் பொருள்களின் இயலையும் அவைகளின் இழுக்களின் இயலையும், அச் சிவத்தை அறிந்து இழுக்கங்களைக் களைந்து அதனை அடையும் வழிக்கான வழிபாட்டினையும் காட்ட வந்தது ஆகம நூல் ஆகும். இந்நூலைத் துணைக்கொண்டெழுந்த வைணவ சாங்கிய இரண்டும்' ஏனைய சமயத்தோரும் கோயில் அமைத்தல், கோயில் பூசை, ஓம்பல், ஓகம் முதலியவைகட்கும் தமிழில் தோன்றிய ஆகம நூற்களே இன்றி யமையாததாக உள்ளன என்பதூஉம் நன்கு பொருந்தும்.

''ஆகம'' என்ற மூன்று எழுத்தில் ஆ=பாசம், க=பசு, மா=பதி என வடநூலோர் பொருள் படுத்துவர். தமிழர்கொண்ட முப் பொருளாகிய ''பதி'' ''பசு'' ''பாசம்'' என மூன்றில், பதி=கடவு ளாகிய சத்துப்பொருளை முதன் அமைக்காது, அசத்துப் பொருளாகிய பாசத்தை முன் அமைத்தது தமிழரன்று. தமிழ்மறை வல்லாரில் சிறந்த வரான திருமூலர், திருமந்திரத்தில் ''பதி பசு பாச மெனப் பகர் மூன்றில்'' என்னும் பாவில், முதலாகப் பதியும், இரண்டாவதாகப் பசுவும், மூன்றாவதாகப் பாசமும் அமைத்தார். இயற்கையில் படிப் படியாக வருவனவற்றை விடுத்து வரன்முறையின்றி அமைத்தது தகுதியற்றதாகும். ஆக்குவோனின்றி ஆக்கமின்மை போல் பதி யின்றி பசு ஏது? பசுவின்றிப் பாசமேது? இப்படி இருக்க, பாசம் எவ்வாறு முதல்நிலை யெய்தற்கூடும்? ஆகலின் ''ஆகம'' என்ற மூன்றெழுத்தில்,

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு''

எனத் திருவள்ளுவர் கூறியவாறு ''அ'' என்னும் எழுத்து, சத்துப் பொருளாகிய உயிர் எழுத்து முதன்மையாக நின்று, மெய்யெழுத் துக்களை இயக்குமாபோல்; கடவுள், தோற்றிய பொருள் (மெய்)கட்கு முதலாய் நிற்பர் எனக் குறிக்க ''அ''வும்;

''சீவ னென் னச் சிவனென்ன வேறில்லை''

எனத் திருமூலரும், ''அவனே தானேயாகிய அந்நெறி'' என மெய் கண்டாரும், கடவுள் தோற்றிய அப்பொருள்களில் தானும் (கடவுளும்) உடலோடு கூடி உயிருக்குயிராய் உள்ள அந்நெறிபோல், மெய்யெழுத் தாகிய ''க்'' கும் உயிராகிய ''அ'' வும் கூடி உயிர்மெய்யாகிய ''க' பதியைக் குறிக்கும். இத்தோற்றப் பொருள்கள் உண்மைப் பொருளை அறிய ஒட்டாமறபடிசெய்யும் பற்று-பாசம் மறைவு (மாயை) ''ம'' வைக் குறிக்கும். இம்மூன்றெழுத்துங்கூடி ஆகம மெனக்கொண்ட நூற்கள் இம் முப்பொருள்களின் இயல்பினை விளக்கிப் பாசத்தை நீக்கி, பதியினை அடையும் வழியினைக் காட்டவந்த ஆகம நூற்கள் இருபத் தெட்டு என்பர்.

இவைகள் யாவும் தென்னாட்டிற்றோன்றி, பனிபடுமலைவரைமேல் ஏகி ஆங்கு இம்மக்கள் வாழ்ந்துவரும் நன்னாளில், இதனை வட மொழியிலாக்கி வைத்தனர். இப்போதைக்குத் தமிழில் கிடைக்கும் சிவஞானபோதம் என்னும் நூல் ஆகமத்திலிருந்து மொழி பெயர்த்ததாகும். இஃது பன்னிரண்டு நூற்பாக்களையுடையது. காச்மீரத்துள்ள இந்நூல் இருபது பாக்களுடையது. மேற்கூறிய பன்னிரண்டு பாக்களுக்காகத்தோன்றிய விருத்தியுரைகள்—

(1) திருவுந்தியார்—திருவிலூர் உய்யவந்ததேவர்.

(2) திருக்களிற்றுப்படியார்—திருக்கடவூர் உய்யவந்ததேவர்.

(3) சிவஞானபோதம்—திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவர்.

(4) சிவஞானசித்தியார் பரபக்கம்—சிவஞானசித்தியார் சுபக்கம் அருணந்தி சிவாச்சாரியார்.

(5) இருபா விருபஃது—அருணந்தி.

(6) உண்மை விளக்கம்—திருவதிகை மனவாசங் கடந்தார்.

(7) சிவப்பிரகாசம்—உமாபதி சிவாச்சாரியார்.

(8) திருவருட்பயன் ஷை

(9) வினாவெண்பா ஷை

(10) போற்றிப்பஃறொடை ஷை

(11) உண்மைநெறி விளக்கம் ஷை

(12) கொடிக்கவி ஷை

(13) நெஞ்சுவிடுதூது ஷை

(14) சங்கற்ப நிராகரணம் ஷை

இவைகள் யாவும் மெய்கண்டான் நூற்கள் (சாத்திரம்) என்பர். இந்நூல்கட்கும் கூட பல விருத்தியுரைகள் வரையப்பட்டன. இவைகளேயன்றி, இவைகட்கு முன்பே, திருமூலர் திருமந்திரம் மூவாயிரம் என்னும் பெயரால் ஓர் நூல் தென்னாட்டோரும் வடநாட்டோரும் ஒன்று கூடி வாழும் நாளில் எழுதிய நூலெனக் கொள்வர், மூவர் தேவாரமும் திருவாசகமும் இன்னும் பலவுங் கூடத் திருமுறைகள் என வழங்கப்படும்.

சிவஞான போதம், தமிழில் வரையப்பட்டது, புத்த சமண சமையத்தோரைத் தென்னாட்டை விட்டு வெளிப்படுத்தற் பொருட்டே வந்ததாகும். இந்நூலில் பன்னிரண்டு பாக்கள் உள்ளன. இதனை இரண்டு பெரும் பகுதிகளாக வகுத்து ஒன்று பொதுவியல், இரண்டு சிறப்பியல் எனக் கொண்டு, பொதுவியலில் (i) அளவியல் (பிரமாண இயல்), (ii) அமைப்பியல் (இலக்கண இயல்) எனவாக்கி அதில் (i) நூற்பா ஒன்று, இரண்டு, மூன்றாம் பாவில் கூறப்படும். முதல் பாவில் கடவுள் உளதெனக் காட்டுதற்கும், கடவுள் தோற்றிய பொருளில் தானும் கூடியுள்ளார் எனவும், உயிர் என்றது எது எனச் சாதிக்கத்தக்க அளவு படுத்தற்கும், இரண்டாம் பகுதியில் நூற்பா நான்கு, ஐந்து, ஆறு முறையே உயிர்க்கும் (ஆன்மாவுக்கும்) கருவிகட்கும் (பொறிபுலன் கட்கும்) உள்ள தொடர்பும், ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பும், ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் கூறும் பகுதி இலக்கண வியலாம். பெரும்பகுதியாகப் பங்கிட்ட சிறப்பியல் அவ்வாறே இரண்டாகப் பங்கிட்டு, ஒன்று சாதன இயல் மற்றொன்று பயனியல் ஆம். இவற்றுள் சாதன இயலில் சிவத்தையடைய வேண்டிய வழிகாட்டிகளாம். அவைகள் ;—

(1) ஏழாவது பாவில், உயிர்க்கு இதன் இழுக்களை யறிவித்தல்.

(2) எட்டாம் பாவில் உயிர் தன் இழுக்களைக் களைந்து தன்னை உணர வைத்தல்.

(3) ஒன்பதாம் பாவில் தன்னைத் தூய்மையாக்கிக் கொள்ளுதல் அடங்கும். இரண்டாவதான பயன் இயலில் (1) பத்தாவது பாவில் அவனும் தானும் ஒன்றெனக் கொண்டு மாயை அறுத்தலாம், (2) பதினொன்றாம் பாவில் இரண்டறக் கலத்தல், (3) பன்னிரண்டாம் பாவில், அவ்வுயிர் யாதெனக் கூறல் (சீவன் முத்தி).

இவ்வாறாக, பன்னிரண்டு பாக்களை இரண்டாகப் பிரித்து முதல் ஆறு பாக்கள் வரையுள் அடங்கியயாவும் காணக்கூடாப் (பதி பசு பாசங்கள்) பொருள்கள் ஆகையால் அவைகளின் உள்ளது என உறுதி படுத்தும் பொருட்டு, பல வகையான எடுத்துக்காட்டுதற்கே அளவை நூலையும் அமைத்தனர். இதனைக் கொண்டு அவ்விளக்கத்திலெழும் ஐயப்பாடுகளை நீக்கி உண்மையைக் காட்டவே சிவஞான சித்தியார் அளவை நூலை முன்னமைத்து அதனைக் கொண்டு முப்பொருள் (பதி, பசு, பாச) இயலினைக் கூறி, பின் சிறப்பியலைக் கூறினார் போலும்.

ஆதல் பற்றியே முதலில் அளவையைக் கூறி அவ்வறிவைக்கொண்டு பசு பதி பாசங்களின் இயல்பைக்கூறுதும்.

அளவை நூல்.—அளவை என்பது கண்ணால் காணும் பொருளினையும் காணக்கூடா கடவுள், சீவன், சீவனின் இனங்களாகிய பாசம் ஆகியவைகளையும் கண்டு, கருதி, கேட்டு அறிதலாம். இவ்விரண்டில் (1) காணக்கூடும் பொருளினை எண், நிறை, முகத்தல், நீட்டல் என நான்கால் அறிதலும், (2) காணக் கூடாதவற்றைப் பேரறிஞர்களியற்றிய நூல்களைக் (ஆகமங்களைக்) கொண்டு சிந்தித்து, சிந்தித்துத் துணிந்த துணிபைக்கொண்டும் அறிதலாம்.

இவ்வளவையைத் தமிழர் மூன்றாகக் கொண்டு (1) காண்டல் (பிரத்தியட்ச பிரமாணம்) (Observation), (2) கருதல் (அனுமானம்) (Inference), (3) உரை (ஆகமம்) (Authority, Literature) என வகுப்பர்; மற்றுஞ் சிலர் இம்மூன்றோடு மூன்றுங் கூட்டி ஆறென்பர், ஆறென்பது (4) இல்லது (இன்மை கொண்டறிதல்) (Preception) (அபாவம்), (5) பொருளொப்பு (அருத்தாபத்தி) (Presumption), (6) எடுத்துக்காட்டல் (உவமையாலறிதல்) உவமானம் (Comparison), இவ்வாறன்றி இன்னும் நான்கு கூட்டிப் பத்தென்பர் சிலர், அவைகள் (7) இது அதுவெனத் தெளிதல் (பகுத்தறிதல்)பாரிசேடம் அவினாபாவம் (Inerence by elimination), (8) இப்படியும் அப்படியும் இருக்கலாம் எனத் தெளிதல் (ஐயக் காட்சி) சம்பவம் (Probability), (9) வழக்கு (எயாத்தி) (ஐதிகம்) (Tradition), (10) இயற்கையைக் கொண்டறிதல் (இயல்பு) சாம்பவலிங்கம் (Natural inference) எனவாம். மேற்கூறிய பத்தின் முதல் மூன்று போகப் பின் கூறிய ஏழினில்.

(4) இல்லது கொண்டறிதல் (இன்மை சுபாவம்) (Non-P ecep-tion) என்பது (1) இன்மை, (2) ஒன்றில் ஒன்று இன்மை, (3) இல்லது இன்மை, (4) உள்ளது இன்மை, (5) அழிவு பாட்டின்மை என ஐவகைப்படும். அவைகள்:—

(i) எக்காலத்திலும் முயலுக்குக் கொம்பில்லாமையால் என்றும் இல்லாப்பொருளை முயலுக்குக் கோடில்லாது போல் கொள்வதாம்.

(ii) ஒன்றில் ஒன்றில்லாமை, கடத்தில் படமில்லை; படத்திற் கடமில்லை.

(iii) இல்லதின்மை—மெய்ஞ்ஞானி வாயில் பொய் இல்லை.

(iv) உள்ளதின்மை—பசு தொழுவத்தில் இல்லை.

(v) அழிவு பாட்டின்மை—காடு தீப்பற்றி எரிந்து விட்டது காடு இல்லை எனவாம்.

(5) பொருள்ளொப்பு (அருத்தாபத்தி) (Presumption) திருவாரூரில் பசித்தோர்க்குப் புசிக்கக் கொடுப்பவர் நல்லவர் ஒருவர் தியாகராச முதலியார் இருக்கிறார் என்றால் இவ்வூரில் கொடாதாரும் உள்ளனரென அறிதலாம்.

(6) எடுத்துக் காட்டாலறிதல், (உவமை) உபமானம் (Comparison): எருமையைப் போலவே இருக்கும் காட்டெருமை, ஆனால் மிகப் பருமனாகவும் தீவிரப் பண்போடுமிருக்கும் என்பதாம்.

(7) இது அதுவென அறிதல் (பாரி சேடம்) (அவினா பாவம்) (Inference by elimination) இராமன் கிருட்டிணன் என்னும் இவ்விருவரில், இராமன் கள்வன் அல்லன், கிருட்டிணன் கள்வன், ஆகலின் அங்கு வைத்த பொருளினைத் திருடினவன் கிருட்டிணன் என அறிதற் போலாம்.

(8) இப்படியும் அப்படியும் இருக்கலாம் (ஐயக் காட்சி) (சாம்பவம்) (Probability) கண்ட பொருளினை ஐயத்தோடு அறிதலாம். மேய்ந்து கொண்டிருக்கும் கன்றைக் கண்டு நாய் என்பது போலாம்.

(9) வழக்கு (எயாத்தி) (ஐதிகம்) (Tradition). இம்மரத்தில் பேய் உண்டென்பது தொன்றுதொட்டு வழங்கியதைக்கொண்டு அறிதல்.

(10) இய )கையைக் கொண்டறிதல் (இயல்பு) (சகஜம்) (சாம்பவ லிங்கம்). இஃது கண்ணால் காணாதிருக்கும் மல்லிகையின் மணத்தைக் கொண்டு ஆங்கு மல்லிகைப்பூ உள்ளது என இயற்கையில் அறிதலாம்.

இவ்வாறு பத்து வகையாகக் கூறியதில் பின்கூறிய ஏழும் முன் கூறிய மூன்றிலேயே அடங்கும், அதாவது—

(1) காண்டல் அளவையுள் இல்லது (அபாவம்) (Non-perception) அடங்கும்.

(2) கருதல் அளவையுள் பொருளொப்பு (அருத்தாபத்தி) (Presumption) ஒடுங்கும்.

எடுத்துக் காட்டும் (உபமானம்) உவமை (Comparison).

இதுவதுவெனத் தெளிதலும் (Inference by elimination) இப்படியும் அப்படியுமிருக்கலாமும், சாம்பவம் (Probability).

இயற்கைக் கொண்டறிதலும் (சாம்பவலிங்கம்) இயல்பு ஆகிய இவ்வைந்தும் அடங்கும்.

(3) நூல் (உரை) அளவையுள் வழக்கு (எயாத்தி—ஐதிகம்) (Tradition) அடங்கும். இதனை—

''அளவை காண்டல் கருதலுரை
அபாவம் பொருளொப் பாறென்பர்
அளவை மேலும் மொழி புண்மை
ஐதி கத்தோ டியல்பென நான்கு
அளவை காண்ப ரவையிற்றின்
மேலு மறைவ ரவையெல்லாம்
அளவை காண்டல் கருதலுரை
என்றிம் மூன்றி னடங்கிடுமே.''

என்று சிவஞான சித்தியார் சுபக்கம் அளவை நூல் முதற்பாவாலறிக.

காண்டல், கருதல், உரை என்னும் மூன்றினைக் கூறுவோமாயின் காண்டல் அளவையில் கொண்ட பொருளின் பெயர் வகை முதலியவற்றின் இயல்பினை ஐயமில்லாதும், பிழையில்லாதும், பொருளினை நன்ஞாராய்தல், சீவனால் அறியும் குற்றமற்ற சாட்சியாம். கருதல் அளவை

இவ்வாறு நேரே அறியப்படாது மறைந்து நின்ற பொருளைக் கருதி ஐயத்தைக் களைந்து நீக்கி அறிவதாம். நூல் மேற்கூறிய இருவகை யானும் அறியக்கூடாதன கடவுள், சீவன் மறைவு (பாசம், மாயை) ஆகியனவற்றை அறிதற்குப் பேரறிவுடையோர் கூறிப் போந்தன வற்றைக் கொண்டு அறிவதாம். இதனை,

''மாசறு சாட்சி ஐயம்
திரிவின்றி விகற்ப முன்னா
ஆசற அறிவ தாகும்
அனுமானம் அவினா பாவம்
பேசுறும் ஏதுக் கொண்டு
மறைபொருள் பெறுவதாகும்
காசறு முரையிம் மானத்
தடங்கிடாப் பொருளைக் காட்டும்''

என்னும் இவ் விரண்டாம் பாவாலறிக.

. காண்டலளவை என்பது ஊனக் கண்ணாலும் ஞானக் கண்ணா லும் அறியும் அறிவாம். இதனை (1) மதிக்கக்கூடிய காண்டலளவை (விண்டலில்லாக் காட்சி) எனவும், (2) மதிக்கக்கூடாக் காண்டலளவை எனவுங் கூறுவர்.

(1) மதிக்கக்கூடிய காண்டலளவை. —(i) நேர்மையில்லாக் காண் டல் (நிருவிகற்ப காட்சி), (ii) ஐயக் காண்டல், (iii) கலக்கக் காண்டல் (விபரீதக் காட்சி), (iv) நேர்மை காண்டல் (விண்டலில்லாக்காட்சி) சவிகல்பம் என நான்காக வகுப்பர். இவற்றுள்.,—

நேர்மையில்லாக் காண்டல்; (நிர்விகற்பம்) கொண்ட பொரு ளினை மட்டும் அறியுமேயன்றி கண்டபொருளின் பெயர், வகை (சாதி), பண்பு (குணம்), தொழில் (காரணம்) ஆகிய இவற்றினைக் கண்டு பகுத்தறியாது கண்டதை மட்டும் கொள்ளும் காண்டலாம்.

(2) ஐயக் காண்டல் ; பொருளினைக் கண்டு அதனை எது வென நன்காராயாது துணிதலாம்.

(3) அப் பொருளை வேறு பொருளாக்கொள்வது கலக்கக் காண்டலாம் (விபரீத காட்சியாம்).

(4) அப் பொருள், அதன் பெயர், வகை, பண்பு, தொழில் ஆகிய ஐந்தினையுங் கண்டு ஐயங்களைக் களைந்து உள்ளது உள்ளவாறு அறிதல் நேர்மை காண்டலாம். இவற்றினை ;—

''கண்ட பொருளை யிரட்டுறவே
கருத லையந் திரியவே
கொண்ட றிவாம் பெயர்சாதி
குணமே கன்மம் பொருளெனவைந்து

உண்ட விகற்ப வுணர்வினுக்குப்
பொருளி னுண்மை மாத்திரத்தில்
விண்ட லில்லா வறிவாகும்
விகற்பமில்லாக் காட்சியே.''

எனவரும் மூன்றாம் பாவாலறிக.

காண்டல், கருதல், உரையால் அறியப்படும் பொருள்களுள்; —

I காண்டலளவையுள் (1) பொறியாலறிதல் (இந்திரியக் காட்சி), (2) மனதால் அறிதல் (மானதக் காட்சி) மந்திரம், (3) தன்னாலறிதல், தன் வேதனை காட்சி, (4) யோகக் காட்சி.

II. கருதல். —(i) தான் அறிதற் பொருட்டுக் கருதலாம். (ii) பிறர் பொருட்டு அவர்கட்கு அறியுமாறு எடுத்துக்கூறக் கருதல் செய்தலாம்.

III. உரை. —மந்திரம், தந்திரம், பெரியோரிடம் கேட்டல் ஆகிய மூன்றால் தெளிதலாம். இம் மூன்று அளவைகளால் அறியப்படும் இயல்பு பொது, சிறப்பென இருவகைப்படும். இதனை,

''காண்டல் வாயின் மனந்தன்வே
தனையோ டியோகக் காட்சியென
வீண்டு நான்கா மனுமானந்
தனக்கும் பிறர்க்கும் மென்றிரண்டாம்
ஆண்ட வுரைதந் திரமந்திரத் தோடு
உபதேசச் சொல்லென மூன்றாம்
பூண்ட வளவைக்கு எதிர்புலன்றன்
னியல்பு பொதுவென் றிரண்டாமே.''

எனவரும நானகாம பாவாலறிக.

ஈண்டு மூன்று அளவைகளைக் கொண்டு அறியப்படும் பொருள் களின் சிறப்பியல்பினையும் பொது இயலினையுங் கூறுவாம். இவற்றுள் காண்ட லளவையை I மதிக்கக்கூடியது. II மதிக்கக் கூடாதென இரு பகுதியாக வகுத்து I மதிக்கக் கூடியதில் (a) நேர்மையில்லாக் காண்டல், (நிருவி கற்பக் காட்சி), (b) ஐயக் காண்டல், (c) கலக்கக் காண்டல் (விபரீதக் காட்சி) இவைகளை விண்டல் காட்சியென கண்டனவற்றை நன்கு ஆராய்ந்து கண்டதைக் கண்டவாறாக அறியும் இந்திரியக் காட்சி யென ஓர் பகுதியாக்கினர். இதன் விளக்கத்தை முன்பு கூறியதால் அறிக.

(a) நேர்மை காண்டல் (சவிகல்ப காட்சி) விண்டலில்லாக் காட்சி :— நேர்மையற்ற காட்சிபோலன்றி, இக்காட்சி கொண்டதை மறவாது அதன் பெயர், வகை, பண்பு பொருள் ஆகிய நான்கினையுங் கொண்டு மனதில் சிந்தித்து, பகுத்தறிந்து துணிதல், விண்டலில்லாக் காட்சியாம். இதனில் மனக்கலக்கமின்றி உள்ளது உள்ளவாறு தெளிந்த மனதினால் அறியப்பட்டுத் துணிவதால், இதனை விண்டலில்லாக் காட்சி என்றும், இவ்வறிவு மன நிலையால் அறிவதால் மானதக் காட்சி என்றுங் கூறுவர்.

''அன்னிய சாதி யுந்தன் சாதியு மகன்று நின்றல்
அன்னி யல் பன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக் கொத்த
றுன்னிய பொதுவி யற்கை சொன்னவிவ் விரண்டினுள்ளே
மன்னிய பொருள்களியாவு மடங்கிடு மான முற்றால்.''

குறிப்பு.—விளக்கிக் கூறின் ஐம்பொறிகள் சத்தற்ற பொருள்களாகை யால் அவைகள் தனித்து நிற்கில்தானே அறிய முடியா. அவைகளுடன் சத்துப்பொருளாகிய சீவனுங் கூடில் அறிய முடியும். மேலும் பொறிகட் கான ஐம் பொருளும் வேண்டும். ஆதலால் இக்காண்டலில் பொறி, சீவன் ஐம்பெரும் பொருள் ஆக மூன்றும் துணை கூடி அறிவிக்கும். II புலனன்றி பொறிகள் தொழிற்படாதாதலால் புலன் துணையாயிருந்து பொறியினைக் கொண்டு அறிந்ததாகையால் மனத்துக் காண்டல் (மானத காட்சி) என வாயிற்று.

''அருந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் கராக மாதி
தருத்தன்வே தனையாங் காட்சி சமாதியான் மலங்கள் வாட்டி
பொருந்திய தேச கால வியல்பகல் பொருள்க ளெல்லா
மிகுந்துணர் கின்ற ஞான மியோகநற் காண்ட லாமே.''

ஈதன்றி இக்காண்டல் அளவையை புட்கர ஆகமத்துள் மூன்றாகக் கொண்டு I பொறி புலனால் அறிதல், II இன்பதுன்ப நிலையிலும் (யோக) (மனதின் தரத்தால்) மந்திரத்தால் அறிதல், III தன் தரத்தால் (தந்திரத்தால்) அறிதல் எனக் கூறும்.

பொறி புலனால் அறிதலை (இந்திரிய சாட்சியை) முன்பு கூறியதால் அறிக.

II (a) மனநிலையை சிதற விடாது இன்ப துன்பங்களை ஆண்ட நிலையில் கண்டறியும் அறிவாம்.

(b) யோக நிலையில் ஒவ்வோர் நிலைக்கான எழுத்துக்களை ஓதி மூச்சடக்கி மனதின் திறத்தால், நிற்கும் நிலையில் பொறிகளால் காணப் படாவற்றையும் அறிவாம், இது இந்திரிய அறிவாம்- யோகக் காட்சியாம்.

iii (a) பொறி புலனன்றி, மனமின்றி ஓதாது நிலையில்லாது,
''சீவனென சிவனென வேறில்லை''

எனத் திருமூலரும்

''அவனே தானேயாகிய அந்நெறி''

எனச் சிவஞான போதமும் கூறுமாபோல், சிவனை யொத்த தான் எனக கொள்ளும் சீவன், உயிர், ஆன்மா எனக் கூறும் தன்னைத் தான் அறியின், பொறிவேண்டாம், புலன் வேண்டாம் என்று ஞானக் கண்ணால் (Higher Psychical) யாவையும் அறியும். இஃது தந்திரமெனப்படும்.

(b) ஐயக் காண்டல் : —இக்காண்டலளவை ஓர் பொருளை வேறோர் பொருளாகக் கொள்வதைமதிக்கக்கூடா அளவை என்பவர். இஃது கயிற்றைக் கண்டு பாம்பு என அஞ்சுதலும், கொம்பைக்கண்டு ஆள் என்பதும், கானலிற் றோன்றும் புனலின் அலையை நீர் என்றுதேடி ஓடுதலும், ஒன்றுமில்லா வெளியே நீல நிறமுடைய தொன்றும் ஆகிய காட்சி மதிக்க கூடாக் காட்சி அளவையாம்.'

இதனை—

''ஒரோர்வத் துவினில் வேறே யோரோர்வத் துவினை யோர்தல்
நாருடு பணியாய்த் தோன்ற னானாகித் தறியிற் றோன்றல்
நீருடு கானற் றோன்ற னிறந்தலம் வெளியிற் றோன்றல்'

கைவல்லியத்தில் காண்க.

கருதல் அளவை (அனுமானப் பிரமாணம்).—கருதல் அளவை என்பது, கொண்ட பொருளினைக் கருதி அறிதலாம். இஃது கொண்ட அப்பொருளின் தன்மையை அறியும் பொருட்டு மூன்றாகப் பகுத்து நடுநிலைமையிலுள்ளதைச் சீர்தூக்கிக் கருதி அதன் தன்மையை எடுத்துக் காட்டுவது சபக்கம் எனவும், அதன் தன்மையை எடுத்துக் காட்டாதது விபக்கமெனவும் இவைகட்கிடையே துணிதற்கு இடமாயுள்ளது பக்கமெனவும் கூறுவர். அதாவது கருதற்கு முதலாகப் 'பக்கம்' அதன் உண்மையை எடுத்துக்காட்டித் துணியச்செய்வது சபக்கம். (உண்மை யான பாகுபாடு) அப்பொருள் இல்லையெனத் துணிதற்கு இடந்தருவது விபக்கம். (இனிமையான பாகுபாடாம்) இதனையே நிகர்பக்கம் (உள்ளதை அறிவிக்கும் பாகுபாடு) நிகரில் பக்கம் (இன்மையின் பாகு பாடு) கொண்டு துணிந்த பொருளின் பாகுபாடெனவுங் கூறுவர்.

குறிப்பு.—பகுக்கப்பட்டது பக்கம் எனப் பெயர் பெற்றது. கரும்பினை இக்கு எனத் தமிழில் உள்ளதை இக்ஷு என்றாற்போல் பக்கம் பக்ஷ மாயிற்று.

''பக்கம் மூன்றின்'' .. .. .. ..

''மூன்று பக்கம் பக்க நிகர் பக்க நிகரில் பக்கமெனத்
தோன்றும் பக்கந் துணிபொருளிக் கிடமா முவமை நிகர்பக்கம்
மான்ற பொருள்சென் றடையாத விடமா நிகரில் பக்கமுத
லேன்ற விரண்டும் பொருளுண்மைக் கிடமா மென்று பொரு
ளின்றாம்.''

எனவரும் எட்டு, ஒன்பதாம் பாக்களால் அறிக.

இம்மூன்றினை விளக்கிக் காட்டின், மலையில் புகையுள்ளதால் ஆங்குத் தீயுள்ளதென்றறிதல் (மலைபக்கம்), அஃது எது போலெனின் அடுக்களையில் நெருப்புள்ளது போலென அறிதல்; அடுக்களைசுபக்கம், இதனைத் துணிவது ஏரியினின்று புகை எழுதலில்லை யாகையால் ஆங்கு நெருப்பில்லையென்பது விபக்கம்.

ஒரு பொருளை இது என அறிதற்கு மூன்று பக்கமாக வகுத்து எது போலெனக் கருதித் துணிதற்கு 'எது' எனக் கருதி ஆராய்ந்துபின் துணிதல் வேண்டுமாதலால் (எது), 'ஏது' என்பதையும் சைவர் மூன்றாகக் கொண்ட இயல்பு, செயல், இன்மை எனவாம் (அனுபவம்) இவற்றுள் இயல்பு எது—இது எனக் கருதக் கொண்ட பொருளின் இயல்பு எது எனச்சொல்லின் மர முதலிய பொருள்களை இயற்கையில் உணர்த்தும்

இயல்பு அறிவேயாம். (1) புகை யெழுதல் நெருப்பின் செயலாகையால் செயல் ஏது எனவும், இன்மை எனக் கொள்ளுதற்குக் குளிரில்லாமையால், பனியில்லை எனவருமாகையால், இன்மையை உணர்த்த இன்மை ஏது (அநுபலத்தி) ஏது எனவும் ஆம். இஃது முன்னேயுள்ள பொருளினை அறிதல், மறைந்துள்ள பொருளினை அறிதல், இல்லாப் பொருளை அறிதல் என்னும் உணர்ச்சி மூவகையாம். இவைகட்குத்துணையாகமுன்பு கூறிய இயல்பு, செயல், இன்மை என்னும் ஏதுவென்றும் சிந்தித்தல் வேண்டும். இவற்றில் செயல் காரியமெனினும், உபலத்தி எனினும் ஒக்கும். உள்ளது என்னும் உணர்வுக்குத் துணையாயுள்ளது உபலத்தி. இல்லது என உணர்தற்குத் துணையாயுள்ளது அநுபலத்தியாம்.

''ஏது மூன்றா மியல்புகா ரியத்தோடநுப லத்தியிவை
யோதி னியியல்பு மாமரத்தைக் காட்டலுறுகா ரியம்புகைதன்
னாதியாய வனல் காட்ட லாகு மநுப லத்தியது
சீதமின்மை பனியின்மை காட்டல் போலுஞ் செப்பிடினே.''

(பாடல் 10)

இதனை விளக்கின், உள்ளது இல்லது எனக்கொண்டு பொருளை ஆராயுமிடத்தில்:

(i) உள்ளது எனத் தொடங்கி
இது (மேற்கோள்)—Proposition—(கொண்ட பொருள்)
எரிகின்றது (மலை)
ஏதால்—Reason—ஏது, எதனால் (ஏது)
மலையில் புகையுள்ளதால்
எதுபோல உபமானம் (Illustration)
(உதாரணம்) அடுக்களையில் நெருப்பும், புகையுமுள்ளதால்
இதுபோல் உபமேயம் (Application),
(உபமேயம்) மலையில் தீப்பற்றிப் புகை காணப்படுகிறது
துணிபு நிகமனம் (Conclusion)—
ஆகையால் மலையில் தீப்பற்றியது எனத்துணிவதாகும்.

(ii) இல்லது கொண்டறிதல்—இல்லதெனத் தொடங்கி
இது—proposition—(கொண்டபொருள்)
மலையில் புகையில்லை.
எதனால்—Reason—ஏது (எதுவால்)
அங்கு நெருப்பில்லை.

எதுபோல்—Illustration—(உதாரணம்)

குளத்தில் தீப்பற்றாதலால்.

இதுபோல—Application—(உபமேயம்)

ஆதலால் மலை தீப்பற்றவில்லை—புகையில்லை.

துணிபு (நிகமனம்)— Conclusion—ஆங்கு புகை இல்லை.

இதனை உடம்பாட்டுச்சொல், எதிர்மறைச்சொல் என்னும் இவ்விரண்டினில் புகையுள்ள விடத்தே தீயுள்ளதெனக் கூறுதல் உடம்பாட்டுச் சொல் எனப்படும். நெருப்பில்லா விடத்தே புகையில்லையென்பது தாமரை நிறைந்த குளத்தில் நெருப்பு நிலையாயது என்று உவமை கூறுவதுபோல் கூறுவது எதிர்மறைச் சொல் எனப்படும்—இதனை:

''புகையா லனலுண் டடுக்களைபோ லென்னப் புகற லந்நுவயம்
வகையா மனலி லாவிடத்துப் புகையின் றாகு மலரினொடு
முகையார் நீரிற் போலென்று மொழிதல் வெதிரே கச்சொல்லிவை
தொகையா ருறுப்பைந் தொடுங்கூடச் சொல்லுவாரு முளர்
[துணிந்தே.''

(பாடல் 11)

கருத்து.—இதில் கூறிய ஐந்து மேற்கோள் ஏது முதலிய ஐந்தாம்.

இஃதன்றி இக்கருதல் அளவையுள் (iii) இயற்கையாய் அறிதல்:—இயற்கையில் பூக்களின் மணத்தை அறிந்த அறிவுகொண்டு அஃது கண்ணுக்கெட்டாது இருப்பினும் அதன் மணத்தை மூக்கால் அறிந்து, அவ்விடத்தில் மல்லி, ரோசா உள்ளன எனக்கூறும் கருதல் அளவையை, இயற்கைக் கருதல் அளவை, பூர்வகாட்சி, அநுமானம் என்பர்.

''போது நாற்றத் தாலறிதல் பூர்வக் காட்சி யனுமான
மோது முறையா லறிவினள வுணர்தல் கருத லனுமான
நீதி யான்முற் கன்மபல நிகழ்வ திப்போ திச்செய்தி
யாதியாக வரும்பயனென் றறித லுரையா லனுமானம்.''

(பாடல் 12)

(iv) முன்புகூறிய மூன்றையும் கொண்டேனும் இம்மூன்றினையும் பற்றி எவ்வாறு? எனவாராய்ந்தேனும் துணிதலே அளவையாம்.

**III.** நூலளவை என்பது உண்மைப் பொருளை அறிந்த பெரியோர்கள் கூறியதும், எழுதியதையும் கொண்டறிந்துகொள்ளல் என்க. இதனையே ஆகமம் எனப்படும். இதனைப் பின்பற்றிய சில சமயத்தவர் வேண்டுவன கொண்டு வேண்டாதனவற்றை ஒழித்தனர். அவ்வாறு விலக்கியவற்றில் நூலளவையுமொன்று. இதனிலுமோர் உண்மை யுண்டெனக்கொள்க.

அஃது யாதோவெனின், ஆகமம் தோன்றிய நாளிந்நாளெனக் கூறலாகாதாகலின், அவ்வாகமத்தினை ஒருவர்பின் ஒருவராகக் கூறிவரக்கேட்டுப் போற்றிவந்தனர் சின்னாள், செவியாற்கேட்ட முறைக்குப் பின்தான் ஒழிந்தால் பிறர் அறியவேண்டுமே என்ற நன்னோக்கங்கொண்டு ஏட்டில் எழுதி வழங்கினர். இந்நூற்களிற் பல கடல்கோளுக்கும் தீக்கும் பகைவர்கட்கும் இரையாயின. எஞ்சி நின்றவையே பனிபடு மலைவரைச்சென்றன. அந்நாளில் வடபுலம் நோக்கிச் சென்றவர் அங்குள்ளாரோடு கூடித் தம் மொழி, கலை, நாகரிகம், கடவுளுண்மை, கடவுள் வழிபாடு முதலியவற்றை அவர்கட்கும் பயன்படக் கற்றுக்கொடுத்தனர். அதனால் அவர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர்.

இவ்வாறு வாழுநாட்களில்தான் மாறுபாடுண்டாகிறது. ''பிறநாட்டு நல்லறிஞர் நூற்களைத் தமிழ் மொழியில் பெயர்த்தல்வேண்டும்,'' என்ற உணர்வு இந்நாளில் தமிழரிடை உண்டானதுபோல் ஆரியர்க்குமந்த நாளில் தமிழரின் ஆகமங்களைத் தம்மாரிய மொழியில் பெயர்த்திடல் வேண்டும் என்ற அவாவினால் மொழிபெயர்த்தனர். இந் நூலமைப்புபடியே கோயிற்கட்டல், கடவுளைத் தொழல் ஆகிய காலமும் ஒன்றிருத்தல்வேண்டும். இதையே ஆரிய திராவிடக் கலப்பு என்பர் வரலாற்றாசிரியர்கள்.

கலப்புற்ற நாகரிகத்தில் வாழ்ந்த நாளில் தென்புலத்தார் ஆரியரைக் கோயில் பார்வைக்காக வைத்தனர். பார்வைக்காக வைத்தமையால், அவர்கள் தங்களின் பழைய வழக்கப்படிக் கடவுட்பெயரால் ஆடு, மாடு, குதிரை முதலியவற்றை உயிர்பலியிட்டனர். இதற்கு ஆபூதி எனப் பெயரிட்டனர். இதனைக்கண்ட தென்னவர்:

> ''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்.''

என்று கூறிய வாக்கிற்கேற்ப, கொல்லாநோன்பு மேற்கொண்டு வாழ்ந்த சைவ சமயத்தினைப் பின்பற்றிய புத்த சைனரோடுகூடிக் கோயிற் பார்ப்பாரை இகழத் தொடங்கினர். இதனால் தென்னாட்டிற் பார்ப்பனரின் சீருஞ்சிறப்பும் குறைந்துபோயின. இதைக் கண்டஞ்சிய ஆரியர் தமிழரின் கொள்கையுடன் கூடிய தம்மொழியில் எழுதிய ஆகமங்களைக் காட்டிப் புதிதாகத் தோன்றிய புத்த சைன மதங்களைத் தமிழர் துணைக் கொண்டே விரட்டிவிடக்கருதிய காலமொன்றிருத்தல் வேண்டும். இக் காலத்திற்றான் வட நாட்டினர் தம் மொழியில் எழுதிய ஆகமங்களைத் தென்னாட்டிற்கனுப்பி வைத்திருத்தல் வேண்டும். இது செஸ்மோர்[1] கருத்தாம். இப்படித் தங்கள் மொழியின் நூல்கள் பரவப் பிறர் நூல்களின் ஆக்கம் குறையவும் வேண்டும் என்ற நோக்கம்கொண்டு புதுவெள்ளம் வரின் அவ்வெள்ளத்தில் நல்ல நூல்களைவிடின் புண்ணியம் என்றும் புகன்றனர். இதனை மெய்யெனக்கொண்டே மறந்தோர் தம் மொழி யாகமங்களை இழந்தனர். ஆகலின் இப் பழமையான இவ் வாகமம் தமிழிலேயே முதல் முதல் உண்டாயது. பின் அதுவே வடமொழியில் பெயர்க்கப்பட்டது. மீண்டும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இவ் வாறு மொழிகள் மாறி மாறி வந்ததோடு இந்நூற்களில் உள்ள பாக் களையும் கருத்துக்களையும் கற்றோர்பிறர்க்குக் கற்றுத் தரும்போது தத்தம் கருத்துக்கேற்றபடி பொருள் கூறுவதும், உரைவரைவதும் கூடு மாகையால், நூல் அளவையைச் சிலர் ஒவ்வா வளவையெனக் கொண்ட னர் போலும். ஈதன்றியும் ஒரு நூல் ஒருவரிடம் இருந்து மற்றவரிடம் செல்லும்போது எழுத்துப் பிழைகள் இழைவதும், பொருள் வரையும் போது நூலாக்கியோன் கொண்ட பொருட்கு மற்றவர் வேறுபாடான பொருள் வரைவதும், மற்றும் அவரவர் கல்விக்கும் அறிவுக்கும் ஏற்ப மிகுத்தும் குறைத்தும் கூறுதலை நாம் இன்றும் காண்பது போல்,

---

1 It has been said that the Agamas regresent the oldest products of Dravidan literature, that in prehistoric times they were written in the Dravidan (Tamil) language, and that a great part of them was lost in a flood which swept over the land south of the present Cape Comorin, the chief dwelling place of the old Dravidas. Only remnants of the older Agamas, were translated into Sanskrit and preserved in this form. But as has been urged, all that one can say is that the home of the Agama was in the land of Dravidas, i.e., the south of India. From the south they seem to have pushed up north, and then later to have turned back to the south where they helped to drive out Jainism and Budhism. It has been furter said that should one incline towards the theory that the Agama terature was of Dravidian origin, one must at the same time admit that it came under the influence of Sanskrt literature very early.

**Schomarus, Pp. 9-10.**

நான்கு சீரும், மூன்றும் நான்குமான அடிகளைக் கொண்டு பன்ன ரண்டு நூற்பாக்களை உடைய ஆகமத்திற்கு மெய்கண்டான் கூறிய விளக்கத்திற்குப் பின்வந்த விளக்கங்களைக் காணின், சிலர் இந்த நூலளவை ஒவ்வாதெனக் கொள்ளற்கும் இடந்தரும்.

இஃதெவ்வாறாக இருப்பினும் பல நூற்களைப் படித்ததன் பொருள் களையறிந்து, தத்தம் மனப்பான்மைக்கேற்பப் பொருள் படுத்தி அவற் றுள், மிகப் பொருத்தமுள்ளவைகளைச் சிந்தித்துத் தெளிந்த அப்பொருளே மேன்மையான பொருளாமாதலால், நூலளவையும் ஓர் இன்றியமையா வளவையேயெனக் கொள்ளுதல் மிகை யாகாதென்க.

ஆகம நூற்களிற் கூறிய அளவையைக் சைவத்தைப் பின்பற்றிய சம யத்தவரெல்லாம் துணைக்கருவியாகக் கொண்டனர். இந் நூலிற்காட்டிய மூவளவையே யன்றி, இவைகட்கு மேலான அளவை யொன்று உண்டெ னக் கொண்டனர் சைவர். அஃது காண்பனவற்றையும் கேட்டனவற்றை யும் நூல்களைக்கொண்டு அறிந்தவற்றையும் சிந்தித்துச் சிந்தித்து இருக் கையிற் சிந்தையிற் தோன்றியதுவே மிக மேம்பாடுடையதெனக் கொண்ட னர். ஆதலின் அதனைச் சிற்சக்தி என வழங்குவராயினர்.

காண்டல், கருதல், உரை (நூல்—ஆகமம்) என்னுமிவைகளால் அறிந்த அறிவொடு காணும் பொருளினையும், காணப்படாத பொருளாகிய பதி கடவுள் (சிவப்பொருளையும்), தோற்றப் பொருள்களாகிய (பசுவையும்) அவைகளின் இழுக்குகளாகிய பாசத்தையும் உண்மைப் பொருள்களெனத் தமிழர் கூறுதலை எவரும் ஒப்புக் கொள்ளுமாறு எடுத்துக்காட்டற்கு வந்தாம். இவ்வளவை நூற்கள்.

பதியியல்.—

''அவனவ ளதுவெனும் அவை மூவினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
மந்த மாதி என்மனார் புலவர்''

சைவ சித்தாந்தம் (முதல் நூற்பா).

ஆண் பெண் அதுவெனும், தோற்றப் பொருள்களாகிய உண்டைப் பகுதிகளையும் அதில் வாழும், ஆண், பெண், ஆணும் பெண்ணுமல்லா மற்றவைகளும் ஆகிய இம் மூன்றும், சிவப்பொருளெனும் ஒன்றால் தோன்றுவித்து நிலைக்கச் செய்து அவைகளின் வினையினால் அழிக் கப்படும் என்றலின், அதனைத் தோற்றுவிக்கும் பெரும் பொருள் ஒன்று [illegible]டுத்தல் வேண்டும் என எடுத்துக் காட்டற்கே, ஒரு பானையை

காணும் போதே அவனை ஆக்கியோன் ஒருவன் உண்டென அறிதற்கும் அப் பொருளால் தோற்றப் பொருளாகிய உண்டைப் பகுதிகளாகிய ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகியவை களும், மற்றுமுள்ள கோள்களும் நில நீர்ப் பகுதியாகிய உலகமும் முதலி யவற்றை இடைக்கிடை விட்டு நிலைக்கச் செய்து, இயக்குவித்து, அவைகள் ஒன்றோடொன்று முட்டிக் கொள்ளாதவாறு நிறுத்தி வைத்த இடத்திலேயே, நிற்கும்படி செய்யும் பேர்வன்மை (Law of imminence) உடைய சிவத்தின் திறத்தைக் காட்டுதற்கு ''அருளொ தன் வெளிக் குளே, அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படி'' எனத் தாயுமானவர் கூறியதும்;

'' அவையே தானே யாயிரு வினைமையிற்
போக்குவரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே ''

என சிவஞான போதத்தின் இரண்டாம் பாடலில் கூறியவாறு,

இவ்வாறு தோற்றப் பொருள்கள் (அவையே) தான் எனக் கூறும் தன்மையுடையதாய், சிவன் போல், சீவனும் சக்தியையும், பெற்றிருக்குமேயாயினும் அவைகளின் நல்வினை தீவினைப்பயனுல் ஈச னின் அழித்தல் ஆணையின் அழியுமேயாயினும் ''அச்சிவம் நீக்க மன்றி நிற்கும் என்பதால், இச்சை வைத்து உயிர்க்குயிராய்த் தழைத்து நின்றது '' எனத் தாயுமானவர் கூறியதும்: ஈசனுடன் கூடிய சக்தி அவனிடமே இருப்பதன்றி தோற்றிய பொருள் யாவற்றிலும்(Omnipotent energes) உள்ளதென, தோன்றிய பொருள்கள் தானாகச் சிறிது சிறிதாக நாளுக்கு நாள் பெருத்துக்கொண்டு வரும் இயல் பினைக் காட்டுதற்காம். அவைகள் உய்தற்கு வேண்டிய அறிவை நிலைக்கச் செய்தற்கு எங்கும் உள்ளார் என (Ommiscience) ''எங்கும் பிரகாசமாய் '' என்றும் தாயுமானவர் முதலியோர் பலவாற்றால் காட்டி, உண்மையுரையில் (தத்துவத்தில்) தோற்றப் பொருளைப் போலவே கடவுளுக்கும் காலம் (Time) நியதி (அளவு) இராகம் (விருப்பம்), வித்தை (கலை) கலா ஆர்வம் ஆகியவற்றை அமைத்து, கடவுளையும், மக்கள் (புருடன்) போலாக்கி தோற்றுவிக்கும் தொழில் பெற அமைத்து வைத்ததைக் காண்க. '' சீவ னென்னச் சிவனென்ன வேறில்லை '' எனத் திருமூலர் கூறிப் போந்தது சைவத்தின் உண்மையாகிய கடவுட்கும், சீவனுக்கும் வேற்றுமையின்மையைக் குறித்தற்கே போலும் இதனைப் பற்றியே -

" சீவனு மிச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்பான்
ஆவனென் றிடின் நாதி மலமிவற் றினைமறைக்குங்
காவலனிவனென் கன்மத் தளவினிற் கொடுப்பக் காண்பன்
பாவியாம் புத்தி முத்திப் பயன் கொளும் பண்பிற்றாகும் "

ச.சி.க. பிரமாணவியல் (சூத்திரம் 3).

பசு (தோன்றிய பொருள்) இயல். —முன்பு தோன்றிய பொருட்களைக் காணும்போது குடத்தைச் செய்த குயவன் ஒருவன் இருத்தல் வேண்டும் எனத் துணிதல்போல, குளிர்ச்சியின்மையின் பனியில்லை என்றவாறு எதிர்மறையால் (அபாவத்தால்) தோன்றிய பொருள்கள் இரங்காதிருப்பின் சத்துப் போச்சு எனக் கூறுவதால், இயங்கக்கூடிய தான தோற்றப் பொருள்கள் சத்துடைய பொருள், உயிர்ப் பொருளென அறியக் கிடக்கும். இதனை ஆன்மா எனவுங் கூறுவர். (ஆணவத்தை யுடையது ஆன்மா) ஆண்மையுடையது ஆணவம் எனக் கொள்ளக் கிடக்கும் ; பசு, சீவன், உயிர் (ஆன்மா) என்பது சத்துப் பொருளா யினும், அஃது அசத்தியாகிய பற்றோடிருப்பதால் (பாசம்), சத்தும் அசத்துங்கூடிய சதசத்தென்பர்.

சைவத்தைப் பின்பற்றி வந்த சமயத்தோர் ஆன்மா என்பது ஒன்றில்லை - உயிர்ப்பது உணவைக் கொண்டு நிற்பதே ஆன்மா, உணர் பொருள்களாகிய பொறிகள், புலன்களே ஆன்மா எனப் பலவாறு ஐயங்கொள்வார்க்கு ஐயத்தை நீக்கித் தெளிவித்ததற்காக வந்த மூன்றாம் நூற்பாவில்-

" உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புல மொடுக்க மறிதலின் கண்படில்
உண்டி வினைமையிற் உணர்த்தவுணர்தலின்
மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா "

எனச் சிவஞான போதம் மூன்றாம் பாவாலறிக.

பாசு (பற்று) இயல். —பாசம், பந்தம், பற்று என்பது, சத்துப் பொருள் களாகிய சிவத்தைப் போன்ற ஆன்மா இன்பதுன்பங்களைப் பெறுதற்கே, தோன்றிய உடலின் (தனுவின்) கண் கூடியிருத்தலாம் தன்னைச் சுற்றிய பற்றினை மூன்று பாவால் அளவை யியலாக் கூறின இவைகளின் தன்மைகளை விளக்குதற்கு ; —

" அந்தக் கரணமவற்றி னொன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத்தைத்தே ''

என நான்காம் நூற்பாவாலறிக.

ஆன்மா சிவத்தினைப் போல் சத்துப் பொருளேயாயினும் அஃது பற்றோடு கூடி இருத்தலின், பருப்பொருளாகிய உடலோடும் பொறி புலன்களையும், மனதையும் பெற்றுள்ளதாகையால், அப்பொறி கள் கண்டனவற்றைக் காணும் உட்கருவியே உயிர் (ஆன்மா) எனக் கூறின், இப்பொறிகளும், புலனும் கண்ட பொருள்களை ஒன் றினை ஒன்றாக உணராவாகையால் அவைகள் சத்துப்பொருள் போன்ற உயிராகா. அஃதெவ்வாறெனின், மனமானது கண்டதை யறிந்து வைத்துக்கொள்ளுமே யொழிய அதனைப் பற்றிச் சிந்தித்தலும், சிந்தித்துத் துணிபு கொள்வதும், அதனை விரித்து அறியும் அறிவும் இல்லாததாம். இவ்வாறே புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய மூன்றும் அவ்வகைத்தேயாம். இவைகட்கெல்லாம் கடந்ததாகிய ' தான் ' என்னும் ஆணவத்தோடு கூடி, சத்துப் பொருளாகிய உயிர் தனக்கெனப் பற்றற்று, உட்கருவியோடு அரசன் அமைச்சனைத் தன்னிடத்தே சேர்த்துக்கொள்ளுமா போல், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கையும் தன்னகத்தே கூட்டிக்கொண்டு அவைகளால் அறிந்து நிற்கும். அன்றியும் ஆன்மா கனவில் (சொப்பனத்தில்) அப்புலன் களை அடக்கி நிகழ்வதையறியும். விழிப்பில் (சாக்கிரத்தில்) புலன் களைப் பொறிகளோடு சேர்த்து நிகழக் கூடிய வகைகளை அறியும். இவ்வாறு அகத்தும் புறத்தும் நிகழ்வதை அடைவதால், அலைப்பாடு என்னும் ஐந்து துன்பங்களையும், ஆன்மா பெறுதலால் இவ் வைந்தும் ஆன்மா (பதியின்) இயலில் அடங்கும். இதனைக் கொண்டே —

" அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக்குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைந்து நிற்கும்
பசுத்துவ முடையனாகிப் பசுவென நிற்கு மான்மா ''

(சிவஞான சித்தியார் சுபக்கம்,
நான்காம் நூற்பா. எண். 20.)

எனக் கூறியதில், ஆன்மா (உயிர்) இறைவனைப் போல் எங்கும் பரவி யுள்ளது, அறிவுக்கறிவாயுள்ளது, எப்பொருளிலும் சார்ந்துள்ளது, இன்பம், செய்கை, பேரறிவையுங்கொண்டதேயாயினும் அஃது ஆணவத் தால் மறைப்புற்று நிற்குங்கால் அதனின் ' சித்தும் ' சித்தம் நுண்ணறி வின்றி ( தூல சித்தமாய்) நிற்கும்.

'' விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந் தறியா வாங்கவை போல்த்
தாம் தமுணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத்தவையே.''

(சிவஞானபோதம் ஐந்தாம், நூற்பா.)

ஐம்பொறிகளாகிய (புறக் கருவிகள்) மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளை அறியுமே யொழிய அவைகளை அளவிட்டு அறியாது போலவே, ஆன்மாவும், ஆணவம், தன்வினை, (கன்மம்) மாயை, செய்கை, மாமறைப்பு மாயை (திரோதாய் ஆகிய) ஐந்துள் திரோதா ய் மறைப்பைத் தருதலால், மற்ற நான்கையுங் கெடுக்கும் ஒரு சத்தியாத லால், இஃது உயிரோடு கூடி மறைந்து நின்று வினைக்கேற்ப அறிவிக் கும் சிவ சத்தியாம். இச் சத்திக்குப் பற்றுகள் உள்ளதால் இதனைப் பாசம் என்பர். பாசம் நீங்கில் அதனை அருள் என்பர், இதனை விளக்கப் புகின் —

'' பொறிபுலன் கரண மெல்லாம் புருடனா லறிந்தான் மாவை
யறிதரா வவையே போல வான்மாக்க ளனைத்து மெங்குஞ்
செறிதருஞ் சிவன்ற னாலே யறிந்திடுஞ் சிவனைக் காணா
அறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்து நிற்பன்''.

(சிவஞான சித்தியார் சுபக்கம்.) ஐந்தாம் நூற்பாவால் அறிக.

என்றதில் உயிரானது உடலோடு கூடி, பொறி புலன்களை இயங்கச் செய்து அவைகளைத் தத்தம் தொழில்களைச் செய்வித்து இஃது யாதென யாம் அறியுமாயினும், உயிரோடு கூடி அப்பொறி புலன்கள் உயிரென்பது எதுவென அறியா. இவ்வாறே எங்குமுள்ள இறைவ னது சிற்சத்தியின் பகுதியாகிய மாமாயை (திரோதாயி) உடனின்று வினைகளையறியும்படி செய்வித்து உயிர்க்கு உணர்த்தும். இவ்வாறு உயிர்க்கு அறிவிக்கும் சக்தியை உயிர் உணரா.

பொறி புலன்கள் யாவும் அழியக்கூடிய பொருளாகையால் எப்பொழுதும் உயிரை அறியமாட்டா. உயிர் சித்துப் பொருளாகையால் அதனுடன் கூடிய கட்டுகள் (பாசங்கள்) நீங்கின் சிவப் பொருளாகும் தன் இயற்கையறியாதாகின் சிவனையும் அறியாது ;

"உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே."

என்னும் சிவஞான போத நூற்பாவாலறிக.

அழியக் கூடியதும் அறிவில்லாததுமான தோற்றப் பொருள் களைப் போல் அறியப்படும் பொருள் சிவம் எனின், அஃது அழியக் கூடிய பொருளாகக் கொள்ளக் கிடக்கும். அவ்வாறு அழியக் கூடாப் பொருளெனின் இல்லாப் (சூன்ய) பொருளாகக் கொள்ளக் கிடக்கும். ஆயினும் அழியக் கூடியதான அறிவில்லாத் தோற்றப் பொருள்களில் அமைந்த உயிரும் சத்தும் சித்தும் பெற்று இழுக்கம் பலவற்றோடு கூடி இருத்தலின் சத்துப் பொருளை உயிர் அறியா. அவ்விழுக்கங் களைக் களைந்து நிற்கில் (சிற்சத்தியால்) ஞான சத்தியால் சிவப் பொருளை அறியக் கூடுமாதலின் அழியக்கூடிய கண் முதலியவை களால் அறியக்கூடிய உண்மைப் பொருளாகிய சத்துப் பொருளை (சீவன்) அழியும் பொருளெனக் கொள்ளுதற்கு இடந்தரா. அவ்வாறே (சீவன், சிவன்) ஆகிய இச்சித்துப் பொருள்களை அறியக் கூடாதபடி மறைக்கும் பெருமாயை நீங்கி, ஞானக் கண்ணால் அறிய முடியுமாதலின், இல்லாப் (சூன்ய) பொருளெனக் கொள்ளுதற்கு இடம் தரா. சிவத் திற்கும் சத்து—சித்து—ஆனந்தம் சச்சிதானந்தம் என்னும் பெயரும் அமைந்துள்ளது.

"யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலின்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா"—

இஃதெனச் சுட்டிக்காட்டக்கூடிய பொருள்கள் யாவும் உண்டைப் பகுதிகளும், மனம், ஐம்பொறிகளால் அறியக்கூடா மாயையும் ஆகிய இவைகள், அசத்தாகையால், சத்தாகிய சிவப்பொருளைக் காணக் கூடாத பொருளாகுமாயினும் அவ்வசத்துப் பொருளொடு சத்துப் பொருளுங் கூடி அவைகளை இயங்கச் செய்தவர் சத்து—அசத்தோடு கூடிய சதசத்தாய் (ஆன்மாவாக) நிற்கும்.

குறிப்பு. —சத்து=சிவப் பொருள் = பதி, சதசத்து = உயிர்ப் பொருள் உயிரில் பொருள் = பசு. அசத்து=மாயை = பாசம் எனக் கொள்க.

இதனை,

> ''அனாதி சிவரூப மாகிய வான்மா
> தனாது மலத்தாற் றடைப்பட்டு நின்றது
> தனது பலமுந் தடையற்ற போதே
> அனாதி சிவரூப மாகிய வாறே''.

பொருள். —அழியாப் பொருளாகிய உயிர், சிவப் பொருள் போன்றதே யாயினும், அதனின் இழுக்கங்களினால் சிவத்தை யறியக்கூடாது தடைப்பட்டு நின்றது. இழுக்கங்களை (பாசங்களின்) தடையை அறுத்து விட முடியுமாயின், அப்போதே அஃது அழியாப் பொருளாகிய சிவ வடிவை அறிந்து நிற்குமென அறிக.

இவ்வாறாக விரித்துக் கூறிப் போந்தது எதற்கோ வெனின் எல்லாம் வல்ல சத்துப் பொருளாகிய சிவப் பொருளும் சத்தற்றதாகிய (அசத்தாகிய) உண்டைப் பகுதிகளும், அதனுள் வாழும் உயிர்ப் பொருள்களும் அச்சிவமின்றி இயங்காதாதலால் அச் சிவத்தோடு தோற்றப் பொருள்களையும் கூட்டி உயிரையுங் கூட்டி ஒன்றெனக் கொள்ளுதல்மிகையாகுமெனக் கொண்டுகூறினாரென்க. இதனை விளக்க.

> '' பத்திப் பணித்துப் பரவுமடி நல்கிச்
> சுத்த வுரையாற் றுரிசறச் சோதித்துச்
> சத்து மசத்துஞ் சதசத்துங் காட்டலாற்
> சித்த மிறையே சிவகுரு வாமே.''

(திருமூலர் திருமந்திரம்).

சிவப் பொருளை அன்போடு வணங்கிப் பேரறிஞர்கள் கூறிய நூல்களை ஆராய்ந்தறிந்து கடவுள் தன்மையை அறிந்த உயிர் தன்னகத்தே அமைந்த சத்துப் பொருள்யாது, சித்துப் பொருள்யாது, அசத்துப் பொருள்யாது, சத்தும், அசத்தும் கூடிய பொருள் யாது எனச் சிந்தித்த நிலையில் அப்பொருள்களின் உண்மையைக் காட்டும் அச் சித்தமே சிவ குருவெனக் கூறியதால், உயிரும், சிவத்தன்மை யாகிய சத்தும் சித்தும் உடையதேயாயினும், அசத்துப் பொருள்களாய

பற்றுங்கூடிய சதசத்து ஆன்மா, உயிர் எனக் கொண்டனர். மேலைப் பாவில் சிவ, குரு என்றது இரண்டும் ஒன்றே. சிவ என்பதும் சிவப்பைக் குறிக்கும் குரு என்பதும் சிவப்பைப் குறிக்கும்.

இவ்வாறாக, பதி (கடவுள்) இயல், பசு இயல், பாசா (இடுக்கண்) இவையாவற்றையுங் கூட்டிக் கூறியதில், சிவப் பொருளைச் சத்துப் பொருளாகக் கொள்ளின் அப்பொருள் ஐந்தொழில்களைச் செய்தற்கு வேண்டிய இன்பம், தொழில், அறிவு ஆகிய சக்தி இன்றி, எதற்கும் பயனற்றதாக இருத்தல் வேண்டுமாதலால், மேற்கூறிய முத்தொழிலு முடைய சத்தியொன்றைச் சிவத்தோடு கூட்டிச் சிவசக்தி எனக் கூறிக் கொண்டனர். இச்சிவ சக்தி சூரியனுக்குப் புறம்பாக ஒளியில்லாதது போலும். செம்பில் களிம்பு இடையறாக் கலந்திருத்தல் போலும். இச்சத்தியும் சிவனுங் கூடில் யாதும் செய்ய வல்லதாம், அவள் பிரிந் திடின் அணுவும் அசையாது என ஆன்றோர் கூற்றாகலின் இச் சிவசக்தி ஒன்றே யாயினும், இதனை மூன்றாகக் கொண்டு, சிவத்திற்கு இன்ப மளித்து, தோற்றத்தை உண்டாக்கத் தூண்டுதற்கும், தோற்றுவித் தற்கும், வன்மை தருவதற்கும் இவ்விரண்டை நிகழ்த்தற்கும் வேண்டிய அறிவை அளித்ததற்கும், இச்சா, கிரியா, ஞானாசக்தியென ஒன்றி னையே மூன்றாக வகுத்தனர். இச்சத்தி சிவத்தை விட்டு நீங்கின் யாதும் செய்யக்கூடா நிலையில் நிற்குமாதலின் அணுவுமசையாது எனக் கூறினர்.

சைவர், இச்சிவம் சத்தியோடு நில்லாது இவ்விரண்டோடு மாயை என்பது ஒன்றையுங் கூட்டி மூன்றாகக் கொண்டதே பதி என்பர். சிவம் ஆணாகவும், சத்தியும் மாயையும் பெண்ணாகவும் கொண்டனர். சிவத் தோடு சத்தியைக் கூட்டியதோடு மாயையுங் கூட்டியது எதற்கோவெனின் இயக்கத்திற்கு வேண்டிய சத்தி பெற்றிருப்பினும் தோற்றுவிக்கும் பொருள்கள் தங்குதற்கு இடம் (substratum) வேண்டு மாதலால் மாயையுங் கூட்டினாராக, இதனை;

> ''சத்தியும் சிவமு மாய தன்மையவ் வுலக மெல்லா
> மொத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியுமாகி
> வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
> இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்.''

" நித்தமா யருவாயேக நிலையதா யுலகத் திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே."

எனக் கூறியதால் சத்தி, சிவம், மாயை என்னும் இவற்றில், ஆணாக சிவத்தையும், பெண்ணாகச் சத்தியும், மாயையும் கொண்டு ஒன்று படுத்தி (சிவமாக்கி) உணரப்படும் பொருளும் உணரப் படாத பொருளாக வும் நின்று தோற்றப் பொருள்களையுண்டாக்கிய சிவமே, தோற்றப் பொருளுக்கு வித்தாக நின்று, சித்தாய் எங்கும் பரந்து உண்டைப் பகுதிகளைத் தோற்றுவித்து, அதில் உயிருள் பொருள், உயிரில் பொருள்கள் அமைத்துத் தானும் அவற்றோடு உயிர்க்குயிராய் நின்று, அவைகள் இன்ப துன்பங்களை ஆண்டு வரும் பொருட்டு மறை பொருளாகிய மாயையும் உயிர்க்கு அளித்துள்ளான்.

சிவன், சத்தி, மாயை என்னும் இம் முப்பொருளையும் ஒன்று படுத்திக் கூறி, கடவுள்: சிவன் (Proton), சத்தி (Electron) மாயை (Neutron) எனக் கொள்ளுதற்கும் இடம் தரும்.

இவற்றுள் முதலாவது சத்துப் பொருளே யாயினும் மற்றவையின்றி இயங்காதென என்க.

தோற்றம் செய்தற்குத் துணையாக வந்த மாயையைச் செயலுக் கேற்ப நான்காக வகுத்துப் பெயர் அமைத்தனர், மீண்டும் இதனை மூன்றாக வகுத்து (1) தூய்மை மாயை, (2) தூய்மையற்ற மாயை, (3) உண்டைப் பகுதி மாயை எனப் பெயர் அமைத்தனர். இம்மாயை சிவத்தோடு கூடின் தூய்மை மாயை எனப்படும். உயிர்ப் பொருளோடு கூடி இன்ப துன்பங்களைத் தரும்போது தூய்மையற்ற மாயை எனப் படும். இஃது தோற்றப் பொருள்களுக்காகத் துணையிடமாக இருத் தலின் உண்டைப் பிறக்க மாயை எனப்படும். இம்மாயையிலிருந்தே தோற்றம் உண்டாம் என்பது சைவரின் கொள்கை.

இம்முப் பொருளினைப் பலவாற்றான் விரித்துக் கூறிய பதியாம். செம்மைப் பொருளை, சிவமென முதன்முதல் கொண்டவர் தென்னாட்ட வர் (தமிழர்) என வலியுறுத்திக் கூறுதற்கே;

" தென்னா டுடைய சிவனே போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி."

என மாணிக்கவாசகரும்

यं शैवाः समुपासने शिव इति ब्रह्मेति वेदान्तिनः
बौद्धाः बुद्ध इति प्रमाणपटवः कर्तेति नैय्यायिकाः ।
अर्हांन्नित्यपि जैनशासनरताः कर्मेति मीमांसकाः
सोयं वो विदधातु वांछितफलं त्रैलोक्यनाथो हरिः ॥

" யம்சைவா: ஸமுபாஸதே சிவ இதி ப்ரஹமேதி வேதாந்தின:
பௌத்தா புத்தஇதி ப்ரமாண படவ: கர்தேதி நையாயிகா:
அர் ஹந் நித்யபி ஜைந சாஸன ரதா: கர்மேதி மீமாம் ஸகா :
ஸோயம் வோ விததாது வாஞ்சித பலம் த்ரைலோக்ய
நாதோஹரி :"

எனத் தென்னாட்டுச் சைவரான சங்கராச்சாரியார் கூறியதில், மூவுல கிற்கும் முதல்வனாகத் தென்னாட்டார் கொண்ட இச்சிவத்தினை, வேதாந்தம் பிரம்மமென்றும், புத்தரையே கடவுளென்றும், நியாயமுறை எனக் கொண்டு வாதாடுவோராகிய நையாயிகர் கர்த்தா என்றும், சமணர் கள் (Jarns) அருகன் என்றும், மீமாம்சிகர் கர்மம் என்றும் கூறினார்கள் என்னின், உலகத்துத் தோன்றிய கடவுள் வழிபாடு எவற்றிற்கும், சைவமே முற்பட்டது எனத் தெள்வத் தெளியக் கிடக்கும்.[1]

தோற்ற முறை :

இவ்வாறே சைவநூற்களில் கூறிய தோற்ற வரிசையையும் வேத நூற்களுக்கு முற்பட்டதென எடுத்துக் காட்டுதற்குச் சான்றுகள் பல உள. வேதாந்த நூலோர் யாவும் தோற்றத்திற்குத் துணையிடமாக் கொண்டது பிரகிருதி யொன்றேயாம். இவ்வாறன்றி, சைவர் இவன்

---

1 Among the many revelations that Mohenjodaro and Harıoppa have had in s tore for us none perhaps is more remarkable than this discovery that Salvaism has a history going back to the Chalotitring age or perhaps even further still and it thus takes its place as the most ancient living faith in the world—Sir Jhon Marshall in his preface to Mohenjodaro and the Indus Civilization.

தோற்றத்திற்கு முதலாய் இருப்பினும் தோற்றப்பொருள்கள் நிலைத்த தற்கு வேண்டிய துணையிடமாக (Sub-stratum) மாயையைக் கூட்டியுள்ளதைக் காணின் எது மேன்மையுடையது எனக்காணக்கூடும். அன்றியும் வேத நூற்களின் துணை நூற்களாகிய உபநிடதங்கள், தோற்ற வரிசையை ஒவ்வொன்றும், ஒவ்வோர் வழியாக வரன்முறை யின்றிக் கூறும். இவற்றுள் ஒன்று உண்டைப் பிறக்கத்திற்கு வேண்டிய ஐம்பொருளினை விடுத்து, சத்ரூப பிரம்மனிடத்தினின்று தீ, நீர், மண் தோன்றிற்றெனச் சாந்தோக்கிய உபநிடதத்திலும்; வெளி, வளி, தீ, நீர், மண் ஆகியவை உண்டாயிற்றெனவும், மீண்டும் விளக்கும் போது சர்வ சுகத்தையும் பரமேசுவரர் சிருட்டித்தாரென்று முறை தெரிக் காது உற்பத்தி கூறி இருக்கின்றது தைத்திரீயத்தில், என 76 பக்கம் கைவல்லிய நவநீதம், ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பலசாமிகள் எழுதிய நூலில் உள்ளதைக்காண்பதாலும். இக்கைவல்லியத்தில் 30–29-ம் பாடலில் தோற்ற வரிசையைக் கூறுங்கால் ''அது தானெப்படி என்றக் கால்'' எனத் தொடங்கிப் பாவை முடித்து, அதனை அம்மட்டில் விடுத்து 30, 31-வது பாவில்

''ஒருவழி யிதுவா மித்தை
ஒருவழி வேறாச் சொல்வர்
மருவுமவ் வியத்தந் தானே
மகதத்வ மாகு மந்த
அருண்மக தத்து வந்தான்
அகங்கார மாகு மென்றும்
கருவகங் கார மூன்றாக்
காட்டிய குணமா மொன்றும்

இக்குணங் களிலே விண்போன்று
இருக்குஞ்சிற் சாயை தோன்றும்
முக்குணங் களினுந்தூய்தா
முதற்குண மாயை யாகும்
அக்குணப் பிரமச் சாயை
யந்திரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றாதோ
னிமித்தகா ரணனா மீசன்''.

எனக் கூறியதைக் காணின் 29-வது பாவில் தோற்ற வரிசையை **வேத** நூல்படி கூறலாமெனத் தொடங்கி, அதன்படி விளக்குதல் மேன்மைப் படாதெனவே, 30-வது பாட்டில், 'ஒருவழியிதுவா மித்தை' என்பதை வேத முறையென்று பொருள்படுத்தியும், ஒருவழி வேறாச் சொல்வர் என்பதைச் சித்தாந்த முறையென்று பொருள் படுத்தியும் உள்ளர் என்பது தெளிவாம். ஆதலின் சைவ நூல்களைக் கண்டறிந்த பின்னரே, வேதாந்திகள் தோற்ற வரிசையை (தத்துவத்தை) வரையறைந்து முறைப் படி எழுதினாரென்பது எவரும் ஒப்பக்கூடியதாக விருக்க, ஆங்கில, ஜெர்மானி நாட்டுப் பேரறிஞர்களில், செஸ்மோர் முதலாகப் பின்வந்த சைவசித்தாந்த நூல் ஆசிரியர்களும், மற்றும் ஏனையோரும் இத் தோற்ற விளக்கம் சாங்கியர் நூலிலிருந்து, சைவர் அறிந்து கொண்ட பின் விளக்கி னார் எனக்கூறுவது பொருந்தாததாகும். அன்றியும் சாங்கியம் எழுதிய வர் கபிலராவர். கபிலன் என்பதே பழுப்பு நிறமுடையோன் எனப் பொருள்படுமாயின், இவர் தென்னாட்டவராகத் தான் இருத்தல் வேண்டும். தமிழுலும் கபிலர் அகவல் என ஒன்றுண்டு. இது பேரறி வியலைப்பற்றிக் கூறும். கபிலன் (தமிழன்) வட நாட்டிற்குச் சென்று வடமொழி கற்று அந்நாட்டவர் போற்றுமாறு சைவசித்தாந்தத்தை அந் நாட்டவர்க்குகந்தவாறு வேண்டாதனவற்றை விடுத்து, வேண்டியன வற்றைத் தொகுத்து வரைந்தார் என ஏன் கூறக் கூடாது?

மேலும், சாங்கியர் தோற்ற வரிசையில் உண்மையுரையை இருபத்து நான்காகக் கொண்டு, அத்துடன் ஒன்று புருடன் கூட்டி இருபத்தைந் தென்பர் சைவரோ (தமிழரோ) சிவசத்தியோடு மாயையைக் கூட்டி அஃது சாங்கியர் கூறிய பிரகிருதிக்கு மேல், தூய்மை மாயை, தூய்மை யற்ற மாயையையும் உண்டைப் பிறக்க மாயை எனக் கூட்டி இம் மூன்றையும் மீண்டும் இரண்டாக நுண்பொருளாக உள்ளபோதுதூய்மை மாயை என்றும், பருப் பொருளாக உள்ளபோது தூய்மையற்ற மாயை என்றும் கூறியது தோற்றப் பொருள்கள் நிலைத்தற்குத் துணை இடங் கள் (Su'stratum) அளிப்பதற்கேயாம். இதனில்தூய்மை மாயை தோற்ற இயக்கத்திற்கு வேண்டிய அறிவு சக்தி (ஞான சத்தி), நாதம் (தொழிலுக்கு வேண்டிய சக்தி), கிரியா சக்தி (விந்து) இவ்விரண்டும் ஒரு வகையாகக் கருதற்கு, சதாக்கியம், பெரிய தோற்றத்தை உண் டாக்க மகேஸ்வரி, அதற்கு வேண்டிய தூய்மை அறிவுக்கு (சுத்த வித்தை) ஆகிய ஐந்தை, தூய்மை உரை (சிவதத்துவ) மெனக் கொண்டனர். இவையன்றி, தூய்மை மாயையிலிருந்து ஐம்பத்தோர் வடமொழி எழுத்

துக்களும், எண்பத்தொன்று கடவுளைத் துதித்தற்கெனவும் மந்திரங்கள், நூற்கள் முதலிய யாவும் தோன்றியதென்பர். மந்திரத்திற்கான சொற்கள் தமிழ் மொழியிலிருந்து வடமொழியில் ஆக்கினரெனவிருக்க, சைவத்தில் 51 எழுத்தும், 81 பதமும் வடமொழியில் அமைந்தன என்பது பொருந்தா தாகும். இதனை மந்திரம் என்னும் பகுதியில் காண்க.

தோற்றம்.—உண்டைப் பிறக்க மாயையிலிருந்து தோன்றுவன ஐந்து தன்னுளடங்கும் பருப்பொருள்களும், ஐந்து நுண்பொருள்களும், ஐந்து அறிவியக்கங்களும், நான்கு உள்ளறிவுக் கருவிகளும் ஆகஇருபத்து நான்கும் முதற் கூறிய பன்னிரண்டுங்கூடி முப்பத்தாறு உண்மையுரை யெனக் கொண்டனர் தமிழர் ; இவற்றினை ஈண்டு விளக்குவாம்.

‘‘ அரன்விதி யருள தென்றே யறைந்தன னதுவு முன்னே
தரைநர கருந்து றக்கத் தனுகர ணாதி யெல்லாம்
வருவதுஞ் செய்த நாதி மலங்களிம் மருந்தாற் றீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கயமுஞ் சூட்டும்.’’

சிவன் ஆணையின்படி தோற்றத்தில் உடலைப்பெற்ற மக்களுடன் கூடிய இழுக்கங்களாய ஆணவம், இது வினைமாயை ஆகியவற்றை, மருத்துவன் நோயை மருந்தால் போக்கி இன்பமளிப்பது போன்று, இழுக்கமாகிய (மலமாகிய) மாயை கொண்டு ஆணவ முதலிய இழுக்கங் களைக் களைந்தொதுக்கிச் சிவநிலை யெய்துமாறு செய்வன்.

‘‘ எழுமுடல் கரணமாதி யிவைமல மலம லத்தாற்
கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னிற்
செழுநவை யறுவைசாணி யுவர்செறி வித்த முக்கை
முழுவதுங் கழிப்பன்மாயைகொடுமலமொழிப்பன் முன்னோன்.’’

(சிவஞான சித்தியார் சுபக்கம், 52.)

தோன்றிய உடலில் (தனுவில்) அமைந்த இழுக்கங்களாகிய ஆணவ முதலியவற்றைச் சிவனின் மாயை மலத்தால் நீக்குவது அழுக்குடைய ஆடையை அழுக்குள்ள உவர்மண்ணைக் கொண்டு நீக்குவதுபோலாம். அஃது எவ்வாறெனின் உடலுக்குண்டான இழுக்கண்களாகிய நோய்களை மருந்தால் போக்கி இன்பமளிக்குமாபோல், ஆணவ முதலிய இழுக்கங் களை நீக்கிப் பேரின்பமளிப்பதற்கேயாம்.

"நித்தமா யருவா யேக நிலையதா யுலகத்திற்கோர்
வித்துமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுகர ணமுமு யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே."

(சிவஞான சித்தியார் சுபக்கம், 53.)

உண்டைப் பிறக்கத்திற்கு முதலாய் நின்ற தூய்மையற்ற (அசுத்த) மாயையும் அழியாப் பொருளாகையால், சிவத்தைப்போலவே, என்றும் எப்பொழுதும் உள்ளது, வடிவற்று வித்தாய் இருப்பதோடு, அறிவின்றி இருத்தலால், உயிர் உடலோடுகூடி, இன்ப துன்பங்களை நுகரச்செய்து சிவத்துள் அடங்கி, அச்சத்தியேதோற்றப் பொருளோடுநின்று உய்த்து மயக்கத்தைத்தரும் எனவுங்கூறும்.

"மாயையிற் கால மோடு நியதிபின் கலாதி தோன்று
மாயவக் கால மூன்றா யாக்கியு மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாங் காலசங் கையினைப் பண்ணி
நாயக னாணை யாலே நடத்திடுஞ் சகத்தை யெல்லாம்."

(சிவஞான சித்தியார் சுபக்கம், 54.)

அம்மாயையில், காலம், நியதி, கலை, வித்தை இராகம், புருடன் என்னும் வித்தியா தத்துவங்கள் தோன்றும். அம்மாயையில் தோன்றிய அக்காலம், செல்காலம் (இறந்த), நிகழ்காலம், எதிர் காலம் என முத்திறப்பட்டு நிற்க, உலகத்தை ஆக்கியும், அளித்தும், அழிப்பதோடுமன்றி, அம்முத்தொழிலை உலகம் யாவைக்கும் இட்ட சிவன் கட்டளையில் உலகத்தை நடப்பிக்கும். தோன்றிய இவ்வுண்மை யுரைகள் ஒடுங்கும்போது கடையிற்றோன்றியதுமுதல் ஒடுக்கத்தொடுங் கும். இவைகளைக் கீழ்க்கூறிய பாவாலறிக.

"நியதிபின் றோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கு
மயர்விலாக் கலைபின் றோன்றி யாணவ மொதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
யுயர்கலை யதனிற் றோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும்")

(சிவஞான சித்தியார் சுபக்கம், 55.)

கலை உரையிலிருந்து, நியதிதோன்றி (Law of imminence) அவரவர் செய்த வினைகளை அவரவர்களே நுகரச் செய்விக்கும், அதிலிருந்தே ஆணவமாகிய மறைப்பைச் சிறிது அகற்றி, உயிரை இயங்குதற்கான சக்திகளை அமைத்து, வினைக்கீடாய் இன்ப துன்பங்களைத்தரும். கலை வளர வளர அறிவினை விளக்கி (வித்தை, தத்துவம்) வினைகளை அறுத்து, சிவநிலை காட்டும்.

வித்தையிலிருந்து (அறிவிலிருந்து), அராக தத்துவம் தோன்று மெனவும், காலம், நியதி, கலை, வித்தை அராகம் ஆகிய இவ்வைந்தும் கூடி (பசு புருடதத்துவ மெனக் கூறுவர்.

"விச்சையி னராகந் தோன்றி வினைவழி போகத் தின்க
ணிச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன் மருவி யான்மா
நிச்சயம் புருட னாகிப் பொதுமையி னிற்ப னன்றே."

(சி.சி.சு, 56.)

அவ் வித்தையிலிருந்து அராகம் தோன்றி இன்பசத்தியினை விளக்கச்செய்யும். வினைகட்கு ஈடாய்ச் செலுத்தி நிற்கும், இவ்வாறு கலை, வித்தை, அராகம் மூன்றும் தொழில் (கிரியா), அறிவு (வித்தை), இன்பம் (இச்சை) முதலிய மூன்றினையும் அறிவித்து நன்மை தீமைகளை வரையறுத்தலை, காலம் நியமித்துச் செய்யும். நியதி உட்பட ஐந்து உண்மையுரையோடு உடலைப் பெற்ற உயிர், இச்சா, ஞானா, கிரியா சக்தியோடு பொருந்திப் பற்றோடு நிற்கும்.

"வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றித்
தருங்குண மூன்றா யொன்றிற் றான்மூன்றாய் மும்மூன்றாகு
மிருங்குண ரூப மாகி யியைந்திடு மெங்கு மான்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பெந்த மாமே."

தூய்மையற்ற மாயையில் தோன்றிய கால முதலிய உண்மை உரையில் கூறிய காலத்திலிருந்து சிவத்துக்கும் முப்பண்புகளாகிய அருட்பண்பு (சாத்துவிகம்), தெருட்பண்பு (இராசதம்), மருட்பண்பு (தாமதம்) தோன்றி இம்மூன்றும் ஒன்றோடொன்று கூடி ஒன்பதாகி, அப்பண்பு உரைக்கு (தத்துவத்திற்கு) இன்பதுன்பங்களை உயிர்க் களித்து வினைக்கீடாக்கும்

இம் முப்பண்பில், அருட்பண்பு, நுண்ணறிவு, மனஉறுதி, மனத் தூய்மை, இருவினையொப்பு மன வாக்கு உடல் தூய்மை, பேரறிவும் இரக்கம், நன்னடத்தை, அன்பு, அறம் யாவையும் பெற்றிருக்கும். தெருட்பண்பு, வெகுளி, வீரத்துவம், பொறுமையின்மை, இரக்க மின்மை, படபடப்பு, சிற்றின்பத்திலீடுபடல், பெருமையையே விரும்பல், மருட்பண்பு ஊக்கமின்மை, விருப்பு வெறுப்பில் மிகுதியும் விரும்பாமை, சோம்பி இருத்தல், மிகுதூக்கம், அறிவின்மை, தெளிவில்லா அறிவு, மட்டி உணவு விரும்பல் என்னும் தன்மையைப் பெறும். இப் பண்பு மூன்றாகக் கூறினும் இவைகள்யாவும் மனநிலையேயாதலால் பிறவியிலேயே எப்பண்பு பெரிது பெற்றிருப் பினும் மாறிமாறியே நிற்கும். அதாவது இயற்கையில் அருட் பண்புடையோனாகிலும் சிலவேளை, தீவிரமாகப் பேசச் செய்யும் அல்லது தெருட்பண்பு சிலவேளையேனும் சோம்பி மட்டிபோல் உறங்கச்செய்யும் அல்லது மருட்பண்பேனும் தோன்றும். ஒவ்வொருவர்கட்கும் முப்பண்பும் ஒன்றுகூடியேநிற்கும். இம் மூன்றில் எஃது பெரிதும் காணப்படுமோ அதன் பெயரால் வழங்குவர்.

> "சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
> புத்தியவ் வியத்திற் றோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
> வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
> பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்".

அம் முப்பண்பினையும் தோற்றிவித்தலுக்காக முதன்மையாயிருந்த அப்பரம்பொருளே அப்பண்பொடு மறைவையுங் கூட்டி (அஞ்ஞானத்தை) யும் வைத்தானென்க. அப் பண்புகளினின்று புத்தி தோன்றி நன்மை தீமைகளை அமைத்து, தோன்றிய பொருளினை இன்னதென அறிவித்து, நன்மை தீமைகளை ஆராய்ந்து அதன்படி நடாத்தி விக்கும்.

> "ஆங்காரம் புத்தி யின்க ணுதித்தகந் தைக்கு வித்தாங்கார்தா
> னென்னோ டொப்பா ரென்றியா னென்னதென்றே
> நீங்காதே நிற்குந் தானு முன்றதாய் நிகழுமென்பர்
> பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தா னென்றே."

அப்புத்தியினின்று அகங்காரம் தோன்றும். அவ்வகங்கார யான், தான் எனநின்று உடலைத் தனதென்றும், மற்றப் பொருட் களை எனதென்றும் நிலைத்து உயிரோடு வேற்றுமையின்று நிற்கும். ஆயினும் அகங்காரமும் மனதைப் பற்றியே எழும் பண்பாகையால் இஃதும் முப்பண்பில் அடங்கும்: அவைகள் மருட்பண்பில் (தமோகுணம்) தோன்றுவதைப் பூதாதி அகங்காரம்; தெருட்பண்பால் (இராசத) தோன்றுவதை வைகாரி அகங்காரம், அருட்பண்பில் (சத்துவ) தோன்றுவதைத் தைசத அகங்காரம் என்பர்.

அவ் வகங்காரம் மூன்றினில், தைசத அகங்காரத்தினின்று மனம் தோன்றும். மனமானது கண்ட பொருளின் உண்மையை ஆராயாது மனதிலேயே வைத்துச் சிந்தித்திருக்கும். பின்னர் அப் பொருள் இதுவா அதுவா எனக் கலக்கமுற்று நிற்றலாம் மனமெனவும், சிந்தித்தலால் சித்தமெனவும் பெயர் பெறும். மனம் தோன்றி, பின்னர் அம் மனத்திற்குத் துணையாயுள்ள தோல், செவி, கண், வாய், மூக்குகளாகிய அறிவியக்கங்கள் (கன்மேந்திரியங்கள்) தைசத ஆங்காரத்தினின்று தோன்றும். தொழில் இயக்கங்கள் வைகாரி அகங்காரத்தினின்றும் தோன்றும்.

ஆன்மாவிடத்து மனம் வந்து சேர்ந்து ஒரு பொருளை முந்தி நினைப்பதும் செய்து ஐயப்பட்ட நிலைமையில் நிற்கும். பின் தோல் (சோத்திரம்), செவி முதலான தொழிற்கருவி (கன்மேந்திரியங்) களெல்லாம் முன்னே சொல்லிய வைகாரிகப் பண்பு தருமென்று சொல்லுவர் முன்னோர்.

"நற்செவி துவக்குக் கண்ணா நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரிய மென்று புகன்றன ரிவைத மக்குச்
சத்தநற் பரிச ரூப விரதகந் தங்களைந்தும்
வைத்தனர் விடயமாத வடைவினின் மருவுமென்றே."

மனதிற்கு அறிவிக்கும் செவி, தோல், கண், நா, மூக்கு ஐந்தும் புத்திக்கு அறிவிக்கும் கருவிகள் என்றும், அறிவியக் கங்கள் (ஞான இந்திரியங்கள்) என்றும் கூறுவர். செவி முதலியவை கள் மனதிற்கு கேட்டன, தொட்டன, கண்டன, சுவைத்தன முகர்வனவற்றை அறிவித்தால் இவைகள் அறிவியக்கமென்றும்

ஞானேந்திரியம் என்றும் பெயரினைப் பெற்றன. இவ் வைந்தும், ஒலி (சப்தம்), தொடுதல், உரு, சுவை, நாற்றம் இவைகளை அறியுந் தன்மையுடையதாம்.

"வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநினைந்தே
யாக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்த
மூக்கமா ரைந்து மைந்தின் றொழிலென வோதினாரே." (62)

தொழில் கருவிகளான (கன் மேந்திரியங்களான) வாய், கால், கை, எருவாய், கருவாய் (ஆண்குறி) என ஐந்தும் தொழில் முறையே, பேசல், நடத்தல், எடுத்தல் (கொடுத்தல்) (வாங்கல்) கழித்தல், தோற்றுவித்தலான ஐந்தொழிற் கருவியாம்.

"வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவி யாகு
மோயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகு
மாய்வார்கட் கராக மாதி யவற்றினுட் கருவி யென்பர்
மாயாடன் வயிற்றி வற்றூற் றுடக்குண்டு வாழு மான்மா" (63)

ஆன்மாவின் அறிவு தொழிலை விளக்குதற்கு, தொழிட்கருவிகள் (இந்திரியங்கள்), உட்கருவிகள், காலம் ஆகிய மூன்றும் போதாது. ஏனெனின் ஒரு பொருளை அறிதற்குத் தொழிற் கருவி (கன்மேந்திரியம்) அறிவியக்கங் கருவிகளிரண்டும்-புறத்தே நின்று தொழில் புரியும் புறக் கருவிகளாம். அவைகள் அலைப்பாடுடைய மன முதலியவை. அக் கருவிகளால் அறியப்பட்ட பொருளினை அகத்தே வைத்து, பகுத்தறியும் உட்கருவிகளாம். கலை முதலியனவோ, மன முதலியவைகள் அறியப்பட்டனவற்றைச் சிந்தனையுள் அழுந்தி இச்சா, ஞான முதலிய சத்தி பொருந்தச் செய்தலின் இதனை உள்ளம் என்பர். ஆதலின் மனம் முதலியவைகளை அகப்புறக் கருவியென்றும், கலை முதலியவற்றை உள் அகக் கருவிகள் என்றும் கூறுவர்

"ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று.
பேசுமாத் திரைகளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தி
னேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனுற் காண்டு
மாசைசேர் மனாதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான்" (64)

முன் கூறிய இருவகை கருவிகளும் தோன்றிய பின்னர், ஏனைய ஐம்பெரும் பொருள் (பூதாதி), அகங்காரத்தினின்று ஒலி, தொடுகை, உருவம், சுவை, நாற்றம், ஆகியவைகள் தோன்றும்.

"சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னுத்
தோற்றும்வான் வளிதீ நீர்மண் டொடக்கியே யொன்றுக்
கொன்றங்
கேற்றமா மோசை யாதி யிருங்குண மியைந்து நிற்கு
மாற்றவே விடய பூத மங்காதி பாவத் தாமே." (65)

ஐம்பெரும் பொருளினுள் (தன் மாத்திரைகளுள்) ஒலியில் (ஆகாயம்), வெளியும், (கால்) வாயும், தொடுகையில் வடிவில் தீயும், சுவையில் நீரும், மணத்தில் மண்ணும் ஆகிய ஐந்து பருப்பொருள்கள் (தூல பூதங்கள்) தோன்றும். இவற்றுள் வெளி ஒலியையும்; காற்று, ஒலி தொடுகையையும், தீ ; ஒலி, தொடுகை, வடிவுகளையும், நீர் ஒலி காற்று, தொடுகை வடிவு, சுவையையும், மண், ஒலி, காற்று வடிவு, சுவை, மணம் ஆகியவையையும் பெறும், இவைகள் ஒன்றுகூடி, கருவிகளை (இந்திரியங்களை) தொழிற் படுத்துவதற்காக அறுபது உண்மையுரைகள் (தத்துவங்கள்) தோன்றுவது ஐம்பெரும் (பொருள்களாகிய) பருப்பொருளாகிய உடலமைப்பிற்காக வந்ததெனக் கொள்க.

இவைகளைத் தொழிற் பொருளென்றும் காரிய பூதமெனவும் தொழிற் படுத்தலால் பஞ்சீகரண பூதமென்றும் கூறுவர். இந் நுண் பொருள்களிலிருந்து பருப் பொருள்கள் தோன்றும் வகை எவ்வாறெனின்;

"ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தது தூலபூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம்."

எனக் கைவல்லியனர் கூறியதுபோல,

ஐந்துண் பொருள்களை இரண்டாகக்கொண்டு பத்தாக்கி, அப்பத்தினை நான்கு நான்கு பகுதிகளாக்கி, அரைப் பங்கில் தத்தம் பாகத்தை விட்டு நான்கொடு நான்குங் கூட்டப் பருப்பொருளாகும் தூலமாம்). இப் பருப்பொருளே உண்டைப் பகுதி முதலியவை களை ஆக்குவதாம். இதன் விளக்கத்தைப் படத்தாலறிக.

இவ்வாறுண்டான பருப்பொருள்களின் கூற்றால், மண்ணில் என்பு, தசை, மயிர், தோல், நரம்பும்; நீரில், இரசம், குருதி, வியர்வை, சிறுநீர், வெண்ணீரும்; தீயில், உடல் சூடு, வயிற்றில் சூடு, கண்சூடு, மூளைச்சூடும்; காற்றில் பத்து காற்றுகளும், வெளியில்; பத்து நாடிகளும் உண்டாகும்.

'' இரந்தர மாகி வான்ரு டங்கொடுத் திடுன்ஞ்சலித்துப்
பரந்தவை திரட்டுங் காறிச சுட்டொன்று வித்தல் பண்ணு
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயு நீர்மண் டானு
முரந்தரு கடின மாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே.''
(66)

வான் முதலான ஐந்து பொருள்களின் (பூதங்களின்) தன்மை யாதோ எனில், வெளியாக இருந்து வருகின்ற அனைத்திற்கும் இடமளிக்கும், வளி சலித்தல் செய்து நுண்ணிதாகப் பரந்த பொருள் களைத் திரட்டும். தீ சுடுதல் செய்து பொருளைச் சுட்டுப் பொருளிலிருக்கும் அப் பொருள்களை அவ்வவ்வற்றோடு பொருத்து விக்கும். நீர் எப்பொழுதும் தண்மையுடன் கூடியிருந்து பொருளைப் பதப்படுத்தும். மண் பொருளுக்கு வலிவினைத்தரும். கடினமாகவும் அமைந்திருக்கும் என்று அறியக்கிடக்கும்.

'' மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தகுமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூம வன்ன
மெண்டரு மெழுத்துத் தானும் லவரய வவ்வுமாமே.''
(67)

மண், நீர், தீ, காற்று, விண் இவ் வைந்தின் வடிவுகள் முறையே நாற்கோணமும் பிறை வடிவும், முக்கோணமும் அறு கோண வட்டமுமாகும். இவ் வைந்தின் நிறங்களும் முறையே பொன்மை, வெண்மை, செம்மை, கறுப்பு, புகை ஆகியவைகளாம். இவற்றின் எழுத்துக்களும் முறையே லகாரம், வகாரம், ரகாரம், யகாரம், அவ்வுமாகும்.

'' குறிகள்வச் சிரத்தி னேடு கோகந தஞ்சு வத்தி
யறுபுள்ளி யமுத விந்து வதிதெய்வ மயன்மா லாதி
செறிபுக ழீச னோடு சதாசிவம் பூத தெய்வ
ரெதரு கயைந் திற்நிகழ்த்துவ த நீர்மை.'' (68) ல ந்குரி

இவ் வைந்திற்கும் குறியும், தேவதையு முறையே கூறலுற்றால் மண்முதல் வளிஈறுன பூதங்கட்குக் குறி, வச்சிரம், கோகநகம் சுவஸ்திகம், அறுபுள்ளி அமுதவிந்து ஆகியவையாம். மண் முதலான வற்றிற்கு முறையே தேவதைகளாவன அயன், மால், சிவன், சதாசிவன், மகேச்சுரன் ஆகியவைகளாம்.

'' சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன வைந்து
மித்தகை மையினி யம்பு மிவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாறுஞ் சைதன் யங்க ளைந்து
சித்தசித் தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பில்.'' (69)

துய்மை மாயை உரை—(சுத்த தத்துவங்) களென்று முன்னம் சொல்லிய ஐந்தும் இத்தன்மையான (தூய்மையற்ற மாயை உரை) இயம்புகின்ற இம்முப்பத் தொன்றும் ஆக முப்பத்தாறாகும். இவற்றில் முதற்கூறிய ஐந்துடன் ஆன்மா ஒன்று ஆகிய ஆறும் நீங்கலாகவுள்ள முப்பதும் அசித்துப்பொருளே யாகும்.

'' ஐந்துசுத தத்தின் கிழேழ் சுத்தாசுத் தம்ம சுத்தந்
தந்திடும் புமான்கீ ழெண்முன் ருயதத் துவஞ்சீ வர்க்கு
வந்திடும் பிரே காண்ட மருவுபோ கசயித் திரத்தோ
டந்தமி லணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே.'' (70)

தூய்மை உரை—சுத்த தத்துவமாகிய சிவ உரை (தத்துவம்) ஐந்தும் (தூய்மையுள் தூய்மை) (சுத்தா சுத்த தத்துவம்) மாகிய பேரறிவுரை (வித்யா தத்துவம்) ஏழும், தூய்மையற்ற உரை (அசுத்த தத்துவ) மாகிய உயிர் உரை (ஆத்ம தத்துவம்), இருபத்துநான்கின் வேற்றுமைகளாம். சுத்த தத்துவத்திற்குப் பிரேர காண்டமென்றும், சுத்தா சுத்த தத்துவதற்திற்குப் போக காண்டம் என்றும், அசுத்த தத்துவதற்திற்குப் போகிய காண்டம் என்றும் பெயர் அமைத்தனர்.

'' தத்துவ ரூப மாகுந் தருமரு வுருவ மெல்லாந்
தத்துவந் தூல சூக்க பரங்களு மாகி நிற்குந்
தத்துவந் தன்னிற் சாகு பணுக்கள்சா தாக்கி யத்திற்
றத்துவ சத்தஞ் சாருஞ் சகலமுந் தத்து வங்காண்.'' (71)

தோன்றிய பொருள்கள் யாவும், வடிவின்மை, வடிவு, வடிவின் மையும் வடிவுமாக (அருவு உருவு அருவுருவாக) என மூவகைப்படும். இஃது வெளி நிறத்தோடு காணினும் வடிவற்றது; சற்று வடிவற்ற தாயினும் தொடுதல் அறிவால் புலப்படுமாதலால், வடிவின்மையும், வடிவும் கூடியது போல் காணப்படும். தீ, நீர், மண் கண்ணுக்குப் புலப்படுவதால் வடிவுடையனவாம்.

'' தத்துவ மெண்மூன் றுஞ்சென் ருன்மதத் துவத்தொ டுங்கும்
வித்தையி னெடுங்கு மாறுஞ் சிவத்தினி னெடுங்கு மூன்று
நித்ததத் துவமிம் மூன்று மென்பர்க ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொ டுங்குந் தோற்றமு மிதுபோலாகும்.'' (72)

உயிர்க்கால் முதலிய ஐந்து—(பிராண பூத பஞ்சகம்), அறிவியக்கங் கள் ஐந்து (ஞானேந்திரிய பஞ்சகம்), தொழிற்கருவிகளைந்து (கர்மேந் திரிய பஞ்சகம்) நுண் பொருள்களைந்து (தன்மாத்திர பஞ்சகம்) மன முதலிய நான்கு (அந்தக்கரண) சதுட்டயம் ஆக 24-ம் ஆன்ம உரையில் (தத்துவத்தில்) ஒடுங்கும். வித்யா தத்துவமாகிய மாயையில், தலை முதல் புருடன் ஈறாக உள்ள ஆறும் வித்யா தத்துவத்தில் ஒடுங்கும்.

இப்பாக்களின் பொருளினைச் சுருக்கிக் கூறின் மருத்துவன் எவ்வாறு மருந்துகளைக் கொண்டு நோய்களைத் தீர்த்து இன்பமளிப்பானோ, அவ்வாறே கடவுளும், உடலையும் உட் கருவிகளையும் தூய்மைப்படுத்தி, சிவநிலையெய்தும் படி செய்யும். ஏழு உடற் கட்டுகளையும் உட் கருவி களின் அழுக்கைக் கழுவி, தூய்மைப் படுத்த வேண்டு மெனக் கூறியது எதற்கோவெனின் கொடிதான மாயையை யொழிப்பதற்காக வெனலாம்.

என்றும் எங்கும் உருவின்றியும் உண்டைப் பகுதிகளின் தோற்றத் திற்கு முதலாகவும் (வித்தாகவும்) சித்தாகவும், எங்கும் பரவியுள்ள சிவத்திற்கோர் சத்தியாய்ச் சேர்ந்து உண்டைப் பகுதிகளைத் தோற்று வித்ததனில், உயிர்ப் பொருள் உயிரில் பொருள்களையுண்டாக்கி அவைகட்கு உடலைத் தந்து அறிவை அமைத்து, இன்ப துன்பங்களை ஊட்டுவித்து உயிருக்குயிராய் சிவமும் நிற்பதற்காகவே வந்தது மாயை யாம்.


இம் மாயையிலிருந்து காலம், நியாயம், கலை ஆகிய மூன்றும் தோன்றி, தோற்றப் பொருள்களின் கால அளவைத் தந்து சித்தின் சொற்படி அவைகளை நடத்திவைக்கும்.

நியாயம் அதன்பின் தோன்றி (Law of imminence) பொருளின் வினைகட்கேற்ப இன்ப துன்பங்களை அமைக்கும். அடுத்தபடி கலை தோன்றி இயற்கையாக அமைந்த ஆணவத்தை ஒடுக்கி சித்தத்தின் செயலை நடாத்தி, தொழிற் சத்தியில் சிறிது புத்தியினை விளக்கி அறிவினைத் தோற்றுவிக்கும்.

இவ் விச்சையில் இராகம் தோன்றி வினைக்கேற்ப இன்ப துன்பங் களுக்கீடாய் இச்சையை யளித்து நிற்கும் தொழில், அறிவு, இச்சை மூன்றும், இன்புறச் செய்து, மண்ணில் செய்ய வேண்டியவனவற்றைச் செய்து வரும். உயிர் உண்மையான பொருளாக நிற்கும். (சிவன்) தோற்றத்தையுண்டாக்க மாயையோடுகூடி, சிவம் (மூலப் பிரகிருதி) கலையிற்றோன்றி முப்பண்பு பெற்று ஒவ்வொன்றும் மூன்றாகப் பிரிந்த இரண்டிரண்டாக மருட் பண்பில் மருட் பண்பாகக்கூடி ஒளி, வளி, நிறம் சுவை, மணம் என்றும், வெளி, காற்று, தீ, நீர், மண் என்றும், மருட் பண்போடு தெருட் பண்புகூடி, வாய், கை, கால், எருவாய், கருவாய் ஆகிய ஐந்தும், மருட் பண்பு, அருட் பண்போடுகூடி, மனம், காது, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய இவைகள் ஆறுங் கூடி இன்ப துன்பங்களைப் பெறத் தோற்றிற்று.

சித்தமாகிய அவ்வியத்தஞ் எல்லாச் சிந்தனைகளைச் செய்த அவ் வியத்தத்திலிருந்து புத்தி தோன்ற, புண்ணிய பாகங்களைப் பெற்று, பொருள்களை ஆராய்ந்து, உண்மை முடிவைக்கொண்டு இன்ப துன்பப் பற்றுக்களைப் பற்றி மயங்கி, ஞானத்திற்கான தொழிலில் நிற்கும்.

இவ் விளக்கத்தைப் படத்தாலறிக.


தோற்ற வரிசை
சிவசத்தியோடுகூடிய மாயை
தூய்மை மாயை
(சுத்த மாயை)
நாதம்
விந்து
சாதாக்கியம்
மகேச்வரி
சுத்த வித்திய
தூய்மையற்ற மாயை
(அசுத்த மாயை)
காலாம்
நியாயம்
கலை
வித்தை
தோற்றம்
(பிரகிருதி)
பண்புகள் (புருடன்)
ஆணவம் (மருட்பண்பு மாயை)
மருட் பண்பு
தமோ குணம்
தெருட் பண்பு
இரசோகுணம்
அருட் பண்பு
சத்துவகுணம்
ஒலி
காற்று
நிறம்
சுவை
மணம்
வாய்
கை
கால்
எருவாய்
குறி
மனம்
காது
தோல்
கண்
நாக்கு
மூக்கு
வெளி
(ஆகாயம்)
வளி
(வாயு)
தீ
(தேயு)
நீர்
(அப்பு)
மண்
(பிருதிவி)

The language of Rig veda is as yet burely Aryan or Indo-European in its form

குறிப்பு.—உண்மையுரையுள் கூறிய கலை, காலம், நியாயம், வித்தை முதலிய சொற்கள் யாவும் தமிழ் சொற்களேயாம். கற்பது=கலை, கற்றதின் பயன்=கலா, நடக்கை (நன்னடக்கை)=நியாயம் எனக் கொள்ளக் கிடக்கும். இதனை (1).

(1) The Dravidian names of things and operations connected with all these arts of peaces are natural and not foreign (not borrowed from Sanskrit)........that many Sanskrit words connected with this one were borrowed from the Dravidian.

—Life in Ancient India—P.T.S. Iyengar.
T.I. 213.

# சித்த மருத்துவம்.

பன்னிரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய சைவப் பேரறிவிய லுக்குத் துணையாகத் தோன்றிய சித்த மருத்துவம், அப் பேரறிவியலை வரைந்த சித்தர்களே வரைந்து, எம்மக்களும் அதனைக் கற்றறிந்து நீடுழி வாழச் செய்தனரென்பது மிகையாகா. இதனை,

"தமிழ்மண் டலமைந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல வுலகந் திரிவார்
அவிழு மனமுமெம் மாதி யறிவுந்
தமிழ்மண் டலமைந்துந் தத்துவ மாமே"

எனத் திருமூலர் திருமந்திரத்தாலறிக.

தமிழ் நாட்டில் தோன்றிய மொழி, பேரறிவியல், மருந்துவம் ஆகிய முந்நூற்கள் (சிவனால் செய்யப்பட்டவை) எனக் கொண்டவையாவும், சிவன், நந்திக்குக் கற்பித்தான் எனவும், நந்தி திருமூலர்க்கும், திருமூலர் மற்ற சித்தர்கட்கும் கற்பித்தாரென ஓர் சாரார் கூறுவர். இதற்குச் சான்றாக, திருமூலர் திருமந்திரத்திலும் (Philosophy) மருத்துவத் தைப் பற்றிப் பல பாக்கள் ;

"வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்று நந்தி யருள் செய்தான்
ஆதி மருந்தென் றறிவர் ரகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாததே.

நூறு மிளகு நுகருஞ் சிவத்தனீர்
மாறு மிதற்கு மருந்தில்லை மாந்தர்காள்
தேறி லிதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறு மிதற்கு மறுமயி ராகுமே"

எனக் கூறிப் போந்ததோடு, திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம், மூவாயிரம் எனப் பல மருத்துவ நூற்களும் உண்டு.

மற்றோர் சாரார், தமிழ் மருத்துவத்தைச் சிவன், அம்மைக்கும், அம்மை முருகனுக்கும், முருகன் அகத்தியர்க்கும், அகத்தியர் புலத்தி யர்க்கும் அவர் ஏனையோர்க்கும் கூறினார் எனக் கொள்வர்.

பண்டைய நூற்களில் முருகனைப்பற்றிய குறிப்புகள் காணாமை யாலும், அகத்தியர், தொல்காப்பியர்க்கு இலக்கணம் கற்பித்தார் என்பது பொருந்தாததாக உள்ளமையாலும், அகத்தியரைச் சித்தர் கூட்டத்தில் ஒருவராகக் கொள்ளாமையாலும், சித்த மருத்துவத்தை அகத்தியர் வரைந் தார் என்பது பொருந்தாதெனக் கொள்வர்.

சித்தர்—சித்தர் என்போர் எல்லாக் கலைகளையும் (பதினெண் மொழி, அறுபத்து நான்கு கலையும்), நன்கு கற்றுப் பயின்று இருவினை யொப்பாய் நின்று சிந்தித்து, சிந்தித்துச் சிவமானோர் எனக் கொள்வர்.

"நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்தபி ணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்
தண்ணியன் சுத்தன் சிவமுத்தன் சித்தனே.

சித்தர் சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்தமுடி வுந்தம் முட்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்த முத்தி முதல்முப்பத் தாறே.

இருந்தார் சிவமாகி யெங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் ரிழவுவந் தெய்திய சோம்பே."

எனத் திருமூலர் திருமந்திரப்பாவால் சித்தரின் தன்மையை அறிக.

சித்த மருத்துவம் தோன்றிய காலம் வரையறுக்க முடியா நாள் எனக் கொள்ளினும் திருமூலர் காலத்திலிருந்து, சித்த மருத்துவம் தொடர்ந்து வந்து இருத்தல் வேண்டும் எனத் துணிதற்கு இடம் தரும்.

சித்த மருத்துவமும், ஆகம நூற்கள் போல் வட நாட்டிற்கேகி மீண்டும் தென்னாட்டிற்கு வந்து இருத்தல் வேண்டும். இன்றைக்குக் கிடைக்கும் பேரறிவியலைப் போலவே, சித்த மருத்துவமும் இருமொழிக் கலப்பாக இருத்தலால், இவ்விரண்டும் வட மொழித்து எனக்கூற இடத் தந்தது. ஆயினும் கூர்ந்து நோக்கின், ஆயுர்வேதத்திற்கும் சித்த மருந் துவத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காணின் உண்மை விளங்கும்.

சைவப் பேரறிவியலை வரைந்த சித்தர்களே சித்த மருத்துவத்தையும் வரைந்தனரெனின் சைவப் பேரறிவியலில் கூறிப் போந்த நுட்பங்களையும் மருத்துவத்திற்குப் பொருந்துமளவில் அமைத்து வரைந்தாரெனக் கூறுதல் மிகையாகா.

சித்தர்கள் கொண்ட சிவம், சத்தி, மாயை ஆகிய மூன்றும் ஒன்று கூடியதான சிவத்திற்கு ;

'' கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
றாளை வணங்காத் தலை''

எனத் திருவள்ளுவர் கூறியாங்கு எண்குணங்களாகிய இயல்பாக அறிதல், எல்லாவற்றையுமறிதல், மயக்கமின்மை பேரிரக்கம், அளவில்லா வன்மை, எல்லை இல்லா இன்பம், தூய்மையுடல் யாவையுங் கடந்தது என்னும் ஆற்றல் உடையது எனக் கொண்டனர்.

இவ்வாற்றலையுடைய சிவம், அவர் தோற்றிய பொருள்களில் தானுங்கூடி உயிருக்குயிராய் இருப்பார் என்றதும் சித்த மருத்துவத்திற்கும் உடன் பாடுடையதாகும். அஃதெவ்வாறெனின் : —

சைவ நூலிற் கூறிய முப்பத்தாறு உண்மையுரையோடு (தத்துவத்தோடு) அறுபதுங் கூட்டித் தொண்ணூற்றாறாக, உடல் அமைப்பிற்காவன ;

'' முப்பது முப்பது முப்பத் தறுவரும்
செப்ப மதிகளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிகளுடைக் கோயிற் சிதைந்தபின்
ஒப்ப வனைவரும் ஓட்டெடுத் தாரே ''

எனத் திருமூலர் கொண்டதும் ;

'' சீரிய வீசனார்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றேல்
சீவ னென்னச் சிவனென்ன வேறிலை ''

எனக் கைவல்லிய நூலாரும், திருமூலரும், சிவனுக்கும் சீவனுக்கும் வேற்றுமை கொள்ளாததும் ;

'' அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.''

(சிவஞானபோத முதற் நூற்பா)

" அவையே தானே யாயிருவினைமையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்குமன்றே "

(இரண்டாம் நூற்பா)

" அவையே தானே யாகிய யந்நெறி "

(பத்தாம் — நூற்பா)

என்னும் இப்பாக்களில், ஆண், பெண், ஆணும் பெண்ணும் இல்லாததான மற்றைய பொருள்களும், கடவுளின் முத்தொழிலால் தோற்றப்பட்டு, நிலைத்து, அழிவது அவைகளின் இழுக்கத்தாலென்றும், தோற்ற மடைந்த அவைகளில் தோற்றப்படுபவனும் (கடவுளும்) அதனுள் அமைந்து, " நான் " " தான் " எனக்கூறுமாறு. நீக்கமின்றி நிற்குமேயாயினும் தோற்றம் பெற்ற பொருள்களின் இரு வினையால் அழியும் என்றும் ;

" வாதமாய்ப் படைத்துப் பித்த
வன்னியாய்க் காத்துச் சேட்பச்
சீதமாய்த் துடைத்துப் பாராந்
தேகத்திற் குடியா மைந்து
பூத விந்தியமா மைவர்
பூசைகொண் டவர்பால் விந்து
நாதமாங் கிருட்டிண மூர்த்தி
நமக்கென்றும் துணையா வாரே."

எனத் தாமியற்றிய மருத்துவ பாரதத்தில் தேரையர் கூறியதும் காணின், ஐம்பொருள்களால் ஆக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்க மின்றி நிலைத்துத் துணையாக, நின்று, அவற்றினை வாதமாகப் படைத்தும், பித்தமாகக் காத்தும், ஐயமாய்த் துடைத்தும் உயிருக்குயிராக இருந்து அவைகளால் போற்றப்படுமாறு போல் கடவுளாகிய கிருஷ்ணன் ஐவராகிய பாண்டவரிடத்தில் இணைபிரியாது உயிருக்குயிராய் நின்றனன் எனப் பொருள்படக்கூறியதால் அறியக்கிடக்கும்.

ஆகவே, தமிழ் மறையோர் கடவுள் ஒன்றெனக் கொண்டனராயினும், கடவுளின் செயலுக்கேற்ப, ஆக்கல் செயலுள்ளபோது பிரமன் என்றும், காத்தல் தொழிலுள்ளபோது திருமால் என்றும், அழித்தற்றொழிலிலுள்ளபோது உருத்திரன் என்றும் பெயரினை அமைத்தனரோ

அவ்வாறே சித்தர் மருத்துவத்திலும், உடலின்கண் அமைந்து உடலையும், மனதையும் இயங்கச் செய்யும் சீவன். உயிர், ஆன்மா என்னும் சிவத்தன்மையுடைய பொருள் ஒன்றேயாயினும், இயங்குந் தன்மையில், ஆக்கல் செயலுள்ளபோது வளி (வாதம்) எனவும், காத்தல் (நிலைத்தல்) செயலுள்ளபோது அழல் (பித்தம்) எனவும் ; அழிக்குஞ் செயல் பெற்றபோது ஐயம், (கபம், சிலேத்துமம்) எனவும் பெயர்களை அமைத்து, சிவத்தைப் போலவே உடலின் கண்ணமைந்த சீவனும், உடலமைப்பிற்கு வேண்டிய ஏழு உடற்கட்டுகளாகிய இரசம், குருதி, சதை, கொழுப்பு, என்பு, மூளை, வெண்ணீர் ஆகிய இவைகளுக்கு வேண்டிய பொருள்களை ஆக்குவதற்கான சக்தியையும் அவைகள் நிலைத்தற்கான சக்தியையும் அழித்தற்கான சக்தியையும் பெற்றுள்ளதாகையால், அவை வளி, அழல், ஐயம் எனப் பெயர் பெற்றன.

எடுத்துக் காட்டாகக் கூறின் சக்தியானது உடற்கு வன்மை தர வேண்டிய குருதி நுண்ணணுக்களைத் தோற்றுவிக்குந் தன்மையையும், அவைகளை நிலைக்கச் செய்யும் தன்மையையும், அவைகளை அழிக்குந் தன்மையையும், உடலின்கண் அமைந்த சீவன் உள்ள வரையில் உலகப் பொருள் தோன்றுவதும், நிலைத்தலும், அழித்தலும்போல் உடலில் உயிர் உள்ளவரை தோன்றி நிலைத்தழியும் எனவும் ;

'' அவையே தானே யாயிரு வினைமையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.'' (சி. ஞா. போ. உ.)

தோன்றிய அவையே (உயிர்ப் பொருளில் சீவனே) சிவனை ஒத்திருப்பினும் அவைகளின் இருவினைக்கேற்ப உடலோடு புகுந்திருத்தலுத் வெளியாகுதலுமாய், சிவனது கட்டளையின்படி சக்தியோடு இணை பிரியாது இருக்கும் எனக் கூறியவாறே உடலின்கண்ணமைந்த சீவனின் (உயிரின்) செயலாகிய வளி, அழல் ஐயமாகிய இம்மூன்றும் தத்தம் தொழிலைச் செய்து உடலோடு கூடி இருப்பினும் இருவினைப் பயனால் (போக்கு வரவு) உடலைவிட்டு உயிர் ஏகுவதும் (இறப்பதும் மீண்டும் வேறோர் உடலில் வந்து அமைவதுமாக இருக்கும் எனக் கூறிட தால், இவ்வாறு ஆன்மா போக்கு வரவு புரிவது, ஆன்மாவோடு கூடிய ஆணவம், கன்மம், மாயை என்னும் இவைகளோடு கூடி உழன்று இன்ப துன்பங்களிலேயே ஈடுபட்டு வரும் ஆன்மா தன் இயற்கையை அறியாது நிற்கும்.

ஆதல்பற்றியே, ஆன்மா தன் இயற்கையை அறியுமாறு.

'' ஐம்புல வேடரின் அயர்ந்தென வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.''
(எட்டாம் நூற்பா.)

அறிவில்லா வேடர்போன்ற ஐம்பொறி புலன்களோடு கூடிவாழ்ந்த ஆன்மாவும், அவைகளைப்போலவே வேடத்துவத்தோடு வளர்ந்தமையைப் போக்க, தம் மனது சித்தமே குருவாய்த் தோன்றிஆன்மாவைத் தன்னை அறியும்படி யுணர்த்தி, சிவநிலை யெய்தும்படி செய்விக்கும். அன்றியும்,

'' ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.''
(ஒன்பதாம் நூற்பா.)

பொருள்.—ஊனக்கண் கண்டவற்றைக் கண்டது கண்டவாறாகக் கொண்ட பற்று (பாசம்) உண்மைப் பொருளாகிய பதியினை அறியாது. அவ்வாறன்றி ஞானக்கண்ணிற் சிந்தையை நாட்டி, பற்றை அறுத்து, ஐந்தெழுத்தையோதி, நிற்கின், பதிநிலையெய்தல் செய்யும் எனச் சிவஞான போதமும்

'' ஒன்றுகண் டீருல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீருட லுக்குயி ராவதும்
நன்றுகண் டீரிது 1 நமச்சிவா யப்பழம்
தின்றுகண் டார்க்கது தித்தித்த வாறே ''

2 சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்
'' சிவாயசிவ '' சிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க வாநந்த மாமே ''
(திருமந்திரமும்.)

உலகிற்கு ஓர் கடவுளும் உடலுக்கு ஓர் உயிரும் ஆக உள்ளது. இவற்றுள் உடலில் உள்ள உயிர் சிவத்தைப் போன்றதேயாயினும் அஃது தன் பாசத்தால் தன்னை உணராதிருக்கையில் தன்னை யுணருமாறு

'' சிவாயநம '' என்னும் அஞ்செழுத்தை ஓதிச் சித்தத்தை யோர் நிலையில் நிறுத்தி ஆசைகளை (பற்றுகளை) யறுத்து, அடிமையை நீக்கி, சிவாநந்தத்தில் மூழ்கி இருக்கலாம் என்று திருமூலர் திருமந்திரம் கூறியதாலும் அறிக.

'' அவனே தானே யாகிய வந்நெற
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.''

(பத்தாம் நூற்பா.)

முற்கூறிய மந்திரப் பழக்கங்களால், கடவுள் எங்குமுளார் என்னும் நெறிபோல் (நியாயம் போல்) ஆன்மா தானே சிவமென உணர்ந்து எல்லாப் பற்றுகளையும் (மலமாயை) அற்று நிற்கும்.

'' காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா வன்பி னரன் கழல் செலுமே.''

(பதினொன்றாம் நூற்பா.)

கண் கண்டனவற்றைப் பொறிகட்குக் காட்டுமாபோல், ஆன்மாவுக்குத் தானே சிவமென உணர்த்தலால் அச் சிவத்தின்மேல் தளரா அன்பு பெற்று சிவநிலையெய்தும்படி செய்விக்கும். இதனையே,

'' குருவே சிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர்கோவே.

சித்த மியாவையுஞ் சிந்தித் திருந்திடும்
அத்த னுணர்த்துவ தாகு மருளாலே
சித்த மியாவையுந் திண்சிவ மானக்கால்
அத்தனு மவ்விடத் தேயமர்ந் தானே ''

திருமூலரும் கூறினாராக.

'' செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே.''

(சிவஞானபோதம் பன்னிரண்டாம் நூற்பா.)

சிவனது செம்மையான திரு அடிகளைச் சேரல் ஒட்டாது செய்யும், ஆணவம், காமம், மாயை ஆகிய மலங்களைக் கழுவியொழித்து அறத்தைக் கைக்கொண்டொழுகும் பேரன்பரொடு (சீவமுத்தரொடு) கூடித் தாம் வாழ் நாள் வரை கழித்து ஒழித்த அம்மலங்கள் தம்மைச் சாராவண்ணம் கோயில் புகுந்து கடவுளைத் தொழுது வருதல் வேண்டும் சீவன்முத்தர் நிலையாம்.

இவ்வாறாக, சிவஞானபோதப் பாக்களில், பதியியல், பசுவியல், பாசவியல் ஆகிய மூன்று வியல்களைக் கூறியபின் பதியை அடையும் வழியையும் கூறிப் போந்தது.

கடவுளை அறியும் வழியினை நாடி, சிவநிலை யெய்தற்குமுன், உடலழியுமெனக் கொண்டு,

'' உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே.''

எனத் திருமூலர் கூறியவாறு, உடலழியின் உயிரழியுமாகலின் உண்மை அறிவாகிய சிவநிலை யெய்தல் கூடாதாகும். ஆதல்பற்றியே உடம்பை வளர்க்கும் உபாயமறிந்து உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேன் என்றார். உடம்பை வளர்த்தலே மருத்துவமாம். சித்த மருத்துவத்தில், மக்கள் உடல் அமைப்பிற்கான பருப்பொருள்களையும் (உடலையும்) இயக்கப்பொருளாகிய உயிரும், அவைகட்குத் துணையாகிய கால்களையும் (வாயுக்களையும்) கூறி, அவர்கள் இழுக்கம்பெறாது (நோயுற்றுத் துன்புறாது) இருக்கவே மருத்துவமும், சைவத்திற்குத் துணையாகப் பிறந்தது போலும். ஆதல்பற்றியே திருமூலர், எட்டாம் தந்திரத்தில் (Philosophy),

" காயப்பை யொன்று சரக்குப் பலவுள
மாயப் படைதன்னில் மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குண்ணின்ற கள்வன் புறப்பட்டான்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே."

(திருமூலர் திருமந்திரம்.)

" மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தெனச் சாலும்
மறுப்ப தினிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே."

திருமூலர் எண்ணாயிரத்துள் (Medicine) கூறியதைக் காணின், காயப்பை (உடலில்) பலவகைப்பட்ட உறுப்புகளை, கடவுளின் சக்தியாகிய மாயையால் படைக்கப்பெற்று, மற்றுமோர் பையாகிய உயிரும் அமைந்திருக்குமேயாயினும் காயப்பையாகிய உடலில் உள்ள உயிர், வெளியாகிவிடின் உடல் அழியும், ஆதலின் அவ்வுயிர் அழியாதிருக்க உடல் நோயைப் பெறாதிருக்கச் செய்வதும் ; மனநிலை கெடாதிருத்தற்கும் இனி நோய் வாராதிருக்கவும், சாவைத் தடுத்ததற்குமான வழியே மருந்து எனலாம் எனக் கூறினாராக.

ஆதல் பற்றியே, சைவப் பேரறிவியலைக் கூறிவந்த பேரறிஞர்கள் யாவும் சிவத்தின் இயலைக் கூறவந்த இடத்தில் உடல் அமைப்பிற்கு வேண்டிய பருப் பொருள்களையும், அவைகளை இயக்குவதற்கான நுண்பொருள்களையும் ;

" அத்த னமைந்த வுடலிரு கூறினிற்
சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்
சத்த பரிச ரூபரச கந்த
புத்திமா னாங்காரம் புரியட்ட காயமே."

பொருள்.—சிவன் அமைத்த உடல், தூய்மையானதும் நுண்மையானதுமான பொருள்களைப் பெற்றது. (1) வெளி, வளி, தீ, நீர், மண் ஆகிய ஐந்தும் (2) கேட்டல், உணர்தல், காணல், சுவைத்தல், முகர்தல் ஆகிய ஐந்தும் (3) காது, தோல், கண், நா, மூக்கு ஆகிய

ஐந்தும் (4) புத்தி, மனம், அகங்காரம், ஆகிய மூன்றும் ஆக இப் பதினெட்டுகளால் ஆக்கப்பெற்றதில் பின் கூறிய எட்டும் புரியட்ட காயம் எனப்படும் : —

" எட்டினி லைந்தாகு மிந்திரி யங்களும்
கட்டிய மூன்று கரணமு மாயிடும்
ஒட்டிய பாச முணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திங் கண்ணுதல் காணுமே."

(திருமூலர் திருமந்திரம்.)

பொருள்.—முன்பு கூறிய எட்டில் முதல் ஐந்து மேல் அறிவுக் கருவி கள் என்றும், மற்ற மூன்று உள்ளறிவுக் கருவிகள் என்றும் கூறுவர். இவைகள் யாவும் இன்ப துன்பங்களை நுகர்தலால், இவைகளே பாசமாம், இப்பாசத்தால் வந்த கட்டுப்பாட்டை அவிழ்ப்பதே சித்தமாம்.

எனத் திருமூலர் முதல் மற்ற ஏனையோரும் விளக்கிக்காட்டிய சிவப் பேரறிவியலில் கூறிய உண்மையுரை முப்பத்தாறோடு, அறுபதுங்கூட்டி, நுண்பொருளாகிய மேலறிவுக்கருவிகளையும் உட்கருவிகளையும் ; உடலமைப்பிற்கான (பரு உடலுக்கான) இரசம் குருதி சதை கொழுப்பு தவளம் (விந்து), என்பு, நரம்பு இவைகளையும் அமைத்து இவைகளின் இயக்கத்திற்கான கால் (வாயு) முதலியவைகளையும் அமைத்து மக்கள் இனிது உய்யுமாறு கூறிப்போந்தனர்.

உயிர் (ஆன்மா—பசு) எவ்வாறு பதியை அடைய, பாசத்தால் (கட் டுப்பட்டு), தடைப்பட்டு நிற்குமோ, அவ்வாறே பருஉடலோடு கூடிய உயிர் சிவத் தன்மை பெற்று, உடற்கு வேண்டிய பொருளினை ஆக்கவும், காக்கவும், அழிக்கவுமான சத்தியை வளி (வாதம்), அழல் (பித்தம்), ஐயம் (கபம்) பெற்றிருப்பினும், இருவினையால் அம்மூன்றும் கட்டுப்பட்டு (பிணிக்கப்பட்டு) நோயீட்டஞ்சார அழியும்.

மேற்கூறிய திருமூலர் பாவில் மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் உயிரைத் தன் உண்மை நிலையை அறியாதபடி கட்டிவைத்திருப்ப தைச் சித்தம் அவிழ்த்து, சிவ நிலையைக்காட்டி இன்பமளிக்குமாபோல், பிணிக்கப்பட்ட வளி, அழல், ஐயத்தை அவிழ்ப்பதே அவிழ்தம் (மருந்து) எனப்படுவது உயிரோடுகூடிய உடலுக்கு இன்பமளிக்கும்.

" அவை யேதானே யாயிரு வினைமையிற்
போக்கு வரவு .. .. .."

என இரண்டாம் நூற்பாவில், இருவினைப்பயனால் உயிர் போக்கு வரவு புரியும் (உடலை விட்டு நீங்குவதும் மீண்டு மற்றோர் உடலில் புகுவதும் செய்யும்) என்பது போலவே

'' மிகினும் குறையினும் நோய்செய்யு நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. ''

எனத் திருக்குறள் கூறியதுபோல் உணவுவகைகளை அளவு கடந்து உண்ணல், அல்லது உடற்கு வேண்டிய அளவு கொள்ளாது சிறு உணவு கொள்ளல் ; தன்வன்மைக்குமிகுந்து உழைத்தல், அல்லது சோம்பித் தொழிலின்றிக் கிடத்தல் ஆகிய இருவகைகளால் (மிகினுங்குறையின்-இருவினையால்) வளிமுதலாகக் கொண்ட மூன்றும் தத்தம் நிலையில் தாழ்ந்தேனும், மிகுந்தேனும் பிணிக்கப்படும். மிகுந்த அக்குற்றத்தின் அளவாக நோயின் பெயரும் அமையும். இதனையே எதிர்மறையான்,

'' மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுண்ணின் ''

மக்கள் தாம் உண்டது நன்றாகச் சமைக்கப்பெற்று அகட்டை விட்டு, கீழ் இறங்கியபின் வயிற்றுள் அவ்வுணவு இல்லாக்குறி அறிந்த பின்னர் உண்ணின், உடலுக்கு மருந்தென்பது ஒன்று வேண்டாவாம் எனக் கூறிய தாகும்.

'' அற்றால் அளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. ''

உடலைப் பெற்ற ஆன்மா (உயிர்) இன்ப துன்பங்களைப் பெற்று (இன்பம், பொருள், அறம் ஈட்டி) வீடு பயக்கத் துணையாயுள்ள உடல், நெடுநாள் உய்யுமாறு, அவ்வுடற்குத் தகுந்தாற்போல் அளவறிந்து உண்க, உயிரை வளர்க்க என வற்புறுத்தியது ;

'' அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் புசித்து. ''

நோய்வாராதிருக்க, உடல் அடைந்த வேறுபாடுகளையும், தட்ப வெப்ப வேறுபாடுகளையும் நன்கறிந்து அதற்குத் தகுந்தாற்போல் உணவுவகைகளை அமைத்து, செரிப்புத் தன்மைக்கு உகந்தவாறு உணவு கொள்க எனக் கூறியபின், மீண்டும் ;

" தீயளவு வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்."

உடல் நிலைகெட்டு, பசித்தீ குறைந்து செரிப்புத்தன்மை இழந்த காலத்தும் முன்பு உண்டதுபோல் பெரிதுண்ணின் நோய் பெருகும் எனக் கூறியது.

" மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு."

உணவுப் பொருள்களின் பண்பறிந்து உடலின் கண்ணமைந்த வளி, அழல், ஐயம் ஆகிய இவைகள் மாறுபாடாகாதபடி (மிகுதல் குறைதல்) தடுக்கவேண்டியனவற்றைத் தடுத்து வேண்டுவனவற்றைக் கூட்டி உண்ணின் உயிர்க்கு (வளி அழல் ஐயம்) துன்பம் விளையா (நோய் உண்டாகாது) ;

" இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்கண் நோய்."

மக்கள் தங்கள் உடல் நிலையை நன்கறிந்து அதற்குத் தகுந்தாற்போல் உண்பாராகில், இன்புற்றுவாழ்வர். அவ்வாறன்றி, அளவற்றுக் கண்டதை மிக மிகக் கொள்வாராயின் பிணிக்கப்பட்டு நீங்காத் துன்பத்தில் மூழ்குவர், என்பதாம்.

" நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

இதுவரையிலும் கூறிவந்த உணவு முதலியவைகளால் உண்டாம் நோயினை அறியும்பொருட்டு, நோய் அறிதற்கான நாடல் வழியினைக் கூறுதும். அஃது உணவு செயல்களால் (மிகுதல் குறைதல்) வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றில் ஒன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் மிகுந்து அல்லது குறைந்து (குற்றமடைந்து) பிணிக்கப்படுமாகையால் (நோய்) பிணிக்கப்பட்ட குற்றம்யாது, அதற்கு முதன்மையாயிருந்தது எது, அதனைத் தணிப்பதற்கு (போக்குவதற்கு) வழி எது என நாடுதலே மருத்துவன் நற் செயலாம் ; அன்றியும் ;

" உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்."

மேற்கூறிய பாவில் நோயினன் அடைந்த குற்ற வேறுபாடுகள் முதலி யவற்றின் மிகுதல் குறைதல் அளவையையும், அதனால் நோயுற்றான் பெற்ற நோயின் அளவையையும் (தீரும் தீராதனவற்றையும்) அறிந்த பின், நோயின் கால அளவை அறிந்து, இவைகளைச் சிந்தித்து அதற்குத் தகுந்தாற்போல் மருத்துவம் செய்தல் வேண்டும் எனவும் ;

'' உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து.''

நோய் உற்றவன், நோய் தீர்ப்பான் (மருத்துவன்), மருந்து செய்பவன் (Pharmacist), மருந்தைச் செலுத்துவோன் (Nurse) ஆகிய நால்வரும் ஒரு மனதோடு கூடி ஒத்துழைப்பின் நோய்தீரும் எனச் சித்த மருத்துவத் தின் நுட்பங்களைத் திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்துக்காட்டினார்.

இவ்வாற்றான், பேரறிவியலுக்கும், சித்த மருத்துவத்திற்கும் உள்ள இணைபிரியாத தொடர்பைக் காட்டிய சித்த மருத்துவம், மக்கள் நோயின்றி உய்ந்து, பிறவா நிலையெய்தற்பொருட்டு உடல் (காயம்) அழியாதிருக்க வந்தமையால் பிணிக்கப்பட்டவை (நோய்) களைநீக்கி உடலைக் (காயத்தைக்) காக்க வந்த முறையைக் காய கற்ப மென்பர்.

காய கற்பம் என்னுஞ் சொல், காயம்+கற்பம் என்ற இரு சொற் களாலானது. காயம் என்பது மனம் பழுக்காது காயாக உள்ள உடல் ; கற்பம் என்பது உடலைக் கல்போலாக்கும் முறை எனப் பொருள்படும், இதனை மூன்றாக வகுத்து மணி மந்திர அவிழ்தம் எனக் கூறுவர், இஃதே திருமூலர்திருமந்திரம் எண்ணாயிரத்தில் '' மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும் '' எனக் கூறியது சித்த மருத்துவமாகும் ; இதனை,

'' மணிமந் திரவழித மார்க்கந் தெரிந்து
பிணிக ளறிந்தொதுக்கிப் பின்னும்—தணியா
வுடலை வளர்த்திடலா லுத்தியினா னுலால்
பிடகர் வைத்தியர்க்குப் பேர்.''

(தேரையர் வெண்பா, பாடல் 151

தணியாத நோயுந் தணியப் புரியும்
மணிமந் திரவவிழ்த மார்க்கப்—பிணியை
உசாவி யியற்றுமறி வுள்ளவரைக் கண்டால்
மசாவும் பயப்படுமம் மா

செய்யு மணிமந் திரவழித நன்முறைமை
யைய மிலாம லறிந்தவரே—வைய
மிசைமா னிடரெனினும் விண்மருத்த ராகி
யிசைவார் குருவாய் எனக்கு ''

(தேரையர் வெண்பா, 228.)

தேரன் கூறிய இப்பாக்களால், சித்தர்கள், சித்த மருத்துவத்தின், மருத்துவ முறையாகிய மணிமந்திர அவிழ்தமென்பது நோயைத் தடுத்தும், வந்த நோயைப் போக்கியும், உடலை அழியாது காக்கும் காயகற்பத்தினை பேரறிவியலுக்குத் துணையாக அந்நாளிலேயே அமைத்த ஓர் சிறந்த முறையென அறியக் கிடக்கும்.

காயகற்பத்துள்ளடங்கிய மணிமந்திர அவிழ்தங்களாகிய மூன்றினைக் கூறுவாம்.

'' மணி ''—மணி என்னுஞ் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. எடுத்துக்காட்டாக முத்து, கற்கள், நெல், தோரை முதலிய பயிர்கள் (தானியமணிகள்), மர முதலியவற்றால் உருண்டையாகச் செய்து மாலையாக அணியும் மணிகள் ஆகியவற்றைக் குறிக்கும். ஆயினும், மணியென்னுஞ் சொல் முத்தினைக் குறிக்கும் என்பது வழக்கு. இதனாலேயே தமிழ்ச் சொல்லும், வட சொல்லும் கலந்த உரைநடைக்கு மணிப்பிரவாள நடை எனப் பெயர் பெற்றது. இஃது, தமிழ்ச் சொல்லாகிய மணி (முத்து) யும் வட சொல்லாகிய பிரவாளம் (பவழமும்) கூட்டிக் கோத்து அணியும் மாலை எவ்வளவு அழகாக இருக்குமோ அவ்வாறு இரு சொல்லாலாய உரைநடை மிக அழகாக இருக்குமென மணிப்பிரவாள நடை என்றனர். ஆதலின் மணி என்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லாம். இவ்விடத்தில் மணி என்பது இரசத்தைக் கட்டி, மணி போலாக்கிய இரச மணியாம், இதனை இரச குளிகை, சூதக் குளிகை, ககன குளிகை என வழங்குவர்.

'' இரசம் '' என்பது ஒரு பொருளில் அடங்கிய சத்தாகும். பழம், இலை, பட்டை இவைகளை இடித்துப் பிழிந்த சாறு சத்தே இரசம் எனப்படுவது போல், மண்ணில் வெண்மையாயும், நீர் வடிவாயும் மிகுந்த எடையோடும் உள்ள சத்துப்பொருளே இரசம் எனப் பெயர் பெற்றது. இரசத்தை, சிவப்பொருளாகக் கொண்டனர் சித்தர். சித்த மருத்துவத்தில் செய்யும் மருந்துகள் பலவற்றிலும் இரசம் ஓர் பொருளாக அமையும்.

இரசத்தை விட மேலான மருந்து வேறில்லை எனக் கொண்டது தென்னாடு. ஆதலினாலே, உடலை வளர்க்க வந்த முறையில் (காயகற்பத்தில்) இரசமணியினை முதன்மையாகக் கொண்டனர் தென்னாட்டுச் சித்தர். இரச மருந்தின் பெருமையை என்னாட்டவரும் அறியும்படி செய்தவர்கள் தென்னாட்டுச் சித்தர்களே. தென்னாட்டுச் சித்தர்களில் ஒருவராகிய சித்த நாகார்ச்சுனர் (தெலுங்கர்) அவர்கள் வட நாட்டிற்குச் சென்றபோது இரசமும், கந்தகமும் கூட்டி அரைத்து, கருப்பாகிக் காட்டியதே ஓர் பெரிய ஆச்சரியமாய்த் தோன்றிற்று வடநாட்டார்க்கு. இச்சிறு மாற்றத்தையே பெரிதாகக்கொண்டு, அரபியா, எகிப்து, கிரீசு நாடுகளும் போற்றத் தொடங்கின. அந்நாட்டவர்களும் இரசத்தைப் பெரிதொரு பொருளாகக் கொண்டு இரசவாதத்தில் பெரிதும் ஈடுபட்டனர் என அறியக்கிடக்கும். இந்நாள் மேனாட்டு இரசாயன அறிஞர்கள் ''Chemistry'' என்னுஞ் சொல் '' கீம் '' என்னும் சொல்லின் அடிப்படையாக வந்தது எனக் கூறுவர். '' கீம் '' என்னுஞ் சொல் கிரீக் மொழியில் கருப்பு எனப் பொருள்படும். இரசத்தையும், கந்தகத்தையும் கூட்டி அரைத்தால் கருப்பாகும் மாற்றத்தையே '' கீம் '' வழங்கியதை மற்ற மேல்நாட்டார் '' கீம் '' என்பதை ''Chemistry'' என வழங்கலாயினர். அன்றியும் இக்கலைக்கு முதலாக இருந்தவர் சித்த நாகார்ச்சுனர் எனவுங் கொள்வர் ; ஆயினும் சித்த நாகார்ச்சுனர்க்கு முன்னே எத்தனையோ சித்தர்கள் இருந்திருக்கிறார்கள். மேல்நாட்டார், அறிந்தது சித்த நாகார்ச்சுனர் ஒன்றே. இரசத்தைத்தூய்மை செய்யும் (தீசை செய்யும்) முறையில் ஒன்று, ஆதிநாதர் (நந்தி), மூலநாதர் (திருமூலர்), கோரசேசர் (கோரக்கர்), கொங்கணர் (கொங்கநாட்டு சித்தர்), சௌமியர் (சௌரங்கி) முதலிய பண்டைய ஒன்பது (நவநாத) சித்தர்களையும், அவர்கள் பின் தோன்றிய கோடசூளி, வியாளி, நாகார்ச்சுனர் முதலிய சித்தர்களையும் குருவாகக் கொண்டு வணங்க வேண்டுமென அந்தகந்தம் என்னும் இரச மருந்துகளைப்பற்றிக் கூறும் நூல் தமிழ் உரையில் நாலாம் பக்கத்திலும் கூறியுள்ளதால், ஆயுள் வேதியர் இரசத்தைப் பற்றி அறிந்தது, தென்னாட்டிற்றோன்றிய சித்த நாகார்ச்சுனரால் எனத் தெளிக. இதனை,

'' குளிகை யாம்மிதைக் கொண்டவர் சித்தரே
குளிகை யாமிதன் கொள்கை யதிகமே
குளிகை யா மிதைக் கூறின் மகிமையாங்
குளிகை யாமிது குற்றமில் லாததே.''

தேரையர் சேகரப்பா வாலறிக.

இரச குளிகையைப் பற்றியும், இரசத்தால் ஆக்கிய மருந்துகளைப் பற்றியும் எத்தனையோ நூற்கள் தமிழ் நாட்டில் தோன்றி இருப்பினும் இன்றைக்கு கிடைக்கும் நூற்கள் பலவற்றுள் தேரையர் வரைந்த சேகரப்பா, சிகாமணி வெண்பா, நிகண்டு, காப்பியம், யமக வெண்பா, கரிசல் முதலியவைகளில் நிறைந்துள்ளது.

இரசத்தையே கடவுளாகக்கொண்டு தொழுதற்கான நூற்கள், இரசேச்வர நியாயம், இரசேச்வர தரிசனம் என்ற நூற்கள் இன்றும் காச்மீரத்தில் உள்ளதென்பர். இவைகள் யாவையும் தேடி, ஆராய்ந்து (Research) மருந்து செய்யின் மேல்நாட்டு மருந்தினைவிட நம்நாட்டு மருந்து மேன்மையாக விளங்கும்.

இவ்விரச குளிகையைப்பற்றித் தேரப்பெருமான் தானியற்றிய சேகரப்பா, வெண்பா முதலியவைகளில் கூறியனவற்றில் சில கூறுவாம்:

" அட்ட சித்துடையவர்களீ—திட்டமுற்றையரெனவுழைத்
திட்ட நற்பொருள் செறியந—னிட்டை மற்றிது நிகழுமே "
(சேகரப்பா 69.)

" பண்டு சித்தர்கள் பழமென—உண்டு சித்திக ளுலகிலே
கண்டு வைத்தது கதியது—கொண்டுரைத்தவர் குருக்களே "
(சேகரப்பா 678.)

" சித்து சித்தெனச் சேகதல—மித்தை வித்தையை வினவவே
கத்த ரொத்தவக் கருவியை—யொத்த நித்திய ருரைசெய்வார்"
(சேகரப்பா 671.)

" கவன வேகங்க ளுக்கிது மூலமாய்ப்
புவன மீதெப் பொருளு மளித்திடுஞ்
சிவன றிந்தது செப்பவொண் ணாதது
தவமு ளுற்றினர் தங்கட்கு வாய்ப்பதே "
(சேகரப்பா 692.)

" அத்த மாக்கும் மரசு மளித்திடுஞ்
சுத்த மாக்குஞ் சுகத்தை மிகத்தரும்
புத்த மந்திர பூதப சாசுபே
யித்தனைக்கு மியமனி தாகுமே."
(சேகரப்பா 693.)

"வேதையா யுலக மெல்லாம் வேதிக்கப் பரிசவேதி
யோதநீ ருலகு வப்ப வுண்ணின்மா மேரு வென்னப்
பூதலத் தவர்க்குப் பஞ்ச பூததே கம் பொன்னாகும்
காதையீ தல்ல கற்பங் காயசித் திக்கு மாமே."

(சேகரப்பா 765.)

"ஒன்பது லோக மீது மொருசதத் துக்கொன் றிய
பொன்பொதி லோக மாம்புன் பொன்னெனப் பொன்னைத் தேடா
தின்பநீ ருலகில் யாரும் மிறையாவ னெனக் கொண்டாட
மன்பதை களுக்குச் சட்டை மாறியாஞ் சித்திதானே."

(சேகரப்பா 766.)

"வைத்திய வாத மென்னும் வம்முத னிரைநேர் வார்த்தை
குயிற்றிய வறிவு பார்ப்போர் குயித்தியா லறிந்து கொண்டால்
வைத்திய முன்னர் பின்னர் வாதமா மவிழ்த மீதும்
வயித்தியம் வாத மாமிவ் வகையிரண்டிற்கு மாமே."

(சேகரப்பா 768.)

எனத் தேரர் சேகரப்பாவில் இரசமணியைக் கூறி, அதன் பெருமையைப் பொது மக்கள் யாரும் அறியமாட்டார். பண்டைநாள் சித்தர்கள் அறிவர். அவர்கள், இதனைக் கொண்டு சைவப் பேரறிவியலில் கூறிய எண்வகைச் சித்திகளைப் பெறவும், மலின லோகங்களை துல்லியமாகச் செய்யவும், தொட்டதை யெல்லாம் பொன்னாக்கவும், உடலைச் சித்தியாக்கவும், நோயைத் தீர்க்கும் அவிழ்தமாகவும் கையாள்வர் எனக் கூறியதோடு விடாது இரசக் குளிகையைச் செய்யும் முறைகளைப் பலவாற்றான் சேகரப்பா முதலிய நூற்களிலும் விரித்துக் கூறியுள்ளார். அவைகளை இனி வெளியாகும் அந்நூலிற் காண்க. சித்த மருத்துவத்தில் இரசு குளிகையேயன்றி இரச, கந்தக, பாடாண, உப்பு வகைகளைக் கொண்டு செய்யும் மருந்து முறைகளுமுள.

மந்திரம் : மந்திரம் என்னுஞ் சொல் மனதின் தரம் எனப்பொருள் படும். இஃது ஐம்பொறிகளையும் அடக்கி ஒவ்வொர் நிலையையும் (ஆறு நிலை ஆராதாரம்) தன்வழியாகச் செய்தலான வழிகளை நாடுவதாம்.

மந்திரமென்பது தமிழ்ச் சொல்லாம். கிடைக்கும் தமிழ் நூல்களில் பழைமையதான இலக்கணம் தொல்காப்பியம். அவ்விலக்கண நூலில் அடிவரையறையில்லாச் செய்யுட்களைப் பற்றிக் கூறுமிடத்து ''-அடி வரை யில்லன ஆறெனமொழிப'' 1420, எனக் கூறியபின் மறை மொழிகிளந்த மந்திரந்தான்'' 1421, எனக்கூறி, பின்பு, மந்திரம் என்பது என்னவென்பதை விளக்க வந்த விடத்து '' நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த—மறைமொழிதானே மந்திரமென்ப '' என்று முடிவாகச் கூறியுள்ளமையால், மந்திரம் என்ற சொற்றொடர் தூய தமிழ்ச் சொற்றொடர் என்பது வெள்ளிடைமலை. இதற்குரை கண்டோராம் பருப்பொருளறிவினார்க்குப் புலனாகாது. நுண்ணறி வினார்க்குப் புலனாகும். கருத்துடை நுணுக்கமொழியென்றே கூறி யுள்ளார்கள் எனவேதான் இதை மறை மொழி என்றார். ஈண்டுக் கூறிய தற்கேற்ப, ஓக வழிகளைப்பற்றியதே மந்திரமாறு காட்டுதும். ஓகவழி யினைக் கண்டவரெல்லாம் கூறமுடியாது கூறினும் அறிஞர்கள் ஒத்துக் கொள்ளார். மிக்க நிறைந்த அறிவினையுடையவர்கள் கூறியதையே '' மந்திரம்'' என்று ஆன்றோர் ஒப்புவர். இது கருதியே '' நிறை மொழி மாந்தர்'' என்றார் '' நிறைமொழி மாந்தர் '' என்பதற்குரை கண்டோர்கள். தகுதி நிறைந்த மொழியினையுடைய பெரியோர்கள் என்றே உரைப்பர். தகுதி நிறைந்தோர் அனைவரிலும் தலைமை யுடையாரே கூறமுந்தலாம் என்பதற்கு ''ஆணையின் '' என்றும் உரைத்துள்ளார். ஆணையின் என்பதற்கு உரை கண்டோரும் தலைமைப் பாட்டினால் என்றே கூறியுள்ளார். இன்னபல அரியவாக முடிக்கவல்ல வழிகளைக் கூறும் நூலே மந்திரம் என்னலாம், இவ்வாறன்றி மற்றச் சிற்றறிவினோரும் கூறப்புகின், அது இறந்தொழியுமேயன்றி நிலைத்து நிற்கா; பயனளிக்கா என்பதைத் தெளிவுபடுத்தவே, தொல்காப்பியர் கூறிப்போந்த மறைமொழியான மந்திரத்தைக் கருத்திற்கொண்டு, திரு வள்ளுவரும் நீத்தார் பெருமையை விளக்கவந்த விடத்து, அவர்கள் ஓக நிலை வகையும் அதன் பயனும் அடங்கிய மந்திரமே அவர்களின் பெருமைக்குச் சான்றாகும் என்பதை ;

'' நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.''

எனக்கூறினார். தொல்காப்பியர் கூறிய தொடர்களை அப்படியே எடுத்துக் குறளாக்கியுள்ளமை இங்கு வியக்கத்தக்கதாகும். மற்றும், திருமூலர் தம் நூலுக்குத் திரு மந்திரம் என்று பெயரிட்டதும் இங்கு நோக்கற்பாலது.

" மருமலர் ........................
...............................
...............................
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலாச னாதி சேர்த்துக்
காலைப்பிடித் தனலை அம்மைகுண்டலியடிக்
கலைமதியி னூடு தாக்கி
உருகிவரும் அமிர்தத்தை உண்டுண் டுறங்காமல்
உணர்வான விழியை நாடி
ஒன்றோ டிரண்டெனும் சமரச சொருபசுகம்
உற்றிடவென் மனதின் வண்ணம்
திருவருள் முடிக்கவித் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே."

" நயன மிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்விழா வாயுவை யுள்ளே யடக்கி
துயரறா நாடியேதூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணா தண்டுடே வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணா ளடைக்கும் வழியது வாமே.

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிணிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிணிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நிர்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே."

எனத் தாயுமானவரும், திருமூலரும் கூறிய இப்பாக்கள் மூச்சுவிடல் மூச்சுவாங்கல், மூச்சு அடக்கல் ஆகிய வகைகளைப் பழகிவரின் வீணா தண்டுளே (spinal cord) புகுந்தோடி உடல் முழுமையும் உள்ள நரம்புகள், அறு நிலையாகக் கூறிய ஒவ்வொர் நிலையிலும் உள்ளதான கீழ் நிலை (மூலாதாரம்) தொடங்கி, மேல்நோக்கு நிலை (அனாகதம்) வரையில் உள்ள உறுப்பை வன்மைப்படுத்தி மனதை அலையவொட்டாமற் படி தடுத்து, அறிவினை விளக்கி, உடலை அழியாதிருக்கச் செய்தற்கும், இறைவன் தன்மைகளை மக்களும் பெறக்கூடும் என்பதற்குமேயாம்.

ஐம்புலனை அடக்க மூச்சடக்கி மனதையோர் நிலைக்குக் கொணர்ந்து உடலை வளர்த்து, சிவகதியடையும் பொருட்டுச் செய்யும் ஓக முறையை (மந்திரம்)கடைப்பிடிப்பவரே வேதாந்திகளெனக்கொள்வர். இவ்வாறின்றி, சைவர்கள் தங்கள் திறத்தால் (தம் திரத்தால்) (will power) ஐம் புலன்களைச் சிதற வொட்டாமல் தம் நாட்டத்தை ஒரு நிலையில் வைத்து மந்திரத்திற்கான எழுத்துக்களை ஓதாமலே ஆறு நிலைகளையும் தம் வழியாக்குவர். இவ்வழியை தந்திரமென்பர். இதனை,

'' வாய்த்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்த்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடின் கோழையு மாமே.''

(திருமூலர் திருமந்திரத்தாலறிக.)

மந்திரம், தந்திரம் என்னும் இவ்விரண்டினில் மந்திர வழக்கப் பழக்கங் களை எம்மக்களும் எளிதில் செய்து அதனாலுண்டாம் நற்பயன்களைப் பெறலாம். ஆதலின் இதனையே பெரும்பாலோர் கையாள்வர். அன்றி யும் உடலைவளர்க்கும் வகையில், எம்மக்களும் எளிதில், வந்த நோயை நீக்கவும் இனிநோய் வராதிருக்கவுமான வழிக்கும் பெரிதும் பயன்படும். ஆதல்பற்றியே உடலைக்காக்க வந்த முறையில் (காயகற்பத்தில்) மூன்று வகையில் இதனையும் ஒன்றாகச் சேர்த்தியுள்ளார்.

'' மந்திரம்'' என்பது பல வகையான் பயன்படுத்தக் கூடுமேயாயி னும் அவற்றுள் இங்கு ஓக நிலைக்குக் கூறியதாகும். ஒக்கல், ஒக்கல், ஓகம், யோகம் என்னுஞ் சொற்கள் ஒரு பொருட்கிளவி. ஒன்றோடொன்று இணைதல், இரண்டறக்கலத்தல் எனப் பொருள்படும். இவைகள். —

(1) நன்னடக்கை (இயமம்.)
(2) நற்செயல் (நியமம்).
(3) இருக்கை (ஆதனம், ஆசனம்).
(4) சரப்பழக்கம் (பிராணாயாமம்).
(5) புலனடக்கல் (பிரத்தியாகாரம்).
(6) மூச்சடக்கல் (மனமடக்கல்) (தாரணை).
(7) தன்னையடக்கல்—தந்திரம். (தியானம்) உண்மை வடிவு அறிதல், ஆத்மசொரூபம். திரியம் என்பர்.
(8) இரண்டறக்கலத்தல். (சமாதி)

என எட்டுவகை யோகமென்பர்.

1. நன்னடக்கை (இயமம்)

" எழுந்துநீர் பெய்யினு மெட்டுத் திசையுஞ்
செழுந்த னியமங்கள் செய்மினென் றண்ணற்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே.
கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குணன்
நல்லா னடக்க முடையா னடுச்செய்
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையினின் றானே."

(திருமூலர் திருமந்திரம்.)

2. நற்செயல் (நியமம்)

" தூய்மை யருளுண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமி ரைந்துயீ நியமத்த னாமே."
தபஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்வீ ரைந்து
நிவம்பல செய்யி னியமத்த னாமே.

(திருமூலர் திருமந்திரம்.)

ருப்பு (நிலைத்திருத்தல்) (ஒகநிலை)

1. கமலாசனம்.

"ஓரணைப் பதமுரு வின்மே லேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைக ளதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே.''

2. உபத்திராசனம்.

"துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
வரிய முழந்தாளி லங்கைகளை நீட்டி
யுருகி யிடுமுடற் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திராசனமே.''

3. கோழி (குக்கிடாசனம்)

"ஒக்க வடியினை யூருவி லேறிட்டு
முக்கி யுடலை முழங்கைகளி லேற்றித்
தொக்க வறிந்து துளங்கா திருந்திடிற்
குக்கிட வாசனங் கொள்ளலு மாகுமே.''

4. சிங்காசனம்.

"பாத முழந்தாளிற் பாணிகளை நீட்டி
ஆதர வோடும் வாயங்காந் தழகுறக்
கோதி னயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே.''

எனத் திருமந்திரம் நான்கு வகையாகக் கூறிய நிலைத்தல் அன்றி இன்னும் பல வகைப்பட்டவைகள் உள எனக்கூறியுள்ளார்.

4. சரப்பழக்கம் (பிராணாயாமம்)

''பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறி பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண்டீரே.

ஏறுதல் பூர மீரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பக மறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேக
மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே.

வளியினை வாங்கி வயத்தி லடக்கி
பளிங்கொத்து காயம் பழுக்கினும் பிஞ்சாந்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே.''

5-6. புலனடக்கல்-மூச்சடக்கல் (பிரத்தியாகாரம்) (மந்திரம்)


''புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந்
திறப்பட்ட நிற்சயஞ் சேர்ந்துட னின்றால்
உறப்பட்டு நின்றது உள்ளமு மங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே.''


என்று திருமூலர் கூறியதில், வெளியாகும் காற்றை (மூச்சை) வெளியாகா வண்ணம் உடலில் உள்ளேயே அடக்கினால் உள்ளம் (மனமுதலியன) தன்னிலைனின்று அலையாது நிற்பதோடு உயிர் உடலைவிட்டுப் போகாதவாறு உடலைக்காக்கும் எனக் கொள்ளக்கிடக்கும். ஈண்டுக்

---

பிராணாயாமம் என்பது ஓர்நிலையிலிருந்து, உண்பதும் உறங்குவதும் விடுத்து, உடலை ஒடுக்கி அது அழியும் வரை இருந்து, அறிவைக் குன்றச்செய்து இருத்தல் என்பதாம். இவ்வழி புத்தர் சமணர் வழக்கு. இதனை வேதாந்திகளும் கைக் கொண்டனர். புத்தர் இவ்வழியிலீடுபட்டு, உடல்மெலிந்து, அறிவினை மங்கச்செய்து உடல் அழியும் நிலைவந்தபோது, உடல் அழியின் உயிர் அழியுமே, உயிரழியின் எவ்வாறு கடவுளை அறிவது என அஞ்சி இப்பழக்கத்தை விடுத்து உடலை வளர்ப்பதற்கான வேறுவழிகளைப் பழகத் தொடங்கினர் என அறியக்கிடக்கும். பிராணாயாமம் என்பதைத் தமிழில் சரப்பழக்கமென்பர். இப்பழக்க உடலையு அறிவையும் குன்றச்செய்தற்கன்று. மூச்சை உள்ளடக்கி (பூரகம்)உள்ளிருத்தி (ஆறும் கும்பகம்)வெளியாகச் ... (ரேசகம்) செய்யும் பழக்கமாம்.

கூறும் எண் வகை. ஒக்கல் வகைகளில் புலன் அடக்கல், மூச்சடக்கல் என்பதையே ''மந்திரம்''. இதனை பெரிதாகக் கொண்டமையால், சிறப்பாக ஒக்கல் (யோகம்) எனப் பெயரமைத்தனர். இவ்வோகப் பழக்கங்கள் செய்வது படிப்படியே கீழ் நிலையிலிருந்து (மூலாதாரத்தி லிருந்து), மேல் நிலை (ஆக்ஞை நிலை) வரை எய்தல் வேண்டும் எனக்கொள்வர். ஓகமுறையைக் கூறுமுன் உடல் அமைப்பில் அமைந்த ஆறு நிலைகளின் இடங்களும், அவ்விடங்களின் தொழிலும், அத்தொழில் மிகினும் குறையினும் உண்டாம் கேடுகளும் (நன்மை தீமைகளும் )கூறுவாம்.


பிங்கலை
இடகலை
சுழுமுனை
தமரகம்
நுரையீரல்
வயிறு
கை
மூத்திர குண்டிக்காய்
நீர்ப்பை
பெரு(கீழ்)குடல்
கால்


ROLANDIC FISSURE
SUPERIOR PARIETAL GYRUS.
SUPRA-MARGINAL GYRUS.
ANCULAR GYRUS.
MACULAR VISION.
HIGHER PSYCHICAL
F1
F3
T1
T2
VISION

'-உந்திமுத லாகி உருமுடிக் கீழ்மேலாய்
பந்தித்து நிற்கும் பதிந்து.''

என அவ்வையாரும்,

''உறுமுடிக் கீழ்மேலும் பந்தித்துநிற்கும்
உகவையாந் தலைதனிலே யீசுரந்தான்
செறிவினையெய் வினைப்பயன் முன்னும்மறிந்து
திகழிந்திர மான்றலைபோ லிமைப்பானுள்ளே
தறுவினைசத் தப்பரிச ரூபரசகந்தம்
தானம்வகை தொறுமுத்தி கொடுத்துநல்கித்
துறுவினைசெய் தகைமையறுத் துள்ளேநோக்கித்
தொண்ணுற் றாறாங்கருவி தத்துவமாமே.''

''ஆமெனு நாடிநரம் பெழுபத்தீ ராயிரம்
அதிலூறும் நாடி விட்ணு நாடியாகும்
ஏமரு திரனாடி யிடையோடு பிங்கலையும்
எழினா முதுகெலும்பு பதினாறு பழுவுமாகும்
..............................
..............................
..............................
..............................

என யூகிமுனி சிந்தாமணியும் கூறியதில்''

பெண்கள் கருவுற்ற அந்நாள் தொடங்கி வளர்ந்துவரும், அச்சூல் பெருத்துவருவதற்கான ஊட்டத்தைப் பெற, நச்சடையும் (Placenta) நச்சுக் கொடியும் (Umblical card) அமையப்பெற்று உந்தியையொட்டி அக்குழவிக்கான ஊட்டத்தைத் தந்து, இரசம், குருதி, சதை, கொழுப்பு, மூளை என்பு, செவி, தோல், கண், நாக்கு, மூக்கு, வாய், கால், கை, எருவாய், கருவாய், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் யாவும் அமையப்பெற்று, உடல் இயக்கத்திற்காகத் தோன்றிய எழுபத்தீராயிர நரம்புகள் உடல் முழுமையும் உள்ளதேயாயினும், உடலின் இடப் பக்கம், வலப் பக்கம் இயங்கும் நரம்புகள், வீணாதண்டு (முதுகெலும்பு) அடி வழியே மேல் நோக்கி கழுத்தின் பின் சென்று ஒன்றை ஒன்று சுழன்று, மேல் நோக்கி மூளையின் இருபகுதில் பதியும்போது, கீழ் உறுப்புக்கான கால் தொடை முதலிய நரம்புகள் மேலும், நடு உறுப்புக் கான (முண்டம்) நரம்புகள் நடுவிலும், மேலுறுப்புக்கான தலை,

கழுத்து, முகம், நாக்கு, பேச்சு நரம்புகள் கீழுமாக உறுமாறி, பதிந்து நிற்கும் எனக் குறித்தற்கே உருமுடி (தலை) கீழ்மேலாய் பந்தித்து நிற்கும் எனக் கூறினர்.

இவ்வகை நரம்புகள்இரண்டில்,இடப்பாக உறுப்புகளைஇயங்கச் செய்யும் நரம்பினை இடகலை என்றும், வலப்புறமுள்ள உறுப்புகளை இயங்கச் செய்யும் நரம்புகள் இடப்புற நரம்பின் பின்புறம் சென்று, சுழன்று மாறி வந்தால் பின்கலை என்றும், இடகலையும் பின்கலையும் (கத்தரிக்கோல்போல் மாறுவதுபோல்) சுழன்றுவருமிடத்திற்குச் சுழு முனை என்று பெயர் அமைந்தது. பின்கலை என்பது, பிங்கலை என்றும், சுழுமுனை என்பது சுசுமுனாவென்றுமாயிற்று. பாணினி இலக்கணம் போல் தமிழ் எழுத்து ''ழு'' '-ஷு'' ஆகும்.

உந்தி முதலாகக் கொண்டெழுந்து, உடலின் உறுப்புகளை இயக்கு வதற்காகத் தோன்றிய நரம்புகள், மயிர்க்கால், சதை, குருதிநாளம், கை, கால், வயிறு, குடல், எருவாய், கருவாய், தமரகம், நுரையீரல், கழுத்து, வாய், நாக்கு, மூக்கு, கண், செவி முதலியவைகளை இயங்கச் செய்தற்கு, வீணாதண்டின் (Spine Sacrim Cocyx) அடியிலிருந்து மேல் நோக்கி மண்டை வரை, சென்று பந்தித்திருக்கினும், இயங்க வைக்கும் அறிவுடைய நிலை மூளையில் உள்ளது.

கீழிருந்து மேல் நிலை வரையுள்ள இடங்களை ஆறு நிலையாக (ஆராதார மாக) வகுத்து, கீழ் நிலையில் (மூலாதாரத்தால்) இருந்து, ஓகமுறையைக் கையாண்டு, ஒன்றன்பின்னொன்றாய்க் கடந்து, மேல் நிலையாகிய ஆக்ஞை (Command) (Higher Psychic Centre) அடையின் ''சீவனென்னச் சீவனென்ன வேறில்லை'' எனத் திருமூலர் கூறியவாறு சிவநிலையெய்தச் செய்யும்.


இவ்வாறு நிலைகளின் பெயர், இடம், தொழில், ஓக நிலைப்பயன் ஆகியவற்றை விளக்குவாம்.

இவ்வாறு நிலைகளை (1) கீழ்நிலை (மூலாதாரம்), (2) இரண்டாம் நிலை (சுவாதிட்டானம்), (3) மூன்றாம் நிலை (மணிபூரகம்), (4) நான்காம் நிலை (மேல் நோக்கு நிலை) (அனாகதம்), (5) ஐந்தாம் நிலை (விசுத்தி), (6) ஆறாம்நிலை ஆக்கினை, (ஆக்ஞை எனப்) பெயர்பெறும்.

(1) கீழ் நிலை (மூலாதாரம்) கால் எலும்பு இரண்டும் கதிர் எலும்புங் கூடிய இடத்தில் எருவாய்க்கும் கருவாய்க்கும் நடுவில் அமைந்திருக்கும் நரம்புக் கூட்டம். இங்கிருந்து எழும் ஓர் நரம்பு, யாவற்றிற்கும் பெரும் சக்தி பெற்றுள்ளதால் அந் நரம்பைக் குண்டலினி, குண்டலி சத்தியென்பர், இந்நிலையின் வடிவு முக்கோணம், நாலிதழ், செந்நிறம், கடவுள் பிள்ளையார், ஓங்காரம் : ஓம், இதனை,

''எருவிடும் வாச லிருவிரன் மேலே
கருவிடும் வாச லிருவிரற் கீழே
உருவிடு சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்து நின்றானே.''

''மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே.''


ஆஞ்ஞை
விசுத்தி
அனாகதம்
மணிபூரகம்
சுவாதிட்டானம்
மூலாதாரம்

''கடைவா சலைக்கட்டிக் காலை யெழுப்பி
இடைவாச னோக்கி யினிது ளிருத்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பார்
உடையாம ஹூழி யிருக்கலு மாமே.''

(திருமூலர் திருமந்திரம்)

கீழ் நோக்குக்கால் (அபான வாயு).

''இருக்கவே அபானத்தி னியக்கங்கேளாய்
ஏற்றசுவா திட்டானத் துற்பத்தியாகும்
மருக்கவே கீழ்நோக்கி மலசலத்தைத் தள்ளும்
வாகாக நிறந்தானும் பச்சை யாகும்
அருக்கவே யாசலத்தைச் சுருக்கிவைக்கும்
அன்னசா ரத்தையெல்லாஞ் சோர வைக்கும்
திருக்கவே தேவதையும் வரதராசன்
திறமான........''

யூகி. சிந்தாமணி

(2) இரண்டாம் நிலை (சுவாதிட்டானம்) : முதல் நிலைக்கு இரண்டு விரற்கடைமேல் அமைந்துள்ளது. இதன் வடிவு நான்கு மூலை ஆறிதழ், பொன்னிறம், கடவுள், படைப்போனும் கல்விக்கரசியும், எழுத்து ''ந.''வ்வுமாம்.

''நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலம்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே.''

(திருமூலர் திருமந்திரம்.)

பரவுகால் (வியான வாயு).

''சிறப்பான வியானனது தோளினின்று
திகழெழுபத் தீராயிர நாடியிலுஞ்சென்று,
தறுப்பான சரவசரந் தனிலேநின்று
தானீட்டல் முடக்கல்பண்ணிப் பரிசங்களறியும்

அறப்பான வன்ன சாரந்தன் னைத்தான்
　　அங்கங்கே நிறைப்பித்தாக் கையைரட்சிக்கும்
பறப்பான தநுபல வன்னவாகும்
　　பாரதனிற் றெய்வந்தான் ஏமனாமே.''

(யூகிசிந்தாமணி.)

(3) மூன்றாம் நிலை (மணிபூரகம்) : இந்நிலையில் நரம்புகள் ஒன்றுகூடி வேர்போல் வயிற்றில் குடல்களைப்பற்றித்தாவித் தொழில் புரியும். இதனை உந்தித்தாமரை என்பர். இது கொப்பூழ்க்கு நேரில் ஏழாம் பிறைபோல் நிற்கும். இதன் இதழ்ஒரு பூப்போல் வட்டமாக இருக்கும்.

''உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினான்
முந்தி முகட்டி னிறுத்திய பானனைச்
சந்தித் தெழுப்பச் சிவனவ னாமே.''

நடுக்கால் (சமானவாயு)

'' ஆமென்ற சமானனிட வாண்மைகேளாய்
　　அடிநாபி பாதாங்கள் சமன்கொண்டேகி
வாமென்ற வாயுகளை மிஞ்சொட்டாமல்
　　மடக்கியே சமன்செய்து மருவப்பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீரன்னம்
　　சமன்செய்து சரீரமெல்லாஞ் சாரப்பண்ணும்
வாமென்ற வன்னமது புட்பராகம்
　　மகத்தான தெய்வமா தித்தனாமே.''

(யூகிசிந்தாமணி.)

(4) நான்காம் நிலை (அனாகதம்) : இதன்நிலை மணிபூரத்திற்குமேல் பன்னிரண்டு அங்குலத்தில் நடுமார்பின் இடதுபக்கமுள்ள தமரகத்திடமாக இருக்கும். இதனை இருதயக் கமலமென்பர். வடிவு முக்கோணம். இதன் நடுவில் பன்னிரண்டிதழ் உடைய பூவும் அதனில் '' சி '' யும். ருத்திரன் பார்வதியும் கடவுளாக இருப்பர். அதைச்சுற்றிப் பன்னிரண்டு எழுத்தும் மந்திரத்திற்காகக் குறிக்கப்படும்.

" நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக்கு இருவிர லுள்ளே
கடலித்திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே."

(திருமூலர் திருமந்திரம்.)

மேல் நோக்குக்கால் (உதானவாயு).

" ஏமனா முதானனிட வேற்றங்கேளாய்
எழிலான வுதரவக் கினியெழுப்பிப்
பூமனா மன்னசா ரந்தனைத்தான்
பொருந்தவே சமீபித்து நிறுத்திவைக்கும்
காமனா யெடுப்பித்துங் கலக்கிவைத்தும்
கலக்கியே வருந்திவைக்கும் வளப்பமாகும்
வீமனா மின்னினிட வன்னமாகும்
விளங்கியதோ ரக்கனிதான் றெய்வமாமே."

(யூகிசிந்தாமணி.)

(5) ஐந்தாம் நிலை (விசுத்தி) : இது மேற்கூறிய நிலைக்குப் பத்து விரற்கடைக்கு (கழுத்தில்) உள்ளது. அறுகோணவடிவும் அதில் பதினாறிதழ் உடைய பூவும் அதனுள் "வ" வும் நிறம் கருமையும், கடவுள் மகேச்வரியும் பதினாறு எழுத்துகளை மந்திரமாகவும் அமைத்துள்ளது.

" நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்து தலைப்பெய்துந்
தேகத்துக் கொன்றுஞ் சிதைவில்லை யாகுமே."

(திருமூலர் திருமந்திரம்.)

உயிர்க்கால் (பிரணவாயு).

"............................
............................
............................
............................

பிறமையா மதின் பிரிவு பிராணவாயு
பெருமூலா தாரத்தின் கட்டோன்றித்தான்
உறமையா மவையெனு மந்திரத்தால்
ஓங்கார முதலெழுத்தை யுன்னித்தானே.

உன்னியே மேலெழுந்துபனி ரண்டங்குலந்தான்
உயர்ந்தவெட் டங்குலந்தான் மீளவாங்கி
நன்னிநா லங்குலந்தான் பாழிற்பாயு
நலமான குணமெல்லாம் பிராணவாயு
பன்னவே நீலவன்னந் தேவதைதான்சந்திரன்
பலபலவாம் பொசிப்பெல்லாஞ் சீரணமதாக்கும்
முன்னநா ழிகைக்குமுந்நூற் றறுபதுசுவாச
முயர்ந்தாநாள் ஒன்றுக்கு மூச்சைக்கேளே.

நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத்தறுநூறு
நலமான சுவாசந்தா னெழுந்திருக்கும்
கோளென்றிப் பதினாலா யிரத்து நானூறு
குவித்த மூலாதாரத் துள்ளொடுங்கும்,
பாளொன்றி யேழாயிரத் திருநூறுசுவாசம்
பாழினிற் பாய்ந்திடுமென் றறிகபின்னை
ஏளென்றி யிதனையே யுட்சாதித்தால்
எப்போதும் பாலராய் இருக்கலாமே.''

(யூகிசிந்தாமணி.)

(6) ஆறாம் நிலை (மேல் நிலை) (ஆக்கினை, ஆக்ஞை): இது கழுத்துக்கு மேல் பன்னிரண்டு விரற்கடை நெற்றியின் புருவத்தின் நடுவில் வெளியாய், வீணாத்தண்டின் முடியுமாய் நின்று, பொன்னிறம் பெற்று, மூன்றிதழ் பெற்ற பூப்போல். அதன் நடுவில் '' ய '' அதன் நடுவில் சதாசிவமும் மனோண்மணியும் கடவுளாக அமைந்து நிற்கும் நிறம் மேக நிறமாம்.

'' எருவிடும் வாச லிருவிரன் மேலே
கருவிடு வாசலுக் கிருவிரல் கீழே
உருவிடச் சோதியை யுள்கவல் யார்க்குக்
கருவிஞ் சோதி கலந்துநின் றானே.''

"குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிரு ணீங்கி விகிர்தனை நாடுஞ்
சிறப்பரு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி யமரரு மாமே."

(திருமூலர் திருமந்திரம்.)

இவ்வாறு ஆறாக வகுக்கப்பட்ட நிலைகளில் மேல் நிலை நீங்கலாக, மற்ற ஐந்து நிலைகளும், ஐந்து காற்றுகளும்(பஞ்ச வாயும்) வாழுமிடமும் ஒன்றாகவே கொள்ளக்கிடக்குமாதலால், ஓக நிலையைக் கொள்ளும்போது ஆராதாரமெனவும், மருத்துவத்தில் வரும்போது வாயு எனவும் கொள்வர். ஆதல்பற்றியே நிலைகளைக் கூறுமிடத்தே கால்களையும் கூட்டிக் காட்டியுள்ளோம்.

ஐம்பொருள்களில், காற்று ஒன்றே இயற்கையாக எல்லாப் பொருள்களையும் இயக்கும் தன்மையுடையதால், உடலில் அமைந்த எல்லா உறுப்புகளையும் இயக்குந்தன்மையுடைய நரம்புக் கூட்டங் களை (nerve plexes) சித்த மருத்துவர், கால் (வாயு) எனக் கொண்டனர் போலும்.

மந்திரம் என்னும் இப்பகுதியில் விளக்கிய யாவற்றையும் படத்தால் விளக்கிக் காட்டியது கொண்டறிக :

(7) மனமடக்கல் (தந்திரம்) :—தந்திரமென்பது தன்+திரம் என பிரியும். தனதுதிறத்தால் ( will power ) ஐம் புலன்களைச் சிதறவொட்டாமல், தம் நாட்டத்தை வைத்து மந்திர எழுத்துக்களை வாயால் ஓதாமலும், ஐம்பொறிகளால், ஐம்புலன்கள் செதிர்ந்து போகாமல் படியும் நிலைத்து ஒவ்வோர் நிலைகளையும் தன் வழியாக்கிச் சிவநிலை எய்தற்கான வழியாம். இதனை,

"வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திறவாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே.

எண்ணா யிரத்தாண்டு யோக மிருக்கினும்
கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை.
உண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிற்
கண்ணாடி போலே கலந்திருந் தானே."

மந்திரம், தந்திரம் என்னும் இவ்விரண்டினில் மந்திரத்தைப் பெரிதும் கைக்கொள்பவர் வேதாந்திகளாவர். தந்திரத்தைக் கைக்கொள்பவர் சித்தாந்திகளாவர் எனக் கூறுவாராயினும் மந்திரப் பழக்கத்தையே எம்மக்களும் எளிதில் பழகி நற்பயனை எளிதில் பெறக்கூடும். அன்றியும் மருத்துவத்தில், நோயுற்றான் மனநிலையும் கெட்டு, சிதறி இருக்குமாதலால், தன் திறம் எவ்வன்மையுடையதேயாயினும் அதனை அடக்கமுடியாதாகையால், மந்திரப் பழக்கமே மனதைச் சிறிது சிறிதாக அடக்கி நோயை நீக்குமாகையால் மருத்துவத்தில் மந்திரத்தைச் செறித்தனர்போலு மென்க.

(8) இரண்டறக் கலத்தல் (சமாதி) :

"கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப்பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே.

காரிய மான வுபாதியைத் தான்கடந்
தாரிய காரண மேழுந்தன் பாலுற
வாரிய காரண மாயத் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே."

எனத் திருமூலர் கூறியதில், மூச்சை உள்ளடக்கி கற்பனையற்றுக் கொண்ட பொருளை (சிவத்தை) நாடி, உடல் உணர்வைத்தொலைத்து, சிவத்தோடு இரண்டறக் கலந்து சிவநிலையெய்தலே சமாதியாம்.

இவ்வாறு கூறிய எட்டு நிலைகளையும் கடந்தோர் எண்வகைச் சித்திகளையும் அடையலாம். அன்றியும் மந்திரத்தில் கூறிய கீழைந்து நிலைகள் இடமும் ஐந்து காற்றுகளும் இடமும் ஒன்றே எனக்கூறியதால் உடல் இயக்கத்திற்காக அமைந்த கால்களில் (வாயுகளில்) மன்றர் பலவேனுங் கடுமாயின் அந்நிலைகளுக்

கேற்ப நோய்கள் உண்டாகுமாகலின் அந்நோய்களைப் போக்குவதற்கு அக்கால்களை (ஆராதார நிலைகளை மூச்சடக்கலால் ஓக வழிகளால்) போக்கி உடலை வளர்க்கும் வழியாம் (உபாயமாம்).

அவிழ்தம்.—அவிழ்தமென்னுஞ் சொல், அவிழ்+தம் என, அவிழ்தல் தன்மையுடையது எனக் கொள்ளக்கிடக்கும். பிணிக்கப்பட்ட குற்றங்கள், ஐங்காற்கள், ஏழு உடற்கட்டுகள் ஆகியவைகளை (நோய்களை) அவிழ்க்கும் தன்மையுடைவைகளே அவிழ்தமாம். இத்தமிழ்ச் சொல்மரீஇ "அவுஷதம்" "ஔஷதம்" எனவாயிற்று ஆயுள் வேதியர் "அவுஷதம்" என்னுஞ் சொல் "ஒஷதி" என்னும் சொல்லிலிருந்து வந்ததென்பர். இவ்வாறாகப் பொருள் கொள்ளின் "ஓஷதி" என்பதற்குப் பொருள் "ஒஷதி பலாந்தகே" என்பர். இதன் பொருளைத் தமிழில் கூறின் ஒரு ஆண்டில் (வருஷத்தில்) தோன்றி, பலன் தந்து அழியும் புல் பூண்டு என கொள்ளக் கிடக்கும். இப்புல் பூண்டினைச் சிற்றுயிர்களாகிய நாய், பூனை, கீரி முதலிய சீவப் பொருள்கள் பிணியுற்றபோது உண்டு வாந்தியெடுத்து நோயினைப் போக்கிக்கொண்டவாறு மக்களும் அதனை மருத்துவத்தில் கொண்டனரெனக் கொள்ளக்கிடக்குமேயன்றிப் பெருமையைத் தாரா.

சித்தர்கள் இவ்வாறாகப் பொருள்படுத்தாது பிணிக்கப்பட்டதை அவிழ்ப்பதே "அவிழ்தம்" மருந்தெனக் கொண்டனர். அம்மருந்தினையும் மூன்றாகக்கொண்டு முதல் இரண்டினை உள்ளுக்குக் கொடுக்காமலே நோயைப் போக்கிக் கொள்ளவும் கடையதை உள்ளுக்குக் கொடுத்து நோயைப் போக்கிக் கொள்ளவும் கொண்டனர். உள்ளுக்குக் கொடுக்கும் மருந்தினை மீண்டும் மூன்றாகக் கொண்டனர்.

மணி, மந்திரமிரண்டும் எல்லா மக்களும் எளிதில் பெறக்கூடாதாகையால், அவிழ்த முறைகளையும் கூட்டியுள்ளனர். இதனையே மருந்து அவிழ்தம் எனச் சிறப்பாகக் கூறுவர். அவிழ்தம் என்பது புல், பூண்டு மட்டும் அன்று. இதனை ;

"கற்பங்க ளாதி கழறு மருந்துமுறை
விற்பனங்களாக விளங்குதற்கு—முற்பங்கு
மூலிக் கருப் பொருள் மூலப் பொருள்வகைகள்
வேலிக்கு நேராகு மே."

என்றார் தேரையர்.

உடல் நோய்வாயில் ஈடுபட்டழியாது உடலைக் காக்க வந்த காய கற்பங் களெனக் கழறும் மருந்து முறைகளில் (அவிழ்தத்தில்) பெரும்பாலும் (மூன்று பங்கு) மூலி (வேரையுடைய) புல், பூண்டு, செடி, கொடி, மரங்களும், உயிர்ப் பொருள்களும் அதற்குப் பின் தரைபடு பொருள் களாகிய இரும்பு, செம்பு, பொன், வெள்ளி, ஈயம், இரசம், பாடாணம், உப்பு, முதலியவைகளைக் கொண்டு மருந்து முறைப்படி செய்துண்ணி னும், அல்லது முதல் இரண்டினை உணவு வகையாகக் கொண்டா கினும், அல்லது மருந்து வகையான் குடிநீர், சாறு, பொடி, இளகம் முதலியவைகளாகச் செய்து உட் கொள்வதும், எண்ணெய் வகைகளாகச் செய்து உள்ளுக்கும் வெளிக்குமாக வழங்கி நோயைப் போக்குவதாம். கடையதாகிய தரைபடு பொருள்களைப் பற்ப செந்தூரங்கள் முதலியவை களாகச் செய்து வழங்குவதுமாம்.

சித்த மருத்துவ நூற்கள் உடலை வளர்த்தற்காய முறைகளையும், நோயுற்றுத் துன்புறாது காத்தற்குமான முறைகளையும் விளக்கியுள்ள தோடு நோயறி வகையான் நாடும் வழிகளில், மெய்க்குறி நிறந்தொனி விழிநா இருமலம் கைக்குறி, நாடி சிறுநீர், எரு இவைகளின் இயலினை பலவாற்றான் விரித்துக் கூறியுள்ளன.

சுருக்கம் : பழமையில் பழமையான தென்னாடே, மக்கள் தோற் றத்திற்கு முதலாய் நின்று, நாளடைவில் மக்கள் எழுதவும் படிக்கவுமான திறன் பெற்று இலக்கண முதலியவைகளைப் பன்னிரண்டாயிர மாண்டு கட்கு முன்பே, குமரி நாவலந் தீவு கூடிய தமிழ் நாட்டரசன், செங் கோன் ஆண்டு வரும் நாளில் அமைத்த புலவர் குழாம் முதன் முதல் அமைத்துப் பல நூற்களை எழுதுவிக்கத் தமிழ் சிறந்து ஓங்கிற்றே என அறியக் கிடக்குமாயின், தமிழ் மொழியொன்றே எம்மொழிக்கும் முற் பட்டதென மொழிதல் மிகையாகாதாகும். அன்றியும், தொல்காப்பியம் என்னும் பண்டைய நூல் வேதத்தை நான்காகப் பாகுபாடு செய்த வியாசர்க்கு முன் வரையப்பட்டது என ஆராய்ச்சியாளர் கூறுதலும், பாணினி இலக்கணம், சிவன் கூறிய சூத்திரம் எனக் கூறுதலுமே இதற்குச் சான்றாகும்.

தமிழ் மக்களின் வாழ்வு, அன்பே சிவமெனவும் எவ்வுயிரும் தம் உயிரெனவுங்கொண்டு தமிழ் நாட்டை நான்காக மக்களின் தொழிற்கேற்ப, பங்கிட்டு, குலவேறுபாடின்றிக் கலந்து திருமண முதலியனவற்றில்

வேற்றுமை இல்லாது வாழ்ந்தனர். நாகரீகத்தின் மிகச்சீர்மை அடைந்த மக்கள், அந்நாளிலேயே அறுபத்து நான்கு கலைகளையும் நன்காராய்ந்து சிறந்தோங்கி, கப்பலில் கடல் கடந்து வாணிபம் செய்து, பயிர்த்தொழில் செய்து, பொருளீட்டி அறம் செய்தாரெனவும், இல்லறப் பேற்றை இல்லக் கிழவனுங் கிழவியும் ஒன்றுபட நடத்தித் துறவறப் பேறடைவர் எனவும், தமிழ் நாடு கொண்டதற்கு மாறு பாடாக வட நாட்டினர் இல்லற வாழ்க்கையில் தொண்டு புரிந்துவந்த கிழவியை விடுத்து, கிழவன், துறவு கொள்வதை நோக்கின் தமிழர் வாழ்நாள் எத்தகையது என அறியக் கிடக்கும்.

அந்நாளில், தமிழ் மக்கள் சீரும் சிறப்புமோடு வாழ்ந்தாராயினும், சிற்றின்பத்திலேயே ஈடுபட்டில்லாது பிறந்ததின் பயன்,இறந்ததிலும் பயன் வேண்டுமென, ஆக்கியோன் இயல்புயாது எனச் சிந்தித்து பன்னிரண் டாயிரமாண்டுகட்கு முன்பே சைவப் பேரறிவியலை (ஆகமங்களை) எம் மக்களும் அதன் பயனைப் பெறுமாறுசெய்து வைத்தனர். இவ்வாகம நூற்கள் சிவப்பேரறிவியலைக் கூறியதோடு சிவ நிலையெய்தற்கான வழியினைத்தேடுதற்கும் அவ்வாறு தேடும் வழியினை அறிதற்கான அளவை யினையும் கூறினர். இவ்வளவைகளாலும் மருத்துவ நுட்பங்களை அறியலாம். சைவர் கொண்ட சிவம் (கடவுள்), அங்கிங்கு எனாதபடி, எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாகி, அருளோடு தங்கும்படிக்கு (உண்டைப் பகுதிகள்), இச்சைவைத்து உயிருக்குயிராய், தழைத்து நின்றது எனத் தாயுமானவர் கூறியதில், இந்நாள் பருப்பொருள் இயல் பேரறிஞர் (Physicst) உண்டைப் பகுதிகளின் இயக்கங்களை அறிதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே தென்னாட்டார், அவ்வியக்கங்கள்யாவும் சிவசக்தி எனக் கொண்டதை நோக்கின் அவர்களது பண்டை நாள் அறிவு என்னாட்ட வர்க்கும் பயனளித்தது எனக் காட்டும்.

அவ்வாறே, சித்தமருத்துவமும் சைவத்தையொட்டி, பிறவாநிலை யெய்தற்கு வேண்டிய வாழ்நாளைப் பெறுதற்பொருட்டே பிறந்தது. இதன் நுட்பங்களைக்காணின் இந்நாள் மருத்துவரில் (Modern Medical Men) உடலமைப்புப் பேரறிஞர்களும் (Anatomists) உடலியக்கப் பேரறிஞர்களும் (Physiolog sts) வியப்புறுவர் என்பது மிகையாகா.

சித்தர், மருத்துவத்தில், உயிரை (ஆன்மாவை), சிவத்தன்மைய எனக்கொண்டு, சிவன் எங்கும் உள்ளதாகையால், உடலில் உயிராய் உள்ளது ; அவ்வுயிர் சிவனைப் போல் உடலிலிருந்து ஆக்கல், காக்கல், அழித்தலாகிய முச்செயலையும் பெற்றுப் பருவுடற்கான பொருள்களை ஆக்கி, காத்து, அழிக்கும் என்றும், அச்சக்தியை வளி (வாதம்), அழல் (பித்தம்), ஐயம் (கபம்) என்றும் வழங்கியதோடு ஐம்பொறி புலன்களையும், அறிவையுங்கூட்டி, இவைகளையும் உடல் இயக்கத்தைப் பெறுதற்காக ஐங்கால்களையும் சேர்த்தனர்.

மந்திரத்திற்காக அமைத்த ஆறு நிலைகளில் மேல் நிலை நீங்கலாக மற்றும் ஐந்து நிலைகளும், நோய் அறிவிப்பதற்கு அமைத்த ஐந்து கால்களும், இயங்குமிடம் ஒன்றாகக் கொண்டது ; உடலை வளர்ப்பதற்காக நோயின்றி வாழ்ந்து ஒக வழி (மந்திர) நாடி, கீழ் நிலையிலிருந்து மேல் நிலைவரையுள்ள நிலைகளைப் படிப்படியே கடந்து சிவநிலையெய்தற்கும், ஐந்து கால்களும் தத்தம் தொழிலில் மிகினும் குறையினும் நோய் செய்யுமாகையால், அவ்வவ் நிலைகள் இயற்கை நிலையில் இருக்கும்படியாக உணவு வகைகளைக்கொள்ளவேண்டுமென அறிவித்தும், அவைகள் பிணிக்கப்படின் அவைகளின் நிலைக்குத் தகுந்தாற்போல் மருத்துவம் செய்ய வேண்டுமெனவும் இவ்வாறு இணைத்தனரென்க. இந் நிலைகள் இந்நாள் மருந்து நூல் (Modern medicine) கூறும் வீணாத் தண்டு வழியே வரும் நரம்பும் (Spinal cord), அதனைப் பற்றிய நரம்புக் கூட்டங்களாம் (Nerve plexe).

சித்தர்கள், அதனாலன்றோ அந்தந்த நிலைகளில் ஏற்படும் கேட்டால் விளையும் நோய்களை அந்தந்த நிலைகளுக்கமைந்த கால்களைப் பாகுபாடு செய்தனர். அவ்வாறே அணிந்துரை வரைந்த இந்நூலிலும் அமைத்தனம். சுர நோய் எந்நோய்க்கும் தொடர்பாகுமாகையால் சுரம், முப்பிணி, அம்மை ஆகிய மூன்றினை முன்னமைத்துள்ளது.

மேல்நாட்டு அறிஞர்கள் யாவரும், நம் நாட்டவரும், தமிழ் நாடு, தமிழ் மொழி, கலை வளர்ச்சி, நாகரிகம், சைவப் பேரறிவியல் நூற்கள், மருத்துவ நூற்கள் முதலியவைகள்யாவும் எந்நாட்டிற்கும் முற்பட்டதெனக் கொள்வாராயினும், சிலர் இதனை ஒப்புக்கொள்ளார். அஃது இன்றைக்குக் கிடைக்கும் சைவ நூல், மருந்து நூல் முதலியவற்றில்

காணும் இரு மொழிக் கலப்பாலென்க. இஃது எவ்வாறாயினும் தமிழ் நூற்களின் நுட்பங்களை நன்காராயின், அவைகளில் நிறைந்துள்ள பழைய உண்மைப் பொருள்கள் மற்ற எந்நாட்டினரும் காணாப் பொருள்கள் நிறைந்துள்ளமையின் தெள்ளத் தெளிந்த அறிஞர்கள், தென்னாடே எந்நாட்டிற்கும் முற்பட்டது எனவும், அதில் தோன்றிய மொழி, கலை, கலைப் பெருக்கு, நல்வாழ்வு, பேரறிவியல், சித்த மருத்துவம் யாவும் முற்பட்டதேயன்றி மிகச் சீரும் சிறப்புமுடையு தெனவும் மகிழ்வர்.

வேண்டுகோள்—செஷ்மூர் என்னும் ஜர்மானியப் பாதிரி அவர்கள் வரைந்த, சித்தப் பேரறிவியலில், ஓரிடத்தில் மற்றப் பாதிரிகளுக்கு "............வட மொழியில் (சமக்கிருதத்தில்) வரைந்த பேரறிவியலை (Ph losophy) ஆராய்வதைச் சற்றடக்கி, தென்னாட்டில் தோன்றிய பேரறிவியல்களைப் பார்க்க, அவைகளுள் இருமொழிக் கலப்பாகக் காணப்படினும் அதில் பல திறம்பட்ட அன்னாட்டிற்குரிய சிறப்பான பெரும் பொருள்கள் அழகாக அமைந்துள்ளதைக் காணலாம் எனக் கூறியது" சைவ சித்தாந்த நூற்களில் அடங்கிய உண்மைப் பொருள்கள் எந்நூலிலும் காணக் கிடைக்காதிருப்பதாலன்றோ?

இவ்வாறு அன்னவர் கூறியது தென்னாட்டில் தோன்றிய நூல்களை ஆராய்ச்சி (Research) செய்யும்படி வேண்டிக்கொண்டார். அன்னவர் கூறியதற்கு மாறுபாடாக, வடமொழி (சமக்கிருதம்) வடநாட்டு மருத்துவம் (ஆயுள் வேதம்) முதலியவைகளை ஆராய்ச்சி செய்து (Research) அதனை மேன்மேலும் பெருக்க, வடநாட்டிலுள்ள பல மாகானங் (States) களிலுள்ள பெருமக்களும், அரசினரும் இருக்க, நம் நாட்டில் போற்றத்தக்க செம்மையான மொழி நூற்கள், சைவப் பேரறிவியலும், சித்த மருத்துவமும் இருக்க, நாம் அவைகளை நன்காராயாது, பிற நாட்டின் கலைகளைப் போற்றிப் பெருமையடைவதின் பயன் யாது?

"'nor their labour be restricted to Sanskrit Text. In South India there exists a Philosoph cal literature which though it may show clear trace of Sanskrit influence contains also original indigenous elements of great, beauty and great importance of historical urposes."

நமது மருத்துவத்தில் நிறைந்துள்ள உண்மைப் பொருள்களை இது வரையில் நன்காராயத் (Research) துணியாதிருப்பது நமதின் ஊக்கக் குறைவைக் காட்டுமன்றோ ! ஆதலின், இனியாகிலும் சித்த மருத்துவத்தில் நிறைந்துள்ள பெரு மருந்துகளையும், அதன் நுட்பங்களையும் நன்காராய்ந்து நம் நாட்டின் சிறப்பையும், மருத்துவ முதலான பெருமைகளையும் ஆராய்ந்து அதன் பெரும் பலனைப் பெற, நம். அரசியலாரும், மக்களும் ஊக்கம் கொள்ளவேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

# பொருளடக்கம்.


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | சுரம் | 1–105 |
| 2. | முப்பிணி | 105–145 |
| 3. | அம்மை நோய் | 145–167 |
| 4. | சுரக்கோள் | 167–186 |
| 5. | குரற்கம்மல் | 186–191 |
| 6. | மூக்கடைப்பு (பீனசம்) | 191–200 |
| 7. | குருதியழல் (இரத்தபித்தம்) | 201–210 |
| 8. | இருமல் (காசம்) | 210–226 |
| 9. | இரைப்பு (சுவாசகாசம்) | 226–232 |
| 10. | இளைப்பு நோய் | 232–242 |
| 11. | உளைமாந்தை | 242–245 |
| 12. | தமரக நோய் (இருத்ரோகம்) | 246–252 |
| 13. | சுவையின்மை (அரோசகம்) | 252–255 |
| 14. | நீர் வேட்கை (தாகம்) | 255–257 |
| 15. | செரியாமை (அசீரணம்) | 258–261 |
| 16. | விக்கல் | 261–267 |
| 17. | வாந்தி | 267–273 |
| 18. | மாந்தம் | 273–279 |
| 19. | குன்மம் | 279–299 |
| 20. | சூலை | 299–314 |

பக்கங்கள்


21. மண்ணீரல் நோய் .. .. .. .. 315–317

22. கல்லீரல் நோய் .. .. .. .. 317–323

23. வெளுப்பு நோய் (பாண்டு) .. .. .. 324–331

24. ஊதல் நோய் (சோபை) .. .. .. .. 332–341

25. மஞ்சள் நோய் (காமாலை) .. .. .. .. 341–350

26. பெருவயிறு (மகோதரம்) .. .. .. .. 350–374

27. குடற்பிடிப்பு நோய் (ஆநாகம்) .. .. .. 375–378

28. பெருங்கழிச்சல் (அதிசாரம்) .. .. .. .. 378–388

29. நிணக்கழிச்சல் (கிராணிபேதி) .. .. .. 388–399

30. கடுப்புக் கழிச்சல் (சீதக்கழிச்சல்) .. .. .. 399–403

31. ஊழி நோய் (வாந்திபேதி) .. .. .. 403–412

32. எருவாய்முளை (மூலம்) .. .. .. 412–437

33. சிறு நீர் நோய்கள்—

(அ) நீரருக்கல் .. .. .. .. .. 437–438

கல்லடைப்பு நோய் .. .. .. 438–445

நீரடைப்பு .. .. .. .. .. 446–449

நீர்க் கட்டு .. .. .. .. .. 449–451

சொட்டு நீர் .. .. .. .. .. 452–453

நீர்ச்சுருக்கு .. .. .. .. .. 453–457

வெள்ளை (வெட்டை பிரமேகம்) .. .. .. 457–470

(ஆ) நீரினைப் பெருக்கல் நோய் .. .. .. 470–485

நீரிழிவு நோய் .. .. .. .. .. 485–497

தெளி நீர் .. .. .. .. .. 498–499

வெண்ணீர் .. .. .. .. .. 499–500

நீர்க்கட்டி நோய் .. .. .. .. .. 500–507

பக்கங்கள்

34. குடிவெறி (மதாத்தியம்) .. .. .. .. 508–511

35. செருக்கு நோய் .. .. .. .. .. 512–513

36. வெறி நோய் .. .. .. .. .. 513–520

37. மயக்க நோய் .. .. .. .. .. 520–524

38. வலிநோய் .. .. .. .. .. 525–545

39. வளிநோய் (வாதநோய்) .. .. .. .. 545–592

பக்கவாயு .. .. .. .. .. 593–595

கீல்வாயு .. .. .. .. .. 595–615

40 அழல் நோய் .. .. .. .. .. 615–640

41. ஐய நோய் .. .. .. .. . 641–652

42. பெருநோய் (குட்ட நோய்) .. .. 653–672

# சித்த மருத்துவம்

## சுரம்

சுரம் என்னும் சொல், சுர்+அம் எனப் பிரிக்கப்பட்டு, சுர்—சுடுதல், அம்—உடையது; சுடுதலையுடைய நோய் என்று பொருள் பயப்ப தாகும் என ஒருவகையான் தெளிதலாகும்.

தேரன் ''குடல்தன்னில் சீதமலாது சுரமும்வாராது'' என்றதில் சுர நோய் வருவதற்கு முதல் முதல் இரைப்பையில் சீதம் (ஆமம்) பெருகி அதன் செய்கையால், வெப்பு (சுர்) மிகுந்து உண்டாய் நோயுற் றாற்கும் நோய்தீர்ப்பாற்கும் அதனை அறியும்படி செய்தலால் ''சுரம்'' எனப் பெயர் பெற்றதென்று மற்றோர் வகையாற்றெளிதலாம்.

இங்குத் தன்னிலை திரிந்த சீதமே, வெப்பத் தோற்றத்திற்கு முதலாய் நின்றதென்று இயம்பியிருக்க அந்நோய்க்குப் பெயரிடுங்கால், தன்னிலை திரிந்த சீதத்தை முதன்மைப் படுத்தாது வெப்பத்தை முதன் மைப் படுத்தியதெதற்கோவெனின், வெப்பத்தினால் தன்னிலை திரிந்த சீதத்தின் நிலையை அறிவித்தற்பொருட்டேயாம்.

சுரம் என்னும் சொல்லுக்கு இத்தகைய பொருள் பல இருப்பினும் சுர் என்னும் பொருளுண்டோ? என ஓர் ஐயம் எழலாம். இதன் உண்மையை நிலங்களின் பாகுபாடுகளைக்கூறும் அகப்பொருளில் சூட்டை யுடைத்தான பாலை நிலத்திற்குச் ''சுரம்'' என்னும் பெயரை யமைத்திருத்தலைக் கொண்டறிக. ஆகவே, நிலங்களில், தனக்குச் சிறப்பாக வெப்பத்தைப் பெற்றிருக்கும் இந்நிலம் சுரம் எனப் பெயர் பெற்றதுபோன்று, நம் உடலிற்றோன்றும் நோய்களில் வெப்பைச் சிறப்பாகப் பெற்ற இந்நோயும் ''சுரம்'' எனப் பெயர்பெற்றதாகும்.

இதனை :

சுரநிலம் போல சுடுநோய் சுரமென்
றுரைப்பர் செறிகனத் துண்டா மனலம்
நரம்பின் வழியே தண்ணீர் உடம்பின்
பெருகும் வெப்பம் பிழைசெய் நோயே.

என்பதாலறிக.

வேறு பெயர் : வெம்மை, வெப்பு நோய், காந்தல், காங்கை, காய்ச்சல், சூடு, அனல், பிறப்பிலும் இறப்பிலும் தொடரும் நோய், பம்மல் நோய் எனப்பல பெயர்களுண்டு. அதனை :

''வெம்மை வெப்பு வெறுக்குங் காய்ச்சல்
தும்மாக் காங்கை சூடு தழலனல்
சும்மைப் பிறப்பில் இறப்பில் தொடர்நோய்
பம்மல்நோய் காந்தல் பலபெயர் சுரமே.''

என்பதால் அறிக.

இயல் : உடலின் இயற்கைச்சூடு தன்னளவுக்கு மிஞ்சி எழுந்து, கண் எரிதல், வாய் குமட்டல், உடல் நோதல், வாந்தியாதல் ஆகிய பல குறிகளைத் தோற்றுவிக்கும்.

நோய் தோன்றும் வழி :

பண்டுள்ள மலத்தி னாலும்
பழகிய சீதத் தாலும்
உண்டியின் பொல்லாங் காலு
ஒண்டொடி போகத் தாலும்
கண்டுயி லாமை யாலும்
கடுகிய வோடத் தாலும்
மிண்டிய சுவையி னாலும்
வெப்புவந் தணுகுங் காணே.

ஈங்கெழு கோபத் தாலும்
இளவெயிற் காய்த லாலும்
தாங்கொணாச் சுமைக ளாலும்
சருகிலை யூற லாலும்
ஓங்கிய பசியி னாலும்
உண்டிமே லுண்டி யாலும்
தேங்கிய மலக்கட் டாலும்
தீயவெப் பணுகு மன்றே.

கடுவெயில் மழைக ளாலும்
கதறிய குரலி னாலும்
விடமது படுத லாலும்
வெருவிய வேகத் தாலும்

முடிமிசை யெண்ணெய் தேய்த்து
மூழ்கிய போகத் தாலும்
தடியடி படுகை யாலும்
சார்ந்திடும் வெதுப்புத் தானே.

பழவினை யாலு மெத்த
பசித்திருந் துண்கை யாலும்
குளிர்மைநீர்க் குணத்தி னாலும்
குவலய பேதத் தாலும்
இளகிய வுண்டி யாலும்
இதயத்தி னெண்ணத் தாலும்
உளமது உளைத லாலும்
உறுசுர மெய்துந் தானே.

(பொருள்) : எரு (மலம்) தடைப்படல், நாட்பட்ட ஐயம், உண்டியால் ஏற்படும் கெடுதிகள், மிஞ்சிய கலவி, பலவகைப்பட்ட நஞ்சுகள், துயிலின்மை, கடுமையான ஓட்டம், அதி சுவையுள்ள பொருளை உண்ணல், அதிகோபங் கொள்ளல், இளவெயில் கடுவெயில்களில் நடத்தல், தாங்கொணாப் பசியைப் பொறுத்தல், உண்டிமேல் உண்டி உண்ணல், தாங்கமுடியாச் சுமை சுமத்தல், கதறிக்கூவல், உடலிலெழும் பதினான்கு வேகங்களை அடக்குதல், எண்ணெய் தேய்த்து நீராடிய தினம் கலவி புரிதல், தடியடியை மேற்கொள்ளல், படுக்கை வேறுபடுதல், தான் செய்த பழவினைகள் சூழ்தல், மிக்க பசியில் வயிறு நிறையப் புசித்தல், அதி குளிர்ந்த நீரைப் பருகுதல், நாடுகளின் வேற்றுமையான் வாழல், கெட்ட எண்ணங் கொள்ளல், உள்ள மாறுபாட்டைதல் முதலிய செயல்கள் சுர நோய் தோன்றுதற்கான வழிகளென மேற் கூறிய பாக்களால் அறிக.

முற்குறிகள் : உண்ணும் எப்பொருளிலும் விருப்பமில்லாதிருத்தல், உடம்பு கனமாயிருத்தல், உடல் நிறம் மாறல், உடல் துவைத்தது போலிருத்தல், எப்பொருள் பட்டாலும் உடல் கூசல், உணவு செரியாமை, எப்பொருளிலும் வெறுப்பு, கொட்டாவி, மயக்கம், பிதற்றல் முதலியன உண்டாதல், நாச்சுவை யறியாமை, உடல் நடுங்கல், குளிர்தல், இரவில் தூக்கமின்மை, தொடை, கெண்டைச் சதை நோதல், உடல் முற்றும் குத்தல், குடைச்சல், அண்டையிலிருப்பவர்கள்மேல் வெறுப்பு, கண்களில் நீர் முட்டிமுட்டி வெளிப்படல், உடல் கடுப்பு, உடம்பு முறுக்குதல்

நாவறண்டுபோதல், ஊக்கமின்மை, இளைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்புச் சுவை உள்ள பொருள்களிலும், அவைகளைப்பற்றிப் பேசுதலிலும் விருப்பமில்லாமை, மனைவி மக்களிடத்துப் பகைமை, தலை கிறுகிறுத்தல், உடலில் வியர்வை தோன்றல், பாட்டொலி, வாய்ச்சிய ஒலி, காற்று, நீரின் வெம்மை, தண்மை, நிழல் இவைகளில் யாதொரு காரணமுமின்றி ஒருமுறை விருப்பும், மற்றொரு முறை வெறுப்பும் உண்டாதல் ஆகிய இக்குறிகளில் பலவேனும் சிலவேனும் சுரம் உண்டாவதற்கு முன்னர்க் காணப்படும். இவற்றைக் கீழ்க்காணும் பாவாலறிக.

"சுரத்தின் முற்குறி சொல்லக் கேண்மோ
விருப்பமெப் பொருளினு மேவுத லின்மை
உடல்பா ரித்தலும் நிறமா றுதலும்
உடன்மே லெவையு முறினுங் கூசல்
தின்னு முணவுகள் செரியாமை வெறுப்பு
மன்னுகொட் டாவி மயக்கம் பிதற்றல்
நாச்சுவை இன்மை நடுக்கல் குளிர்தல்
தூக்கமின்மை தொடைகெண்டை நோதல்
ஆக்கை குத்தல் அருகினர் வெறுப்புகள்
கண்ணீர் முட்டல் கடுத்துடல் முறுக்கல்
தண்ணீர் நாவிற் சுரவா திருத்தல்
மனக்கிள ரின்மை மயிர்ச்சிலிர்ப் பாதல்
கனபலக் குறைவு கண்டிட லிளைப்புப்
புளிப்புப் புறைப்பில் புகுநல் லிச்சை
இனிப்பிற் பேச்சில் இட்ட மின்மை
மனைவியார் மக்கள் மாட்டுப் பகைமை
தலைகிறு கிறுப்பு தடிவியர் வின்மை
இசைபல் லியவொலி யெரிவளி நீரில்
வெம்தண் நிழலில் விருப்பு வெறுப்புக்
காரணன் வழுவரு முயர்நற்
றாரணி மருத்துவர் தமக்குரைத் தனரே."

நோய் எண் .—சுரத்தின் பிரிவு பலவாம். ஆயினும், எல்லாச் சுரங்களும் வளி முதலான முக்குற்றங்களில் ஒடுங்கி, தனிக்குற்ற அளவாகவும், கலந்த குற்றங்களின் அளவாகவும் அறுபத்துநான்காக விரியும்.

இவ்வறுபத்து நான்கையும், வாதத்தில் இருபது, பித்தத்தில் இருபத்து நான்கு, ஐயத்தில் இருபதுமாய்ப் பிரிப்பர். இவற்றுள் வாதத்தில் எட்டு, பித்தத்தில் பத்து, கபத்தில் ஒன்பது எளிதில் தீரக் கூடாதனவாம். இவற்றைக் கீழ்க்காணும் செய்யுட்களால் அறிக.

'' சுரமொடு லட்ச பேதம்
தொகுத்திடி லெவர்க ளாலும்
கருதிட முடியா தென்று
கண்டதைச் சுரக்கச் செய்து
முருகிய வாத பித்த
கபமிவை மூன்றிற் றோன்றி
விரியுமச் சுரத்தை யானும்
வியப்புட னுரைத்த தாகும்.

ஆகுமிச் சுரந்தான் வாத
பித்தையந் தொந்திப் பாலும்
மேவிய வெட்டெட் டாகி
விரிந்திடு மென்பர் நூலோர்
வாகட மமைத்துச் சாத்தியா
சாத்ய மறுகு ணங்கள்
பாகென மருந்து தானும்
பகர்ந்தனர் பரிந்து காணே.

தானமாம் வாதந் தன்னில்
இருபது தழல்சேர் பித்தத்
தூனதி லறுநான் காகு
முறுமையி லிருப தாகும்
பானலங் கண்ணாய் முன்னோர்
பரிந்துறு வாதந் தன்னில்
கனமா வெட்டு வெப்பும்
சாத்திய மென்ன லாமே.

என்றிடு பித்தந் தன்னில்
இயற்றிரு பத்து நாலில்
வென்றியாய்ப் பத்து வெப்பு
மேவிய சேற்ப னத்தில்

ஒன்றுமொன் பதுவுந் தானே
யசாத்திய முண்மை யென்று
மன்றலங் குழலிக் கீசன்
வகுத்துரை செய்த வாறே.

(பொருள்) இவ்வாறாகத் தொகை கூட்டிய அறுபத்துநான்கு சுரங்களும், தன் வழியாகப் பிறப்பது ஐம்பத்திரண்டும், பிறவழியாகப் பிறப்பது பன்னிரண்டும் ஆகுமெனக் கூறுவாருமுளர்.

அவற்றுள் :

தன் வழிச் சுரங்கள் :

தன்வழிச் சுரங்கள் தம்மைச் சாற்றில்
மன்னிய வாத சுரம்பித் தசுரம்
பன்னிய கபசுரம் வாதபித்த சுரம்
பின்னிய வாத கபசுரம் பினுமே.

பித்த வாத சுரம்பித்த கபசுரம்
தத்து கபவாத சுரங்கற் பித்தனர்
கத்து வாத பித்த கபசுரம்
தொத்து மந்த சுரம்நளிர் சுரமே.

வெஞ்சுர மேனிச் சுரமு ளச்சுரம்
விஞ்சு முட்சுரம் மிக்க வெளிச்சுரம்
வஞ்சு விட்டு வருஞ்சுரம் விடாச்சுரம்

கொன்செ யூன்சுரம் கொழுப்புச் சுரங்கொல்
என்புச் சுரம்மூ ளைச்சுரம் விந்தனல்
துன்பத் தோற்சுரம் முறைச்சுரம் மயக்கனல்
பின்னு பிதற்றல் சுரநோய் புழுச்சுரம்.

மஞ்சட் சுரம்கா லைச்சுரம் பகல்சுரம்
துஞ்சுமா லைச்சுரத் தொடரி ராச்சுரம்
விஞ்சிய காலைச் சுரந்தீ வரட்சுரம்
மிஞ்சில் வேனிற் சுரமேப் பச்சுரம்.

கொடுவாந் திச்சுரம் கொட்டா விச்சுரம்
விடவிக் கற்சுரம் மிகுவியர் வைச்சுரம்
இடர்செய் தூங்காச் சுரமிரு மற்சுரம்
படரும் பழஞ்சுரம் பகற்கட் டிச்சுரம்.

பழுத்துச் சீழ்கொளும் பல்கொப் புளச்சுரம்
விழும நடுக்கற் சுரம்வீக் கச்சுரம்
கழிச்சற் சுரமெனக் கண்ணப் படுவன
பழிச்சு மைம்பத் திரண்டா கும்மரோ.

பிறவழிச்சுரங்கள் :

பிறவழிச் சுரங்கள் பிதுர்மோ துச்சுரம்
இருநா வேறு சுரமே வற்சுரம்
மருப்பூ தச்சுரம் மருந்துவே கற்சுரம்
திருகு விடச்சுரம் சினச்சுரம் பயச்சுரம்.

துன்பம் விளைக்கும் துக்கச் சுரம்பெண்
இன்பம் விழைக்கா மச்சுரம் பாவம்
மன்னும் தெய்வச் சினச்சுரம் யாழோ
ரின்சுரம் பன்னிரண் டெனப்படு மன்றே.

தன்வழியில் பிறக்கும் சுரங்கள் :

1. வாதசுரம், 2. பித்தசுரம், 3. கபசுரம், 4. வாதபித்தசுரம், 5. வாதகபசுரம், 6. பித்தவாதசுரம், 7. பித்தகபசுரம், 8. கபவாதசுரம், 9. கபபித்தசுரம், 10. கலப்புச்சுரம், 11. மந்தசுரம், 12. நளிர்சுரம், 13. வெஞ்சுரம், 14. மேனிச்சுரம், 15. உள்சுரம், 16. வெளிச்சுரம், 17. விட்டுவரும்சுரம், 18. விடாச்சுரம், 19. சாற்றசுரம், 20. செங்கறைச்சுரம், 21. ஊன்சுரம், 22. கொழுப்புச்சுரம், 23. என்புச்சுரம், 24. மூளைச்சுரம், 25. விந்துசுரம், 26. துன்பச்சுரம், 27. முறைசுரம், 28. மயக்கசுரம், 29. பிதற்றல்சுரம், 30. புழுச்சுரம், 31. மஞ்சட்சுரம், 32. காலைச்சுரம், 33. பகற்சுரம், 34. மாலைச்சுரம், 35. இராச்சுரம், 36. அதிகாலைச்சுரம், 37. தீவரட்சிச்சுரம், 38. அனல் சுரம், 39. ஏப்பசுரம், 40. வாந்திச்சுரம், 41. கொட்டாவிச்சுரம், 42. விடவிக்கல்சுரம், 43. வியர்வைச்சுரம், 44. தூங்காச்சுரம், 45. இருமல்சுரம், 46. பழஞ்சுரம், 47. கட்டிச்சுரம், 48. சீழ்ச்சுரம், 48. பல்கொப்புளச்சுரம், 50. நடுக்கல்சுரம், 51. வீக்கச்சுரம் 52. கழிச்சற்சுரம்.

பிறவழிச் சுரங்கள் :

1. மோதுச்சுரம் (அடி முதலியவைகளால் பிறக்கும் சுரம்), 2. நாவேறு (சாபச்சுரம்,) 3. ஏவல் சுரம், 4. சேர்க்கைச்சுரம், 5. பூத சுரம், 6. மருந்துவேகச்சுரம், 7. நச்சுச்சுரம், 8. சினச்சுரம், 9. பயச் சுரம், 10. துக்கச்சுரம், 11. காமச்சுரம், 12. தெய்வசினச்சுரம்.

மேலும், வளி முதலான குற்றங்கள் தத்தம் மாத்திரையில் மிகுதல் குறைதல்களால் உண்டான வேறுபாடுகளாலும், கால வேறுபாடுகளி னாலே உண்டாம் தட்பவெப்பங்களின் பலனாலும் நச்சுச்சுரங்களையும் பிறப்பிக்கும் அவைகள் பலவாயினும் ,முக்கியமானவற்றை ஈண்டு எடுத்துரைப்போம்.

1. உணவுச்சாரத்தின் வழியே எழுந்து உட்சுரமாகக் காய்கின்ற விடாச்சுரம்.

2. குருதி வழியே எழுந்த விடாச்சுரம் இது புறம்பாக வீசும்.

3. ஊனைப்பற்றி எழும் சுரம் தினமுறையாகக் காயும்.

4. கொழுப்பைப் பற்றி எழும் சுரம் மூன்ரு முறையாக வரும்.

5. மூளையிலும் என்பிலும் உண்டாகும் சுரம் நான்காம் முறை யாகத் தொடரும்.

அகக் காரணங்களாலும், புறக்காரணங்களாலும், அடிபடுதல் முதலியவைகளாலும் எழும் சுரமனைத்தையும் அறுபத்து நான்காகப் பிரித்தும், அவைகளில் முக்குற்றங்களின் திரிபால் விளையும் சன்னியைப் பதின்மூன்றாக வகுத்தும் கூறியிருக்கின்றனர்.

ஆயினும்,

“உற்றதோர் உடலின் கூறு
உறுப்புடன் விரவி நின்று
முற்றுமே நோய்கள் எல்லாம்
முதல்தனில் தோன்றும் போது
பற்றுமே வாத பித்த
சிலேற்பனந் தன்னில் ஒன்றைப்
பற்றியே தோன்று மென்று
பகர்ந்தனர் முனிவர் தாமே”.

(பொருள்) என அகத்தியர் குரு நாடியில் கூறியதில், நோய்கள் பிறப்பதற்கான வழிகள் பலவாயிருப்பினும், அவை தோன்றும்போது, வளி முதலாகிய முக்குற்றங்களில் ஒடுங்குமாதலின், இக்குற்றங்களின் அளவாயெழும் சுரங்களையும் அவைகளின் பத்திய பரிகாரங்களை மட்டுமே கூறுவாருமுளர்.

மற்றும் சிலநூலோர், சுரநோயை அறுபத்து நான்கு வகையான் வகுத்து, அவைகளுக்கான பெயரை அமைத்து அவைகளில் தோன்றும் குறிகுணங்களையும், மருத்துவ வகைகளையும் கூறுவர். ஆயினும் ஈண்டு யாவரும் கூறியதைக் கொண்டு திரட்டி வரைந்தனம்.

வளிச்சுரம் (வாதசுரம்) :

'' அங்கங் கருக்குமிசை யானனமா மேனியுளை
அங்கங் கருக்குமிசை யாதுணவா யங்கம்
பரமாகப் பண்ணுமுடல் பாவகநா நோய்வி
பரமாகப் பண்ணுநிகு பன் ''.

(தேரன் மக வெண்பா)

(பொருள்) உடல் முழுமையும் கருநிறமடைதல், முகம் நீர் கொள்ளல், சந்துகள் தோறும் குத்தலுண்டாதல், உணவு வேண் டாமை, தலையானது நீர் நிறைந்தது போலக் கனத்திருத்தல், ஆகிய குறிகளைக் காட்டி மிகு காய்ச்சல் உண்டாம்.

'' ஆகங் கறுக்குநோ யாகந் துடிக்கும்
ஆறாத் தீயென்ன மெய்யேகங் கொதிக்கும்
ஆருமெய் வெயர்திமிர் மீமந்தம் வாய்மூச்சு
ஆகுமே யிதுவாத மேலினி. ''

(தேரன்-கரிசல்)

(பொருள்) உடல் முழுமையும் கருத்து நொந்து துடித்து ஆறாத தீயைப்போல் மெய்முழுமையுங் கொதிக்கும். சுரம் விட்ட பின் உடல் வியர்த்துத் திமிர் உண்டாகும். வயிற்றுள் மிகுந்த மந்தம் உண்டாகி வயிறு உப்பி வாயால் மூச்சுவிடப்பண்ணும் என்னும் இக்குறிகள் வளி சுரத்திற்கு உரியனவாம்.

'' வாத சுரத்தின் குணங்கேளாய்
மயிர்க்கூச் செறிவோ டுடல்குளிரும்
போத நடுக்குங் கைகால்கள்
பொருத்து தோறு முளைவாகும்
பேத முகமு மினுமினுக்கும்
புறந்தா னதைத்து வெளுத்திருக்கும்
ஊதை மிகுந்து மலம்வரளு
முடனே நீருஞ் சிறுத்திடுமே. ''

(பொருள்) மயிர்சிலிர்த்தல் : உடல் குளிர்தல் ; கைகால் நடுங்குதல் சந்துகள் (கீல்கள்) தோறும் வலிக்குதல் ; முகம் மினு மினுத்தல் ; புறந்தாள் வீங்கி வெளுத்துப்போதல் ; உடல் குளிர்ச்சி மிகுந்து, மலம் வரண்டு சுருங்கிச் சிறுநீரும் குறையும்.

'' காலெலா முளைவு காட்டுங்
கண்ணுமே நீலங் காட்டும்
மேலெலாம் வெளிறிக் காட்டும்
விடமென வேகங் காட்டும்
நூலெலாந் தெரிந்து காட்டும்
நொடிபடி விடிக்கு நெஞ்சு
தோலெலாஞ் சுருங்க வாங்குஞ்
சுரமுறு வாதத் தன்மை. ''

(பொருள்) வாத சுரத்தில் கால் முழுமையும் வலித்துக் கண் நீலநிற மடைந்து, உடலெலாம் சாம்பல் படிந்தாற் போன்று வெளுத்து வறண் டிருப்பதோடு, நோய் நஞ்சைப் போன்றுவிரைந்து பரவும். அன்றியும் நெஞ்சு இடிப்பது போல நோகும். தோல் சுருங்கும் ஆகிய குறிகுணங் களையும் காட்டும்.

சுரம்

'' குளிர்ந்து நடுக்குங் குலைப்பெய்திக்
கொண்டே தாக மிகமிண்டி
நளிர்ந்து பல்லுங் கடுத்துளைந்து
நாசிட் டெறியுங் கொட்டாவி
தளர்ந்தே யுடலு மணிக்குறங்குந்
தலையும் விலாவும் மிகக்குடைந்து
வளர்ந்து வாயு மேற்கொள்ளும்
வாத சுரத்தின் குணமாமே. ''

(பொருள்) இந் நோய் தொடங்கும் பொழுதே குளிர் தோன்றி அக் குளிரினால் நடுக்கலை மேலும் மேலும் எழுப்பிக் கொண்டே மிக்க தாகத்தை உண்டாக்கும். குளிரும் பொழுதெல்லாம் பல் விறுவிறுத்து உளைந்து, மூக்கில் எரிச்சல், கொட்டாவி, உடல் தளர்தலாதல், கண்விழி, தொடை, தலை இவைகள் குடைந்து குடைந்து நோகுதல் வயிற்றில் வாயு மேற் கொள்ளல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

'' வாத சுரத்தின் குணமுன்னோர்
வகுத்த வண்ண முரைத்திடுவாம்
சீத மதிக மாய்வந்து
சிந்தை கலங்கி நெஞ்சுளைந்தே
ஏத முறவா ளாலரிவ
தெனவே சந்துங் குலைகுலைந்து
பேத மலமும் வறண்டுதாம்
பெருகப் பொருமல் தோன்றிடுமே.''

(பொருள்) வாத சுரத்தில் குடலில் சீதமுறல், சிந்தை கலங்குதல், மார்பு நோதல், சந்துகள் வாளால் அறுப்பது போல வலித்தல், மலம் வரளுதல் முதலிய குறிகளைக்காட்டும்.

'' தோன்று முடலந் தனைநறுக்கித்
துவைத்தாற் போல நடுக்கமுற்றிவ்
வான்ற வுணவு வேண்டாநஞ்
சதுபோற் சத்தி யருவருப்புற்
றேற்ற விரவும் பகலுந்தா
னில்லை யுறக்க முன்நோவாய்
நான்ற கைகால் கடுத்துழற்றி
நலஞ்சேர் சந்து முளைந்திடுமே ''.

(பொருள்) இதனில் உடல் நடுங்குவதன்றியும், உடலை நறுக்கித் துவைத்தது போலிருத்தல், சோறுவேண்டாமை, நஞ்சென உணவில் அருவருப்பு, வாந்தி, இரவும் பகலும் துயிலிலாமை, கைகால் கடுப்பு, பூட்டுகளில் மிக்கவலி முதலிய குறிகுணங்கள் காணும்.

"உளையுஞ் சிலிர்த்துப் பாம்புவிட
மொத்தே தாகங் கொண்டெய்துங்
களையுந் தெளியா தசதியுண்டாங்
கண்டா லிந்தக் குணந்தன்னை
.........................
........................."

(பொருள்) இந் நோயில் மயிர் சிலிர்த்துப் பாம்பு விடம்கொண்டவனுக்குள்ள தாகத்தைப் போன்று தாகமுண்டாகும். களைப்பும் தோன்றி தெளியாது அசதியும் ஏற்படும்.

"செப்புகிறேன் வாதசுரத் தின்குண மெல்லாம்
திருமுகமு முதடுமே கருத்துக் காணல்
தப்புகிறேன் சரீரமெலாந் துடித்து நோதல்
தாகந்தான் மிகக்காணல் மெய்ந்நடுக்கல்
திப்புகிறே னுடம்புதிமி ரெடுக்க லுஷ்ணம்
தேகம்பா ரித்திருத்தல் மலபே தங்கள்
குப்புகிறேன் குளிர்ந்துமயிர்க் குச்செறித லிந்தக்
குணமெல்லாம் வாதசுரக் கூறு மாமே."

(யூகி சிந்தாமணி 3-பாட்டு)

(பொருள்) முகம் உதடு கருத்துக் காணல், உடல் முழுமையு துடித்து நோதல், மிகு தாகம், உடல் நடுக்கம், திமிர் வெப்பம், உடல் பாரித்தல், உடல் குளிர்ந்து மயிர்க்கூச்செறிதல், எரு கடினப்பட்டு நிறத்தில் வேறுபாடடைதல் ஆகிய குறிகள் வளி சுரத்தைக் குறிக்கும்.

"நடுக்கலும் பிதற்றலும் நளிர்மெய் கூசலும்
இடுப்பொடு சந்துகள் நெற்றி நோதலும்
அடுத்தடுத் திருமலு மயர்ந்து சோம்பலு
மடுத்திடு வாதமாஞ் சுரத்தின் வன்மையே."

(பொருள்) உடல் நடுக்கல், வாய்பிதற்றல், குளிர், மயிர்க்கூச்செறிதல், இடுப்பு, பூட்டுகள், நெற்றி இவைகள் நோதல், அடுத்தடுத்து (வாய் ஓயாத) இருமல், சோம்பல் இவைகள் வாதசுரத்தின் குறிகளாகும்.

"முகமு முதடுங் கறுத்துடலம்
முழுது நொந்து நடுக்கலுடன்
மிகவுந் திமிர்த்துப் பாரித்து
மேனி குளிர்ந்து கூச்செறிந்து
பகரு முடியின் முனைபிளந்து
பண்டி மலமும் பந்தித்தால்
தகாவாம் வாத சுரக்குறியின்
தன்மை யென்ன மொழிகுவையே".

(பொருள்) முகம், உதடு கறுத்தல், உடல் முழுவதும் நொந்து நடுங்கல், திமிர்த்தல் பாரிப்பு, மேனி குளிர்தல், மயிர்க்கூச்செறிதல் மயிர் முனை வெடித்தல், மலம் பந்தித்தல் இவைகள் வாதசுரத்தின் குறிகுணங்களாம்.

"கண்ணிரண்டு நீர்சொரியுங் காணுந் தலைநோவும்
பண்வயிறு தானிரைதல் பற்றிடும்வேற் கண்ணாய்
முடக்க லதிசோம்பல் கொட்டாவி விக்கல்
அடக்கரிய வாதகுண மாம்."

(பொருள்) கண்களில் நீர் சொரிதல், தலை நோய், வயிற்றிரைச்சல், கைகால் முடக்கல், அதிசோம்பல், கொட்டாவி, விக்கல் என்பவைகள் அடக்குவதற் (தீர்ப்பதற்) கரிய வளி சுரத்தின் குறிகுணங்களாம்.

மேற்குறித்த பாக்களில் கூறிப்போந்த குறிகுணங்களை ஒருங்குதிரட்டிக் கூறில், வளி சுரத்தில் சோறு வேண்டாமை, நஞ்சென உணவை அருவருத்தல், மந்தம், வாந்தி, இரவும் பகலும் துயிலாமை, உடல் முழுமையும் கரு நிறமடைதல், சாம்பல் படிந்தாற் போல் உடல் வெளுத்து வறளல், முகத்தில் நீர் கொள்ளல், தலை நோய், சந்துகள் தோலும் குத்தலும் குடைச்சலும் உண்டாதல், உடல் துடித்தல், மயிர்க்கூச்செறிதல், குளிரல் ஆருத தீயைப் போல் உடல் முழுமையும் கொதித்தல், வாயால் மூச்சு விடல், மிகுசினம், மூக்கில் எரிச்சல், கண்விழி, தொடை, இடுப்பு இவைகள் குடைந்து குடைந்து நோதல், புறந்தாள் வீங்கல், வாய் ஓயாது இருமல், உடல் வரளல், பல் விறுவிறுத்து உளைதல், வயிற்றில் காற்றுமேல் கொண்டு சேருதல், கொட்டாவி உண்டாதல், சுரம் விடுமுன் வியர்த்தல், திமிர், மிகுந்த மந்தம் ஆகிய குறிகளைப் பிறப்பிக்கும் என

அறியக்கிடக்கும். இந்நோயில், (மலம்) எரு தீய்ந்து வறளுதலும், நீர் சுருங்கி வெள்ளாட்டு நீரின் நிறத்தை ஒத்திருத்தலும் உண்டு. அன்றியும், தேரன்மருத்துப் பாரத நாடகத்தில் கூறியது போல,

''வேத வியாசப் பொருப்பிலருட் சௌபாக்கிய
விக்கின ராசன் வரைந்த படியே
வாத வெப்பினுக் கீரைந்தே நாளதற்கு ளெந்த
வினைகளும் வீடுமிக் குமுதநோய்க் குள்ளாகி.''

(பொருள்) வளி வெப்பு நோயின் கால அளவாகிய பத்து தினத்திற்குள், எந்த வினைகளும் கலக்கும்என்பதால், மேற்கூறிய குறிகளல்லாமல் பல் வேறு நோய்களும் இச்சுரத்தில் தொடரக் கூடுமென அறிக.

வளி அழற்சுரம்-(வாத பித்த சுரம்)
''வாத பித்த சுரமானால்
வருந்துங் குணத்தை மானேகேள்
நாத மிடிந்தே யிரைச்சலுமாய்
நாவுங் கண்ணு மஞ்சளிக்கும்
ஊதை மிகுந்தே விடாசுரமாய்
ஒக்கா ளித்துக் கண்டுங்கும்
சீத மிகுந்தே பிரமையாய்ச்
செய்யுங் குணத்தைத் தேர்ந்தறியே.''

(பொருள்) மிகு ஒலியுடன் (சப்தம்) வயிறு இரையும், நாவும் கண்ணும் மஞ்சளித்துக் குளிர்மிகுந்து விடாச்சுரமாகக் காயும், ஓக்காளம் உண்டாம். அடிக்கடி தூக்கமெழும். அன்றியும் இவ்வளியழல் சுரத்தில் ஐயமும் கூடிடில் மனக் கலக்கத்தையும் உண்டாக்கும்.

'' சோம்பொடு திமிரு முண்டாய்ச்
சுவாசமுந் திகைப்பு முண்டாய்க்
கோம்பொடு சத்தி கெட்டுக்
குளிர்ந்துமெய்ச் சிலிர்ப்பு முண்டாய்க்
காம்புறு தோளி ளுளே
காய்வன பிதற்று முண்டாய்
மேம்பட வந்த வெப்பு
வாதமேற் பித்த மாமே.''

(பொருள்) இன்னும் மேற்கூரிய சுரத்தில், சோம்பல், திமிர், பெருமூச்சு, திகைப்பு, வாந்தி, குளிர், உடல் சிலிர்ப்பு, வாய்பிதற்றல், விடாக்காய்ச்சல் இவைகளுண்டாகும்.

'' துணிந்தே யொன்றும் வாதபித்த
சுரத்தின் குணங்கே ளுடம்புளையும்
பணிந்தே கூதல் விடுவதுவும்
பற்று வதுமா யிருக்கும்பின்
திணிந்தே வயிறு மிகக்கழியுஞ்
சீதம் வற்று முடல்வேர்க்குந்
தணிந்து விடாமல் மிகவெதுப்புந்
தந்தங் கன்னஞ் சிலிரெனுமே. ''

(பொருள்) உடம்பு நொந்து, குளிரோடு சுரம் தோன்றி வருவதும் போவதுமாக இருந்து பின்பு இவைகள் தணிந்து, வயிறு மிகக் கழிச்சலையுண்டாக்கி அத்துடன் சீதமுங் கூடிவிழுவதுண்டு. மேலும் உடல் வற்றி (இளைத்து) வியர்த்தலும், விடாச்சுரம் காய்தலும், பல்லும் கன்னமும் சிலிர்த்தலும் ஆகிய இக்குறிகள் வளி அழல் சுரத்தின் குறிகளாகும்.

'' சிலபோ துணர்ச்சிக் கெட்டிருக்கச்
சிறுகா லேவாய் தித்திக்கும்
பலகா லும்வாய் கசத்திருக்கும்
படருள் ளுழலை யுளதாகும்
தலமீ தித்ற்குப் பரிகாரந்
தானே குடிநீர் தனைப்புகலில் ''

(சுரவாகடம்)

(பொருள்) சில வேளையில் உணர்ச்சி இராது. வாய் இனிக்கும். ஆனால் பெரும்பான்மையும் கசக்கும். விடா அழலை உண்டாக்கும்.

'' ஆகுமே வாதபித்த சுரத்தின செய்தி
யறிந்திடவே யங்கமெலா மசைத ஞேதல்
நாகுமே நாக்குத்தான் கறுத்துக் காணல்
நயந்துபிர லாபித்த னித்ரை யாதல்
வாகுமே மலபேத மாயி யிருத்தல்
மலம்வெளுத்தல் வாய்கைத்தல் வடிவங் குன்றல்
தேகுமே யறிவோடு தினைவு மாதல்
தியங்கெடுதல் மயங்கிடுதல் சிலேத்மமாமே. ''

(யூகிமுனீ சிந்தாமணீ.)

(பொருள்) இந் நோயின் குறிகுணங்களைச் செப்புகின், உடல் முழுமையும் அசைவது போல் வலியுண்டாம். மேலும், நாக் கறுத்தல், அடிக்கடி தூக்கமுண்டாதல், வாய் கைத்தல், உடல் வடிவு குன்றல், உடல் தினவெடுத்தல், மனங்கலங்கி தயங்கி கண்டது கண்டவாறாகப் பேசல், எரு வெண்மை நிறத்தோடிழிதல் ஆகிய இக்குறிகளைப் பெறும்.

இப்பாக்களின் பொருள்களை ஒருங்கு திரட்டி நோக்குங்கால், வளி யழல் சுரத்தில் நாவும், கண்ணும் மஞ்சள் நிறமடையும். சோம்பல் ஓக்காளம், உடல் சிலிர்ப்பு, குளிர், விடாச்சுரம் (காய்ச்சல்), வாய் பிதற்றல், அடிக்கடி தும்மல், பெருமூச்சு, மனக்கலக்கம், பல்லும் கன்னமும் சிலிர்ப்பு, சுரம் தணிந்த பின் வயிறு கழிதல், சீதம் விழல் ஆகிய குறிகள் ஏற்படுமென அறிதற்கிடமாம்.

**வளி ஐயச்சுரம் (வாதகபச்சுரம்) :**

'' ஊதையு மங்கமும் பொங்கி
வாந்தியுடன் மூச்சு முண்டாய்
பாதமுங் சுரமும் வீங்கி
யிருமலோ டிளைப்பும் பற்றி
நாதமு மடைத்துக் காய்ந்து
நடுக்கலுஞ் சுரமு மாறு
வாதைசெய் வாத சேற்ப
சுரமென வகுக்க லாமே. ''

(பொருள்) வாந்தி, பெருமூச்சு, கைகால் வீக்கம், இருமல், இளைப்பு, காதடைப்பு, விடாச்சுரம், நடுக்கல் இவைகள் உண்டாகி தீங்காத் துன்பந்தரும்.

'' தொண்டையு முடம்பு நொந்தே
துலங்கிய முகமும் வெளுத்து
கண்டதுப் பிசமும் விக்கல்
கடுமயிர்க் கூச்ச மெய்தும்
விண்டுவா யுலர்த்துஞ் சோபாய்
வெருண்டுடல் நலிந்தி ருக்கும்
மண்டுகால் கையும் சந்து
வாதமும் சேரென் ரேதே. ''

(பொருள்) மேற்குறித்த சுரத்தில், தொண்டையும் உடம்பும் நோதல், முகம் வெளுத்தல், உப்பிசம், விக்கல், மயிர்க்கூச்செறிதல், வாய் உலர்தல் சோர்வடைதல், வெருண்ட பார்வை, கைகால்களின் பூட்டுகளில் நோதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

"பேரா திருமுகம் நாவறளும்
பெருகுஞ் சக்தி யுறக்கமுண்டாஞ்
சீரா ருடல முட்குளிருஞ்
சிறுநீர் மலமும் வெளிருகும்
நீரார் மூக்கில் வாய்தன்னில்
நீருண் டாநாட் செலும்விரைவிற்
தீரா வெதுப்பு கண்வெளிறும்
தீயும் வெயிலும் வேண்டிடுமே."

(பொருள்) முகமும் நாவும் வறளுவதன்றி, வாந்தி, அதிக தூக்கம் குளிர் இவைகள் உண்டாகும். மலமும் நீரும் வெளிறும், மூக்கில் நீர் பாயும், வாயில் நீர் ஊறும், கண்வெளிறும், சுரம் காயும், அனலையும் வெய்யிலையும் விரும்பும். ஆகிய குறிகுணங்களைப் பெறும். இந் நோய் தீர நாட்செல்லும்.

"வேண்டு பலகாற் கொட்டாவி
மெய்யி னுரோமஞ் சிலிர்த்துமிகத்
தூண்டு மயக்கம் தெளிவுண்டாந்
தொடையுங் கால்கைச் சந்துகளும்
ஈண்டுங் குடைச்சல் மிகவுண்டா
மிதுவே வாத சேற்பசுரம்
மீண்டு மிரண்டு பட்டினிதான்
விட்டுச் செய்யும் வகைகேளே."

"திண்ணமாம் வாதசிலேட் டுமசு ரந்தான்
சடமெல்லா நொந்திடுதல் சுவாசங் காணல்
எண்ணமா மிருமலுநா வெளுத்திடுதல்
இசைந்துமயிர்க் கூச்செறிதல் பிடரி நோதல்
கண்ணமாந் தாபமே மிகவுண் டாதல்
தயங்கியே சஞ்சரித்தல் வாய்ப்பி தற்றல்
விண்ணமா மிரளலொடு வியர்வை காணல்
மிக்கவழு திடலிதன்றன் விவர மாமே."

(பொருள்) வளி ஐயசுரத்தில் உடம்பெல்லாம் நோதல், இழுப் புண்டாதல், இருமல் வருதல், நாவெளுத்தல் ஆகியவைகளும், மயிர்க் கூச்செறிதல், கழுத்து நோதல், நீர் வேட்கை, கலக்கம், சஞ்சலம், வாய் பிதற்றல், மிரளல், வியர்வை உண்டாதல் முதலியனவாகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

இப்பாக்களில் உள்ள குறிகளைத் தொகுத்துக் கூறின், வளி ஐய சுரத் தில் விடாச்சுரம், வாந்தி, தொண்டையும் உடம்பும் நோதல், முகம் வெளுத்தல், கை கால்களின் சந்துகள் வீங்கி உளைதல், இருமல், இளைப்பு, காதடைப்பு, உப்பிசம், விக்கல், மயிர்க்கூச்செறிதல், வாய் உலர்தல், சோர்வு, வெருண்ட பார்வை, முகமும் நாவும் உலர்தல், அதிக தூக்கம், மூக்கில் நீர் பாய்தல், வாயில் நீரூறல், கண் வெளிறல், அனலையும் வெய்யிலையும் விரும்பல் மலமும் நீரும் வெளுத்தல், மயக்கம், தாபம், தயக்கம் சஞ்சலம் உண்டாதல், வாய் பிதற்றல், மிரளல், வியர்வை இவைகள் உண்டாகுமென்க.

அழற் சுரம் (பித்த சுரம்):

''பாடலமெய் மாநாகம் பாருநிக ராகவுடல்
பாடலமெய் மாநாகம் பாருமே—பாடலங்கம்
பித்தசுர மாகவரும் பேராக் கினிமயமாம்
பித்தசுர மாகவரு பேய்.''

(பொருள்) அரக்கர்கள் தமது வல்லமையாகிய மாயா வித்தை யினால், யாவருடைய மனத்தையும் எவ்வாறு வஞ்சகமாக துன்புறுத்து வார்களோ அவ்வாறே இவ் அழற்சுரமும் யாவரையும் வருத்துவதாகும்.

(தேரன் யமகவெண்பா)

இஃது ஊழி வடவாமுகாக்கினியைப் போலக் காய்ந்து பித்த சுரம் என்கின்ற பெயர்கொண்டு, பேய்பிடித்தவர்களைப் போல ஆட்டி வருவதுடன், குதிரையைப் போலப் பெருமூச்செறிதலும், முள்ளம் பன்றியைப் போல மயிர் கூச்செறிதலும், மானைப்போல மிரண்டு மிரண்டு பார்த்தலும், குரங்கைப் போல மனநிலை மாறுதலும், பருந்தின் கண்களைப் போலச் சிந்தை சுழலலும், பகைவர்களைப் போல நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து, செம்மை நிறத்தை உடைய பொருளை உடல் முழுமையும் பூசியதுபோல், கண்டவர் திகைக்கு மாறு உடல் சிவத்தலும், உயிர் உடலைவிட்டு நீங்குவதுபோலப் பல

புலவான விதத்தில் மனங்கலங்குதலும், கண்ணும் மூக்கும் பாதிரிப் பூப் போன்ற நிறத்தையடைதலும், உடல் நடுங்குதலுமான குறிகுணங் களைத் தோற்றுவிக்கும்.

ஆகு மந்திரி பாடல முடலம்
ஆங்க சப்புவாய் அரக்கைநேர் கண்ணாம்
ஆனன மேதினி மாதி ரந்தலை
ஆட நடுக்குஞ் சலிலத் தேவாய்
ஆறு மிகுந்து சுரப்பா கும்மே
ஆயா சம்மிளைப் பரோசக மிகுமேல்
(தே. கரிசல்)

(பொருள்) உடல் சிவந்து, வாய் கைத்துத் தலை சுற்றி, எண் திசைகளும் ஆடி நடுங்குதல் போன்ற தோற்றம் உண்டாதல், வாயில் நீர்சுரந்து வடிதல், உடல் வன்மை குறைந்து இளைப்பும் களைப்பும் தோன்றல், நாச்சுவை குறைதல் ஆகிய இக் குறிகளைக் காட்டும்.

''பித்த சுரத்தின் குணங் கேளாய்
பிதற்றிப் பேசும் வாய்வெருவும்
ஒத்த நயனஞ் சிவந்திருக்கும்
உடனே வயிறு கழிந்துவரும்
மெத்த தண்ணீர் தாகிக்கும்
வெதும்பி நாவும் தடுமாறும்
புத்தி யடங்கும் முகங்கருக்கும்
புனித மிடறும் புண்ணாமே.''

(பொருள்) இந்தச் சுரத்தில், படபடவென்று பேசி வாய்பிதற்றல், கண் சிவந்திருத்தல், வயிறு கழிதல், நீர்வேட்கை, நாத்தடுமாறல், உடல்வாடல், புத்தி மயங்கல், முகங்கருத்தல், உடல் புண்ணாதல் முதலியன உண்டாகும்.

''கொடிதா யுள்ளங் கொதிப்பெய்திக்
கொண்டே தாக மிகமிண்டிக்
கடிதாய் மெய்யுந் தழல்வடிவாய்க்
கையுங் காலும் மற்றவையும்
வடிவாய் மஞ்ச ணிறமாகும்
வாயுங் கைக்கு மனந்திகைக்கும்
பிடியார் கிடையா விடையாரே
பித்த சுரத்தின் குணமாமே.''

(பொருள்) உள்ளங் கொதித்தல், நீர்வேட்கைமிகுதல், உடல் நெருப்புப் போல எரிதல், கைகால்கள் முதலியன மஞ்சள் நிறத்தைப் பெறுதல், வாய் கைத்தல், மனங் கலங்குதல் ஆகியவைகள் அழற் சுரத்தின் குணங்களாகும்.

''தாகமும் விக்கலுந் தாவு நித்திரை
வாகுடன் வயிற்றுழல் வாந்தி செய்தல்
மீக்குடன் வாயுலர்ந்த திறங்கு நீர்செவந்
தாக்குடன் பயித்திய சுரமென் றோதரோ.
(குழந்தைவேல் முதலியார் கையேடு)

இந் நோயில், விக்கல், தூக்கமின்மை, வயிறூதல், வாந்தி, வாய் உலர்தல், சிறு நீர் சிவந்திறங்கல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

''செய்யும் பித்த சுரந்தன்னிற்
நிகழுங் குணங்கேள் நாவுலரும்
பெய்யும் சிறுநீர் சிவந்திருக்கும்
பிதற்றுஞ் சத்தி யோக்காளம்
மெய்யும் வெதும்பும் வாய்க்கசக்கும்
மிடறு வாய்ப்புண் ணுடம்பழற்றும்
நையக் கழியும் மலமுடனே
நயனந் தானும் மஞ்சளித்தே.''

''மஞ்சார் குழலாய் முகங்கருக்கும்
வாங்குந் தண்ணீர் குளிர்ந்துசிலிர்த்
தெஞ்சா வன்னம் வேண்டாதிங்
கிதுதான் பித்த சுரமென்ப''
.. ..............
........... .......
(சுரவாகடம்.)

(பொருள்) அழற்சுரத்தில், நாவறளல், சிறுநீர் சிவந்திழிதல வாய் பிதற்றல், வாந்தி, ஓக்காளம், வாயில் கசப்பு உண்டாதல், மெய்வாடல், தொண்டை, வாய் இவைகள் புண்ணாதல், உடல் வெப்பங் கொள்ளல், மிகுதியும் கழிதல், மலமும் கண்ணும் மஞ்சள் நிறம் பெறுதல், முகங்கருத்தல், நீர் வேட்கை மிகுதல், உடல் குளிர்ந்து சிலிர்த்தல், அன்னம் வேண்டாமை முதலிய் குறிகள் காணும்,

"கூறான பித்தசுரத் தின்கு ணத்தைக்
கூறிடவே நித்திரைதான் மெத்த காணல்
தேறான மலமூத்ரஞ் சிவந்தி ருத்தல்
சிதறியே வயிறுகழி ந்திடுதல் சத்தி
வாறான வாய்ப்பிதற்றல் வாய்தான் கைத்தல்
மகத்தான மூர்ச்சையொடு தாகங் காணல்
தாறான வெழுந்திருந்து மோடல் விக்கல்
தவித்திடுதல் சந்தாபப் படுதல் கரணே."

(பொருள்) அழல் சுரத்தில், மிக்க உறக்கங்கொள்ளல், அடிக்கடி கழிதல், நீர், எரு, உடல் இவைகள் சிவந்திருத்தல், வாய் கைத்தல், பிதற்றல், மிக்க மயக்கமொடு நீர் வேட்கை உண்டாதல், தன்னறிவு இன்றி எழுந்தெழுந்து படுக்கையை விட்டோடல், விக்கல் தவித்தல், வெப்பமடைதல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

பித்தசுரத்தின் குறிகுணங்களைத் தொகுத்துக் கூறின், இச்சுரத்தில், வாய் பிதற்றல், படுக்கையில் தங்காமை, மனக்கலக்கம், மயக்கம், உடலும், கண்ணும், சிறுநீரும் செம்மை நிறமடைதல், வாய் நீர் அதிகமாக வடிதல், இளைப்பு, சுவையின்மை, ஒக்காளம், வாய்க்கசப்பு, வயிறு கழிதல், நீர் வேட்கை, நாத்தடுமாறல், இடைவிடாமல் சுரம் காய்தல் முதலியன உண்டாகுமென அறிக.

அழற்வளிச்சுரம் (பித்தசுரம்)

"அந்தப் பித்த மதுவிரண்டும்
வாத மொன்றுஞ் சுரமாயின்
உந்தக் காயும் பொருமலுமாம்
உடம்பு மிகவு மஞ்சளிக்கும்
கொத்துங் குலையும் வாந்திசெயு
நோகுங் கண்ணும் வெளுத்திருக்கும்
மந்தம் பற்று மூதைமிகும்
வருத்துங் குணங்க ளறிவீரே."

(பொருள்) அழல் இருபங்கும், வளி ஒரு பங்கும் கூடிவரும் சுரத்தில், பொருமல், உடல் மஞ்சளித்தல், வயிறு நொந்து உண்டவை யாவும் செரியாமல் அப்படியே வாந்தியாதல், கண்வெளுத்து நோதல், மந்தம், உடல் ஊதல், மிகச்சுரம் காய்தல் முதலியன உண்டாகும்.

''பித்த வாத சுரந்தன்னைப்
பேசக் கேளாய் பிடரிவயி
றொத்த சிரமும் வறண்டுவிடு
மொளிதான் குறையும் நேத்திரங்கள்
சித்த மயக்குந் தேகமெலாந்
தினவுபோல மசம சத்து
மெத்த வெதும்பித் தாகமுமாய்
வெய்யி லனலை விரும்பிடுமே.''

''விரும்பா துணவு நெஞ்செரிக்கும்
விட்டுக் காயும் வேர்வை யுண்டாம்
பெரும்போ தரைக்கண் தூக்கமுமாய்
பிரண்டே யுழற்றும்பற்கடிக்கும்
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .

(சுரவாகடம்.)

(பொருள்) அழல்வளிச் சுரத்தில் மிகுசுரம், பொருமல், **உடல்** **மிகவும்** மஞ்சள் நிறமடைதல், வாந்தி, கண்ணோய், கண் வெளுப்பு, மந்தம் முதலியனவும், குளிர்தல், கழுத்து, வயிறு, தலை இவ்விடங் கள் வறண்டு காணுதல், உடலின் ஒளி குறைதல், மயக்கம், **உடலில்** தினவு, தாகம், வெய்யலில் விருப்பம், உணவில் வெறுப்பு, நெஞ்செரிவு சுரம் விட்டுவிட்டுக் காய்தல், வியர்வை உண்டாதல், அரைக்கண் தூக்கம், படுக்கையில் புரளல், தூக்கத்தில் பற்களைக் கடித்தல் **ஆகிய** குணங்களும் உண்டாகும்.

அழலையசுரம் (பித்தகபச்சுரம்) :

''பித்தசேற் பனசு ரத்தைப்
பேசுவன் மனந்த ளர்ந்து
புத்திமா றாட்டம் பண்ணும்
புகைந்திடு மிருமு மென்மேல்
சத்திடை விடாமற் காயும்
சலமல மஞ்ச ளிக்கும்
நித்திரை தானும் வாரா
வழலையு நெருக்க மாமே.''

(பொருள்) பித்த சுரத்தில் மனந்தளர்ந்து அறிவு மாறாட்டம் உண்டாம். புகைந்து புகைந்து இடைவிடாத இருமலும், விடாச்சுரமும் தோன்றி, மலமும் நீரும் மஞ்சளித்துதூக்கம் வராது செய்யும்.

''புறங்கைகால் முகமும் வீங்கும்
பெருமூச்சோ டிளைப்பு விக்கல்
அறைத்திடு மாகம் போல்
நெஞ்சோடு விலாவி டிக்கும்
பிறந்திடு சுரமென் மேலும்
பிதற்றிடுந் தண்ணீர் வாங்கும்
சிறந்தவிக் குணங்கள் பித்த
சேற்பத்தின் சுரம தென்னே.''

(பொருள்) மேலும், புறங்கை, கால், முகம், வீங்கிப் பெருமூச் சுண்டாகும். இளைப்பு, களைப்பு, விக்கல், வாய் பிதற்றல், நீர் வேட்கை, நெஞ்சும் விலாவும் படபடவென்று அடித்துக்கொள்ளல், மேன்மேலும் சுரங் காய்தல் ஆகிய இவைகள் உண்டாகும்.

''சேர்ந்திடும் பித்த சேற்ப
சுரத்தினிற் குணங்கள் செப்பில்
சார்ந்திடுஞ் சுரமும் தொண்டை
கட்டியே யிரும லுண்டாம்
மாய்ந்திடு மிளைப்பு நாவும்
வழுவழுப் புடன்வறட்சி
பாய்ந்திடு வேர்வை மேன்மேற்
பகர்ந்திடு குணங்க டேரே.''

(பொருள்) இந்நோயில், தொண்டை கட்டி இருமல் உண்டாதல், இளைப்பு, நாவழுவழுத்தல், வறட்சி, அடிக்கடி அலறிப் பயப்படுதல், மிகுந்த வியர்வை என்னும் குறிகளைக்காட்டி இடைவிடாது சுரங்காயும்,

''இருமலுந் தாகமு மிசைந்த தூக்கமும்
பொருமலு வேர்வையும் வாய்பி தற்றலும்
மருமையு மயிர்சிலிர்த்த லங்கம் நோதலும்
பெருமையுஞ் சுரமிது பித்த சேத்துமம்.''

(கைஏடு)

(பொருள்) இருமல், நீர்வேட்கை, மிகுந்த தூக்கம், வயிறு பொருமல், வியர்வை, வாய்பிதற்றல், மயிர் சிலிர்த்தல், உடல் நோதல் என்னுங் குறிகளோடு சுரங்காயின், அஃது அழலையச் சுரமெனக் கொள்க.

"விவரமாம் பித்தசிலேட் டுமசு ரந்தான்
வியர்வையே மிகவருதல் வாய்பி தற்றல்
நிவரமாய் நித்திரையு மிகவே மிஞ்சல்
நெடித்துமயிர்க் கூச்செறித லிரும லாதல்
தவரமா மார்நோதல் தாபங் காணல்
தலைவலியும் பிடரிவலி தகைத்துக் காணல்
நவரமா நாக்கதுவும் வழுவழுத்தல்
நாக்கொடு மூக்குநல மழிதல் காணே."

(யூகி. சிந்தாமணி)

(பொருள்) இதில், அளவு கடந்து உடல் வியர்த்தல், வாய் பிதற்றல், மிகுந்த தூக்கம், மயிர்க் கூச்செறிதல், இருமலால் மார்பு நோதல், வெப்ப மிகுதல், தலை புறங்கழுத்து இவை வலித்தல், நாவழுவழுத்தல், நாவும் மூக்கும் நன்னிலைமாறல் இவைகள் இந்நோயின் குறிகளாம்.

"சொல்லும் பித்த சிலேற்பனமாஞ்
சுரத்தின் குணங்கே ளுடம்புனையும்
மெல்ல மூச்சுண் டாயிருக்க
மெய்யும் வெதும்பு மிருமலுண்டாம்
வல்ல நாவும் வறண்டிருக்கும்
மயங்கு முடம்பு வற்றிடுமாம்
அல்ல லுறவே பிதற்றும்வேர்
வாகு முடல மடர்ந்தடர்த்தே."

"அடர்ந்த தலையுந் தூய்கழுத்தின்
அடியும் என்றும் வேர்த்திடுமே
தொடர்ந்த நயன மெரியுமினிச்
சொல்லும் பரிகா ரங்கேளாய்."

. . . . . .

. . . . . .

(சுரவாகடம்)

(பொருள்) பித்த கபச்சுரத்தில், உடல் வலித்து, வாடல், வற்றுதல் ஆகிய இக்குறிகள் உண்டாகும். மெல்லென மூச்சு வாங்கும், இருமலும், நாவறளும், அடிக்கடி வியர்வை விடுதலும், பிதற்றலும் ஏற்படும். தலையும் கழுத்தும் எப்போதும் வியர்க்கும், கண்கள் எரியும்.

ஐயச்சுரம் (கபச்சுரம்):

''அஞ்சுவே தத்துண்டா மானகமா நாகுங்கா
யஞ்சுவே தத்துண்டா மாம்வடவை—யஞ்சவே
தத்தை இருத்தை தனிலாக்குந் தப்பாது
தத்தை இருத்தைநா தன்.''

(தே-ய-வெ.)

(பொருள்) அச்சத்தையும் மனவேற்றுமையையும் முகத்திலுண்டாக்கும், மத்தள ஒலியையும் வானம் குமுறு மொலியையும் போன்ற ஒலிகள் எப்போதும் செவியில் ஒலித்துக்கொண்டே இருக்கும. பின்பு உடலின் மயிர்க்கால்கள் தோறும் வியர்வையைத் தோன்றச் செய்து, நீர்ப்பசையை உண்டு பண்ணி வடவா முகாக்கினியைப் போன்ற சுரத்தை உண்டாக்கிய ஒரு நாழிகைக்குள் உடல் வெண்மை நிறத்தை அடையச் செய்யுமாகிய இக்குறி குணங்களை ஐயச்சுரம் பெறும் என்க.

''ஆயிர நயனன்மெய் யானையி னிறமே
ஆஅ யிருமலு முளைவுமசதியும்
ஆஅ தானி வாயு ளறல்வே தாளநோய்
ஆயாச மேற்சு வாசமீ தாகம்
ஆறாத சுரஞ்சளி மாறாத சன்னி
ஆவிவாய்ப் பானை மாவியோய் வேயோன்
ஆர்க்குவ தப்பிசின்னாரக்கு வப்பிசின்
ஆர்கலித் தரங்கை யார்கலித் தரங்கை
ஆனதிக் காளையா மமச்சை மேவிடில்
ஆளைப் பரவச மாக்குத லின்றி
ஆற்றுந் தமிழ்மறை யாற்றுந் தமிழ்மறை.''

(தேரன் கரிசல்)

(பொருள்) ஆயிரங் கண்ணுடையவனான இந்திரன் ஊர்தியாகிய வெள்ளை யானையின் நிறம் போல் உடல் வெளுத்து, வலி, இருமல், தளர்ச்சி, கோழை கக்கல், இளைப்பு, மேல் மூச்சு,

மூச்சுத்திணறல், உடல் வன்மை குறைதல், அதட்டிப் பேசுதல், செருக்கு, வாய் குளறல், உடல் வீங்குதல், அடிக்கடி களைத்துப் தல், நீர் வேட்கை, இடைவிடாக் காய்ச்சல் என்னுங் குறி குணங்களைக் காட்டி முப்பிணியை (சந்நி நோயை) வருவிக்கும் அப்போது மண்டையில் மிகுந்த சூடு, வாய் பிதற்றல், தன்னிலை அறியாமை, கொல்லும் பிணியைப்போல் பிசுபிசுத்த வியர்வை, காது இரைதல், காது கேளாமை முதலிய முப்பிணியின் குணங்களாகியவை தொடரும்.

''வெய்யசுரந் தனிலிருமல் துரப்பு விக்கல்
மெய்குளிர்த லுடன்வேர்வை யுரம்வெ தும்பல்
செய்யமுகங் கரம்பாதம் வெளுத்துக் காட்டல்
தியக்கமுறல் மூச்சிழைத்தல் பிரதா பங்கள்
ஐயடைத்துக் குறுகுறுத்த லதிசா ரங்க
ளனலெழும்ப லானகுண மவைகள் கண்டால்
ஐயசுர மசாத்யமா மென்றே யிந்த
வாயான்நன் மறையதி லியம்பி னாரே.''

(பொருள்) இருமல், விக்கல், மெய்குளிரல், வியர்வை, உடல் வெதும்பல், முகம் கை கால் இவைகள் வெளுத்தல், தயக்கம், பெருமூச்சு, மார்பில் கோழை கட்டிக் கொண்டு குறுகுறுத்தல், மிக்கபேதி இவைகளையுடைய ஐய சுரமானது மருத்துவர் கைக்கு வசப்படாதென்பதாம்.

''அறையுஞ் சேத்ம சுரமதுதர
னடைவே யுடம்பு கொந்தழற்றும்
நிறைய இரும்ப லிளைப்புண்டாம்
நெஞ்சு மிளகி மனந்துவளுந்
திரைசேரன்னங் கொள்ளாது
திருட்டி யிருட்டித் திடும்பின்னை
யுறையு முடலில் மலசலந்தா
னுரைக்கில் வெளிறும் விரைகுழலே.''

''விரைவாய்த் துயில்வ தரிதாகும்
விழிதுஞ் சாது மிகக்காயும்
புரைவா யுடம்பு குளிர்ந்திருக்கு
பீளை வழியு மிருகண்ணும்

திரைசேர் நஞ்ச மமுதாக்குஞ்
சிவனைத் துதியா தவர்சமயத்
துரைபோல் வயிறு முடன்கழியு
முடல்வெப் பாகி யுழலையுண்டே.''
(சுரவாகடம்)

(பொருள்) ஐய சுரத்தில், உடல் நொந்து அழற்றல், இருமல், இளைப்பு, களைப்புப் பிறப்பித்தல், நெஞ்சு இளகுதல், மனந்துவளல், ஊண் கொள்ளாமை, மலமும் நீரும் கழிதல், எப்பொருளிலும் வெறுப் படைதல், தூக்க மின்மை, மிகச் சுரம் காய்தல், பின்பு தணிதல், இரு கண்களிலும் பீளைசாரல், வயிறு கழிதல், உடல் வெப்பமாதல், சுர மிகுந்தெழுதல் முதலிய குறிகுணங்கள் உண்டாகும்.

''முகமது வெளுக்கும் நாக்கு முண்ணுண வுரிசி யில்லைத்
தகமுட னிருமல் விக்கல் தந்துமார் தொண்டை நோகும்
மகவுடல் தினவு வாய்நீர் அடித்தொடை சோர்வ தாகும்
செகமுதல் சுரந்தான் காணில் சேத்தும மென்ன லாமே.''

(பொருள்) ஐயச் சுரத்தில், முகம் வெளுக்கும். உண்ணும் உணவை நாச்சுவையறியா. இருமல், விக்கல் உண்டாகும். மார்பும் தொண்டையும் நோகும். உடல் தினவு, வாய்நீர் ஊறல் முதலியன ஏற்படும்.

''சந்தாப மானசி லேத்ம சுரத்தைச்
சாற்றிடவே நாக்குமுகம் வெளுத்துக் காணல்
மந்தாப மார்நோத லிரும லிளைப்பு
வருகுதல்வாய் துவர்மதமே உருகி யில்லை
தந்தாப மூச்சுவிட்டுப் போக மற்றான்
முயங்கியே விக்கலொடு தாகங் காணல்
சிந்தாப மிடறுநொந்து மேன்மூச் சாதல்
தினவெடுத்தல் தியங்கிடுதல் சிலேட்ம மாமே.''
(யூகி சிந்தாமணி)

(பொருள்) ஐயச் சுரத்தில், நாக்கு, முகம் வெளுத்தல், உடல் வெப்ப மாதல், மார்பு நோதல், இருமல், இளைப்பு உண்டாதல், வாய் துவர்த்தல், நாச்சுவை யறியாமை, பெருமூச்சுவிடல், விக்கல், தொண்டை நோதல், மேல் மூச்சு, தயக்கம் என்னுங் குறிகளைக் காட்டும்.

பல நூலோர்களும் கூறிய குறி குணங்களைத் தொகுத்துக் கூறு மிடத்து இந் நோயில், சுரம் தோன்று முன்னரே, காதிரைந்து, மத்தள ஒலியைப் போன்றும், இடி இடிப்பது போன்றும் காதில் ஒரு வித ஓசை கேட்டுக்கொண்டே இருத்தல் போன்றும், தலையில் ஏதோ ஊருதலைப் போலிருத்தலுமான முற் குறிகளைக் காட்டிச் சுரம் வரும். அச்சுரம் பெரிய நெருப்பி லெழும் சூட்டைப் போலக் காணும். சுரத்தின் பெருக்குக் கேற்ப உடல் வெளுத்தல், இருமல், கோழை கக்கல், மேல் மூச்சு, மூச்சுத் தடுமாறல், மார்பு உளைதல், அடிக்கடி களைத்துப் போதல், உடல் வீங்குதல், வாய் குழறல், நீர்வேட்கை, விக்கல், தயக்கம், பிசு பிசுத்த வியர்வை, மார்பில் கோழை கட்டிக் கொண்டு குறுகுறு வென் றும் ஒருவகை ஒலி எழுதல், அடிக்கடி கழிதல் என்னுங் குறி குணங் களைக் காட்டி, முப்பிணியின் (சன்னி) குறி குணங்களாகிய ஆடல் பாடல், அலைதல், புரளல், வாய்பிதற்றல் முதலியவற்றையும் உண் டாக்கிக் கொல்லுவதுமுண்டு.

ஐயவளிச் சுரம். (கபவாத சுரம்):

''ஓதுகப வாதசுரச் செய்கை கழறிடுவன்
மோதிதலை நடுக்கி மோகித் துடன்விறைத்துப்
பேதித் திருமல்கர பாதமே குளிர்ந்தால்
மேதித் தருகுணங்கள் பேணி யறிந்துகொள்ளே.''

(பொருள்) கபவாதசுரத்தில், தலை நடுக்கல், உடல் விறைத்தல், அடுத்தடுத்து இருமுதல், கை கால் குளிர்தல் முதலியவற்றைப் பிறப் பிக்கும்.

''புல்லுபசி கொள்ளாது மெய்வேர் வாகும்
பொருந்துகுளி ரற்பமதாய் வெதும்பிக் காயும்
நல்லதொரு கண்புரளும் மார்பு நெற்றி
நடுவினிலே துடிப்பாகும் மலமுஞ் சிக்குஞ்
சொல்லியதேய் வுடன்மூச்சுக் கோழை பொங்குஞ்
சுவையினிப்புப் புளிதேடுஞ் சோர்வு முண்டாம்.''

''சோர்வாகு முடம்புமிக விளைவித்துக் கொள்ளுஞ்
சுரங்கண்ட நாளதிலே கபமே றாமற்
. . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . .''

(சுரவாகடம்.)

(பொருள்) இந் நோய், பசியின்மை, உடல் வேறுபாடாதல், மிகக் குளிர் வந்து அதன் பின் சிறிது சுரம் தோன்றுதல், மார்பு, ஈரல், நெற்றி இவைகளில் துடிப்புண்டாதல், உடல் மெலிதல், பெருமூச்சு, இருமல், கோழைகக்கல், இனிப்பு, புளிப்பு இவைகளை விரும்பல், உடல் சோர்வடைதல், இளைத்தல் என்னுங் குறிகளைக் காட்டும்.

''பெருகிய சேத்து மத்தில் பிணங்கிய வாதம் வந்தால்
கருதிய சன்னி வாத சுரமென்று கழற லாகுந்
திரியவே கையுங் காலும் நெஞ்சொடு சேர நோகும்
மருவிய வயிறு தானு வகைபடச் சிதையு மன்றே.''

(கனக சபாபதி முதலியார் கையேடு)

(பொருள்) ஐயப் பெருக்கோடு கூடிய வளியால் வரும் சுரத்தில் முப்பிணி (சன்னித்) தொடருமென அறிக. இன்னும் இந்நோயில் கையுங் காலும், நெஞ்சும் நோகும். வயிறு நொந்து கழிவதாகும்.

ஐயவளி சுரத்திற் காணும் குறிகுணங்களைத் தொகுத்துக் கூறின், இச் சுரத்தில், தலைநடுக்கல், உடல் விறைத்துக் கொள்ளல், அடுத்தடுத்து இருமல் வருதல், கைகால் குளிர்தல், சுவையின்மை, உடல் நிறமும் வன்மையும் கெடல், ஈரல் இருக்கும் இடத்திலும் நெற்றி நடுவிலும் துடிப்புண்டாதல், உடல் மெலிந்து நோதல், பெருமூச்சு வாங்குதல், அடிக்கடி கோழை கக்கல், இனிப்பிலும் புளிப்பிலும் விருப்பு உண்டாதல், உடல் சோர்வடைதல் முதலியனவாகும்.

ஐயழல் சுரம் (கபபித்த சுரம்) :

''செப்பாகு முலைமடவீர் சேத்மபித்த சுரச் செயல்கேள்
வெப்பாகும் வியர்வையுமாய் வெந்துறுநா வதுவெறுக்கும்
தப்பாது அடைந்திருக்கும் தொண்டைகட்டி நாக்கசக்கும்
அப்பாருஞ் சடைமுடியா னறைந்திடுமா யுண்மறையே.''

(பொருள்) ஐயத்தீச் சுரத்தில், சுரம்மிகுந்து சுரம் விட்ட உடனே வியர்த்தலும், நாவெந்து உலர்தலும், கசத்தலும், தொண்டை கட்டலும் ஆகிய குறிகுணங்களைக் காட்டிச் சுரம் விட்ட சின்னாட்களுக்குப்பின் தலை மயிர் நரைக்கும்.

''சுரமுறு சேற்ப பித்தந் தோன்றிடு குணத்தைக் கேளா
யரமது போல நாவு மடியினில் வழுவ ழுக்குஞ்
கிரமுறு வேகா திக்குஞ் சில்விடுந் தேக மெங்குங்
கரமுடன் விலாவு நெஞ்சுங் கனன்றுகு டாகுங்காணே''

''காணுவாய் தொய்வி ழுப்புக் கபஞ்சத்தி தோஷ மாகுந்
தோணவே கோழை யுண்டாந் தொந்தித்தே மலம்வெளுக்கும்
பாணியை மிகவி ரும்பும் பசியுறு மசனஞ் செல்லா
வூணியே நெடுகக் காயு முதமுரஞ் சுரப்புண் டாமே.''

(சுரவாகடம்.)

(பொருள்) இச்சுரத்தில் நாவின் மேற்புறத்தில், அரத்தைப் போல் சுரசுரத்தும், கீழ்ப்புறத்தில் வழுவழுத்தும் காணும். சுரம் விட்டவுடன் உடல் முழுவதும் சில்லிடும். உடல், கை, விலா, நெஞ்சு இவைகள் வெப்பங்கொள்ளுதலோடு முகவாய்க்கட்டை தொங்கிவிடும். அன்றியும் கோழை கோழையாக வாந்தி எடுத்தல், மிகுந்த நீர் வேட்கை, பசி இருப்பினும் உணவு செல்லாமை, வெளுப்பாக அடிக்கடி கழிதல் என்னுங் குறிகளோடு விடாச்சுரமும் காயும். சுரத்தின் கொடுமை யால் குருதி பெருக்கடைந்து அது மூக்கு, நா. எருவாய் முதலியவை களின் வழியாய் வெளிப்பட்டுக் கசியும்.

''மூக்குநீர் வெள்ளோக் காள முடுகிடுஞ் சுவாச முண்டாம்
தேக்கிடு மூரி யுண்டாந் தித்திப்பாய் நாவே யுலரும்
பார்க்குங்கண் பருத்திநிறம் பற்றிநெஞ்செ ரிக்குந்
தீக்கிருமல் உறுதி யுண்டாம் சேத்மப் பித்த மெனத்தெளியே.''

''ஓடிப் பலகா லெழுந்திருக்கும் முரத்துப் பேசு மோகிக்கும்
வாடிக் கிடக்கு மிகவன்றி வலிக்குங் கைகால் விட்டுவரும்,
வாடுங் கண்கள் பஞ்சடையும் வருத்தும் படுக்கை பொருந்தாது
சேட மாக இவையெல்லாம் சேத்ம பித்த சுரகுணமே.''

(கனகசபாபதி முதலியார் கையேடு.)

(பொருள்) இந்நோயில், மூக்குநீர் பாய்தல், வெள்ளோக்காளம் உண்டாதல், பெருமூச்செறிதல்: நா இனித்து உலர்தல், சோம்பி இருத்தல், கண் சிவத்தல், நெஞ்சு எறிதல், கொடிய இருமல் வருதல், படுக்கையை விட்டு அடிக்கடி எழுந்து ஓடல், உரத்துப் பேசல், பெண்

களின் மேல் இச்சை கொள்ளல், சில வேளை உடல் வாடியும், மனம் தளர்ந்தும் இருத்தல், கை, கால் வலித்தல், கண்கள் வாடிப் பஞ் சடைதல், படுக்கை பொருந்தாதிருத்தல் என்னும் முப்பிணியின் குறி குணங்களும் தொடருமென அறிக.

முப்பிணிசுரம் — கலப்புசுரம், தொந்தசுரம், சன்னிபாதசுரம் எனப்பல் பெயரால் வழங்கும்.

''குறுகிய தொந்த மாகுஞ்
சுரத்தினைக் கூறக் கேளாய்
மறுகிடும் பிதற்றும் பேசும்
வாந்திக்குப் பிரமை யுண்டாம்
இறுகியே வரளு நாக்கு
மிதமுறத் தாக மாகும்
பெறுமவி காயம் போலப்
பின்னிடு மொன்றோ டொன்றே.''

''பின்னிடும் வாத பித்தம்
பிரிந்திடாச் சேற்ப வாதம்
மன்னிய பித்த சேற்பம்
மாறியிங் கிதுதொந் திக்கி
லன்னது தானே தொந்த
சுரமென வறிந்திட்டார்கள்
கன்னியே யிதன்கு ணத்தைக்
கண்டுநீ தேர்ந்தி டாயே.'

''தேர்ந்திடாய் சுரமுண் டாகுந்
தீயென வுதறிக் காயும்,''

(பொருள்) இது வாய்பிதற்றல், வாந்தியாதல், பிரமையுண்டாதல் நாவறண்டு போதல், மிகுந்த நீர் வேட்கை, உடலின்கண்ணமைந்த முக்குற்றங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டதைப் போற் கூடி மருவிவரும் நோயாம். இதில் காயும்சுரம் மிகுந்த வெப்பமாகக் காய்ந்து வியர்வையை உண்டாக்கும். குளிரும் நடுக்கலும் ஆகிய குறிகளையும் காட்டும்,

அன்றியும், முக்குற்றக் கலப்பால் உண்டாகும் சுரம் பிறப்பதற்கு முன்பே குளிர்தல், நடுக்கல், உடல் முழுமையும் வியர்த்தல், மார் துடித்தல் என்னுங் குறிகளைக்காட்டி, பின்பு சுரம் உண்டான உடனே, அது மிகுதிப்பட்டு வாய்பிதற்றல், படுக்கையில் இருக்கவொட்டாமை, அரட்டல், புரட்டல், அறிவு மயங்கல், ஆடல், பாடல், சிரித்தல், துணியை அவிழ்த்து எறிதல், கண் சிவத்தல், கண்நெருப்புப் போலெரி தல் என்னுங் குறிகளைக் காட்டும்.

சுரம் விட்டபின், பகலில் தூங்கல், இரவில் விழித்துக்கொண்டே யிருத்தல், அடிக்கடி உடல் வியர்த்தல், தலைசுற்றல், தலையில் ஏதோ ஊருவது போன்ற உணர்ச்சி ஏற்படல், கண்ணிமை துடித்தல், காதிரை தல், கழுத்தில் முள் செருகியது போன்றிருத்தல், நாத்துவண்டது போற் காணல் அல்லது சிவந்திருத்தல், உமிழ்நீர் சுரந்து கைத்தல், அல்லது சிவந்திருத்தல், உடல் முழுமையும் நோதல், கை கால்களின் பூட்டுகள் வலித்து அசைக்க முடியாமலிருத்தல், உடற் சத்தற்றுப்போதல் சோம்பல் என்னுங் குறிகள் காணும்.

இவ்வாறு சுரம் வருவதும் கொஞ்சம் விடுவதுமாகக் காட்டி ஐயப் பெருக்கை யுண்டாக்கி, மிகுந்த சுரத்தோடு மார்பு நோதல், தொண்டை யிற் சளிகட்டல், முகம் உதடு கருத்தல், குறுகுறுவெனும் ஒலி எழுதல், மூக்குத் தண்டு நீண்டு சில்லிடுதல், காது கேளாமை, கைகால் சில்லிடல் என்னுங் குறிகளைக் காட்டிக் கொல்லுவதுமுண்டு.

இவ்வாறு முக்குற்றத்தாலெழுந்த சன்னி நோயை, சில நூலோர் திரிந்த முக்குற்றத்துள் எக்குற்றம் முதலிருந்து மற்றக் குற்றங்களைத் தனக்குத் துணையாகக் கொண்டதோ, அக்குற்றத்தை முன்னிட்டு அதற்குப் பெயர் மூன்று வகை என வகுத்தனர். ஈதன்றி, திரிந்த குற்றங்களின் வன்மையால் காணும் குறிகுணங்களைக் கொண்டோ, அல்லது நோயுண்டான இடங்களைக் கொண்டோ, ஒவ்வோர் பெயரினை யமைத்துப் பதின்மூன்று என யூகிமுனி வகுத்தனர். இந்நோயைப் பத்தெனக் கூறினார் தேரர். அவைகளைத் தனித்து (முப்பிணிநோய்) சன்னி என்னும் தலைப்பின் கீழ்க் கூறப்படும்.

ந்தச்சுரம் (அசீரணச் சுரம்) :

''நித்திரையாம் சீர்ணசுர நேர்மை கேளீர்
நேர்மையாய்ச் சுரமோடே யிளைப்புக் காணல்
மத்திரையாய் விக்கலொடு வயிறு மந்த
மாயிருத்தல் மார்பினொடு தொடை குறங்கு நோதல்
பித்திரையாய்ப் புளித்தேப்ப மிடுதல் வாந்தி
பேர்பெரிய தாகமொடு மூச்சுக் காணல்
சித்திரையாய் வயிறு நொந்து பொருமிக் கொள்ளல்
சீதளமா யுடம்பெங்குந் திமிரு மாமே.''

(பொருள்) இந்நோயில், வயிறு மந்தமாக இருப்பதோடு, மார்பும் தொடையும் வலிக்கும். புளியேப்பம், வாந்தி, தாங்கமுடியாத நீர் வேட்கை, பெருமூச்சு உண்டாகும். வயிறு நொந்து பொருமிக் கொண்டு சுரமுண்டாகி, இளைப்பையும் விக்கலையுமெழுப்பி, ஐயம் மூண்டு கொண்டாற்போல உடலெங்கும் சில்லிட்டுத் திமிர் உண்டாகும்.

நளிர்சுரம் (குளிர்சுரம்) : இச்சுரம் உண்டாவதற்கு முன்பே, மயிர் சிலிர்த்து கண்குவிந்து, கொட்டாவியும் வாந்தியும் எழும். பின்பு குளிரும் நடுக்கலுமுண்டாய் சுரம் காயும். அத்துடன் தலைநோய், கண்களில் நீர் வடிதல், வயிற்றுள் ஒருவித வேதனை, சில வேளை கழிச்சலுண்டாதல், பித்தம் பித்தமாக வாந்தியாதல், சுரம் கொடுமையாகக் காய்தல், மயக்கம், வாய் பிதற்றல் என்னுங் குறிகளைக் காட்டி சுரம் விட்டுவிடும். மீண்டும் ஒருநாள் விட்டு மறுநாள் மேற்கூறியவாறே முற்குறிகளைக் காட்டி சுரம் வரும்.

இந்நளிர் சுரத்திலேயே, மூன்று நாளைக்கு ஒரு முறை வருவதும், நான்கு நாளைக்கு அல்லது ஒன்பது நாளைக்கு ஒரு முறையாக வரும் சுரமுமுண்டு.

வெஞ்சுரம் : இந்நோயில், தாங்க முடியாத தலைநோய், கண் சிவந்து எரிதல், வாய் நீரூறல், மயிர் சிலிர்த்தல் என்னுங் குறிகளைக் காட்டி மிக்க கடுமையாகச் சுரங்காயும். சுரம் விட்டபின், உடல் வியர்த்து, உடல்வன்மை பெரிதும் குறைந்து, மூக்குத் துளையில் அக்கி பீச்சியது போல் சிறு கொப்புளங்கள் உண்டாய்ப் புண்ணாகும்.

மேகச்சுரம் : இதில் உடம்பு முழுமையும் சிவந்து சுரமுண்டாம். அதனோடு வாந்தியாதல், வயிறு கழிதல், உடம்பெல்லாம் எரிதல் நமையுண்டாதல், தோல் தடுத்தல், தலை சுற்றல், மயக்கம் என்னுங் குறிகுணங்களும் காணும்.

உட்சுரம் : இச்சுரம், உடல்வன்மை குறைந்த பேர்க்கு வெளிக்குத் தெரியாமல் உடலின் உள்ளேயே தகித்து, சுரம் இருப்பது போன்று காணப்பட்டு, சோகம், மனத்தளர்ச்சி, கைகால் ஒய்ச்சல், உணவில் விருப்பமின்மை, வாய் குமட்டல், உடல் வெளுத்துத் தலைநோதல், எப்போதும் சுரம் காய்வது போலிருத்தல், வெள்ளோக்காளம், உடல் நாளுக்கு நாள் மெலிந்துபோதல் என்னுங் குறிகுணங்களைப் பிறப் பிக்கும்.

வெளிச்சுரம் : இதில், வாய் கைத்தல், வாய்குமட்டல், உண்ட உணவு செரியாமை, நீர் வேட்கை என்னும் குறிகள் உண்டாகும். ஈதன்றியும், எப்பொழுது பார்த்தாலும் உடல் சுடுவது போலிருப்பினும், சுரநோயில் படுக்கையில் இருப்பதுபோல, இஃது இல்லாமல் தன் தொழிலைச்செய்ய இடந்தரும் என்னுங் குறிகளைப் பெறும்.

விட்டுவருஞ்சுரம் : இந்நோயில், உடல் கருத்துக்கொண்டே வரு வதுடன், உடலின் குருதியும் குறைந்து, நித்தமும் சுரம் காயும். இச் சுரம் நாள் தோறும் வருவதும், காலையில் சுரம் காய்ந்து பின்பு விட்டு, சிறிது நேரம் கழித்து அச்சுரம் மீண்டும் வருவதுமாயிருக்கும். இவ்வாறு நாள் ஒன்றுக்கு ஒரு முறைக்கு மேல் சுரங்காய்ந்து உடலை மெலியச் செய்யும். அன்றியும், கைகால் சூம்பி வயிறு பெருக்கும்.

விடாச்சுரம் : சுரம் உண்டாகுமுன் காட்டும் குறிகளாகிய கண் சிவத்தல், நாவுலரல், நீர்வேட்கை, கைகால் நோதல் என்னுங் குறி களைக் காட்டிச் சுரம் பிறக்கும். அச்சுரம் சிறிது சிறிதாக மிகுந்து சுரம் இறங்காமலே சின்னாட்கள் வரை காய்ந்து பின்பு இறங்கும். இதற்குள் இது பல துன்பங்களையும் விளைப்பதுண்டு. சுரத்தின் வுன்மைக்கேற்ப உடல் வுன்மையும் கெடும்.

சாரற்சுரம் (இரத்ததாது சுரம்) :

"போக்கான ரத்ததாது கதசுரக் குணத்தைப்
புகன்றிடவே பிரமையாய்ச் சுரந்தான் காணாய்
தாக்கான வியர்வையொடு தாக முண்டாய்த்
தன்னுடம்பெல் லானோதன் மூர்ச்சை காணல்
வாக்கான வுடம்பதுவுங் கான்ற லுண்டாய்
வழுவழுத்து நாக்கெல்லா மஞ்சள் போலாம்
நீக்கான நெஞ்சுதனிற் கோழையுண்டாம்
நித்திரையாய் மலபந்த மாக்குந்தானே."

இந்நோயில் மனக்கலக்கம், விடா வியர்வை, மிகுந்த நீர் வேட்கை, உடல் நோதல், அடிக்கடி மூர்ச்சை விடல் முதலியன உண்டாகும். ஈதன்றியும் உடல் கன்றினது போற்றோன்றல், நாவழுவழுத்து மஞ்சள் நிறமாதல், நெஞ்சில் கோழை கட்டல், தூக்கமின்மை, வெளிக்குப் போகாமை (மலங் கட்டல்) என்னுங் குறிகுணங்களையும் காட்டிச் சுரங்காயும்.

சில நூலோர் இந்நோயில் இரசக்கட்டு (இரசதாது) கேடடைதல், உடலின் நீர் வற்றி உடம்பெல்லாம் எரிதல், உடல் நோதல், நீர் வேட்கை, தூக்கமின்மை, உடல் வன்மை குறைதல், நாச்சுவையறியாமை, வாந்தி, பெருமூச்செறிதல், அடிக்கடி விக்கலுண்டாதல், தலைவலி, இளைப்பு, உடல் வியர்த்தல் என்னுங் குறிகளோடு ஐயம் மிகுந்து நாடியும் தளர்ந்து காணுமெனக் கூறுவர்.

செங்கறைச் சுரம் (ரத்த த துகத சுரம்) : இந்நோயில், சுரம் மிகுதியாகக் காய்தல், சுரம் உள்ளபோது, உடலெங்கும் சிவந்து வீங்கினதுபோலக் காணல், மிகுந்த நீர்வேட்கையும், பிசுபிசுத்த வியர்வையும் உண்டாதல், உடல் முழுமையும் நோதல், தோள்கன்றிப்போதல், நாவழுவழுத்தல், மஞ்சள் நிறமாதல், பூட்டுகள் எளிதில் முடக்கவும் நீட்டவும் முடியாதிருத்தல் என்னுங் குறிகளைக் காட்டி, ஐயமிகுந்து, தலைநோதல், மூக்கில் நீர் பாய்தல், மனக்கலக்கம், வாய்பிதற்றல், கைகால் சில்லிடல், தலைகிறுகிறுகித்தல், ஆடல் பாடல் ஆகிய முப்பிணியையும் தொடரச் செய்யும்; அன்றியும் அடிக்கடி கழியும்.

ஊன்சுரம் :

''மலபந்த மாங்கிசகத சுரகு ணத்தை
வழுத்திடவே யதிகசுர மாகக் காணல்
சிலபந்த சுவாசமொடு வியர்வு தோன்றல்
சிக்கியே தேகமெலா நொந்து காண
வலபந்த வுதடுலர்த லாலா பித்த
லுடம்பு புள கிதமாதன் மயிர்க்கூச் சாதல்
அலபந்த மனதுவியா கூல மாத
லருவியெனக் கண்ணினீர் ததும்புந் தானே.''

(பொருள்) இந்நோயில், மிகுதியான சுரங்காய்வதுடன், பெருமூச் செறிதல், வியர்த்தல், உடலெங்கும் நோதல், உதடு உலர்தல், ஆலாபித்தல், மயிர்க்கூச்செறிதல், மனக்கலக்கம், அடிக்கடி கண்ணீர் வடிதல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

அன்றியும், உடல் வறட்சி, படுக்கையில் தானறியாமலே கைகால் களைத் தூக்கிப்போடல், தோல் மினுமினுத்தல், உடல் ஊதல், கொட்டாவி; விக்கல் உண்டாதல், வன்மை குறைதல் என்னுங் குறிகளோடு ஐயங்கூடி, நோயின் வன்மையைப் பெருக்குமெனக் கூறுவாருமுளர்.

கொழுப்புச்சுரம் : இச்சுரம் தொடங்கும் முன்பே, உணவில் விருப்பமின்மை, உண்ணினும் அஃது எளிதில் செரியாமை என்னும் முற்குறி களைக் காட்டி, சுரத்தோடு, தலையில் ஊசியால் குத்துவதுபோல நோதல், தலை புரளல் அல்லது தலை நடுக்கல் என்னும் குறிகளையும் காட்டும்.

என்புச்சுரம் :

''நேர்மையா யெலும்புபற் றியசுரத்தின்
நிலவரங்கேள் மிக்கதா கந்தான் காணல்
மேர்மையாய் மேலெல்லாங் குளிர்ச்சி காணல்
மிகக்கபடச் சுரந்தானும் மேலி ருத்தல்
தீர்மையாய்த் தேகம் வெளுத்திளைத்தி ருத்தல்
தேகமெலாம் பஞ்சுபோற் சீர ணித்தல்
ஆர்மையா யடிவயிறு தனிலே நோதல்
அதிகதீ விரமான மலம்போக் காமே.''

(பொருள்) எலும்பைப் பற்றிவரும் சுரத்தில், மிகுந்த நீர்வேட்கை காணல், உடலின் மேல் தொடுகைக்கு குளிர்ச்சியாய் இருப்பதுபோலத் தோன்றினும், மிகுந்த சுரம் காய்தல், நோய் நெடுநாட்களுக்குத் தொடருமாயின், உடல் வெளுத்து இளைத்துப் பஞ்சுபோல் வெளுத்து, செரியாமை அடிவயிறு நோதல், அளவு கடந்து கழிதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

ஈதன்றியும், நரம்புகள், கீல்கள் நோதல், உடலின் உறுப்புகள் ஆகிய யாவுஞ் சுருங்கி உடலின் நிறம் வேறுபடுதல், கண் மஞ்சளித்தல், தலையை அசைக்க முடியாமை, சிறிது அசைக்கினும் உடல் முழுமையும் பெரிதும் நோதல் என்னுங் குறிகளும் இந்நோயிற்றொடருமெனக் கூறுவர்.

மூளைச்சுரம் : இந்நோயில், உடல் மந்தமடைந்து ஐயத்தைப் பெருக்கி, உண்ட உணவு செரியாமை, புளியேப்பம், கொட்டாவி, விக்கல், கைப்புடன் வாந்தியாதல், சிலவேளைகளில் மிகுதியாக வயிறு போதல், வயிறு உப்பிசம் என்னுங் குறிகளைக் காட்டும். மேலும் மிகுந்த சுரங் காய்ந்து, மனக்கலங்கல், தலை நடுக்கல், உடல் வெளுத்து இளைத்துப் போதல், உடல் வன்மை கெட்டு நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வருதல், மூச்சு வாங்கவும் விடவும் முடியாமல் தடுமாறல், தொண்டை, முழங்கால், பூட்டுகள் நோதல், உடலின் நிறம் வேறுபடல் ஆகிய குறி குணங்களைத் தோற்றுவிக்கும்.

விந்துச்சுரம் : உயிர் நிலைகளெனக் கூறும் உச்சி, புருவம், உதடு, கழுத்து, மார்பு, மார்புக்குழி, உந்தி, முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுண்டுவிரல், தோல், விரை என்னும் இப்பதினான்கு இடங்களில் வலியுண்டாகித் தலைநோதல், தலை அசைதல் அல்லது நடுங்கல், பல்வலி, சுரம், சுவையின்மை, பசியின்மை, உண்ணினும் அது செரியாது விக்கல் உண்டாதல் என்னுங் குறிகளைக் காட்டி வாந்தி, அடிக்கடி கழிதல், வாய் எப்போதும் இனிப்பாகவே இருப்பது போலத் தோன்றல் ஆகிய இக்குணங்களையும் காட்டும். பின்பு, வாய் ஓயாது இருமச்செய்து, பெருமூச்செரிதல், தூக்கமின்மை, உடல் வெளிறடைந்து வீங்கல், உடலின் குருதி வன்மை குறைதல், மனக்கலக்கம், மயக்கம். கை கால் சில்லிடல் என்னுங் கொடிய குறிகளையும் உண்டாக்கும், அன்றியும், ஆண்குறி சுருங்கும். நோய் முதிர்ச்சியடையின் முப்பிணி தொடர்ந்து தன்னை மறந்து பேசல், பிரலாபித்தல், வாய்பிதற்றல் முதலியனவும் ஏற்படும்.

**துன்பச்சுரம் :** திடீரென உண்டாகும் துன்பத்தால், மனமும் உடலும் அதிர்ந்து, உடலில் கொதிப்பேறி, மயக்கம், மூர்ச்சை, அறிவுகலக்கம் முதலியவைகள் உண்டாகிக் கண்சிவந்து மிகுந்த சுரம் உண்டாகும். அத்துடன் வாந்தியாதல், கைகால் நடுங்கல், கண்டவாறு பேசல், ஆடல் பாடல என்னும் முப்பிணி சுரத்தில் காணும் குறி குணங்களும் தோன்றும்.

**முறைச்சுரம் :**

முனிவ ருரைத்த முறைச்சு ரத்தின்
முறையைக் கேளாய் நடுக்கமுறும்
பனிபோல் விறைக்குந் துணுக்கமுறும்
பரிதா பிக்குங் கண்ணெரியுங்
குணுகும் வேர்க்குங் குலைப்பெய்துங்
கொடிதாய்ச் சிரசிற் குத்துண்டாய்
அனல் போற் காயு முடம்பெரியும்
அதுவோர் நாள்விட் டடுத்திடுமே.

அடுக்கும் மூச்சுத் தொய்வுண்டா
மசனஞ் செல்லா திருமலுண்டாம்
நடுக்குங் கூதல் குளிராகி
நாரி சந்து வெடுவெடென்னத்
துடிக்கு மொருநா ளிடைவிட்டுத்
துயரா மிருநாள் விட்டுவருந்
தொடுக்கும் மாதம் வருடமெனச்
சொன்னார் சுரத்தின் வகையீதுவே.

முறையே குளிருங் குலைப்பெய்தும்
முழுதுந் தாகஞ் சந்துகள்நோம்
நிறையா மயிர்க்கூச் சாங்குடையு
நெஞ்சு நோவுங் கொட்டவிடும்.

* * * * *

சுரவாகடம்.

(பொருள்) முறைச் சுரத்தில், குளிருண்டாய் நடுங்கிக் கைகால் விறைத்துக் கொண்டு, கண்களில் எரிச்சல் உண்டாகிச் சுரங்காயும், சுரம் விடுகையில் உடல் வியர்த்து, தாங்கமுடியாமல் தலையில் குத்து

வதுபோல் நோகும் ; இவ்வாறாகச் சுரம் ஒருநாள் விட்டு ஒருநாளாகவும் இரண்டு, மூன்று, நான்கு நாள் கணக்காகவும், திங்கள் கணக்காகவும், ஆண்டு கணக்காகவும் விடாமல் வருவதுண்டு.

அன்றியும், இந்நோயில் பூட்டுகள் தோறும் நோதல், மயிர்க்கூச் செறிதல், நெஞ்சு நோதல், அடிக்கடி கொட்டாவி விடல் என்னுங் குறி களையுங் காட்டும்.

மயக்கச்சுரம்.— இச் சுரம், தலைசுற்றல், வாந்தியாதல், மயக்கம் என்னுங் குறிகளைக் காட்டி, அறிவைக் கெடுத்து, வலிபோல் வலித்துக் காயும். இச்சுரம் உள்ள வரையில் அறிவற்றுக் கிடக்கச் செய்யும்.

பிதற்றல் சுரம்.—இந்நோயில், சுரம் வருமுன்பே மயிர் சிலிர்த்து கண் சிவந்து, கைகால்களின் பூட்டுகள் நொந்து சுரம் உண்டாகும். இச்சுரம் மிகுதியாகக் காய்ந்து, நோயாளன் அறிவையழித்து, கண்டது கண்டவாறாகப் பிதற்றல், படுக்கையிற் றங்காமல் அங்குமிங்கும் ஓடல் என்னுங் குறிகளைக் காட்டும்.

புழுச் சுரம்.—இது பெரும்பான்மையும் சிறுபிள்ளைகட்கு வயிற்றில் புழு சேருவதால் வரும் நோயாம். இந் நோயில், சுரமுண்டாகி இழுப்புப் பிறக்கும். பிள்ளைகளின் கையையுங் காலையும் வலித்து இழுக்கும்; கண் சொருகும் ; பெருமூச்சுண்டாம்.

மஞ்சட் சுரம்.—இச் சுரம், விடாச் சுரமாகக் காய்ந்து உடல் முழு மையும் மஞ்சளித்தல், வாய் ஓயாது வாந்தியாதல், வாந்தியோடு பித்து வெளியாதல், குருதி வன்மை குறைதல், உடல் ஊதிப்போதல் என்னுங் குறிகளைக் காட்டும்.

திவிரச் சுரம்—(இதனைத் தோல் சுரம் எனவும் கூறுவர்.) :

“ தவித்திடாச் சுரநாலின் தன்மை தன்னைச்
சாற்றிடவே சடத்தினிற்குந் தோலைப்பற்றித்
துவித்திட்ட சுரமோடு மென்மை பற்றிச்
சூட்சமாய்க் காய்ந்தசுர மாந்தந் தன்னை
மவித்திடா தெரித்தசுர மாங்கிசந் தன்னை
மருவி நின்ற சுரநாலின் வண்மை தன்னைக்
குவித்திடாக் குணங்களெலாம் குறித்துச் சொல்லக்
குறுந்தோலைப் பற்றியதோர் குணத்தைக் கேளே.”

" குணமாகச் சற்றுடலைக் காய்வ தாகும்
குடிலமாய் நாடிமந்த மாயி ருத்தல்
தணமாகச் சற்றேதான் றலையே நோதல்
தண்ணீர்தான் வேண்டியே தாகங் காணல்
பிணமாக வுடம்பெல்லாம் வெளுத்துக் காணல்
பிரமையாய் வாய்பேசல் வாய்நீ ரூறல்
திணமாக வுடம்பெரிதல் மயக்கங் காணல்
நேர்தோலைப் பற்றுசுர நேர்மையாமே."

எனக்கூறிய பாக்களால், இச் சுரமானது தோலைப்பற்றி வருதலோடு எலும்பையும் பற்றித் துன்புறுத்தி, பெருஞ்சுரமாகக் காய்ந்து மக்களை மிக வாட்டிக் கெடுக்கும். அன்றியும், இந்நோயில் நாடி மெலிந்து நடத்தல், பிணத்தைப் போல் உடல் வெளுத்தல், வாய் பிதற்றல், வாய் நீரூறல் புண் போல உடம்பு நோதல், அடிக்கடி மயக்கம் உண்டாதல் என்னுங் குறி குணங்களையும் காட்டும். இதனால் இது தீவிரச்சுரம் எனவும் வழங்கலாயிற்று.

பழஞ்சுரம்—(இதனை மாறல் சுரம் எனவும் கூறுவர்). :

" வேறாகி யொருநாடான் மாறிக் காணல்
விளங்கிரண்டு நாள் மாறிச் சுரமுண் டாதல்
நாறாகி மூன்றுநா டானா மாறல்
நலத்தவைந்து நாண்மாற லர்த்த ராத்ரி
பாறாகி வருதல்பதி னைந்நாள் மாறல்
பகல்பந்த வொருமாதம் மாறிக் காணல்
வாறாகி வாதபித்த சிலேத்மங் கூடி
மருவிநின்ற சுரந்தானு மாகீக மாமே."

(பொருள்) இச் சுரம் ஒருநாள் விட்டு ஒரு நாளும், இரண்டு நாள் விட்டு மற்றைய நாளும் வருவதுமாக மாறி மாறி வரும் நோயாம். சில வேளை நாளைக்கு ஒரு முறையாகச் சுரம் வருவதும் உண்டு. இந் நோயில் மூக்குற்றங்களாகிய வளி, தீ, ஐயம் ஒன்று கூடிப் பல துன்பங் களையும் நன்கு விளைவிக்கக்கூடுமென அறிக.

**தாகச் சுரம் :**

'' உடம்பிற் றோன்றுந் தாகசுரத்
துண்டாங் குணத்தை யுரைத்திடக்கேள்
திடஞ்சே ரனலைப் போற்காயுந்
திட்டுந் தாக மாறாது
கடித்தே கைகால் வயிறெரிக்குங்
கடிக்கும் பல்லை யுடம்பழற்றுந்
கிடந்தே புரளு மெழுந்திருக்குங்
கிளரும் நாக்குப் பிறண்டிடுமே.''

'' வரளும் மாக்கங் கரம்போலாம்
வடவை போல வேயெரிக்கும்
புரளும் பிதற்றும் தண்வாயாற்
போத வூதும் மூச்செறியுந்
திரளுந் தனமா தேயுழற்றுஞ்
செய்யும் வாகை பலவிதற்குத்
தாளம் போலக் குளிர்கழுநீர்
தனிற்பூ வைப்பொட் டாய்க்கூட்டே.''

—சுரவாகடம்

(பொருள்) இந் நோயில், சுரத்தில் பெருந் தீயேபோல் மிகுந்த அனலுடன் சுரங்காயும், இடைவிடாது நீர்வேட்கையுண்டாகும். வயிறு கைகால் முதலியவைகளில் எரிச்சல் தோன்றிப் பற்களைக் கடித்தல், வாய் பிதற்றல், படுக்கையில் கிடவாமல் புரளல் அல்லது எழுந்து திரிதல், நாவறளல், பெருமூச்செறிதல் என்னுங் குறி குணங்களையுங் காட்டும்.

மிகுகுளிச்சல் சுரம்—(அதிசாரச் சுரம், பித்த அதிசாரச்சுரம்). :

கொதித் தெழுஞ் சுரத்தின் முன்னே
கொண்டிடும் பொசிப்பு றாதே
சதித்திட மந்த மாகித்
தாகநா வறட்சி யுண்டாம்
விதித்திடுங் கரமும் பாதம்
வெச்சென்று குளிர்ந்தி ருக்கும்
கதித்ததி சார பித்த
சுரமதின் குணங்க டானே.

(பொருள்) சுரநோய் உண்டாவதற்கு முன்பே பொசிப்பில் விருப்ப மின்மை, வயிறு மந்தமாகவே இருத்தல், நாவறட்சியாயிருத்தல், கையுங் காலும் சில்லிட்டிருத்தல் என்னுங் குறிகளைப் பெறும்.

சுரத்திடை யுதரம் விம்மி யிரைச்சலுந் துள்ளிக் காட்டிப்
பெருத்திடுங் கழிச்சல் மென்மேல் ஆகமும் பிரமை யாகும்
பொருத்திடு மசைவை யெல்லாம் புண்ணெனக் குத்தி நோவாம்
உரைத்தவிக் குணங்கள் பித்த விரத்ததி சார மாமே.

(பொருள்) காயும் சுரத்தின் கொடுமையால் வயிறுவிம்மிப் பொருமி இரைந்து பொங்கி எழுந்து, பெருங் கழிச்சலாக அடிக்கடி கழிதல், மனக் கலக்கம், உடலின் உறுப்புகளை அசைக்கவும் முடியாமை, உடல் முழு மையும் புண்போல் நோதல், கழிச்சலோடு மிகுதியாகக் குருதியும் வெளி யாதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

பிறவழிச் சுரங்களில்—மோதுசுரம் (அபிகாத சுரம்) :

''திமிரான அதிகநடை குதிரை யானை
சுமையெடுத்த லதிகமாய் வேலை செய்தல்
திமிரான தாகமோ டிளைப்பு கைகால்
தளர்ந்திட்டுப் பனிதனிலே சஞ்சரித்தல்
அமிரான வபிகாத சுரந்தா னுண்டாம்
மதின்குணங்க டாகமுடனுடம்பெல் லாநோம்
வெமிரான வியர்வையொடு லோபம் பிரமை
மிகக்குளிர்ந்த போசனத்தி லாசை யாமே.''

(பொருள்) உடல் வன்மை மிக்கிருக்கின்றதெனக் கொண்டு, மிகுதி யாக நடத்தல், யானை குதிரை ஏறல், தான் தாங்கக்கூடாத சுமை யைத்தூக்கித் திரிதல் முதலியவற்றைச் செய்யில் இளைப்பை யுண்டாக்கி, கை கால்கள் தளர்ந்து இந்நோய் வரும். இன்னும் பனிக்காற்றிலீடு படுதலாலும் இந் நோய் வருவதுண்டு. இந் நோயில் உடல் முற்றும் நோதல், உடலில் வியர்வை மிக உண்டாதல், ஏப்பம். பிரமை, குளிர்ந்த உணவின் மீது இச்சை இவைகள் ஏற்படுதலாகிய குறிகுணங்களைக் காட் டும்.

நாவேறு சுரம்.—(சாப சுரம்) பெரியோர்களேனும், கடவுளை வணங்கி வழிபடுபவரேனும் மனங்கசிந்து கடினமாகப் பேசின், அவர்கள் கூறும் வார்த்தைகளைப் பெற்றோர்கட்கு வருஞ் சுரத்தை நாவேறு

சுரம் என்பர். இந் நோயில், மனஞ் சோர்வடைந்து சுரம் உண்டாதல், தலை நோதல், வாந்தியாதல், தயக்கமுண்டாதல் முதலியவற்றைப் பிறப்பிக்கும். அன்றியும் சுரத்தின் அளவாக உடல் மெலிதல், வாய் பிதற்றல், தான் செய்த குற்றத்தை நினைந்து வருந்துதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

ஏவல் சுரம்—இது மந்திரம் முதலியவைகளாலும், சூனியம் ஏவல் என்னுமிவைகளாலும் பிறப்பதாகும். இந்நோயில், உடல் முழுமையும் கொப்பளங்களுண்டாய் விடாச்சுரமாகக் காயும், இஃது உடலைப் பற்றி வாராமல், மனத்தைப்பற்றி வருதலால், இதில் மனச்சோர்வு, மனக் கலக்கம், மனம் வேறுபடுதல், வாய் பிதற்றல் என்னுங் குறிகளையுங் காட்டும்.

பூத சுரம் :

''அழிதலாம் பூதசுரத் தாண்மை கேளீர்
ஆதியந்த குமரகண்டம் போல்வ லிக்கும்
கழிதலாங் கண்ணுருட்டி யேவி ழிக்கும்
கறுத்தலுடன் கருதியே பிரலா பிக்கும்
விழிதலாம் போசனங்கண் மிகவி ரும்பும்
வேண்டினதெல் லாமிகவு மாசை யாக்கும்
பழிதலாம் பாடலோ டாட லாதல்
பாரமயிர்க் கூச்செறிதல் நித்திரை யாமே''.

''ஆதியாம் பூத வெப்பின்
குணத்தினை யறையக் கேளாய்
வாதியாய்ச் சீறிப் பேசும்
வார்த்தையுஞ் சத்த முண்டாம்
ஊதையாய்ச் சிரமி டிக்கும்
உரையின்றி மயக்க மாகுஞ்
சாதியாம் மெய்க னக்குஞ்
சரீரமுந் தவிப்புண் டாமே.'

''தவித்திடுந் தாக மெத்தத்
தழவென வெரிந்துகாயு
மூவத்துட னலறும் வேர்க்கும்
மடிக்கடி விட்டுக் காயும்

சிவந்திடுங் கண்கள் மூக்குச்
சீறிடும் மூச்சுத் தோன்றும்
பவத்தினுக் கிடரே பண்ணும்
பலப்பல சேட்டை யாமே.''

''சேட்டையாம் வயிறு போகுஞ்
சீறியே ஞானம் பேசும்
கோட்டிகள் மிகவே செய்யும்
குணமிது கண்ட போதே
நீட்டுதேங் கிளநீர் தன்னை
நெருப்பினால் வற்றக் காய்ச்சி
யாட்டுப்பற் படகஞ் சுக்கு
அரைத்துடன் குடித்தி டாயே.''

சுரவாகடம்.

(பொருள்) இச் சுரத்தில், குமரகண்ட வலி என்று இந்நூலிற் கூறிய வலியைப்போல் வலித்து, கழிச்சல், கண்களை உருட்டி விழித்துப் பார்த்தல், உடல் கறுத்துப் போதல், பிரலாபித்தல், மிக்க உணவை விரும்பல், எப்பொருளும் வேண்டுமென ஆசைப்படல், வாய்ப்பிதற்றல், ஆடல் பாடல்களைச் செய்தல், மயிர்க் கூச்செறிதல், மிக்க உறக்கம் கொள்ளுதல் என்னுங் குறி குணங்களுண்டாகும்.

அன்றியும், இச் சுரத்தில் மிகுழ்ந்த உரத்த ஒலியோடு சீறிப்பேசல், தலையிடிப்பு, பேச முடியாமல் அடிக்கடி மயக்க மாதல், உடல் கனத்தல், உடற்றவிப்பு, மிகுந்த நீர் வேட்கை உடல் நெருப்புப்போல் காய்தல், வியர்க்குதல், கண்கள் சிவத்தல், மூக்குக் கோபக் குறியைக் காட்டல், பெருமூச்சுத் தோன்றல், வயிறு கழிதல் முதலிய பல குறிகுணங்களைக் காட்டும்.

மேலும் ஒன்றுமின்றியே அழுதல், நகைத்தல், குமரகண்ட வலியைப் போல் இழுத்தல், கண்களை உருட்டி விழித்தல், உடல் முழுமையும் நோதல், குத்தல், அல்லது எரிதல், ஏப்பம், விக்கல், கொட்டாவி, மனத் தடுமாற்றம் என்னுங் குறி குணங்களையும் காட்டும் இப்பிணியில் முக் குற்றங்களுங் கூடி முப்பிணியைத் தொடரச் செய்து, உடல் முழுமை யும் வியர்த்து சில்லிட்டுக் கொல்லுமெனச் சில நூல்கள் கூறாநிற்கும் இதற்கு இளநீரை வற்றக் காய்ச்சி, பற்பாடகம், சுக்கோடு அரைத்து அத்துடன் கலந்து குடித்தல் நல்லது எனவுங் கூறுவார்.

மருந்துவேகச்சுரம்.—நஞ்சுத் தன்மைகளையுடையதான ரசம், கந்தகம், தாளகம், நாபி, சேங்கொட்டை முதலியவைகளைக் கொண்டு செய்த மருந்துகளை நோய் வன்மைக்கும், உடல் வன்மைக்கும் தக்கவாறு கொடாததினால் உண்டாகும் சுரம் மிக்கதாம். இதனால், குருதி கேடடைந்து, வாய் புண்ணாய், உடல்வீங்கிச் சுரம் வரும். இத்துடன் இருமல், தும்மல், கழிதல், வாந்தியாதல், உடல் வெளுத்தல் என்னுங் குறிகுணங்களும் காணும்.

நச்சுச் சுரம் (விடச்சுரம்).—இது நஞ்சுத் தன்மையுடைய சிறு பூச்சுப்புழுக்களின் கடியால் வருவனவாகும். இந்நோய் கடித்தவிடத்தில் வீங்கல், நமையுண்டாதல், எரிதல், என்னுங் குணங்களைக்காட்டி, உடல் முழுமையேனும், அல்லது முகத்திலேனும் நீர்க்கோத்து உப்புதல், சுரங் காய்தல் அதனோடு விக்கல், ஏப்பம், செரியாமை, பச்சை நிறத்தோடு வாந்தியாதல், மயக்கம், மூர்ச்சை என்னுங் குறிகளையும் காட்டும் அன்றியும்,

அவஞ்சேர் விடமாஞ் சுர தன்னி
    னடைவைக் கேளங் கங்காயுந்
நவஞ்சேர் கால்தான் மிகக்காயா
    நாக்கு வரளு முலர்தலுண்டா
முவந்த பேரைக் கட்டிமிக
    வையேபிழையே னெனச்சொல்லுந்
நிவந்த சந்து மொழிகளுந்
    நெடிதாய்க் காயு மமர்ந்திடுமே.

அமரும் விட்டு விட்டுழலு
    மதிக மாக வேயூதுந்
தமரு மவிகள் முறமயக்குந்
    தானே தெளியு மிதுதனக்குக்
கமரும் பொருந்தும்

(பொருள்) கையிலும் காலிலும் சுரத்தைப்போல் சூடுண்டாகி நாவறண்டு உலரும், கண்டவர்களை எல்லாம் கட்டியணைத்து 'நான் செத்துப் போய் விடுவேன்' என்று அழுதல், காற்சந்தும் நோதல், பேச்சும் தடுமாறல், மிக்க சுரம், விட்டுவிட்டுக் காய்தல், உடல் மிகுதியாக ஊதல் மயக்கத்தை உண்டாக்குதல், அம்மயக்கம் தெளிந்து மீண்டும் மயக்கம் உண்டாதல் ஆகிய குறிகளையுங் காட்டும்.

சினச் சுரம்.—தீக்குற்றம் தன்னளவில் மிகுந்து குருதியை வெம்மைப் படுத்தியுள்ளபோது, அடக்கமுடியாத சினமெழுந்து கண்டது கண்டவாறு பேசின், சினமடங்காது தலை இடித்து, கண்ணிருண்டு, மயக்கமுண்டாகிச் சுரணையற்றுக் கீழே விழச் செய்யும். இதனால் மிக்க சுரமுண்டாம்.

பயச்சுரம்.—இந்நோயில், எதுவுமின்றித் திடீரென அச்சமுண்டாகித் திடுக்கிட்டு உடல் நடுங்கி, வியர்த்துத் தலை கனத்துச் சுரமெழும் அதனோடு வயிறு எரிதல், கண் சிவத்தல், தலை சுற்றல், மயக்கம் மயிர் சிலிர்த்தல், பெருமூச்சு விடல், சத்தற்றுச் செத்தைபோலக் காணல், மார்பு துடித்தல், வயிற்றில் ஒன்றும் இல்லாதது போன்ற தாற்றம், பற்கடித்தல் என்னுங் குறிகுணங்களும் காணும்.

வருத்த சுரம்.—மனவருத்த முண்டானதின் அளவாக சுரமுண்டாய் அதில் மனம் வேற்றுமையடைந்து தன்னிலை யறியாமல் வாய் பிதற்றல், ஆடல், பாடல், அழுதல் என்னுங் குறிகள் உண்டாகும்.

இச்சை (காமச்) சுரம்.—இச்சை மிகுதியாலெழுந்த இச்சுரம், அறிவினை மயக்கி, தன்பண்புகளை இழந்து, உடல் எரிச்சல், கண் எரிச்சல், மயக்கம், நாவறளல், நீர்வேட்கை, மார்பு துடித்தல் என்னுங் குறிகளைக்காட்டி மிகுந்து சுரம் காயும்.

தெய்வச் சுரம்.—இது கடவுளுக்குப் படைப்பதென்று செய்யப்படும் பொருளைப் படைப்பதற்கு முன்பு திருடித்தின்னல், கடவுளைப் பழித்தல் என்பவைகளால் பிறக்குஞ் சுரமாம். இச்சுரமானது மேற்கூறிய செயலைத் துணிந்து செய்தபின், தன் குற்றத்தையறிந்து வருந்துவதால், வருமாகையால் இந்நோயில் தான் கொண்டவருத்தத்தின் அளவிற்குத் தக்கவாறு, சுரம் வரும். அச்சுரத்தின் அளவாக, தலை நோதல், மயக்கம், வாந்தி தலை சுற்றல், பிரமை முதலியன உண்டாகும்.

வாந்தி சுரம் (சத்திச் சுரம்) :

''விரைவாஞ் சக்தி சுரமதுகேள்
வேர்க்கும் வயிறு தான்கழியும்
புரைபோல் வயிறு பொருமியெழும்
புண்ணா யுடம்பு மிகநோகும்

இரையும் வாந்தி தான்செய்யும்
இதமா காது நாவறளும்
கரைவா யசனங் கொள்ளாது
கடுத்தே யகலு மகன்றிடுமே''

(பொருள்) வாந்தி சுரத்தில், உடல் வியர்த்துக் கழிச்சலுண்டாகும், வயிறு பொருமல், உடல் புண்போல் நோகுதல், வயிறு இரைதல், அடிக்கடி வாந்தியாதல், காது கேளாமை, நாவறண்டு உணவு கொள்ளாது கீழ்வாய் கடுத்துக் கழிச்சலுண்டாதல் என்னும் குறிகுணங்களைக் காட்டும்.

ஊறுவாய் நீர்ச் சுரம் :

''ஊறு வாய்நீர்ச் சுரமதனை யுரைப்பேன் கேளாய் சிரம்வேர்க்கும்
வீறு முதரம் மிகப்பொருமும் விக்குஞ் சத்தி வாயூறுங்
கூறு மலந்தா னுதைத்துவிழுங் கொடிபோல் மெய்யுந் துவண்டு [விடும்
காறும் வாய்தான் புளித்துமிகக் கசந்து வெதும்புங் காரிகையே.''

''கார்போ விருகண் கருகிவிடுங் கையுங் காலுஞ் சில்லென்றே
வேர்வா யிருக்கு நீர்தாகம் மீறுங் குடித்தால் மேலேடுக்கும்.''

(பொருள்) சுர நோயில், வாயில் எப்போதும் நீர் ஊறும், செந்நீர் வாயில் கொப்புளிக்கும், வாந்தி பண்ணும், மலங்கழியும், பூங்கொடியைப் போன்று உடல் துவளும், வாய் புளித்தல் அல்லது கசத்தல் பெற்றுத் துன்புறும், இரு கண்களும் கருத்தமேகம் போன்று கருக்கும், கால் கைகள் சில்லிட்டு வியர்வை உண்டாகும், நீர் வேட்கை மிகுந்து நீர் குடிக்கில் வாந்தியாகும்.

காலைச் சுரம் : பகல் சுரம் : மாலைச் சுரம் : இராச்சுரம் : அதிகாலைச்சுரம் : நடுக்கல் சுரம் : ஆகிய இச்சுரங்களில் குறிகுணங்கள் சற்றேறக் குறைய மற்ற சுரத்தினைப் போலவே காணப்படுமாயினும், சுரம் வருகின்ற வேளையை யொட்டி முதல் ஐந்து பெயரிட்டனர்போலும், கடையது சுரத்திலுண்டாம் நடுக்கலைக் கொண்டு பெயரமைந்தது.

ஏப்பம் : கொட்டாவி : விக்கல் : சுரங்களாகிய : ஆகிய இவைகள் வளிக் குற்றத்தின் அளவாக வருதலின், இவைகள் வளிச் சுரத்துள் அடங்கும்,

வியர்வை சுரம் : தூங்காச் சுரம் : அழல் சுரம் : இவைகள் அழல் (பித்த) குற்றத்தால் எழுமாதலின் அச்சுரத்தில் அடங்கும்.

இருமல் சுரம் : கட்டி சுரம் : பல் தொப்புளச்சுரம் : சீழ்ச் சுரம்: கலவிச் சுரம் : செயற்கை சுரம் :ஆகிய இவைகள் ஐயத்தால் வருவனவாகையால் ஐயசுரத்திலடங்கும்.

அனல் சுரம் : தோலைப்பற்றிய சுரம் இவை தீவிரச் சுரம் என்னும் தொகுப்பில் அடங்கும். ஆதலின் இந் நான்கு வகுப்பில் கூறிய சுரங்களைத் தனித்துக்கூறவில்லை. ஆக அறுபத்து நான்கு சுரங்களாம்.

குற்ற முதலிய வேறுபாடுகள் :—முற் கூறிய அறுசுவையுண்டியின் வேற்றுமைகளாலும், தகாத நடத்தைகளாலும் வளி முதலான முக் குற்றத்தினுள், ஒன்று தனித்தேனும், இரண்டுங் கூடியேனும், மூன்றுங் கூடி ஒன்றாக இணைந்தேனும், அவைகளின் இயற்கை அளவைக் கடந்து நிற்குமாதலின், வேற்றுமையடைந்த குற்றங்கள் இரைப்பையைப் பற்றி (ஆமாசயத்தைப்பற்றி), மெல்லியதாகவும், சற்றுக் கடினவடிவோடு அடைபோன்று இயற்கையாய் அகட்டின் உட்புறம் படிந்துள்ள இவ் வையவடையை, மிகுந்தெழுந்த குற்றங்களின் வன்மைக்குத் தக்கவாறு, இளக்கி உப்பச் செய்விக்கும். அகட்டில் (இரைப்பையில்) இளகிப் பெருத்த அந்த ஐய அடையானது, உடற்கு வன்மைதரும் உணவைச் செரிப்பிக்காதபடி செய்தும் அவ்வாறு சரிவரச் செரியா உணவுக்குழம் பையும் அணுகி, நாடோறும் அக்குழம்பைச் (இரசத்தைச்)செலுத்துகின்ற துளைகளையும் அடைத்து மயிர்க் கால்களின் கண்ணையும் மறைக்கும். அதன்பின் குடற்கு (பக்கவாசயத்துக்கு)ச் சென்று, அங்கு இயற்கையாய் இயங்கும் உடற்றீயை (சடராக்கினியை) யும் விசிறி, மேலெழுப்பி உடல் முற்றும் அவ் வனலைப் பரவச் செய்யும், இவ்வாறு கதித்தெழுந்த அனலே ''சுரம்'' எனப்படும்.

இதனைக் கீழ்க்குறித்துள்ள அகத்தியர் குணவாகடப் பாக்களாலும் தேரன் பாக்களாலும் அறிக.

''கேளப்பா சுரம்பிறக்கும் வகையைத் தானே
கெடியான அறுசுவையின் பேதத் தாலும்
தாளப்பா தகாததம் நடக்கை யாலும்
தருவான வாதபித்த சிலேத்ம மென்னும்

மூளப்பா முத்தோட மொன்றாய்க் கூடி
முடிவாக விரண்டிரண்டாய்த் தொந்தித் தேதான்
சூளப்பா தனித்தனியே ஆக்ர மித்துச்
சுகமான வாமாசயம் பற்றுந் தானே.''

''பற்றியங்கு மிருதுகெட்டி ரூப மாகப்
படிந்திருக்கும் ஆமமெனுஞ் சிலேத்ம வடையைத்
தத்திதங்கள் வன்மைக்குத் தகவி ளக்கித்
தகுந்தபடி யவ்வடையை யுப்பச் செய்து
சக்தி தரும் அன்னத்தைச் செரியச் செய்து
சதுரான சீரணத்தின் நரம்பின் துவாரம்
சுத்திவரும் ரோமத்தின் துவாரந் தன்னைச்
சுகமாக மறைத்தபின்பு சொல்லக் கேளே.''

''சொல்லுகிறேன் பக்குவாசயத் தானம் சேர்த்துச்
சுகமாக வளர்ந்துவரும் சடராக் கினியை
மெல்லவே விசிறியே யெழுப்பி விட்டு
மெதுவாக அதனுடனே தானுஞ் சேர்ந்து
வல்லவே சரீரத்தில் பரவிப் பின்பு
வலமாக உடல்முழுதும் கொதிப்பைத் தந்து
அல்லலுடன் தேகத்தைக் கொடுமை செய்யும்
அழலான சுரமதனின் றன்மை தானே.''

அகத்தியர் குணவாகடம் (கையேடு) என ஒரு பாடமும் ;

''சுரம்பிறக்கும் வகையதனைச் சொல்வேன் முன்னால்
சொன்னவழி யறுசுவையும் மாற லாலும்
பெருந்தகா நடவடிக்கை யால்முக் குற்றம்
பிரியாமற் கூடியுமங் கிரண்டி ரண்டாய்
மருவியே தனித்தனியாய்ச் சூழ்ந்து முன்னர்
மாசுபடா திருந்தவா மத்தைப் பற்றி
ஒருவுதலி லாமலதன் மென்மை கெட்டி
யுருவச்சீ தத்தினடை யதனைச் சேர்ந்தே.''

"தங்களுடை வன்மைதனைக் காட்டி யதனின்
தன்வழிகெட் டுப்பும்வழி தன்னைச் செய்து
நுங்குமுண வாதிகளைச் சமித்தல் செய்யா
நோயடர்ந்து சமிநரம்பின் வழியு மயிரின்
தங்குவழி தமைமருத்துப் பக்குவா சயத்தைச்
சார்ந்துவன லுடற்றீயை விசிறித் தூண்டி
அங்கதிற்றா முங்கூடி யுடல முற்றும்
அழலாக்கி யல்லல்பல விளைக்குந் தானே."

என மற்றொரு பாடமும் உண்டு.

(பொருள்) மேற்கூறிய இரண்டு நூலாசிரியர்களும், சிலேத்தும அடை என்னும் சொல்லை, 'ஆமம்' என்னும் வடமொழி சொல்லுக்கு இணையாக்கிக் கூறியது, அந்நூல் வழித்தழுவுதலைக் குறிக்கும். தமிழ் மருத்துவ வழியில் நோக்கின், தேரசேகரப்பாவிதனைச்,

" .. .. .. .. .. குடல்தன்னிற்
சீதமலாது சுரமும் வராது திறமாமே."

என்றதனாலும்,

"சீரணமின்றிச் சுரமும் வாராது .. .. .. ..",

என்றதனாலும்;

"என்று துரியோ தனனு
மிளையவனு மங்கர்கோனும்
என்றுமடமே புரியும்
எண்ணமுள சகுனியும்
மந்தரா லோசனை யென்னும்
மந்த வசீகரண முண்டாய்த்
தந்திர புளிப்பு மீறித்
தானனைய வெப்ப மானதினாலே."

எனத் தேரர் மருத்துப்பாரதத்தில் கூறியதாலும் ;

உணவு, செயல் முதலிய வேறுபாட்டால் சுரம் வருமுன் இரைப் பையில் ஈரம் தட்டி சூல்கொண்டு, உண்ட உணவைச் சமைக்காது புளித்து, செரியாத புளித்த உணவுச்சாறு, சமை நாளங்கள்

வழியே (Lymphatic vessels) மயிர்க்கால் துளையையும் அடைத்துச் சிறுகுடலைச் சார்ந்து உடற்றீயைப் பெருக்கிப் பரவச் செய்து வளிமுதலாய குற்றங்கள் மாறுதலின் வன்மைக்குத் தக்கவாறு சுரத்தை வெளியாக்குமென உரைத்தல் சித்தர் நூல் வழியாமெனக் கொள்ளக் கிடக்கும்.

இச்சுரநோயில், உடலில் உணவுப்பையும் குடலும், இயற்கைத் தொழிலில் கெடுவதால், உணவின் சாரம் (இரசம்), குருதி, நிணம், சதை முதலான உடற்கட்டுகளும், மற்றும் நீர், எரு ஆகிய இவ்விரண்டும் கேடடையும்.

இவ்வாறெழும் முக்குற்ற வேறுபாடுகளும், உடற்கட்டுகள், நீர், எரு இவைகளின் வேறுபாடுகளும், புறவழியேயுண்டாம் நச்சுச் சுரம், மருந்துகளின் தீங்கால் பிறக்கும் சுரம், நச்சுச் சுரம், வேக சுரம், காதல் சுரம், மருட்டுச் சுரம், வருத்தச் சுரம், சினச் சுரம், நச்சுச்சொல் சுரம், பேய்ச் சுரம், அடிப்பட்டு வரும் சுரம் என்னும் இப்பத்து வகைச் சுரங்களில், மற்றச் சுரங்களைப்போல் தீனிப் பையிலுண்டாம் வேற்றுமைகள் உண்டாகாமலே சுரமெழுந்து பின் குற்றங்களையும், உடற்கட்டுகளையும், கழிபொருள்களையும் தாக்கி அகட்டையும் பற்றும்.

நாடி :

பாங்கான வாதத்திற் சேத்தும நாடி பரிசித்தால் ... ...
* * * * *
*
*
*
ஓங்காணும் சுரமுடனே .. .. .. .. ..
சதகநாடி :

வளி நாடியும், ஐய நாடியும் ஒன்று மற்றொன்றைச் சேர்ந்தாற்போல் நடக்கின் சுரநோயெனத் தெளிக.

" உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு ....... அத்தி சுரம்.
*
*
*

அழல் நாடியானது வன்மையோடு நடப்பதுபோலோடின் சுரநோயுள்ளது எனவும், அஃது என்புச்சுரமெனவும் அறிக.

"பண்பான பித்தத்தில் சேத்மங்கூடில் பரிசித்தால் அத்தி சுரப்

*  *  *  *  *  *

*  *  *  *  *  *

*

அழல் நாடியும் ஐயநாடியும் ஒன்று சேர்ந்து நடக்கில் என்புச் சுரத்தைக் குறிக்கும்.

சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில்

முறைக்காய்வு .. .. ..

அழல் நாடியும் வளி நாடியும் சேர்ந்து நடக்கக்காணில் முறைக்காய்ச்சல் நோய் என அறியக்கிடக்கும்.

வாதந்தான் தனித்து நின்று வந்திடும் பந்து போலத்
தீதறவெழும்பி நின்றாற் சிக்கியே மந்தம் பற்றும்
ஏதுவாற் சுரங்கள் கண்ட திடைவிடா நிற்கு மல்லாற்
தாதுவுங் குறைந்து நின்று தன்னையு மறக்கச் செய்யும்

நாடிநூல்—

(பொருள்) என்றதால், வளிநாடியானது திரண்டுருண்டு பந்துபோல் உருண்டு ஓடுவதுபோல் காணின் குடலில் மந்தம் பற்றின்சிக்கியததனால் சுரம் உண்டாம். அச்சுரம் இடைவிடாது காயும். அன்றியும் உடற் கட்டுகளின் வன்மை குறைந்து அறிவையும் மயக்குமென்க.

உற்றிடு வாத நாடி ஒருவிர லுள்ளே நின்று
பற்றியே சிலும்பி நின்று பையவே நடக்கு மாயின்
மத்திய சுரமே யாகும் மாலைசுரமதுதா னாயின்
அத்தியே பற்றி யோடி யடங்கிடா தெழும்பி நிற்கும்.

(பொருள்) வளிநாடி சிலும்பி, நின்று மெதுவாக நடக்கில், தோன்றும் சுரம், பெரும் காய்ச்சலாகத் தோன்றாமல் மாலையில் வரும் சுரங்களில் ஒன்றாகிய என்புச்சுரமென அறிக.

வளர்ந்திடும் பித்த நாடி வலமிடம் பிசகா வண்ணம்
பிளந்தது தனித்துப் பச்சைப் புழுநழு கல்போ லோடில்
உளந்தனில் வரட்சி தங்கி யுடம்புலர்ந் தத்தி தன்னில்
விளைந்திடுஞ் சுரங்கள் வந்து ... ... ..

(பொருள்) அழல் நாடி இடம் வலம் பிசகாமல் நேராகப் பச்சைப் புழு தலையாலூர்ந்துபின் பாகத்தைச் சற்று முன்னிறுத்தி உடலை மேலுக்காக வளைத்து ஊர்ந்து செல்லுவது போல் நடக்கின், உடலில் வரட்சி யுண்டாய் உடம்புலர்ந்ததால் உண்டான என்புச்சுரமெனக் கொள்க.

ஆனதோர் வாத நாடி அடர்ந்துற வலுவாய் நிற்கில்
ஊனமா முடிவில் நோய்கள் உலாவியே நிற்கு மாகில்
தானமாம் பித்த நாடி தான் வலுவாக நிற்கில்
காணமாங் குழலி னாளே காய்ச்சலுங் கடின மாமே.

(பொருள்) வளிநாடி தன் இயற்கை வன்மைக்கு மிகுந்து நிற்கு மாயின் ஊனத்தை விளைக்கும் நோய்களை வருவிக்கும். அவ்வேளையில் அழல் நாடியானது வன்மை பெற்று நடக்குமாகில் சுரம் மிகக்கடின மாகத் தோன்றும்.

சுரநோயில் பிறக்கும் துணை நோய்கள் :

சுரமதே கனலதாகும் சுரமதே சீதமாகும்
சுரமதே தோட மாகும் சுரமதே சோகை யாகும்
சுரமதே மேகமாகும் சுரமதே கபமு மாகும்
சுரமதே சாரமாகும் சுரமதே தாகமாமே.

சுரமதே வறட்சி யாகும் சுரமதே விரத்த மாகும்
சுரமதே சீழு மாகும் சுரமதே மஜ்ஜை யாகும்
சுரமதே கணைய தாகும் சுரமதே இரும லாகும்
சுரமதே சயமதாகும் சுரமதே பொரும லாமே.

சுரமதே சூலை யாகும் சுரமதே சொறிய தாகும்
சுரமதே விரண மாகும் சுரமதே பித்த மாகும்
சுரமதே வாத மாகும் சுரமதே வாயு வாகும்
சுரமதே ஈளை யாகும் சுரமதே இழுப்பு மாகும்.

அகத்தியர் சுரநூல் 300.

விரிவுரை :

"சுரமதே கனலதாகும்" சுரம் வந்து துன்புறுத்துங்கால், பல வகையான அழல் குற்றம் மிகுந்து, செந்நீர் முரிந்து குறைந்து நின்ற நிலையில், சுரம் உண்டாய் கொழுமை கெட்டு, நீர்க்கடுப்பு, என்புருக்கி முதலிய வெப்பு நோய்கள் தொடர்ந்து தோன்றும்.

" சுரமதே சீதமாகும் " சுரநோய் உள்ளகாலத்து, அழல் வளி குற்றங்கள் ஒன்றுகூடி மிகுதலாலும், அல்லது ஐயமிகுதலாலும் வெப்பம் குறைந்து, வளியைச் சேர்க்கையால், குரல் கம்மல், சீதங் கண்டு வாதம் முதலிய ஐயக்கூட்டின் நோய்கள் தோன்றும்.

" சுரமதே தோடமாகும் " சுரம் உள்ள பொழுதும், சுரம் விட்ட உடன் ஆகாத உணவுகள், தகாத செயல்கள் ஆகிய இவற்றாலும் குற்றமெழும். சுரம் நீங்கிய பின் பத்து நாட்கள் வரையில், குளிர்ந்த நீரைப்பருகுதலும், புளிப்பு, உப்பு, கைப்பு, துவர்ப்பு உள்ள பொருள்களை உண்ணுதலும், சந்தனம், புனுகு போன்ற நறுமணங்களைக் கொள்ளுதலும், மிக்க காற்று, பனி, நிலவு உள்ள இடங்களில் படுத்தலும், விரைந்த நடை, ஊருதி ஏற்றம், சினம், அழுகை, பெண் இச்சை இவற்றை நிகழ்த்தலாலும் சுரத் தால் மெலிவடைந்த உடலில், ஏழு உடற்கட்டுகளும் மெலி வடைந்து முக்குற்றமிகுந்த, சுரம் மீண்டும் வருமென அறிக. இதனையே சந்நிதோடம் எனக்கூறுவர்.

" சுரமதே சோகையாகும்" வளி சுரம், மாறல்சுரம், குளிர்ச் சுரம், தாதுகத சுரம் ஆகியவைகள் நீடித்து நிற்குமாயின், அழல் மீறி, குருதி நீர்த்துவிடும். அதனால், காமாலை, சோபை, பாண்டு, கல்லீரல் மலர்ச்சி, மண்ணீரல் மலர்ச்சி இவைகளுண்டாகும்.

" சுரமதே மேகமாகும் " பித்தசுரம், வெஞ்சுரம், உட் சுரம், என்புச்சுரம், வரட் சுரம், வேனில் சுரம், விடாச் சுரம், அம்மைச் சுரம் ஆகிய சுரங்கள் வெப்பத்தையே முதன்மையாகக் கொண்டு, அதற்குரிய பண்புகளையே வெளிப்படுத்தலால், முடிவில் அடி வயிற்றிலும் குறிநாளத்திலும் அவ்வெம்மையின் கொடுமையால், புண்கள் உண்டாகி, நீர்க்கடுப்புடன் வெளிப்பட்டு, புண்பட்ட நாளத்தின் வழியாய் வெள்ளை விழ்தல், அல்லது நீரிழிவு முதலிய மேகநோய்கள் வந்துசேரும்.

" சுரமதே கபமதாகும் " ஐயசுரம், ஐயவளிசுரம், இருமற் சுரம், வாட்சுரம், உட்சுரம் முதலிய சுரங்களால், குருதி குறையப் பெற்று நுரையீரல் வெப்படைந்து, அதன் தன்மையும் செயலும் கெட்டு, ஐயத்தை வெளிப்படுத்தாமல் ஈளையைத் தங்கச் செய்யு மதனால் ஐயநோய்களைப் பிறப்பித்து உடலை வற்றச் செய்யும்.

'' சுரமதே சாரமாகும் '' வளிசுரம், கழிச்சல்சுரம், வளிஐயசுரம், மாறல்சுரம் இத்தகைய சுரங்கள் நாட்பட்டு நிற்குமேல், உடல் வன்மையையும், கொழுமையையும் குன்றச் செய்யும். அவை பின் குணமடையினும், உண்ணும் உணவு செரியாது, மூலத்தில் வாயு தங்கி, இடைவிடாக் கழிச்சல் நோயை உண்டாக்கும்.

'' சுரமதே தாகமாகும் '' அழல் சுரம், அழல் வாதசுரம், விடாச்சுரம், சாரற்சுரம், கறைச்சுரம் முதலிய உடற்கட்டுகளைப் பற்றி வரும் சுரங்கள் நீடித்திருந்து நீங்கினும், உடற்கட்டுகள் இளைத்து, நா, கழுத்து, தாடை, நரம்பு இவைகளின் வெப்ப முண்டாய் ஒறுத்தலால், நீர் வேட்கை அதிகப்படும்.

'' சுரமதே வறட்சியாகும்'' வெஞ்சுரம், உட்சுரம், வறட்சுரம், மருந்து தேகத்தால் வருஞ்சுரம், விடசுரம், கரச்சுரம் முதலிய சுரங்கள் கண்டு நீங்கிய பின், சுர வேகங்களைத் தணிக்கும் மருந்துகள் கொடாமையின், அவ்வெப்பம் ஏழு உடற் கட்டு களிலும் பரவி, அவைகளை வாட்டி உலர்த்தி விடுமாதலால்' குருதிவறளும். அதனால் சோகையும், என்பு சத்துக் குறைவதால் என்புருக்கி நோயும் உண்டாகும். அழலை முன்னிட்டு வரும் அழல் சுரம் அழலைய சுரம் எவ்வழியிலேனும் குருதியை வெளிப்படுத்தும். இத்தகைய நோய்க்குக் குருதி அழல் (ரத்த பித்தம்) எனப்படும். இக்குருதி அழல் நோயானது, காசம், இளைப்பு ஆகிய நோய் களை எளிதில் உண்டாக்கும்.

'' சுரமதே சிழுமாகும்'' மந்த சுரத்தில், உணவு செரியாது, ஊண் சாரம் கெட்டு, அதன் வழியால் மற்றைய உடற்கட்டுகளும் கெடுதியடைந்து, கட்டி முதலிய நோய்களைத் தோன்றச் செய்து அவற்றினின்று சீழை வடியச் செய்யும்.

'' சுரமதே மஜ்ஜையாகும் '' வரட்சுரம், காமச்சுரம், இருமல் சுரம் இத்தகைய சுரங்களில் என்பிலும் மூளையிலும் வெப்புக் கொதித்தெழுந்து மூளையைக் கரைக்கும்.

'' சுரமதே கணையதாகும் '' குழந்தைகளுக்குத் தோன்றுகிற என்புச் சுரம், அழல் சுரம், மாந்தச் சுரம் இவைகள் குழந்தைகளை வருத்தமடையச் செய்து, பின் கணை நோயைப் பிறப்பிக்கும். (இந்நோய் பன்னிரண்டு வயதிற்குப்பட்ட குழந்தைகட்கே வருவதுண்டு.)

"சுரமதே இருமலாகும்" ஐயச்சுரம், ஐயவளிச்சுரம், என்புச்சுரம், உட்சுரம் இத்தகைய சுரங்கள் உண்டாய், நீங்குந் தருவாயில் ஐய உறுப்புகளில் வெப்பு உண்டாகில் இருமல் நோயுண்டாகும்.

"சுரமதே க்ஷயமதாகும்" மேற்கண்ட சுரங்களேனும், வறட் சுரம் விப்புருதி சுரங்களேனும் உண்டாய், சுரம் தணிந்தும் அதன் வேகம் தணியாது, உடலைப்பற்றி நிற்குமாயின், குருதியைக் கெடுத்து உடலை இளைக்கச் செய்து இளைப்பு நோயாகிய க்ஷயத்தை வரவழைக்கும்.

"சுரமதே சூலையாகும்" வளிஐயப் பெருக்கால் எழுந்த சுரங்களில் குருதி கெட்டு சந்திகளில் நீர் தங்கிக் கலங்குவதால், முட்டிகளில் குத்துவது போன்ற சூலை நோய்களை வருவிக்கும்.

"சுரமதே சொறியதாகும்" நாளும் வரும் சுரம், ஒவ்வொரு நாள் விட்டு விட்டு வரும் சுரம், மாறல் சுரம் இவைகள், வளி அல்லது வளிஐயம் அல்லது அழலையம் இவற்றுள் எவ்வகைச் சுரமேனும் மிகுதியாய் வருவதால், உணவைச் செரியாவண்ணம் செய்து குருதியைக் கெடுத்துச் சொறியை உண்டாக்கும்.

"சுரமதே விரணமாகும்" மேற்கூறியவாறு நாட்பட்டு உள்ள சுரங்களில் சுரத்தின் கொடுமையால் உடற்கட்டுகளின் வன்மை குறைந்து, அச்சுரம் நிற்குங்காலத்து, அசைவற்று படுத்த படுக்கையில் இருக்க நேருதலால், இடுப்பு, முதுகு, தொடை, என்பு முதலிய இடங்களில் புண்கள் உண்டாகும்.

"சுரமதே பித்தமாகும்" பித்த மிகுதியால் ஏற்படும் அழல் சுரம், அழல்வளி சுரம், வெறி சுரம் முதலிய சுரங்கள் நீடித்த காலம்வரை இருப்பின், சுரம் நீங்கிய பின்னும் நோயின் வன்மையால், அறிவு கலங்கி, 'பித்தன்' எனக் கூறுமாறு பைத்திய நோயைப் பிறப்பிக்கும்.

"சுரமதே வாதமாகும்" "சுரமதே வாயுவாகும்" ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் என்னும் இச்சுரங்களில், ஐயத்தை விலக்கக்கூடிய மருந்துகளின் வேகம் மிகுதிப்பட்டால், அது ஐயத்தைத் தணித்து,

வளியைப் பெருகச் செய்யும். அக்காலத்தில் மலமும் நீரும் கட்டுப்பட்டு, வளி நோய்களை விளைக்கும். குடலில் வாயுவை அதிகப்படுத்தும்.

"சுரமதே ஈளையாகும்" ஐயச்சுரம், ஐயவளிச்சுரம் இவைகளில் ஐயத்தின் பெருக்கால வளிக்குற்றங் குறைந்து, வளியின் செயலாகிய மலங்களை வெளித்தள்ளும் செயல் குன்றுவதால், நுரையீரலின் மலமாகிய சளியை வெளித்தள்ள முடியாது தங்கி ஈளை நோயைப் பிறப்பிக்கும்.

"சுரமதே இழுப்பமாகும்" மேற்கூறிய சுரங்களில் வளி குறையும். அவ் வளியின் குறைவால், மலம் கெட்டு, கபமும் கூடி இழுப்பு நோய் தோன்றும்.

சுர மருத்துவம்.

பொதுவாகச் சுரம் வருவதற்குச் சமைகளத்துண்டாம் (ஆமாசய) கோளாறுகளே முதன்மையாய் நிற்குமெனக் கூறியதால், இந் நோய்க்குரிய மருத்துவத்தில், முதன்மையாய் நின்ற கோளாறுகளைப் போக்கித் தன்னிலை திரிந்த முக்குற்றங்களையும், தத்தம் வழி மீண்டும் நிகழச் செய்ய (1) பட்டினி, (2) கழிச்சல் (பேதி), (3) வாந்தி இவைகளைச் செய்வித்து நோயைத் தீர்ப்பதாம். இவைகளிலும் நீங்காத இடத்தில், குடிநீர், பொடி, மாத்திரைகள், மெழுகு, பற்பல செந்தூரங்கள் முதலியன கொடுத்தும், நோயில் அப்போதைக்கப்போதெழும் துணை நோய்கட்கு, மூக்குப் பொடி மூக்குத்திரி, கண் மருந்து முதலியன கொடுத்தும், வியர்வை உண்டாக்குமாறு செய்தும் நீக்குவதாம்.

(1) பட்டினி : நோய்கட்கு ஏற்பப் பட்டினி இடும் நாள் அளவைகள் விதிக்கப்பட்டுள்ளன ;

"வாத சுரத்துக் கோதுநா ளேழும்
பித்த சுரத்துக் குற்றநா ளாறும்
சேத்தும சுரத்துக் கேற்றதொன் பதுநாள்
தொந்த சுரத்துக் கைந்திரண் டேநாள்
பட்டினி வைக்கப் பணியுஞ் சுரங்கள்
அவையில் விடாதெனி லௌடதங் கொடுத்துக்
கஞ்சியுங் கொடுக்க கடுஞ்சுரம் விடுமே."

(பொருள்) வளி (வாத) சுரத்திற்கு ஏழு நாளும், அழல் (பித்த) சுரத்திற்கு ஆறுநாளும், ஐய (கப) சுரத்திற்கு ஒன்பது நாளுங் முக்கூட்டு சுரத்திற்குப் பத்து நாளும் பட்டினியிட சுரம் தணியும். அதிலும் தணியாவிடில், மருந்து கஞ்சி முதலியன முறைப்படி, கொடுத்துவர, சுரம் விட்டுவிடும்.

கடும் பட்டினியாயிருக்க விடாமல், வளி சுரத்தில் மூன்று நாட்களுக்கு உணவு கொடாது வைத்தலும், அழல் சுரத்தில் குடிநீரும் சிறு உணவும், ஐய சுரத்தில் கஞ்சியும் மருந்தும். கொடுத்துவர சுரம் தணியும் என்னும் ஒரு கொள்கையும் உண்டு. அதனைக் கீழ் காணும் பாவால் அறிக.

துன்னு மதாந்திர மென்னு மிலங்கணம்
உரைத்திடும் வாத சுரத்துக்கு மூன்று நாள்
பட்டினி யிருக்க விட்டிடுங் காய்ச்சல்
எத்தனை யாகிலும் பித்த சுரத்துக்குக்
கஷாயம் போசனம் இலகுவா யளிக்க
சேத்தும சுரத்தும காதியே கஞ்சி
கொடுத்து மருந்து மிடத்தெளி வாகும்.''

இம் மூன்று நாள் பட்டினியின் முறை:

(பொருள்) சுரம் தோன்றிய அன்றே பட்டினி வைத்து, இரண்டாம் நாள் காலையில், பல் விளக்கி, நாவழித்து, வாயை வெந்நீரால் கொப்பளித்துப்பின் முகத்தைக் குளிரக் கழுவி, உடலையும் தலையையும் துணியினுல் சுற்றி, இடக்கை கீழாகப் படுக்குமாறு செய்யவும்; இவ்வாறாக மூன்று நாட்களும் கழிந்த பின்னர், நான்காம் நாட் காலை காய்ந்தாறிய வெந்நீரைப்பருகச் செய்து, ஒரு தேற்றாங் கொட்டையை மென்று சுவைத்துத் தின்னும்படி செய்ய, சுரம் நீங்கும். இக் கருத்தைக் கீழ்க்கூறும் செய்யுளில் காண்க.

மட்டி லாச்சுரம் வந்தவன் றைக்கும்
பட்டினி யிருந்து பகரிரண் டாநாள்
காலமே பல்லை யேலவே விளக்கி
நாக்கு வழித்துத் தாக்குவெந் நீரால்
கொப்புளித்தபின் குளிர்முகங் கழுவி

மெய்யுடன் றலைக்கு வேட்டியைச் சுற்றிப்
இடக்கைகீ ழாகப் படுக்கவுஞ் செய்து
வாஞ்சையாய் மூன்றுப வாசஞ் செய்தபின்
காய்ந்த வெந்நீரைக் கருதியே பருகித்
தேற்றாங் கொட்டையைப் போற்றியொன் றருந்திடின்
எந்தச் சுரதோ டங்களும் போமென
றிந்தத் தரணியில் இசைத்தனர் முன்னோர்.

(பொருள்) என இவ்வாறாய்ப் பட்டினியின் நாளளவைச் சமை களத்துண்டாம் கோளாறுகளைத் தடுத்தற்கும், கோளாற்றால் தன்னிலை திரிந்த குற்றங்களைத் தத்தம் வழி மீண்டும் நடக்கச் செய்தற்கும் ஏழு நாட்கள் முதற்கொண்டு பத்து நாட்கள் வரை பட்டினி விதித்திருக்க, சித்த மருந்துவ நூலோர்களில் சிறந்த வனான தேரன் பின்வருமாறு பட்டினியைக் குறை கூறியுள்ளான்:—

''லங்கண மென்பது போட்டு
பொல்லா நாணய மில்லாத மாட்டுப்
பங்க வைத்தியர் கூட்டு
நகைப்பாரே மருத்துவர் கேட்டு.''

(பொருள்) மேற்கூறிவயாறு வடநூலில் பட்டினி முறையைத் தேரன் இகழந்து கூறியது எதற்கென நோக்கின், தென்னாட்டு மக்களின் உணவு எளிதில் செரிக்கக் கூடியதும், அறிவைப் பெருக்கி உயிருடன் உடல் நிலைத்தற்கான வண்மையை மட்டுங் கொடுக்கக் கூடியதுமாக விருத்தலின், இம் மக்கள் மிக்க பருமனும், மிக்க உயரமும், மிக்க வன்மையும் இல்லாதிருக்கும் நிலையில், இவர்கட்கு ஏழு நாள் முதற்கொண்டு பத்து நாட்கள் வரையில் இடப்பட்ட பட்டினி தகுதியுடையதன்று. இச் செயல் இம்மக் கட்குக் கெடுதிகளை விளைக்குமேயன்றி நன்மையைப் பயவாதெனக் கொள்ளல்வேண்டும்.

ஆயினும், சுரமுற்ற காலத்தும், சுரமற்ற காலத்தும் உணவின் பகுதிகளை எப்பொழுதும் உண்பதுபோன்றே உண்ணலாம் என்பதும் தேரன்நோக்கமன்று, சுரநோயில், சுரத்தின் வன்மைக்குத் தக்க வாறு உணவை அளவிடல் வேண்டும். இதனைக்கொண்டே தேரன், இவ்வாறு குறைகூறி அப் பாவின் பொருள்படுத்துவோர்

சிலர். "வித்தியா சம்பந்தம்" வைத்தியம் எனவும், மருந்தின் பண்பு (குணம்) முதலியவற்றைக் கற்று, அதனை வழங்கி அதன் நுட்பங்களைக் கண்டறிந்த பெரியோரிடம் பழகி வந்தவர் 'மருத்துவர்'' எனப் பெயர் பெற்றனர் எனவும் பொருள்படுத்தி, இவ்விருவருள் "வைத்தியர்" நூல் கற்ற அளவோடிருந்தமையால் நூற் கூறியபடி லங்கணம் விதிப்பரென்றும், மருத்துவரே, அவ்வாறல்லாமல் நோயினன் வாழுமிடம், காலம், அவன் உடல் நிலை, வன்மை முதலியவற்றை நன்காராய்ந்து அதற்குத் தக்கவாறு உணவளிப்பர் எனவும் கூறி, அதைக் கீழ்க்காணும் தன் காப்பியப்பாவால் உறுதி படுத்துகின்றனர்:—

" லங்கணம் பரமா விழ்தமென வுலகஞ்
சொன்முறைக் கியல்புறச் சூத்திரம் உரைத்த
லாயினும் மருந்தி லளவிலா மருத்தர்
நோயடல் அடங்கிட நுட்பமாய் அளவறிந்
தியற்றிட மிஞ்சினு மெஞ்சினும் பிணிகள்
செயித்திடும் நோயினர் தேகமா மாணை."

(தே. காப்பியம்),

(பொருள்) உலகிலுள்ளவர்கள், 'லங்கணம் பரமாவிடதம்' 'பட்டினி பெருமருந்து' என்று சொல்வது வழக்கமாயிருத்தலின் அதனை முறைக் காக நூலில் கூறவேண்டி இருப்பினும், நோயாளியின் நிலைமைக் கேற்றவாறு எளிதில் செரிக்கக்கூடிய சிறு உணவுகளைக் கொடுத்து, நோயை நீக்குதல் மருத்துவர்களின் கடமையாம். உணவு முழுதும் இல்லாதிருப்பினும், அளவுக்கு விஞ்சிலும் நோய்களைப் பெருக்கி உடம் பினுக்குக் கெடுதியைச் செய்வதாகும்.

" ஆமே யேழு நாளளவும்
அசனந் தொடாத பட்டினியாய்த்
தோமே கஞ்சி தண்ணீரும்
சொன்ன படியே தானதுவும்
ஆமே யேழு நாட்கழிந்தால்
அழன்றே வந்த சுரமதுவும்
போமே யேழு நாள் கழித்தால்
பொருந்து மசனங் கொடுப்பதுவே ".

(பொருள்) என ஏனைய நூலோரும் கூறியதில், வளி சுரத்துக்குப் பெரு உணவு கொடாமல் சிறு உணவு கொடுக்க வேண்டு மென்பதும், ஏழு நாள் சென்றபின் பொருந்தின வண்ணமாய்ச் சிறுகச் சிறுக உணவைப் பெருக்கிக் கொண்டே வருக என்பதும், சுரம் நீங்கு மட்டும் சோறு காட்டக் கூடாது என்பதும் திருமூலரின் கொள்கை என அறிகின்றோம்.

> " உற்ற சுரத்துக்கும் உறுதியாம் வாய்வுக்கும்
> அற்றே வருமட்டும் அன்னத்தைக் காட்டாதே. "

மேலும், சிறு உணவு பெரு மருந்து என்னும் மருத்துவப் பழமொழியாலும், சுரம் தீரும் வரைக்கும் சோறு முதலிய பெரு உணவைத் தராமல் கஞ்சி கொடுத்து வருதலே நலமெனத் தெரிகிறது.

மிகு உணவால் உடல் பருத்த நிலையில் மந்தம் உண்டாதலால், அதன் அளவாகத் தன்னிலையில் திரிந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்தி, பசித் தீயைத் தூண்டி, உடலிற்றோன்றும் கனத்தைக் குறைத்து, சுரத்தைத் தணிக்க, உடலின் தன்மைக்குத் தக்கவாறு பட்டினியைக் கையாளுதல் நன்மைபயக்கும், அளவு கடந்த பட்டினியிடின், உடலின் வன்மைக் குன்றும், உடலும் வறளும், சோம்பல், வாய் குமட்டல், களைப்பு, தூக்கம், மயக்கம், தாகம், வாந்தி, இருமல், கடின மூச்சு, விக்கல், மிகுசுரம் இவைகள் உண்டாம். ஆதலின், உடலை இளைக்கச் செய்யும் சுரங்களிலும், சுரத்திற்கு முன் வேறு நோய்களால் மெலிந்த நிலையிலும், காதல், சினம், வருத்தம், பயம் போன்றவைகளால் உண்டாம் சுரங்களிலும், பட்டினியை அறவே நீக்கல் வேண்டும்.

கழிச்சலுக்கு (பேதி).—எருவைக் (மலத்தை) கழிப்பதால் குற்றங்கள் தத்தம் நிலை யெய்தும்.

வளி சுரத்தில் இயல்பாகவே எரு கட்டுப்படும். அதனை நீக்க, சஞ்சீவி மாத்திரை, கோடாசூரி மாத்திரை, அட்டபயிரவம், தாழம்பூ மாத்திரை, இலவங்காதி, அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு முதலிய வளியடக்கி மருந்துகளை உடல் வன்மைக்குத் தக்கவாறு அளவு படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

அழல் (பித்த) சுரத்தில் தானாகவே சிறுகச் சிறுக வயிறு கழிதல் இயற்கையாதலால், கழிச்சலை யுண்டாக்கும் மருந்துகளைக் கொடுப்பது நன்றன்று ; இச்சுரத்தில், அப்படி வெளிப்படாதிருப்பின் வெளிக்குப் போக அதிமதுரம், பற்பாடகம், சீமை சாமந்தி, நிலவாகை ஆகிய இவைகள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் கொண்டு அரைப்படி நீரிலிட்டு அரை ஆழாக்காய்க் காய்த்து வடித்த குடிநீரைக் கொடுக்க, ஒன்று அல்லது இரண்டு முறை கழியும்.

ஐய சுரத்தில் முற்றும் வெளிக்குப் போகாமல் இருப்பினும், தானாகவே சிறுகச் சிறுகக் கழிந்தும், சில வேளை கட்டுப்பட்டதைப் போன்று கவலையை உண்டு பண்ணும். இதற்கு, அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு போன்றதை நோய்க்குத் தக்கவாறும் நோய் வன்மைக்குத் தக்கதாகவும் அளவிட்டுக் கொடுத்து எருவைக் கழித்தல் வேண்டும். சில வேளை வெளிப் போக்குக்கான மருந்தைக் கொடுக்க வேண்டியிருப்பினும் நோயினன் இருக்கும் நிலையில் வாயின் வழியே பேதி மருந்தைக் கொடுக்க முடியாத காலத்தில், பல்லில் தடவுவதும், பற்றிடுவதும், மூக்கில் முகரச் செய்வதுமான முறைகளை மேற் கொள்ள வேண்டும் : அவற்றைக் கீழ்ச் செய்யுட்களில் காண்க :—

இந்துப் பயன்மனைநீ ரீர்க்கா மலகமிதைத்
தொந்தித் தனலிற் சுடவைத்துத்—தந்தத்திற்
றட்டா தருந்தச் சவுக்கிய விரேசனமாம்
பட்டால் வெந் நீரடங்கும் பார்.

(தே. வெ. 139.)

பற்றுவி ரேசனத்தாற் பந்தமுறு முந்தியினிற்
குற்ற மிராது குளிர்ந்தநீர் உற்றமறை
ரோகணிவெண் சாரணைகோ ரோசனைசோ பிப்பருப்பு
பாகுசெய்துள் ளிச்சுதையாள் பார்.

(தே. வெ. 140.)

வெள்ளைத் திரிபுரையின் வேருந் திரிகடுகும்
உள்ளித் திரியோ டுறவரைத்துப் பில்லைசெய்தே
அண்டத் தயிலத்தி லட்டுண் விரேசனமாம்
மூண்டானால் மாந்தழன்ற மோர்.

(தே. வெ. 141.)

வாந்தி.—வாத சுரத்திலும், பித்த சுரத்திலும் வாந்தி எடுக்க மருந்து கொடுப்பது நன்றன்று. ஐய சுரத்தில் இயற்கையாக நுரையீரலிலும், சமை களத்திலும் கோழை கட்டிக் கொள்வது இயல்பாகையால், நோயின் வன்மைக்குத் தக்கபடியும் நோயாளியின் உடல் வன்மைக்குத் தக்கபடியும் வாந்தி மருந்தைக் கையாள வேண்டும். கூடுமாயின், வாந்தி மருந்தும், வயிறுகழியும் மருந்தும் ஒரே மருந்தாக இருத்தல் நலம். அல்லது கழிச்சல் செய்யும் மாத்திரைகட்குத் துணையாகக் கொள்ளும் வகையில், வாந்தி செய்யக் கூடிய பச்சிலை வகைகளேனும் கடைச் சரக்குகளையேனும் சேர்த்துக் கொள்ளலாம். சான்றாக, சஞ்சீவி மாத்திரையை இலைக் கள்ளிச் சாறு அல்லது உத்தாமணிச் சாறு இவற்றுள் ஏதேனும் ஒன்றில் இழைத்துக் கொடுக்க, வாந்தியை உண்டாக்குவதுடன் கழிச்சலையும் உண்டுபண்ணும். வெண்காக்கட்டான் மாத்திரையும் கோரோசனைப் பொடியும் கொடுக்க வாந்தியையும் கழிச்சலையும் பிறப்பிக்கும்.

வியர்வைப் பிடித்தல்.—நஞ்சால் பிறந்த சுரங்கள் கபத்தால் தலையிலும் உடலிலும் நீரேற்றங்கொண்டு தலைவலி ஏற்படுத்தல், தலைக் குத்தல், உடல் முழுமையும் கனமாய் இருப்பது போன்ற ஓர் தோற்றம் உண்டாதல் முதலியவைகட்கு, வியர்வை பிடித்தலால், நன்மை ஏற்படும் என்பதையும், அதனைச் செய்யு முறையையும் கீழ்க் காண்க:—

"வேதுவெ னும்பெய ரானது
சீதள வேதனை யாலணுகும்
பாதக மான சிரோபார
வாதனை பாரிய வெப்பமுதல்
ஆதிய நோய்க ளெலாமனு
மாநறு மாசுக மானமுறை
காதர மோது கபாலிகை யாமரி
காணு மொரே புகையே."

"வெறுந்துணியை யாகிலுந்தீ முகந்தனி லிடாவெழுந்த
மிகுந்தபுகை கோடிரண்டு—புழைநாசி
யுறுந்தணிய நீர்கழன்று கபந்தொலையு மேலரந்தை
யுறும்பிணிக ளோடுநெஞ்சு—புகைமாறு

மறும்பிணிகள் யாவுமங்க மெழுந்தசுடர் போலிலங்கு
மலங்கிருத மாகுமந்தி— மதிபோலே
பெறுந்திரனு மாகுமஞ்சு மிகுந்தசுக மேவுமின்பு
பெறுபரிவும் மாகுமென்று—நிசமாமே.''

வியர்வைப் பிடித்தலால் ஐயத்தால் உடலில் பொருந்தும் கொடுமையான தலைபாரம், மிகுந்த வெப்பம், விடாக் காய்ச்சல், ஆகிய இவை யாவும் நீங்கும். உடல் நலமடையும், அல்லது வெறுந் துணியை யாகிலும் கரித் துணியையாகிலும் சுருட்டிக் கொளுத்தி அதினின்றெழும் புகையை மூக்குத் துளைக்குள் செல்லும்படி செய்ய நீர்வடிந்து அரந்தை யுடன் கூடிய பிணிகளாகிய நெஞ்சுவலி முதலியவைகள் நீங்கும். உடல் சுடர் போல் விளங்கும்.

இந்தவாறு சொன்னவேது வின்குறிப்ப றிந்துசெய்
விந்தையான குறிகுணங்கள் வேறறிந்து புரிகுவார்
தொந்தமான வாகடத்து வக்குணர்ந்த வாயுளவே
தந்தனக்கு வாயிலான் சற்குணத்த ராகவே.

(தேரையர் சேகரப்பா 267, 275.)

குளிர்சுரங்களிலும் ஐயத்தால் பிறக்கும் சுரங்களிலும் வியர்வை பிடிக்கில் நன்மையுண் டாம். வியர்வை வெளி வருதலால் உடலிற்றங்கிய கெட்ட நீர்கள் வெளியாகி, உடல் குடைதல், கனமாக இருத்தல் குறையும்; அன்றியும் சுரத்தின் கொடுமையும் குறையும்.

செய்வகை.—

ஒருவிதஞ் சிந்து வாரத்
துடனுத கத்தைக் காய்ச்சி
எரியிலிட்டி கையை யவ்வா
றியற்றிமுன் னதைக்க விப்போ
டொருமுறை யிதைய திற்பெய்
துடலெலாங் கவித்துத் தூசா
லிருகடி கைபோ தாற்றி
யிருக்கநீ ரியாவும் போமே.

நொச்சித் தழை நான்குபிடி, மஞ்சள் ¼ பலம் இவைகளை ஒன்றிரண்டாக இடித்து, குடி நீர் செய்வது போலக் காய்ச்சி வடித்து, மீண்டும் நன்றாகக் காய வைத்து, அடுப்பில் செங்கல் துண்டுகளைப் போட்டுப் பழுக்கக் காய வைத்து ஒவ்வொரு கல்லாக அதில் இட்டு வியர்வை பிடிக்கவும்.

கண்மருந்து :

பெரும்பாலும், ஐயக் குற்றத்தினாலும், முப்பிணித் தொடர்பினாலும் வரும் சன்னி நோயாளர்களுக்குக் கண்ணிலும் மூக்கிலும் மருந்திட்டுத் தன்னிலை திரிந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்தல் வேண்டும்.

**கண் மருந்துகள்.**—தாய்ப் பாலில் ஒரு இலவங்கத்தை இட்டு ஊற வைத்து துணியில் முடிந்து கண்ணில் பிழிய முப்பிணியில் காணும் சேட்டைகள் போம்.

மூக்கு மருந்துகள்—தும்பைச் சாற்றைப் பிழிந்து துணியில் துவைத்து மூக்குத் துளைக்கு ஒரு துளி அளவு பிழியலாம்.

குறிப்பு.—கண்ணிலிடும் மருந்து வகைகளாகிய மை, கலிக்கம், மூக்கிலிடும் பொடி, திரிவகைகள் ஆகிய இவற்றின் செய் முறையும், வழங்கும் வகையும் சித்த வைத்திய திரட்டில் காண்க. அன்றியும் தேரன் வெண்பா, சேகரப்பா முதலியவற்றிலும் காணலாம். அவைகள் பின்வருமாறறிக :—

கண் மருந்துகள் (கலிக்கங்கள்) :

கலிக்க வகைவா கடர்நோய் தனத்தைக்
கெலிக்க வகைகாட்டுங் கேட்டைச் சலிக்க
நொறுக்கு பிணியை நுகருங் கபத்தை
யறுக்குஞ் சலக்கரணை யாப்

(தே. வெ. 159.)

திரிபுரையின் வேருந் திரிகடுகுங் கூட்டி
வரிசையான் பாலின்மத் தித்துப்—பிரசத்தில்
அப்படியே செய்துலர்த்தி யாறும் பிருந்தரசங்
கப்புமிகு நல்லகலிக் கம்.

(பொருள்)—தும்பைவேர், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளை ஓரெடையாக தாய்ப்பாலில் அரைத்து, பின் தேனிலும் அவ்வாறே அரைத்து உருட்டி, உலர்த்தி வைத்துக்கொண்டு, துளசிச்சாற்றில் இழைத்துக் கண்ணிற்கிடவும்.

இலிங்க மரிதார மெண்கச்ச மூன்றும்
புலிங்க முடையார் மேற் போட்டுக் —கலந்துலிகு
சக்கனிநீ ராலாட்டிச் சற்றே நிழலுலர்த்திற்
பக்குவமா குங்கலிகம் பார்.

(பொருள்) இலிங்கம், அரிதாரம், பீதரோகணி இம்மூன்றும் எலுமிச்சம் பழச்சாற்றினால் அரைத்து, உலர்த்தி, தக்கபடி கண்ணிலிடவும்.

நிம்பவித் தாக்குப்பு நெய்தலப்பூ நெய்தலப்பூ
விம்பவிலைச் சாற்றினை விட்டரைத்துச்—சம்பீரச்
சாறிட் டரைத்துருட்டிச் சற்றே வெயிலுறநோய்
காறுமிது பூதகலிக் கம்.

(தே. வெ. 162.)

ஆடகி யிலைச்சாற்றி லையவிவா ழைக்கனிசுக்
கோடு மிளகு முறவரைத்துப்—பாடலத்தின்
போதி லுலர்த்திப் பொருளாக்ககொள் பிணியைக்
காதுமா னந்தக்க லிங்கம்.

(தே. வெ. 163.)

பச்சோந்தி வாலுட்படுமிரத்த முங்கணையுங்
கச்சோத மெய்யுங் கலந்தரைத்து—மெச்ச
நிழலுலர்த்திக் கொள்ளதற்கு நீங்காத நோயுங்
கழற்பட்சி ராசகலிக் கம்.

(தே. வெ. 164

மூக்குத்திரி :

வெடியொ டரிசன மிளகிதை
வெருவு பொடி செய்து திரியிலே
படியு முபதைசெய் தனலொடு
படவு மதிலெழு புகையினை
நெடிய வுடலிடு கவர்கலை
நிமிட முறலரி ததனையோர்
கடிகை யுளவுகொ ளுதியெனிற்
கழலு முடியுறு கபமெலாம்.

திப்பிலிமஞ்ச ளசமதாக மிள
கைப்பொடி யுஞ்செய் திரியி லேறவிடு
செப்பிய நிம்பமருவு நேயமுறு—சுடரேவை
கப்புமுடம் போ டரியதீவிகையை-
யுட்கொண்டிருந்தா லுபயநாழிகைமு
கத்திருந்தே யுபயநாசிகளில்—மழைமாரி
யொப்ப விரண்டு நயனமா மலர்ம
துத்துளி மிஞ்சி வருதலாகு மென
வுற்றவுடம் பிலறலெலா மிழியு—மதனாலே
வெப்பமரும்பா ரமருமேறுதலை
யிற்பொலியுந்தீவினையு மாறுமிது
மெய்ப்படு மிண்டா மரிய வேதுவது தெரிவாயே. —

பொருள்.—திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவைகளை நுண்ணிய பொடியாக்கிச் சீலையிற்றூவி திரியைப்போல் சுருட்டி வேப்பெண்ணெயிற் றுவைத்துக் கொளுத்தி அப்புகையை மூக்கினிருதுளைகளுக்கும் செல்லும் படியாகச் செய்தலால், மூக்கினின்று மழைத்துளி போன்று நீர் சொட்டி உடலிற் றங்கிய நீர் வடிந்து, சுரம்போம், தலையின் பாரமறும், அல்லது அப்புகையை உடல் முழுமையும் படும்படியாகச் செய்தலும் நன்று.

பற்று :

வேலிப் பருத்திரசம் வெள்ளுளிபு மூங்கரிசி
போலுப் புடன்வெடியும் பூட்டியே—மேலுக்குப்
பற்றெரியிற் காய்ந்தாறப் பண்குழம்பை நண்பலநோய்
பற்றற்றுப் போமதுவே பற்று.

(தே. வெ.40.)

(பொருள்) வேலிப் பருத்தியிலையின் சாறு, வெள்ளுள்ளி, மூங்கிலரிசி, மூங்கிலுப்பு, வெடியுப்பு ஆகிய இவைகளை நீரிலிட்டு அரைத்துக் கொதிக்க வைத்து மேலுக்குப் பற்றிட சுரநோயேயன்றி உடலிலுண்டான குத்தல், குடைச்சல் முதலியன நீங்கும்.

கைகாலும் சந்தும் கடுத்து வெயர்வரும்பு
மெய்காலைக் குக்காலை வேறாகும்—வெய்யவிடச்
சன்னியென்ற நிந்துவெடி சம்புதந்தி வேர்பொடித்து
புன்னைநெய்யிற் பற்றிடமுன் போம்.

(தே. வெ. 205.)

(பொருள்) கைகால் சந்து கடுத்தல், முப்பிணிநோய் இவைகட்கு வெடியுப்பு, நாவல்கொட்டை, நேர்வாளச் செடியின்வேர் ஆகியவை களைப் பொடித்து புன்னை நெய்யில் பற்றிடப் போம்.

இல்லவித்தை மாறன்றா ரெண்ணெ யுடன்கலந்தால்
நல்லவித்தை நோய்க்கு நமனதுவே —பல்தலைக்கும்
மாரடைப்புக் கும்பிடிப்பு வாயுக்கும் பற்றிடப்போம்
நீரிலுந்தீ மாரகிலில் நீ.

(தே. வெ. 206.)

தேற்றாங் கொட்டையைப் பொடித்து வேப்பெண்ணெயிற் குழைத்துப் பற்றிடச் சுரநோயிலுண்டான மார்படைப்பு, பிடிப்பு, வளிநோய், வல்லை முதலியவைகளைப் போக்கும்.

படுக்கை. —பன்னாட்கள் நோயுற்றான் படுக்கையிலேயே இருக்க வேண்டியிருத்தலால், அப்படுக்கை இளைத்த உடலில்உறுத்திப்புண்படுத் தாதபடி அமைதல் வேண்டும். அதிலும், இதைச் சுரநோயில் முக்கிய மாய்நோக்குதல் வேண்டும். ஆதலால், சுரநோயுற்றான் படுக்கை, இலவம் பஞ்சால் ஆகிய மெத்தையாக இருப்பின் நலம் தரும்.

இக்கருத்தைக் கொண்டே, தேரையர்

"இலவின் பஞ்சுப்படுக்கைக் கேகும் அனலம்" எனவும்,

மூதாட்டியார் (ஔவையார்)–

"இலவம் பஞ்சிற்றுயில்" எனவும் கூறினார் போலும்! இலவம் பஞ்சுப் படுக்கையைப் பெற முடியாத எளியோர்கட்குச் சிற்றீச்சம் பாய் நன்மையைத் தரும்.

"சிற்றிச்சுப் பாயில் தினமும் படுப்பவருக்
குற்றிடுமே காந்தல் உடம்புலருஞ் —சுற்றியதோர்
வாயுவறும் பித்தமறும் மற்றுங் கபந்தீரும்
தாயகமா மிக்குணத்தைச் சாற்று."

எனத் தேரையர் குண வாகடத்தில் கூறியதைக் காண்க.

சுரத்தின் வன்மை வெப்புத் தணிந்த பின்னர்,வியர்த்தலும், ஆயாசம், இளைப்பு முதலியன தொடர்தலும் சுரத்தின் இயல்பாதலால், இவை களைத் தணித்தற்பொருட்டு விசிறி கொண்டு விசிறி, தூய்மையான காற்று நோயினன் உடலில் படுமாறும் உள்ளுக்குச் செல்லுமாறும் செய்ய வேண்டும். அழல் நோயினனுக்கு மயில் விசிறியும், வளி அழல் ஐய மாகிய முக்குற்றநோயினர்கட்குப் பனை விசிறியும், அழல் எரிச்சல் முதலிய நோயாளர்களுக்கு வெட்டிவேர் விசிறியும் நன்று எனத் தேரையர் குணவாகடத்தின் பாக்களால் அறிக.

மயில் விசிறியின் குணம் :

'' சந்நிவிடங் குன்மந் தலைசுழலல் பித்தவிக்கல்
துன்னுசுவே தம்வாத தோடமும்போம்—பன்னவதில்
உட்டிணமாம் புத்தி யொளிரும் பசுந்தோகை
யிட்ட மயில்விசிறிக் கே.''

(பொருள்) மயிலின் தோகையால் கட்டிய விசிறியைக் கொண்டு வீசின், முப்பிணி, குன்மம், தலைச்சுற்றல், விக்கல், வியர்வை, அழல் வளிக்குற்றம், உட்டிணம் இவைகளால் உண்டாகும் துன்பங்கள் குணப் படும். அறிவும் ஒளிரும்.

பனை விசிறியின் குணம் :

'' பனைவிசிறி தன்னாற் பருத்ததொரு வாத
வினையுமைய நோயும் விலகுங்—கனைப்பித்த
நோயு மருசியென்ற நோயும் குடியேகுந்
தேயுமிடை மாதே தெளி.''

(பொருள்) பனை விசிறியின் காற்றால், பெரிய வளி (ஐய) அழல் நோய்களும், நாவின் சுவையின்மையும் குணப்படும்.

வெட்டிவேர் விசிறியின் குணம் :

'' வாசவெட்டி வேர்விசிறி வன்பித்த கோபமொடு
வீசும் எரிச்சலையும் வீழ்த்துங்காண்—பேசுங்கால்
தாக மகற்றுஞ் சகல மனோக்கியமாம்
மோகமருண் மாதே மொழி.''

(பொருள்) வெட்டிவேர் விசிறியால், அழலின் பெருக்கு எரிச்சல் தாகம், மோகம் இவை தீரும்.

இவற்றைச் சுருக்கிக் கூறில், வளி சுரத்தில் மயில் விசிறியும், பனை விசிறியும ; அழல்சுரத்தில் வெட்டிவேர் விசிறியும் பனை விசிறியும் ; ஐயசுரத்தில் பனை விசிறியும் ; அழல், வளியழல், அழல்வளி, அழலயம், ஐயவளி ஆகிய சுரங்களில் பனை விசிறியும் ; முக்கூட்டு சுரங்களாகிய சன்னியில் மயில் விசிறியும் நன்மை பயக்கும் எனவாம்.

போர்வை—குளிர் சுரத்திலும், கபங்கூடிய சுரத்திலும் போர்வைகள் முக்கியமானவை. மேலும், சுரத்தால் உடல் இளைத்த காலத்துக் குளிர் வாடையால் உடனே நீர்க்கோத்துக்கொள்ளுமாதலால், நோய் நீங்கு மட்டும் உடலைக் காத்தல் முக்கியமானது. இதற்குக் கம்பளப் போர்வைகள் சிறந்தனவாகும்.

## மருந்து வகைகள்.

வளிசுரக் குடிநீர் :

சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுகாஞ்சொறி வேர், சீந்திற்றண்டு சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம் வகைக்கு ஒரு பலமாகக் கொண்டு முறைப்படி குடிநீரிட்டுக் காலை மாலைகளில் கொடுக்கவும்.

விளையுஞ் சுரந்தோன் றினநாளில்,
வேர்க்கொம் புடன் பேராமுட்டி-
களையுந் தண்ணீர் தனிற்போட்டங்
கதனைக் காய்ச்சிக் குடித்திடுமே.

வளிச்சுரங்கண்ட நாளில் சுக்கும் பேராமுட்டியும் ஒரே நிறையாக எடுத்து முறைப்படி குடிநீரிட்டு ஏழு நாட்கள் கொள்ளவும்.

குடி நீ ரேழு நாளளவுங்
குறுநெல் லரிசி யுடன்சுக்கு
படிதோல் சீவி நறுக்கிநலம்
படவே ருடன் சீலையிற்கட்டி-
வடிநீ ருலையிட் டதைக்காய்ச்சி
வற்றிக் குடித்தேழ் நாட்சென்றால்
நெடிய தசமூ லகந்திரித்து
நீர்தான் நாழி தனிலிட்டே.

இட்டே நாலு மிரண்டாநா
ளிந்த வுலையிற் சோறாக்கி
தொட்டே மிளகு நீருடனே—
சுகமாய்க் கொடுத்துப் பனிரண்டு
மட்டே சென்றால் முதற்குடிநீர் —
வகைகே ளிரண்டு படிநீர்தான்
விட்டே கொன்றைத் தோல்வட்டின்—
வேரிந் துப்பு வேர்க்கொம்பே.

வேர்கே ளின்ன மிலாமிச்சு
மிக்க சிறுகாஞ் சொறிசீந்தில்
பார்சேர் பங்கம் பாளைபு டோல்
பகருஞ் சேவ கன்பூடு
சீர்சேர் கடுகு ரோகணியுந்
திரிபலை யோரென்றோர் கழஞ்சு
நீர்தா னிருநா ழியிட்டே—
நெடி தாய்க் காய்ச்சி யுழக்காக்கே.

ஆக்கம் பெருகுந் திப்பிலித்தூள்
அடைவே போட்டுக் குடித்தக்கால்—
தாக்கும் வாரஞ் சுரந்தணியுஞ்
சந்திற் குத்து நெஞ்சுளைவு

போக்க வரிய குளிர்முதலாய்
பொல்லா வாதை யெல்லாந்தா
னேக்க முடனே விட்டேகு
மெனவே முனிவ ரியம்பினரே.

(சுர வாகடம்.)

(பொருள்) சிறுமணி நெற்பொரி ஒரு படியுடன், மேற்றோல் சீவிய சுக்கு, கணு நீக்கிய அறுகன்வேர் இவைகளைச் சீலையில் முடிந்து, வடிநீரிலிட்டு முடிக்கஞ்சாகக் காய்த்து, சுரம் தொடங்கிய நாள் முதல் ஏழு நாள் கொடுத்துவரவும். எட்டாம் நாள் முதற் கொண்டு சோறும் மிளகு நீரும் (ரசம்) கொடுக்கவும். முதற் கூறிய குடி நீர் இரண்டு படியுடன், கொன்றைத் தோல், இந்துப்பு, சுக்கு, விலாமிச்சம், சிறு காஞ்சொறி, சீந்தில், பங்கம்பாளை, பேய்ப்புடல், சேவகன் பூண்டு,

கடுகுரோகிணி, திரிபலை வகைக்கு ஒரு கழஞ்சு கொண்டு இடித்துப் போட்டு அதை உழக்காகக் காய்த்து, அதில் சிறிது திப்பிலிப்பொடி கூட்டிக் காலை மாலைகளில் குடிக்க, வாத சுரமும் அதனுடன் கிளைக்கும் குறிகளாகிய கீல்களில் குத்தல், நெஞ்சுளைவு, குளிர் முதலியனவும் போம்.

மருவு வேர்க்கொம் பிருகழஞ்சு
வளர்சாரணைவே ரிருகழஞ்சு
அரிதாம் பேரா முட்டியின்வே
ரொன்றங் கழஞ்சு வெள்ளுள்ளி
பெருக விரண்டு கழஞ்சு கொண்டு
பெய்யும் புனலங் கிருநாழி
கருகிக் காய்ச்சி யுழக்காகக் –
காய்த்தே திப்பிலி கலந்துகொள்ளே.

(பொருள்) சுக்கு இரண்டு கழஞ்சு, சாரணைவேர் இரண்டு கழஞ்சு பேராமுட்டிவேர் ஒரு கழஞ்சு, வெள்ளுள்ளிஇரண்டு கழஞ்சு இவைகளைக் கூட்டி ஒன்றிரண்டாக இடித்து, இரண்டுபடி நீரிட்டு உழக்காகக் காய்ச்சி வடித்து, திப்பிலிப் பொடி கலந்து காலை மாலைகளில் ஆழாக்கு அவ வாகச் சாப்பிடவும்.

கலந்தே தேவ தாரமுத்தக்
காசு கண்டங் கத்திரிவே
ருலர்ந்த சுக்கு மிளகுபழ
முடனே கோட்டஞ் சிறுதேக்கு
மலர்ந்த படகந் திப்பிலிசீர்
வாய்த்த கடுக்கா யோரோன்று
நலந்தேர் கழஞ்சு நாலிரண்டு
நாழிப் புனலிற் புகட்டீரே.
புகட்டி யுழக்கா யறக்காய்ச்சிப்
புதிய தேன்திப் பிலிகூட்டி
யகட்டி னிடைசே ரக்குடித்தா
லெடுத்த வாத சுரங்களெலாம்
திகட்டி கொன்றுஞ் செகராசு
சேக ரன்றன் செழுமுனையிற்
பகட்டிற் பொருது கெட்டோடும்
பகைத்தா ரெனவே பறந்திடுமே.

(பொருள்) தேவதாரம், கோரைக் கிழங்கு, கண்டங்கத்திரி, சுக்கு, மிளகு, கோட்டம், சிறு தேக்கு, பற்படாகம், திப்பிலி, கடுக்காய் வகைக்கு ஒரு கழஞ்சாகக்கூட்டி, எட்டுப்படி நீரிட்டு ஒருபடி நீராகக் காய்ச்சி வடித்ததில், ஓர் ஆழாக்கு நீருடன், புதிய தேனும் சிறிது திப்பிலியும் கூட்டிக் காலை மாலைகளில் கொடுக்க, வளிசுரம் போம்.

கண்டங் கத்திரி சீந்தில் சுக்குக்
காசு கோட்டங் காஞ்சோன்றி
துண்டஞ் சேரும் நிலவேம்பு
திப்பிலி டகஞ் சிறுதேக்குக்
கொண்டொவ் வொன்று முக்கழஞ்சு
கூட்டி நாழி யிரண்டுழக்கா
உண்டங் கிருக்கில் வாதமுட
னூறு வாய்நீர்ச் சுரம்போமே.

(பொருள்) கண்டங்கத்திரி, சீந்திற்றண்டு, சுக்கு, முத்தக்காசு, கோட்டம், சிறுகாஞ்சொறிவேர், நிலவேம்பு, திப்பிலி, பற்பாடகம், சிறு தேக்கு இவை வகைக்கு கழஞ்சு மூன்றாகக்கொண்டு, இரண்டுபடி நீரிட்டுக் கால்படியாகக் காய்ச்சி எடுத்து, அதில் காலை மாலைகளில் ஆழாக் காகக் கொள்ள வளிசுரம், வாய்நீர் சுரப்பு இவை போகும்.

சீரா யிதற்குக் குடிநீர்கேள்
சிற்றா முட்டி நிலவேம்பு
பாராய் கண்டங் காரிபுடோல்
படகம் வேலிப் பருத்தியுமே.

பருத்த வேர்க்கொம் பிருவேலி
பதுமத் தண்டு பெருங்குரும்பை
திருத்த மான மிளகுள்ளி
திப்பிலி கடுக்காய் சிறுதேக்குப்
பொருந்துங் கழஞ்சொன் றிரண்டாகப்
பொன்போல் வறுத்து நாழியிரண்
டிருந்து நீர்தா னுரியாக்கி
யந்தி சந்தி கொண்டிடுவாய்.

கொள்ள இந்து திப்பிலிதேன்
கூட்டிப் போட்டே யுண்டிடிலோ
உள்ளாம் வாதச் சுரத்துடனே
யூறு வாய்நீர்ச் சுரமும்போம்
தள்ளா திதற்குப் பரிகாரந்
தானே பண்ணும் வகையிதுகாண்
கள்ளார் மலர்ப்பூங் குழலணங்கே
கலச முனிவன் கழறியதே.

(பொருள்) சிற்றாமுட்டி, நிலவேம்பு, கண்டங்கத்திரி, பேய்புடல், பற்பாடகம், வேலிப்பருத்தி, சுக்கு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரைத்தண்டு, பெருங்குரும்பை, மிளகு, உள்ளி, திப்பிலி, கடுக்காய், சிறுதேக்கு வகைக்கு கழஞ்சு ஒன்று. இவைகளைப் பொன்வறுவலாக வறுத்து இரண்டுபடி நீரிட்டு, ஒருபடி நீராகக் குறுக்கி அளவுப்படிகொண்டு அதில் இந்துப்பு, திப்பிலித்தூள், தேன் சிறிது கூட்டிக்கொடுக்க வளிசுரத்தோடு வாய்நீரூறுகின்ற சுரமும் போம்.

காணே னாடா தொடைமுத்தக்
காசு சீதே வியின் வேரும்
பேணோ னிலுப்பைப் பூவுடனே
பேரீந் துடனே முந்திரிசை
வானே புகழ்தா மரைவளையம்
வளரும் பெரிய குரும்பையுமே
சேனார் மகிழ்கூ விளைநத்தை
சிறுமூ லகமுந் தேடுகவே.

தேடுந் தான்றிக் கடுநெல்லி
சிறந்த மிளகு திப்பிலிசுக்
கோடும் புதிய நிலந்தன்னில்
வேம்பு நகரிநறும் பிசினும்
நீடுஞ் செவ்விய மதாவரிசி
நிறையுங் கழுநீர்க் கிழங்குடனே
கூடும் பெரிய வதிவிடயங்
கொண்டோர் நிறையாய்க் கூட்டுகவே.

கூட்டு நீரு மிருநாழி
　　குறுகக் காய்ச்சி யுழக்கானால்
மீட்டு தண்ணீர் தனையாற்றி
　　மேலே தேனும் விட்டளவி
யூட்டி விடுகி லெப்போது
　　முலைய நடுக்குங் குளிர்சுரங்கள்
காட்டுஞ் சத்தி சுரமுடனே
　　கடிதாய்க் கலங்கி யேகிடுமே.

(பொருள்) ஆடாதோடை, கோரைக் கிழங்கு, பொன்னாங்காணி வேர், இலுப்பைப்பூ, பேரீந்து, கொட்டைத்திராட்சை, தாமரைவளையம், பெருங்குரும்பை, மகிழம்பூ, வில்வ ஒடு, சிறுபஞ்சமூலம், தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், மிளகு, திப்பிலி, சுக்கு, வேப்பம்பிசின் செவ்வியம், அம்மான்பச்சரிசி, சீதேவிசெங்கழுநீர்க்கிழங்கு, அதிவிடயம் இவைகளை ஒருநிறையாகக்கொண்டு, முறைப்படி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து, அரை ஆழாக்கு விழுக்காடு காலை மாலைகளில் கொடுக்கக் குளிர்ச்சுரம், வாந்தி இவை போம்.

வளிஅழல்சுர (வாதபித்த) குடிநீர் :

தேடும் பொரியுஞ் சிறுபயறுந்
　　தேவ தார முக்கழஞ்சாய்ப்
போடும் பொடிசெய் திருநாழி
　　புனல்விட் டெரித்து நாழியதாய்
நாடிப் படியே யோடேழு
　　நாளுங் காய்ச்சிக் கொடுத்ததற்பின்
கோடுங் குவடுங் கொள்முலையிர்
　　குடிநீரடைவிற் கூறுகவே.

(பொருள்) நெற்பொரி. சிறுபயறு, தேவதாரம் வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்துப் பொடித்து,இரண்டு படி நீரிட்டுக் காய்த்து, ஒரு படியாக வடித்ததில் தினம் ஆழாக்கை வெள்ளைப்பாடாண பற்பத்திற்குத் துணையாக ஏழுநாள் கொடுக்கவும்.

கூறுஞ் சீந்தி லறுகழஞ்சு
கொத்த மல்லி முத்தமுடன்
தேனும் வேர்க்கொம் பொருகழஞ்சு
தேவ தார மொருகழஞ்சு
ஊறும் புனலங் கிருநாழி
யுள்ளெட் டொன்ற தாய்க்காய்ச்சி
நீறுந் திப்பித் தூளதனை
நீயிட் டருந்து நிலைக்காதே.

(பொருள்) சீந்திற்றண்டு கழஞ்சு ஆறு, கொத்துமல்லி, கோரைக் கிழங்கு, சுக்கு, தேவதாரம் வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, ஒன்றிரண்டாக இடித்து, நீர் இரண்டுபடி கூட்டி எட்டிலொன்றாக வடித்ததில், சிறிது திப்பிலிப்பொடி கூட்டி, காலை மாலைகளில் ஆழாக்களவு உட்கொள்ளவும்.

கலங்காச் சுக்குச் செவ்வியமுங்
கடுகு ரோகணி சீந்திற்றண்
டிலங்கா புரிசேர் பற்படக
மிலாமிச் சுடனே மரமஞ்சள்
தலங்காஞ் சோன்றி யுடன்தேவ
தாருங் கரிய சீரகமும்
பலங்கா ணிவையென் றிருகழஞ்சு
பயந்தா ணிரண்டு நாழிவிட்டே.

நாழி தானு முழக்கானால்
நறுக்கித் தூய திப்பித்து
ளாழி மேவு மிந்துப்பு
மதிலே கலந்து கொண்டடைவே
தாழி மேவுங் குவளைவிழி
சைலம் போலுந் தனமாதே
கோழி கூவி விடியுமுனே
குடித்தே யடுத்துக் குறைவிடுமே.

(பொருள்) . சுக்கு, செவ்வியம், கடுகுரோகணி, சீந்திற்றண்டு பற்பாடகம், விலாமிச்சு, மரமஞ்சள், சிறுகாஞ்சொறி, தேவதாரம், கரிய சீரகம் வகைக்கு இரண்டு கழஞ்சாகக்கொண்டு, நீர் இரண்டுபடிவிட்டு, உழக்காகுமாறு காய்த்து வடித்ததில், சிறிது திப்பிலியும் இந்துப்பும் பொடித்துக் கூட்டி, விடியற்காலையில் சாப்பிடவும்.

குலவுங் கீழ்க்காய் நெல்லி புடோல்
கோட்டஞ் சீந்தில் சிறுதேக்கு
நலசந் துடனே வேம்பலகு
நாகப் பூவும் மலைதாங்கி
திலமே வியகாஞ் சொறிதேவ
தாரம் மிளகு முத்தமுடன்
கலனார் முலையாய் பெருங்குரும்பை
கடுரோ கணியோ டதிவிடையே.
அதிகங் கொள்ளா திரண்டுகழஞ்
சாகக் கொண்டாங் கதுதன்னை
கதிதங் கிருநா ழிப்புனலிற்
காய்ச்சி யுள்ளே கொள்வீரேல்
விதிதந் திடுகார்த் திப்பிலிதேன்
விடயங் குடிநீ ருடன்கலந்தே
மதிகொண் டதனை யிருகரத்தால்
வாங்கிப் பருகும் மனமுவந்தே.

(பொருள்) கீழ்க்காய்நெல்லி, பேய்ப்புடல், கோட்டம், சீந்தில், சிறு தேக்கு (கண்டுபாரங்கி), வேம்பின் ஈர்க்கு, சிறு நாகப்பூ, மலைதாங்கி, பங்கம்பாளை, சிறுகாஞ்சொறி, தேவதாரம், மிளகு, கோரைக்கிழங்கு, பெருங்குரும்பை, கடுகுரோகணி, அதிவிடயம் இவைகளை வகைக்கு இரண்டு கழஞ்சாகக் கொண்டு, இரண்டு நாழி தண்ணீர் விட்டு முறைப் படி குடிநீரிட்டு, நோய்க்குத் தக்கபடி அளவிட்டு, அதில் கோரோசனைப் பொடி திப்பிலிப்பொடி சிறிது தேன் இவற்றைக் கலந்து கொடுத்து வர வளிஅழல்சுரம் போம்.

உவந்த கொத்து மலிவேர்க்கொம்
புடனே சிறுகாஞ் சொறிமதுரஞ்
சிவந்தே யிருக்குங் கொன்றைத்தோல்
சிறுமூல முத்தக் காசுடனே
நவந்தா னான பற்படக
நன்னா ரியின்வே ரிருவேலி
அவந்தீர் குதிரை வாலிபுடோ
லான தேவ தாரமுமே.
தாரார் குழலாய் வளர்முள்ளி
தயங்கு விலாமிச் சோரொன்று

நேரா யிவைதான் கழஞ்சரையாய்
நிறுத்துக் கூட்டி யிருநாழி
சீராய் நீரில் விட்டுழக்காய்ச்
செறியக் காய்ச்சித் திப்பிலிதேன்
காரா ரிருள்போய் விடிந்துண்டாற்
கலங்கிச் சுகமாங் கனிமொழியே.

(பொருள்) கொத்துமல்லி, சுக்கு, சிறுகாஞ்சொறி, அதிமதுரம், சரக் கொன்றைப்பட்டை, சிறுமூலம், கோரைக்கிழங்கு, பற்பாடகம், நன்னாரி, இருவேலி, குதிரைவாலிவேர், பேய்ப்புடல், தேவதாரம், முட்காய் வேளைவேர், விலாமிச்சம்வேர் வகை ஒன்றுக்கு அரைக்கழஞ்சாகக் கொண்டு, இரண்டு படி நீர்விட்டு, உழக்காகக் காய்த்து வடித்ததில் விடியற்காலையிலும் மாலையிலும் ஆழாக்குக் குடிநீரில் திப்பிலியும் தேனுங்கூட்டிக் கொடுக்கவும். இதனால் வளிஅழல்சுரம் போம்.

வளியையச்சுரம் (வாத கபசுரம்) :

இச் சுரத்தில், இரண்டு நாட்கள் வரையில் இருமுறை வடித்த சோற் றின் கஞ்சிகொடுத்த பின் ;

1. கேளும் மூன்றா நாளரிசி
கிளர்வேர்க் கொம்பு கோட்பயறு
மூளும் பொரியு மிவைகொண்டு
முதலாங் குடிநீ ரிட்டுப்பின்
நாளும் பருக வேழ்சென்றால்
நாடிக் குடிநீ ரிடுமருந்து
நீளுஞ் சீந்தில் மாதுளைவேர்
நெடிதா மாலின் வேர்தேடே.
தேடு முத்தம் வேர்க்கொம்பு
சேரா யொன்று முக்கழஞ்சு
ஈடு பெற்ற நீர்விட்டே
யெட்டொன் றாக வேகுறுக்கி
நீடு திப்பிலி பொடியாக்கி
நீயிட் டருந்தங் கதன்மேலே
ஆடும் வாத சேட்பமதா
லாகுஞ் சுரங்கள் மாறிடுமே.

(பொருள்) மூன்றாம் நாளில், சுக்கு, பாசிப்பயிறு, நெற்பொரி இம் மூன்றுங் கூட்டி, முறைப்படி குடி நீராக்கி நான்கு நாட்கள் கொடுத்து ஏழாம் நாளில் மேற்படியாகவே குடிநீர் செய்ததில், சீந்தில், மாதுளை வேர், கருந்துளசிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு வகைக்கு முக்கழஞ்சு கூட்டிப்போதுமான நீர்விட்டு எட்டொன்றாகக் காய்த்துவடித்து அத் துடன் சிறிது திப்பிலிப் பொடி கூட்டிக் கொடுக்க வளியையச்சுரம்போம்.

2. மாறி லாத தேவதார
மணமுடை செல்வி யங்கடுகு
வீறி லாத ரோகணியும்
மரத்து மஞ்சள் திப்பிலியும்
தேறி யொன்று மிருகழஞ்சு
சேர நீரி லெட்டிலொன்றா
ஊறி யிந்து திப்பிலியோ
டுண்ண நோய்க ளோய்ந்திடுமே.

(பொருள்) தேவதாரம், செவ்வியம், கடக ரோகணி, மரமஞ்சள், திப் பிலி ஒவ்வொன்றும் இருகழஞ்சு கொண்டு, முறைப்படி குடிநீரிட்டதில், திப்பிலியும் இந்துப்பும் பொடித்ததில் இருசிட்டிக்கையிட்டுக் கலக்கிக் கொடுக்க, நோய் போம்.

3. ஒயுங் கோட்டம் பெருங்குரும்பை
யுடனே சந்தம் பேய்முசுட்டை
யாயுங் கடுகு ரோசனைவேப்
பலகு சிறுதேக் கதிமதுர
மேயுஞ் சீந்தி லதிவிடையோ
டொக்க நறுக்கிப் பெருங்குமிழ்வேர்
சாயும் இதனை யறிந்துவிட
சாந்த மாகுஞ் சுகசுரமே.

(பொருள்) கோட்டம், பெருங்குரும்பை, சந்தனம்,பேய்முசுட்டை, கடுகு, கோரோசனை, வேப்பலகு, சிறுதேக்கு,அதிமதுரம், சீந்திற்தண்டு, அதிவிடையம், பெருங்குமிழ் இவைகளை ஓரளவாய்க் கொண்டு முறைப் படி குடிநீர் செய்து அளவுப்படி கொடுக்க வளியையக் காய்ச்சல் போம்.

4. ஆன தேவ தாரமுடன்
னரியவேர்க்கொம் படர்கொள் ளு
பானல் போலும் விழிமடவாய்
படகம் மல்லி வசம்புடனே
சீன மிளகு முந்திரிகை
திப்பிலி முத்தக் காசிவைகள்
தானோ ரொன்று முக்கழஞ்சு
தண்ணீ ரிரண்டு நாழிவிடே.
விட்டுக் காய்ச்சி யுழக்கானால்
விளம்பு பெருங்கா யங்கால்தா
னிட்டுக் குடிப்பீ ராமாகி
லிடரே செய்யுங் குடல்தன்னி
லொட்டித் திரியும் வாதசிலேற்
பனமா யுள்ள சுரங்களெலாம்
முட்டுப் பட்டுத் தடுமாறி
முறிந்தே யோடுங் கண்டீரே. சுரவாகடம்.

(பொருள்) தேவதாரம், சுக்கு, பற்பாடகம், கொத்துமல்லி, வசம்பு, மிளகு, முந்திரிகை (திராட்சை), திப்பிலி, கோரக்கிழங்கு இவற்றை வகைக்கு மூன்று கழஞ்சாகக்கொண்டு, ஒன்றிரண்டாகப் பொடித்து இரண்டுபடி நீர்விட்டு, உழக்காகக் காய்த்து வடித்து, அதில் காற்கழஞ்சு பெருங்காயம் பொடித்துக் கால் கழஞ்சுக் கூட்டி, காலைமாலையாக ஆழாக்குக் குடி நீரைக் கொள்க. அது குடலில் வளியும் ஐயமும் கூடிச் செய்யுங் கேடுகளைப் போக்கி, சுரத்தைத் தணிக்கும்.

5. கண்டார் புகழுங் கொடிக்குமிழி
கடுக்காய் சீந்தில் பேய்ப்பீர்க்கோ
டொன்றா மிலுப்பைப் பூவேர்க்கொம்
புடனே யாடா தோடையின்வேர்
கொண்டோ ரொன்று முக்கழஞ்சு
கூட்டி யிடித்துக் கொள்வீரே.

கொள்ளும் புனல்தா னிருநாழி
கூட விட்டுக் காய்ச்சியபின்
தெள்ளும் புனல்தா னுழக்கானாற்
திப்பிலி யிந்துப் புத்தேனும்
விள்ளும் படியந் நீர்தன்னில்
விட்டுக் குடிப்பீ ராமாகில்
எள்ளுங் காயும் வாதசிலேற்
பனமாஞ் சுரம்போ முடல்விட்டே.

(பொருள்) கொடிக்குமிழ்வேர், கடுக்காய், சீந்தில், பேய்ப்பீர்க்கு, இலுப்பைப்பூ, சுக்கு, ஆடாதோடைவேர் இவற்றை வகைக்கு மூன்று கழஞ்சாகக் கொண்டு, இடித்துக் கடத்திலிட்டு, இரண்டுபடி நீர்விட்டுக் காய்த்து உழக்காக வடித்து, அதில் சிறிது திப்பிலி, இந்துப்பு தேன் இவைகளைக் கூட்டிக் காலைமாலையாகக் குடிக்கில் வளியையச்சுரம் போம்.

வளி முக்குற்றச்சுரம் :

அறுசீர் விருத்தம்.

காசுசா ணாக்கிப் பொன்னாங்
காணியின் சமுலத் தோடே
பேசிய மாவின் பூவும்
பிறங்கிடு நிலவேர் தானும்
தேசுசேர்ந் திடுமுப் பாலை
சிறுபய ரோடு திப்பிலி
மாசிலாக் குறுவை நெல்லும்
வகையிவை சமனாய்க் கூட்டே

கூட்டியே கொத்து மல்லி
குலவிய மணலி னோடே
போட்டது நெல்லு வெந்து
பொரிந்திடும் பதம தானால்
வீட்டிய வெண்ணெய் போட்டுக்
கொதித்தண்ணீர் விட்டி றக்கிச்
காட்டுபற் பாடந் தன்னை
கரைத்துநீ குடித்தி டாயே.

குடித்த போது கொடிய சுரத்துடன்
பிடித்த தாகம் பெருகு முழலையுந்
தடித்த தென்னத் தபனமும் மாறிடும்
வடித்தந் நீரை வகையுறக் கொண்டிடே

(பொருள்) கோரைக்கிழங்கு, சாணாக்கிக் கீரை, பொன்னாங் காணி, மாம்பூ, வெட்டிவேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சிறுபயறு, திப்பிலி, குறுவை நெல் இவற்றைச் சமனெடைகொண்டு சிறிது கொத்து மல்லி, மணலிக் கீரையும் சேர்த்து முதலில் நெல்லைச் சட்டியிலிட்டு வறுத்துப் பொரிந்திடும்போது, அதில் வெண்ணெய் போட்டு தக்க அளவு நீர் கூட்டி மற்றவைகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து அத்துடன் சிறிது பற்பாடகம் கலந்து தக்க அளவில் காலை மாலை கொடுக்க, இச் சுரத்தோடு தொடரும் நீர்வேட்கை, உடல் எரிச்சல் போம்.

வேம்புக் குடிநீர் :

கொண்டபின் வேலந் தோலைக
குறுகவே தறித்த டித்து
மண்டவே கரைத்துக் காய்ச்சி
வற்றியே பதம தானற்
றண்டிடா மதுர மேலந்
தயங்குவேர்க் கொம்பிந் துப்பு
மிண்டிடுந் கொத்து மல்லி
மிளகுடன் கடுக்காய் கூட்டே.

கூட்டியோர் நிறையிற் கொண்டு
குலவிய புளியந் தோலி
னீட்டிய சாற்றி னாலே
யிவையரைத் தேமுன் காய்ந்து
காட்டிய கஷாயத் திட்டுக்
காய்ச்சியே திரண்ட வாறே
மீட்டுநீ யிறக்கி நாலில்
விரைந்து னக்கிக் கொள்ளே.

(பொருள்) வேலம் பட்டையைப் பொடியாக நறுக்கி இடித்து, நீர் விட்டுப் பிசைந்து காய்ச்சி வற்றிய பதத்தில் வடித்து, வைத்துக்கொள். பின்பு அதிமதுரம், ஏலம் சுக்கு, இந்துப்பு, கொத்தமல்லி, மிளகு, கடுக்காய், இப்பொருள்களை ஓர் அளவாகக் கொண்டு கூட்டி, புளியம்

பட்டையை இடித்துப் பிழிந்த சாற்றாலரைத்து, முன்செய்த குடிநீரில் கூட்டிக் காய்த்து, திரண்டு மெழுகு பதம் வருகையில் எடுத்து நாவில் விட்டுச் சுவைக்கவும். இதனால், ஐயக்குற்றம் தீக்குற்றங்களால் உண்டான வாய் நீர் சுரப்பு. நாவறட்சி, நீர்வேட்கை இவைகள் போம். முப்பிணி நீங்கும். உணவாக அரிசியை வறுத்துச் சுக்கைத் தட்டிச் சீலையில் முடிந்து கட்டிக் கஞ்சிகாய்ச்சி ஏழு நாள் கொடுத்துவர வளிமுப்பிணி நோய் போம்.

சிற்றாமுட்டிக் குடிநீர் :

நீர்செறியுஞ் சிற்றமுட்டி காஞ்சொறிநன் னாரி
நெடிதான பேராமுட்டி நிலவேம்பி னுடனே
தார்சொறிமுத் தக்காசு வேர்க்கொம்பு சீந்திற்
நண்டோரொன் றிருகழஞ்சாயஃதொன்றா யிடித்து
வார்புனலங் கிருநாழி விட்டெரித்தெட் டொன்றாய்
வற்றியபின் திப்பிலிதேன் வகையாய்விட் டருந்திற்
சூறவே வருசன்னி வாதசுரம் தீரும்
சொல்னிரண் டாங்குடிநீர் துடியிடையேர்க் கொம்பே.

(பொருள்) சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொறி, நன்னாரி, பேராமுட்டி, நில வேம்பு, கேரைச் கிழங்கு, சீந்தில் வகைக்கு இரண்டு கழஞ்சு கூட்டி, இரண்டு படி நீரிட்டு எட்டொன்றாகக் காய்ச்சி ஆழக்காகக காலை மாலை கொடுக்கும்போது திப்பிலிப் பொடியும் தேனும் கூட்டிக் கொடுக்க வளிமுப்பிணி சுரமும் போம்.

சுக்கு குடிநீர் :

வேர்க்கொம்பு திரிபலைமா வளையமுடன் கோட்டம்
வெட்பாலை யரிசிபுடோல் பேய்ப்பீர்க்குச் சந்து
மேற்றங்கு மிருவேலி கொத்துமல்லி படகம்
மிக்கநெய் தலின்கிழங்கு விலாமிச் சுடனே
பாற்றங்கு முந்திரிகைப் பழமுடன்பே ரிச்சம்
பழந்தேவ தாரிருப்பைப் பூமுத்தக் காசு
ஊற்றங்கு கடுகுரோ கணிபங்கம் பாளை
சொல்சிறுகாஞ் சோறியுடன் கொள்ளிரண்டும் கழஞ்சு.

இருநாழி தண்ணீர்விட் டடுப்பினிளஞ் சூடா
யேற்றியெரித் தேதானும் பதமாக வற்றி
உரிதான தேனுடனே திப்பிலித்தூள் கூட்டி
உண்டுவிட வேசன்னி வாதசுரத் துடனே
அருகாக வருகின்ற வாதசுர தோஷ
மவைசூழும் புவியனைத்து மரசளித்துக் காக்கும்.

(பொருள்) : சுக்கு,கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், பேய்ப் பீர்க்கு, விலாமிச்சு, வெட்டிவேர், கொத்துமல்லி, பற்பாடகம், கொட்டை முந்திரிகை, பேரீந்து, தேதாரம், இலுப்பைப்பூ, கோரைக் கிழங்கு, கடுகுரோகணி, பங்கம்பாளை, சிறுகாஞ்சோறி ஆகியவற்றை வகைக்கு இரண்டு கழஞ்சாக எடுத்து இவைகளை ஒன்றிரண்டாக இடித்து இரண்டு படி நீரிட்டு, எட்டி லொன்றாகக் காய்ச்சி வடித்து, ஆழாக்குக் குடிநீரில் திப்பிலியும் தேனுங்கூட்டிக் கொடுக்க, வளிச்சுரம் ளிமுப்பிணி சுரம் முதலிய ஏழு வகையான சுரங்களும் நீங்கும்.

அடு- (பித்த ) சுரக்குடிநீர் :

கூட்டுஞ் சிற்றா முட்டிசுக்குக்
கொண்டு மூன்று கழஞ்சாக
வீட்டுந் தண்ணீர் தனிற்காய்ச்சி
யிறக்கி யாற்றிக் கொடுத்திடுக
வாட்டும் வழுக்க லிளநீரை
வைத்தே யுலையாச் சோறாக்கு
யூட்டி முழுநா ளிப்படியே
யுவந்தெட் டாநா ளொன்றுசெயே.

சுரவாகடம்,

ஒன்றும் வில்வை வேர்க்கொம்போ
டுற்ற சிற்றா முட்டியின்வேர்
துன்னும் பொரிபா திரியின்வேர்
சுரைத்தண் டோரென் றிருகழஞ்சு
கன்றுங் கொத்து மலிபயறு
கையா லோரோர் பிடியிரண்டு
என்று நாழி யிரண்டுழக்காய்
வடித்து தேன்சேர்த் தூட்டிடுமே.

வாகடம்

(பொருள்) : சிற்றாமுட்டி, சுக்கு வகைக்கு மூன்று கழஞ்சாக எடுத்துப் பொடித்து, முறைப்படி நீர் கூட்டிக் காய்த்து, வடித்து அதனைக் கொடுத்திடுக. வழுக்குடைய இளநீரைக் கொண்டு உலை நீராக்கிச் செய்த சோற்றைத் தரவும். இவ்வாறு எட்டு நாள் கொடுத்து, ஒன்பதாம் நாளிலிருந்து வில்வ வேர், சிற்றாமுட்டி வேர், பாதிரிவேர், சுரைத்தண்டு வகைக்கு இரு கழஞ்சாகக் கொண்டு, அதில் கொத்து மல்லியும், பச்சைப் பயிறும் வகைக்கு இரண்டு பிடியாக எடுத்துக் கூட்டி, இரண்டு படி நீர்விட்டு, உழக்காகக் காய்த்து வடித்ததில் காலை மாலை யாகக் கொள்ளும்போது தேன்கூட்டவும். இதனால் அழற் சுரம் நீங்கும்.

புகழுஞ் சீந்திற் பற்படகம்
பூசுஞ் சந்தம் விலாமிச்சுத்
திகழும் வோர்க்கொம் பிருவேலி
சிற்றா முட்டி யுடன்காசு
தகவே யோரொன் றிருகழஞ்சு
தண்ணீ ரிரண்டு நாழிவிட்டுச்
சுகமா யுழக்காக் கிக்குடித்தாற்
சோராம் பித்த சுரந்தானே.

(பொருள்) : சீந்தில், பற்பாடகம், சந்தனம், விலாமிச்சம்வேர், சுக்கு, இருவேலி, சிற்றாமுட்டி, கோரைக் கிழங்கு வகைக்கு இரண்டு கழஞ்சாகத் தட்டி இட்டு, நீர் இருநாழி விட்டு உழக்காக வற்றக் காய்ச்சி உண்ணில் அழல் சுரம் நீங்கும்.

தானே வேர்க்கொம் பிருவேலி
தயங்கு மிலாமிச் சரசந்தோல்
கானே செறிமுத் தக்காசு
காஞ்சொறி பங்கம் பாளைகோட்டம்
தேனே கழஞ்சொன் றிருநாழி
தண்ணீ ருழக்காய்ப் பருகிடிலே
ஊனே யுருக்குப் பித்தசுர
முதரக் கழிச்சல் மாறிடுமே.

(பொருள்) : சுக்கு, இருவேலி, விலாமிச்சு, அரசம்பட்டை, கோரைக் கிழங்கு, சிறுகாஞ்சொறி, பங்கம்பாளை (ஆடுதீண்டாப்பாளை), கோட்டம் வகைக்குக் கழஞ்சொன்று எடுத்து, நீர்நாழி இரண்டு விட்டு, உழக்காகக் காய்த்து வடித்ததைக் காலை மாலையாக உண்ணின் உடலில் ஊனை உருக்கும் அழல் சுரம், அதில் காணும் கழிச்சலும் போம்.

மாறா மதுரம் சிற்றாமுட்டி
வளர்பே ரீந்து சந்தனமும்
வீறாம் வேர்க்கொம் பிருவேலி
வேப்பீர்க் குடனே திரிபலையும்
தேறாம் பதுமக் கிழங்குடனே
தேவ ரில்லம் முந்திரிகை
கூறா மெலுமிச் சம்பூவுங்
குலவும் புடலோ டிலாமிச்சே.

மிச்ச மிலம லோரொன்று
வேண்டிக் கழஞ்சா யிருநாழி
பச்சை நீர்தா னுழக்காக்கிப்
பரிவாய் வடித்துத் தேனுடனே
இச்சை கூரச் சர்க்கரையும்
மிட்டுக் குழைத்தாற் பித்தசுர
மச்ச மாக வோடுமென்றும்
அறைந்தார் புலவ ரானவரே.

(பொருள்) : அதிமதுரம், சிற்றாமுட்டி, பேரீந்து, சந்தனம், சுக்கு, இருவேலி, வேப்பீர்க்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், தாமரைக் கிழங்கு, தேவதாரி, திராட்சை, எலுமிச்சம் பூ, பேய்ப்புடல், விலாமிச்சு வகைக்குக் கழஞ்சொன்று எடுத்து, நீர் படி இரண்டு கூட்டி, உழக்காகக் காய்த்து வடித்துத் தேனும் சர்க்கரையும் சேர்த்துக் காலை மாலை குடிக்க, சுரம் போம்.

தாய்ப்பால் குடிநீர் :

ஆன விலுப்பைப் பூவெட்பா
லரிசி படகந் தன்னுடனே
கானல் மிகுந்த நன்னாரி
கழுநீர்க் கிழங்கு வேர்க்கொம்பு

பான மிகுந்த முந்திரிகை
பழந்தா மரையின் வளையமுட
னூன மறத்தா னென்றுகழஞ்
சொன்று வாங்கென் றோதினரே.

ஓதுந் தண்ணீ ரிருநாழி
யுள்ளிட் டுழக்காய்க் காய்ச்சியதிற்
பாதி முலையின் பால்விட்டுப்
பருகிற் பித்தச் சுரமெல்லா
மோதும் பெலனும் மிகக்குறைந்து
முளுநீ ரெனவே குளிருமெனக்
காதும் விளைவென் றருள்முனிவன்
கருதிப் புகன்று காட்டினரே.

(பொருள்) இலுப்பைப்பூ, வெட்பாலையரிசி, பற்பாடகம், **நன்னாரி**, செங்கழுநீர்க் கிழங்கு, சுக்கு, திராட்சை, தாமரை **வளையம்** வகைக்கு ஓர் கழஞ்சு கொண்டு நீர் இருநாழி கூட்டிக் காய்ச்சி உழக்காக வடித்ததில், தக்க அளவாகக் கொண்டு அதற்குப் பாதி தாய்ப்பால் கூட்டிக் காலை மாலையாகக் குடிக்கச் சுரம் போம்.

செய்க கடுக்காய் கொத்துமல்லி
சிவதை பயறு வேர்க் கொம்பு
நையுங் கடுகு ரோகணியும்
நறுக்கிக் காய்ச்சிக் கொடுத்திடிலே
தொய்யும் வயிறு கழியும்பின்
தோன்றுங் கோட்டம் பேய்ப்பீர்க்கோ
டுய்யுஞ் சிறுகாஞ் சோறியுடன்
ஒங்கும் சந்தம் நிலவேம்பே.

நிலந்தான் புகழும் பற்படகம்
நெடிதா மாடா தோடையின்வேர்
நலத்தா னான்சிற் றாமட்டி
நலமுந் திரிகைக் கழஞ்சாய்
சலந்தா னிருநா ழியிற்காய்ச்சித்
தானே யுழக்காய்ச் சக்கரையிட்
டுலந்தோர் குடிக்கிற் பித்தசுர
மோடுங் கடிதா யுடல்விட்டே.

(பொருள்) : கடுக்காய், கொத்துமல்லி, சிவதை, சிறுபயிறு, சுக்கு, கடுகு, ரோகணி இவைகளை முறைப்படி கூட்டிக் குடிநீராக்கித் தக்க அளவிற் கொள்ள வயிறு கழியும். அதற்குமேல் மறுநாள், கோட்டம், பேய்ப்பீர்க்கு, சிறுகாஞ்சோறி, சந்தனம், நிலவேம்பு, பற்பாடகம், ஆடாதோடை வேர், சிற்றாமுட்டி, திராட்சை, கோரைக் கிழங்கு, வகைக்குக் கழஞ்சு கொண்டு, நீர் படி இரண்டு விட்டு, உழக்காகக் காய்த்து வடித்து, சிறிது சர்க்கரையைக் கூட்டிக் காலை மாலையாகக் குடிக்கவும்.

**வாந்தி (சத்தி) சுரக்குடி நீர் :**

அகஞ்சோர் வில்வ வேர்சுக்கு
ஆறு கழஞ்சு நெற்பொரிதான்
சுகஞ்சே றிருவே லியினுடனே
துய்ய விலாமிச் சொருகழஞ்சு
முகந்தா மரையாள் நீர்நாழி
முயன்றே காய்ச்சித் தேனுடனே
சகந்தா னறியக் குடித்திடிலே
சத்தி சுரத்தைக் கடுத்திடுமே.

(பொருள்) : வில்வவேர், சுக்கு, விலாமிச்சு, வெட்டிவேர், சிறு காஞ்சொறி இருவேலி வகைக்கு ஒரு கழஞ்சும், நெற்பொரி ஆறு கழஞ்சும் கூட்டி, நீர் ஒரு படி சேர்த்து, எட்டொன்றாகக் காய்த்து வடித்த நீரில், தேன் கூட்டிக் கொடுக்க, சுரம் போம் ; வாந்தி நிற்கும்

**அழல்வளிச் சுரக்குடி நீர்:**

....................சிற்றரத்தை
குரும்பை மிளகு சிறு பயறு
கொத்து மல்லி கூட்டுகவே.

கூட்டி வறுத்துப் பொன்னானாற்
குணமாய் நாழி நீர்விட்டு
வாட்ட மின்றிக் காய்ச்சியதை
வடித்தே திப்பிலி தேன்கலந்து

ாட்ட மாக மூன்றுதினம்
நலமாய்ப் பருகி பட்டினிதா
போட்டுத் தினமொன் றதுதப்பிற்
புகல்வேன் குடிநீர் பொற்கொடியே.

(பொருள்) : சிற்றரத்தை, குரும்பை, மிளகு, சிறுபயறு, கொத்து மல்லி இவைகளைப் பொன் வறுவலாக வறுத்து நீர் படி கூட்டிக் காய்த்து வடித்ததில், திப்பிலியும் தேனுங் கூட்டி மூன்று நாள் கொடுத்து, கஞ்சி முதலிய சிறு உணவுகளைக் கொடுத்து வரவும்.

கொடியாப் படர்வே லிப்பருத்தி
குதிரை வாலி தூதுவளை
படியாங்காலி புடோலுடன்
கண்டங் காலி பேய்ப்பீர்க்கே
செடியாஞ் நெரிஞ்சி கூவிளையும்
சிற்றா முட்டி வேருடனே
நெடிய மதுரஞ் சதகுப்பை
நெல்லி தான்றி மோதகமே.

மோது மிலுப்பைப் பூமிளகு
முந்திரி கைக்கனி பேரீந்து
போத நிறையாய்க் கழஞ்சிரண்டு
பொருந்தக் காய்ச்சி நாலொன்றாய்
ஏதந் தீருந் திப்பிலியோ
டிதமாய்த் தேனி னிட்டருந்த
காதும் பித்த வாதசுரங்
கலங்கி யோடுங் கார் குழலே.

(பொருள்) : உத்தாமணி, குதிரைவாலி, தூதுவளை, கண்டங் கத்திரி, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, நெரிஞ்சில், வில்வ வோடு, சிற்றா முட்டி, அதிமதுரம், சதகுப்பை, நெல்லி, தான்றி, ஓமம், இலுப்பைப்பூ, மிளகு, முந்திரிப்பழம். பேரீந்து வகைக்குக் கழஞ்சுகொண்டு, இரண்டு படி நீர் விட்டு நாலில் ஒன்றாகக் காய்த்து வடித்து, அதில் திப்பிலி தேன் கூட்டிக் கொடுக்கச் சுரம் போம்

அழலையக்குடி நீர்

படர்ந்த சுக்குக் கொத்துமல்லி
தன்னை நறுக்கிச் சீலைதனிற்
தடஞ்சேர் முலையாய் கூட்டியதைத்
தண்ணீர் தனி லிட் டுறக்காய்ச்சே.

காய்ச்சி யிறக்கும் போதுபொரி
கையா லோரோர் பிடியிட்டு
வாய்த்த மருந்தை யிப்படியே
வகையாய்க் கொள்வா யெழுநாளுங்
கூச்ச மறத்தான் கொண்டதற்பின்
குடிநீ ரடைவு கூறிடுவேன்
பேச்சாம் பூவை மலைமுலையாய்
பிடியாம் நடைகே ளுளமகிழ்ந்தே,

உளங்கொள் சீந்தில் திரிபலையும்
யுடனே வெட்பா லரிசிகுப்பை
குளஞ்சேர் கழுநீர்க் கிழங்குடனே
கூட்டி நிறைமுக் கழஞ்சொன்றாய்த்
துளங்க விடித்து நீர்விட்டுச்
சுவற வெரித்தெட் டொன்றானால்
இளங்கோ கனக முலைமடவா
யிருத்தி யதனைக் கொள்வாயே.

இதுதான் கொண்டாற் சுரந்தீரும்
இரண்டாங் குடிநீ ரடைவதுபோல்.

(பொருள்) ; சுக்கு, கொத்துமல்லி இரண்டையும் சீலையில் முடிந்து நீரிலிட்டு காய்த்தபின் இறக்கும்போது அதில் ஒருபிடி நெற் பொரி யிட்டுக் கொள்ளவும். இவ்வாறு ஏழு நாட்கள் இதனை சாப்பிட்டபின் சீந்தில், முப்பலை, வெட்பாலை அரிசி, செங்கழுநீர்க்கிழங்கு வகைக்கு முக்கழஞ்சாகக் கொண்டு நீர்விட்டு எட்டிலொன்றாகக் காய்த்து வடித்த தில் ஆழாக்கு அளவு காலை மாலையாகக் கொடுத்துவர, சுரம்போம்.

ரதுவேம் பதனின் பட்டைபுடோல்
முதிய சந்த மிருவேலி
-துவாம் நளினத் தண்டுடனே
மலைவெட்பாலை யரிசிசுக்குக்
கதுவார் நெல்லி கடுதான்றி
கடுரோ கணியுங் கடிது கொரோ,

கடிதாந் தேவ தாரமுடன்
காசு கோட்ட மிலாமிச்சு
வடிவாய்க் கழஞ்சு நீர் நாழி
வற்ற வெரித்தெட் டொன்றாக்கிப்
படிகா சிடைதேன் மேல்தூவி
பரிவா யிதற்குப் பின்னுமொரு
குடிநீ ரடைவைக்கேள்
.................................

(பொருள்) : முதிர்ந்த வேம்பின் பட்டை, பேய்ப்புடல், சந்தனம், இருவேலி, அதிமதுரம், சீந்திற்றண்டு, மலைவெட்பாலை அரிசி, சுக்கு, நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி, தேவதாரம், கோரைக் கிழங்கு, விலாமிச்சு வகைக்கு ஒரு கழஞ்சு; நீர் இருநாழிகூட்டி உழக்காகக் காய்த்து வடித்ததில், ஆழாக்கெடுத்துக் காலை மாலைகளில் சிறிது தேன் கூட்டிக் கொடுக்க, சுரம் போம்.

.................................
சுக்குக் கொத்துமல்லி கோட்டமுமே
கோட்டமாம் வேப்பலகு
கொடியாஞ் சீந்தில் மரமஞ்சள்
வாட்ட மிலாக் கறிப்பாலை
வளர்தண் டுடனே யதிமதுர
மீட்டுஞ் சிறுகாஞ் சோறியுடன்
மேவும் மோடிக் கணையதுமே
மீட்டுந் நீர்தா னிருநாழி
மேவிக் காய்ச்செட் டொன்றெவ வே

ஒன்றா கத்தே னிரண்டுகழஞ்
சுடனே கூட்டி யின்னமுங்கேள்
கொன்றைப் பழத்தோ டிலாமிச்சு
கோட்டங் காட்டு கச்சோலங்
குன்றா முத்தக் காசுடன்
கூட்டு மரத்தின் மஞ்சளிவை
நன்றா மிரண்டு கழங்சுதணீர்
நாலொன் றாய்த்தே னுடன் பருகே.

(பொருள்) : சுக்கு, கொத்துமல்லி, கோட்டம், வேப்பலகு, சீந்திற் கொடி, மரமஞ்சள், கறிப்பாலைத்தண்டு, அதிமதுரம், சிறு காஞ்சொறி, திப்பிலி, திப்பிலிமூலம் இவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, இரு நாழி நீர் விட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில் ஆழாக்களவு உண்ணவும்.

முப்பிணிக்கு :

1 நிலவேம்பு, விலாமிச்சு, சாரணைவேர், தும்பைவேர், கண்டங் கத்திரி வேர், சிற்றரத்தை, கள்ளிவேர், கொடிவேலி வகைக்குப் பல ஒன்றெடுத்துக் குடிநீராக்கிக் காலை மாலை சாப்பிடவும்.

ஐயசுரக் குடிநீர்

...................................

.............சுரந்தோன் றியநாளிற்
கண்ட காலி சுக்குவில்வங்
கடிதாய் நறுக்கிக் கலைதனிலே
கொண்டங் கோரோர் நிறையாகக்
கூட்டிக் கட்டி யிருநாழி
தண்டார் நீர்விட் டுழக்காகத்
தானே காய்ச்சிக் கொடுத்திடுமே.

கொடுநீ சோறு மிவ்வுலையைக்
கொண்டே யவித்து மறுநன்னீர்
படியே கொடுத்தாங் கெட்ட நாள்
பகர்வேன் கேளு முதற்குடிநீ
ரடவே யிருநாட் பட்டினிவிட்
டடர்வேர்க் கொம்பு திப்பிலி
யுடனே முந்திரி கைக்கனியும்
முற்ற திப்பிலி திரிபலையே.

நிரிந்தோ ரொன்று நாற்கழஞ்சு
சேர்த்தங் கிருநா ழிப்புனலி
லெரித்தே காய்ச்சி யெட்டொன்றாய்
இசைந்த பெருங்கா யமுந்தேனுந்
தெரித்தே தயவாய்ப் பொடியுடனே
சேர்த்துக் குடிநீர் தனையருந்தே
யருந்தேன் மொழியாய் பின்னிரண்டாங்
குடிநீர் தன்னை யறைகுவமே.

(பொருள்) ஐயசுரங் கண்ட நாளே, கண்டங்கத்திரி, சுக்கு, வில்வ வேரோடு இவற்றை ஓர் எடையாகக்கொண்டு, இரண்டு படி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சிய குடிநீரைக் காலை மாலை கொடுக்கவும்.

இக்குடிநீரையே உலையாகக் கொண்டு சோறு வடித்து, அதை நோயினருக்குக் கொடுக்கவும். இவ்வாறாகக் குடிநீரையும், குடிநீரால் வடித்த சோற்றையும் எட்டு நாள் வரையில் கொடுக்க நோய் போம். அதிலும் தீரவில்லை என்றால், இரண்டு நாள் பட்டினிவிட்டு மறுநாள் சுக்கு, திப்பிலி, சந்தனம், திராட்சைப்பழம், கடுக்காய், தான்றி, நெல்லி இவற்றை வகைக்கு நான்கு கழஞ்சாகக் கொண்டு இரண்டு படி நீர்விட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்து, அதில் பெருங்காயமும் தேனும் திப்பிலியும் கூட்டிக் கொடுக்க நோய் போம்.

அறையுஞ் சீந்தில் பற்படகம்
ஆன சிறுமூ லஞ்சுக்குப்
பறையு மெழுமுட் செடிவேரும்
பரிந்தோ ரொன்று கழஞ்சரையாய்
செறிநீர் நாழி யிரண்டு விட்டுச்
சேரக் காய்ச்சி எட்டொன்றா
யுறையுந் தேன்திப் பிலியுடனாய்
யுண்பா நன்கு கரத்தெடுத்தே.

(பொருள்) சீந்திற்றண்டு, பற்பாடகம், சிறுமூலம் (சிறுபஞ்ச மூலம்), சுக்கு, முட்காய் வேளைவேர் ஆகியவற்றை வகைக்கு அரைக் கழஞ்சு கொண்டு இரண்டு படி நீர்விட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில், தேன், திப்பிலி கலந்து கொடுக்கச் சுரம் போம்.

கரமாம் வேர்க்கொம் புடன்கடுக்காய்
கடுகு ரோகணி செவ்வியமு
முரமாம் மஞ்ச ளும்பரில்ல
மோரொன் றிரண்டு கழஞ்சுகொண்டு
பரமா யிருநா ழிப்புனலிற்
பரிந்தே காய்ச்சி யுழக்கானால்
இரமாந் தேனிந் துப்புடனே
யெடுத்தே நீயு மருந்துகவே.

(பொருள்) சுக்கு, கடுக்காய், கடுகுரோகணி, செவ்வியம், மரமஞ்சள், தேத்தான்கொட்டை வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து, நீர் இரண்டு படி விட்டு, உழக்காகக் காய்ச்சி வடித்து, தேனும் இந்துப்பும் கூட்டிக் கொடுக்க நோய் போம்.

வாழ்வுபெரு சீந்தில்மர மஞ்சள்சிறு மூலம்
நீளியதோர் முந்திரிகை நின்றசெவ்வி யந்தான்
பாழமுறு காஞ்சொறிகள் பற்படக நாற்காய்
காளநிறத் திப்பிலித்தூள் தேனுடன ருந்தே.

(பொருள்) சீந்தில், மரமஞ்சள், சிறு பஞ்சமூலம், திராட்சை, செவ்வியம், சிறுகாஞ்சொறி, பற்பாடகம், கத்தரிவேர், இவை வகைக்கு இரண்டு கழஞ்சும், நீர் இண்டு படியும் சேர்த்துக் காய்த்து, வற்றியபின் வடித்து, திப்பிலிப்பொடியும் தேனுங் கூட்டிக்கொடுக்க, சுரம் போம்.

அருந்திடுநன் னாரிபடர் தூதுவளை வட்டங்
கிருந்தசிறு காஞ்சொறியும் மியங்கிவைகள் வேர்கள்
சொருங்குசொறி யாடாதோ டைதிரிப லாதி
பொருந்திவளர் சுக்குடனின் பூறல் பங்கம் பாளை,
பங்கமற வேரிரு கழஞ்சுபக ரக்கேள்
பொங்குமிகு நாழிபுனல் போதவத்தில் வீசிக்
கொங்குலவு மெட்டிலொரு கூறுகுறு கிற்றேற்
றிங்களென்று முப்பினோடு திப்பிலிகூட் டுண்ணே.

(பொருள்) நன்னாரி, தூதுவேளை, சிறுகாஞ்சோறி ஆகியவைகளின் வேர், ஆடாதோடை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, இம்பூறல், பங்கம்பாளை வகைக்கு இரு கழஞ்சு நீர் இருநாழி கூட்டி எட்டிலொரு கூறாகக் குறுக்கி வடித்து இந்துப்பும் தேனுங்கூட்டிக் கொடுக்க ஐய சுரம் போம்.

வேலிப் பருத்திநொச்சில் மிக்ககண்டங் கத்திரியும்
கோலவரண் முள்ளிஇஞ்சு கூறாய்கேள் —மூலி
செடியாடா தோடை சேராகக் கூட்டிப்
பொடியாகப் பிட்டுப் புரி

இடிமருந்து தன்னை யெடுத்துப் பிழிந்து
வடிதிப் பிலிதூவி வைத்து—மிடவே
யகலவே பூபதியோ டிச்சுராங்கு சத்தைப்
புகலவே ஐயசுரம் போம்.

(பொருள்) உத்தாமணி,நொச்சி, கண்டங்கத்திரி,வரள்முள்ளி, இஞ்சி ஆடாதோடை இவ்வாறையுங் கொண்டு பிட்டவியலாக அவித்துப் பிழிந்த சாற்றில் சிறிது திப்பிலிப்பொடி கூட்டி, ஒரு பூபதி மாத்திரை யோடு இந்தச் சாற்றைத் தக்க அளவில் கொடுக்க, ஐயசுரம் போம் என்பதாம்.

ஐயவளிச்சுரக்குடி நீர் :

.........................................

சுரங்கண்ட நாளதிலே கபமே றாமற்
சார்பாக நெல்லியுடன் கடுக்காய் தான்றி
சரியாக நிறுத்துவித்துத் தண்ணீர் வாங்கி
நேராகத் திப்பிலியைப் பொடித்து த்தூவி
நீயருந்து நாள்முன்றுக் கப்பா லேதான்
சீரான முதற்குடிநீர் வட்டுத் தூது
செம்முள்ளி கறைக்கண்டன் தேடுவாயே.

தேடியே மதுரங் கோட்டஞ்
செஞ்சந்து தேற்றான் வித்தோ
டாடிய முத்தக் காசோ
டரியசீர் சமனாய்க் கூட்டி
நாடியே நீரும் நாழி
நன்குற வெரித்து வற்றிப்
போடுவா யிந்து சீனி
புகட்டியே குடித்தி டாயே.

(பொருள்) சுரங்கண்ட நாளிலே ஐயம் பெருகாமற்படி செய்தற்கு, நெல்லிக்காய், கடுக்காய்,தான்றிக்காய் இவை ஒரெடையாக் கூட்டிக் குடி நீரிட்டுக் காய்த்துவடித்து, வேண்டிய அளவுகொண்டு அதில் சிறிது

திப்பிலியைப் பொடித்துக்கூட்டி, மூன்று நாள் சாப்பிட்ட பின், தூதுவளை செம்முள்ளி, சிவனார்வேம்பு வேர், அதிமதுரம், கோட்டம், சிவப்புச் சந்தனம், தேற்றான்கொட்டை, கோரைக்கிழங்கு வகைக்கு ஒரு கழஞ் சாகக் கூட்டி இருநாழி நீர் விட்டு வற்றக் காய்த்துச் சீனிகூட்டிக் குடிக் கவும்.

புகட்டியே குடித்த தன்பின்
புதியசந் தகிலும் கடுக்காய்
தகட்டிய நெய்தல் சீந்தில்
தண்டுடன் கண்டங் காலி
பகட்டிசீ யாவு மொன்றாய்
பற்படக் கத்தைக் காய்ச்சி
அகட்டுறக் கூகை நீறிட்
டருந்திட வகன்று போமே.

(பொருள்) புதிய சந்தனம், அகில், கடுக்காய், நெல்லி, சீந்தில், கண்டங்கத்திரி, பற்பாடகம் வகைக்கு இரண்டு கழஞ்சு கூட்டிக் குடி நீராக்கியதில் கூகை நீறிட்டுக் குடிக்க, சுரம் போம்.

அகன்றுபோம் பொற்ற லைக்கை
யான்குருந் தரனார் வேம்பு
விகன்றிட தூது வட்டு
வில்வபத் திரிபே ரீந்து
சுகந்தரும் கரந்தை கோட்டஞ்
சுக்கிலா மிச்சு மல்லி
திகந்தமும் மணக்கும் பச்சைத்
திப்பிலியும் நெல்லிக் காயே.

காயுடன் தேற்றான் வித்துக்
கழஞ்சிரண் டாகக் கூட்டி
பாயுநீர் நாழி ரண்டு
பற்றிய தீயிற் காய்ச்சி
யாயது உரியாய் வற்றி
யசமோதப் பொடியிந் துப்பு
வாயினாற் குடிக்கிற் சேற்ப
வாதமாஞ் சுரங்கள் போமே.

(பொருள்) கரிசாலை, சிவனார் வேம்பு, தூதுவளை, வில்வ இலை, பேரிச்சம்பழம், சிவகரந்தை, கோட்டம், சுக்கு, விலாமிச்சு, கொத்து மல்லி, பச்சைத் திப்பிலி, நெல்லிக்காய், தேற்றான் கொட்டை வகைக்குக் கழஞ்சு இரண்டாகக் கூட்டி, நீர் இரண்டு படி யிட்டுக் காய்த்து, வற்றிய பின் வடித்ததில் சிறிது ஓமப்பொடியும் இந்துப்புங் கூட்டிக் குடிக்க ஐயவளிச் சுரம் போம்.

ஐயழல் சுரக்குடிநீர்:

..............................

..............................
தரிப்பின்றி யேநி லத்தின்
தாலம்நீர் முள்ளி யின்வேர்
அரப்புண்ட நன்னா ராலின்
தூய்வுள சாத்தா வாரி
கரைப்புண்ட நீரிற் காய்ச்சிக்
கியாழத்தை வடித்தி டாயே.

வடித்துநீ ருலையாய்ப் பெய்து
வாகாகச் சோற வித்துப்
பிடித்திடும் மிளகு நீரிற்
பிசறியேழ் போதுக் குண்ணத்
தடித்திடு சேற்ப வேகந்
தணியும்பின் குடிநீர் கேளாய்
செடித்திடு பங்கம் மல்லி
தேற்றான்வேர்க் கொம்பு காய்ச்சே.

காசொடு தூதின் தண்பூக்
கத்திரி யின்பூ வட்டு
வாசியாம் பூவி லுப்பை
வளரும்பூ மகிழான் றண்பூ
பேசிய கோட்டம் நற்சீர்
பிச்சிப்பூ வீர வெண்காய்
மாசிலா மதுரஞ் சன்னி
வளர்விரை மாஞ்சில் கூட்டே.

விரைவுறு செண்ப கப்பூ
வெள்ளுள்ளி சமனாய்க் கூ!
நெரியவே யிடித்து நீர்தான்
நீயிடு நாழி ரண்டு
எரியினில் வற்றக் காய்ச்சி
யிறுத்ததில் திப்பி லித்தூள்
சரிசரி யிந்து கோரோ
சனையுமேற் பொடியி டாயே,

இட்டநீ குடித்த போதே
யிளைப்பினை தொய்வு மூச்சுத்
தொட்டிடுஞ் சேற்ப பித்த
சுரமுத லான வெல்லா
மிட்டமாந் தாய்ப சித்தே
யிருப்பத்தான் பசிக்கின் பாகச்
சட்டமா யுண்ட புல்லன்
தன்பொரு ளென்னப் போமே.

(பொருள்) : மண் புழு (நாக்குப்பூச்சி), நீர்முள்ளி வேர், தன்னாரி ஓரளவாகக் காண்டு, அதற்குத்தக்களவாக நீர்விட்டுக் காய்த்து வடித்து அந்நீரை உலையாகக் கொண்டு சோறுவடித்து அதனை மிளகு நீரோடு கலந்து ஏழு போதுக்கு உண்டுவர ஐயத்தின் தீங்கு நீங்கும். அதன்பின் பங்கம்பாளை (ஆடுதீண்டாப்பாளை), கொத்துமல்லி, தேற்றான்கொட்டை, சுக்கு, தூது வேளைப்பூ, கத்திரிப்பூ, வசுவாசிப்பூ, இலுப்பைப்பூ, மகிழம்பூ, கோட்டம், சீரகம், பிச்சிப்பூ, மாஞ்சில், செண்பகப்பூ, வெள்ளைப்பூண்டு, மதுரம், சன்னிநாயகத்தின் விரை இவைகளை ஒவ்வொரு கழஞ்சாகக்கூட்டி இடித்து, இரண்டுபடி நீரிட்டுக் காய்த்து வடித்து அதில், திப்பிலி, இந்துப்பு, கோரோசனை இவற்றை ஓர் அளவாக எடுத்துப் பொடித்ததில் சிறிதுகூட்டிக் கொடுக்க, சுரம், இளைப்பு, ஈளை, சோர்வு, சுவாசம், ஐயவழல் காய்ச்சல் முதலியனயாவும், தாய்ப்பசி திருக்கவிட்டுத் தான் இன்பத்துடன் உண்டவன் பொருள் போன்று விரைவில் மாய்ந்துபோகும்.

குளிர்சுரக் குடிநீர், பாலைத்தண்டுக் குடிநீர்:

பாராம் கறிப்பா லையின்தண்டு
பகருங் குதிரை வாலிகுமிழ்
சீரார் வேர்க்கொம் பதிவிடையஞ்
சிறுதேக் குடனே கறைக்கண்டேன்
நீரார் கோட்டம் பெருங்குரும்பை
நிலவேம் பொடுகீழ்க் காய்நெல்லி
வாராய் விட்ணு கிராந்திகொத்து
மல்லி மதுரம் மரமஞ்சள்.
மஞ்சார் குழலா யோரொன்று
வாங்கிக் கழஞ்சாய் நிறுத்ததிலே
எஞ்சா நாழி புனல்விட்டே
யெட்டொன் றாகக் காய்ச்சியபின்
பஞ்சா ரிந்து திப்பிலிதேன்
பரிவாய்ப் போட்டுப் பருகிடிலே.

(பொருள்): கறிப்பாலைத் தண்டு, குதிரைவாலி (அவ்வையார் கூந்தல்), குமிழ், சுக்கு; அதிவிடயம், சிறுதேக்கு, கோட்டம், பெருங் குரும்பை, நிலவேம்பு, கீழாநெல்லி, விட்ணு கிராந்தி, கொத்துமல்லி, நெல்லி, அதிமதுரம், மரமஞ்சள் இவற்றை வகைக்கு ஒரு கழஞ்சாகக் கொண்டு, ஒரு படிநீர்விட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில், இந்துப்பு, திப்பிலி, தேன் இவைகள் சிறிது கூட்டிக் காலை மாலையாகப் பங்கிட்டுக் கொடுக்க, குளிர்சுரம் போம்.

குறைசே ரிதற்குப் பேராமுட்டி
பொருந்துஞ் சுக்கு நிறைகாய்ச்சி
மறைசே ரிடையாய் பருகிவர
மாய்ந்து போகும் முறைச்சுரமே.
(சுரவாகடம்)

(பொருள்): பேராமுட்டியும் சுக்கும் ஓர் அளவாகக் கூட்டி முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க முறைசுரம் நீங்கும்.

சுரஞ்சேர் வெட்பா லையினரிசி
துய்ய சீந்தில் பற்படகந்
திறஞ்சேர் கண்டங் காரிபுடோல்
சிறுகாஞ் சோறி நிலவேம்போ

டுரஞ்சேர் கோட்டம் முத்தக்கா
சோரோர் கழஞ்சு புனல்தானும்
வரஞ்சேர் நாழி யிரண்டுழக்காய்
வற்றத் தீரும் வாதைகளே.

(பொருள்) : வெட்பாலை, அரிசி, சீந்திற்றண்டு, பற்பாடகம்' கண்டங்கத்திரி, பேய்ப்புடல், சிறுகாஞ்சொறிவேர், கோட்டம், கோரைக் கிழங்கு, நிலவேம்பு வகைக்கு ஒரு சுழஞ்சுகொண்டு இடித்து, இரண்டு படி நீர்விட்டு உழக்காகக் காய்த்து, காலை மாலைகளில் கொள்ளவும்.

கெடுதார் பெரியா வரைபுன்னை
கிளரும் பெரிய குமிழ்நெரிஞ்சு
வடுத்தா னில்லாக் கூவிளைவேர்
வளர்பேர் மல்லி சிறுமல்லி
அடுத்தார் புகழுங் கத்திரியும்
அணியார் பாதிரி வழுதலைவே
ரெடுத்தார் கோட்டம் மிளகுள்ளி
யெடுவேர்க் கொம்பு திப்பிலியே.

திப்பிலி யுடனே யிவையெல்லாஞ்
சேரக் கூட்டி யொருநிறையாய்க்
யப்பி லிருநா ழிகைவிட்டே
யமரக் காய்ச்சி யெட்டொன்றாய்ச்
செப்புங் குடிநீர் தனையாற்றித்
தேன்விட் டருந்தக் குளிர்ந்துவரும்
வெப்பை யெல்லா முடலதனில்
விட்டே யோடி விடுங்காணே.

(பொருள்) : பெரிய ஆவாரைவேர், புன்னைவேர், பெருங்குமிழ், நெரிஞ்சில், வில்வவேர், பேராமல்லி, சிற்றாமல்லி வேர், கண்டங் கத்திரி, பாதிரிப்பட்டை, வழுதலைவேர், கோட்டம், மிளகு, உள்ளி, சுக்கு, திப்பிலி இவைகளை ஒரே அளவாகக் கூட்டி முறைப்படி நீர் விட்டு எட்டொன்றாகக் காய்த்துக் குளிரவைத்து, தேன் கூட்டிக் குடிக்க, உடலைப்பற்றிய வெப்ப நோய்கள் விலகி நலமுண்டாகும்.

அத்திக் கள்ளு :

அத்தி மரத்தின் வேரைவெட்டி
யதிலே கலசம் வைத்தூறி
மெத்த விழுந்த தண்ணீரில்
மிகவே சீனிபே யென்னுஞ்
சுத்த வாழைப் பழச்சாறுந்
துலங்கு நீரிற் கொடுத்திடவே
சித்தம் மயக்கும் குளிரதுவுந்
தீருஞ் செய்து பாரீரே.

(பொருள்): அத்திமரத்தின் வேரை வெட்டி, அதனடியில் மட்கலத்தை வைக்க நீர்சொட்டும். அந்நீரில் சிறிது கற்கண்டும், பேயன் பழத்தையுங் கூட்டிப் பிசைந்து வைத்து, ஒருநாள் சென்றபின் பிழிந்து எடுத்து, வடித்த நீரைக் கொடுத்துவர குளிர்சுரம் போம்.

பேய்ப்புடல் குடிநீர் :

குளிர் சுரத்திற்கு : பேய்ப்புடல், பேய்ச் சீந்தில், பற்பாடகம், நிலவேம்பு, நிலாவாரை, வெட்டிவேர், விலாமிச்சு, சந்தனம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, நீர் படிஇரண்டுவிட்டு சுண்டக்காய்த்து, வற்ற வைத்ததை இரு பங்காக்கி, காலை மாலைகளில் கொடுக்கவும்.

கற்க வகைகள் : (1) எருக்கம் கொழுந்து, வெள்ளைப் பூண்டு, பச்சை வசம்பு, மிளகு, சுக்கு, பச்சை முருங்கைப்பூ இவைகளை ஓரெடையாக எடுத்து அரைத்து, புன்னைக்காய் அளவு உருட்டி, உண்டு, வெந்நீர் பருகவும்.

(2) குப்பைமேனிவேர் ½ பலம், வெள்ளுள்ளி 5 பலம், மிளகு 1½ பலம் ஆக இவற்றை எடுத்து மைபோல் அரைத்து, புன்னைக்காய் அளவு காலை மாலை சாப்பிட்டு வெந்நீர் கொள்ளவும்.

சுரத்திற்குப் பற்று :

பாரா யிதுமா ளாதாகிற்
பருகுமிள நீரை முகஞ்சீவி
நீரா சத்தி பண்ணுவித்து
நிறையுஞ் சந்தம் பன்னீருங்

சீரா யுடம்பு தனிற்பூசிச்
செறியாய்ப் போர்த்து வைத்தாக்காற்
பேரா வுழலைப் பரிதாகம்
பெரிய சுரமும் போய்விடுமே.

போனவிப் பரிகா ரங்கள்
பொருந்தவே பலவுஞ் செய்தாற்
வேனமுற் றெழுந்த தாகந்
தபனமுந் நீருந் தீர்ந்தே
யானமெய் குளிர்ந்த போதி
லணுகிடும் வாத சன்னி
யூனமுற் றடரா வண்ண
மிதின்குண மறிந்து செய்யே.

(பொருள்) : இளநீரை வயிறுநிறைய குடிக்கும்படி கொடுத்து வாந்தியையுண்டாக்கியபின், சந்தனத்தை பன்னீர் விட்டரைத்து, உடம்பு முழுமையும் பூசிப் போர்த்து வைத்தக்கால் உடல் எரிதல், நீர்வேட்கை, மிகுதியாகக் காயும் சுரம் இவைகள் [illegible]ரம்.
இப்பரிகாரத்தால் மேற்கூறிய குணங்கள் ஏற்படுவதுமல்லாமல், உடலும் குளிரும், ஒன்று அல்லது இரண்டு முறை கழியச் செய்யும். முப்பிணியையும் தொடரவொட்டாமற்படி தடுக்கும்.

இவ்வாறாகக் கூறி, குடிநீர், பற்று, வியர்வைப்பிடித்தல் முதலிய மருத்துவங்களால் நோய் நீங்காவிடில் பெரு மருந்துகளாகிய மாத்திரை, பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலிய மருந்துகொண்டு அவைக்கான துணை மருந்துகளைக் கூட்டிக் கொடுத்தல் வேண்டும். நாம் மருத்துவசாலையில் இது வரையில் நோயினரைப் படுக்கையிலிருத்தி அல்லது வீட்டிலேயே இருக்கச் செய்து இந்நோய்க்குரிய மருந்துகளைக் கொடுத்து நோய் நீங்கக்கண்ட திறனறிந்த மருத்துவத்தைக் கூறுவாம்.

செய்மருந்துகளில் கழிச்சலையுண்டாக்க : சஞ்சீவி மாத்திரை, அட்ட பயிரவ மாத்திரை, தாழம்பூ மாத்திரை, கோடாசூரி மாத்திரை, இலவங்காதி மாத்திரை, அகத்தியர் குழம்பு போன்றவைகளில் குற்றத்திற்குத் தகுந்தாற்போல் ஒன்றினை நோய் வன்மைக்கும் அவன் உடல் வன்மைக்கும் தகுந்தவாறு அளவிட்டுத் தக்க துணை மருந்தொடு கொடுக்கலாம்.

உள்ளுக்கான மருந்து : வசந்தகுசுமாகர மாத்திரை, பிரமானந்த பயிரவம், விட்ணு சக்கரம், வாதராட்சன், எமதண்டக் குளிகைபோன்ற மாத்திரைகளும், பற்பச் செந்தூரங்களில் தாளக பற்பம், அப்பிரகபற்பம், பவழ பற்பம், முத்து பற்பம், வெள்ளி பற்பம், வெள்ளீய பற்பம், கிளிஞ்சில் பற்பம், கோட்டான்இறகு பற்பமும் ; செந்தூரங்களில், கந்தகம், அப்பிரகம், பவழம், இலிங்கம், மனோசிலை, வெள்ளி, பலகரை, பூரம், வீரச்செந்தூரம் போன்றனவாம் ; கருப்பு வகைகளில், கத்தூரிக் கருப்பு, தாளகக் கருப்பு, கோரோசனைக் கருப்பு, சிவனார் அமிர்தம், கௌரி சிந்தாமணி போன்றதாகும்.

இவற்றுள் நோய்க்குத் தருந்தவாறு :—

வளி சுரத்திற்கு : (1) வசந்த குசுமாகர மாத்திரை ஒன்றைத் தேனிலிழைத்துக் கொடுத்து நொச்சிக் குடிநீர் பருகச் செய்யவும், (2) பிரமானந்த பயிரவம் ஒன்றும் இஞ்சித் சாறும் கூட்டியும் கொடுக்கலாம், (3) விஷ்ணு சக்கர மாத்திரையை இஞ்சியும் தேனும் கூட்டியும், (4) வாதராக்கதன் மாத்திரையோடு தேன் கூட்டியும், (5) எமதண்ட மாத்திரையோடு தாய்ப்பால் கூட்டியும் கொடுக்கலாம் ; இவைகளுடன் முற்கூறிய குடிநீர்களில் ஒன்றினை நோய்க்குத் தக்கவாறு கொடுத்தல் நலம்.

அழல் சுரத்திற்கு : வசந்த குசுமாகர மாத்திரையைத் தேனிலும், சாந்த சந்திரோதய மாத்திரையைப் பற்பாடகச் சாற்றிலும், லிங்கச் செந்தூரத்தை ஏலரிசிப் பொடியோடு தாய்ப்பாலிலும், முத்து பற்பத்தை வெண்ணெயிலும், வெள்ளி பற்பத்தை திப்பிலிச் சாற்றிலும் கொடுக்கவும்.

ஐய சுரத்திற்கு : எமதண்டக் குளிகையைக் கற்பூரவல்லிச் சாற்றிலும், வசந்த குசுமாகர மாத்திரையை வெள்ளாட்டுப்பாலிலும், பிரமானந்த மாத்திரையை இலைக்கள்ளியை வதக்கிப் பிழிந்த சாற்றிலும், கத்தூரிக் கருப்பைத் தும்பைச் சாற்றிலும், கோரோசனைக் கருப்பைக் கொத்து மல்லிக் குடிநீரிலும், வீரச் செந்தூரத்தில் எள்ளளவு தாய்ப்பாலிலேனும் அல்லது இரசச் சுண்ணத்தில் அரிசியெடை தும்பைப் பூச்சாற்றிலேனுங் கொடுக்கலாம். மார்பில் கோழை மிகுதியும் கட்டி இருப்பின் தாளக பற்பம் ஓர் உளுந்தெடைக்கொண்டு இலைக்கள்ளி சாற்றில் கொடுக்கவும்.

## *சிறப்பு மருத்துவம் (தேரன் நூற்படி.)

வளி சுரத்திற்கு : செம்பு பற்பத்தைக் கற்றாழைச் சாற்றிலும், வெண்ணெய் பற்பத்தை இளநீரிலும், அயநாக பற்பத்தைத் தேனிலும் இலிங்க பற்பத்தைக் குறுவால் இலைச் சாற்றிலும், கந்தக பற்பத்தை மிளகுத் தைலத்திலும், வெள்ளி பற்பத்தினைத் திப்பிலி இரசத்தினிலும் அப்பிரகபற்பத்தைப் பசுவின் நெய்யிலும், கிளிஞ்சல் பற்பத்தை பசுவின் தயிரிலும், சங்கு பற்பத்தைப் பசுவின் வெண்ணெயிலும், பொன் பற்பத்தைச் சருக்கரையிலும் பவள பற்பத்தோடு பசு வெண்ணெய் கூட்டியும், தாளக பற்பத்தில் காடிநீர் கூட்டியும், பெருங்கோட்டான் இறகு பற்பத்தில் வெண்ணெயும், ஆள் காட்டிக் குருவி இறகின் பற்பத்தில் தாய்ப்பாலும் கூட்டிக் கொடுக்கவும்.

செந்தூர வகையில் கந்தகச் செந்தூரத்தைக் குளிர்ந்த நீரிலும், தாளக செந்தூரத்தை மிளகு ரசத்திலும், முத்துச் செந்தூரத்தைப் பசுவின் வெண்ணெயிலும், வெள்ளிச் செந்தூரத்தைப் பசு நெய்யிலும், பலகரைச் செந்தூரத்தைத் தும்பைச்சாற்றிலும், வெள்ளீயச் செந்தூரத்தைச் சருக்கரையிலும், கொடுக்கலாம்.

அழல் சுரத்திற்கு : அப்பிரக பற்பத்தைப் பசுவின் தயிரிலும், காரீய பற்பத்தைத் தேனிலும், அயப் பற்பத்தைக் கள்ளியிலும், கிளிஞ்சிற் பற்பத்தை எருமைத் தயிரிலும், செம்பு பற்பத்தைத் தேனிலும், தாளக பற்பத்தைச் செம்பருத்தியிலைச் சாற்றிலும், வெண்ணெய் பற்பத்தைக் கள்ளிலும், காடை இறகு பற்பத்தை வெண்ணெயிலும், இலிங்கப் பற்பத்தைக் கல்லாலிலைச் சாற்றிலும், பொன் பற்பத்தைச் சருக்கையிலும், வெள்ளீய பற்பத்தைத் தேனிலும், பலகரைப் பற்பத்தைத் தேனிலும், பெண்புள்ளி மான் கொம்பு பற்பத்தை தாய்ப்பாலிலும், கொடுக்கலாம்.

செந்தூரத்தில் காந்தச் செந்தூரத்தைக் கள்ளிலும், பலகரைச் செந்தூரத்தைப் பசுப் பாலிலும், ஈயச் செந்தூரத்தைத் தேனிலும், வெள்ளிச் செந்தூரத்தை வெண்ணெயிலும் கொடுக்கலாம்.

---

* குறிப்பு—இதனில் கூறியது தேரையர் யமக வெண்பாவிலிருந்து எடுத்துத் தொகுத்ததாகும்.

ஐய சுரத்திற்கு : காந்த பற்பத்தை வெள்ளைப் பூண்டு தைலத்தி லும், அயநாக பற்பத்தைத் தேனிலும், காட்டு எருதுக் கொம்பின் பற்பத்தை தாய்ப்பாலிலும், இலிங்கப் பற்பத்தைப் பசுவின் தயிரிலும், கிளிஞ்சல் பற்பத்தை ஆட்டுத் தயிரிலும், சங்கு பற்பத்தைக் கடப்பஞ் சாற்றிலும், சிறு கோட்டான் இறகு பற்பத்தைத் தேனிலும், பொன் பற்பத்தை சருக்கரையிலும், தாளக பற்பத்தைத் திருநீற்றுப்பச்சை இலைச் சாற்றிலும், செம்பு பற்பத்தைச் சருக்கரையிலும், பவழபற்பத்தைப் பசுவின் பாலிலும், வெள்ளீய பற்பத்தைத் துளசிச் சாற்றிலும், வெண்ணெய் பற்பத்தைச் சீந்திலைச் சாற்றிலும் கொடுக்கலாம். செந்தூர வகையில், காந்தச் செந்தூரத்தைச் சீந்தில் இலைச்சாற்றிலும், பலகரைச் செந்தூரத்தைப் பசுவின் மோரிலும், வங்கச் செந்தூரத்தைக் கற்கண்டுடனும், வெள்ளிச் செந்தூரத்தைப் பசுவின் நெய்யிலும் கொடுக்கலாம்.

## 2. முக்குற்ற நோய்.

வேறு பெயர் : முப்பிணி நோய், சன்னி நோய் :

இயல் : இஃது, ஒருவர் யாதேனும் ஒரு நோயில் பீடிக்கப்பட்டுள்ள போது, ஒரே காலத்தில் முக்குற்றங்களும் தத்தம் அளவில் மிகுந்தெழுந்தால் விளைந்த துன்பங்கள் பலவற்றைத் தொடரச் செய்யக்கூடிய நோயாகும். பெரும்பான்மையும் சுரநோயைத் தொடர்ந்து வருவதாகும். இதனைச் சிலர் தனி நோயென்றே கூறுவர்.

முற்குறி : இந்நோயில் மிகுந்த சுரங்காய்தல், வாய் பிதற்றல், படுக்கையினின்றும் எழுந்து ஓடல், பாடல், ஆடல் முதலிய குறிகளைக் காட்டிப் பிறகு, மூக்கு, கை கால்கள் சில்லிடல், கண் பஞ்சடைத்தல், கண்ணொளி குன்றல், காதடைத்தல், கைகால் வீங்குதல் ஆகியவை ஏற்படும். இன்னும், உடலையும் தன் துணிகளையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தல், மக்கள், மனைவி, உற்றார், உறவினரை விழித்து விழித்து நோக்குதல், கண்ணீர் விடல் முதலிய குறிகளையும் காட்டும்.

நோய் வரும் வழி : நோயில் உள்ளபோது, ஐயத்தைப் பெருக்கக் கூடிய உணவுகளாலும், மற்றச் செயல்களாலும், ஐயம் வளர்ச்சியடைந்து மற்ற இரு குற்றங்களைத் தன்னளவில் மிகச் செய்து இந்நோயை வருவிக்கும். அன்றியும், மாறுபாடான ஆண் பெண் கூட்டுறவாலும், கட்டி, தீப்புண் இவைகளின் தொடர்பாகவும் முப்பிணி தோன்றுவதுண்டு. அன்றியும் :

" ஓதுமி வாறரி தமான வாசனை யூறுந னேயமெனும்
மாதயி லாதியி லேகுண மேதெனில் வாதவ யாதிமுதல்
வேதமெ லாமறு மாமெனி லாகும வேதமெய் வாறே தெனில்
யாதனை நீள்சனி நோய்வழி யால்வரு மாமஃதே யடிய."

தேரன் சேகரப்பா—383

என்றதால், மிகுந்த நன்மணம் தரக்கூடிய எண்ணெய்கள், வளி நோய்களைப் போக்குமென்றாலும், அவைகள் நன்றாகச் செய்து முடிக்காவிடினும், அவ்வெண்ணெய்களைத் தேய்த்துத் தலைமுழுகிப் பத்தியங்காக்காவிடினும் முப்பிணி நோய் பிறக்குமென அறிக.

" மன்னவன் மந்திரி சேனையர் கோனெனும் வாத முதற்பிணியாற்
சன்னிக ளானது நோய்க ளெலாமிகு சர்ப்பமெ னாவருமே
கன்னிய ரான நிலங்களி லேபயிர் காமுக ராமுழவர்
புன்னிலை ரேத செனுஞ்சிறு வித்திடு போதேமு மோதுவனே."

தேரன் சேகரப்பா 384.

(பொருள்) : வளி அழல் ஐய மென்னும் இவைகளாலுண்டான முப்பிணியானது, மற்ற நோய்களைப் போலன்றி,உடலில் பாம்பின் நஞ்சுபோல் விரைவாகப் பரவும்; பெண்களாகிற நிலத்தில், பெண்ணிச்சையில் மூழ்கியவர் பெண்ணின்பந் துய்க்கக்கருதி, சிறு உருவமைந்த தவளத்தணுவை (விந்துவை) விதைக்குங்கால், முப்பிணி நோய் வந்தெய்துமென வறிக.

அன்றியும் :

" அறிந்திடவே தருணசுரத் தவபத்யம் வந்தால்
ஆக்கிரமா மேழுவிதத் தோட மாகும்
தெரிந்திடவே யேதென்றால் சொல்லக் கேளாய்
தித்திப்புப் புளிப்பழற்சி கசப்பு மாகும்
பறிந்திடவே பாக்குவெற் றிலையும் பாலும்
பரிமளமாந் திரவியமும் பச்சைத் தண்ணீர்
தறிந்திடவே சயித்யபண்டம் ஸ்திரீசை யோகம்
தரித்தேடு வாசித்த லமுதல்வழி நடையே."

(பொருள்) சுர நோயுள்ளபோது, விதித்த பத்தியங்களைக் கடைப் பிடியாது கைவிடின், சில குற்றங்கள் மிகும். அவை, மிகுந்த இனிப்பு, புளிப்பு, கசப்பு சுவையுள்ள பொருள்களை உண்ணல், வெற்றிலை பாக்கைக் கொண்டபின் பாலருந்தல், குளிர்ந்த நீரைப் பருகுதல், குளிர்ச்சியைத் தரும் (சயித்தியம்) பொருள்களை உண்ணல், பெண் ணோடு கூடல், படித்தல், அழுதல், நடத்தல் என்பவைகளாம்.

''வழிநடைதான் சுகந் தசந் தனமும் பூவு
மணமான கற்பூரஞ் சிவந்த வத்திரம்
நெழிந்திடைதான் நெய்வெல்ல மெண்ணெ யுடனே
நெகிழ்ச்சியாந் தயிர்மெத்த புடவை காற்று
சுழிநடைதான் பெண்பார்வை மெய்தீண் டிடலால்
சுரம்வந்த வொன்பதுக்கு ளொன்ப தின்மேற்
பழிநடையிப் படிக்கொத்த வபத்யம் வந்தால்
பரிந்துமகா தோடம்வந்து பிறக்குந்தானே.''

(பொருள்) நோயுற்றபோது சந்தனம், பூ, கற்பூரம் போன்றவைகளை முகர்தல், சிவந்த ஆடைகளை உடுத்தல், நெய், வெல்லம், எண்ணெய், தயிர் முதலீய குளிர்ச்சி தரும் பொருள்களை யுண்ணல், பெண்களோடு கூடுதல், சுரம் வந்த ஒன்பதாம் நாளில் தகாத பொருள்களை யுண்ணல், புதிய ஆடை யுடுத்தல் ஆகிய செயல்களைச் செய்யின் முப்பிணி பிறக்கும் எனக் கூறுவாரு முளர்.

பதையாமல் செய்கின்ற சன்னி மார்க்கம்
பாய்கின்ற விதங்கேளு பண்பாய் நீயும்
நிதையாம லெண்ணெயுடன் தீர்த்த மாடி
நிறம்பெறவே தயிர்கூட்டிப் புசித்துப் பின்னுங்
குறையாத மந்தமுடன் புணர்ச்சி கூடில்
கூடியே வாய்வுதான் கபால மேறி
அதையாமல் மோகனஞ்செய் போக மதுவே
அப்பனே யசதியோடு சன்னி யாமே.

(பொருள்) எண்ணெய் தேய்த்துத் தலை முழுகிய பின், தயிரும் சோறும் சாப்பிட்டு, பெண்ணுடன் கூடின் சுக சன்னி உண்டாகும்.

சன்னிதான் தோன்றும் போதுஞ்
சடமெல்லாம் வேர்வை காணும்
கன்னிதான் சுகத்தால் மைந்தா
கண்கள்தான் சிவப்பே யாகும்
மன்னித்தான் காற்றா லையா
மகத்தான தோட மாகும்
வன்னித்தான் சுகத்தில் நன்றாய்
விழுந்திடுங் காயந் தானே.

(பொருள்) இவ்வாறு எழுந்த சன்னி நோயில், வளி (வாதம்) தன்னளவில் மிகுந்து தனக்குத் துணையாகத் தீ (பித்தம்)யைக் கூட்டிக்கொண்டு உடல் முற்றும் வியர்த்துக் கண் சிவப்பு உண்டாகி , மற்றைய வாத பித்த சன்னிக் கூட்டுகளில் காணும் குறிகுணங்களையும் காட்டிக் கொல்லும் என வறிக.

நோய் எண்.—சில நூலோர், இம் முப்பிணியைக் குற்ற அளவாக வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றென்பர் ; சிலர் சந்திக சன்னி, அந்தக சன்னி, ருத்தாக சன்னி, சித்தவிப்பிரம சன்னி, சீதாங்க சன்னி, தாந்திரிக சன்னி, கண்டகுப்ச சன்னி, கர்ன்னிக சன்னி, நேத்திர சன்னி, ரக்திஷ்டீவி சன்னி, பிரலாப சன்னி, ஜிம்பிக சன்னி, அபிநியாச சன்னி, எனப் பதின் மூன்றென்பர் ; தேரர், குற்ற அளவாக வரும் மூன்றுடன், நிபம், சோகம், மோகன, விட, தீ, மந்த, சண்ட சன்னியென ஏழும் கூட்டிப் பத்தென்பர். இவற்றுள் குற்ற அளவாக வரும் மூன்றினை முதலிலும், பதின்மூன்றை இரண்டாவதாகவும், தேரன் கூறிய பத்தைக் கடையிலும் கூறுவாம். அன்றியும், சில நூலோர்கள் சுக சன்னி யென்னும் பெயரால் கூறினதையும் இவண் கூறப்படும். ஈதன்றி, பிள்ளைப் பேறு முப்பிணி (பிரசவ சன்னி என்பதையும் பெண்களுக்குச் சூதகக் காலத்து வரும் முப்பிணி சன்னி)யைச் சூல் மருத்துவம்,பெண் மருத்துவம் என்னும் நூலிற் கூறுவாம்.

வளிமுப்பிணி (வாத சன்னி சுரம்)

''சிரமு நடுக்கும் பற்கடிக்கும்
சீறு மிருமும் உவாதிக்கும்
கரமு காலு மெடுத்தடிக்கும்
கண்ணும் முகமு மினுமினுக்கும்

உரமுந் துடிக்கும் நாவறளும்
மோயாச் சுரமும் பிரமையுமாம்
சரீர நடுக்கந் தளர்ச்சியுமாஞ்
சுரமு மிதுவே சன்னி பாதம்.''

(பொருள்) வளிமுப்பிணி சுரத்தினால் தலை நடுக்கல், பற்கடித்தல் மனிதரைக் கண்டால் சீறி விழுதல், இருமுதல், கையையும் காலையும் எடுத்தெடுத்துப் போடல், கண்ணும் முகமும் மினுமினுத்துக்காணல், நெஞ்சு துடித்தல், நாவறளல், விடாச்சுரம், பிரமை, உடல் முழுமையும் நடுக்கல், உடல் தளர்ச்சி ஆகிய குணங்கள் உண்டாகும்.

''உடல்சேர் சந்நி வாதசுரத்
துண்டாங் குணத்தை யுரைத்திடிலே
பிடர்நோந் தலைநோ மறிவுகெடும்
பிதற்று மிருமும் பேய்போலே
படரும் புண்போ லுடல்நோவாம்
பருகுந் தண்ணீர் தாகமுண்டாம்
விடமே போல வாய்கசப்பாம்
மிகவும் வெதுப்பு முழலையுண்டே''.

(பொருள்) வளி முக்குற்ற நோயில் உடல் சோர்வடையப் பிடரியும் தலையும், நோதல், அறிவு தடுமாறிப் பிதற்றல், பேய்போல் ஆடல், அடிக்கடி இருமல், உடல் புண்போல நோதல், மிகுந்த நீர்வேட்கை யுறல், நஞ்சுண்டது போல் வாய் கைத்தல், முகம் வெதும்பல், உடல் வளைதல் ஆகிய குறிகள் உண்டாகும்.

''உண்டே கழிச்சல் நாவுலரும
ஓது மிதற்கு வாய்நாசி
விண்டே புண்ணா நாக்கருக்கும்
மிகவே நாக்கு புண்ணாற்றல்
தண்டேன் மொழியாய் சத்தியுமாம்
தள்ளிப் பரிகா ரஞ்செய்யிற்
கண்டே மொழியாய் கணபதிக்குக்
களிக்கப் பூசை வழங்கிடுமே''.

(பொருள்) அன்றியும், இந்நோயில் அடிக்கடி வயிறு கழிதல், நாவுலரல், வாய், மூக்குத்துளை இவைகள் புண்ணாதல், நாக்கருத்துக்காணல், புண்பட்ட மூக்கு நாற்றமடித்தல், அடிக்கடி வாந்தியாதல் என்னுங் குறிகுணங்களையும் பெறும்.

''சந்நி பாத சுரக்குணங்கேள்
தலைநோ விளைப்பு மிருமலுமாய்
வெந்நீ ரெனவே யுடல்வெதும்பும்
வேர்க்கும் வயிறு கெட்டுவிடும்
முன்னிப் பலகா லும்வேர்க்கும்
உதரம் வலிப்பு முளைத்தலுமாம்
தன்னின் மிகவே பெருமூச்சுத்
தானும் விழியுந் திறவாதே.''

(பொருள்) மேலும், தலைநோய், இளைப்பு, இருமல் இவைகள் வரும். வெந்நீர்போல உடல் வெதும்பும், வியர்க்கும், வயிறு நொந்து உளைந்து செரியாமை யுண்டாம். பெருமூச்சு வாங்கி, கண்ணைத் திறக்க வொட்டாமல் செய்யும் என்னுங் குறிகுணங்களையும் காட்டும்.

அழல் முப்பிணி (பித்த சந்நி) சுரம்.

''முகந்துறு குளிரும் பித்து
மூர்ச்சையு மூமை போல
நகந்துறு மொழிக ளாறு
நல்லுடல் சோர்த லாலும்
மிகந்துறுங் குளிருங் கண்ணுஞ்
சென்னியுஞ் செவியு மந்தஞ்
சுகந்தனி ணீரை யுண்ணுஞ்
சுரபித்த சந்நி யாமே''.

(பொருள்) அழல் குற்றத்தினால் உண்டாகும் சன்னியினால், உடல் குளிர்தல், பித்தம் அதிகப்படுதல், மூர்ச்சை உண்டாதல், ஊமை போன்றிருத்தல், சோர்வடைதல், கண், தலை, செவி இவைகள் தத்தம் வேலையைச் செய்யாது மந்தப்படுதல், நீர் வேட்கை அதிகமாதல் முதலியன ஏற்படும்.

ஐயமுப்பிணி :

அடித்துப் போட்டாற் போற்கிடக்கும்
   அறிவைக் குலைக்கும் பேச்சுமிலை
நொடிப்பி லுயிர்ப்பு மில்லையெனும்
   நோவா கும்மேல் மூச்செறியும்
எடுத்துக் கண்ணு நீர்விழுந்து
   ஏறிட் டுப்பார்த் திளைப்பெய்தும்
சடுதி யாயுங் கால்குளிருஞ்
   சன்னி சீத சுரமாமே.

(பொருள்) நன்றாக அடிபட்டவன் போற் கிடத்தல், அறிவுகுலைதல், பேச்சற்றுப் போதல், அடிக்கடி உயிரற்றவன் போல் சுரணையற்றிருத்தல், உடல் முழுமையும் நோதல், மேல் மூச்செறிதல், கண்களிலிருந்து நீர் பாய்தல், கண்களை விறைத்துப் பார்த்தல், அடிக்கடி இளைப்புண்டாதல், கைகால் குளிர்தல் ஆகிய குறி குணங்களையுடையதாம் ஐயத்தால் வரும் சன்னி எனக் கூறுதும்.

பதிமூன்று வகையாக வகுத்த முப்பிணி (சன்னி) :

1. சந்திக சன்னி.

''பண்பான சந்திகச்சன் னியதின் குணந்தான்
   பகரவே தேகமுமெய் போதும் போலாம்
உண்பான வுடலதனிற் குத்தல் காணல்
   உயிர்சோப மாயிருத்தல் கால்வ லித்தல்
திண்பான சிலேட்டுமமே மிகுந்து காணல்
   தியக்கமாய்க் கண்திறவா மற்றான் மூடல்
தெண்பான தேகமெலா மெரிச்சல் காணல்
   தேகமெலாங் குளுமையா யிருக்கும் பாரே.''

(பொருள்) இந்நோயில், உடலும் முகமும் எப்போதும்போலவே காணப்படுமாயினும், உடல் முழுமையும் குத்தல், மனங்கலங்கி சோகமாயிருத்தல், காலின் பூட்டுகள் வலித்தல், மற்றவற்றைக்காட்டிலும் ஐயக் குற்றம் மிகுத்துக் காணல், மயக்கத்துடன் கண்ணைத்திறவாமல் மூடிக் கொண்டே இருத்தல், உடல் எரிச்சலோடு குளிர்ந்திருத்தல் ஆகிய குறிகுணங்கள் காணும்.

### 2. அந்தக சன்னி.

''இருக்குமே நாவறளுந் தண்ணீர் தாகம்
எரிவுண்டாய் தேகமெலாம் பிரமை யாகும்
தருக்குமே தலைசுற்றல் மிகவுங் காணுந்
தன்னிலே வாய்பிதற்றும் வாந்தி யாகும்
விருக்குமே விக்கலொடு சுரந்தா னுண்டாம்
மேன்மையாங் கைகாலு மசதி யாகும்
பருக்குமே தலைதனிலே பாரங் காணும்
பாரந்த கச்சன்னி பாத மாமே.''

(பொருள்) இந்த நோயில் நாவறட்சி, மிகுந்த நீர் வேட்கை, உடல் எரிவு, மயக்கம், வாந்தி, தலைசுற்றல், வாய்பிதற்றல், விக்கல், கை காலோய்ச்சல் தலை கனத்திருத்தல் என்னுங் குறிகளோடு மிகுதியாகச் சுரமுங்காயும்.

### 3. ருத்தாக சன்னி.

''சன்னியென்ற ருத்தாகந் தன்னைக் கேளாய்
தவித்துமே பிரதாப மெரித லுண்டாம்
தின்னிசித்தப் பிரமையோடு கழுத்து நோதல்
தேகமெலாங் குத்தலுண்டாய்த் தியக்க மாதல்
பின்னிகிடை கொள்ளாமற் புரளல் மெத்த
பின்கண்ட பேருடனே முறைபா டாதல்
உன்னவுத டுலரல்நெற்றி வியர்வை யாதல்
ருத்தாக சன்னியென வுரைக்க லாமே.''

(பொருள்) ருத்தாக சன்னிநோயில், படுக்கையில் தங்காமல் தவித்து அரற்றல், உடல் எரிதல், மனமருட்சி, கழுத்து நோதல், உடலெங்கும் குத்தல், சோர்தல், ஓரிடம் தங்காமை, படுக்கையிற் புரளல், கண்டவர்களிடத்திலும் முறையிட்டுக் கொள்ளல், உதடு உலர்ந்துபோதல், நெற்றி வியர்த்தல் முதலிய குறிகளைக் காட்டும்.

### 4. சித்தவிப்பிரம சன்னி.

உரைக்கவே சித்தவிப்பிரம சன்னி தன்னை
உடம்பெலா மிகக்கறுத்து நோத லுண்டாம்
வரைக்கவே வாதமொரு பித்த மிஞ்சல்
மருவிய சித்பிரமை நினைவு மாய்தல்

நரைக்கநா னாவிதமுங் குணமாய்க் காணல்
நலியாகிப் பாடியே வாய்பி தற்றல்
இரைக்கவே சுவாசமொடு பேதி யாதல்
இருந்தவிடம் விட்டுமே யேகும் பாரே.''

(பொருள்) இச் சன்னி நோயில், உடல் முழுமையும் கடுத்து நோகும். வாதமும் பித்தமும் தன்னிலையில் மிகுந்து காணும், மனமருட்சி யுண்டாம், நினைவு அழியும், குணம் பலவகையாக மாறிக்கொண்டேவரும், நோயால் நாளுக்குநாள் உடல் துன்புறும், வாய் பிதற்றும், இரைப்பு, பெருமூச்சு, விடாக்கழிச்சல் என்னும் தீக் குறிகளையும் காட்டி இறுதியில் கொல்லும்.

### 5. சீதாங்க சன்னி.

''ஏகவே சீதாங்க சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெலாங் குளிர்ந்தி ருத்தல்
ஆகவே யிருமலொடு யிளைப்புண் டாத
லசதியொடு விக்கலுடம் பெல்லா நோதல்
மோகவே வாந்தியோ டழற்றல் மூர்ச்சை
முரண்டுமே தேகமெல்லா மசைதல் காணல்
போகவே பேதியடிக் கடியுண் டாதல்
பிதற்றியே புலம்பிமிகப் பேசுந் தானே.''

(பொருள்) இந்நோயில், உடல் எங்கும் சில்லிட்டிருத்தல், இடை விடா இருமலும் இளைப்பும் அடிக்கடி வருதல், உடற்றளர்ச்சி, விக்கல், உடல் நோய், வாந்தி, அழற்சி, மூர்ச்சை உண்டாதல், படுக்கையில் உள்ளபோதும் உடல் அசைவதுபோல நடுங்கல், அடிக்கடி பேதியாதல், அதிக துன்பத்தினால் புலம்பிக்கொண்டே பேசுதல் ஆகியவை காணப் படும்.

### 6. தாந்திரிக சன்னி.

''பேசுமே தாந்திரிக சன்னி தானும்
பிதற்றலாய் வாய்ப்பிரா வுதலு மாகும்
கூசுமே நாக்கதுவு மிகக்க றுத்துக்
கூர்முள்ளு போல்நாக்கிற் றண்ணீ ரில்லை

தாசுமே யுதடுலர்ந்து தாபங் காணும்
தவிப்பெய்தி வயிறுகழியுஞ் சுவாச முண்டாம்
வீசுமே தினவெடுத்துக் கண்ப ருத்து
மிகத்தண்ணீர் பாய்ந்துசுர மிகுதி யாமே.

(பொருள்) தாந்திரிக சன்னியில், வாய் பிதற்றல், நா மிகக் கறுத்து நீரின்றி வரண்டு முள்போலக் காணப்படுதல், உதடு வரளல், நீர் வேட்கை, மிகுந்து தவித்து வயிறு கழிதல், கடினமாய் மூச்சு உண்டாதல், உடல் தினவெடுத்தல், கண் பருத்து நீர் வடிதல், மிகுந்த சுரம் காய்தல் எனும் குறி குணங்கள் காணும்.

## 7. கண்டகுப்ச சன்னி.

''மிகுதியாய்க் கண்டகுப்சம் விளம்பக் கேளாய்
மிகப்பிரமை தான்வருதல் தாப மாதல்
தகுதியாய்த் தலைசுற்றல் சந்தோ ஷித்தல்
தனுப்போலக் கழுத்துநரம் பிழுத்துக் கொள்ளல்
பகுதியாய்ப் புலம்பல்பயப் படுதல் மூர்ச்சை
பாரமாய்ச் சரீரமெல்லா நோதல் காணல்
வகுதியாய் வாந்தியோ டிருமல் விக்கல்
மார்புதலை நோதலாய் மருவு மாமே.''

(பொருள்) கண்டகுப்சத்தில், மிகுந்த மனமருட்சி, வெப்பம், தலைசுற்றல், வில்லைப்போல் கழுத்து நரம்பு இழுத்துக் கொண்டு தலை வளைதல், அடிக்கடி திடுக்கிட்டுப் பயப்பட்டு மூர்ச்சித்தல், உடல் கனமாகத் தோன்றல், உடல் முழுமையும் நோதல், வாந்தி, விக்கல், இருமல் இவை அடிக்கடி உண்டாதல், மார்பும் தலையும் நோதல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

## 8. கர்ன்னிக சன்னி.

'' மருவுகர்ன் னிகாசன்னி பாதந் தன்னை
வகுத்திடவே வாய்பிதற்றல் வெடித்தல் காணும்
நருவுநாக் குக்கறுத்துப் பிரலா பித்தல்
நடுங்கியே விக்கலோ டிரைப்புக் காணல்
உருவுமுடம் பெங்குமே யசைத லாதல்
உற்றசெவி கேளாது காதி ரைச்சல்
திருவுதலை பாரமாய் நடுக்கல் காணல்
தண்ணீர்மே லடிக்கடிக்குத் தவித்த லாமே.''

(பொருள்) இந்நோய், வாய் பிதற்றல், வாய்வெடித்துப் புண்ணாதல், நாக்குக் கறுத்தல், அரற்றல், உடல் நடுங்கல், விக்கல், இரைப்பு உண்டாகி உடலை அசைத்தல், காது கேளாமை, காதிரைதல், தலை கனத்தல், அடிக்கடி நீர் வேட்கை உண்டாதல் என்னுங் குறிகுணங்களைக் கொள்ளும்.

9. புக்னநேத்திர சன்னி.

"தவித்தபுக்ன நேத்ரசன்னி பாதந் தன்னைச்
சாற்றிடவே சரீரமெல்லாம் சயித்தியமாதல்
துவித்தகண் திறந்துமே சுழன்றி ருத்தல்
தூய்கண்ணீர் பாய்ந்துமே தியங்கிக் காணல்
கவித்தகண் ணில்பார்வை காணாதி ருத்தல்
கடுஞ்சித்தம் பிரமையாய்ப் பிரலா பித்தல்
பவித்துடம்பெல் லாம்வாத பதைப்புக் காணல்
பரந்தெழும்பு மக்கினிபோற் சுரமுண் டாமே.''

(பொருள்) புக்னநேத்திர சன்னி நோயில் வளிக்குற்றமிகுந்து அத்துடன் சயித்தியம் (ஐயம்) கூடி வருதலால், கைகால் குளிர்ந்து, கண் திறந்தபடியே சுழன்று கண்ணீர் பாய்ந்து தியங்கிக் காணும். கண்ணில் நீர் நிறைந்ததனால் கண் பார்வை மயங்கும். கொடிய மனமருட்சியில் அரற்றல், உடம்பெல்லாம் வாத இழுப்பு உண்டாகி, அனற்காற்றால் பரந்தெழுந்தீப் போல் சுரங்காயும்.

10. இரத்தட்டீவிச் சன்னி.

''சுரமான ரத்தட்டீவி சன்னி தன்னைச்
சொல்லிடவே நாக்குதடு வெடித்துக் காணல்
நிறமான ரத்தமாய் வாந்தி யாதல்
நெருப்பாகச் சுரமடித்த லுட்ண மாதல்
திறமான வாய்வறள்ல் சித்தம் பிரமை
தியங்கியே நினைவழிதல் விக்கல் காணல்
தரமான தலைசுற்றல் கறுப்பு நாக்குத்
தருகாது கேளாம லிருத்தல் தானே.''

(பொருள்) இந்நோயில், நாக்கு உதடு வெடித்துக்காணும், குருதி போல் வாந்தி பண்ணும், நெருப்பனல் போல் சுரங்காயும், வாய் வறளும், மன மருண்டு தியக்க முண்டாகும், நினைவு கெடும், அடிக்கடி விக்கல், தலை சுழலல், நாக்கறுத்தல், காது கேளாமை முதலியனவும் ஏற்படும்.

## 11. பிரலாப சன்னி.

“இருத்தல்பிர லாபமாஞ் சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெலா மசைவு காணல்
புருத்தல்பு லம்பலுட் டிணமாயிருத்தல்
புண்ணாக சரீரநொந் திருமல் காணல்
அருத்தல்தா பச்சுரமாய்த் தான டித்தல்
அடிக்கடிக்கு விக்கலொடு மூர்ச்சை காணல்
வருந்தல்மயிர்க் கூச்செறிதல் முகமும் வாடல்
வாயலறி யோடிவிடும் வண்மை தானே.”

(பொருள்) : பிரலாப சன்னி நோயில், உடல் படுக்கையில் கிடக்காது. அசைந்து புலம்பிக் கொண்டேயிருத்தல், உடல் வெப்பமடைந்து புண் போலிருத்தல், இருமுதல், தாபச்சுரம் கண்ட எவரையுங் கண்டபடி அடித்தல், அடிக்கடி விக்கலொடு மூர்ச்சை யடைதல், மயிர்க் கூச் செறிதல், முகம் வாடல், அலறிப் பேசல், மிகுதியாகச் சுரங்காய்தல் ஆகிய குறிகளைக் காட்டும்.

## 12. சிம்மக சன்னி.

“வண்மையாஞ் சிம்மகமாஞ் சன்னி தன்னை
வழுத்திடவே சுவாசமோ டுட்ண மாதல்
தண்மையாய்த் தாகங்கை காலெ ரிச்சல்
தருநாக்குக் கறுத்துமுட் போல்வெ டித்தல்
கண்மையாய்க் காதுகே ளாதி ருத்தல்
கடினமாய் வாய்திறவா மற்றான் மூடல்
உண்மையா யுடம்பெங்குஞ் சுரந்தான் வீசல்
உடம்புபா ரித்திருத்தல் விக்க லாமே.”

(பொருள்) இச்சன்னி நோயில், உடல் மிகச்சூடாகிப் பெருமூச்செறியும், மிகுந்த தாகம், கைகால் எரிச்சல், விக்கல் உண்டாகும். நாக் கறுத்து முட்போலிருத்தலொடு வெடித்திருக்கும். காது கேளாமை வாய் திறக்க முடியாமை, உடல் பாரித்தல் என்னுங் குறிகுணங்களோடு மிகுந்த சுரமும் காயும்.

### 13. அபிநியாச சன்னி.

"திருத்தவே வாதபித்த சிலேட்மங் கூடி
இருமலொடு சுவாசமாய்ச் சுரம டித்தல்
நருந்தவே நாக்குபல வன்ன மாகி
நாவதுதான் வரண்டுநித்ரை மயக்க மாதல்
தெருக்கவே தேகமெங்கு நோதல் காணல்
சடமெல்லாம் வியர்வை பல வீன மாதல்
அருந்தவே ஆகமெங்கு மழன்று பொங்கு
மபிநியாச சன்னியிட வாண்மை தானே."

(பொருள்) இது முக்குற்றங்களாகிய காற்று, தீ. ஐயம் என்னும் மூன்றும் ஒரே காலத்தில் தத்தம் அளவில் மிகுந்து ஐயத்தை மேற் கொண்டு வருநோயாம். இந்நோயில், இருமல், இரைப்பு, விடாச் சுரம், நாப்பல நிறமடைதல், வரண்டுபோதல், மயக்கம், உடல் எங்கும் நோதல், வியர்த்தல், உடலின் வன்மை குறைதல், மிகுந்த சுரங் காய்தல் முதலியன உண்டாகும்.

### தீரும் தீராதவைகள்.

தீரக்கூடியவைகள் ஆறு, அவைகள் : —

"அண்மையா யாறுசன்னி சாத்ய மாகு
மதின்விவர மொவ்வொன்றா யறையக் கேண்மீன்
தண்மையாய்ச் சந்திகசன்னி தாந்திரிக சன்னி
தாக்கான பிரலாப சன்னி யோடு
திண்மையாய்ச் சித்தவிப்ரம சன்னி யோடு
சிம்மிகச்சனி கர்ன்னீகச் சன்னி யாறு
வெண்மையா யவிழ்தத்தில் விடுபட் டேகு
மேன்மையாஞ் சன்னியிட குணமி தாமே."

(பொருள்) மேற்கூறிய பதின் மூன்று சன்னிகளுள், சந்திக சன்னி, தாந்திரிக சன்னி, பிரலாப சன்னி, சித்தவிப்பிரம சன்னி, சிம்மக சன்னி, கர்னிக சன்னி என்னும் ஆறு வகைகளும் தக்க மருத்துவத்தில் எளிதில் நீங்கக்கூடியன என அறிக.

''குணமிலாத சாத்யசன்னி கூறக் கேளாய்
கொடியதா னருத்தாக சன்னி யோடு
அணமில்லா வந்தகமும் புக்கை நேத்ரம்
அரிதான கண்டகுப்சம் ரத்தட் டீவி
திணமிலாச் சீதாங்க மபிநி யாசஞ்
சீரான வவிழ்தமிட விதுதீ ராது
பணமில்லாச் சன்னிபதின் மூன்றுஞ் சொன்னேன்
பக்குவமாய்ப் பார்த்திதனைப் பாலிப் பாயே.''

(பொருள்) இவற்றுள் உருத்தாக சன்னி, அந்தக சன்னி, புக்க நேத்திர சன்னி, கண்டகுப்ச சன்னி, இரத்தட்டீவி சன்னி, சீதாங்க சன்னி, அபிநியாச சன்னி ஆகிய இவைகள் மருத்துவத்திற்கு அடங்கா த்னவாம்.

முப்பிணி (சன்னி) கால அளவை.

''பாவித்த சன்னிகட்கு காலங் கேளாய்
பகர்சந்திக சன்னிக்கு நாளே ழாகும்
ஆலித்த வந்தகர்க்குப் பத்து நாளாம்
அதிருத்தாக சன்னிக்குப் பனிரண் டேநாள்
சேலித்த சித்தவிப்ரமத்துக் கிருபத் தோர்நாள்
சீதாங்கச் சன்னிக்குப் பதினைந் தாகும்
காலுத்த தாந்திரிகத் திருபத் தைந்து
காணுகின்ற நாளேழிற் றீருந் தானே.''

(பொருள்) சந்திகச் சன்னிக்கு ஏழுநாள், அந்தகச் சன்னிக்குப் பத்து நாள், உருத்தாகச் சன்னிக்குப் பன்னிரண்டு நாள், சித்தவிப்பிரம சன்னிக்கு இருபத்தோர் நாள், சீதாங்கச் சன்னிக்குப் பதினைந்து நாள், தாந்திரிகச் சன்னிக்கு இருபத்தைந்து நாள் எனச் சொல்லப்பட்டுள்ளது. அதன் பின்பு நோயின் வன்மை குறைந்து நோய் முற்றிலும் மருத்துவத் திற் கடங்கித் தீரும்.

''தீருமே கண்டகுப்சம் பதின்மூன் றேநாள்
தீர்க்கர்ன்னிகா சன்னிக்குத் தொண்ணூ றேநாள்
பாருமே புக்னநேத்திர சன்னிநா ளெட்டு
பத்துநாள் ரக்திட்டீவி சன்னிக் காகும்

பேருமே பிரலாப மீரே ழாகும்
பெரியசிம் மகத்துக்கீ ரெட்ட தாகும்
ஆகுமே அபிநியாசம் பதினைந் தாகும்
அளவுநாட் சன்னிதனக் கறிந்தி டாயே.''

(பொருள்) கண்டகுப்ச சன்னி பதின்மூன்றாம் நாளிலும், கர்ணிகச் சன்னி தொண்ணூறு நாளிலும், புக்கநேத்திரச் சன்னி எட்டு நாளிலும், இரத்தட்டீவி பத்து நாளிலும், பிரலாபசன்னி பதினான்கு நாளிலும், சிம்மிகச்சன்னி பதினாறு நாளிலும், அபிநியாச சன்னி பதினைந்து நாளிலும் பெருமருந்துகளால் தீரும். அப்படி நோய் நீங்காவிட்டால் குறித்த நாட்களில் கொல்லும்.

தேரன்கூறிய பத்து முப்பிணிகள்.

தோய் எண் :

கன்னியர் முகத்திற் கோபிகை மோகனை காமுகை யாடவரா
மன்னவர் முத்திறர் வல்லியர் புல்லியர் மத்திய ரென்பதிவர்
சன்னியின் முத்திற மன்னவன் மந்திரி தானையர் கோனெனவே
யன்னவை மூன்றுட னேழு பிறந்திடு மகாவதை யிரண்டே
(தே. சேகரப்பா—385 பாடல்

வயித்ய ரோது தசசன்னி யின்பெயர் வான்முறை வாதசனி
பயித்திய சன்னி சயித்திய சன்னி நிபசன்னி சோகசன்னி
தெயித்ய மோகன சன்னி விடச்சன்னி தீச்சன்னி மந்தசனி
யுயிர்த்த சண்டச்சனி பத்திவையின் குணமுணரு வராயுளரே.
(தே. சேகரப்பா 386)

(பொருள்) பெண்களின் முகக்குறி முதலியவைகளைக் கொண்டு கோபிகை, மோகனை, காமுகை என மூன்று வகையாகவும் ஆடவர் முகக்குறி முதலியவைகளைக் கொண்டு வல்லியர், புல்லியர், மத்திய ரென மூன்று வகையாகவும் வகுத்து இவர்களின் கூட்டுறவால் எழும் முப்பிணியை (சன்னியை) முறையே நிபம், சோகம், மோகம் என மூன்றாகவும், குற்ற அளவாக மூன்றாகவும், நஞ்சு, தீப்புண், மந்தம், சண்டம் என நான்காகவும் தேரர் வகுத்துள்ளார்.

(கருத்துரை) இப் பத்து சன்னியின் பெயர்கள் வளி, அழல், ஐய, நிப, சோகன, மோக, நஞ்சு, தீ, மந்த, சண்ட முப்பிணி என்பவை களாம்.

குறிப்பு.—இவ்வாறாகக் கூறிய பத்து வகையுள் மந்த சன்னியைப் பற்றி விவரங்கள் நூலில் அகப்படவில்லை. இப்பத்து வகைகளன்றி வேறு ஒன்றை இரண சன்னி எனக் கூறி அதனையும் மீண்டும் இயற்கையில் வருவன செயற்கையில் வருவன என இரண்டாக வகுத்துள்ளார் தேரர். அதனை ஈண்டுக் கூறுதும்.

நோய் வருவழி.

''இன்னகைச் சன்னி பேத மிரைந்தும் வரலா றாகப்
பன்னின மினிமே லந்தப் பத்தினுற் பவந்தா னங்கள்
துன்னுமம் முயற்சிக் கேது சுவாக மிவைக ளெல்லாம்
முன்னவர் வழிநூன் மார்க்கம் முறைப்படி மொழிகு வேனே.''
(தே. சேகரப்பா 395)

(பொருள்) பத்துவகைச் சன்னிகளின், தோற்றம், தாக்கப்படும் உறுப்புகள், வரும்வழி, பண்பு இவைகள் முன்னூற் கூறியவாறு கூறப் படுவதாம்.

''தூமத்தாற் கனலைக் காணுந் துறையெனப் பிணிக ளெல்லாங்
காமத்தாற் காண லாகுங் காட்சிய தெனினு மாதி
நேமத்தா லமைந்த மூன்று நிலைப்பிணி யதனிற் றோன்று
நாமத்தான் மூன்றொன் றாறா நான்மத்தி கடையிற் கொள்ளே.''
(தே. சேகரப்பா 396)

(பொருள்) புகையுள்ள இடத்தில் நெருப்பு உள்ளது என அறிதல் போல, நோய்கள் எல்லாம் பெண்ணிச்சையால் காணும் எனக் கூறுவர், ஆயினும், இதற்கு முதலாயுள்ளவை முக்குற்றங்களேயாம். பெயரால் பத்து சன்னியென்பர்.

'' மூன்றுகோ பிகையி னோடு மோகனை காமு கைப்பேர்க்
கன்னியர் மூவ ரோடு காதலா டவர்க டாண்மை
மன்னுநல் வல்லியன் புல்லியன் மத்திய னிவர்கள் கூடிற்
சன்னியை யிரட்டித் தன்னிற் கடையாறு முதிக்குந் தானே.''
(தே. சேகரப்பா 397)

(பொருள்) பெண்களுள், கோபிகை, மோகனை, காமுகை என மூவகையினர் உளர் என்றும், இவர்களுக்கு முறையே ஆண்களுள் வல்லியன், புல்லியன், மத்தியன் என மூவகையினர் உளர் என்றும், இவர்கள் இயற்கைக்கு மாறுபாடாக ஒருவருக்கொருவர் மாறிப் புணர் வரேல், சன்னிப் பிறக்குமென்றும் பகருவர்,

கோபிகையின் இலக்கணம்.

"மாதரிற் கோபி கைப்பேர் மடவா றன்மை கேட்டி
யாதவர்க் கரசை முன்னா ளிசைமுல்லை மடவார் லீலை
யாதரித் திடல்போன் மாத ராடவர் தமைமே லிட்டுக்
காதிமுற் போகந் துய்த்தல் கலகமிட் டிடலி தாமே."
(தே. சேகரப்பா 398).

(பொருள்) முன்பு முல்லை நில மங்கையரான கோபிகள், கண்ணனோடு லீலை புரிய விரும்பியதுபோல, மங்கையர் ஆடவரோடு பெரிதும் இன்பந் துய்க்க விரும்புவரேல், சன்னிநோய் தோன்றும்.

"கோபிகைக் கிலக்க ணங்கேள் குண்டுவத் திரங்கு ழிந்த
நாபிதா ளத்தை யொத்த நகிலமுன் னுயர்ந்த வோட்டந்
தாபிமான் குளம்பு போலத் தாழ்ந்தகுய் யத்து வாரப்
பூபிழி மதுநீர் போலப் பொரிமல சலத்தி னாளே."
(தே. சேகரப்பா 399).

(பொருள்) கோபிப் பெண்ணின் இலக்கணமாவது, வட்டமான முகமும், குழிந்த கொப்பூழும், பெருத்த முலையும், மான் குளம்பு போன்ற குறித் துளையும், பூவின் தேன் போன்ற சிறு நீரும், எருவு (மலமு) மாகும்.

மோகனை.

"மோகனை யியற்கை கூறின் முகத்தரா விரதி யென்ன
மோகவா டவர்க டாமே மோகராய்த் தன்னை வேண்டத்
தாகமற் றவர்க்கே காட்டித் தானசை யாது கானத்
தோகைபோ லவர்பா லின்பந் துயப்பது குறிப்புத் தானே."
(தே. சேகரப்பா 400)

(பொருள்) மோகனை என்னும் பெண் இச்சை பொருந்திய ஆடவர் தாமே காம மேலீட்டால் தன்னை வேண்ட, மயிலைப் போல் தனக்கு விருப்பமில்லாதவள் போன்று அசையாது அவன் இச்சையை ஆற்றித் தானும் இன்பம் நுகர்வாள்.

"மோகனைக் கிலக்க ணங்கேள் முகஞ்சிறி தகன்று நீண்டு
மேகமொத் தமைந்த கூந்தல் வேயெனத் திரண்ட மொய்ம்பு
பாகெனக் கழறு மின்சொற் பணியல்கு னீசஞ் சின்ன
தேகமொக் கனைய கொம்மைச் சிறுதெளி மதநீ ராளே."
(தே. சேகரப்பா 401).

(பொருள்) மோகனை என்பவரின் முகம் சிறிது அகன்றும் நீண்டு மிருக்கும். அவள் மேகத்தைப் போன்ற கருத்த கூந்தலையும், மூங்கில் போன்ற தோள்களையும், வெல்லப்பாகை யொத்த இனிய மொழியையும் நல்ல பாம்பின் படத்தைப் போன்ற பெண் குறியையும். மெலிந்த உடலையும், தாமரை மொட்டுப் போன்ற கொங்கையையும் பெற்றிருப் பாள். அவளது செந்நீர் தெளிந்தும் சிறுத்துங்காணும்.

காமுகை.

"காமுகை யியல்பு கேளாய் கணவனைத் தானும் வேண்டி
யாமவன் றன்னை வேண்ட வடைவுக டெரிந்து கூடி
நேமமுற் றவைக ளெல்லா நெறியறிந் தியற்றி யுற்ற
மாமுறை யியற்ற வல்ல வல்லமை யுற்ற மாதே."
(தே. சேகரப்பா 402).

(பொருள்) காமுகை வகுப்புப் பெண், கணவனைத்தான் மிக விரும்புவாள். அவன் தன்னை அடைய விரும்பின், அதற்கேற்ற காலத்தை அறிந்து அவனைக் கூடி, பழைய முறைப்படி இன்பம் நுகரும் வன்மை வாய்ந்தவளாவள்.

"காமுகைக் கிலக்க ணங்கேள் கதிர்மதி முகஞ்சி றுத்து
மாமுலை பருத்துச் சர்ப்ப வடிவென நிதம்பந் தோன்ற
காமநீர் மிதம தாகிக் கடிதடப் புழைநெ ருக்காய்
நோமிகு முடல ளாகி நுகர்ச்சிய பத்தினாளே."
(தே. சேகரப்பா 403).

(பொருள்) காமுகைப் பெண்ணானவள் மதிபோன்ற ஒளி பொருந் திய சிறு முகமும், பருத்த முலையும், பாம்பின் படத்தைப் போன்ற பெண் குறியும், மிதமான ஆண் இச்சையும் (காமமும்) நெருக்கமான குறித்துளையும் பெற்றவளாவாள், அன்றியும், கூடும்போது உடல் நோதலும் அற்ப நுகர்ச்சியுமுடையவளாவாள்.

வல்லியன்.

" வல்லிய புருடன் றன்மை வகுக்குது மிப்பாற் கேண்மோ
கல்லெனத் திரண்ட வாகு காத்திர நெடிமை திண்மை
வல்லுண வதிக தாட்டி மதகரி மதநீர் தாது
சொல்லதி வேக மாதர் தோதக மம்மை மானே. "

(தே. சேகரப்பா 404).

(பொருள்) வல்லியனெனும் ஆணின் தன்மையைக் கூறின், கல்லைப் போன்று திரண்ட தோள்களும், பருத்து நீண்ட வன்மையான உடலும், உடையவனாவான். இவனுக்கு மதம் பொருந்திய யானை போன்ற மதநீர் (வெண்ணீர்) பெருக்கும். கம்பீர பேச்சும், பெண்களின் கூட்டுறவில் மிக்க மகிழ்வும் உண்டாகுவன். இவன் மிகுந்த உணவை உண்பான்.

" பின்னுமவ் வல்லி யன்றன் பேரடை யாளங் கூறின்
நன்னுத லகன்று நீண்டு நாமுனை மேற்ப டிக்கா
யுன்னத வுரமுங் கையு முறுப்பினிற் பெரிதாய்க் கோசம்
பன்னிரு விரலி னீண்ட பண்பினா னண்பி னானே. "

(தே. சேகரப்பா 405).

(பொருள்) இன்னும் அவன், அகன்ற நெற்றியும் நீண்ட முகம், நுண்ணிய நாக்கும், உயரிய மார்பும், கையும், நீண்ட பன்னிரண்டு விரற்கடையுள்ள ஆண்குறியும் உடையவனும் பெண்களின் அன்பைப் பெறுபவனுமாவன்.

புல்லியன்.

" புல்லிய குமரன் றன்மை புகலுது மிப்பாற் கேட்டி
வல்லிய யமனை வீர மடந்தைய ரடைந்த கேண்மை
சொல்லிய வுதவி யாண்மை திண்மைதா ளாண்மை தாட்டி
நல்லிய லறிவு வன்கண் நயமிவை யுடையன் றானே. "

(தே. சேகரப்பா 406).

(பொருள்) புல்லியன் வகுப்பைச் சார்ந்த ஆண் மக்கள் மற்றவர்க்கு தொண்டுபுரியும் இயல்பு, ஆண்மை, திண்மை, தாளாண்மை, நல்வடிவு, வீரம் இவற்றைப் பெற்றிருப்பார்கள். இவர்கள் வீரப் பெண்களையே விரும்புவார்கள்.

" மீட்டுமப் புல்லி யன்றன் மெய்யடை யாளஞ் சொல்வேன்
வாட்டமின் முகமுங் குண்டு வயிறுநீ ணுதலுஞ் சேர்ந்த
தாட்டுணை யிங்கு விந்த சானுவு மொன்ப தாகச்
காட்டுநீள் குறியுஞ் சுன்னக் காமநீ ருங்கொண் டோனே. "

(தே. சேகரப்பா 407)

(பொருள்) இவரின் உடல் அமைப்பைக் கூறுங்கால், வாட்ட மில்லாத முகமும், திரண்டவயிறும், நீண்ட நெற்றியும், ஒன்றிற் கொன்று பொருத்தமான இரு கால்களும், குவிந்த தோள்களும் ஒன்பது அங்குலம் உள்ள ஆண்குறியும் அமைந்திருக்கும். இன்னும் சுன்னத்தை யொத்த வெண்ணீரை (விந்துவை) உடைத்தாயிருப்பன்.

மத்தியன.

" மத்திய புருடன் றன்மை வகுத்திடி லதிக வாண்மை
மித்திர நினைப்பு வாய்மை மேதகு குணந்தாட் டீகம
புத்தியோ சனையும் வனப்பும் போசன வினிமை மாதர்
பத்தியா சார நன்மை படைத்தவப் பெருமை யோதே. "

(தே. சேகரப்பா 408)

(பொருள்) ஆண்மை, நட்புரிமை, உண்மை, பெருந்தகைமை, பேருருவம், நுண்ணறிவு, ஆழ்ந்த சிந்தனை, வனப்பு, உணவில் மிகுந்த விருப்பம், பெண்களிடத்தில் அன்பு, நல்லொழுக்கம் முதலியன ஆகிய இந் நற்குணங்கள் மத்தியனிடத்தில் அமைந்திருக்கும்.

" உத்தம மத்தி மன்றன் உறுப்படை யாளங் கூறிற்
சித்திர நயனங் குண்டாய்த் திரண்டவா னனநன் னெற்றி
முத்தன முறுவ லார்ந்த மொய்ம்பகல் வட்டத் தேனீர்
மத்தெனப் பருத்து நீண்டு வளர்ந்திடுங் கோசத் தன்னால். "

(தே. சேகரப்பா 409)

(பொருள்) இவன் உறுப்பு அடையாளங்களைக் கூறின் சித்திரத்தில் வரைந்தது போன்று உருண்ட கண்களையும், திரண்ட முகத்தையும், நல்லிலக்கணம் அமைந்த நெற்றியையும், முத்துப்போன்ற பற்களையும், அகன்ற மார்பையும், மத்துப் போன்ற பருத்து நீண்டு வளர்ந்த ஆண் குறியையும் பெற்றிருப்பான்.

உதாரண மர்மம்.

“ நற்சில வழிநூன் மார்க்க நவின்றவா கடத்தி னூடு
தற்சிலாத் தியத்தி னோயின் சகலவுற் பத்தி யான
துற்சிதோ தயமென் றோது தோடசன் னிப்பி றப்பில்
வற்சமா மிந்த மாதர் மைந்தரைக் காண லாமே. ”

(தே. சேகரப்பா 410)

(பொருள்) நல்ல சில வழி நூல்களில், ஆண் பெண்களின் கூட்டுறவால் வரும் சன்னி, தோடச் சன்னி எனக்கூறப்படுவது மட்டுமேயன்றி, நோய் வரும் வழியை நாடின், முற்கூறிய மூவகை ஆண்களையும் மூவகைப் பெண்களையும் பிரித்தறியக் கூடுமெனச் சொல்லப்படுகின்றது.

“ ஆகுமிம் மாதர் மைந்த ரறுவரு மாறி மாறிப்
போகமுற் றிடுமப் போது புயங்கங்கு ளாகத் தோன்று
ரோகமா சன்னி யாறு நோயெனத் தீய தானே
வேகமிக் கவைக ளான வேற்றுமை யுரைக்கக் கேளே. ”

(தே. சேகரப்பா 411)

(பொருள்) மேற்கூறிய மூவகை ஆண் பெண்களான அறுவரும் வரன் முறை கடந்து மாறி மாறிப் புணரில், கலவி அதிகப்படும். அவ்வமயம் அவர்கள் பாம்புகளைப் போன்று ஒருவரோடொருவர் பிணைந்து புணருவர். அதனால், சன்னிநோய் ஆறுவகையுள் ஏதேனும் ஒன்று பிறக்கும். இந் நோய் மிகக் கொடுமையுடையதாகி விரைவாய் வந்து பற்றும். இந்நோய்களின் வகைகளைக் கூறுவோம்.

குறி குணங்கள்.

(1) வளிமுப்பிணி (வாத சன்னி)

‘‘மன்னவனி லேயிருவ ரடங்கல் போல
வாதசன்னி தனிற்பயித்ய சயித்ய மான
சன்னிகளுற் பவிக்குமஃ தன்றி மந்த
சன்னியுமற் றதிற்பிறக்கும் அதன்கு ணங்கேள்
முன்னவனாம் வாதசன்னி யெனச்சாத் தியத்தை
முயன்றுநலிப் படுத்திவெளிர் முகங்க ணத்திட்
டன்னமிலா தசதியுறு சுரத்தைக் காட்டி
யாவெனநன் மணிமுதலுக் கடங்குந் தானே.’’

(தே. சேகரப்பா 388.)

(பொருள்): அரசனுக்கு மந்திரியும் தானைத்தலைவனும் அடங்கி யிருத்தல் போல, வாதசன்னியுள் பித்த சன்னியும் ஐயசன்னியும் உள்ளடங்கி அதனுள் கிளைத்துத் தோன்றும். வாதசன்னியானது நீங்கும் நிலையில் இருக்கும் போது, முகம் வெளுத்து, உணவு செல்லாது சுரம் காய்ந்து கொண்டு இருக்கும். அந்த நிலையே மந்த சன்னி யெனப்படும். இந்நோய் முதன்மையாகக் கொள்ளப்படும். (இரச) மணி மந்திர அவிழ்தங்கட்கு அடங்குமெனக் கொள்ளவும்.

(2) அழல்முப்பிணி (பித்த பைத்திய சன்னி)

''பயித்யசனி தனிற்பிறக்குஞ் சோக சன்னி
பண்பான மோகசனி யொடுதீச் சன்னி
வயித்தியரை யும்மருட்டுஞ் சோக சன்னி
வகையைக்கேள் கண்சுழல வருமே னோக்கிக்
குயித்தியொடு வாந்திவரும் பிராந்தி தானே
கூட்டுவிக்குங் காயமெலாங் குறுவேர் காட்டு
மெயிற்றிணைகள் பந்திக்க மேற்சு வாசு
மெழும்விக்க லடிக்கடியுண் டாகுந் தானே.''
(தே. சேகரப்பா389)

(பெருள்) பயித்திய (அழல்) சன்னிக்குட் கிடையாக, சோகசன்னி மோக சன்னி, தீ (ரண) சன்னி ஆகியன பிறக்கும். இதனில் கண் சுழன்று மேல்நோக்கும் வாந்தியும், மயக்கமும், உடல் முழுமையும் குறு வியர்வையும் உண்டாகும். பல் கூசும், மேல் மூச்சொடு, விக்கல் அடுத்தடுத்து உண்டாகும். ஆகிய இக்குறி குணங்களைத் தோற்றுவிக்கும்.

(3) ஜய(சயித்திய) முப்பிணி:

''சயித்யசன்னி தனிபிறக்கு நிபப்பேர் கொண்ட
சன்னிலிட சன்னிசண்ட சன்னிமூன்றும்
தயித்திய நிலச் சன்னிசெயு மொட்டா ரத்தைச்
சாற்றக்கே ளுடலல்லித் தண்டைப் போல
வியர்த்திடச்செய் தருவருப்புண் டாக்கி ரோம
மேலரும்பு நடுக்கமிக வியாதி யேதென்
றயத்திடச்செய் தென்னாடி யதன்மேற் சாக்கு
மனாமத்து மாக்குமஃ தனந்தந் தானே.''
(தே. சேகரப்பா 392

(பொருள்) : ஐய சன்னியின் தொடர்பாகிய சயித்திய விடசன்னி, சண்ட சன்னி, நிபச்சன்னி ஆகிய இவைகளில், உடலானது அல்லித் தண்டை போலக் குளிர்ந்து வியர்க்கும். உடல் நடுக்கம், உடல் அயர்ச்சி நாடி தளரலுடன் மயிர்க்கால்கள் தோறும் சிலிர்த்துக் கொல்லும்.

(4) நிபச் சன்னி:

''மத்தியன் கோபிகைப்பேர் மடந்தையைப் புணரு மேனு
நத்துகா முகையைப் புல்ய னண்ணியாங் கணையு மேனு
மொத்தமோ கனையை வல்ய னோகையாற் றழுவு மேனும்
புத்திமா லாக வந்து புகுநிபச் சன்னி தானே.''

(தே. சேகரப்பா 411)

(பொருள்) மத்தியன் கோபிகையையும், புல்லியன் காமுகையையும். வல்லியன் மோகனையையும் கூடுவரேல், அவர்கட்கு அறிவு மயங்கி நிபச் சன்னி வந்து சேரும்.

(5) சோக சன்னி:

''கோபிகை யுடனே வல்லியன் கூடிலாண் குறிகு றிக்குட்
டாபித முறுமுன் னாதந் தணவலி குணமே லிட்டுச்
சோபித மறாமை யான சோகச்சன் னியும்பி றந்து
நாபியை நேராய் மூல நாபியை யணுகு மன்றே.''

(தே. சேகரப்பா 414)

(பொருள்) சோக சன்னியின் பிறப்பைக் கூறின், கோபிகையுடன் வல்லியன் கூடில், வல்லியனின் நீண்ட ஆண் குறி, மானின் குளம்பை யொத்த குறியையுடைய கோபிகையின் குறியைத் தாபிதப்படுத்தி, அவளுடைய செந்நீர் (நாதம்)தீய்ந்து, அவளுக்குத் தீக்குணங்களை உண்டாக்கி, சோக சன்னியைப் பிறப்பித்து நாபியையும் மூலத்தையும் அணுகும்.

(6) மோகன சன்னி:

''வல்லிய புருடன் றன்னை மாறிகோ பிகைமே லிட்டால்
புல்லிய வறிவினாலே புல்லிய வனுக்குச் சேட்டைச்
சல்லிய மியற்ற வாங்கே சடலறைந் தசதி யாலே
யொல்லிய மோக சன்னி யுற்பவித் திடுந்தப் பாதே.''

(தே. சேகரப்பா 413)

(பொருள்) வல்லியனோடு கோபிகை முறைதவறி மேலிடுங்கால், அற்ப மதியினால் அவளைப் புணர்ந்தவனுக்கு, நஞ்சுண்டாய், உடல் நைந்து, மோக சன்னி தவறாமல் தோன்றும்.

''மோகசன்னி செயுந்திறங்கேள் தட்டிப் பேசி
முறுவலித்துப் பற்கடித்து மொழிவி டாமற்
சாகளவுந் தெளிவாக வினாவி டைக்குத்
தரப்பிரசங் கமதனைச் சாற்றப் பண்ணுந்
தாகமிகவுண்டாக்கு முணவை மிக்க
தரிப்பிக்குஞ் செரிப்புக்குந் தத்து விக்குந்
தோகையரா வலைக்கொடுக்குங் கயம்போல் ஈர்க்குந்
துள்ளுவிக்கு மற்கடம்போற் சுழலுந் தானே.''

(தே. சேகரப்பா 390)

(பொருள்): இதனில் அதட்டிப் பேசுதல், புன்சிரிப்புக் கொள்ளல், பற்கடித்தல், உயிர் போமளவும் தெளிவுடன் பேசல், கேட்டதற்குத் தக்க விடை அளித்தல், மிகுந்த நீர்வேட்கை, மிக்க உணவு உண்டு அதனை நன்றாகச் செரித்துக் கொள்ளல், பெண்களின் மீது இச்சை கொள்ளல், கயத்தைப் போல் இழுத்தல், துள்ளுதல், குரங்கைப்போல் மனம் ஒரு நிலையில் நில்லாமல் சுழன்றுகொண்டே இருத்தல் ஆகிய குறிகள் ஏற்படும்.

(7) நஞ்சு (விடச்) சன்னி:

''கூறுபுல் லியனை மீறிக் கோபிகை வலிமை யாலே
யேறிமே லுபரி யாக விலிங்க நீசப் பொறாமை
யூறியா தனை யுண்டாக வொல்லையிற் சனிக்கு மம்மர்
மாறுபாடுறும ராப்போல் வருவிட சன்னி தானே.''

(தே. சேகரப்பா 415)

(பொருள்): கோபிகை தன்னுடைய வன்மையால், புல்லியனான ஆண்மகனை முறைதவறி மேல் ஏறிகூடுவளாயின், அவள் வன்மையைத் தாங்கமுடியாது அவன் ஆண் குறி வேதனையுற்று, விரைவில் அவனுடைய உடல் வேற்றுமை அடைந்த அக்கெடுதி, பாம்பின் நஞ்சு போல் உடல் முற்றும் ஊடுருவிப் பாய்ந்து விடச் சன்னியைப் பிறப்பிக்கும்.

(தே. சேகரப்பா 393)

'விடச்சன்னி யடையாள முரைக்கக் கேண்மோ
வெய்த்துடலிற் பொசியுதகம் வெந்நீ ராகும்
நடக்கமிக வலிகொடுக்கு மோடச் செய்யு
நாநடுமாத் திரநீரை நணு கொட்டாது
கிடைக்கையுற வொட்டாது விகலுண் டாகிற்
கேசரியை நேராகுங் கிலேசங் காட்டு
மிடைக்கிடைசே ராதுபனி பெருமை யெய்து
மிதுவுமேற் படியேயாம் இறுதி தானே.
(தே. சேகரப்பா 394)

(பொருள்): இச்சன்னியில் கசியும் வியர்வையானது, வெந்நீரைப் போல் சூடாகக்காணும்,வன்மையுடன் நடக்கவும் ஓடவும் முடியும். நீர் வேட்கை உண்டாகாது. படுக்கை பொருந்தாமை, சிங்கத்தைப் போன்று சீறுதல், ஆடைசோரல், சிறிது குளிர்ச்சியையும் தாங்க முடியாமை முதலியன உண்டாகி இறுதியில் இந்நோய் கொல்லும்.

(8) தீச் சன்னி:

''நறியமோ கணையைப் புல்லிய னண்ணிய வளவு கூடிக்
குறியொடு குறிக ளொவ்வக் கொள்ளுமு னவச மெய்தி
வெறிநுகர் வெறிபோர் காயம் வெய்துறப் பையு ளாலே
மறுகுதீச் சன்னி தோன்று மருந்தினுக் கடங்கி டாதே.''
(தே. சேகரப்பா 414)

(பொருள்) மோகனைப் பெண்ணைப் புல்லியன் கூடிக் குறியோடு குறி பொருந்தாவாறு புணருமுன், அவன், மெய்மறந்து வெறிபிடித்தவன் போலத் துன்புறுவன், ஆடிப்பாடுவதாகிய தீச்சன்னி தொடங்கும் இச்சன்னி மருந்தினிற்கும் அடங்காது.

''தீச்சன்னியின் குணங்களோ யருக்கன் போலச்
சிவக்கும்வத் திரநேத்தி ரங்க ளெல்லாம்
காய்ச்சலைப்போல் தகிக்குநா வரட்சி காணும்
உதடிரண்டு மிகக்கறுக்கச் செய்யுமிக்க
மூடிச்சடக்கும் விழிசுழலு மொழிதள ளாடு
மூக்குமுனை சிவப்பிக்கு நீரை நீட்டு
மாச்சியம்போ லிருக்கவது காட்டுந் தாக
மடங்காமை பெருக்குமிஃ தவத்தை தானே.''
(தே. சேகரப்பா 391)

(பொருள்) தீச்சன்னியில் சூரியனைப் போல் முகமும் கண்ணிரண்டும் சிவக்கும். மிகுந்த காய்ச்சல் உண்டாகும். நாவரளும், உதடு கருக்கும். மூச்சுக் குறையும், விழி சுழன்று மொழி தடுமாறும், மூனை மூக்குச்சிவக்கும், சிறுநீர் மிகுந்த அளவில் எண்ணெய் போலியும், தீரா நீர்வேட்கை ஏற்படும் ஆகிய குறிகளைக் காட்டும்.

(9) சண்ட சன்னி:

''காமுகை மாதை வல்யன் காதலி புணரு மேனு
நாமமோ கனையை மத்ய னண்ணியே யணையு மேனு
நேமமார் கோபி பெண்ணை மத்தியன் புல்யன் கூடிக்
காமுறு மேனுங் கடுஞ்சண்ட சன்னி தானே.''

(தே. சேகரப்பா 417)

(பொருள்) மிகுந்த காதலினால், வல்லியன் காமுகையையும் மத்தியன் மோகனையையும், மத்தியனும் புல்லியனும் கோபிகையையும் கூடின், கொடிய சண்ட சன்னி பிறக்கும்.

(10) சண்ட முப்பிணி:

''சண்டசன்னி யடையாளம் விளம்பக் கேண்மோ
சாத்தியம்போ லறிஞ்ரையுந் தயங்கச் செய்யுங்
கண்டவர்க்குத் தெளிமுகமா யனாமத் தாகுங்
கைந்நாடி யுண்மையினைக் காண்பி யாது
''மிண்டுசொலக் குறிசுறுக்க தவறச் செய்யும்
விளக்கவிமுன் னஃதெரியு மேன்மை யென்னக்
கொண்டநெறி மேற்படிபோ லனாமத் தாகிக்
கூற்றுவனூ ரிற்கடிது கூட்டுத் தானே.''

(தே. சேகரப்பா 394)

(பொருள்) சண்ட சன்னியானது, நோக்குவதற்கு நீங்கும் நோயைப் போலக் காணப்பட்டு பெரிய மருத்துவமனையையும் ஏமாற்றித் தீங்கை விளைவிக்கும். பார்வைக்கு முகம் தெளிவாகத் தோன்றும். நாடி உண்மையை அறிவிக்காது நோயை மறைக்கும். அந் நோயாளன், அணையப் போகும் விளக்கானது, எப்படி மிக்க ஒளிவிட்டு எரிந்து அணையுமோ, அப்படி வன்மையுடன் பேசிக்கொண்டே எமலோக மேடைவன்.

## இரண சன்னி.

"இன்னணச் சன்னி யன்றி யிரணசன் னிப்பேர் வன்னோய்
மன்னதிற் சேர்ந்த தன்று மற்றது வேறே யாகும்
அன்னது பகரு மெல்லை யஃதிவை யிரண்டு கூறாங்
கன்னெறி யியற்கை யொன்று கருதுநூற் செயற்கையென்றே"

(தே. சேகரப்பா 418)

(பொருள்) மேற்கூறிய சன்னிவகைகளை அல்லாமல் இரணசன்னி என்னும் பெயர் வாய்ந்த வன்மையான நோய் ஒன்றுண்டு. இது மேற் கூறியவைகட்கு வேறுபட்டது. அஃதன்றியும் இஃது இருவகைப் படும். ஒன்று இயற்கையாகவும், மற்றொன்று செயற்கையாகவும் உண்டாவனவாம்.

'காயத்தாம் வெம்மை யாலே காயத்திற் பருக்க டோன்றி
மாயத்தா லுடைந்து காய்ந்து வளருவ தியற்கை தாம்வாங்
காயத்தாய்ப் புண்ணாய்க் காயங் கட்டவு மாறா தாகிச்
சீயத்தாச் சிலையாய் வேதை செயற்கைத்தா மிரண்டு
மொன்றே.'

(தே. சேகரப்பா 419)

(பொருள்). உடலிற்றோன்றும் வெம்மையாலே, பருக்கள் தோன்றி, தானாகவே உடைந்து காய்ந்து, அதன் சீழ் உடலி லூறிச் சன்னியையுண்டாக்கும். இஃது இயற்கை இரண சன்னியாகும். வலி பொருந்திய காயத்தில் புண்ணுண்டாய், அப்புண் மருந்திட்டும் மாயா மல் சீழ்பிடித்து சிலையோடி, வேதனையோடு சன்னியைப் பிறப்பிக்கும். இது செயற்கை விரண சன்னியாகும். ஆயினும், இவ் விரண்டு வகை யும் ஒரு தன்மைப்பட்டதே.

## தீரும் தீராதவை.

"இவைகளிற் சாத்யா சாத்ய மென்பதெவ் வாற தென்னில்
கவையில தாகி வாட்டங் காட்டுபு வருதல் சாத்தியம்
நவையுறு கரடதாகி நாடொறு மோங்கி வெப்புங்
கவருவ தாகிற் சன்னி காணு தசாத்யந் தானே."

(தே. சேகரப்பா 42)

(பொருள்). இவற்றுள் உண்டாகும் புண்கள் வெடிப்பில்லாதன் வாகி, வாடிக் காணும் போதும் சன்னி தோன்றும். ஆனால், அது நீங்கி விடும். குற்றமுடையதாகி, கரடுகட்டி, நாளுக்கு நாள் மிகுதியாகப் பெருகி, காய்ச்சலும் தோன்றுமாயின், அதனால் சன்னி பிறக்கும். இது நீங்குவதன்று.

சாந்தி யுபதை.

' அறைசிறு பான்மை யோடு மடர்பெரும் பான்மை யென்றே
பறையறை யுலகில் சொன்ன பழமொழி களிலிச் சன்னி
யறுவகை யிரண்டு வர்க்க மாமெட்டிற் சாத்தி யந்தான்
சிறுபான்மை யஃது மாண்மை செலுத்திடி லாயு ளோரோ ''

(தே. சேகரப்பா 421)

(பொருள்). உலகில் பொதுவாக முப்பிணிநோய் தீருவது அருமை எனவும், அவற்றுள் எட்டுவகை சன்னி தீரக் கூடியன எனவும், மற்றைய நான்கு வகைகள் தீராதென மருத்துவங் கூறினும், மருத்துவரின், அறிவின் வன்மையால், எவ்விதச் சன்னி நோயையும் தீர்க்கக்கூடும்.

'' சொன்னமும் மூன்றோ டொன்றுஞ் சுவசமா தலினா லேற்ற
மன்னவி டதங்க ளாலே வாசியாம் பலனுண் டாகிற்
பின்னுறு வகைக்கு மிப்பாற் பிறந்தவிவ் விரண்டிற் குங்கேள்
வன்னமாற் றிவைக ளென்றே மருந்தினிற் பிரிவு தானே .''

(தே. சேகரப்பா 422)

(பொருள்). முன் சொல்லிய பத்து முப்பிணிகளும், மருத்துவர்களின் அறிவின் வன்மையாலும், பொருந்திய மருந்துகளினாலும், நல்ல நிலைமையடையும் (தீரும்).

நுகர்ச்சி முப்பிணி (சுகசன்னி).

'' பதையாமல் செய்ன்கிற சன்னி மார்க்கம்
பாய்கின்ற விதங்கேளு பண்பாய் நீயும்
நிதையாம லெண்ணெயுடன் தீர்த்த மாடி
நிறம்பெறவே தயிர்கூட்டிப் புசித்துப் பின்னுங்

குதையாத மந்தமுடன் புணர்ச்சி கூடில்
கூடியே வாய்வுதான் கபால மேறி
அதையாமல் மோகஞ்செய் போக மதுவே
அப்பனே யசதியோடு சன்னி யாமே. ''

(பொருள்). எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகியபின் தயிரும் சோறும் சாப்பிட்டு, பெண்ணுடன் கூடின் சுகசன்னி உண்டாகும்.

'' சன்னிதான் தோன்றும் போதுஞ்
சடமெல்லாம் வேர்வை காணும்
கன்னிதான் சுகத்தால் மைந்தா
கண்கள்தான் சிவப்பே யாகும்
மன்னித்தான் காற்றா லையா
மகத்தான் தோட மாகும்
வன்னித்தான் சுகத்தில் நன்றாய்
விழுந்திடுங் காயந் தானே. ''

(பொருள்). இவ்வாறு எழுந்த சன்னிநோயில், வளி (வாதம்) தன்னளவில் மிகுந்து, தனக்குத் துணையாக, தீ (பித்தம்)யைக் கூட்டிக் கொண்டு உடல் முற்றும் வியர்த்துக் கண்சிவந்து, மற்றைய வாதபித்த சன்னிக் கூட்டுகளில் காணும் குறிகுணங்களையும் காட்டிக் கொல்லும் எனவறிக. இதற்கு.

பொதுக்குறிகுணங்கள்.—சுரநோய் மிகுந்துள்ளபோது உண்டாகும் உடலின் வேற்றுமையால் முக்குற்றங்களும் ஒன்று நாடியினைப் படபடத் தாகிலும் அல்லது மெலிந்தாகிலும் நடக்கும்படி செய்து, தூக்கமின்மை கைகால் சில்லிடல் மனநிலை கெட்டு அறிவு கலங்கல், கண்டபடி பேசல், ஆடையை எடுத்தெடுத்து வீசல் அல்லது ஆடையைத் தொட்டுத்தொட்டுப் பார்த்தல், படுக்கையை விட்டோடல், ஆடல், பாடல், வாய் பிதற்றல் என்னும் குறிகளைக்காட்டும். உடல் வன்மை யொடுங்க யொடுங்கக் கண்ணைத் திறவாமலும், வாய் பேசாமலுமிருந்து பெருமூச்சு வாங்கல், தொண்டையில் கோழை கட்டல், கண் பஞ்சடைதல், மூக்கந்தண்டு சில்லிட்டு நீண்டு காணல், காது கேளாமை என்னுங் குறிகுணங் களும், தன்னை அறியாது கண்டவாறு வாய் பிதற்றல் அல்லது

சுரணையற்றுக் கிடத்தல், மார்பில் கோழை மிகுதியாகக் கூடி, மூச்சுத் தடுமாறி உடல் வியர்த்துக் கைகால் மிகச் சில்லிட்டுக் காணலுமான குறிகளைக் காட்டிக் கொல்வதுமுண்டு.

குற்ற வேறுபாடுகள்.—''திரிதோட காரணமின்றி சன்னி வராது'' எனத்தேரன் கூறியதால் முக்குற்றங்களும் இந்நோயில் மிகுமேயாயினும் ஐயம் ஒருமிக்கவெழுமென அறிக. கால்களில் (வாயுகளில்) கீழ் நோக்குக்கால் மிகுந்து கழிச்சல் நோயினையேனும், அல்லது இஃது தன்னளவில் மிகுந்து எருக்கட்டையேனும் விளைவிக்கும். இவ்வாறே, மேல் நோக்குக் கால் தன்னளவில் மிகின் வாந்தி, விக்கல், ஏப்பம். நீர் வேட்கையாகிய நோய்களைத் தொடரச் செய்யும்.

பரவுகால் மிகின், குளிர், வியர்வை, குருதி யோட்டத்தை மிகுதியாக வேனும் குறைத்தேனும் போகச்செய்யும். நடுக்காலின் கெடுதியால் உடற்கு வேண்டிய ஊட்டத்தையளிக்காது உடலைக் குன்றச் செய்யும். இந் நான்கு கால்களின் கேட்டால், உயிர்க்கால் கெடுமாயின் உயிரும் அழியும்.

### நாடி நடை.

'' நாடி மூன்றும் படபடவென் றோடிற் சன்னி ''

என்றதால் மூன்று நாடிகளும் தத்தம் அளவிற்கு மிகுந்து விரைந்து நடக்கின் அஃது முப்பிணி நோயைக் குறிக்கும்.

'' தூங்கிய சிலேற்பன மிகுந்து பித்த மொன்றதாகில்
ஓங்கிய சன்னி யுண்டாம். ''

ஐய நாடியானது அஃதினளவிற்குக் குறைந்தும் மெலிந்தும் அதனுடன் விட அழல் நாடி மிகுந்து நடக்குமேயாயின் சன்னியெனத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

'' கூறிய வாத நாடி கோழிபோற் கிண்டி நின்றால்
வாரிட்ட முலைநல் லாளே வாதமாஞ் சன்னி யாகும். ''

வளி நாடியானது கோழி நடப்பது போன்று நடக்குமாயின் அந் நாடி நடை வளி முப்பிணி நோயினை குறிக்கும்.

" பித்தந்தான் வாதத் தோடு
பிணைந்து நேர் தோன்றுமாயின்
மத்திய சன்னி வாதம்
.............................

அழல் நாடியானது வளி நாடி யோடுகூடி இணைந்து ஒரே நாடியைப் போல நடக்குமாயின் இஃது வளி முப்பிணியைக் குறிக்கும்.

" வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னி தோடம் "

என்றதால் வளிநாடி தன்னளவில் மிகுந்து துடித்து நடக்கின் அது வளி முப்பிணி நோய் என அறிக.

மருத்துவம்—முப்பிணி நோயில் முக்குற்றங்களும், உயிர்க்கால் தவிர மற்ற நான்கும் ஒரே காலத்தில் கேடடைந்து வருநோயாதலாலும், உடல் வன்மை எளிதில் கெடக்கூடுமாகையாலும், இந்நோய் மருத்துவத்தில், கேடடைந்த அக் குற்றங்களை உடனே தத்தம் நிலையெய்தும்படி வன்மை வாய்ந்த பெருமருந்துகளைக்கொண்டு உள்ளுக்குக் கொடுப்பதோடு, " சேத்ப சீதமாய்த்துடைத்து " எனத்தேரையர் கூறியாங்கு, இந் நோயில் ஐயக் குற்றமே கெடுதிகள் பலவற்றையுண்டாக்கிக் கொல்லுமாகையால், மிகுந்தெழுந்த ஐயக்குற்றத்தினை அடக்கும், கண், மூக்கு, உச்சி இவைகளுக்காக மருத்துவமும், ஒற்றடம், பற்று, வியர்வை பிடித்தல் முதலிய புறமருத்துவம் செய்வித்து, ஐயத்தைத்தன்னிலைப் படுத்தல் வேண்டும். அன்றியும் அகமருத்துவத்தில் வாந்தி, கழிச்சலுக்கான மருந்துகளையும் வழங்கல் வேண்டும்.

கண்மருந்து, மூக்குமருந்து, பற்று முதலியவைகளைச் சுர மருத்துவத்தில் கூறியுள்ளவைகளே முப்பிணிகட்கும் வழங்கலாம்.

மாத்திரை வகைகளில் : (1) பூபதி மாத்திரை, (2) பூரண சந்திரோதய மாத்திரை, (3) தாளக மாத்திரை, (4) ஆனந்த பயிரவம், (5) கஸ்தூரி மாத்திரை, (6) பிரமாத்திர மாத்திரை, (7) நாகபாச மாத்திரை, (8) அலாயுத மாத்திரை, (9) சிராவண மாத்திரை, (10) மோகனாத்திர மாத்திரை, (11) அர்த்த சந்திரிகை மாத்திரை, (12) காருட மாத்திரை, (13) அக்கியத்திர மாத்திரை, (14) வாயுவாத்திர மாத்திரை, (15) வருணா மாத்திரை, (16) வச்சிராயுத மாத்திரை முதலிய தேரன் சேகரப்பாவில் கூறிய சன்னி நோய்க்கானவைகளை நோய்க்குத் தகுந்தவாறு துணை மருந்தோடு முப்பிணிக்கு வழங்கலாம்.

பற்பச் செந்தூரங்களில் இரசச்சுண்ணம், தாளகபற்பம், வெள்ளைப் பாடாண பற்பம், முத்துப் பற்பம், பவழபற்பம், கௌரி அடலை போன்ற காரமுள்ள மருந்துகளையும் தக்க அளவாகக் கொண்டு வழங்கலாம்.

குடிநீர்

" கொண்டபின் வேலந் தோலைக் குறுகவே தறித் திடித்து
மண்டவே கரைத்துக் காய்ச்சி வற்றியே பதம தானாற்
றண்டிடா மதுர மேலந் தயங்குவேர்க் கொம்பிந் துப்பு
பிண்டிடு கொத்து மல்லி மிளகுடன் கடுக்காய் கூட்டே."

" கூட்டியே நிறையிற் கொண்டு
குலவிய புளியந் தோலின்
நீட்டிய சாற்றி னாலே
யிவையரைத் தேமுன் காய்ந்து
காட்டிய கியாழத் திட்டுக்
காய்ச்சியே திரண்ட வாறே
மீட்டுநீ யிறக்கி நாவில்
விரைவுட னடக்கி கொள்ளே."

" அடக்குசேர் பணங்கள் பீத்த
வடர்ந்திடு நெஞ்சிற் சுரப்புத்
திடக்குநா வறட்சி தண்ணீர்த்
தாகமிங் கிவைகள் தீரும்
மடக்கிநீ யரிசி தன்னை
வறுத்துப்பின் நலவேர் சுட்டுச்
சடக்கென வேதான் சீலை
தனிற்கட்டிக் கஞ்சு காய்ச்சே. "

" காய்ச்சியே கொடுத்துப் பின்னைக்
கருதுநா ளேழுஞ் சென்றால்
நோச்சுட னிரண்டு நேர
நினைவோடு வழங்கு வாயே
தீய்ந்திடுஞ் சன்னி வாத
செழுஞ்சுரந் தீரும் வண்ணம்
மூச்சுறக் கொடுக்கக் காய்ச்சல்
முதற்குடி நீர்கேளீரே.

(சுரவடாகம்

(பொருள்). மேற்கூறிய குடிநீரைக் கொடுத்தபின், வேப்பம் பட்டையைக் குறுகத்தறித்து இடித்து, நீரிலிட்டுப் பிசைந்து, காய்த்து வடித்து, அதனைக் குழம்பு பதமாக்கி, அத்துடன் அதிமதுரம், ஏலம், சுக்கு, இந்துப்பு, கொத்து மல்லி, மிளகு, கடுக்காய் இவற்றை ஓர் அளவாகக் கூட்டி, புளியம் பட்டை உட்தோலை இடித்து இதைப் பிழிந்த சாற்றால் மைபோலரைத்து எடுத்த எடைக்கு மேற்படி வேப்பம் பட்டைக் குழம்பு கூட்டிக் கலந்து வைத்துக் கொள்ளவும். இதனில் சிறிது எடுத்து நாவிற்றடவ, ஐயக்குற்றத்தால் பிறக்கும் குறிகளும் தீக்குற்றத்தால் பிறக்கும் வாய்நீர் சுரப்பி, நாவறட்சி, நீர் வேட்கை முதலியனவும்போம். இதனைக் கொடுத்தபின், அரிசியை வறுத்து அத்துடன் சிறிது சுக்கை நறுக்கிச் சீலையில் முடிந்து முடிக்கஞ்சி காய்த்து ஏழு நாள் இருவேளையும் கொடுத்துவர முப்பிணிபோம்.

நீர்சொறியுஞ் சிறுமுட்டி காஞ்சொறிநன் னாரி
நெடிதான பேரமுட்டி நிலவேம்பி னுடனே
தார்செறிமுத் தக்காசு வேர்க்கொம்பு சீந்திற்
றண்டோரோன் றிருகழஞ் சாய்த்தறித் திடித்து
வார்புனலங் கிருநாழி விட்டெரித்தெட் டொன்றாய்
வற்றியபின் திப்பிலித்தேன் வகையாய்விட் டருந்திற்
சூருவே வருசன்னி வாதசுரம் தீரும்
சொல்வனிரண் டாங்குடிநீர் சொலுமிளவேர்க் கொம்பே.

(பொருள்) சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொறி, நன்னாரி, பேராமுட்டி நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சுக்கு, சீந்திற்றண்டு இவைகள் வகைக்கு, இரு கழஞ்சு எடுத்து இடித்து, இரண்டுபடி நீரிட்டு எட்டில் ஒன்றாய்க் காய்த்து வடித்து அதில், ஆழாக்குக்கொண்டு சிறிது திப்பிலிப் பொடியும் தேனுங் கூட்டிக் கொடுக்கவும்.

"வேர்க்கொம்பு திரிபலைமா வளயமாங் கோட்டம்
வெட்பாலை யரிசிபுடோல் பேய்ப்பீர்க்குச் சந்து
மேற்றங்கு மிருவேலி கொத்துமலி படகம்
மிக்கநெய் தலின்கிழங்கி லாமிச்சி யுடனே
பாற்றங்கு முந்திரிகைப் பழமுடன் பேரிச்சம்
பழங்தேவ தாரிருப்பைப் பூமுத்தற் காசு
சூற்றங்கு கடுகுரோ கணிபங்கம் பாளை
சொன்னசிறு காஞ்சோறி கொள்ளிரண்டு கழஞ்சே."

"இருநாழி தண்ணீர்விட் டடுப்பினிளஞ் சூடா
யேற்றியெரித் தேதானும் பதமாக வற்றி
உரிதான தேனுடனே திப்பிலித்தூள் கூட்டி
உண்டுவிட வேசன்னி வாதசுரத் துடனே
அருகாக வருகின்ற வாதசுர தோட
மவைசூழும் புவியனைத்து மரசளித்துக் காக்கும்
..........................................
.........................................."

(பொருள்) சுக்கு, முப்பாலை, மாம்பட்டை, தாமரைவளையம், கோட்டம், வெட்பாலை அரிசி, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, இருவேலி, கொத்துமல்லி, பற்பாடகம், நெய்தற் கிழங்கு, விலாமிச்சு, முந்திரிகைப் பழம், பேரீந்து, தேவதாரம், இலுப்பைப்பூ, கோரைக்கிழங்கு, கடுகு ரோகிணி, பங்கம்பாளை, சிறுகாஞ்சொறி ஆகிய இவைகள் வகைக்கு இரண்டு கழஞ்சாகக் கொண்டு இடித்து, இரண்டுபடி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில் தேனும் திப்பிலிப்பொடியும் கூட்டி உண்டு வர, வளி முப்பிணிபோம்.

நிபசன்னிக்கு.

"நிபசன்னிக் கரீவை நாசி நீர்மிள குடனி ழைத்து
விபத்தற் கலீக்க மாக விழிகளி லீட்டுச் சிக்குக்
கபப்பகை வேளை நீரிற் கடுகுபற் றிடலாங் கன்னிக்
குபத்திர மெனிற்பத் தாவி னுடலது கொண்டு மாறே."

(பொருள்) நிபசன்னி உண்டாவதற்குக் காரணமாயிருந்த பெண்ணினுடைய மூக்குநீரில் மிளகை இழைத்து நிபசன்னி உண்டானவனுக்குக் கலீக்கமாகக் கண்ணிலிடவும். வேளைச் சாற்றில் கடுகை அரைத்து உச்சியில் பற்றிடலாம். இச்சன்னி, பெண்ணுக்கு உண்டாயின், ஆணின் மூக்கு நீரைக் கொண்டு கண்ணுக்கு இடவும் (தே. சேகரப்பா—423)

சோக சன்னிக்குப் பற்று.

"சோக சன்னிக்கே யாகிற் றொப்புளுப் பழுந்து நீரிற்
சேகரித் தரிதா ரத்தைத் தேய்த்தெரி கலிக்க மிட்டுப்
பாகலி னிரதத் தோடு பச்சைநா பியை யரைத்து
நீகமிற் பற்றிட் டாறச் செய்திடு நெருப்பி னாலே."

(தே. சேகரப்பா—424)

(பொருள்) சோக சன்னிநோய்க்கு, ஆணின் கொப்பூழிற் சேர்த்துள்ள உப்பை (அழுக்கை) எடுத்து, தாளகத்துடன் கூட்டி இழைத்து எரித்து அப்பொடியைக் கண்ணிலிட்டு, பாகல் இலைச் சாற்றைக் கொண்டு பச்சை நாபியை அரைத்து தலையில் பற்றிட்டு அனல் காட்டி நீர்வற்றும்படி செய்ய சன்னிபோம்.

மோக சன்னிக்குப் பற்று.

''மோக சன்னிக் காகின் மூத்திரந் தன்னிற் காமன்
வாகுட னிழைத்துக் கண்ணில் மாட்டியிங் குவையுள் ளிப்பால்
சேகரித் திழைத்துப் பற்று சிரத்தினு முதுகு மீது
மாக மத்தியினும் பூசி யங்கியைக் காட்ட லாமே.''

(தே. சேகரப்பா 425)

(பொருள்) மோக சன்னிக்குச் சிறுநீரில் திப்பிலியை இழைத்து கண்ணிலிட்டு, பெருங்காயத்தை வெள்ளைப்பூண்டுச் சாற்றில் இழைத்து, தலை, முதுகு, மார்பு இவைகளில் பற்றிட்டு அனல் காட்டத்தீரும்.

விட சன்னிக்குப் பற்று.

''விடசன்னி தனக்கு மாற்று வேண்டுமேற் கடியைச் சேர்ந்த
துடைக்குரு தியிலே காமன் சுக்கச மதக மூன்றும்
புடைத்திடு கலிக்க மஞ்சள் பொடிகுளக் கமிஞ்சிச் சாறு
உடைத்திடு சிரத்திற் பற்றா குச்சியை யனலிற் காய்ச்சே.''

(தே. சேகரப்பா 426)

(பொருள்) ஆணுக்கு வரும் விடசன்னிக்குப் பெண்குறிக்குப் பக்கத்திலுள்ள இடுக்கில் கீறி, குருதி வாங்கி, அதில் திப்பிலி, சுக்கு, ஓமம் ஆகிய மூன்றையுங்கூட்டி, இழைத்து, கண்ணிலிட்டும், அக்குருதியில் மஞ்சட் பொடி, கொள்ளுமா, இஞ்சிச்சாறு கூட்டி நெற்றியிலும் உச்சியிலும் பற்றிட்டு உச்சிக்கு அனலைக் காட்ட சன்னிபோம்.

### தீச்சன்னிக்குக் கண் மருந்து பற்று.

"தீச்சன்னி குறத்தி ரத்தந் திப்பிலி மிளகிந் துப்புத்
தேச்சிடு கலிக்கங் கண்ணிற் சிலந்திநா யகர சத்தில்
பேய்ச்சுரைக் காயெட் டிக்காய் விரைபிர வாளத் தோடே
ஆச்சென வரைத்துச் சிக்கே யப்பியக் கினியைக் காட்டே."

(தே. சேகரப்பா 427)

'குலுத்த மாவின் குணமும் இவைகளில்
கோடி யாகும் குடிலத்தைச் செய்கிற
பலுத்த வாயுவைப் பற்றிய சன்னியைப்
பற்ற றுத்துடற் பையுளைச் சாடுமே."

என்று தேரன் தருவில் கூறியவாற்றானுமறிக.

(பொருள்) தீச்சன்னிக்குப் பெண்ணின் தொடையைக் கீறி எடுத்த குருதியில் சிறிது திப்பிலி, மிளகு, இந்துப்பு கூட்டி இழைத்து, அதைக் கண்ணிற்கு இட்டுப்பின்னர், சிலந்தி நாயகச் சாற்றால், பேய்ச்சுரையின் விதைப் பருப்பு, எட்டியின் விதை, பவழம் கூட்டிக்குழைத்து மண்டை உச்சியில் அப்பி நெருப்பின் அனலைக்காட்ட நோய் நீங்கும்.

### சண்ட சன்னிக்குப பற்று.

சண்டசன் னிக்குக்கண் ணூருச் சானுவி னுதிரந் தன்னி
லிண்டைவே ரபினி நைய விளங்குகண் கலிக்க மிட்டே
சுண்டைவே ரசம தாகந் துளசிநீர் தனிலரைத்தே
மண்டையிற் பற்றிட் டங்கி மறுகுறிப் புலர்த்த னன்றே

(தே. சேகரப்பா 428)

(பொருள்) சண்ட சன்னிக்குப் பெண்ணின் முழந்தாள் தொடை இவற்றைக் கீறிக் குருதி வாங்கி, அதில் ஈண்டின்வேர், அபினிகூட்டி நன்றாக அரைத்து கண்களுக்கு இட்டு, சுண்டைவேரையும் ஓமத்தையும் துளசிச் சாற்றில் அரைத்து, மண்டையில் பற்றிட்டு அனல் காட்ட நோய்போம்.

''இவைகள்தம் சாந்தி மேலே யியன்றமாத் திரைக டம்மிற்
சிவபாசு பதாத்ர மாதி செயம்பெறு வகைய றிந்தே
தவறிலா வனுபா னத்திற் சந்தானஞ் செய்து பத்ய
விவரவக் கணையிற் காக்க வேண்டுமே லிரண்டுஞ் சொல்
வோம்.''

(தே. சேகரப்பா 429)

(பொருள்) அன்றியும், பல்வகைப்பட்ட மாத்திரைகளில் பாசுபதாத்திர முதலியவைகளைக் கொண்டும் தக்க துணை மருந்துகளைக் கொண்டும், பத்திய பரிகாரங்களைக் கொண்டும் இந்நோய்களைப் போக்கலாம்.

இரண சன்னிக்கு மாத்திரை.

இரண சன்னி யிரண்டு வகையினு
மரண மெய்த வருமவை யஞ்சவே
வரண மாக வயின்ம ருந்தபக்
குரண மாக வியற்றுத லோதுவாம்.

(தே. சேகரப்பா 430)

நாபி கெந்தி ரசமரி தாரமெய்
சோபி காயருந் தொடியரைக் காலரை
பாபி யான பனைமதுச் சாறுநல்
லாபி நீரில்வெள் ளரிதகி நீரிதே.

(தே. சேகரப்பா 431)

மூன்று மூன்று தினமதின் மும்மடி
யான்ற கல்வத் தரைத்த படியினும்
மூன்று வைகல் முருங்கையா டாதோடை
மூன்று வைகல் முருக்கினு முத்தினம்.

(தே. சேகரப்பா 432)

ஆகக் கூட்டு மட்டாதச நாட்களும்
போகப் பின்னர்ப் புரியுது மாத்திரை
பாக மான பயிறள வாகவே
வேக மாதம் வெயிலு லர்த்தியே.

(தே. சேகரப்பா 433)

இயற்கைக் காகி லிலுப்பை நெயிற்கொடு
செயற்கைக் காகிற் சிவந்த மறிநெயிற்
பயக்க வீயுரைப் பாதி யிருபது
கயக்கு மாறு கடும்பத் யமரோ.

(தே. சேகரப்பா 434)

வார மப்படி மற்றொரு நாள்பினர்
சோர வுய்ப்பது இந்த மறைத்திறம்
வார முத்தொகை மாய்ந்தபின் னெண்ணெய்மோர்
சேர வுய்ப்பது தேவை யனைத்துமே.''

(தே. சேகரப்பா 435)

(பொருள்) நாபி, கந்தி, இரசம், அரிதாரம், பெருங்காயம், வாளம் ஐந்தும் வகைக்கு அரைக்கால் பலமும், கடையது வீசம்பலமும் எடுத்து, இதனைக் கல்வத்திலிட்டு, பனங்கள்ளினாலும், பசுச்சாண நீரினாலும், வெள்ளைக் கடுக்காய் குடிநீராலும் தனித்தனி மூன்று நாட்கள் அரைத்து, பிறகு முருங்கைப் பட்டைச் சாறு, ஆடாதோடைச்சாறு, பலாசுப்பட்டைச் சாறு இவைகளினால் மும்மூன்று நாட்கள் அரைத்து, மொத்தத்தில் பதினெட்டு நாட்கள் அரைத்துப் பயறளவாக மாத்திரை செய்து, வெய் யிலில் உலர்த்தவும், இயற்கை இரண சன்னிக்கு, இலுப்பை நெய்யிலும், செயற்கை இரணசன்னிக்குச் செம்மறியாட்டு நெய்யிலும் கொடுத்துக் கடும்பத்தியம் காக்கவும், இவ்வாறாக முறைக்கு ஒரு வாரமாக, மூன்று வாரம் கொடுத்து நடுவில் ஒரு நாள் மருந்து இல்லாமல் நிறுத்திப் பின்பு எண்ணெய், மோர், உப்பு முதலியன சேர்க்கலாம்.

இரண சன்னிக்கு வெளி மருந்து.

கோலைப் பற்றக் குரங்கு வெருவல்போற்
காலைப் பற்றிக் கடும்பிணி யைத்தெற
மேலைப் பற்றி விபர மெனப்படும்
சீலைப் பற்றைச் செயுமுறை கூறுவாம்.

(தே. சேகரப்பா 436)

மெழுகு குங்கிலியம் வெந்தயத் தின்பிசின்
பழகு மாம்பிசின் பாக்குமெய் வெண்குன்றி
கழலிவ் வொன்பதுங் காற்றொடி யொட்டகக்
கொழும யூரக் கொழுவதற் கத்தமே.

(தே. சேகரப்பா 437)

கூட்டி மத்தித்த மைப்பொகு கொப்பரை
யீட்டி வாய்க்கு மிலாங்கலி யெண்ணெயில்
வாட்டு தீயி லறுகன்னல் மாத்திர
மூட்டழற் தீயு ருக்கிய பின்னரோ.

(தே. சேகரப்பா 438)

ஆற்றக் கல்லென வாறிய பின்னதை
யேற்றரக் கையு மேய்ப்பதை வைத்திருந்
தூற்ற மாக ஓமலி யுரியிடைத்
தோன்ற வைப்பது திங்களொன் றாகவே.

(தே. சேகரப்பா 439)

பின்னர் வெம்புண் பிறந்துறு சீயோடு
துன்னு நோயைத் தொடுத்து வருத்துமே
வன்ன காய வரக்கை யெடுத்தனன்
முன்னர் நாட்டமொழிமெழு காகுமே.

(தே. சேகரப்பா 440)

ஆயி ருக்கு மரக்கை வட்டக்கலை
நாய தளிதி னாட்டி யதிலிடச்
சீயை யணச்செரு மூவினை யெல்லா
நோயும் வெள்ளிடை நோக்கி யகலுமே.

(தே. சேகரப்பா 441)

பின்னு மோர்தரம் பேர்த்ததை மாற்றியே
முனன ரென்ன முறையி லியற்றவே
வன்ன மாறி வடுவுமுன் னாறவே
நென்ன லின்றென நோய்பிரிந் தாலுமே.

(தே. சேகரப்பா 442)

(பொருள்) கோல் எடுத்தால் குரங்கு அஞ்சுதல் போலக் கடும் பிணியாகிய சன்னி அச்சங்கொள்ளுதற்கேற்ற மேற்பற்று விவரங்களில் சீலையையும் பற்றுகளையும் கூறுவாம். மெழுகு, குங்கிலியம், வெந்தியம், அத்திப்பிசின், மாம் பிசின், களிப்பாக்கு, பெருங்காயம், வெண்குன்றிப் பருப்பு, கழற்சிப் பருப்பு வகைக்குப் பலம் கால், ஒட்டகக் கொழுப்பு, மயில் கொழுப்பு வகைக்கு ஒவ்வொன்றும் $1^1/_8$ பலம் இவைகளைக் கூட்டி அரைத்துத் தேங்காயெண்ணெய் சிறிது விட்டுக்காய்ந்து, நன்றாக ஆறி

இறுகியபின், அதனை நாய்த் தோலில் ஒருதிங்கள் வரை வைத்திருந்து, மேற்படி சன்னியில் புண்ணுண்டாய், சீழ்பற்றி வருத்துகின்ற சமயத்தில் இவ்வரக்கை நாய்த் தோலில் தடவிப் போடத் தீயால் வந்த முப்பிணி நோயைப் போக்கிப் புண்ணையாற்றும், அதனை நீக்கி மறுபடியும் மேற்கூறியவாறு போட, நிறமாறி வடுவு தெரியாமல் நன்னிலை எய்தும்; நோய் பிரிந்து ஆறும்.

பத்தியம்.

ஆறு மாறு மடர்தினந் தன்னில்
யாறு மாறு மணுகு முறைப்படு
காறு மாறு கடுகொள் ளெள்கறி
காறு மாறு கருணை வழுதலை.

(தே. சேகரப்பா 443)

மோர ணைசுரை மோழை சுதையிள
நீர்கரும் புமெய் நெய்பிரம பத்திரி
பேர்ம டந்தையர் பேசப்ப டாதிவை
சேர்வ தாகிற் சிறுகுடனீ றாமே.

(தே. சேகரப்பா 444

ஆகை யாலிஃ தாண்மை யினாலறிந்
தூகை மிக்கவி ஆற்றி யவரவர்
தேக வன்மை தெரிபவ ரல்லரோ
வாக டத்தின் மகிமையுள் ளார்களோ.

(தே. சேகரப்பா 445)

(பொருள்) மேற்கூறிய வெளிமருந்தால், ஆறு தினங்களில் புண் மாறி விடும். மற்றைய ஆறு நாட்கள் வரையிலும்கூட பத்தியமாக இருத்தல் வேண்டும். கடுகு, கொள்ளு, எள், மிளகு, காராக்கரணை கத்திரி, மோர், சுரை, மோழைக்கஞ்சு, பால், இளநீர், கரும்பு, பெருங் காயம், நெய், புகையிலை, கஞ்சா, பெண்போகம் இவை ஆகா. இவை களைக் கொள்ளின் நோய் வன்மைபெறும். ஆகையால், இந்நோயின் வன்மையை அறிவின் முதிர்ச்சியினால் தெரிந்துகொள்பவரே மகிமை யுள்ள மருத்துவர் ஆவர்.

யூகி முனி கூறிய பதின் மூன்று சன்னிகட்குப் பன்னிரண்டு பயிரவ மாத்திரைகள் கூறியுள்ளன. அவைகளின் செய் முறையும் அவைகளை வழங்கும் வகையையும் சித்தவைத்தியதிரட்டில் காண்க.

# அம்மை நோய்.

வேறு பெயர்கள் : குருநோய், மாரி, குபாடகம், வீச்போடகம், மசூரி, வைசூரி என்பன வாகும்.

இயல் : இந் நோய் சுரம் காய்ந்து உடல் முற்றுமேனும், அல்லது உடலின் சில பாகங்களிலேனும் சிறிதும் பெரிதுமான கொப்புளங்களை உண்டாக்கும் இயல்புடையதாம்.

நோய்வருவழி :

''அண்டத்துள்ளதே பிண்டத்திலும்'' என்னும் மொழிக்கேற்ப, நம் முடல் தட்பவெப்பத்திற்கீடாக மாறுதலை அடையும். கோடைக்காலத் துச் சூரியன் கொடுமையால் நிலம் சூடடைந்துள்ளபோது, சிறிது மழை பெய்யின், சூடேற்றிய இரும்பில் நீர் தெளிக்கில் தட்ப வெப்பத்தோடு கூடி யெழுமாவியே போல், கோடைக்காலத்தில் (சித்திரை, வைகாசி, ஆனி) சூரியன் கொடுமையால், நம்முடலும் சூடடைந்து, அழல்குற்றத்தை (பித்த தோடத்தை) மிகுதிப்படுத்தலும் அவ்வமயம் பொழியும் மழையின் அளவாய் எழும் ஐயக்குற்றமும் அத்துடன் சேர்ந்து அழலையக் குற்றமாக வெழுந்து, இந்நோயைப் பிறப்பிக்கும். இதைப் போன்றே ஐப்பசி, கார்த்திகை, மார்கழி முதலிய காலங்களில், திடீரெனச் சூரியனது கொடியதோர் வெப்பு எழின், உடலில் இயற்கையாக மிகுதியும் குளிர்ந்து ஐயக்குற்றத்துடன் இருக்கும் நிலையில், சூரியன்கொடுமையா லெழுந்த அழல்குற்றமும் கூடி ஐயழல்குற்றமாகி, அம்மை நோயை உண்டாக்கு மெனினும், பெரும்பாலும் இந்நோய் மிகுதியும் கொள்ளை நோயாய் வருவது வேனிற் காலமே; இதனைப் பண்டைய நூலாகிய சிலப்பதி காரத்தில் காண்க.

''அன்று தொட்டுப் பாண்டியநாடு மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றி வேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக் கொன்று கள வேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்து நோயுந் துன்பமு நீங்கியது.''

எனச் சிலப்பதிகாரத்திற்கு உரை வரைந்த அடியார்க்குநல்லார் உரைபெறு கட்டுரையில் கூறியதில், மதுரையில் கோவலன் கொலை யுண்ட அன்று தொடங்கிப் பாண்டிய நாட்டில் மழையின்மையின் உண் டான வெப்ப எழுச்சியால் மக்கள் வறுமையுற்று, வெப்புநோயும், குரு நோயும் (அம்மையும்) இடைவிடாது நலித்தலிற் கொற்கைக் கணிருந்த இளஞ்செழியன் நங்கைக்கு (கண்ணகிக்கு) ஆயிரம் பொற் கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற் சாந்தி செய்து, விழாவெடுத்தலானே அவன் நாட்டினில் மிகவும் மழை பெய்து முற்கூறிய வறுமையும் நோய்களும் நீங்கிற்று எனப் பொருள்படும்.

அன்றியும், பெருமழைவரின் நிலம் குளிர்ந்து, இந்நோய் ஊரை விட்டொழியும் எனவுங் குறிக்கும்.

நோயின் எண் :

''தானான வைசூரி பதினா லாகுந்
தனியான ரூபங்கள் பேதா பேதம்
வேனான பனைமுகரி பாலம்மை தானும்
வெடிப்பான வரகுதிரி கொள்ளம்மை யாகும்
கோனான கல்லுதரி கடுகம்மை யாகும்
குடிகெடுக்கு மொழுக்கனா முப்புதரியாகும்
கானான கரும்பனசை வெந்தயமோ டொக்க
கதிப்பான பாசிப்பயறு விச்சிரிய னாமே.''

''ஆமேதான் பன்னீரில் குளுவா னாகும்
அடைவான தவளை வைசூரி யாகும்.''

என யூகி சிந்தாமணியில் கூறியபடி, 1. பனைமுகரி, 2. பால் அம்மை, 3. வரகுதிரி, 4. கொள் அம்மை, 5. கல்லுதரி, 6. கடுகு அம்மை, 7. மிளகு அம்மை, 8. உப்புதிரி, 9. கரும்பனிசை, 10. வெந்தய அம்மை; 11. பாசிப்பயற்றம்மை, 12. விச்சிரி, 13. குளு வன், 14. தவளை அம்மை எனப் பதினான்கு வகைப்படும்.

நூல்களில் இவ்வாறு வகுத்திருப்பதும் தவிர, வாயில் சிறு கொப்புளங்கள்போல் உண்டாய் உணவருந்த முடியாது வருந்தச் செய் யும் நோயை வாய் அம்மை யென்றும், உடல் முழுமையும், கோணியில்

படுக்குங்கால், உண்டாகுங் குறிகள் போன்று சிவந்த நிறத்தோடு தோன்றும் நோய்க்குக் கோணியம்மை யென்றும் இவ்விரண்டையுங் கூட்டிப் பதினாறு வகை எனச் சொல்வாரு முளர்.

அம்மை நோயை, முன்காட்டிய பதினான்கோடு இந்த இரண்டையும் சேர்த்து பதினாறு வகையாய்ப் பிரித்திருப்பினும், நம் நாட்டில், பெரிய அம்மை, சிறிய அம்மை (விளையாட்டம்மை), தட்டம்மை, புட்டாளம்மை என நான்கு வகைகளே பெரும்பான்மையும் வழங்கப்பட்டு வருகின்றன. அவைகளையும் ஈண்டெடுத்துக் கூறுவாம்.

## குறிகுணங்கள்.

1. பனைமுகாரி அம்மை :

> ''வாரான தேகமது நடுக்கங் காணும்
> வாய்பிதற்றல் சுரமுடனே வியர்வை தோன்றும்
> கூறான உடல்கடுக்குங் கண்ணோ மெத்த
> குடிலமுடன் சிவப்பாகிக் கண்டம் வீங்கும்
> சேரான பித்தமொடு பெரும்பா டாகும்
> சீறியே சின்னியுடன் பினத்த லுண்டாம்
> பூறான வுடல்மெலிந்து பார மாகிப்
> படருமே பனைமுகாரின் பண்ப தாமே.''

(பொருள்) இந் நோயில் உடல் நொந்து நடுக்கத்துடன் சுரம் கண்டு வாய் பிதற்றல், வியர்வை கொட்டல், உடல் வலித்தல், கண்சிவந்து எரிதல், கழுத்து வீங்கல், பித்தவாந்தி செய்தல், பெண்ணாகின், பெரும்பாட்டைப்போல் குருதி வெளியாதல், சன்னியின் குறிகுணங்கள் காணப்படுதல், உடல் இளைத்துக் காணினும் பாரமாகவே தோன்றல் முதலியன உண்டாகும் என அறிக.

2. பால் அம்மை:

> ''பண்மையாஞ் சுரமதுதான் மிகவே யாகிப்
> பாரிந்து தேகமெங்குங் குளிர்ந்து காட்டும்
> நன்மையா மூன்றுநாள் சுரமே காய்ந்து
> நலமாக விராக்காலஞ் சிரசி லம்மை

குண்மையாங் குருபோ லம்மை காணும்
கோரமாந் தேகமது நடுக்க லாகும்
உண்மையாஞ் சத்தநாள் நீரே கோர்த்து
உதிருமே நவநாளி லிறங்கும் பாரே."

(பொருள்) இந்நோயில், சுரமானது சூரியன் வெப்பத்தின் கடுமையே போல், இடைவிடாது மூன்று நாட்கள் காய்ந்து, பின்பு இரவில் தலையில் அம்மைக் கொப்புளங்கள் குருவைப்போல் தோன்றி உடலை மிகுதியும் நடுங்கச் செய்யும். நாளுக்கு நாள் அம்மைக் கொப்புளங்கள் நீர் கோர்த்துப் பெரிதாகும். குருத்தோன்றிய ஒன்பதாம் நாளுக்குள் வாடி இறங்கும். ஆனால், உடல் வன்மை மிகுதியும் குன்றும்.

3. வரகுதரி :

"பாரேதான் சுரமதுவு மிகவே மிஞ்சிப்
பற்களையும் நறநறெனக் கடிக்கச் செய்யும்
சீரேதான் சிரசில்குரு முளையே தோன்றிச்
சீறியே வாயாலே ரத்தம் வீழும்
நீரேதான் சதநாளில் சோரி கெட்டு
நீர்கோத்துப் பதினொன்றி லிறங்கிப் போகும்
தீரேதா னீர்த்தாரைப் புண்ணாம் ரத்தம்
சீறியே வரகுதரி தன்மை யாமே."

(பொருள்) வரகுதரி அம்மையில், அதிகமான சுரந்தோன்றிப் பற்களைக் கடித்தலாகிய முப்பிணிக் குறிதோன்றி, உறக்கமின்மை, வாந்தியாதல், புண்ணாதல், வாயினின்று குருதி கொட்டல், நீர்த்தாரை புண்ணாய் அதினின்றும் வெள்ளப்போக்கேபோல் குருதி (இரத்தம்) வெளியாதல், தலையில் கொப்புளங்கள் உண்டாய் அவை நீர் கோர்த்துப் பெரிதாதல், ஏழாம் நாள் பூரிக்கும். பதினோராம் நாளில் இறங்கும்.

4. கொள்ளம்மை :

"தன்மையாம் சன்னியுடன் வலிப்புத் தோன்றும்
சதாகாலம் காய்ச்சலுடன் பிதற்ற லாகும்
வன்மையா மடிக்கடிக்கு வாந்தி யாகும்
வாய்குளறி யெந்நேரம் நடுக்கல் காணும்

துன்மையா மூன்றாம்நாள் வடிவே தோன்றும்
துறட்டிபோல் குருமுளையுங் கடுகு போன்று
பன்மையாம் பதிமூன்றி லிறங்கு மென்றும்
பாடினார் யூகிமுனி பயின்ற வாறே.''

(பொருள்) கொள்ளம்மை நோயில் இடைவிடாத சுரம், சுரத்தின் கொடுமையால் இசிவு, முப்பிணித் தொடர்தல், அடிக்கடி வாந்தியாதல், வாய்குளறல், எப்போதும் உடல் நடுக்கல், வாய் பிதற்றல் என்னும் குறி குணங்கள் உண்டாய் மூன்றாம் நாளில் அம்மையின் வடிவம் கடுகைப் போலத் தோன்றும். இவ்வம்மை பதின் மூன்றாம் நாளில் இறங்கும்.

5. கல்லுதரி அம்மை:

''வாறான காய்ச்சலுடன் வாந்தி காணும்
வலியுடனே பேதியது மிகவே யாகும்
கூறான மூன்றாம்நாள் குருதான் தோன்றும்
குடிலமாஞ் சதநாளில் நீரே கோர்க்கும்
மீறான தசநாளி லிறங்கிப் போகும்
மிக்கவே பதிறொன்றில் கலக்க மாகும்
தீரவே யூகிமுனி சிகிச்சா சாரம்
திரமாக மானிடர்க்குச் செப்பிட்டாரே.''

(பொருள்) கல்லுதரி அம்மை நோயில் விடாக் காய்ச்சல், வாந்தி, உடல் முழுமையும் நோதல், மிகுதியும் பேதியாதல் என்னும் குறிகளைக் காட்டி, மூன்றாம் நாளில் சுரம் தணிந்து குருக்கள் தோன்றும்; அக் குருக்கள் நான்காம் நாளுக்குள் நீர்கோர்த்துப் பெரிதாகிப் பத்தாம் நாளில் குருக்கள் இறங்கிவிடும். சில வேளை பேதியாகத் தொடருவ துண்டு. இது இடைவிடாது கணக்கின்றி கழிச்சலாதலால் உடல் வற்றும், தாகம் மிகும். மூர்ச்சை வாய் பிதற்றல், அலற்றிப் புரட்டல் என்னும் முப்பிணிக் குறிணங்களைக் காட்டும். (பதினொன்றாம் நாளில் தலைக்குத் தண்ணீர் விடலாம்.)

6. மிளகு அம்மை (மிளகன்) :

'' பண்மையாஞ் சுரமதுவும் லகுவாய்க் காணும்
பரப்புடனே இடுப்புமுழங் காலும் வீங்கும்
திண்மையாஞ் சரீரந்தான் காந்த லாகும்
தீர்க்கமா மேழாநாள் குருதான் தோன்றும்

வண்மையாஞ் சிகிச்சையது செய்வா ராகில்
வனமேகிப் போகுமல்லோ வைசூரி தானும்
கண்மையாம் யூகிமுனி சிகிச்சா சாரம்
கருதினார் மாந்தருக்குக் காட்சி யாமே.''

(பொருள்) இந்நோயில், சிறு சுரமாகத் தோன்றி இடுப்பு, முழங்கால் முதலிய சந்து மூட்டுகளில் சிறிது வீக்கம் உண்டாம். வன்மையுள்ள உடலும் வெப்பங்கொள்ளும். ஏழாம் நாளில் அம்மை குரு தோன்றும். தக்க மருத்துவம் செய்யில் இஃது எளிதில் நீங்கும் இதனை '' மொழுக்கன் '' எனவுங் கூறுவர்.

7. கடுகம்மை :

'' திறத்துமே சுரமதுவு மிகவுண் டாகித்
தீர்க்கமாய் மூன்றாநாள் குருதான் தோன்றும்
மறத்துமே உடம்பெல்லாந் தடிப்புண் டாகும்
மயக்கமுடன் பேதியது கழிச்சல் காணும்
சறத்துமே நீரதுவுஞ் சோனை போலச்
சுருக்கமாய் தோல்வீங்கித் தொண்டை கம்மல்
பறந்துமே பதிமூன்றில் போகு மென்று
பாடினார் யூகிமுனி பான்மை யாமே.''

(பொருள்) மிகக் கடுமையான சுரம் உண்டாய், மூன்றாம் நாளில் அம்மைக் குருக்கள் தோன்றி, அவை ஒன்றோடொன்று நெருங்கி யிணைந்து உடலெல்லாம் தடித்தது போன்றாகும். மயக்கம், வயிற்றுப் போக்கு உண்டாதல், சிறுநீர் சுருங்கிக் குருதியுடன் வெளியாதல், சிறிது தோல் வீங்குதல், தொண்டைகம்மல் முதலியன ஏற்பட்டுப் பதின் மூன்றாம் நாள் அம்மை மறையும்.

8. உப்புதிரி அம்மை :

'' காட்சியாஞ் சுரமதுதான் மிகவுண் டாகும்
கடினமாய் மூன்றாம்நாள் குருதான் தோன்றும்
தீட்சமுட னுடம்பெல்லா முப்புப் போலாம்
திடமுடனே வைந்தாநாள் நீரே கோர்த்து

மாட்சியா மேழாநா ளிறங்கிப் போகும்
மார்க்கமுடன் ஸ்நானமது செய்ய லாகும்
மீட்சியாய் வவிழ்தமது நீட்ட லாகும்
மினுமினுப்புப் போகுமென விளம்பிட் டோமே.''

(பொருள்) மூன்று நாட்கள் விடாமல் சுரம் காய்ந்து சிறிது சுரம் விட்டு அன்றே குரு தோன்றும். குருக்கள் சிறிது சிறிதாய்த் தோன்றி, நாளடைவில் அதனுள் நீர் பெருகிக் கொண்டே பெரிதாகும். அடிக்கடி வியர்க்கும். அவ்வியர்வையில் உப்புச் சத்து மிகுதியுமிருப்பதால், வியர்வை உலர உலர, உடம்பெல்லாம் உப்புப் பூத்தது போலப் படை படையாய்ப் படர்ந்திருக்கும். ஆதலால், இஃது 'உப்புதிரி அம்மை' என வழங்கலாயிற்று. இவ்வம்மை ஏழு நாட்களுக்குள் இறங்கிவிடும். உடனே குளிப்பாட்டலாம், மருந்தும் கொடுக்கலாம். இதனால். உடம்பிலுள்ள மினுமினுப்பும் போகும். நோய் இறங்குஞ் சமயத்தில் சிலர்க்குக் காரணமின்றி மயக்கம், மூர்ச்சை ஆயாசம், பெரும் மூச்சு ஆகிய குறி குணங்களும் காணுமெனக் கூறுவர் சிலர்.

9. கரும்பனிசை அம்மை :

''விளம்பினோம் காய்ச்சலது மிகவுண் டாகி
வீறியே நான்காம்நாள் குருதான் தோன்றும்
கிளம்பவே யுடம்பெல்லாங் குத்தல் காணும்
கிளைத்துமே வைசூரி யுள்ளே வாங்கும்
தளம்பவே பேதியது மஞ்ச ளாகும்
சதாவேளைக் குத்தலுடன் கடுக்கல் காணும்
வளம்பவே பதிமூன்றி லிறங்கு மென்று
வசனித்தார் யூகிமுனி வளமை யாமே.''

(பொருள்) இந் நோயில் சுரம் இடைவிடாது மிகுதியாக மூன்று நாள் வரை காய்ந்து, நான்காம் நாள் குரு தோன்றும். குருக்கள் சீழ் கோர்த்து, குத்தலையும் நமையையும் தரும். மஞ்சள் நிறத்துடன் பேதி ஆகும். எருவாய் (ஆசனம்) எப்பொழுதும் குத்தலுடன் வேதனையைத் தரும். பதின்மூன்றாம் நாள் அம்மை இறங்கி வேதனை நீங்கும்.

10. நீர்க்குளுவன் அம்மை :

" பாரேதான் காய்ச்சலது மிகவுண் டாகிப்
பருத்துமே சங்கனியின் கூழ்போ லாகும்
கூரேதான் மூன்றாம்நாள் குருதான் தோன்றி
குடிலமுடன் தசநாளி லிறங்குங் கண்டீர்
சீரேதான் அந்நாளில் கலக்கங் கொள்வீர்
சீரியதோர் வைசூரி தணிந்து போகும்
தேரேதான் யூகிமுனி சிகிச்சா சாரம்
தெளிவாகப் பாடிவைத்தார் திறமை யாமே. "

(பொருள்) : இந் நோயை நீர்க்குளுவன் என்றும் வழங்குவர். குருத் தோன்றும் முன் மூன்று நாட்களுக்கும் இடைவிடாது சுரங் காய்ந்து குரு எழும்போதே சிவந்த வண்ணத்தோடெழும். அவைகள் பருக்கப் பருக்கச் சங்கப் பழம்போல் காணப்படும். பத்தாம் நாள் இறங்கும். நான்கு நாட்கள் பொறுத்துத் தலை முழுகச் செய்யலாம்.

11. தவளை அம்மை :

" ஆமேதான் காய்ச்சலது வதிக மாகி
அடவுடனே காயமது நடக்க வொட்டா
தாமேதான் சூலையது வில்லைப் போல
தப்பாது வலியெடுத்து அசனஞ் செல்லா
காமேதான் மூன்றாநாள் குருதான் தோன்றி
கடினமுடன் நவநாளி லிறங்கும் பாரு
வேமேதான் பதினொன்றில் ஸ்நானம் செய்ய
விளம்பினார் யூகிமுனி சிகிச்சை பாரே. "

(பொருள்) இதனில், அதிகமான காய்ச்சல் உண்டாம். இக் காய்ச்சலின் கொடுமையால் உடல் வன்மை குறைந்து நடக்க முடியாமற் போகும். வில்லால் அடித்தது போல் பக்கங்களில் குத்தி, உணவில் வெறுப்புண்டாகும். இக் குறி குணங்களைக் காட்டி மூன்றாம் நாள் குரு தோன்றும். அக் குருக்கள் ஒன்பதாம் நாள் இறங்கும். பதி னொன்றாம் நாளில் தலை முழுக்காட்டலாம்.

இதுவும் அது :

" வளமையா முடம்பெங்கும் விரிந்து புண்ணாம்
வாகாகக் கிரிமியுட னமைச்ச லுண்டாம்
களமையாம் கருணையது மிகவே குண்ணிக்
காதுகே ளாமையுடன் சுவாசம் பாயும்
பளமையா யிருபத்தோர் நாட்சென் றாக்கால்
பட்சமுடன் தானமது செய்ய லாகும்
இளமைபோ லவிழ்தங்கள் கொள்ள நன்று
இயம்பினார் யூகிமுனி சிகிச்சை தானே. "

(பொருள்) : மேலும், குருக்கள் உடம்பெல்லாம் பரவிப் புண் போல் ஆகி, குருக்களில் புழு உண்டாய், நமை எடுத்து, காதுகேளாமல் மார்பில், அதிகமாகக் கபம் கட்டி, மூச்சை உள்ளே யிழுக்கவும் வெளியே விடவும் முடியாத துன்பமுண்டாகும். இருபத்தொரு நாட்கள் சென்ற பின்பு தலை முழுக்குச் செய்விக்கலாம். இதற்கு மருந்து கொடுத்தல் நலம். பெரும்பான்மையும் இந் நோய் எளிதில் தீர்வதில்லை. கடின நோயேயாகும்.

12. வெந்தய அம்மை :

" தானான காய்ச்சலது வதிக மெத்த
தாக்கான மூன்றாம்நாள் குருதான் தோன்றும்
தேனான ஏழாநாள் நீரே கோர்த்துத்
தெளியுமே நவநாளி லிறங்கிப் போகும்
கோனான பங்சதசஞ் சென்ற தானால்
குடிலமது நீங்கியே குளிர்ச்சி காணும்
பானான ஸ்நானமது செய்ய நன்று
பாலித்தார் யூகிமுனி பகர்ந்த வாறே. "

(பொருள்) : இந் நோயில், சுரமானது மிகுத் தீவிரமாய்க் காய்ந்து மூன்றாம் நாளில் குருதோன்றி ஏழாம் நாளில் குருவில் நீர் கோர்த்துக் காணும் ; ஒன்பதாம் நாள் இறங்கும். பதினைந்தாம் நாள் நோய் நீங்கி குளிர்ச்சியடையும். அன்று தலைமுழுக்காட்டலாம்.

13. விச்சிரிப்பு அம்மை :

“ உண்ணவே காய்ச்சலது மிகவுண் டாகும்
ஓகோகோ வாந்தியது பேதி காணும்
திண்ணமுடன் கண்சிவக்கும் மூன்றாம் நாள்தான்
சிரசுதனில் குருதோன்றுந் தேக மெத்த
கண்ணமா யுமிபோல வாரிக் கொட்டி
கண்மூடு தற்குள்ளே மறையும் பாரு
வண்மையுட னேழாம்நாள் சலமே கொட்ட
வயிற்றுள வைசூரி வாங்கும் பாரே. ”

(பொருள்) : கண்சிவந்து எரிந்து மிகுதியாய்ச் சுரம் காய்ந்து வாந்தியும் பேதியும் உண்டாய் உடல் வன்மை தளரும். பின் மூன் றாம் நாள் தலையில் குரு வெளியாகும். அப் பருக்கள் உமியை வாரிக் கொட்டியது போல் உடல் முற்றும் சிறு சிறு பருக்களாய்த் தோன்றி, இமை கொட்டுதற்குள் மறைந்துவிடும். இவ்வாறாய் இப் பருக்கள் வருவதும் போவதுமாய் இருந்து ஏழாம் நாள் உலரும் அன்று தலை முழுக்காட்ட, வயிற்றிலுள்ள அம்மை நோயும் நீங்கும்.

14. பாசிப்பயற்றம்மை :

“ வாறான காய்ச்சலது குடில மெத்த
வரைதப்பிப் பிதற்றலுடன் சீற லுண்டாம்
கூறான விழியிரண்டும் குமுறிக் காட்டும்
குறிப்பான மூன்றாநாள் குருதான் தோன்றும்
வீறான யேழாநாள் நீரே கோர்த்து
வெடித்துமே நவநாளி லிறங்கும் பாரு
நேறான பதினேழில் சலமு மாடி
நேர்ப்பான மோரசன முண்ணு வீரே. ”

(பொருள்) பாசிப்பயிறு அம்மையில், அதிகமான சுரம் காய்வதுடன் தன் அறிவுகெட்டு, பிதற்றல், சீறி விழுதல், ஆடல், பாடல் ஆகிய முப் பிணி நோயில் காணப்படும் குறிகுணங்கள் அமைந்து, கண்கள் சிவக்கும். மூன்றாம் நாள் சுரம் குறைந்து குருவெழும். ஏழாம் நாளுக்குள் குருவில் சீழும் நீரும் கோர்த்துப் பின்பு வெடித்து, ஒன்பதாம் நாளில் வாடும். பதினேழாம் நாளில் தலைமுழுக்காட்டி, மோர்கலந்த சோற்றைக் கொடுக்கலாம்.

1. பெரியம்மை]

இந் நோய் சிறுபிள்ளை முதல் வயது முதிர்ந்தவர் வரை வரும் நோயாம். எளிதில் மற்றவர்க்கும் தொத்தும். நோய் உண்டாகும் முன்பே, காரணம் ஒன்றும் இல்லாமலே திடீரெனச் சுரம் மிகு தீவரமாக உண்டாகும். அச்சுரத்தோடு மூக்குநீர் பாய்தல், பூட்டுகளில் நோதல், தலை நோதல், முதுகு முழுமையும் நோதல், அடிக்கடி வாந்தியாதல்' கண் சிவத்தல் என்னும் குறிகுணங்களும் காணும். சில வேளை அடி வயிறு, தொடை இடுக்கு முதலிய இடங்களில் வேனிற்காலத்தில் உண் டாகும் வேர்க்குருவைப் போல் சிவந்துங்காணும். சுரம் தானாகவே மூன்றாம் நாள் குறையும். அந்நாளே சிறு குருக்கள் முகத்தில் தோன்றி, பின்பு மணிக்கட்டிலும், மெல்ல மெல்ல கீழ்நோக்கி எல்லாப் பாகத்திலும் பரவும். இப்பருக்கள் உண்டாகும் இடத்தில், தோல் சிவந்தும், சிறிது கனத்தும், அதின் மேல், பரு நாளுக்கு நாள் பெருத்தும், அதனுள் சீழ்கோர்த்தும் காணப்படும். தோன்றிய பருக்களும் நாளுக்கு நாள் உடல் முழுமையும் பரவும். குருத்தோன்றிய ஏழாம் நாள் மீண்டும் சுரம்காயும். குளிருண்டாம், நீர் வேட்கை பிறக்கும். சிலவேளை அம்மைக் கொப்புளங்கள், வாயிலும் தொண்டையிலும் கூட கிளம்புவ துண்டு. இக் குறிகுணங்களோடு நின்று, கொப்புளங்கள் வாடி, சுரம் நின்று கொப்புளத்தின் தோல் உரிந்து பதினைந்து பதினாறு நாட்களுக் குள் குணமடையும். அவ்வாறாகக் கொப்புளங்கள் வாடாமல் இருக்கு மாயின், அக்கொப்புளங்களில் சீழ் மிகுதியும் சேர்ந்து . தோலை அதிக மாய் வீங்கச் செய்து, குழிப்புண்போலக் கொப்புளங்கள் புண்பட்டு, இடை விடாத சுரம் காயும். மேலும், கொப்புளத்தால் நமை உண்டாகும் அங்குச் சொறியின், சொறிந்த மற்றைய இடங்களிலும் அச்சீழ்பட்டு, பட்ட இடங்களிலெல்லாம் புண்ணாகும், குறித்த காலத்திற்குள் அம்மை இறங் காமலிருப்பின், உடல் வன்மை குறைந்து, நோயின் வன்மை மிகுதி யாய் தீக்குற்றத்தை (பித்ததோடம்) உண்டாக்கிக் குருதியைக் கேட டையச் செய்து, அக்குருதி உடலிற்றங்கிப் பல துன்பங்களை விளைவிப்ப தோடு மயக்கம், மூர்ச்சை என்னும் குறிகளைக்காட்டி மரணத்தை விளை விக்குமெனக் கூறும் நூற்களு முண்டு. கண்ணில் அம்மைக் கொப்புளம் உண்டாயின், கண் குருடு ஆகும். சூல்கொண்ட பெண்ணிற்கு அம்மை, காணின், அவள் வயிற்றிலிருக்கும பிள்ளையையும் இந்நோய் தாக்கும் இளங்கருவாயிருந்தால் அழியும்.

திரும் தீராதவை : அம்மைக் கொப்புளங்கள் உடல் முழுமையும் எண்ணின்றிக்கொட்டின், எளிதில் தீராதாம். அம்மைநோயில், முட்டி (கீல்கள்) வீங்கி முடக்கவும் நீட்டவும் முடியாதிருப்பின், நோய் தீருதல் சற்றுக்கடினமாவதுமன்றி,முடங்கிய கீல், வாழ்நாள் மட்டும் முடங்கியே நிற்கும்.

கொப்புளம் வெடித்து, சீழ் மிகுந்து, எளிதில் உலராது மிகுந்த சுரத்தை உண்டாக்கி முப்பிணி நோயை வரவழைக்குமாயின், தீராதாம் சாக்காட்டை வருவிக்கும்.

2. சிறியம்மை :

இதுவும் ஓர் தொத்து நோயாம். பெரும்பாலும் சிறு வயதில் வரும். இந்த அம்மை, பெரும்சுரம் இல்லாமலே பிள்ளை விளையாடித்திரிந்து கொண்டிருக்கும்போதே தோன்றுதல் உண்டு. ஆதலால், இந்நோய்க்கு விளையாட்டு அம்மை என்னும் வேறொரு பெயருமுண்டு ஆனாலும், சில வேளைகளில், தலைநோய், சுரமுள்ளதுபோன்ற உணர்ச்சி, சோம்பல், முதுகுநோய் ஆகிய குறிகள் தோன்றி, சிறு சுரமாகக் காய்ந்து மூன் றாம் நாள் பருக்கள் கிளம்பும், இப்பருக்கள் முதல் முதல் கழுத்தின் முன்பாகத்திலும் மார்பிலும் தோன்றிப் பின், உடல் முழுமையும், பரவும் முதலில் பருக்கள் சிறு சிறு கொப்புளங்களாய் மினுமினுத்து அதனுள் ளிருக்கும் நீர் தெரியுமாறு தோன்றும், பின்பு அடி சற்றுச்சிவந்து சீழ் கோர்த்தது போலக் காணும்,நாளுக்குநாள் வரளும்.வரண்ட நான்கு அல் லது ஐந்து நாட்களுக்குள், நன்றாய் உலர்ந்து தோல் உரிந்து விழும். அம்மை உண்டான இடங்களில், எவ்விதக் குறியுமின்றித் தோல் தன் பழைய நிறத்தை அடையும். சில வேளை அம்மைக் குரு உடல் முழு மையும் சிறு கொப்புளங்களைப் போல் கைகால்கள் தவிர மற்றைய எல்லா இடங்களிலும் வருவதுமுண்டு.

3. தட்டம்மை :

இந்நோய்,முதலில் தும்மல், இருமல், கண்சிவத்தல், கண்எரிதல், மூக்கு நீர்பாய்தல், கண் இரப்பை வீங்கல் என்னும் குறிகளைக் காட்டி, சுரம் எழும் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குச் சுரம் காய்ந்து விட்டபின், செம்மண் நிறத்தோடுங் கூடிய வேர்க்குருவைப் போன்ற சிறு சிறு குருக்கள், காதின் அடியிலும், கழுத்தின் இருபுறங்களிலும்,

முகத்திலும், தோன்றி, பின்பு உடல்முற்றும் கீழ்நோக்கிப் பரவும், இப்பருக்கள் மிகுந்து ஒன்றோடொன்று இணைந்து, திட்டு திட்டாய்த் திரண்டு, சற்று உப்பியும் காணும். குருதோன்றிய எட்டு நாட்களுக்குள் குருக்கள் வாடி, மீன் தோல் போல உதிர்ந்து உலரும், ஆயினும் குரு இருந்த இடம். சின்னாட்கள் வரை சிறிது கருத்தே இருக்கும். இக்குருக்கள் எட்டு நாளைக்குள் உலர்ந்து விடும் எனக் கூறினும், இதன் இடையில் பலப்பல இடையூறுகள் உண்டாகும். மார்பில் கோழை கட்டி வாய் ஓயாத இருமல், சுரம், வாய் சிவந்து புண்போலாதல், உணவு அருந்த முடியாமை, மூக்கில் இடைவிடாது நீர்பாய்தல், கண் சிவந்து கண்நோய் போலக் கண்ணைத் திறக்கவெட்டாமை, நீர் நீராய்ப் பேதி யாதல், உடல் மிகவும் இளைத்துப் போதல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

4. பூட்டுத்தாள் அம்மை :

இந்நோய் வருபவருக்குக் குரு அரிசி மாவால் செய்த பிட்டினைப் படைப்பது நம்நாட்டு வழக்கு. பிட்டைப் படைப்பதால் இதற்குப் புட் டாளம்மை எனப் பெயரமைந்தது போலும், இவ்வம்மை தாடை (தாள்) கீல் (பூட்டு) வீங்கி வரும் நோயாதலால், பூட்டுத்தாள் அம்மை எனக் கூறல் பொருத்தமாகும். இச்சொல் மாறி புட்டாளம்மை எனவாயிற்று.

இந்நோயும் அம்மைநோய் போலவே, ஒருவரிடமிருந்து மற்றொரு வர்க்குத் தொத்தும் தன்மையுடைமையாலும், இந் நோயிலும் சுரம் வருவதாலும் இதனையும் நம் பெரியோர் அம்மை நோயின் தொகுதியில் சேர்த்துள்ளார்.

குறிகுணங்கள் :

சுரம் கொஞ்சமாய் மூன்று நான்கு நாட்கள் காய்ந்து சற்றேகுறைந்து, தாள் பூட்டை அசைக்க ஒட்டாதவாறு வீங்கும். தாளுக்கு மேற்புறத் தில் கழலைப் போல் வீங்கிச் சிவந்து காணும். இத்தாள் வீக்கம் ஒரு புறத்தேனும் இருபுறத்தேனும் உண்டாகும் சில சமயங்களில், முகவாய் அடிப்புறத்தில் வீங்கும். சிலபொழுது கழுத்தின் பக்கத்தில் கண்ட மாலை யில் வீங்குவது போலக்கழுத்தில் கழலை கழலையாய்க்கட்டி வீங்கும். இவ்வாறு எழும் வீக்கத்தால் நோயினன் வாயைத் திறக்க ஒட்டாமல் மிக வருந்துவான். தாங்க முடியாத வலி உண்டாகும். ஆயினும் மற்றைய

அம்மைகளைப் போல் இந்நோயிலுண்டாகும் வீக்கம் சீழ் பிடிப்பதில்லை. பெரும்பான்மையாய் இந்நோய் சிறு குழந்தைகட்கும் முதிர்ந்த வயதினர்க்கும் வருவதில்லை. இஃது ஏழு வயது முதல் இருபது இருபத்தைந்து வயது வரையுமுள்ளவர்க்கே வருகின்றது.

சிலர்க்குத் தாள் பூட்டு வீங்குவதோடு, விரையின் மேல் பாகமும் வீங்குவதுண்டு. அவ்வாறே, பெண்களுக்குக் கொங்கை வீங்குவதுண்டு. மற்றும் சிலர்க்குக் காதுகுத்தல், காதில் சீழ் வடிதல் ஆகிய குறிகளைக் காட்டிக் காதைச் செவிடாக்கி விடுவதும் உண்டு.

குற்ற முதலிய வேறுபாடுகள் :

பொதுவாக எல்லா அம்மை நோய்களிலும், சூரிய வெப்பத்தால் உடலின் அழல் குற்றம் (பித்ததோடம்) தன்னளவில் மிகுந்தும், அத்துடன் மழையின் குளிர்ச்சியால் ஐயக் (கபம்) குற்றம் மிகுந்து கூடி, அழல் ஐயமாகி, அஃது உடல் முற்றும் பரவி அம்மை நோயை உண்டாக்கும். அவ் வழலின் அளவாய்க் குருதியும் கேடடையும் அன்றியும்.

''தாமேதான் சரீரத்தில் வெப்பு மிஞ்சித்
தாக்கான மூலத்திற் சூடு கொண்டு
வேமேதான் மூளையிலே கொதிப்புண் டாகி
விரைப்புடனே யத்தியிலே கனல்தான் கொண்டு
காமேதான் ரோகத்தைக் கண்டு ஏங்கி
கசங்கியே திடுக்கிட்டுக் கலங்கும் தானே''.

எனக கூறியதால் நிலத்தளவாக வெழுந்த சூடு உடலையும் தாக்கி வெதுப் புண்டாக்கி, மூலத்திலும், தலை மூளையிலும், எலும்பிலும், கொதிப்பேறி மன நிலையையும் கெடுத்து அறிவினை மயக்கும் ஆக இக்குற்ற வேறுபாட்டினை விளைவிக்கும் என அறிக.

நாடி நடைகள் :

''பண்பான பித்தத்தில் சேத்துமம் கூடிப் பரிசித்தால்
வெப்புண்ணாகி வந்த பலபிணியும் காணுந்தானே''

(சதகநாடி)

இங்ஙனம் கூறியதால் அழலும் ஐயமும் கூடின், சுர நோயும் இன்னும் பல நோய்களும் வரும் என்றவாறு.

பொது மருத்துவம்.—இந்நோய் வருவதற்குத் தூண்டுதலாய் இருந் தவை அழல் (பித்தம்) ஐயம் (கபம்) எனக் கூறியதால், இதன் மருத்து துவத்தில், தன்னிலை மிகுந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்தற்கான மருந்துகளையும், உணவுப் பொருள்களையும் தகுந்தவாறு கையாள வேண்டும். இந்நோய் பெரும்பான்மையும் வெப்பத்தால் வருவதால், பின்னும் மருந்துகள் கொடுக்கில் அவை அவ் வெம்மையை மிகுதியாக்கு மெனக் கருதி, நம் நாட்டினர், அம்மைக்கொப்புளங்களைக் கண்டபின் அதற்கு மருந்தே கொடுத்தல் இல்லை. இது பண்டையோர் கொள்கை, இடைக்காலத்தினர், அம்மை என்பது ஒரு தெய்வம் என்றும், அதற்கு மருந்து கொடுக்கில் அத்தேவதைச் சினங்கொண்டு நோயை அதிகப் படுத்தி நோயாளிக்குக் கெடுதியை விளைவிக்கும் என்றும் எண்ணினர்; ஆதலால், உணவு, படுக்கை முதலியவற்றால் நோயைப் போக்க முயன் றனர். அவ்வாறு செய்வதும் நன்றன்று. தன்னிலை மீறிய அழலையைத் தன்னிலைப்படுத்த முத்துப்பற்பம், பவளபற்பம், மாணிக்கபற்பம் போன் றவைகளைத்தக்க அளவில், பால், வெண்ணெய், நெய்போன்ற துணை மருந்துகளுடன் கலந்து தருதல் வேண்டும். ஐயம் தன்னிலையில் மிகுந்து மார்பில் சளிக்கொண்டிருப்பின் கத்தூரிக் கருப்பு முதலிய ஐயத்தைப் போக்கும் மருந்துகளையும் கொடுக்கலாம். ஆடாதோடைக்குடிநீர் துளசிச் சாறு இவைகளையும் துணைமருந்துகளாய்க் கொடுக்கலாம்.

உணவு.—சுரம் உள்ளபோது, கருங்குறுவை அரிசி மாக்கஞ்சி, பார்லி மாக்கஞ்சி, கூவைமாக்கஞ்சி ஆகியவற்றைக் கொடுக்கவும், சுரம் தணிந்த பின், குளிர்ச்சியான உணவுகளைத் தருதல் வேண்டும். அதுபற்றியே நம் நாட்டினர், மாரி அம்மைக்குக் கேழ்வரகும் அரிசி நொய்யும் தண்ணீர் விட்டுக் கலந்து புளிக்க வைத்துக் கூழாய்க் காய்ச்சி வெங்காயத்தை அரிந்து கலந்து மாரியம்மனுக்குப் படைத்து, நோயுற்றானுக்கும், மற்ற ஏழைகள், உற்றார் உறவினர் முதலியவருக்கும் வழங்குவர். இது வெப்பத்தைத் தணித்தற் பொருட்டாம். இஃதன்றியும் குளிர்ச்சியைத் தரும் பயிர்வகைகளுள், பச்சைப் பயிறு, காராமணி முதலியவற்றையும் வேகவைத்து, அம்மைக்குப் படைத்து மற்றவர்கட்கும் வழங்குவதுண்டு.

படுக்கை.—அம்மையுற்றவர் கொப்புளத்தின் வலியைத் தாங்க முடி யாதாகையால், படுக்கை மென்மையுடையதாயும், கொப்புளத்தின் மணத்தை வெளியாக்காததாயும், எறும்பும் ஈயும் அணுகாததாயும் இருத்தல் வேண்டும். அதனாலல்லவா நம் மூத்தோர் அம்மையுற்றவர்க்கு வேப்பிலை படுக்கையை அமைத்தனர். அஃதே சாலத் சிறந்ததாம்.

சிறப்பு மருத்துவம் : அம்மை நோயின் வகைகளைக் கூறும்பொழுது பதினான்கு வகைகளைக் காட்டி அவைகளின் குறிகுணங்களைக் கூறினும், வழக்கில் உள்ளது நான்கென வரையறுத்து அவற்றின் குறி குணங்களை விரித்துச் சொல்லியதாலும் அவைகளை எளிதில் அறிய முடியுமாதலாலும், அந் நான்கிற்கு மட்டும் இங்குத் தனித்தனியே மருத்துவம் கூறப்படுகின்றது.

பெரியம்மை.—இந் நோயின் மருத்துவம் சுரம் அதிகமாய் உள்ள போது சுரத்தின் வன்மையைக் குறைக்கும் பொருட்டு, கீழ்க்கூறும் குடிநீர்களுள் ஏதாவதொன்றைக் குற்றங்களின் அளவினுக்கேற்பவும், குறிகுணங்களுக்கொப்பவும் உட்கொள்ளவும்.

(1) பற்பாடகம், சீந்தில், பேய்புடல், கண்டுபாரங்கி, சிற்றா முட்டி, பேராமுட்டி இவைகளை வகைக்குப் பலம் இரண்டாய்க் கொண்டு ஒன்றிரண்டாய் இடித்து, இரண்டுபடி நீர்விட்டு ஆழக்காய்க் காய்த் தெடுத்து, அதைக் காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் கொடுக்கவும்.

(2) நிலவேம்பு, சீந்தில், சீமைச் சாமந்திப்பூ, பேய்ப்புடல், வெட்டி வேர், விலாமிச்சு, சிவப்பு சந்தனம், கோரைக்கிழங்கு வகைக்குப் பலம் ஒன்றும், நீர் படி இரண்டும் கூட்டி, ஓர் ஆழாக்காய்க் காய்த்து வடித்ததில் அரைப்பங்கு காலையும், மற்றையது மாலையுமாய்க் கோரோசனை அரைக்குன்றி குழைத்துக் குடித்தல் வேண்டும். இது சுரம், பித்தவாந்தி இவைகளைப் போக்கும்.

(3) கண்டங்கத்திரி வேர், துளசி, ஆடாதோடை, கண்டு பாரங்கி, சிற்றரத்தை, இலவங்கம் வகைக்குப் பலம் ½, இவற்றுடன் நீர் படி ஒன்றைச் சேர்த்து, ஆழாக்காய்க் காய்த்தெடுத்து, இரு வேளையும் பாதிபாதியாய் உண்ண, ஐயக்குற்றம் நீங்கி, சுரத்தின் கொடுமை குறையும்.

(4) மருது, ஆல், மா, ஒதி, அத்தி இவைகளின் பட்டை பலம் இரண்டு, சீரகம் பலம் ½, சுக்கு பலம் ¼ இவைகளைக் கூட்டி, ஒரு படி நீரிலிட்டு ஆழாக்காய்க் காய்த்து இருவேளையாய் இதனை பங்கிட்டுக் கொடுக்க, அம்மையில் காணும் பேதிபோம்.

(5) சிறுகீரை வேர், நீர்முள்ளி விதை, வெள்ளரி வித்து, சுரைக் கொடி, சோம்பு, காசினி விதை ஆகியவைகள் வகைக்கு ஒரு பலமும் நீர் படி ஒன்றும் கூட்டி, எட்டில் ஒன்றாய்க் காய்த்து, இருவேளை கொடுக்க நீர்க் கட்டுப்போம் நீரில் குருதி (இரத்தம்) வெளியாயின், ஒரு சிட்டிக்கை பூங்காவீ கூட்டவும்.

இக் குடிநீர்கள், நோயின் வன்மையையும் குறிகுணங்களையும் போக்காவிடில். —

1. சுரத்திற்கு முத்துப் பற்பத்தை ஒரு குன்றி அளவு குடிநீரில் கலந்து கொடுக்கவும்.

2. மான்கொம்பு பற்பத்தில் 3 குன்றி, தாய்ப்பாலில் கொடுக்கலாம். பின்பு குற்றத்திற்கு ஏற்பக் குடிநீர் கொடுக்கவும்.

3. பழைய செருப்பின் தோலைச் சுட்டுச் சம்பலாக்கிக் காய்ந் தாறிய நீரில் கொடுக்க, அம்மைக் குரு மிகுதியாகாது.

4. மாணிக்க பற்பம் வெண்ணெய்யில் கொடுக்கலாம்.

5. கழிச்சல், குடிநீரில் போகாமல் இருப்பின், கபாட மாத்திரையை முற்கூறிய குடிநீரில் கொடுக்கலாம்.

6. பொடுதலை இலை, நுணா இலை, நெருஞ்சில், மாந்துளிர், சாதிபத்திரி, கடுக்காய்ப்பூ இவைகள் வகைக்குப் பலம் ஒன்றாய்க் கொண்டு, விதிப்படி குடிநீராக்கி, ஒவ்வொரு பங்கு காலை மாலை களில் கொடுக்கக் கழிச்சல்போம்.

அம்மை நோயில் காணும் வாந்தி பேதி உண்டாக்குவதற்கான மருத்துவம் :—

நஞ்சு முரித்தான் பாலை வேரின் நரம்பை நீக்கி வெந்நீரால் அரைத்து, புன்னைக்காய் அளவு காலையில் வெந்நீரிலும், பகலில் புழுங்கல் அரிசிக் கஞ்சியிலும் கொடுக்க, வாந்தியையும், கழிச்சலையும் உண்டாக்கித் தன்னளவில் மிகுந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்தும்.

மறுநாள் காலையில் புளியங்கோது, கோழி அவரை இலை இவ்விரண்டையும் அரைத்து அவ்வெடைக்கு வெங்காயம் கூட்டி பிசைந்து நிசிநீருடன் மீண்டும் பிசைந்து பிழிந்த சாற்றில், கால்படி அளவு மூன்று நாள் கொடுக்க, முதல் நாள் கொடுத்த மருந்தை முறித்து, அதன் கெடுதிகளைப் போக்கும்.

வேறு.—பிறாயன் இலை, மூக்கிரட்டைவேர், தவசு முருங்கையின் வேர் முதலியன ஒரே எடையாக எடுத்து நிசிநீரிட்டு அரைத்து மீண்டும் அந்நீர் விட்டுப் பிசைந்து வடித்த நீர்படி கால் எடுத்து சீரகத்தூள், வெங்காயம், இலுப்பைப் புண்ணாக்குச் சிறிது கூட்டி, காலையில் மாத்திரம் கொடுக்க, கழிச்சலோடு வாந்தியும் உண்டாம்.

கழலைக்கு (கிரந்திக்கு) மருத்துவம்:

இளநீர்க்காயைச் சீவி வெந்நீரிலிட்டு அவித்தெடுத்து, கண்திறந்து அதன் நீரை மட்சட்டியிலிட்டு சிறிதளவு தேற்றான்கொட்டை, சீரகம், கோரைக்கிழங்கு சரி எடை அரைத்துக் கலக்கித் தேன் கூட்டி உண்ணப் போம்.

அம்மையில் உண்டாகும் கைகால், சந்துகளின் வீக்கம், முடக்கு இவைகட்கு:—

(1) பழங்கூரை வைக்கோல், வேப்பிலை இவ்விரண்டையும் அவித்து ஆறு நாள் ஒற்றடமிட்டுக் கட்டத் தீரும்.

(2) வியர்வை பிடித்தல்: வட்டத்துத்தி இலையை அவித்து ஆவி பிடிக்கப் பதிமூன்று நாட்களில் தீரும்.

(3) உள்மருந்து: பருத்தி, அத்தி இவைகளின் பிஞ்சு, சாதிக்காய், சீரகம், இவைகள் ஓர் எடை கொண்டு மோரில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

இச்சி இலையை அரைத்து நிசிநீருடன் கலந்து பிழிந்த சாற்றைக் கொடுக்கலாம், வேறு: சுக்கு, வேப்பீர்க்கு, விலாமிச்சம்வேர், கோரைக் கிழங்கு ஓர் எடையாகக்கொண்டு முறைப்படி குடிநீராக்கித் தக்க அளவில் கொடுக்கப்போம்.

கழிச்சலடங்க : நோயில் மிகுதியாகக் கழிச்சல் உண்டானால் (1) சீந்தில் கோரைக் கிழங்கு, சுக்கு இவைகளைத் தோல் சீவி, ஓர் எடையாகக் கொண்டு குடி நீராக்கி நாள் ஒன்றுக்கு மூன்று முறையாகக் கொடுத்துவரின் கழிச்சல் போம்.

வெங்காயத்தைப் பசு நெய்யில் வேகவைத்துக் கொடுக்க, கழிச்சலோடு கூடிய கடுப்புத் தீரும்.

பொன்முசுட்டை, கிராம்பு, வேப்பீர்க்கு ஓர் எடையாகக்கொண்டு, குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

ஆலம் வித்து, அத்தி வித்து, அரசம், ஒதி, இச்சி, துத்தி, காயா இவைகளின் சருகு, சுக்கு இவைகளை ஓர் எடையாகக்கொண்டு, முறைப்படி குடிநீராக்கித் தக்க அளவில் கொடுக்கவும். கடுப்போடு குருதி வெளிப்படின் நாவல் பட்டையைச் சிதைத்துப் பசுப் பாலிலிட்டுப் பிசைந்து பிழிந்த பாலை ¼ படி அளவாகக் கொடுத்துவரின் கீழ் வாய்க் கடுப்பும் குருதியோடிழிதலும் போம்.

அத்திவேர்ப்பட்டை, வெங்காயம், சீரகம் இவைகளை ஒரேயெடையாகவெடுத்து வெள்ளாட்டுப் பால் விட்டு அரைத்து அப்பாலிலேயே கரைத்துக் கொடுக்கலாம்.

வெங்காயச் சாற்றில் சிறிது நெய் கூட்டிக் கலக்கிக் கொடுக்கினும் கழிச்சல் போம்.

நீர்வேட்கைக்கு: கலைக்கொம்பை நீரில் ஊறவைத்துக் கழுவி உலர்த்தி இராவின பொடி பல மிரண்டு, வெந்நீரில் ஊறப்போட்டு அந்நீரைக் குடிக்க மூன்று நாளில் நீர்வேட்கை தீரும்.

தொண்டை கம்மலுக்கு: கோரோசனத்தைக் கர்ப்பூரவல்லி இலைச் சாற்றில் இழைத்துக்கொடுக்கப் போம் அல்லது, மாதுளைப் பூச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தேன் ஓர் அளவாகச் சேர்த்துத் தொண்டையில் பூசப் போம்.

இந்நோயில் காணும் சுரத்திற்கு எலுமிச்சம் வேர்ப்பட்டை, சீந்தில் ஏலம், பற்பாடகம், சந்தனம்,கோரைக் கிழங்கு வகைக்கு அரைப்பலம் கொண்டு முறைப்படி குடிநீராக்கிக் காலை, மாலை கொள்ள சுரம் தணியும்.

வேறு: மகரப்பூ வராகன் எடை ஐந்து கொண்டு குடிநீராக்கி அதில் கோரோசனை வராகன் $\frac{1}{4}$ உரைத்துக் கொடுக்க, சுரம் தணியும்

கண்ணில் உண்டாகும் நோய்களுக்கு: (1) சீரகத்தை பொட்டணங்கட்டி தாய்ப்பாலில் துவைத்து ஒற்றடமிட, விழியில் உண்டாகும் வலி போம்.

(2) சுடு சோற்றில் வெண்ணெய் கூட்டி நிசிநீரில் துவைத்து விழிக்கு ஒற்றடமிடக் கண்ணீர் வடிந்துபோம்.

(3) பனைக் குருத்தை நறுக்கி, கண்களிற் பிழியக் கண்பூ நீங்கும்.

(4) நெல்லி இலையைக் குடி நீராக்கிக் கண்ணிலிட, கண்ணில் உண்டான அம்மைக் கொப்புளம் தீரும்.

(5) கம்பைக் கூழாக்கி நீரிட்டுக் கரைத்துத் தெளிந்த நீரைவிட கண் கொப்புளம் போம். உள்ளுக்கும் இதனையே கொடுக்கவும்.

(6) வெங்காயப் பூவை வாயிலிட்டு மென்று குருவிழுந்த கண்ணில் ஊத்தக் குரு வற்றும்.

(7) முருங்கைப்பூ, நரிஞ்சில் , நந்தியாவட்டம்பூ, சீரகம் இவைகளைக்கூட்டிக் கசக்கிக் கண்ணிலிடப்போம்.

அம்மைப்புண்கள் எளிதில் உலரவும் வடு இல்லாது உலருதற்கான மருத்துவம்: புதிய புளியங்கொட்டைகளை இளவறுப்பாக வறுத்து எடுத்துஅதன் தோலை இடித்துப் பொடித்துத் தேங்காய்த்திருகலைக் கூட்டிப் பிசைந்து பிழிந்தால் எண்ணெய் கசியும் அவ்வெண்ணெயை கொண்டு கொப்புளங்களுக்குப் பூச எளிதில் உலரும், தோல் உதிர்ந்த பின்னும் பூசிவர அம்மைக் கொப்புளவடுக்களும் தெரியாமற்போம்.

வாயிலும் சிறுநீரிலும் குறுதி இழியுமாபின் : ஐந்து மண் புழுவை கொண்டுவந்து கழுவி அதில் நன்னாரி வேரின் தோல் நரம்பு நீக்கியது வராகன்இரண்டும், மான்கொம்பு இழைத்த சாந்து இரண்டு வராகனும் சேர்த்து மான் கொம்புப் பொடி ஊறின நீர்விட்டு அரைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

தலை முழுக்குக்கு: வேப்பிலை ஒரு பலம், மஞ்சள் கால்பலம் அறுகன் வேர் $\frac{1}{8}$ பலம், சேர்த்து மோர்விட்டு அரைத்து உடல் முழுமையும் பூசி ஊறவைத்துக் காய்த்து ஆறிய நீரில் ஒன்றை விட்டு ஒரு நாளாக மூன்று முறை முழுகப் பக்குவிழுந்து புண்கள் எளிதில் உலரும்.

மறுமுள்பாய்தல்: என்பது பெரிய அம்மையில் சுரம் காய்ந்து விட்டபின்உண்டாகும் கொப்புளங்கள், தோன்றுவதும் அடங்குவதுமாக இருக்கும். சுரம் விட்ட ஒன்பது அல்லது பத்து தினத்திற்குள் அக் கொப்புளங்கள் யாவும் வாடி உலர்ந்து தோல் உரியும். சிலவேளையில் தலைமுழுக்காட்டலாம் என நினைத்தபோது வேர்க்குருவைப்போல் சிறு குருக்கள் காணும் அதைக்கவனியாது தலைமுழுகின், அம்மைக் கொப்பு ளங்களைப் போலவே பிறந்து அவ்வடிவிலேயே கிளைத்து முள்போல் கூறாகக் காணப்படுவது மறுமுள் எனப்படும். இம் மறுமுள் கண்ட தினமே சுரம் தொடரும்.

இதற்கான மருத்துவம்: சாதிக்காய், திப்பிலிக்கட்டை, கிராம்பு, சீரகம் சரி எடையாகக் கொண்டு முறைபோல் குடிநீராக்கி அதன் அளவு வெங்காயச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு கூட்டி ஒரு புதுப்பானையில் ஊற்றி அடுப்பிலிட்டுக் காய்த்து முறித்து வடித்து ஆழாக்களவு கொண்டு சிறிது தேன் கூட்டிக் காலை மாலையாகக் கொடுத்து வர, சுரம் தணியும்; மறுமுள்ளும் போம். புண் உலரும். வேண்டுமாயின், கற்பூரத்தை வட்டத்துத்தி இலைச்சாற்றிலிட்டிழைத்துச் சிற்றாமணக்கு நெய் சிறிது சேர்த்துக் குழைத்து மறுமுள்மேல் பூசத் தீரும்.

இந்நோய் பொதுவாக எல்லாப் பெரிய அம்மை நோய்களிலும் வருவதில்லை.

அம்மை கண்டவர்கட்கு ஆறு திங்கள் வரை உடலில் வன்மை யிராது.இவ்வாறு திங்களில் நோய்வரின் கடுங் கார மருந்துகளை வழங் காமல் எளிய மருந்துகளையே வழங்கல் வேண்டும்.

தடை மருத்துவம் : ஆள்காட்டிக் குருவி முட்டையை உடைதுத் ஒரு சட்டியிலிட்டு, சம்பா புழுங்கல் அரிசியை, முட்டைக்கரு சுவறிப்போமட் டும் போட்டு அடுப்பேற்றிக் கருகாமல் பொரிஅரிசியாக வறுத்து,காய்ச்சல் கண்டவுடன் ஒருபிடி தின்னக் கொப்புளங்கள் வாடிவிடும். இதனை ஒருமுறை கொண்டால் போதும்.

புலிக் கொழுப்பை அரைமுதல் ஒரு குன்றி அளவு பேயம் பழத்தில் பொதிந்து கொடுக்க அம்மை மிகாது.

பயிற்றம்மையின் மருத்துவம் : இந் நோயில் மிகுதியும் கடினமான துன்பங்கள் ஏற்படுதலில்லை. ஆகையால், மருந்து ஒன்றுமில்லாமலே போம். சுரம் முதலியன கடினமாய்த் தோன்றின், பெரியம்மைக்குக் கூறிய குடிநீர் கொடுத்தால்போதும்.

தட்டையம்மை: இந்நோய் ஐயமும் அழலுங்கூடி வருதலாகலின் ஐய (கப)க் குற்றம் மிகுதியால், சுரம், இருமல், தொண்டைக்கட்டல் முதலியனவும், அழல் குற்றம் மிகுதியால், கண் சிவத்தல், வாய் புண்ணாதல், குடல் புண்ணாதல், கழிச்சல், குருதி கழிச்சல் முதலியனவும் உண்டாம். மிகுந்த குற்றத்தின் அளவாய் மருந்தை அளவிடல் வேண்டும். முதல் முதலில் மிகுதியும் காரமான மருந்துகளைக் கொடுத்தல் கூடாது. சில முறைகளை இங்குக் கூறுவாம்.

துளசி, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளின் இலைகளை ஒவ்வொரு பிடியாய்க்கொண்டு, சிறிது தேன் கூட்டி இளவறுப்பாய் வறுத்து ஒரு படி நீர் விட்டு, அதில் கண்டுபராங்கி, சிற்றரத்தை, தாளிசபத்திரி, சாதிப்பத்திரி, அதி மதுரம் வகைக்கு இரண்டு வராகனெடை பொடித்துக் கொட்டி எட்டில் ஒன்றாய்க் காய்த்து வடித்து, காலை மாலையாகக் கொள்ளவும். இதனல் ஐயத்தால் வரும் குறிகுணங்கள் போம்.

வேப்பீர்க்கு, கறிவேப்பீர்க்கு, மாந்துளிர், எலுமிச்சம் வேர் வகைக்கு பலம் வெள்ளைப்பூண்டுத்திரி நான்கு இவைகளை ஒரு படி நீர்விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்த்து, இருவேளையும் குடிக்க, தொண்டைப்புண், நாப்புண், பேதி இவைபோம்.

கடுக்காய்ப்பூ, வாழைப்பூக் குருத்து, வெள்ளுள்ளி, நுணா இலை, "டுதலை இலை, கோவை இலை, மாந்துளிர் முதலியவற்றை இடித்துப் பிழிந்த சாற்றை, ஓர் உச்சிக்கரண்டி வீதம் காலை மாலைகளில் கொடுக்க, முன் சொன்ன நோய்கள்போம்.

செய்மருந்து வகையில், இலிங்கத்துவர், பவழபற்பம், பூங்காவிச் செந்தூரம், கட்டுவாதிமாத்திரை, ஊழிமெழுகு இவைகளுள் தக்கதைக் கொள்ளவும்.

உணவில் : பேயம் பழம் நாள் ஒன்றுக்கு மூன்று நான்கு பழங்கள் கொடுத்து, கஞ்சி வகைகள் கொடுத்தல் நல்லது.

பூட்டுத்தாள் அம்மை. —சுரம் உற்ற காலத்து, பித்த சுரத்திற்கான மாத்திரைகள், குடிநீர்களுடன் கொடுத்தல் நன்று. தாள்பூட்டு வீங்கிய போது, நாட்டு வழக்கின்படி வேப்பிலையுடன் சிறிது மஞ்சளும் கூட்டி அரைத்து வீக்கத்திற்குப் பற்றிடக் குணமாம். இந்நோயில் வீக்கத்திற்கு கழுத்தில் பொன்னால் செய்த சங்கிலியைப் போடுவதால், சங்கிலியின் பருமனோடு கனமும் அவ்வீக்கத்தில் தாக்கக் குணமடையும். அதனால் தான் இந்நோய் பொன்னுக்கு வீங்கி என்னும் பெயரைப் பெற்றது போலும். ஈதன்றித் தங்கம் கபத்தை நீக்குமாதலால் தங்கத்தாலான அணியை அணிவதைக்காட்டிலும், அதனாலான பற்பசெந்தூரம், சிறந்த குணத்தை இந்நோயில் வழங்கக் கொடுக்கவும்.

சிலவேளைகளில், தாள் வீக்கம் வாடாமல், கீழ்கோர்த்துச் சுரத்தைப் பிறப்பித்துப் பலதுன்பங்கட்கும் உள்ளாக்கும்; அதற்கு அறுவை வம் நன்று.

விரையின் மேல்பாகம், கொங்கை இவைகளின் வீக்கத்திற்கு, சுக்கு, கழற்சிப் பருப்பு இரண்டையும் ஓர் நிறை கொண்டு, முட்டை வெண் கருவை விட்டு அரைத்துப்பற்றிடப்போம். அல்லது வேப்பிலையும் மஞ்சளும் மைபோல அரைத்து வீங்கிய இடத்திற்குப் பற்றிடலாம்.

## சுரக்கோள்

### 1. அசுவனி, 1. பரணி.

''வேமப்பா அசுபதிநாள் சுரந்தான் வந்தால்
விட்டுப்போ மெட்டாநாள் பரணி யானால்
போமப்பா வந்தசுரம் கொல்லா தாகில்
பொறுக்குமஃதொன்பதிலே தீருந் தானே.'

(பொருள்) அசுவினி நாளில் சுரம்வந்தால், எட்டாவது நாளில் தீரும். பரணி நாளில் சுரம் வந்தால் கொன்றுவிடும். அவ்வாறு கொல்லாவிடில் ஒன்பது நாளில் தீரும்.

## 3. கார்த்திகை ; 4. ரோகிணி, 5. மிருகசீரிடம்.

''கேளப்பா கார்த்திகையில் சுரந்தான் வந்தால்
கெட்டியா யெட்டாநாள் விடாமற் போனால்
நாளப்பா மூவேழு தினத்திற் கொல்லும்
நயமான ரோகிணிநாள் சுரத்தைச் சொல்வோம்
நீளப்பா வெட்டாநா ளிருப்பத் தெட்டில்
நின்றுபோ மிருகசீ ரிடத்தைச் சொல்வோம்
ஆளப்பா பத்தாநாள் விட்டு வாங்கும்
ஆச்சரிய வாதிரைநாள் சுரத்தைச் சொல்லே.'

(பொருள்) கார்த்திகை நாளில் சுரம் வந்தால், எட்டாவது நாளில் விட்டுவிடவேண்டும். அவ்வாறு விடாவிட்டால், இருபத்தொருநாளில் கொல்லும். ரோகணிநாளில் சுரம் வந்தால், எட்டாவது நாளேனும், இருபத்தெட்டாவது நாளேனும் விட்டுப்போகும். மிருகசீரிடநாளில் சுரம் வந்தால், பத்தாவது நாளில் விட்டுப்போகும். இனி திருவாதிரை நாளைக்குறித்துச் சொல்வோம்.

## 6. திருவாதிரை, 7. புனர்பூசம், 8. பூசம்

'' சொல்லடா வஞ்சாநாள் கொல்லுங் கொல்லும்
துஞ்சாதேல் திங்களோ ரேழில் மாய்க்கும்
செல்லடா புனர்வசுநாள் வந்த ரூட்சை
தீர்ந்துபோம் பதினோராம் நாளில் தானும்
புல்லடா பூசநாள் வந்த ரூட்சை
போகுமே நாளிரண்டில் போகா தாகில்,
வெல்லடா எட்டாம்நாள் விட்டுப் போகும்
வீறான ஆயிலிய சுரத்தான் பாரே.''

(பொருள்) அஃது ஐந்தாவது நாளில் கொன்றுவிடும். அவ்வாறு கொல்லாவிட்டால், ஏழு திங்களில் கொல்லும். புனர்பூசநாளில் சுரம் வந்தால், பதினோராவது நாளில் விட்டுவிடும். பூசநாளில் சுரம் வந்தால், இரண்டு நாளில் நின்றுவிடும். அவ்வாறு விடாவிட்டால், எட்டாவது நாளில் விலகிவிடும். இனி ஆயிலியத்தில் வரும் சுரத்தை நோக்குவோம்.

## 9. ஆயிலியம், 10. மகம், 11. பூரம், 12. உத்திரம்.

“ பாரப்பா வேழாநாள் உயிரை யுண்ணும்
பாடுகிறேன் மகத்துநாள் சுரத்தை மைந்தா
நேரப்பா பத்தாநாள் நிவர்த்தி யாகும்
நீங்காதேல் பதின்மூன்றில் நின்று போகும்
சீரப்பா பூரநாள் வந்த ரூட்சை
தீர்ந்துபோம் பத்தாநாள் பதினோர் நாளில்
வேரப்பா உத்திரநாள் வந்த ரூட்சை
வென்றுகொல்லும் பதினோராம் நாளில் தானே.”

(பொருள்) ஆயிலியநாளில் சுரம்வந்தால், ஏழாவதுநாள் கொன்று விடும். மகநாளில் சுரம்வந்தால், பத்தாவது நாள் தீரும். அவ்வாறு தீராவிட்டால் பதின்மூன்றாவது நாளில் நின்றுவிடும். பூரநாளில் சுரம்வந்தால், பத்து அல்லது பதினோராம் நாளில் தீர்ந்துபோகும். உத்திரநாளில் சுரம்வந்தால், பதினோராம் நாளில் கொல்லும்.

## 13. அத்தம், 14. சித்திரை, 15. சுவாதி.

“ தானென்ற பதினோன்றிற் கொல்லா தாகில்
தாரமாய் முத்திங்கள் செல்லும் செல்லும்
தானென்ற அத்தநாள் தோன்றும் ரூட்சை
சாந்தமா மெட்டாநாள் பத்தா நாளில்
தானென்ற சித்திரைநாள் வந்த ரூட்சை
சாந்தமா மூன்றாநாள் தானே கொல்லும்
தானென்று சோ I நாள் தொடுத்த ரூட்சை
கண்ணுமடா வல்லவென்றால் விட்டுப்போமே.”

(பொருள்) அவ்வாறு பதினோராவது நாளில் கொல்லாவிட்டால் மூன்று திங்களில் தீர்ந்துவிடும். அந்த நாளில் சுரம் வந்தால், எட்டுநாளிலேனும், த்துநாளிலேனும் சாந்தமாய்விடும், சித்திரை நாளில் சுரம்வந்தால், மூன்றாவதுநாளில் சிறிது சாந்தமானாற்போற் காட்டி, அன்றேகொன்றுவிடும். சுவாதி நாளில் சுரம்வந்தால் கொல்லும். இல்லையானால் விட்டுவிடும்.

## 16. விசாகம், 17. அனுடம், 18. கேட்டை, 19. மூலம்.

'' போகுமப்பா விசாகநாள் வந்த ரூட்சை
பொன்றுவிக்கு மெட்டாநாள் பொன்றா ராகில்
வேகுமப்பா திங்களொன்றில் மடிந்து போவார்
மேலான வனுஷநாள் சுரத்தைக் கேளாய்,
தாகுமப்பா அஞ்சாநாள் சாவார் சாவார்
சாற்றுகிறேன் கேட்டைநாள் சுரத்தை மைந்தா,
ஓமப்பர ஒன்பதிலே யுயிரை யுண்ணும்
உத்தமனே மூலநாள் சுரத்தைக் காணே.''

(பொருள்) விசாகநாளில் சுரம் வந்தால், எட்டாவது நாளில் சாவார். இன்றேல் ஒரு திங்களில் இறந்துவிடுவார். அனுட நாளில் சுரம் வந்தால், அஞ்சாவதுநாளில் கட்டாயம் இறந்து விடுவார். கேட்டைநாளில் சுரம் வந்தால், ஒன்பதாவது நாளில் இறந்து போவார். மூலநாளில்வரும் சுரத்தைப் பற்றி நோக்கு வாயாக.

## மூலத்தொடர்ச்சி. 20. பூராடம், 21. உத்திராடம்.

'' காணப்பா நவதினத்தில் விடாமற் போனால்
கண்டுகொள்வை பதினோரா நாளில் தீரும்
பூணப்பா பூராட நாளின் ரூட்சை
பொறுத்துப்போ நாளெட்டில் மாச மொன்றில்
பேணப்பா உத்திராட நாளின் ரூட்சை
பேதகமாம் பன்னிரண்டு தினந்தான் செல்லில்
வீணப்பா விடாதாகில் மாச மேழில்
விட்டுப்போ மவிட்டநாள் சுரத்தைக் கேளே.''

(பொருள்) மூலநாளில் சுரம் வந்தால், ஒன்பது நாளில் விட்டு விட வேண்டும். அப்படி விடாவிட்டால், பதினோராவது நாளில தீரும். பூராட நாளில் சுரம்வந்தால் நாளெட்டிலேனும் ஒரு மாசத்திலேனும் நீங்கும். உத்திராட நாளில் சுரம்வந்தால், பன்னி ரண்டு நாளில் தீரும். அவ்வாறு விடாவிட்டால் ஏழு மாசத்தில் நீங்கும். அவிட்டநாளில் தோன்றும் சுரத்தைப் பற்றிக் கேட்பாயாக

## 22, திருவோணம் இல்லை, 23. அவீட்டம், 25. பூரட்டாதி. 26. உத்திரட்டாதி.

" கேளப்பா நாளெட்டில் விட்டு வாங்கு
கெட்டியாய் விடவில்லை யிறக்கு மானால்.
நாளப்பா சதயநா ள்சுரந்தான் தோன்றில்
சளிபிடிக்கும் பத்தாநாள் தவிர்
தேளப்பா பூரட்டா தியில்காண் சுரமும்
செப்புகிறேன் நாளாறிற் கொல்லுங் கொல்லும்
நாளப்பா உத்திரட்டா தியில்காண் ரூட்சை
நாளெட்டி லுயிர்பறித்து நண்ணுந் தானே."

(பொருள்) : அவிட்டத்தில் தோன்றும், சுரம், எட்டுநாளில் விட்டுவிடும். அப்படி விடாவிட்டால், இறப்புண்டாகும். சதயநாளில் சுரம்வந்தால், பத்துநாள் கழிந்தால் சாந்தமாகும். பூரட்டாதி நாளில் சுரம்வந்தால் ஆறுநாளில் கொல்லும். உத்திரட்டாதி நாளில் சுரம்வந்தால் எட்டுநாளில் மரணமுண்டாம்.

## 27. ரேவதி, 1. திங்கள் திருவாதிரை

" தானென்ற எட்டாநாள் கொல்லா தாயின்
சாதகமாய்ப் பத்தாநாள் சாந்த மாகும்
மானென்ற ரேவதிநாள் வந்த ரூட்சை
மாள்விக்கு மெட்டாநாள் மாளா தாயின்
தேனென்ற பத்தாநாள் தெளிந்து போகும்
செப்புகிறேன் சுரரூட்சை சேதியின்னம்
ஊனென்ற ஆதிரைநாள் சோம வாரம்
உத்தமனே சுரந்தோன்றி லுயிர்போம் பாரே."

(பொருள்) அவ்வாறு அச்சுரம் எட்டாவது நாளில் கொல்லாமற் போனால், பத்தாவது நாளில் தீர்ந்துவிடும். ரேவதிநாளில் சுரம்வந்தால், எட்டாவது நாளிற்கொல்லும். அவ்வாறு கொல்லா விட்டால் பத்தாவது நாளில் தெளிந்துபோடும். திருவாதிரை நட்சத் திரமும் திங்கட்கிழமையும் சேர்ந்த நாளில் சுரம்வந்தால் இறந்து விடுவான்.

2. ஞாயிறு திருவோணம், 3. சனி கார்த்திகை, 4. வெள்ளி விசாகம், 5. புதன் ரேவதி.

" பாரப்பா திருவோணம் அருக்கன் வாரம்
பகைநாளில் சுரம்வந்தால் மரணமாகும்
தீரப்பா சனிவாரம் கார்த்தி கைநாள்
சிறந்தக்கால் கொன்றுவிடுந் தீர்க்க மாக
வேரப்பா விசாகநாள் வெள்ளி வாரம்
விடாதுசுர முயிர்பறிக்குந் திண்ணந் திண்ணம்
நேரப்பா ரேவதிநாள் புதவா ரத்தில்
நேர்ந்தசுரங் கொன்றுவிடும் நிசமாய்க் காணே."

(பொருள்) திருவோணநாளும் ஞாயிற்றுக்கிழமையும் சேர்ந்த நாளில் சுரம் வந்தால், மரணமுண்டாகும். கிருத்திகை நாளும் சனிக்கிழமையும் சேர்ந்தநாளில் சுரம்வந்தால், திண்ணமாய்க் கொன்றுவிடும். விசாகநாளும் வெள்ளிக்கிழமையும் சேர்ந்தநாளில் சுரம்வந்தால் மரணமுண்டாகும். ரேவதிநாளும் புதன்கிழமையும் சேர்ந்தநாளில் சுரம் வந்தால், உண்மையாய்க் கொன்றுவிடும்.

6. செவ்வாய் சித்திரை.

" காணப்பா செவ்வாயுஞ் சித்திரைநாள் சேரில்
கடிமையப்பா மறலியூர் காண்பா ரையா."

(பொருள்) சித்திரை நாளும் செவ்வாய்கிழமையுஞ் சேர்ந்த நாளில் சுரம் வந்தால், அச்சுரம் நீங்காது. அந்நோயாளி இறந்து விடுவான் என்று உணரவேண்டும்.

## 2. சுரநூலில் சொல்லப்பட்டவை-அறுசீர் விருத்தம்.

அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி.

" அசுபதியைந்தி ரண்டோ டையெட்டு நாளிற் றீரும்
பசுபதிபரணி பன்னேழ் பத்திரண் டதனிற் றீரும்
விசுபதி கார்திகைக்கு மிளிர்பன்னே ழிருப தாகும்
கெசபதி ரோகணிக்குக் கிழமையை ழெட்டா மென்னே."

(பொருள்) : அசுவினியில் சுரம் வந்தால், பத்து நாள் அல்லது நாற்பது நாட்களில் தீரும். பரணியில் சுரம் வந்தால், பதினேழு நாள் அல்லது இருபது நாட்களில் தீரும். கார்த்திகையில் சுரம் வந்தால், பதினேழு நாள் அல்லது இருபது நாட்களில் தீரும். உரோகிணியில் சுரம் வந்தால் ஏழு நாள் அல்லது எட்டு நாளில் தீரும்.

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம்.

"மீறிய மான்றலைக்கு மிடியெட்டுப் பத்திற் றீறும்
சீறுமா திரையைந் தாநாள் தீராதால் மரண மென்க
பூறிய புனர்தம் நான்கு புகலுமைந் தெட்டிற் றீரும்
தேறிய பூச மைந்தில் செயலெட்டிற் றீரு மென்னே."

(பொருள்) மிருகசீரிடத்தில் சுரம் வந்தால், எட்டு நாள் அல்லது பத்து நாட்களில் தீரும். திருவாதிரையில் சுரம் வந்தால், ஐந்து நாட்களில் தீரவேண்டும், அவ்வாறு தீராவிட்டால் மரணமுண்டாகும்; புனர்பூசத்தில் சுரம் வந்தால், நான்கு நாள் அல்லது ஐந்து நாள் அல்லது எட்டுநாட்களில் தீரும். பூசத்தில் சுரம் வந்தால், ஐந்து அல்லது எட்டு நாட்களில் தீரும்.

ஆயிலியம், மகம், பூரம், உத்திரம்.

"அருளுமா யிலிய மைரண்டருள்பஃ திரண்டிற் றீரும்
அருள்மக மைந்தி ரண்டா டாறிரண்டிருப தாகும்
இருள்பூர மிரண்டு பன்னோன் றிவையினிற் றீரா திண்ணம்
உருளுத்ர மாறி லாண்டி லொழிவிலா மரண மென்னே."

(பொருள்) : ஆயிலியத்தில் சுரம் வந்தால், பத்து நாள் அல்லது இருபது நாட்களில் தீரும். மகத்தில் சுரம் வந்தால். பத்து நாள் அல்லது பன்னிரண்டு நாள் அல்லது இருபது நாட்களில் தீரும். பூரத்தில் சுரம்வந்தால், இரண்டு நாள் பதினோரு நாள் என்னும் இந் நாட்களில் தீர்ந்து விடவேண்டும். அவ்வாறு தீராவிட்டால் மரண முண்டாம். உத்திரத்தில் சுரம் வந்தால், ஆறு மாசத்தில் தீரவேண்டும். அவ்வாறு தீராவிட்டால், ஆறு திங்களிலேயும் ஒரு ஆண்டிலேனும் மரண முண்டாகும்.

அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம்.

அத்தத்தில் சுரமே பத்து நாளிரு பத்திற் றீரும்
சித்திரையாளு நாளிற் றீராதீ ராறிற் றீரும்
சுத்தமாஞ் சுவாதி நாளிற் சுரமொன்பான் பதினா றாகும்.
நத்திய விசாகத் திற்றான் நாளேழில் மரணங் கூறே.

(பொருள்) : அத்தத்தில் சுரம் வந்தால், பத்து நாள் அல்லது இருபது நாட்களில் தீரும், சித்திரையிற் சுரம் வந்தால் ஆறாவது நாளில் தீராது பன்னிரண்டு நாட்களில் தீரும். சுவாதியில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களிலாவது, பதினாறு நாட்களிலாவது தீரும். விசாகத்தில் சுரம் வந்தால், ஏழாவது நாளில் மரண முண்டாகும்.

அனுடம், கேட்டை, மூலம், பூராடம்.

"அருள்பெறு மநுட மூன்று மறியெட்டு நாளிற் றீரும்
இருள்கேட்டை யெழிற் றீரா தியல்பிலா மரணமாகும்
பொருள்மூல மைந்திரண்டு புகழிலாப் பத்தி ரண்டும்
திருவளர் பூராடத்தில் திகழிரண்டு பன்னா றாமே."

(பொருள்) : அநுடத்தில் சுரம் வந்தால், மூன்று நாள் அல்லது எட்டு நாட்களில் தீரும். கேட்டையில் சுரம் வந்தால், ஏழாவது நாளில் நீங்கவேண்டும். இன்றேல் மரணமுண்டாகும். மூலத்தில் சுரம் வந்தால், பத்து நாட்களிலாவது, இருபது நாட்களிலாவது தீரும். பூராடத்தில் சுரம் வந்தால், இரண்டாவது நாள் அல்லது பதினாறவது நாளில் தீரும்.

உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம்.

"ஒங்கிய உத்தி ராடம் உயரேழு பத்தி ரண்டு
தீங்கிலா ஓண மேழும் பன்னொன்று மூன்று திங்கள்
ஆங்கரு ளவிட்ட மெட்டும் அருளில்லா மரண மாகும்
தாங்கிய சதய நான்கு தயிரிய மிருப தாமே."

(பொருள்) உத்திராடத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்கள் அல்லது பன்னிரண்டு நாட்களில் தீரும். திருவோணத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்கள் அல்லது பதினோரு நாட்கள் அல்லது மூன்று திங்களில் நீங்கும். அவிட்டத்தில் சுரம் வந்தால், எட்டாவது நாளில் மரண முண்டாகும். சதயத்தில் சுரம் வந்தால், நான்கு நாட்கள் அல்லது இருபது நாட்களில் சுகமுண்டாகும்.

பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி.

" பொருந்திய பூரட்டாதி புகல்பத்து மிருப தாகும்.
அருந்திய வுத்ரட்டாதி அருந்திடிற் யெட்டிற் றீரும்
திருந்திய வெட்டிற் றீராச் செயலிலை மரண மாகும்
வருந்திரே வதிபத் தாநாள் வாழ்வில்லை மரணந் தானே."

(பொருள்) பூரட்டாதியில் சுரம் வந்தால், பத்து அல்லது இருபது நாட்களில் தீரும். உத்திரட்டாதியில் சுரம் வந்தால், எட்டு நாட்களில் தீரும்; அவ்வாறு தீராவிட்டால், மரண முண்டாகும். இரேவதியில் சுரம் வந்தால், பத்தாவது நாளில் மரண முண்டாகும்.

3. புலிப்பாணி முனிவர் 500 —எண்சீர் விருத்தம்.

அசுவினியில் நான்கு கால்கள், பரணியில் இரண்டு கால்கள்.

" தானென்ற அசுபதிநாள் முதற்கா லப்பா
தயவாக ஒன்பது நாள் சுரமே தீரும்
தேனென்ற இரண்டாங்கால் கொல்லு மப்பா
திறமான பத்தாநாள் மரண மாவான்
கோனென்ற மூன்றாங்கால் பதினைந் தாகும்.
குணமாக நான்காங்கால் மரணஞ் செய்யும்
வானென்ற பரணிதனில் முதற்கால் மூன்று
வளமான விரண்டாங்கால் ஏழா மென்னே."

(பொருள்) : அசுவினி இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால் பத்து நாட்களில் இறப்பான். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால் கொல்லும்.

பரணி :இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், மூன்று நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்களில் தீரும்.

பரணியில் மூன்று, நான்கு கால்கள், கார்த்திகையில்
நான்கு கால்கள், ரோகிணியில் முதற்கால்.

'- என்னவே மூன்றாங்கால் பதினைந் தாகும்
எளிதில்லா நாலாங்கால் பதினைந் தாகும்
நன்னவே கார்த்திகையில் முதற் காலானால்
நலமாக வொன்பதில் தீரும் பாராய்

பன்னவே யிரண்டாங்கால் பத்தே யாகும்
பண்பான மூன்றாங்கால் பதினைந் தாகும்
அன்னவே நாலாங்கால் நாற்பத் தெட்டாம்
அடைவான ரோகணியும் முதற்கால் பத்தே.''

(பொருள்) பரணி : இதன் மூன்றாங்காலிலும் நான்காம் காலிலும் சுரம் வந்தால், பதினைந்து நாட்களில் தீரும்.

கார்த்திகை :இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பத்து நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினைந்து நாட்களில் தீரும். நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், நாற்பத்தெட்டு நாட்களில் தீரும்.

உரோகணி : இதில் முதற் பாதத்தில் சுரம் வந்தால் பத்து நாட்களில் தீரும்.

'' பத்தான இரண்டாங்கால் பதினெட்டாகும்
பண்பான மூன்றாங்கால் எண்ணாங் கப்பா
பெத்தான நாலாங்கால் எண்பத் திரண்டு
பேதைமிலை தீர்ந்துவிடு மின்னங் கேளாய்
முத்தான மான் தலையின் முதற் காலப்பா
முப்பதுநா ளானபின்பு தீரும் பாராய்
சித்தான இரண்டாங்கா லிருபத் தெட்டு
திறமான மூன்றாங்கால் பதினைந் தாமே.''

(பொருள்) உரோகணி : இதன் இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால்,பதினெட்டு நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பத்திரண்டு நாட்களில் தீரும். நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்திரண்டு நாட்களில் தீரும்.

மிருகசீரிடம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், முப்பது நாட்களின் பின்பு தீரும். இரண்டாவது பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தெட்டு நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம்வந்தால் பதினைந்து நாட்களில் தீரும்.

" ஆமேதான் நாலாங்கால் முப்பந் தைந்தாம்
அடைவான ஆதிரைநாள் முதற்கா லொன்பான்
தாமேதா னிரண்டாங்கால் மரண மாகும்
தயவாக மூன்றாங்கால் நாள்தான் பத்து
வாமேதா னாலாங்கா லிருபத் தைந்து
வளமான புனர்பூசம் நாள்தா னேழு
போமேதா னிரண்டாங்கால் நாள்தான் பத்து
பொங்கமுடன் மூன்றாங்கால் பதினெட்டாமே."

(பொருள்) மிருகசீரிடம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பத்தைந்து நாட்களில் தீரும்.

திருவாதிரை : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், மரணமுண்டாகும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், பத்து நாட்களில் தீரும். நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தைந்து நாட்களில் தீரும்.

புனர்பூசம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால், பத்து நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினெட்டு நாட்களில் தீரும்.

" ஆமப்பா நாலாங்கால் மரணஞ் செய்யும்
அடைவான பூசத்தின் முதற் காலேழு
சேமப்பா விரண்டாங்கால் பன்னிரண் டாகும்
சுகமான மூன்றாங்கா லொன்ப தாகும்
காமப்பா நாலாங்கா லிருபத் தேழு
கனிவான ஆயிலிய முதற்கா லொன்பான
வாமப்பா விரண்டாங்கா லிருப தாகும்.
வளமான மூன்றாங்கால் தொண்ணூ றாமே."

(பொருள்) புனர்பூசம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் மரணமாகும்.

பூசம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பன்னிரண்டு நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களில் தீரும். நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தேழு நாட்களில் தீரும்.

ஆயிலியம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், இருபது நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், தொண்ணூறு நாட்களில் தீரும்.

'' தானான நாலாங்கால் முப்பத் தொன்பான்
தயவான மகமுதற்கால் மரணஞ் செய்யும்
வானான விரண்டாங்கால் முப்ப தாகும்
வளமான மூன்றாங்கா லெண்பத் தைந்து
கூறான நாலாங்கால் நாள்தானைந்து
குணபூர முதற்கால்தான் சாவ தாகும்
தேனான விரண்டாங்கா லிருபத் தைந்தில்
சிறப்பான மூன்றாங்கா லிருபத் தாறே.''

(பொருள்) ஆயிலியம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் முப்பத்தொன்பது நாட்களில் தீரும்.

மகம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், மரணமாகும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பது நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்தைந்து நாட்களில் தீரும். நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் ஐந்து நாட்களில் தீரும்.

பூரம் : முதற் பாதத்தில் சுரம் வந்தால், மரணமாகும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தைந்து நாட்களில் தீரும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தாறு நாட்களில் தீரும்.

'' ஆறான நாலாங்கா லெண்பத் தொன்றாம்
அடைவான வுத்திரந்தான் முதற்கா லெட்டு
வீறான விரண்டாங்கால் முப்ப தாகும்
விதமான மூன்றாங்கா லைம்பத் திரண்டாம்
தீரான நாலாங்கால் மரண மாகும்
திரமான அத்த முத கால்தா னெட்டு
கூறான விரண்டாங்கால் பதினைந் தாகும்
குணமான மூன்றாங்கா லிருபத் தெட்டே.''

(பொருள்) பூரம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் எண்பத்தொரு நாட்களில் தீரும்.

உத்திரம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், எட்டு நாட்களிலும், இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பது நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், ஐம்பத்திரண்டு நாட்களிலும் நீங்கும். நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் கொன்றுவிடும்.

அஸ்தம் : இதன் முதற் பாதத்திற் சுரம் வந்தால், எட்டு நாட்களிலும், இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால், பதினைந்து நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தெட்டு நாட்களிலும் தீரும்.

" எட்டான நாலாங்கால் எண்பத் திரண்டு
எளிதான சித்திரையு முதற்கா லொன்பான்
நெட்டான இரண்டாங்கால் பதினைந் தாகும்
நேரான மூன்றாங்கால் பன்னி ரண்டாம்
கிட்டான நாலாங்கால் நாற்பத் தொன்று
கெதியான சோதிமுதற் காலீ ராறு
குட்டான விரண்டாங்கால் மரணஞ் செய்யும்
குணமான மூன்றாங்கா லெண்பத் தெட்டே."

(பொருள்) அஸ்தம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்திரண்டு நாட்களில் தீரும்.

சித்திரை : இதன் முதற் பாதத்திற் சுரம் வந்தால், ஒன்பது நாளிலும் இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால், பதினைந்து நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், பன்னிரண்டு நாட்களிலும், நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் நாற்பத்தொரு நாட்களிலும் நீங்கும்.

சுவாதி : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், பன்னிரண்டு நாட்களில் தீரும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், கொல்லும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்தெட்டு நாட்களில் நீங்கும்.

" எட்டான நாலாங்கால் பன்னி ரண்டாம்
எழிலான விசாகமுதற் கால்தா னொன்பான்
தட்டான இரண்டாங்கால் நாள்தான் மூன்று
தயவான மூன்றாங்கால் நாற்ப தாகும்
பட்டான நாலாங்கா லெண்பத் தொன்று
பாங்கான அனுடமுதற் கால்தான் சாவு
சிட்டான இரண்டாங்கா லிருப தப்பா
செயலான மூன்றாங்கால் தொண்ணூ றென்னே."

(பொருள்) சுவாதி : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் பன்னிரண்டு நாட்களில் தீரும்.

விசாகம் : இதன் முதற் பாதத்தில், சுரம் வந்தால், ஒன்பது நாட்களிலும், இரண்டாம் பாதத்திற்சுரம் வந்தால், மூன்று நாட்களிலும் மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், நாற்பது நாட்களிலும், நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்தொரு நாட்களிலும் நீங்குவதாகும்.

அனுஷம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், கொல்லும். இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால், இருபது நாட்களிலும், மூன்றாம் பாதத்திற் சுரம் வந்தால், தொண்ணூறு நாட்களிலும் நீங்கும்.

"என்னவே நாலாங்கால் நாற்ப தாகும்
எழிலான கேட்டைமுதற் கால்தான் சாவு
நன்னவே யிரண்டாங்கா ளிருப தப்பா
நாயகனே மூன்றாங்கால் முப்பத் தொன்று
வன்னவே நாலாங்கா லெண்பத் ரண்டு
வளமான மூலமுதற் கால்தான் சாவு
அன்னவே யிரண்டாங்கா லொன்ப தாகும்
அடைவான மூன்றாங்கால் நாள்தான் பத்தே."

(பொருள்) அனுஷம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், நாற்பது நாட்களில் தீரும்.

கேட்டை : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால் மரண முண்டாகும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால் இருபது நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பத்தொரு நாட்களிலும், நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்திரண்டு நாட்களிலும் தீரும்.

மூலம் : முதற்பாதத்தில் சுரம் வந்தால், மரணமுண்டாகும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களிலும், மூன்றாம் பாதத்திற் சுரம் வந்தால், பத்து நாட்களிலும் நீங்கும்.

"பத்தான நாலாங்கால் பதினெட் டாகும்
பண்பான பூராட முதற்கால் ஒன்பான்
சித்தான இரண்டாங்கால் மரணஞ் செய்யும்
செயலான மூன்றாங்கால் நாள்தான் பத்து

வித்தான நாலாங்கால் ஐம்பத்து நான்கு
விதமான உத்ராட முதற்கா லேழு
நித்தான இரண்டாங்கா லிருப தாகும்
நேரான மூன்றாங்கா லைம்ப தாச்சே.''

(பொருள்) மூலம் : இதன் நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், பதினெட்டு நாட்களில் தீரும்.

பூராடம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால் ஒன்பது நாட்களில் நீங்கும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், மரண முண்டாகும். மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், பத்து நாட்களிலும், நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், ஐம்பது நாட்களிலும் நீங்கும்.

உத்திராடம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்களிலும், இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால், இருபது நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், ஐம்பது நாட்களிலும் தீரும்.

"ஆச்சப்பா நாலாங்கால் நாற்பதாகும்
அடைவான ஓணமுதல் பதினொன் றப்பா
பேச்சப்பா இரண்டாங்கால் பத்து நாளாம்
பேதமிலை மூன்றாங்கால் நாள்தா னெட்டு
வீச்சப்பா நாலாங்கால் மரணஞ் செய்யும்
வீதமான அவிட்ட முதல் கால்தா னொன்பான்
நீச்சப்பா இரண்டாங்கால் பதினைந் தாகும்
நிசமான மூன்றாங்கால் முப்பத் திரண்டே.''

(பொருள்) உத்திராடம் : இதன் நாலாம் பாதத்தில் சுரம் வந்தால், நாற்பது நாட்களில் தீரும்.

திருவோணம் : இதன் முதல் பாதத்தில் சுரம் வந்தால், பதினோரு நாட்களிலும், இரண்டாம் பாதத்திற் சுரம் வந்தால் பத்து நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், எட்டு நாட்களிலும் தீரும். நாலாம் பாதத்தில் சுரம் வந்தால் மரணமுண்டாம்.

அவிட்டம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஒன்பது நாட்களிலும், இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினைந்து நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பத்திரண்டு நாட்களிலும் நீங்கும்.

" இரண்டான நாலாங்கால் முப்பத் தொன்பான்
நிசமான சதயமுதற் கால்தா னேழு
வண்டான இரண்டாங்கால் பத்தாம் பாராய்
வளமான மூன்றாங்கால் நாள்தா னான்கு
திண்டான நாலாங்கால் நாள்தா னைந்து
திரமுளபூ ரட்டாதி முதற்கால் சாவு
கொண்டான இரண்டாங்கால் பதினா றாகும்
குணமான மூன்றாங்கா லெண்பத் தொன்றே."

(பொருள்) அவிட்டம் : நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், முப்பத் தொன்பது நாட்களில் தீரும்.

சதயம் : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால் ஏழு நாட்களிலும், இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பத்து நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், நான்கு நாட்களிலும், நான்காம் பாதத்திற் சுரம் வந்தால், ஐந்து நாட்களிலும் தீரும்.

பூரட்டாதி : இதன் முதற் பாதத்தின் சுரம் வந்தால் மரணமுண்டாகும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினாறு நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், எண்பத்தொரு நாட்களிலும் நீங்கும்.

" ஒன்றான நாலாங்கால் நாற்பத் தொன்றாகும்
ஒளியுத்தி ரட்டாதி முதற்கா லேழு
நன்றான விரண்டாங்கால் பதினெட் டாகும்
நலமான மூன்றாங்கால் ஏழாம் பாராய்
குன்றான நாலாங்கா லிருபத் தெட்டாம்
குணமான ரேவதியு முதற்கால் சாவு
அண்டான இரண்டாங்கால் பதினொன் றப்பா
அடைவான மூன்றாங்கால் பதினெட் டாமே."

பொருள் ; பூரட்டாதி: இதன் நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், நாற்பத்தொரு நாட்களில் தீரும்.

உத்திரட்டாதி : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்களிலும், இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினெட்டு நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், ஏழு நாட்களிலும், நான்காம் பாதத்தில் சுரம் வந்தால் இருபத்தெட்டு நாட்களிலும் தீரும்

இரேவதி : இதன் முதற் பாதத்தில் சுரம் வந்தால், மரண முண்டாகும். இரண்டாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினோரு நாட்களிலும், மூன்றாம் பாதத்தில் சுரம் வந்தால், பதினெட்டு நாட்களிலும் நீங்கும்.

'' ஆமேநீ நாலாங்கா லிருபத்தாறாம்
அடைவான மரணமென்ற நாள்தான் சொன்னேன்.''

(பொருள்) இரேவதி : இதன் நான்காம் பாதத்தில் சுரம் வந்தால், இருபத்தாறு நாட்களில் மரணம் உண்டாகும்.

'' வாமேநீ யருக்கனாள் பரணி யாகா
வளமான திங்கள்சித் திரையு மாகா
தாமேநீ செவ்வாய்க்கு முத்தி ராடம்
தயவான புதனுக்கு மத்த மாகா
நாமேநீ குருநாள்தான் கேட்டை யாகா
நலமான புகர்நாள்பூ ராடந் தீதே.''

### இன்ன கிழமைகளில் இன்ன நட்சத்திரம் தீமை எனல்.

(பொருள்) ஞாயிற்றுக்கிழமை பரணியிலும், திங்கட்கிழமை சித்திரையிலும், செவ்வாய்க்கிழமை உத்திராடத்திலும், புதன்கிழமை அத்தத்திலும், வியாழக்கிழமை கேட்டையிலும், வெள்ளிக்கிழமை பூராடத்திலும், சுரம் வந்தால் கெடுதியே யுண்டாகும்.

### சூரியன் நின்ற நட்சத்திரக் கணக்கால் நோயாளியின் நன்மை தீமை அறிதல்.

'' அடியொன்று தலைமுன்றி லதுவுஞ் சாவாம்
அடுத்தவரை யோர்நான்கி லதுவுஞ் சாவாம்
படிபுகழு முடலின்வரை யெட்டி னிற்கில்
பையவே நோய்தீரும் பயமோ வில்லை
கடிக்கமலக் கைகால்தன் வரையில் நிற்கில்
கனகம்போற் றேகமுமாங் கண்டு கொள்வாய்
அடிமுதலா யிரவிநின்ற நாளி னத்தொட்
டபிசித்தோ டிருப்பத்தெட் டாய்ந்து கொள்ளே.''

(பொருள்) மக்கள் நோய்வாய்ப் படுக்குங் காலத்தில், சூரியன் நின்ற நட்சத்திரத்தை முதலாவதாகக் கொண்டு உத்திராடத்துக்கும், திருவோணத்துக்கும் இடையில் அபிசித்து என்னும் நட்சத்திரத்தைச் சேர்த்து, இருபத்தெட்டாய் வரிசைப் படுத்தினால், நோயாளி நோய்கொண்ட நாள், கடைசியிலிருக்கும் ஒரு நட்சத்திரமாயிருந்தாலும், மேலிருக்கிற மூன்று நட்சத்திரங்களுக்குள் எந்த நட்சத்திரமாயிருந்தாலும், அம்மூன்று நட்சத்திரங்களை அடுத்து நான்கு நட்சத்திரங்களுக்குள் எந்த நட்சத்திரமாயிருந்தாலும் அந் நோயாளி இறந்து விடுவான். அதற்கடுத்த உடற் பங்காகிய எட்டு நட்சத்திரங்களுக்குள் எதுவாக விருந்தாலும் நோய் மெதுவாகத் தீரும். ஆனால், பயமில்லை. கைகால்களின் பங்காகிய மற்றப் பன்னிரண்டு நட்சத்திரங்களில் எதுவாயிருந்தாலும், நோய் நன்றாய்த் தீர்ந்து உடம்பு தங்கம் போன்றதாகுமென்று (மருத்துவ மாணவ நீ ஆராய்ந்து உணர்ந்து கொள்வாய், என்பதாம்.

இந்த ஆராய்ச்சியால், நோயாளி மருத்துவனிடத்தில் வைத்தியதுக்கு வந்த அன்றைய நாளில், சூரியன் நிற்கிற நட்சத்திரத்தை முதலாய் வைத்தெண்ணித் தீர்தல், தீராமை அறிதலும் உண்டு.

சுரக்கோள்.

மன்னிய அசுப தின்நாள் வருசுர மெட்டா நாளில்
உன்னியே விடுதல் செய்யு முற்றதோர் பரணி நாளில்
மன்னிய சுரமே கொள்ளு மஃதன்றி விடுதலாகும்–
பன்னிய கார்த்தி கைநாட் பிரிந்திடுஞ் சுரத்தைச் சொல்வாம்.

சொல்லிய சுரமோ ரெட்டில் துணிந்தொரு பத்தா நாளில்
எல்லையில் விடுதல் செய்யா திருக்கிலோ மரணமாகும்
ஒல்லையா யுரோக ணிநா ளுறுசுர மாறா நாளில்
மெல்லவீ ரைந்தி லெட்டில் விரைந்திடு மென்று கூறும்.

கூறிய மிருக சீரிடந் தனிற்குடி கொள்சு ரந்தான்
மாறியே யொன்பத் தாநாள் மற்றுமா திரையிற் றோன்றி
மீறிய சுரமஞ் சாநாள் வெதும்பியே கொல்லு மிக்காய்
செுறு புனர்பூ சத்திற் செறிந்திடுஞ் சுரத்தைப் பேசும்.

பேசிய சுரமோ ரைந்தி லன்றிப்பின் பிரிந்து போகும்
வீசிய பூசந் தன்னில் மெய்யுறு சுரமி ரண்டில்
கூசியே நீங்கா தாயிற் குணஞ்செயு மெட்டில் மீறில்
மூசியே மற்ற நாளில் இச்சுர முடிவாய்க் கொல்லும்.

முனிமுவுடன்மகத்திற் றோன்றி முந்திய சுரமீராறில்
நினைவுட னகலா தாகில் நிச்சயம் மற்ற நாளில்
நனவுடன் நீங்கும் பூரம் நன்னிய சுரமீ ரைந்தில்
தனவுட நீங்கா தாகிற் றான்பதி னேழில் நீங்கும்.

நீங்குமுத் திரத்திற் றேன்றி நீள்சுர மிகக்கொல் லாதால்
ஆங்கது பத்தா நாளி லகன்றிடு மத்தந் தன்னில்
ஈங்குறு சுரமெட்டாநா ளிசையவே யிறப்ப தன்றி
பாங்குறவீரெட் டாநாள் பண்புற விடுத லாமே

ஆகுஞ்சித் திரையில் மோதி யடர்சுர மிருப தாநாள்
போகிடு மன்றி விட்டுப் புறந்தரும் திங்கள் முன்றிற்
வாகுறு சோதி நாளில் வருசுர மிரண்டோர் பத்தில்
சாகினுஞ் சாவா ரென்று சாற்றினார் சுரனூல் வல்லோர்

சுரமுறு விசாகந் தன்னிற்தோன்றிற்பின் னெட்டா நாளில்
உரமுற நீங்கா தாகி லொரு திங்கள் தன்னில் நீங்கும்
வரமுறு அனுடநாளில் வருஞ்சுர மிரண்டோர் பத்தில்
தரமுற நீங்குங் கேட்டை தனற்புகுஞ் சுரம்பின் சாற்றும்

சாற்றிய சுரமஞ் சாநாட் டான்பரி வாகுமன்றி
மாற்றியோர் மாதந் தன்னில் மாறிடு மூலந் தன்னில்
தோன்றிய சுரமொன் பானாட் தொலைந்துயிர் செல்லா தாகாக
ஏற்றிய பத்தா நாளி லிசைந்துபின் னேகு மன்றே.

அன்றியும் பூரா டத்தி லணுகிய சுரமீர் நான்கில்
ஒன்றியும் போகா தாகி லொருதிங்க டன்னிற் போகும்
துன்றியே யுத்தி ராடந் தொடர்சுர மெட்டா நாளில்
குன்றியும் போகா தாகிற் கொன்றிடும் பின்பு தானே.

பின்புறு திருவோ ணத்திற் பிணிசுர மெட்டு நாளி
லன்புற விட்டே காதா லாமொரு மாதஞ் சென்றாற்
றுன்பற நீங்கும் பின்னைத் துலங்கிய அவிட்ட நாளில்
வன்புறு சுரமஞ் சாநாள் மாறாதேல் மாறும் பின்னே.

பின்னிய சதய நாளில் பிறந்திடுஞ் சுரமேயானால்
தன்னுர மாகக் கொல்லுஞ் சார்ந்திடும் பூரட்டாதி
மன்னுமா சுரம ரிக்கும் வளர்ந்திடு முத்ரட்டாதி
பின்னுமா சுரமெட் டாநாள் விளங்கிட விடுஞ் சொன் னோமே.

சொன்மொழி நூலின் மிக்காய் தோற்றிரே வதியா நாளில்
முன்னுற வருஞ்சு ரந்தான் முறையிரு நான்கு தன்னில்
இன்மொழி யாளே கொல்லா திருக்கிலோர் நாளிற் பின்னர்
வின்மொழி யிறுதி யாக வீரைந்தில் விடுகண் டீரே.

(பொது விதி)

முப்பூரங் கேட்டை தன்னில் முக்கண்ணன் குன்று புட்பா
மொப்பறு நாளில் நவமி நான்காறு பன்னி ரண்டில்
செப்புறு சேய்சனி ஞாயிறு சேர்ந்ததிற் செய்திருவே
வெப்பினை யுற்ற வர்தான் சாவ ரென்ன விதித்தனரே.

(பொருள்): பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, திருவாதிரை ஆகிய நட்சத்திரங்களுடைய நாட்களில் சுரநோய் பிறக்குமாயின், அவன் சாதகத்தில் 4, 6, 9, 12 கட்டத்தில் செவ்வாய், சனி, சூரியன் ஆகிய மூவரும் கூடி நிற்கில், அவன் சாவது திண்ணம்.

## குரல் கம்மல்

வேறு பெயர்கள்: தொண்டைக்கட்டு, சுரபங்கம்.

இயல் : பேச்சொலி இயற்கையாக இராமல் தாழ்ந்து வேற்றொலியாகவெழும் நோய்.

நோய் வருவழி : மிகுந்த குளிர் காற்றிலீடுபடல், குளிர்ந்த பொருள்களையுட்கொள்ளல், தொண்டை புண்படத்தக்க சூட்டில் வெந்நீர் பருகல் ஆகிய இச்செய்கைகளால், தொண்டையின் இருபக்கங்களிலும் தாபிதத்தை உண்டாக்கி, குரல் வளையை வீங்கச் செய்வதாலும்,

குழைபக்கத்து கொழுப்பு, சதை முதலியன வளர்தலாலும், இளைப்பு நோயில் கூறியபடி தொண்டையில் புண்ணுண்டாவதாலும் இந்நோய் பிறக்கும். அன்றியும் இஃது இருமல் நோய்க்குத் துணை நோயாக வருவதுமுண்டு.

உரத்துப் பேசி னுறினஞ்சு கற்கின்
பருத்த கழுத்திலடிபட்டால்— குறித்த
வளிமுதற் சினந்து மருவலொலி நாடி
களிற்குரற் கம்மல்வருங் காண்.

(பொருள்) உரத்து வார்த்தையாடல், பாடல், கழுத்தில் அடிபடல் என்பவைகளாலும், நஞ்சுப்பொருள் கொள்வதாலும் இந்நோயுண்டாம் எனக்கூறுவாரும் உளர்.

முற்குறி குணங்கள் : தொண்டையில் ஏதோ பூசியது போலும் தொண்டையிறுக்கியது போன்ற தோற்றத்தை உண்டுபண்ணி, இருமித் தொண்டையை சிவக்கச்செய்து அதினின்று கோழையைத் துப்பல், தும்மல், மூக்கில் நீர் பாய்தல் என்னும் குறிகளைக் காட்டி, குரலொலி வேற்றுமையடைந்து மெலிந்தாகிலும் கீச்சுக் குரலோடாகிலும் எழும்.

எண் : குற்ற அளவாக, வளி, அழல், ஐயம், முக்குற்றம் என நான்கும், இளைப்பு நோய்த் தொகுதியிலொன்றும், கொழுப்பு அல்லது சதை வளர்ச்சி நோய் ஒன்றும் ஆக ஆறு என்பர்.

'' மருவளிதீ யையம் வகையாமுக் குற்றம்
வருமிளைப்பு நோய்நிணமிவ் வாறென் —றருமையாய்
முன்னோர்கள் கூறினார் முற்றறிவினாலாய்ந்து
சொன்னபடி நீயறிந்து சொல்.''

வளிக் குரற் கம்மல் :

'' குரல்வளையி னீர்வற்றல் கொள்வழு வழுத்தல்
வரள்முள்ளை யுட்செருகல் மாற —வரல்நோய்
கருமை முகமலநீர் கண்ணடுக்க லாக
வருமொலியுங் காற்குரற்கம் மல்.''

(பொருள்) : வறண்டுள்ள பொருள்களை உண்பதாலும், கடு வெயிலில் திரிதலாலும், தொண்டை வறண்டு, முட் செருகியது போன்ற வேதனையைத் தந்து குரற்கம்மலுண்டாம். சில வேளை குரலொலி தட்டுப்பட்டெழும்.

அழல் குரற் கம்மல் :

"குரல்வளைதாழ் வாய்தளரல் கொள்ளெரிவ ரட்சி,
குறும்பேச்சும் பேசுவதிற் கூசல்—பெருங்கம்மல்
கண்டலொடு கண்முகநீர் கண்டமல மஞ்சளித்தல்
பூண்டிக் குரற்கம்மல் போற்று."

(பொருள்) : தீக்குற்றத்தைப் பெருக்கக்கூடிய உணவு வகைகளால் குரல் வளை சிவந்து புண்ணாய், தொண்டை நொந்து, குரல் சிறுத்து சற்றும் பேச முடியாமல் கூசி, குரற் கம்மலுண்டாகும்.

ஐயக் குரற் கம்மல் :

"குரல்வளைக்குள் கோழை குழைத்துப்பூ சல்போல்
வரல்குறுவென் றோரொலியு மன்னல்—குரற்கம்மல்
நண்பகலி னற்பேச்சு நாளிரவி லின்றுபகல்
கண்ணைக் குரற்கம்மல் காண்".

(பொருள்): பனிக்காற்று, மிகுந்த குளிர்ந்த பொருள்கள் முதலியவற்றால் தொண்டையில் கோழைகட்டி, அக்கோழையால் அங்குப் புண்பட்டு, இருமல் உண்டாயின், குரல் ஒலியை மங்கச்செய்து, பகலில் குரற்கம்மலின்றி நன்றாய்ப் பேசுதல், இராக்காலத்தில் கம்மிப் பேசுதல், ஒலி தடைப்பட்டு வெளிப்படல் ஆகிய குறிகளைத் தோற்றுவிக்கும்.

முக்குற்றக் குரற் கம்மல் :

"குரல்வளையைப் பற்றிக் குருக்குதல் போறல்
மருவுமுக் குற்றகுண மன்னல் —குரற்கீச்சு
நெஞ்சொலிம றிப்பதென நேர்தோற்றல் முக்குற்றம்
விஞ்சுகுரற் கம்மலென விள்."

(பொருள்): நீண்டநாள் நோயிலீடுபட்டோர் கடையில் முக்குற்றத்தால் முடிவடையுங் காலை யெழும் நோயாதலால், இது தீராத நோயாம். குரல்வளையை நன்றாய் இறுக்கிப்பிடித்தது போல் தோன்றிக் குரலொலி யெழாவாம்.

இளைப்பு நோய் குரற் கம்மல் :

"குரல்வளையில் மிக்கபுகை கூடினது போறல்
வரல்பேச்சில் மிக்கபுகை வாயில்—குரற்கம்மல்
இக்குறிக ளெல்லா மிளைப்புநோ யில்வரூஉம்
மிக்ககுரற் கம்மலெனு மேல்."

(பொருள்) இதன் குறி குணங்கள், யாவையும் தொண்டை, குரல்வளை இவைகளைப் பற்றி வரும் இளைப்பு நோயில் கூறியதில் காண்க.

நிணக்குரற் கம்மல் :

"குரல்வளை நிணங்கோழை கொண்டுதட வல்போல்
விரவுவழுப் பைக்குண்நீர் வேட்கை —தருமேல்
வணப்பேச் சறிவின்மை வாய்பொறுத்துப் பேசல்
நிணக்குரற் கம்ம னெறி."

(பொருள்) இந்நோய் உடலில் கொழுப்பு மிகுந்து அது தொண்டையிலும் அடைத்து, வெளியாகும் பேச்சொலி அக்கொழுப்பால் தடுக்கப்பட்டு, குரற்கம்மல் உண்டாம். உடலின் கொழுப்புக் கரையக் குரற் கம்மலும் தீரும். ஈதன்றி, சிறு வயதினர்க்கு குளிர் காற்று, குளிர்ந்த நீர் உணவு இவைகளால் தொண்டை சிவந்து ஐயங்கூடி, தொண்டையில் சதை வளரும். இச் சதை நாளுக்கு நாள் வளர்ந்து, கட்டிகளைப்போல் பருத்துக் குரல்வளைகள் இரு பக்கங்களிலும் வளர்ந்து, குரல்வளையை இறுக்கி, குரற் கம்மல் நோயை உண்டாக்கும். இத்துடன் சுரம், தொண்டை நோய், வாய் நாற்றம், மூக்கில் நீர் வடிதல், காதில் சீழ்வடிதல், இருமல் தோன்றுதல், மூச்சுத் தடைபடல் முதலிய குறிகுணங்களையும் காட்டும்.

தீரும் தீராதவை :

"ஆறுகுரற் கம்மலினி லாதிமூன் றும்மிளைப்பும்
மாறு மிகுமிரண்டு மாறுமோ —கூறின்
இளைத்தோன் கொழுத்தோ னியல்பில் மெலிந்தோன்
களைத்தகிழ வர்க்குமாறா காண்."

மேற் கூறப்பட்ட குரற் கம்மல் நோயாறில் வளி, அழல், ஐயம், இளைப்பு நோய், குரற்கம்மல்கள் தீருமெனச் சில நூற்கள் கூறினும், சிறப்பாக இளைப்பு நோயே தீருவது கடினமாயிருக்க, அதிலுண்டாம் குரற் கம்மல் தீருமென்பது எங்ஙனம்? ஆகவே எளிதில் தீராதென்க.

ஈதன்றி முக்குற்ற குரற் கம்மல், நிணக்குரற் கம்மல் என்னும் இரண்டும் எளிதில் தீரா. மேலும் இந்நோயில் இளைத்தோன், கொழுத்த உடல், இயல்பாக மெலிந்த உடல் உள்ளவன், கிழவர் இவர்கட்கும் தீருவது மிகக் கடினம்.

பொதுக்குறி குணங்கள் : இயற்கைப் பேச்சொலியைக் குன்றச் செய்து, தொண்டையைக் கனைக்குமாறு செய்து, அடிக்கடி தும்மலை உண்டாக்கி, கோழையை வெளியாக்கும். சில வேளைகளில் அக் கோழையில் குருதியும் சிறிது கலந்திருக்கும். அடிக்கடி இருமல், தும்மல், தொண்டை நோய், நீர், உணவு முதலியன விழுங்க முடியாமை, சுரம், தலைநோய், கண் எரிதல் முதலிய குறிகுணங்களைக் காட்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : செயல், உணவு முதலியவைகளால் ஐயம் மிகுந்து, பின் தனக்குத் துணையாக மற்றைய குற்றங்களையும் கூட்டிக்கொண்டு விரியும். ஐயத்தின் கேட்டால், மேல் நோக்குக்கால் (உதான வாயு) தன் வன்மை இழந்து பேச்சொலியைக் குன்றச் செய்யும்.

நாடி :

தானமுள்ள சேத்துமந் தானிளகில்.......
...............................
...............................
.....................நெஞ்சுடைப்பு

"இதமொடு இறுதி நாடி இலகிடா திறுகி நின்றால்
பதமொடு தொண்டை கட்டும் பழுத்துநெஞ் சுதனிற்கட்டும்."
குணவாகடநாடி.

மருத்துவம் : தன்னளவில் மிகுந்த குற்றத்தைத் தன்னிலைப்படுத்த கழிச்சல் மருந்துகள் கொடுத்தபின், நோய் வன்மைக்குத் தக்கவாறு கீழ்க் கூறிய மருந்துகளில் ஏதாவதொன்றைத் கொடுக்கலாம்—

(1) ஆடாதோடை இலை இரண்டையும், மிளகு எட்டையும் சேர்த்து அரைத்து, உருண்டை செய்து காலை மாலைகளில் தின்ன நோய் போம்.

"ஆடாதோடை ஐந்து மிளகும் பாடா தெல்லாம் பாடும்" என்னும் பழமொழியின்படி மிகுந்து உரத்துப்பேசல், பாடல் என்பவைகளால் உண்டாம் குரற் கம்மலுக்கு இம்மருந்து நன்மை பயக்கும்.

(2) திப்பிலி, கோட்டம், அதிமதுரம், அக்கராகாரம் வகைக்குப் பலம் கால் கொண்டு பொடித்துத் தேன் கூட்டிக் குழைத்துத் தொண்டைக்குள் பூசவும்.

(3) தும்பைப்பூ ஒரு வராகனெடை, கால் வராகனெடையாக ஏலமும் அக்காரகாரமும் கூட்டித் தேன் விட்டு இழைத்துச் சிறிதுசிறிதாக வாயிலிட்டுச் சுவைக்கக் குரற் கம்மல் தீரும். அல்லது மேற்கூறிய சரக்குகளையே நீர் படி ஒன்று கொண்டு கூட்டி, விதிப்படி குடிநீராக்கி காலை மாலைகளில் கொடுக்கலாம்.

(4) தாளிசபத்திரி வடகத்தைக் காலை மாலைகளில் சுவைத்து, தின்னலாம்.

(5) வசந்தகுசுமாகர மாத்திரை இரண்டு, இலவங்கம் இரண்டு இவற்றை ஒரு கம்மாறு வெற்றிலையில் வைத்துப் பொதிந்து மென்று சுவைத்துத் தின்னலாம்.

(6) கத்தூரிக் கருப்பு ஒரு குன்றியெடை வெற்றிலையிலிட்டு மென்று உண்ணலாம்.

(7) உடல் வன்மையைத் தரத்தக்க பவழம், முத்து, தங்கம், வெள்ளி பற்பம் அல்லது செந்தூரம் இவைகளுள் நோய் வன்மைக்குத் தக்கவாறு ஏதேனும் ஒன்றைத் தனித்தாகிலும் சிலவற்றைக் கூட்டியாகிலும் தக்க துணை மருந்தோடு சேர்த்துக் கொடுக்க நற்பயனைத் தரும்.

உணவு: குளிர்ச்சியைத் தரும் நீர் உணவுகளை நீக்கி, உடல் வன்மை தரக்கூடிய உணவுகளைக் கொடுக்கவும்.

## மூக்கடைப்பு நோய்.

**வேறு பெயர் :** நீர்க் கோவை, மூக்கு நீர் பாய்தல், பீனசம் எனப் பெயர்களுண்டு.

**இயல் :** மூக்கின் துளைக்குள் சிவந்து, தும்மல், கண் சிவந்து நீர் வடிதல், மூக்கு நீர் பாய்தல், தலைநோதல் அடிக்கடி மூக்கைச் சிந்திச் சளி, சீ, குருதி வெளியாதல் என்னு மியல்புடையது.

**நோய் தோற்றுவாய் :** மிக்க குளிர்ந்த நீரைப்பருகுதல் பனி அல்லது குளிர்ந்த காற்றிலீடுபடல் தனக் கொவ்வாப்புகை, புழுதிகூடிய காற்று தும்மலை யுண்டாக்கக்கூடிய பொருள்களான இவைகளை முகர்ந்தாலும், உடல் வெப்படைந்துள்ளபோது சரேலென ஐயத்தைப் பெருக்கக்கூடிய தான குளிர்ந்த நீரில் தலை முழுகல், குளிர்ச்சிதரும் பொருள்களை உட்கொள்ளல் ஆகியவற்றாலும் இந் நோய் பிறக்கும், அன்றியும் மேக நோய்க்குத் துணையாய் இந் நோய் வருவதுமுண்டு.

ஒக்க (யோக) நிலையிலுள்ளபோது கீழவாய்க்கனல் தன்னளவிற்கு மிகுந்தெழுந்து தலை மூளைவரையிற் பாய்ந்து ஆங்கு வெப்பத்தை யுண்டாக்கி மூக்கடைப்பு நோயை உண்டாக்குமெனக் கூறுவாருமுளர்.

**முற்குறி:** மூக்கிலொருவகை எரிச்சலும் நமையுமுண்டாய், அதனைத் தாங்கமுடியாது, மூக்கு முணையைத் தேய்த்துச் சிவக்கச் செய்து பின் கண் சிவந்து கண்ணீர் வடியும், மூக்கையடைத்தாற்போல் பேசச் செய்தல், காதடைத்தல், காதில் நமைச்சலுண்டாதல், தலை நோய், மூச்சு உள்வாங்கவும் வெளியாக்கவும் முடியாமை என்னும் இக்குறிகளைக் காட்டி மூக்கிலிருந்து தானறியாமலே பனி நீர்போற் சொட்டும்.

**நோய் எண். :** இந்நோயினைச் சில நூலோர் எண்பத்தாறு எனவும் பதினெட்டெனவும் வகுப்பர், தமிழ்நூலோர் ஒன்பதென வகுத்துள்ளனர். இவ் வொன்பதுவே இங்குக் கூறுதும், அவைகள் வளி மூக்கடைப்பு, அழல் மூக்கடைப்பு, ஐய மூக்கடைப்பு, நீர் மூக்கடைப்பு, குருதி முக்கடைப்பு, கீழ் மூக்கடைப்பு, சிறாய் மூக்கடைப்பு, முளை மூக்கடைப்பு, கழுத்து மூக்கடைப்பு எனவாகும்.

## குறி குணங்கள்

வளி மூக்கடைப்பு :

இவ்வகை நோயில் முதலில் மூக்கிலும், நெற்றிப் புருவத்தில் புழு ஊருதற்போன்று நமைச்சலுண்டாய் மூக்கடைத்து நீர் சிறு சிறு துளியாகக் கசியும். நோய் முதிர்ச்சியடையின் நீர்ச்சுண்டி சளி யுடன் அடிக்கடி மூக்கைச் சிந்தச் செய்யும். இதனோடு, அடிக்கடி தும்மல், மூக்கில் குடைவதுபோன்றிருத்தல், கண், தலை, பல் இவைகள் நோதல், வாயுலர்தல், குரற் கம்மல், உடல் வன்மை குறைதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

அழல் மூக்கடைப்பு :

உடல் அனல்போலிருத்தல், சுரங்காய்தல், என்னுங் குறிகளைக் காட்டி மூக்கில் எரிச்சல், மூக்குத்தண்டும் உட்சதையும் சிவந்து காணல், தலைசுற்றல், தலையுச்சியிற் சூடாகத்தோன்றல், மூக்கு நாற்றமறியாமை நீர் வேட்கை மிகுதல், மூக்கடைத்தல், மனக்கலக்கம் என்னுங் குறி களோடு மூக்கிலிருந்து கட்டி கட்டியாக மஞ்சள் நிறத்தோடுங் கூடிய சளி மிகுதியும் வெளியாம். மூக்கில் சிலவேளை கொப்புளம், புண் முதலியனவும் பிறப்பதுண்டு.

ஐய மூக்கடைப்பு :

இந்நோய் தொடங்கும்போதே தலை நோய், கண்ணில் நீர் வடிதல், கண் சிவத்தல், மூக்கடைத்தல், மூக்கிலுண்டான எரிச்சலையும் நமச்சலையுந்தாங்க முடியாது மூக்கைக் கையால் அரைக்கிக் கொள்ளல் என்னுங் குறிகளைக் காட்டி மூக்கு நீர் சிறு சிறு துளியாகத்தானே சொட்டுதல். மூக்கைச் சிந்தின் வெண்ணிறத்தோடு கூடிய சளி மிகுதி யும் பாயும். அன்றியும், சளி முதிர்ந்து கட்டியாக நாற்றத்தோடு வெளி யாதலும், வாய் ஓயாத இருமலும், கண்களில் பீளை சார்தலும், காதடைத்துக் காது சரியாகக் கேளாமையும் நாச்சுவையறியாமையுமான குறிகளையுந் துணை கொள்ளும்.

நீர் மூக்கடைப்பு :

இஃது குளிர்காற்றிலீடுபடல், குளிர்ந்த நீரில் தலை முழுகல், மிகக் குளிர்ச்சியான நீர் வகை அல்லது உணவுகளைக் கொள்ளல், தனக் கொவ்வா மனமூட்டும் பொருள்களையேனும், தும்பு தூசிகளையேனுக்

மூக்கில் நுழையும்படியாக நேர்தல் ஆகியவற்றால் உடனே மூக்கடைத்துத் தனக்குத் தெரியாமலே மூக்கினின்று நீரைச் சொட்டச் செய்யும் நோயாம், இதனில் வடியும் நீர் மிகத் தெளிவாகவும் காணப்படும். தலை நோய், சிறு சுரம், உடல் சோம்பல், கைகால் நோதல் ஆகிய குறிகளையுங் காட்டும்.

குருதி மூக்கடைப்பு :

உடல் மிக வெப்பமடைந்தபோது, மண்டைக் கொதிப்படைவதோடு குருதியையும் கொதிப்படையச் செய்யும். உடலிலெழுந்த வெப்பத்தால் மூக்கினுள்ளும் உதடும் நாவும் கூடச் சிவந்து புண் போல காணப்படும். அப் புண்களிலிருந்து உடலில் கொதித்தெழுந்த இரத்தமும் மூக்கி லிருந்து வழியும். அதனோடு சளியுங்கூடி இழியத் தொடங்கும். மேலும் மூக்குள், எரிச்சல், நமை, திமிர்த்திருத்தல் அல்லது நோதல், கண்ணெரிச்சல், காது குடைதல், தலை, கழுத்து, தாடை இவைகளின் மேல் நோதல், நாச்சுவை யறியாமை, உணவில் விருப்பமின்மை ஆகிய குறிகளையுங் காட்டுவிக்கும். மண்டையிலாகிலும் மூக்கிலாகிலும் அடி ப்படினும் மூக்கில் குருதி வெளியாம் ; அன்றியும் குருதியைப் பெருக்கச் செய்யும் நோயிலும், இளைப்பு முதலிய நோய்களிலும் முற்குறியாக மூக்கில் குருதி வடிவதுண்டு.

கீழ் மூக்கடைப்பு :

இஃது உடலிலெழுந்த வெப்பமானது மண்டையைத் தாக்கி யுள்ள போதும், உடலில் ஐயத்தைப் பெருக்கக்கூடிய உணவு, குடி' மற்றச் செயல்களால் பிறக்கும் நோயாகும். இதனில் மூக்கடைத்து மூச்சுவிடவும் முடியாது, வாயில் மூச்சுவிடச் செய்யும். மூக்கிலிருந்து, கசியும் சளி கடினப்பட்டு மிகுந்த நாற்றத்தோடும் காணப்படும். சில வேளை இச்சளி அளவில் குறைந்தும் சில வேளை அளவில் பெருத்தும் இழிவதுண்டு. மூக்கின் றண்டினுள், ஒரு புறம் சிவந்து வீங்கினாற் போலும் மற்றோர் புறம் வற்றியுலர்ந்தாற்போலும் காண்பதோடு அடிக் கடி தும்மலையும் உண்டாக்கும். சளியின் நாற்றத்தையும், நோயினன் விடும் மூச்சையும் தாங்கமுடியாத அளவில் இருப்பினும், நோயினனுக்கு அம்மணம் தெரியாது.

சிறாய் மூக்கடைப்பு :

இந்நோய் சிறப்பாக மேக நோயினைப்பற்றி வருவதேயாம். இதனி முதல் முதல், மூக்கடைப்பைக் காட்டி மூக்கினுள் புண்ணுண் டாகிச் சளியை இழியச்செய்து இறுகிக் கடினப்பட்டு வாய்வழியே கட்டி கட்டியாக இழிந்து கொண்டேவரும். நோய் எளிதில் தீராமல், முதிர்ச்சியடைந்து சளி கடினப்பட்டு மூக்கினுள் சிறாய்போல் துண்டு களாக நிலைத்து மூக்கைச் சிந்தும்போது ,சிறிது சளியும் சிராயுமாக இழியும். இஃது தாங்கமுடியாத நாற்றம் பெற்றிருக்கும். மூக்கெலும்பும் நைந்து சிறு சிறு துண்டுகளாகச் சளியோடு கூடியிழியும். நெற்றியின் கீழ்ப்பக்கமுள்ள மூக்குத்தண்டு நைந்து பள்ளம் விழுந்து சில நாட்குள் அழுகி அதனைத் துளைத்து விடுவதுமுண்டு. மேலும் மூக்கால்பேசல், தொண்டை கம்மல், வாய் நாற்றமடித்தல், பசியின்மையாகிய குறிகளை யுங்காட்டும்.

முனை மூக்கடைப்பு நோய் :

இந் நோயில் மூக்கினுள்ள சவ்வைப் பற்றித் தொடர்ந்து கம்பளிப் பூச்சிப்பழம் போல், சதைப் பற்றுள்ளதாகவும், யானைத்திப்பிலியைப் போல் நீண்டும் சிறுகுறுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்தால் போலும், சிவந்து தளதளத்தும் காணும். இம்முளை பெரும்பாலும் ஒரு மூக்குத்துளையில் மட்டும் பிறப்பதுண்டு. சில வேளை இருமூக்கிலும் கூடப் பிறப்பதுண்டு. இம் முளைதடித்து மூக்குளிருத்தலால், மூக் கடைப்பதோடு, மூச்சுவிடவும் வாங்கவும் முடியாமை, தலை நோதல், மூக்கிலிருந்து குருதியும் சளியும் அடிக்கடியிழிதல் என்னுங் குறிகுணங் களையுங் காட்டும்.

கழுத்து மூக்கடைப்பு:

இந்நோய் கழுத்திலுண்டாகும் குரல்கம்மல் நோய்க்கும், தொண் டையடைக்கு நோய்க்குத்துணையாக மூக்கடைப்பை உண்டாக்கும் நோயாகும். இதனில் உணவு நீர் முதலியவைகளை விழுங்க முடி மல் நோதல், தொண்டையில் எரிச்சல், அடிக்கடிக்குத் தொண்டையில் கோழை சேர்தல், அடிக்கடி தும்மல் உண்டாதல், மூக்கிலிருந்து சளி வெளியாதல், அச்சளி பெரும்பான்மையும் தொண்டை வழியாகவே வெளி யாதல் என்னுங்குறிகளையுடைய நோயாம்.

குற்றமுதலிய வேறுபாடுகள் : உணவு முதலியசெயல்களால் உடல் வெப்பமடைந்து அழல் முற்றும்மிகுந்தபோது ஐயத்தைப் பெருக்கக்கூடிய செயல்களால் பிறந்த ஐயம் அழலோடுகூடிப் பிறந்த நோயாகும். அன்றியும், ஒக்க நிலையில் கீழ்வாய்க்கனல் மிகப்பெருகினு மஃது மேல் நோக்குக்காலின் வன்மையால் மண்டை வரையில் பாய்ச்சலுள்ள நிலையில் ஐயங் கூடினும் இந்நோய் பிறக்குமெனவும் சிலநூல் கூறும்.

நாடி : பண்பான பித்தத்தில் சேத்துமம் கூடி பரிசித்தால் பீனிசமும்.

சதகநாடி

" ஒடுக்கமாஞ் சிலேத்ம நாடி யொழுங்கொடு பதறி நின்றால்
நடுக்கமாய்ப் பீனி சங்கள் நாசி நீர் பாய்ச்ச லாகும்."

(குணவாகடம் 46.)

மருத்துவம்: இந்நோயின் மருத்துவத்தில் மிகுந்த கனலையும் ஐயப் பெருக்கையும் தன்னிலைப்படுத்த முயலுவதே யன்றி நோயினைத் தோன்றுவிக்குமிடமாகிய மூக்கிற்கும் அதனிலுண்டான புண்ணிற்குமான மருத்துவங்களைச் செய்து நோயை நீக்குதல் நன்றாம். இம் மருத்துவங்களில் மூக்கிற்கு மூக்குப்பொடி, துளிமருந்துகள், புகைகள் ஆகியவற்றையிட்டுச் சளியை வெளிப்படுத்தலும், உள்ளுக்கு ஐயக்குற்றத் தன்னிலைப் படுத்தும் மருந்து வகைகளையும் மண்டையைத் தாக்கிய கீழ்க் கனலைத் தணிக்க எண்ணெய் வகைகளைக் கொண்டு தலை முழுகச் செய்தலுமாம்.

மூக்கிற்கான பொடி வகைகள் :

நாசி காபரண் நவியலுற் றனமா
லிலுப்பையுஞ் சுண்டையு மியலுறு பாலையும்
காந்திமெய் யறலுமிக் காட்சியிற் பரிகவென்.

(தே. காப்பியம்.)

எனக்கூறியபடி, இலுப்பைவேர், சுண்டைவேர், பாலைவேர் இவைகளில் ஏதேனும் ஒன்றைப் பொடி செய்து மூக்குப் பொடியாகவிட மூக்கிலுண்டாம் நோய்கள் யாவும் போமெனவறிக. அவ்வாறே புகை இலை அல்லது எரு முட்டையின் பொடிகளும் மூக்கிலிடலாம்.

பற்று :

பச்சைப் புனுகு செங்காற் பாசவித்து நேர்சமனா
யச்சமலர் சாற்றா லதையிழைத்து—வச்சு
தலைபுருவ நெற்றியிடச் சாற்றிடமூக் குக்கேறுஞ்
சலரத்த சீப்பீனி சம்.

(தேரையர்-வெண்பா.)

(பொருள்) புனுகு, செம்பருத்தியின் வித்துப்பருப்பு ஆகிய இவைகளை ஓரெடையாகக் கொண்டு அகத்திப்புச் சாற்றாலரைத்து வைத்துக்கொண்டு அதனில் சிறிதெடுத்து, தலை, புருவம், நெற்றி, மூக்குத்தண்டு இவை களின் மீது பற்றிட நீர், சீழ், குருதி, மூக்கடைப்பு நோய்கள் நீங்கும்.

புகை:

(1) பளிங்குச் சாம்பிராணி, செஞ்சந்தனம், கருங்காலிக்கட்டை தேவதாருக்கட்டை, ஆயில்பட்டை வகைக்குப் பலம் ஒன்று, தாளகம் மிருதார் சிங்கி, இலிங்கம், வெடியுப்பு வகைக்கு அரை விராகனெடை, இலுப்பைப் பிண்ணாக்குப் பலம் நான்கு ஆகக்கொண்டு ஒவ்வொன்றை யும், தனித்தனியே மைபோலரைத்துக் கூட்டிக்கொள்ளவும். இதனை ஊமத்தைச்சாறு, உத்தா மணிச்சாறு, எருக்கன்பழுப்பின்சாறு வகைக்குக் காலாழாக்குக்கொண்டு அதில் இரண்டு விராகனெடை வெடியுப்புக் கூட்டிக் கலக்கியதைக் கொண்டு மேற்படியாகப் பொடித்ததைக் கல்வத்தில் நன்றாக அரைத்து வழித்தெடுத்து மெல்லிய சீலையில் துவைத்துருட்டி, சிறு சிறு சுருட்டுகளைப்போல் செய்து உலர்த்திக் கொள்ளவும். இதனில் காலை மாலையாக, ஒன்றைக் கொளுத்திப் பிடித்து மூக்கின் வழியே புகையை விடவும், எத்தனை முறை புகையை வலித்து வெளியிட முடியுமோ அத்துணைமுறை செய்துவர, இரண்டு மூன்று நாட்களில், முளை மூக்கடைப்பு போம். மேகநோயால் வரும் நோய்க்கும் இது நற்பயனளிக்குமேயாயினும் நாட்பல செல்லும்.

(2) சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், தும்பைப்பூ, சோற்றுப்பு வகைக்கு ஒரு விராகனெடையாகக் கொண்டு கல்வத்திட்டு, கண்டங் கத்திரி இலைச் சாற்றைக்கொண்டு மைபோலரைத்து மேலும் சிறிது அச்சாறு கூட்டிக் குழைத்து மெல்லிய துணியில் துவட்டிச் சிறு சிறு திரியாகச் செய்து உலர்த்திவைத்துக் கொண்டு, வேண்டியபோது ஒரு திரியைக் கொளுத்தியெழும் புகையை முகர இந்நோய் வகைகள் யாவும் தீரும்.

(3)

வெடியோ டரிசன மிளகிதை வெருவ பொடிசெய்து திரியிலே
படியு டுபதைசெய் தனலோடு படவு மதிலெழு புகையினை
நெடிய வுடலிடு கவர்கலை நிமிட முறலரித்த தனையோர்
கடிகை யளவுகொ ளுதியெனிற் கழலு முடியுறு கபமெலாம்.
(தே. சேகரப்பா 269.)

(பொருள்) : வெடியுப்பு, மஞ்சள், மிளகு இவைகளை ஓரளவாக நன்றாகப் பொடித்து, துணியில் படியும்படி திரித்து, அத்திரியைக் கொளுத்தி எழும் புகையை உடல் முழுமையும் படும்படியாகப் போர்வை யிட்டுக்கொண்டு ஒரு கடிகை அளவு அத்தீப்படும்படி இருக்க, மண்டை யிற்றங்கி இருக்கும் நீரெல்லாங் கழன்றுபோம்.

வியர்வை பிடித்தல் :

திப்பிலி மஞ்ச ளசமதாகமிள கைப்பொடி யுஞ்செய் திரியி
லேறவிடு
செப்பிய நிம்பமருவு நேயமுறு—சுடரேவை
கப்புமு டம்போடரிய தீவிகையை யுட்கொண்டிருந்தபயலு
நாழிகை
முகத்திலிருந்தே யுபயநாசிகளில் —மழைமாரி
யொப்ப விரண்டு நயன மாமலர்ம துத்துளி மிஞ்சி வருத
லாகுமென வுற்றவுடம்பி லறலெ லாமழியு—மதனாலே
வெப்ப மறும்பாரமு மேறுதலை யிற்பொலியுள்தீ வினையுமு
மாறுமிது மெய்ப்படு மிண்டா மரிய வேதுவது—தெரிவாயே.
(தே. சேகரப்பா 270.)

(பொருள்) : திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவைகளை ஓரளவாகக் கொண்டு மைபோலரைத்துத் துணியிலுருட்டித் திரிகளாக்கி, அத்திரி ஒன்றை எடுத்து வேப்ப நெய்யிற்றுவைத்துக் கொளுத்தி உடம்பை போர்வையிட்டு மூடிக்கொண்டு அப்புகையில் இரண்டு நாழிகை வரையில் முகத்தைக் காட்டிக்கொண்டிருக்க, இரண்டு மூக்குத்துளைகளிலிருந்து மழைநீர் போல் சொட்டு வதன்றி இரு கண்களிலிருந்தும் பூவின் தேன் போல் நீர் சொட்டும். அதனால் உடலில் காணும் நோய்நீங்கி வெப்பம் தணிந்து உடலின் பளுவும், தலை நோயும் நீங்கும். இஃது சிறந்த வியர்வை பிடித்தலென அறிந்து கொள்க.

தலை முழுக்கு எண்ணெய்.—(1) சித்த வைத்தியத் திரட்டிற் கூறிய அரக்குத்தைலம், சுக்குத்தைலம், பீனசத்தைலம், கரிசாலைத்தைலம் நொச்சித்தைலம் போன்றவைகளில் ஒன்றைக்கொண்டு வாரத்திற்கொரு முறையாகத் தலைமுழுகி வரவும்.

(2) நொச்சி, ஆடுதீண்டாப்பாளை, தும்பை, கரிசாலை, கருப்பு வெற்றிலை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்று, எண்ணெய் படி ஒன்று, பசும்பால் படி ஒன்று கூட்டியதில், கஸ்துாரிமஞ்சள், சிற்றரத்தை, கண்டுபாரங்கி, வெண்மிளகு, பச்சிலை, விலாமிச்சி. சடாமாஞ்சி, செவ்வல்லித்தண்டு வகைக்குப் பலம் ஒன்றாகக்கொண்டு அரைத்ததி லிட்டுச் சிறு தீயால் எரித்து வடித்து வைத்துக்கொண்டு தலை முழுகிவர நீர் மூக்கடைப்பு நோய் தீரும்.

(3) கற்றாழையின் சோற்றைப் பிசைந்தெடுத்த சாறு படி இரண்டு, செவ்விளனீர் படி ஒன்று, வல்லாரைச்சாறு, பொன்னாங்காணி, நாரத்தம் பழச்சாறு, பால் வகைக்குப் படி, ஒன்று, எண்ணெய் படி ஒன்று ஆகக் கூட்டியதில், அதிமதுரம், வெள்ளை மிளகு, சீந்திற்றண்டு, பறங்கிச் சக்கை, வால்மிளகு, நற்சீரகம், கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, சிறுநாகப்பூ வகைக்குப் பலம் ஒன்றாகக் கொண்டு அரைத்துக் கலக்கிக் காய்த்து வடிக்கவும். இதனைக் கொண்டு வாரத்திற்கு இரண்டு நாள் தலை முழுகிவர குருதி மூக்கு அடைப்பு நோய் நீங்கும்.

(4) தும்பை வேர், கண்டங்கத்தரி வேர், கொடிவேலி வேர்ப் பட்டை, முருங்கைப்பட்டை, பாதிரிப்பட்டை, ஆயில்பட்டை, சிற்றரத்தை பேரரத்தை, சங்கன்வேர், வேலிப்பருத்திவேர், வகைக்குப் பலம் பத்தாகக் கொண்டு பஞ்சுபோல் இடித்து, நீர் படிநான்கு கூட்டி, ஒரு படியாக வடித்து அத்துடன் ஆட்டுப் பால் படி ஒன்று, பசுவின்பால் படி ஒன்று எண்ணெய் படி ஒன்று கூட்டி, கோட்டம், கஸ்துாரிமஞ்சள், மாஞ்சில், நன்னாரி, ?ப்பை, சோம்பு, வாய்விளங்கம், வெண்மிளகு வகைக்குப் பலம் ஒன்று கொண்டு அம்மியிலிட்டு மைபோலரைத்து, எண்ணெ யோடு கூட்டி, மெழுகுபோற்றிரண்டுவரும் பொழுது வடித்தெடுக்கவும், சூடாக இருக்கும் போதே அதில் குங்குமப்பூ, கோரோசனம் வகைக்கு ஒரு விராகனெடை பொடித்துக் கூட்டிக் கலக்கவும், இதனைக் கொண்டு வாரத்திற்கு இரண்டு முறையாகத் தலை முழுகிவர கழுத்து நோயும், சீநீர், சிராய், மூக்கடைப்பு நோய்களும் தீரும்.

(5) சவுரிப் பழச்சாறு, பொடுதலைச் சாறு, பொன்னாங்காணிச் சாறு, எருக்கன் பழுப்பின் சாறு வகைக்குப் படி ஒன்று, மிளகு, சிற்றரத்தை, கொடிவேலிப்வேர்ப் பட்டை, வசம்பு, சாதிக்காய். சாதிபத்திரி, பச்சிலை, கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, கிச்சிலிக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள் வகைக்குப் பலம் ஒன்று, பசுப் பால் படி ஒன்று, எண்ணெய் படி ஒன்று, சாறு வகைகளையும் எண்ணெய் பால் வகைகளையும் ஒன்றாகக் கூட்டியதில் சரக்குகளைப் பாலிட்டரைத்துக் கலக்கிக் காய்த்ததில் சாம்பிராணிப் பொடி பலம் இரண்டு தூவிக் கலக்கி வைத்துக் கொண்டு தலை முழுகிவர, மூக்கடைப்பு நோய் தீருவதேயன்றி இந்நோயிலுண்டாம் தலை வலி முதலியவையும் நீங்கும்.

உள்ளுக்கு மருந்து.—ஐயத்தைத் தணித்ததற்காக, வசந்தகுசுமாகர மாத்திரையைத் துளசிச் சாற்றிலேனும், தும்பைப்பூச் சாற்றிலேனுமிழைத்துத் தேன் கூட்டிக் கொடுக்கலாம் அல்லது கஸ்தூரிக் கருப்புடன் மேற்கூறிய துணை மருந்துகளோடும் கொடுக்கலாம். இத்துடன் வேண்டுமாயின் ஐயத்தை நீக்கும் நீறு (பற்ப) வகையுள் ஒன்றிலேனும் கொடுக்கலாம்.

அழல்குற்றத்தைப் பெரிதும் முதலாகக் கொண்ட நோயில், முத்து, பவளம், மாணிக்கம் இவைகளைக் கொண்டு செய்த பற்பங்களுக்கு, வல்லாரை நெய், தண்ணீர் விட்டான் நெய் போன்ற குளிர்ச்சி தரும் வகைகளுள் ஒன்றைத் துணைக்கூட்டிக் கொடுக்கலாம்.

மேக நோயாலெழுந்த நோயில் இரச கந்தத்தாலாக்கிய பற்பச் செந்தூரங்களையும், சேராங்கொட்டை நெய்யாகிலும், மேக நோய்க்காகச் செய்யும் நெய்யையாகிலும் துணையாக் கொடுக்கலாம்.

உணவு.—இந்நோய் ஐயப்பெருக்கால் வரும் நோயாதலால், உணவில் உடற்கு வெப்பத்தைத் தரும் பொருளாகவே கொள்ளுதல் வேண்டும். மிளகு சேர்ந்த இரசம் குழம்பு வகைகளைக் கொள்ளுதலும், கரிசாலை, மணத்தக்காளி, கத்தரிப்பிஞ்சு, முருங்கைக்காய், கருணைக் கிழங்கு போன்ற காய்கறிகளைக் கொண்டு, சுரைக்காய், பூசணிக்காய், பீர்க்கு, புடலை முதலிய ஐயத்தைப் பெருக்கக்கூடியவைகளை நீக்கி வைப்பது மிக நன்றாம்.

கவிச்சிப் பொருள் கொள்வோர் வரப்பு நண்டு, கச்சற்கருவாடு இவைகளில் ஒன்றில் மிளகு கூட்டிக்கொள்ளலாம்.

# குருதியழல் நோய்

வேறு பெயர் : இரத்த பித்தம்,

இயல்:—குருதியழல் நோய் என்பது, குருதி+அழல்+நோய் எனப் பிரிவுபடும். குருதி=செந்நீர் (இரத்தம்). அழல்—வெப்பு, தீ, பித்தம். நோய்—பிணி எனப் பொருள்படும். இஃது உடற்பட்டுகளில் (தாதுக்களில்) இரண்டாவதான குருதி தன்னளவிலும், அழல் என்னும் பித்தம் தன்னளவிலும் மிகுவதனால் உண்டாகும் நோயாகும். அதாவது அகப்புற வேற்றுமைகளால், தன்னிலை மாறிய அழல், குருதியைக் கேடடையச் செய்து அதனைத் தன் வழியே செல்லவிடாது, கண், மூக்கு, வாய், எருவாய் (மூலம்), கருவாய் (யோனி) நீர்த்தாரை, தோல் இவைகளின் வழியே அதை வெளியாகுமாறு செய்து அஞ்சச் செய்யும் நோயாம்.

இயற்கையாக நோய்க்குத் தூண்டுதலாக இருப்பது, குற்றங்களே எனக் கூறியிருக்க, இந்நோய்க்குப் பெயரிடுங்கால், அக்குற்றத்தின் பெயரை முன் அமைக்காது, குருதியை முன்னமைத்தது யாதோ வெனின்? இந்நோயில், தன்னிலை திரிந்த அழலை முற்படுத்தியது குருதியே யாகலின், குருதியை முன்னும் அழலையைப் பின்னுமாய் அமைத்துக் குருதியழல் நோய் என வழங்கலாயிற்று.

நோய் வரும் வழி.—வெய்யிலில் மிகுதியும் அலைந்து திரிதல், வெப்பத்தை உண்டாக்கும் பொருள்களாகிய உப்பு, காரம், புளிப்பு ஆகிய இப்பொருள்களையும் அளவு கடந்து உண்ணல், கலவியில் தன்வன்மை கடந்து ஈடுபடல் ஆகியவற்றாலும், ஐம்புலனையடக்கவும், உடலைக் காக்கவும் செய்யும் யோகத்துள் ஒவ்வொரு நிலையையும் தன்வயம் அடக்கிச் செய்யும் முறையில் உண்டாம் கேட்டாலும், அழல் (பித்தக்) குற்றம் தன்னளவில் மிகுந்து, குருதியை இளக்கியோ, கடினப்படுத்தியோ காலின் (வாயுவின்) தூண்டுதலால் இந்நோயைப் பிறப்பிக்கும். அழலின் கேட்டால், அகடு (வயிறு), வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல், நுரையிரல், சிறு நீர்ப்பை, பெருங்குடல், சிறுகுடல், தமரகம் (இருதயம்) இவைகள் சீர்குலைந்து, வெதும்பி வரண்டு, அவைகளிலிருக்கும் குருதி கேட டைந்து வெளியாகும். இந்நோய், சற்றேறக்குறைய பியூர்பிரா (Purpura) என மேல் நாட்டார் கூறும் நோயை ஒக்கும்.

நோயின் வகை :— இந் நோயின் வகையைக் குற்ற அளவாக (1) வளிக் குருதியழல் நோய், (2) தீக்குருதி யழல்நோய், (3) ஐயக் குருதியழல் நோய், (4) வளித்தீக்குருதியழல்நோய், (5) வளி ஐயக் குருதியழல் நோய், (6) ஐயவளிக் குருதியழல் நோய், (7) ஐயழல் குருதியழல் நோய், (8) முக்குற்ற குருதியழல் நோய் என எண் வகயாகக் கூறுவர். மற்றோர் சாரார், இந்நோயை, வெளியாகும் குருதியின் நோக்கைக் கொண்டு, மேல் நோக்கு, கீழ்நோக்கு, இரு நோக்கு, அளவிலா நோக்கு என நான்கு வகையாகவும் வகுப்பார். இவ்வாறாக வகுத்து, வெளியாகுங் குருதியின் நோக்கிற்கு முதன்மை யாய் இருந்தகாலை (வாயுவை) உணர்த்தி, அதனைத் தன்னிலைப் படுத்துவதற்காம் வழிகளைத் தேடுதற்பொருட்டு, இவ்வகையாய்ப் பிரித் தனர் போலும் ; இஃது எவ்வாறேனின், மேல்நோக்குக் குருதி அழல் நோய் என்பதில், மேல் நோக்குக்கால் (உதான வாயு) தன்னிலையில் மிகுந்து உண்டாகும் நோய் எனக் குறிப்பிடுவதால், இந்நோயைப் பரிகரிக்க முதன்முதல் மேல் நோக்குக்காலை, தன்னிலை யடையச் செய்தற்கான வழியைத் தேடு எனக் காட்டும். அவ்வாறே மற்றவை களுக்குமாம்.

முற்குறிகள் :

இந்நோய் வருவதற்கு முன்பே, தலைபளுவு, உணவில் வெறுப்பு, புகைந்து புகைந்து இருமல், உடல் வறட்சி அடைந்து தோல் சுருங்கல், வாய் நீர் ஊறல், வாய் கவிச்சடித்தல், அல்லது களிம்புமணம் வீசல், வாய் குமட்டிக்குமட்டி வாந்தியாதல், அல்லது குருதி அல்லது பித்தம் கலந்திருத்தல், புளிப்புக் பொருளில் இச்சை உண்டாதல், அதனைத் தின்றபின் வாந்தி யாதல், தொண்டை எரிதல், வாய் புண்ணாதல் முதலிய குறிகள் காணும். பின்னர்க் குரற்கம்மல், சிணுக்கு இருமல், சிறு இரைப்பு, நாச்சுவையறியாமை, உடல் மெலிதல், கண், கன்னம், தொண்டை, உடல் இவைகள் மஞ்சள், சிவப்பு, பச்சை நிறங்களில் ஏதேனும் ஒன்றைப் பெறுதல், முடிவில் பாயலில் கிடக்கச் செய்தல் ஆகியவை தோன்றும்.

வளிக்குருதியழல் நோய் :

இந் நோயில், குருதியழல் நோய்க்குள்ள பொதுக் குறிகுணங்களோடு வளிக்குற்றத்தினால் ஏற்படும் குணங்களும் சேரும். அவைகள், உடல் நோதல், குருதி கருநிறமடைந்து கனமின்றி வெளியாதல்:

சில வேளை நுரையுடன் காணுதல், எரு (மலம்) கட்டி ஆட்டுப்புழுக்கையைப் போல வெளியாதல், அல்லது வெளியாகும்போது மிகுந்த வலியைத் தந்து, அத்துடன் குருதியும் கலந்து வெளியாதல் என்னுங் குறிகுணங்களையும் காட்டுவிக்கும்.

அழல் தீக்குருதியழல் நோய் (அழல்)

இந்நோயில் தீக்குற்றமே தன்னளவில் மிகுதியாகக் கேடடைந்து வருதலால், அழல் பெரிது எழுந்து பல துன்பங்களைப் பிறப்பிக்கும். இந்நோயின் குருதி அளவற்று வெளியாகும். அக்குருதி, மிகுந்த அழலின் கொடுமையால், தீய்ந்து, நிறம் குறைந்து, நீர்த்து, சருகு ஊறிய நீரின் நிறம் போல வெளியாகும். சிலவேளை குருதியுடன், பித்தப் பையிலுள்ள நீரும் சேர்ந்து வெளி வரும். அதனால், உடல் வெளுத்து மஞ்சள் நிறத்தைப் பெறும், கண், நா, தோல் முதலியன பசுமையை அடைவதும், சில வேளைகளில் வெளியாம் குருதி, பசையின்றி நல்ல சிவந்த நிறத்துடன் வெளியாவதும் உண்டு. குருதியுடன் பித்தநீர் கலத்தலால் உடல் பச்சை நிறமடைந்து பார்வைக்கு இந் நோயினன் காமாலை நோயினன் போற் காணப்படுவன்.

ஐயக்குருதியழல் நோய் :

ஐயத்தால் எழுந்த அழல் நோயின் வெளியாம் குருதி, சற்று வெளுத்தும், அதிக அளவில் கோழை சேர்ந்தும், புலால் நாற்றத்தைப் பெற்றுக் கடினப்பட்டும் இருக்கும். அன்றியும், ஓயா இருமல், சிறு அளவில் சுரம் காய்தல்,மூக்குநீர் வடிதல் முதலிய குறிகளும் காணப்படும்.

வளித்திக்குருதியழல் நோய் :

இந்நோயிலும், முற்கூறியவாறே வளிக்குருதியழல் நோயின் குறி குணங்களோடு, தீக்குற்றத்தால் எழும் குறிகுணங்கள் சிலவும் பொதிந் திருக்கும்.

வளிஐயக் குருதியழல் நோய் :

இது வளிக் குருதியழல் நோயில் தோன்றும் குறிகுணங்கள் யாவற் றையும், ஐயக் குருதியழலின் குணங்களில் காணும் சில அல்லது பல குறி குணங்களையும் பெற்றுக் குருதி வெளிப்படும்.

ஐயவளிக்குருதியழல் நோய் ;

இதில், ஐயத்தின் பெருக்கினால், வந்த குருதியழல் நோயிலுண்டாகுங் குறிகுணங்களோடு, வளிக் குற்றத்தின் குறி குணங்கள் சிலவும் சேர்ந்திருக்கும்.

ஐயத்தீக்குருதியழல் நோய் :

இந்நோயில், குருதியழல் நோய்க்கு உரிய குறிகுணங்களும், ஐய மிகுதியால் தோன்றும் குறிகுணங்களும், தீக்குற்றத்தில் காணப்படும் சில குணங்களும் கலந்திருக்கும்.

முக்குற்றக் குருதியழல் நோய் :

இந்நோய், முக்குற்றங்களும் ஒரே காலத்தில் தன்னிலை மீறுவதால். வருவதாதலின், உடல் நிலை மிகுதியும் கேடடையும். அதனால் எழும் குறிகுணங்கள் யாவும் சன்னி நோயை ஒக்கும். அன்றியும், இதில் குருதியழலுக்குரிய எல்லாக் குறிக்குணங்களும் இணைந்திருக்கும் எளிதில் தீரா நோயாம்.

நோயின் பொதுக்குறி குணங்கள் ;

மேற்கூறிய முற்குறிகளைக் காட்டி, இருமல், வாந்தி, இரைப்பு ஆகிய நோய்களை உண்டாக்கி, இருமும் பொழுதும், வாந்தி பண்ணும் பொழுதும் அளவிலாக் குருதியை வெளியாக்கும். சில வேளை மூக்கு, கண், காது, கீழ்வாய், சிறுநீர்த்தாரை, தோல் இவைகளினின்றுங் குருதி வெளியாகும். உடல், நாளுக்குநாள் வன்மையை இழப்ப தோடு, தோல் சுருங்கி வறட்சியடைந்து குருதியை வெளிப்படுத்தும், அங்ஙனம் வெளிப்பட்ட அளவிற்கேற்ப, உடலில் குருதி குறைந்து. உடல், வெளுத்து, பெருமூச்சு, களைப்பு, நீர்வேட்கை, விக்கல் உண்டாய் கால் கை, முகம் இவைகள் வீங்குதல் ஆகிய குறி குணங்கள் உண்டாம்,

மேல் நோக்குக் குருதியழல் நோய் :

அழலின் (பித்தத்தின்) மிகுதியால், மேல்நோக்குக்கால் (உதான வாயு) தூண்டப்பட்டு, அது தன்னளவில் மிகுந்து குருதியைக் கெடுத்து வாந்தி, இருமல், தும்மல், விக்கல், ஏப்பம் இவைகளை எழுப்பி, இருமி இருமி வாந்தியெடுக்குமாறு செய்யும், அவ்வாந்தியில் பச்சைக் குருதி நுரையுடனும் வெளியாவதுண்டு, அங்ஙனம் மேல் நோக்குக்

கால், அகட்டை (வயிற்றை)த் தாக்கின், அங்கு இயற்கையாயுள்ள ஐயத்தையும் துணைகொண்டு, குருதியை இறுகச் செய்து, வயிற்றைக் கடுத்துக் கட்டிமுட்டிகளாய்க் குருதியைக் கருநிறத்துடன் வாந்தி செய்விக்கும். அக்கால், தமரகம், இடப்பாட்டீரல், வலப்பாட்டீரல் என்னும் இவைகளைத் தாக்கின், அவ்வவ்விடங்களில் குத்தல், நோதல் என்னும் துன்பங்களை விளைவித்து, குருதியை இளகச்செய்து வெளியாக்கும். வெளியாகுங் குருதியின் அளவாய் ஆயாசம் இளைப்பு, பிசுபிசுத்த வியர்வை தோன்றல், கண்பஞ்சடைதல், உடல் வெளுத்தல் என்னும் குறி குணங்களைக் காட்டும்.

கீழ்நோக்குக் குருதியழல் நோய் :

இந்நோயில், கீழ்நோக்குக்கால், (அபானவாயு) தன்னளவில் மிகுந்த அழலின் (பித்தத்தின்) அளவாக மீறி, உந்திக்குக் கீழுள்ள பெருங்குடல், நீர்ப்பை, நீர்த்தாரை இவைகளையும், நடுக்காலும் (சமானவாயும்) மேற்கூறியவாறே மிகுந்து, சிறுகுடல், குண்டிக்காய் இவைகளையும் வெதுப்பி, மிகுந்த கழிச்சல், அடிக்கடி நீரிழிதல் ஆகியவற்றை உண்டாக்கி, அத்துடன் குருதியையும் அளவு கடந்திழியச் செய்யும். தேரன், '' நீர்ப் புழை நெருப்புப் போலாம் '' என்றவாறு நீர்த்தாரை மிகுதியும் கடுக்கும். எருவாயில் நமையுடன் எரியு ஆகிய குறிகள் காணும்.

இருநோக்குக் குருதியழல் நோய் :

கீழ்நோக்குக்கால், மேல் நோக்குக்கால் அபானன், உதானன் ஆகிய இவ்விரண்டும் ஒரே காலத்தில், அழலால் தூண்டப்பட்டு, இந் நோயைப் பிறப்பிக்கும். ஆகையால், மேற்கூறிய முதலிரண்டு நோய் களின் குறிகுணங்களும் ஒன்றுபட்டுக் காணும், கீழ்நோக்குக்காலின் இயலால், மிகுந்த கழிச்சல் சிறுநீரிழிதல் என்னும் குணங்களோடு, குருதியும் வெளியாகும். அவ்வாறே மேல்நோக்குங்காலின் இயலால், வாந்தியுடன் குருதி வெளியாகும். இங்ஙனம் கீழும் மேலுமாகக் குருதி வெளிப்படுதலால் உடல் மிகுதியும் கேடடையும்.

அளவிலா நோக்குக் குருதியழல் நோய் :

இந்நோயில், கீழ்நோக்குக்கால் (அபானன்), மேல் நோக்குக் கால் (உதானன்), நடுக்கால் (சமானன்), பரவுகால் (வியானன்) என்னும் இந் நான்கும் ஒரே காலத்து அழலால் தூண்டப்பட்டு, அடங்கா

நிலையை அடைந்து, உடலில் உள்ள எல்லாத் துளைகளிலும் குருதியை வெளிப்படுத்தும். ஆயினும், பரவுகாலே (வியானவாயுவே) மிகுதியும் கேடடைவதால், கண், செவி, தோல் முதலிய இடங்களில் தாங்கமுடியாத எரிச்சலுண்டாகி, உடலெங்கும் வியர்வை வியர்ப்பது போலக் குருதி சிறுகச் சிறுக இடைவிடாது கசியும். தாங்கமுடியாத நீர்வேட்கை, நாவறட்சி, உணவில் வெறுப்பு, உடல், கண் இவை மஞ்சள் நிறமடைதல் ஆகிய குறிகுணங்களையும் தோற்றுவிக்கும்.

நீரும் நீராத நோய்கள் :

மேல்நோக்குக் கீழ்நோக்குக் குருதியழல் நோய் இரண்டும் தீருவனவாம். மற்றவிரண்டும் உயர்தரமான மருந்தைக்கொடுத்தாலல்லாமல் நீங்குவனவல்ல. மற்ற எந்நோயிலேனும் பன்னாட்கள் தாக்கப்பட்டு உடல் மெலிந்த நிலையிலும், வன்மை குறைந்த முதிர்ந்த வயதிலும், மிகு நாள் பட்டினியோடிருக்கும் காலத்திலும் இந்நோய்வரின் எளிதில் தீராதாம். அன்றியும், வெளியாகுங் குருதி, மிகுந்த கருமை, செம்மை, பச்சை, நீலம், மஞ்சள், மஞ்சளின் செம்மை, மண்ணின் செம்மை, நாவற்கனிச் சாற்றின் நிறம் ஆகிய இந்நிறங்களை ஒத்திருப்பினும் தீராவாம். மேலும், கண், உடல், தோல் இவைகளில் தாங்கமுடியாத எரிச்சல், வாய் எப்பொழுதும் கைத்தல் என்னுங் குறிகள் தோன்றினும் நீங்காதெனக்கொள்க.

குற்ற முதலிய வேறுபாடுகள் :

மிகுந்த நடை, வெய்யிலில் திரிதல், சூட்டை உண்டாக்கக்கூடிய பொருட்களை மிகுதியும் புசித்தல் ஆகிய இத்தகைய செயலால், அழல் (பித்தம்) குற்றம் தன்னளவில் மிகுந்து, உடலில் வெப்பத்தை உண்டாக்கி ஆங்காங்கு தத்தம் இயற்கைச் செயலைச் செய்து கொண்டிருக்கும் காலை (வாயுவை) தூண்டியெழச் செய்யும், மிகுந்த குற்றத்தின் அளவாகவும், தன்னளவில் பெருகிய காலின் (வாயுவின்) அளவாகவும் நோய் பிறக்கும். நோய்க்கு முதற் தூண்டுதலாய் இருந்தது தீக்குற்றமேயாயினும், உடலில் ஒன்றுகெட மற்றொன்றும் கேடடைவது இயல்பாதலால், மற்றைய இரண்டு குற்றங்களுங் கேடடையும், ஆதலின், இந்நோயினைக் குற்ற அளவாக வகுக்குங்காலை, வளி, தீ, ஐய முதலிய குருதியழல் நோய் எனவகுத்ததுமல்லாமல், கால்கள் (வாயுவில்) தன்னளவில் மிகுந்

தனதைக்கொண்டு, மேல் நோக்குக் குருதியழல் நோய் என்றும் கீழ் நோக்குக் குருதியழல் நோய், இருநோக்குக் குருதியழல் நோய், அளவிலாக் குருதியழல் நோய் எனத் தன்னளவில் மிகுந்த கால் களைக் குறித்தற்கு இட்ட பெயர்களால் குற்ற முதலிய வேறுபாடுகளை எளிதில் அறியும் வகையையுமுணர்த்தும்.

**மருத்துவம் :**

இந்நோயில் கேடடைந்த குற்றம் அழலேயாயினும் வெளியே குருதியை வெளிப்படுத்துவது கால்களே (வாயுகளே) ஆகையால் தன்னிலை மிகுதிப்பட்ட வாயுவைத் தன்னிலைப்படுத்தற் பொருட்டு, குடிநீர் போன்ற மருந்துகளை முதல் முதல் ஈந்து வயிறு போகு மாறு செய்து, அதன் பின் கேடடைந்த குற்றத்திற்கும், தன்னளவில் மீறிய குருதிக்கும் ஏற்ற மருந்தைக் கொடுத்தல் வேண்டும்.

குடிநீர் வகை.—செம்பருத்திப்பூ, பொடுதலை இலை, மாசிப்பச்சை, நிலவிளா இலை, நுணா இலை, இவைகள் வகைக்கு ஒருபிடியாய்க் கொண்டு குறுக நறுக்கி, சட்டியிலிட்டு வதக்கி, அத்துடன் மாசிக்காய், கடுக்காய்ப்பூ, காவிக்கல் ஆகியவற்றை வகைக்கு ஒரு விராகனெடை யாய்க் கூட்டி, ஒரு படி நீர் விட்டு ஆழாக்காய்க் காய்ச்சி, அதில் பாதி யைக் காலையிலும், மற்றொரு பாதியை மாலையிலும் கொடுக்க, மேல் நோக்குக்காலைத் தன்னிலையடையச் செய்து, குருதி வாந்தி யையும் நீக்கும்.

சீந்திற்றண்டு, ஆடாதோடை, பற்பாடகம், கண்டங்கத்திரி வேர், இம்பூரல் வேர் இவை வகைக்குப் பலம் ஒன்று, சாதிக்காய், சாதிபத்திரி, கொம்பரக்கு வகைக்கு ஒரு விராகன் எடை, நீர் படி அரை கூட்டி, $1\frac{1}{2}$ ஆழாக்காய் வற்றக் காய்ச்சி, காலை மாலை கொள்ளவும். இஃது, இருமலைத் தடுத்து, குருதி வாந்தியை நிறுத்தி நோயைப் போக்கும்.

துளசி வேர், கஞ்சாங்கோரை வேர், தும்பை வேர், வில்வ வேர்ப் பட்டை வகைக்குப் பலம் ஒன்று, அதிமதுரம், சிறுநாகப்பூ, கொத்து மல்லி, சோம்பு வகைக்குப் பலம் $\frac{1}{2}$ இவற்றைக் கூட்டி முறைப்படி குடி நீராக்கி இரு பங்காக்கி காலை மாலை கொள்ள, அளவிலா நோக்கு நோய்கள் நீங்கும்.

ஒதியம்பட்டை, அத்திப்பிஞ்சு, மயில் கொன்றைப்பட்டை, நுணாப் பட்டை வகைக்குப் பலம், இரண்டு சாதிக்காய், சாதிப்பத்ரி, காவிக்கல், காசுக் கட்டி வகைக்கு பலம் அரைக்கால் இவற்றைச் சேர்த்து, முறைப் படி குடி நீராக்கிக் காலை மாலையில் பங்கிட்டுக் கொடுக்க, கீழ்நோக்கு நோயில் எருவாய் வழியே வெளியாகும் குருதிப்போக்கு குணமாகும்.

சிறு கீரை, பசரை, நெருஞ்சி முள், காசினி விதை, வெள்ளரிப் பருப்பு, இலவம் பிசின் வகைக்குப் பலம் ஒன்று எடுத்து விதிப்படி குடி நீர் செய்து, அத்துடன் வேண்டிய அளவு பனங்கற்கண்டும், ஒரு சிட்டிக்கை வெண் குங்கிலியப் பொடியும் சேர்த்துக் குடிக்க, நீர்த்தாரை வழியே குருதி குணமடையும்.

அத்தி, அரசு, ஆல், இத்தி, நாவல் இவ்வைந்தின் பட்டையையும் முறைப்படி குடிநீராக்கி, ஓர் ஆழாக்கில் மூன்று சிட்டிகை காவிக்கல் பொடியும் ஒரு சிட்டிகை படிகாரப் பொடியும் இட்டு, காலை மாலை குடித்தும், எருவாயைக் கழுவியேனும் பீச்சிட்டேனும் வர கீழ் நோக்கு நோயில், எருவாய் (ஆசன) வழியே போகும் குருதி நிற்கும்.

இளநீர் படி 2, கற்றாழை மடல் சாறுபடி ஒன்றும் கூட்டியதில் மாந்துளிர், நாவல் துளிர், தாளிக் கீரை, நுணாக்கொழுந்து வகைக்கு மூன்று பிடியாகச் சேர்த்து, நீர் படி ஒன்று கூட்டி எட்டொன்றாகக் ஒன்றாய்க் காய்ச்சி வடித்து, அதில் காலை மாலைகளில் அரை ஆழாக்கு வீதம் குடித்து வருதல் வேண்டும்.

காவிக்கல், செம்மண், காந்தத் தூள், புற்றுச்சோறு இவற்றை ஓரளவாக் கூட்டி கற்றாழைச் சாற்றில் கலக்கி, உடல் முழுமையும் பூசி ஒரு நாள் இருந்து மறுநாள் குளிக்கவும்; இவ்வாறு இரண்டு மூன்று நாட்கள் செய்து வர, அளவிலா நோக்கில் தோலில் இருந்து கசியும் குருதியும் எரிச்சலும் போம்.

வேறு.—கோழிமுட்டை வெண் கருவுடன் காய்ச்சின பசும்பாலைச் சேர்த்து நன்றாக அடித்து நுரை நீக்கி, அதில் சீனா கற்கண்டுப் பொடி, இலவம் பிசின்பொடி, புளியங்கொட்டைத் தோலின் தூள், ஏலரிசிப் பொடி, துணி சுட்ட சாம்பல் வகைக்கு ஒரு சிட்டிகைச் சேர்த்துக் கலந்து அதில், முத்து, பவழம், கிலாசத்து இவைகளின் பற்பங்களில் ஏதாவ தொன்றை ஒன்று அல்லது $\frac{1}{2}$ குன்றி எடை கலந்து கொடுக்க இரத்த வாந்தி நிற்கும்.

இவற்றால் குணமாகாவிடின், முத்து பற்பம், பவள பற்பம், மாணிக்க பற்பம், நாக பற்பம், சங்கு பற்பம், பலகரை பற்பம் அய பற்பம் இவைகளைக் கையாள வேண்டும். நோய் வன்மைக்கு ஏற்ற வாறு, கீழக்கூறிய நெய், இலேகியம், பொடி (சூரணம்) அல்லது தனிக்கடைச் சரக்குகள் இவற்றைத் தக்க அளவில் துணையாய்க் கூட்டிக் கொடுக்கவும்.

அவைகள் :—

நெய் வகைகளில்.—தண்ணீர் விட்டான் நெய், மாதுளைப் பூ நெய், பிரமி நெய்.

இலேகியங்களில் : இம்பூரல் லேகியம், கொடி மாதுளை (துருஞ்சி நாரத்தை) லேகியம், வில்வாதி லேகியம்.

பொடி.—சீந்தில் சூரணம், ஏலாதிச் சூரணம், பறங்கிப்பட்டைச் சூரணம்.

தனிச் சரக்குகள்.—சிறு நாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், காவிக்கல், இலவம்பிசின், மாதுளைப் பூ, செம்பருத்திப் பூ.

மேல் நாட்டினர், இந்நோயைப் பியுர்பியுரா என வழங்குவர் இதற்கு அன்னார் கையாளும் மருந்துகளையும் சில இங்குக் கூறுவாம் நெல்லிக்கனி, எலுமிச்சை முதலிய புளிப்புப் பொருள்களில் நிறைந் துள்ள சத்தை விடமின் " சீ " " கே " எனக் கூறுவர். இம் மருந்தை வில்லையாய்ச் செய்து உள்ளுக்குக் கொடுத்தும், நீரில் கலக்கி ஊசித் துளை வழி உடலில் செலுத்தியும் இந்நோயைக் குணமாக்குவர். அன்றியும், பவளம், முத்து, நத்தை, சிப்பி இவைகளின் சத்தாகிய கால்சியம் கூடிய உப்பினையும் உள்ளுக்குக் கொடுத்தலும் ஊசி வழி உடலுக்குள் செலுத்தலும் செய்வர்.

உணவு.—தன்னளவில் மிகுந்த அழல் குற்றமும் குருதியும் தணி யும் படியான உணவு வகைகளையே கொடுத்து வரல் வேண்டுமாதலால் மிகுந்த புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு உள்ள பொருள்களை நீக்கல் வேண் டும். அன்றியும், குருதியைப் பெருக்குந் தன்மையுடைய பொருள் களைக் கணக்கறிந்தாள வேண்டும். நோய் மிக வன்மை பெற்றி ருக்கும்பொழுது இருமுறை வடித்த சோறு, அல்லது கஞ்சி, சவ்வரிசிக் கஞ்சி, பொரிக் கஞ்சி கொடுத்தலும், நோய் வன்மை குறைந்து வரும் நாளில் மணக்கத்தை அரிசி அல்லது கருங்குருவை அரிசி இவற்றால்

ஆக்கிய சோறும், அத்திப் பிஞ்சு, கத்தரிப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, வாழைக்கச்சல் ஆகிய காய் வகைகளும், காடை, கௌதாரி, ஆடு இவைகளின் ஊனும், அல்லது இவற்றின் சத்தும் (Soups) கொடுத்தலும் இன்றியமையாதது. நாளடைவில் செரிக்கும் வன்மைபெறின் ஆட்டு ஈரலின் சத்தை இறக்கியும், அல்லது அதைச் சமைத்துக் கொடுக்கலாம். பால், மோர், நெய், வெண்ணெய், முட்டை, இவை போன்ற ஊட்டம் தரும் பண்டங்களைக் கொடுத்தல் நல்லது. அன்றியும், கீரை வகைகளில் மணத்தக்காளி, பொன்னாங்காணி, சிறு கீரை, தாளிக் கீரை, பசரைக் கீரை, வசலைக் கீரை, புளியாரை, சுக்கான் கீரை இவற்றுள் ஏதாவதொன்றை நாளும் கறியாக்கி ஈவது நல்லது.

## இருமல் நோய்.

வேறு பெயர் : காசம், ஈளை.

இயல்.—ஐயம் (கபம்) தொண்டையிலும், மார்பிலும் சேர்ந்து கோழையை உண்டாக்கி, அக்கோழையை வெளியாக்குதற்கும், பித்தமேனும், கபமேனும் தொண்டை, மூக்கு, உண்ணாக்கு, நுரையீரல் முதலிய இடங்களில் சேருவதால், ஆங்குப் புண்ணாய் அப்புண்ணிலிருந்து கசியும் கோழை, நிணநீர், சளி முதலியவைகள் வெளியாதற்கும் உண்டான உடலின் இயற்கையெழுச்சியால் உண்டாகும் ஒலியே இருமல் எனப்படும். இவ்வொலி, ஓட்டை வெண்கலத்தின் மீது தட்டுவதாலுண்டாம் ஒலியை யொக்கும். அல்லது தொண்டை வறண்டு போவதாலெழும் ஒலியைப் போன்று கணீர் கணீர் எனப் பிறக்கும்.

நோய் தோன்றும் வழி.—இந் நோய், குளிர்காற்றிலீடுபடல், வெய்யிலில் மிகுதியும் அலைதல், மிக்க குளிர்ச்சியைத் தரும் பொருளையும் சூட்டைத் தரும் பொருளையும் உண்ணல், பெரிதும் உரத்துப் பேசல், பாடல், முதலியவற்றாலும், புழுதி, மண், சுண்ணம், பூநீறு, புகை, மிக்க காரப்பொருள், நன்மணம், தீ மணம் ஆகியவற்றை முகர்வதாலும், பிறக்கும். அன்றியும் உள்ளும் வெளியுமாய் உலாவும் மூச்சு (காற்று) செல்லும் வழியில் உண்டாம் தடைகளாலும், உணவு உண்ணும் காலத்தில் உணவுப் பொருள்கள் அகடு வழி செல்லாது தவறிக் காற்றுச் செல்லும் வழியில் செல்லுதலாலும் (இதனைப் புரக்கோல் என வழங்குவர்) இருமலுண்டாவதுண்டு.

" வேகின்ற வதிகமாம் புகையினாலும்
மீறுகின்ற பாணத்தால் மிக்குந்தானே."

" பாணத்தால் பரமாக்கினி மிகுக்கை யாலும்
பாரமா மாமிசங்கள் புசிக்கை யாலும்
தாணத்தாள் சஞ்சாரந் தவிர்கை யாலும்
சரிப்படாப் பதார்த்தங்கள் புசித்த லாலும்
தீணத்தாற் பொசியா மலிருக்கை யாலும்
சேயிழையார் மேலின்பஞ் சிதைவ தாலும்
மாணத்தால் மாதுக்க மடைத லாலும்
மதத்தாலுஞ் சுவாசமது மருவுங் காணே."

" காணவே தேவதைக்குப் பிரித்த பண்டம்
களவாடித் தின்றாலுங் கணவன் றன்னைத்
தோணவே நிந்தையைச் சொல்வ தாலுஞ்
சுசியான பதார்த்தமெச்சில் பண்ணி னாலும்
வேணவே ஒருவர்செய்த நன்றி தன்னை
மிகமறந்து கொடுமைகடான் விளம்பு வோர்க்கும்
பேணவே சபைதனிலே சொன்ன பேச்சுப்
புரண்டோர்க்குங் காசமது பிறக்குந் தானே."

எனக்கூறியதில், மிகுந்த புகையிலீடுபடுதலாலும், குளிர்ந்த நீரை அடிக்கடி பருகலாலும், உடலில் மிகுதியும் வெப்பு உண்டாகும் செயலைச் செய்வதாலும், கறி, மீன் முதலியவைகளைப் புசிப்பதாலும், வேலைகள் ஒன்றுமில்லாது சும்மாயிருப்பதாலும், தனக்கு விருப்பமில்லாப் பொருள் களை யுண்பதாலும், பசியை அடக்கலாலும், பெண்ணின்மேல் இன்பஞ் சிதைதாலும், துக்கத்தாலும், உடல் கொழுத்தலாலும், கடவுளுக்கென செய்தபொருளைத் திருடித்தின்பதாலும், தன் கணவனை மதியாததாலும், பொய்கூறுவதாலும், உதவாப்பண்டங்களையும், இந்நோயுற்றவர் தின்ற பண்டங்களின் மிகுதியைத் தின்பதாலும், ஒருவர் செய்த நன்றியை மறப்பதாலும், கொடுமையாய் வார்த்தை பகருவதாலும், யாவரும் அறியக் கூறியதைப் புரட்டிக்கூறுவதாலும் இவ்விருமல் (காச) நோய் வருமென்று கூறியுள்ளனர். அன்றியும், தன் வன்மைக்கு மிகுதிப்பட தொண்டையெடுத்துப் பாடல், பேசுதல், மூச்சையடக்குதல், பனியில் படுத்துறங்கல், குளிர்காற்றில் இருத்தல், மிகக்குளிர்ச்சியைத் தரும் பொருள்களை உண்ணல் ஆகிய இச்செயல்களாலும் இந்நோய் பிறக்கும்.

நோய் எண்:

"தானான காசமது பன்னிரண் டாகுந்
தாக்கான மந்தார காசத் தோடு
பானான பக்கமந் தார காசம்
பாங்கான சுடர் காசம் வாத காசம்
பேனான பித்தமாங் காசத் தோடு
பேர்பெரிய சுவாசகா சத்தோ டொக்க
ஏனான இரத்தமாங் காசத் தோடு
இரைப்பான சிலேத்மகா சந்தா னாமே.
ஆகின்ற பீனிசத்தின் சுவாச காசம்
அழிவாத பித்தத்தின் காசமாகும்
போகின்ற பித்த சிலேட்ம காசந் தானே
புகழ்பெரிய சொந்தமாங் காசத்தோடு
தேகின்ற காசமது பனிரண் டாகுந்
தெளிவாக இதனுடைய செயலைக் கேள
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . .

என்றதில் 1. மந்தாரகாசம், 2. பக்கமந்தார இருமல், 3. சுடர் இருமல், 4. வளி இருமல், 5. தீ (பித்த) இருமல், 6. சுவாச இருமல், 7. இரத்தகாசம், 8. ஐய இருமல், 9. பீனிச இருமல், 10. வளியழல் (வாதபித்த)இருமல், 11. அழலைய (பித்தகப), இருமல் 12. முக்குற்ற இருமல் என வகுத்துள்ளார்.

நோயில் காணும் முற்குறிகள்: தொண்டை புண்பட்டதுபோல நோதல், பின் தொண்டை சிவத்தல், தொண்டையில் முள்ளால் குத்துவதுபோன்ற உணர்ச்சி ஏற்படல், குரலோசை குறைதல், மூக்குநீர் பாய்தல், மார்பு நோதல், சூடுள்ள பொருளில் விருப்பமுண்டாதல் முதலியனதோன்றும்.

## குறிகுணங்கள்.

வளி இருமல்:

"சுரூபமாய் நெஞ்சுதனிற் றினவு முண்டாஞ்
செவிதனிலே இரைச்சலுமா மரோச கந்தான்
மருபமன்னிக் கீழ்மூச்சு மார்பள வதாகி
மன்னியே நெஞ்சளவா யுழலுஞ் சுவாசம்

நிருபநேர் படும்பிரம ரந்திரந் தன்னில்
நெய்த்துதுன் மாமிசங்கள் மிகவ ளர்ந்து
துருபமாய் மூச்சதிக மிருமல் கோழை
தூய்தான வாதகா சத்தின் சீரே.''

(பொருள்): உணவு முதலிய வேறுபாடுகளில், வளிக்குற்றம் (வாத தோடம்) தன் அளவில் மிகுந்து, தொண்டையைப் புண்படுத்தியது போலச் சிவக்கச்செய்தும், காது நோயையும், காது அடைப்பையும், உண்டாக்கியும், மார்புநோதல், மூச்சுவிடவும் வாங்கவும் முடியாமை, தொண்டை அடைத்துக் கொண்டதுபோல் நோதல், பெருமூச்சுவிடல், விலாப்பக்கம் நோதல், வாந்தி வருவதுபோன்ற உணர்ச்சி ஆகிய இக்குறிகளைக்காட்டி, வாய் ஓயாதபடி இருமலை உண்டாக்கும். இருமி உமிழும் கோழை கரு நிறத்தோடுங் கூடிய நுரையுடன் காணப்படும்.

அழல் இருமல் :

'' சீராக இருமல்மிகப் புரட்ட லாகித்
தித்தித்து உப்புரைக்குஞ் சர்த்தி யுண்டாம்
தாரகத் தலையுடம்பு தான்வ லிக்குந்
தாகித்துக் குரல்கம்மும் ரத்தம் வீழும்
ஆராக வங்கந்தான் மிகவி ளைக்கும்
அன்னந்தான் செல்லாமற் புளித்தேக் காகும்
மாராக மயிர்க்கூச்சுஞ் சுரமு முண்டாம்
மதிமயங்கும் பித்தகா சத்தின் வண்மை.''

(பொருள்): அழல் இருமலின் தன்மையைக்கூறின், அழலை அதிகப் படுத்தக் கூடிய பொருள்களைப் புசித்து, அழல்குற்றம் தன்னளவில் மிகுதியடைந்த நிலையில், குளிர்ச்சியைதரும் பொருள்களை உண்ப தாலும், இருமல் உண்டாய், இனிப்பு அல்லது உப்புச்சுவையோடுங் கூடியது போன்ற வாந்தி அடிக்கடி வருதல், தலை இடித்தல், உடல் நோதல், சுரம் காய்தல், மிக்கதாகமுண்டாதல் போன்ற ஓர் உணர்ச்சி, இருமி இருமி குருதி (இரத்தம்) யைக் கக்கல், உடல் வறண்டு இளைத்தல், உணவின் மீது வெறுப்பு, மயிர்க்கூச் செறிதல், புளி யேப்பம் ஏற்படுதல், மனம் தடுமாறல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

ஐய இருமல் :

'' சாற்றவே இருமலொடு இளைப்பு முண்டாய்ச்
சார்ந்தபீ ளையுமூச்சு மிகுந்து வாங்கும்
ஆற்றவே அடிவயிறு மந்தம் பற்றி
அழகாகு முருவழித்து உடம்பு வற்றும்
சேற்றவே சுரமொடு தியக்க முண்டாய்ச்
சித்தமே மிகக்கலங்கி வாந்தி யாகித்
தீற்றவே சிறுகடுப்பாற் தேக மெங்குஞ்
சிலேட்டுமத்தின் காசமென்றே செப்ப லாமே.''

(பொருள்): செயல்களாலும் உணவாலும், ஐயம் மிகவும் கேடடைத லினால், இந்நோய் பிறக்கும் முன்பே, முகம் ஊதி, மூக்குநீர் வடிந்து, தொண்டை புண்ணாகி, மார்பு நொந்து பின்பு இருமலை உண்டாக்கும். இருமல் வாய் ஓயாது அடுத்தடுத்து வருங்கால், கோழை வெளுத்துச் சீழைப்போல் மிக்க நாற்றத்துடன் வெளியாகும். எப்பொழுதும் பெரு மூச் செறிதல், அடிக்கடி இருமுவதால் அடிவயிறு நோதல், வயிற்றில் காற்று நிறைந்திருத்தல்போல் ஒருவித துன்பம் ஏற்படுதல், அப் போதைக்கப்போது சுரம் வருதல், இந்நோய் தீருமோ தீராதோவென்னும் மனக்கலக்கம் பிறத்தல், அக்கலக்கத்தாலேயே உடல் இளைத்துப் போதல், உண்டவை வாந்தியாதல், உடல் முழுவதும் வலித்தல் முதலியவைகளும் ஏற்படும்.

வளிஅழல் இருமல் :

''சூட்டிட்டுக் காறையிலே துளிக்கும் ரத்தஞ்
சூட்சமாய்க் காதுதனி லிரைச்ச லுண்டு
ஆடிட்ட இருமலொடு அசதி யாகும்
அடிக்கடிக்கு வாயுதான் மிகவே மீறும்
மூட்டிட்ட முதுகுதண்டு குடைச்ச லுண்டாம்
மூச்சோடு சந்தாப மொழிமா றாட்டம்
வாட்டிட்ட தேகந்தான் ஊதிக் கொள்ளும்
வாதபித்த காசத்தின் மார்க்கந் தானே.''

(பொருள்): தொண்டை உலர்ந்து புண்பட்டு வாய் ஓயாத இருமல், ஒவ்வொருமுறை இருமும்போதும் குருதி வெளியாதல், காது அடைத்தது போன்று சிலவேளை இரைதல், உண்டவுணவு செரியாது அடிக்கடி

பேதியாதல், வயிறுப்புதல், இருமலின்கொடுமையால், முதுகின் தண்டும் நோதல், பெருமூச்செறிதல், மொழிதடுமாற்றல் ,நாட்செல்லச் செல்ல உடலின் குருதி குறைந்து உடல்வெளுத்தல், வீங்கல் ஆகிய குறி குணங்களை விளைவிக்கும்.

அழலைய இருமல் :

'' மார்க்கமாய் நெஞ்சுதனிற் றினவுண் டாகும்
வடிவமெலாந் தான்வலிக்கு மிரும லுண்டாம்
தார்க்கமாங் குரல்கம்முஞ் சடமி ளைக்குஞ்
சஞ்சலிக்கும் பூருவத்திற் சதியை நாடி
பீர்க்கமாய்ப் பூமியெலாஞ் சுழற்றல் போலாம்
பெண்பார்வை பார்த்தவுடன் புளக முண்டாம்
பீர்க்கம்பூப் போலுடம்பு மஞ்ச ளிக்கும்
பித்தசிலேட் டுமகாசப் புதுமை தானே.''

(பொருள்): இவ்விருமல், தொண்டையுள் தினவுண்டாதல், உடல் முற்றும் நோதல், குரல் கம்மி இருமல் உண்டாதல், உடம்பு இளைத்தல், கோழை மிகுதியும் வெளியாதல், சில வேளை குருதி வெளிப்படல், பூமி சுழல்வது போல் தோன்றல், பெண்களை நோக்கின் இன்பம் பெருகுதல், வெளியாகும் குருதியின் போக்கிற்குத்தக்கவாறு உடல் இளைத்தல், உடல் வெளுத்தல், அல்லது பீர்க்கம் பூப்போல் உடல் மஞ்சளித்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

முக்குற்ற இருமல் :

'' புதுமையாய்ப் புரண்டுமே இருமல் குத்திப்
பூங்கமுகி னிறமாக ரத்தம் வீழும்
வெதுமையாய் வெதும்பலொடு எரிவு தாகம்
மிக்கதோ ரருசியொரு வயிறு பேதி
பதுமையாய்ச் சரீரமெங்கும் படுக்கை கூடாப்
பருத்துமே உடம்பூதிப் பாண்டு வாகும்
கமயாய்ச் சரீரமெங்குங் கடுப்புண் டாகுங்
கடிதுதொந்த காசத்தின் காட்சி தானே.''

(பொருள்): மூன்று குற்றங்களும் ஒன்றுகூடி வரும் நோயாதலால் இது மிகுதியும் கொடுமைசெய்யும். இந்நோய், இடைவிடாமல் இருமச் செய்து கோழையை மிகுதியும் வெளியாக்கும். அதுகமுகு நிறத்தை ஒத்திருக்கும். அக்கோழையுடன் சிலவேளை குருதியும் வெளியாத லுண்டு, நாட்செல்லச் செல்லக் குருதிமிகுதியும் வெளிப்படும். அறியாமை, வயிறு எரிந்து பேதியாதல், உடல் வெதும்பல், உடல் எரிதல், மிக்க நீர் வேட்கை, வாய் சுவை அறியாமை, உடல் நோதல், மயக்கம், வாந்தியெடுத்தல், தன்னிலை மாறுபடல் முதலிய சன்னிகளுக்குள்ள குறிகுணங்களனைத்தும் இந்நோயில் ஏற்படுவதுமுண்டு.

குளிர் (மந்தார) இருமல் :

"தானான தூயதோர் நாசி தன்னில்
சலநோய்நீர் தான்விழுந்து தும்ப லுண்டாம்
மானான மார்புநெஞ் சடைத்து மூச்சு
வலுவாகப் பாம்புபோல் சீற லாகும்
கானான கண்டமொடு முகமுங் காதுங்
காயமதுங் கசிவாகி வியர்வை யாகும்
ஏனான இருமலொடு கோழைக் கம்மல்
இரைப்பாகு மந்தார காச மாமே."

"மந்தார காசம் மழைமப்பு மார்புநெஞ்சு
தந்தான மீளை தனியடைத்த குத்திருமல்
தும்பல்வலி நாசிநீர் சுரமிளைப் பாமசதி
பொம்மிவரு மென்று புகல்."

(பொருள்) மேற்கூறிய பாக்களின்படி இந்நோய், மழை மப்பு சூழ்ந்து நிலம் குளிரடைந்த நிலையில், மக்களின் உடலிலும் ஐயம் மிகுதிப்பட்டு மூக்கு, தொண்டை முதலியன சிவந்து, மூக்கில் நீர் பாய்ந்து, மார்பு நொந்து, இருமலைப் பிறப்பிக்கும். இது மந்தாரத் தினால் வரும் நோயாதலால், இதனை மந்தார இருமலென வழங்க லாயினர். இது முற்கூறிய குறி குணங்களைக் காட்டல் மட்டுமேயன்றி இடைவிடாத் தும்மல், பெருமூச்செறிதல் மூச்சுத் தடைபட்டுத் தடைப் பட்டு வெளியாதல், சில சமயங்களில் மூச்சு பாம்பு சீறலைப்போல்

வெளிப்படல், கழுத்து, முகம், காது இவைகள் நோதல், உடல் அடிக்கடி வியர்த்தல், கோழைமிகுதியும் வெளியாதல், சுவாசகாச நோயில் ஏற்படும் இரைப்புண்டாதல் ஆகிய குற்றங்களையும் உண்டாக்கும்.

பக்க மந்தார இருமல் :

“ காசமா யிருமலொடு இளைப்பு முண்டாய்க்
கட்டியே நெஞ்சதனிற் கம்ம லாகும்
வாசமாய் வயிறதுவும் பொருமிக் கொள்ளும்
மகத்தான மூக்குநீர் பாய்ச்ச லாகும்
ஆசமா யமரபட்சம் பூர்வ பட்சத்
தருகாமை யானவுடன் சுவாச மீறும்
ஈசமா யிரைப்போடு எரிமூச் சாகும்
இக்குணந்தான் பக்கமந் தார காசம். ”

(பொருள்) சுரக்கோள் (சுரநட்சத்திரம்) என்னும் நூலில், சுரம் வந்தநாளில் உள்ள கோளின் அமைப்பையும், அவன் பிறந்த நாளின் ஓரை (லக்கினம்)யையும் நோயின் நாள் வன்மையையும், தீரும் தீரா தென்றமுறையையும் இயம்பியுள்ளன. இதனால், கோள்களுக்கும் நோய்க்கும் ஒரு தொடர்பு உள்ளது என அறியலாம். அவ்வாறே இந்நோய், பின் நிலவிலும், முன்நிலவிலும் வருவதாதலால் பக்க மந்தார காச மெனவும் வழங்கலாயிற்று. இந்நோய் முன்னிலவு தொடக்கத்தில் தோன்றி, சின்னாட்கள் இருமல், இழுப்பு, வயிறு பொருமிக்கொள்ளல், மூக்கில் நீர் பாய்தல், தொண்டைகம்மல் ஆகிய குறிகுணங்களைக் காட்டி, சின்னாட்கள் கழிந்து குணமடைந்து, பின் முன்னிலவு காலம் தொடங்குங்கால் மீண்டும் வரும். இவ்வாறாகவே பின்னிலவிலும் சிலர்க்கு வருவதுண்டு. சூரிய சந்திரர்கள் குறித்த காலத்தில் தோன்றுவதுபோல, இந்நோயும் காலந் தவறாது வருவதாகும்.

சுடர் இருமல் :

“ பக்கமாய் பிரசவித்த மாதருக்குப்
பாரமாய்த் தலைநோயுஞ் சுரமுண்டாகும்
உக்கமா யுழலை யொடு தவன முண்டாம்
உறுகழிச்சல் பொருமலோடு உப்புச மாகும்

மிக்கமா யுள்மூச்சு மிடுக்க தாகும்
மிரளாமல் விழியிரண்டுந் தெளிவு மாகும்
துக்கமாய்த் துடிதுடிக்கு மகப்பெற் றோர்க்குச்
சுடர்காசந் தன்னுடைய சுருபந் தானே.''

(பொருள்) சுடர் இருமல், பிள்ளை பெற்ற பின் தாய்க்கு வரும் நோயாம். பிள்ளை பெற்று உடல் மெலிவடைந்த நிலையில், ஐயக் குற்றம் எளிதில் ஏற்படுமாதலால், அக்கபம், தொண்டை, மார்பு, மூக்கு முதலிய இடங்களில், தங்கி தொண்டைக்குத்தல், மூக்கு நீர்பாய்தல், தலைநோதல், மார்புநோதல், நீர்வேட்கை என்னும் குறிகளை காட்டி சுரம் உண்டாய், இடைவிடாத இருமலைப் பிறப்பிக்கும், நோய் மிகுதிப்படின், இழுப்பு, பெருமுச்செறிதல், முச்சுதடைப்படல், கண் சிவந்து முட்டுதல் ஆகிய துன்பங்களும் உண்டாகும்,

இழுப்பு (சுவாச) இருமல் :

'' வண்மையாய்க் கோழைகட்டி இருமி வீழும்
மாநாகம் போலவே வாங்குஞ் சுவாசம்
திண்மையாச் செருமலுண்டா மடிக்க டிக்குச்
சீரணமிலாலே வயிறு மூதும்
நண்மையாய் நாசியது தணல்போ லாகும்
நலிந்துடம்பு வற்றிவருங் குரலுங் கம்மும்
உண்மையா யுண்ணாக்கி லூறுங் கேணி
யுழுந்துமே சுவாசகா சத்தி னொப்பே. ''

(பொருள்) இந்நோயில், மூக்கில் வெளியாம் காற்று அனல் வீசுவது போலத் தோன்றி, தொண்டை கட்டி, மூச்சு எலி கூச்சலிடுவது போல் ஒலித்து, மார்பில் கோழைகட்டி இருமலெழும். நோய் முதிர முதிர வெளியாகும் மூச்சு நல்லபாம்பு சீறுவதுபோல் ஒலிக்கும். உண்ட உணவு செரியாது வயிறு உப்பும். இதனை இசிவு இருமலெனவும் கூறுவர்.

தீரும் நோய்கள் ;

'' காணவே சாத்தியத்தைக் கருதக் கேளாய்
கனத்ததோர் மந்தார காசத் தோடு
பூணவே பக்கமந் தார காசம்
பொலிவான சுடர்காசம் பித்த காசந்

தோணவே சுவாசகா சத்தி னோடு
சுழியிரத்தக் காசமாம் பீனச காசம்
தாணவே இதுவேழுஞ் சாத்திய மாகுஞ்
சாதகமாய்ப் பரிகாரம் பார்த்துச் சாற்றே.''

(பொருள்) குளிர் மந்தார இருமல், பக்க குளிர் மந்தார இருமல், சுடர் இருமல், அழல் (பித்த) இருமல், இழுப்பிருமல், குருதி இருமல், பீனிச இருமல் என வேழும் தீரும் நோய்களாம்.

தீரா நோய்கள் :

'' சாற்றியதோ ரசாத்திய ந்தான் வாத காசம்
சஞ்சலமாஞ் சேத்துமத்தின் காசத் தோடு
தோற்றியதோர் தொந்தமாங் காசத் தோடு
சுருக்கான விம்மூன்று மசாத்தி யந்தான்.''

(பொருள்) : வளி (வாத) இருமல், ஐய (கப) இருமல் முக்குற்ற (திரிதோஷ) இருமல் என மூன்றும் எளிதில் தீராதாம்.

யூகிமுனி, காசநோய் பன்னிரண்டு வகையாய்க் கூறி இருப்பினும், அவ்வெண்ணோடு மருந்தீடு இருமல், கஞ்சா இருமல், மது இருமல், சுர இருமல், இரத்த இருமல் என்னும் ஐந்தையும் கூட்டிப் பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளன.

மருந்திடு இருமல் :

'' எய்துமே மருந்திரும லியம்பக் கேளாய்
எழிலுடம்பு வற்றியே இரைப்புண் டாகும்
அய்துபண்ண மரோசிகமா மழற்றுந் தேகம்
அடிக்கடிக் கும்பயமா யாலா பிக்கும்
வைதுவரட் டிருமலாய்க் மயக்க மாகும்
வாய்தானும் புலால்நாறும் வழவ ழக்கும்
செய்துசிரத் தினில்நின்று மயக்கி வைக்கும்
சீரணமா மருந்தீட்டின் செயலி தாமே.''

(பொருள்) : இடு மருந்து என்பது ஒருவர் மற்றொருவரைத் தன் வழி கொணரும் பொருட்டுக் கொடுக்கும் மருந்தாம். அம்மருந்து நாட் செல்லச் செல்ல உடல் வன்மையைக் குறைத்துவரும். இவ்விருமலுக்கு மருந்தீடு இருமல் எனப் பெயரிடப்பட்டது. இந்நோயில் உடல், மெலி

வடைந்து வற்றி, வாய் தொண்டை புண்ணாய், வாய் ஓயாத இருமலை உண்டாக்கும். வாய் நாற்றம், தலை கிருகிருத்தல், மயக்கம், மிகுபசி ஆகிய குறிகுணங்களும் பெறும். அன்றியும் குன்ம நோயில் தோன்றும் குறிகுணங்களைக் காட்டி உடலையும் மனதையும் கெடச் செய்து உயிரையும் மாய்ப்பதும் உண்டு.

கஞ்சா இருமல் :

"செயலான கஞ்சாவைக் குடிக்கின் றோர்க்குத்
திரட்சியாம் பின்மருந்து தின்ப வர்க்கும்
கயலான லாகிரிக ளருந்தி னோர்க்கும்
கரும்பிச்சிற் சேர்ந்துமே கருகி னுப்பல்
உயலான உடம்பதுதான் மிகவே வற்றி
உரோமத்தின் வேர்செத்து ஒளிவு குன்றும்
வயலான இருமலொடு மனம றுத்து
மயக்கமே கற்பத்தி னிருமல் தானே."

(பொருள்) கஞ்சா, புகையிலை, அபின் முதலியவற்றின் புகையைப் பிடிப்பவர்கட்குத் தொண்டை, மூச்சுக்குழை, நுரையீரல் இவைகளை புகையின் சூடும், புகையுடன் கூடிய கஞ்சா முதலியவைகளின் சத்தும், தாக்கி, வெதும்பச் செய்து இவ்விருமல் நோயை வருவிக்கும். இந் நோயில் உடல் மெலிந்து, இருமல் உண்டாய் அஃது எளிதில் தீராமல் நாட்பட நிலைத்திருக்கும். நாட் செல்லச்செல்ல இருமலின் வேகம் மிகுந்து, கோழையும் அளவில் மிகும். அக்கோழை கறுத்துக்கட்டிப்பட்டு வெளியாம். உடல் உலர்ந்து மயிர்கள் கொட்டி மேனி வன்னம் குறையும்.

கள் இருமல் :

"மயங்கியே உடம்பெங்குந் தினவு மாகும்
மார்பொடு நெஞ்சுலர்ந்து கண்டம் வற்றும்
அயங்கியே அடிக்கடிக்கு இரும லாகும்
அடிமூலம் நாபிமட்டும் வேக்கா டுண்டாம்
வியங்கியே யீரலெல்லாம் வெதும்ப லாகும்
விரணமுண்டாய்ச் சிரசோடு மிரட்சி யாகும்
சயங்கியே சாராயங் கள்ளு தன்னால்
தாக்குமே மதுவென்ற விருமற் றானே."

(பொருள்): கள், சாராயம் என்னும் இவைகளை அளவு கடந்து அருந்தலால், உடல் வன்மை குறைந்து, தொண்டை, அகடு, ஈரல்கள் யாவும் வெதும்பி, இந்நோயை (இருமலை) உண்டாக்கும். பின்பு இடைவிடாத இருமல், மேல் மூச்சு, ஆயாசம், இளைப்பு முதலிய குறி குணங்கள் காணும்.

சுரஇருமல் :

'' ஆண்மையாய்ச் சுரமணுகி யங்கந் தன்னில்
அனேகநாள் செறுப்பாக லாக்கை தானும்
காண்மையாய்க் கருதியே யுடலம் வற்றிக்
கனப்பாகிக் கனவிருமல் சுவாச முண்டாய்
வேண்மையாய் வழுவழுத்து கண்பச் சென்று
மிக்கநரம் பெல்லாந்தான் மிகத்த ளர்ந்து
தூண்மையாய்த் தோல்திரைந்து துஞ்ச லுண்டாம்
சுரவிருமற் குணமென்றே சொல்ல லாமே.''

(பொருள்) சுரநோயில் வெகு நாட்கள் துன்பப்பட்டு, உடல் மெலிந்த நிலையில் வரும் இருமல், சுர இருமலென வழங்கலாயிற்று.

குருதி இருமல் :

'' சொல்லவே யமர்க்களத்திற் சண்டை தன்னிற்
துடர்ந்துயுத்தம் பண்ணுகையிற் போர்க் களத்தில்
வெல்லவே மிகரத்தங் கண்ணிற் கண்டு
மிரட்சியாய்த் திகில் தன்னி லிருமல் காணும்
கொல்லவே குகைதன்னிற் பந்தம் வைத்துக்
கொளுத்தினாற் போல்வே கொடுந்தீக் காணும்
இல்லவே இருமலுக்கு ரத்த வாசம்
எடுக்குமே ரத்தத்த நிருமல் தானே.''

(பொருள்) இந்நோய், வீரர்கள் போர்க்களத்தில் சண்டையிடுகையில் உடலினுள்ளுறுப்புகளில் அடிபடுதலாலும் ஆங்குச் சிந்திக்கிடக்கும் குருதி (இரத்தம்) யையும், சண்டையில் போர் வீரர்கள் ஒருவர் மற்றவரைத் தாக்கும் ஆயுதங்களையும் காண்பதால் உண்டாகும் அச்சத்தால் வருவதாகும். இவ்விருமல் குருதியைப் பெரிதும் வெளிப்படுத்தி மரணத்தையும் விளைவிக்கும்.

குருதி வாந்தி இருமல் :

'' ஒப்பான குரல்கம்மி யுதிரந் தானும்
உருட்சியாய்க் கட்டிபோ லுருண்டு வீழும்
விப்பான விலாவிலே மிகநோ வாகி
மளமளன வயிறுகடுத் துளைச்ச லாகும்
பக்கான கால்கையு மோய்ச்ச லாகும்
கடுமூத்திர மெரிந்துமெத்த மஞ்ச்ள் போலாம
தப்பான சரீரமது வெளுத்துக் காணும்
கக்கும்ரத்த காசமென்றே சாற்ற லாமே.''

(பொருள்) இந் நோயில், தீக்குற்றம் மிகுந்து குரல் வளை, மார்பு, நீர்ப்பை முதலிய இடங்களில் தாபிதத்தையுண்டாக்கி, ஐயத்தைப் பெருகச் செய்து குரற் கம்மலையும் இருமலையும் உண்டாக்கி அத்துடன் தொண்டையிலிருந்து குருதியைக்கட்டிகட்டியாக வெளியாக்கும். அத்துடன் விலாப்பக்கங்களில் நோதல், வயிறு கடுத்து நோதல், காலுங்கையும் ஓய்ச்ச லாதல், சிறு நீரிழியும் போதெல்லாம் நீர்ப்புழை கடுத்தல், மஞ்சளித்துக் காணல் உடல் வெளுத்தல் என்னுங் குறிகளையுங்காட்டும்.

மூக்கடைப்பு இருமல் :

'' செப்பவே யிருமலொடு கோழை வீழும்
சேட்மமா யிளைப்போடு இரைப்புண் டாகும்
உப்பமாய் வயிறதுவு மூதிக் கொள்ளும்
ஊணுறக்க மில்லாம லுலருந் தேகம்
குப்பமாய் மலசல முங்கறுகி வீழும்
கோழையிட குணந்தான்மீன் கவிச்ச டிக்கும்
துப்பமாய்ச் சுருண்டுவயிறு வலியு மாகும்
சுவாசபீ னசமென்றே சூட்டி டாயே.''

(பொருள்) இந் நோயில் இருமலோடு மிகுந்த கோழை வெளி யாதல், உடலில் ஐயக்குற்றம் பெருகுதல், இளைப்பும் இரைப்பு முண்டா தல், வயிறு உப்பி ஊதிக்கொள்ளல், உணவைக் கொள்ளாமலும் உறக்க மில்லாமற்படியும் செய்தல், எருவும் நீரும் கறுத்துக்காணல், வயிறு வலித்தல் என்னுங் குறிகளைக் காட்டும். அன்றியுமிந் நோயிலிழியுங் கோழை மீன்கவிச்சி போன்ற நாற்றமோடிழியும்.

தீரும் தீராதவை :

'' இருமலது ஐந்துக்குள் சாத்தி யந்தான்
எளிதான மருந்தீடு இருமல் தானும்
வருமது இருமலும் சுரத்தி னோடு
மார்க்கமா மிதுமூன்றுஞ் சாத்திய மாகும்
கருமலொடு கற்பமா மிரும லொடு
கடிதான இரத்தமிகு மிருமல் தானும்
அருமலது ஈதிரண்டு மசாத்ய மாகும்
ஆயுரு மறையினுள்ள ஆண்மை தானே.''

(பொருள்) மருந்தீடு, மது, சுர இருமல் மூன்றும் எளிதில் தீரும் ; கஞ்சா இருமலும், இரத்த இருமலும் தீராவாம்.

இவ்விருமல் நோயைப் பன்னிரண்டையும் ஐந்தையும் கூட்டிப் பதினேழு வகைகள் எனக் கூறி இருப்பினும், இவ் வகுப்புகளில் அடக்கப் பட்ட நோய்கள் யாவும் குற்ற அளவிலேனும், அல்லது நோயெழு வகைகளிலேனும் அடங்கும். இப்பதினேழும் நூல் வழியே தொன்று தொட்டு வந்துள்ளமையால், அவ் வழியே சொல்லப்பட்டது. இன்னும் மருத்துவர் இந்நோயை எளிதில் அறிந்து அதற்குத் தக்கவாறு மருத் துவம் செய்வதன் பொருட்டு, அப்பதினேழு இருமல் நோயினையும் சுருக்கி அவற்றின் பொதுக்குறி குணங்களையும் இங்குக் கூறப்படும்.

குறிப்பு.—இருமல் நோயின் குறி குணங்கள் : சுரம், இளைப்பு நோய், இரைப்பு நோய், பன்னாட்கள் நோயுடன் படுக்கையில் கிடத்தல் ஆகிய இவைகளிலும் காணும். இவைகளின் தன்மைகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டுவோம்.

பொதுக்குறி குணங்கள்.—திடீரென ஏற்படும் குளிர் காற்று, பனி, சுரம், அம்மை நோய், இருமலையும், தும்மலையும் உண்டாக்கக் கூடிய புகைகள் ஆகிய இவைகளால் ஐயக்குற்றம் மிகுந்து, மூக்கு, தொண்டை, மூச்சுக் குழாய் இவைகளில் வெப்பை உண்டாக்கி மூக்கில் நீர் பாய்தல், கண் சிவத்தல், தொண்டை கட்டல் சில வேளை சிறிதள வில் சுரம் காய்தல், தலை கனத்தல் என்னும் முற்குறிகளைக் காட்டி, மார்பு நொந்து இருமலை வருவிக்கும். நாளுக்குநாள் கொடுமையாய் வாய் ஓயாதபடி இருமச் செய்யும். கோழை எளிதில் வெளியாகாது.

நோய் உண்டான சின்னாட்கள் வரை சிறிதுசிறிதாய்க் கோழை வெளியாய்ப் பின்பு கடினப்பட்ட கோழை மிகச் சிறிதளவில் வெளியாகும். நாட் செல்ல செல்ல, கோழையும் சளியும் அளவில் மிகுந்துகொண்டே எளிதில் வருவதுமன்றி, சளி இளகியும் நுரைத்தும் காணும். ஆனால், தக்க மருத்துவத்தால் சில தினங்களில் குணமடைந்து விடும்.

சில வேளை இந்நோய் மீண்டும் மீண்டும் வருமாயின், இது நாட்பட்ட இருமலாகின்றது ; அப்போது வாய் ஓயாது இருமுதலும், வெளியாகும் கோழை அளவு கடந்து கடினப்பட்டு நுரையுடன் வெளியாதலும் ஏற்படும் ; அஃதன்றியும் படுக்கை பொருந்தாமை, மூச்சுத் தடுமாறல், உடல் வன்மை குறைதல், முகம் கருத்தல், உதடு நீலநிறமாதல் முதலியனவும் காணும். நோய் முதிர முதிர அது வன்மை மிகுந்து சளி சீழைப்போல் மிக்க நாற்றத்துடன் வெளிப்படும். மார்பு நடு பருத்து அடியும் நுனியும் குறுகிக்காணும். மூச்சு விட முடியாமற் றிணரும் ; நாள் செல்லக் செல்லக் கொல்லும்.

குற்ற முதலிய வேறுபாடுகள்.—குளிர் காற்று, மழை, பனி இவைகள் தாக்கலாலும், குளிர்ச்சிதரும் பொருள்களை மிகுதியு முண்பதாலும், ஐயம் தன்னளவில் மிகுந்து, தொண்டை, மூக்கு, மார்பு, காது, மண்டை இவைகளில் தங்கி, வெப்புற்று மேல் நோக்குக் காலை (உதானவாயுவை)த் தூண்டி இந்நோயைப் பிறப்பிக்கும். நோயின் தன்மைக்குத் தக்கவாறு, நுரையூரல், நுரையூரல்குழை இவையாவும் சிவந்து வீங்கி, வீங்கியதின் அளவாகக் கோழை மிகும். வீங்கிய, குழையினாலும், அதில் சேர்ந்த கோழையாலும் மூச்சு விடுவதற்கும் மூச்சு வாங்குவதற்கும் தடையுண்டாம். நோய் முதிர முதிர உடல் வன்மை குறையும்.

நாடி :

பாங்கான வாதத்திற் சேத்தும நாடி பரிசித்தால்.......
தீங்கான இருமலுடன்.......
....................
....................
பண்பான பித்தத்தில் சேத்துமங் கூடிப் பரிசித்தால்
. . . . . ஈளை
. . . . . சதகநாடி

தானமுள்ள சேத்துமந் தானிளகில் இருமல் மந்தாரகாசம்
சிலேட்டுமம் நாடிதானே தெளிவோடு நிற்கிற்றிதாம்
சிலேட்டும மந்தம்பற்றில் சேர்ந்திடுங் கோழையாமே.

குணவாகட நாடி.

மருத்துவம்.—நோய்க்கு முதலாய் நின்ற ஐயத்தைத் தன்னிலைப் படுத்தவும், தன்னளவில் மிகுதிப்பட்டெழுந்த மேல் நோக்குக் காலை தன்னிலைப்படுத்தவும், நோயில் எழுந்த கோழையை வெளிப்படுத்தவும் தகுந்த மருந்துகளைக் கொடுத்தல் வேண்டும்.

முதலில் மிகுதிப்பட்ட ஐயத்தின் வன்மையைக் குறைக்க, சஞ்சீவி மாத்திரை, கோரோசனக் கருப்பு, உத்தாமணித்தைலம் (மாந்த எண்ணெய்) இவை போன்ற பேதி மருந்தில் ஏதாவதொன்றை நோய் வன்மைக்குத் தக்கவாறும் உடலின் நிலைக்கு ஏற்றபடியும் அளவிட்டுக் கொடுத்தபின், மிகுந்த குற்றம், மேலெழுந்த வாயு கூடிய சளி இவைகளுக்கான மருந்துகளை ஈதல்வேண்டும்.

அவை வருமாறு :—(1) சிறிதளவில் ஐயம் (கபம்) கூடி, மூக்கில் நீர் பாய்தல், தும்மல், தொண்டைகட்டல் என்னும் குறிகள்காணின், தும்பைப் பூ ஒரு விராகனெடையும், மிளகு ½ விராகனெடையும் கூட்டி, தேன்விட்டு அரைத்து, அதை நான்கு கூறாக்கி, காலையும் மாலையும் ஒவ்வொன்றாய் இரண்டு தினங்கள் சாப்பிடக் குணமாம் வேண்டின், நான்கு, ஐந்து நாளளவும் சாப்பிடலாம். மூக்கு நீரும், தும்மலும் இருப்பின், தும்பை இலைச்சாற்றைத் துணியில் துவட்டித் திரியாக்கி மூக்கிலிடவும்.

(2) நாட்பட்ட இருமலாயின், கத்தூரிக்கருப்பு, பவழ பற்பம் வகைக்கு ஒரு குன்றியளவு கொண்டு, கண்டங்கத்திரி லேகியத்தில் கொடுக்கவும்.

(3) நாட்பட்ட இருமலில், கோழை கெட்டிப்பட்டும், நாற்றத்துடனும் மிக்க அளவில் வெளியாயின், தாளகபற்பம், முத்துப்பற்பம் இவ்விரண்டையும் தனித்தனி ஒரு குன்றி அளவில் எடுத்து, தும்பைச் சாற்றையும் தேனையும் விட்டுக் குழைத்துக் காலை மாலைகளில் கொடுக்கலாம்.

(4) நாட்பட்ட இருமலில் இழுப்புக்காணின், செம்புபற்பம் ஒரு அரிசி யெடையும், புனுகு ஒரு குன்றியும் கூட்டி, காலை மாலைகளில் கொடுத்து உடனே உத்தாமணிச்சாறு இரண்டு உச்சிக் கரண்டி வீதம் கொடுக்கலாம்.

(5) இந்நோய்க்குக் கடைமருந்துகளும் இலைவகைகளும் :—

கடை மருந்துகள்.—திப்பிலி, மிளகு, சுக்கு, அதிமதுரம், தாளீசபத்திரி, இலவங்கம், சிறுதேக்கு, சிற்றரத்தை, பேரரத்தை, அக்காரகாரம், கோட்டம், கத்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கற்பூரம், காருபா முதலியனவாம்.

இலை வகைகள் : துளசி, கஞ்சாங்கோரை, தும்பை, தும்பைப்பூ, ஆடா தோடை, உத்தாமணி, கண்டங்கத்திரி முதலியனவாம்.

மாத்திரைகள் : வசந்த குசுமாகரம், மகாவசந்த குசுமாகரம், பூரண சந்திரோதய மாத்திரை இவைகளில் ஒன்றில் தக்க துணை மருந்தோடு கொடுக்கலாம், பற்பச் செந்தூரங்கள்—தாளபற்பம், பவழ பற்பம், பலகரை பற்பம். நத்தைபற்பம், சிப்பிபற்பம், கத்தூரிக் கருப்பு, கோரோசனைக் கருப்பு போன்றவைகளையும் துணை மருந்துகளோடு கொடுக்கவும்.

## 5. இரைப்பு நோய்

வேறு பெயர்கள் ; இழுப்பு நோய், சுவாசகாசம்.

இயல் : இந்நோய், இன்ன வகைத்தெனக் குறிப்பிடக் கூடாதபடி, ஒரு காரணமுமின்றி மார்பை வலித்து இறுக்கியது போன்று வேதனையைத் தந்து, மூச்சை வெளிவிடவும், உள் இழுக்கவும் முடியாமல் திணறச் செய்யும். அன்றியும், வெளியாகும் மூச்சு மிகுந்த சிரமத்தோடு வெளியாவதுடன், குழல், யாழ், வீணை முதலிய வாச்சியங்களின் ஒலியைப்போல் ஒலிக்கும். மேலும், இருமலால் மார்பிலுள்ள சளியை வெளியாக்குவதற்கு இயற்கை முயலினும், அக்கோழை வெளியாதல் இல்லை.

நோய் வரும்வழி : இயற்கையாயமைந்த உடலினுக்கு, வேண்டாத உணவு, செயல் முதலிவைகளால், வன்மை குறைந்த நிலையில் ஐயத்தை மிகுதிபடுத்தக்கூடிய உணவாலும், நடத்தையாலும், புல்

பூண்டு, அரிசி, கேழ்வரகு முதலியவைகளின் சுணையாலும், தனக்கு உதவாத நாற்றப் பொருள்களை முகர்வதாலும் இந்நோய் பிறக்கும்.

நோயின் முற்குறிகள்.—பொதுவாக இந்நோயில் பண்ணாட்கள் துன்பப்பட்டவர்கள் நோய் வருமுன் இதன் குறியை அறிவார்கள்; வரவிருக்கும் நோயின் வன்மையையும் அளவிடுவார்கள். அக்குறிகள், தங்களுக்கு ஆகா உணவும், ஆகா காற்றின் மணமும் பட்டவுடன் மூக்கில் நீர்பாய்தல், தும்மல் வருதல், மார்பு நோதல், மார்பை இறுக்கிக் கட்டியது போல உண்டாதல், வேதனை, இயற்கை மூச்சுத் தட்டுப்படல், விலாப்பக்கம் வலித்து மூச்சுத் திணறல், வயிறு உப்பல், உடல் வியர்த்தல் முதலியனவாகும்.

தமிழ் நூலில், இந்நோயைத் தனிமைப் படுத்திக் கூறவில்லையாயினும் இருமல் நோயின் பகுதியுள் சுவாசகாசம் எனவும், தீ (பித்த) நோயின் பகுதியுள் சுவாச பித்தமெனவும் இரண்டு கூறி அவைகட்குரிய குறி குணங்களும் இயம்பப்பட்டுள்ளன. ஏனைய நூலோர் வகுத்தபடி இந்நோய் ஐந்தாகும். அவை குற்ற அளவாய் நான்கும், வெளிப்படும் மூச்சின் அளவாய் ஒன்றும் ஆகும். இவ்வைந்தையும் விளக்கிக் கூறுவாம் :

## குறி குணங்கள்.

### வளி இரைப்பு நோய்.

எளிதில் செரிக்கக்கூடா உணவுகொள்ளுதல், கடும் வெய்யிலில் திரிதல், கிழங்கு முதலிய பொருட்களை உட்கொள்ளுதல் ஆகியவற்றால் வளிக்குற்றம் தன்னளவில் மிகுந்து, உடல் வன்மை குறைந்து, மூச்சு விடுவதற்கு வேண்டிய உடல் வன்மை இல்லாது, விடும் மூச்சு தன்வலிவு குறைந்து எழும். நெஞ்சினுள் யாதும் இல்லாதது போன்ற ஓர் உணர்ச்சி தோன்றும். இக்குணங்களைப் பெறுமாயினும், இந்நோய், நோயாளிக்கு மிகுந்த துன்பங்களை விளைவிப்பதில்லை. அன்றியும், இஃது எளிதில் தீரக்கூடிய நோயேயாகும். இந்நோயை சூத்திர சுவாசமென்பர்.

### ஐய இரைப்பு நோய் :

இஃது அய்யத்தைப் பெருக்கக்கூடிய உணவு வகைகளாலும், மழை, குளிர்ந்த காற்று இவைகளினாலும் உடலில் அய்யம் மிகுந்து தலைக்கேறி, மூக்கு உடைப்பு, மூக்கில் நீர் பாய்தல் என்னும் குறிகளைக் காட்டி, சற்று நேரத்திற்குள் நீங்கி விடும். மார்பை அடைப்பதுபோல

தோன்றி, மூச்சு வெளிவிடமுடியாமல் மிக்க வேதனையைப் பிறப்பித்து வாட்டும் சில வேளை, மூச்சை வெளிவிடாதபடி மார்பை இழுத்துப் பிடித்து, சீவனே வெளியேகி விடுமோ என சிந்திக்கக் கூடிய நிலைக்கும் வந்து விடுவதுண்டு. இந்நிலையில் சற்று இருமிக் கோழை அகலின், ஒரு வாறாக விடுதலை ஏற்படும். இழுப்புள்ள வேளையில் சிறிது இருமல் வாராமலும் சளியும் வெளியாகாமலிருப்பின், நோயாளனை மூச்சுவெளி விடமுடியாமல் தவிக்கச்செய்து படுக்கவும் இருக்கவும் செய்யாது. அவன் திணறித் திணறிப் படுக்கையைவிட்டு எழுந்து நிற்கச் செய்யும். நெற்றி யில் வியர்த்தல், முகங்கருத்தல், கைகால் சில்லிடுதல், மூச்சுத்திணறலால் கண்முட்டி வீங்கியது போல் தோன்றல், நாவறளல், உடல் நடுங்கல், பெருமூச் செறிதல், படுக்கையிற் பொருந்தாமை முதலிய குறிகுணங்கள் தோன்றும் இந்நோயைத் தமக்க சுவாசம் எனவும் வழங்குவர்.

ஐயவளி இரைப்பு நோய் :

இந்நோயில், ஐயமும் வளிக்குற்றமும் ஒன்றுபட கேடடைந்தமை யால் கொடுமையான குறிகுணங்களைக் காட்டும். முற்கூறிய ஐய்ய இரைப்பு நோய்க்குச் சொல்லிய குறிகுணங்களோடு, வளிக்குற்றம் கேடடைந்து மேல் நோக்கு காலை (உதானவாயு வைத்) தனக்குத் துணை கொண்டு, வருநோயாதலால், மூச்சைச் சரிவர உள் வாங்கு வதற்கும் வெளிவிடுவதற்கும் இயலாமல் விட்டுவிட்டு மூச்செறிதலும் மலமும் நீரும் கட்டி வயிறு உப்பி பொருமுதலும் உண்டாகி உடலை வாட்டும்; இவை அல்லாமலும் நாவறளல், கண் சிவந்து வலித்தல், மர்ம இடங்களில் நோதல், வியர்வை விடுதல், வாய் பிதற்றல், மனங் கலங்குதல், ஒரு வேளை தன் நிலையறியாமை, மயக்கம், உடல் சுழற்சி என்னும் பல கொடிய குறி குணங்களையும் காட்டும். இதனைச் சிலர், விச்சின்ன சுவாசம் என்றும் கூறுவர்.

முக்குற்ற இரைப்பு நோய் :

முக்குற்றங்களும் ஒருங்கே கூடிவரும், அவைகளின் வழியே மேல் நோக்குக்கால், கீழ்நோக்குக்கால், பரவுகால், நடுக்கால் ஆகிய இந் நான்கும் ஒன்றன்பின்னொன்றாய்க் கேடடைவதன்றி, ஏழு உடற் கட்டுகளும் மெலிவடையும். இவைகள் மெலிவடைந்த நிலையிலுண்டாம் இரைப்பு நோய் மிகக் கொடிதாம். நோய் துவக்கும் முன்னே, மூச்சுவிட

முடியாது. திகைத்தல், உடல் நடுங்கல், மனங்கலங்குதல் ஆகிய குறிகளைக் காட்டிப் பின்பு இரைப்பை உண்டாக்கும். விடும் மூச்சு பெரிய மாடுவிடும் மூச்சையொத்திருக்கும். மார்பை இறுக்கிக் கட்டியது போல நோதல், அடிக்கடி மயக்கம் உண்டாதல், மலமும் மூத்திரமும் கட்டி வயிறு உப்புதல், வாய் குழறித் தடுமாறுதல், ஐம்புலனும் மங்குதல், உடல் முழுமையும் வலியுண்டாதல், நெற்றியில் மிகுதியும் வியர்த்தல் ஆகிய குறிகுணங்களைத் காட்டும். இதனை மகா சுவாசம் எனவும் கூறுவர்.

மேல் நோக்கு இரைப்பு நோய் :

முற்கூறிய இரைப்பு நோய்களில் எவையேனும், மருத்துவத்திற்குக் கட்டுப்படாமல், நீண்டநாள் தொடர்ந்து மேல் நோக்குக்கால் (உதான வாயு) வன்மை இழந்து மூச்சை வெளியாக்க இயலாத போது, பிணி யாளன் மூச்சுத் திணறி, கண் வெளியே முட்டி, வாய் உலர்ந்து பேச முடியாது திகைத்து படுக்கை நிலையாமல்எழுந்து வாய் திறந்தது போல மேல் நோக்கி, சற்று காற்றை வெளியாக்கி உள்ளிழுக்க அலைவான். அச்சமயத்தில் உடனே தகுந்த மருத்துவம் செய்யின் குணமடைந்து பிழைப்பான். இன்றேல், திறந்தவாய் திறந்தபடியே இருக்க, முகங் கறுத்து மயக்கமுற்று மரணத்தை அடைவான்.

மேற்கூறிய ஐந்து வகை இரைப்பு நோய்களல்லாமல், தமரக நோயிலும், நீரருகல் நோயிலும் இரைப்பு நோய் தொடருமென இக்கால மருத்துவ நூல் (Modern Medicine) கூறும், அவைகளின் குறி குணங்கள் முதலியனவற்றை ஆங்கு அறிமின்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : உணவு வகைகளில், மிகுதியும் ஐயத்தை உண்டாக்கக்கூடிய, பொருள்களை உண்பதாலும், குளிர்க் காற்றிலிருத்தல், மலையில் வாழ்தல், பனியில் நடத்தல், ஆகிய செயல் களாலும், ஐயக்குற்றம் தன்னிலை மாறுதலாலும், வளி அல்லது தீக்குற்றத்தையேனும், அல்லது அவ்விரு குற்றத்தையேனும் தன்க்குத் துணைகொண்டு, தொண்டை, மூக்கு, அண்ணாக்கு, நுரையீரல் *இவைகளில் மிகுந்த குற்றத்தின் அளவாக தாபத்தை எழுப்பி கோழையை உண்டாக்கி, சுரம் முதலிய குறிகுணங்களைப் பிறப்பிக்கும்.

உடல் நிலைகளில் (ஆதாரங்களில்) மார்பிடமான அநாகததத்தில் எழும், மேல் நோக்குக்கால் (உதானன்) தன் அளவில் மிகுந்து நிற்கும்.

இந்நோய் வருவதற்கு வளிக்குற்றமெனப் பிறநூலுடையார் கூறுவர். அவர் கூற்றும் பொருத்தமுடையதே. எங்ஙனமெனின் மூச்சு உறுப்புக் களின் வழியே காற்றானது இயற்கையாகச் செல்ல வொட்டாமற்படி தடை செய்தலால் என அறிக.

இந்நூலுடையார் இந்நோய் வருதற்கு ஐயக் (கபக்) குற்றமே முதலாயிற்றென்று கூறியது, ஐயமானது மூச்சு உறுப்புகளின் உள் ளிடங்களிலடைத்துக் கொண்டு காற்றை இயற்கையாக செல்ல வொட்டாமற்படி தடுத்தலால் எனவறிக. இவ்விருவர் கூற்றும் சரியே.

நாடிநடை.

தானமுள்ள சேத்து மந்தானிளகிய

....................................

...........................சுவாசம்..........

பாங்கான வாதத்தில் சேத்தும நாடி பரிசித்தால் ......

....................................

....................................

ஓங்காணும் ..................சுவாசகாசம்........

சதகநாடி

உற்றிடு மய்ய நாடி யோங்கியே துடித்து நிற்றாற்
பற்றிடும் இரும லீளை பதறியே யிளைப்புண்டாக்கி
....................................
....................................

குணவாகடம்.

எச்சில் (கோழை சளி) : இது நுரைத்து அளவில் மிகுந்து பளு வற்றுக் காணின், வளி (வாத)க் குற்றத்தால் வந்ததாகும்.

கறுத்து, கடினப்பட்டு, புலால் மணத்துடன் காணின், ஐயக் (கபம்) குற்றத்தைக் குறிக்கும்.

வெளுத்துச் சீழ் கலந்தது போலும் மஞ்சள் நிறத்தோடும் காணின், அழல் (பித்தம்) குற்றத்தைக் காட்டும்.

மருத்துவம் : நோயில், தன்னிலை மிகுந்த ஐயம் முதலிய குற்றங்களைத் தன்னிலைப்படுத்துதற்கும் மிகுதிப்பட்ட மேல் நோக்குக்காலின் வன்மையைக் குறைத்தற்கும் பேதி மருந்துக்களைக் கொடுத்தல் வேண்டும். நோய்க்குத் தகுந்த மருந்துகளையும் உணவுவகைகளையும் தருதல் நல்லது.

கழிச்சலுக்கு :

| | |
|---|---|
| முக்கிரட்டை வேர்<br>காக்கட்டான் வேர்<br>சிவதை வேர்<br>நிலவாகை இலை | வகைக்குப் பலம் ¼ நீர் படி விட்டுக் காய்த்து ஓர் ஆழாக்காய் வடித்து அதில் ½ ஆழாக்கு கொடுக்கவும். |

உத்தாமணித் தைலம் (மாந்த எண்ணெய்) அரை உச்சிக் கரண்டி அளவு கொடுக்கலாம்.

சஞ்சீவி மாத்திரை ஒன்று அல்லது இரண்டை, உத்தாமணிச் சாறு மூன்று துளிகளுடன் சேர்த்துக் கொடுக்கவும்.

நோய்க்கான மருந்துகள் : பவளம், முத்து, வெள்ளி, முத்துச்சிப்பி, தாளகம், செம்பு இவைகளால் ஆகிய பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலியனவும் கத்தூரிக்கருப்பு. தாளகக்கருப்பு வகைகளும் ; சுவாசக் குடோரி, மகா வசந்த குசுமாகரம், பூரண சந்திரோதயம், சாம்பிராணிப் பூமாத்திரை ஆகிய மாத்திரைகளையும் பயன்படுத்தலாம். மேற்கூறிய மருந்துகளுக்குத் துணை கூட்டற்பொருட்டு, குடிநீர், இளகியம், பொடி (சூரணம்) முதலியனவும், கடைச்சரக்குகளில், சிற்றரத்தை, தாளீச பத்திரி, திப்பிலி, அதிமதுரம், கோஷ்டம், இலவங்கம், அக்கராகாரம், கண்டு பாரங்கி, மூங்கிலுப்பு, சுக்கு, மிளகு, மிளகு வேர், திப்பிலி வேர் முதலியனவும் ; துளசி, கண்டங்கத்திரி, ஆடாதோடை, கஞ்சாங்கோரை (நாய்த் துளசி) கரிசாலை, பொன்னாங்காணி, உத்தாமணி, தும்பைப்பூ, இம்பூரல், மணித்தக்காளிகளின் சாறு முதலியனவும் பயன்படுத்தலாம்.

ஈதன்றி, தேரன் மருத்துப் பாரதத்தில் கூறியவாறு செம்பு பற்பத்துடன் புனுகைக்கூட்டி, உத்தாமணிச் சாற்றோடு கொடுக்கின் நோய் நீங்குமென்பதைக் கீழ்க் கூறிய செய்யுளால் அறிக.

"சுவேத வாகனனான மைந்தனெனு மைந்தனைச்
சொர்க்கமெனு முத்தமாங்கத் தோன்றலெனு மான்மத
வலாரிதன் பகையான சுவாசமாங் காலகேய
நிவாதகவ சத்தவுணர் முப்பத்தி மூன்றான
நிகழ்லக்க ரோமாகரரை நிமிடத்திலே கொன்று
வேலிச் சரத்தினா னீறாக்கிய காலையே
சவாது மணவாகை மாலிகை சூடிய மராபதி
தன்னிலொரு பவனிவந்து சக்கரத் தந்தையுட
னமுதபோ சனமுண்டு தந்தை மகிழ்ந்தவேளை
துவாதசா தித்தரென வொளிருமணி மவுலிபவணி
சொன்னவம் பரமுதவிச் சோதிக்க வரம்பை
மாதைப் பணிக்கவவள் சொல்லலியு மாயினானே."

அன்றியும் வழக்கில், பொரித்த கோழி முட்டையின் ஓட்டை உவர் மண் கூட்டி நீர்விட்டு அவித்துக் கழுவி எடுத்ததைக் கல்வத்திட்டு நீர்முள்ளிச் சாறுவிட்டு அரைத்துப் புடமிட்டு மீண்டும் இவ்வாறு மூன்றுப் புடமிடப் பற்பமாகும். இதனில் ஒரு துவரையளவும் ஒரு சிறு துண்டு கடகரோகணித் தூளும் மிளகரணைவேர் பட்டையுங் குடி நீராக்கிக் கொடுக்க இரைப்பு நோய் நீங்கும்.

உணவு : இந்நோயினர் தனக் கொவ்வாப்பொருளறிந்து உணவை வகுத்தும், எளிதில் செரிக்கக் கூடியதும், உடலில் ஐயத்தைப் பெருகக்கூடிய உணவுந் தள்ளல் வேண்டும்.

## இளைப்புநோய்.

வேறுபெயர்கள் : ஈளை, கபநோய், அரசநோய், க்ஷயம், ராஜயக்ஷ்மா, யக்ஷ்மா, சூசாஷை என்பன.

நோயை, நோயுற்றானும் நோயறிவானும் அறிவதற்கு முன்பே, உடல் இளைத்துக் கொண்டே வருதலால் இதற்கு இளைப்பு நோய் என்றும், இந்நோயில் ஈளை (கோழை) பெரிதும் வெளியாதலால் ஈளை நோயென்றும், இந்நோய்க்குத் துணையாகப் பல்வேறு நோய்கள் தொடருவதால், அரச நோயெனவும் (ராசயக்ஷ்மா) இதற்குப் பலபெயர்கள் உண்டாயின.

இயல் : இந்நோயில், சிறு அளவில் ஐயக்காலமாகிய மாலைப் பொழுதில் சுரம் தோன்றி, உடற்கட்டுகளில் ஒன்றன்பின் ஒன்றாக வன்மை குறைந்தபடி ஊக்கம் இழந்து திங்கள் ஒளியில் மங்குவதுபோல் உடலை மங்கும்படி செய்யும்.

நோய் வருவழி : அடிக்கடி பட்டினி இருத்தல், இரவில் விழித் திருத்தல், வன்மைக்கு மிகுந்த உழைப்பை மேற்கொள்ளல், மற்றைய நோய்களில் பன்னாட்கள் துன்பப்படல், வறுமையின் கொடுமை, சிறையிலீடுபடல், உடற்கு ஊட்டமில்லாத உணவையே புசித்தல், காற்றில்லாத வீட்டில் வசித்தல் ஆகிய பல வகைகளால் இந்நோய் உண்டாகும். பொதுவாக உடல் வன்மை குறைதற்கான செயல்களே இந்நோயைப் பிறப்பிக்குமென அறிக.

முற்குறிகள் : உண்ணும் பொருள் எவற்றிலும் விருப்பமின்மை, ஏக்கம், பசியின்மை, மந்தமாகவேயிருத்தல், உணவில் மண், கல், தூசி, எறும்பு, ஈ இவைகள் கலந்துள்ளன போன்ற ஓர் எண்ணம், பன்னாள் நோய்க்குப் பின் தொடரக்கூடிய நோய்களாகிய உடல் வெளுத்தல், கால்வீக்கம், உடல் துரும்புபோல் இளைத்தல் ஆகிய நோய்களில் தானீடுபட்டிருப்பது போல நினைத்து நடுங்கல், தன்னுடலைத்தானே மீண்டும் மீண்டும் பார்த்து வருந்தல், தன்னுடல் பின்னிழியப் புகுதற்கு அறிகுறியாக, ஊர்கள் தீப்பற்றியெரிவது போலும், குளம், குட்டை, ஆறு இவைகள் வற்றிக்கிடப்பது போலும், கொடிய புள்வகைகளும் ஊறும் வகைகளும் தன்னைத் துன்புறுத்துவது போலும், கோள்கள், மலைகள், காடுகள் அழிந்து வீழ்வது போலவும் கனவு காணுதல் முதலியன ஏற்படும். அன்றியும், நகம், மயிர் முதலியவைகள் மிகவும் வளர்தல் என்னும் குறிகளைக் காட்டி உடற்கட்டு ஏழும் வன்மையில் குறைந்து கொண்டேவரும்.

நோய் எண் : இவ்விளைப்பு நோய் உடல்வன்மையைக் குறையச் செய்து, உடற்கட்டுகள் யாவற்றையும் கேடடையச் செய்யும் வன்மை யுடையதாதலால், குற்றங்களே யல்லாமல், கால் (வாயு)களுள் நான்கும் கேடடைவதினளவாக எவ்வுறுப்புகளையும் பற்று மாகலின், இக் கால் (வாயு) அளவாக நான்கும், உறுப்பு அளவாக (கீல்கள்) ஒன்றும் கூட்டி ஐந்தென்பர். இவ்வைந்தும் எண்ணிக்கையளவாகவும், நோய் கொண்ட குற்றத்தின் அளவாகவும், இடங்களுக்குத் தக்க வாறும் குறிகுணங்கள் வேற்றுமையடையு மாதலால்

மீண்டும் எண்ணிக்கையில் பெருகும். அவைகளை ஆங்காங்கு விளக்கிக் கூறலாம். இந்நோயினைக் குற்றவளவாக (தோட) நான்கென வகுப்பர், மற்றும் சிலர் பன்னிரண்டென வகுப்பார். இவற்றுள் முதல் கூறிய நான்கு வகையினைக் கூறுவாம்.

i. உடலின் மேல்பாக உறுப்புகளாகிய மூக்கு, கழுத்து, தொண்டை, மார்பு, இவ்விடங்களுக்கு உரிய குற்றம், தீயும் ஐயமும் (பித்தமும் கபமும்) கேடடைந்து, கால்களில் மேல் நோக்குக்கால் (உதானவாயு) தன்னிலை பிறழ்ந்து வரும் நோயாகும். இதனை ஊர்த்துவ கததோடம் எனக் கூறுவாரு முளர்.

ii. உந்திக்குக் கீழ் உள்ள உறுப்பு கீழ்நோக்குக்கால் வாழுமிடத்து வரும் நோய் இதனை அதோக தோஷம் என்பர்.

iii. மார்பின் கீழும் உந்திக்கு மேலும் உள்ள இடத்து வரும் நடுக்காலின் (சமானவாயுவின்) செயலிடமாகிய வயிற்றில் வருநோய், இதனைக் கோட்ட கததோடம் என்பர் சிலர்.

iv. பரவுகால் (வியானன்) உலாவும் இடங்களில் அதன் செயலால் (கெடுதலால்) பக்கசூலை போன்ற குத்தல் நோய்களும், தோலைப்பற்றிய கழலைகளும் பிறக்கும். இவற்றைத் திரியக்கத தோஷமென்பர்.

v. கீல் என்புகளில் காணும் நோய் இதனைச் சந்திகத தோடமென்பர்.

மேல்பாக உறுப்புகளில் தோன்றும் நோய் :

1. மூக்கிலுண்டாம் இளைப்புநோய்: அடிக்கடி மூக்கடைத்துத் தும்மல் இருமல் எனுங்குணங்களைக்காட்டி, மூக்குநீர்பாயும் மூக்கிலுண்டான இக்கேடு எளிதில் தீராமல் நெடுநாட்கள் வரை மூக்கில் நீர்பாய்ந்து கொண்டே வந்து, பின் மூக்கு நீர் கடினப்பட்டுச் சளிபோல் விழும், அச்சளி சிலவேளை கடினப்பட்டுச் சக்கைத்துண்டு போலும் விழும். அல்லது மூக்குத்தண்டு இருபக்கத்திலேனும் ஒரு பக்கத்திலேனும் புண்பட்டுலுலராமல் சற்று வீங்கித் தடித்து மற்றைய புண்போல் சிவந்திராமல் வெளுத்திருக்கும். புண்ணைச் சுற்றிக் குழகுழப்பான சீழ் அமைந்திருக்கும். அன்றியும், இரைப்பு நோயில்காணும் பொதுக் குறிகுணங்கள் பலவும் ஒன்றன்பின் ஒன்றாக இதில் தொடரும்; இந்நோய் மிகுதியும் காணப்படுவதில்லை,.

2. தொண்டையில் காணும் இளைப்பு நோய் : இந்நோயில் குரல்வளையில் ஐயம் மிகுவதால், குரற்கம்மல் போலக் குரல்ஒலியைக் குறைத்து எளிதில் தீராமல் நாளுக்கு நாள் உடலை மெலியச் செய்து, இளைப்பு நோய்க்குரிய மற்றக் குறிகுணங்களும் தொடரும். அன்றியும், குரல் வளையின் இரு பக்கத்திலும் கழலையைப் போன்ற வீக்கத்தை உண்டாக்கி, வெளுத்துச் சீழ் நீரம்பியது போலக் காணும், அக் கழலையில் பின் புண்பட்டு, பள்ள மேடாகத் தோன்றும். புண்கள் போல்சிவந்திராமல் வெளுத்துக். காணும். அன்றியும், குரற்கம்மல், நாட்பட்டு நிலைத்திருத்தல், எம்மருந்திலும் தீராமை என்னும் குறிகளையும் பெறும்.

கழுத்தில் தோன்றுவன ;

கழுத்தைச் சுற்றிலும் அல்லது அக்குள்களிலும் கண்ட மாலை வருவதுபோல், சிறு கழலைகள் கண்டு வீங்கி நொந்து, நாளுக்கு நாள் பெருத்துக்கொண்டே வரும் ; இக்கழலைகள் முதலில் நோயுடன் பிறந்து பின் ஒன்றோடொன்று இணைந்து மாலையைத் தொடுத்தாற்போல் அணி அணியாகத் தோன்றும் ; இந்நோய் பெரும்பான்மையும் சிறு வயதில் வருவதொன்றாகும்.

கழுத்தில் பிறந்த இக்கழலைகள், நாளுக்கு நாள் அளவில் பெருத்துக் திரண்டு கடினப்பட்டு உருண்டை உருண்டையாகக் காணும் ; சில வேளை அவைகள் பருத்துப் பழுத்துடையும்; உடைந்தபின்பு பிசுபிசுத்து சீழ் கசியும் ; எளிதில் உலராது கொடுமைகள் பல செய்யும் ; உடலை நாளுக்கு நாள் மெலிவடையச் செய்து எலும்புந் தோலுமாக ஆக்கும், சுரம், இருமல், பேதி முதலியன தொடர்ந்து இறுதியில் கொல்லும்.

மார்பில் தோன்றும் இளைப்பு நோய்: இந் நோய் நுரையீரலைப் பற்றி மெல்ல மெல்லப் பரவும். நோயினை அறியாவண்ணம் உடலை மெலிவடையச் செய்து, உணவில் வெறுப்பை உண்டாக்கி, மூக்கு நீர் பாய்தல், சிறு அளவில் இருமுதல், அதில் கொஞ்சம் சளியும், சில வேளை குருதியும் கலந்து வெளியாதல், குரல் கம்மல், ஐயக் (கப) காலமாகிய மாலைப் பொழுதில் சுரம் வருதல், மூச்சும் தடைப்படல் என்னுங் குறிகளைக் காட்டி, பக்க சூலை, மிகுசுரம் என்னும் பல நோய்களையும் துணைகொள்ளும். சில வேளைகளில் தீவிரமான சுரம் காய்ந்து, இருமல், இரைப்பு என்னும் குணங்களோடு, சுரம் காய்வதும் இறங்கு

வதுமாக நெடுநாள் வரையிருந்து, இடைவிடாத இருமலை உண்டாக்கி, மிகுந்த அளவில் கோழையைக் கக்கச் செய்யும். இவ்வாறு தீவிர மாகக் காயும் சுரம், பகல் எல்லாம் காய்ந்து, இரவில் விட்டு மிகவும் வியர்க்கும். காலை வேளைகளில் சுரம் இராது. சிலருக்கு மேற் கூறிய குறி குணங்கள் ஒன்றையுமே காட்டாமல், உடல் மட்டும் மெலிவடைந்து, நாளுக்கு நாள் வன்மை குறைந்து சிறிதளவில் இருமலை காட்டிப் பின் தீவிரப்படுத்துவதுமுண்டு.

மற்றும் சிலர்க்கு, ஐய சுரத்திலீடுபட்டு மெலிந்த பின், அத்துடன் சிறு சுரம் தொடர்ந்து உடலை மெலியச் செய்து, இளைப்பு நோயை உண்டாக்கிப் பின் மற்றைய குறி குணங்களனைத்தையுங் காட்டும்.

அக்குளில் தோன்றுவன:

அக்குள்களில் தோன்றும் நோய் பத்துப் பதினைந்து வயதுக்கு மேல் காணும்; மேற்கூறிய குறிகுணங்கள் யாவும் கண்டு சிறு கழலைகள் அவ்வாறாகக் கழலையைப்போல் வருகின்ற நோய்களின் முழு விவரமும், குறிகுணங்களும் இந் நூலின் இரண்டாம் பகுதியில் கூறுவோம்.

II. உந்திக்குக் கீழ் (கீழ் நோக்குக் கால்) அதோகத சயம்.

உந்திக்குக் கீழ்வரும் நோய், இளைப்பு நோய்கள் குடலைப்பற்றியும், குடலைச்சார்ந்த உறுப்புகளைப் பற்றியும் உண்டாக்கும். இதில் மார்பைப் பற்றிய இளைப்பு நோயின் குறிகுணங்களோடு, அடிக்கடி கழியச்செய்யும். உடல் மிகவும் இளைக்கும். அடிவயிறும் சிறிது பெருத்துக்காணும். இந்நோய் சிறு வயதினர்க்குண்டாயின், வயிறு பெருத்து, கைகால் சூம்பி, முகஞ் சுருங்கி, உடல் வெளுத்து, அடிக்கடி சுரத்தை வருவிக்கும். வயிற்றுத் தோலின்கீழ்ச் சிறு கழலைகளைப் போலத் திரளும். நாளுக்கு நாள் வயிறு பெருத்துக்கொண்டே வருவதுடன் கழிச்சலையும் உண்டாக்கும். வயிறு நோதல், பெருவயிறு போல் வயிற்றுள் நீர் கோர்த்தல் என்னுங்குறி குணங்களையும் காட்டும்:

III, மார்புக்குக் கீழும் உந்திக்கு மேலும் வருவது கோஷ்டகா சயம் எனப்படும்,

இடப்பாட்டீரல், நீர்க்குண்டிக்காய் ஆகிய இவைகளைப்பற்றி வரு நோயாகும். இடப்பாட்டீரலைப்பற்றி வருநோயில், இளைப்பு நோயிற் காணுங் குறிகுணங்களோடு, இடப்பாட்டீரல் நாளுக்கு நாள்

பெருத்துக்கொண்டே வரும். அவ்வாறே நீர்க்குண்டிக்காய் வீங்கி அடிக்கடி நீரிழிதல், அதில் சிறிது சீழ் கலந்தேனும், குருதி கலந்தேனும் காணுதல். நீரிழியும் போதெல்லாம் நீர்ப்புழை எரிதல், நீரை அடைக்க முடியாமலிருத்தல் முதலிய குறிகுணங்களைக் காட்டும். இவற்றோடு இளைப்பு நோயில் உடல் இளைத்தல் போலவே, இதிலும் உடல் இளைத்துக்கொண்டே வரும். இடுப்பின் பின் பக்கத்தில் தாங்க முடியாத வலியையும் உண்டாக்கும்.

IV. பரவுகால் (வியானன்) தூண்டப்படுவதால் வருவது திரியக்கத் தோடம்.

இப்பகுதியில் தோலைப்பற்றி வருவனவும், மார்பின் பக்கம் வருவதான பக்க சூலையும் சேர்ந்தனவாம்.

தோலைப் பற்றி வருநோய் : பெரும்பான்மையும் சிறு வயதிலும், நடு வயதிலும் வருநோயாகும். இந்நோய் மூக்கு, தாடை, கால் விரல், கை, கால் முதலியவைகளில் ஒரு படை போல் தோன்றி, சிறிதும் பெரிதுமான கழலைகளைப்போல வளர்ந்து, பின்பு அதனைச் சுற்றிச் சிவந்து வீங்கி மருளைப் போல வளர்ந்து புண்ணாகும். அதன்மேல் அடை கட்டியது போல மூடிக் கொள்ளும். இவ்வாறாகப் புண்ணாவதும் பக்குக்கட்டிக்கொள்வதுமாகவே ஆறாமல் நிலைத்து விடுவதுமுண்டு.

பக்கசூலை நோயிற்காணும் குறிகுணங்களாகிய மூச்சுவிட முடியாமை மூச்சு விடும்போதெல்லாம் பக்கத்தின் விலா எலும்பு வலித்தல், குத்தல், சிறு சுரம் காய்தல், படுக்கையில் இருக்கமுடியாமை, சிறு இருமல், இருமிக் கோழையைத் துப்பமுடியாமை முதலியவற்றைப் பிறப்பித்து, நாட்செல்லச் செல்ல நோயுற்ற மார்பின் இரு சவ்வுகளினிடையே நீர் கோர்த்து, விலா எலும்புகள் தெரியாதபடி வீங்கிக் காணும். அத்துடன் இந்நோய், இளைப்பு நோயில் காணும் குறிகள் யாவையும் பெற்றிருக்கும்.

இப்பக்க சூலை, இளைப்பு நோய்க்குத் துணையாகவும் வருவதுண்டு இளைப்பு நோய் முதலில் வருங்கால் திடீரெனப் பக்கத்தில் தாங்க முடியாத வலியைத் தந்து அங்கு ஏதோ கிழிந்து விட்டது போற்றோன்றி, மூச்சுவிட முடியாமற் பரிதவிக்கச் செய்யும். அத்துடன், மனம் திடுக்கிடுதல், முகம் வெளுத்து நீலமாதல், கை கால் சில்லிட்டுப் பிசுபிசுத்த வியர்வை விடல், மார்பு துடித்தல், நாடி நடை மெலிதல், பேச முடியாமை என்னுங் குறிகளையும் காட்டும்.

V. (1) கீல்களில் வருவன:

இந்நோய்களுள் பெரும்பான்மையான சிறுவர்கட்கு முழங்கால் முழங் கைகளில் வரும். நரித்தலை வாதத்தைப்போல முட்டிகளில் ஒன்றே னும் பலவேனும் வீங்கி, நோயுற்றுச் சிறுகச் சிறுக வீங்கிக்கொண்டே வரும். வீங்கிய வீக்கத்திற்கு ஏற்ப அங்கு நீர் கோத்துக்கொள்ளும். இதனோடு சிறு சுரம், உடல் இளைத்துப்போதல் முதல் நோய்க்கான மற்றக் குறிகுணங்களையுங் காட்டும்.

இவற்றுள் இடுப்பின் கீழேயுள்ள இருபட்டை என்பும், கால்மேலெலும் பும் கூடும் கிண்ணப்பந்து சந்திலுண்டாகும் நோயில் பெரும்பான்மையும் மேற்காலின் எலும்பு முட்டி இந்நோயிலீடுபட்டு, பின் அக்கில் தாபிதப் பட்டு, அது வெகு சீக்கிரத்தில் பரவி, என்பை அழுகச் செய்து காலின் அளவைக் குறுகச் செய்யும். அதனால், நோயுற்றக்கால் மற்றக்காலை விடக் குறுகிக் காணுவதோடு, அக்காலை நீட்டவும் மடக்கவும் முடியாத படி செய்து, நாளுக்கு நாள் உடலை இளைக்கச்செய்து மற்ற இளைப்பு நோயின் குறி குணங்களையும் காட்டும். இந்நோய் சிறியவர்க்கும், பெரியவர்க்கும் வரு நோயெனக் கூறினும், சிறியவர்கட்கே மிகுதியாகக் காணப்படுகிறது.

(2.) எலும்பைப் பற்றி வருவன: தலையிலிருந்து கீழ் வரையுமுள்ள முதுகுத் தண்டு எலும்புகளுள் எவ்வெலும்பையாவது பற்றி நோயுண் டாகும். பற்றிய எலும்பிற்கேற்பக் குறிகுணங்களும் வேறுபாடடையும்.

முதுகுத் தண்டின் கீழ்ப்பாகத்தைப்பற்றி வரும் நோயில் முதுகுத் தண்டின் உறுப்புகள் எப்பக்கத்தேனும் சிதைந்து, சிதைந்த எலும்பின் இடை குறைவதால், முதுகந்தண்டு வளைந்து காணும். அவ்விடத்தில் மிக்க வலி இல்லாமல் இருப்பினும், தலையிற்றட்டல், அடித்தல் முதலிய வைகளின் அதிர்ச்சியால், நோயுள்ள எலும்பு தாங்கமுடியாது வலிக்கும். அன்றியும், முதுகுத்தண்டு வளையும்போதும் வலிக்கும். மேலும், அரை யின் பக்கமுள்ள தண்டெலும்புகளின் நோயில் கால் குறைதலும், அதற்கு மேல் உள்ள இடத்தில் உள்ளபோது, அடிவயிறு பிட்டம் முதலிய இடங் களில் நோதலும், மார்பின் பின்புறம் உள்ளபோது, மேல் வயிறு வலித்த லும் உண்டாகும். இன்னும் முதுகுத்தண்டை குனியவும் நிமிரவும் ஒட்டாமற்படி செய்யும். நோய் முதிர முதிர முதுகு எலும்புகள் இணைந்து பின் பக்கமாக வளைந்து கூனடையும்; அல்லது முன்பக்கமேனும் இடது

அல்லது வலப் பக்கமேனும் வளைந்து காணும். இது, கழுத்தினிடமாக இருப்பின் தலை நிமிர்ந்து அதற்குத் துணையாகத் தோள் பட்டைகளை அணையச் செய்து தலையைத் திரும்பிப் பார்க்க முடியாது உடலோடு அசையச் செய்யும்.

இந்நோயில் எலும்புகள் அழுகிக் சீழ் கூடுமாயின், அச்சீழ் எலும்பு களைப்பற்றி மெல்லிய சவ்வுகளின் இடையே நுழைந்து, நோயுற்ற இடத் திற்குத் தகுந்தது போல வாயின் கீழ்ப்புறம் விலாப்புறம் மார்பின் பக்கம் அல்லது துடையின் இடுக்கு இவைகளில் பாய்ந்து கட்டிபோற்றோன்றி உடைந்து சீழ் வடிவதுண்டு.

அழுகி நொந்த எலும்பினிடையே அகப்பட்டு நரம்புகள் சிதையு மாயின், அந் நரம்புகளின் இயக்கம் கெட்டு, அங்குள்ள உறுப்புகளின் செயலற்றுப் போதல், குடைதல், குத்தல், மரத்துப்போதல், பக்கவாத நோயைப் போன்று கால் நடக்க முடியாமை, சிறுநீரைக் கழிக்க முடியாமை முதலிய குறி குணங்களையும் காட்டும். கழுத்தினிடத்துள்ள எலும்பைப்பற்றி வரும் நோய் திடீரெனக் கொல்லுவதுமுண்டு.

தீரும் தீராதவை : பொதுவாக இளைப்பு நோய்கள்யாவும் எளிதில் தீரா நோயாம்.

பொதுக் குறிகுணம் : முற்குறியில் கூறிய குணங்களைக்காட்டி, உணவு செல்லாமை, பசியின்மை முதலியவைகளோடு, ஐயக்காலமாகிய மாலையில் சற்று சுரங்காய்வதும், பின்பு மிகுந்த சுரங்காய்வதுமாக இருந்து, உடற்கட்டுகளை ஒன்றன் பின்னொன்றாகக் குறையச்செய்து, நாளடைவில் உடலை மெலியச்செய்து, கடைசியில் ஐயம் பெருகி, குரற் கம்மல், மூக்கில் நீர் பாய்தல், பசியின்மை, இருமல், கோழைகக்கல், பக்கசூலை, இரவில் மிகுதியாக வியர்வைகாணல், கண்பஞ்சடைதல், காது கேளாமை, மிகுகழிச்சல், வாந்தி என்னும் குறிகளைக் காட்டிக் கொல்லு வதுமுண்டு.

குற்ற முதலிய வேறுபாடுகள் : தன்வினைப் பிறவினைகளின் பய னாகத் தூண்டப்பட்ட ஐயக்குற்றமானது, வளி அழல் துணைக்கொண்டு, பசித்தீயைக் கெடுத்து, உடற்கட்டுகளை ஒன்றன்பின் ஒன்றாக மெலி வடையச் செய்வதோடு, வாயுகளையும் தூண்டி, நோயை வருவிக்கும்.

நாடி :

தானமுள்ள சேத்துமந்தானிளகில்....க்ஷயம்
கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி கலந்திடுகி
.........................
...............இளைப்பிருமல்

மருத்துவம் : இந்நோய் ஐயப்பெருக்கால், பிறந்து, ஏழு உடற்கட்டு களையும் குறையச்செய்து, வாயுக்களைத் தூண்டி, நோயைத் தூண்டப் பட்ட கால் வாழுமிடத்தே நோயினை விளைவிக்குமாதலால், தன்னளவில் மிகுந்த குற்றத்தையும், அதற்குத்துணையாயுள்ள மற்றகுற்றங்களையும் தன்னிலைப்படுத்துதற்கான மருந்து வகைகளையும், மெலிவடையும் உடற்கட்டுகளை வன்மைப்படுத்தி, உடற்கு உரம் உண்டாக்குதற்கும் வாயுகளைத் தன்னிலைப் படுத்துவதற்குமான மருந்துகளையும் வழங்கல் வேண்டும். மற்ற நோய்களைக்காட்டிலும் இது பசித்தீயைக் கெடுத்து உடல் வன்மையைக் குறைத்து உடலை இளைக்கச் செய்யும் நோயாத லால், பசித்தீயைத் தூண்டக் கூடியதும், உடற்கு உரந்தரக்கூடியது மான மருந்துகளையும் உணவு வகைகளையும் கொடுத்தல் வேண்டும்.

அவைகள் வறட்சியாலுண்டான ஐயப்பெருக்கைப் போக்குதற்கான வாந்தி, கழிச்சல் இவற்றை உண்டாக்கி வறட்சியைத் தணிக்கக் கூடிய தர்ன மருந்துகளுள், பால், நெய் முதலியவைகளோடு கூடிய மருக்காரை நெய், மருக்காரைக் குடிநீர் இவைகளைக் கொடுக்கில் வாந்தியோடு கோழை வெளியாகும். அவ்வாறே நிலாவாரை நெய்யினைக்கொண்டு கழிச்சலை உண்டாக்கவும். பின்பு பசித்தீயைப் பெருக்கி, உண்ட உணவை செரிப்பித்து உடற்கு ஊட்டம் தரக்கூடியதான மருந்துகைளயும், உணவுகளையும் அளித்து, குற்றங்களைத்தன்னிலைப்படுத்தி, நோயினை நீக்குவதற்கான பெரு மருந்துகளாகிய இரசபாடாணம் தங்கம் முதலிய உலோகங்களால் ஆக்கிய பற்ப செந்தூர முதலியவைகளையும் கொடுத்தல் நல்லது.

1. வாந்தியெழச் செய்ய : இலைக் கள்ளிச்சாறு, அரை ஆழாக்கு மரக்காரைப்பழம் பலம் இரண்டு, அதிமதுரம் பலம் ஒன்று, மிளகு, திப் பிலி, சுக்கு வகைக்குக் பலம் அரை, நெய் படி அரை, இவற்றைக் கூட்டி நெய் காய்த்து வடித்ததில், ஒரு கரண்டி அளவு கொடுக்க, வாந்தி உண்டாகிக் கோழை வெளியாகி ஐயம் தணியு

2. கோரோசனைக்கருப்பு ஒரு சிட்டிகையைக் கொத்துமல்லிக் குடிநீரில் கலந்து, சர்க்கரையும், நெய்யுங் கூட்டிக் கொடுக்க, வாந்தியோடு கழிச்சலும் உண்டாம்.

3. நிலாவாரை, சிவதை, மருக்காரைவேர், சுக்கு, ஏலம், சிற்றரத்தை, கொம்புகள்ளி வேர் வகைக்குப் பலம் ஒன்றெடுத்து, இரண்டு படி நீர்விட்டு, அரைப்படியாகக் காய்த்து, வடித்ததில் நெய் படி அரை கூட்டிப் பதமாகக் காய்த்து, அதில் அரை முதல் ஒரு உச்சிக்கரண்டி அளவு கொடுக்க, வாந்தியும் கழிச்சலும் உண்டாவதோடு பசித்தீயும் ஏற்படும்.

கழிச்சலுக்கு : உத்தாமணி (மாந்த) எண்ணெய், கழற்சி எண்ணெய் போன்றவைகளுள் ஒன்றை, நோய் வன்மைக்கும் நோயினன் வன்மைக்கும் ஏற்ப அளவிட்டுக் கொடுக்கலாம்.

பசியை தூண்டுவதற்கு : நண்டு தீநீர் : வரப்பு நண்டு முன்னூறு கொண்டு, கழிக்க வேண்டிய வைகளைக் கழித்து, அலம்பி, ஒன்றிரண்டாக இடித்து அதில், பதினைந்து படி நீர் விட்டு சீரகம், இஞ்சி, இலவங்கம், இலவங்கப்பட்டை சாதிக்காய், சாதி பத்திரி, ஓமம், வகைக்குப் பலம் ஒன்று இடித்துப்போட்டு தீநீர் வடித்ததில் அரைக்கால் முதல் கால் ஆழாக்குவரை கொடுக்கில், அது பசித்தீயைத்தூண்டி உண்டவுணவைச் செரிப்பித்து, உடற்குஊட்டத்தைத் தரும். இது கைகண்ட மருந்தாகும்.

2. நத்தை நெய் : நத்தைச் சதை வீசை ஒன்று, ஆட்டுப் பால் படி நான்கு, நெய் படி இரண்டு இவற்றைச் சேர்த்துக் காய்த்து நெய் வடித்து வைத்துக் கொண்டு இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, சித்திர மூலம், அமுக்காரங் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, திப்பிலி, மிளகு, சுக்கு வகைக்கு ஒரு பலமாகக்கலந்து, நீர் படி நான்கு கூட்டி, நாலிலொன்றாகக்காய்த்து வடித்து, மேற்படி நெய்யில் கூட்டி, மீண்டும் நீர்வற்றக் காய்த்து மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு, அந்நெய்யில் ஒரு கரண்டி அளவில் கொள்ளவும்.

3. உடும்பு நெய், முயல் நெய்.

மாத்திரை :—சய குலாந்தகம், பூரண சந்திரோதயம், மகாவசந்த குசுமாகரம் போன்ற பெரு மருந்துகளில் ஒன்றைத் துணைமருந்தோ கொடுத்தல்வேண்டும்.

பற்பசெந்தூரங்கள்.—தாளகபற்பம், வெள்ளைக்கல் பற்பம், பொன்னடலை, வெள்ளி அடலை, அயநாக அடலை போன்றவைகளையும் வழங்கலாம்.

உணவு : இந்நோய் படிப்படியாக ஒவ்வோர் உடற் கூட்டுகளை மெலியச் செய்துகொண்டு வருமாதலின் உடலின் ஊட்டம் குறையா வண்ணம் பால், நெய் முதலிய நெய்ப்பொருளையும், ஊன் பொருளையும், பழ வகைகளையும் செரிப்புத் தன்மைக்குத் தகுந்தவாறு கொடுத்தல் வேண்டும். செரிப்புக் குறைந்துள்ளபோது செரிப்புண்டாக்கக்கூடிய காய் கறிகளைக் கொள்வது மிக நன்று. நண்டு, முயல் இவைகளை வழங்கலாம்.

## உளை மாந்தை.

வேறு பெயர். குடல் இளைப்பு நோய், குடற்சயம்.

இயல் : இந்நோயின் பெயர், உள்+ஐ+மாந்தை என்னும் மூன்று சொற்கள் சேர்ந்து, உளைமாந்தை என அமைந்தது. இஃது உள்= வயிற்றுள், ஐ=ஐயக்குற்றத்தில் ஏற்படும், மாந்தை=மாந்தம் எனப் பொருள்படும்; இஃது ஐயக்குற்றத்தால் வயிற்றுள் மாந்தத்தை உண்டாக்கிப் பசித் தீயைக் கெடுத்து உண்ட உணவைச் செரிப்பிக்காமற் செய்து, வயிறூதல், கழிச்சல், உடல் இளைத்துப்போதல், இருமலோடு கோழைகக்கல் நாள்பட்டும் தீராதிருத்தல் ஆகிய தன்மைகளைப் பெற்றிருத்தலால் இப்பெயர் பெற்றது போலும்.

''உனக்கு உளைமாந்தை வர'' எனத்தாய் தந்தையர் தம்மக்களையும், ஏனையோர் தம் எதிரியையும் சினந்து கூறுதல் இந்நோயின் கொடுமையைக் காட்டுவதாகும்.

இஃது இளைப்பு (க்ஷய) நோயின் பகுதியெனத் தமிழ் மருத்துவம் கூறும். இதனைக் கீழ்க்கூறும் பாவாலறிக.

ஊரென்ற உளைமாந்தை நான்கு மாகும்
காரென்ற விவையெல்லாம் க்ஷயத்தின் கூட்டே.

(யூகிமுனி)

குறிப்பு.—மாந்தம் என்பது மாந்தை என மருவியது போலும் ! எனக் கூறுவாருமுளர்.

## உளை மாந்தை

முற்குறிகள்.—தலைநோய், மூக்கில் நீர் பாய்தல், தொண்டை கட்டல், சிணுக்கிருமல் முதலிய முற்குறிகளைக் காட்டி, இடைவிடாது இருமச் செய்யும். இவ்விருமல், எளிதில் தீராமல் நாட்பட்டு நிலைத்து விடுவது முண்டு. நிலைத்த நாட்களுக்கு ஏற்ப, கோழைமிகுதியாக இழிதலும், அஃது கடினப்பட்டு, தாங்கமுடியாத நாற்றத்துடனும், சீயை யொத்த நிறத்தோடுமிழியும்.

எண்.—இந்நோய் வளி, தீ, ஐயம், முக்குற்றம் என நான்கு வகைப் படும். இதனைக் கீழ்க் கூறிய பாவால் அறிக.—

''இசைக்கவே உளைமாந்தை நால தாகும்
இதனுடைய நாமத்தை இயம்பக் கேளாய்
வசைக்கவே வாதவுளை மாந்தை யோடு
மருவுகின்ற பித்தஉளை மாந்தை யாகும்
திசைக்கவே சிலேட்மவுளை மாந்தை யோடு
செயலான தொந்தவுளை மாந்தை யாகும்
அசைக்கவே நாலினிட வாண்மை தன்னை
அசாத்யசாத் யமென்றே யறிந்து உன்னே.''

### குறிகுணங்கள்.

வளி உளைமாந்தை:

''உன்னவே உறுநெஞ்சு பழுக்கள் பக்கம்
உறுமிநினை வழுந்திருமி உரக்க நொந்து
சின்னவே பஞ்சுபோற் சுரமுந் தோன்றி
சீய்க்கட்டி யாய்ப்பழுத்துச் சிதறி வீழும்
தின்னவே சிலேட்மந்தான் மீறிக்காணும்
செரிக்காமல் அசனந்தான் திருப்பி வீழும்
கன்னவே காலுகையில் கசப்பு காணும்
கருகுமே வாதவுளை மாந்தை தானே.''

(பொருள்) இந் நோய், மார்பிலும், இரு விலாப்பக்கங்களிலும் நோயை உண்டாக்கி, நினைவுமாறல், இருமல், அடங்கிய (வெளிக்குத் தோன்றாமல்) சுரம் காய்தல், வயிற்றுள் கட்டி போல் திரண்டு காணல், கழிச்சலில் சீழ் கலந்திருத்தல் என்னுங் குறி குணங்களைக் காட்டி, உடலை

நாளுக்குநாள் மெலிவடையச் செய்து, தீ, ஐயக் குற்றங்களிரண்டையும் தனக்குத் துணையாய்க்கொண்டு, உணவில் வெறுப்பு, உணவு செரியாமை, கழிதல், கைகால் மெலிதல் ஆகிய குறிகுணங்களையும் பெறும்.

அழல் உளை மாந்தை :

''காணவே மிகத்திரண்டு கீழ்வ யிற்றிற்
கட்டியாய் மிகப்பொருமிப் புண்போல் நொந்து
ஊணவே உடம்பெங்கு முளைச்ச லாகி
உரப்பான தலைநோயுஞ் சுரமுங் காணும்
ஈணவே இருமலொடு சீயு முண்டாம்
இரைப்பாகி மிடறெல்லாம் புண்ணு மாகும்
பேணவே மயக்கமொடு புரட்ட லாகும்
பித்தவுளை மாந்தையென்றே பேச லாமே.''

(பொருள்) : அடிவயிற்றுள் தாங்கமுடியாத வலியைத்தந்து புண் போல் நொந்து, கட்டிபோல் வீங்கி, பின்பு வயிறு நாளுக்குநாள் பெருத்து, குத்தலை உண்டாக்கி, அக் கட்டி உருண்டு திரண்டு, வயிறு கனத்து, சுரம், இருமல் என்னுமிவைகளை வருவிக்கும். கட்டி முதிர்ந்து பழுத்து உடையுங்கால், வாந்தி, மயக்கம், முப்பிணி என்னு மிவைகளைத் தோற்றுவிக்கும்.

ஐய உளை மாந்தை :

''பேசலாம் உடலுருகிப் பிழிந்தாற் போலப்
பெலமான மேனியெல்லாம் புண்போல் நொந்து
வாசலாம் வாயிலே சீயு முண்டாய்
மனமறுகிச் சர்த்தியொடு மயக்க மாகும்
நாசலாம் சிலேட்மமும் நடுக்க லாகி
நலங்கிய பஞ்சுபோல் மிகவெ ளுக்கும்
ஆசலாம் ஐயவுளை மாந்தை யென்று
அவனியுளோர் தங்களுக்கு அறியக் கூறே.''

(பொருள்) இந் நோயில், உடல் நாளுக்கு நாள் மெலிவடைந்து, புண்போல் நொந்து, அடிக்கடி வாந்தியாகும். வாந்தியில் சீழ் கலந்துங்காணும். மனந்தளர்ந்து மயக்கம் உண்டாம். உடல் நடுங்கும். உட்சுரம் காயும். உடல் வெளுத்தும்காணும்.

முக்குற்ற உளைமாந்தை :

''கூறாகத் தலைவலியுஞ் சுரமுந் தோன்றிக்
குணங்கிட்ட இருமலோடு கோழை யுண்டாய்
ஆறாக வன்னத்தை இறங்கொட் டாது
ஆங்கார மடக்கியே யசதி யாகும்.
ஊறாக உறக்கமது மிகுதி யாகும்
உறுதியாய்ச் சீவிழுந்து நாற்ற முண்டாம்
ணீறாகச் சடமெங்குந் தினவுண் டாகும்
தொந்தவுளை மாந்தையென்று செப்ப லாமே.''

(பொருள்) உணவு உண்ணும்போது தொண்டையை அடைப்பது போல் நோதல், உணவுசெல்லாமை (நெஞ்சில் குத்தல்) மனச் சோர்வு, உடல் வன்மை குறைதல், மிகுந்ததூக்கம், உடல் முழுமையும் தினவு உண்டாதல் என்னுங் குறிகளோடு, இருமிக் கக்கும் கோழை, அளவில் மிகுந்தும், மிக்க நாற்றத்துடனும் இழியும்.

தீரும் தீராதவை :

''செப்பியதோ ரசாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
சீறுகின்ற தொந்தவுளை மாந்தை சிலேட்மம்
வப்பியதோர் வாதவுளை மாந்தை தானும்
மாவவிழ்தந் தன்னாலும் வசப்ப டாது
கப்பியதோர் பித்தவுளை மாந்தை தானும்
கனவவிழ்தந் தன்னிற்கா ரியமு மாகும்
ஒப்பியதோ ராயுருவே தத்திற் றானும்
ஒன்றும்பொய் போகாது உரைத்துப் பாரே.''

(பொருள்): என்றதால், முப்பிணி உளைமாந்தை, ஐய உளை மாந்தை, வளி உளைமாந்தை ஆகிய இம் மூன்றும், எம் மருந்தாலும் தீராதெனவும், அழல் குற்றத்தால் வருவது பெருமருந்துகளால் தீரும் எனவும் அறிக.

இஃது இருமல் நோயின் ஓர் பகுதியாதலால் இந் நோயின் குற்ற வேறுபாடுகளும் மருத்துவமும் கூறாது விடுத்தனம்.

நாடி:

பண்பான பித்தத்தில் சேத்துமங் கூடிப் பரிசித்தால்..
.....................................
.............உளை மாந்தை...........
.....................................

## தமரக நோய்.

வேறு பெயர் : தமரக வாயு, மார்புநோய், இருதய நோய்.

இயல் : இந்நோய் பெருமூச்சு, மூச்சடைப்பு, மார்பு நோய், இணைப்பு, ஆயாசம், கால் வீக்கம் முதலிய குறிகளைக் காட்டிச் சில வேளை திடீரெனக் கொல்லும்.

நோய் வருவழி : மிகுதியும் வளிக்குற்றத்தைத் தூண்டக் கூடிய பொருள்களைப் புசிப்பதாலும், தகாத நடத்தைகளாலும், பெண் கூட்டாலுண்டான நோய்களாலும் வளிக்குற்றம் தூண்டப்பட்டு மேல்நோக்குக்கால் (உதானவாயு) பரவுக்கால் (வியான வாயு) இவைகள் தன்னளவில் மிகுந்து இந்நோயைப் பிறப்பிக்கும். அன்றியும், தாய்தந்தையாரின் வழியே பிறவியிலும் உண்டாகும் வளியால் (வாதத்தால்) பிறந்த நோய்களுக்கும், கீல் வாய்வு நோய் களுக்கும் துணை நோயாயும் வருவதுண்டு.

முற்குறிகள்: சிறிது தூரம் நடத்தினும், ஓடினும் பெருமூச்செறிதல், மார்பு துடித்தல், தலை சுற்றல், மார்பில் வலித்தல், மயக்கம், சில வேளை கண் இருட்டிக்கொள்வது போலிருத்தல் ஆகிய குறிகளையும், உதடு, முகமும் நீலமாகும். அன்றியும் இரவில் தூக்கமின்மை, வாய் பிதற்றல், சிலவேளை புகைந்து புகைந்து இருமல் என்னும் குறிகுணங்களையும் பெறும்.

நோய் எண்: இந் நோயினைக் குற்ற அளவாக வரும் (வளி, தீ, ஐயம் முக்குற்றம்) நான்கையும், புழுவால் வரும் ஒன்றையும் கூட்டி ஐந்தென்பர்.

வளி தமரக நோய்:

இஃது, வளி குற்றத்தின் மிகுதியாலுண்டான சுரமுதலிய நோய் களால் தாக்கப்படும்பொழுதும், வளி காலமாகிய இள வயதிலும் உண் டாம் நோயாம். இது சிறு வயது முதல் முதிர்ந்த வயதுவரை வருவதும் உண்டு. இந்நோய், குருதி வன்மையற்றும், முகம் வெளுத்தும் ஊதியும் மார்பு கனத்து நொந்தும், படபடத்தும், தொண்டையில் கோழை கட்டியும் வரும். சில வேளை வயிறும் கடுக்கும். நாள் செல்லச்

செல்ல மார்பு பாரமாய் இருப்பது போன்ற தோற்றம். பெருமூச்சு, இடைவிடா இருமல், சில வேளை வாந்தி ஆகிய குறிகுணங்களையும் பெறும்.

அழல் (பித்தத்) தமரக நோய் :

இந்நோய் நடுவயதில் (தீக்காலம்) வருவனவாகும். உடல் வன்மை யுள்ள காலத்து, ஆடல் பாடலில் பொழுது போக்கும் நாட்களில் திடீரென மிகுதியும் மார்பு நொந்து, உடல் துடித்து, உயிரே போய் விடுமோ என்னும் பயத்தை உண்டாக்கி, தலை கிறுகிறுத்து, மூர்ச்சையை யும் உண்டாக்கும். அன்றியும் நாவறட்சி, உடல் அழற்சி, வாய்நீர் ஊறல், தொண்டையடைப்பு, வியர்வை என்னுங் குறிகளையுங்காட்டும். பெரும்பாலும் இந்நோய் நரம்புத்தளர்ச்சியால் பிறக்குமென அறிக. இஃது எளிதில் தீரக்கூடிய நோயேயாகும்.

ஐயத் தமரக நோய் :

இந் நோய் ஐயம் ஒடுங்குங்காலமாகிய வயதிலுண்டாம். பார் வைக்கு நோய் ஒன்றும் இல்லாததுபோல் இன்புற்று வாழும் நாளில், திடீரென மார்பைக் கட்டி இறுக்கியது போலச் சிறிது நோயுண்டாக்கி, நடுமார்பு எலும்பு குடைவது போலும், மூச்சை அடைப்பது போலும், உயிர் மாய்ந்து போவது போலும் பயத்தைத் தரும். தக்க மருத்துவத் தில் இந் நோய்போம். சில வேளை முற்கூறியகுறிகள், ஒன்றன் பின் ஒன்றாய் விரைவில் தோன்றி, மார்பில் தாங்க முடியாத வலி, அவ்வலி மார்பிலிருந்து இடது கை விரல் நுனி வரையில் பாய்ந்து குடைவது போன்ற தோற்றம், முக வாட்டம், கை கால் சில்லிடல், மரத்துப்போதல், மிகப் பீதியுண்டாதல், மூச்சு அடைத்துக்கொண்டது போல்திணறித்திணறி மூச்சு வாங்கல் ஆகிய குறிகள் உண்டாய், பின்பு உயிர் தப்புவதுண்டு. இவ்வாறாய் மார்புவலி பன்முறைகள் வரும். பின்பு, நோய் முதிர முதிர உடல் வன்மை குறைந்து, குருதி யின் ஓட்டம் மெலிந்த நிலையில், திடீரென ஓர் இரவில் தாங்கமுடியாத மார்புவலி உண்டாய், அலண்டு புரண்டு, பயந்து, வியர்த்து, முகம், கருத்து உயிர்நீங்கும்.

முக்குற்றத்தமரக நோய் :

இது, வேறு நோய்களால் துன்புற்று உடல் மெலிந்து, முக்குற்றங் களும் ஒன்று கூடி மிகுந்து நிற்கும் காலையில் உண்டாம் நோயாகும். இந்நோயில், சுரம், தலை நோய் ஏற்படுதல், உடல் முழுமையும்

நோதல், கீல் வீங்கி முடக்கவும் நீட்டவும் முடியாதிருத்தல், வாய் பிதற்றல், அடிக்கடி மூர்ச்சையாதல், மயக்க முண்டாதல் என்னுங் குறிகளோடு மார்பு நோதல், மார்பு படபடத்தல் என்னுங் குணங்களும் ஏற்படும். ஐயவளிச்சுரத்திற்குத் துணையாய் இந்நோய் பிறக்குமாயின், மிகுந்த வியர்வை, வாய்பிதற்றல், அறிவழிதல் ஆகிய குணங்களைக் காட்டிக் கொல்லும்.

புழுத்தமரக வாயு :

உண்ணும் உணவுவகையாலும், குடிநீர்க் கேட்டாலும் வயிற்றில் மண்ணுண்ணிப் புழுக்கள் போன்றவை குடலில் எண்ணிலும் வடிவிலும் பெருத்து, குடல் மார்பு வரையில் உலாவி, சிலவேளை மார்பையடைத்தல் போல் மார்பு துடிப்பு, அதிர்ச்சி, வீக்கம், அங்குத் தாங்க முடியாத வலி என்னுங் குறிகளைக் காட்டி, கண் பஞ்சடைதல், வாய்நீர் சுரத்தல், இருமல், கோழைகக்கல், மூச்சுத்தடுமாறுதல், முகம் கருத்தல், வலி முதலியவற்றை உண்டாக்கிக்கொல்லுமென நூல்கள் கூறியுள்ளன. ஆயினும், வயிற்றுப்புழுக்களுள் சில இருக்குமிடம் விட்டு வேறு இடம் போக விரும்பிக் குடலினின்றும், வயிற்றுட்சென்று வாய் வழியே வெளியாவதை நாம் மிகுதியும் கண்டுள்ளோம். ஆகலின், மேல் நோக்கியெழும் புழு, உறக்கத்தில் வாயை மூடிக்கொண்டிருக்கும் பொழுது, மூக்குவழியே புகுந்தாகினும் நுரையீரல் குழையுள் புகுந்தாகினும் மூர்ச்சையடைத்து, மேற்கூறிய குறி குணங்களைக் காட்டிக் கொல்லுமேயொழியத் தமரகத்துட்புக வழியில்லை. இப்புழு நோயைத் தமரகநோய்களுள் ஒன்றாயிணைத்தது, தோன்றுங் குறி குணங்கள் யாவும் மார்பைப்பற்றியே எழுதலால் போலும் !

குறிப்பு : தமரகநோயைப் பற்றிய விவரம், நம் நாட்டு நூல்களைக் காட்டிலும், மேல் நாட்டு மருத்துவ நூல்களில் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.

'' ரோகங் கபத்தி னுழைந்தேனு வாயுவால்
வாகுற்ற நெஞ்சில் வலித்து மயக்கிடும்
போகுற்ற பித்தத்தைப் போகாமற் றம்பித்துப்
பாகுற்றுப் பேசையில் பதையாமற் கொல்லுமே. ''

என்று ஒரு பாட்டுமுள்ளது.

குற்ற முதலிய வேறுபாடுகள்.—இவை உணவு, செயல் முதலியவை களால் குற்றங்களை எழச்செய்து அவைகளுக்குத் துணையாக மேல் நோக்குக்காலை (உதான வாயுவைத்) தூண்டச்செய்து, எழுந்த குற்றத் தின் அளவாகக் குறிகுணங்களை உண்டாக்கும் ; அன்றிப் பிறவியிலும் வருவதுண்டு.

கால் (வாயு).—"வாயுவினாலேயப்பா வளருத்திர ரோகமாமே" என்றதில் தமரகவாயு உண்டாவதற்கு முதல் தூண்டுதலாய் நிற்பது மேல்நோக்குக் காலேயாம்.

நாடி.

தான முள்ள சேத்துமந் தானிளகில்..............................
.......................... இருத்ரோகம் ......................

பொருள் - ஐயநாடி இளகி நடக்கில் தமரக நோயைக்குறிக்கும் "பாங்கான வாதத்திற் சேந்துமநாடி பரிசித்தால்...................
................................................. இருத்ரோகம்
...........................................................
............................................" எனச் சதக நாடி கூறியதால் வளியும், ஐயமும் ஒன்றாயிணைந்து நடக்குமாகில் தமரக வாயு நோயையுணர்த்தும்.

குறிப்பு.—(1) மார்பிடத்தைப்பற்றி வருகின்ற தமரக நோயானது வளியை முதன்மையாகக் கொண்டேவரும். எவ்வாறெனின், மேற்படி தமரக நோயானது ஐயம் இருப்பிடமான மார்பினிடத்திலுள்ள கோழை யில் வளி நுழைந்து மிக்க உரங்கொண்டு அவ்வளிப் பெருக்கின் கொடுமையால், முன்னர் நோயின்றியும் வன்மையாயும் இருந்த மார்பில் வலித்துத் தன்னை மறந்துவிடும்படி செய்யும். வளி, ஐயங்களால் இடுக் கண்அடையாதபடி தன் தொழிலில் சென்று கொண்டிருந்த தீ (பித்தம்) யைக் கெடுத்து, தன் செயலைச் செய்யவொண்ணாதபடி தடைப்படுத்து மாதலால், இந் நோயினன் பேசிக்கொண்டிருக்கும்போதே மிக்க சாத்துன் பத்திற்கு ஆளாக்காமல் உடனே கொன்று விடும்.

(2) வளி ஐயத்துடன் கலத்தலால் தீயின் தொழில் நிகழாதென் பதை "போகுற்ற பித்தத்தைப் போகாமற்றம்பித்து" என்பதனால் அறிக. இதனையே "வாய்வு நீரால் வழங்கிய வன்னிசாம்" என்றும் "பாகுற்று பேசையில் பதையாமற் கொல்லுமே" என்றும் கூறியதால் அறிக.

" ஆமப்பா இருத்து ரோகத் தாண்மையை யுரைக்கக் கேளு
வேமப்பா வெம்பிப் பாய்ந்து மிகநெஞ்சிற் குத்துண் டாகிப்
போமப்பா பித்தந் தன்னைத் தப்பியே போகொட்டாமல்
பாமப்பா பேசும் போது பாதையாமற் சாவார் தாமே. "

(அ. வாத காவியம்—1000.)

என்றதில் அழல் நாடியானது இயற்கை நடை யொழிந்து, துடிப்பு ஒழியின் மார்பில் ஏதோ பாய்ந்து ஓடுவதுபோல் ஓடி, நெஞ்சிற் குத்திப் பேசும் போதே சாவை உண்டாக்கும் எனக் குறிக்கும்.

மருத்துவம் : தன்னளவில் மிகுந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத் தற்கான கழிச்சல் மருந்துகளைக் கொடுத்துப் பின்பு குற்றங்களைத் தன்னிலைப் படுத்தற்கும் குருதி வன்மையைப் பெருக்கற்கும், உடற்கு ஊட்டத்தைத் தருதற்குமான மருந்து வகைகளைக் கொடுத்தல் வேண்டும்.

கழிச்சல் : பன்னீர்ப்பூ, சரக்கொன்றைப் புளி, ஆமணக்குவேர், கடுக் காய், நெல்லி, தான்றிக்காய் இவைகளை வகைக்கு அரைப் பலமாகக் கொண்டு குடி நீரிட்டு, அரை ஆழாக்காய் வடித்துக் குடிக்க வயிறு கழியும், அல்லது வெள்ளை எண்ணெய், கழற்சி எண்ணெய் இவைகளில் ஏதேனும் ஒன்றில் வன்மைக்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக்கவும்.

பற்ப செந்தூர வகைகள் : அயநாகப் பற்பம், முத்துப் பற்பம், கலைக் கோட்டுப் பற்பம் இவைகளைக் கொடுத்து, துணையாகப் பின் கூறும் குடிநீர்களுள் ஒன்றை நோய்க்குத் தக்கவாறு கொடுக்கலாம். குருதியின் வன்மையும், நிறமும் குறைந்து வருமாயின், இரும்பைக் கொண்டு செய்த பற்பம், செந்தூரம் முதலிய மருந்துகளையும் தரலாம். உடல் வன்மை பெறுதற்குமேல் பூச்சு எண்ணெய் களைத் தேய்த்துத் தலை முழுகலும் செய்யலாம்.

குடிநீர் வகைகள் :

(1) மருதம் பட்டை, நொச்சி இலை, தாளிக் கீரை, சாதிக்காய் சாபத்திரி, நாவல்விரை இவற்றை ஓர் அளவாகக்கொண்டு, முறைப்படி குடிநீராக்கி ஆழாக்கு அளவு காலை மாலைகளில் கொள்ளலாம்.

(2) பேரீந்து, சிங்காரக் கிழங்கு, நிலப்பனை, தண்ணீர் விட்டான் வில்வப் பட்டை, தாமரைக் கிழங்கு, மருதம்பட்டை இவைகளை வகைக் குப் பலம் ஒன்று கொண்டு, முறைப்படி குடிநீரிட்டு காலை மட்டும் சாப்பிடவும்.

(3) வில்வப்பட்டை, தேவதாரம், குரோசானி ஓமம், இலவங்கப் பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, மருதம்பட்டை இவை வகைக்குப் பலம் ஒன்று நீர் படி ஒன்று சேர்த்து, எட்டில் ஒன்றாய்க் காய்த்து வடித்து, அரை ஆழாக்கு வீதம் காலை மாலை சாப்பிடவும்.

(4) ஆட்டின் குண்டிக்காய் (தமரகம்) ஒன்றைப் பொடியாய்த் துண் டித்து அத்துடன் இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாபத்திரி இவைகளின் பொடிகள் ஒரு சிட்டிகையும், உப்பு ஒரு சிட்டிகையும் கூட்டி நீர்விட்டுக் காய்த்துக் கொடுக்கலாம்.

பற்று : மான் கொம்பு, செம்மரம், சுக்கு, துவரம் பருப்பு, மொச் சைக் கொட்டை இவைகளை ஒன்றுபட வெந்நீர் அல்லது சாராயம் கூட்டி யொன்றுபட இழைத்து மார்பில் பற்றிட மார்பு வலி நீங்கும்.

இளகி வகைகளில்: வில்வ இளகம், பரங்கிச்சக்கை இளகங்களால் நோய்வயப்படும்.

இஞ்சி இளகம், தாளிசபத்திரி இளகம் முதலியன பசித்தீயைத் தூண்டுதற்கும், கரிசாலை முதலிய இளகங்கள் குருதியைப் பெருக்கு தற்கும் வேண்டுமாயின் மருந்துகளுக்குத் துணையாகக் கொடுக்கலாம்.

தூக்கம் சிறிதும் இல்லாது வாட்டும்பொழுது, கபாடமாத்திரை, கஞ்சா இளகம், சிந்தாமணி இளகம் முதலான அபினி, கஞ்சா கூடிய இளகங்களை அளவுபடுத்தியே கொடுப்பது நன்று ; ஆயினும் அடுத் தடுத்துக் கொடுக்கின் பழக்கத்திற்குக் கொண்டுவந்து, அதனையே வேண்டுவிக்குமாகலின் சற்று சிந்தித்தே கொடுக்கவும்.

மார்படைத்து மூச்சடைக்குமாயின், மூக்கிற்குப் புகையிடுதல், பொடி இடுதல், முகரச் செய்தலான மருத்துவங்களையும் செய்தல் நன்று.

இந்நோயில் கை கால் வீங்குதற்கும், வயிற்றுள் நீர்பெருகிப் பெரு வயிறுபோல் வீங்குவதற்கும், உடல் வெளுத்தற்கு அதற்குரிய மருத்து வத்தையும் கையாளல் வேண்டும்.

உணவு : தமரக நோயுள்ளதென வறிந்தபின், உணவு வகைகளை அளவறிந்து கொள்ளுதல், நோயின் வன்மையைப் பெருக்கா, அன்றியும் காலை (வாயுவை)ப் பெருக்கக்கூடிய உணவுகளாகிய மாப்பண்டம், உளுந்து,மொச்சை, கடலை ஆகியவைகளும், வயிற்றுள் புளித்துக்

காற்றை மிகுதியாகச் செய்யும் பொருள்களையும் மிகக் கொள்ளுவதால் வயிற்றுள் மிகுந்தெழுந்த காற்று உப்ப உப்ப மார்பை மோதி அங்குள்ள தமரகத்தை இறுக்குமாதலின் நோயின் வன்மை பெருகும். ஆதலின் இப் பண்டங்களை நீக்கி உடற்கு ஊட்டந்தரும் பொருள்களில் எளிதில் செரிக்கக் கூடிய பொருளாகவே உட்கொள்ளல் வேண்டும்.

குறிப்பு : இந்நோயில், மனக்கலக்கம், ஏக்கம், பயம் என்னும் இவைகளால் தூக்கம்வரா ; அஃதின்மையால் உடல் நிலையும் மன நிலையும் மிகவும் கெடுவதன்றி நோயின் வன்மையும் பெருகும். ஆதலின் நோய்க்கான மருத்துவம் செய்வதோடு மனநிலைக் கெடாதிருக்க ;

நாட்ட மிரண்டு நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
யோட்டமு மில்லை யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லை சிவனவ னாமே.

நயன மிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்விழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரரு நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

எனத் திருமூலர் கூறியபடி.

இருகண்களையும் மூக்குநுனியைப் பார்ப்பது போலவே வைத்துஇருப் பின், மூச்சுத் தானாகவே அடங்கி மனம் ஓர் நிலையில் நிற்கும். உடலின் வாட்டம், தமரகத்துடிப்பு, அத்துடிப்பின் உணர்ச்சி ஒன்றும் தெரியா மலே தூக்கம் உண்டாகும்.

இதனைச் சிறிது சிறிதாகப் பழகிக்கொண்டே வருதல் வேண்டும்.

## சுவையின்மை நோய்.

வேறு பெயர்கள். —சுவைகேடாதல், உருசியின்மை, அரோசகம்.

இயல். இஃது உண்பொருள்களில் இச்சையின்மை அல்லது உண் ணினும் பொருளின் சுவையறியாமை என்னும் இயல்புடைய நோய் ; இது பெரும்பான்மையும் மனத்தைப்பற்றியெழு நோயாகும்.

நோய் வரும் வழி.—குற்றத்தினளவாகவும், மனக்கலக்கம், பீதி, மிகுந்த மனமகிழ்ச்சி ஆகிய மனத்தின் வேறுபாட்டாலும் இந்நோய் பிறக்கும்.

முற்குறி குணங்கள்.—வாய்நீர் ஊறல், அந்நீர் சுவையின்றி இருத்தல் போலத் தோன்றுதல், உணவில் வெறுப்பு, உண் பொருள் எதைக் காணினும் பொறுக்க முடியாமை ஆகிய முற்குறிகளைக் காட்டும்.

எண்.—குற்ற அளவாய் எழு நோய் நான்கும், மனவேற்றுமையால் வருவன ஒன்றுங்கூடி இஃது ஐந்தாகுமென்பர். அவை (1) வளி சுவையின்மை, (2) அழல் சுவையின்மை, (3) ஐய சுவையின்மை, (4) முக்குற்ற சுவையின்மை, (5) மன (துக்கம் அல்லது ஆகந்துவ)ச் சுவையின்மை எனப்படும்.

வளி சுவையின்மை நோய் :

இது வளிக் குற்றக்கேட்டால் விளைவதாகும். இந்நோயில் வாய் எப்பொழுதும் துவர்ப்பாகவே தோன்றுவதன்றி, உண்ணும் எப்பொருளின் சுவையும் துவர்ப்பாகவே இருக்கும். பற்கூச்செறிதல், உண்ணும் பொழுதே ஒக்காளித்தல் முதலிய குறிகுணங்களைப் பெறும்.

அழல் சுவையின்மை நோய் :

தீக்குற்ற வேற்றுமையால், வாய் நீரூறல், வாய் கைத்தல் அல்லது புளித்துக்காணல், உண்ணும் பொருள்களும் இச்சுவைகளாகவே தோன்றல், வாய் குமட்டிக் குமட்டி ஒக்காளம் வருதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

ஐய சுவையின்மை நோய் :

வாய் புலால் மணத்தோடு, கோழை கூடி ஒருவித வெறுப்புத் தோன்றும். சில வேளை கோழையும் வாய்நீரும் இனித்துக்காணும். அடிக்கடி ஒக்காளமுண்டாகும்.

முக்குற்ற சுவையின்மை நோய் :

முக்குற்றங்களும் கேடடைந்த நிலையிலுண்டாம் இந்நோய், ஒவ்வொரு குற்றத்திலும் காணும் குறி குணங்களை ஒருங்கு சேர்த்துக் காட்டி, மிகுதியும் ஒக்காளத்தை உண்டாக்கும்.

மனச் சுவையின்மை :

முன்பு கூறியதுபோன்று மனக்கலக்கம், துயரம், சினம், பீதி இவைகளால் மனநிலை மாறிவருமிந்நோயில், எப்பொழுதும் வாய் நீர் ஊறுதல், உண்ணும் உணவில் வெறுப்பு, ஒருவகைச் சுவையும் காணாமை ஆகிய குறிகள் ஏற்படும்.

தீரும் தீராதவை. —முதல் மூன்றும் தீரும். முப்பிணி நோயில் உண்டாவன தக்க மருத்துவத்தில் தீரும். இறுதியது, மனக்கலக்கம் நீங்குமட்டும் தீராது ; அஃது நீங்கின் நோய் போம்.

குற்ற வேறுபாடுகள். —உணவு முதலியவைகளால் தீக்குற்றம் மிகுந்து, மேல் நோக்குக்காலை எழுப்பி வாய் நீர் சுரந்து, மற்றைய குற்றங்களைத் துணையாய்க் கொண்டுவரும்.

மருத்துவம். —நோய்க்கு முதலாய் நின்ற தீக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்தப் பேதி மருந்துகளைக் கொண்டு சுவை மாறச் செய்தலும், துணைக் கொண்ட குற்றம், மிகுந்த கால் (வாயு) இவைகளைத் தன்னிலைப் படுத்தற்கான மருத்துவம் செய்தலும், மனக்கவலைகளை மாற்றற்கான வழி தேடுதலும் வேண்டும்.

கழிச்சலுக்கு. —பற்பாடகம், சீந்தில், பன்னீர்மொட்டு (ரோசா மொக்கு) கொட்டை முந்திரி, (திராட்சை) நிலாவாரை ஆகியவற்றை வகைக்குப் பலம் ஒன்று எடுத்து, முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க, இரண்டு மூன்று முறை பேதியாகி, குற்றங்களைத் தன்னிலைக்குக் கொண்டுவரும்.

மருந்து :

(1) மாதுளைமணப்பாகு, நவரசத்துவையல், பாவனக்கடுக்காய், பிரண்டைச் சூரணம், சாதிசம்பீரக் குழம்பு, தாளீச வடகம் இவை போன்றவைகளில் ஏதேனும் ஒன்றை நோய்க்குத் தக்கவாறு கொடுக்கலாம்.

(2) முக்குற்றத்தால் எழும் நோய்க்கு முக்குற்றத்தைப் போக்கக் கூடிய பெருமருந்துகளைக் கொடுத்த பின் மேற்கூறிய மருந்துகளைக் கொடுக்கச் சுவையின்மை போம்.

(3) மனக்கலக்கத்தால் உண்டான நோய்க்கு, மனக்கலக்கத்தைப் போக்குவதற்கான தந்திரங்களும், மந்திரங்களும், இடத்தைவிட்டு இடம் மாற்றலும் நன்மை பயக்கும்.

## நீர்வேட்கை நோய்.

வேறு பெயர். —நாவறட்சி, தாக நோய்.

இயல். —அடிக்கடி நீரைப் பருகவேண்டும் என்னும் ஒருவித உணர்ச்சியை உண்டாக்குவதே நீர்வேட்கை அல்லது தாகம் எனப்படும்.

நோய் வருவழி. —இஃது உணவின் வேற்றுமையாலும், சில நோய் கட்குத் துணையாகவும் வருவதுண்டு. அஃதாவது, எளிதில் செரிக்காத உணவுகளை மிகுதியாய்ப் புசிப்பதால் அவ்வுணவு சரிவரச் செரிக்கு மட்டும் நீர் வேட்கையை உண்டாக்கும்; அல்லது தீக்குற்ற (பித்த) பெருக்கால் வரும் நோய்களிலும், உடலின் நீர், மிகுதியும் வறளல், வெளியாதல் ஆகியவற்றை உண்டாகும் பேதி, வாந்தி, நீரிழிவு, மூப்பிணி முதலிய நோய்களும், ஆடல், பாடல், ஓடல் என்னும் செயல்களிலும் நீர்வேட்கை யெழும்.

முற்குறிகள். —இதில் நாவறண்டுபோதல், நீரைப் பருகவேண்டு மென்னும் இச்சை, நீரைப்பருகினும் வேட்கை அடங்காமை, இளைப்பு, மயக்கம் என்னும் குறிகளைக் காட்டும். அன்றியும், உடல் நடுங்குவது போன்ற ஒரு தோற்றம், உடல் எங்கும் எரிச்சல், உதட்டை நாவினால் நனைத்தல், குரல் கம்மல் முதலியவைகளும் ஏற்படும்.

எண். —குற்ற அளவாக, வளி நீர்வேட்கை, தீ நீர்வேட்கை, ஐய நீர்வேட்கை, முக்குற்ற நீர்வேட்கை என நான்கும், உடற்கட்டுகளில் இரசங்கேடடைவதால் வரும் இரசக்குற்ற நீர் வேட்கை ஒன்றும், செரி யாமையால் வருவதொன்றும் சேர்த்து நீர்வேட்கை ஆறுவகை என்பர்.

### குறிகுணங்கள்.

வளிநீர் வேட்கை :

இந்நோய், உடல் வாடிக் கருத்தல், தலைசுற்றல், மனக்கலக்கம் சுவையறியாமை. காது கேளாமை, மிகுந்த தூக்கம், உடல் வன்மை குறைதல், குளிர்ந்த நீரைப் பலமுறை பருகினும் நீர்வேட்கை நீங்காமை என்னும் குறி குணங்களைப் பெறும்.

அழல் நீர்வேட்கை :

இஃது உடல் எப்போதும் வெப்பமாய் இருத்தல், நா, உதடு, அண்ணாக்கு வறண்டுபோதல், தொண்டை, நா இவைகள் சிவந்து முள் போல் காணல், நா எரிதல், தொண்டை புகைதல் எனுங் குறிகளை உடையதாம்.

ஐயநீர்வேட்கை :

இந்நோய், தொண்டையுள் அடைத்துக் கொண்டது போன்ற ஒரு தோற்றம், வாய் இனித்தல், வயிறு பொருமல், பசியின்மை, தலை நோய், உடல் குளிர்தல், வாய் சுவையறியாமை, உண்ட உணவு செரியாமை என்னும் குறிகுணங்களைப் பெற்றிருக்கும்.

முக்குற்ற நீர்வேட்கை :

இந்நோய், சுரம், முப்பிணி (சன்னி) நீரிழிவு, இளைப்பு நோய் முதலிய நோய்கள் முற்றி முக்குற்றங்களும் ஒன்றுகூடிய காலத்தில் பிறப்பதால் இது மருந்து முதலியவைகளால் அவ்வளவு எளிதில் தீரா நோயாகும்; நோயின் முடிவைக் குறிக்க வந்த நோயெனக் கொள்ள வேண்டும்.

இரச நீர்வேட்கை :

இந்நோய், உடற்கட்டுகளில் இரசம், இரத்தம் (குருதி) ஆக மாறும் பொழுது உண்டாம். அன்றியும் குருதி அளவுக்கு மிஞ்சி வெளியாயின் மிகுந்த நீர் வேட்கை, நாவறண்டு போதல், மூளை கலங்கி அடிக்கடி இளைப்புண்டாதல் முதலாகிய குறிகுணங்களைத் தோற்றுவித்து சிலவேளை கொல்லுவதும் உண்டு.

செரியா நீர்வேட்கை :

மிகுதியும் இனிப்பு, உப்புப் பொருள், எளிதில் செரிக்கக்கூடாத உணவு முதலியவற்றைக் கொள்வதாலும், நோயுற்ற காலத்தும், மிகுந்த நடையினால் இளைப்படைந்த காலத்தும், மிக்க உணவை உண்பதாலும் இந்நோய் பிறக்கும்.

தீரும் தீராதவை. —வளி, தீ என்னும் குற்றங்களால் வரும் நீர் வேட்கையும், செரியா நீர்வேட்கையும் எளிதில் தீரும். முக்குற்ற நீர் வேட்கையும் இரச நீர்வேட்கையும் எளிதில் தீராவாம்.

குற்ற முதலிய வேறுபாடுகள்.—உடலில் வறட்சியை உண்டாக்கக் கூடிய உணவு, செயல்களால் தீக்குற்றத்தைப் பெருக்கி, மேல்நோக்கு வாயுவைத் தூண்டி இந்நோயை உண்டாக்கும். கேடடைந்த தீக்குற்றம், மற்றைய குற்றங்களைத் துணைக்கொள்ளின், துணை கொண்ட அக் குற்றத்தின் பெயரால் நோயினை வழங்கப்படும். இந்நோயில் உடற் கட்டுகளில் இரசமும் இரத்தமும் கெடும்.

நாடி :

உறுதியுள்ள பித்தமது தோன்றில் . . . . .

. . . . . . . . . . . . . . .

. . . . . . . தாகம் . . . . . . . .

. . . . . . . . . . . . . . .

சதக நாடி.

மருத்துவம்.—முன்பு கூறியபடி, குற்றங்களால் உண்டான நீர் வேட்கையைப் போக்க, குளிர்ந்த நீரையும் அக்குற்றங்களைத் தன் னிலைப் படுத்தும் குடிநீர்களையும் பருகுதலே போதுமானது.

(1) ஒரு பிடி ஆற்று மணலும், இரண்டு ஏலமும் கூட்டிச் சிவக்க வறுத்து, மணலைக் கொட்டி, அயச்சட்டியில் நீர் விட்டுக் காய்த்து வடித்துக் கொடுக்க நீர் வேட்கை தீரும்.

(2) நெற்பொரியை நீர்விட்டுக் காய்த்துத் தெளிவைக் கொடுக்கப் போம்.

(3) கொத்துமல்லியை விதிப்படி குடிநீர்செய்து கொடுக்கலாம்.

(4) அக்கராகாரம், திப்பிலி, கோட்டம், சீரகம் வகைக்குப் பலம் ¼ நீர் படி ஒன்று கூட்டி விதிப்படி குடிநீராக்கிப் பருகப் போம்.

(5) வரப்பு நண்டின் சாறு, ஒரு உச்சிக்கரண்டி கொடுக்கப் போம்.

செய் மருந்துகளில், கத்தூரிக் கருப்பு, ஏலாதி மாத்திரை, நவரசத் துவையல், பாவனக் கடுக்காய் ஆகிய இவைகளையும் தக்க அளவில் கொடுக்கலாம்.

## செரியாமை.

வேறு பெயர் : அசீரணம்.

இயல் : உண்ட உணவு செரிக்காமல், வயிற்றுள் தங்கி, விக்கல், ஏப்பம், வயிறு ஊதல் என்னும் குறிகளைக் காட்டும் நோய்க்குச் செரியாமை அல்லது அசீரணம் எனச் சொல்லப்படும்.

நோய்வருவழி : எளிதில் செரியாத உணவுகளாகிய கொழுப்பு, மீன், கறி, கீரைவகைகள் முதலியவைகளை அளவுக்குமிஞ்சி உண்பதாலும், ஊசிய பண்டம் மாப்பண்டம் இவைகளைப் புசிப்பதாலும், வயிற்றில் புளிப்பு மிகுந்து, பசித்தீயின் வன்மை குறைந்து உண்ட உணவைச் செரிப்பிக்காதபடி செய்யும். அன்றியும், வேளை தப்பியுண்ணல், நிலம் குளிர்ச்சியடைவதால் வயிறு மந்தப் படுதல் ஆகியவைகளாலும், தூக்கமின்மையாலும், மனக் கலக்கம், பேராசை, பயம், வெகுளி இவைகளாலும் இந்நோய் உண்டாகும்.

முற்குறிகள் : இப்பிணி வருவதற்கு முன்பு வயிறு உப்பல், வயிற்று நோய், வயிற்றில் காற்றுச் சேர்ந்து இரைதல், அடிக்கடி ஏப்பம் விடுதல், தொண்டை உப்புக் கரித்தல், வயிற்றிலுள்ள நீர் எதிரெடுத்தல், விக்கல் என்னுங் குணங்களைக் காட்டும்.

நோய் எண் : இந்நோயினை ஒரு சரார் ஆறு வகையாகவும், மற்றோர் சாரார் நான்கு வகையாகவும் வகுத்துள்ளனர். அவைகள் வளிச் செரியாமை, தீச்செரியாமை, ஐயச் செரியாமை, முக்குற்றச் செரியாமை என்பன இந்நான்கினை மட்டும் கூறுவாம்,

**வளிச் செரியாமை :**

"உண்டதோ ரன்னமெல்லாம் வாந்தி யாகும்
உறுதியா யழுகலாய்ப் புளித்தேப் பாகும்
வண்டதோர் வயிற்றுப்பிப் பேதி யாகும்
மகத்தான விரைச்சலோடு புளிப்புப் பேதி
முண்டதோர் முகங்கருக்கு முடலும் வாடும்
முதிர்மயக்கப் புத்தியது முன்பின் னாகும்
விண்டதோர் மிகவாதை கள்பிறக்கும்
மிகத்தண்ணீர் தவிப்பெய்து மீது வளியே."

(பொருள்) இந்நோய், உண்டவுணவு செரியாது உண்டது உண்டபடியே வாந்தியாதல், சிலவேளை வயிற்றுள் தங்கிப் புளித்து அழுகிய நாற்றத்துடன் வெளியாதல், வயிறு உப்பல், பேதியாதல், வயிறு இரைந்து கழிதல், முகங்கருத்தல், உடல் வாடல், மயக்கம், அறிவு மயங்கல் என்னுங் கொடிய வேதனைகளை உண்டாக்கும். அன்றியும் மிகுதியும் காற்றுப் பறியும், எருவாய் நோகும். சில வேளை காற்று குடலில் தடைப்பட்டு மூச்சு வாங்கும்.

அழல் செரியாமை :

''எய்தியதோர் பதார்த்தமதை உண்ணுங் காலே
யெடுக்குமே யடிக்கடிக்கும் வாந்தி தானும்
பெய்தியதோர் புளித்தேப்பம் வாயெ ரிக்கும்
பேரான உதடோடு புரட்டும் நாக்கு
கைதியதோர் கால்கையு முடலெ ரிக்கும்
கண்டத்தில் வியர்வையுமாய்க் காயம் வற்றும்
சைதியதோல் அல்லிபோற் றளர்ச்சி யாகும்
சையித்தியமா மிதுவழல் சீரணம தாமே.''

(பொருள்) செரியாத உணவை உண்பதனால், உண்டது, உண்டவாறே வாந்தியெழச் செய்து வயிற்றில் புளித்து ஏப்பமுண்டாம். எதிர்த்து வரும் நீர் வாயில் எரிச்சலை யுண்டாக்கும். கழுத்து வியர்த்தல், உதடும் நாக்கும் துடித்தல், கைகாலும் உடலும் எரிதல், உடல் வற்றல், தோல் சுருங்கல் இன்னும் அழல் குற்றத்திற்குள்ள பல தீக்குறிகளையும் பெறும்.

ஐயச்செரியாமை :

''சயித்தியமா மிகவகற்றுங் கோழை தானே
சடமெங்கு வண்மையாய்க் கண்ணுந் தாழும்
பயித்தியமாய் வாந்தியது வெளுப்பு மாகும்
பசிக்குமே யடிக்கடிக்கு நுரையாம் பேதி
உயித்தியமா யிருமலுடன் சுவாசந் தோணும்
உருகுகின்ற துயரமாய்த் தலைப்பி ரட்டும்
வயித்தியந்தான் செய்தாலும் வசப்படாது
மறுக்குமையத் திற்பட்ட வசீரணந் தானே.''

(பொருள்) இந்நோய், வாயில் நீரூறல், வாய் குழகுழத்திருத்தல் தொண்டையில் கோழை கட்டல், வயிறு மந்தமாகவேயிருத்தல், உடல் வெளுத்தல், கண்பார்வை கீழ்நோக்கிக் காணல் என்னும் குறிகளைக்,

காட்டி வெண்கோழை கூட்டி வாந்தியை யெழச்செய்யும்; இன்னும் பொய்ப் பசி, அடிக்கடி நுரைத்துக் கழிதல், இருமல், மேல் மூச்சு தலைநோய் இவைகளையும் உண்டாக்கும்.

முக்குற்றச் செரியாமை :

"மறுக்குமே மனமருண்டு வாந்தி யாகும்
 மயக்கமாய் மூர்ச்சையாய் வசக்கே டாகும்
கறுக்குமே நாக்கோடு கண்கள் மூக்கு
 காய்ந்துலர்ந் தென்றென்றும் கருத்துப் போகும்
வெறுக்குமே யன்னத்தைத் தண்ணீர் தேடும்
 வெளுப்போடு கருப்பாகப் பேதி யாகும்
உருக்குமே கண்கள்தனை யுருட்டிப் பார்க்கும்
 உதறுமே திமிர்த்திது சன்னிவசீரண தாமே."

(பொருள்) இந்நோய், மனத்தை மருளச் செய்து, உண்டவுணவை வாந்தியாக்கி, மயக்கம், மூர்ச்சை, வசமிழத்தல் இவைகளை உண்டாக்கும். இதில் நா, மூக்கு, கண் இவைகள் உலர்ந்து கருத்துக் காணுதலும், உணவில் வெறுப்பு, அடிக்கடி நீர் கொள்ளல், கருத்த நிறத்துடன் வெள்ளத்தைப் போல் பேதியாதல், அடிக்கடி கண்ணை உருட்டிப் பார்த்தலுமான குறிகளோடு முப்பிணியில் காணுங் குறிகள் பலவும் தோன்றும்.

பொதுக்குறிகுணங்கள் : இந்நோய் பசித்தீ வன்மை குறைவதால் உண்ட உணவு செரியாமல் புளித்து, புளி ஏப்பம், விக்கல், நீர்வேட்கை வயிறு இரைதல், வாந்தி அல்லது வயிறு கொட்டல், அல்லது இரண்டு ஒரே காலத்தில் உண்டாதல், காற்றுப் பறிவால் அடிவயிறு நோதல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : உணவின் வேறுபாட்டால், பசித்தீவன்மையிழந்து குற்றங்களைத்தூண்டி, மிகுந்த குற்றத்தின் அளவாய், நோயின் வன்மையும் குறிகுணம் முதலியனவும் எழும், அன்றியும் இவைகளின் கேட்டால் மேல்நோக்குக்காலும் கீழ்நோக்குக்காலும் கெடும். இக்கேடுகளைத் தடுத்து, உடல் நிலையைத் தன்னிலை படுத்தாது நாட்களைக் கழிக்கின் உணவின் சாரம் உடற்கு ஊட்டத்தைத் தாராது இரசம், குருதி முதலிய உடற்கட்டுகளையும் மெலிவிக்கும்.

ஈதன்றியும், உணவு செயல், முதலியவற்றால் உண்டான வளிக்குற்றத்தால் பசித்தீகெட்டும், தீக்குற்றத்தால் பசித்தீ மிகுதிப்பட்டும், ஐயக் குற்றத்தால் பசித்தீ அணைந்தும் நோய்களைப் பிறப்பிக்குமென்றும், அவைகளை விடமாக்கினி, தீட்சணாக்கினி, மந்தாக்கினி எனவும் முக்குற்றம் தன்னிலையில் இருக்குங்கால் சமனாக்கினி எனவும் கூறுவர்

நாடி :

''சிறப்பான பித்தத்தில் வாத நாடி சேரில் . . . . .
உறைப்பாகச் செரியாமை . . . . . . . .

மருத்துவம் : பசியைத் தூண்டக் கூடியதான மிளகு, இஞ்சி, சீரகம், வெள்ளைப்பூண்டு, கடுகு, கறிவேப்பிலை, பெருங்காயம் முதலிய காரமுள்ள பொருள்களை உணவாகக் கொள்ளின் பசித்தீ பெருகும். இல்லையேல், சுக்கு, மிளகு, திப்பிலி, கறிவேப்பிலை, உப்பு இவைகளை ஓரளவாகக் கொண்டு இள வறுப்பாக வறுத்துப் பொடித்து, எடுத்த எடைக்கு நான்கில் ஒரு பங்கு பொரித்த பெருங்காயம் கலந்து கூட்டி வைத்துக்கொண்டு அதில், ஒரு கரண்டி அளவு சுடுசோற்றிலிட்டு நெய் குத்திப் பிசைந்து ஒருபிடி சாப்பிட்ட பின் வழக்கம்போல் உணவைக் கொள்ளப் பசித்தீ மிகும்.

பொடி (சூரணவகையில்) (1) சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம் ஆகிய இவற்றைப் பொடித்துக் கூட்டி யதனைத் தேனில் கொள்ளலாம்.

(2) தயிர்ச் சுண்டி, அமுக்கரா இவைகளின் பொடி (சூரணங்களில்) ஒன்றில் தக்க அளவு கொள்ளவும்.

இளகிய வகையில், இஞ்சி இளகியம், தாளிச இளகியம், குன்ம குடோரி இவை போல்வனவற்றைக் கொள்ளலாம்.

## விக்கல் நோய்

வேறு பெயர் : இக்மா.

இயல் : இந்நோய் ''விக்'' எனும் ஒலியுடன் எழுதலால் விக்கல் என்றும் ''இக்'' கெனும் ஒலியுடனெழுதலால் இக்மா என்றும் கூறுவர். இருமியெழும் ஒலியுடன் ''இக்'' எனும் ஒலியும் கூடுவதால், இதனை மேல் நாட்டார் இக்கப் (Hiccup–Hiccough) என்கின்றனர்.

நோய்வரும்வழி: மிகுதியும் காரம், இனிப்பு, கைப்பு ஆகிய பொருள் களை உண்பதாலும், மாப்பண்டத்தை மிகுதியாய்ப் புசித்தலாலும் அவைகள் வயிற்றுள் புளித்து, வயிற்றுள் காற்றைப் பெருக்கும் அன்றியும் வாயுவைப் பெருக்கும் உணவுகளைக் கொள்வதாலும், மூச்சை அடக்க லாலும், உண்டான கேட்டால், அகட்டில், ஐயம் மிகுந்து அது மேல் நோக்குக்காலை (உதான வாயுவை)த் தூண்டச் செய்து, விக்கல் நோயைப் பிறப்பிக்கும். ஈதன்றியும், நெடுநாள் நோயுடன் படுக்கையிலி ருப்போர், முக்குற்ற நோயால் ஈடுபட்டோர், நீர் வேட்கை யுற்றோர் பசியால் வாடினோர், நீரிழிவு நோயினர் ஆகிய இவர்கட்கும் விக்கல் துணை நோயாக வருவதுண்டு.

முற்குறிகள் : தொண்டை வறண்டுபோதல், நாவறளல், வயிற்றில் ஏதோ உலாவுவது போன்ற தோற்றம், வாய்கைத்தல், நீர்வேட்கை, கண் சிவத்தல் என்னும் குறிகளைக் காட்டி விக்கல் எழும்.

நோய் எண் : இந்நோய் ஐந்து வகைப்படும். அவைகள், வளி, தீ, ஐய, முக்குற்ற, செரியா விக்கல் என்பர் சிலர். மற்று சிலர்

(1) உண்டியால் ஏற்படுவதை, அன்ன விக்கல் என்றும், (2) செரியாமையாலுண்டாவதைக் சூத்ரவிக்கல் என்றும், (3) உணவு செரிக் கும் பொழுதுண்டாம் விக்கல் : யமன் விக்கல் எனப்படும், (4) கொடுமை யாகவரும் விக்கல் : மாகவிக்கல் எனப்படும். (5) உந்தியிலிருந்து மிகுந்த ஒலியுடன் எழும் விக்கல் : கம்பீர விக்கல் என்றும் ஒரு வகையாகவும் கூறுவர்.

இவற்றுள் வளிவிக்கல், அழல்விக்கல், ஐயவிக்கல், முக்குற்றவிக்கல், செரியா விக்கல் என ஐந்து வகைகளை மட்டும் இங்குக் கூறுவோம்.

**வளி விக்கல் :**

"அடுத்திட்ட மனமகிழ்ச்சி மிகுதி யாலும்
அந்திசந்தி கனப்புகள்தான் காய்த லாலும்
படுத்திட்ட கைகால்கள் பிடித்த லாலும்
பதறியே தண்ணீரில் மூழ்க லாலும்
விடுத்திட்ட கடுவோட்ட மோட லாலும்
விரைந்துமே நாகனென்ற வாய்வு தானும்
கடுத்திட்டு அதிகரித்து விக்க லுண்டாம்
களராகி மார்கனத்துக் கதிப்பாங் காணே."

"கதிபித்துக் கண்ணிரண்டும் மிகத்து டிக்கும்
கனமான மிகுதுவர்ப்பு வாயி லுண்டாம்
மதிப்புற்று வாதவிக்கல் தானு மாகும்."

(பொருள்) வளிக்குற்றத்தைப் பெருக்கக் கூடிய செயலாகிய பெரு மகிழ்ச்சியைத் திடீரெனக் கொள்ளல், வெயிலில் திரிதல், வறண்டுதிரிந்த பின் நீர் பருகல், கடுமையாக ஓடல் முதலியவைகளால், கைகால் உளைச் சலாகி, மேல் நோக்குக்கால் (உதானவாயு) மிகுந்து உண்டான இந் நோயில், விக்கல் அடுத்தடுத்து உண்டாம். கண் படபட என அடித்துக் கொள்ளும், இஃது உணவில் மிகுதியும் காரணமான பொருளைச் சேர்ப்ப தாலும் வரும்.

அழல் விக்கல் :

"மதித்ததோர் பித்தவிக்கல் மார்க்கங் கேளாய்
விதிப்புற்று விக்கலுண்டா மேனி கன்றும்
மிகவுண்டாங் கொட்டாவி வெதும்ப லுண்டாம்
நதிப்புற்று நாடிமிகப் படப டக்கும்
நல்லறிவு குன்றிவிடுங் கோப மாமே."

(பொருள்) மிகுபசி, இளைப்பு, கவலை எனும் இவைகளாலும், தீக் குற்றத்தைப் பெருக்கக்கூடிய உணவுவகைகளாலும் உண்டாகும் விக்கல் நோயில், நாடி படபடத்தல், மேனி கன்றிப் போதல், உடலில் அனல் வீசு வது போன்ற தோற்றம், கொட்டாவி, அடிக்கடி சினம் உண்டாதல், அறிவுமங்கல், விக்கல் ஒலி நெஞ்சுக்குழியிலிருந்து எழுவது போலத் தோன்றல் முதலிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

ஐய விக்கல் :

"கோபமாஞ் சிலேட்ம விக்கல் குறிப்புக் கேளாய்
கோழையொடு விக்கலது தானு முண்டாம்
சோபமா முகமெங்கும் வெளிறிக் காணும்
துடிப்புண்டாந் தேகமெங்குந் திரைந்து காணும்."

(பொருள்) ஐயக்குற்றத்தை பெருகச் செய்யும் உணவு செயல் களால், வயிற்றில் செரியாமையை உண்டாக்கி, மார்பில் கோழையைக் கூட்டி விக்கலைப் பிறப்பிக்கும். இதனில், மூக்கும் கண்ணும் வெளுத்துப்

போவது மல்லாமல், விக்கலெழும் போதெல்லாம், கண்ணொந்து தெறித்து வெளியே விழுந்து விடுவது போன்ற ஒரு தோற்றத்தைத் தரும். கண்ணீர் வடியும் ; கண்கலங்கிக்காணும். உணவில் வெறுப்பு, விழுங்க முடியாமை நெஞ்சுலர்தல், முகம் வெளுத்தல் ஆகிய குறி குணங்களையும் பெறும்.

**முக்குற்ற விக்கல் :**

* * * * * * *

'' சோபமாந் தொந்தவிக்கல் குணத்தைக் கேளாய்
தோளோடு தலைகறுத்து சோர வாங்கும்
ஆபமாந் தொப்புளொடு மிகக்கு லுங்கி
அடிநாபி தனில்நின்று விக்கும் பாரே.''

'' பாருமே சந்தோடு தான்கு லுங்கப்
பதறியே அடுக்கடுக்காய் விக்கும் பாரே.''

(பொருள்) : நெடுநாட்களாய்ச் சுரமுதலிய நோய்களால் உடல் வன்மை குறைந்து, மூன்று குற்றங்களும் ஒன்று கூடிய நிலையில் இவ் விக்கல் நோய் பிறக்கும். இதில் காணும் விக்கல் உந்தியிலிருந்து எழுவது போன்று உந்தியை அதிரச் செய்து, இடைவிடாமல் அடுக்கடுக்காய் ஒன்றன்பின் ஒன்றாய் விக்கல் ஒலி எழும். அத்துடன் மார்பு நோதல், மூச்சுத் திணறல், ஆயாசம், உடல் ஒய்ச்சல் என்னும் குறிகளையும் காட்டும்.

**செரியா விக்கல் :**

'' தானான காரங்கள் மிஞ்ச லாலும்
தாக்கான மந்தமாந் தீட்சணத் தாலும்
வேறான பதார்த்தபே தங்க ளாலும்
விரைவான கண்டத்தி லீன சத்தம்
கோனான சுட்கலா மிரும லோடு
கொடிதாக வன்னத்தின் பேதந் தன்னால்
தேனான விக்கலது மேலே தாக்கித்
திரைந்துமே யெந்நேரம் திகைக்கும் பாரே.''

(பொருள்) மிகக்காரப் பொருள், செரியாப்பொருள், வறண்ட பொருள் என்னும் இவைகளைப் புசிப்பதால் இவ்விக்கல் பிறக்கும், விக்கல் எழு முன்பே தொண்டை வறண்டு, குரலோசை குறைந்து இருமலுண் டாய்ப் பின்பு விக்கல் எழும். இவ்விக்கல் உண்ட உணவு செரிக்கு மட்டும் நில்லாது.

தீரும் தீராதவை :

" வாருமே வாதவிக்கல் பித்த விக்கல்
மாளவுந்தா னொட்டாது மருந்திற் தீரும்
தீருமே சிலேட்மவிக்கல் சீவன் றன்னைச்
சிறிதுநாள் வயிற்றிற்றான் சீர ணிக்கும்
ஊருமே தொந்தவிக்கல் லுடனே கொல்லும்
உயர்கின்ற தொந்தவிக்கல் குணமி தாமே."

(பொருள்) இவ்வைந்து விக்கல் நோய்களில் முன்னிரண்டும் எளிதில் தீரும். ஐயவிக்கல் தகுந்த மருத்துவத்தில் சின்னாட்கள் சென்று தீரும். முக்குற்ற விக்கல் சாக்குறியைக் காட்டவந்த நோயாதலால், கொல்லுகின்ற தீராத நோயெனயறிக. அன்றியும் நீரினை அருக்கல், நீரினைப் பெருக் கல் என்னும் இவ்விரு வினை நோய்களிலும், நாள்பட்ட சுரநோய்களிலும் குன்ம முதலிய வயிற்றில் பிறக்கும் நோய்களிலும் விக்கல் காணில் தீராவாம். மேலும், முப்பிணி (சந்நிநோய்), ஊழி (வாந்திபேதி), மிகு கழிச்சல், (அதிசாரம்), நாட்பட்ட கழிச்சல் (கிராணி), இளைப்பு நோய் (க்ஷயம்) என்னும் இந்நோய்களில் விக்கல் பிறக்கின் கொல்லும்.

குற்ற வேறுபாடுகள் : உணவு முதலிய செயல்களால் ஐயம் மிகுந்து, காலை (வாயுவை)த் தூண்டி எழச்செய்து, அகட்டையணுகி உண்ட உணவைச் சரிவர செரியாதபடி செய்து அன்னக் குழம்பைப் பரவ வொட்டாமல் தடுத்து மேல் நோக்குக் காலைத் தூண்டி விக்கலைப் பிறப் பிக்கும்.

நாடி :

" சேத்துமத்தின் கோத மலாது விக்க லெடாது."

(தேரன்

" உறுதியெனும் விக்கலுக்குச் சேத்துமவாதம்."

(அகத்தியர் நாடி

கால் : மேல்நோக்குக்கால் (உதானன்), நாகன் ஆகிய இவ்விரண்டும் வளர்ச்சியடையும்.

மருத்துவம் :

மிகுந்த ஐயத்தையும், தன்னிலைதிரிந்த கால்களையும், தன்னிலைப் படுத்தும் பேதி மருந்துகளாகிய அகத்தியர் குழம்பு ஒன்று அல்லது இரண்டு குன்றி அளவு கொடுத்து, நன்றாய்ப் பேதியாகச் செய்யலாம்.

குடிநீர் :

(1) தேங்காய்க் குடுமி, கம்பளம் இவ்விரண்டையும் கருக்கி எடுத்த பொடி வகைக்குப் பலம் ஒன்று, ஏலக்காய்த் தோல், திப்பிலி வகைக்குப் பலம் ½ கூட்டி, குடிநீராகக் கொடுக்க விக்கல் போம்.

(2) துய்மைப்படுத்திய மண்புழு (பூநாகம்) இருபது, சட்டியிலிட்டு, கறுக்கி, அதில் மிளகு ½ பலம் கூட்டி, வறுத்து, ½ படி நீர் விட்டு, ½ ஆழாக்காய்க் காய்த்து, வடித்துக் கொடுக்க நோய்போம்.

(3) வரப்புகளில் உள்ள நண்டுவளை நீரைக் கொடுக்கலாம் ; அல்லது வரப்பு நண்டை இடித்துப் பிழிந்த சாறு ஒன்று முதல் இரண்டு உச்சிக் கரண்டி அளவில் எடுத்து ஒரு சிட்டிகை மிளகுப் பொடி கூட்டிக் கொடுக்கலாம்.

(4) குளவியின் அரக்குக் கூட்டின் குடிநீர் கொடுக்கலாம்.

(5) ஒரு அடித்துண்டு கரும்பை இரண்டாகப் பிளந்து நடுவில் ஏலரிசியைப் பரப்பிக் கயிற்றால் கட்டி செம்மண் சீலை செய்து அடுப்பிலிட்டுச் சுட்டு நசுக்கிப் பிழிந்த சாற்றைக் கொடுக்கலாம்.

பொடிவகை:

(1) மயில் இறகுப் பொடி சூரணம் : மயில் இறகுகரி, திப்பிலி சீரகம் இவற்றை முறையே 3, 8, 10 பங்காய்க் கூட்டி ஒரு சிட்டிக்கை தேனில் கொடுக்கலாம்.

(2) விக்கல் வாய் ஓயாது தூக்கத்தைக் கெடுக்கில், கஞ்சா அல்லது அபின் சேர்ந்த மருந்துகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுக்கலாம்

மூக்குத்திரி முதலியன :

(1) தும்பைச் சாற்றைத் துணியில் துவைத்துத் துவைத்து உலர்த்தி, திரியாக்கி மூக்கிலிடலாம்.

(2) மூக்கிற்கும் பொடியாக்கி நசியங்கள் இடலாம்.

உள்மருந்து :

(1) கத்தூரிக் கருப்பு ஒன்று முதல் இரண்டு குன்றி அளவு கருப் பஞ்சாற்றில் கொடுக்கலாம்.

(2) தங்கபற்பத்தை அளவுப்படி தேனில் கொடுக்கலாம்.

(3) பட்டுக் கூண்டுக்கரி, ஏலரிசிப்பொடி, சீரகப்பொடி, குங்கிலியப் பொடி, மயிலிறகுச் சாம்பல், தேங்காய்க் குடுமி, காட்டுக்கரி இவைகளைச் சரி அளவு கலந்து $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் தேனிலிழைத்து பாதாம் நெய்யில் கலந்து அடிக்கடி கொடுக்க, விக்கல் தீரும். (கைகண்டது).

4. தாமரைக் கொட்டையைத் தேனிலிழைத்து தரலாம்.

## வாந்தி

வேறுபெயர்கள் : வாயாலெடுத்தல், சர்த்தி, வமனம்.

இயல் : உண்ட உணவு, குடித்தநீர், செரித்தேனும் செரியாமலேனும் விரைவாக மேல் நோக்கி வெளியாவது வாந்தி எனப்படும்.

நோய்வருவழி : மாப்பண்டம், ஊசிய பொருள்கள், கொழுப்பு நிறைந்த ஊன் பொருள்கள், நத்தை, நண்டு, மீன் முதலிய செரியாப் பொருள்கள் ஆகியவற்றை உண்பதாலும், நஞ்சுப் பொருள்களாகிய வெள்ளைப்பாடாணம், மருக்காரை, எட்டி முதலியவைகளை உட் கொள்வதாலும், குன்மம் போன்ற வயிற்றிலுண்டாம் நோய்களில் உண்ட உணவு செரிக்குந் தன்மையிழந்து, அகட்டிற்றங்கிய பொருள் புளித்த லால் வாந்தியை உண்டாக்கும். அன்றியும் உணவுக்கும் அகட்டிற்கும் (வயிறு) ஓர் தொடர்புமின்றி வாந்தி யெழுவது முண்டு. அது சூல் கொண்ட காலத்திலும், ஒற்றைத்தலை நோயிலும், பித்தப் பெருக்கிலும், வெறி நோய் (பைத்தியம்), மூப்பு நோயிலும் ஏற்படுவதுண்டு. இன்னும் சுற்றிச் சுற்றிச் சுழன்று ஓடல், கப்பலில் போதல், தனக்காகப் பொரு

ளைத் தொடல் அல்லது பார்த்தல் ஆகிய மனத்தின் வேற்றுமையாலும் இவ் வாந்தி வரும். ஈதன்றி சுரம், இருமல், குடல் பிடிப்பு (ஆனாகம்), கல்லடைப்பு, வயிற்றுள் உண்டாம் கழலைகள் ஆகிய பலவகைப்பட்ட நோய்களுக்குக் குறியாயும் வாந்தியெழுவதுண்டு.

முற்குறிகள் : வாய்நீர் ஊறல், வாய்குமட்டல், மயக்கம், ஒக்காளம், நாத்தடுமாறல், வயிறு இரைந்துநோதல், புரட்டல், ஏப்பம், விக்கல், மார்பு படபடத்தல் என்னும் முற்குறிகளைக் காட்டி வாந்தி உண்டாகும்.

எண்: இந்நோயைக் குற்ற அளவாக, வளி,தீ, ஐய முக்குற்றம் என நான்கும், வெறுப்பு, புழுவாந்திகள் என இரண்டுங்கூடி ஆறுவகையென சில நூலோரும், இவ்வாறுடன் கண்ணோறு, எரு, குருதி, சூல் என்னும் நான்கையும் கூட்டிப் பத்து வகை வாந்தி எனச் சில நூலோரும் கூறியுள்ளனர், அப்பத்தினையும் விளக்குவாம்.

வளிவாந்தி :

வாய்குமட்டல், வாய்நீர் ஊறல், வெள்ளோக்காளம், வாய் துவர்த்தல் அல்லது கைத்தல் என்னுங் குறிகளைக் காட்டி, அடிவயிறு அடிமுதுகு வயிற்றின் இருபக்கம் ஆகிய இடங்களில், வலி, குடல் புரட்டல், இரைதல், நோதல் முதலிய குறி குணங்கள் உண்டாய், இடைவிடாமல் வாந்தியாகும். இவ்வாந்தி தொண்டையைக் குத்திக்குத்தி, மிகுந்த ஒலியுடனும், விரைவாகவும் வெளிப்படும். மேலும் ஏப்பம், விக்கல், மார்புநோய், மார்பு படபடத்தல், இளைப்பு, ஆயாசம், குரல் கம்மல் ஆகிய குறிகளையுங் காட்டும்.

அழல்வாந்தி :

நீர் வேட்கை, வாய் கைத்தல், உவர்த்தல், தலைநோதல் அல்லது சுழற்றல், மூர்ச்சை, மயக்கம், உடல் எரிதல் என்னும் குறிகளைக் காட்டி வாந்தி யுண்டாம், இதிலெழும் வாந்தி, மஞ்சள், இலைப் பச்சை, சிவப்பு நிறங்கள் இவற்றின் கலந்த நீர் போன்று காணப்படும். சுவையில் கைப்புகார்ப்பு, அல்லது உவர்ப்பு கலந்தாற்போலத் தோன்றும்.

ஐய வாந்தி :

வாயில் மிகுதியான நீர்ச்சுரப்பு, வாயில் நெய் பூசியது போல் குழ குழத்தல், தொண்டையில் கோழை கட்டல், வாய் நாற்றமடித்தல், வாய்நீர் இனித்தல் அல்லது துவர்த்தல் ஆகிய இக்குறிகளைக்காட்டி, இடைவிடாமல் வாந்தியை உண்டுபண்ணும். வாந்தியெழும் பொழுதே மார்பு நொந்து துடித்து, முகம் வியர்த்துக் கண் பஞ்சடைவதுண்டு.

முக்குற்ற வாந்தி :

வாய் சுரந்து நீர் வடிதல், அந்நீர் பலவகைப்பட்ட சுவைகளாய்த் தோன்றல், தொண்டையடைத்தது போன்றிருத்தல், மிகு தாகம், மூர்ச்சை, உடல் நடுக்கல் எனும் குறிகளைக் காட்டி, மிகுந்த கோழை கூடிய வாந்தியை உண்டாக்கும், வாந்தி யெடுத்தபின் உடல் வியர்த்து, தலை நொந்து அறிவற்றிருக்கச் செய்யும், இரு விலாப் பக்கங்களும் புடைக்கும் ஆகிய குறி குணங்களையுடையதாம்.

வெறுப்பு வாந்தி:

தனக்கு ஒவ்வாப் பொருள்களைப் பார்த்தல், அதனைத் தொடல் என்பவைகளால் வாய் நீரூறி, வாய்குமட்டி வாந்தியை யெழச் செய்யும் அல்லது அப்பொருள்களை மனத்தில் நினைக்கும் பொழுது வாந்தி யுண்டாம். சில வேளை மயக்கமும் உண்டாகும்.

புழு வாந்தி :

வயிற்றுள் புழுமிகுதியாகச் சேரின், அவைகள் கீழ்நோக்கி வெளி யாகி விடும். சில வேளை அது அகட்டிற்றங்கி மேல் நோக்கும் பொழுது வாய் குமட்டி, உமிழ்நீர் பெருகி வாந்தியை யெழச் செய்து அத்துடன் அப்புழுவும் வெளியாகும்.

கண்ணேறு வாந்தி :

கண்ணேறு (திருஷ்டி) படுவதால் உண்டாகும் வாந்தியாம். ''கல் லடிப் பட்டாலும் படலாம் கண்ணடிப் படமுடியாது'' என்னும் பழ மொழியைப் போல், ஒருவன் உண்ணும் உணவின் அளவு வகை முதலியன வைகளைக் கண்ட மற்றொருவன் அவ்வாறான உணவு தனக்கில்லையே என்று நினைத்த மாத்திரத்தில் உண்டாவது இந்நோய்.

எரு (மல) வாந்தி :

இந்நோயில், கீழ் நோக்கி வெளியாக வேண்டிய எரு இயற்கை வழிமாறி மேல் நோக்கி வெளியாகும். பெருங் குடலில் உள்ள எரு (மலம்), தீ (அழலின்) யின் மிகுதியால் வரண்டும் குடலின் செயலிழந்துள்ள போது, அழலின் பெருக்கால் முக்குற்றங்களையும் கேடடையுமாறு செய்து, மேல் நோக்குக்கால் தூண்டப்பட்டு, வயிறு கடுத்தல், புரட்டல், வயிற்றில் தாங்கமுடியாத வேதனை மூச்சுத் தடுமாறல், கைகால்கள் சில்லிடல், வயிறு உப்பல், வயிற்றைத் தொடுவதற்குக் கூட முடியாது நோதல் நீர்வேட்கை, சுரம், தலைநோய், மயக்கம், வாய் நீர்ஊறல் என்னும் குறிகுணங்களைக் காட்டி வாந்தியோடு எருவையும் வெளியாக்கும். இந்நோய் குடற்பிடிப்புநோய், குடலண்டவாயு, வயிற்றில் மிக்க அடிபடல் என்னும் இவைகளிலும் பிறக்கும்.

குருதி (இரத்த) வாந்தி:

இவ்வாந்தி, இளைப்பு நோயில், நுரையீரல் கேடடைந்து அங்குள்ள குருதி மாறுதலின்றி நுரையுடன் கலந்து எழும். குன்ம நோயில் அகடு (வயிறு) புண்ணாய், அதிலிருந்து கசிந்த இரத்தம் உணவுடன் கூடிக் கறுத்து வெளியாகும். அல்லது வலப்பாட்டீரல் இடப்பாட்டீரல் ஆகிய இவ்விரண்டும் கேடடைந்த நிலையிலும் குருதி, வாந்தியில் வெளியாகலாம்; இவைகளல்லாமல் குருதியழல் நோயிலும், தமரகநோயிலும் குருதி வாந்தியாவதுண்டு.

சூல் வாந்தி :

சூல்கொண்ட பெண்களில் சிலருக்கு முதல் மாதங்கொண்டு பிள்ளை பெறும் வரையில், வாய் ஓயாது வாந்தி உண்டாகும். இவ்வாந்தி நோய் சிறு அளவில் நீர்ப் பொருள்கள் கொள்ளினுங்கூட வயிற்றிற்றங்காதவாறு வாந்தி செய்வித்து உடலை வாட்டுவிக்கும். மற்றும் சிலர்க்கு மசக்கைக் காலமாகிய நான்காம் திங்கள் முதல், ஐந்து அல்லது ஆறாம் திங்கள் வரையில் வாய்குமட்டி உணவில் வெறுப்புண்டாகி, வாந்தியை உண்டாக்கும். ஆயினும், இது உடல் வன்மையக் கெடுக்காது.

தீரும் தீராதவைகள் : முக்குற்ற வாந்தி, மலவாந்தி தீராதாம். குருதி வாந்தியும் நாட்பட்டுநிற்கும் சூல் வாந்தியும் சில எளிதில் தீரா. மற்றவை தகுந்த மருத்துவத்தால் நீங்கும். மேலும், கீழ்க் கூறிய குறி

குணங்களோடு வாந்தியாகின் தீராவாம். அவைகள் மலமும் நீரும் அடைப்பட்டு, உடல் முழுமையும் வியர்வையுடன் கையும் காலும் வீங்கிக் காணலும், வயிறு பொருமி, நாவரண்டு, மூச்சுத்தட்டுப்பட்டு, இளைப்பு, விக்கல், மயக்கம், எனனும் குறிகள் இடைவிடாத வாந்தியாகின் மரணத்தை விளைவிக்கும்.

நோயின் பொதுக் குறிகுணங்கள்: வாய் நீர் ஊறல்,வாய் குமட்டல், சுவை மாறல், ஓக்காளம், வயிறு நோதல், குடல்புரட்டல், நீர்வேட்கை ஆகியவைகளாம். வாந்தி இடைவிடாதிருப்பின், இளைப்பு, ஆயாசம், களைத்துப் போதல், கண் பஞ்சடைதல், கண்குழிவிழல், காதுகேளாமை, வியர்வை, கைகால் சில்லிடல், மயக்கம், மூர்ச்சை யென்னும் கெட்ட குறிகுணங்காளக் காட்டி, சிலவேளை கொல்லுவதுமுண்டு.

குற்ற முதலிய வேறுபாடுகள்: உணவின் வேற்றுமையாலும், நடத்தையின் வேறுபாட்டாலும், அழல் (பித்த) குற்றம் தன்னளவில் குன்றி அகட்டில் ஐயத்தைப் (கபத்தைப்) பெருக்கிப் பசித்தீயைக் கெடுக்கும். கேடடடைந்த குற்றத்தின் அளவாக மேல் நோக்குக்காலும் (உதான வாயும்) கீழ் நோக்குக்காலும் கெட்டு, உண்ட உணவைச் செரிப்பிக்காதபடி செய்து அதனைப் புளிக்கச்செய்யும். செரிக்காததும் புளித்ததுமான இவ்வுணவு, எதிர்த்து மேல் நோக்கிப் புளி யேப்பத்தோடு வெளியாதல், அகட்டைப் புரட்டி வலித்தல் என்னும் பண்புகளையும் உண்டாக்கும். சில வேளை கழிச்சலையும் பெருக்கும்.

அன்றியும், மனதின் வேறுபாட்டால் உடலும் வேறுபாடடையுமாகையால், மனதின் கேட்டால் குற்றங்களும் வேறுபாடடைந்து நோயை வருவிக்கும்.

நாடி :

''பொருளான வாதத்தில் பித்தஞ் சேர்ந்து
பொருந்திணங்கினாலுட்டிண வாயுசக்தி
.........................
......................... சதகநாடி.

பொருள்: வளி அழல் நாடிகள் தத்தமளவில் மிகுந்து கூடி நடக்கின் அஃது அழலால் மிகுந்த வெப்பும் காற்றுங் கூடிப் பிறந்த வாந்தி நோயென அறிக.

''கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி
கலந்திடுகில் உண்டாலோலங்கார சத்தி......''

பொருள் : ஐயநாடியும் வளிநாடியும் ஒன்றுபடக் கலந்து நடக்கு மாயின் வாந்திநோயைக் குறிக்கும்.

''தானமுள்ள சேத்துமந்தா னிளகில்
..................சக்தி..............''

பொருள் : ஐய நாடியானது மெலிந்து (இளகியதுபோல்) நடக்கின் வாந்தி நோயெனக் கொள்ளவும்.

மருத்துவம் : தன்னிலையில் வேறுபட்ட தீக்குற்றத்தை ஒழுங்கு படுத்தவும் மெலிவடைந்த பசித் தீயைப் பெருக்கவும், தன்னளவில் மிகுந்த மேல் நோக்குக்கால், பரவுகால் ஆகிய விரண்டினைத் தன் னிலை படுத்தவும் முதலில் கழிச்சல் உண்டாக்க (ரோஜா) பன்னீர்ப்பூ, கொத்துமல்லி, சரக்கொன்றைப்புளி, காக்கட்டான்வேர் வகைக்குப் பலம் அரை கூட்டி, முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க, ஒன்று அல்லது இரண்டு முறை பேதியாகும். அல்லது கொட்டை திராட்சை, அத்திப் பழம் வகைக்கு ஒரு பலமும், அதிமதுரம், சீரகம், குரோசானி, ஓமம், வகைக்கு பலமுமாய்க் கூட்டி குடிநீராக்கித்தரப் பேதியாகும். அதன் பின் கீழ்க் கூறிய மருத்துவம் செய்தல் வேண்டும்.

(1) திப்பிலி, அக்கராகாரம், சீரகம் ஒரு நிறையாய்க் கூட்டி, தேன் விட்டுவறுத்து, நீர் விட்டுக் காய்ச்சிய குடிநீர் கொடுக்க வாந்தி போம்.

(2) மயிலிறகு, தேங்காய்க்குடுமி, மண்புழு இவைகளைச் சாம்பலாக்கி, திப்பிலி, சீரகம், சுக்கு ஓர் எடையாய்க் கூட்டி, தேனில் இரண்டு சிட்டிகை அளவு குழைத்தூட்ட வாந்தி நீங்கும்.

(3) சூல்வாந்தி, மசக்கைக் காலங்களில் உண்டாகும் வாந் திக்கு, புளிப்புள்ள பண்டங்களைக் கொடுக்கப்போம். அல்லது புதினா, புளியாரை, எலுமிச்சம் பழரசம், புளிப்பு அல்லது இனிப்புள்ள

மாதுளம் பழரசம், இஞ்சிச்சாறு இவைகளை ஒரு நிறையாய்க் கொண்டு அந்நிறைக்கேற்பக் கற்கண்டும் கூட்டி மணப்பாகு செய்து அதை வேண்டிய அளவு அடிக்கடி கொடுத்துவர வாந்தி நிற்கும்; சூல் வாந்தி, எம்மருத்துவத்திற்கும் கட்டுப்பாடமலிருப்பின், சூலை வெளியாக்கி விடுவது நன்று.

(4) கண்ணேறு வாந்திக்கு மணம் குளிரத்தக்க சாந்திகள் செய்ய வேண்டும். எரியெண்ணெய் இட்டு காய்த்து உமிழ்தல் நாட்டு வழக்கு.

(5) மலவாந்தியில் கீழ்வாய் வழியே பீச்சுக்குழலால் தேன், சிற்றாமணக்கு எண்ணெய், பால் ஒரே அளவாய்க் கூட்டிச் செலுத்தி, பேதியானால் குணம் தரும். இல்லையேல், அறுவை மருத்துவம் பயனளித்தாலும் அளிக்கும். இல்லையேல் மரணம் உண்டாம்.

## மாந்த நோய்.

வேறு பெயர் : மந்தம், அலசம், அலசகம் எனக் கூறுவர்.

இயல் : உண்ட உணவு செரியாமலும் மேல் நோக்கி வாந்தியாகாமலும், கீழ்நோக்கி இறங்கி வெளிப்போகாமலும் இரைப்பையிலேயே தங்கி, வயிறு இரைதல், ஏப்பம் விடவேண்டுமென முயற்சி செய்யினும் ஏப்பம் வாராமை, வாந்தியை யெடுக்க முயலினும் வாந்தி வராமை என்னும் துன்பங்களோடுங் கூடிய நோயாம்.

நோய் தோன்று வழி :

“ காணப்பா முறைபா டெல்லாங்
காண்பது மந்தத் தாலே
பூணப்பா மந்த மானால்
புகுந்திடும் வாய்வு தானும்
வாணப்பா நோய்க ளெல்லாம்
வாயுவால் வளரும் பாகு
மூணப்பா வப்பு வன்னி
முத்தோஷம் மூன்றும் பாரே.”

" பாரப்பா மந்த முண்டாம்
பரிசன முரைக்கக் கேரு
காரப்பா மிகுந்து மெத்த
கபளிக்கு மன்னத் தாலே
வாரப்பா விறைச்சி யாலும்
மாப்பண்டத் தாலுந் தானுஞ்
சேரப்பா மேதிப் பாலால்
சேர்ந்திடு மந்தத் தானே."

" தானென்ற வன்னத் தாலே
தலைப்பட்ட வுடம்பி தப்பா
தானென்ற வன்ன மப்பா
தனிப்பழி கொண்டு மீறில்
தானென்ற வன்ன மெல்லாஞ்
சகலவித் தாகும் பாரு
தானென்ற தானுக் கெல்லாந்
தத்துவ முரைக்கக் கேளே."

" கேளப்பா வெட்டை பித்தன்
கெடியான வாதம் வாய்வு
வாளப்பா அய்யஞ் சீதம்
வந்திடு மன்னத் தாலே
பாளப்பா வன்னந் தானும்
பகையுடன் பழியுங் கொள்ளும்
வேளப்பா அன்னத்தாலே
மேகங்கள் நிறப்பைக் கேளே"

என்றதால், ஆடு முதலியவைகளின் கறி, மாப்பண்டம், ஆட்டுப்பால், சோறு முதலியவைகளை அளவுக்கு மிஞ்சி உண்பதால்,அவைகள் செரியாமல் வயிற்றுள் தங்கி, கால்களில் மேல் நோக்குக்கால் (உதான வாயு) கெட்டு, நோயை வளர்க்கும். அல்லது தீக்குற்றம் மிகுந்து வாயுவைத் தூண்டி நோயை உண்டாக்கும் ; அல்லது வாயுவுடன் ஐயம் கூடியும் நோயைப் பிறப்பிக்கும் என அறியக்கிடக்கும்.

அன்றியும் உணவில்லாது பட்டினி கிடந்தவருக்கும், நோயிலீடுபட்டு மெலிந்தவருக்கும் இயற்கையில் பசித்தீ கெட்டிருக்குமாதலால் அன்னவர் தங்கள் வன்மைக்கு மிகுந்த அளவில் உணவு கொள்ளினும் அவ்வுணவு செரியாது முக்குற்றங்கள் கேடடைந்து இந்நோய் பிறக்கும் என அறிக.

முற்குறிகள் : இந்நோய் வாய் குமட்டல், வாய்நீரூறல், ஏப்பம் விடவிரும்பினும் ஏப்பம் வாராமை, வயிறு இரைந்து நோதல். வயிறு புரட்டல், தலை சுற்றல், உடல்நடுக்கல், நாவறட்சி, மிகுந்த நீர் வேட்கை முதலிய குறிகளைக்காட்டும்.

நோய் எண் : இந்நோயினை மூன்றுவகையாக வகுப்பர். அவை ஐயச் செரியாமை, கோல் செரியாமை, நஞ்சுசெரியாமை என்பவை களாம்.

ஐய மந்தம் :

இதனைச் சீதக்கட்டுசெரியாமை, மந்தமெனவும், புளிப்பு மந்த மெனவும் கூறுவர். இது வறுமையில் உடற்கு வேண்டிய அளவு உணவு கொள்ளாதிருத்தல், பெருமையால் அன்னத்தை இறைத்து உண்ணல், உண்ண வேண்டிய அளவுக்கு மிஞ்சியுண்ணல், அல்லது செரிப்புத் தன்மைக்கு மேற்பட்டு உண்ணல், இயற்கையாகக் கழிக்க வேண்டிய எரு, நீர்களைக் கழிக்கா திருத்தல், ஆகிய இவைகளால் இந்நோய் உண்டாகும். இதனால், வயிற்றுள் ஐயங்கூடி நிறைந்து உண்ட உணவைச் செரிப்பிக்காதபடி செய்து அவ்வுணவு வயிற்றிலேயே தங்கிப் புளித்து, மேல்நோக்கி வாந்தி வராமலும் ஏப்பத்தினால் வயிற்றில் தங்கிய காற்று (வாயுவை) வெளியாகாது வயிற்றை ஊதச்செய்தும் வயிற்றுள், புரட்டல், வயிறு நோதல், மூச்சுவிட முடியாமை, வாய் நீரூறல், நாவறட்சி மிகுந்த நீர்வேட்கை என்னுங் குறிகுணங்களைக் காட்டி படுக்கையில் புரளச் செய்யும்.

கோல் மாந்தம் :

இஃது உண்டவுணவைச் செரிப்பிக்காமற் செய்து, வாந்தியாகாமலும் கழிச்சலுண்டாகாமலும் தடுத்து, வயிற்றை ஊதச்செய்யும்; இதனால் போகப்போக வயிற்றுள் இரைச்சல், புரளல், வலித்தல் முதலிய குறிகள் உண்டாகி, வயிறு மத்தளம் போலப் பெருத்துக்காணும் அதைத் தட்டினும், மத்தளத்தின் ஒலியே கேட்கும். அதனோடு வயிறுவலி தாங்க முடியாதபடி புரளச் செய்யும். மேலும் மிகுந்த நீர் வேட்கை, உடல் சிலிர்த்தல், கண்ணிருண்டு பஞ்சடைதல், கைகால் சில்லிடல், பிசுபிசுத்த வியர்வை, நாடி தளறல், உடல் நிறமாறல், காதடைத்தல், மேல்மூச்சுண் டாதல், உடலை அசைக்க முடியாமை, உடல் கோல் போல் வளைக்கவும் நிமிர்க்கவும் முடியாது கிடத்தல் ஆகிய குறிகள் காணும்.

நஞ்சுமந்தம் :

இது, மிகநாட்பட்ட பழைய உணவுகளையோ, ஊசிப்போன பொருள்களையோ கொள்வதாலும், அழுகிய மீன், கறிவகைகளை யுண்பதாலும், காளான் முதலிய பூஞ்சாலப் பொருள்களைப் புசித் தாலும் வரும் நோயாம். இவைகளைக் கொண்ட சிறிது நேரமானபின், வாயில் ஒரு விதச் சுவை உண்டாகி, வாய் நீர் ஊறல், வாய் குமட்டல், மயக்கம். வயிற்று வலி முதலிய குறிகள் உண்டாகி வயிறு மிக வலிக்கத் தொடங்கும். அன்றியும் இது வயிற்றைப் புரட்டி புரட்டி வாந்தியையும் குடலைப் புரட்டிக் கழிச்சலையும் உண்டாக்கும். வயிற்றின் வலி தாங்க முடியாது. உடல் வியர்த்தலும், கையும் காலும் சில்லிடுதலுமான குணங்களைப் காட்டிக் கொல்லுவதுமுண்டு.

தீரும் தீராதவை :

செரியாமாந்தம் தக்க மருத்துவத்தில் தீரும். மற்ற இரண்டும் எளி தில் தீராவாம்.

பொதுக் குறிகுணங்கள் :

முற்கூறியவாறு உணவு வகைகள் செரியாமையால், மேல் நோக்குக் காலும் கீழ் நோக்குக்காலும் கெட்டு, செரியா உணவு மேல் நோக்கி வாந்தியாகாமலோ, கீழ் நோக்கிக் கழியாதலாலோ தடைப்பட்டு நின்ற அஃது புளித்தேனும் நஞ்சாகியேனும் வயிற்றிலேயே தங்கி, வாய் நீர் ஊறல், தலை நோதல், தலை சுற்றல், மயக்கம், கண்ணிருளல் என்னுங் குணங்களைக் காட்டி, வயிற்றை இரையச் செய்து சூலை நோயில் காணும் வலியைப்போல் வலிக்கும். அன்றியும் வயிற்றிலிருந்த செரித்த தும் செரியாததுமான உணவு கட்டிலிலிருந்ததிலிறங்கி, சிறு குடலையும் பெருங் குடலையும் தாபிதப்படுத்தி, வயிற்றைப் புரட்டித் தாங்கமுடியாத வலியைத் தரும். நோய் வன்மை முதிர முதிர வலியின் கொடுமை மிகுந்து, உடலை நிமிர்க்கவும் வளைக்கவும் முடியாதபடி செய்யும். அன்றியும், படுக்கையில் கிடத்திப் புரளவும் செய்யும். சில வேளை உயிரையும் மாய்க்கும்.

குற்ற வேறுபாடுகள் :

நோய் வருகையிற் சொல்லிய உணவு செயல் முதலியவற்றால் வளிக் குற்றம் தன்னளவில் மிகுந்து தனக்குத் துணையாக ஐயத்தையும் பெருகச் செய்து அகட்டிற்றங்கி உண்டவுணவைச் செரிப்பிக்காவாறு

செய்விக்கும். இவ்விரு குற்றங்களின் கொடுமைக் கேற்ப, மேல் நோக்குக்காலும், (உதானவாயும்) கீழ் நோக்குக்காலும் (அபானவாயுவும்) தமது இயற்கைத் தொழிலை இழக்கும்படி செய்து அச் செரியா உணவை மேல் நோக்கி வாந்தியாகாதபடியும், கீழ் நோக்கிக் கழியச் செயய்யாத படியும் அகட்டிலேயே தங்கும்படி செய்து வயிற்று வலியையுண்டாக்கிக் கொடுமை பல செய்விக்கும்.

நாடி :

வாத நாடியானது தன்னளவில் மிகுந்து நடக்கில் மந்த நோயைக் குறிக்கும்.

வாதமெனும் நோயது தோன்றில் சீத. மந்தமொடு
.. .. .. .. .. ..
.. .. .. .. .. ..
.. .. .. .. .. ..
சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில் ..
.. .. .. .. .. ..
.. .. .. .. .. ..
பொருளான வாதத்தில் பித்தஞ்சேர்ந்தும்
செரியாமை புளித்தேப்பம்.
.. .. .. .. .. ..
.. .. .. .. .. ..

சதகநாடி.

என்றதால் வளிநாடியும் அழல் நாடியும் ஒன்று சேர்ந்து தத்தமளவில் மிகுந்து நடக்கின் புளித்தேப்பமுண்டாய் உண்டவுணவு செரியாததைக் குறிக்குமென அறிக.

மருத்துவம்: உணவின் கேட்டால், பசித்நிகெட்டு மேல் நோக்குக்கால் (உதானனும்) கீழ் நோக்குக்கால் (அபானவாயும்) ஆகிய இவ்விரண்டும், தத்தம் தொழிலையிழந்து, நீரும் மலமும் கட்டுப்பட்டு, ஐயத்தைத் துணை கூட்டிக் குடலைப் பற்றுதலால், மேல் நோக்கி வாந்தியாகாமலும் கீழ் நோக்கிக் கழிச்சலுண்டாகாமலும் நிற்கும். இதற்கு வாந்தியை யெழச்செய்வதும். கழிச்சலை உண்டாக்குவதுமான

மருத்துவங்கள் செய்தல் வேண்டும். உணவைச் செரிப்பதற்கான மருத்துவம் செய்வதுடன் தாங்க முடியாத வயிற்றுவலிக்கான மேல் பூச்சு மருந்துகள் ஒற்றடங்கள் முதலியவற்றையும் கொடுத்தல் நல மாகும்.

வாந்தி : 1. வரகு வைக்கோலால் சுட்ட வரிக்குமட்டிக் காயின் சாற்றை ஒரு தேக்கரண்டியளவு கொடுக்க வாந்தியாம்.

2. கடுகு, மருக்காரை, உப்பு இவைகளில் ஏதேனும் ஒன்றை நோய்க்குத் தகுந்தபடி அளவிட்டு அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க வாந்தியாம்.

3. மேல்நாட்டு முறைப்படி ரப்பர் குழாயை வயிற்றுளிட்டு நீர் விட்டுக் கழுவி விடுதலும் வேண்டுமிடத்து, செய்யலாம்.

கழிச்சல்.—சிற்றாமணக்கெண்ணெய், பால், தேன் இவற்றை முறையே ஒன்று, இரண்டு, மூன்று பங்காகக் கொண்டு பீச்சாகக் கீழ்வாய் வழியே செலுத்தின், கழிச்சலை உண்டாக்கும்.

மேல் பூச்சாக மெழுகு தைலத்தைப் பூச, வலி நீங்கி வியர்க்கும் அல்லது நொச்சிக்குடிநீரில் சிறிது மஞ்சள் கூட்டிச் செங்கல்லைச் சிவக்கக் காய்த்து விட ஆவி யெழும். இவ்வாவி உடல் முழுமையும் படும்படி யாகக் கம்பளப் போர்வை குள்ளிருக்க வியர்வை உண்டாகும்.

மருந்து : ஓமமும் கற்பூரமும் ஓர் அளவாகக் கூட்டி, அதில் ஒரு மணிக்கு ஒரு சிட்டிகையளவு கொடுத்துக் கொண்டேவரின், ஏப்பம் உண்டாகி வயிறு ஊதல் குறையும்.

ஒன்று அல்லது இரண்டு முறை வாந்தியோ, கழிச்சலோ ஆனபின்பு, பிரண்டை வடகம், உப்புச் செந்தூரம் போன்ற செரிப்பையுண்டாக்கும் மருந்துகளுள் ஏதேனும் ஒன்றைக் கொடுக்கலாம்.

நோயின் வன்மை குறைந்தபின், நன்றாகக் கழிச்சலை உண்டாக்கக் கூடிய மெழுகு அல்லது தைலங்களைச் கொடுத்தால், வயிற்றின் சிக்கலை அறுத்து, பசித்தீயைத் தூண்டும். ஆதலால், அகத்தியர் குழம்பு, குமட்டி மெழுகு, சித்தாதி எண்ணெய் இவற்றுள் ஏதாவதொன்றைத் தக்க அளவில் கொடுக்கவும்.

உணவு : வயிற்றுவலி நீங்குமளவும் எவ்வித உணவும் கொடுத்தல் ஆகாது ; வேண்டுமாயின் சுக்கிட்டுக் காய்ச்சிய நீரைச் சிறிது கொடுக்கலாம்.

நோயின் வலி தீர்ந்தபின் எளிதில் செரிக்கக்கூடியதான நெற்பொரிக் கஞ்சி போன்றதைக் கொடுத்தபின் கொஞ்சம் கொஞ்சமாக இரு முறை வடித்த சோறும் இரசமும் கூட்டிக் கொடுத்து, ஒன்றிரண்டு நாட்கள் சென்ற பின் சிறிது சிறிதாகக் காய்கறி வகைகளைக் கூட்டிக்கொண்டே வருதல் வேண்டும்.

## குன்மம்.

வேறு பெயர் : குல்மம்.

இயல் : இந்நோயில் உண்ணும் உணவு, செரியாது உண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் வயிற்றுள் தாங்க முடியாத எரிச்சலையும் வலியையும் உண்டாக்கி, உண்ட உணவை வாந்தியெழச் செய்து, உட்சென்ற உணவைப் பயனற்றதாக்கும். அதனளவாக உடலின் ஊட்டமும் வன்மையும் நாட்கு நாள் மெலிவடைந்துகொண்டே யுடல் குன்றும்; குன்றிய உடலினளவாக மனமுங்குன்று மெனுமிவ் வியல்புடைய நோயில், ஒரே காலத்தில் உடலையும் மனதையுங் குன்றச் செய்து உயிரையும் மாய்க்கச் சிந்திக்கச் செய்யும் நோய் ஆதலால் இதனைக் குன்மமெனப் பெயரிட்டனர் போலும்,

இந்நோய் வகைகள் ஒன்றில், வயிற்றுள் காற்றுகூடி உண்டையைப் போல் திரண்டுருண்டு இங்குமங்குமாக உலாவித் துன்புறுத்துமியல்பு உடைய நோயினைச் சில நூலோர் குல்மமெனப் பெயரிட்டனர்.

நோய் தோன்றும் வழி: மிகுதியும் சூடுள்ள பொருள்களையும் காற்றை வயிற்றுள் நிரப்பக்கூடிய பொருள்களையும், மண், உமி, கல், தூசு இவைகள் கலந்த பொருள்களையும் உண்பதாலும், சுனைநீர், ஒட்டமற்ற நீர், சுண்ணாம்பு கலந்த நீர் இவைகளை அருந்தலாலும், தேங்காய்ப் பால் ஆகிய செரிக்கக்கூடாப் பொருள்களை மிகுதியும் கொள்வதாலும், அடிக்கடி சினங் கொள்ளல், பட்டினி இருத்தல், மனச் சலிப்பு அடைதல் ஆகியவற்றாலும் இந்நோய் உண்டாகும். ஈதன்றியும், வழி தவறி மூச்சை அடைத்து யோக நிலையில் இருப்போற்கும் இந்நோய் வருமெனக் கூறுவாருமுளர்.

" செய்யான குன்மத்தின் தோற்றந் தன்னைச்
செப்பிடவே துவர்ப்பான பொசிப்பி னாலும்
மய்யான மங்கையுடன் மருவ லாலும்
வகையாகுங் கிழங்குவகை யருந்த லாலும்
உய்யான மிளகு வகை யுரைப்பி னாலும்
உறுபசியை யடக்கிடும் மந்தத் தாலும்
தய்யான சண்டாள கோபத் தாலும்
சலிப்பாலும் குன்மம்வந் தடையும் பாரே."

யூகி சிந்தாமணி.

நோயின் முற்குறிகள் : இந்நோய்க்கு முற்குறியாகப் பசியின்மை, பசியுண்டாயினும் உணவின்மேல் விருப்பமின்மை, வாய்க்குமட்டல், அடிக்கடி ஏப்பம் உண்டாதல், வாய் நீரூறல், உண்ட உணவு எதிரெடுத்தல், வயிறு புரண்டு நோதல், வாந்தியாதல், புளித்தேப்பம், வயிறு இரைதல் ஆகியவைகளைத் தோற்றுவிக்கும்.

நோயெண் :

" செய்யவே எண்குன்மச் செயலைக் கேளாய்
செயலான வாயுகுன்ம வாத குன்மம்
எய்யவே பித்தகுன்ம மெரிகுன்ம மாகும்
ஏலான வலிகுன்மஞ் சத்தி குன்மம்
தையவே சனிகுன்மஞ் சேட்ப குன்மம்
சாகமாங் குன்மங்க ளெட்டு மாகும்
கொய்யவே யதனுடைய குணங்க ளெல்லாம்
குறிப்பறிந் தொவ்வொன்றாய்க் கூறு வோமே."

என யூகிமுனி வகுத்தபடி வாயுகுன்மம், வாதகுன்மம், பித்தகுன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், சத்திகுன்மம், சன்னிகுன்மம், சேத்தும குன்மம் என எண் வகைப்படும்.

திருகண்ட முனிவர் வாதகுன்மம், பித்தகுன்மம், கப குன்மம், வாதபித்த குன்மம், வாத கப குன்மம், பித்த சிலேத்தும குன்மம், திரிதோஷ குன்மம், இரத்த குன்மம், என எட்டு வகையாக வகுத்து, இரத்த குன்மத்தை, இரத்தவாத குன்மம், இரத்தவாத பித்த குன்மமென இரண்டாகவும் பிரித்துள்ளார். இஃதன்றியும், சாமானிய வாத குன்மம், சாமானிய பித்த குன்மம், சாமானிய சிலேட்ம குன்மம் என மூன்றாகவும் சிலர் தொகுத்துள்ளனர்.

சில சித்தர் நூல்களில், குற்ற அளவாக வரும் குன்மங்கள் நான்கோடு பாயுரு குன்மம், எரி குன்மம், வாந்தி குன்மம், வலி குன்மம் என்னும் நான்கையுங் கூட்டி எண் வகையாக வகுத்துள்ளனர். இவற்றுள் பாயுரு குன்மம் என்பது யூகி முனிவர் கூறிய வாயு குன்மம் போலும். ஏனெனில் பாயுரு என்னுஞ் சொல் குதத்தைக் குறிக்கும். அங்கு வாழுங் கீழ் நோக்குக் காலின் (அபான வாயுவின்) மிகுதியால் பிறக்கும் நோயெனக் குறிக்குமாதலின், இதனை வாயு குன்மம் எனக் கூறினர் போலும்! இதன் குறி குணங்கள் யாவும் சூலை குன்மத்தை ஒத்திருப்ப தால், இவ்விரண்டும் ஒன்றையே குறிக்குமெனக் கொள்ளல் வேண்டும்.

வட நூல் வழியே குற்ற அளவாக வாதபித்த கப குன்மங்கள் மூன்றும் இரு குற்றக் கலப்பால் வருவனவாகி, வாதபித்தம், வாத கபம், பித்த கபம் என மூன்றும், சன்னி குன்மம் ஒன்றும், பெண்கட்குச் சூலகம் நொந்து வரும் நோயாகிய இரத்த குன்மம் ஒன்றும் சேர்த்து எண் வகையென வகுத்துள்ளார்.

இவ்வாறு எண் வகையாக வகுத்த குன்ம நோயினைத் திருமூலர் வளிகுன்மம், சூலை குன்மம், வலி குன்மம் ஆகிய இம்மூன்றும், வளிக்குற்றத்தால் பிறந்தன என்றும், எரி குன்மம், வாந்தி குன்மம், (அழல்) பித்த குன்மம் ஆகிய இம்மூன்றும் தீக்குற்றத்தால் பிறந்தன என்றும், ஐய குன்மம் முப்பிணி குன்மம் ஆகிய இவ்விரண்டும், ஐயக்குற்றத்தால் பிறந்தன என்றும் கூறியது, எளிதில் குற்ற அளவாக மருத்துவம் செய்வதற்கே என அறிக.

இந்நோயினை அவரவர் மனப்பான்மையே போல் வகுத்தாராயினும், யாம் ஈண்டுக் கூறியது யூகிமுனி நூலிற் கூறியதுபோலவேயாகும். அஃதெதற்கோவெனின், வட நூலிற் கூறிய இரத்த குன்மம் பெண் களுக்கேயுரியதாகையால் அதனை இங்குக்கூறி, பெண்களுக்குச் சிறப் பாகவுள்ள நோய்களைக் கூறுமிடத்திலும் கூற வேண்டுமாதலால் இந் நூலில் விடுத்தனம்.

திருமூலர் எண் வகையையும் குற்ற அளவாக நான்கிலொடுக்கினும், குறிகுணங்களைக் கூறும்போது இடுக்கண்கள் பலவும் ஐயம் பலவும் மெழுமாதலின் அதனைத் தனித்துக் கூறாது விடுத்தனம்.

1. வளி குன்மம்:

" பிகுத்தமாய் வாதகுன்மம் விளம்பக் கேளாய்
மிகத்தானு நடைகுறையும் மலம்வி டாது
உகுத்தமா முடல்தானு மிகக்க டுக்கும்
உறக்கமொடு தியக்கமா யுழலை யாகும்
தகுத்தமாஞ் சரீரமது கனத்துத் தோன்றும்
சங்கையா மசனமிகத் தானுஞ் செல்லா
பிகுத்தமாம் பலங்கேட்டால் கைகா லோயும்
பேசொணா நாவறளுந் தலையு நோமே. "

இந்நோயில் உணவு செல்லாமல் வயிற்றுள் தீங்குள்ளதுபோல் நோகும். உணவு கொள்ளாதிருப்பினும் பார்வைக்கு உடல் பருத்துத் தோன்றுமே ஆயினும், உடல் வன்மை மெலிந்து, நடப்பதற்கும் முடியா திருக்கும். தலையும் உடல் முழுமையும் வலிக்கும். சோர்வு, மயக்கம், உழலை, நாவறட்சி என்னுங் குறிகுணங்களையும் காட்டும். அன்றியும், உடல் கறுத்து எருக்கட்டும். இந்நோய் பெரும்பாலும் வளிக்காலமாகிய இருபது, முப்பது வயதில் உண்டாகும். இதில் உண்டபின் கொடிய வயிற்றுவலி காணும் ; வாந்தியாகும் ; அப்போது வலி சற்றுக்குறையும், வாந்தியில் சிறிது குருதியும் கலந்து வெளியாம். அது கறுத்துக்காணும்.

நாட் செல்லச் செல்ல இந்நோய் உடலில் ஊறி வாழ் நாள் முழுமையும் செரியாமையை உண்டாக்கும் ; உணவில் இச்சை இருப் பினும், உண்ட உணவு செரியாமையால், சில நாழிகைகள் கழித்தபின் வயிற்றிலும் மார்புக் குழியிலும் தாங்க முடியாத வலியுண்டாகும். சில சமயம் வயிற்றில் இரவில் எரிச்சலுண்டாகி வலிக்கும் ; பசி எடுப்பது போன்றிருப்பினும், வலிக்குப் பயந்து சாப்பிடாமலும் இருக்கச் செய்யும். அல்லது சாப்பிட்டுவிட்டு வலிக்குப் பயந்து விரலால் குத்தி வாந்தியை வருவிப்பதும் உண்டு. ஆக இக்குறிகளும் தொடரும் எனக் கூறுவாருமுளர்.

2. அழல் குன்மம் :

" நோம்பித்த குன்மத்தி னுட்பங் கேளாய்
நுனிமஞ்ச ணிறம்போல முகமு மாகும்.
வாஞ்சத்தி வாந்தியுண்டாய மனம றுக்கும்
மச்கமாய் நெஞ்சுதனிற் கோழை கட்டும்

காம்நெருப்பாய்த் தானிருக்குங் கைகா லோயும
சுடுவெய்யிற் கண்டவுடன் றலையுஞ் சுற்றும்
போ மூத்ரஞ் சிவந்திருக்குந் தாகங் காணும்
முக்கியே மலம்வீழும் மூச்சுண் டாமே.''

இந்நோயிலெழுந்த அழல்குற்ற மிகுதிக்கேற்ப, அகட்டில் எரிச்சலை உண்டாக்கி, வாய்குமட்டிக் குமட்டி வாந்தி செய்யும், வாந்தியுடன் கோழையும், பித்தமும் கலந்து காணும். வாந்திக்குப் பின் மயக்கமுண்டாகும் வாந்தியாக ஆக நெஞ்சிலும் வயிற்றிலும் எரிச்சலை மிகுதிப் படுத்தி மேல் வயிறு வலித்து, சிறுநீர் சிவந்திருக்கும். நீர்வேட்கை அதிகமாகும்; தலை சுற்றும்; எரு கட்டுப்படும்; உண்ட உணவு வாந்தியாகி வெளியாகி விடுதலால், உடலுரங்குறைந்து குருதிக் கேடடைந்து, உடலை மஞ்சளிக்கச் செய்யும் என்னும் குறிகளைப் பெறும்.

சிலவேளை அழல்குற்றம், தாபிதப்பட்ட அகட்டில் தாங்கமுடியாமல் வலியையும் வாந்தியையும் உண்டாக்கி, மேல் வயிற்றுள் காற்று நிறைந்து உண்ட உணவைச் செரித்ததும் செரியாமலும் குருதியுடன் வெளித்தள்ளும்; மேலும் உடல் சூடாய்த் தோன்றல், தலை நோகுதல், கண் எரிதல், தளர்ச்சி எற்படல் ஆகிய குறிகுணங்களையும் காட்டும்.

நோய் முதிரமுதிர, சாப்பிட்ட சிறிது நேரத்துக்குள் வயிறு மிகுதியாக வலிக்கும். வயிறு கனக்கும். பசித்தீக்கேடடைந்து புசிப்பில் வெறுப் புண்டாம். சுவையின்மை, நாவரளல், மேல் வயிற்றுள் எரிச்சல், வயிற்றுனுள் உள்ள நீர் எதிர்த்து மேல்வரல், அயர்ச்சி, சோம்பல், தலை நோய் தூக்கமின்மை, புளித்தேப்பம் என்னுங் குறிகளைக் காட்டி உடலை, மெலிவடையச் செய்து பெருமூச்சு முதலிய கொடிய குறிகளைக் காட்டும். இந்நோய் முப்பது வயது முதல் ஐம்பது வயதுவரை வரக் கூடியதெனச் சிலர் கூறுவர்.

3. ஐய குன்மம்

''உண்டாகும் வாய்நீர்தா னிலைப்புண் டாகும்
உடல்வற்றி கருத்தழிவு முறத்தி ரைக்கும்
வெண்டாகு பெலன்கெடுக்கு மசனந் தள்ளும்
மிக்கான தலையதுக்கும் வெளிறு மேனி

தொண்டாகு நெஞ்சுதனிற் புகைச்ச லுண்டாம்
திடுக்கிட்டு நடுக்கலுமாந் தேகந் தானும்
திண்டாகுந் தலையெங்கும் பார மாகும்
சிலேட்டும்மாங் குன்மமென்றே செப்ப லாமே.''

இந்நோய், உணவின்மேல் வெறுப்பை உண்டாக்கி, வாயிலைத்தல், உடலின் ஊட்டத்தைக் கெடுத்து, உடலை இளைக்கச் செய்து வெளுப் பாக்கும், அன்றியும், தலை சுற்றல், நெஞ்சு புகைதல், நடுக்கல், அடிக் கடி திடுக்கிடல் ஆகிய குறிகுணங்களை உண்டாக்கும்.

ஐயக்காலமாகிய முதுமையில் இந்நோய் தோன்றுமாயின், கெடுதி கள் பல செய்யும். அவைகள் உண்ட உணவு செரியாமல், அகட்டிலேயே தங்கிப் புளித்து, புலால் மணத்தோடு கூடி வாந்தியாக வெளிவருமே தவிர, கீழ் நோக்கி வெளியாகாது. வயிறு மத்தளம் போல் உப்பி ஏப்பமுண்டாகும். வயிற்றுள் நீர் நிறைந்து, உடல் அசையும்போதெல் லாம் ஒலி செய்யும். அடிக்கடி வெள்ளோக்காளம் வரும். வயிற்றுள் தங்கிய காற்று உருண்டைபோல் உலாவுவது முண்டு.

இக்குறி குணங்களோடு, வயிறு இடைவிடாது வலித்தல், குருதி வாந்தி மிகுதியாதல், நாளுக்கு நாள் உடல் மெலிதல் முதலியனவும் உண்டாகும். இஃது அகட்டிலுண்டான புற்று நோயோ எனத் நினைத் தற்கும் இடம் தரும் எனக் கொள்க.

முக்குற்ற (சன்னிக்) குன்மம்

'' செப்பலாஞ் சன்னிகுன்மச் செயலைக் கேளாய்
தியக்கமொடு மயக்கமாய்க் குளிருண் டாகும்
அப்பமா மசனமிகத் தானுஞ் செல்லா
அடிவயிற்று லிரைச்சலுமாம் வாய்நீ ரூறும்
உப்பலாய் வயிறிழியும் உஷ்ண மாகும்
உவர்க்கும்வாய் நெஞ்சதனிற் புகைச்ச லுண்டாம்
தெப்பமாய் மூச்சதுவுஞ் சிதைந்தெழும்புந்
தேகமெங்கும் குளிர்ச்சியுமா யாகும் பாரே.''

இக் குன்மத்தில் உணவு ஏற்றுக்கொள்ளாது, வாயில் நீர் ஊறும் ; வயிறு உப்பி இரைந்து வெப்பமாக மலங் கழியும் ; வாய் உப்புக் கரிக் கும் ; நெஞ்சு புகையும் ; அடிக்கடி ஏப்பம், பெருமூச்சு, மயக்கம் முதலியன உண்டாகும். உடல் குளிர்ச்சியடையும்.

**கால் (வாயு) குன்மம்:**—பாயுரு குன்மம், சூலை குன்மம் எனவும் வழங்குவர்.

" பார்க்கவே வாயுகுன்மம் பகரக் கேளாய்
பருகியதோர் பதார்த்தங்கள் செரித்தி டாது
தேர்க்கவே யசனந்தான் செல்லா தாகும்
துருத்திகொள் காற்றதுபோல் வயிறு முப்பும்
ஊர்க்கவே உள்பெலனும் கெடுப்ப தாகும்
உடலுலரும் நடைகுறையும் ஒய்ச்சலாகும்
வேர்க்கவே யடிவயிறு தனிலே வந்து
மிகப்புரண்டு வில்லுப்போல் விகுத்த லாமே."

உண்ட உணவு செரியாமல், உண்டது உண்டது போலவே வாந்தி யாகும் உணவில் வெறுப்புத் தோன்றும். உண்ட உணவு சிறிய அள வில் இருப்பினும், வயிறு காற்றடங்கிய துருத்தி போல உப்பி, உடல் வன்மை குறையும். நடக்க முடியாமல் ஒய்ச்சல், உடல் வியர்த்தல், வயிற்றுள் காற்று மிகுந்து புரண்டு வில்லைப்போல இழுத்துப் பிடித்துக் கொண்டு தாங்க முடியாத வலியை உண்டாக்கல் என்னும் குறி குணங் களைத் தோற்றுவிக்கும்.

" பாரப்பா வாய்வு வாதம் பரிவுடன் அபான னோங்கி
ஓரப்பா கும்பி தன்னி லுருண்டுதான் மிகவே நோகும்
கோரப்பா நெஞ்சு குத்துங் குடலையு முறுக்கிக் கொண்டு
வாரப்பா வலிக்கு மெத்த வாசமாய் வழங்கும் வாயுவே."
(நாடி நூல்).

என்றதால், வளிக்குற்றம் மிகுந்து அகட்டைக் கெடச் செய்து கீழ் நோக்குக்கால் (அபான வாயு) தூண்டப்பட்டு உண்ட உணவைச் செரிப் பிக்காதபடி வயிற்றை நோகச் செய்யும். அச்செரியா உணவினால் நெஞ்சு குத்தல், குடலை முறுக்குவதுபோல் நோதல் என்னும் குறிகளைக் காட்டும்.

எரிகுன்மம் :

" திடுக்குமா மெரிகுன்மச் செயலைக் கேளாய்
சிறுவயிற்றி லெரிந்துமே குடல் குமுறும்
வடுக்கும்வாய் நீர்ச்சுரக்குந் தலைவ லிக்கும்
வயிறுப்பிக் கிறுகிறுத்தே ஏப்ப மாகும்

வெடிக்குமயிர் கால்தோறும் வியர்வை யாகும்
மிகப்பொருமி வயிறுகழிந் திரைச்ச லாகும்
எடுக்குமே குடலிளைக்கு மிரங்கா தன்மை
எரியுமே யுடலெங்கு மிரும லாமே.''

உணவு கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் வயிற்றில் தாங்க முடியாத எரிச்சலை உண்டாக்கி வயிற்றை முருக்கியது போன்ற வலியைத் தரும். வாயில் நீர் சுரத்தல், தலை வலித்தல், புளித்தேப்பம் உண்டாதல், வயிறாதி இரைந்து கழிதல், மயிர்க்கால் தோறும் வியர்த்தல் என்னும் இத்துணைத் துன்பங்களை விளைவித்து, உடலை இளைக்கச் செய்யும்.

வாந்தி குன்மம் :

'' இருமலாஞ் சத்திகுன்ம மியல்பைக் கேளாய்,
ஈரலுக்குள் வெளியாகு மேக்க மாகும்
திருமலாந் தியக்கமொடு மயக்க முண்டாம்
சிறுவலியு முண்டாகி வாந்தி யாகும்
பொருமலாம் பெலன்கெடுக்கும் மலம்வி டாது
பேரான அக்கினிதான் மிகவுண் டாகும்
செருமலாம் நடைகுறையும் அருசி யாகும்
சிறுநரம்பெ லாம்புடைத்துத் திமிரு மாமே.''

இந் நோயில், உண்ட உணவு செரியாமல், வாந்தி, மயக்கம், வயிறு எரிதல், வயிறு வலித்தல், வயிறு பொருமல், எருக்கட்டு, உடலில் அனல் வீசுவது போன்று தோன்றல், நடக்க முடியாமை, சுவை இன்மை, நரம்புகள் எல்லாம் புடைத்துத் திமிருண்டாதல் ஆகிய குறி குணங்கள் உண்டாகி வன்மையைக் குறைக்கும்.

வலி குன்மம் :

'' திமிராக வயிறூதுந் திரையு மேனி
செடமுளைந்து கருத்தழியுஞ் சிதறுந்தூக்கம்
வமிராக வயிறிரைந்து முன்போலாகும்
வருத்தமா யசனமிகத் தானுஞ் செல்லா

முமிராக விலாவதனிற் சொருக லாகு
முதுகுதண்டு வலிகாணு மிடுப்பு நோவாம்
கமிராகக் காயமது கடுப்புக் காணும்
கனசுரமாய்க் பொய்ப்பசியுங் காணுங் காணே.''

இந் நோயில் வயிற்றுள் சென்ற உணவு செரியாமல், அத்துடன் காற்றும் கூடி வயிறு ஊதல், உடற்றோல் சுருங்கி இளைத்தல், மனந் தளரல், தூக்கங் குறைதல், உணவில் வெறுப்புண்டாதல், வயிறு இரைந்து கழிதல், விலாப் பக்கத்தில் முள் செருகியது போலக் குத்தல், முதுகுத் தண்டும் இடுப்பும் வலித்தல், உடல் முழுமையும் கடுத்தல், அடிக்கடி சுரம் உண்டாதல், பொய்யான பசி எடுத்தல் என்னும் குறி குணங்களைப் பெறும்.

'' வழங்கிய அப்புவோடு வாதமு மொன்றே யானால்
தழங்கிய அன்ன சாரம் சந்திக்க வொட்டா தப்பா
புழங்கிய நிதானந் தப்பி புகவன்ன மேறில் குத்தும்
உழங்கிய முறுக்கு மேற்றி உயிரையும் வதைக்கும் பாரே.''
(நாடி.)

எனக்கூறியதால், மேற்கூறிய குறிகளன்றி இந்நோயில், ஐயக் குற்றமும் வளிக்குற்றமும் ஒன்றாகக் கூடுமாயின் உண்ட உணவு செரிக்காமலும், அதனை வாந்தியாக வெளியேசச் செய்யாமலும் அகட்டிலேயே தங்கச் செய்து, மேல் நோக்கித் தொண்டையில் குத்தலையும் வயிற்றை முறுக்கி நோதலையும் உண்டாக்கும்; இவ்வலியைத் தாங்காது சில வேளை உயிரையும் போக்குதற்குந் துணியச் செய்யும். துணிந்து தற்கொலை செய்து கொண்டவர்களும் பலர்.

பொதுக் குறி குணங்கள்.—இந் நோய் பெரும்பான்மையும், இருபத்தைந்து வயது முதல் நாற்பத்தைந்து வயதுடைய ஆண் மக்களுக்கு வருவதாகும். ஆயினும் சிறுபான்மை பெண்களுக்கும் வருவதுண்டு. அன்றியும் முதிர்ந்த வயதிலும் காணும்.

உடல் வன்மை மிகுந்து, எவ்வுணவையும் செரிப்பிக்குத் தன்மை உள்ள போது, திடீரெனப் பசியின்மை, வாய் குமட்டல், பித்து பித்தாக வாந்தி யாதல், உண்ட உணவு செரியாமல் ஏப்பமிடல், புளிப்பேப்பம் என்னும் குறிகள் உண்டாகி, நாட் செல்லச் செல்ல நோயை வலுக்கச்

செய்யும். அப்போது உண்ட உணவு செரியாமை, புளிப்பேப்பம், வயிறு பளுவாக இருப்பது போன்ற தோற்றம். வயிறு புரண்டு நோதல், போகப் போகத் தாங்க முடியாத வலி முதலியன ஏற்படும். அவ்வலியைத் தாங்க முடியாமல் விரலால் தொண்டையைக் குத்தி வாந்தி எடுக்குங்கால், அவ்வலி சற்றுக்குறையும். சிலர் சிலபோது இவ்வலியைத் தாங்க முடியாமல் புரண்டழுவர். இவ்வலியைத் தாங்க முடியாது, சிலர் தற்கொலையும் செய்து கொள்வதுண்டு.

குற்ற முதலிய வேறுபாடுகள் :—''வாத பந்த மலாது குன்மம் வாராது'' எனத் தேரன் கூறியதால், உணவின் வேறுபாட்டாலும் தகாத நடத்தையாலும் வளிக்குற்றங் கேடடைந்து, அதற்குத் துணையாக மற்றக் குற்றங்களும் கூடி, இயற்கைத் தொழில் புரியா. கேடடைந்த குற்றங்களின் அளவாக, கால்களுள் கீழ் நோக்குக்கால், (அபான வாயு), மேல் நோக்குக்கால் (உதானவாயு) என்னும் இவ்விரண்டின் தொழிலையும் கெடுத்து, உண்ணும் உணவைச் செரியாதபடி செய்து, குருதியின் வன்மையையுங் குறைக்கிறது. அஃதன்றியும் கீழ் நோக்குக்கால் எருவைக் கட்டுப்படுத்தியும் வயிற்றுக் காற்றைப் பெருக்கியும், மேல் நோக்குக்கால் வாந்தியை உண்டாக்கியும் துன்பம் செய்யுமிந் நோய்களைப் பிறப்பிக்கும்.

நாடி.—வளி நாடியானது இடத்தில் அல்லது பக்கத்தே நடக்கின் வளிகுன்மம் என அறியவும்.

இதனை, ''புரண்டால் வாத குன்மத்தைப் பிறப்பிக்கும்
வாதந்தானும் தனிநிற்கில் வலிகுன்மம் வந்து சேரும்.''

அவ்வாறே மற்றைய நாடிகள், தத்தமளவில் நேர்வழிச் செல்லாது, இடத்திலேனும் பக்கத்திலேனும் பிறழ்ந்து நடக்கின், அந்தந்தக் குன்மநோய்கள் காணும் என நூல்கள் கூறும்.

'' சிறப்பாக பித்தத்தில் வாதநாடி சேரில்.........

...............குன்மம்
...............
...............

வாதமும் பித்தங்கூடி வன்பெலத்துடனே யோடிற்
றிதறு வயிற்றி னுள்ளே திரண்டதோர் மந்தம் பற்றி
வேதனை யெரிப்புங் கூடி யிரண்டிடு மெரிதக் குன்மம்,''

வளி நாடியும், அழல் நாடியும் ஒன்று கூடினாற்போல் இவ்விரண்டில் வன்மையுங் கூடி, ஒரே வன்மையாகக்கொண்டு நடப்பது போல் காணின், மந்தத்தாலுண்டான எரி குன்மமெனக் கொள்ளவும்.

'வாதந்தா னுதறி நிற்கில் வலிகுன்மம் வந்து சேரும்.''
(குணவாகடம்.)

(பொருள்) : வளி நாடியானது இயற்கை நடையின்றிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அக்கயிற்றை விரலால் பிடித்துத் தூக்கிவிடின், அஃது எவ்வாறு உதறுமோ அவ்வாறு நாடி உதறி நடக்கின், வலி குன்ம நோயினைக் குறிக்கும்.

மருத்துவம் :

''வாதபந்தமலாது குன்மம் வாராது'' எனத் தேரன் கூறியதால், இந்நோயில் வளிக் குற்றமானது தன்னிலையிற் கேடடைவதோடன்றி, அதனின் இயக்கங்களாகி கால் (வாயு) களும் கெடும். இவ்வற்றுள் மேல்நோக்குக்கால் (உதானன்) கெடுவதால் விக்கல், வாந்தி, ஏப்பம் முதலியவற்றை யெழச்செய்தலும், கீழ் நோக்குக்கால் (அபான வாயு) கெடுதலால் எருக்கட்டு அல்லது கழிச்சல் ஆகியவற்றைப் பிறப்பித்தலுமான செய்கைகளையுண்டாக்கி உண்ட உணவைச் செரிப்பிக்காதபடி செய்து வயிறு புரளுதல், வயிற்றுவலி முதலிய குறிகளையும் தொடரச் செய்யுமாகலின் இந்நோய்க்கான மருத்துவத்தில் தன்னிலை திரிந்தகுற்றம் அல்லது குற்றங்களையும், கால்களையும் தன்னிலைப்படுத்தற்கான வாந்தி, கழிச்சல் முதலியவற்றை யெழச் செய்தலும் பின் நோய்க்கான மருத்துவங்களைச் செய்தலும், உணவுகளை அளவிட்டு அளித்தலும் நலமாம்.

வாந்திக்கு :

(1) வாந்தியை உண்டாக்குதற்குச் **சஞ்சீவிமாத்திரை** ஒன்றைத் தேனிட்டுறைத்துச் சிறிது இலைக்கள்ளி இலையை வரகு வைக்கோலின் அனலால் வாட்டிப் பிழிந்தசாற்றுடன் காலையில் கொடுக்க வாந்தியாவதுடன் கழியச்செய்யும்.

(2) வசம்பைத் தட்டி முறைப்படி குடிநீராக்கியதில் ஒரு சங்கு அளவு புகட்ட வாந்தியாம்.

(3) கடுகு, அழவணம் வேர், சுக்கு, கோட்டம் வகைக்கு ஓர் அளவாகக்கொண்டு முறைப்படி குடிநீராக்கியதைக் கால் முதல் அரை ஆழாக்கு அளவு கொடுக்க வாந்தியாம்.

கழிச்சலுக்கு :

குடிநீர் வகை.—(1) சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம் வேர், முப்பட்டைக்கள்ளி வேர்ப்பட்டை வகைக்குப்பலம் அரைக் காலாகக்கொண்டு ஒன்றிரண்டாக இடித்துக் குடிநீராக்கி வடித்துக் கொண்டு, அதில் $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ ஆழாக்களவு எடுத்ததில், இந்துப்பு, நவாச்சாரம், கரியுப்பு, ஓரளவாகப் பொடித்ததில் ஒரு சிட்டிகையளவு கூட்டி உண்ணக் கழிச்சலையும் ஓர்முறை வாந்தியையும் எழச்செய்யும்.

(2) பேரீச்சங்காய், கொட்டை திராட்சை, சீரகம், ஓமம், சீந்திற்றண்டு, வெட்டிவேர், நிலாவாரை. அதிமதுரம், கடக ரோகணி இவைகளை ஓரளவாகக்கொண்டு குடிநீரிட்டதில், அரை ஆழாக்குக்கொண்டு அதில் பனங்கற்கண்டும், இந்துப்பும் சிறிது கூட்டிக்கொடுக்கக் கழிச்சலுண்டாம். இஃது அழல் குற்றத் தால்வரும் குன்மநோய்க்குத் தகுந்ததாகும்.

(3) கொம்புகள்ளியைச் சுட்டெடுத்த சாம்பல், கொடிவேலி வேர்ப்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, கோட்டம், அக்கராகாரம், அதிமதுரம், சிவதைவேர், கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய் வகைக்கு ஓர் அளவாகக்கொண்டு இடித்ததில் ஒரு சிரங்கைகொண்டு குடிநீராக்கியதில் இந்துப்பு சிறிது கூட்டிக்கொடுக்கக் கழிச்சலாகும்.

பொடி வகை :

பிரண்டைவற்றல், சிற்றாமுட்டி, சீரகம், ஓமம், சுக்கு, மிளகு, சித்திரமூலம், பெருங்காயம், சிவதைவேர், சதகுப்பி, காட்டுஎள்ளு, வகைக்குப்பலம் இரண்டு, கூகைநீறு பலம் பத்து, ஓர் சாலில் இரண்டு படி நீரிட்டு அதில் ஐந்து பலம் எடையுள்ள கள்ளியைச் சிதைத்து நீரிலிட்டு அத்துடன் அரைப்படி பசுத்தயிர்கூட்டிச் சாலின் வாய்க்கு ஒரு சீலையைக்கட்டி அதன்மேல் பொடிகளையிட்டு மேல்மூடி புட்டவியலாக அவித்தெடுத்து நன்றாக உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இப்பொடியில் ஒரு விரற்கடையளவு கொள்ளக் கழிச்சலாகும். எருவாயில் கூடியகாற்றும் வெளியாகிவிடும்.

நெய் வகை. —(1) பிரண்டைச்சாறு, முடக்கொத்தான்சாறு, துளசிச்சாறு, புதினாச்சாறு, புளியாரைச்சாறு வகைக்குப்படி ஒன்று, சித்திரமூலம் வேர்ப்பட்டை, வெள்ளைச்சாரடைவேர், சிறுதேக்கு, வசம்பு, அமுக்கரா, சீந்திற்றண்டு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் வகைக்குப் பலம் இரண்டு, கடுகு ரோகனி, சிவதை, அதிமதுரம், பூண்டுத்திரி வகைக்குப்பலம் ஒன்று, நெய் படி இரண்டு ஆகக்கொண்டு, சாறுவகைகளையும் நெய்யையும் கூட்டியதில் கடை சரக்குகளைப் பாலிட்டரைத்து அதில் கலக்கிச் சிறுதீயாகக்காய்த்து வடித்து வைத்துக்கொண்டு, தக்களவில் சிறிது இந்துப்புக்கூட்டிக்கொடுக்கக் கழிச்சலுண்டாம்.

(2) கடுக்காய் கொட்டை நீக்கியது பலம் பத்துகொண்டு அத்துடன் வாய்விடங்கம், சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுதேக்கு, கடுகுரோகணி, சிவதைவேர், சுண்டைவற்றல், கள்ளிவேர்ப்பட்டை, ஊழலாற்றிப்பட்டை வகைக்குப் பலம் ஒன்றாக இடித்துக்கூட்டி நான்கு படி தயிர்த்தெளிவிட்டுக் காய்த்து ஒரு படியாகக் குறுக்கியதில் ஒரு படி நெய்யிட்டு அடுப்பேற்றி அதில் சீரகம், சோம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, திப்பிலி வகைக்குப் பலம் அரையாகப் பொடித்து பால்விட்டரைத்துக் கலக்கிப் பதத்தில் வடிக்கவும். நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுக்கொடுக்க வளி குன்மமும், கால் (வாயு) குன்மம்போம். இரண்டு மூன்றுமுறை கழியச் செய்யும்

(3) கொட்டை முந்திரிகை, பேரீந்து,பற்பாடகம், சீந்தில், வெட்டிவேர், விலாமிச்சுவேர், அதிமதுரம் கோரைக்கிழங்கு, கடுக்காய், தான்றி வகைக்குப் பலம் மூன்று, கடுக்காய் பலம் இருபது ஆகக்கூட்டி இடித்து நான்கு படி நீரிட்டு எட்டிலொன்றாகக் குறுக்கி அரைப்படி, பசு நெய்யிற்கூட்டி அடுப்பிலிட்டு, சீரகம், சோம்பு, சாதிபத்திரி சாதிக்காய், இலவங்கம், இலவங்கப்பட்டை வகைக்கு விராக னெடையாகக் கொண்டு பால்விட்டு அரைத்தெடுத்து அந் நெய்யிற்கூட்டிக்காய்த்துத் திரண்டுவரும்போது, ஒரு பலம் பெருங் காயத்தைப் பொரித்துப் பொடித்துக் கூட்டி ஒரு கொதிவந்தபின் வடித்தெடுத்து ஒன்று முதல் மூன்று கரண்டி அளவு அழல் குற்றத்தால் வரும் குன்மத்திற்குக் கொடுக்கக் கழியச்செய்யும்.

எண்ணெய் வகை.—சித்தாதி எண்ணெய். மெருகுள்ளி எண்ணெய் வாத ராக்கத எண்ணெய், குமட்டி எண்ணெய் முதலியவகைகளில் நோய்வன்மைக்குத் தக்கவாறு கொண்டு அளவிட்டுக் கொடுக்கக் கழிச்சலையும் வாந்தியையும் உண்டாக்கி நோயைப் போக்கும்.

கற்கங்கள்.—(1) குன்மக்குடோரிப் பூண்டைப் பச்சையாகக் கொணர்ந்து இலையைக்கிள்ளி பலம் ஒன்று, மிளகு பலம் அரை, உப்பு பலம் வீசம் ஆகக்கொண்டு அம்மியிலிட்டு நெகிழ அரைத்து அடையாகத்தட்டியதில், காலை மாலையாகச் சுண்டைக் காய் அளவு நாளொன்றுக்கு ஒரு சுண்டை அளவாக உயர்த்திக் கொண்டே, ஐந்து சுண்டை அளவுவரை வந்த பின் அவ்வளவே நோய் தீருமட்டும் சாப்பிட்டு, சிறிது நீர்கொள்ளவும். கற்கத்தைத் தினமும் காலையில் சூரியனில் காயவைத்தெடுக்கக் கெடா.

(2) சில்லிக்கிரை, பொன்னாங்காணிக்கீரை இவைகளை அரைத்து, சிறிது கருப்புக்கட்டிக் கூட்டிவெள்ளாட்டின் பாலோடு தினம் உட்கொண்டுவர எரிகுன்மம் போம்.

(3) இஞ்சியை மேற்றோற்சீவிச் சிறு துண்டுகளாகத்தறித்து பசு நெய்க் குத்தி இளவறுப்பாக வறுத்துப் பொடிசெய்தது பலம் ஐந்துடன், மிளகு, திப்பிலி, கோட்டம், கொடிவேலி, வேர்ப்பட்டை வகைக்குப்பலம் அரை பொடித்துக் கூட்டிக்கொண்டதில் ஒரு விராகனெடை காலை மாலையாகச் சிறிது சர்க்கரை கூட்டி புண்ணவும்.

(4) ‘‘ ஆனை வணங்கிரதத் தாலசம தாகத்தை
யூன மறவே யுலர்த்தியே —யானபின்பு
நாகைவல்லி யிற்பொசிக்க நாடாது குன்மமெல்லாம்
போகுமந்த மெய்த்திமிரும் போம்.’’

தேரன் வெண்பா.

(பொருள்): ஓமத்திற் சோர நெரிஞ்சிலிலைச்சாறு விட்டு உலர்த்திப் பொடித்ததை (வேண்டிய அளவோடு) வெற்றிலைச் சாற்றுடன் உட்கொண்டுவர, குன்மநோய் நிலையாது, உடலின் திமிரும் நீங்கும்.

நோய்க்கான மருத்துவம் :

(1) குடிநீர்:

குன்மகுடோரிப் பூண்டு, மிளகு, சுக்கு, திப்பிலி, இலவங்கல் சாதிக்காய் வகைக்குப் பலம் ஒன்று, கள்ளிவேர்ப்பட்டை ½ பலம்கூட்டி எட்டுப்பங்கு நீரிட்டு எட்டிலொன்றாகக் காய்த்து வடித்துக் காலை மாலையாகக் கொடுக்க நோய் போம்.

(2) '' முருங்கை யுள்ளி சாரணை முதிர்ந்த வன்னி நற்கழல்
பருங்கொ ழிஞ்சி சுக்குடன் பகர்ந்த விரண்டு நாழிநீர்
அருந்தி யிங்கு ழக்கதா யான இந்து நாலுடன்
விரைந்து நீர ருந்திட மேவு குன்ம மேகுமே.''

(பொருள்) முருங்கைப்பட்டை, வெள்ளைப் பூண்டுத்திரி, சாரணை வேர், வன்னிப்பட்டை, கழற்சிப்பருப்பு, கொழிஞ்சிப்பட்டை, சுக்கு வகைக்கு இரண்டு கழஞ்சு இடித்து ஒரு படி நீரிட்டு உழக்காகக் காய்த்து, காலை மாலையாகச் சாப்பிடக் குன்மம்போம்.

(3) '' கொடிக்கழல் பருப்புள்ளி கொடிஇந்து காயமே,
அடித்திரண்ட வெண்மைசுக்கு வன்மையான மோதமும்
பொடித்தனைத்து நீர்புகன்று ளறக்குடிப் பிப்பீரேல்
வெடிப்பரத்த சூலைகுன்மம் விரைவிலஞ்சி யோடுமே.

(பொருள்) : கழற்சிப் பருப்பு, பூண்டு, செவ்வியம் இந்துப்பு, காயம், சுக்கு, ஓமம் இவைகளை இடித்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க, சூலை குன்மம் நீங்கும்.

'' நெற்பொரியும் பசும்பயறும் வில்வ முன்னை
நேரியசீ ரேலமுடன் சுக்கு நெல்லி
முற்படவே யிளநீர்விட் டெட்டொன் றாக்கி
முதிர்நீரை யுற்றருந்த முதிர்ந்துபோன
சொற்பெரிய சத்திகுன்மஞ் சுரத்தின் சத்தி
துயரமுடன் கிறுகிறுப்பு முழலை மூர்ச்சை
இப்படியென் றிமையவரும் ரிஷிகள் தாமு
மிசைத்தனர்பன் னருந்தமிழி னடியைக் கண்டே.''

(பொருள்) நெற்பொரி, பசும்பயறு, வில்வம், முன்னை, ஏலக்காய், சுக்கு, நெல்லி முள்ளி ஆகியவைகளைச் சமன்கூட்டி இளநீர்விட்டு ஒன்றாய்க் குறுக்கி யுண்ணச் சத்தி குன்மம், சுரசத்தி, கிறுகிறுப்பு உழலை, மூர்ச்சை முதலியன தீரும்.

(தே. குடிநீர் நூறு.)

நீங்கு மேப்ப நெருங்குங்குன் மத்திற்குப்
பாங்கு வேலம் பகரும் நெல்லிமுள்ளி
தாங்கும் நெற்பொரி தனிய பசும்பயறு
வாங்கு வில்வம் வகைக்குச் சமன்சேரே.

சேர்த்துச் சூரணஞ் சிறப்பாய்ப் பொடித்துமே
பார்த்து மேயிள நீரி லரைத்துமே
வார்த்துக் கோமயத்தில் வாகாகக் காய்ச்சுமே
தூர்த்து மண்டலந் துணிவாக வுண்டிடே.

உண்ட போது உரையு மிருமலும்
கண்ட குன்ம கருதிய ஏப்பமும்
நீண்ட வாந்தி நெருங்கிய வூறலும்
ஆண்டி டாம லவனிவிட் டோடுமே.

(பொருள்) வேலம்பட்டை, நெல்லி வற்றல், நெற்பொரி, பச்சைப் பயிறு, வில்வக் கட்டை ஓரளவாகக் கூட்டிப் பொடித்து, பசுநீர் விட்டுக் குடிநீராக்கியதைக் குடிக்க ஏப்பமும், குன்மநோயும் போம்.

பொடி வகை :

சாரணை வேர், சுக்கு, இந்துப்பு, வகைக்குப் பலம் ஒன்று, மிளகு, திப்பிலி, பூண்டுத் திரி, ஓமம் வகைக்குப் பலம் இரண்டு, கடுக்காய்த் தோல் பலம் பதினைந்து, இவைகளை யாவும் நன்றாக இடித்துத் தூளாக்கியதில், திருகுக் கள்ளிப்பால் படி ஒன்று, வெள்ளாட்டின் நீர் படி ஒன்று, வெள்ளாட்டுப் பால் படி இரண்டு கூட்டிப் பிசைந்து உலர்த்திய பின், இருபது ஆற்றுத் துமட்டிக் காயைக் கொணர்ந்து ஊறுகாய்க்குப் பிளப்பதுபோல் நான்கு கீற்றுகளாக் கீறியதில், மேற்படி துகளைத் திணித்துக் கயிறு கொண்டு சுற்றிக்காய்களைப் பானைக்குளடுக்கி, வாய்க்குச் சில்லிட்டுச் சீலை மண் செய்து, ஆட்டுப் புழுக்கை கொண்டு புடமிட்டுக் கறுப்பு நிறமடையும் வாய்க் கண்டறிந்து தீயாற்றவும்.

கறியைப் பொடித்து வைத்துக் கொண்டு அரைச் சிட்டிகை முதல் ஒரு சிட்டிக்கையளவு இஞ்சிச் சாறு, சுக்குக் குடிநீர் இவைகளில் கொடுத்து, உப்புப் புளி நீக்கவும். இதனால் குன்ம நோய்கள் யாவும் நீங்கும்.

ஆடா தோடை இலையை உலர்த்தி எடுத்த எடைக்கு அரைப் பங்கு தூய்மைப்படுத்திய உப்பும், காற் பங்கு ஓமமுங் கூட்டி, சட்டியி லிட்டு மேற்சட்டி மூடிச் சீலை மண் செய்து அறுபது வரட்டியில் புடமிடச் சாம்பலாகும். இச் சாம்பலிற் கால் விராகனெடை அளவு மிளகுக் குடி நீரில் கொள்ள, குன்ம நோய் போம்.

கையாந் தகரை வெள்ளுள்ளி கனத்த உப்பு மூன்று மெய்யே
மெய்யே பாண்டம் முக்கடுக்காய் வீற வடைத்துப் பையிட்டு
அய்யே சீலை மண்செய்து ஆன குழியிற் புடமிட்டு
மெய்யே வத்திர காயம் பண்ணி மீளும் குன்மம் தின்றிடவே.

(பொருள்)—உலர்ந்த கையாந்தகரை, வெள்ளுள்ளி, உப்பு மூன்றும் ஓரளவு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவைகளின்றோல் அவ்வளவு கொண்டு ஒரு பானையிலிட்டு ஓடு மூடிச் சீலை மண் செய்து குழியில் புடமிட்டு எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு அதில் தக்க அளவு கொள்ள, குன்ம நோய்கள் போம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், இலவங்கப் பட்டை வகைக்குப் பலம் ஒன்று, ஓமம், இந்துப்பு, வெடியுப்பு, நவாச்சாரம் வகைக்குப் பலம் இரண்டு, வெள்ளுள்ளி, கடுகு, பொரித்த பெருங்காயம், சாரணைவேர், கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்குப் பலம் மூன்று, சூரத்துக் கடுக்காய் விதை நீக்கியது பலம் பதினைந்து இவைகளைப் பொடித்ததில் கள்ளிப்பால் படி ஒன்றையும் வெள்ளாட்டுச் சிறுநீர் படி நாலும் கூட்டிப் பிசைந்து நன்றாக உலர்ந்த பின் மீண்டும் பொடித் ததை முப்பது ஆற்றுத் துமட்டிக் காயை ஊறுகாய்க்கு நான்காகப் பிளப்பதுபோல் பிளந்து மேற்படி துகளை அவைகளின் வாய்க்குள்ள டைத்து ஒரு பானையில் அடுக்கி, பானையின் வாயை மூடி, சீலை மண் செய்து, பழைய குப்பை மேட்டில் நூறு எருவில் புடமிட்டெடுக்கச் சாம்பலாகும். இச்சாம்பலை எடுத்துப் புட்டியிலடைத்து ஈரமில்லாவிடத் தில் வைத்துக் கொள்ளவும். இதனில் ஒரு சிட்டிக்கை அளவு , தேன், இஞ்சிச்சாறு, இவைகளில் காலை மாலையாகக் கொடுத்து, மோருஞ் சோறுங் கொடுத்து, ஆகாப் பொருள்களை நீக்கி, வாரம் ஒன்றுக்கு ஐந்து நாளாக, நான்கு வாரம் சாப்பிட்டுவர, எண் வகைக் குன்ம நோய் களும் போம்.

நாரத்தங்காயை வளைய வளையமாகத் தறித்து உப்புக் கூட்டி வேண்டிய அளவு மட்கலத் திட்டு அளவு கள்ளிப்பால் விட்டு வாய் மூடி' சீலை மண் செய்து மண்ணடியில் புதைத்து நாற்பது நாள் கழிந்த பின் எடுத்து, ஒரு துண்டை இரண்டு பங்காக்கிக் காலை மாலை கொள்ள• குன்மம் போம்.

முத்தக் கோழி தான்சேவல் முதுகைப் பிளந்து கடுகுப்பு
ஒத்துக் காய மெண்கழஞ்சு உழக்கு மிளகு வெள்ளுள்ளி
பற்றி யரைத்துக் கொள்நீரிற் பதமா வெந்த பின்னெடுத்து
உத்தி வெய்யில் காய வைத்து உரலில் இடித்துச் சூரணத்தை
மெத்த தேனில் கொள்வீரேல் வெடித்த சூலை குன்மமுடன்
பத்தும் வெப்பு மாவைகளும் பறந்தே ஓடும் கண்டீரே.

எண்ணெய். —(1) வெள்ளுள்ளிச் சாறு, நொச்சி, மூக்கிரட்டை காட்டு முருங்கைப்பட்டை, வெள்ளைச்சாரணை, ஆடுதீண்டாப்பாளை, வேளைக் கீரை, கொட்டைக் கரந்தை, பிரமி இவைகளின் சாறு வகைக் குப் படி ஒன்று, வெள்ளாட்டுப் பால், வெள்ளாட்டு சிறுநீர், எலுமிச்சம் பழம், புளிப்பு நாரத்தம் பழச் சாறு, செங்கழுநீர் கிழங்குச் சாறு, பிரண் டைச்சாறு, நெய், எண்ணெய், சிற்றாமணக்கு நெய் வகைக்குப் படி அரை கூட்டிக் கலக்கிச் சிறு தீயால் எரித்துக் குழம்புபோல் சுண்டி வரும் பொழுது அதில், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கோட்டம், கொடி வேலி வேர்ப்பட்டை, அழிஞ்சில் வேர்ப் பட்டை, சிறுதேக்கு, இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி வகைக்குப் பலமொன்றாகக் கொண்டு பொடித்து வடித்து, மேற்படி குழம்பில் தூவி கடுகுபோற்றிரளும்போது எடுத்து வைத்துக் கொண்டு நெய்யும் கடுகுமாக, அரை உச்சிக் கரண்டி அளவு காலையில் மட்டும் சாப்பிட்டு வர, குன்ம வகைகள் யாவும் தீரும்.

(2) பேய்க் குமட்டிச்சாறு படி ஒன்று, வெள்ளைப் பூண்டுச் சாறு படி ஒன்று, நெய் படி கால், விளக்கெண்ணெய் படி கால் கூட்டி, மெழுகு பத வரும்வரையில் துழாவிக் கொண்டே வந்தபின், அதில் இந்துப்பு, நவாச்சாரம், கல்லுப்பு, வெங்காரம், பூநீறு வகைக்குப் பலம் ஒன்று கடுக்காய்த் தோல் பலம் ஐந்து, சாதிக்காய், சாபத்திரி, கொடிவேலி வேர், பொரித்த பெருங்காயம் வகைக்குப் பலமிரண்டு கூட்டிக் கடுகு போல் திரளும்படியாகச் சிறுக எரியவிட்டு இறக்கியதில் மிளகளவு காலை யில் மட்டும் கொடுக்கவும்.

(3) தோல், முளை நீக்கிய வெள்ளைப் பூண்டு பலம் இருபது, பொரித்த பெருங்காயம் பலம் பத்து, மெருகங் கிழங்குத் தோல் சீவி உலர்த்தியது பலம் ஐந்து, கொடிவேலி வேர்ப்பட்டை பலம் இரண்டரை, கழற்சிப் பருப்பு பலம் ஒன்று, இந்துப்பு, கறியுப்பு, நவாச்சாரம், வெங்காரம், சீனக்காரம், வெடியுப்பு, வளையலுப்பு வகைக்குப் பலம் அரை ஆக இவைகளை நன்றாக இடித்து, மைபோலரைத்து, அதனுடன் சிற்றாமணக்கு நெய் படி ஒன்று, பசு நெய் படி ஒன்று கூட்டிச் சிறு தீயில் எரித்து, கடுகுபோல் திரண்டு வரும்போது எடுத்து யாவற்றையும் புட்டியிலடைத்துக் கொள்ளவும். இதனில் ஒரு கரண்டி வீதம் கலக்கி எடுத்துக் காலை மாலையாகக் கொடுக்க நோய்போம்.

இளகம் வகையுள்.— 1. குன்மகுடோரி, சித்த வைத்தியத் திரட்டில் காண்க.

இஞ்சித் தோலை நீக்கிக் குறுகத் தறித்து நெய் விட்டு வதக்கி, உலர்த்திப் பொடித்து பொடி பலம் இருபது, பிரண்டையை மோரிட்டு உப்புக் கூட்டி வற்றலாக்கியதன் பொடி பலம் பத்து, கொத்துமல்லி, சீரகம், சிறு தேக்கு, சிற்றரத்தை, சோம்பு, குரோசானி ஓமம், திப்பிலி, மிளகு, இவைகளின் பொடி வகைக்குப் பலம் ஒன்று, பனங்கற்கண்டு ஒரு வீசை கொண்டு, அதில் எலுமிச்சம் பழச்சாறு படி அரை, புளித்த காடி படி அரை, கொடி நாரத்தைப் பழச்சாறு படியரையுடன் கூட்டிக் கரைத்து வடித்துக் காய்த்து, பாகுபோல் திரளும் போது மேற்படி பொடிகளைக் கூட்டியதைச் சிறுகச் சிறுகத் தூவி, இளகம் போல் வரும்போது எடுத்துக் கொள்ளவும். இதனில் புன்னைக் காயளவு காலை மாலையாகக் கொள்ள குன்மநோய் போவதன்றி, இந் நோயிலுண்டாம் வாந்தியும் நிற்கும். அழல் குற்றத்தால் வரும் குன்மத்திற்கு இஃது நற்பயனையளிக்கும்.

ஆமணக்கின் வேர், திருகு கள்ளியின் வேர்ப்பட்டை, பூவரசின் வேர்ப்பட்டை, பெருமர வேர்ப்பட்டை, சீந்திற்றண்டு, சாரடைவேர், வில்வவேர், அமுக்கனாங்கிழங்கு, சிறுதேக்கு, சிற்றாமுட்டி வேர் வகைக்குப் பல மிரண்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திரமூலம், வேர்ப்பட்டை, கண்டங்கத்திரிவேர், சீரகம், கருஞ்சீரகம், சோம்பு, குரோசானி ஓமம், இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி, இலவங்கம், புளிவஞ்சி, சத குப்பை வகைக்குப் பலம் ஒன்று இவைகளை ஒன்றிரண்டாக இடித்து

நான்கு படி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்துக் குறுக்கி அத்துடன் காடி, புளிப்பு மாதுளைச்சாறு, புளியாரைச் சாறு, இஞ்சிச் சாறு, புளித்த தயிரின் நீர், நாரத்தப்பழச்சாறு, அரிசி கழுவிய நீர் வகைக்குப் படி கால் கூட்டி ஒரு வீசை பனை வெல்லம் சேர்த்து ஒரு கொதி வந்து வெல்லம் கரைந்த பின் வடித்து வாயகன்ற கடாயிலிட்டு பாகு பதமாக வரும்போது, அதில், கொத்துமல்லி, மோடி, யானைத் திப்பிலி, வெண் மிளகு, அசோகப்பட்டை, வெள்ளிலோத்திரப் பட்டை, புங்கு வேர்ப்பட்டை, பிரண்டை, பெருங்காயம் இவைகளை வறுத்துப் பொடி யாக்கியது வகைக்குப் பலம் ஒன்று, உளுந்துமா, கோதுமை மா, கொள்ளுமா வகை வகைக்கு உழக்கு, எள்ளுப் பொடி ஆழாக்கு, பெருங் காயம் பொரித்து பொடியாக்கியது ஆழாக்கு, இவைகளை ஒன்றாகக் கலந்து கிண்டி, பதத்திலெடுத்து, நெய் உழக்கும் தேன் ஆழாக்கும் விட்டுக் கிண்டி எடுக்கவும். இதனில், ஒரு புன்னைக் காயளவு காலை மாலையாகக் கொடுக்க, குன்மம் நீங்கும்.

மாத்திரை. —செம்பு பற்பம், இலிங்கம், தாளகம், நவாச்சாரம், வகைக்குப் பலம் ஒன்று, வசம்புச் சாம்பல், வாய்விளங்கம், மிளகு, சுக்கு திப்பிலி, பெருங்காயம் இவைகள் பொடி வகைக்குப் பலம் அரை, இவைகளைக் கல்வத்திட்டு, கொடிவேலிச்சாறு, புளிப்பு மாதுளைச் சாறு, கொடி நாரத்தைச் சாறு ஆக மூன்றிலும் இரண்டு நாள் அரைத்துக் குன்றி அளவு உருட்டி நிழலிலுலர்த்தி, ஓர் உருண்டை காலை மாலை யாகக் கொள்ள, வளி குன்மம், வாந்தி குன்மம் நீங்கும்.

தூய்மைப்படுத்திய இரசம் பலம் ஒன்றைக் கல்வத்திட்டுக் காந்தட் கிழங்கின் சாறுவிட்டு பத்து நாள் அரைத்துப் பின் தேக்கிலைச் சாறு, தேக்குப் பூச்சாறு, கொடுப்பைச்சாறு, துளசிச் சாறு ஆகிய இவைகளிலும் தனித்தனி ஒரு நாள் கைவிடாது அரைத்து ஒரே வில்லையாகத் தட்டி உலர்ந்த பின் அதன் எடைக்கு ஆறு பங்கு பச்சைக் காந்தட் கிழங்கை அரைத்து, சற்று நீர் வற்றி வரும்போது, இரண்டு அடைகளாகத் தட்டி அதன் நடுவில் இரச வில்லையை வைத்து இறுக அழுத்தி உலர்த்தி சீலை மண் ஏழு செய்து மணல் மறைவில் புடமிடவும். இவ்வாறு அரைத்துக் கவசித்து மணல் மறைவில் இருபது வரட்டியில் நான்கு புட முமிட்டெடுக்க இரசபற்பமாம்.

இப்பற்பத்துக்குச் சுத்தித்த வாளம், ஓமம், சீரகம், சாதிக்காய், இலவங்கப்பட்டை, மாசிக்காய் ஒவ்வோரளவாகக் கொண்டு கொருக்காப் புளியை நீரில் கரைத்த நீரைக்கொண்டு நான்கு நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்யவும். தேனில் ஒன்றைக் காலை மாலையாக இஞ்சிச்சாற்றில் சிறிது தேன் கூட்டிக்கொடுக்க அழல் குன்மம், சூலை குன்மம் போம். இதற்கு உப்பு நீக்கல் வேண்டும்.

பற்பச் செந்தூரங்கள்—

செம்பிற்குக் குன்ம காலன் என்னும் பெயரிருப்பதால் இதனாலாக்கிய நல்ல பற்பமேனும் செந்தூரமேனும் நல்ல மருந்தாகும். இரச பற்பம், கருவங்கபற்பம், வெள்ளைப்பாடாண பற்பம் ஆகிய இவைகளும் இந் நோய்க்குப் பயன்படுமாதலின், இவைகளையும் நோய்க்குத் தகுந்தபடி அளவிட்டுத் துணைமருந்துகளோடு கொடுக்கலாம்.

உணவு. —குன்ம நோயென்பது அகட்டைப் (தீனிப்பையைப்) பற்றி வரு நோயாதலால் உட்கொள்ளும் உணவு எளிதில், செரிக்கக்கூடிய உணவாகவே இருத்தல் வேண்டுமாதலின் ஒரு முறை வடித்த சோறும் இளங்காய்கறிகளுமாக இருத்தல் வேண்டும். அவைகளுள் இளங்கத்தரி, முருங்கை, வெண்டை, பீர்க்கு, புடலன் போன்றவைகளாம்; எளிதில் செரிக்கக்கூடாதாகிய தேங்காய்கள், கொள்ளு, உளுந்து, ஆட்டுக்கறி முதலியவைகளும் சோறும் நீர்வாழ்ப்பொருள்களாகிய மீன் முதலியவைகளும் நீக்கி வைப்பது நலம்; செரிக்காவிடின் கஞ்சி வகையாகக் கொள்ளல் வேண்டும். செரிப்பைத் தரக்கூடியதான இஞ்சி, பிரண்டை இவை போன்றதைத் துவையல், ஊறுகாய் முதலியவைகளாகச் செய்துகொள்ளலாம்.

## சூலை நோய்.

வேறு பெயர்கள். —முருக்கல் நோய், குத்தல் நோய், குடல் வலி எனப் பல பெயர்களுண்டு.

இயல். —சூலம் என்னும் கருவியால் குத்துங்கால் உண்டாம் வலியையொத்த நோய்க்குச் சூலை நோய் எனப் பெயராயிற்று. இந் நோய் வருமிடத்தை இதற்கு அடைமொழியாக்கி, பக்கங்களில் வரு நோய்க்குப் பக்க சூலை யென்றும், வயிற்றில் வரும் நோய்க்குக் குன்மசூலை யென்

றும், கையில் வருபவற்றிற்குக் கர சூலை யென்றும், குற்ற அளவாக வருவனவற்றிற்கு அக்குற்றத்தின் பெயரையிட்டு வளி, அழல், ஐய சூலை யென்றும் கூறப்படும்.

'' தோற்றாதென் வயிற்றினகம்படியே குடரோடு தொடக்கி முடக்கி யிட ஆற்றேன்.'' எனத் தேவாரத்தில் அப்பர் கூறியாங்கு வயிற்றின் குடல் முடுக்கி இழுத்து வலித்தலும் நோதலுமான இயல்புடையதாம். வயிறு அன்றி மற்ற விடத்திலும் குத்தலையும் குடைச்சலையும் நோவையும் உண்டாக்கும் இயல்புமுண்டு. இதனைச் கீழ்க் கூறியபாவா லறிக.

நோய் வருவழி

'' சார்வான சூலைவரு மாறு கேளாய்—
தக்கசிறைப் பட்டிருக்குந் தீமை யாலும்
ஆர்வான வறச்சுடுசோ றருந்த லாலும்
அறவுமே சலிப்பாலு மோட லாலுந்
தார்வான சபைமிகுந்த சண்டை யாலும்
தகையான துவர்ப்பொசிப்பு புகைத்த லாலும்
வேர்வான மோகத்தின் புணர்ச்சி யாலும்
மிகுந்தபசி யுறுதலினாற் சூலை யாமே.''

'' ஆமென்ற வன்னத்துக் கிறுதி பண்ணி
யதிகபர தேசிகளை யடித்த பேர்க்குங்
காமென்ற கற்புடைய மங்கை மாரைக்—
கருதியே மனத்துளிச் சித்த பேர்க்கும்
வாமென்ற வாழ்மரத்தை வெட்டி னோர்க்கும்
வழிமறித்து பொருள்பறித்த மதிகே டர்க்கும்
ஏமென்ற எச்சிறனைக் கவர்ந்த பேர்க்கும்
இகத்திலே நோவெய்திச் சூலை யாமே.''

(பொருள்) சிறைப்பட்டிருத்தல், மிகச் சூடான பண்டங்களை உண்ணல், மனச்சலிப்புக் கொள்ளல், ஓடல், தன் வன்மைக்கு மிகுந்த சண்டையிடல், துவர்ப்புப் பொருள்களை அடிக்கடிக்குக் கொள்ளல், புகை பிடித்தல், அளவிற்கு விஞ்சிப்பெண்கலவி செய்தல் ஆகியவற்றால் சூலை நோய் உண்டாகும்.

ஏழைகட்கு உணவிடாமல் அவர்களை அடித்தோட்டியவருக்கும், மிகுந்த பெண்ணாசையால் கற்புடைய மங்கையரை விரும்பியவருக்கும், பயன்தரக்கூடிய மரங்களை வெட்டி வீழ்த்தியவருக்கும், பொருளிச்சையால் வழிபறிக்கும் அறிவிலிகளுக்கும,தன் எச்சிலைத்தெரியாமல் பிறர்க்கு கொடுப்பவருக்கும் இந்நோய் உண்டாகும் என நூல்கள் கூறும்.

முற்குறிகள் : உடல் குளிர்ந்தாற் போற்றோன்றி, மூக்கில் நீர் பாய்தல், கண் சிவத்தல்,சற்று சுரம் காய்தல், உடல் வனப்புக் குறைதல் என்னும் முற்குறிகளையும் காட்டி, பக்கம், கைகால், பூட்டுகள் இவைகளில் குத்தலை உண்டாக்கும். இதனைக் கீழ்க் கூறிய பாவாலறிக.

" சூலை நோயெனச் சொல்பேர் வழியைக்
கோல மாகக் கூறக் கேளாய்
உந்தி முதலா யுறுமிரு பாங்கரும்
பந்த விலாவிற் பகரென் புகளில்
ஒட்டி நரம்பை யுள்ளிழுத்துக் கொண்
டுபத்திர வத்தை யுடனே செய்யும்
வலித்து முள்ளை வயிற்றி லுள்ளே
நலிந்து சொருகல் போல வலியாம்

முதுகு தனிலு முன்னுழத் துக்கொ லும்
விதியு ணவுகளை வெறுக்கப் பண்ணும்
ஆதலா லிந் நோய்க் கப்பெயர்
ஈதலே தகுமென் றிந்தா ரன்றோ."

நோய் எண் :

" சூலையாம் பதினைந்தின் சூட்சமங் கேளாய்
துளைக்கின்ற மேகத்தின் சூலை யோடு
வாலையா முறியென்ற சூலை தானும்
வாதத்தின் சூலையொடு பித்த சூலை
ஆலைதான் சிலேட்மமாஞ் சூலை யாகு
மாமென்ற சூலையொடு கறைச்சூ லையாம்
கோலகுன் மச்சூலையோ டுலர்த்து சூலை
கொடிநிதம்பச் சூலையொடுஉக் கார சூலையாமே."

" ஆமென்ற சுரசூலை கெற்பச் சூலை
அதிபக்கச் சூலையோடு தூரச் சூலை
பாமென்ற பதினைந்து சூலை யாகும்
பசியாலும் பழகிய காடி யாலும்
தாமென்ற சிலைநுதலாள் புணர்ச்சி யாலும்
சருகிலையின் நீராலுஞ் சண்டை யாலும்
வேமென்ற ரசமருந்தின் வெட்டை யாலும்
மிடுக்கான சூலைவந்து விளையுந் தானே."

(பொருள்): மேகச்சூலை, முறிச்சூலை, வாதச்சூலை, பித்த சூலை, சிலேட்டுமச்சூலை, ஆமச்சூலை, உக்காரச்சூலை, குன்மசூலை, உலர்த்துச் சூலை, நிதம்பச்சூலை, கறைச்சூலை, சுரச்சூலை, பக்கச்சூலை, கருப்பச் சூலை, தூரச்சூலை எனப் பதினைந்து வகைப்படும்.

## குறிகுணங்கள்.

மேகசூலை :

" விளைமேக சூலையின்றன் விவரங் கேளாய்
மிகக்கைகால் கடுப்போடு குடைச்ச லாகும்
களைநீரு மலங்கட்டுங் கைகால் வேர்வை
கசிவோடு நளிருண்டா மேனி யெங்கும்
இளமையவ ரிதழதுதான் சிவப்பு மாகும்
எரிச்சலுண் டாந்தேக மிளைத்துக் காணும்
உளைவோடு சுரமாகுந் தாகங் காணும்
முறுகின்ற பிரமையா மயக்க மாமே."

(பொருள்): இந்நோயில் கைகால்கள் மிகக் கடுத்துக்குடைந்து, சிறு நீரும் எருவும் கட்டிக் குளிர் சுரங்காயும். பின்பு மிகுந்த வியர்வை யுண் டாகி, கீல் மூட்டுகள் தோறும் சிவந்து வீங்கி, சூலத்தால் குத்துவது போன்று வலிக்கும். உடல் முழுமையும் எரிச்சலுண்டாகும். உதடு சிவந்து எரிச்சலுண்டாகும். உடல் இளைத்துப்போகும். நீர்வேட்கை, மயக்கம், அறிவு மயங்கல் என்னுங் குறிகுணங்களையும் காட்டும்.

முறிச்சூலை :

'' மயக்குமுறிச் சூலையின்றன் குணத்தைக் கேளாய்
மறைப்பான வாண்குறியி னடியே யுற்று
அயக்கின்ற வழன்றுகீழ் முதுகைப் பற்றி
அபானன்மே லடிக்குடலை யுதிரச் சுற்றி
பயக்கின்ற பரவியே வலிக்கும் போது
படர்நாவி தனைநடுவிற் குழித்து வாங்கும்
தயக்கிடும் தலைவலியுஞ் சுரமுங் காணும்
தக்ககண் சிவந்துநீர் ததும்புந் தானே.''

(பொருள்): இந்நோயில், தலைவலி, வாய் குமட்டல் என்னும் குறிகளைக் காட்டி, அடிக்குடல் வலித்து நொந்து, கீழ் நோக்குங்கால் தன்னளவில் மிகுந்து வயிற்றை உப்பச்செய்து, கீழ்நோக்கி எருவையும் நீரையும் கட்டி, முதுகு பக்கத்தே பாய்ந்து, உந்தியை அணுகி, அதனைக் குழியச் செய்து தாங்கமுடியாத வலியை உண்டாக்கும். அன்றியும், இவ்வாயுவின் பெருக்கால் ஆண் குறியின் அடியும் நோகும்.

வளிச்சூலை :

'' ததும்புமே கால்கைதா னுளைவு காணுந்
தடிப்பாகத் திமிருண்டாய்த் தூக்க மிஞ்சும்
வெதும்பியே யங்கமெலாங் குளிருஞ் சற்றே
மெய்தானும் பளபளக்கும் கனமுங் காணும்
கதும்புமே வின்னுணிக் கடூர மாகுங்
கடுத்துமே சிறுநீருஞ் சிவந்து வீழும்
அதிருமே மெய்யெல்லாங் குடைந்து நோகும்
அதிகரிக்கும் வாதசூலை யாண்மை தானே.''

(பொருள்): இந்நோயில் உடம்பு முழுமையும் குளிருண்டாகிச் சிறு சுரம் தோன்றிப்பின் காலுங்கையும் நோதல், திமிர் பிடித்தது போலாதல், இரவில் தூக்கம் அதிகப்படுதல், உடல் வெப்பங்கொள்ளல், உடல் கனத்துப் பளபளத்துக்காணல், வில்லின் நாணைப் போல் உடலை இழுத்துப் பிடித்திருத்தல், சிறு நீர்மிகச் சிவந்து கடுத்திழிதல், உடல் முழுமையும் குடைதல் ஆகிய குறிகளைப்பெறும்.

'' இளைத்திடும் வாத சூலைக் கெய்திய குணங்கள் சொல்வோம்
குளைத்திடுங் கைகால் நெஞ்சு குத்துடன் வரண்டி ருக்கும்
துளைத்திடு மார்பில் சென்று தாக்குமே லேறிச் சென்று
மளைத்திடும் சீதான் கக்கு மாகாது வைய மாமே.''

மேற்கூறிய குறிகளன்றி, வளிசூலை நோயில் நெஞ்சிலும், மார்பிலும் குத்தலையுண்டாக்கி வரளச் செய்து ஐயத்தையும் பெருக்கி நெஞ்சிலும் மார்பிலும் சீகூட்டிக் கக்கச் செய்யும் எனவும் கூறுவர்.

'' நாட்டிய பித்த சூலை நடத்திய வுறவைக் கேளும்
ஊட்டிய அன்ன முண்ண ருசிதப்பி வாந்தி யாகும்
மாட்டிய கைகால் சந்து வகையதன் மேலும் நோக்கும்
நீட்டிய வவயவங்கள் நின்றெரித் தூறுங் காணே.''

**(பொருள்)** : அன்றியும், இந்நோயில் உணவின் சுவையறியாதபடி செய்வதோடு வாந்தியையும் எழச் செய்யும். கைகால் நோதல், அவை களை முடக்க வொட்டாமை, அவைகள் நிமிர்ந்து எரிதல் என்னும் குறி களையும் காட்டும்.

அழல் சூலை :

'' ஆண்மையாம் உடல்வற்றிக் கடுப்பு முண்டாம்
ஆறவே கைகாலும் கனத்து ளைந்து
நோன்மையாய் நோய்மிகுந்து தூக்கங் கெட்டு
நுணக்கமாந் தாதுவெலா நொய்ய தாகிக்
கேண்மையாய்ச் சடத்தினிடச் செழுமை மாறித்
திரங்கியே மிகமின்னித் தெளிவி லாமல்
பேண்மையா மயக்கமொடு பெலக்கே டாகும்
பித்தமாஞ் சூலையெனப் பேச லாமே ''.

(பொருள்) இந்நோயில், உடல்வற்றி, உடல்முழுமையும் கடுத்து, கையும் காலும் நொந்து, கனத்து, மிகுந்த வலியைத் தரும், தூக்கங் கெடும். உடற் கட்டுகள் யாவும் குறைந்து, வன்மையற்று, உடலின் செழுமைமாறித் தோல் சுருங்கும். அன்றியும் தோலை மினுமினுக்கவும் செய்யும், அறிவின் தெளிவு போய், மயக்கத்தை (பிராந்தியை) உண்டாக் கும். மேலும், உடல் வன்மை முற்றும் அற்றுப்போம்.

" ஆகாத வாத பித்த மனைத்திடுஞ் சூலை கேளு
வாகான கால்கண் கையில் வளமுடன் கரடு கட்டும்
கரகான மேனி யெல்லாந் கடிப்புடன் வெடிப்புண் ணாகி
போகாத வசாத்திய மாகிப் புணர்ச்சியால் செல்லுந் தானே."

(பொருள்) இச்சூலை நோயில், வளி, அழல் குற்றமாகிய இரண்டுங் கூடி தொண்டையில் கோழைகட்டி வலித்து நொந்து வயிறு வலிக்கும். அதற்குமேல் கீல்களில் வலியையுண்டாக்கி அவைகள் அசைய முடியாத படிக்கு கரடு கட்டியதுபோல் நீங்கா நோயாகும். இஃது பெண் கூட்டால் பிறப்பதுண்டு.

ஐய சூலை :

" சூலையாஞ் சிலேட்மத்தைச் சொல்லக் கேளாய்
தொண்டையெலாம் வலித்துமே கோழை கட்டும்
ஆலையா மடிவயிறு தன்னில் நோவா
மங்கமெலாம் புண்போல அழற்றல் காணும்
வேலையா மெய்யெங்கும் வியர்வை தோன்றும்
மெய்வெளுத்து நகக்கண்ரத்த மில்லை யாகும்
பாலையா யிருந்தவுடல் பஞ்சு போலாம்
பலகாலும் வாயூறிப் பரவு மாமே."

(பொருள்) இந்நோயின் குறிகுணங்கள், உடல் முழுமையும் வலித்துப் புண்போல் நோதல், தொண்டையிலும் மார்பிலும் கோழை கட்டல், அடி வயிற்றில் நீர்கோர்த்தல், உடல் முழுமையும் வியர்த்தல், உடலும் நகமும் குருதியில்லாது வெளுத்துக் காணல், வாய் நீரூறல், உடல் பஞ்சு போலாதல் என்பவைகளாம்.

வயிற்றுச் சூலை (ஆம சூலை) :

" பாவுமே ஆமசூ லையின்கு ணந்தான்
பாவான வசீரணத்தின் பண்பி னாலுந்
தாவுமே தண்ணீர்தான் குடித்த லாலுந்
தகுந்தபுளிப் புக்கசப்புத் தித்திப் பாலும்
ஊவுமே யுபவாசம் பண்ண லாலு
முறவளர்ந்த மந்த மொடு சீதந் தானும்
வாவுமே வயிறோடு விலாப்பக் கங்கள்
வலித்துமே கடுப்புமிகக் குத்துண் டாமே."

(பொருள்) உண்ட உணவு செரியாமையாலும்,தூய்மையற்ற நீரைப் பருகுதலாலும், மிகுந்த புளிப்பு,கைப்பு, இனிப்புப் பொருள்களை மிகுதியும் உண்பதாலும், அடிக்கடி ஒருபொழுது (பட்டினி) இருத்தலாலும், வெதும்பிய அகடு (தீனிப்பை) தனில் ஐயங்கூடி,அத்துடன் கால் (வாயு கலந்து, வயிற்றிலும், விலாப்பக்கத்திலும் மிகவலித்து இந்நோயை உண்டாக்கும்.

உக்கார சூலை :

"குத்துமுக் காரசூ லையின்கு ணந்தான்
கோர்வையாய் விலாதவனில் முதுகில் நெஞ்சில்
அத்தியினி னாபியினி லபான குதத்தில்
அதிகத்துன் மாங்கிசந்தான் வளர்ந்து மேவிப்
பத்துமணற் பருக்கைப்போற் சலத்து வாரப்
பதிநெருக்கி மூத்திரமாங் கிரிச்சி யுண்டாய்க்
தத்துசடங் கடுப்பெடுத்து மதிக லங்கித்
தளர்ச்சியொடு மயக்கமாய்த் தள்ளுந் தானே."

(பொருள்) இச் சூலை நோயில். ஓரே காலத்தில், விலாப்பக்கம், முதுகு, நெஞ்சு எலும்பு. உந்தி, கீழ்வாய் என்னுமிடங்களில் அதிகமான கெட்ட ச்தை வள்ர்ந்து திரண்ட கழலைகளைப்போற் பெருத்து, நீர்த்துளையை நெருக்கி நீரிறங்குங்கால் மிகுந்த துன்பத்தை விளைவிக்கும். இங்ஙனம் சிறுநீர் துன்பத்துடன் கடுத்து இறங்குவதோடு அதில் சிறுமணலைப்போல் கலந்து காணல், உடல் கடுத்தல், உடல் தளர்தல், அறிவு மயங்கல், அடிக்கடி மயக்கம்உண்டாதல் என்னுங் குறிகளையுங் காட்டும்.

குன்ம சூலை:

"தள்ளுகுன்மச் சூலைதனைச் சொல்லக் கேளாய்
தளருமல மூத்திரஞ் சிக்க லாகி
வள்ளுவயிற் பொருமிசத்தி யிரைச்சல் மூர்ச்சை
வலித்துதெரித்து சூலைபோல் வயிற்றிற்றோன்றிய்
தெள்ளுவாய் நீரூற றேப்ப முண்டாம்
சிறுத்துமே யூனுமிக வெதும்ப லாகி
அள்ளுமே யங்கமெலா மழற்சி யாகு
மதிகமா யுடலுலர்ந் தருசி யாமே"

(பொருள்): இந் நோயில், சிறு நீரும் மலமும் தடைபடும். வயிறு பொருமி இரைந்து வாந்தியை யெழச் செய்யும் வயிற்றை வலித்துப் பிடித்துச் சூலத்தாற் குத்துவது போன்று தாங்கமுடியாத குத்தலை உண்டாக்கும். மேலும், அடிக்கடி வயிற்றிலுள்ள நீர் மேல் நோக்கி வரும்படி யாக ஏப்பமும் எழும், உடலின் ஊன் மிகவெதும்பி, வெப்பமாகி உடல் உலர்ந்து, நாவின் சுவை கேடடையும்.

உலர்த்து சூலை :

உடலான வுலர்த்தியெனும் சூலை தன்னை
உரைக்கவே யுட்டிணமாம் பித்தந் தன்னால்
வடலான வக்கினியின் வறட்சி தன்னால்
வலித்துத்தான் மெத்தவே வீங்கித் தோன்றும்
குடலான வாதத்தால் குன்மத் தாலும்
குடிலமாய்க் கனத்துமே யுடம்பெல் லாநோம்
தடலானவுள் வலியும் புறவீக் கம்மாய்த்
தடித்துலர்ந்து சடமெல்லாந் தயங்கும் பாரே.''

(பொருள்): வடவாக்கினியெனும் தீயைப்போல், கேடடைந்து அழல் குற்றநோயில் எழுந்த வெப்பமானது, உடல் முழுமையும் பரவி, முன்பே உடலில் இருந்த குன்மநோயில் குடல் வாயு தூண்டப்பட்டு அவ்வி டங்களை வெதுப்பி வீங்கச்செய்து, உடலெங்கும் நோயை யுண்டாக்கும், தோல் தடித்து உலர்ந்து காணும்.

நிதம்பச் சூலை;

''தயங்குகிற நிதம்பமாஞ் சூலை தன்னைச்
சாற்றிடவே பிள்ளையது தனைப் பெற் றக்கால்
உயங்குகிற யோனிவாய் வருத்த மாகி
உள்ளடங்கி யிரத்தமுளை தேங்காய் போல...
அயங்குகிற யோனிவா யடைத்துக் கொண்டு
அசைக்கிலங்கு நீர்பெருகிச் சகனத் துள்ளே
மயங்குகிற உடலமெல்லாம் வாடி யூதி
மாசற்ற சடந்தானும் வெளுப்பு மாமே.''

(பொருள்): பெண்கள்பிள்ளையைப்பெற்றபின் உண்டாகும் கருவாயின் கோளாறுகளால், அங்குப் புண்ணாய், குருதி சீழ் பிடித்து, சதை வளர்ந்து, அது தேங்காயின் முளைபோலத் தோன்றி, கருவாயின் வாயை அடைத்து மிக்க வலியை உண்டாக்கும். சிறிது அசையினும் அம் முளையிலிருந்து நீர் கசியும், உடல் வாடி வெளுத்து, கால் கை, முகம் முதலியன வீங்கும். இவை இந் நோயின் குணங் களாகும்.

கறைச்சூலை:

''மாசற்ற கறைச்சூலை வன்மை கேளாய்
மருவுதிரந் தான்திரண்டு தோலைப் பற்றித்
தேசற்ற வலையம்போல் திரண்டு நொந்து
சிறந்திருந்த நரம்புவழித் தங்கித் தங்கித்
கேசற்ற நோவாய்க் கீழ் முதுகைப் பற்றிக்
கெட்டியாய் வலித்துமே நோவு முண்டாங்
காசற்ற கைகாலும் வலிய தாகும்.
கருத்தழிந்து மேனியுமே கறுகும் பாரே.''

(பொருள்): இந் நோயைக் கரபாத சூலை யெனவும், கரவாத சூலை எனவும் கூறுவதுண்டு. இஃது உள்ளங்கை, உள்ளங்கால் களில் எரிச்சல், குத்தல், வியர்த்தல் என்னுங் குறிகளைக்காட்டலால் இப்பெயர்களைப்பெற்றது போலும்.

இந்நோயில், அழல் குற்றம் தோலைப் பற்றி, அத்தோலின் அடி யில் குருதி பெருக்கடைந்து தோலின்மேல் நரம்புகள் புடைத்து வெளியிற்றோன்றி, வளையல் போற்றிரண்டு நொந்து, கீழ்முதுகும் கைகால்களும் மிகுந்து வலித்தலும், உடல் கருத்தலும், எரிதலும் ஆகிய குறிகுணங்களை காட்டும். இந்நோய் கருவுயிர்த்தவர்களுக்குப் பெரும்பான்மையும் வருவதுண்டு.

சுரச் சூலை :

'' கருகுகிற சுரசூலை கருத்தைக் கேளாய்
கடந்திரண்டு பக்கமாஞ் சூலை தோன்றி
வருகின்ற வாய்தனிலே ரத்த முண்டாய்
வடிவெல்லாஞ் சுரந்தோன்றி யுளைச்ச லுண்டாய்ச்

சொருகின்ற தேகமெலாஞ் சூலை யுண்டாய்ச்
சுருக்கியே வயிறதுதான் வலித்து நோகுந்
தெருகின்ற நெஞ்செரிந்து வாய்நீ ரூறிச்
செரியாமல் வாந்தியாய்த் தியக்க மாமே.''

(பொருள்) இச்சூலை நோயில் சுரம் தோன்றி, இருபக்கங்களிலும் சூலை நோய் உண்டாய், நெஞ்செரிவு, செரியாமை, வாந்தி, மயக்கம், வயிறு வலித்தல், வாயில் நீரூறல், குருதி கசிதல் என்னுங்குறிகளைக் காட்டிப் பக்கங்களிலும் உடல் முழுமையும் தாங்க முடியாத குத்தலை உண்டாக்கும்.

பக்க சூலை :

'' தியக்கான பக்கமாஞ் சூலை கேளாய்
திருகியே யண்டத்திற் பொருமி நொந்து
உயக்கான சுரந்தோன்றி வலித்து நொந்து
உடம்புப்புண் போலுளைந்து தலைவ லித்து
பயக்கான பக்கத்திற் குத்த லுண்டாய்ப்
பாரித்துக் கனத்துமிகத் திமிரு முண்டாய்க்
கயக்கான கைகாலு மோய்ச்ச லாகிக்
கண்புகைந்து கருமாறிப் பாய்ச்ச லாமே.''

(பொருள்) தலைவலி, உடல் புண்போல் வலித்து நோதல் என்னும் முற்குறிகளைக் காட்டி, சுரம் காயும், பின்பு, மார்பு அடிப்பக்கத்தே சூலத்தால் குத்துவது போன்று தாங்கமுடியாத வலியும், அப்பக்கம் கனத்து விலா இடைகள் தெரியாதபடி வீங்கிக் காணல், கண் புகைதல், கை கால் ஓய்தல், உருமாறிப் போதல், மூச்சு விடமுடியாமை, திமிர் கொள்ளல் என்னுங் குறி குணங்களை இந் நோய் காட்டும்.

கற்ப சூலை :

'' பாய்ச்சல்கெற்ப சூலையினைப் பகரக் கேளாய்
பண்பான மருந்தீட்டின் குணத்தி னாலும்
வாச்சவஞ் சனையாலும் சூன்யத் தாலும்
மாசற்ற காயமது வேட்கை யாலும்
பீச்சவே மகப்பேறி லுதிரத் தாலும்
புரண்டுசிக்கிக் கீழ்வயிற்றி லிரத்தம் வீழ்ந்து
கேச்சலாய்க் கெற்பம்போற் புரள்வுற் றூறிக்
கீழ்வயிற்றில் வலிதோன்றி மயக்கமாமே.''

(பொருள்) இந்நோய், மருந்தீட்டின் கேட்டாலும், வஞ்சனையாலும், சூனியத்தாலும், வெப்பமிகுந்து உடல் வெதும்பியதாலும், மகப்பேற்றில் குருதி சிக்குதலாலும் உண்டான குருதி பெருக்குச் சூலகத்தினூறி அளவில் பெருத்து, சூல் கொண்ட பெண்ணின் வயிறுபோல் பெரிதாகி வயிற்றுள் புரண்டு கீழ்வாயில் தாங்கமுடியாத வலியைத் தந்து மயக்கத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

தூர லை :

'' கீழ்வயிற்றிற் றூரமாஞ் சூலை கேளாய்
கெடியுண்டி மறித்துமே வாய்நீ றூறிப்
பாழ்வயிற்றின் நெஞ்செரிந் தீரல் பற்றிப்
பக்கமன்றிச் சிரத்தோடு வயிறு மூதி
ஆழ்வயிற்றிற் றிரண்டுமே புரள்வுற் றேதான்
அடிக்கடிவந் தமர்ந்தொதுங்கி யெழும்பி மீளுங்
கீழ்வயிற்றில் வெளிப்பட்டே உதிரஞ் சிக்கும்
கிளத்துமல சலத்தானுஞ் சிக்கிப் போமே.''

(பொருள்) இந்நோயில், வாயில் நீர் ஊறி, நெஞ்சு எரிந்து, ஈரல் பக்கம், தலை, வயிறு இவைகளூதி, வயிற்றுள் திரண்டு புரளுவது போல் அடிக்கடி யாதோ ஒன்று எழும்பித்திரும்பவும் கீழ்வயிற்றில் காணப் பட்டு, மலமும் நீரும் அடைபடும்.

பொதுக் குறிகுணங்கள்.—தலை நோதல், மூக்கு நீர் பாய்தல், சிறு சுரம் என்னும் முற்குறிகளைக் காட்டி, நோய் பிறக்குமிடங்களில் சற்று வீங்கிச் சிவந்து குத்தலை உண்டாக்கும். குத்தலின் வன்மைக்கு ஏற்ப, மிகுசுரம், வாந்தி, தலை நோய், கண் சிவத்தல், காதுகேளாமை, மயக்கம், அறிவு குன்றல், வாய் பிதற்றல் என்னுங் குறிகுணங்களும் ஏற்படும். சில வேளை, நோயில் உண்டாகும் வலி தாங்கமுடியாது உடல் வியர்த்தல், கையும் காலும் சில்லிட்டுப் போதல், மூக்கு நுனி நீண்டு போதல், கண் பஞ்சடைதல் என்னுங் குறிகளைக் காட்டுவதுமுண்டு.

அல்லது குன்மநோய்க்குத் துணையாக இந்நோய் பிறந்து, வாந்தி, விக்கல் என்னுங் குறிகளைக் காட்டி, வயிற்றுள் தாங்கமுடியாத வலியுண்டாகும். வயிற்றை வலித்துப் பிடித்துப் புரட்டி வாந்தியை யெழுச்

செய்து அத்துடன் அளவுகடந்த குருதியையும் வெளியாக்கும். இதனால், கேடுகள் பலவற்றை வருவித்து, சில வேளை கொல்லுவது முண்டு. இவ்வாறே, சிறுகுடல் பெருங்குடல்களில் உண்டான சூலை நோயிலும் காணும்.

தீரும் தீராதவை :

" சிக்கான பதினைந்து சூலை தன்னில்
சிறப்பாகக் குணாகுணத்தின் செயலைச் சொன்னேன்
அக்கான வசாத்தியமாஞ் சூலை யாறு
ஆகாத குணங்கண்டாய் முறியென் சூலை
உக்கான வுக்கார சூலை சேட்பம்
உறுதிகுன்மச் சூலையோ டாமை சூலை
நிக்கான நிதம்பமாஞ் சூலை சாத்யம்
நீங்கியத சாத்யமாம் சூலை யென்னே."

(பொருள்) இப்பதினைந்து வகை சூலை நோய்களில், முறிச் சூலை, உக்கார சூலை, ஐயச்சூலை, குன்மச்சூலை, ஆமைச்சூலை, நிதம்பச்சூலை ஆகிய ஆறு வகைகளும் எளிதில் தீராவாம். மற்றைய ஒன்பதும் எளிதில் தீரக்கூடியனவாம்.

குற்ற முதலிய வேறுபாடுகள்.—" நெடுவாத சார்பது வின்றிச் சூலை வராது " எனத் தேரன் கூறியதுபோல், உணவு வகைகளில், வளிக்குற்றத்தைப் பெருக்கக்கூடிய உணவுகளை அளவுகடந்து நீண்ட நாட்கள் உண்பதாலும், இக்குற்றத்தையே பெருக்கக்கூடிய செயல்களிலீடுபடுதலாலும், வளிக்குற்றம் மிகுந்து உடலிற்றங்கி அதனால் கால்களில் (வாயுகளில்) மேல் நோக்குக் கால், கீழ்நோக்குக் கால்களின் வன்மை மிகுந்து நோயைப் பிறப்பிக்கும். நோயெழுந்த காலை இரு குற்றங்களுள் ஒன்றேனும், இரண்டேனும் கூடுமாதலின், நோய்வன்மையும் பெருகும். உடலின் உறுப்புகளில் குத்தல், குடைதல், வலித்தல புரட்டல் என்னுங் குறிகளையும் சிறுநீர், எரு இவைகளை வெளியேகச் செய்யாது கட்டுதலாகிய செயலையும் உண்டாக்கும்.

நாடி நடை.—(1) " வாதமெனும் நாடியது தோன்றில சூலை." என்றதில், வளி (வாத) நாடியதனுடைய இயற்கை நடையளவில மீறி நடக்குமாயின், சூலை நோயைக் குறிக்கும்.

(2) '' பாங்கான வாதத்தில் சேத்துமநாடி
பரிசித்தால் . . . . வெடி சூலை ''

இதில் வளி நாடியும், ஐய நாடியும் இணைந்தோடில் வெடி சூலையைக் குறிக்கும் என அறிக.

(3) '' திருத்தமாம் வாதத்தோடே தீங்கொடு பித்தஞ் சேரிற்
பொருப்புகள் தோறும் நொந்து போதமே பிடிக்குஞ் சூலை.''

வளி நாடியும், அழல் நாடியும் வகை தப்பிக்கூடி நடக்கில் உறுப்புகளில் நோயையுண்டாக்கி சூலைநோயை யுண்டாக்கும் என அறிக.

(4) '' சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரிலுறு . . குன்மசூலை.''

என்றபடியால், அழல் குற்றத்தால் (பித்தத்தா) லுண்டான குன்ம நோயில் வளிக் குற்றம் (வாதம்) கூடின், இந்நோய் உண்டாகும் எனவும், இந்நோயில் அழல் (பித்த) நாடியுடன் வளி (வாத) நாடியும் கூடிக் கலந்து நடக்கும் எனவும் அறிக.

' தானமுள்ள சேத்துமாந்தனிளகில். . . . சூலை. ''

என்பதில், ஐய நாடியானது தன் இயற்கைத் துடிப்பு இழந்து, தளர்ந்து ஓடுமாயின், சூலை நோயைக் குறிக்குமென்றவாறு.

(5) '' கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி கலந்திடு—விட
சூலை. ''

என்பதால் ஐய நாடியானது வளி நாடியுடன் கலந்து காணிர் நஞ்சுச் சூலை யென்னும் நோயைக் குறிக்கும்.

'' மோதிர விரல் வலத்தே முடிக்கியே நாடியோடில்
காதியும் சூலை நோயுண்டாம் கைத்திடும் வாய் நீரூறும்
வாதியானருளினாலே மயக்கமும் வாந்தியுண்டாம்
ஆமுயேடி வயிற்றிற் சூலையுமமர்ந்து நிற்கும் ''

(பொருள்) மூன்றாவது விரற்குறியதாகிய ஐயநாடியானது முடுக்காக நடக்குமாயின் குன்மச்சூலை நோயைக் குறிக்கும், இந்நோயில் மயக்கம், வாந்தி, வாய் நீரூறலுங்காணும்.

**மருத்துவம் :**

இந்நோய் பிறப்பதற்கு வளிக்குற்றமே முதன்மையாயிருத்தலால் அக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தி, அதனோடு கூடிய மற்றைய குற்றங்களையும் குறையும்படி செய்யவேண்டும். கீழ்நோக்குக்கால் மேல் நோக்குக்கால் என்னும் இவைகளைத் தத்தம் நிலையெய்தும்படி செய்து, நோயினை நீக்க முதலில் கழிதற்கும், வேண்டுமாயின் வாந்தி செய்தற்குமான குடிநீர் எண்ணெய் வகைகளைத் தந்து, பின் நோய்க்கான மருத்துவங்களைச் செய்தல் வேண்டும். அன்றியும், நோயில் உண்டாகும் வலி, குத்தல் முதலிய துன்பங்கட்குப் பூச்சு, ஒற்றடம் முதலிய வெளி மருத்துவங்களையும் வழங்க வேண்டும்.

கழிச்சலுக்கு.—(1) காக்கட்டான் வேர், சிவதை வேர், சுக்கு, கடகரோகணி, முந்திரிப்பழம், ஓர் அளவாகக் கூட்டி முறைப்படி குடிநீராக்கி, கால் ஆழாக்களவு கொடுக்கக்கழிச்சலுண்டாம்.

(2) காட்டாமணக்கு வேர், கறுப்புக் கொடிவேலி வேர், சிவதை வேர், வாய்விடங்கம், கடகரோகணி, சுக்கு, அதிமதுரம் வகைக்குக் கால் பலமாகக் கொண்டு, ஒரு படி நீரிட்டு, எட்டொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொடுக்க கழிச்சல் உண்டாவதுடன் சூலை நோயின் கொடுமையும் தணியும்.

(3) முட்காய்வேளை வேர், மூக்கிரட்டை வேர், காக்கணம் வேர், கழற்சி வேர், காட்டாமணக்கு வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய் வகைக்கு ஓர் எடையாகக்கொண்டு, அதற்குப் பதினாறு பங்கு நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்ததில் அரை ஆழாக்குக் குடி நீரில் கால் பலம் இந்துப்பு பொடித்துத் தூவிக் கலந்து குடிக்கக் கழியும்.

(4) எண்ணெய் வகைகளில்.—சுழற்சி எண்ணெய், சித்தாதி எண்ணெய், மேகநாத எண்ணெய், மாந்த எண்ணெய் இவை போன்றவைகளை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக்கக் கழிச்சலையுண்டாக்கும்.

(5) மாத்திரை வகைகளில், மேக நாத குளிகை, கோடா சுழிக் காக்கண மாத்திரைகளைக் கழிச்சலுக்கு வழங்கலாம்.

மெழுகு வகைகளில்.— (1) அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு, சண்ட மாருதக் குழம்பு போன்றதில் ஏதேனும் ஒன்றைத் தக்க அளவில் கொடுக்கலாம்.

(2) அகத்தியர் குழம்பை அளவிட்டு, ஒரு உச்சிக் கரண்டி உத்தாமணிச் சாற்றில் கரைத்துக் கொடுக்க வாந்தியும், கழிச்சலும் உண்டாம்.

இவ்வா்றாகக் கழிச்சலுக்கும் வாந்திக்குமான மருந்துகளைக் கொடுத்த பின் நோய்க்கான மருந்தையும் குடிநீரையும் வழங்கல் வேண்டும்.

அவைகள்:—

மாத்திரைகள்.—விட்ணுசக்கரம், சலமஞ்சரி, சலோதாரிமணி, நவலோக பூபதி, சூலை பூபதி.

மெழுகுகளில்.—இரசகந்தி மெழுகு, நந்திமை, நவாச்சார மெழுகு, வான் மெழுகு, இரச மெழுகு, நவ உப்பு மெழுகு, குமட்டி மெழுகு.

பற்பச் செந்தூரங்களில், செம்பு பற்பம், அயவீரச் செந்தூரம், நாக பற்பம், நவாச்சாரச் சுன்னம், நண்டுகல் பற்பம் இவை முதலிய.

தாளீசாதி வடகம், பிரண்டை வடகம்.

வெளிப்பூச்சு எண்ணெய்கள்.—மெழுகுத் தைலம், வாத கேசரி, எருக்கம்பால் எண்ணெய் இவைகளில் நோய்க்குத் தக்கபடி கொண்டு பூசி, (வேண்டுமாயின் பிடித்து) தவிடு, நொச்சி, முடக்கறுத்தான் முதலி யவைகளின் தழைகளைக் கொண்டு ஆமணக்கு நெய்யில் வதக்கி ஒற்றட மிடலாம்.

உணவு.—கால்களை (வாயுகளை)ப் பெருக்கக் கூடியதான உருளைக் கிழங்கு, சேமைக் கிழங்கு, வாழைக்காய் முதலிய பொருள்களை நீக்கி மற்றவைகளைக் கொடுக்கலாம்.

குன்மசூலை நோயில் நீர் வடிவமாயுள்ள கஞ்சிகளையே கொடுத்தல் வேண்டும்.

## மண்ணீரல் நோய்

வேறு பெயர் : இடப்பாட்டீரல் நோய், பிலீகம் நோய்.

இயல்.—மண்ணீரலானது தன்னியற்கையளவிற் நிற்காது நாள் பெருத்துக் கொண்டே வருவதோடு உடலின் குருதியைக் குன்றச் செய்யும் இயல்புடைய நோயாம்.

நோய் தோன்றுவழி.—உடற்காகாப் பொருள்களையும், குருதியைக் கெடுக்கக் கூடிய பொருள்களையும் உண்பதாலும், வயிறு நிறையயுண்ட பின், ஆடல், பாடல், குதித்தல், நீரில் நீஞ்சுதல் ஆகிய செயல்களாலும், உணவுகளைக் கொண்டு அதற்கு மேல், நெய்ப்புப் பொருள்களாகிய நெய், எண்ணெய், பால் முதலியவைகளைக் கொள்ளுவதாலும், உண்ட உடனே தூங்குவதாலும், கழிச்சலுக்கான மருந்துகளை அடிக்கடிக்குக்கொடுத்து உடல் வன்மையைக் குன்றும்படி செய்தலாலும், மண்ணீரல் பெருகுமெனக் கூறுவர். மேலும் குளிர் காய்ச்சலிலும், வெளுப்பு நோயிலும், காளச் சுரத்திலும் மண்ணீரல் வளர்ச்சியடையுமென அறிக.

முற்குறி.—வாய் சுவை அறியாமை, வாய் குமட்டல், உணவில் விருப்பமின்மை, உண்ட உணவு செரியாமை, வாந்தியாதல், வயிறு பொருமல், உடல் சூடாகக் காணப்படல், விட்டு விட்டு சுரங்காய்தல், வயிறு பெருத்துக் கொண்டே வருதல், உடல் இளைத்துக் கருத்துக் காணல் என்னும் முற்குறிகளைக் காட்டி, மண்ணீரல் பெருத்துக் கொண்டே வரும். தொட்டுப் பார்க்கினும் தட்டிப் பார்க்கினும் மார்பின் இடப்பக்க கடைவிலா எலும்பிற்குக் கீழ் பெருத்து வளர்வதைக் காணக் கூடும்.

நோய் எண் :—இந்நோயினைக் குற்ற அளவாக வளி, அழல் ஐய முக் குற்ற இடப்பாட்டீரல் நோயென நான்காக வகுத்துள்ளனர்.

### குறிகுணங்கள்.

வளி மண்ணீரல் நோய் :

இந்நோய், வளிக்குற்றத்தைப் பெருக்கக் கூடிய உணவு, செயல்களாற் பிறந்து, உணவில் விருப்பமின்மை, வாய்ச்சுவையறியாமை, முதலிய குறிகளைக் காட்டி, வாய்கைத்தல், அடிக்கடி சுரம் வருதல், உடல் முழுமையேனும், முகமாகிலும் கருத்துக்காணல், வயிறு நாளுக்கு

நாள் பெருத்துக் கொண்டே வருதல், வயிறிரைதல், வயிற்றுக் குருதிக் குழல்கள் புடைத்துப் பச்சை நிறமாகக் காணல், கைகால் சூம்பல். எருவும் (மலமும்) சிறுநீருஞ் சுருங்கல் என்னுங் குறிகளைக் காட்டும், நோய் முற்றமுற்ற உடல் வெளுத்து, கைகால், முதுகு, வயிறு ஆகிய இவைகள் வீங்கிக் காணும். அன்றியும், வயிற்றுள் நீர் கூடி, பெரு வயிற்று நோயும் தொடர்வதுண்டு.

அழல் மண்ணீரல் நோய் :

இந்நோயில் வாய் கைத்தல், வாய் நீரூரல், சோறு வேண்டாமை, விருப்பமின்றி உண்ணினும் வாந்தியாகி விடல், வாயைக் குமட்டி குமட்டிப் பிச்சு நீரெதிர்த்து வாந்தியாதல், அடிக்கடி தலை சுற்றி மயக்கம் உண்டாதல் என்னுங் குறிகளைக் காட்டி மண்ணீரல் அளவில் பெருத்துக் கொண்டே வரும். நோய் பெருகுதற்கேற்பக் கழிச்சலையுண்டாக்கும். உடலும், கண், நா, முகம் யாவும் மஞ்சளித்து மஞ்சள் (காமாலை) நோய் பால் காணும். சில வேளைகளில் மண்ணீரலும் மிகப் பெரிதாகிக் கீழ் நோக்கி அடிவயிறு வரையிலும் இறங்கிவிடுவதுண்டு.

ஐய மண்ணீரல் நோய் :

இப்பிணியில் குருதிகேடடைந்து, வன்மை குறைந்து உடல் மினு மினுத்து வெளுத்து, கைகால் வீங்கத் தொடங்கும். உடலிலுள்ள இரசக் குழாய்களின் முடிச்சுகளும் வீங்கி, கழலைகளைப் போல திரண்டெழும். நோய் முற்ற முற்ற விடாச்சுரம் போல் சுரங்காய்தலும், விடுதலுமாக நோயினைப் படுக்கையிலேயே இருக்கச் செய்யும். உடலும் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வருவதுடன், குருதியும் குறைந்து நாள் படத் துன்புறுத்திக் கொல்லுவதுமுண்டு.

முக்குற்ற மண்ணீரல் நோய் :

முக்குற்றங்களும் ஒரேகாலத்துதித்தெழு நோயாதலால் முன்பு கூறிய மூவகை நோயில் காணுங் குறி குணங்களும் இதனிடையே யொன்று கூடி, காணப்படுதலோடு மண்ணீரலும் மிகப் பெரிதாகக் காணப்படும். அன்றியும் இந்நோயில் உடல் வன்மை எளிதில் குறைந்து கொண்டே வந்து, நோயை முதிரச் செய்து சீக்கிரத்தில் கொன்றுவிடும்.

தீரும் தீராதவை:

வளிக்குற்றத்தால் பிறந்த இடப்பாட்டீரல் நோய் தக்க மருத்துவத்தில் தீரும். மற்றவை எளிதில் தீராதாம். அழல் குற்றத்தால் வருவன தீருவது மிகக் கடினம்.

பொதுக் குறி குணங்கள் :

இந் நோய்க்கான முற்குறிகளைக் காட்டி இடப் பாட்டீரல் தன்னளவில் நாட்குநாள் பெருத்துக் கொண்டே வந்து, வயிற்றில் ஓர் பளுவும் வலியுந் தந்து, செரியாமை, வாந்தியெழச் செய்தல், கழியச் செய்தல், அடிக்கடிச் சுரம் வருதல், உடல் கருத்து இளைத்துப் போதல், கைகால் வீங்கல், பெருவயிறு போல் வயிறு உப்பி அதனுள் நீர் கோர்த்தல், முகம் வெளுத்தல் என்னும் குறிகளையுடையதாம்.

சில வகை நோயில் வலப் பாட்டீரலும் மிகப் பெருத்து அடி வயிற்றின் தோலை முட்டிக் கொண்டு தன் வடிவத்தோடு காணப்படுமாயின் இடப் பாட்டீரலும் கூடவே பெருத்து வளர்ந்து நோய் வாய்ப்பட்டு அத்துன்பங்களுக்கீடாய் மேற் கூறிய நோயின் தன்மைகள் உண்டாமெனச் சிலர் கூறுவர்.

இந்நோய், சிறு குழந்தைகட்கும் வருவதுண்டு. சிறியவர் முதல் பெரியவர்கள் வரையிலும் பிறக்கும் வலப் பாட்டீரல் நோய்க்குத் துணையாக இடப்பாட்டு ஈரல் நோயும் வருவதுண்டு. இரட்டைப் பிள்ளைகளைப் போல் ஒன்றுகெடின் மற்றொன்றும் கெடுமென்பர் சில நூலோர்.

## கல்லீரல் நோய்கள்

வேறு பெயர் : வலப் பாட்டீரல் நோய், மாந்தக் கட்டி, கல்மாந்தம், யக்குதம் எனப் பெயர்களுண்டு.

இயல் : இயற்கையாக மார்பின் கீழ் வலப்பக்கம் உள்ள வலப் பாட்டீரல், அப்பக்கமுள்ள கடைவிலா எலும்பு வரையிலும் நிற்காமல் தன்னளவில் மேலுங்கீழுமாகப் பெருத்துக்கொண்டே வருவதும், தன் இயற்கைத் தொழிலை இழப்பதும், அல்லது அளவில் மிகச் சிறுத்துக் கொண்டே வந்து பல நோய்களையும் துணையாக்குவதுமான இயல்பைப் பெறும் நோயாம்.

நோய் வரும் வழி : மிகுந்த அளவில் உணவையுண்ணல், உடற் கொவ்வாப் பொருள்களைக் கொள்ளல், கள், சாராயம், முதலிய மயக் கத்தைத் தரும் குடி வகைகளை அளவு கடந்து குடித்தல், பெண்களின் கூட்டால் வரும் நோய் ஆகியவற்றாலும், சுரம் முதலிய நோய்கட்குத் துணையாகவும் வருவதாகும். அன்றியும் சிறு குழந்தைகட்கும் பால் உணவு முதலிய வேறுபாடுகளாலும் வருவதுண்டு.

முற்குறி : வாய் கைத்தல், சுவையின்மை, வாய் நீரூறல், பசி யின்மை, உண்ட உணவு செரியாமை, காலையில் பித்தமாக வாந்தி யாதல், முகம் சுருங்கி முகஎலும்பு எடுத்துக்காட்டல், கை கால் சூம்பி வயிறு நாட்குநாள் பெருத்துக் கொண்டே வருதல், அடிக்கடி சுரங் காய்தல் என்னும் குறிகளைக் காட்டி வலப் பாட்டீரல் பெருத்துக் கொண்டே வரும்.

நோய் எண் : குற்ற அளவாக மூன்று வகைப்படும். அவைகள் வளிக் கல்லீரல் நோய், அழல் கல்லீரல் நோய், ஐயக் கல்லீரல் நோயாம்

குறி குணங்கள் :

வளிக்கல்லீரல் நோய் :

உடலின் கண் வளிக் குற்றம் பெருகித் தனக்குத் துணையாக அழல் குற்றத்தையுங் கூட்டி, சுரத்தையுண்டாக்கி, உடலை நாளுக்கு நாள், இளைக்கச் செய்தல், உடல் கருநிறமாதல், உடல் வன்மை குறைதல், வயிறு பெருத்துக் கொண்டே வருதல், இரச நாளங்களின் முடிச்சுகள் கனத்துத் தொடை இடுக்குகளிலும், அக்குள், வயிறு, கழுத்து, மார்பு இவைகளிலும் தோன்றல் என்னுங் குறிகளைக் காட்டி, நாட் செல்லச் செல்லப் படுக்கையிலிருத்தித் துன்புறுத்தும். நோய் முதிருங்காலையில் உடலின் குருதி குறைந்து உடல் வெளுத்துக் கால், கை, வயிறு ஆகியவைகளும் வீங்கிக்காணும்.

அழல் கல்லீரல் நோய் :

இதனில் அழல் குற்றமே தனித்துண்டான நோயாதலால், அழல் குற்றத்தினளவாகப் பிறந்த குருதிகெட்டு, கல்லீரலின் இயற்கைச் செய லுங்குன்றிப் பித்துநீரை உடல் முழுமையும் வீசி உடலை மஞ்சள் நிற மாக்கும். அன்றியும் வாய் கைத்தல், பித்து வாந்தியாதல், முகஞ் சுருங்கல், கை கால் வீங்கல், குருதியின் வன்மையின்மையால் உடல் வெளுத்துக்காணல் என்னுங் குறிகளைக் காட்டி, பெரு வயிறுநோயையும் பின் தொடரச் செய்யும்.

ஐயக்கல்லீரல் நோய் :

இயற்கையாக, இந்நோயில் மிகுந்த அழல் குற்றத்தோடு ஐயக் குற்றமுங் கூடிவருநோயாகையால், கல்லீரல் மிகப் பெருத்து, தொடுகைக்குக் கட்டி முட்டியாகக் காணப்படும். அன்றியும் கல்லீரலின் பெருக்கத்தையும் அதனின் மேலெழுந்த எழுச்சியின் வடிவையும் காண லாம். ஈரலின் பெருக்கத்திற்கேற்ப, மிகுந்த சுரமும், வாந்தியும் தலை நோயும், அடிக்கடி கழிதலும், சிறுநீர் சிவந்து, அளவில் குறைந்து இழிவதுமான குறி குணங்களோடு, மஞ்சள் (காமாலை) நோய், உடல் வீங்குதல், உடல் வெளுத்தல் ஆகிய நோய்களும் துணைக்கொண்டு பெரு வயிறு நோய் தொடருவதும் உண்டு.

தீரும் தீராதவை : வளிக்குற்றத்தால் வரும்நோயும் ஐயக்குற்றத் தால் வருநோயும் தீராதாம்.

பொதுக் குணங்கள் : மண்ணீரல் நோய்கள் யாவற்றிலும் பொது வாக நோய் தோன்றும் முன்பே, உணவில் வெறுப்பு, நாச்சுவையறி யாமை, உண்ணினும் வாய்குமட்டி குமட்டி வாந்தியாதல், காலையில் எழுந்த உடனே வாய் குமட்டிப் பித்துநீராக வாந்தியெடுத்தல், உண்ட உணவும் சரிவர செரியாதிருத்தல், அப்படிச் செரிப்பினும் உடற்கு ஊட்ட மளிக்காமல் உடலை இளைக்கச் செய்தல், முகஞ்சுருங்குதல், தாடைச் சதைகள் சுருங்கித் தாடை எலும்பு வெளித் தோற்றமாதல் என்னுங் குறிகளைக் காட்டி, கை, கால் சூம்பி, உடல் வெளுத்து வயிறு பெருக்கத் தொடங்கும். கல்லீரலும் நாளுக்குநாள் பெருத்துக் கொண்டே வரும். இந்நோய்க்குத் துணையாக, மஞ்சள் (காமாலை) நோய், வெளுப்பு (பாண்டு ) நோய், ஊதல் (சோகை) நோய், பெருவயிறு நோய் ஆகிய இந்நான்கும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடருவது இயல்பாம்.

குறிப்பு.—மண்ணீரல் நோய், கல்லீரல் நோய் ஆகிய இவ்விரண்டு நோயும் அழல் குற்றத்தின் பெருக்கால் வருநோயாதலாலும் இந்நோய் களில் எந்நோய் முன் பிறப்பினும் அதனைப் பற்றியே மற்றதும் தொடருமாகையாலும் இவ்விரு நோய்க்கும் குற்ற முதலிய வேறுபாடுகள் ஒன்றுபட்டே காணப்படுதலாலும் ஒவ்வொன்றிற்கும் தனித்துக் கூற வேண்டாவாகையால், குற்ற வேறுபாடுகளையும் மருத்துவத்தையும் ஒன்றுபடக் கூறினோம்.

குற்ற வேறுபாடு.— இந்நோய் அழல் (பித்த) குற்றத்தாலெழுந்து தனக்குத்துணையாக மற்ற இரு குற்றங்களைக் கூட்டிக்கொண்டு பரவுகாலின் செயலைக் கொடுத்து வருநோயாம்.

அழல் குற்றமே தன்னளவில் கெடுமாகையால் உடற்கட்டுகளில் இரசமும், குருதியும் வண்மையிழந்து உடல்வற்றிப்போதலும், கழிச்சல் வாந்தியுண்டாவதும், பித்து நீர் இயற்கை வழிசெல்லாததாலுமுண் டான கெடுதல்களைப் பிறப்பிக்கும்.

உடலடையுமிக்கேடுகளால், கீழ்நோக்குங்கால், மேல்நோக்குக்கால் ஆகிய இவ்விரண்டுங்கூடி நோயைப் பெருக்கும்.

மருத்துவம் :—அழல் குற்றமே தன்னிலை கெட்டு வருமிந்நோய்க்கு அக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தியும், அதனால் கேடடைந்த கால் (வாயு)களையும் தத்தம் நிலையெய்தும் படியான மருத்துவங்களைச் செய்தும் நோய்க்கான மருந்துகளைக் கொடுத்தும் பிணியினையொழித்தல் வேண்டும். அவைகளுள் முதற் செய்ய வேண்டிய வாந்தியையும் அதன் பின்னர்க் கழிச்சலை யுண்டாக்கக்கூடிய பரிகாரத்தையும் செய்வதாகும். கடையதாக நோய்க்கான மருந்துகளாகிய குடிநீர் முதலியவையும், பற்பச் செந்தூரங்களுமாம். அவைகள்:

வாந்திக்கு.—(1) பப்பாளிக்காய்ச்சாறு இரண்டு உச்சிக்கரண்டி அளவில் கடுகு அல்லது மருக்காரையைச் சிறிது கூட்டி அரைத்து விழுங்கச்செய்து இளஞ்சூடுடைய நீர் குடிக்கச் செய்ய வாந்தியை உண்டாக்கும்.

வாந்திக்கும் கழிச்சலுக்கும்.—

(2) ஒருபிடி குப்பைமேனி இலையை ஒருபிடி ஊசித்தகரையிலை பத்து மருக்காரையின் காய் ஆகக்கூட்டி அரைப்படி நீரிட்டு அரையா ழாக்காகக் குறுக்கி வடித்ததைக் கொடுக்க ஒன்று இரண்டு முறை வாந்தி யாவதோடு ஒரு முறை கழியவும் செய்யும்.

(3) கீழாநெல்லிச்சாறு அரையாழாக்கு கொண்டு சட்டியிலிட்டு அதில், பேதியுப்பு ஒரு பலமும், கடுகு ஒரு விராகனெடையும் கூட்டி நன்றாகக் கொதித்த பின் ஆறவைத்து, வடித்து மீண்டுஞ் சிறிது சூடாக்கிக் கொடுக்க, பித்துப் பித்தாக வாந்தியையும், இரண்டு மூன்று முறை கழிச்சலையும் முண்டாக்கும்.

(1) குடிநீர் வகை :—வெண்சாரடைப் பூண்டு, மூக்கிரட்டைப்பூண்டு சிவப்பு அம்மான் பச்சரிசி, நீர்முள்ளிப்பூ, நெருஞ்சில், சரக்கொன்றை வேர்ப்பட்டை, ஆயில் பட்டை, ஊழலாற்றிப்பட்டை, வேப்பம்பட்டை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்குப் பலம் மூன்று, இருப்புச் சிட்டம், இரும்பு அரப்பொடி, காந்தக்கல் வகைக்குப் பலம் இரண்டு ஆக, இவைகளை நன்றாக இடித்துப் பொடியாக்கி ஒரு புதுப் பானையிலிட்டு, அதில் வெள்ளாட்டுச் சிறுநீர், பசுவின் சிறுநீர், காடி நீர், தென்னங்கள் வகைக்குப்படி இரண்டாகக் கூட்டி, நாலிலொன்றாகச் சுண்டியபின் வைத்துக் கொண்டு, காலையில் ஆழாக்களவு கொடுக்கக் கழியும், அதனை அடுப்பிலேயே, சிறுதணலில் வைத்துக் கொள்ளவும். நோய்க்கான மருந்துக்குத் துணையாக இதனில், அரையாழாக்களவு காலை மாலையாகக் கொடுத்துவர வயிற்றுள் நீர்கூடிவரு நோயாகிய பெருவயிறு நோயையும் தடுக்கும். அங்கு நோயிருப்பினும் அதனையும் போக்கும்.

(2) சரக்கொன்றை வேர்ப்பட்டை, வெள்ளை எருக்கன் வேர்ப் பட்டை, சத்திச்சாரணைவேர், சிவகரந்தைவேர், கடகரோகணி, சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், இலவங்கப்பட்டை, சிறு நாகப்பூ, கொட்டை நீக்கிய கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆகிய இவைகளை வகைக்குக் பலம் ஒன்றாகக் கொண்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக் கொண்டு, வெள்ளாட்டு நீர் ஓர் ஆழாக்கில், மேற்படி பொடியில் ஓர் உள்ளங்கையளவு கூட்டி ஓர் இரவு ஊறவைத்தனை விடியற்காலையில் வடித்துக் கொடுக்க, சிறு நீரிழிவதோடு, எருவைக் கழியச் செய்யும்.

(3) கொடிவேலி வேர்ப்பட்டை, கொல்லன் கோவைக் கிழங்கு, புளிகரணைக்கிழங்கு, சிவகரந்தை வேர், அக்கராகாரம், நீர்முள்ளி, நெரிஞ்சில், வெள்ளரி வித்து, கடுக்காய், தான்றிக்காய் வகைக்குப் பலம் ஒன்றாக இடித்து வைத்துக் கொண்டு, நான்குபலம் எடுத்து ஒருபடி நீரிட்டு, ஆழாக்காகக் காய்த்து வடித்ததில் அரை ஆழாக்கு, காலையும் மாலையுமாக கொடுக்க கழிச்சலை உண்டாக்கி நோயைப் போக்கும்.

## நோய்க்கான செய்மருந்துகள்.

நெய்வகைகள்.

(1) நத்தைச் சதை பலம் இருபது, சித்திரமூலம், நாட்டு அமுக்கரா கிழங்கு, வசம்பு, கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல், தான்றிக்காய்த் தோல், சாதிக்காய், மாசிக்காய், சீந்திற்சர்க்கரை, நிலவேம்பு, நாவல்

**பட்டை,** வேம்பின் பட்டை, ஊழலாற்றிப்பட்டை, சிறுகுரிஞ்சான் வேர், எள்ளுக்காய் தோல், சிவப்பு நாயுருவி, அரிசி, வகைக்குப் பலம் ஒன்று பசு நெய் படி ஒன்று, பால் படி ஒன்று, ஆகிய கடைச் சரக்குகளை ஒன்றிரண்டாக இடித்து நான்குபடி நீரிட்டு, ஒருபடியாகக் காய்த்து வடித்ததில், நத்தைச்சதை, பால், நெய் இவைகளைக் கூட்டிச் சிறுதீயால் எரித்துக் கடுகுபோற்றிரண்டு வரும்போது வடித்தெடுக்கவும். இதனில் ஒரு உச்சிக்கரண்டி அளவு காலை மாலையாகக் கொடுக்கவும்.

(2) எள் செடி, வாழைச் சருகு, ஆண்பனைப்பூ (ஆணங்காய்), புகையிலை, நாயுருவி இவைகளை ஒன்றுகூட்டி எரித்து, சாம்பலாக்கி, அதன் அளவிற்கு நான்குபடி நீரிட்டுக் கலக்கித் தெளிவிறுத்த நீரை வடி கட்டிச் சிறுதீயால் காய்த்து, சுண்டி வரும்போது சூரியனில் வைக்க உப்பு போலுறையும். இதனை மீண்டும் ஒன்றுக்கு நான்கு பங்கு நீரிட்டு முன் கூறியது போலவே காய்த்து உப்பாக்கவும், ஆக ஐந்து முறை இப்படியாகச் செய்த உப்பை எடுத்து வைத்துக் கொள்ளவும், இதனில் ஒன்று முதல் இரண்டு குன்றி அளவு தக்கத் துணை மருந்துகளோடு கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கி இழியச் செய்து நோயைப் போக்கும்.

(3) வரப்பு நண்டு ஒருவீசை எடை எடுத்து உரலிலிட்டு நன்றாக இடித்து நான்குபடி நீரிட்டு, எட்டிலொன்றாகச் சுண்டியபின் வடித்து வைக்கவும். திப்பிலி, வாய்விளங்கம், சிறு நாகப்பூ, முருங்கைப்பட்டை, வசம்பு, கடகரோகணி, புன்னை வேர்ப்பட்டை வகைக்கு ஐந்து பலம் எடுத்து ஒன்றிரண்டாக இடித்து அத்துடன் புங்கன் கொட்டையைத் தோலோடு உலர்த்தி, சட்டியிலிட்டு சாம்பலாகும் வரையில் எரித்தெடுத்த இச்சாம்பல் கால்படியில் நான்குபடி நீரிட்டுக் காய்த்து; கால்படியாகச் சுண்டி வருகையில் வடித்தெடுத்து தெளிவிருத்த நீரையும், நண்டைக் காய்த்தெடுத்த நீரையும் ஒன்றாகக் கூட்டி அதனுடன் பசு நெய் படி ஒன்று, பப்பாளிக்காயினை இடித்தெடுத்து வடிகட்டிய சாறு படி கால், பசுவின் சிறுநீர் படி கால், ஆட்டின் சிறுநீர் படி கால், கூட்டியதில் கடுக்காய்தோல், தான்றிக்காய்தோல், நெல்லி வற்றல், சிற்றரத்தை, கோட்டம், அக்கராகாரம், சாதிக்காய், சாதிபத்திரி, திப்பிலி, மிளகு, சுக்கு வகைக்கு பலமரையாகக் கொண்டு இடித்து அம்மியிலிட்டு, சிறிது நீர் கூட்டி அரைத் தெடுத்ததைக் கூட்டிக் கலந்து சிறுதீயால் எரித்துத் திரண்டு வரும்போது நெய்யை வடித்து வைத்துக் கொண்டு அதில் முதலில் தயாரித்த உப்பில் 2 பலம் கூட்டிக் கலந்து காலையில் மட்டும், ஒரு கரண்டி அளவு கொடுத்துவர, நோய் நீங்கும்.

பற்பச் செந்தூரங்கள்.

செம்பு, பொன், வெள்ளீயம், துத்தநாகம், வெள்ளி, தாளகம், வெள்ளை (கல்) பாடாணம் என்னும் இவைகளின் பற்ப செந்தூரங்களை நோய்க்குத் தகுந்தவாறு கொண்டு, குற்றத்திற்கேற்பத்துணை மருந்துகளோடு கொடுக்கலாம்.

இந்நோய்க்குத் துணையாக வெளுப்பு (பாண்டு) நோய், ஊதல் நோய் (சோகை), மஞ்சள் (காமாலை) நோய் ஆகிய இவைகளும், சுர முதலிய நோய்களும் தொடருவது இயற்கையே யாகையால், முதல் நோய்க்கான மருத்துவஞ்செய்தலோடு துணைநோய்க்குந் தொடர்ந் தாற்போலவே மருத்துவஞ் செய்வது நன்மை பயக்குமென அறிதல் வேண்டும்.

உணவு : இந்நோயில் பசித்தீமிகவும் கெடுமாதலால் கடின உணவுகள் எளிதில் செரியாதாகையின் இருமுறை வடித்த சோறு அல்லது, கஞ்சி வகைகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுக்கலாம். செரிப்புத் தன்மை யிருப்பின் இரண்டு முறை வடித்த சோறு, காய்கறி வகைகளுள் கத்தரிப்பிஞ்சு, பப்பாளிக்காய், முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு போன்றவையும், ஆட்டுக்கறி, காடை, கௌதாரி, உடும்பு, நத்தை, நண்டு இவைகளையும் வழங்கலாம். கீரை வகைகளுள், முள்ளங்கி சிறு கீரை, முள்ளிக்கீரை, பசரைக்கீரை ஆகிய இவைகளைத் துவட்டி யுண்ணலாம்.

இந்நோய், பெரும்பான்மையும், அழல் குற்றப் பெருக்காலுண்டாகி, மற்றக் குற்றங்களையும் தனக்குத் துணை கூட்டிப் பசித்தீயைத் கெடுத்து வருநோயாதலால், உணவுகளில் எளிதில் செரிக்கக்கூடா உணவுகளைத்தடுத்து வருதல் நன்று.

எளிதில் செரிக்கக்கூடிய உணவுகளாகிய கஞ்சி வகைகளையும், வெள்ளாட்டின் கறி, காடை, கௌதாரி இவைகளின் குடிநீர் (சூப்பு) இவைகளையும் அழல் குற்றத்தைத் தாழ்த்தி, சிறு நீரைப் பெருக்குதற்கும் குருதி வன்மை பெறுவதற்குமான சிறுகீரை, பொன்னாங்காணி, கரிசாலை, இவைகளைத் துவட்டி யுண்ணச் செய்யலாம். கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பீர்க்கு, புடலை, வெள்ளைப்பூண்டு, வெங்காயம் பப்பாளிப் பிஞ்சு இவைபோன்றனவுங் கொள்ளலாம்.

## வெளுப்பு நோய்.

வேறு பெயர் : வெண்மை நோய், பாண்டு.

இயல் : இயற்கை நிறமாறி, உடல் வெளுத்து, கண்ணையும் நகக் கண்ணையும் நீக்கிப் பார்க்கின் குருதியின்றி வெளுத்திருக்கும்.

நோய் தோன்றும் வழி : குருதியின் வன்மையைக் குறைக்கக் கூடிய உப்பு, புளிப்புள்ள பொருள்களை மிகுதியாகக் கொள்வதாலும் சுரம், பேதி, வாந்தி, கீல்வாயு முதலிய நோய்களுக்குட்படுதலாலும் குருதியை அளவு கடந்து வெளியாக்கும் பெரும்பாடு, குருதியழல் நோய், குருதிக்கழிச்சல், முளைநோய் (மூலம்), குருதிவாந்தி முதலியவை் ஏற்படுதலாலும், வெட்டுப் பட்டு மிகுதியாகக் குருதி வெளிப்படுதலாலும் இந்நோய் உண்டாம். அன்றியும், நச்சுத்தன்மையுடைய மருந்து களை நாளளவுக்கு மிஞ்சிஉண்பதாலும், உடலை இளைக்கச்செய்யும் வயிற்றுப்புழு நோய், இளைப்பு நோய், நிணக் கழிச்சல் முதலியவை களாலும், குருதிப் பெருக்கைக் கெடுக்கக்கூடிய ஈரல் நோய்களாலும் புகையிலை, வெற்றிலைப் பாக்கு, மண், சாம்பல், திருநீறு, கற்பூரம் முதலியவைகளை அடிக்கடி கொள்வதாலும் இந்நோய் வரும்.

முற்குறிகள் : உணவு முதலிய வேறுபாடுகளால், தீக்குற்ற மிகுந்து, குருதியின் நிறத்தையும் எடையையும் கெடுத்து, உடற்கு வேண்டிய ஊட்டத்தையும் கெடாமல், உடலை வெளுக்கச் செய்யும். பின்பு, சிறிது தொலைவு நடக்கினும் கால் ஓய்ந்து போதல், பெருமூச்சு வாங்கல், உணவில் விரும்பமின்மை, வாய்குமட்டல், தலைசுற்றல், கண் இருளல், அடிக்கடி மயக்கமாதல், மார்பு துடித்தல், உடல் இளைத்தல் ஆகிய குறிகளையும் காட்டும்.

நோய் எண் : குற்றத்தால் வருவன நான்கும், நஞ்சால்வருவன ஒன்றும் கூடி ஐந்தாகும். 1. வளி (வாதப்) பாண்டு, 2. தீ (பித்தப்) பாண்டு, 3. ஐய (கபப்) பாண்டு, 4. முக்குற்றப் (திரிதோஷ) பாண்டு, 5. நஞ்சு (விட)ப் பாண்டு என ஐந்தென வகுத்துள்ளார். இன்னும், மண்ணுண் வெளுப்பு (பாண்டு) நோய் ஒன்றுளது என்றும் சிலர் கூறுவர். அன்றியும், குருதிக் குறைவால், உடற்கட்டுகள் மெலிந்து, உடல் வீங்கி, நிறமாறி மஞ்சள் அல்லது நீலநிறம் பெற்று, மிகுந்த

நீர்வேட்கை, அடிக்கடி மயக்கம் வருதல், மனச்சோர்வடைதல், அறிவு தடுமாறல், ஆண்மை குறைதல் என்னும் குறிகளையும் காட்டும். இந்நோயினை, நீலப்பாண்டு, அலசப்பாண்டு, அலிமுகப் பாண்டு என மூவகையாக வழங்குவாராயினும், இவைகள் வெளுப்பு (பாண்டு) நோயில் காணும் குறிகுணங்களையே பெறுமாதலின் இவற்றைத் தனித்து கூறவேண்டுவதில்லை.

### குறிகுணங்கள்.

**வளி வெளுப்பு நோய் :**

'' கொள்ளவே வாதபாண்டு ரோகம் கேளாய்
குடல்புரட்டி யடிவயிறு தான்வ லிக்குந்
தள்ளவே தாகமொடு பசியு மில்லை
தழலான சரசாப் பாகத் தானும்
நள்ளவே நரம்பெல்லாங் கறுப்பு மாகும்
நடுக்கலொடு கண்சிவப்பு மலபந் தந்தான்
விள்ளவே தலைவலிக்கு மேனி வீங்கும்
வெளுப்பாகும் வாதத்தின் பாண்டு வாமே.''

(யூகிமுனிவர்)

(பொருள்) வளி வெளுப்புநோயில், வயிறு வலித்து, நீர்வேட்கையும் பசியும் அற்று, குருதி நாளங்கள் கறுப்பாகி, பரபரத்துக் காணும். உடல் நடுக்கங்கொள்ளும், கண்சிவக்கும், உடல் வெளுத்து வீங்கும்; வீங்கிய இடங்களில் வலியும் உண்டாம். எரு (மலம்) தீய்ந்து கட்டும். அன்றியும், உணவிற் சுவை யறியாமை, வயிறு பொருமல், குடற் புரட்டல் என்னும் குறிகளும் காணும் எனவுங் கூறுவர்.

**அழல் வெளுப்பு நோய் :**

'' வாமென்ற மேனியெலா மஞ்ச ளித்து
மகாவெளுப்பு உண்டாகி மந்தக் கண்ணாந்
தாமென்ற தாகமொடு மூர்ச்சை யாகுந்
தனிவாயில் மிளகுபோற் றானு றைக்கும்

நேமென்ற நெஞ்சுமுள் தானு முண்டாய்
நெருக்கியே மூச்சுமுட் டதுவே யாகுங்
கோமென்ற கிறுகிறுத்து வாய்கைப் பாகுங்
கிளர்பித்த பாண்டுவெனக் கூற லாமே.''

இந்நோயில், உடலெல்லாம் மஞ்சள் நிறமடைந்து நா, கை, கால்கள் வெளுத்து, கண் பார்வை மங்கும். மிகுந்த நீர்வேட்கையோடு மயக்கம், வாய் காரச்சுவையோடிருத்தல்; சிலபோது கைப்புச் சுவையும் காணல்; நெஞ்சை இறுக்கிப் பிடித்தது போல் மூச்சு முட்டுவதோடு தலை கிறுகிறுக்கும்; இதைப் பித்தபாண்டு எனக் கூறுவர்.

மேலும், குளிர்ச்சிதரும் பொருள்களில் விருப்பு, புளியேப்பம், வாய்நாற்றம், உடல் வெளுத்து மஞ்சளித்தல், வாய் புண்ணாதல், அடிக்கடி மஞ்சள் நிறம் போலக் கழிதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

ஐய வெளுப்பு நோய் :

'' கூறியதோர் நரம்புதோல் மிகவெ ளுப்பு
கிளர்நாவு உப்புறைக்கு மயிர்க்கூச் சாகும்
வாறியதோர் வாந்தியாங் குரலுங் கம்மும்
மகத்தான தும்மலுடன் கோழை யாகும்
ஈறியதோ ரிருமலொடு மயக்க முண்டா
மிடுப்பசதி யிந்திரிய நட்ட மாகுஞ்
சீறியதோர் சோபமொடு தாப மாகுஞ்
சிலேட்டுமத்தின் பாண்டென்னச் செப்ப லாமே.''

(பொருள்) இந்நோயில், மேற்கூறியபடி தோல் மிகவெளுத்து நரம்புகள் புடைத்து, நா உப்புக் கரித்தல், மயிர் சிலிர்த்தல், வாந்தியாதல், குரல் கம்மல், அடிக்கடி தும்மல், இருமிக் கோழையைக் கக்கல், மயக்கமடைதல், இடுப்பு நோதல், ஆண்மை குறைதல், அடிக்கடி சீறி சினங் கொள்ளல், சோர்வும் தளர்வும் உண்டாதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

முக்குற்றவெளுப்பு நோய் :

'' செப்பவே அருசியோடு சோப தாபம்
செயலான சுவாசமொடு இளைப்பு மாகும்
வெப்பவே மோகனத்தில் நீர்தான் வீழும்
மிடுக்கான பெலவீன மார்பி டித்தல்

துப்பவே சூட்டோடு தியக்க மாகுந்
தும்மலா யுடம்பெங்கு மூதிக் காணுந்
திப்பவே தேகமெங்கு மசதி யாகுந்
திரிதோடப் பாண்டெனச் செப்பு நூலே.''

(பொருள்) இந்நோய், இரைப்பு, மேல்மூச்சு வருதல், இளைப் புண்டாதல், உடல் வன்மை குறைந்து மார்பு துடித்தல், உடல் அழல் கொண்டு சிறுநீர் அடிக்கடி இழிதல், வெப்பமும் தியக்கமும் உண் டாதல, தும்மல், அடிக்கடி உடல் முழுமையும் ஊதல் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு வரும்.

நஞ்சு வெளுப்பு நோய் :

'' நூலாக நலத்தோடே யுடல் வெளுக்கும்
நோய்நரம்பு சூடாகுந் தாக மாகும்
ஆலாக அருசியொடு சர்த்தி விக்கல்
அதட்டியே இருமலுட னதிசு வாசம்
வாலாக மேனியெங்கும் மிகவே ஊதல்
விடப்பாண்டு அசாத்யமென்றே விளம்ப லாமே.''

(பொருள்) உடற்கொவ்வாப் பொருள்களை யுண்டதால் பிறந்த நஞ்சின் அளவாக உடல் வெளுக்கும். இந்நோயின் மிகுந்த நீர் வேட்கை, சுவையின்மை, வாந்தி, விக்கல், இருமல், பெருமூச்செறிதல், உடல் முழுமையும் வீங்கல் என்னுங் குறிகளோடு, நரம்பும்புடைத்து உடல் சூடாகத்தோன்றும்.

மண்ணுண் வெளுப்பு நோய்: இஃது, சிறு குழந்தைகளும் சிறுவயதினரும், கருவுற்றவரும், மண், சாம்பல், செங்கல், திருநீறு, கருப்பூரம் இவைகளின் மீது தனித்த இச்சை கொண்டு, அளவு கடந்து உண்பதால் காணும் நோயாகும்.

இந்நோயில், கொண்ட பொருள்களுக்கு ஏற்ப, வயிறு ஊதல், செரியாமை, வாந்தி, கழிச்சல், சுரம், வயிற்றுப்புழு முதலிய நோய்கள் கண்டு, உடல் மெலிந்து, குருதிவற்றி, வெளுத்து வீங்கி மார்பு துடித்தல முதலிய குறிகளைக் காட்டும்.

திரும் திராதவை : இந்நோயில், இடைவிடாத வாந்தி அல்லது கழிச்சல் உண்டாயினும், உடல் மிகுதியாக வீங்கல் (சோகம்), நீர் வேட்கை, விக்கல், இருமல் என்னும் குறிகள் ஏற்படினும் இஃது எளிதில், தீராததாகும் ; அன்றியும், நஞ்சால் பிறந்த வெளுப்பு நோயும் எளிதில் தீராதாம்.

பொதுக் குறி குணங்கள்: இந்நோயில், உடல் வன்மை நாளுக்கு நாள் குறைந்து நடக்க இயலாமை, தலைநோதல், மார்பு துடித்தல், கண் அடிக்கடி இருளல், தலைசுற்றல், மயக்கமுண்டாதல், மூச்சுத் தடுமாறல், பசித்தீக் கெடல், உணவுவேண்டாமை, உண்ட சிறு உணவும் வாந்தியாதல் ஆகிய குறிகள் தோன்றும். இன்னும், மிகவும் வெளுத்துத் தோல் சுருங்கல், உடல் மெலிந்து பளபளத்து வெளுப்பாதல், நகக்கண்கள் தடித்து வெளுத்தல், நாவெடித்துப் புண்ணாதல் அல்லது நாவின் மேல் தோலைச் சீவியெடுத்தது போன்று சிவந்து காணுதல் அல்லது நாக்குப் பட்டுத்துணிபோல் வழுவழுத்து வெளுத்துக் காணல், தொண்டை கட்டல் என்னுங் குறிகளும் காணும்.

இந்நோய், பெண்களுக்குண்டாயின், சூதகத்தில் வெளியாகும் குருதி, தன்னிறம், எடை, அளவு முதலியன குறைந்து வெளியாகும்; சிலர்க்கு அளவு கடந்தும் வெளியாகும். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு முண்டாகும் வயிற்றுப்புழு நோய், குருதியழல் நோய் ஆகியவற்றிற்கும் இந்நோய் துணைநோயாக அமையும். அழல் உடலோர்க்கு இந்நோய் பிறக்குமாயின், முதலில் பசித்தீயைக் கெடுத்து, உண்ட உணவு செரியாமை, உடல் எரிச்சல், சுரம் உள்ளது போன்று வெப்புத் தோன்றல், நாவெளுத்துச் சிவத்தல், அல்லது பட்டுத்துணி போல் வழுவழுத்தல், உணவை மெல்லவும், விழுங்கவும் முடியாமை, சிறிது பித்தநீர் கலந்து அடிக்கடி வாந்தியாதல், வாய்க்கைப்பு, வயிற்று நோய், வயிறு கடுத்து நுரைநுரையாகக் கழிதல் என்னுங் குறிகள் உண்டாகும், இவை நாளுக்குநாள் மிகுந்துகொண்டே வருமாயின், உடலின் குருதியின் அளவு, எடை, நிறம் யாவும் குறைந்து, உடல் மஞ்சள் பூத்தது போன்றாகி மஞ்சள் (காமாலை) நோயினைப்போலக் காணப்படும். நோய் பெருகிய நிலையில், ஆயாசம், இளைப்பு, பெருமூச்சு, பெருங் கழிச்சல், உணவை வெறுத்தல், வன்மை இழத்தல், உடல் ஊதல் என்னுங் கொடியதான குறிகுணங்களும் தொடரும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : முன்பு நோய் வருவழியில் கூறிய வாறு, உடல் வன்மை குறைந்து, பசித்தீ கேடடைந்து, உண்ட உணவு சரியாகச் செரியாமற் போகும். உணவின் கேட்டால் இரச குருதிகளுக்கு ஊட்டம் பெறா. அதனால், அவைகளுடன் தோலுக்கு நிறத்தைக் கொடுக்கும் அழல் (இரஞ்சித பித்தமும்) மெலிந்துநிறத்திலும் எடையிலும் குறைந்து, தீக்குற்றத்தைப் பெருக்கும். அதனளவாக மற்றைய குற்றங் களும் தன்னிலையில் திரிந்து, பரவுகாலின் வன்மையைக் கெடுத்து நோயை உண்டாக்கும். நோயின் வன்மை பெருகப் பெருக, ஐயமும் பெருகி வீக்கம் முதலியவைகளையும் துணை கொள்ளச் செய்யும்.

நாடி :

" சேத்தும நாடி யிளகினால் பாண்டாகும். "

கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி கலந்திடுகில்
.. .. .. .. .. .. ..
.. .. .. .. .. பாண்டு
.. .. .. .. .. .. ..

சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில் .. ...
.. .. .. .. .. .. ..
.. .. .. .. .. ..
.. விடவீக்கம் .. .. .. ..

கானமுள்ள சேத்துமந்தானிளகில் .. .. ..
... .. .. .. .. ..
.. .. .. .. பாண்டுரோகம்
.. .. .. .. .. ..

" இடமான சேத்துமத்திற் பித்தநாடி
எழுந்தணுகில் பாண்டாகும். "

" உண்டாயோ சேத்துமத்தில் வாதநாடி
கலந்திடுமேல் பாண்டு பிறக்குந்தானே. "

"வாதத்தில் சீதஞ்சேர்ந்தால் பாண்டுண்டாமே.'

மருத்துவம் : நோயில் தன்னிலைதிரிந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்தக் கழிச்சல் மருந்துகளை வழங்குக. பின்பு பசித்தீயைத் தூண்டும் மருந்துகளோடு, குருதியின் வன்மையைப் பெருக்கக்கூடிய மருந்துகளையும் கொடுத்தல்வேண்டும்.

கழிச்சலுக்கு :

1. கொட்டை திராட்சை, பேரீந்து (கச்சூர்), பன்னீர்ப்பூ, சிவதை இவைகளை ஓரெடையாகக்கொண்டு குடிநீர் செய்து கொடுக்க, இரண்டு மூன்று முறை கழியச் செய்யும்.

2. அகத்திக்கீரையை வேகவைத்து வடித்த நீரில், சிறிது பனங் கற்கண்டு கூட்டி அரை ஆழாக்கு முதல் ஓர் ஆழாக்கு வரை கொடுக்க, கழிச்சலுடன் வயிற்றுப் புழுவும் வீழும்.

3. நிலவிளா, பற்பாடகம், சீந்தில், நிலாவாரை, சிவதை இவற்றை ஓரளவில் கொண்டு, முறைப்படி குடிநீராக்கி, அதில் சிறிது பேதிஉப்புக் கூட்டிக் கொடுக்க, பித்தநீர் அகலும், வயிறும் கழியும்.

இவ்வாறாக நோய்க்குற்றத்திற்குத் தக்கவாறு கழிச்சல் குடிநீர்களைக் கொடுத்த பின்னர், பசித்தீயைத் தூண்டுதற்கான பொடி (சூரணம்) வகைகளைத் துணையாகக்கொண்டு, இரும்பால் (அயத்தால்) ஆக்கிய மருந்து வகைகளைக் கொண்டு மருத்துவம் செய்தல் வேண்டும்.

பொடிவகைகளுள், பசித்தீயைத் தூண்டவும், இந்நோயில் சிலர்க்கு அடிக்கடியுண்டாகும் கழிச்சலைப் போக்கவும், தாளிசபத்திரிச் சூரணம், ஏலாதிச் சூரணம், சுண்டைவற்றல் சூரணம் போன்றவைகளை, முதல் மருந்தாகிய அயபற்பச் செந்தூரங்களுக்குத் துணையாகக் கொள்ளலாம்.

## அயசம்பீரக் கற்பம்

செய்மருந்துகள் :

1. தூய்மைசெய்த இரும்புப்பொடி பலம் பத்து, மிளகுப்பொடி பலம் பத்து, பூண்டுத்திரி பலம் ஐந்து இவற்றைச்சேர்த்து நன்றாக இடித்து எடுத்துக் கொள்க. நாற்பது எலுமிச்சம் பழத்தை ஊறுகாய்க்கு அறுப்பது போல நான்காக அறுத்து, அதன் வாயில் மேற்படி இடித்தபொடியை

வைத்து, ஒரு மண் பானையிலிட்டு, அதில் ஒருபடி எண்ணெய்விட்டு, ஓடுமூடி, சீலை மண்செய்து, சேறு உள்ள இடத்தில் நாற்பது நாட்கள் புதைத்துவைத்துப் பின் எடுத்து, எலுமிச்சங்காயில் ஒரு பிளவைக்கொடுக் கவும். கற்கங்களில் அயபிருங்கராசகற்கம் போன்றவற்றையும் கொடுக்கலாம்.

பற்பச் செந்தூரங்கள் :

பற்பங்களில் : அயபற்பம், காந்தபற்பம், வெள்ளிபற்பம், அயநாக பற்பம் முதலியனவும், செந்தூரங்களில், அயம், காந்தம், எஃகு, மண்டூ ரம், ஆறுமுகச்செந்தூரம், அயவீரச்செந் தூரம், வெள்ளிச்செந்தூரம், தங்கம் முதலியனவும் பயன்படும்.

உணவு : நோய் தொடக்கத்தில், பசியைத் தூண்டக்கூடியதும், உடலின் குருதியைப் பெருக்கக்கூடியதுமான உணவுப் பொருள்களைப் பெரிதும் கையாளல் வேண்டும். அன்றியும், வயிற்றுப் புழுக்கள் வெளி யாயின், அகத்திகீரையை அடிக்கடி சேர்த்து வருவது நன்று. உணவும் எளிதில் செரிக்கக்கூடியதாகவே இருத்தல் வேண்டும்.

அவைகள் : கீரைவகைகளில், கரிசாலை, பொன்னாங்காணி, அறு கீரை, சிறுகீரை, மணத்தக்காளி, தாளிக்கீரை, இவைகள் குருதியைப் பெருக்கக் கூடியனவாம்.

காய்கறிகளில், கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, வாழைக்கச்சல் அவரைப்பிஞ்சு முதலியன எளிதில் செரிக்கக்கூடியன.

அன்னியப் பொருள்களில், வெள்ளையாட்டுக்கறி, அதன் ஈரல் எலும்பு, போட்டி (தீனிப்பை) முதலியனவும், காடை, கௌதாரி, உள் ளான், உடும்பு முதலியனவும் உடற்கு ஊட்டத்தைத் தந்து குருதியின் பெருக்கை உண்டாக்கும்.

நோய் வன்மை மிகுந்திருப்பின், பசித்தீ குறைந்து, உணவில் வெறுப்பு வாந்தி இவைகள் உண்டாகுமாகையால், எளிதில் செரிக்கக்கூடிய உணவு களாகிய கஞ்சிவகைகளையும், ஊனின் இரசத்தையும் (Soup) கொடுத் தல் வேண்டும். ஊன் வகைகளில், ஆட்டு ஈரலைச் சிறுசிறு துண்டு களாகத் துண்டித்து, அதன் அளவிற்கேற்ப நீர்கூட்டி ஒரு கொதிவந்தபின் எடுத்து, நன்றாகப் பிசைந்து, அந்நீரை வடித்து, வேண்டிய அளவு பழரசங்களுள் கொடிமுந்திரி, சாத்துக்கொடி, ஆப்பிள் இவைகளின் இரசத் தில் ஏதேனும் ஒன்றைக் கூட்டிக்கொடுக்க மிகவும் நல்லது.

## ஊதல் நோய்

வேறு பெயர்கள் : தொம்மை நோய், சோகை நோய், சோபை நோய் என வழங்குவர்.

இயல் : இந்நோயில், உடல் குருதி கெட்டு, உடல் வெளுத்து, கை கால், முகம், வயிறு முதலியன இயற்கைக்கு மாறாக ஊதிக் கொண்டே வருதலால், இஃது " ஊதல் " நோயெனவும், இந்நோயில் சோகம் உண்டாவதால், " சோகை " எனவும், வீக்கம் (சோபம்) வருவதால் சோபை எனவும் பல பெயர்களால் இஃது வழங்கலாயிற்று. அடிபட்டு வீங்குவதையும், கட்டி முதலியவற்றால் வீங்குவதையும் சில நூலோர் சோபையெனக் கூறுவர்.

நோய் வரு வழி : முற்கூறிய வெளுப்பு (பாண்டு) நோயின் தொடர் பாலும் ஊதல் நோய் பிறப்பதுண்டு. அன்றியும், நச்சுப்பொருள்களை உட்கொள்வதாலும், உணவுகளின் வேறுபாட்டாலும், குளிர்க் காற்றில் தாக்குண்டதாலும் குருதி கேடடைந்து, குற்றங்களைத் தூண்டி, பரவு கால் தன்றொழிலிற் பிறழ்ந்து இந்நோய் உண்டாகும். அன்றியும் சன்னி நோயாலும் சிறப்பாகச் சித்தப்பிரமை சன்னியாலும், பாம்பு கடியாலும், சில்விடக் கடியாலுண்டாம் ஊறலாலும், சிறையிருத்தலாலும், மலை வாசத்தாலும், நீர் நிலைகளின் தரைகளில் வசித்தலாலும், சாம்பல், மண், தவிடு போன்ற பொருள்களை உண்பதாலும் இந்நோய் பிறக்கும், இதனைப் பின்வரும் பாவால் அறிக : —

" பாங்கான சன்னியா தச்சு ரங்கள்
பகர்சித்தப் பிரமைசன்னி பரவ லாலும்
தேங்கான பன்னகந் தீண்ட லாலும்
சில்விஷங்கள் தேகத்தி லூற லாலும்
ஆங்கான சிறையிருத்த லடிபடுத லாலும்
அநேக வழி நடக்கைமலை யிருக்கை யாலுந்
தாங்கான சலக்கரைகள் தனலி லிருத்தல்
சாம்பல்மண் மாதவிடால் சோபை யாமே. "

முற் குறிகள் : உடல் வெளுத்து, வன்மையற்று, சிறிதளவு நடக் கினும், கணுக்காலில் வீக்கமுண்டாதல், ஆயாசம், இளைப்பு, தலை சுற்றல் மயக்கம் என்னுங் குறிகளைக் காட்டி, பின்பு நாளுக்கு நாள் வீக்கம் மிகுந்து கால், முகம், வயிறு, இவைகளேனும் அல்லது காற் முதல் தலைவரையேனும் வீங்கும்.

எண் : இந்நோயைக் குற்ற அளவாக வளி, அழல், ஐய, முக்குற்ற ஊதல் நோய் என நான்கு ஊறல் நோய்களாக ஒரு சாராரும் ; குற்ற அளவாக மூன்றும், இரு குற்றக் கலப்பால் மூன்றும் முக்குற்றத்தால் ஒன்றும், நஞ்சால் ஒன்றும் அடிபட்டு வீங்குவதால் ஒன்றுங்கூடி ஒன்பதென மற்றொரு சாராரும் கூறுவர், இதனைக் கீழ்க்கூறும் பாக்களால் அறிக ; இவற்றுள் முதற்கூறிய நான்கு வகையை ஈண்டுரைப்பம். மற்றவற்றுள் நஞ்சால் வருநோயை, நஞ்சுநூலிலும், அடிபடுவதால் வருவதை அறுவை மருத்துவத்திலும் கூறப்படும்

"தானான சோபைநால் விதம தாகுஞ்
சாற்றிடவே வாதத்தின் சோபை யாகுஞ்
தேனான பித்தத்தின் சோபை யாகுஞ்
சிலேட்மத்தின் சோபைதிரி தோஷ சோபை
நான்னான நாலுதவி சோபை தன்னின்
நாட்டமெலாஞ் சொல்லிடநீ நயந்து கேளாய்
பானுன் உமைதன்க்குச் சிவன்றான் சொன்ன
பாங்கதனை பகருவன்யான் பரிந்து கேளே."

வளி ஊதல் நோய்

சோபைதான் வருமுன்னே உடல்தான் வற்றும்
சகநரம்பு தான்வெளுக்கும் மசீர்ண மாகுந்
தூபைதான் பெலசயமாய் நடுக்க லாகுஞ்
சுரமொடு மிகவெளுப்பு மிளைப்பு மாகும்
மாபைதான் மயிர்முளைகள் சிவந்துபோகு
மகத்தான நித்திரை மந்த மாகுஞ்
சேர்பைதான் அங்குலீலே சடமெங்குந்தான்
கொடுவலியாம் வாதத்தின் சோபை யாமே.

எனக் கூறியதில், இந் நோய் வருமுன்னே உடல் வற்றி, நரம்புகள் வெளுத்து, செரியாமை, உடல் வன்மை குறைதல், உடல் வெளுத்தல், சிறிது நடக்கினும் இளைப்புண்டாதால், மயிர் முனைகள் சிவந்து போதல், தூக்கம் கெடல் என்னுங் குறிகளைக் காட்டி நாளுக்கு நாள் உடல் ஊதிக்கொண்டே வரும் எனஅறிக.

**அழல் ஊதல் நோய் :**

“ வலியாக மயிர்மஞ்ச ளித்தி ருக்கு
மகத்தான சாத்தியுமே மிகவி ரும்பும்
தலியாகத் தாபமொடு மிளைப்புக் காணுஞ்
சரீரந்தான் மிகச்சிவப்பாந் தலைவ லிக்கு
புலியாக விருந்ததுபோய் பெலவீ னத்தால்
புகலரிய மயக்கமொடு வியர்வை யாகும்
நலியாகக் கண்புருவ மூக்குத் தண்டு
நலங்குமே பித்தத்தின் சோபை தானே. ”

(பொருள்) : இந்நோயில், உடல் மட்டுமேயன்றி, கண், புருவம், மூக்குத் தண்டு இவைகளும், மயிரும் மஞ்சள் நிறமாகும். சிலபோது உடல் சிவக்கும், வாந்தி, நீர்வேட்கை, இளைப்பு, சோர்வு, தலைவலி என்னுங் குறிகளையும் காட்டும். பின்பு நாளுக்கு நாள் உடலின் வன்மை குறைந்து சத்தற்று நடக்க முடியாமற் போகும் ; அத்துடன், மயக்கம், அடிக்கடி வியர்த்தல், உடல் குளிர்தல் என்னுங் குறிகளையும் காட்டும்.

**ஐய ஊதல் நோய் :**

“ நலங்குமே வடிவெல்லாந் தினவுண் டாகு
நல்லமயிர்க் கால்வெளுக்கு முடல்வெ ளுக்குந்
திலங்குமே தேகமெங்குஞ் சுறசு றப்புத்
திடுக்கிடுமே மிகக்குளிரும் நித்ரை யில்லை
விலங்குமே விழியனலாங் குரல்நெறிவ தாகும்
விஷூசியாய்ப் பேதிதலை கிறுகி றுப்பு
சிலங்குமே ரத்தங்கள் சுரந்து வீங்குஞ்
சிலேட்மத்தின் சோபையென்றே செப்ப லாமே. ”

(பொருள்) : உடலின் தோல் தினவெடுத்து மயிர்க் கால்கள் தோறும் வெளுத்துப் பின்பு உடலும் வெளுத்தல். அடிக்கடி குளிர் சுரம் வருதல், தூக்க மின்மை, கண்ணெரிச்சல், குரற்கம்மல், ஊழி நோயைப்போல் இடைவிடாது பேதியாதல், தலை சுற்றல், உடல் முழுமையும் இரத்தம் சுரந்து வீங்குதல், மனம் அடிக்கடி திடுக்கிடல் முதலிய குறிகள் உண்டாகி நாளுக்கு நாள் உடல் வீங்கிக் கொண்டே வரும்.

முக்குற்ற ஊதல் நோய் :

“ செப்பவே மெல்லியர்மேல் மிகுந்த கோபஞ்
சடம்வீக்க முபாதியுமாய்ச் சுரமுண்டாகும்
அப்பவே அதிசாரம் வயிற்றுக் கடுப்பு
ஆசனத்தில் மிகக்கடுப்பு அசனஞ் செல்லா
நப்பவே கால்கையுந் துவண்டு காணும்
நடக்கவே பெருமூச்சாய்க் கிறுகி றுக்குந்
திப்பவே உமிழ் நீர்தான் மிகவே ஊறும்
திரிதோஷ சோபைசாத் தியமாஞ் சொல்லே. ”

(பொருள்) : இந்நோய் அடிக்கடி பெண்கள் மேல் சினங்கொள்ளல், உடல் வீங்குதல், சுரம் காய்தல், பலமுறை வயிறு கழிதல், வயிற்றுக் கடுப்பு, கீழ்வாய்க் கடுப்பு, உணவு வேண்டாமை முதலியவற்றையும், காலும் கையும், துவளல் நடந்தால் பெருமூச்செறிதல், தலை சுழலல், வாயில் நீர் சுரத்தல் ஆகிய குறிகுணங்களைப் பெறும்.

தீரும் தீராதவை : இவற்றுள் முக்குற்ற நோய் எளிதில் தீராததும் அன்றியும், பொதுவாக இந்நோயில் வீக்கம் வடிந்து மீண்டும் மீண்டும் வீங்கினும் தீராது. உடல் மிக வீங்கித் தோல் வெடித்துத் தானாகவே அதிலிருந்து நீர் கசியுமாயினும் தீராதாம். அல்லது பெரிதும் வீங்கியுள்ள உடல், திடீரென நீர்வற்றிச் சுருங்கினும், பெருமூச்சு விடல், மூக்கந் தண்டு சில்லிடல், மிகுந்த வாந்தி,விக்கல், கழிச்சல், வயிறு பொருமல், தொண்டையிற் கோழை கட்டல், முதுகில் வீங்கல் என்னுங் குறிகள் தோன்றுமாயினும் நீங்காவாம்.

ஈதன்றி, வீக்கம் காலில் துவங்கி முகம் வரை பரவுமாயின் அதனை ஏறு வீக்கம் என்றும், முகத்திலிருந்து கால்வரை பரவுமாயின்,அதனை இறங்கு வீக்கமென்றும் கூறுவர். இதனுள் முதல் வகையது தீராது எனவுங் கூறுவாருமுளர்.

நோயின் பொதுக்குறி குணங்கள் :

“ சோகையி னிலக்கணங்கேள்
சோர்வு கைகால் கட்குண்டாம்
சோறு வேண்டாமை தூக்கம்
சோளி போலண்டம் வீங்கும்

சோதினி யெனக்கா தாகும்
சோங்கடர் காக மாங்கண்
சோம்பலுக் குறையுளா மெய்
சோணித மெங்கே போமோ
சோத்திரங் கவியை யொப்பாஞ்
சோலிசெய் யிந்த நோய்க்கு
சோகை யென்றோரு பேராம். ''

(தேரன் கரிசல்).

(பொருள்) : எனத் தேரன் கூறுவதுபோல, இந்நோயில், சோற்றில் வெறுப்புண்டாய் உடல் வன்மை கெட்டுக் கைகால் சோர்வடையும். உடல் முழுமையும் வீங்குவதுடன் விரை ஒரு பெரிய பையைப்போல் வீங்கும். அத்துடன் காது குரங்கின் காதைப்போல மெலிந்து காது கேளாது. கண் காகத்தின் கண்ணைப்போலச் சாய்ந்து காணும். உடலோ, சோம்பல் நிறைந்ததாய், இருந்த இடத்தைவிட்டு அசையாது, படுக்கையில் கிடத்தும். உடலிலுள்ள குருதி வெளியே எங்கேயோ போய்விட்டது போல் உடல் மிகவும் வெளுத்துக் காணும். ஈதன்றிப் பெருமூச்சு' ஆயாசம், இளைப்பு, இருமல், மயக்கம், கண்ணிருளல் என்னுங் குறிகளையும் காட்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் :

'' கபமான, நீரதுவின்றிச் சோகைவராது'' எனத் தேரையன் கூறியது போல், இந்நோய் குருதியின் வன்மை குறைந்து, உடலில் ஐயத்தை விளைவித்து, நீரைப் பெருக்கி உடல் முழுமையும் ஊதச் செய்யும். மிகுந்த குற்றத்தின் அளவாகக் கீழ் நோக்குக்கால் தன் வன்மையிழந்து சிறு நீரையும், எருவையும் கழிக்காதவாறு செய்து இவ் விரண்டையுங்கட்டும். பரவுகால் (வியானன்) குருதியை உடலில் சரியாகப் பரவச்செய்யாவண்ணம் வன்மையை இழக்கச் செய்யும்.

நாடி நடை :

'' உறுதியுள்ன பித்தந்தான் தோன்றிடில்சோகை ''
'' பண்பான பித்தத்தில் சேத்துமம்கூடி பரிசித்தால் சோகை ''
'' தானமுள்ள சேத்துமந்தான் இளகில் சோகை. ''
'' கண்டாயே சிலேற்பனத்தில் வாதநாடி கலந்திடுதல். ''

.... .... ....
...., சோகை ....''

என நாடி நூல் கூறியதில்; அழல் (பித்த) நாடியானது துடித்து நடக்கினும், அழல் ஐய நாடிகள் இரண்டும் ஒன்று கூடி நடக்கினும், ஐய நாடி மெலிந்து நடக்கினும் ஐயநாடியும் வளி நாடியும் இணைந்து நடக்கின் ஊதல் நோயைக் குறிக்கும்.

நீர்—சிறுநீர் சுருங்கி சிவந்திழியும்.

எரு—கட்டுப்படும்; சிலவேளை மிகுதியாகக் கழியும்.

மருத்துவம் ; இந் நோயில் பிறந்த குற்றத்தைத் தணித்து, உடலிலூறிய நீரை வெளிப்படுத்த வேண்டும்; குருதியின் வன்மையைப் பெருக்கி, உடற்கு ஊட்டத்தைத் தரக் கூடியதும், சிறு நீரைக் கழிக்கக் கூடியதும், எருக்கட்டை ஒழிக்கக் கூடியதுமான குடிநீர். பற்பம், செந்தூரம் இவைகளை வழங்கல் வேண்டும்.

குடிநீர் : நீர்முள்ளிக் குடிநீர், அடைக்குடிநீர் முதலியவற்றைக் கொடுக்கலாம். இவைகளின் செய்முறையைச் சித் வைத்தியத்திரட்டில் காண்க. மற்றவைகளை இதன் கீழ்க்காண்க.

பொடிவகையில்:

(1) அல்லிக்கிழங்குப் பொடி :

''சோகை நோய்க் கவிதழ்ஞ் சொல்வாம்
சோமனட் பரத்தங் காமன்
சோற்றினுக் கிகல் முப்பல்லை
சோபியுப் பதிங்கங் கோட்டஞ்
சோளவேர் பனைவேர் வில்வேர்
சோண நாயுருவி வேரும்
சோகவேர் கணிவேர் வேல்வேர்
சோர்விலாச் சரக்கி ரட்டிச்
சோட்டில்வேர் வகைகள் கூட்டிச்
சோரவார் துளசிச்சாறு
சோடத் தினமிவ் வாறே
சோதியா தபத்து ளர்த்திச்
சோடை போலிடித்துத் தூள்செய்
சோனையில் வளர் கரும்பு
சோபன மாகத் தந்த
சேர்டிலர் விசையமத்தஞ் சேர்த்துச்

சோதி வந்திடுமுன் காலைச்
சோதி பொன்றிடு முன்மாலைச்
சோகியா ரணவுதின்று
சோர்வில் பத்திய மேற்கொள்
சோகையு மகன்றோடும்மே.''

(பொருள்) செவ்வல்லிக் கிழங்கு, குங்குமப் பூ, திப்பிலி, சீரகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வாளம், அதிமதுரம், கோட்டம் இவைகளை வகைக்கு ஓர் அளவாகவும், சோளவேர் பனைவேர், வில்வவேர், சிவப்பு நாயுருவிவேர், அசோகுவேர், கரிசாலைவேர், வேல்வேர், இவைகளை மேற்கூறிய சரக்குகளுக்கு இரண்டு பங்காகவும் கூட்டி, துளசிச் சாற்றைச் சோரவிட்டு, பதி னான்கு நாட்கள்வரை புதிதுபுதிதாக அச்சாற்றை விட்டு நன்றாக அரைத்து உலர்த்தி, பின் இடித்துப் பொடியாக்குக. அதை ஒரு பலகரை அளவு சூரியன் தோன்றும் முன்பும். சூரியன் மறையு முன்பும் வெல்லத்தில் வைத்துக்கொடுக்க, கழியச் செய்து, சிறுநீரை வடிக்கும். இதனால், சோகைநோய் போம்.

(2) கடுக்காய்ப் பொடி : பெருங் கடுக்காயின் (சூரத்துக் கடுக் காய்) கொட்டை நீக்கி இருபது பலம் கொண்டு ஒன்றிரண்டாகப் பொடித்து வாயகன்ற சட்டியிலிட்டுப் பசுநீர், வெள்ளாட்டு நீர், யானை நீர், ஒட்டை நீர் வகைக்குப்படி நான்காக, இதில் ஒன்றை அச்சட்டியி லிட்டு நன்றாக உலர்ந்த பின் அவ்வாறே மற்ற மூன்றையும் ஒன்றன்பின் ஒன்றாக விட்டுக் காய்ந்து உலர்ந்தபின் நுண்ணிய பொடியாக்கி வைத்து அதனில் ஒன்று முதல் இரண்டு விராகனெடையாக நீரில் கொடுக்க, கழிச்சலை யுண்டாக்குவதுடன் சிறு நீரையும் பெருக்கும்.

(3) வெள்ளை நீர்முள்ளிப் பூ, செவ்வல்லிக்கிழங்கு, நெரிஞ்சிமுள், சிவதை வேர், கடுக்காய், நெல்லி, தான்றி இவைகளை ஓர் அளவாகக் கொண்டு நன்றாக உலர்த்திப் பொடித்த பொடியில் தென்னைவட்டுக் கூட்டிக் கொடுக்க நீரிழியும்.

(4) பழைய செங்கற்சிட்டம், இரும்புச் சிட்டம் வகைக்குப் பலம் ஐந்து கொண்டு நுண்ணிய பொடியாக்கி மண் சட்டியிலிட்டு, அதில், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்குப் பலம் பத்து கொண்டு முறைப்படி குடி நீராக்கி வடித்து, சட்டியில் விட்டு சூரியனில் உலர்த்தவும் ; இவ்வாறே ஒன்றன்பின் ஒன்றாக, பசுநீர், வாழைக்

கிழங்குச் சாறு, சிறுகீரைச் சாறு, கரிசாலைச் சாறு விட்டு உலர்த்திப் பொடித்து ஒரு விராகனெடையளவு கொடுக்க வயிறு கழியும்; நீர் இறங்கும்.

பின்பு குருதியைப் பெருக்கவும் உடலின் நீரைக் கழிக்கவுமான இரும்பால் செய்த மருந்துகளோடு, முன்பு கூறிய குடிநீருடன் கொடுத்தல் நன்று.

(1) இரும்புப் பழக்கற்பம் (அயச்சம்பீர கற்பம்) இதனில் ஒரு துண்டாகிலும், அரைத்து வைத்திருப்பின் ஒரு கழற்சியளவாகிலும் கொடுக்கலாம்.

(2) இரும்புக்கரிசாலை கற்பம் (அயப்பிருங்கராச கற்பம்) சுண்டைக்காய் முதல் கழற்சி அளவு கொடுக்கவும்.

(3) இரும்பு சிட்டகற்பம் (சித்தமண்டூரம்) இதனில் பத்து முதல் இருபது குன்றி அளவு கொடுக்கலாம்.

பற்பச் செந்தூரங்களில்: இரும்பு அடலை, இரும்புச்சத்து (அயநாக) அடலை, இவைகளின் செந்தூரம், இரும்பு வீரச் (அயவீர) செந்தூரம், காந்தச் செந்தூரம் இவை போன்றதைக் குருதிப் பெருக்கிற்காகவும், வெடியுப்பு, நவாச்சாரம், நண்டுக்கல், சீனாக்காரம் இவைகளின், அடலை, செந்தூரம், சுண்ணம் என்னும் இவைகளைக்கொண்டு சிறுநீரைப் பெருக்குவதற்காகவும் வழங்கல் வேண்டும். வேண்டுமானால் நோய்க்குத் தக்க குடிநீர் வகைகளைத் துணை கொண்டும் வழங்கலாம்.

உணவு: இந்நோய்க்கான உணவுகள், சிறு நீரைப் பெருக்கக் கூடியதாகவும், எருவை எளிதில் கழிக்கக் கூடியதாகவும், உடலின் குருதியைப் பெருக்கி உடற்கு வன்மைதரக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அவைகள்: நோய் வன்மை முதிராதிருப்பின், எளிதில் செரித்தற்கேற்ப இருமுறை வடித்தசோறும், முள்ளங்கி, சிறுகீரை, நீர்முள்ளிப் பூ, பீர்க்கன், புடலை, கத்திரிப்பிஞ்சு இவைகளால் ஆகிய கறிவகைகளைக் கொடுக்கலாம். வேண்டுமாயின், வெள்ளாட்டின் ஈரல், அல்லது தமரகம் (குண்டிக்காய்) இவைகளைக் குடிநீர் செய்து கொடுக்க, இவை குருதிப் பெருக்கையும், தமரகத்தின் வன்மையையும் உண்டாக்கும்.

செரியாமல் கழிச்சல் காணின், பார்லிகஞ்சி போன்றவைகளை மட்டுமே கொடுத்தல் வேண்டும். கூடுமாயின் வெள்ளரிவித்து, முலான் வித்து, பூசுணைவித்து இவைகளின் பருப்பை அரைத்துக் காய்ச்சிய கஞ்சியைக் கொடுக்கலாம்.

## மஞ்சள் நோய்

வேறு பெயர் : பித்து நோய், மஞ்சட்காமாலை, காமலா, காமில என்பன.

இயல் : சிறுநீர், கண், நா, உடல் யாவும் மஞ்சள் **நிறத்தைப் நோயாம்.**

நோய் வரும் வழி : தீக்குற்றத்தைப் பெருக்கக்கூடிய செயலையும் அளவிறந்து விஞ்சிய உணவையும் கொள்ளின், கேடடைந்த அக் குற்றத்தின் அளவாகக் குருதிகெட்டு, பித்த நீரை, குருதியிலும், உடல் உறுப்புகளாகிய சதை, தோல், கண், நாக்கு இவைகளிலும் தங்கச் செய்து, நோயைப் பிறப்பிக்கும்.

முற்குறி : இந் நோயில், வாய்நீர் ஊறல், வாய்குமட்டல், நாக்கைத்தல், உணவில் வெறுப்பு, உண்ணினும் செரியாமை, உடல் வரட்சி, தோல் சுருங்கித் தவளைத் தோலை ஒத்தல் என்னுங் குறிகளைக் காட்டி, கண், நகக் கண், முகம், உடலின்தோல் முதலியவைகளும். சிறுநீரும மஞ்சளிக்கும்.

"பருகவே உள்ளங்கா லுள்ளங் கைகள்
பகர்முகங்கண் ணுடம்புமிக வெளுப்பு காணுங்
கருகவே கால்கைக ளோய்ச்ச லாகுங்
கனமாக நடுக்கியே இளைப்புண் டாக்குஞ்
சுருகவே மலந்தானும் வறண்டு கட்டுந்
தாயமுக மஞ்சளிட நிறம தாகும்
வெருகவே வீக்கமாய்க் களைப்புண் டாகும்
மிகக்காது மந்தந்தலை கனப்புண் டாகும்."

(பொருள்) : அன்றியும் இதில் உள்ளங்கால், கை, முகம், கண், உடம்பு இவைகள் வெளுத்தல், கையும் காலும் சோர்தல், உடல் நடுக்கல், அடிக்கடி இளைப்புத் தோன்றல், எருக்கட்டுப்பட்டுத் தீய்ந்து வெளியாதல், மிகத்தூக்கம், தலை கனத்தல் முதலிய குறிகளைக் காட்டி, உடல் முதலீயன மஞ்சளிக்கும் எனவும் யூகி நூல் கூறும்.

நோய் எண :

'உரைக்கவே ஊதுகா மாலை யோடு
உயர்வறட்கா மாலைவா தக்கா மாலை
பிரைக்கவே பித்தகா மாலை யோடு
பேரான சிலேட்மகா மாலை யாகும்
வரைக்கவே வாதசிலேட் டுமக்கா மாலை
வகையான பித்தசிலேட் டுமக்கா மாலை
துரைக்கவே தொந்தகா மாலை யோடு
சூக்ஷமமா மஞ்சட்கா மாலை யாமே.''

''மஞ்சளா மழகுகா மாலை யோடு
மருவுகின்ற செங்கமலக் காமாலை யாகும்
குஞ்சலாங் கும்பகா மாலை யோடு
கொடிய குன்மக் காமாலை பதிமூன்றாகும்.''

(பொருள்) என்றதால், ஊது, வறள், வளி, அழல், ஐய, வளிஐயம், அழலையம, முக்குற்ற, மஞ்சள், அழகு, செங்கமல, கும்ப, குன்ம எனப் பதின் மூன்று மஞ்சள் நோய்களாகத் தொகுத்துள்ளார்கள்.

## வளிமஞ்சள் நோய்.

''வாறான வயிறுதனைப் பொருமி விக்கும்
மலந்தானுங் கழியாது உடம்பு வீங்கும்
பூறான புறங்காலு முகம தைக்கும்
புகழ்கரும மொன்றையுந்தான் செய்ய வொட்டா
ஊறான உடல்கடுக்கு மிகவி ளைக்கும்
உறுக்காது மிகவீங்குங் கண்ப ருக்கும்
பாறான பசியில்லா துறக்க மாகும்
பண்பான வாதகா மாலை யாமே.

(பொருள) இந்நோயில் வயிறு பொருமல், விக்கல், வயிறு கழியாடமல் கட்டுப்படுதல் உடல் வீங்கல்,
புறங்காலும், முகமும் உப்பிக்காணல்,
உடல் சோம்பலினால் எத்தொழிலையும் செய்ய முடியாமை, உடல் வலித்தல், உடல் மிக இளைத்துக் கைகால்கள் வீங்குதல், கண்ணின் ஒளி குறைந்து பருத்தல், பசியும் தூக்கமும் இல்லாமை ஆகிய குறிகளைப்பெறும்.

அழல் மஞ்சள் நோய்

"மாலையா யுடம்புலர்த்து முறக்க மில்லை
மகத்தான படுக்கைவிட் டேதுஞ் செய்யா
சேலையாய்ச் சோறுமே செரியா மற்றான்
சடமெங்கும் வாயுவாய்த் தியக்க மாகும்
பாலையா மூச்சதுவு மிகவுண் டாகும்
பருக்கையாய்க் கழியுமே வயிறு தானும்
ஆலையாய் வயிற்றிரைச்ச லதிக மாகு
மசதியாய்ப் பித்தகா மாலை யாமே."

(பொருள்) இந்நோயில், உடலின் தோல் உலர்ந்தது போல் வரண்டு காணல், தூக்க மின்மை, சோம்பிப் படுக்கையிலேயே கிடத்தல், உண்டசோறு செரியாமை, உடம்பெலாம் நோதல், அடிக்கடி பெருமூச் செறிதல், வயிறு அடிக்கடி கழிதல், இரைதல், கையும் காலும் வன்மை யற்றிருத்தல் ஆகிய குறிகளைக் காட்டும்.

ஐய மஞ்சள் நோய்

"தாமென்ற சடத்தையே யறிவ ழிக்குந்
தாக்கான இருமலே மிகவுண் டாகும்
வேமென்ற தலைமுகமும் வியர்வை யாகு
மிடுக்கான நடைமுறையு மூச்சு மாகும்
பாமென்ற பாக்கருந்தில் மிகச்செ ருக்கும்
பண்பான விழிசிவக்கு முடல்ந டுக்கும்
நேமென்ற நெஞ்சுதான் மிகக்க னக்கும்
நெடிதுயிர்க்குஞ் சிலேட்டுமகா மாலை யாமே."

(பொருள்) ஐயத்தால் பிறந்த இந்நோயில், உடல் முழுமையும் ஞ்சளித்தலோடு, இடைவிடாது இருமல் வருதல், தலையும் முகமும் வியர்த்தல். நடக்க முடியாமை, நடக்கில் பெருமூச்செறிதல், கண் மிகவும் சிவத்தல், உடல் நடுங்கல், நெஞ்சு (மார்பு) கனத்திருத்தல் ஆகிய குறிகளைக் காட்டும். இந்நோயில் பாக்குக்கொள்ளின் மயக்கம் உண்டாம்.

வளி ஐய மஞ்சள் நோய்

''துய்க்குமனந் தனைத்தானுஞ் சீர்ண மாக்கா
செரிசுக மாகவொட்டாச் செரும லாகும்
முயிர்க்குமுக மூக்குகண் மிகவே வேர்க்கும்
முடுகியே வயிறிரைந்து பொருமிக் கொள்ளுங்
கயர்க்குநாக் குக்கண்ணு மிகவெ ளுக்கும்
கனமான நடையில்மூச் செறிய வைக்கும்
வியர்க்குமே நகமெல்லாம் வீக்க மாகும்
மிடுக்கான இருமலுண்டாம் வாத சிலேட்மம்.''

(பொருள்) : இப்பாவில் கூறியது போன்று இந்நோயில், உண்ட உணவு செரியாது, உடல், முகம், மூக்கு, கண் இவைகளில் வியர்வை உண்டாகும். வயிறு இரைந்து பொருமிக் கொள்ளும் ; நாவானது கைப்பதோடு, நாவும் கண்ணும் வெளுக்கும். விரைந்து நடக்கில் பெரு மூச்செறியும். நகம் வீங்கும். அதிக இருமல் உண்டாம். ஆகிய குறிகுணங்கள் காணும்.

அழலைய மஞ்சள் நோய் :

'' உண்டாகி வாந்திபணுஞ் செரும லாகு
மோயாமற் றலைவலிக்கு மனமறுக்கும்
வண்டாகி வயிறுகழியுந் தாக முண்டா
மனமெல்லாம் புண்ணாகி மயக்க மாகுந்
துண்டாகிச் சாதமுப்பிச் சீரணி யாது
துய்முகமுங் காலோடு கைவெளுக்கும்
வெண்டாகி மேனியுமே யூதிக்காணு
மிகப்பித்த சிலேட்மகா மாலை யாமே.''

(பொருள்) இந்நோயில், உடல் மஞ்சளித்து வாந்தியெழச் செய்யும். தலைவலித்து நெஞ்சும் புண்பட்டுத் தளரும், வயிறு பால்போல் வெள்ளை யாகக் கழித்தலும், நீர்வேட்கை, செரியாமை, மயக்கம், உடல் முற்றும் வீங்கல், முகம், கைகால்கள் வெளுத்தல் ஆகிய குறிகளைத் தோற்று விக்கும்.

முக்குற்ற மஞ்சள் நோய் :

" ஆமென்ற வங்கமழன் றேயெ ரிக்கும்
அசதிவரு மடிக்கடிக்கு இரும லுண்டாந்
தாமென்ற தண்ணீர்தான் மிகத்த விக்குஞ்
சடமெங்கும் கடுப்பெடுக்கும் புளித்தேப் பாகும்."

(பொருள்) இந்நோயில் முன்பு கூறிய மூன்று நோய்களில் காணுஞ் சில அல்லது பல குறிகள் ஒன்று கூடிக் காண்பதோடு உடல் மிக அழன்று எரிச்சலையுண்டாக்கி அடிக்கடி உடல் சத்தற்றது போல் அழன்று இருமல் உண்டாவதும், நீர்வேட்கை, விக்கல், உடல் கடுப்பு, புளித்தேப்பம் ஆகிய குறி குணங்களையும் தோற்றுவிக்கும்.

ஊது மஞ்சள் நோய் :

" கனப்பாகக் கண்ணுமுகங் கசிவுண் டாகும்
கனவீக்க முடலெங்கு முளைவுண் டாகும்
அனப்பாக வழற்றலாய்த் தேகமுணர் வில்லை
அதிமாயச் சீதவெப்பு தலைதி ருப்புந்
தினப்பாகத் தியக்கமொடு சிறுநீர் மஞ்சள்
தேகமெங்கும் வாடியே திமிருண் டாகும்
உனப்பாக உன்னாத லாயி ருக்கும்
ஊதுகா மாலையென உரைக்க லாமே."

(பொருள்) கண்களில் பீளை கசிதல், முகத்தில் பிசுபிசுத்து வியர்வை கசிதல், உடல் வீங்கி எங்கும் உளைதல், உடல் அழற்றல், உடல் உணர்ச்சியறியாமை, உடலில் வெப்புமிகுந்து ஐயத்தைப் பெருக்குதல், தியக்கமுண்டாதல், உடல்வாடல், திமிருண்டாதல் என்னுங் குறி குணங் களைக்காட்டி உடலை மிக ஊதச்செய்யும்.

வறட்டு மஞ்சள் நோய் :

" உரைக்கவே கால்கைகள் மிகவும் வற்றும்
ஊணவே கால்தவறு மசதி யாகும்
நிரைக்கவே நீலம்போல் மலமி றங்கும்
நீர்தானுஞ் சிவந்துமே நெருப்பாய்க் காணுங்
துரைக்கவே சூலைநோ வென்னக் குத்துஞ்
சோறுருசி யில்லாது மாலைக் கண்ணும்
வரைக்கவே வடிவெல்லாங் கறுகிக் காணும்
மயங்குவரட் காமாலை வகுத்த வாறே."

(பொருள்) இந்நோயில் கால்கைகள் வற்றிப்போதல், நடக்கின் தத்துதல், ஓய்ச்சல், நீலநிறமாக எரு (மலம்) கழிதல், சிறுநீர் சிவந்திழிதல், நீரிழியும் போதெல்லாம், நீர்ப்புழை எரிச்சலாகி இருத்தல், குத்தல் உண்டாவதுடன் உணவின் சுவையறியாமை, மாலையிற் கண் தெரியாமை, உடல் கருத்தல் என்னும் குறிகளையும் காட்டுவிக்குமென அறிக.

'' போமென்ற நாவதுதான் மிகப்பு ளிக்கும்
புரையான பசியெடுக்குங் குளிருண் டாகும்
வேமென்ற அடிவயிறு வீங்கும் வேர்க்கும்
மிகத்தொந்த காமாலை விவரந் தானே.''

(பொருள்) இந்நோயில், அழல்கொண்டு உடம்பெல்லாம் எரிச்சலாகி, அடிக்கடி தளர்ச்சியும் இருமலும் உண்டாகும். நீர்வேட்கை, உடல் முழுமையும் கடுத்தல், புளியேப்பம் வரல், நாப்புளித்தல், அடிக்கடி பொய்ப்பசி யெடுத்தல், உடல் குளிர்தல், அடிவயிறு வீங்குதல், உடல் வியர்த்தல் என்னுங் குறிகள் காணும்.

பெருமஞ்சள் நோய் :

'' விபரமாய் மூத்திரந்தான் மஞ்ச ளாகும்
வீங்குமே சரீர மெங்கு நோவுண் டாகும்
முபரமாய் முகங்கால்கண் கையுண் ணாக்கு
மொழி மஞ்ச ணிறமாகும் முகமி னுக்கும்
அபரமா யன்னத்தை யிறங்கொட்டாது
அழுகையாய் மனஞ்சலிக்கு மூச்சுண் டாகுந்
தபரமாய் தாதுநஷ்ட மலமும் பந்தஞ்
சார்ந்தமஞ்சட் காமாலை தன்பே ராமே.''

(பொருள்) இந்த நோயில் சிறுநீர் மஞ்சளாகும். உடல் வீங்கி வன்மை குறையும். முகம், கால், கை, கண், உள்நாக்கு இவைகள் யாவும் மிகவும் மஞ்சளித்துக் காணும். நோயின் கொடுமையைக் கண்டு மனச் சலிப்பும் பெருமூச்சும் வருத்தமும் உண்டாகும். ஆண்மைக் குறைவு, மலக்கட்டு ஆகிய குறிகளுங்காணும்.

அழகு மஞ்சள் நோய் :

"பேரான கால்கையு மசதி யாகும்
பேர்புருவங் கண்கள் கழற்காய் போலப்
பாரான பச்சென்று தானி ருக்கும்
பருகுநீர் மஞ்சணிற மாய்வி டுக்குந்
தீரான லிங்கத்து ளெரிப்பு மாகுஞ்
செரிக்கவொட்டா தன்னய்தைச் சிதறி யுப்பும்
ஆரான வழல்போல் வெதும்பு மேனி
அழகுகா மாலையிட வாண்மை தானே."

(பொருள்) இந் நோயில் கையும், காலும் அசதியாகும். புருவம், கண் இவைகள் கழற்கொடிக் காயைப் போல் பச்சை நிறமடையும். நீர் வேட்கை உண்டாகும். சிறுநீர் மஞ்ச்ள் நிறத்தோடு வெளியாகும். நீர்ப் புழை எரியும், உணவு செரியாமல் வயிறு உப்பும். உடல் அனலி போல் வெதும்பும்.

செங்கமல மஞ்சள் நோய் :

"ஆண்மையில்லாத் தமரகத்தின் குணமு மாகும்
அங்கமெலா மழற்சியுமாய்ச் சோம்பு மாகுந்
தீண்மைசிறு நீர்சிவந்து மஞ்ச ளித்துச்
சிறுகியே சிறுநீர்தான் குறுக்கி வீழும்
நாண்மையாய் நகங்களுடல் மிகவெ ளுத்து
நற்காயம் வற்றியே சுரமுண் டாகும்
ஊண்மையா யுண்ணாக்கு உமிழ்நீர் நாக்கு
முறுமஞ்சள் செங்கமலக் காமாலை யாமே."

(பொருள்) இந் நோயில், தமரகம் வன்மையற்றதன் பயனாக, உடல் அழற்சியுண்டாகிச் சோம்பலைத் தரும். அன்றியும், சிறுநீர் வற்றிச் சிவந்த மஞ்சள் நிறத்தொடு வெளியாகும். உடலும் நகமும் வெளுத்துக் காணும், உடல் வற்றிச் சுரம் காயும். உள்நாக்கும், வெளி நாக்கும் உமிழ்நீரும் மஞ்சள் நிறமடையும்.

கும்ப மஞ்சள் நோய் :

" காமாலை யடிக்கடிக் களையே யாகும்
கணமாகு முடம்புசிறு நீரே மஞ்சள்
வேமாலை நேரத்தில் வியர்வை யாகும்
மேனோக்கும் வாதந்தான் கண்சி வக்கும்
பூமாலை போலவே துவண்டு போகும்
புகழான மயிலுறக்கம் போலே யாகுங்
கோமாலை மலந்தானுங் குதுக்கென் றாகுங்
கொடியகும்ப காமாலைக் குணமி தாமே."

(பொருள்) இதில், உடல் கனத்து அடிக்கடி களைப்புண்டாகும். சிறுநீர் மஞ்சளிக்கும். மாலைப் பொழுதில் உடல் வியர்க்கும். கண் சிவக்கும். அன்றியும் பூமாலை துவள்வது போல நோயினன் துவண்டு கிடப்பன். மயிலானது நின்று கொண்டே தூங்குவது போன்று இவனும் நோயின் கொடுமையால் நின்றுகொண்டே தூங்குவான். சீதக் கழிச்சலில் வெளியாவது போல் அடிக்கடி எரு(மலம்) குதுக்கெனக் கழியும்.

குன்ம மஞ்சள் நோய் :

" குணமான வாய் வெளுப்பு கண்தான் பச்சைக்
கொடுமூத்திர மஞ்சளித்துக் குழம்பு மாகும்
அணமான வன்னந்தான் செரிக்கும் போது
அடிவயிற்றில் வலியுண்டாம் வாந்தி யாகும்
மணமான தொன்றுமே யறிந்த டாது
மயிலுறக்க மிரைப்பிருமல் மூச்சு மாகும்
பிணமான தநுபோலக் கிடைகி டக்கும்
புரளுமே குன்மகா மாலை தானே."

(பொருள்) இந் நோயில் வாய் வெளுத்து, கண் பசுமை நிற மடைவதுடன் சிறுநீர் மஞ்சளித்துக் குழம்பாய் வெளியாகும். உணவு செரிக்கும் பொழுது அடி வயிறு வலித்து வாந்தியாகும். மூக்கு மணம் ஒன்றையும் அறியாது, அடிக்கடி இருமி மூச்சுவாங்கல், பிணத்தைப் போல் அசையாது கிடத்தல், அல்லது படுக்கையில் வயிற்றுவலி பொறுக்கமாட்டாது புரளல் என்னுங் குறிகள் காணும்.

திரும் தீராதவை.

" தானான காமாலை பதின்மூன் றாகுஞ்
சாத்தியந்தா னேழாகும் பேரே தென்னில்
பானான பித்தக்கா மாலை யோடு
பரவுமஞ்சட் காமாலை சிலேட்ம மாகும்
ஊனான ஊதுகா மாலை யோடு–
உணர்த்துவறட் காமாலை வாதசி லேட்மம்
கோனான பித்தசிலேட் மக்கா மாலை
குணமாக வேழுந்தான் கூர்ந்து கேளே."

" கேளென்ற கும்பகா மாலை யோடு
கெடிகுன்மக் காமாலை தொந்தகா மாலை
வாளென்ற வாதகா மாலை யோடு
மருவுசெங் கமலக்கா மாலை யாகும்
ஆளென்ற வழகுகா மாலை யோடு
ஆறுந்தா னசாத்யமா மறிந்து கொள்ளு
கோளென்று சொல்லிமகா கொடுமை செய்த
குணங்கெட்ட மானிடரைக் கூடுந்தானே."

(பொருள்) மேற்கூறிய பதின்மூன்று காமாலைகளுள், அழல் காமாலை, மஞ்சட் காமாலை, ஐய காமாலை, ஊது காமாலை, வரட் காமாலை, வளிஐய காமாலை, அழலைய காமாலை ஆகிய ஏழும் எளிதில் நீங்குவனவாகும். மற்ற கும்ப காமாலை, குன்ம காமாலை, முக்குற்ற காமாலை, வளி காமாலை, செங்கமல காமாலை, அழகு காமாலை ஆகிய இவ்வாறும் எளிதில் தீராதாம்.

பொதுக்குறி குணங்கள் : இந்நோய் பிறக்கும்போதே, கண்ணின் வெள்ளை விழியும், அதன் பின் முகம், கழுத்து, உடல் முதலியனவும் மஞ்சளிக்கும். நோய் முதிர முதிர, நா, வாயின் மேல்பாகம், உதடு, சிறுநீர் இவைகளும் படிப்படியே மஞ்சள் நிறத்தை யடைந்துகொண்டே வரும். அதன் பின், தோல் மஞ்சள் நிறத்தோடு பச்சை நிறம் பெற்றது போலக் காணும்.

நோய் தீவிரமாயின், மூக்கு, பல்லீறு, வாய் இவைகளிலிருந்து குருதி கழிவதுண்டு. சிறுநீர் மிகவும் மஞ்சளித்து குருதி கலந்தாற்போலக் காணும். சிறுநீர், ஆடையில் படின் கரைபோல் காணும். வியர்வையும் மஞ்சளிக்கும். எரு (மலம்) வெளுப்போடு, குழகுழத்து இழியும். சிலர்க்கு உமிழ்நீர், கண்ணீர், பல் முதலியவைகளும் மஞ்சளித்திருப்ப துண்டு.

அன்றியும், நோய் தொடங்கும்போது உடல் வரண்டு நமை உண்டாதல், தவளைத்தோல் போலக் காணல், நாடி நடை தளர்தல், தூக்கமின்மை, எப்பொருளும் மஞ்சள் நிறமாகவே காணப்படல் ஆகிய குறிகுணங்களையும் பெறும்.

முக்குற்ற வேறுபாடுகள் : அழல் குற்றத்தைப் பெருக்கக்கூடிய உணவுப் பொருள்களாலும், வெய்யிலில் செல்லல், இராக்கண் விழித்தல் முதலிவைகளாலும் அழல் குற்றம் மிகுந்து அக்குற்றம் தனக்குத் துணையாக ஐயத்தையும் கூட்டிக்கொண்டு, பரவு காலின் தொழிலைக் கெடுத்து, குருதியின் வன்மையைக் கேடடையச் செய்வதால், இந்நோய் பிறக்கும். பித்து நீரும் பெருத்து இயற்கையாகக் கழியாது குருதியோடு கூடி, கெடுதிகள் பலவற்றை வருவிக்கும்.

நாடி நடை :

> " பண்பான பித்தத்தில் சேத்துமங்கூடிப் பரிசித்தால்....
> கண்காது மலநீரு மஞ்சள்......"

மருத்துவம் : இந் நோயில், உணவு செயல் முதலியவைகளால் உடலில் வெப்புண்டாகுதல் அழல்குற்றம் தன்னளவில் மிகுந்து பித்த நீரைக் கெடுத்து, அதன் அளவாகக் குருதியையும் கெடச்செய்யுமாதலால், இந் நோய், மருத்துவத்தில், தன்னளவில் மிகுந்த அழலைத் தணிக்கலும், மிகுந்த பித்து நீரை வெளியாக்குதலும், வாந்தி செய்வித்தல் முதல் மருத்துவமாம். அதன்பின் கழியச் செய்து நோய்க்கான மருத்துவம் செய்தல் வேண்டும்.

கழிச்சல், வாந்தியாக :

(1) சஞ்சீவி மாத்திரையை இலைக்கள்ளிச் சாற்றில் கொடுக்க இரண்டு மூன்று முறை வாந்தியுண்டாகிக் கழிச்சலையும் உண்டாக்கும். அவைகளோடு பித்து நீரும் கழியும்.

(2) மரக்காரைக் காயைச் செம்பிஞ்சாகக் கொண்டு அதனை எலுமிச்சம் பழச்சாறு, இலைக்கள்ளி இலைச்சாறுகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு நாள் ஊறவைத்து உலர்த்தியதைப் பொடித்து, அரை முதல் ஒரு சிட்டிகை அளவு கொடுக்கலாம்.

(3) கல்க வகையில் கரிசாலை, கீழாநெல்லி, சிவனார்வேம்பு, கடுக்காய், நெரிஞ்சில், சரக்கொன்றைப் பூ, இலை, பட்டை இவைகளைக் கொள்ளலாம்.

குடிநீரில் : (1) கீழ்க்காய் நெல்லியின் சாறு ஓர் ஆழாக்கில் எட்டு முதல் பத்து விராகனெடை பேதியுப்புக் கூட்டி சிறுதீயில் எரித்து உப்பு கரைந்த உடனே வடித்துக் காலையில் கொடுக்கக் கழிச்சலையும் வாந்தியையும் உண்டாக்கி அதில் பித்து நீரைக் கழியச் செய்யும்.

(2) நீர் முள்ளிப்பூ, வேப்பம் பூ, நெரிஞ்சில், கடுக்காய், தான்றி, நெல்லிவற்றல், சிவதை இவைகளை ஓரளவாகக் கொண்டு, எட்டு பங்கு நீரிட்டு, எட்டிலொன்றாகச் சுறுக்கி வடித்துக் கொடுக்க, கழியச்செய்து நோயை நீக்கும்.

(3) கொன்றைப்பட்டை, வேப்பம்பட்டை, நெல்லிப்பட்டை, கீழாநெல்லி, மரமஞ்சள், கறிமஞ்சள், கடுகு இவைகளை முறைப்படி குடிநீரிட்டு அரை ஆழாக்களவு காலை மாலையாகக் குடிக்கலாம்.

பற்பச் செந்தூரங்களில், இரும்புக்கிட்டச் செந்தூரம், இருப்பு செந்தூரம், சிலாசத்து பற்பம், வெடியுப்புச் சுண்ணம் அல்லது செந்தூரம், நவாச்சார செந்துரம், அஞ்சுப்புச் செந்துாரம், காளமேக நாராயணச் செந்துரம் போன்றவைகளை நோய்க்கேற்றவாறு அளவிட்டு, தக்க துணை மருந்தோடு கொடுக்கவும். வேண்டுமாயின் பித்துநீரைக்கழிக்க மேற்கூறிய குடி நீர் களில் ஏதேனும் ஒன்றைத்துணை கூட்டிக் கொடுக்கலாம். அல்லது கீழாநெல்லிச் சாற்றில் ஒன்று அல்லது இரண்டு தோலா பேதியுப்புக் கூட்டிக்கரைத்து வடித்தேயும் கொடுக்கலாம்.

உணவு : புளி, உப்பு நீக்கிய கஞ்சி வகையே நன்றாம். வேண்டுமாயின் இருமுறை வடித்த சோறு கொடுக்கலாம், எண்ணெய், நெய், வெண்ணெய் முதலிய கொழுப்புப் பொருள்களை நீக்க வேண்டும். தாளிப்பு இல்லாத காய் கறிகள் கொள்ளலாம்.

## பெருவயிறு.

வேறு பெயர் : பெரும்பண்டி, மகோதரம்.

இயல் : வயிறு நாளுக்கு நாள் இயற்கைக்கு மாறாகப் பெருத்துக் கொண்டே வந்து, அதனுள் நீர் சுரந்து வருவதும், வயிற்றுள் உள்ள உறுப்புகளாகிய ஈரல்கள், குடல், கருப்பையின் கழலை இவைகளில் யாதேனுமொன்று பெருத்து வருதலுமான வியல்புடைய நோயாம்.

**நோய் தோன்றும் வழி :** உமி, கல், மண், மலர், முள் இவைகள் கலந்த உணவை உட்கொள்ளுத லாலும், சுனைநீர், குற்றமுள்ளநீர், வண்டு மொய்த்த நீர், தேரை தங்கிய நீர், கள், சாராயம் இவைகளை அடிக்கடி பருகலாலும், மருந்தீட்டாலும், மேக நோயாலும், செம்பின் களிம்பாலும் ரச, கந்த, பாடாணங்களால் ஆகிய மருந்தை உடல்வனமை அறியாமல், அளவு கடந்து உண்பதாலும், செரியாமையாலும் இந்நோய், பிறக்கும் எனக் கூறுவாரு முளர்.

இதனை,

" .. .. .. .. .. ..
.. .. .. .. .. ..
உலமான உற்பத்தி யுரைக்கக் கேளாய்
உமியினால் கல்லினால் ரோம முள்ளால்

சுலமான சுனையினால் தோட நீரால்
தும்பியநீர் தேரைநீர் அலர்ந்த சோற்றால்
மலமான மங்கையர்கள் மருந்தினீட்டால்
மகோதரமாய் நோய்வந்து மருவுங் காலே."

" காலான மேகந்தான் வயிற்றிற் கட்டிக்
கடிசான சீழ்சீதம் வயிற்றிற் றங்கில்
தாலான சதையுதிரம் வயிறு தன்னில்
தயங்கினாற் பாஷாணந் தரிக்கிற் சூதம்
சேவான செப்பனிட வூறல் தங்கில்
சீரணத்தில் மேலன்னஞ் செலுத்த லாலும்
மாலான மங்கையர்கள் மருந்தி னாலும்
மகோதரங்கள் வந்துவுற் பத்தி யாமே."

(யூகி சிந்தாமணியில் காண்க)

அன்றியும் இந்நோய், நீர்நோய், தமரக நோய், ஈரல் நோய் ஆகிய இவைகட்குத் துணை நோயாகவும் வருவதுண்டெனக் கூறுவாருமுளர்.

முற்குறிகள் : வாய்நீரூறல், வாய் கைப்பது போற்றோன்றல், பசியின்மை, சிறிது உண்ணினும் எளிதில் செரியாமை, வாய்குமட்டி வாந்தியாதல், அதில் சிறிது பித்த நீர் கலந்து காணல், நாளுக்கு நாள் உணவை வெறுத்தல், உடல் வன்மை குறைந்துகொண்டே வருதல், பெருமூச்செறிதல், சிலவேளை அடிக்கடி கழிதல், சிலவேளை வயிறு கழியாமலே இருத்

தல், நாளுக்கு நாள் கையும் காலும் சூம்பிக்கொண்டே வருதல், முக்த்தில் மங்குண்டாதல், முக எலும்பு மோடிட்டு, கண், தாடை உதடு இவைகள் வறண்டு சுருங்கல், கணுக்கால் சிறிது வீங்கிக் காணல், உடல் வெளுத்தல், சிறு நீர் சுருங்கல் என்னுங் குறிகளைக் காட்டும், அன்றியும். வயிற்றின் தோல் சுருக்கமடைந்து, மினுமினுத்து, குருதி நாளங்கள் புடைத்து விம்மி, தோலில் நீல நிறத்தோடு கொடிகொடியாகத் தோன்றி வயிறு வீங்கிக் கொண்டே வரும்.

**நோய் எண். :**

'' செய்ததோர் மகோதரந்தான் முப்பத் திரண்டு
சிறப்பான பெயரையெலாஞ் சொல்லக் கேளாய்
வைத்ததோர் வாதமகோ தரத்தி னோடு
வகையான பித்தமகோ தரஞ்சி லேட்மம்
தொய்ததோர் வாதசிலேட் மத்தி னோடு
கொடும்பித்த சிலேட்மமகோ தரமு மாகும்
தொய்ததோர் தொந்தமகோ தரத்தி னோடு
துரிதமாங் கல்மகோ தரமுங் காணே.''

'' காணவே வில்மகோ தரத்தி னோடு
கடியதோர் வழுவைமகோ தரமுந் தானும்
நாணவே நழுவைமகோ தரநீ ராம்பல்
நலத்தஊ ராம்பலொடு வெப்புப் பாவை
கோணவே குலைமுட்டி மகோத ரந்தான்
கொடியகீழ்க் கவிசைமேற் கவிசை யாகும்
பாணவே பக்கமாங் கவிசை யோடு
பழுக்கவிசை பெருவயிறு மகோதரந் தானே.''

'' வயிறான சூல்மகோ தரமும் வல்லை
மகோதரமும் விஷமகோ தரத்தி னோடு
கொயறான ஆயுருவே தத்திற் சொல்லுங்
கொடிதான சோபைமகோ தரங்கா மாலை
புயறான கூர்மமுடன் பீலி கையுமாம்
புரமசுர மகோதரமும் குன்மம கோதரம்
வெயறான பாண்டுவோ டுதரம கோதரம்
வீசுகின்ற மகோதரமுஞ் சலமு மாமே.''

'' சலமான மகோதரமாங் கிமதாகும்
தாக்கான மகோதரந் தான்முப்பத் திரண்டு,''

(பொருள்) என்றதில் பெருவயிற்று நோயை யூகிமுனிவர் முப்பத்திரண்டாக வகுத்து, இவைகளை வளிப்பெருவயிறு. அழற் பெருவயிறு, ஐயப்பெருவயிறு, வளி ஐயப்பெருவயிறு, அழலய்யப் பெருவயிறு, மாபெருவயிறு, முக்குற்றப் பெருவயிறு, கல் பெருவயிறு, வில் பெருவயிறு, வழுவைப் பெருவயிறு, நழுவைப் பெருவயிறு, நீராம்பல் பெருவயிறு, ஊராம்பல் பெருவயிறு, வெப்புப்பாவை பெருவயிறு, குலைமுட்டி பெருவயிறு, கீழ்கவிச்சை பெருவயிறு, பழுகவிச்சைப் பெருவயிறு, சூல் பெருவயிறு, வல்லைப் பெருவயிறு, நஞ்சுப் பெருவயிறு, சோகைப் பெருவயிறு, காமாலைப் பெருவயிறு, ஆமைப் பெருவயிறு, பாண்டுப் பெருவயிறு, சுரப் பெருவயிறு, குன்மப் பெருவயிறு, நீர்ப் பெருவயிறு, சதைப் பெருவயிறு எனப் பிரித்துக் காட்டியுள்ளார்.

மற்றோர் சாரார், வளி, தீ, ஐயக் குற்றங்களினால் தனித்து வருவன மூன்றும், மூக்குற்றக் கலப்பால், வருவதொன்றும், ஈரல் கேடடைவதால் ஏற்படுவதொன்றும், நீர் எரு (மலம்) இவை கட்டி விடுவதால் வருவதொன்றும், குடலையும் அதனைச் சார்ந்த மற்றைய உறுப்புகளைப்பற்றி வருவதொன்றும் வயிற்றின் புரையிற்றங்கும் குற்ற அளவாக வருவதொன்றும் ஆக எட்டெனக் கூறுவர்.

இவற்றுள், யூகிமுனி நூலில் கூறிய தொகையின் குறிகுணங்களைச் செப்புவாம்.

**வளிப் பெரு வயிறு :**

''தொடச்சியாங் காயமது வெளுப்பு மாகும்
சூட்சமாய்ச் சடம்வற்றித் துற்ப லந்தான்
அடர்ச்சியா மன்னமது வேண்டா தாகு
மடிவயிற்றி லிரைச்சலுமா யுப்பச மாகும்
புடர்ச்சியாய்ப் பிணமுகமாய்ச் சாய லாகும்
புளிப்பான வசீரணத்திற் பசியு முண்டாம்
தடர்ச்சியா யடிவயிறு தன்னில் வீங்குஞ்
சஞ்சலிக்கும் வாதமகோ தரந்தா னென்னே.''

(பொருள்) உடல் வெளுத்து வற்றி, வன்மை குறைந்து, உணவில் வெறுப்புண்டாய் அடி வயிறு இரைச்சலுடன் பெருத்து காணும். மூச்சு திணறும், முகம் பிணத்தின் முகத்தைப் போலக் காணப்படும். புளிப் பேப்பம் உண்டாவதுடன் பசியும் எடுக்கும். மனம் துன்புறுதல் ஆகிய இக் குறிகளைக் காட்டும்.

அழல் பெரு வயிறு:

" என்றகண்ணிற் காசவன் னமுமாய்த் தோன்றி
ஏற்றசுர மோகமாய்த் தாக மாகும்
அன்றவதி சாரமுமாய் வயிறு போகு
மழற்சியொடு வியர்வைமேல் மஞ்சளிப்பு
துன்றதோல் சுறசுறப்புத் துரட்டி போலாஞ்
சுயநரம்பு பலவிதமாய் வன்ன மாகும்
பன்றசனஞ் செரியாமல் மலமும் போகும்
பயித்தியமகோ தரத்தினிடப் பண்பு தானே."

(பொருள்) இப் பெருவயிறு நோயில், கண்கள் ஆகாயத்தின் நிறத்தைப் போன்று கருமையாகக் காணும். சுரம் காய்ந்து அதிக நீர் வேட்கையையும் மிகுதியாகக் கழிச்சலையும் உண்டாம். உடல் வெப்பத்தினால் வியர்ப்பது வன்றியும் உடல் முழுமையும் மஞ்சள் நிறமடையும். தோல் சுற சுறப்புக்கொண்டு, வயிறு துருத்தி போலாகி, நரம்புகள் புடைத்து மயிற் கண் போல் பல நிறங்களையுடையதாகும். உண்டது உண்டவாறே கழியும் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

ஐயப் பெருவயிறு:

" பண்பான உடல்நடுக்கி யருசி யாகும்
படுக்கைதனி லுறக்கமில்லா துப்பு றைக்கும்
குண்பான குளிர்க்காய்ச்சல் சவாச காசங்
கோபமொடு வயிற்றுப்ப சமுமா கும்மால்
வெண்பான பஞ்சுபோல் கிகவெ ளுக்கு
மிடுக்கான நீர்மலமுங் கடுக டுக்கும்
திண்பான விருமலொடு கோழை மிஞ்சுஞ்
சிலேட்டுமமா மகோதரத்தின் செயலி தாமே."

(பொருள்) இந் நோயில் உடல் நடுக்கம், சுவையின்மை, படுக்கையில் பொருந்தாமை குளிர் காய்ச்சல், இரைப்பு, மிக்க சினங்கொள்ளல், வயிறு உப்புதல், பஞ்சுபோல் உடல் வெளுத்தல், சிறு நீரும் எருவும் (மலமும்) கடுத்து அடிக்கடி இழிதல், இருமி மிகுந்த கோழை கக்கல் என்னுங் குறிகள் உண்டாகும்.

வளி ஐயப் பெரு வயிறு :

'' செயலான சடம்வெளுத்தாற் போற்கடுத்தல்
துணிவயிற்று மடிப்புத்தான் மறைய வீங்கல்
நயலான நரம்புவயிற் றினிற்பு டைத்தல்
நலமான துற்கந்த வாயு மீறல்
அயலான வண்டங்கள் திடுக்கிட்டாற் போல்
அடிவயிற்றில் முழக்கமா மலம்வி டாது
பியலான பீசந்தான் மிகுதி வீங்கும்
பிரிவாத சீலேட்ம மகோதரந்தானே.,'

(பொருள்) இந் நோயில், உடல் வெளுத்து, நொந்து வயிற்றில் இயற்கையாயுள்ள மடிப்புகள் மறைந்து வயிறு வீங்கும். வயிற்றின் நரம்புகள் புடைத்து விம்மி மேலெழுந்து காணும். ஈதன்றியும், வாயில் தாங்கமுடியாத கெட்ட நாற்றம் வீசும். அடிவயிறு பேரொலி செய்யினும் வெளிக்குப் போகாமை, விரை பெரிதும் வீங்கல் ஆகிய குறிகள் காணும்.

அழலையப் பெரு வயிறு :

'' பிரிவாக நாபிமா ரளவு மட்டும்
பிதுங்கலாய் வயிறுமெத்தப் புடைக்கி டைக்கும்
வரிவாக வாயுதான் மிகத்தம் பிக்கும்
மலங்கட்டும் நீர்குறையும் மார்பில் நோவாம்
எரிவாக எலும்பின்மூ ளையிலே தாக்கி
ஏற்றமாம் நயனவொளி மிகக்கி டைக்கும்
அரிவாக வங்கங்கள் கால்கை வீங்கும்
அதிர்பித்த சிலேட்மத்தின் மகோதர மாமே.''

(பொருள்) இப்பெருவயிற்று நோயில், அடிவயிறு முதல் உந்திவரை மிகப்புடைத்துப் பெருகும். காற்று வெளியில் செல்லாது தம்பித்து, மலமும் நீரும் குறையும். மார்பின் எலும்பில் தாங்கமுடியாத வலி யுண்டாகிப் பல துன்பங்களை வருவிக்கும். அன்றியும் மூளையில் எழுந்த வெப்பத்தி னளவாகக் கண் ஒளி கெட்டு உடல், கை, கால் இவைகள் வீங்குதல் ஆகிய இக்குறிகுணங்களைப் பெறும்.

**மூக்குற்றப் பெருவயிறு :**

"அதிராக மஞ்சணி ராக்கை யாகும்
அதட்டியாய் வாதத்தின் நாடி யாகும்
பதிராகப் பஞ்சுபோற் கண்ணீ ருகுக்கும்
பங்கமா யங்கமெலாம் பருக்க வீங்கும்
வதிராக வஞ்சகமாக் கால்கை வற்றும்
வற்றியே யுடம்பெல்லாம் வயிறு விம்மும்
சுதிராகத் தலைசுற்றல் தியக்க மாகும்
தொந்தமா மகோதரத்தின் சூட்சம் பாரே."

(பொருள்) உடல் மிகுதியான வாதநாடி படபடத்து நடக்கும்; இந் நோயில் உடல் மஞ்சள் நிறத்தோடு காண்பதோடு கண் பஞ்சு போல் வெளுத்துக் கண்ணீர் வடிந்து கொண்டே இருத்தல். உடல் முழுமையும் பெருத்து மிகவீங்கல், கையும் காலும் மெலிந்து போதல், உடல் வற்றி வயிறுவீங்கல், தலைசுற்றல், தயக்கம் உண்டாதல் முதலிய குணங் களைப் பெற்றிருத்தலோடு நாடி நடையில் வளி நாடி நடையைக் குறிக்கும் என அறிக.

**கல் பெரு வயிறு :**

"சூட்சமா யிருமலொ டிளைப்பு மாகுஞ்
சுருபந்தான் மஞ்சணிற மாக வீங்கும்
மோட்சமாய் மேல்வயிறு கருங்கல் போல
முரண்டியே மிகவீங்கு மசனஞ் செல்லா
காட்சமாய் முகங்கருகிக் கண்டிப் பாகும்
கசடற்று நரம்பெல்லாம் பசுமை யாகுந்
தீட்சமாய்ச் சலமலங்கள் சுருக்கிக் கொள்ளுஞ்
சடம்வெளுக்குங் கல்மகோ தரமா மென்னே."

(பொருள்) இந் நோயில் உடல் மஞ்சளித்து வீங்குவது மட்டுமே யன்றி மேல் வயிறும் கல்லைப்போல் கடினப்பட்டு வீங்கும். இன்னும் உணவு செல்லாமை, இருமல், இளைப்பு, முகங்கருத்தல், வயிற்று நரம் பெல்லாம் புடைத்துப் பசுமை நிறமடைதல், உடல் நாளுக்குநாள் வெளுத்தல், சிறுநீரும் எருவும் சரியாக இழியாமல் சுருங்குதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

வில் பெரு வயிறு :

'' ஆமென்ற வருணனிட வில்லு போல
அதட்டியே வளைந்தாற்போல் பிகுவு முண்டாய்
வேமென்ற மேல்வயிறு தனில்வ லித்து
மிடுக்காக உப்பசமாய் விரையும் வீங்கி
வாமென்ற மலசலமுஞ் சுருக்கிக் கொண்டு
வாதையாய்க் கிடைகொடா மயக்க மாகித்
தாமென்ற தண்ணீர்தான் மிகவும் வேண்டுஞ்
சஞ்சலிக்கும் வில்மகோ தரந்தா னென்னே.''

(பொருள்) இந் நோயில், வானத்தின் வில்போல, வயிறானது குவிந்து வளைந்து அழுத்தமாயிருக்கும். மேல் வயிறு வலித்துக் கடுத்து, உப்பி இரையும், விரை வீங்கும். சிறு நீரும் எருவும் அளவில் சுருங்கி மிகவும் தாங்க முடியாத வலியோடு கழியும். மேலும், நீர் வேட்கை மனக்கலக்கம் என்னுங் குறிகளையுங் காட்டும்.

வழுவை பெரு வயிறு :

'' தரமான தண்ணீரிற் சொறியைப் போலத்
தளதளத்து வயிறுதனில் வளர்ந்தே யேறும்
மரமான ததுபோலத் திமிருண் டாகி
மாமிசந்தான் சோறுபோல் வயிற்றிற் றுன்னி
பரமான ததைநினைந்து பசியில் லாமல்
படுக்கைக்கு இடமின்றிப் பரத விக்கும்
அரமான வன்னத்தைக் கிட்டொட் டாது
ஆகாத வழுவைமகோ தரந்தா னாமே.''

(பொருள்) இந் நோயில், நீர் ஊற்றுப்போன்று வயிற்றில் தண்ணீர் பெருகித் தோற்பை போல் தளதளத்து வீங்கிக் காணும். அந்நீர் நாளுக்கு நாள் சுரந்து மேல் நோக்கி, கை கால்களை மரம் போல் திமிர்க்கச் செய்து, வயிற்றுள் கறியை (மாமிசத்தை) அடைத் தாற் போலக் காணும். பசியைக் கெடுத்துப் படுக்கையிற்றங்காது வருந்தச் செய்யும். சோற்றைக் காண வெறுப்புண்டாதல் ஆகிய இக்குறிகளைக் காட்டும்.

நழுவைப் பெருவயிறு :

"ஆமேதா னடிவயிற்றிற் கட்டி யாகு
மழுத்தியே பார்த் தக்கால் நழுவிப் போகும்
வேமேதான் மேல்வயிற்றில் வன்னி போல
மிடுக்கான பெலங்குறைந்து மேல்மூச் சாகும்
சாமேதான் பிணம்போல நடக்கொட் டாது
தரிக்கொண்ணாத் தாபமுமாந் தளர்ச்சி யாகும்
நாமேதா னாவரண்டு நெஞ்சு புண்ணாம்
நழுவைமகோ தரமென்றே நாட்ட லாமே."

(பொருள்) இந்நோயில், அடிவயிற்றில் பந்தைப்போல் உருண்டு திரண்ட ஒரு கட்டி காணப்படும். அதை அழுத்திப் பார்க்கில், ஓரி டத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நழுவிப்போகும். மேல் வயிற்றுள் தீயைப் போல் அனலையும் எரிச்சலையும் உண்டாக்கி, வன்மை குறைந்து மேல் மூச்சு வாங்கும். இன்னும், நடக்க முடியாமை, தாங்க முடியாத உடல் எரிச்சல், தளர்ச்சி, நாவறட்சி, நெஞ்சு புண் ணாதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

நீராம்பல் பெரு வயிறு :

"நாட்டமாய் நாவறண்டு இரும லுண்டாய்
நளிராகி யடிவயிறு கதித்து விம்மிக்
காட்டமாய்க் கடைக்கண்தான் மிகவெளுத்துக்
கதும்பலொடு புறங்கால்க ளதைத்து வீங்கி
வாட்டமாய் மூச்சோடு மயக்க மாகி
மலந்தானு மிகத்தளர்ந்து வடிவம் வேறாய்
நீட்டமாய்க் கால்கையு முடக்கொ ணாது
நீராம்பல் மகோதரத்தி னேர்மை தானே."

(பொருள்) இதனில், கடைக்கண் மிக வெளுத்து, இருமல், குளிர் சுரம், நா வறட்சி, புறங்கால் வீங்கல், அடிவயிறு கதித்து விம்முதல், பெருமூச்சு, மயக்கம், அடிக்கடி கழிச்சல், உடல் தளர்ச்சி, வடிவு வேறாதல், கால் கைகளை நீட்டவும் முடக்கவும் முடியாமை என்னுங் குறி குணங்கள் தொடரும்.

ஊராம்பல் பெரு வயிறு :

'' நேர்மையாய் மேல்வயிறு பொருமிக் கொண்டு
நெடிதுதகந் தேடியே மேனி கண்ணும்
வார்மையாய் மனத்துயர மிகுந்தி ருக்கும்
மயக்கமொடு தியக்கமாய் மாழ்கித் துஞ்சும்
கார்மையாய் முகம்வியர்த்து வெளுத்து நொந்து
கனகனத்து உடம்பெல்லாம் கடிது வற்றி
சீர்மையாச் சிரசதனிற் பாரங் காணுஞ்
சினத்த ஊ ராம்பல்கோ தரமு மாமே.''

(பொருள்) இந்நோய், மேல் வயிற்றைப் பொருமச் செய்து உடல் கண் இவைகளை வருத்தி, மனத்துயரத்தையும், மயக்கம் தியக்கங்களையும் உண்டாக்கும். மேலும், முகம் வியர்த்தல், உடல் வெப்பத்தினால் வற்றிப் போதல், வெளுத்தல், நோதல், தலை கனத்தல், அடிக்கடி சினங் கொள்ளல் ஆகிய குறி குணங்களையும் பிறப்பிக்கும்.

வெப்புப் பாவை பெருவயிறு :

'' சினத்துப்பங் காற்றுமே மிகவு முண்டாய்த்
தேக்கியே உடலதிர்ந்து மிகவும் பற்றி
கனத்தகைப்புப் புளிப்புமிகத் தெவிட்ட லாகுங்
கல்போலச் சரீரமெங்குங் கனத்துக் காணும்
வினத்தவயிற் றினிற்புறண்டு வெதும்பல் செய்யும்
விலாபக்கந் தனில்வந்து கட்டிச் சேரும்
நனத்தவுப்பு நாவிலே மிகுதி யாகும்
நலிவெப்புப் பாவைமகோ தரமாய் நாட்டே.''

(பொருள்) இந்நோயில், அடிக்கடி சினத்துப் பேசச் செய்யும், வயிற்றுள் காற்றுச் சேர்ந்து வயிறு மிகவும் உப்பிக்காணும். அதனால் உடல் அதிர்ந்து கசப்பும் மிக்க புளிப்பும் பிடியாது (நாவில் உப்புச் சுவை உள்ளது போல் தோன்றும்). கல்போன்று உடல் கனத்து வயிறுபுறண்டு வெதும்பும். விலாப் பக்கம் கட்டிபோல எழும். ஆகிய இக்குறிகுணங்கள் தோன்றும்.

குலை மூட்டி பெருவயிறு :

'' நாட்டவே குழவிபோல் குலையிற் சேர்ந்து
நலமாகக் கீழ்மூடிப் பக்கம் வந்து
ஆட்டவே அன்னத்தை யருந்தொட் டாமல்
அபானத்தை இருக்கியே மலம்வி டாது
தேட்டவே தேகமெங்குங் கருகி வற்றி
சிரசோடு முகங்கால்கை வீக்க முண்டாம்
கூட்டவே மலமூச்சுக் குரலுங் கம்முங்
குலைமுட்டி மகோதரத்தைக் கூறி டாயே.''

(பொருள்) இந்த நோயில், அம்மிக் குழவியைப் போன்ற கழலை அடிவயிற்றின் பக்கத்தில் தோன்றிப் பாய்ந்து வலிக்கும். உணவு கொள்ளாது, கீழ் வாயுவை (அபான வாயுவை) இறுக்கிக் கழிய ஒட்டாமற் செய்யும். மேலும், உடல் முழுமையும் கருகி வற்றி, தலை, முகம், கால், கை முதலியவைகளில் வீக்கமுண்டாகும். மூச்சு, குரலோசை இவைகள் கம்மும், என்னுங் குறிகுணங்கள் உண்டாம்.

கீழ் கவிசைப் பெருவயிறு :

'' கூறிடவே அடிவயிற்றில் வில்லைப் போலக்
குறிப்பாகக் கட்டிகட்டி வயிறு முப்பும்
ஈறிடவே மேல்வயிற்றில் வில்லு போல
இசிவாகிச் சந்தெங்கும் குடைச்ச லாகும்
பீறிடவே மனசுநொந்து பெருமூச் சாகும்
பிதற்றலாய் மனத்தில்வந்த படியே பேசும்
மாறிடவே மலசலமுஞ் சுருக்கிக் கொள்ளும்
மருவுகீழ்க் கவிசைமகோ தரமு மாமே.''

(பொருள்) அடிவயிற்றில் வில்லைப்போலக் கட்டியுண்டாய் உப்பச் செய்யும். மேல்வயிறு வில்போல வளைந்து, கால் கைகளின் பூட்டுகள் குடையும். பெருமூச்சு, வாய் பிதற்றல், மனத்தில் தோன்றிய படி பேசுதல், நெஞ்சு நோதல், சிறுநீரும் மலமும் சுருங்கல் ஆகிய குறிகுணங்கள் இந் நோயிலுண்டாம்.

மேற் கவிசைப் பெருவயிறு :

'' விசையான மேல்வயிற்றில் வில்லைப் போல
விளையுமே ஊனெல்லாந் திரட்டிக் கொண்டு
கசையான நரம்புதோல் சுருங்கிப் காணும்
கணத்திலே படபடப்பு மூச்சு மாகும்
குசையாவ மாரடைப்புக் குற்ற லுண்டாங்
குமட்டியே வாய்நீருங் குதிகொண் டோடும்
அசையான அன்னந்தான் வேண்டா தாகும்
அழுங்குமே மேற்கவிசை மகோதரந் தானே.''

(பொருள்) மேற்கவிச்சைப் பெருவயிற்று நோயில் வயிற்றுப் பக்கம் உள்ள ஊன் திரட்சிகள் எல்லாம் திரண்டு, மேல் வயிற்றினை வில்லைப் போல் வளையச் செய்து, வயிற்றின் தோல் நரம்புகள் யாவும் சுருங்கிக் காணும். இதனால் உண்டான வலியால், படபடத்த மூச்சு, மார்பு அடைப்பு, வயிற்றுக் குத்தல், வாய் குமட்டி உமிழ்நீர் மிகுதியாக வடிதல், உணவு வேண்டாமை ஆகிய இக் குறிகுணங்களும் தொடரும்.

பக்கக் கவிசைப் பெருவயிறு :

'' கவிசை போல் பக்கத்திற் பற்றிக் கொண்டு
கனமாக வயிறுகல் லழுந்த லாகும்
அவிசையாய் அடிவயிற்றிற் குமுறல் காணும்
அங்கதா கத்தோடு எரிவுண் டாகும்
புவிசைபோற் பொருமிவயி றுப்பிக் கொள்ளும்
புளித்தேப்பாய் நெஞ்சிலே யெரிச்ச லுண்டாம்
பவிசையாய் மலசலமுஞ் சுருக்க மாகும்
பக்கமகோ தரத்தினிடப் பரிசு தானே.''

(பொருள்) இதில் வயிற்றுள் எரிச்சலுண்டாகி , வயிறு கனத்துக் கல்லுப் போலாகி, அடிவயிற்றில் காற்றுக்கூடி மேகம் குமுறல்போல இரையும். நீர் வேட்கையும் எரிச்சலுமுண்டாகி, வயிறு பொருமி உப்பும். மேலும், புளியேப்பம், நெஞ் செரிதல், மலம் நீர் சுருங்கல் என்னுங் குறிகளையும் காட்டும்.

பழுக் கவுசைப் பெருவயிறு :

'' பரிசாகப் பழுவெலும்பின் முளையைப் போலப்
பற்றியே வயிறெல்லாங் கனத்து விம்மும்
உரிசாக உப்பசமு மேல்மூச் சாகும்
உழலையொடு தாபமுமா யுறக்க மாகும்
அரிசாக அன்னந்தா னிறங்கொட் டாது
வடிக்கடிக்கு வாயுத்தா னதட்டி யாகும்
செரிசாக வீங்கியே வற்ற லாகும்
திணறுமே பழுக்கவிசை மகோதரந் தானே.''

(பொருள்) இந்நோயில், உடலின் கண்ணமைந்த பழுவெலும்பு முள்ளைப் போல் வயிற்றுள் எழும்பி வயிறு முழுமையும் கனத்து விம்மும். அதனால், உப்பிசமும் மேல் மூச்சும் உண்டாய் அதிக தாபத்தையும் உறக்கத்தையும் வருவிக்கும். மேலும் அன்னம் ஏற்றுக் கொள்ளாது ; வயிற்றுள் அடிக்கடி காற்று கூடி வீங்கும். உண்ட சிறு உணவும் செரியாது, உடல் ஊதி மூச்சுத் திணறச் செய்விக்கும் ; ஆகிய குறிகள் தோன்றும்.

மாபெரு வயிறு :

'' திணறுமே காயந்தான் மிகவும் வற்றிச்
சீரணமாய் மந்தமுமா முதரந் தானும்
உணறுமே கல்லழுத்த மாக வீங்கி
யுறுதியாய் நரம்புமே புடைத்துக் காணும்
மணறுமே மலத்தையே மிகம றிக்கும்
வாடாம லூதியே மயக்கு விக்கும்
கிணறுமே தூறெடுக்க ஊறு மாப்போல்
கெட்டிக்கும் பெருவயிற்று மகோதரந் தானே.''.

(பொருள்) : இந்நோயில், மந்தமுண்டாகி உணவு கொள்ள முடியாமற் செய்வதன்றி, சிறிது உண்ணினும் அஃது செரியாமல், உடலின் குருதி வன்மை குறைந்து, உடல் வற்றும். வயிற்றின் நரம்புகள் புடைத்து வெளியாகி, வயிறு முழுமையும் நாளுக்கு நாள் பெரிதும் வீங்கிக்கொண்டே வரும். இவ்வீக்கம் எளிதில் வாடாது மூச்சுத் திணறும், எருவைக் கட்டும். அடிக்கடி மயக்கம் உண்டாகும். வயிறு வீங்கியபோது சுரந்த நீரை வெளிப்படுத்துதற்காகச் செய்யும் எந்த மருத்துவத்திற்கும் அது குறையாமல் கிணற்று நீர் சுரப்பது போலச் சுரந்துகொண்டே இருக்கும்.

சூல் பெருவயிறு :

'' மகோதரம்போற் சூலான மங்கை யர்க்கு
மாவருத்த முண்டாகி மயக்க மாகும்
அகோதரமா யங்கமெல்லா மழற்சி யாகு
மன்னந்தான் செல்லாது தண்ணீர் வேண்டும்
சகோதரமாங் கால்கையுஞ் சந்து வீங்கும்
கழலான காய்ச்சலொடு அருசி யாகும்
உகோதரமா யுடம் பெல்லா முளைச்ச லாகு
முற்றசூல்ம கோதரத்தி னுண்மை தானே. ''

(பொருள்) : பெண்கள் சூல் கொண்ட பொழுதுவரும் நோயாகும். இதில் வாய்ச்சுவை யறியாமை, உடல் முழுமையும் அனல் போலிருத்தல், உணவு வேண்டாமை, நீர் வேட்கை, கால் கைகளின் பூட்டுகள் வீங்கல், அடிக்கடி சுரம் வருதல், உடல் முழுமையும் நோதல் என்னுங் குறிகளைக் காட்டி வயிறூதி, நீர் சுரக்கும்.

வல்லைப் பெருவயிறு :

'' உண்மையா யுந்தியின்றன் நடுமை யத்தி
லுள்ளங்கை யகலந்தான் கட்டியாகத்
தண்மையாய்த் தமர்கொண்டு அடைத்தாற் போலச்
சாங்கமாய்க் கருங்கல்லாய்த் தானி ருக்கும்
பண்மையா யசனமது முண்டாற் செல்லாப்
பருகிடுமே சுடுதண்ணீர் தன்மே லிச்சை
வெண்மையாய்க் கால்கையு மசதி யாகும்
மிடுக்கான வல்லை மகோதரமு மாமே. ''

(பொருள்) : இதில், உந்திக்கும் மார்பு எலும்பிற்கும் நடுவில் உள்ளங்கை அகலமுள்ள கட்டி தமர்கொண்டு அடைத்தாற் போல அடைத்துக்கொண்டு, கருங்கல்லைப் போலக் கடினமாகக்காணும். அதனால், உணவு செல்லாமை, சுடு நீரின் மேலிச்சை கொள்ளல் கால், கைகள் வெளுத்துச் சத்தற்றுப் போதல் என்னுங் குறிகளைக் காட்டும்.

**நச்சுப் பெருவயிறு :**

" மிடுக்காக மேனியொரு பொத்தி பீசம்
வீங்கியே வெளுப்பாக மெலிவு மாகும்
அடுக்காகச் சிறுத்துமே பருத்துக் காணு
மாண்மையாயப் பீசமது தளர்ந்தி ருக்குந்
துடுக்காக மனிதருடன் வார்த்தை பேசுந்
துக்கமாய் மனக்கிலேச மெப்போ துந்தான்
நடுக்காக உடம்பெங்குந் திமிரு மாகும்.
நலியும்விட மகோதரந்தான் நாடிப் பாரே."

(பொருள்) : இந்நோயில், உடல் மெலிந்து விதைகள் வீங்கித் தளர்ந்து காணும். பிறரோடு படபடப்புடன் பேசுதல், உடலெங்கும் நடுக்கலும் திமிரும் உண்டாதல், மனவருத்தம் ஆகியவைகளுண்டாகும்.

வெளுப்புப் பெருவயிறு :

" வாடிப்பார் வகுத்தடியும் புறங்கால் வீங்கும்
வன்னமுகம் வேறுபட்டு மயிலு றக்கம்
தேடிப்பா ரோமமெங்குஞ் செம்மையாகும்
செயலான ரத்தமில்லா தெலும்பு மாகுங்
கூடிப்பார் மூச்சோடு குளுப்பை யாகுங்
குணக்கேடாம் பாண்டுமகோ தரத்தின் கூறே."

(பொருள்) : இந்நோயில், உடலின் குருதிவன்மை குறைந்து உடல் முழுமையும் வீங்கி, முகத்தின் நிறம் வேறுபாடடைந்து, நாடி சரியாக நடைபெறாது. மயிர் சிவந்திருக்கும். இரத்தமில்லாமல் உடல் எலும்புக் கூடாகி நடக்கவும் முடியாதிருக்கும். பெருமூச்சுவிடல், புறங்கால் வீங்குதல்; மயிலைப் போன்று கண்களை மூடிக்கொண்டே யிருத்தல் ; முகம் குளுப்பை போல் வீங்குதல்; வயிறு பெருத்துக் கொண்டே வருதல் முதலியவற்றை உண்டாக்குதல்.

வீங்கு பெரு வயிறு (சோபை மகோதரம்).

" கூறான அடிவயிறு குழைந்து உப்பிக்
கூப்பிட்டு மேல்வயிற்றில் பிகுவு மாகும்
தேறான வண்டமொடு காலுங் கையும்
சிதைத்துமெத்த வீங்கியே செழும்ப லாகும்
வீறான மேல்மூச்சு இருமல் தாகம்
விக்கியே சரீரமெலாங் குளிர்ச்சி யாகும்
தூறான மூத்ரமலஞ் சுருங்கிக் காணும்
சோபைமகோ தரமென்று செப்ப லாமே ".

(பொருள்) : இந்நோயில், மேல் வயிறு அழுத்தமாயிருக்கும் அடி வயிறு குழைந்து உப்பும், மேல் மூச்சு, இருமல், விக்கல், நீர்வேட்கை, உடம்பெல்லாங் குளிர்தல், சிறுநீரும் எருவும் சுருங்கல் என்னுங் குறிகுணங்களைக் காட்டி, வயிறு; விரை இவைகள் வீங்குவதோடு உடல் முழுமையும் வீங்கிக்காணும்.

மஞ்சட் பெருவயிறு (காமாலை மகோதரம்) :

" செப்பவே நடுக்கலொடு குளிர்ச்சி யாகும்
சீறியதோர் மூக்குமுகம் மார்பு வேர்க்கும்
உப்பவே உடம்புவரும் புறங்கால் வீங்கும்
உளைந்துமே அடிவயிறு மிகச்சு ருங்கும்
துப்பவே கோழையொடு சுரமு முண்டாம்
சுகமில்லா நித்திரைதான் றலைவ லிக்குந்
தப்பவே மிகத்தாகஞ் சலிக்குஞ் சிந்தை
தளருங்கா மாலைமகோ தரந்தா னாமே."

(பொருள்) : இந்நோயில், மஞ்சள் நோய் போல் (காமாலை) உடல் முழுமையும் மஞ்சளித்து, உடல் நடுக்கத்தோடு குளிர்ச்சியுண் டாகும். மூக்கு, முகம், மார்பு இவைகளில் வியர்வை விடும், தலை வலியோடு உடல் உலர்ந்து, புறங்கால் வீங்கி, அடிவயிறு சுருங்கி, கோழையோடு சுரமுண்டாகும். சுகமான உறக்கமிராது; சிந்தை சலிக்கும்.

குன்மப்பெருவயிறு :

'' தானாகக் குலைதனையே மிகவ லிக்குஞ்
சாப்பாடு செரியாமல் வயிறு குத்தும்
வேனாக மேனோக்கிச் சர்த்தி யாகு
மிடுக்கான வசீரணமாய்ப் பேதி யாகும்
பானாகப் பக்கவிலா விடுப்பு குட்சி
பனைத்துமே வீங்கியே கல்லு போலாம்.
கோனாகக் கோமயம்போ னீரி றங்கும்
குன்மமகோ தரத்தினிடக் குணங்கள் தாமே ''.

(பொருள்) : உண்ட உணவு செரியாமல், வயிற்றில் குத்துதல், குடலைப் புறட்டி வலித்தல் முதலியன ஏற்பட்டு வாந்தியையும் கழிச்சலையும் உண்டாக்கும். பின் விலாப் பக்கம், இடுப்பு, வயிறு ஆகிய இடங்கள் வீங்கிக் கல்லைப் போலக் கடினப்படும். அன்றியும், சிறு நீர் பசுவின் நீர்போலிறங்கும்.

மாபெருவயிறு (உதரமகோதரம்) :

'' குணமாக நாவறண்டு கண்சி வந்து
கொடிதான வாயுவது திரட்சி யாகும்
பணமாகப் பகர்ந்துநீர் போத வாங்கும்
பசியின்றிக் கனத்திருக்கும் மலம்வி டாது
வணமாக வயிறெல்லாம் மெத்த ஊதி
மார்பளவும் கழுத்தளவும் மறைய வீங்கும்
மணமாக வயிறுதான் மிகவே பீறும்
மகோதர ரோகத்தின் வளப்பந் தானே.''

(பொருள்) : இந்நோயில், நாவறட்சி, கண் சிவத்தல், வயிற்றுள் காற்றுக் கூடி வயிறு உப்புதல், நீர் வேட்கை, பசியின்றி வயிறு கனத்திருத்தல், வெளிக்குப் போகாமை இவைகள் உண்டாகும். இன்னும் அடிவயிற்றிலிருந்து மார்பு, கழுத்து வரையிலும், வயிறு ஒரே வீக்கமாகக் காணப்படும்.

ஆமைப் பெருவயிறு :

“ வளப்பந்தான் வறண்டுமே கண்சி வந்து
வயிறுவிம்மி வாயுவுந்தான் திரட்சி யாகும்.
இளப்பந்தா னிருகண்ணுரு சுருங்கிக் கொள்ளு
மிருமலோ டிளைப்புநீர் போத வாங்கும்
அளப்பந்தா னாமைபோல் வயிற்றில் கட்டி
அசனந்தான் செல்லாது பெலனுங் குன்றும்
குளப்பந்தா னிரைச்சலோடு குமுற லாகுங்
கூர்மமா மகோதரத்தின் குறிப்பி தாமே.”

(பொருள்) : இந்நோயில், கண்களின் பசை யுலர்ந்து வறட்சி யடைந்து, இரு கண்களும் சிவந்து சுருங்கி, இருமல், இளைப்பு, நீர் வேட்கை முதலியன உண்டாய், வயிற்றுள் வாயு (காற்று) மிகுந்து திரண்டு உருண்டு ஆமையின் ஓட்டைப் போலக் கட்டிக்கொண்டு, இரைச்சலும் குமுறுதலும் உண்டாகும். சோறு வேண்டாது, உடலின் வன்மை குறையும். இக்குறி குணங்களை யுண்டாக்கும்.

மண் ஈரல் பெருவயிறு (பீலிகை மகோதரம்) :

“ குறிப்பாகப் பரிசத்திற் கூர்மை யாகுங்
குணமாக மலமோடு சலமு முண்டாந்
தெறிப்பாக வாயுவது கீழே நோக்குஞ்
சடமெல்லாம் வீங்காமற் கொஞ்சம் வீங்கும்
முறிப்பாக அசனந்தான் மிகவே வேண்டும்
மூத்திரந்தான் மிகுதியாம் மூர்ச்சை யில்லை
பிறிப்பாகக் கண்களிலே ரத்த மாகும்
பீலிகைம கோதரமாய்ப் பேச லாமே.”

(பொருள்) : உணவு மிகுதியாக உண்ணல், கண்களில் குருதி கசிதல், கீழ்வயிற்றில் காற்றுப் புகுந்து அடிக்கடி காற்றுப்பரிதல், மிகுதியாக சிறு நீரும் மலமும் இழிதல், ஈரல் பெருத்துக்கொண்டே வருதல், உடல் முழுமையும் மிகவும் வீங்காமல் ஒரு சிறு பிரிவு மட்டும் வீங்குதல் என்னுங் குறி குணங்கள் இந்நோயில் காணும்.

**சுரப்பெருவயிறு :**

'' பேசவே காலோடு வயிறு பொத்திப்
பெருங்கணைக்காற் புறங்காலு மெத்த வீங்கி
வாசவே மார்பிடரி நரம்பு தோன்றி
வயிறுதான் மிகப் பொருமி மெத்த வீங்கும்
கூசவே சுரமோடு அசதி யாகும்
கொடியதோர் தாபமுண்டா மெரிச்ச லாகும்
வீசவே மிகவேண்டு மெரிச்சல் தன்னால்
வீங்குங்கண் சுரமகோ தரம்வி ளம்பே.''

(பொருள்) இந்த நோயில், சுரமும் வெப்பமும் உண்டாகி, உடலின் சத்தற்று உடல் முழுமையும் எரிச்சலாகும். காலொடு வயிறு பொதிந்து புறங்காலும் கணைக்காலும் வீங்கத் தொடங்கும். அதற்கு மேல் மார்பு, பிடரி இவைகளில் பச்சை நரம்பும் புடைத்துத் தோன்றி, வயிறு மிகப் பொருமி வீங்கும்.

**நீர்ப் பெருவயிறு :**

'' விளம்பவே யங்கமெல்லாஞ் சலந்தான் கோக்கும்
மேனியுமோ மஞ்சணிற மாகும் பாரு
உளம்பவே யுப்பசமு முழலை யாகு
முயர்கின்ற லிங்கந்தான் தளர்ந்து போகும்
மூளம்பவே முதுகோடு வயிறு வீங்கும்
மூலமாந் தாதுக்கள் திகைத்தே நிற்கும்
புளம்பவே பொறியைந்துங் கலங்கிப் போகும்
பொருமுமெத்த சலமகோ தரத்தின் போக்கே.''

(பொருள்): இந் நோயில், வயிற்றில் கட்டி தோன்றி, உடல் மஞ்சள் நிற மடைந்து முதுகும் வயிறும் வீங்கத் தொடங்கும். உடற்கட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் குறைந்து, ஐம்பொறிகளையும் கலங்கச் செய்யும். பின்வயிற்றுள் நீர் கோர்த்துச் சுரந்து, உடல் முழுமையும் வீங்குதலோடு, ஆண் குறியும் வீங்கி வளைந்து காணும்; பொருமலு முண்டாகும்.

சதைப் பெருவயிறு :

''போக்கான மாமிசந்தான் வளர்ந்து மீறிப்
பொருமியே அடிவயிற்றிற் கல்லைப் போலத்
தாக்கான சடந்தானு முலர்ந்து வற்றித்
தவிக்குமே யடிக்கடிதான் தண்ணீர் தேடி
வாக்கான மதுர மொழி குன்றிப் பேசி
வாயுதா னடிக்கடிக்கு மேலே நோக்கும்
நீக்கான மலசலத்தில் மாம்சங் காணும்
நேரான மாம்சமகோ தரத்தி னேரே.''

(பொருள்): இதில், வயிற்றிலுள்ள சதைகள் அளவிற்கு விஞ்சி வளர்தலும் வயிறு பொருமி, அடிவயிற்றில் கல்லை போல் அழுத்தமுங் காணும், உடல் வெப்பங்கொண்டு உடல் உலர்ந்து வற்றிப்போய், அடிக்கடி தண்ணீரைப் பருகச் செய்யும். இனிய சொற்கள் குழறும். மேல் நோக்குங்கால் மிகுந்து அடிக்கடி ஏப்பம் விடச் செய்யும். சிறு நீரிலும் மலத்திலும் இற்றியசதை காணப்படும் ஆகிய குறிகுணங்கள் காணும்.

தீரும் தீராதவை :

'' தேரான சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
நேர்பான வாதமகோ தரமும் பித்தம்
வாரான வழுவையொடு நழுவைநீ ராம்பல்
மகத்தான ஊராம்பல் வெப்புப் பாவை
வேறான மேற்கவிசை சூல்மகோ தரமும்
விஷமகோ தரம்வல்லைப் பாண்டு வாகும்
துரான சோபைமகோ தரங்காமாலை
துடிவுதர மகோதரமாங் கூர்மந் தானே.''

(பொருள்) வளிப் பெருவயிறு, மாபெருவயிறு, வழுவை, நழுவை நீராம்பல், ஊராம்பல், வெப்புப் பாவை, மேற்கவிசை, சூல் பெரு வயிறு, நஞ்சுப்பெருவயிறு, வல்லைப் பெருவயிறு, பாண்டு பெருவயிறு, சோகை பெருவயிறு, காமாலைப் பெருவயிறு, உதரப் பெருவயிறு, ஆமைப் பெருவயிறு ஆகிய இப்பதினாறும் தீரக் கூடியனவாம்.

" கூர்மமொடு பதினாறுஞ் சாத்திய மாகும்
குணமில்லா வசாத்யத்தைக் கூறக் கேளாய்
தீர்மமொடு சிலேட்டுமமாம் வாதசி லேட்மம்
சீறியபித் தச்சிலேட்மந் தொந்த மாகுங்
கார்மமொடு கல்மகோதரங் குலையின் முட்டி
கடியவில் மகோ தரங்கீழ்க் கவிசை யாகும்
பார்பக்கக் கவிசையொடு பழுக்கவி சையாகும்
பாரமாம் பெருவயிறு குன்மந் தானே."

" குன்மமொடு சுரமகோத ரம்பீலி கையுங்
கொடியசல மகோதரந்தான் மாமிச மாகும்
பன்மமொடு பதினாறு மசாத்திய மாகும்
பாடினதோர் முப்பத்திரண்டு மாச்சு
வன்மமொடு வடமொழியி னூல்சோ தித்து
மகேசுரன்தான் சொன்னபடி யுமையாள் கேட்டுத்
தன்மமொடு சகலருந்தா னறிய வென்று
சாற்றினேன் யூகியென்ற முனிவன் றானே."

(பொருள்) ஐயப் பெருவயிறு, வளி ஐயப் பெருவயிறு, அழல் ஐயப் பெருவயிறு, முக்குற்றப் பெருவயிறு, கல்பெருவயிறு, குலைமுட்டிப் பெருவயிறு, வில் பெருவயிறு, கீழ்கவிசைப் பெருவயிறு, பக்கக் கவிசைப் பெரு வயிறு, பழுக்கவிசை, மாபெரு வயிறு, குன்மப் பெரு வயிறு, சுரப் பெருவயிறு, பீலிகைப் பெருவயிறு, நீர்ப் பெருவயிறு, சதைப் பெருவயிறு ஆகிய இப்பதினாறும் எளிதில் தீராவாம்.

பொதுக் குறிகுணங்கள்.—முற்குறியில் கூறிய குறி குணங்களைக் காட்டி வயிறு முன்புறமாகப் பெருத்துக்கொண்டே வந்து, நீர்பெருக பெருக மேல் நோக்கி மார்பு வரையிலும், வயிற்றின் இரு பக்கங்களிலும் முட்டிப் பெருகும். வயிற்றின் பெருக்குக் கேற்ப வயிற்றின் இயற்கை மடிப்புகள் போய், வயிற்றின் சதைசத்தற்று, தோல் விரிந்த அளவிற்கு வெளுத்துக் கோடு கோடாகக் காணப்படும். தொப்புளும் குவிந்து, மெலிந்த தோலோடு தளதளத்து வெளிக்காணும். வயிற்றில் நீர் பெருகப் பெருக வயிறு தளதளப்போடு, உடல் அசையும் போதெல்லாம் தோல் பையிலுள்ள உள் நீர் அலைதல் போல் வயிற்றிலுள்ள நீர் மோதும். அன்றியும், தொடை, கால், விதை, ஆண் குறி இவை

களிலும் நீர் சுரந்து தளதளத்துக் காணப்படும். மேலும், நீர்க்கட்டு, மேல்மூச்சு, மார்பு துடித்துப் படபடத்தல் மயக்கம், முதுகு வீங்கல் என்னுங் குறிகளைக் காட்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள்.—இந் நோய்ப் பிறத்தற்கு வெகு நாட்களுக்கு முன்பே, அழல் குற்றமும் வளிக்குற்றமும் மிகுந்து கூடி, மேல் நோக்குக் காலை (உதான வாயு)த் தூண்டி, புளியேப்பம், வாந்தி வாய்க்குமட்டல், சுவையின்மை ஆகியவற்றை உண்டாக்கி, நடுக்கால் (சமானன்) தூண்டப்பட்ட அஃது உணவைச் செரியாத வாறும், பரவு காலை (வியானத் துண்டி உணவின் சாரத்தையும் (இரசத்தையும்) குருதியையும், பரவவொட்டாத வாறும் செய்து உடல் வன்மையையும், குருதியின் நிறம், எடை முதலியவற்றையும் கெடுத்து, உடலையும் வெளுக்கச் செய்யும். கீழ்நோக்குக் காலை (அபானனை)க் கட்டுப் படுத்தலால், சிறு நீரும் மலமும் கழியாமல் உடலில் நீர்கோத்து வீங்கும். அன்றியும், கட்டுப்பட்ட இக்காற்று வயிற்றுள் நிறைந்து பல துன்பங் களையும் விளைவிக்கும்.

நாடி :

வாதமெனும் நாடியது தோன்றில்................

..........................மகோதரம் நீராமை

................................

................................

சதக நாடி.

என்றதால், வளிக்குற்றத்தாலெழுந்த பெருவயிற்று நோயில் வளிநாடி யானது தன்னளவில் மிகுந்து நடக்குமென்க.

மருத்துவம்.—தன்னளவில் மிகுந்த குற்றங்களைத் தன்னிலையடை யும் வழியைத் தேடி, மிகுந்த கால்களையும் (வாயுகளையும்) தன்னிலைப் படுத்தவும், அவைகளால், கட்டுப்பட்ட எரு, நீர்களை வெளியாக்கவும், கேடடைந்த குருதியின், வன்மை நிறம் முதலியவைகளைப் பெறவும் மருத்துவங்களை செய்தல் வேண்டும்.

பிச்சலுக்கும் நீர் பெருக்கிற்கும் ஆன குடிநீர் :

1. நீர்முள்ளிக் குடி நீர் (சித்தவைத்திய திரட்டு).

2. சங்கன் வேர் அடைக் குடி நீர் (சித்தவைத்திய திரட்டு).

3. காக்கட்டான் வேர் பலம் ஒன்று, நெரிஞ்சி முள், நீர் முள்ளி, காசினி விரை வகைக்குப்பலம் அரை, இவற்றை முறைப்படி குடி நீரிட்டு, காலை மாலை இருவேளை கொடுக்கவும்.

4. சிறு கீரை பலம் அரை, மூக்கிரட்டை பலம் ஒன்றரை, சுரைக் கொடி பலம் அரை, அவுரி வேர் பலம் அரை, இவைகளை ஒன்றாகச் சேர்த்து அரைப்படி நீரிட்டு ஆழாக்காகக் காய்த்து, அரையாழாக்கு வீதம் காலை மாலைகளில் கொடுக்கவும்.

மாத்திரை வகைகளுள்:

1. காக்கட்டான் மாத்திரை, 2. சலோதாரி மணி, 3. கல்லுடைகு டோரி, 4, கோடா சூரி மாத்திரை இவற்றுள் ஒன்றைப் பயன் படுத்த லாம்.

மெழுகுவகைகளுள் :

நவஉப்பு மெழுகு, நவாச்சார மெழுகு, குமட்டி மெழுகு போன்றவை களில் ஏதேனும் ஒன்றை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக் வும்.

குந்றங்களைத் தன்னிலைப்படுத்தி, சிறுநீரைப் பெருக்கக் கூடிய பற்பசெந்தூர வகைகளும், லோகமண்டூரம், நாராயண மண்டூரம், அய நாக பற்பம், வங்கபற்பம், காந்தச் செந்தூரம், வெள்ளைப் பற்பம், வெடியுப்புச் சுண்ணம், நவாசார பற்பம் ஆகிய மருந்துகளைத் தக்க துணை மருந்துகளோடு கொடுக்கவும்.

## சிறப்பு மருத்துவம்

வளிப்பெரு வயிற்றுக்கு :

1. தேரையர் யமக வெண்பாவில் கூறியபடி வெள்ளி பற்பம், மிளகு ரசம், மிளகுக்குடிநீர், அல்லது மிளகுத்தைலம் இவற்றின் அளவறிந்து கொடுக்கவும்.

2. அயநாகப்பற்பத்தை வெள்ளாட்டுப்பால் அல்லது முலைப்பாலில் தரவும்.

3. வங்கச் செந்ர தூரத்தை வெந்நீரில் கொடுக்கவும்.

4. காந்தச் செந்தூரத்தை வெற்றிலைச் சாற்றிலும், பொற்செந் தூரத்தைக் கம்மாறு வெற்றிலைச் சாற்றிலும் கொடுக்கலாம்.

5. வளிக்குற்றத்தால் உண்டாகும் விக்கலுக்குத் தாளகச் செந்தூரத் தோடு திப்பிலி கூட்டிக் கொடுக்கவும்.

அழல் பெரு வயிற்றிற்கு :

( ) இரசச் செத்தூரத்தை எருக்கம் பழுப்பிலைச் சாற்றிலும், தங்கச் செந்தூரத்தைக் கற்றாழைச் சாற்றிலும் கொடுக்கவும்.

ஐயப்பெரு வயிற்றுக்கு காந்த செந்தூரத்தைத் துளசிச் சாற்றிலும், அப்பிரகபற்பத்தைப் பசுவின் பாலிலும், வெள்ளிச் செத் தூரத்தைக் கற்றாழைச்சாற்றிலும், பொன் செந்தூரத்தைப் பசுவின் பாலிலும், நாகச்செந்தூரத்தை நெய்தல் பூச்சாற்றிலும், பலகறைச் செந்தூரத்தை வெள்ளைப் பூண்டு ரசத்திலும் கொடுக்கவும்.

யாம் மருத்துவத்தில் கண்ட பழக்கவழக்கங்கள் கீழ்க்கூறிய வாறாகும்:—

1. பசுநீர் ஆழாக்கில், ஒரு பெருங்கடுக்காயை (சூரத்துக் கடுக்காயை) விரைநீக்கித்தட்டிப் போட்டு ஊறவைத்து, வடித்துக் காலை 5 மணிக்குத் தரலாம்.

2. காலை 6 மணிக்கு இஞ்சிச்சாறு அரைக்கால் ஆழாக்குக் கொடுக்கவும்.

3. காலை 7-30 மணிக்கு,வெடியுப்புச் செந்தூரம் ஒரு குன்றிஎடை, நவாச்சாரம் பத்து குன்றிஎடை, அயவீரச் செந்தூரம் இரண்டு குன்றி எடை, லோக மண்டூரம் ஒரு குன்றிஎடை கூட்டித் தேனி லிழைத்துக் கொடுத்துப்பின் நீர் முள்ளிக் குடிநீர் ஒரு ஆழாக்குக் கொடுக்கவும்.

4. முதல் கூறிய இரண்டும் தவிர, கடையது மட்டும் குடிநீரோடு மாலை 6 மணிக்குக் கொடுக்கவும், காலை 6 மணிக்கு கொடுக்கும் இஞ்சிச்சாற்றை மட்டும், நாள் ஒன்றுக்கு அரைக்காலாழாக்காகப் பெருக்கிக்கொண்டேவந்து ஓர் ஆழாக்கு அளவு வந்ததும், அந்த அளவிலேயே நோய் தீருமட்டும் கொடுக்கவும்.

வயிற்றின் வீக்கம் பெரிதாக இருப்பின், மேலுக்குச் சரக்கொன்றைப்புளி, வெடியுப்பு, எலிப்புழுக்கை ஆகிய மூன்றையும் கூட்டி நீர்விட்டு அரைத்து வயிற்றின் மேல் பற்றிடவும். அல்லது சரக்கொன்றைப் புளி, எலிப்புழுக்கை, கடகரோகணி இவற்றைக் கூட்டி அரைத்து வற்றிற்குப்பற்றிட நீரையும் எருவையும் கழித்து, வயிற்றில் தங்கிய காற்றும் வெளியாகும்.

**உணவு :** நீரைப்பெருக்கி எருவை இளக்கிக் கழியச் செய்யும் உணவுப்பொருள்களைக் கொடுத்தல் வேண்டும்.

பார்லிக் கஞ்சி, நெற்பொரிக்கஞ்சி இவைகள் கொடுப்பது நன்று. வேண்டுமாயின் மணக்கத்தை அரிசி அல்லது செங்குறுவை அரிசி இவற்றின் பொரிக்கஞ்சிகளையும் கொடுக்கலாம். அல்லது வெள்ளரி வித்து, சுரைவித்து, முலாம்பழவித்து, தர்பூசினி வித்து இந்நான்கையும் ஓர் அளவாகக் கூட்டி அதில் ஒரு சிரங்கையை நீரிலிட்டுச் சிறிது நேரம் ஊறியபின் அம்மியிலிட்டு நெகிழ வரைத்து, கஞ்சியாகக் காய்த்துக் கொடுக்கலாம், அல்லது அடையாகத் தட்டிச் சுட்டும் கொடுக்கலாம்.

கீரைவகைகளில், முள்ளிக்கீரை, சிறுகீரை, முள்ளங்கிக்கீரை, தாளிக்கீரை, சோகிக்கீரை, மணத்தக்காளிக்கீரை, சீமைக்காசினிக் கீரை இவைகளில் ஏதேனும் ஒன்றை மாற்றி மாற்றித் துவட்டிக் கொடுக்கலாம்.

நோய் வன்மை குறைந்து வரும்போது இருமுறை வடித்த சோறுடன் காய்கறி வகைகளும், மேற்கூறிய கீரைவகைகளும், முள்ளங்கி, வெண்டைப்பிஞ்சு, கத்திரிப் பிஞ்சு, பீர்க்கன், புடலை, முருங்கை போன்றவைகளையும் கொடுக்கலாம்.

## குடற் பிடிப்பு நோய்.

வேறு பெயர் : ஆநாக நோய்.

இயல் : இது, வயிற்றிரைச்சல், வயிற்றுவலி, வயிற்றுப் புரட்டல், எருக்கட்டு (மலக்கட்டு), பெருமூச்சு, சுரம் இவைகளை உண்டாக்கி, வயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டு நிமிர முடியாதவாறு துன்புறுத்தும்.

நோய்வருவழி : தன் வன்மைக்கு மிகுந்த உழைப்பு, விரைவாக ஓடல், எளிதில் செரிக்கக் கூடாத உணவை உண்ணல், வயிற்றின் மேல் அடிபடல், உணவில்லாமல் பன்னாட்கள் இருந்தபின் வயிறு நிறைய உண்ணல் ஆகிய இவைகளால் இந்நோய் உண்டாகும். அன்றியும், வயிறு, குடல் இவைகளில் உண்டாகிய புண் குடலைத் துளைத்தலாலும், குடல் ஏற்றம், குடல் தாபிதம் முதலியவைகளாலும் இந்நோய் உண்டாகுமென்பர்.

முற்குறிகள் : இந் நோய், வயிறு இரைந்து இரைந்து நோதல், வயிறு ஊதுதல், வயிற்றுள் தாங்க முடியாத நோய் உண்டாதல், குடல் புரட்டல், மூச்சு விடமுடியாமை, வயிற்றை இழுத்துப் பிடித்து நிமிர வொட்டாதவாறு செய்தல், வாந்தி, ஏப்பங்களை யுண்டாக்குதல், எதனினும் விருப்பங் கொள்ளாமை, எருவை (மலத்தை)க் கழியச் செய்வதற்காகக் கொடுக்கும் எண்ணெய், பீச்சு முதலியவைகள் பயன் தராமை ஆகிய குறிகளைக் காட்டும்.

நோய் எண் : இந் நோய் ஒன்றேயாயினும், இதில் தோன்றும் சில குறிகளைக் கொண்டு நான்கென வகுத்துள்ளனர். குடற் பிடிப்பு நோயில், வயிற்றில் வட்டமாகத் திரண்டு கடினப்பட்டு ஒரு கட்டியைப் போல் மேல் எழுந்து காண்பதை (1) அட்டிலம் என்றும்; அவ்வெழுச்சி நீண்ட வடிவத்துடன், அம்மிக் குழவிபோல் காணின் (2) பிரதியட்டிலம் என்றும்; மேல் வயிற்றிலிருந்து கீழ்நோக்கிக் காற்று இரைந்து தாக்கித் தாங்கமுடியாத வலியை உண்டாக்கின் (3) துநி என்றும்; மேற்கூறியவாறே அடிவயிற்றிலிருந்து மேல்நோக்கி வலிக்குமாயின் அதனை (4) பிரதி துநி என்றும் இதை நான்கு வகையாக வகுப்பர். ஈதன்றியும், சிலர் தடித்துக் குழகுழத்த சுனைநீர், மிகக் குளிர்ச்சியான உணவு

ஊசிய உணவு இவற்றைக் கொள்ளுவதால், அவைகள் வயிற்றுள் செரியாமற்றங்கி, வயிறு உப்பி, சட்டியைக் கவிழ்த்தாற் போன்ற வடிவத்துடன் ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்கு ஓடித்திரிந்து துன்பங்கள் பலவற்றைச் செய்யும் நோயினை தீராமையெனச் சொல்லி அதைக் குடற்பிடிப்பு (ஆநாக) நோயினில் இணைத்துள்ள னர். இது வடிவினில் கட்டிபோற்றோன்றினும் உண்மையில் கட்டியன்று. மேற்கூறிய உணவு வயிற்றுள் புளித்து, காற்று மிகுந்துகூடி, குடலில் நிறைந்து, எளிதில் வெளியாகாமல் குடல் வழியே யோடிப் புரளும் வடிவேயாகும். கீழ் நோக்குக் காலை (அபானவாயுவை)த் தூண்டிக் கழியச் செய்யும் மருந்துகள் கொடுக்கின் அதுபோம்.

நோயின் பொதுக் குறி குணங்கள் : முற்குறியில் கூறிய குறிகள் தோன்றிய சிறிது நேரத்திற்கெல்லாம், தாங்கமுடியா வலியைத்தந்து, படுக்கையில் கிடக்கச் செய்யும். தாங்க முடியாத வயிற்று வலியின் கொடுமையால், அடிவயிற்றை அசைக்க முடியாமை, கை கால் சில்லிடல் முதலிய குறி குணங்களை உண்டாக்கித் தாடை வெளுத்தல், இடைவிடாத வாந்தி, அடிக்கடி காற்று வெளியாயினும், வெளிக்குப் போகாமை, விக்கல், கை கால் தளர்ந்து போதல், கண் பஞ்சடைதல், நாடிதளரல், பிசுபிசுத்த வியர்வை, சிலவேளை குளிர்தல், சிறு சுரம் என்னுங் குறிகளோடு முப்பிணிக்குரிய குறிகள் தொடர்ந்து சாக்குறியை யும் காட்டும்.

(1) அட்டிலநோயில் வயிற்றில் வட்டமாய்த் திரண்டெழுந்து காணும். இந் நோய் வயிற்றை (தீனிப்பையை) ப் பற்றி வருவதாகும் இதன் பொதுக் குறி குணங்களில் கூறியவைகளோடு, வயிற்றுவலி, மேல் வயிறு மிகுதியாய் நோதல், வாந்தி மிகுதிகள் முதலிய குறிகள் உண்டாக்க, விரைவில் கெடுதிகள் பலவற்றைத் தரும்.

(2) வயிற்றில் நீண்டு திரண்டெழும் கீழ் அட்டில் நோயில், சிறு குடலிலும் பெருங் குடலிலும் நோய் உண்டாகும். இதில் காணும் குறிகுணங்கள் மேற்கூறிய நோயினை ஒக்கும். இதனைப் பிரத்தியட்டிலம் என்பர்.

(3) துநி : இஃது உண்ட உணவைச் செரிப்பிக்காதபடி குடலைத்தாபிக்கச் செய்து, குடல் இயற்கையாய்க் கீழ் நோக்கி ஊடுருவுவதை விட்டு, பெரும் புழுப்போல் மேல்நோக்கி, குடலை ஊடுருவச் செய்யும். இவ்வாறு குடல்மேல் நோக்கி ஊடுருவது கண்ணுக்கும் புலப்படும். இத்தனைத் துநி என்பர்.

(4) பிரதி நுநி : இந் நோயில், இயற்கையாக நாம் உண்ணும் உணவு அகட்டில் (வயிற்றில்) சென்று ஆங்குச் சமைக்கப் பெற்று, கீழ் நோக்கிக்குடல் வழியே உணவின் சாரத்தை ஊட்டி பின் வேண்டாப் பொருளைக் கழிபொருளாக வெளிப்படுத்தும் முறையில், வயிற்றிலிருந்து கீழ்வாய் வரையில் உள்ள குடல், புழு ஊர்வது போல் கீழ்நோக்கி ஊர்வதைவிட்டு, இயற்கைக்கு மாறாக மேல் நோக்கி ஊரும். ஆதலின், முதல் முதலில் வயிற்றுள் உள்ள பொருள்கள் யாவும் வாந்தியாய் மேல் நோக்கி வெளியாகும். பின் பித்து நீர் நீராக வாந்தியாகி, அதன் பின் சிறு குடலில் உள்ளதும் அதன்பின் பெருங் குடலில் உள்ளதுமான கழிபொருள்கள் யாவும் (மலம்) வாந்தியோடு வெளியாகும். இந் நோயில் மேல் நோக்கி ஊரும் குடலின் இயக்கத்தின் வடிவை நாம் நன்றாகக் காணக்கூடும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : உணவு, தொழில் முதலியவைகளால், வளிக் குற்றம் தன் அளவில் மிகுந்து, மேல் நோக்குக்கால், கீழ் நோக்குக்கால்கள் (உதான, அபான வாயுகள்) தத்தம் இயற்கை தொழிலை விட்டு அதற்கு எதிர்த் தொழிலைச் செய்யுமாறு தூண்டி, தனக்குத் துணையாய் ஐயத்தையும் கூட்டிக்கொண்டு நோயை வலுக்கச் செய்யும். கடைசியில் முக் குற்றமும் கூடிக் கொல்லும்.

மருத்துவம் : தன்னளவில் மிகுந்த வளிக் குற்றத்தையும் காலையும் (வாயுவையும்) தன்னிலைப் படுத்தும் பொருட்டு, கழிச்சல் உண்டாக்க, தேன்,பால், சிற்றாமணக்கு எண்ணெய் ஆகிய இம்மூன்றையும் ஒர் அளவாக ஒரு பலமாகக் கொண்டு பீச்சுக் கொடுக்க வெளிக்குப்போம். அல்லது கழிச்சலைச் செய்யும் எண்ணெய் வகைகளில் ஏதேனும் ஒன்றைத் தக்க அளவில் கொடுத்துக் கழியச் செய்யலாம். வயிற்று நோய் அடங்க, வயிற்றுக்குப் பாலும் நீரும் கூட்டிச் சூடாக்கி, துணியைத் துவைத்து

ஒற்றடமிடவும். உள்ளுக்கு, உப்புச் செந்தூரம், குமட்டியுப்பு, பிரண்டை வடகம், குன்மக்குடோரி, தாளிசாதி வடகம் இவை போன்றவைகளைக் கொடுக்கவும்.

> " உண்டவூண் செரியா தாகில் ஊண்மிகச் செல்லா தாகில்
> கொண்டதோர் வாயு முற்றிக் குடல்வலிப் புரளு மாகில்
> பண்டுகொல் மருந்து செய்யில் பார்க்கவே வேண்டு மென்றால்
> வண்டுசேர் குழலினாளே மரணமென்றிதனைச் சாற்றே."
>
> [நாடி நூல்].

என்றதில் இந்நோய் கெடுதியைச் செய்யக்கூடிய நோயதாலால்,

இம் மருந்துவத்தினால், ஒன்று அல்லது இரண்டு மணிக்குள் நோய் கட்டுபடவில்லையேல், இந்நோய் மருந்துவத்திற்கு அடங்காது என அறிதல்வேண்டும். அறுவை மருத்துவத்தில் ஒரு வேளை நோயுற்றவன் பிழைக்கினும் பிழைப்பான்.

## பெருங் கழிச்சல்.

வேறு பெயர்கள்.—மிகுகழிச்சல், அதிசாரம்.

இயல்.—உண்ட உணவு செரித்ததும் செரியாததுமாகவும் கழிவதும், சில வேளை கீழ்க்குடல் வெதும்பியிருப்பின், அங்குத் தங்கமுடியாமையால், உடனே கழிந்துவிடுவதும், உடற்கு ஊட்டந் தருவதற்காக உண்ணும் உணவு, குடலிற்றங்காது வெளியாகி விடுதலும், உடலின் ஊட்டங் குறைந்து உடல் மெலிவடைவதும். உண்ட பொருள் அணைத்தும் அடிக்கடி பலமுறை கழிவதுமான இயல்புடைதல் பெருங்கழிச்சலெனவும், உணவின் சாரத்தை உடலுக்களிக்காது வெளிக்கொண்டு வருவதாலான இயல்புடைதல் அதிசாரம் எனவும் வழங்குவாராயினர்.

நோய் வருவழி.—மாப்பண்டம், புலால், நெய், எண்ணெய் வகைகள் கூடிய உணவுகளை மிகுதியும் புசித்தல், அழுகியமீன், அழுகிய காய்கறிகள், ஊசிய பொருள்கள், எளிதில் செக்கக்கூடாத உணவுகளாகிய புலவு,

கிச்சடி, வெல்லநீர் இவைகளை மிகுதியாக உண்ணல் முதலியவற்றாலும் வயிற்றில் மந்த முற்றபோது புணர்தலாலும், பசித்தீக் கேடடைந்து, கீழ் நோக்குக்கால் (அபானவாயு) தூண்டப்பட்டு, பெருங்கழிச்சல் நோய் உண்டாகும். அன்றியும், வயிற்றுப் புழு மிகுந்திருப்பினும் இந்நோய் பிறக்கும் என அறிக.

முற்குறி குணங்கள் : உண்டபின் வாய் நீர் ஊறல், வாய்க் குமட்டல், விக்கல், ஏப்பம், வயிறு உப்பல், குடல் இரைதல், வயிறு நோதல், அடி வயிறு இழுத்துப் பிடித்தாற் போலிருத்தல் ஆகிய குறி களைக் காட்டி, வயிறு கடுத்துக் கழிச்சல் தொடங்கும்.

எண் : இந்நோய், வளி, தீ, ஐயம், முக்குற்றம் என நான்காகக் கூறுவர் ஓர் சாரார். புள்ளினம் (பறவை) முதலியவற்றால் வருவதைத் தோடப் பெருங்கழிச்சலென்றும், சுரநோயில் கழிச்சலாவதைச் சுரப் பெருங்கழிச்சலெனவும், பயம், துக்கம் முதலியவைகளால் உண்டான மன அதிர்ச்சியால் வருங்கழிச்சலைத் துக்கக் கழிச்சல் என்றும், குடலில் உண்டான அதிர்ச்சியால் குடலில் ஏற்பட்ட புண்ணிலிருந்து வடியும் குருதி குருதிக் கழிச்சல் என்றும், நான்கும் கூட்டி எண் வகையாய் மற்றொரு சாராரும் கூறுவர். ஆயினும், இங்குக்குற்ற அளவாகிய வளி, தீ, ஐயம் முக்குற்றமென நான்கை முதலில் கூறி மற்ற வகையால் கூறிய யாவையும் பின்பு கூறுவாம்.

வளிப் பெருங்கழிச்சல் :

''சாற்றவே வயிறுதனைப் பொருமி நொந்து
 தனிச் சூலை போலவே வாயு தோன்றும்
ஆற்றவே நீரிறங்கா அசனந் தானும்
 அரைவாகி சீரணமாயப் பேதி யாகும்
மாற்றவே மஞ்சளித்துக் கருக்கும் பேதி
 மகத்தான துர்கந்தம் வெளுப்பு மாகும்
நீற்றவே நெஞ்சுதனிற் புளித்தேக் காகும்
 நேரான வாதாதி சார மாமே.''

(பொருள்) இந்நோயில், வயிறு பொருமி நொந்து சூலை நோய் போல் வலித்து, வயிற்றில் காற்றுக் கூடி இரையும். நீர் இறங்காது அடிக்கடி கழியும். உண்ட உணவு சரிவரச் செரிக்காமல் மஞ்சளித்தாகி லும், கருத்தாகிலும் மிக நாற்றத்தோடே நெஞ்சில் புளியேப்பமும் உண் டாகும்.

அழல்பெருங்கழிச்சல் :

''ஆமென்ற மலந்தானு மஞ்ச ளித்து
அதிகமாய் வறண்டுமே நுரைதான் பாயும்
வாமென்ற வாயுதான் மிகவுண் டாகும்
வற்றியே உடம்பெங்குங் கால்கை வீங்கும்
காமென்ற கலங்காய்ச்சல் போலக் காயும்
கருதியே யுடம்பெங்கும் வெண்மை யாகும்
தாமென்ற தலைவலித்து வாந்தி யாகுஞ்
சமரசமாம் பித்தாதி சார மாமே.''

(பொருள்) அழல் குற்றத்தால், பிறந்த கழிச்சல் மஞ்சளித்து நுரை கூடி, மிகுந்த காற்றுப்பறிந்து இழியும். உடல், கைகால் வீங்கி, காய்ச்சலோடு, உடல் வெளுத்து, தலை நொந்து வாந்தி யுண்டாம்.

(2) ''தோணுந் தொப்பூழ் முறுக்குண்டாந்
துவளு கடுப்பு ரத்தம் விழும்
மாணு மலங்கள் கறுத்து விழு
மப்பா லிளகி நுரையுண்டாம்
பூணுங் குருதியதி சாரமென்று
பிரித்துச் சொன்னோ மலந்தங்கும்
வேணு மிதற்குக் குறிப்பறிந்து
வேண்டதி சார பித்தமுமே. ''

(பொருள்) அன்றியும் இந்நோயில், கொப்பூழைச் சுற்றியுள்ள குடல் முறுக்கி வலித்து, உடலைத் துவளச் செய்து, வயிறும் கீழ் வாயுங் கடுத்து, முதலில் கருமையாகவும் நுரையுடனுங் கூடிக் கழியும். பின்பு குருதி குருதியாய்க் கழியும்.

ஐயப்பெருங் கழிச்சல் :

சாரமாய் நாற்றந்தான் மிகவுண் டாகித்
தவளம்போ லேவெளுத்து நுரையு மாகி
வாரமாய் வயிறுவலித்துப் பேதி யாகும்
மாமிசந்தான் சத்துசத் தாய்விடுக்கும்
ஆரமாயருசியொடு இருமல் சுவாசம்
அழுந்திமயிர்க் கூச்செறிந் தாசனங் கடுத்தல்
தீரமாய்த் தேகமெங்குந் தினவுண் டாகுஞ்
சிலேட்மாதி சாரமென்றே செப்பலாமே.''

(பொருள்) இந்நோயில், மிகுந்த, நாற்றத்துடன் நுரைத்து, வயிறு அடிக்கடி வலித்துக் கழியும். சில வேளை குடல் இரைத்துச் சளிபோல் வீழும். இந்நோய்க்குத் துணையாய்ச் சுவையின்மை, இருமல், மார்பு சளி, பெருமூச்சு. மயிர்ச் சிலித்தல், எருவாய் கடுத்தல், உடல் முழுமையும் தினவெடுத்தல் ஆகிய குறிகளும் தொடரும்.

மூக்குற்றப் பெருங்கழிச்சல் :

''செப்பவே உள்ளெரிவாய்ப் புறங்கு ளிர்ச்சி
செழுமைவிக்கல் வாந்தியோ டிருமல் சுவாசம்
துப்பவே வயிறிரைந்து பொரும லாகிச்
சுருட்டியே வயிறதுவும் வலித்துக் காணும்
இப்பவே இரத்தசீ தக்கழிச்சல்
எழிலான நித்திரையு முடல்நடுக்கம்
உப்பவே உடற்குத்து முணர்ச்சி இன்மை
உருகுதிரி தோஷவதி சார மாமே.''

(பொருள்) வயிறு இரைந்து, பொருமிச் சுருட்டி வலித்துக் குருதி, சளி கலந்து அடிக்கடி கழியும். அன்றியும், மார்பில் கோழை இருமல், பெருமூச்சு, இழுப்பு, உடம்பினுள் ஓர் அழற்சி, மேலுக்குக் குளிர்தல், விக்கல், வாந்தி ஆகிய குறிகளையும் காட்டும்.

இந்நான்கு வகைகளல்லாமல், மற்றும் நான்கு வகைகளுண்டெனச் சில நூலோர் கூறுவர். அவை சுரப் பெருங் கழிச்சல், தோடப் பெருங் கழிச்சல், பயப் பெருங் கழிச்சல் என்பனவாம்.

(5) சுரப் பெருங் கழிச்சல் : இது சுர நோய்க்குத் துணையாக வரும் நோயாகும். இன்னும் இது சுரநோய்க்குக் கழிச்சலே பெருங் குறியாக உள்ள டைப்பாயிட், டைப்பஸ் என்னும் நோயையும் குறிக்கும். இந்நோயின் குறி குணங்களைச் சுரப் பகுதியில் காணலாம்.

(6) தோடப் பெருங் கழிச்சல் : இது சிறு பிள்ளைகட்குப் புள்ளினத்தின் பார்வையால் உண்டாகும் கழிச்சல் எனக் கூறுவர். இதனைக் குழந்தை மருத்துவத்தில் காணலாம்.

(7) பயம், துக்கம் : இதனளவாக உண்டான மனக்கலக்கத்தால், குற்றங்கள் தன்னிலைப் புரண்டுவரும் கழிச்சலாகும். இந்நோயினை மனத்தைத் தன்னிலைப் படுத்தற்கான வழியைத் தேடி, மிகுந்த குற்றத்தைத் தணிக்கச் செய்ய வேண்டும்.

(8) குருதிக் கழிச்சல் : இந்நோய், மிகுந்த காரம், புளிப்புக் கூடிய உணவுகளைக் கொள்வதாலும், இரசம், பாடாணம் கூடிய மருந்துகளைப் பெரு அளவிலேனும், அல்லது, நாள் அளவில் மிகுந் தேனும் கொள்ளினும், அல்லது வெளிக்கு வழங்கும் குன்றிமணி, இந்திர மூலம், செங்கொட்டை, மூசாம்பரம் போன்ற புண்ணாக்கக் கூடிய, பொருள்களைக் கொண்டு செய்த மருந்துகளை உள்ளுக்குக் கொடுப் பினும், அல்லது இவை போன்றவைகளை உள்ளுக்குச் செய்தனவற்றை அளவறியாது கொடுக்கினும் அவைகள் குடலைத் தாபித்துப் புண்ணாக்கி அதினின்று வடியும் குருதியைக் குருதி கழிச்சல் என்பர். அன்றியும் சீதக் கழிச்சல் போலவே, சீதம் அல்லது எருவின்றிப் பச்சைக் குருதி போன்று இழிவதையும் குருதிக் கழிச்சல் என்பர். இவைகளைப் பற்றி நஞ்சு நூலிலும், இந்நூலில் சீதக் கழிச்சல் பகுதியிலும் காண்க.

ஆகலின், இந்நான்கு வகை நோய்க்கும் தனித்தனியே குறிகுணங்கள் மருந்து, உணவு வகைகள் ஆகியன கூறாது விடப்பட்டன.

நோயின் பொதுக் குறிக் குணங்கள் : வாய் நீர் சுரத்தல், உணவில் இச்சையின்மை, உண்ட உணவு செரியாமை, புளித்தேப்பம், விக்கல், வாய் குமட்டல், வயிறு நோதல், வயிறு இரைதல் என்னும் முற்குறி களைக் காட்டி, அடி வயிறு உப்பி இரைந்து, நொந்து செரித்ததும் செரியாததுமாய் அடிக்கடி கழிதல், நாளுக்கு நாள் கழிச்சல் மிகுதியாதல், உடல் வன்மை குறைந்து உடல் வாடல், வறண்டு போதல், உடலின் குருதி மெலிவடைந்து உடல் வெளுத்தல், கால் வீங்கி நீர் கோர்த்தல், ஊக்கமின்மை, மனம் தளர்தல், சோர்வு, வெகுளி, கைகால் சில்லிடல் என்னுங் குறி குணங்களைப் பெறும். தக்க மருத்துவம் செய்யாவிடின் கொறுக்கு வலி, நாடிதளரல் (வாதம் அடங்கல்) முதலியன கண்டு, நீர்க்கட்டுண்டாய் உயிரையும் போக்கும் ; புத்திமட்டும் சாகும் வரை தன்னிலையில் நிற்கும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : செயல், உணவு இவைகளின் வேறுபாட்டால், அழல் குற்றமாகினும், வளிக் குற்றத்தில் அழல் குற்ற மணுகினும், மேல் நோக்குக் காலை (உதான வாயுவை) எழச் செய்து உணவைச் சரிவர செரியாதபடி செய்து, வாய் நீர் ஊறல், விக்கல், ஏப்பம் என்னும் இவைகளை உண்டாக்கி, பின் கீழ் நோக்குக் காலைத் தூண்டி, வயிற்றைப் புரட்டல், காற்றுச் சேரல், இரைதல், கழிதல்

என்பவைகளைப் பிறப்பித்து, உடற் கட்டுகளில், குருதியைக் கேடடையச் செய்து, உடல் வெளுத்தல், கால் வீங்கல் என்னும் குறி குணங்களை உண்டாக்கும்.

நாடி :

(1) ''சிறப்பான வாதத்தில் உஷ்ணந் தானே
சேர்ந்த தனில் அதிசாரம் .''

(2) ''தழைப்பான பித்தத்தில் உஷ்ணம் சேர்ந்தால்
அதிசாரந்தான்''.

(3) ''உறுதியுள்ள பித்தமது தோன்றில்.. அதிசாரம்

(4) தானமுள்ள சேத்துமந்தானிளகில்.. அதிசாரம்

......அதிசாரம் தான்

(5) ''சிறப்பான சேத்துமத்தில் பித்தந்தான்
எழுந்தணுகில் அதிசாரந் தானாகுமே.''

(சதகநாடி).

நீர் : குறைந்து, மஞ்சள் அல்லது சிவந்த நிறம் பெறும்.

எரு : மஞ்சள், கருப்பு, வெளுப்பு என்னும் நிறங்களோடு, நீர் நீராக எழுந்த குற்றத்தின் அளவாய்க் காணும்.

மருத்துவம் : இந்நோயில் பசித்தீக்கெட்டு, குற்றங்களைத் தூண்டி கீழ்நோக்கு வாயுவைப் பெருகச் செய்து வருமாதலால், பசித்தீயை, தூண்டுதற்கான மருந்தையும், உணவு வகைகளையும்,கொண்டு, தன்னளவில் மிகுந்த குற்றங்களையும், வாயுவையும், தன்னிலை படுத்துகற் பொருட்டு, நோயின் வன்மை உடல்நிலை இவைகளுக்குத் தக்கவாறு மருந்தளித்தல் வேண்டும்.

தாதுமா தளம்ப ழத்தோல் தானே கண்டீற் சுக்குடனே
மீதேயா ரொன்று முக்கழஞ்சு விளங்கீர் நாழி நீரிலிட்டு
தீதே யுராத வறுநாள்தான் றிருந்தக் காய்ச்சி யுழக்காக்கி
மாதே கழிநீர் தேன்விட்டு வருந்தீ ரதிசாரம் போமே.

மாதுளம் பழத்தோல், சுக்கு ஒவ்வொன்றும் மூன்று கழஞ்சாக் கொண்டு, இரண்டுபடி நீரிட்டு உழக்காகக் காய்த்து வடித்து தேனுங் கூட்டிக் குடிக்கப் பெருங்கழிச்சல் நீங்கும்.

'' அதிவி டையங் கூவிளம் ஆயிரு வேலி முத்தமுடன்
விதமா மோரொன் றிருகழஞ்சு மிக்கநீரு மிருநாழி
பதமாய்க் காய்ச்சி யுழக்காகப் பரிந்த திப்பிலி சுக்குடனே
குதமாய் மேன்பொடி தான்போட்டுக் குடிக்கத் தீருந் திடமீதே.''

அதிவிடயம், வில்வப்பழம், இருவேலி, கோரைக்கிழங்கு வகைக்கு இரு கழஞ்சு கொண்டு இரண்டு நாழி நீரிட்டுக் காய்ச்சி அதில் திப்பிலியும் சுக்கும் பொடித்துக் கூட்டி அயிலவும்.

'' காரார் முத்தற் காசுசந்தங்
கழுநீர் கோட்டம் நன்னாரி
சீராஞ் சிறுகாஞ் சோன்றியுடன்
தேவ தாரம் பற்பாடகம்
நீராக்கமலந் தனில் வளையம்
நிலவேர்க் கொம்பு தன்னுடனே
ஆரார் பங்கம் பாளையுட
னசமோ தகமுந் தேடுகவே.''

'' தேடுஞ் சேர வேரொன்று
சிறக்கக் களஞ்சாய் நிறுத்ததிலே
ஓடும் புனல்தா னிருநாழி
யுடனே தான்விட் டுழக்காக்கிப்
போடும் புதிய வதிவிடையம்
பொடியிட் டருந்தப் பித்தசுரம்
வாடும் பித்த வதிசார
சுரமும் மாறும் மங்கையரே.

கோரைக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், நன்னாரி சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், தாமரை வளையம், சுக்கு, பங்கம் பாளை, ஓமம், வகைக்கு ஓர் கழஞ்சு, நீர் படி இரண்டு, இட்டு உழக்காகக் காய்ச்சி வடித்து அதில் அதிவிடையம் பொடிக் கூட்டி யுண்ண, சுரத்தோடு வரும் பெருங் கழிச்சல் நீங்கும்.

" முகமா துளைப்பிஞ் சதிவிடயம்
முத்தக் காசு பெருமரத்தோல்
தகைசேர் சுக்கு விளாங்காயின்
சதையோ ரொன்று கழஞ்சிரண்டு
வகையாய்க் கூட்டி இருநாழி
யுழக்காய்க் காய்ச்சிப் போதருந்தப்
பகையாய் வருமதி சாரசுரம்
போகும் பாரிற் பாரீரே.

தே. குடிநீர் நூறு

(பொருள்) : மாதுளைப் பிஞ்சு, அதிவிடையம், முத்தக்காசு, பெருமரத்தோல், சுக்கு , விளாங்காய் சதை, ஆகியவைகளை வகைக்கு 2 கழஞ்சு கூட்டி, 2 நாழி நீர்விட்டு 1 உழக்காய்க் காய்ச்சி அருந்த அதிசார சுரந்தீரும்.

## திப்பிலியாதிக் குடிநீர்

" தோணுந் தொப்புள் முறுக்குண்டாந்
துவளும் கடுப்பு ரத்தம்விழும்
மாணு மலங்கள் கருத்துவிழ
மப்பாலிளகி நுரையுண்டாம்
பூணுங் குருதி யதி சார
மென்று சொன்னோ மலந்தங்கும்
வேணு மிதற்குக் குறிப்பறிந்து
வேண்டதி சார பித்தம்போமே

" பித்ததி சாரந் தானென்று
பெருக்கக் குறிதான் கண்டபின்பு
உத்த கிரிகை செய்தவர்க்கு
முரைப்போங் கற்ப முண்மையென
மெத்த திப்பிலி கொடிவேலி
மிகுந்த வசம்பு வெட்பாலை
உத்த மூல மிலந்தைவேரு
முத்த மதி விடையஞ்சேரே."

'' விடையஞ் செவியும் ரோகணியு
மிகுந்த தேக்கு திரிகடுகு
அடவே குரும்பை வைப்பலகு
மாகுங் கடுகு கருஞ்சீரம்
தொடுகீழ் நெல்லி விளாவேருந்
தொடுத்த காயந் திவ்வியமா
இருதீ சமனாய்ப் பொடியாக்கி
யிதமாய்க் கியாழம் வெருகடியே.''

'' வெருகடி யளவதாக வெந்நீரு மிகுத்துக் கொள்ளப்
பருகவே யுருகக் காய்ச்சிப் பரிந்துகொள் ளதிசாரம்போம்
பெருகதீ பனம்போ சனமாம் பெருத்த வயிறு பொருமலுடன்
உரும நாபி சூலையுட னோடுங் கடுப்பு மிருமலுமே ''.

தே. வை. 1500

பா. 1040-43.

(பொருள்) : தொப்புளை முறுக்கி வலித்தல், ரத்தக்கடுப்பு, மலம் கறுத்து இளகி நுரையுடன் வீழ்தல் இவைகள் ஆழல் பெருங்கழிச்சலின் குணங்களாகும்.

திப்பிலி, கொடிவேலி, வசம்பு, வெட்பாலை, உத்தாமணிவேர், இலந்தை வேர், கோரைக் கிழங்கு, அதிவிடையம், செவ்வியம், கடகரோகணி, கண்டு பரங்கி, திரிகடுகு, பெருங்குரும்பை, வேப்பம் ஈர்க்கு, கடுகு, கருஞ்சீரகம், கீழ்க்காய் நெல்லி, விளாவேர், பெருங் காயம் சமனெடையெடுத்துப் பொடியாக்கி வெருகடிப் பொடியை எடுத்துப் போட்டு கியாழம் செய்து சாப்பிட பெருங் கழிச்சல், பொருமல், நாபிசூலை, கடுப்பு, இருமல்போம். தீபன சக்தி உண்டாகும்.

மரமஞ்சள் குடிநீர் :

'' சூலையா மதிசாரம் போவ தற்குத்
துலங்கு மரமஞ்சளுடன் மஞ்சள் கூட்ட
வேலையா மதுரங்கூ விளமும் வெட்பால்
வேண்டுநீ ரிருநாழி யுழக்கதாக

காலமே விடையமேற் பொடியாய்த் தூவி
கண்ணவே குக்கவதி சாரம் போகும்
நீலமாங் கிராணிவகை யாறும் போகும்.''
நிச்சயமாய்ப் பிரண்டைசுண்டிக் கறியாஞ் சூதம்.

தே. வை. 1500

பாட்டு 1044,

(பொருள்) : மரமஞ்சள், மஞ்சள், அதிமதுரம், வில்வப்பழம். வெட்பாலையரிசி வகைக்கு கழஞ்சு இரண்டில் 2 படி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சி அதிவிடையம் தூள் செய்து தூவிக் கொடுக்க கழிச்சல் வகைகள் நீங்கும்.

அதிவிடையகுடிநீர் :

'' போகுமதி விடையமிரு வேலி முத்தம்
புகழான கூவிளத்தின் பழமுங் கூட்டி
ஆகுமிரு கழஞ்சியிடை தூளதாக்கி
யானவிரு நாழிநீ ருழக்க தாகத்
காகுமே திப்பிலியுஞ் சுக்குங் கூட்டித்
தவிடாக இடித்துமேதூவிக் கொண்டு
ஏகமாய்க் கலக்கிநீ கியாழங் கொண்டா
லேகுமதி சாரமுடன் வாத சூலை. ''

தே. வை. 1500

பா. 1045.

(பொருள்) : அதிவிடையம், இருவேலி, கோரைக் கிழங்கு, வில்வப் பழம் வகைக்குக் கழஞ்சு இரண்டு, இரண்டுபடி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சி, திப்பிலி, சுக்கு இவைகளைத் தூள் செய்து தூவிக் கொடுக்க அதிசாரம், வாதசூலை இவை நீங்கும்.

பொடி : (சூரண வகையில்) தயிர்ச்சுண்டி, சுண்டை வற்றல் பொடி, அன்னப்பொடி, தாளீசப்பொடி.

வடகம் : தாளீசாதிவடகம், பிரண்டை வடகம், வாழைப்பூ வடகம்.

மாத்திரை வகைகளில் : கபாட மாத்திரை, கட்டுவாதி மாத்திரை, ஊழி மாத்திரை.

பற்ப செந்தூரங்களில் : ஐந்துப்பு பற்பம், உப்புச் செந்தூரம், நாக பற்பம், பவழ பற்பம், நத்தை பற்பம், இலிங்கத்துவர், முத்து பற்பம், அன்னபேதி செந்தூரம்.

இளகிய வகையில் : இஞ்சி இளகியம், சாதிக்காய் இளகியம், வில்வாதி இளகியம்.

மணப்பாகில் : வில்வமணப்பாகு, குடசமணப்பாகு, செம்பருத்தி மணப்பாகு.

மாத்திரைகளில் : கபாட மாத்திரை, வச்சிரக்கபாட மாத்திரை சாதிக்காய் மாத்திரை போன்றதாகும்.

உணவு : கழிச்சல் அளவு கடந்து போகையில் இருமுறை வடித்த சோறும், நீரும் மட்டுமே கொடுத்தல் நன்று, அல்லது பார்லி அரிசியை வேகவைத்து எடுத்த நீர் கொடுக்கலாம். நோயின் வன்மை குறைந்து கொண்டு வரும்பொழுது சிறுகச் சிறுக உணவின் அளவைப் பெருக்கி இருமுறை வடித்த சோற்றுடன் சிறிது மோர் கூட்டிக் கொடுத்து அது செரிக்குமாயின், உணவை உயர்த்திக் கொண்டே வந்து, காய்கறி வகையில், அத்திப் பிஞ்சி, அவரைப் பிஞ்சு போன்றவைகளைக் கூட்டிக் கொண்டே வரலாம்.

## நிணக் கழிச்சல்

வேறுபெயர்கள் : இதற்கு, ஊன்கழிச்சல், பல நிறக்கழிச்சல், கொடிய கழிச்சல், நாறும் கழிச்சல், கிராணி பேதி எனப் பல பெயர்கள் உண்டு.

இயல் : பசித்தீக் கேடடைந்து உண்ட உணவு சமிக்கப்படாமல் வயிற்றில் புளித்து, இடைவிடாதுகழிச்சல் உண்டாய், அக்கழிச்சல் எளிதில் நீங்காமல் நிலைத்து, குடலைப் புண்படுத்தி அதிலிருந்து எரு, நிண நீருடன் இழிவதால் நிணக்கழிச்சல் என்றும் குடல் இற்று அதனின் ஊன் கழிச்சலுடன் கலந்திருப்பதால் ஊண் கழிச்சலென்றும், குடல் சதை அழுகி இற்றுப் புலால் மணத்தோடு வெளிப்படுதலால். நாறும் கழிச்சலென்றும், ஊன் குருதி முதலியன பலநிறம் கலந்து கழிவாதல்

பல நிறக் கழிச்சல் என்றும் பல பெயர்களால் வழங்கலாயிற்று. நாட்பட்டு நிலைக்கும் இக் கழிச்சல், வயிற்றின் மந்தத்தால், உண்டவுணவின் சாரத்தை உடற்கு ஊட்டுதலின்றி, செரித்தும் செரியாததுமாய்க் கீழ்க் குடலிற்றங்கிப் புளித்துச் சேர்ந்து முறைக்கு முறை பெரு அளவில் கழியும். இக் கழிச்சல் சில வேளை சற்றுக் கடினப்பட்டதாயும் சிலவேளை நீர் நீராயும், பலநிறப்பட்டதாயும் மிகவும் நாற்றமுடையதாயும் காணும்.

நோய்வரு வழி : பசித்தீ குறைந்த நிலையைத் தக்கவாறு மருந்து களாலும் உணவு வகைகளாலும் போக்காமல், நீக்காவிடின், உண்ட வுணவு உடற்கு ஊட்டத்தைத் தராமல், உடலை வாட்டிக் குற்றங்களை மிகுதிப் படுத்துவதினால் வருவது ஒரு விதம். இப்பெருங்கழிச்சல் உண்டானபொழுது, அதனைத் தக்கவாறு பரிகரிக்காமல் விடுவதனால் குடற் புண்ணாய் வருவது மற்றொரு விதம். ஈதன்றியும் செரியாமை சுவையின்மை முதலிய வயிற்றுக் கோளாறுகளாலும், எளிதில் செரிக்கக் கூடா உணவுகளாகிற மாப்பண்டம், சரிவர வேகாப் பொருள்கள், சுனை நீர், சுண்ணம் கலந்த நீர் முதலிய கடின நீர்களை உட்கொள்ளல் என்பவை களாலும், பசித்தீக்கெட்டு உண்ட உணவு செரியாது, குடலிற்றங்கிப் புளித்து, குடலைப் புண்படுத்தி இந்நோயை உண்டாக்கும்.

முற்குறி குணங்கள் : வயிறு மந்தமாய் இருத்தல், உண்ணாத போதும் வயிறு உண்டது போலவே இருத்தல், உண்டபின் உண்ட உணவு வயிற்றினின்று கீழ்நோக்காமல் மிகுந்த நேரம் வயிற்றிலேயே தங்கியிருப்பது போல் தோன்றல், வாய் நீர் ஊறல், வாந்தி வருவது போன்ற ஒர் உணர்ச்சி, வயிறு கடுத்தல், ஏப்பம், விக்கல், புளித்த நீ ரெதிர்த்தல், அடி வயிறூதல், இரைதல், நோதல், புரளல் என்னும் முற் குறிகளைக் காட்டி வயிறு கொட்டும்.

நோய் எண் : இக் கழிச்சல் நோயைக் குற்ற அளவாக வளி அழல், ஐயம், முக்குற்ற நிணக்கழிச்சல் என நான்கும், தன்னளவில் மிகுந்த கால்களை (வாயுகளைக்) கொண்டு கீழ் நோக்குக்கால் சிறு குடலைப் பற்றிய போது (அந்தரவாயு) கழிச்சல், கீழ் நோக்குக்கால் அடிகுடலைப் பற்றிய போது (மூலவாயு) கழிச்சல், அழலும் வாய்வுங் கூடியகால் (உட்ணவாயு) கழிச்சல் என மூன்றும், பிள்ளைப் பேற்றுக்குப் பின் வரும் கழிச்சல், குன்ம நோயில் வரும் கழிச்சல் (கர்பகிராணி, குன்மக் கிராணி) ஆகிய இரண்டும் சேர்ந்து கழிச்சல் ஒன்பது வகை என ஒரு சாரார் கூறுவர். எருவாயில் சிறிது கழிச்சலும் ஒட்டாமல் வெளி

யாகும் கழிச்சலை ஒட்டுவாய்க் கிராணி எனவும், கழியும்போது தாங்க முடியாதவாறு துன்புறுத்தும் கழிச்சலைச் சங்கர கிராணி எனவும் பேரிட்டு இவ்விரண்டையும் கூட்டிப் பதினொன்று என மற்றொரு சாரார் கூறுவர். இப் பதினொன்றையும் இங்கு விளக்குவோம்.

வளி நிணக் கழிச்சல் :

'' நோவாகும் நடுவயிறுப் பசம தாகும்
நுட்பமாம் பசியெடுக்கு முடம்பு லர்த்துந்
தீவாகுஞ் சீதமாய் வயிறு போகும்
சிதறுமே மலந்தானும் வாயு தன்னால்
காவாகுங் கட்டியாய் வயிற்றில் காணுங்
காற்றுமே மிகக் கழியும் கறுப்பு மாகும்
பாவாகும் பழவெல்லம் போலே வீழும்
படுவாதக் கிராணியிடப் பண்பி தாமே. ''

(பொருள் :) இந்நோயில் வயிறு முழுதும் உப்பிக் காற்று நிறைந்து, இரைந்து வயிறு நோகும். செரிக்கும் வன்மை இழந்திருப்பினும் பொய்ப் பசியெடுக்கும். உடல் நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே வரும். வயிறு அடிக்கடி கொட்டும். அவ்வாறு கொட்டுங்கால் சில வேளை சீதங் கலந்துங் காணும். வயிற்றிற் கூடிய காற்று சிறு குடலிலும் பெருங் குடலிலும் சேர்ந்து, வயிறு இரைதலுடன், அது தங்குமிடமெல்லாம் கட்டி போலக்காணும். கழிச்சல் கரு நிறத்தோடு மிகுதியாய் வெளியாகும் ; சில வேளை வெல்லப்பாகு போலும் காணும்.

அழல் நிணக் கழிச்சல் ;

'' பண்பாக நடுவயிறு நோக்கா டாகும்
பலிநானா விதமாக வயிறு போகும்
மண்பாக வயிறுகழியு முறக்க முண்டா
மாசற்ற நரம்பெல்லாந் தளர்ந்து தொங்கும்
உண்பாக வூனெல்லாம் கழிந்து போகு
உள்கடுக்கும் மருந்தழியு முணர்ச்சி கேடாம்
பெண்பாகப் பேன்தலைவிட் டூர்ந்து போகும்
பித்தத்தின் கிராணியெனப் பேச லாமே. ''

(பொருள்) நிணக் கழிச்சலில் நடு வயிற்றில் தாங்க முடியாத வலீ யுண்டாக்கிப் பலப் பல நிறத்துடன் வயிறு கொட்டும், உறக்கத்தைக் கொடுக்கும். நரம்பும் தளரும். இற்றுப்போன குடலின்தோல் தன் வடிவத்துடன் வெளியாகும் ; கொடுக்கும் மருந்து பயனற்றதாகும்.

ஐயநிணக் கழிச்சல் :

'' பேசியே யழல் போல நாற்ற மாகும்
பெருகவே வெளுப்பாக மலந்தான் போகும்
காசியே கைகாலுந் தளர்ச்சி கேடாம்
கள்ளமாய்க் காய்ச்சல்வருங் கண்சி வக்கும்
நாசியே நாவோடு வரட்சி காணும்
நயந்துமே பாளையாய்க் குடல்போல் வீழும்
ஆசியே யறிவில்லா தசதி யாகும்
அதட்டியே விக்கல்வருஞ் சிலேட்மந் தானே. ''

(பொருள்) இந்நோயில் கழியும்போது, எருவாய் சூடுடன் எரிதலன்றி, அக்கழிச்சல் கொடிய நாற்றமாயும் வெளுப்பாகவும் இருத்தலும், கையுங் காலும் தளர்ச்சியடைதலும், வெளிக்குத் தெரியாமல் உட்காய்ச்சலாக் காய்தலும், கண்களிரெண்டும் சிவத்தலுமான குறிகுணங்களோடு, மூக்கு, நா இவைகள் வறண்டுபோகும் ; குடல் நைந்து (உரித்த பாம்பின் தோலைப் போல்) குடலின் மெல்லிய தோல் கழிச்சலுடன் கலந்து காணும். நினைவும் உடல் சத்தும் குறையும். கொடிய விக்கல் உண்டாம்.

முக்குற்ற நிணக் கழிச்சல் :

'' வருகுமே தாபமுடன் காய்ச்சல் தானும்
மகத்தான வேலைபோல் வயிறி ரைச்சல்
தருகுமே தலைவலியுங் குளிர்ந டுக்கல்
தனிப்பால்போல் மிகக்கழிவு மடிக்க டிக்குப்
பருக்குமே பகழியெனப் பாயும் வாயு
பரிதாப முதலையொடு எரிவு மாகும்
கருகுமே கால்கையும் புறங்கால் வீங்கும்
கசிநொந்த கிராணியெனக் கண்டு கொள்ளே. ''

(பொருள்) இதில் மிகுதியும் காய்ச்சலுண்டாய்க் கடல் ஒலிபோல் இரைச்சலுடன் வயிறுகழிந்து, குளிர், தலைவலி, நடுக்கல் முதலியன உண்டாகும். சிலவேளை பால் போல் வெளுப்பாய்க் கழியும், மிகுதியாய்க் காற்றுப் பரியும், உடல் சூடு, எரிச்சல், கையுங் காலும் கருத்துக்காணல் முதலிய குறிகள் உண்டாய், இறுதியில் உடல் வீங்கும்.

**அழற்கால் நிணக்கழிச்சல் :**

" கண்டுகொள்ளு மலந்தனையே யிறுக்கிக் கொண்டு
கனமாக வயிறிரைந்து உப்பிச மாகும்
பண்டுகொண்ட அசனந்தான் செரித்தி டாது
பாங்கான புளித்தேக்கும் வாய்நீ ரூறும்
விண்டுகொண்ட கால்கையு மசதி யாகும்
மேனியுமோ மிகக்கருகி மெலிவு மாகும்
உண்டுகொண்ட நால்மூன்றிற் பேதி யாகும்
உணருஷ்ண வாயுவென்றே யுரைக்க லாமே. "

(பொருள்) இந்நோயில், கீழ்நோக்குங் காலும், தீக்குற்றமும் தன் னிலையில் மிகுந்து காணு மாகையால், தீக்குற்றத்தால் எரு (மலம்), தீய்ந்தும், கீழ் நோக்குக்கால் மிகுதலால் வயிற்றில் மிகுதியும் காற்று சேர்ந்து, வயிறு ஊதல், பொருமல் என்னுங் குறிகளும் உண்டாகும். அவற்றோடு உண்ட உணவு செரியாமல், புளியேப்பம், வாய் நீருறல் என்னும் குறிகளைக் காட்டி உடல் வன்மை கெடுத்து, மெலிவடையச் செய்து, உடலைக் கருக்கச் செய்யும், இவ்வாறான குறிகள் தோன்றிய மூன்றாம் நாள் தொடங்கிக் கணக்கின்றிக் கழியச் செய்யும்.

**குடற்கால் கழிச்சல் :**

" உரைக்கவே பத்தியந்தான் கொண்ட போது
உறுதியான மலந்தள்ளிப் புளித்தேக் கிட்டுத்
தரைக்கவே சர்த்தியொடு அருசி யாகுந்
தாகமுண்டாய்த் தானிருக்குத் தளர்ச்சி யாகும்
விரைக்கவே விலாப்பக்க மிசிவு மாகும்
மேனியெல்லாம் வெளுப்பாகும் விக்க லுண்டாம்
அரைக்கவே யசனந்தான் செரித்தி டாது
அந்தரமாய் வாயுவிட வாண்மை தானே ".

(பொருள்) இந்நோயில், மேல் நோக்குக்கால் (உதானவாயு) தன் அளவில் மிகுந்து, கொண்டவுணவை, செரியாதபடியும் கீழ்நோக்கிச் செல்லாதபடியும் அகட்டிலேயே நிலைத்துப் புளிக்கச் செய்து, புளித் தேப்பம், வாந்தி, சுவையின்மை, நீர் வேட்கை, விக்கல் என்னுங் கேடு களை விளைவித்து, பின் கீழ் நோக்கச் செய்து, இடைவிடாது கழியச் செய்யும். உடலை மெலியச் செய்து வெளுக்க வைக்கும்.

கீழ் வாயுக் கழிச்சல் :

“ ஆண்மையாய் வாயுதனில் மிகப் புரண்டும்
அடிவயிற்றைப் பொருமியே மலம்வ றண்டு
தாண்மையாய்ச் சடம் வற்றி மந்திப் புண்டாய்ச்
சத்தமாய்த் தணியாத இரைச்சலாகும்
கேண்மையா யடித்துடையிற் குத்த லுண்டாம்
கெட்டியாஞ் சரீரமது கிழமு மாகும்
மூண்மையாங் குதந்தன்னின் முளைப்போல் தோன்று
மூலவாயுக் கிராணியென மொழிய லாமே. ”

(பொருள்) இந்நோயும், கீழ் நோக்குக்கால் மிகுந்தமையால் வந்த நோயாயினும், கீழ்நோக்கு கால் கீழ்க்குடலையும், கீழ்வாயையும் பற்றி வரும் நோய் எனக் குறிக்கப்படும். இதில் மிகுந்த அவ்வாயு கீழ்க் குடலிற்றங்கி, உடலை வாட்டி, பசித்தீயைக் கெடுத்து, மந்தத்தை யுண்டாக்கி, உணவைச் செரியாமற் செய்யும். செரியா உணவும் காற்றுஞ் சேர்ந்து இரைச்சலையும், எருவாயில் எரிச்சலையும் குத்தலையும் உண் டாக்கி, முளையை வெளித் தள்ளும். உடலைக் கிழ்த்தன்மையடையச் செய்யும்.

குன்மக் கழிச்சல் :

‘- மொழியவே தலைதானுங் கனத்திருக்கு
மொழிவுறக்க முண்டாகும் பீளை சாரும்
கழியவே வயிறெல்லா முலாவிக் குற்றும்
சமரசமாய்த் தான்வியர்க்குந் தலைந டுக்கும்
வழியவே யுடம்பெரிப்பு முழலை யாகு
முப்பியே வயிறதுவுமிரைஞ்சிப் போகும்
வழியவே வயிற்றிலொரு புறத்திற் றூனும்
வளைத்திரைச்ச லோடுகுன்மக் கிராணியாமே.”

(பொருள்) இந்நோய் நெடுநாட்களாய்க் குன்மநோயிலீடுபட்டு உடல் மெலிவடைந்த நிலையில் உண்டாகு நோயாம். இதனில் பேசமுடியாமை கண் ஒளியிழந்து கண்ணில் பீளைசார்தல் தலை, வியர்த்தல், தலை நடுக்கல். உடல் எரிதல், வயிறு உப்பி இறைதல் ஒரு புறமாய் வலித்துக் கழிச்சலை உண்டாக்குதல் முதலிய குறிகுணங் களைத் தோற்றுவிக்கும்.

சூல் நீணாக் கழிச்சல் :

'' வலைச்சுமே வயிறுகழியுங் கடுப்பு முண்டாம்
வாடியே கால்கையும் வெச்சென் றாகும்
கலைச்சுமே கண்தானு மஞ்ச ளாகுங்
கழியுமே பலவிதமாய்க் கடின மாகும்
உலைச்சுமே கெற்பந்தா னுயருங் காலம்
உறுவன்னம் வாந்தியா யுழலை யாகும்
மூலைச்சுமே கெற்பந்தான் கீழே வீழில்
முடுகாது கெற்பமாங் கிராணி தானே.'

(பொருள்) இந்நோய், சிலருக்குச் சூலமைந்த சில திங்கட்குள், வாந்தி வயிறிரைந்து கழிதல் உண்டாயின் இதைக் கர்ப்பக்கிராணி யென்று கூறுவர் ; இஃதே வேறு சிலர்க்கு, பிள்ளை பெற்ற சில தினத்திற்குள் வருவதுமுண்டு. இதில் வயிறு கடுத்துப் பல பல நிறமாகக் கழிச்சல் உண்டாம். அடிக்கடி களைத்துப்போதல், கண் மஞ்சளித்தல், உடல் வெளுத்தல், கைகால் எரிதல், பெருமூச்சு, வாந்தி உண்டாதல் எனுங் குறிகளும் தொடரும். இதனை பிரசவக்கிராணி என்பர்.

ஒட்டுநிணாக் கழிச்சல்

''தானுன படுக்கையே இதமாய்க் காணும்
வலிப்புமே யிலைப்பாகத் தானி ருக்கும்
வனான வயிறுவலி மெத்த வாகும்
மார்போடு விலாமுதுகு வலியுண் டாகும்
ஓனான துட்டிடையாய் வயிறு போகும்
ஒருமித்துப் போகாமல் மலமுஞ் சிக்கும்
தேனான தொப்புள்தனில் வலையம் போலச்
சுட்டிடவே சுருக்குமா மொட்டுக் கிராணி.''

(பொருள்) இந்நோயில் வயிற்றை வலித்து, மார்பு பக்கவிலா எலும்புகள் முதலியன நொந்து, பல்வேறு நிறங்களாய்ப் பேதியாம். அத்துடன் படுக்கையில் நிலைக்காமை, இளைப்பு, மனக்கலக்கம் கொப்பூழில் சுருட்டி வளையம்போல இழுத்துப் பிடித்தது போன்ற வலி ஆகிய குறிகுணங்களையும் பெறும்.

**எரிச்சல்நிணக் கழிச்சல் (சங்கிரக்கிராணி) :**

" சுருக்கமா யுதரமது பொரும லாகிச்
சோறுசெரி யாக்கழிச்ச லபானச் சூடாய்
குருக்கமாய்க் குதந்தனிலே நிணைத லாகிக்
குறுவியர்வைச் சுரமோடு அனலாய்க் காணும்
மருக்கமாய் வாந்தியாய் மனமறுக்கும்
மார்பிலே கோழைகட்டு மயக்க மாகும்
சுருக்கமாய்க் கண்கள்ரண்டுஞ் சுழற்சி யாகுஞ்
சங்கிரக்கி ராணியென்றே சாற்ற லாமே."

(பொருள்) இந்நோயில் உண்ட சோறு செரியாமல் வயிறு பொருமிக் கீழ்நோக்குக்கால் வெப்பால் பெருகி வயிறு இரைந்து கழிச்சலையுண் டாக்கும். அன்றியும், கீழ்வாயில் எப்போதும் ஈரமாக இருத்தல், உடலில் சிறு வியர்வை யுண்டாதல், சுரம்போல் உடல் சுடுதல், வாந்தி யாதல், மனத்துயரமாதல், மார்பில் கோழை கட்டல், மயக்கமுண்டாதல், கண்கள் குழி விழுந்து இருளடைதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

தீரும் தீராதவை.—வளி, தீ, அழல்வளி, மேல்நோக்கு, கீழ் நோக்கு ஒட்டு, சூல், நிணக்கழிச்சல் தீரும், மற்றவை தீராவாம்.

நோயின் பொதுக்குறி குணங்கள் :—இந்நோய், பெரும்பான்மை யும் செரியா உணவாலும், மற்றைய வேறுபாடுகளாலும் உண்டாகும். கழிச்சல், மருத்துவத்தில் நீங்காமல் நிலைத்து நாட்பட்ட நோயாகும். ஆகலின், நாள் பல, திங்கள் பலகடக்கினும், நோய் போகாமல் உடலைவாட்டும் ; சில வேளை வயது முதிர்ந்தவர்கட்குச் செரிக்குந் தன்மையும் குடல் வன்மையும் மெலிந்த நிலையிலும் இந்நோய் உண் டாம். அன்றியும், எருவாயிலெழும் புண், வெப்பு முளை இவைகளாலும் இந்நோயெழுதலுண்டு. ஈதன்றியும் இது மற்றைய நோய்களாகிய சுரக்கழிச்சல், இளைப்புநோய், வெளுப்புநோய் (பாண்டு), ஈரல் நோய்கள், பெருவயிறு முதலியவைகட்குத் துணை நோயாகவும் வருவதுண்டு.

இந்நோய், உணவில் விருப்பமின்மை, புசிக்கினும் செரியாமை, புளித்தேப்பம், விக்கல், அடிவயிற்றில் காற்றுச் சேர்ந்து வயிறு ஊதி இரைதல், வயிறு வலித்தல், அடிக்கடி கழிதல், அக்கழிச்சல் வேளைக்கு ஒரு நிறமாய்த் தோன்றல், சிலவேளை மிகுந்த நாற்றத்துடனிருத்தல் என்னுங் குறிகளைப் பெறும்.

**முக்குற்ற முதலிய வேறுபாடுகள்.**—உணவு வேளையில் உண்ணாதிருத்தல், அடிக்கடி பட்டினியிருத்தல், இராக்கண் விழித்தல் என்னும் இவைகள் போன்ற செய்கைகளால், உடல் வன்மை குறைந்து, தீக்குற்றம் கேடடையும். கேடடைந்த குற்றத்தின் அளவாகப் பசித்தீக்கெட்டு, உண்ட உணவைச் செரிப்பிக்காமற் செய்து, அச்செரியாத உணவு அகட்டிலேயே தங்கிப் புளித்து, தீக்குற்றத்தினளவாக மேல் நோக்குக்கால், கீழ்நோக்குக்கால், பரவுக்கால் ஆகிய மூன்றும் தன்னளவில் மிகுந்து, மேல் நோக்குக் காலின் செயலால், புளித்தேப்பம், வாந்தி, விக்கல், நீர்வேட்கை, வாய்நீர் ஊறல் என்னுங் குறிகளையும், பரவுகாலின் செயலால், உண்ட உணவின் குழம்பைக் கெடுத்து, உடலின் சரிவரப் பரவாமற்றடுத்து, உடற்கு ஊட்டமளிக்காதவாறு செய்து, உடல் வன்மை குறைதல், உடல் வெளுத்தல், கை கால் வீக்கம் என்னுங் குறிகளையும், கீழ்நோக்குக்கால் மிகுதலின் அளவாக, வயிறு உப்பல், வயிற்றுள் புரள்வது போன்ற உணர்ச்சி, வயிறு நோதல், வயிறு கொட்டல் என்னுங் குறிகளையும் உண்டாக்கும், தோன்றிய நோய் எளிதில் நீங்காது நிலைத்திருப்பின், கேடடைந்த குற்றத்திற்குத் துணையாய் மற்றக் குற்றங்களுள் ஒன்றையேனும் இரண்டை யேனும் ஒன்று சேர்த்து வாட்டி உயிரைப் போக்குவதும் உண்டு.

## நாடிநடை

"சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில் கிராணி
வாதமென்னுங் நாடியது தோன்றிற் கிராணி."

வாதமெனும் நாடியது தோன்றில் . . .
சீதமுறுங்கிராணி . . . . . . .
. . . . . .
. . . .

(சதகநாடி.)

சீயோடுகூடிய நிணக் கழிச்சல் நோயில் வளி நாடியானது தன்னளவில் பொருந்தி நடக்குமெனவறிக.

சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில் . . .
. . . . . . சுரக்கிராணி
. . . . . . .
. . . . . .

எரு (மலம்).—எரு அடிக்கடி இறங்குவதுமின்றி, பல நிறத்தோடு கழியும். அத்துடன் குடலின் சவ்வு இற்று, சீதம் போல் காணும்.

நீர் (மூத்திரம்).—நீர் அளவில் குறைந்து, எரிச்சலுடன் சிறிது சிவந்து இறங்கும்.

## மருத்துவம்

குடி நீர் :

"விட்டவேம் பின்னீர்க்கும் மேவுகரு வேப்பீர்க்கும்
முட்டைசுக்கு சீரகம் மோதகமும் — முட்டவே
காய்ந்தகியா ழங்கொள்ளக் காணுகின்ற சீதமூலம்
பாய்ந்த கிராணிபோம் பார்." (சத-வெ.)

(பொருள்) வேம்பு, கருவேம்பு இவைகளின் ஈர்க்குகள், சுக்கு, சீரகம், ஓமம் ஓர் அளவாகக்கொண்டு முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க சீதக் கழிச்சல், நிணக் கழிச்சல், கீழ்வாய் எரிச்சல் இவைகள் போம்.

பீநாறிப்பட்டை, சாதிக்காய், சிறு நாகப்பூ, கோரைக் கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு ஓர் பலம் கொண்டு முறைப்படி குடிநீராக்கி அரை ஆழாக்கு அளவு காலை மாலை கொடுக்கவும்.

செம்பருத்திப் பிஞ்சு, பொடுதலைப் பிஞ்சு, ஓமம், புதிய புளியங் கொட்டைத் தோல், இலவங்கப்பட்டை இவைகளை வகைக்கு ஓர் பலமாகக் கொண்டு, இரண்டு படி நீரிட்டு உழக்காகக் காய்த்ததில் அரை ஆழாக்காகக் காலை மாலையில் கொடுக்கும்போது சிறிது மாசிக் காய்த் தூளைப் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

வில்வப் பழத்தோடு, விளா ஓடு, ஒதியம்பட்டை, அத்திப்பட்டை, நாவல் கொட்டை, கொம்பரக்கு, சாதிக்காய். சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறு நாகப்பூ, இம்பூரல் வேர்ப்பட்டை இவைகள் ஒவ்வொன்றும் ஒரு பலமாகக்கொண்டு நீர் படி இரண்டு கூட்டி உழக்காய்க் காய்த்து வடித்து அதில் அரை ஆழாக்காகக் காலை மாலை கொடுக்கும்போது, காவிக்கல் பொடி இரண்டு சிட்டிகை கூட்டிக் கலக்கிக்கொடுக்கக் குருதிக் கழிச்சல் போம்.

நுணா இலை, பொடுதலையிலை வகைக்கு ஒருபடி கொண்டு குறுகத் தறித்துச் சட்டியிலிட்டுச் சிறிது தேன் விட்டு வதக்கி இரண்டு படி நீரிட்டதில், ஆலம்பட்டை, வெள்ளுள்ளி, நற்சீரகம், மிளகு, இலவங் கப்பட்டை, குரோசானி ஓமம் வகைக்கு அரைப்பலம் பொடித்துப்போட்டு

கால் படியாகக் காய்த்து வடித்ததில், வறுத்துப் பொடித்த பெருங்காயம் ஒரு சிட்டிக்கை கூட்டிக்கொள்ள, சூட்டால் உண்டான வாயுக் கழிச்சல் போம்.

நெல்லிமுள்ளி, அதிவிடயம், கூவிளம்பிஞ்சு, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, மாதுளம்பிஞ்சு, முருங்கையீர்க்கு, வேப்பீர்க்கு, நாவல்கொழுந்து வகைக்குப் பலம் இரண்டு கூட்டி ஒன்றிரண்டாக இடித்து, நீர் படி இரண்டு கூட்டி, எட்டிலொன்றாய்க் காய்த்து வடித்ததில், கடுக்காய்ப் பூ, கடுக்காய்ப் பிஞ்சு கூட்டிப் பொடித்ததில் இரு சிட்டிகை கூட்டிக் கலக்கிக்கொடுக்க, கீழ் நோக்குக்கால் நிணக் கழிச்சல் போம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், சிறுநாகப்பூ, இலவங்கப் பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஓமம் வகைக்குப் பலம் ஒன்று, சுண்டைவற்றல், பெருங்காயம் வகைக்குப் பலம் அரை, பிரண்டை உலர்ந்தது பலம் இரண்டு கூட்டி இரண்டுபடி நீரிட்டெட்டொன்றாகக் காய்த்து வடித்ததில், இந்துப்புப் பொடி ஒரு சிட்டிகை கூட்டிக் கொடுக்கக் குன்மக் கழிச்சல் போம்.

பச்சைப் பிரண்டை, கொத்துமல்லிக் கீரை, கறிவேப்பிலை, வெந்தயக் கீரை, ஓர் அளவாகக் கொண்டு இடித்துப் பிழிந்தசாற்றில் அரை ஆழாக்கும், எருமை மோரில் அரை ஆழாக்கும் கொண்டு, கூட்டிக்கலக்கிப் பொடித்த பெருங்காயம் சிறிது சேர்த்துக் கொடுக்கலாம்.

சித்திரமூலம் வேர்ப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடையம், சோம்பு, பெருமரப்பட்டை, பெருங்காயம், வெள்ளைப்பூண்டு வகைக்குப் பலம் ஒன்று கொண்டு நீர் படி இரண்டு கூட்டிக்காய்ச்சி அரை ஆழாக்கு எடுத்து அதில் இரண்டு சிட்டிகை கந்தியுப்புப் பொடித்துத் தூவிக் கலக்கி, நாள் ஒன்றுக்கு மூன்றுவேளையாகக் கொடுக்கப் பிள்ளையுண்டாயிருக்கும் போதாகிலும், பிள்ளை பெற்ற பின்னாகிலும் வரும் கழிச்சல் நோய் போம்.

மெழுகு வகைகள் :

ஊழிமெழுகு, சாதிக்காய் மெழுகு போன்றதைக் கொடுக்கலாம், அல்லது : இலிங்க மெழுகு கொடுக்கலாம்.

இலிங்க மெழுகு : இலிங்கம், கஞ்சா, அபினி வகைக்குப் பலம் அரையாகக் கொண்டு மைபோல் அரைத்து அதில் சாதிக்காய், சாதி பத்திரி, அதிவிடயம், சிறுநாகப்பூ, வில்வப்பழச்சதை, இலவம் பிசின், ஊமத்தன் விரை வகைக்குப் பலம் கால் கொண்டு இடித்துப் பொடியாக்கிக் கூட்டி, வாழைப்பூச்சாறு விட்டு நெகிழ்வரைத்துப் புளிப்பு மாதுளம் பிஞ்சுகளைக் கொண்டுதுளைத்து அத்துளையுள் மேற்கூறியபடி அரைத்த மருந்தைப்புகட்டி வாயைமூடி, எருமை எருவால் (சாணத்தால்) சீலைசெய்து, மாதுளைப் பிஞ்சுபேரல சட்டி மூடி புடமிட்டெடுத்து சீலை நீக்கி, காயோடு அம்மியிலிட்டு மெழுகுபோல் அரைத்து எடுத்து, மீண்டும் கல்வத்திட்டு எருமைத்தயிரை விட்டு அரைத்துஎடுத்துக் கொண்டு மூன்று நாள் அதை மெழுகுபோல் அரைத்துத் திரண்டுவரும்போது கொள்ளவும், இதனில் ஒன்று அல்லது இரண்டு குன்றி எடைகொடுக்க எல்லாவிதக் கழிச்சலும்போம். நோய்க்குத்தக்கவாறு துணை மருந்து கூட்டவும்.

பற்ப செந்தூரங்களில் : நாகபற்பம், முத்து பற்பம், பவள பற்பம், அன்ன பேதி, சண்டமாருதம், பலகரைபற்பம், நத்தைபற்பம் போன்ற வகைகளைக் கொடுக்கலாம்.

## கடுப்புக் கழிச்சல்

வேறு பெயர் : சீதக்கழிச்சல், சீதபேதி.

இயல் : வயிறு கடுத்து அடிக்கடி சிறிது சிறிதாயேனும், அல்லது வயிறு கடுப்பு அதிக மின்றி அளவு கடந்தேனும், சீதக்கட்டும் குருதியும் கூடியேனும் கழியும். இஃது சிறு குழந்தை முதல் பெரியோர்வரை வரக்கூடும்.

நோய் தோன்றும் வழி : அது மிகுந்த காரம், புளிப்பு, செரிக்கக் கூடாத உணவு, காரமிகுந்த மருந்துகளைக் கொள்ளல், குளிர் காற்றி லீடுபடல் ஆகியவைகளால் பிறக்கும் நோயாம்.

முற்குறிகள்: தலைநோதல், வாய்குமட்டி வாந்தி வருவது போன்ற தோற்றம், வயிறு கடுத்தல், இரைதல், கீழ்வாய் எரிச்சல் என்னும் முற்குறிகளைக் காட்டி வயிற்றை மிகப் புரட்டும்.

நோயின் குறிகுணங்கள் : முற்கூறிய முற்குறிகளைக் காட்டி, வயிறு கடுகடுத்துக் கழியத்தொடங்கும்; கழிச்சலில், சளிபோலச் சிறிது சீதங் கலந்திருக்கும். இவ்வாறு இரண்டு மூன்று முறை கழிச்சலான பின் வயிற்றுக் கடுப்பும், கீழ்வாய்க் கடுப்பும் மிகுதிப்படும். இதனைத் தாங்க முடியாமல் சிலர் அழுவதும் உண்டு. போகப்போகச் சிறிதும் எரு (மலம்) கலவாமலே ஒரே சீதமும் குருதியும் கூடி, சிறு அளவில் அடிக்கடி இழியும். இழியும் போது உண்டாகும் வலிதாங்க முடியாமல் இருப்பதால், உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்க அஞ்சி, இருந்த இடத்திலேயே இருப்பர். இவ்வாறாக ஒரு நாளைக்குக் கணக்கற்று ஐம்பது அறுபது முறை கழிவதும் உண்டு. அதை நிறுத்தத்தக்க மருத்துவம் செய்யாவிடின், நாடிதளர்ந்து, உடல் வியர்த்து, கண் பஞ்சடைந்து, நாவறண்டு, முப்பிணியையுண்டாக்கிக் கொல்லும்.

சிலர்க்குக் கழிச்சலோடு குருதியும் அளவு கடந்து வெளியாவதுண்டு.

சிலவேளை மேற்கூறியவாறு தீவிரமான குறிகளைக் காட்டி, கழிச்சல் நின்றுவிட்ட சில நாட்களுக்குப் பின்பேனும் சில திங்களுக்குப் பின் பேனும் மீண்டும் கழிச்சல் காணும். இவ்வாறு இஃது அடிக்கடியும் வருவதுண்டு, கழியும் போதெல்லாம், குடல் இற்றுச் சீதமும், குடல் புண்ணிலிருந்து இரத்தமும் மிகுந்த அளவில் வெளியாவதால், உடலின் குருதி குறைந்து உடல் வெளுத்தல், இளைத்தல், வன்மை குறைதல், கைகால் உடல் முதலியன வீங்குதல் ஆகிய குறிகளையும் காட்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : உணவு, செயல் இவைகளின் வேற்றுமையால், அழல் குற்றம் மிகுந்து, தனக்குத்துணையாய்க் கீழ் நோக்குக் காலைத் தூண்டச் செய்து இந்நோயை உண்டாக்கும். மிகுந்த அழலின் அளவாக இரத்தமும் குருதியும் கேடடையும், உடல் மெலிந்த நிலையில் முக்குற்றங்களுமெழுந்து முப்பிணியைத் தொடரச் செய்வதுமுண்டு. அப்போது நாடி தளர்ந்து நடக்கும்.

மருத்துவம் : இந்நோயில் தன்னளவில் மிகுந்த குற்றத்தைத் தன்னிலைப்படுத்தும் பொருட்டு, முதன்முதலில் சிற்றாமணக்கு எண்ணெயில் சிறிது பால் கூட்டிக் குழைத்துக் கொடுக்கலாம் ; அல்லது சிற்றாமணக்கு எண்ணெயுடன் பிஞ்சுக் கடுக்காய், மாசிக்காய்ப் பொடி சிறிது கூட்டிக் கொடுக்கலாம். ஈதன்றி அதன் பின் கீழ்க்கூறிய குடிநீர் முதலிய மருந்துகளையும் வழங்கலாம்.

எண்ணெய் :

'' சிற்றா மணக்கின் எண்ணெய்பலந்
திரிகற் பூரம் விராகனொன்று
சற்றே சோற்றிற் றானவித்த
சாதிக் காயு மொன்றாகும்
எற்ற வேயிவை யெலாந்தானே
எண்ணெய் விட்டுத் தானரைத்து
கொற்றே வேளைக் கொருகரண்டி
கொடுப்பாய் சீத பேதிபோமே.''

(பொருள்) : சோற்றில் வேகவைத்தெடுத்த சாதிக்காய் ஒன்று, சுத்தி செய்த பூரம் விராகன் ஒன்று, சிற்றாமணக் கெண்ணெய் ஆகிய மூன்றையும் கூட்டி, மெழுகு போன்று அரைத்து, வேளைக்கு ஒரு கரண்டி அளவு கொடுக்க, மிகுந்த கழிச்சலை உண்டாக்கி நின்று விடும்.

குடிநீர் :

'' யானைக் கன்றி லோர்பிடியும் அசுரன் விரோதி யிளம்பிஞ்சும்
கானக் குதிரைப் புறத்தோலும் காலிற் பொடியை மாற்றினதும்
தானைக் கொன்றான் சாறிட்டுத் தயவா யரைத்துக் கொள் வீரேல்
மானைப் பழிக்கும் விழியாளே வடுகுந் தமிழும் குணமாமே.''

(பொருள்) : அத்தி இளம் பிஞ்சு ஒரு பிடி, வேலம் பிஞ்சு, காட்டு மாம்பட்டை, செருப்படை இவைகளை வகைக்கு ஓர் படியாகக்கொண்டு கூட்டி நெகிழ அரைத்து, வாழைஅடித்தண்டின் சாற்றில் கலக்கி, வடித்துக் கொடுக்க, வயிற்றுக் கடுப்புடன் உண்டாகும் சீதக் கழிச்சல் போம்.

மாதுளை இளம் பிஞ்சு, வாழைப்பூக்குருத்து, விடதாரிக் கொழுந்து, கோரைக்கிழங்கு, பெரு மரப்பட்டை இவைகளை ஓர் அளவாகக்கூட்டி முறைப்படி குடிநீரிட்டு, ஆழாக்கு அளவு காலை மாலைகளில் கொள்ளவும்.

வில்வப்பழத்தின் ஓடு, குடசப்பாலைப்பட்டை, வெட்பாலை அரிசி, இலவங்கப் பட்டை, அதிவிடயம், சாதிக்காய், சாதிப்பத்திரி ஒரெடையாய்க் கொண்டு முறைப்படி குடிநீராக்கி, அரை முதல் ஒரு ஆழாக்கு வரை கொள்ள வயிற்றுக் கடுப்பும் கழிச்சலும் நீங்கும்.

விளாங்காயின் சதை, பிஞ்சு, பெருமரப்பட்டை, அதிவிடயம் கூட்டிக் குடிநீராக்கிக் காலை மாலைகளில் கொடுக்கவும்.

பொடி வகைகளில்.—(1)குடசப்பாலைப்பட்டை, வெட்பாலை அரிசி, மாதுளை ஓடு, வெந்தயம், விளாம்பிசின், உலர்ந்த வில்வப்பழச்சதை ஆகிய இவைகள் ஒரு பலமாகக் கொண்டு இடித்துப் பொடி செய்து வடித்து, அத்துடன் அபினி இரண்டுகுன்றி கூட்டி அரைத்து எடுத்து வைத்துக்கொண்டு, அதில் ஒரு விராகனெடை காலை மாலைகளில் கொடுக்கலாம்.

(2) இலவம் பிசின், குடசப்பாலைப்பிசின், அதிவிடயம், சிறு நாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, காசுக்கட்டி வகைக்குப் பலம் எடுத்துப் பொடித்து, அத்துடன் சுத்தி செய்த கஞ்சாப் பொடி பலம் கால் கூட்டிக் கலந்து அதில் அரை சிட்டிக்கை அளவு இரு வேளை கொடுக்கலாம்.

மாத்திரை வகைகளில். —ஒரு சாதிக்காயைத் துளைத்து அதனுள் ஒரு குன்றி அபினியை அடைத்து, சாதிக்காயின் துளையை அதன் பொடியால் அடைத்து, ஓர் இரும்புக் கதிரில் குத்தி, தேனில் துவைத்துத் துவைத்து நெய் விளக்கில் சுட்டு, நன்றாய் வெந்தபின் கலவத்திலிட்டு அரைத்து, குன்றி அளவில் உருட்டி, காலை மாலைகளில் ஒவ்வொன்று கொடுக்கவும். அல்லது வச்சிரக் கபாட மாத்திரை, ஊழி மாத்திரை இவை போன்றதையும் வழங்கலாம். இவைகளின் செய் முறைகளைச் சித்த வைத்தியத் திரட்டில் காண்க.

பற்பச் செந்தூரங்களில் :

பவழ பற்பம் ஒரு குன்றி, லிங்கத்துவர் 10 குன்றி இரண்டையும் கூட்டி எலுமிச்சம் பழம் சாற்றிற் கொடுத்து, மேற்கூறிய குடிநீர்களில் ஒன்றை வழங்கலாம்.

நாக பற்பம், வெள்ளி பற்பம், சிலாசத்துபற்பம், நத்தைபற்பம், அன்னபேதி செந்தூரம், பவழபற்பம் வகைக்கு ஒரு குன்றி அளவு வெண்ணெயில் தனித்தேனும் அல்லது நோய்க்கேற்ப கூட்டியுங் கொடுக்கலாம்.

உணவு. —கழிச்சல் உள்ள மட்டும் காரம் கூடிய உணவுகள் கொடுத்தல் கூடாது. சவ்வரிசி, கூகைக்கிழங்கு மாவு இவைகளின் கஞ்சியாகிலும் மணக்கத்தை, கார், குருவை இவைகளின் கஞ்சியாகிலும் கொடுக்கலாம். அல்லது இரு முறை வடித்த சோறுங் கொடுக்கலாம். வாழைப் பிஞ்சு அல்லது அத்தி இளம் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, இவைகளைக் காரமில்லாமல் கொத்துமல்லி சேர்த்துச் சமைத்துக் கொடுக்கலாம்.

## ஊழி நோய்

வேறு பெயர் : வாந்திபேதி, கசப்பு, விடபேதி, கொள்ளைநோய், நட்பு நோய், நீர்க்கொம்பன், விசூசி என்பன.

இயல் : இஃது உணவு செரியாமல் மிக்க வாந்தி, கழிச்சல், நீர் வேட்கை, கண்பஞ்சடைதல், கைகால் சில்லிடல் என்னும் இயல்பினையுடைய நோயாகும்.

நோய் வருவழி: இந்நோய், கொள்ளைநோயாய் ஆடித்திங்களில் தொடங்கி, ஆவணி, புரட்டாசி திங்கள் வரையும் நிலைக்கும். ஆனித் திங்களில் கதிரவன் வெப்பத்தால், நிலம் வறட்சியடைந்து வெப்படைந்திருக்கும்பொழுது ஆடியில் பொழியும் சிறுமழையால் திடீரெனத் தட்பமடைவதால், பூமி அடையும் வேற்றுமையை மக்களும் அடைவர் வெப்பத்தால்மிகுந்த அழல்குற்றம், திடீரென்று தட்பத்தால் குறைந்து, அய்யக் குற்றத்தை மிகுதிப்படுத்திப் பசித்தீயைக் குறைக்குமாகலின், இதுவரை உண்ட உணவு நிலத்திலுண்டான இவ் வேற்றுமையால் செரியாமல் வாந்தியையும், கழிச்சலையும் உண்டாக்கும்.

சாமளாதேவி ஊழிநூலில், இந்நோய் ஒரு நச்சுக்காற்றால் உண்டாகும் நோயெனக் கூறப்பட்டுள்ளது. இக்கொள்கையைக் கொண்டே மகமதிய அரசரில் ஒருவர், நோயுற்றாரைக் கொள்ளைகொண்டு போகும்படி தோன்றின ஊழிக்காற்றின் நஞ்சை முறிக்க, நாடு நகரங்களில் புகையிலையை புகைக்கும் வழக்கத்தைப் பரப்பினராம். மகம்மதியரைப் பின்பற்றி மேல்நாட்டு மருத்துவர் இதனைக் கடைப்பிடித்து இந்

நோயுற்றானைப் பரிகரிக்கப் போகும் பொழுது, நோயைத் தடுக்கும் பொருட்டு புகையிலைச் சுருட்டை வாயிலிட்டுப் புகைத்துக்கொண்டே போனதாகவும் கூறப்படுகிறது. பின்பு நோய்வருவது காற்றன்று, நீரின்வழியே உட்செல்லும் நுண்புழுக்களால் எனமுடிவு காட்டியபோது அவ்வழக்கு மாறிவிட்டதாம்.

முற்குறிகள் : உண்ட உணவு செரியாமை, புளித்தேப்பம், வயிறூதல், வயிறுநோதல், வயிறிரைதல், என்னுங் குணங்களைக்காட்டி, உண்டவுணவை அடிக்கடி வாந்தியெழச் செய்யும். பின் அடிவயிறு ஊதல், இரைதல், நோதல் என்னுங் குறிகளைக்காட்டி மிகவுங் கழியச் செய்யும்.

எண் : சாமளாதேவி நூல், இந்நோயினைக் கொம்பன், குடற் படுவன், அக்கரன் என மூன்று வகைப் பெயருடன் வழங்குகிறது. மற்ற நூல்கள் வளி ஊழி, அழல் ஊழி, அய்ய ஊழி எனக் கூறுகின்றன. இவ்விரண்டு வகைக்கும் குற்ற அளவில் வேற்றுமையில்லை.

'' பாரப்பா சாமளா தேவி யென்னும்
பராசத்தி தெய்வத்தைப் பகரு வேன் கேள்
ஆரப்பா வூழியிட வேகந் தன்னை
அப்பனே நானுரைப்பேன் மைந்தாகேளு
நேரப்பா கொம்பனென்றும் படுகனென்றும்
நிலையான அக்கரத்தின் கழிச்ச லென்னும்
சீரப்பா மூன்றுவித பேதி தானும்
செப்பமாய் யூகிமுனி செப்பினாரே ''.

யூகி

வளி ஊழி :

'' செப்பவே கொம்பனென்ற பேதி கண்டால்
தெளியாது வாந்தியுடன் பிராந்தி தோன்றும்
மெப்பவே குளிருடனே வியர்வை விக்கல்
மெய்தனிலே கடுப்புளைவு தாகங் காணும்
ஒப்பவே வயிற்றுவலி சன்னி தோடம்
ஒளிவான தேகமெல்லாம் பிசின்போ லாகும்
அப்பவே நாடியது வடங்கி யேதான்
அறுதியாய் முப்பதுநா ழிகையிற் சாவே. ''

சாமளாதேவி.

"தானான வூழியது பிராதக் காலம்
தனிலுதித்து வாதநா டியுமிக் காகும்
வானான வயிறிரைந்து ஊதிக் கொள்ளும்
மாசிலா மேனியது கறுப்பு மாகும்
கானான கண்விழிதான் திறந்தே நிற்கும்
கருத்தெல்லாங் கலங்கியே காய்ச்ச லாகும்
கோனான குடல்குமுறிப் புரட்ட லாகும்
கொடும்வாத ஊழியிட குணம தாமே."

என்னும் பாடல்களையும் நோக்குக.

இந்நோயில், வாந்தி, மயக்கம், உடல் குளிர்ந்து வியர்வைவிடல், விக்கல், உடல் நோதல், குரக்குவலி, நீர்வேட்கை, வயிற்றுவலி, என்னுங் குறிகளைக் காட்டி, முக்குற்றங்களும் ஒன்றுகூடி முப்பிணியின் குறிகளைத் தோற்றுவித்து, கை கால் சில்லிட்டு, உடல் பிசுபிசுத்து நாடி தளர்ந்து, முப்பது நாழிகைக்குள் சாக்காட்டை உண்டாக்கும்.

அன்றியும், வயிறு இரைந்து ஊதிக்கொள்ளல், உடல் கருத்தல், கண் விழி குழிவிழுந்து கண் திறந்தே நிற்றல், மனக்கலக்கம், காய்ச்சல், குடலில் காற்றுச் சேர்ந்து ஒலியுடன் புரட்டல் என்னுங் குறிகளும் இந் நோயில் காணும்.

அழல் ஊழி :

"சாவான பேதியது மிகவுண் டாகும்
சதாகாலங் காதடைப்பு மூர்ச்சை தாகம்
பாவான நாவதுவு முள்ளி மூக்கும்
பாங்குடனே மயலில்லாக் கழிச்சல் காணும்
வேவான சீடிடனே இரத்தம் போகும்
வேர்வையுட னுடல்குளிரு மசந்து வீழும்
தாவான நாள் மூன்று சென்ற தானால்
தப்பியே போகு மெனச் சொல்லு வாரே."

(சாமளாதேவி).

"குணமாகப் பகற்போது குதிகொண் டோங்கிக்
கோபித்துப் பித்தநா டியுமே மீறி
நிணமான நேருந்தன் னுடல் மூந்தும்
நேரான மூர்ச்சைவிக்கல் நிறங்குன் றாநு

வணமான வாய்பிதற்றி வாந்தி யாகி
மயங்கியே கிடைகொடா தேபு ரட்டும்
பிணமான ததுபோல பிரலா பிக்கும்
பித்தமாம் ஊழி யென்றே பேச லாமே. ''

(யூகி முனி).

(பொருள்) : இதில் அடிக்கடி மிகுந்தளவில் கழிதல், காது அடைத்தல், மூர்ச்சை, நீர்வேட்கை, நாவரண்டு உள்ளிழுத்துக் கொள்ளல், பெருங் கழிச்சலில் குருதியும் சீழும் கலந்திருத்தல், உடல் வியர்த்தல், குளிரல், எழுந்து விழுதல் என்னுங் குறிகளைக் காட்டும். தக்க மருத்துவத்தால் மூன்று நாட்களுக்குள் தப்பித்துக் கொள்வதுமுண்டு.

இந்நோய் அழல் குற்றம், தன்னளவில் மிகுந்து குருதியைக் கேடடையச் செய்து, தனக்குத் துணையாக்கிக்கொண்டு மூர்ச்சை, விக்கல், உடல் கறுநிறமடைதல், ஆகிய குறிகளைக் காட்டி, வாய்க் கொள்ளாத அளவில் வாந்தியை எழச் செய்து, மயக்கத்தையும் படுக்கையில் நிலைக்காமல் புரண்டு புரண்டு கண்டவாறு பிதற்றுதலையும் உண்டாக்கும்.

ஐய ஊழி :

'' சொல்லவே யக்கரத்தின் தன்மை பாரு
சோறுடனே பேதியது சேறு போலாங்
வெள்ளவே பேதியது வதிகங் காணும்
வெருட்டுமே தாகமுடன் கடுப்புக் காணும்
புல்லவே நெஞ்சுமுதல் கைகால் நோயாம்
புகலவே தாகமுடன் வியர்வை தோன்றும்.
.. .. .. .. ..
.. .. .. .. ..''

(சாமளா தேவி).

'' பேசவே நாடியது அடங்கிக் காணும்
பிரிந்திடுமே கங்குல்தனி லிரண்டாஞ் சாமம்
நாசவே உயிரதுவும் நாபிக் குள்ளாம்
நடைகொடா தேபுரட்டுங் கொறுக்கை வாங்கும்

ஏசவே கண்விழிமே லாகித் தாழும்
மிடைவிடாப் பேதிதண்ணீர் மோர்போற் சாய்க்கும்
தேசவே தேகமெங்கு மிகவெ ளுக்குஞ்
சிலேட்மமாம் ஊழியென்றே செப்பு வீரே ''.

(யூகி முனி)

(பொருள்) : உண்ட உணவு சிறிதும் செரிக்காது. மிகுந்த நீர் வேட்கையோடு உண்டது உண்டவாறாக வாந்தியை எழச் செய்து மிகுதியாகக் கழியும். வயிறு கடுத்தலும் உடல் வியர்த்தலுமான குறிகளைக் காட்டும். நோய் முதிர முதிர இடைவிடாது மோர் நீர் போல் வெளுத்துக் கழிவதோடு அய்யக் குற்றம் மிகவெழுந்து உடலை வாட்டி நடை கொடாது படுக்கையிலிருத்தி அரட்டல் புரட்டல் செய்து கண்விழி குழிந்து மேல் நோக்கி உடல் வெளுத்து நெஞ்சு கை கால் நொந்து கொறுக்கை வலித்துக் கொல்லும்.

பொதுக் குறி குணங்கள் :இந்நோயில், உண்ட உணவு செரியாமல் வயிற்றில் மந்தத்தை உண்டாக்கி வயிறு இரைந்து, வாய்நீர் ஊறல், ஏப்பம், விக்கல், என்னுங் குறிகளைக் காட்டி வாந்தியை எழச்செயும். சிலவேளை சுரம் வருவதும் உண்டு. வயிற்றினுள் செரியாதிருந்த உணவுகள் யாவும் வாந்தி யெடுத்தபின், வாயைக் குமட்டி வெள்ளோக் காளம்போல், சிறிது கோழை கலந்த நீராக வாந்தியாகும். போகப் போக, வாந்தி அடிக்கடியும், ஒக்காளித்து ஒக்காளித்து எடுக்கும். அத்துடனே கழிச்சலும் தொடரும். இக்கழிச்சல் முதலில் செரித்ததும், செரிக்காததுமாய்ப்போய், எரு எல்லாம் இழிந்து போன பின்பு, அடுத்தடுத்து நீராய்க் கழியும். கழிச்சல் நோய் முற்ற, அளவில் மிகுதியாகவும், கழுநீரைப் போலும் கழியும். பின்பு கைவிரல்கள், கால் விரல்கள், காலின் கெண்டைச் சதை, அடிவயிற்றின் சதை இவைகளில் கொறுக்கு வலி (குரங்கு வலி) உண்டாகும்.

நோய் முதிர முதிர, நாவரட்சியுடன் நீர் வேட்கையுமுண்டாகி குரற்கம்மி, வயிறூதி, கண் பஞ்சடைந்து, காதடைத்து, நாடியின் நடை தளர்ந்து அல்லது காணாது (வாதநாடி அடங்கல்) உடல் வியர்த்து, உடல் முழுமையும் சில்லிட்டு, சிறு நீர்கட்டி, உதடு, பல், நகக்கண் கறுத்துக் கொல்லும். பொதுவாகப் பேதியில் சாவோரின் அறிவு கடைசிவரையில் மாறாமலிருக்கும் என்பர். உயிர் பிரிவதற்குச் சற்று முன் வாந்தியும், கழிச்சலும் நின்று விடுவதுண்டு. இதனைக் கண்டு மகிழ்வதில் பயனில்லையாகும்.

இந்நோயினை மற்றப் பேதியினின்று பிரித்தறிவது மிகவும் எளிதாம். பெரும்பான்மையும் கொள்ளை நோயாய் இது வருமாகலின் ஓரிடத்தில் இரண்டு மூன்றுபேர் ஊழியால் இறப்பின், எவ்விதமான கழிச்சல் காணினும், அதற்கு ஊழிநோய்க்குச் செய்யும் மருத்துவங் களையே செய்தல் வேண்டும். அன்றியும், பேதிகளில், அடிக்கடிக்கு அதிக அளவில் கழிதலும், சற்றுப் பொழுதிற்குள் கழிச்சல், அரிசி கழுகிய நீர்போல் மாறுதலும், உடல் வன்மை குறைதலும், கொறுக்கு வலியுண்டாதலும் ஆகிய இவற்றைக் காணின், அக்கழிச்சல் ஊழிக் கழிச்சல் எனத் துணிதல் வேண்டும். தூய்மைப் படுத்தாத வாளம் வெள்ளைப் பாடாணம் இவைகளைக்கொண்டு செய்த மருந்துகளால், உண்டான நஞ்சாலும், வாந்தியொடு கழிச்சலும் காணின் ஊழி நோய்க் குறிகுணங்களையும் தோற்றுவிக்கும் என அறிக.

குற்ற முதலிய வேறுபாடுகள் : நிலத்தின் உண்டாம் தட்ப வெப்பத் தின் வேற்றுமையாலும், உணவு செயல் முதலியவற்றின் வேற்றுமை யாலும், அய்யக் குற்றம் தன்னளவில் மிகுந்து, பசித்தீயைக் குறைத்து, உண்டவுணவைச் செரிப்பிக்காமற் செய்யும். தன்னளவில் மிகுந்த அய்யத்தின் அளவாக, வளி, தீக்குற்றம் ஆகிய இரண்டையும் தனக்குத் துணையாக்கிக் கொண்டு, மேல் நோக்குக்கால், கீழ் நோக்குக்கால், பரவுகால் ஆகிய இம் மூன்றையும் எழச் செய்து இந்நோயைப் பிறப் பிக்கும். மேல் நோக்குக் காலின் செயலால், வாந்தி விக்கல், நீர் வேட்கை, நாவரட்சி, வயிறு உப்பிசம் முதலிய குறிகளையும், கீழ் நோக்குக்காலால் கழிச்சல், வயிறு இரைதல், நீர் கட்டல் ஆகிய குறி களையும், பரவுகாலின் செயலால் வியர்வை, வன்மை குன்றல், காது கேளாமை, கண் பஞ்சடைதல், கைகால் சில்லிடல், கொறுக்கு வலி ஆகிய குறிகளையும் உண்டாக்கி முக்குற்றக் கேட்டால் முப்பிணி தொடர்ந்து கொல்லும்.

மருத்துவம்: இந்நோய் வருவழியினைச் சாமளாதேவி நூல் ஊழி என்பது ஓர் நச்சுக்காற்று, மற்ற நஞ்சுகளைப் போலவே, இஃது உயிர்க் காலை (பிராணவாயுவை) நேராகத் தாக்கிக் கொல்லும் எனக் கூறு மாயின் ; ஐந்து கால்களுக்கும் முதல்வனாய் நின்று, மற்றயவைகளை இயங்கச் செய்யும் பிராணவாயுவையே கேடடையச் செய்யும் ; இந் நோய் கண்ட உடனே தக்க மருத்துவம் செய்தல் வேண்டும் ; அதிலும் எதிர்துவருமுன் காத்தல் முக்கியமாம்.

"சேட்ப சீதமாய்த் துடைத்து" எனத் தேரன் கூறியதில், உடலை மாயச் செய்வது ஐயக் குற்றமே எனக் குறிக்கும். இந் நோயில் முதன்மையாகக் கெடுவது ஐயமே யாகையால், இந்த ஐயத்தைத் தன்னிலைப் படுத்தவும், ஐயத்தால் கேடடைந்த பசித் தீயைத் தூண்டவுமான வழியைத் தேடுதல் வேண்டும். அன்றியும், அவ்வப்போது எழும் குறி குணங்களையும், பரிகரித்தற்கான மருந்து வகைகளையும் உணவு களையும் கொடுத்தல் வேண்டும்.

குடிநீர் வகைகள் : 1. மிளகாய், தேங்காய்க் குடுமி, கம்பள மயிர் இவைகளை ஒரெடையாய்க் கொண்டு, சட்டியிலிட்டுக் கருக்கி, எட்டுப் பங்கு நீர்விட்டு எட்டுக்கொன்றாய்க் காய்த்து, ஒரு மணிக்கு ஒருமுறை அரை ஆழாக்காக, வாந்தி அல்லது கழிச்சல் நிற்குமட்டும் கொடுக்கவும்.

சித்திரமூலம் வேர்ப்பட்டை, இலவங்கம், இலவங்கப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி இவைகள் வகைக்குப் பலம் அரை எடுத்துக் கூட்டி, ஒரு படி நீரிட்டு, கால்படியாய்க் காய்த்து, அதில் இரண்டுமணிக்கொருமுறை அரைக்கால் ஆழாக்குக் கொடுக்கவும்.

தும்பைப்பூ, சிறு நாகப்பூ, இலவங்கப்பட்டை, ஓமம், மிளகு, திப்பிலி, சுக்கு வகைக்குக் பலம் ஒன்றும், நீர் படி ஒன்றும் கூட்டி உழக்காய்க் காய்த்து வடித்து, மூன்றுமணிக் கொருமுறை அரைக்கால் ஆழாக்குக் கொடுக்கலாம்.

தும்பைக்கருக்குக் குடிநீர் : தும்பை, குப்பை மேனி, தைவேளை இவைகளின் இலைகள் வகைக்கு ஒருபிடி எடுத்து, சட்டியிலிட்டுக் கறுப்பாகு மட்டும் வறுத்து அதைக் கொட்டி விட்டு, அச்சட்டியில் வெந்தயம் ½ பல மிட்டுச் சிவக்க வறுத்து ஒருபடி நீரிட்டு ஆழாக்காய்க் காய்த்து ¼ ஆழாக்கு இரண்டு மணிக்கு ஒருமுறை கொடுக்க, நீர்வேட்கை, வாந்தி போம்.

கற்கம் : மிளகாய் (காம்பு நீக்கியது) பலம் ஒன்றும், கற்பூரம் பலம் ½ யும் கூட்டி, எலுமிச்சம் பழச்சாற்றில் மெழுகுபோல் அரைத்து இரண்டு மணிக்கு ஒருமுறை சுண்டையளவு கொடுக்கலாம்.

ஓமத் தீநீர் : ஓமம் 40 பலம், இலவங்கம் 20 பலம், இலவங்கப் பட்டை 15 பலம், சிறு நாகப்பூ 15 பலம், மிளகு 15 பலம், சுக்கு 15 பலம், திப்பிலி 15 பலம், சாதிக்காய் 10 பலம், சாதிப்பத்திரி 10 பலம்

இவைகளை ஒன்றிரண்டாய்ப் பொடித்து, எட்டுப்படி கள்ளில் கொட்டி, ஒவ்வொரு நாளும் கலக்கிக் கொடுத்து, மூன்றாம் நாள், தீநீராகச் செய்யும்பொழுது, வடிவாயில், கத்தூரி, குங்குமப்பூ வகைக்கு இரண்டு விராகனெடையும், பச்சைக் கற்பூரம் 10 விராகனெடையும், கற்பூரம் இரண்டு பலமும் இட்டு வடித்து, எடுத்த நீரில், 10 துளிமுதல் 20 துளி வரையில் நீரில் கலக்கி, ஒருமணிக்கு ஒருமுறை கழிச்சல் நிற்கும்வரை கொடுக்கவும்.

பொடி வகைகள் (சூரண வகைகள்) : கபாடச் சூரணம், தயிர்ச் சுண்டி, தாளீசாதிச் சூரணம் இவைகளில் ஏதேனும் ஒன்றில் நோய் தொடங்கும் போது கொடுக்கலாம். இவற்றால் பயன் கிடைக்கவில்லை எனின் பெரு மருந்துகள் கொடுத்தல் வேண்டும்.

மாத்திரைகள்: ஊழி மாத்திரை, கபாட மாத்திரை முதலியவை களில் ஏதேனும் ஒன்றைத் தேனில் குழைத்துக் கொடுக்கலாம்.

சாமளாதேவி மாத்திரை : தூய்மையாக்கிய (சுத்தி செய்த) வீரம், பூரம், இலிங்கம், கற்பூரம், சுக்கு, மிளகு, அபின், கஞ்சா, பருப்பு, கத்தூரி, குங்குமப்பூ, வெடியுப்புச்சுண்ணம் இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு கூட்டி, கஞ்சாக் குடிநீரில் இரண்டு சாமமும், கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீரில் நான்கு சாமமும், ஊமத்தை இலைச்சாற்றில் இரண்டு சாமமும், அரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து மூன்று மணிக்கு ஒரு முறை சாராயத்தில் கொடுக்க, கொம்பன் ஊழியும், மஞ் சளைக் கலக்கிய தெளிந்த நீரில் கொடுக்கக் குடற்படுவனும், மிளகை வறுத்துச் செய்த குடிநீரில் கொடுக்க, அக்கர ஊழியும் போம் என இந் நூல் கூறுகிறது.

இம்மருந்தில் சேரும் வெடிச் சுண்ணம் செய்முறை :

எட்டாங் காச்சல் வெடியுப்பைச் சட்டியிலிட்டு வறுக்கும் போது, தலைப் பிள்ளை நஞ்சுக் கொடியைச் சிறு துண்டுகளாக்கி ஒவ்வொன் றாகச் சட்டியிலிட்டு, வறுத்துக்கொண்டுவர வெடிப்புச் சுண்ணமாம்.

மெழுகு : ஊழிகால மெழுகு, ஒரு குன்றி அளவு மூன்று மணிக்கு ஒரு முறை நீரில் கொடுக்கலாம்.

கட்டு: செம்பு, பூரம், தாளகம், கற்பூரம் கூட்டிக் களங்காய்ச் செய்த ஊழிக்கட்டைத் தேனிலுரைத்து மூன்று மணிக்கு ஒரு முறை கொடுக்கலாம்.

செந்தூரம்: சண்டமாருதச் செந்தூரம் அரைக்குன்றியின் நடுவில், சிறு துண்டு கற்பூரமிட்டுக் கொளுத்தியபின், அதில் தேனிட்டுக் குழைத்து, மூன்று மணிக்கொரு முறை கொடுக்கலாம். அவ்வாறே காடிகாரச் செந்தூரமும் பயன்தரும்.

ஒற்றடம் : கைகால் சில்லிடுதற்குக் கொள்ளுமாவுடன் மணல் கலந்து வறுத்து ஒற்றடம் கொடுக்கலாம்.

மேல்பூச்சு : மெழுகுத் தைலத்தை உடல் முழுமையும் பூசி, சூடு வருமட்டும் தேய்க்கலாம். அல்லது கொள்ளுமாவுடன் கற்பூரத்தைப் பொடித்துக் கூட்டி, சூடுண்டாகும்படி தேய்க்கவும்.

தனி மருந்துகள் : நீர் வேட்கைக்கு மண்புழு (பூநாகம்) கொண்டு வந்து, பால் விட்டுக் கழுவியதைச் சட்டியிலிட்டுக் கறுக்கி, சிறிது நீர் விட்டுக் காய்த்து வடித்து, அடிக்கடிகொடுக்க நீர் வேட்கை போம்.

மணலைச் சட்டியிலிட்டுச் சிவக்க வறுத்து மணலைக் கொட்டிவிட்டு அச்சட்டியில் நீர் விட்டுக் காய்த்து வடித்துக் கொடுக்கப் போம்.

வெள்ளோக்காளத்திற்கு: வால்மிளகு, எலுமிச்சம் பழத்தோல், வில்வவேர்க்கட்டை வகைக்குப் பலம் இரண்டும், நெல்லி ஈர்க்குப் பலம் ஒன்றும் கூட்டி, நீர் படி ஒன்று விட்டு உழக்காய்க் காய்த்ததில் சிறிது சிறிது கொடுத்துவர அவ்வோக்காளம் போம்.

நீர்க்கட்டிற்கு : துடைப்பத்தின் ஊவாமுள் பலம் இரண்டை, சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்து $\frac{1}{2}$ படி நீரிட்டு ஆழாக்காய்க் காய்த்து வேளைக்கு அரை ஆழாக்கு இரு முறை கொடுக்க நீர்க் கட்டுப் போம்.

பற்று : நீலி மருந்தை இழைத்து அதில் ஒரு சிட்டிக்கை வெடியுப்பிட்டுக் குழைத்து அடிவயிற்றைச் சுற்றிலும் பூச நீரிழியும்.

அல்லது பொறுக்கக்கூடிய அளவில் சுடுநீரை அடிவயிற்றில் ஒற்றடமிட்டு, ஆண்குறியின் மீது ஊற்றியும் வர நீரிறங்கும்.

உணவு : நீர் வகையாகவும், எளிதில் செரிக்கக் கூடியதாகவும், நீர்க்கட்டைப் போக்குவதாகவும்முள்ள உணவைக் கொள்ள வேண்டும். அவை சுக்கைக் கூட்டிய முடிக்கஞ்சு, பொரிக்கஞ்சு, பார்லிக்கஞ்சு,

கூவைக்கிழங்கு மாக்கஞ்சு போன்றனவாகும். வாந்தியும், கழிச்சலும் நின்றபின் இரு முறை வடித்த சோறு கொடுக்கலாம். மெல்ல மெல்ல உணவின் அளவையும், காய்கறி, வகைகளையும் உடல் வன்மைக்கேற்ற வாறு உயர்த்திக் கொண்டே போகலாம்.

## எருவாய் முளைநோய்

**வேறுபெயர்கள் :** முளைநோய், அரிப்புநோய், அடிமுளைநோய், மூல நோய் எனவாம்.

**இயல் :** கீழ்க்குடலிலிருந்து எருவாய் வரையிலுமுள்ள குடலின் கண்ணமைந்த கார்க்குருதிக்களேழுள் ஏதேனு மொன்றாகிலும், பலவாகிலும் தாபிதப்பட்டு, வீங்கி, எருவாயிலோர்வகை எரிச்சல், நமை அரிப்பு ஆகிய குறிகளைக்காட்டி, வெளிக்குப் போகையில் எருவைக் கட்டி வெளிக்குப் போகமுடியாது தடுத்தலும், அதனை முக்கி வெளி யாக்க முயலின், நீர்வரண்டு தேய்ந்து இறுகிய வஃது குருதிநாளங்களைக் கீறி, அதனின்று கசியுங் குருதியோடு கழிதலும், முக்குதலுக்கேற்ப முளைவெளியாக்குதலுமான இயல்புடைய நோயாம்.

**நோய் வரும் வழி :** " கந்தத்தில் கருணை யொழிய வேறொன்றும் புசியோம் " என்றதால், கருணைக்கிழங்கு தவிர மற்றக்கிழங்கு வகைகளைப் புசிக்கின், அவைகள் கீழ்நோக்குக்காலை (அபானவாயுவை) கெடுத்து இந்நோயினை வருவிக்குமாயின், அக்கிழங்குவகைகளை மிகுதியாகப் புசித்தாலும், மிகுந்த காரப் பொருள்களைக் கொள்ளுதலு மான வகைகளாலும், கீழ் வாயை உறுத்தும்படி செய்யக் கூடியதான எப்பொழுதும் உட்காந்திருத்தல், குதிரை, யானை, ஒட்டை இவைகளின் மீதேறிச் செல்லல், உடற்றீயைப் பெருக்கக் கூடியதான உணவுவகை களைக் கொள்ளல், ஒக்கல் (யோக) நிலையில் தன்வன்மைக்கு மிகுதி யாக நிலைத்திருத்தல், மூச்சடக்கல் ஆகிய இவற்றாலு மிந்நோய் பிறக்கும்.

அன்றியும், பெண்கள் கருத்தரித்துள்ளபோது சூல் பெருகப் பெருகக் கீழ்க்குடல் அழுத்தப்படும்போதும், பெருவயிற்றுநோய் முதிர்ந்து வயிறு மிகப் பெரியதாகும்போதும் இந்நோய் தொடருவதுமுண்டு. சிலவேளை தாய் தந்தையின் வழியேயும் வருதலுண்டு. அன்றியும்,

" காயத்தில் மூல ரோகங் கண்டிடும் விதங்கள் கேளாய்
பாயொத்த பசியில் லாமை பட்டினி கிடக்கில் வாய்வு
மாயத்தி லிருத்திக் கொண்டு மலவறை யடக்கும் போது
ஓயத்த குண்ட லிக்கு ளூட்புகும் வாயு தானே."

என்றதால் பசியின்மை, பட்டினிகிடத்தல் என்னுமிவற்றால் கீழ் நோக்குக்கால் (அபானவாயு) கட்டுப்பட்டு எருவை வெளிபோகாதபடி அடக்கிக் கீழ் வாய்க்கனலைத் தூண்டி இந்நோயைப் பிறப்பிக்கு மெனக் கொள்க.

முற்குறி :

" காணப்பா வாயு வாலுங் கனத்தந்த வபானன் றன்னைப்
பூணப்பா மலத்தைக் கட்டிப் புகையெனக் கறுக்கி நாளுந்
தோணப்பா முள்ளையைப் போலச் சுருக்கிமுன் மலந்தான் வீழல்
ஆணப்பா வபானந் தன்னை அழுத்தவே யிறுக்கும் பாரே."

" மூலமே யெழுந்த போது மூலத்தில் கனல்தான் மீறும்
மூலமே யெழுந்த போது முனைவிந்து நாச மாகும்
மூலமே யெழுந்த போது முழங்கவே யிரைச்ச லாகும்
மூலமே யெழுந்த போது முகிலில்லாக் கழிச்சல் தானே."

எனக்கூறியதால் வளிக்குற்றத்தைப் பெருக்கக்கூடிய உணவு செயல் முதலியவற்றால் கீழ்நோக்குக்கால் கெட்டு எருவைக்கட்டி, புகையைப் போல் கறுக்கி வெளியாகாது செய்தல். காற்றுபரியச் செய்ய முடியாமை, கீழ்வாயில் கனல்போலெரிதல், தவளம் (விந்து) கெட்டுப் போதல், வயிறு இரைதல், அடிக்கடி சிறுகச்சிறுக வயிறு நொந்து கழிதல் ஆகிய முற்குறிகளைக் காட்டும்.

அன்றியும், தன்னளவிற்கு மிகுந்தெழுந்த கீழ்வாய்க் கனலால், பசியின்மை, உண்ட உணவு செரியாமை, புளித்தேப்பம், நீர்வேட்கை, உடல் மெலிந்து கொண்டேவருதல், வன்மைகுன்றல், சோம்பல் என்னுங்குறிகளையுங் காட்டும். இத்துன்பங்களால் மனமும் தளர்ந்து அடிக்கடி சினங் கொள்ளல் சீறிவீழ்தல், முகம் வேற்றுமையடைந்து விளக்கெண்ணெய் பூசினாற்போல் காணப்படுவதாகிய குறிகளையும் காட்டும்,

நோய் எண் : இந்நோய் வருவழியினைக்கொண்டு இரண்டாகவும், இவ்விரண்டினுள் ஒவ்வொன்றையும் இரண்டாக வகுத்து நான்கென வகுப்பர் சிலர். குற்ற அளவாக, வளி, அழல், ஐயமென மூன்றும் இரு குற்ற அளவாக இரண்டும், முக்குற்ற அளவாக ஒன்றும் ஆக ஆறென வோர் சாரார் வகுப்பர். தேரன் ''மூலலட்சண மேலெனப் பல நூலிற்றச மோல மிட்டதே'' எனச் சேகரப்பா 253-ஆவது பாட்டில் பத்துவகை எனவகுத்து அதன் வகைகளை :

''சீயொழு கியதுபு ணீரொழு கியதுறு தீயொழு கியதுபவி
னீயொழு கியதற லேயொழு கியதத ளேயொழு கியதுதசைக்
காயொழுகிய தழு மோரொழுகியதடர் காலொழு கியதுமுளை
யேயொழு கியதிவை மூலம தாய்நெறி யேர்பெறு மோர்பஃதே
[எனச் சேகரப்பா 254 பாடலில்]

எருவாயிலிருந்து, சீயொழுகுவது, புண்ணீரொழுகுவது, சூடோ டெரிச் சலுங்கூடிக் கழிவது, நீர்போலும் பிசுபிசுப்புடனும் தன்னை அறியா மலிழிவது, எருவாய் முளையிற்று அதன் போலிழிவது, சதையிற்று விழுவது, காய்போல் முளைக்கடுப்போடு வெளியாவது, மோர்போல், வெளுத்துச் சிறுகச்சிறுக வெளிஇழிவது அடிக்கடி காற்றுபரிவது, கீழ்க் குடல் கருணைக் கிழங்கின் முளைபோல் ஆகுவது ஆகப்பத்துவகை யெனக் கூறினர்.

யூகிமுனி தொகுப்பின்படி நீர்முளை, செண்டு முளை, எருவாய் முளை, சிறுமுளை, வறள் முளை, குருதிமுளை, சீழ்முளை, ஆழிமுளை, தமரக முளை, குழிமுளை, கழல் முளை, குதமுளை, வெளிமுளை, சுருக்குமுளை, சவ்வுமுளை, வளிமுளை, அழல்முளை, ஐயமுளை, முக்குற்றமுளை, வினைமுளை, மேகமுளை, இருபத்தொன்றென இவைகளைக் கூறினர். இவ்வகையினையே, நாம் கொண்டோம்.

எருவாய் நீர்முளை :

''செப்பக்கேள் தொப்புளிலே மிகவ லித்துச்
சுருண்டுமே கீழ்வயிற்றைப் பொருமிக் கொண்டு
வப்பக்கேள் மலம்வரண்டு வாய்நீ ரூறும்
வாய்வதுதான் பறிகையிலே நுரைபோற் காணும்

துப்பக்கேள் புடைவைதனிற் றோய்வு மாகும்
சுருக்காக மலம்வருதல் போலி ருக்கும்
நிப்பக்கே ளடிக்கடிக்கு நீராய்ப் போகும்
நிலையான நீர்மூலம் நினைவாய்ப் பாரே.''

(பொருள்) உந்தியைச் சுற்றிலும் குடல் சுருண்டது போல வலித்து, கீழ் வயிற்றில் காற்று நிறைந்து பொருமி எருவரண்டு வெளியாகாமல் அடிக்கடி காற்றுமட்டும் பரியும், அவ்வாறு காற்றுப் பரியும் போதெல்லாம் நுரையுடன் கூடிய நீர் எருவாய் வழியே கசியும். எரு வருதல் போன்ற உணர்ச்சி உண்டாயினும், அது வெளிப்படாமல் நீர் மட்டும் கசியும் ஆகிய குறி குணங்களைத் தோற்றுவிக்கும்.

2. எருவாய் செண்டு முளை:

''நினைவாகக் கருணையிட முளையே போல
நிமிர்ந்தெழுந்து நாள்மூன்று நிற்ப தாகிக்
கனவாகக் கன்றியே மிகவ லிக்கும்
காரந்தான் போட்டவுடன் களையாய் வீழும்
இனவாக இரத்தமோடு தண்ணீர் காணும்
இறுகியே மலந்தீயு மிரைச்ச லாகும்
தினவாக வாசனத்தைச் சுருக்கிக் கொள்ளும்
செயசெண்டு மூலத்தின் றிறமை தானே.''

(பொருள்) கருணைக்கிழங்கின் முளையினுடைய அடியின் வடிவமாய்ச் சிவந்து பருத்து வெளியாகிய அஃது உள்தள்ளினும் உள்ளுக்குப் போகாமல், கடினத்துடன் வரண்டு, கன்றிப்போன நிறத்துடன், கீழ் வாயிற்றோன்றி மிகுந்த வலியை உண்டாக்கும். அதினின்று குருதியும் நிண நீரும் கசியும், வயிற்றிரைச்சலோடு எருக்கட்டும். எருவாயை இறுக்கிப் பிடித்தது போல் நோகும்.

3. எருவாய்ப்பெரு முளை :

''திறமாக வாசனத்திற் கடுப்பு முண்டாம்
திரட்சியாய்த் தடித்தெரிவும் வெளியில் காணும்
அறமாக அடிவயிறு கல்லு போலாம்
ஆசனந்தான் மிகச்சுருங்கித் தினவு முண்டாம

குறமாகக் குதிகொளிரத் தப்பீ ரிறங்கும்
கூசாத இரைச்சல்மிக வெப்ப முண்டாம்
மறப்பாக மஞ்சள்முளை போலெ மும்பும்
மலந்தீயும் முளைமூல வண்மை தானே.''

(பொருள்) இந்நோயில், எருவாயில் கடுப்பு எரிச்சல் என்னுங் குறிகளைக்காட்டி, தடித்துத் திரண்ட முளை வெளியாகும். அடிவயிறு கல்லு போலக் கடினப்படும். எருவாய் மிகச்சுருங்கி அதனைச் சுற்றிலும் ,னவுண்டாய், வெளியான முளையிலிருந்து குருதிபாய்வதன்றியும், வயிற்றுள் காற்றுக் கூடி வயிறு இரைதல், அடிக்கடி ஏப்பம் வருதல், எரு தீய்ந்து கழிதல் ஆகிய குணங்கள் உண்டாகும்.

4. எருவாய்ச் சிறு முளை :

''வண்மையா யுடம்பெரியும் மயக்க மாகும்
வயிறுதான் பளபளெனும் வலுவாய்க் குத்தும்
இண்மையாய்க் குறுகு றென்றே இரைச்ச லாகும்
இசிவுடனே பொருமலா யிளைப்பு மாகும்
திண்மையாய்ச் சிறுமுளைகள் பலவுண் டாகும்
தேகமெங்கும் வெளுப்பாகும் செயலுங் காணும்
வெண்மையாய் வெளுத்துமே பசியி ராது
மேனிகன்றுஞ் சிறுமுளையின் மிடுக்குத் தானே.''

(பொருள்) உடல் எரிச்சல், மயக்கம், வயிறு ஊதி பளபளத்தல், வயிறு குத்தல், இரைதல், நோதல், பொருமல், உடல் இளைத்தல் என்னும் குறிகளைக்காட்டிச் சிறு சிறு முளைகள் எருவாயில் பல உண்டாகும். அதினின்று குருதி வடிதலின் அளவாய், உடல் வெளுக்கும். பசித்தீக்கெட்டு உடல் கன்றும்.

5. எருவாய் வறள் முளை :

''மிடுக்காக மலத்தையே யிறுக்கிக் கொள்ளும்
மிகுவாக ரத்தமது துளியாய் வீழும்
அடுக்காகச் சடமுலர்த்தி யழல்க மிக்கும்
ஆண்மைதான் மிகப்பேசிச் சண்டை கொள்ளும்
உடுக்காக வுள்ளிருக்கு முளைகள் தானும்
ஒருவருக்குந் தெரியாது ஒடுக்கி வைக்கும்
திடுக்காக நாள்தனிலே பெலன்கு றைக்கும்
செயலழிக்கும் வறள்மூலச் சேதி தானே.''

(பொருள்) வறள் மூலநோயில், உடலில் அழல் மிகுதலினால் குடல் வறண்டும், அவ்வறட்சியால், எரு உலர்ந்து இறுகி வெளியாகாமல் தடைப்படும். எருவை முக்கி வெளியாக்கின், அத்துடன் குருதி துளித் துளியாய் வீழும். முளையோ வெளித்தோன்றாமல் உள்ளே இருக்கும். குருதி வெளியாகும் அளவைப் பொருந்தி உடல்வெளுத்து வன்மை குறையும்.

6. குருதிமுளை (இரத்த மூலம்) :

"சேதியாய்த் தொப்புள்தனில் வலித்து நொந்து
சிறுகதிர்போற் பீறிட்டு ரத்தம் வீழும்
மேதியாய் மேனிவற்றி வெளுத்துப் போகும்
மிகக்கைகா லயர்ந்துமே சோபை யாகும்.
மாதியாய் மார்பிளக்குந் தலைநோ யுண்டாம்
மயக்கந்தான் மிகுதியாய்த் தள்ளிப் போகும்
நாதியாய்க் கண்ணிரண்டு மஞ்சள் போலாம்
நலியும் ரத்த மூலத்தி னண்பு தானே."

(பொருள்) இந்நோயில், தொப்புளில் வலித்து வெளிக்குப் போம் போதெல்லாம் குருதி, பீச்சுக்குழலிலிருந்து பீச்சுவது போலப் பீரிட்டுப் பாயும். இவ்வாறு மிகுதியும் குருதி வெளியாதலால், உடலின் குருதி குறைந்து, உடல்வெளுத்து, வன்மை இழந்து, கைகால் ஓய்ச்சல், மயக்கம், மார்புநோய், தலைநோய், கண்மஞ்சளித்தல் முதலியன உண்டாகும்.

7. சீழ் முளை :

"நண்பாகக் குதங்கடுத்து எரிப்புத் தோன்றும்
நாற்றியே சீயோடு தண்ணீர் காணும்
மண்பாக மாமிசங்கள் கரைந்து கொண்டு
வடிவமெலாம் வெளுத்துமே மஞ்ச ளாகும்.
மெண்பாக மேவும்வாய் நீர தாகும்
மிடுக்கான நடை குறையு மெலிவு மாகும்
திண்பாகச் சிறுநீர்தான் மஞ்ச ளிக்குஞ்
சீமூலத் தன்னுடைய சேதி யாமே."

(பொருள்) இந்நோயாளனுக்கு எருவாயைச் சுற்றிலும் கடுத்து எரிந்து, வெளிக்குப் போதற்கு முன்பு சீயோடு நீர்வடிந்து, பின்பு எரு இழியும், அதில் இற்றுப்போன சதைகளும் நிறைந்து காணும். உடல் வெளுத்து மஞ்சளித்து மெலிவடைதல், நடைசாயாமை, சிறுநீரும் மஞ்சள் நிறத்துடன் இறங்குதல் என்னும் இக் குறிகுணங்கள் காணும்.

8. ஆழி முளை :

''சோதியாய் நீண்டவள்ளிக் கிழங்கு போலத்
திமிர்த்துமே யேகமுளை யாகக் காணும்
நீதியாய் நீரோடுஞ் சீயு மிரத்தம்
நிரைநிரையாய்த் தோன்றிய மலமுஞ் சிக்கும்
காதியாய்க் காரணங்கள் ஏற்றி டாது
கடியபல வீனமாந் தேகந் தானும்
ஆதியாம் அயர்ந்ததனை யொறுத்துக் கொல்லும்
ஆழிமூ லத்தினிட ஆண்மை தானே.''

(பொருள்) இந்நோயில், வள்ளிக்கிழங்கைப் போலப்பருத்து ஒரே முளையாய் வெளித்தோன்றி அதனை உள்ளுக்கு தள்ளினும் செல்லாது, அதினின்று நீரும் சீழும் அளவுகடந்து வடியும். வெளிக்குப்போக முயலினும், எருவெளியாகாது தடைப்பட்டு தாங்கமுடியாத வலியைத்தருவதால் இந்நோயினுடைய உடல், வன்மை இழந்து அயர்ந்து போகும். இதற்குந் தக்க மருத்துவம் செய்யாவிடில் கொல்லும்.

9. தமரக முளை :

''மூலமாம் பவனித்தி லுலக்கைப் பூண்போல்
முதிர்ந்ததா மரைப்பூப்போ லலர்ந்தி ருக்கும்
நூலமாம் நொறுங்காக மலமுங் காணும்
நுணக்கேறி யிரத்தமொடு தினவு முண்டாம்
வாலமாய் வயிறிரைந்து நீராய்ப் போகும்
வயிறாதிப் பசியில்லா மந்தங் காணும்
தாலமா மேல்மூச்சாய் அசதி யுண்டாம்
தமரகமாம் மூலத்தின் றன்மை தானே.''

(பொருள்) இந்நோயில், முளைவெளியே வந்து உலக்கையின் பூண் போன்றும், தாமரைப்பூப் போன்றும் பெரிதாய்க்காணும் அதினின்று குருதி மிகுதியாய் வெளிப்படுவது மன்றி, அம்முளையில் தினவும் நமையும் உண்டாய். வெளியேகும் குருதிப்போக்கின் அளவாக உடல் மெலிந்து, சத்தற்றுப் பெருமூச்சுண்டாகும். அன்றியும், மந்தம் பெருகி உண்டவுணவு செரியாது வயிறு ஊதி இரைந்து நீராகச் கழிச்சலாகும்.

10. வளி முளை :

''தண்மைக்கோ வைப்பழம்போற் குதஞ்சி வப்புற்
றதனிலடப் பம்பூப்போல் முளைவ ளர்ந்து
கண்மைகறுப் பாய்மிருது வாயி ருக்கும்
கடுப்போடு தினவுகுத்தல் திமிர்த்த லாகும்
வண்மைமயிர் தான்முளைத்து மலஞ்சிக் கென்று
மகத்தாகக் கறுத்துமெத்த திரண்டு காணும்
வெண்மைவயிறு விட்டுமே குடலுள் வலிக்கும்
மிக்கதலை வலிவாத மூல மாமே.''

(பொருள்) இந்நோயில் கீழ்வாய் கோவைப்பழம்போல் சிவந்து, அதில் அடப்பம் பூப்போன்ற முளை வெளியாகி, கருத்து மெலிந்து காணும். இம்முளையினைச் சுற்றிலும், நமை, குத்தல், திமிர்தல் உண்டாகும். அன்றியும், எருவாயைச்சுற்றி மயிர் மிகுதியாய் முளையும். தலைநோகும், குடலுள் வலிக்கும். எருவறண்டு இறுகும் என்னும் குறிகளையுங் காட்டும்.

11. அழல் முளை :

''தலைவலிதான் மிகவுண்டாம் பருத்திக் கொட்டை
தான்போலு நெற்போலு முளையுண் டாகும்
மலைவலியாய் மலஞ்சிக்கி உருண்டு ருண்டு
மரவுண்டைத் திரிதிரியாய் ரத்தஞ் சீயாய்க்
குலைவலியாய்க் குதங்கடுத்து எரிவு மாகிக்
கூச்சமாய்த் தாகமொடு வியர்வை யாகும்
தலைவலியாய்த் தியக்குமாய்க் கோப மாகும்
சொற்பலவீ னமும்பித்த மூல மாமே.''

(பொருள்) இந்நோயிற்காணும் முளைகள், பருத்திக்கொட்டை போலும், நெல் போலும் அளவுள்ளனவாகத் தோன்றி, மிகுந்த தீக் குற்றத்தின் கேட்டால் எருவறண்டு உருண்டு மாவுருண்டைபோலத் திரி திரியாய் வெளியாகும். அத்துடன் குருதியும் சீயும் வடிந்து குலைவலி, கீழ்வாய்க் கடுப்பு, எரிச்சல், நீர்வேட்கை, வியர்த்தல், தலைநோய், வன்மைகுறைதல் என்னும் குறிகளையும் தோற்றுவிக்கும்.

12. ஐயமுளை :

''ஈனமாங் குதத்தில்முளை வெள்ளை யாகும்
எந்நேரந் தினவதிக மெரிவு மாகும்
கானமாங் கடுப்புடனே சீயுந் தண்ணீர்
கனமான வலியாகி மலந்தா னோங்குந்
தூனமா மூத்திரந்தான் சூடுண் டாகும்
சொற்குணமே தாகமாகுந் தாது நட்டம்
பானமாம் பாண்டுவொடு அருசி யாகும்
பரவுசிலேட் மமூலம் பாங்கு தானே.''

(பொருள்) இந்நோயில் தோன்றும் முளை வெளுத்து அதில் எப்பொழுதும் தினவு, எரிச்சல், கடுப்பு உண்டாய், அதினின்று சீழும் வடியும். வெளிக்குப்போகும் போதெல்லாம் கீழ்வாய் கடுத்து வலித்துச் சிறுநீர் எரிச்சலுடன் சூடாக இறங்கும். தாகமுண்டாய் உடல் வன்மை குறைந்து உடல் வெளுத்து நாச்சுவை குறையும்.

13. முக்குற்ற முளை :

''பாங்கான குதமிறுகிக் கோழிச் சூடு
பதித்ததுபோற் றானிருக்கும் நடக்கொட் டாது
வாங்கான வயிறுமெத்தப் பொரும லாகும்
வருத்தமொடு வியர்த்துமே மிகநடுக்கும்
தாங்கான தவித்துமே தாக மாகும்
தரியாமல் வயிறதுவும் பேதி யாகும்
தீங்கான சடமட்டை போற்சு ருங்கும்
திடுக்குமே தொந்தமென்ற மூலந் தானே.''

(பொருள்) இதில் தோன்றும் முளையானது கோழிக்கொண்டையைப் போலச் சிவந்தும் ஆங்காங்குச் சுருங்கியும் வெளித்தோன்றும். நடக்க முடியாமற்செய்யும். மேலும், வயிறு பொருமல், உடல் வியர்த்தல், நடுக்கல், நீர்வேட்கை, கழிச்சல், உடல் இளைத்தல் முதலிய குறி குணங்களைப் பிறப்பிக்கும்.

14. வினை முளை :

''திடுக்கிட்டுச் சோறுசெரி யாமை யாகுந்
தீபனாந்தா னில்லாமற் புளித்தேக் காகும்
அடுக்கிட்ட அடிவயிற்றிற் குத்த லுண்டாம்
ஆங்காரக் கோபமொடு மலமுங் கட்டும்
கடுக்கிட்ட கைகாலு மோய்ச்ச லாகுங்
கனமான வயிறிரைந்து காந்த லுண்டாம்
வெடுக்கிட்டு நரம்பெல்லா மிசிவு மாகு
மிகக்கடுக்கும் வினைமூல விவரந் தானே.''

(பொருள்) இந்நோயில், உண்டசோறு செரியாமல், புளித்த ஏப்பத்தை உண்டாக்கி, அடிவயிறு குத்தல், கோபம் ஆகியவைகளும் ; கைகால் ஓய்ச்சல், வயிறு இரைதல், நரம்பிசிவு, எருவரண்டு வெளி யாகையில் கடுத்தல் முதலிய குறிகுணங்களையும் தோற்றுவிக்கும்.

15. மேக முளை :

''வினையாக லிங்கத்தில் வெள்ளை யூற்றும்
மெத்தவாய்க் குதந்தன்னில் உதிரஞ் சாய்க்குஞ்
சனையாகச் சத்தமதாய்க் கழிச்ச லாகுந்
தாக்கான சிறுநீரு மெரிச்ச லாகும்
பனையாகப் பருக்குங்கால் தலைவ லிக்கும்
பாரமா யுடம்பெங்கும் திமிருண் டாகும்
முனையாக மூத்திரந்தான் மதுர மாகும்
மூர்க்கமா மேகமென்ற மூலந் தானே.''

(பொருள்) இதில் ஆண்குறியில் வெள்ளைவீழல், முளையிலிருந்து குருதி கொட்டல், வயிறுகழிதல், சிறுநீர்கட்டல், நீர்ப் புழையில் எரிச்சலுண்டாதல், தலைவலியும் உடம்பெங்கும் திமிரும் உண்டாதல், நீர் இனிப்புப்பெறல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

**16. குழி முளை (பகந்திர மூலம்) :**

> "மூர்க்கமாய்ப் பகந்திரத்திற் கட்டி யாகி
> மூத்திரந்தா னடிக்கடிக்கு அருக லாகும்
> கார்த்தமாங் கால்கையுங் கனப்பு மாகும்
> கனகனக்குங் குதங்குய்யஞ் சேவற் சூடு
> பூர்க்கமாம் பூப்போல முளைகள் காணும்
> பெருங்கோவைப் பழம்போலச் சிவப்பு மாகும்
> பார்க்கமாங் காரந்தான் போடத் தீரும்
> பகந்திரமா மூலத்தின் பண்பு தானே."

(பொருள்) இந்நோயில் எருவாயின் முளைக்குப் பக்கத்தில் சிறு கட்டியைப் போலத் தோன்றி உடைந்து, உடைந்தவாய் எளிதில் உலராது, புடம் வைத்தது போல் உள்ளே தொளைத்துக் கொண்டே போகும். அத்துளையிலிருந்து சீயும் அடிக்கடி சிறுகக்கசியும். கை கால் வீங்கும். தோன்றும் முளை, சேவல் கொண்டையைப் போன்ற வடிவத்தோடு கோவைப்பழம் போலச் சிவந்துங் காணும். இதற்குத் தக்க மருத்துவம் செய்யில் நீங்கும்.

**17. கழல் முளை :**

> "பண்புதான் லிங்கத்திற் புண்ணு மாகும்
> பாரமாய்க் கால்கையுங் கடுப்பு முண்டாம்
> குண்பாகக் குதத்துக்குள் விரண மாகிக்
> கொடிகொடியாய் முளையுண்டாய்ச் சீயும் ரத்தம்
> தண்புதான் தண்ணீரும் பெருக வுண்டாந்
> தணல்போல எரிவொடு கடுப்பு மாகுங்
> கெண்புதான் கெட்டியாய் மலம்வ றண்டு
> கீற்றாக வெடித்திருக்கும் கிரந்தி மூலம்."

(பொருள்) இந் நோயில், ஆண் குறியில் புண்ணுண்டாம். பின் அப்புண் எருவாய்வரையூடுருவிச் சிலையோடி கொடிகள் போன்று பரவி அதினின்று முளைகள் வெளித்தோன்றிய அம் முளையினின்று சீழும், குருதியும், நீரும் வடியும். வடியும்போது எரிச்சலும், கடுப்புமுண்டாகும். கையுங் காலும் எரியும். எரு வரண்டு கட்டுப்படும், அஃது வெளியாக முடியாமல், எருவாய் வெடிக்கும் என்னுங் குறிகுணங்களைப் பெறும்.

18. அடிதள்ளல் :

''இறங்குமே மூங்கிலிடக் குருத்து போல
இழுத்துமே தள்ளிடிலே உள்ளே போகும்
பிறங்குமே சீயோடு ரத்தம் பாயும்
பெருகியே வயிறுமெத்தக் கனத்துக் கொள்ளும்
அறங்குமே கால்கையு மதைப்பு மாகும்
அடிக்கடிக்கு நாவரண்டு தண்ணீர் தேடுங்
குறங்குமே மிகவலிக்குங் கோப முண்டாங்
கொடியகுத மூலத்தின் குணம தாமே.''

(பொருள்) மூங்கில் குருத்துப் போலத் தடித்து அடிக்குடல் வெளியாகித் தோன்றும். அதனை உள்ளே தள்ளின் போகும். மீண்டும் கீழிறங்கும். அதிலிருந்து சீழும் குருதியும் வடியும். வயிறு மிகக் கனத்து உப்பும். நாவரண்டு நீர்வேட்கை உண்டாம். கையுங் காலும் வீங்கும். தொடை மிகுதியும் வலிக்கும். ஆகிய இவைகள் இந் நோயில் காணும் குறி குணங்களாம்.

19. வெளி முளை :

'' குணமதாய் எண்ணெய்போல் தண்ணீர் போலுங்
கூற்றான கடும்போடு சீயு முண்டாந்
திணமதாய்த் தினவெடுக்குந் திமிர்ப்புண் டாகுஞ்
சிறுசிரங்காய் மேலெல்லாஞ் சொறியு மாகும்
பணமதா யாசனத்திற் பருப்புப் போலப்
பாங்காக விதனமாய்ப் படுக்கைக் கூடா
பிணமதாய் முகமெல்லாம் வாட்ட முண்டாம்
பேரான புறமூலப் புதுமை தானே.''

(பொருள்) சிறு பருக்களைப் போன்ற முளை வெளிப்புறமாய்த் தோன்றி, அதினின்று எண்ணெய் போலும், தண்ணீர்போலும் கடுப்புடன் சீழ் கசியும். அதைச் சுற்றிலும் தினவும் திமிரும் உண்டாகும். உடல் முழுமையும் சொறிகாணும். படுக்கையில் படுக்கவொட்டாது. முகம்வாட்டமடையும் ஆகிய குறி குணங்களை இந் நோய் பெறும்.

20. சுருக்கு முளை :

"புதுமையா யாசனத்தைச் சுருக்கிக் கொண்டு
பெருங்குடலில் வலியோடு பொரும லாகும்
கதுமையாய்க் குதந்தன்னிற் றடிப்புண் டாகும்
கழலுமே தண்ணீரும் ரத்தந் தானும்
வெதுமையாய் வெவ்வனல்போ லழன்று காணும்
வேற்றுடம்பாய்த் தான்வெளுத்து வெறிப்புண் டாகும்
புதுமைபோல் தேகமெங்கு மசைவு கூடாப்
பண்பான சுருக்கென்ற மூலந் தானே.''

(பொருள்) எருவாய் சுருங்கித் தடிப்புண்டாகி, பெருங்குடல் வலியுடன், உப்பும், மலத்துடன் நீரும் குருதியும் வெளியாகும். உடல் நெருப்புப் போல் வெப்பங்கொண்டு வெளுக்கும். உடல் ஒடுங்கும் மயக்க முண்டாகும். இக் குறி குணங்கள் இந் நோயில் காணும்.

21. சவ்வு முளை :

சுருக்கியே முதுகுதண்டி லுற்ப வித்துத்
தொப்புளிலே தாமரையின் பூப்போல் மலர்ந்து
அருக்கியே குதத்திலே கார மாக்கி
அடிவயிற்றி லோங்குமே மூல ரோகம்
சொருக்கியே சவ்வுபோ லாசன த்தில்
சுற்றியே நின்றுதான் சீயுந் தண்ணீர்
பருக்கியே கசிவாகு மெந்நே ரந்தான்
பண்பான சவ்வாகு மூலந் தானே.''

(பொருள்) இந்நோயில் காணும் முளை குழகுழத்து நீண்டு சவ்வைப் போல் கீழே தொங்கும். அதனைச் சுற்றி நிணநீரும், சீயும் எப்பொழுதும் கசிந்து கொண்டேயிருக்கும். அன்றியும், கீழ்வாயைச் சுற்றிலும் நமை யும் எரிச்சலும் காணும். அடி வயிறு நொந்து எரியும். இக் குறி குணங்கள் தோன்றும்.

தீரும் தீராதவை :

"தானென்ற மூலத்தில் சாத்தி யந்தான்
சாதகமாய் நீர்மூலம் முளை மூலந்தான்
வானென்ற வறண்மூலம் ரத்த மூலம்
வாதமா மூலந்தான் பித்த மூலம்

வேனென்ற மேகமா மூலத் தோடு
விளைபவுத்திரி மூலமாங் கிரந்தி மூலம்
பேனென்ற புறமூலஞ் சுருக்கு மூலம்
பெருகுசவ் வுமூலம் சாத்திய மாமே.''

(பொருள்) நீர் முளை, எருவாய் முளை, வறண் முளை, குருதி முளை, வளி முளை, தீமுளை, மேக முளை, வினை முளை, பகந்திர முளை, கிரந்தி முளை, புற முளை, சுருக்கு முளை, சவ்வு முளை ஆகிய இவைகள் எளிதில் தீரக் கூடியவைகளாம்.

''ஆமென்ற வசாத்தியத்தைச் சொல்லக் கோளய்
அழிவுசெண்டு மூலமா சிறுமூலந்தான்
தேமென்ற சீமூல மாழி மூலம்
தினவான தமரகமா மூலத் தோடு
வேமென்ற வினை மூலஞ் சிலேட்ம மூலம்
மிளிர்கின்ற குதமூலம் தொந்த மூலம்
ஓமென்ற ஒன்பதுவு மசாத்தி யந்தான்
உறுதியாய் மூலத்தி னுண்மை தானே.''

(பொருள்) செண்டு முளை, சிறு முளை, கீழ் முளை, ஆழி முளை, வினை முளை, ஐய முளை, குத முளை, முக்குற்ற முளை, தமரக முளை என்னும் இவ்வொன்பதும் தீராதாம்.

பொதுக்குறி குணங்கள் :

''மலமிறுகித் தழைமேயுஞ் சுவேத மையின்
வகைமையெனக் குழற்கடைத்த தாம ரைபோல்
பலமிதமா யொருவேளை யபானஞ் சுற்றிப்
பதும முகிழ் விரியமைதிப் பிரசம் போலச்
சலசலெனப் பொசி குருதித் தில்லை பொங்கத்
தள்ளாடி வசமழியத் தளர்வுண் டாக்கி
நிலவரமற் றிடவஞரை யுஞற்று மையா
நீசத்துவ மூலகுண நிலைமை தானே.''

எனச் சேகரப்பா 255 பாடலிச்

கூறியாங்கு, எருவானது இறுகி (உலர்ந்தவடிவத்தோடு கூடிய இலையைப் போல்) வரண்டு வெண்மையாக இழிதலும், தாமரைப் பூப் போல் முளை எருவாயிலடைத்தலும், சிலவேளை பலவகையான கெட்ட கீழ்நோக்குக்கால் (அபானவாயு) கொடுமை பல செய்தலும், தயிர்க் கட்டிகளைப் போல் வெளிக்குப் போகையிலிழிதலும், எருவாய் முளை வெளிப்படுமாயின் தாமரை மொட்டு அலருவது போல் விரிந்து காற்று பரிதலும், அதனோடு தாமரைப் பூவிலிருந்து சொட்டும் தேன்போல் பிசு பிசுப்புடன் நீர் சல சல வென்றிழிதலும், குருதி கசிதலுமான குறிகளைக் காட்டி, உடலினியற்கை வன்மையை அழியும்படி செய்வித்து, தளர் வுண்டாக்கி, அறிவை மயக்கி நிலவரமற்றிடச் செய்யும் ; இது கொடிய எருவாய் முளையின் பண்பிதாமெனவறியக் கிடக்கும் எனவும்.

'' கொடியபொல் லாத மூல குணத்தையென் சொல்வேன் பாந்த
ளிடியினி லொடுங்கு மாறே யெவரையுங் கசங்கச் செய்து
குடிகெடு மாறு செய்யுங் கொண்டவ ராயுட் கெய்து
முடிவத னாலே யென்று மொழிந்தனர் தழைந்த நூலோர் ''

சேகரப்பா 256-வது பாடல்.

(பொருள்) இப்பாவில் '' கொடிய பொல்லாத '' வென இரு அடை மொழிகளை மூலத்திற்கிட்டமையால், இஃது மிக்க கொடுமையான நோயெனச் சொல்லாமலே விளங்கும். எவ்வாறு பாம்பானது (பாந்தள்) இடிமுழக்கத்தைக் கண்டு அஞ்சி, நடுங்கிச் சாகுமோ அவ்வாறே இந் நோயுற்ற எவரையும் மனங்கலங்கச் செய்து குடிகெடுமாறு அஞ்சும்படி செய்யும். தக்க மருத்துவஞ் செய்யாவிடின் உயிரையும் போக்கும் எனவும்.

துருவை மலம்போற் சுருண்டு கழலா
தெருவை நிதமு மிழியும் —அருவருக்குங்
கல்லுமுளை யாக்கையெல்லாந் கம்பிக்கும் தம்பமிரா
கொல்லுமுளை மூலக் குணம்.

தேரையர் வெண்பா 130,

என்றதில், இந் நோயில் செம்மறியாட்டின் புழுக்கையே போல் எரு தீய்ந்து காய்ந்து வரண்டு சிறு சிறு துண்டுகளாக வெளியாகாது இருத் தலும், சிலவேளை அஃது நாள்தோறுமிழிவதும், இழியும் போதெல்லாம் ஓர் வகையான வெறுப்பைத் தரும், கடினப்பட்ட எரு முளையை இறுக்கி

உடல் முழுமையும் வலியைக் கொடுத்து, தூண்போல் உடலை வளைக்க வும் நிமிர்க்கவும் மாட்டாது துன்புறுத்துமென வறியக்கிடக்கும் எனவும் கூறியது. இந் நோயின் கொடுமையான குறி குணங்களைக்காணின் இதனைப் போன்ற கொடுமையான நோய் ஒன்றுமிராதெனக் குறித்தற்குத் தேரர் கூறினார்போலும்.

இக் குறி குணங்களோடு, தன்னளவில் கெட்ட கீழ் நோக்குக்காலானது பசித்தீயைக் கெடுத்துச் செரியாமை, வயிற்றுள் காற்றுச் சேர்தல், கீழ் வாயில் நமை, எரிச்சல், தினவு, முதலிய குறிகளையுங் காட்டும். எரு தீய்ந்து வருத்தத்துடன் இழிதல், எரு கழியும்போது குருதியுமிழிதல் அதனுடன் சீழ் கலந்திழிதல், எருவாய் முளை வெளியாதல் என்னுங் குறிகளையும் காட்டுவிக்கும். போகப் போகக் குருதிப்போக்குப் பெரிதும் வெளியாம். சிலவேளை குருதி பீறிட்டுப் பாய்வதுமுண்டு வெளிக்கிளம்பி வந்த எருவாய்முளை எழுந்திருக்கும்போது உள்ளடங்குமே யாயினும் எருவாயில் எரிச்சலையும் நோயையு முண்டாக்கும். எரு வாய் முளை இவ்வாறு வெளிவருவதும் உள்ளடங்குவதுமாகவே தன்னள விலும் பருமனிலும் பருத்துக் கொண்டே வந்தபின், கீழிறங்கிய முளை மீண்டும் உள்ளுக்குப் போகாமலே நிலைத்து விடுவதுண்டு. இவ்வாறு நிலைத்த முளை, எருவாய் சுருங்குகையில் தாங்க முடியாத வலியையும் குருதிப் பெருக்கையும் உண்டாக்கித் துன்புறுத்தும்.

குற்ற முதலிய வேறுபாடுகள்.—உணவு செயல் முதலியவற்றா லெழுந்த கீழ்வாய்க்கனல் மிகுந்தெழுந்து வளிக் குற்றத்தைத் தூண்டி அதனளவாகக் கீழ் நோக்குக் காலைக் கெடுக்கும். இவைகளினளவாக அழல் குற்றமும் தூண்டப்படும்.

உணவு, செயலேயன்றி ஒக்க நிலையில் (யோக நிலையில்) முதல் நிலையைத் தன் வழியாக்க முயலும்போது, தன் வன்மைக்கு மிகுந்து நிலைக்க முயலின், இயற்கையாகச் சிறிது சிறிதாக வெழும் கீழ்வாய்க் கனல் (மூலக்கனல்) சரேலென மிகுந்தெழுதலால், இயற்கையாயெழின் நன்மை செய்வதாகிய, அக்கனல், தீங்கை விளைவிக்கும். இதன் தீங்கு களை அவ்வப்போதே தடுக்காவிடின், அக்கனல் எருவினை வளரச் செய்து, எளிதில் வெளியாக்காது நோய்வாயி லீடுபடுத்தும்.

மிகுந்த கனலினளவாகப் பசித்தீக்கெடுதலும், உடல் மெலிந்து இரசம் குருதி முதலிய உடற்கட்டுகள் யாவும் தத்தம் வன்மை இழத்தலுமாக இருந்து மனநிலையையுங் குன்றச் செய்யும்.

நாடி.

'' அனில பித்த தொந்தமலாது மூலம் வராது .''

எனத்தேரன் கூறியதாலும்,

'' வாயு புகுந்து மலத்தோ டபானத்தைத்
தேயு கூட்டித் திரட்டிச் சுருக்கும்.''

வளிக்குற்றத்தின் பெருக்கால் கீழ்நோக்குக்கால் வன்மையற்று உடற்றீயை யெழுப்பி எருவை இறுக்கி, வளரச் செய்து நோயைப் பிறப்பிக்குமென அறியக்கிடக்கும்.

'' தேயும் மலமும் வரில் சுருக்கி முன்னே
நின்றேயு முனைபோ லபான னிற்குமே.''

அழல் நாடியான அதனின் இயற்கை நடைக்குமிஞ்சி வளிநாடியுடன் கலந்து நடக்கின் எருவாயில் கீழ்க்கால் கேட்டால் வந்த எருவாய் முளை யென வறிக.

''சிற்பான பித்தத்தில் வாத நாடி சேரில்

.. .. .. .. ..
.. .. .. மூலவாயு ..

(பொருள்) அழல், வளியாகிய இவ்விருநாடிகள் ஒன்று கூடி நடக்கில் மூல வாயுவால் பிறந்த முளை நோய் என அறிக.

வாதமெனும் நாடியது தோன்றில்

.. .. .. .. ..
.. .. .. .. ..
பேதமாம் ..மூலரோகம் .. ..

சதகநாடி

வளிக்குற்றத்தைக் காட்டுவிக்கும் நாடியானது அதனின் நடைக்கு மிகுந்து நடந்து காட்டுமேயாயின் அஃது வளிக்குற்றத்தால் பிறந்த எருவாய் முளை நோயென வலியுறுத்தும்.

'' .. .. .. ..
மூவரு மந்தமானால் முளைத்திடும் மூலமெல்லாம்''

.. .. .. ..
.. .. .. ..

குணவாகடநாடி

மருத்துவம் : இந்நோயின் மருத்துவத்தில் தன்னளவில் மிகுந்த கனலா லெழுந்த வளிக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்த முதலில் கழிச் சலுக்கான மருந்துகளைக் கொடுத்துக் கழியும்படி செய்ததன்பின் அக் கனலைக் குறைத்ததற்கான தக்க துணை மருந்தோடு உண்ணக் கொடுத்தல்வேண்டும். அன்றியும் கீழ்க்கனலாலுண்டாம், வலி, எரிச் சல் முதலியவைகளைப் போக்குதற்காக ஒற்றடம், புகை, பூச்சு, பற்று முதலிய புற மருத்துவங்களையும் செய்தல் வேண்டும்.

குடிநீர் வகை :

தோன்றியின் வேர்மெய் சுக்குத் தொடியரைக் கால ரைக்கால்
மூன்றையுந் நிறுத்துக் கொண்டு முக்காலே யரைக்காற் கூறுங்
கான்றமூ வுழக்குத் தண்ணீர் காலிலா வாழக்காக் காய்ச்சி
சான்றெனெப் பருக மூலந் தசமூங்கால் மசக மாமே.

சேகரப்பா—261.

(பொருள்) (1) தோன்றிவேர், (காந்தட் கிழங்கு), பெருங்காயம் சுக்கு ஆகிய இம்மூன்றை முறையே, அரை, கால், அரைக்கால் பலமாகக் கூட்டுத் தொகைக்கு முக்காலே யரைக்காற்பலமாகக் கொண்டதைச் சட்டி யிலிட்டு மூன்றாழாக்கு நீர்விட்டுக் காய்த்து முக்காலாழாக்காச் சுண்டி வரும்போதிறக்கி வடித்ததைக் குடித்துவர, காற்றிற் பட்ட கொசுப் போலப் பத்து வகை மூலநோய்கள் பறந்து போம்.

காறாக் கருணையிலை கண்டுபா ரங்கியுப்பு
நீறாக்கி யக்கண்மே நீர்விட்டு—ஆறுமுன்னே
வெண்ணெயுங்கற் கண்டுமிட்டு மெய்யா யருந்தவறு
முண்ணைபல மூலமறை மோர்.

தேரையர் வெண்பா

(பொருள்) காறாக்கருணையிலே, கண்டுபாரங்கி, உப்பு ஆகிய இவைகளைச் சட்டியிலிட்டு எரித்துச் சாம்பலான பின் மோரின் தெளிவு கூட்டிக் காய்த்து இளஞ்சூடாக உள்ளபோது வெண்ணெயும் கற்கண்டுங் கூட்டியுண்ணப் பல வகைப்பட்ட மூலநோய்களும் நீங்கும்.

காறுகின்ற கந்தத்தின் கந்தக் கருங்குமரிச்
சோறு கறிலவணஞ் சுக்கிவையை யூறவைக்க
நீரா மதற்குநிகர் நெய்விட்டடண்மூலம்
வேராணி போகுமிது மெய்.

தேரையர் வெண்பா

(பொருள்) காறுகின்ற கருணையின் கிழங்கும், கறுப்பு கற்றாழைச் சோறும், கறியுப்பும், சுக்குப் பொடியும் ஆகிய இவைகளைக் கூட்டிப் பிசைந்து வைக்கில் நீற்றுப்போம். இந்நீரில் சிறிது நெய் கூட்டிக் கொள்ளின் முளையின் வேரிற்றுப் போம்.

சூரத்துக் கடுக்காய் பலம் ஒன்று, சித்திரமூலம் வேர்ப் பட்டை பலம் அரை, சிவதை, கடுகுரோகணி வகைக்குப் பலம் கால், தயிர்த் தெளிவு படி அரைகூட்டி அரையாழாக்காகக் காய்த்துச் சூடோடே வடித்ததில் ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெய் கூட்டிக் கலந்து பருக ஒன்றிரண்டு முறை கழியும். எருவாய் முளையிற்றோன்றும் எரிச்சல், நமை முதலியவைகளின் துன்பம் தணிவாகும்.

விளாம்பழச் சதை, வில்வப்பழச் சதை வகைக்கு ஓர் எலுமிச்சங்காய் அளவும், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு,வாய்விளங்கம், காட்டாத்திப்பூ, கள்ளிவேர்ப்பட்டை, கொட்டைக்கரந்தை வகைக்குப் பலம் காலும் கூட்டியதில், நீர்படி ஒன்று சேர்த்து ஆழாக்காகச் சுண்டிவரும்போது வடித்து அதில் வேண்டிய பனை வெல்லங் கூட்டிக் கரைத்து வடித்தததைக் கொள்ளக் கழியச் செய்யும். முளை யிலிருந்திழியும் குருதியும் அடங்கும்.

காட்டுச் சீரகம், யானைத்திப்பிலி, கொத்துமல்லி, சுக்கு வால்மிளகு மாசிக்காய், சாதிக்காய், ஆயில்பட்டை, ஊழலாற்றிப் பட்டை வகைக்குப் பலம் அரையாக் கொண்டு ஒன்றிரண்டாக இடித்து புளிப்பு மாதுளைச் சாற்றில் பன்னிரண்டுமணி வரையில் ஊறவைத்ததை வடித்து, காலையில் அருந்த கழியச் செய்யும். குருதிப் போக்கைத் தடுக்கும்.

பொடி வகைகளில் : காதுவளை வேர், மருட்கிழங்கு, கருணைக் கிழங்கு, பிரண்டைவேர், ஆரை, காட்டுக்கருணை, மிளகரணை, அறுகன்வேர், நீர்முள்ளி வேர் இவைகளை உலர்த்தி ஒரெடையாகக் கூட்டிப்பொடித்து வடித்து எடுத்து மூவிரல் அளவு காலைமாலையாகக் கொள்ள நோய்போம்.

உருட்டுப் பிரண்டை, வெண்சாரணைவேர், கௌதும்பைவேர் வகைக்குப்பலம் ஆறு, கல்லுப்புப் பலம் இருபது, கடுக்காய் எண் இருபது ஆகப் பொடித்து அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சிலாசத்து, அதிமதுரம், ரோகணி, யானைத்திப்பிலி, சீரகம், கடுக்காய், சத்திச்சாரணைவேர், மரமஞ்சள், சதகுப்பை, ஓமம், திப்பிலிவேர், கோட்டம், மூங்கிலுப்பு, கடுகு, நிலாவரை, நெல்லி, தான்றி, அரத்தை, மிளகுக்கொடி, கொடிவேலி, வேர்ப்பட்டை, கடுக்காய்ப்பூ சிவதை, கருஞ்சீரகம், கரிசாலை, சிறு இலவங்கப்பட்டை, இவைகளைத் தனித்தனியாகப் பொடித்து வகைக்கு ஆறு விராகனெடை எடுத்துக் கூட்டி கலக்கியதில் கால் முதல் ஒரு விராகனெடையாக, இஞ்சிச்சாறு அல்லது சுக்குக் குடி நீர், சருக்கரை, வெல்லம், சிற்றாமணக்கு எண்ணெய், வெந்நீர் இவைகளில் நோய்க்குத் தக்கவாறாகத் துணைக் கூட்டிக் கொடுக்க நோய் போம்.

கருணைக் கிழங்கை நன்றாக உலர்த்திப் புளித்தகாடியில் வேக வைத்து மேல்தோல் நீக்கி, சிறு துண்டுகளாக அரிந்து நிழலில் உலர்த்தி வரண்டுவரும்போது சூரியனில் காய வைத்துப் பொடித்து, எட்டுப்பலம் கொண்டு அத்துடன் கொடிவேலிவேர், கடுக்காய், சுக்கு, மிளகு, இவைளின் பொடி வகைக்குப் பலம் ஒன்று கூட்டிக் கலந்து அதில் கொட்டைப் பாக்களவெடுத்து எண்ணெய் கூட்டிக் குழைத்து உண்ண நோய் போம்.

நாயுருவி அரிசியை நன்றாகக் குற்றி, உமி, தவிடு நீக்கியது படி இரண்டு கொண்டு சிறிது நெய்குத்தி இளவறுப்பாக வறுத்துப் பொடியாக்கியதில் பெருங்காயம், சீரகம் வெள்ளுள்ளி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, எருக்கன்வேர், கொம்பு, கள்ளிப்பழுப்பு ஆகிய இவைகளை உலர்த்திப் பொடித்தெடுத்து வகைக்கோர் பலமாகக் கூட்டியதில் துளசி, பிரண்டை, புளியாரை, கற்றாழை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றாகக் கூட்டி வெய்யிலில் வைத்து உலர்த்தியபின் இடித்துப்பொடியாக்கியதில் ஒன்று முதல் இரண்டு விராகனெடை நெய் அல்லது வெண்ணையில் காலை மாலையாகக் கொடுத்துவர எல்லா முளை நோய்களும் நீங்கும்.

கந்த மூலங் கடுத்த வழுக்கினும்
வெந்த வேரினைப் பிண்டி யெனச்செய்து
வெந்தை போலே நெய்விட்டுச் சருக்கரை
யுந்தொ டுத்தியி லுள்ளறு மூலமே.

(தேரையர் சேகரப்பா—260)

(பொருள்): பருத்ததோர் காராக்கருணைக் கிழங்கினைத் தோல் சீவி, பொடியாகத் தறித்து உலர்த்திப் பொடியாக்கி, அதனைப் புட்டவியலாக அவித்து எடுத்ததில் வேண்டிய அளவுகொண்டு நெய்யுஞ் சர்க்கரையுங் கூட்டிக் கற்பமாக விடாமல் அயில, உள்ள மூல நோயாவும் நீங்கும்.

நெய்வகை :

முதிர்ந்ததேங் காயான கொப்பரையைத் திருகி
முருக்கிரசம் பெருக்கியதிற் பாளிதத்தைத் தூவி
யதிர்ந்தமெய் யதைப் பொடித்து நெய்யிலனற் கொளுவி
யதிற்கலந்து பகற்பொழுதி லயில விணையைந்து
விதிர்ந்தமூ லப்பிணிகளணுகாது பறக்கும்
வெம்மையறுந் நலியெவற்று ளடையாது பாரே.

தே. செ.,-பாடல் 266.

(பொருள்) கொப்பரைத் தேங்காயைத் திருகிக் கசக்கிப் பிழிந்த பாலில் சிறிது கற்கண்டுபொடியும் சிறு நெய்யில் வறுத்துப் பொடி செய்த பெருங்காயம் பொடியுங்கூட்டி, அயில எருவாய் முளையாலுண்டாகு வலியும் எரிச்சலும் நீங்கும்.

மெய்கொப் பரைகொட்டி வெள்ளறுகு நாலுமறல்
பெய்தெரித்து நெய்துளியும் பெய்ததிலே—வெய்தகன்ற
பின்னருந்த மூலப் பிணிகளெல்லா மோடிப்போம்
மெய் தரிந்து செய்யாணை மெய்.

தேரன்வெண்பா.

(பொருள்) கொப்பரைத் தேங்காய்ப் பாலுடன், வெள்ளறுகு—கொட்டிக் கிழங்கு கூட்டி நாலுபங்கு நீர்கூட்டி, காய்த்து வடித்துச் சிறிது நெய்க்கூட்டிக் கொடுக்க எருவாய் முளைநோய்போம்.

செந்நாயுருவிவேர் ஒரு வீசையைப் பொடியாகத் தறித்து,பதினாறுபடி நீரிட்டு எட்டிலொன்றாகக் காய்த்து வடிகட்டியதில், அதிமதுரம், கடகரோகணி, செங்கழுநீர், இலுப்பைப்பூ, கோட்டம், சதகுப்பை, பச்சிலை சிறு தேக்கு, விளங்கம், சுக்கு, திப்பிலி ஆகிய இவைகள் வகைக்குப் பலம் ஒன்றாகப் பொடித்து, சிறிது பாற்றுவைத்து அரைத்துக் கலக்கி பசுநெய் படிகூட்டிக் காய்த்து, கடுகுதிரளும்போது வடித்தெடுக்கவும். இந்நெய்யில் உச்சிக் கரண்டியளவு காலையில் மட்டும் சாப்பிட்டு இள வெந்நீர் உட்கொள முளைநோயகலும்.

வல்லாரைக்கீரையின்சாறு, காறாக்கருணைத் தண்டின் சாறு, புளியாரை, புளிச்சக்கீரை, நெல்லிச்சாறு வகைக்குப்படி ஒன்றும் பசுநெய் படி அரை, பன்றி நெய் (கொழுப்பு) படி அரையும் கூட்டியதில், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, சீந்திற்றண்டு, சந்தனம், அதிமதுரம் வகைக்குப் பலமாகக் கொண்டு இடித்துப் பால் விட்டு நெகிழவரைத்துக் கலக்கிக் காய்த்து வடித்த நெய்யிலோர் கரண்டியளவு காலை மாலையாகக் கொடுக்க எருவாய் முளைநோயில் காணும் எரிச்சல், குருதிக்கழிச்சல் முதலியன நீங்கும்.

புளிவஞ்சிச்சாறு, சிறுகளாப்பழத்தின்சாறு, அருநெல்லிப் பழத்தின் சாறு வகைக்குப் படி ஒன்று, கொடிவேலிவேர்ப்பட்டை, கடுக்காய், நெல்லி, தான்றிக்காய், இலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, பேரீச்சங்காய் கொட்டை, முந்திரிப் பழம், ஏலம், எருக்கம்வேர்ப்பட்டை, கள்ளிவேர்ப்பட்டை, கோரைக்கிழங்கு இவைகளின் பொடிகள் வகைக்குப் பலம் ஒன்று, பனங்கற்கண்டு ஒரு வீசை, நெய் பலம் இருபது ஆகக் கொண்டு, சாறுவகையோடு கற்கண்டைக் கூட்டிப் பாகு செய்ததில் பொடிவகைகளைக் கூட்டிக்கொண்டு நெய் சேர்த்து இளகியம்போல் கிண்டி எடுக்கவும், இதனில் புன்னைக்காயளவு கொள்ளவும்.

**இளகவகை :**

**நத்தை இளகம் :** நன்றாக முற்றிக் கொழுத்த நத்தைகளைக் கழுவிச் சிறிதுப்புக் கூட்டி வேக வைத்து, அவைகளின் ஓட்டை நீக்கி எடுத்த சதையை அம்மியிலிட்டுப் பால் கூட்டி அரைத்தெடுத்த மொத்தை ஒரு வீசைக்குப் பசும்பால் ஒரு படியும், பனங்கற்கண்டு அரை வீசையுங் கூட்டி, அடுப்பிலிட்டுச் சிறு தீயாக எரித்து, பக்குவமாக வரும்போது அதில், கோரைக் கிழங்கு, சாதிக்காய், சாதிபத்திரி, சிறு தேக்கு, மாசிக்காய் வகைக்குப் பலமொன்றாகப் பொடித்துக் கூட்டிக்கிண்டி, நெய் படி கால் சேர்த்து எடுத்துக் கொள்ளவும். இதனில் காலை மாலை ஒரு புன்னைக்காய் அளவு சாப்பிட்டு வர முளைகள் அழிவதன்றிக் குருதிப் போக்கும் அடங்கும்.

**கருணை இளகம் :**

''மூலமெங்கே போமோ முளையெப் படிபடுமோ
பாலிற் கருணைரசம் பாதிவிட்டு— நாலு கன்னல்
பேசளவிட் டாறிலொன்று பெல்லமிட்ட லேகியத்தைக்
காசளவு தின்றுவந்தக் கால்''.

தேரன் வெண்பா 125.

(பொருள்) பால் ஒரு பங்கும், கருணை ரசம் அரைப் பங்கும் கூட்டி காய வைத்துச் சுண்டி வருகையில் இறக்கி வைத்து நான்கு நாழி வரை யிலாறியபின் ஆறுக்கு ஒரு பங்காக வெல்லங்கூட்டி எடுத்த இளகத் தைக் காசளவு காலை மாலையாகக் கொள்ள முளை நோய் நீங்கும்.

ஆமை இளகம் : கிணற்று ஆமைகளைக் கொண்டு வந்து, அவித் துத் தோல், குடல் முதலியவைகளை நீக்கிச் சதையை மட்டும் எடுத்து, பதினைந்து பலம் கொண்டு பாலிட்டு அம்மியில் மைபோலரைத்து வழித்து ஓர்படி பசும்பாலிற் கலக்கியதில், வெள்ளை வெங்காயம், வெள்ளைப் பூண்டுத் திரி வகைக்குப் பலம் இரண்டினைப் பாலில் அவித்து அம்மி யிலிட்டரைத்து வழித்தெடுத்தது, இலவங்கப்பட்டை, சோம்பு, கொத்து மல்லி, மஞ்சள், சாதிக்காய், சாதிபத்திரி வகைக்குப்பலம் ஒன்று கொண்டு பொடித்து அம்மியிலிட்டுச் சிறிது பால் விட்டரைத்துக் கூட்டிக் கலக்கி, பனங்கற்கண்டு பலம் பத்து கூட்டி இளகியம்போல் வரும் வரையில் அடுப்பிட்டுக் கிண்டி எடுத்த இந்த இளகத்தில் புன்னைக் காயளவு காலை மாலையாகக் கொள்ள எருவாய் நோய் நீங்கும்.

மாத்திரை :

"வராகபட் சணிகடுக்காய் அசம தாகம்
வால்மிளகு சுக்குகணை யாறு முதலொன்று
தராசு நிறை கைசா வகைப்பொடிமை செய்து
சருக்கரையு நெய்யுமத னெடைக்கெடை கொடுத்துப்
பராவிரு தினப்பொழுது வகையுற வரைத்துப்
பயறளவு செய்துநிழ லூடுற வுலர்த்தி
யிராவிழி துயிற்பொழுதி லொன்றொன்ற யின்றா
லீரைந்து மூலமு மிராவே யிராவே."

(தே. சே. 262.)

(பொருள்) கோரைக் கிழங்கு, கடுக்காய், ஓமம், வால்மிளகு, சுக்கு, திப்பிலி ஆகிய இவைகளில் வகைக்குப் பலம் காலாகக் கொண்டு, பொடித்து இவைகளின் கூட்டுத் தொகையின் எடைக்குச் சர்க்கரையும் நெய்யுங் கூட்டிக் கலந்து, இரண்டு நாள் அரைத்துப் பயறளவு மாத்திரை களாகச் செய்து நிழலிலுலர்த்திக் காலை மாலையிற் கொள்ள, பத்து வகை எருவாய்முளை நோய்களும் போம்.

பற்ப செந்தூரங்கள் : துத்தநாக பற்பம், வெள்ளீய பற்பம், காரீய பற்பம் அல்லது இவைகளின் செந்தூரம் இந் நோய்க்கான மருந்துகளாம்.

வெளி மருந்துகள் : கழுவுநீர், ஆல், அரசு, அத்தி, இத்தி இவைகளின் பட்டை வகைக்குப் பத்து பலமாகக் கொண்டு இடித்து ஆறுபடி நீரிட்டு ஒரு படியாகக் காய்த்து வடித்து, அந் நீரை விட்டு முளையைக் கழுவிவரின், முளை வீழும். இதனோடே விட்ணுகரந்தை, சிவ கரந்தை இரண்டையும் ஓர் அளவாகக் கொண்டு அரைத்து, சுண்டையளவு காலை மாலையாகக் கொள்ள நன்மையை எளிதில் பெறலாம்.

பற்று : (1) கம்பரிசியைக் கோவைச் சாறு விட்டுப் பொங்கி, சோறு ஆக்கியதை உருட்டிப் புதிய மண்பானையிலிட்டு நீரிட்டு வைக்கவும் ; மறுநாள் அந்நீரை நீக்கிப் புதிதாக நீர் விடவும். இவ்வாறாக, புதிது புதிதாக நீர் விட்டுக் கொண்டே வந்து எட்டாம் நாளில் உண்டையை எடுத்து, அதன் எடைக்கு கோவை இலை கூட்டி அரைத்து அடைபோல் செய்து முளைக்குமேல் வைத்துக் கட்டிவர முளை அழுகி இற்றுவிழும்.

(2) காட்டாமணக்கு இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கியாகிலும் அல்லது காடி நீரிட்டு அவித்தாகிலும், முளை மீது வைத்து கட்ட முளை பெயர்ந்து விழும்.

புகை :

குடசவித் தைப்பொடித் துக்கொல்லுதி ரத்திற்
படவுலர்த்தி யவ்வெருவோர் பாண்டத் —திடைமூட்டி
யாகு மதிலதுபெய் தப்புகொ ளாசனத்திற்
போகாவெண் மூலமெலாம் போம்.

தே. வெ.-பாடல் 129.

(பொருள்) குடச பாலை விதையைப் பொடித்து, வருடையாட்டின் குருதியை விட்டு உலர்த்தி, தாளியில் ஆட்டின் புழுக்கையை யிட்டு தணலாக்கி அப்பொடியைத் தூவி எழும் புகையை எரு வாயிற்படும்படி காட்ட நோய் போம்.

வியர்வை :

அசமதா கஞ்சுக் கரிசன மரீசம்
முசியா திடித்துடலை மூடி —யசையாமல்
நீவிகையிற் றூவுபுகை சேரிதுவு மோரியல்பு
மேவு முபதையென வேது.

தே.வெ.-பாடல் 132

(பொருள்) : ஓமம், சுக்கு, மஞ்சள், மிளகு ஆகிய இவைகளை நன்றாக இடித்து தண்ணீர் விட்டு உடலை மூடிப் புகை கொடுக்க உடல் வியர்த்து, நோய் போம்.

ஆவி பிடித்தல் :

சூடுண்ட லிட்டிகையைத் தோய்சிந்து வார்வெந்நீர்
மூடுண்ட மேனியுடன் முன்னுறக்கா —யோடுண்ட
நீர்போல்வெந் நீர்பறியு நீக்குணவு டன்புளிப்புண்
வேர்போமுண் ணாமிதுவே வேது.

தேரர் —வெண்பா. 131.

(பொருள்) செங்கல்லைச் சிவக்க அடுப்பிலிட்டுக் காய்ந்துள்ளபோது நொச்சித்தழையை நீரிட்டுக் குடிநீராக்கியதிலிட்டெழு மாவியை, எருவாயிலும், உடல் முழுமையும் படும்படியாக உடல் முழுமையும் மூடி ஆவி பிடிக்க முளையிலிருந்து நீர் கசிந்து எருவாயிலுண்டான முளையும் அற்றுப்போம். சோறு முதலிய உணவில் புளி நீக்குதல் வேண்டும்.

உணவு : இந்நோயிலெழுந்த கீழ்வாய்க் கனலையடக்குவதற்கான குளிர்ச்சிதரும் உணவு வகைகளையும் ஒருதுன்பந்தராதபடி இளகி விழும்படியாகக் குழகுழப்பைத் தரும்படியான உணவு வகைகளையும் கொடுத்தும் கீழ் நோக்குக் காலினைக் கெடுக்கக் கூடியதான கிழங்கு வகைகள், காரம், மிகுபுளிப்பு ஆகிய பொருள்களை நீக்கிய உணவுகளையும் வழங்குவது நன்று. கார்அரிசி, சவ்வரிசி, மணக்கத்தை, குறுவை முதலியவைகளைக் கஞ்சாக வேணும், சோறாக வேணும் கொடுக்கலாம்.

கீரை வகைகளுள், துத்திக் கீரை, தாளிக்கீரை, பசலைக் கீரை, சுக்கான் கீரை, வெந்தயக் கீரை போன்றவைகள் எருவை இளக்குவதேயன்றி எரிச்சலின்றி வெளியாக்குந் தன்மையுடையதாகை யால், இவற்றுள் ஏதேனும் ஒன்றில் கொடுக்கலாம் அல்லது இவற்றுள் எவ்வகை உடலுக்கு ஒவ்வுகின்றதோ அவைகளை மாற்றி மாற்றிக் கொள்ளலாம்.

காய் கறிகளுள், காறுகருணை, காறாக் கருணை, சேனைக்கிழங்கு வெண்டை, அத்திக்காய், கேவைக்காய் இவை போன்றவைகளும், பன்றி, உடும்பு, நத்தை, ஆமை இவைகளின் கறிகளையும் கொள்ளலாம். இவற்றுள்

'' சூகரக்கறி மகிமையைச் சொல்லு முன்னறு மூலநோய்.''

எனப் பன்றிக்கறியின் பெருமையைச் சொல்லுமுன்னமே மூலநோய் அற்றுப் போமெனத் தேரன் கூறியதால் இக்கறி மூல நோய்க்கு மிக நன்மை பயக்குமெனக் குறிக்கும்.

மீன் வகையில் விலாங்குமீன் நன்று. இஃது, சிறு குழந்தைகட்கும் வயது முதிர்ந்தவர்கட்கும் எருவாய்க்குடலே உலக்கைப் பூண்போல், வெளியாகும் என்னும் நோய்க்கு மிக நன்று.

இந் நோயுற்றார் உட்காரும்போதெல்லாம் கீழ்வாய் உறுத்தாதிருக்கப் பஞ்சு மெத்தையில் அமர்ந்திருப்பது நன்மை பயக்கும்.

## சிறுநீர் நோய்.

வேறு பெயர்கள் : மூத்திர நோய்.

இயல் : சிறு நீரிறங்கும்போது, நீருடன் மணல், சிறுகல் வெளி யாதல், நீர் சுருங்கல், எரிதல், வெள்ளை வீழ்தல், நீர் கட்டுப்படுதல், ஆகிய இயல்புகளுடன் சேர்ந்த ஒரு பெரும்பகுதியும், சிறு நீரைத் தன் னளவில் மிகுதிப்படுத்தல், அடிக்கடி நீரிழிதல், அதில் சர்க்கரை, தவளம் (விந்து) முதலியன கலந்து இழிதல் ஆகிய இயல்புகளுடன் கூடிய மற்றொரு பெரும் பகுதியுமுண்டு.

இவ்விரு பகுதிகளையும், தமிழ் மருத்துவ நூலோனாகிய தேரன் கரிசலில்,

" நீரிரு வினைக்குணத்தை நீயறி விரித்துச் சொல்வாம்
நீரினைப் பெருக்க லொன்று நீரினை யருக்க லொன்று
நீரிழி வுடனே கொல்லும் நீர்க்கட்டு வினைக ளொன்று."

என்று கூறிய அடிகளால் அறிக.

இம்முறையே நாமும், நீரினை அருக்கல் நோய் என்னும் பகுதியின் கீழ், கல்லடைப்பு, நீர்சுருக்கு, நீர்க்கட்டு, சொட்டுநீர், வெள்ளை என்னும் தலைப்பிட்டும், ஆங்காங்கே, அவைகளைப் பிரித்தும், நீரினைப் பெருக்கல் என்னும் பகுதியின்கீழ் நீரினைப் பெருக்கல் நோய் எனத் தலைப்பிட்டும் கூறியுள்ளோம். அன்றியும், இவை ஒவ்வொன்றையும் நூல் கூறியபடியே அவைகளின் எண்களைக் கூறி, நோயின் குறி குணங்களை விரிவாகச் செப்பியுள்ளோம். மேலும், நீரிழிவு, வெண்ணீர், தெளிநீர் என்னும் தலைப்பில் தனியாகவும் விரித்துக் கூறினோம்.

கல்லடைப்பு நோய் :

வேறு பெயர் :—அச்சமரி.

இயல்பு.—சிறுநீர் கழிக்குங்கால் அஃது இறங்கிக் கொண்டிருக்கும் போதே, திடீரென நீரடைத்தல், குறிமுனை நோதல், நீர்ப்புழை எரிதல், இடுப்பின் பின்புறத்தும், முதுகுத் தண்டின் பக்கத்தும் நோதல், சிறு நீரில் மணலையொத்த சிறு கற்கள் கலந்திருத்தல் ஆகிய தன்மைகளை யுடையதாம்.

நோய் வருவழி : சுனைநீர், பன்னாட்கள் தேங்கிய நீர் இவை களைப் பருகுவதாலும், மாப்பண்டம், வளிக்குற்றத்தை மிகுதிப்படுத்தும் உணவு முதலியவற்றை உண்பதாலும் விந்து கட்டுப்படுவதாலும் இந் நோய் பிறக்கும் எனக் கூறுவர்.

" கலங்கினதோர் தண்ணீர்தான் குடித்த பேர்க்குக்
கல்லெலும்பு மயிர்மண்தான் கலந்தன் னத்தில்
அலங்கியதோ ரன்னங்க ளருந்த லாலும்
அருகலொடு பழம்பண்ட மருந்த லாலும்

மலங்கினதோர் மாப்பண்ட மருந்த லாலும்
மந்தத்தில் வாயுவாம் பதார்த்தந் தன்னைத்
துலங்கினதோ ருசிதன்னிற் சுவைத்த லாலும்
சுருக்காய்க்கல் லடைப்புவந்து தோன்றுந் தானே.''

எண் : குற்ற அளவாக வளி, தீ, ஐ எனும் மூன்றும், சுக்கிரம், சர்க்கரா என இரண்டுங்கூடி ஐந்தென ஒரு சாராரும், குற்ற அளவாய் வளி, தீ, ஐ, முக்குற்ற மென நான்காக மற்றொரு சாராரும் கூறுவர்.

**வளி கல்லடைப்பு :**

'' தரித்துநா பிக்குங்கீழ்ச் சுருக்காய்ச் குத்திச்
சலமலந்தான் வீழாமற் றம்ப மாகி
வரித்துமே லிங்கத்தில் வலியு மாகி
மருவியதோர் பொத்தியெலாஞ் சுரந்து கட்டி
திரித்தியே கிடகொடாப் புரட்ட லாகித்
தேம்பியே மூச்சுமாய் வயிறு முப்பும்
உரித்ததோர் சதைபோல உவர்ப்பு மாகும்
ஓங்கியதோர் வாதக்கல் லடைப்பு தானே.''

(பொருள்)—என யூகி முனி கூறியதில் வளிக்குற்றத்தால் பிறந்த கல்லடைப்பு நோயில் உந்திக்குக்கீழ், சுருக்கு சுருக்கெனத் குத்தலை உண்டாக்கி நீர் இறங்குங்கால், நின்று நின்று இறங்கும். ஆண் குறி தாங்கமுடியாத வலியுடன், வீங்கிக் காணும். அவ் வலியினால் உட்கார முடியாமல் துன்பமுண்டாதலுமன்றி, அவ்வலியைத் தாங்க முடியாமல் அழுதல், பெருமூச்சுவிடல், வயிறுப்பல் முதலியவற்றைப் பிறப்பிக்கும். மேலும் வெளியாகும் நீரில், நீர்ப்புழையின் மெல்லிய சவ்வும் வெளியாகும் என்றறிக.

அழல் கல்லடைப்பு :

'' அடைப்பாகிச் சலந்தானு மருவ லாகி
அயங்காய்ச்சிச் சொருகினாற் போலே காணும்
புடைப்பாகப் பொத்தியெங்கும் புழுக்க மாகிப்
பூட்டுப்போல் பிருவாகிப் புரட்ட லாகும்

மடைப்பாகி உதிரநிற மாய்க்கல் லாகி
வந்திழிந்து லிங்கத்தில் மாட்டிக் கொள்ளும்
குடைப்பாகிக் குற்றலாய்க் கூச்ச லாகிக்
குதட்டுமே பித்தக்கல் லடைப்புத் தானே.''

(பொருள்) என யூகி முனி சொல்லியபடி இந்நோயில், நீர்ப்புழையில் இரும்பைக்காய்த்துச் சுட்டதுபோல் எரிச்சலை உண்டாக்கும். அன்றியும், உடல் முற்றும் அனலாக இருத்தலும், சிறுநீருடன் குருதி மிகவும் வெளிப்படுதலும் நீர்ப்புழை, முழுமையும் குடைவது போலும், குததுவதுபோலும், கூச்செறிதல் போலும், வலித்தலுமான குறிகுணங்களைக் காட்டி, நீரிழியும்போது செந்நிறமான சிறுகற்கள் வெளியாகும்.

ஐயக் கல்லடைப்பு ;

'' தானான தொப்புளிலே வில்லு போலச்
சலியாமற் சுரந்துமே சற்றே குத்தும்
ஏனான காலோடு கைகள் சந்து
இடுப்புதான் குடைச்சலா யிசிவு காணும்
வேனான லிங்கத்தின் வேண்மை தன்னில்
விறுவிறென்றே கடுப்பாகி வியர்வை யாகும்
தேனான வெளுப்புக்கல் சிறுகல் லாகச்
சிக்கலாய் வந்திறங்குஞ் சிலேட்மந் தானே.''

(பொருள்)—கொப்பூழிலே வில்போல் நிமிர்ந்து குத்தலை உண்டாக்கி, இடுப்பு, தொடை இவைகள் குடையும். ஆண் குறி விறுவிறுத்துக் கடுக்கும். ஆங்கு வியர்வை யுண்டாம். வெண்மை நிறமுடைய சிறுகற்கள் சிறுநீருடன் வெளியாகும் ஆகிய குறிகளைக் காட்டும்.

முக்குற்ற கல்லடைப்பு :

'' வந்திறங்கும் நீர்த்தாரை யடியிற் றாளும்
மாவருத்த முண்டாகி வலியு மாகி
நொந்திறங்கி நீர்தானு மருவிப் பாயும்
நொய்தான சிறுமணல்போல் நொறுங்கிக் கல்லாஞ்
சந்திறங்கி நீர்வழியில் வந்து வீழும்
தாக்கான சிறங்கைக்கல் தினமொன் றுக்கு
துந்திறங்கித் தினந்தினமு மிழிந்து கொல்லும்
தொந்தமாங் கல்லடைப்புச் சூட்டி டாயே.''

(யூகி முனி)

(பொருள்) நீர்த்தாரையின் அடிப்பக்கத்தில் தாங்க முடியாத வலியும், நீர் விட்டு விட்டு வருதலும், அதில் நாளொன்றுக்குக் கைந்நிறையளவு சிறுமணல் போன்ற கற்கள் வெளியாதலும் அதனுடன் வெண்ணீர் (சுக்கிலம்) கசிவதும் ஆகிய குறிகுணங்களைக் காட்டுமிந்நோய்.

குறிப்பு : வட நூற்கள், கல்லடைப்பு நோய், ஐந்தெனவும், தமிழ் நூற்களில் நான்கெனவும் வகுத்து, அவைகளின் குறிகுணங்களில் நீர்ப்பையில் நிலைத்திருக்கும் கல்லையும், நீர்ப்புழை அடைந்திருக்கும் இயல்பை மட்டுமே கூறினவே அல்லாமல் நீர்க்குண்டிக்காயில் கற்கள் தோன்றி உண்டாம் கல்லடைப்பைப்பற்றி ஒன்றுங் கூறிற்றில. ஆதலின், நாம் வழக்கில் கண்டதைக் கொண்டும் இக்கால மேல்நாட்டு மருத்துவம் கூறுவதைக் கொண்டும் நீர்க்குண்டிக்காயில் உண்டாகும் கல்லைப்பற்றி இங்குக்கூற துணிந்தோம்.

நாம் மருத்துவத்தில் உப்பு வகைகளைத் தூய்மைப்படுத்தும் பொருட்டு, சோற்றுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு முதலியவைகளை நீரில் கரைத்து, வடிகட்டி, காய்த்து உறையும்படி வைக்க அவைகள் உறைந்து நாளுக்கு நாள் பெருத்து, சில வடிவத்தில், கூர்மையுள்ள முள்ளைப் போலப் பெருகுவதையும், சில தட்டையாகவும், மற்றும் சில உருண்டையாகவும், வழுவழுத்த வடிவு கொள்வதையும், கண்கூடாய்க் கண்டுள்ளோம் அல்லவா ? அவ்வாறே நமது உணவின் சாரத்தில் கலந்துள்ள உப்புச் சத்துக்களும் உறையும்போது பலதிறப்பட்ட வடிவங்களைப் பெறும்.

நாம் உண்ணும் உணவின் சாரத்தின் பகுதி நீர்க் குண்டிக்காயில் நீராகப் பிரிக்கப்பட்டு, சிறுநீராய் (மூத்திரமாக) வெளியாகிறது. இந்நீரில் பலவகைப்பட்ட உப்புகள் நிறைந்திருக்கின்றன. இவ்வுப்புகள் சிலவேளை குண்டிக்காயிற்றங்கி உறைவதுண்டு. உறைந்த உப்பின் ஒரு சிறு பகுதி ஓரிடத்திலேயே தங்குமாயின் அஃது அளவில் பெருத்து வளரும்.

சிறிய அளவில் உள்ளபோது சிறுநீருடன் கலந்து இழிந்து நீர்ப்பையில் சில வேளை தங்கிவிடும். அங்ஙனம் தங்கிய உப்பு உருவத்தில் பெரிதாகிப் பல துன்பங்களை உண்டாக்கும். அதுவே மேற்கூறிய கல்லடைப்பு நோயாம்.

அஃது அவ்வாறே நீர்க்குண்டிக்காயில் பெருத்து வளருமாயின் உப்பின் வகைகளுக்கு ஏற்ப முனைகள் முள்ளைப்போல் கூர்மையாயிருப்பின், கடுமையான குறிகளையும், வழுவழுப்பாயிருப்பின், சற்று கடுமையற்ற எளிமையான குறிகளையும் காட்டும். உப்பு உறைந்து தங்கிய இடங்களுக்கேற்பவும் குறி குணங்களும் வேற்றுமையடையும்.

மேற்கூறியவாறு உறைந்த உப்புக் கற்கள், நீர்க்குண்டிக்காயின் வெளிப்பாகத்திலோ (Pelvis) நடுப்பாகத்திலோ (Kidney Substance) உறைந்து தங்கக்கூடும். அங்ஙனம் தங்கிய இக்கல் நாளடைவில், பெருத்து வெளியாகாமலே பல துன்பங்களையும் உண்டாக்கும்.

வெளிப்பாகத்தில் உறைந்த உப்புகள் சிறு அளவில் இருப்பினும், அவைகளின் முனை கூர்மையாயிருக்கில், அவைகள் புரளும்போது அப்பாகத்தைக் கீறி, தாங்கமுடியாத வலியையும் குருதிப் பெருக்கையும் உண்டாக்கி, சிறு நீருடன் அக் குருதி வெளியாகும். அப்போது கத்தியால் கீறுவதுபோன்ற தாங்க முடியாத வலி ஏற்படும். கல்லுண்டான பக்கத்தின் இடுப்பு, தொடை குடைதல், அப்பக்கத்து விரை மேலுக்கு இழுத்துக்கொள்வதுபோல் நோதல், அடிக்கடி சிறுநீரிறங்கல், குளிர், வாந்தி, உண்டாதல் முகம் வெளுத்தல், கைகால் சில்லிடல், நாடி தளர்தல், முகம் வியர்த்தல், சோர்வு உண்டாதல் ஆகியவைகளும், கடையில் சிறுநீரில் குருதியும் சிலவேளை சிறுகற்களும்கூடி இழிதலும் ஆகியவைகள் தோன்றும்.

நீர்க்குண்டிக்காயின் உட்பாகத்துள் காணும் கற்கள் பெரிதாய் வளர்ந்து, அங்கேயே தங்கி விடுமாயின், அங்குத் தாபிதத்தையும் சீழையும் உண்டாக்கி அச்சீழ் சிறுநீரில் கலந்து வெளியாகும். அடிக்கடி நீரிழியும்; அடிக்கடி முதுகின் பக்கத்தின் நடுவில் வலியுண்டாகும். இக்குறிகுணங்கள் சிலவேளை மிகக் கடுமையாயும், சிலவேளை மிகத் துன்பமில்லாமலும் இருப்பதுண்டு. இது பல ஆண்டுகள் நிலைத்திருப்பினுமிருக்கும்.

அக்கல், இடம்விட்டு இடம் புரளுமாயின் வெளிப்பாகத்திலிலுண்டான கற்களால் காட்டக்கூடிய குறிகுணங்கள் யாவற்றையும் பிறப்பிக்கும்.

குண்டிக்காய் வன்மை குறையுங்கால், சிறு நீரைக்கட்டும். கற்கள் சிறு அளவில் இருப்பின், அவை மெல்லமெல்ல நழுவி வெளிவந்துவிடுவதுமுண்டு. சிலர்க்கு இருபக்கத்து நீர்க்குண்டிக்காயிலும் கல் வளர்வது மிகுந்த துன்பத்தை உண்டாக்குவதுண்டு.

நோய் வருவழி : குற்ற முதலிய வேறுபாடுகளும், முற்கூறிய நான்கு வகைக் கல்லடைப்பு நோயை ஒக்குமாகையால், இதனின் மருத்துவமும் உணவும், அதனை ஒத்ததாகும். ஆதலின், அவைகளை இங்குக் கூறவேண்டியதில்லை. இந்நோய் அகமருத்துவத்தில் கைகூடாவிடில் அறுவை மருத்துவத்தை மேற்கொள்ள வேண்டும்.

பொதுக் குறிகுணங்கள் : முன்பு கூறிய முற்குறிகளைக் காட்டி, அடிக்கடி வெளியாகும் நீர் முற்றும் வெளியாகாமல், திடீரென அடைத்துக்கொள்வதுண்டு. அப்போது தாங்கமுடியாத வலி ஆண் குறியிலும், எருவாய்க்கு மேற்பகுதியிலும் உண்டாகும். சில வேளைகளில் கல் புரண்டு கொண்டே வந்து, வெளியாவதற்கு முயன்று ஆண்குறி நாவில் அல்லது முனையில் வந்து தடைப்பட்டு ஆங்கு மிகுந்த வலியையும் வீக்கத்தையும் உண்டாக்கும். கற்கள் கறடுமுறடாயேனும், கூர்மையாயேனுமிருப்பின் கீழ் வயிற்றிலும், நீர்ப்புழையிலும் தாங்கமுடியாத எரிச்சலையும் வலியையும் தந்து குருதியை மிகவும் வெளிப்படுத்தும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : நோய் வருவழியில் கூறியவாறு உணவு, நீர் முதலியவைகளால் தீக்குற்றம் மிகுந்து உடல் நீரைச் சுண்டச் செய்து, சிறுநீர் வற்றி, நீரின் உப்பை உறையச் செய்தும், கீழ்நோக்குக் கால் வன்மையிழந்தால், அவைகளை அவ்வப்போது வெளியாக்காது தங்கச் செய்வதோடு இந்நோயைப் பிறப்பிக்கும்.

நீர் : தெளியவைக்கின் சிறு மணல் போலும், சிறு கற்கள்போலும் காணப்படும்.

மருத்துவம் : குளிர்ச்சியைத் தரக்கூடியனதான கழிச்சல் மருந்துகளைக் குடிநீர் வகையிலேனும், நெய் வடிவிலேனும், கொடுத்துப் பின் கல்லைக் கரைக்கக்கூடியதும், சிறுநீர் எரிச்சலையும், அதில் கசியும் குருதியையும் அடக்கக்கூடியதுமான பொடி வகை, பற்ப செந்தூர வகை ஆகியவற்றைக் கொடுத்தல் வேண்டும். அக்கல் பெரிதாயிருந்து, மருந்துகளினால் எளிதில் கரைந்து வெளிப்படாது துன்பங்களை விளைவித்துக் கொண்டேயிருக்குமாயின், அறுவை மருத்துவத்தை மேற்கொள்ளுதல் வேண்டும்.

கழிச்சலுக்கு : 1. பிரம்மி வழுக்கை, முருங்கை இலை, சடைப் பூண்டு, மூக்கிரட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, நெரிஞ்சில், நீர் முள்ளி இவைகளின் சாறு வகைக்குப் படி அரையும், பசு நெய் படியொன்றும்

கூட்டி அதில் நீர் முள்ளி விரை, தேற்றான்கொட்டை, வால் மிளகு, முருங்கைப்பட்டை, கள்ளி வேர், சிவதை வேர், கடகரோகணி இவைகள் வகைக்குப் பலம் ஒன்றாய் எடுத்துப் பால்விட்டு அரைத்து மேற்படி நெய்யில் கலந்து சிறு தீயில் காய்த்து, மெழுகுபோல் சுண்டி வருகையில் வடித்தெடுத்து, நாள் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி அளவு கொடுக்க, ஒன்று அல்லது இரண்டு முறை மலங் கழியும் ; சிறு நீரின் எரிச்சலும்போம். குருதிக் கலப்பின்றியும் அதில் சிறு கற்களும் வெளியாம்.

2. கொட்டிக்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, வெள்ளைக் கண்டங் கத்திரி வேர், கோரைக் கிழங்கு, நிலப் பூசினிக்கிழங்கு, நெரிஞ்சிமுள், நீர் முள்ளி விரை, பாதிரிப்பட்டை, சிவதை வேர், மூக்கிரட்டை வேர், பொடுதலைக்காய் இவற்றை வகைக்குப் 10 பலம் எடுத்து இடித்து, நான்கு படி நீர் விட்டு அரைப்படியாய் வற்றச் செய்து, வடித்து, அதில் நெய் அரைப்படி விட்டுக் காய்த்து வடித்து, அத்துடன் கல்நார் பற்பம், சிலாசத்து பற்பம், வெண் குங்கிலியம், காவிக்கல் வகைக்கு ஓர் விராகனெடையாய்ப் பொடித்துக் கலந்து கிண்டி, அதில் ஒரு தேக்கரண்டி அளவு காலை மாலை கொடுக்க, நீங்கும்.

குடிநீர் வகைகள் :

நீர் முள்ளி, நெரிஞ்சில், சிறுபீளை, ஏரழிஞ்சில் இவைகளின் இலை களை ஓர் அளவாய்க் கூட்டி எட்டு பங்கு நீர் விட்டு, எட்டிலொன்ருய்க் காய்த்து, அதில் காலை மாலை ஒவ்வொர் ஆழாக்கு உட்கொள்ள வேண்டும். அதில் விரால் மீன் தலைக்கல்பொடி அரைச் சிட்டிகை கலந்து குடிக்கில் கல்லுடைந்து வெளியாகும்.

பனங்குருத்து, நெரிஞ்சில், நீர்முள்ளி, சூரைவேர், காஞ்சொறி வேர், வில்வ வேர், குரோசாணி ஓமம், நீர்க்கடம்பின் வேர் இவைகளை ஓர் அளவாய்க் கொண்டு முறைப்படி குடிநீராக்கி, காலை மாலைகளில் ஒவ் வோர் ஆழாக்குக் குடித்துவர, கல்லுடையும்.

புல், பூண்டு வகைகளுள், முள்ளிக்கீரை. பசலை, சிறுபீளை, முள்ளங்கி, வாழைக்கட்டை, நீர்க்கடம்பு, மயிர் மாணிக்கம், சூரியகாந்தி, சாரடை, சத்திச்சாரணை, மூக்கிரட்டை, முருங்கை, நாயுருவி, அரிசிக்காடி முதலியவற்றையும், உயிர்வகைப் பொருள்களுள் விரால் தலைக்கல், பறப்பன நடப்பனவற்றின் மண்டை ஓடு, தரைப்படு பொருள்களில் சிலா சத்து, கல்மதம், வெடியுப்பு, நவாச்சாரம், சீனாகாரம், வெண்காரம்

முதலியவற்றையும் இந்நோய்க்குத் தனித்தேனும், மருந்தாகச் செய்தேனும் கொடுப்பின், கல்லைக் கரைப்பதன்றி,சிறுநீர்ப் பெருக்கை உண்டாக்கிச் சிறு கற்களையும், கரையப்பட்ட கற்களையும் வெளிப்படுத்தும்.

மாத்திரைகள் : (1) கல்லுடைகுடோரி.
(2) சலோதாரிமணி.
(3) சலமஞ்சரி.

சுண்ணம் பற்பம் : (1) விரால் தலைக்கல் பற்பம்.
(2) வெடியுப்புச் சுண்ணம்.
(3) பலகரைப் பற்பம்.
(4) சங்கு பற்பம்.
(5) சிலாசத்துப் பற்பம்.
(6) கல்நண்டு பற்பம்.

செந்தூரம் : (1) வெடி அன்னபேதிச் செந்தூரம்.
(2) வெடியுப்புச் செந்தூரம்.
(3) வெள்ளிச் செந்தூரம்.
(4) இரசச் செந்தூரம்.

இவைகளில் நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுத் துணையாய்க் குடிநீர் வகைகளுள் ஏதேனும் ஒன்றைக் கொடுக்கலாம்.

உணவு : நீரைப் பெருக்கி நீர்ப்பையைக் கழுவுவது போன்று, ஆங்குக் கூடியுள்ள சிறு கற்களை வெளியாக்கிச் சிறுநீரைப் பெருக்கக் கூடியதான உணவுகளைக் கொடுத்தல் வேண்டும்.

குருவை அல்லது மணக்கத்தை அரிசியாலாக்கிய சோறும், முள்ளங்கி, கீரைத்தண்டு, வாழைத்தண்டு, சிறு கீரை, அவரை, வெண்டை, வசலைக் தாளிக்கீரை, பசரைக்கீரை, காசினிக்கீரை, இவைகள் போன்றவைகளைக் கையாளல் வேண்டும். வேண்டுமாயின், பார்லி அரிசிக் கஞ்சியும் கொள்ளலாம்.

கற்களை உண்டாக்கக்கூடிய உப்பு வகைகளைப் பெருக்கக்கூடிய காய் கறிகளில், தக்காளி, கோஸ், வெள்ளைப்பூ (காளி பிளவர்) முதலிய பெங்களூர் காய் கறிகளை அறவே நீக்க வேண்டும். அன்றியும், உப்பு வகைகள் நிறைந்த நீர்களைப் பருகாமல் இருத்தல் வேண்டும்.

## நீரடைப்பு.

இயல் : சிறு நீர் சுருங்கி அளவில் குறைந்திழிதலும் நீர்ப்பையும் நீர்ப்புழையும் எரிதலும், வயிறு விம்மி நோகுதலுமான இயல்புடையது.

குறி குணங்கள் : மூக்கில் நீர் பாய்தல், கண் இரப்பை சற்று வீங்கி கண்ணீர் வடிதல், மார்பு நொந்து மூச்சுத் தடுமாறுதல் ஆகிய இம் முக்குறிகள் நாளுக்கு நாள் மிகுந்து, வாந்தி, தலை நோய், மயக்கம், உறக்கம், சுரம், உடல் வெளுத்தல், உடல் ஊதல், கண் ஊதி மூடிக்கொள்ளல், வயிற்றுள் நீர்கோர்த்து ஊதல் என்னும் குறி குணங்களைக் காட்டி, சிறுநீரை மிகச் சுருக்கி நீரில் குருதிகூடிக் கரு நிறத்தோடிழியும்.

நீர்ப்புழையில், எரிச்சல், நமை, நோதல் என்னுங் குறிகளைக்காட்டி, சிறுநீர் கழியும்போது தாங்க முடியாத எரிச்சலையும் நோயையுந் தந்து சூட்டுடன் நீர் இறங்கும். அப்போது நீரிறங்குதற்கு முன்பேனும், பின்பேனும் பச்சைக் குருதி வெளியாகும். சிலவேளை நீருடன் குருதி கலந்து கருத்து வெளியாவதும் உண்டு. இத்துடன் இளைப்பு, பெரு மூச்சு, ஆயாசம், மார்பு நோய், முக வீக்கம், சிறு சுரம், இடுப்பு நோய், ஆண் குறி வீக்கம், அடி வயிறு நோதல், குத்தல் என்னுங் குறி குணங்களும் பெறும்.

இந்நோய் சிறு வயதினர்க்குண்டாயின், சிறு நீரில் பெரிதும் குருதி கூடியிழியும். இஃது எளிதில் தீரக்கூடிய நோயேயாயினும், சில வேளை மூன்று நான்கு திங்கள் வரையும் நிலைத்திருக்கின் முகம், கால், வயிறு மிகவும் ஊதி, சிறு நீர் தன்னளவில் மிகவும் குறைந்து, உடல் வெளுத்தல், உடல் வன்மை குறைதல், செரியாமை என்னுங் குறி குணங்களை உண்டாக்கும்.

குறிப்பு : இந்நோயிலிழியும் சிறு நீரைக் காய்ச்சின் அது முட்டை வேக வைக்கும்போது வெண்கரு வெளுத்து உறைவதுபோல உறையும்.

குற்ற வேறுபாடுகள் : சூட்டைத் தரக்கூடிய மிளகாய் முதலிய காரப் பொருள்களை மிகுதியாய்ப் புசித்தாலும், எப்பொழுதும் குதிரை முதலியவற்றின்மீது சவாரி செய்வதாலும் , உட்கார்ந்துகொண்டே இருத்தலாலும், சிறு நீரை அடக்கலாலும், கீழ் வாய்க்கனலை எழுப்பிக் கீழ் நோக்குக் காற்றை(அபான வாயுவை)த்தூண்டச் செய்து, தீக்குற்றத்தைக் கேடடையச் செய்யும். மிகுந்த குற்றம் தனக்குத் துணையாக மற்றக் குற்றங்களையும் பற்றுவதால் நோய் பெருகும். இந்நோய்

யோகத்தில் முதல் முதலில் (மூலாதாரத்தில்) தொடங்கும்போதும் வருவதுண்டு. அன்றியும் இளவயதுடையவர்க்குக் குளிர் காற்று, ஈரம் முதலியவைகளால் ஐயம் பெருகியும் வருவது உண்டு.

தன்னிலை திரிந்த தீக்குற்றத்தின் அளவாகக் குருதியும், உடல் வன்மையும் கெடும். ஐயங் கூடுவதால் உடல் வீக்கமும், வளி கூடுவதால் வயிறு ஊதல் முதலியவைகளும் காணப்படும்.

நீர் : அளவில் குறைந்து குருதி கூடி கருத்து எடையில் கனக்கும்.

எரு : (மலம்) இறுகி, சிலவேளை இளகிக் கழியும்.

மருத்துவம் : இந்நோயில் தன்னிலை திரிந்த தீக்குற்றத்தையும் கீழ் நோக்குக் காற்றையும் தன்னிலைப்படுத்தி, சிறுநீர் எளிதில் வெளியாகக்கூடிய மருந்து வகைகளைக் கையாளல் வேண்டும்.

வெளிக்குப் போதற்கும், சிறுநீர் இழிவதற்கும் கீழ்க்காணும் மருந்துகளை முதல் முதல் கொடுத்தல் வேண்டும் . அவைகள் :

(1) குடிநீர் வகையில், நீர்முள்ளி, நெரிஞ்சில், சுரைக்கொடி, சோம்பு, சரக்கொன்றைப் புளி, கடுக்காய், நெல்லி, தான்றி வகைக்கு ஒரு நிறையாய்க்கொண்டு குடிநீரிட்டு அரை முதல் ஓர் ஆழாக்காக்கிக் கொடுக்கில் வயிறு கழித்தலும், சிறு நீரிழிதலும் உண்டாகும்.

(2) காக்கணம் வேர், முடக்காய் வேளை வேர், சிறு பீளை வேர், மூக்கிரட்டை வேர், வெட்டி வேர், விலாமிச்சுவேர், வில்வ வேர் வகைக்கு ஒரெடையாய்க் கொண்டு முறைப்படி குடிநீராக்கி, அரை முதல் ஓர் ஆழாக்கு வரை இளஞ்சூட்டில் ஒரு சிட்டிகை குங்கிலியம் பொடித்துத் தூவிக் கலக்கிக் கொடுக்கவும்.

(3) கற்றாழை வேர், நீர்க்கடம்பின் வேர், மிளகுக் கொடி, வெள்ளைச்சாரணை வேர், பொடுதலைக்கீரை, கீழாநெல்லி இவைகளை ஒரு நிறையாய்க் கொண்டு முறைப்படி குடிநீராக்கி அரை முதல் கால் ஆழாக்கு வரை கொடுக்கலாம்.

(4) இரும்புக் கிட்டம் பலம் இரண்டு,நெரிஞ்சில், வெள்ளரி வித்து, பற்பாடகம், சிவதை வேர், சுரைக்கொடி, காசினி விரை, நன்னாரி ஆகியவை வகைக்குப் பலம் ஒன்று, கள் படி ஒன்று, காடி நீர் படி ஒன்று, பசு நீர் படி ஒன்றுக்கு இவற்றைக் கூட்டி முறைப்படி குடிநீரிட்டு அதில்

வேண்டும்பொழுதெல்லாம் அரை ஆழாக்குக் காலை மாலைகளில் கொடுக்க லாம். இக்குடி நீர்ப்பானை அடுப்பிலேயே சிறு தீயில் இருத்தல் வேண்டும். இதனை அடைக்குடி நீர் எனவும் பாண்டக் குடிநீர் எனவும் கூறுவர்.

(5) வெள்ளறுகு, பிரமதண்டி, நீர்பிரமி, வல்லாரை, பொடுதலை, நீர்க்கடம்பு, கீழ்க்காய் நெல்லி, சகதேவி, நெய்ச்சிட்டி இவைகளுள் நோய்க்குத் தக்கவாறு ஏதேனும் ஒன்றை அரைத்து எலுமிச்சங்காய் அளவு உருட்டி மோரிலேனும் அல்லது இளநீரிலேனும் மூன்று நாள் கொள்ள இந்நோய் நீங்கும்.

எண்ணெய் வகைகள் :

பூவரசம்பட்டை, கற்றாழை, பிரமதண்டி, வெள்ளறுகு, கோவை இலை, வெள்ளை வெங்காயம் இவைகளின் சாறுகள் வகைக்குப் படி ஒன்று சிற்றாமணக்கெண்ணெய் படி ஒன்று, இவற்றைக் கூட்டிச் சிறு தீயால் எரித்துப் பக்குவத்தில் வடித்து, அதில் நன்றாய்ப் பொடித்த பூரம் பலம் ஒன்று, சிலாசத்து பற்பம் பலம் ஒன்று, கல்நார் பற்பம் பலம் ஒன்று கூட்டிக் கலந்து வைத்துக்கொள்ளவும். இதில் நாள் ஒன்றுக்கு அரை முதல் ஓர் அவுன்ஸ் வரை கொடுக்க நன்றாய் வயிறு கழியும்; துர் நீர் வடியும்.

சகதேவி நெய் : அதிமதுரம், சந்தனம், நன்னாரி வேர், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், திப்பிலி வேர், கிராம்பு, கடுகுரோகணி, நெய்தற்கிழங்கு வகைக்கு ஒரு விராகனெடை எடுத்து, சகதேவி இலைச் சாறு அரைப் படியில் சிறிது விட்டு நன்றாய் அரைத்து மிகுதிச் சாற்றை யும் பசு நெய் ½ படியும் அதில் விட்டுக் கலக்கிச் சிறு தீயில் எரித்து வடித்ததில், ஓர் உச்சிக் கரண்டி அளவு உள்ளுக்கும், தலை முழுக்குக்கும் பயன் படுத்த நீர்ச்சுருக்குப்போம்.

நெய் வகைகள் : தண்ணீர் விட்டான் கிழங்கு நெய், வல்லாரை நெய், சீந்தில் நெய் முதலியன இதற்குதவும். இம்முறைகளைச் சித்த வயித்தியத் திரட்டில் பார்க்கவும்.

பற்ப செந்தூரங்கள் : முத்து, பவளம், சிலாசத்து. கல்நார், வெடி யுப்பு, வெங்காரம், சீனாகாரம், நவாச்சாரம், கல்கண்டு, குங்கிலியம் இவைகளாலாகிய பற்ப செந்தூரங்களை நோய்க்குத் தக்கவாறு அள விட்டு, நீரை வெளியாக்கக் கூடியதும், எரிச்சலைப் போக்கக் கூடியது மான குடிநீர், பொடி, நெய் வகைகளைத் துணை மருந்தாகக் கூட்டிக் கொடுக்கலாம்.

கற்சுன்னம் $2\frac{1}{2}$ தோலா, நீர் $\frac{3}{4}$ படி கூட்டிக் கலக்கித் தெளிந்த நீர் முக்கால் ஆழாக்கு, ஆமணக்கு எண்ணெய் $\frac{3}{4}$ ஆழாக்கு, ஓர் ஆழாக்கு முட்டை வெண்கரு கூட்டிக் குழைத்துக் குங்கிலியம் மூன்று கழற்காய் அளவும் சந்தனத்தைலம் மூன்று துளியும் கூட்டி, காலை மாலை கொடுக்கலாம்.

(பிரமநாயகம் பிள்ளை).

**உணவு வகை :** எளிதில் செரிக்கக் கூடிய உணவுகளாகவே இருத்தல் வேண்டும். மிகுந்த காரம், புளிப்பு நீக்குதல் நன்று, குருவை, கார் அல்லது மணக்கத்தை அரிசியாலாக்கிய சோறும், வெண்டை, பீர்க்கு, புடல், வாழைப்பு, அத்திப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, முள்ளங்கி, சிறுகீரை, தாளிக் கீரை, பசலை, பசலை, காசினி, வெந்தயக் கீரை என்னும் காய் கறிகளையும், பன்றிக் கறி, உள்ளான் இவைகளையும் கொள்ளலாம். மீன், நண்டு வகைகள் ஆகா. கொதி நீரில் பனங் கற்கண்டு கூட்டிக் கொள்ள நற்பலனைத் தரும். (காப்பி, தேத் தண்ணீர் இவைகளைக் கொள்ளக்கூடாது).

## நீர்க் கட்டு.

### வேறுபெயர் : நீரடங்கல்.

இயல் : நாழி கணக்காய்ச் சிறு நீர் பெய்யாமலே இருப்பினும், நீர்ப்பை நிறையாது இருத்தல், நீர்ப்புழை வழியே சலாகையிடினும் சிறு சொட்டு நீரும் வெளியாகா திருத்தல் என்னும் இயல்புடைத்தாம்.

நோய் வருவழி : இந்நோய் இருவழியாய் வருவதுண்டு, நீர்க் குண்டிக் காயில் உண்டான சிறு கற்கள் நீர்க் குண்டிக்காயின் புழையை அடைத்து, சுரந்துண்டான நீரை வெளிப்படுத்தாமல் தடைப்படுத்தல், அல்லது பிறப்பிலேயே புழை அடைபடுதல் அல்லது புழையின் கட்டிக் கழலைகள் பிறத்தல் ஆகிய தடைகளால் சிறு நீர் வெளியாகாது வருவது ஒரு வகையாம். நீர்க் குண்டிக்காய் அழல் குற்றத்தாலும் அல்லது ஐயப்பெருக்காலும் தாபிதமடைந்து இயற்கையாக நீரைப் பிரித்து வெளியாக்கும் தொழிலை இழத்தலாலும், குண்டிக்காயின் நீர்ப்புழைகளில் குருதி கட்டித் தடை படுதலாலும் அல்லது அடிப்பட்டு நசுங்குதலாலும், நஞ்சு கொள்ளுதலாலும், மிகுந்த பேதி, வாந்தி, அளவு கடந்து வியர்த்தல் முதலிய நோய்களாலும் வருவது மற்றொன்றாகும். அன்றியும் நாட்பட்ட நீரிழிவு நோயின் கடையிலும் இந்நோய் வருவதுண்டு.

குறிகுணங்கள் : முதற்கூறிய அடைப்பால் உண்டாகும் நீர்க்கட்டு நோய்களில், நீர்க் குண்டிக்காயுடன் தொடரும் நீர்ப்புழைகளில் ஒன்று தடைபட்டு மற்றொன்றின் தொழில் கெடாதிருப்பின் மிகுதியும் கேடு உண்டாவதில்லை. இரண்டு புழைகளும் ஒரே காலத்தில் அடைபடு மாயின், தீமைகள் பல செய்யும்.

அவைகள் : சிறுநீர் முற்றிலும் கட்டுப்பட்டு, சிறிதும் இறங்காமை, மயக்கம், தலைசுற்றல் என்னும் குறிகுணங்களைக் காட்டி, பத்து நாட் களுக்குள் படுக்கையில் கிடக்கச் செய்து, அரட்டல், புரட்டல் கைகால் சில்லிடல், நாவரட்சி, கொறுக்குவலி, கண்பணி சுருங்கல் என்னும் குறிகளைக் காட்டிக் கொல்வதுண்டு.

இரண்டாவது கூறிய வகையில் முற்கூறியது போல் தடையதிகமாய் இல்லாதிருப்பினும், தாபிதத்தால் நீர்ச்சுரப்புக் கட்டு பட்டுச் சிறு அளவில் வெளியாகும் சிறுநீர் மிகவும் கடினப்பட்டு, செந்நிறத்தோடு இழியும். உடலில் பிசுபிசுத்த வியர்வையும் உண்டாகும்; அது சிறுநீர் மணத்தை வீசும், இத்துடன் கடினமான வாந்தியும் பேதியும் உண்டாம். மூச்சுத் தடுமாறல், மயக்கம், சோர்வு ஆகிய குறிகுணங்களையும் காட்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : கல்லடைப்பு நோய், நீர் சுருக்கி நோய்களில் கூறியவைகளே இவ்விருபகுதி நோய்களுக்கும் ஒக்குமாகலின் மீண்டும் இங்குக் கூறவில்லை.

மருத்துவம்: வியர்வை பிடித்து உடலின் நீர்ப் பகுதியை வெளியாக்க:

(1) நொச்சி, மஞ்சள், நெரிஞ்சில் இம்மூன்றையும் ஓர் எடையாய்க் கொண்டு எட்டுப்பங்கு நீர்விட்டு எட்டில் ஒன்றாய் வற்றச்செய்து, சூடாக உள்ளபோதே சிவக்கக் காய்ச்சிய செங்கல்லை அந்நீரிலிட்டு எழும் ஆவியை உடல் முழுமையும் படும்படி கம்பளத்தைக்கொண்டு மூடி இருக்க வியர்வை வெளிப்படும்.

(2) இடுப்புமட்டும் வெந்நீரில் உட்கார வைத்தல் நல்லது.

(3) இடுப்பின் பின்புறத்தில் தவிடு முதலியவைகளைக் கொண்டு ஒற்றடமிடலாம். இம்மூவகைப் பரிகாரத்தால் நீர்ச்சுரப்பு உண்டாய் நீரிழியும். வாந்தி பேதியாலோ, அல்லது இரண்டினாலோ பிறந்த நீர்க்கட்டுகளை, அந் நோய்களுக்கேற்ற மருத்துவம் செய்வதோடு, மேற் கூறிய மூன்று வகையான மருத்துவமும், நீரைப் பெருக்கக்கூடிய

மருந்துகளும் கொடுத்தோ, பரிகரிக்கவேண்டும். கைகால் சில்லிட்டிருப்பின், கொள்ளும், கற்பூரமும் கூட்டி உடல் சூடுண்டாகும்படி தேய்த்தோ அல்லது தவிடு முதலியவைகளைக் கொண்டு ஒற்றடமிட்டோ பரிகரிக்கலாம்.

(4) நீரை உடைத்து வெளியாக்குதற்குச் சீமைக்காசினி விதை, வெள்ளரி விதை, நெரிஞ்சு முள், முள்ளங்கி விதை இவற்றை ஓர் எடையாய்க் கொண்டு முறைப்படி குடி நீராக்கி, ஆழாக்கு அளவு கொடுக்கலாம். அல்லது,

(5) கொடி வேலி வேர்ப்பட்டை, ஏலம், தாமரைக் கொட்டையின் பருப்பு, வெட்பாலை அரிசி, வெள்ளை நீர் முள்ளிப்பு ஓர் அளவாய்க் கொண்டு குடிநீரிட்டு அதில் அரை ஆழாக்காக, காலை மாலை கொடுக்கலாம்.

செய்மருந்து வகை : வெடியுப்புச் செந்தூரம், வெடியுப்புச் சுன்னம், குங்கிலிய பற்பம், வெண்ணெய்பற்பம் (தேரன்முறைப்படி செய்தது) முத்துபற்பம், இரசபற்பம் இவைபோன்றவைகளை நோய் வன்மை அறிந்து அளவிட்டுக் கொடுத்தல் வேண்டும்.

இந்நோயில் முப்பிணி (சன்னி) தொடருமாயின், அதற்கான கண்ணிலிடுமருந்து (கலிக்கம்) மூக்குப்பொடி வகைகள் (நசியங்கள்) வழங்கிய பின், முப்பிணி மருந்துகளாகிய வைரவக் குளிகைகளையும் அவைகளைப் போன்ற மற்றைய பெருமருந்துகளையும் கையாள வேண்டும்.

உணவு : நீரைப் பெருக்கக்கூடிய உணவு வகைகளைக் கொடுத்தல் வேண்டும். அவைகள் பொரிக்கஞ்சி, பார்லி அரிசிக் கஞ்சி, இரண்டு முறை வடித்த சோற்றை நன்றாய் கடைந்து வடித்த கஞ்சி முதலியவைகளைக் கொடுக்கலாம். அத்துடன் சிறிது சோம்பு நெருஞ்சில் கூட்டிக் காய்த்து வடித்துக் கொடுத்தல் நன்று.

நோய் வன்மை குறைந்து வரும்பொழுது உணவுகளைச் சிறுகச் சிறுக ஏற்றிக்கொண்டே வருதல் வேண்டும். அதிலும் நீரைப் பெருக்கக் கூடிய உணவுப் பொருள்களையும், உடற்கு ஊட்டத்தைத் தரும் பொருள்களையும் படிப்படியே சேர்த்து வருதல் நன்று. மிகு காரம், புளிப்பு, உப்பு, சேர்ந்த பொருள்கள் ஆகா.

## 3. சொட்டு நீர்

சொட்டு நீர் : வேறு பெயர் சொட்டு மூத்திரம்.

இயல் : சிறுநீர் தனக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஒழுகிக் கொண்டிருப்பது.

எண்.—இருவகைப்படும்.

(1) குழந்தைகளுக்கு வருவன (2) பெரியவர்கட்கு வருவன.

குழந்தைகளுக்கு காணும் சொட்டு நீர்.

குழந்தைகளுக்குக் காணும் சொட்டுநீர், குழந்தைப் பருவத்தில் பெரும் பான்மையும் அறிவின்மையால் தமக்குத் தெரியாமலே இரவில் படுக்கையில் நீர் பெய்வது பெரியவர்களான பின்பும் தம்மியல்பி லேயே வழக்கமாய் வந்து விடுவதுண்டு, சிறு ஒலிக்கும் அஞ்சும் இயல்புள்ள குழந்தைகள், தங்களுக்கு அஞ்சக் கூடிய நிலையுண்டாயின் தம்மையறியாமலே நீர் சொரிவதுண்டு. மற்றும் சில குழந்தைகள் நீர்பெய்ய வேண்டுமென விருப்பினும் சோம்பலால் பெய்யாமலே இருந்து அந்நீர் தானாகவே சொட்டுவதுண்டு. இஃதொரு வகையாகும்.

வயிற்றுப்புழு, இளைப்பு நோய் (க்ஷயம்), நீர்ப்புழை பிறப்பிலேயே சரியான அளவிலில்லாது குறுகியிருத்தல், நீரருகல், அல்லது நீர்ப் பெருகல் ஆகிய நோய்களிலும் சொட்டு நீர் நோய் உண்டாகக்கூடும். இது மற்றொரு வகை.

பெரியவர்களுக்குக் காணும் சொட்டுநீர்.

நோயில் அடிக்கடி நீர் வெளிப்படுதல் போன்றிருக்கும் உணர்ச்சியால் தான் அதனை அடக்க முடியுமாயினும், அடிக்கடி நீரைச் சிறு அளவில் சொட்டிவிட்டு எழுந்திருப்பது ஒரு வகை. சில வேளை இருமல், சிரித்தல், அழுதல், பயப்படுதல் முதலியவைகளால் தன்னையறியாமலே நீர் சொட்டிவிடுவது மற்றொருவகை. நீர் பெருக்கல் நோய் (நீரிழிவு) நீரருகல் நோய், வெள்ளை நீர்ப்பைத் தாபிதம் என்னும் இவைகளின் கேட்டால் விளைவது ஒன்றும்: நரம்புத் தளர்ச்சி, பாரிசவாயு (பக்கவாதம்) பகந் திரம், கீழ் நோக்குக்காலின் செயல் வன்மை குறைதல் ஆகியவைகளால் வருவது மற்றொன்றும் ஆகும்.

மருந்துவம் : நோய் வருவழி, நோயில் காணும் குறிகுணங்கள், குற்ற வேறுபாடுகள் இவைகளைக்கொண்டு, நீர்நோய்களில் கூறிய மருந்துவகைகளைக் கொடுக்க இவைகள் நீங்கும்.

## நீர்ச்சுருக்கு.

வேறு பெயர் : நீரருக்கல், நீர்க்கடுப்பு, மூத்திரக்கிரீச்சரம்.

இயல் : " நீரினை யருக்க லென்னும் நீர்க்கட்டின் குணத்தைக் கேட்டி

நீதமில் லாமற்கோச நீர்ப்புழை நெருப்பு போலாம்
நீபனா யுதத்தாற் பட்ட நீலவம் பரமாங் குக்கி."

எனத்தேரன் கரிசலில் கூறியதுபோல், இந்நோயில் சிறுநீர் சுருங்கி வெளியாகாமலும், நீர்ப்புழையில் குத்தல், எரிச்சல், வலி ஆகிய வற்றை உண்டாக்கியும், முகத்தை வீங்கச் செய்தும் சொட்டு சொட்டாய் நீரிறங்கியும் துன்புறுத்தும் இயல்புடையதாம்.

நோய்வருவழி : வெப்பத்தைத் தரக்கூடியதான பொருள்களை மிகுதியாய்க் கொள்ளல், வெய்யிலில் திரிதல், கள், சாராயம் முதலியவைகளை அளவு கடந்து உட்கொள்ளல், நெருப்பினிடம் உட்கார்ந்து எப்பொழுதும் வேலை செய்தல், யோகநிலையிலிருத்தல் ஆகிய இவற்றால், தீக்குற்றம் மிகுந்து இந்நோயைப் பிறப்பிக்கும் ; அன்றியும் வெள்ளை நோயிலும் அளவு கடந்த கலவியிலும் நீர்க்கடுப்புண்டாம்.

முற்குறி குணங்கள் : வழக்கம் போல் நீர் சரியாக இறங்காமல், மிக்க நேரங் கழித்து நீர்கழிகையில், அந்நீர் அளவில் குறைந்தும், எடையில் சுருங்கியும், நிறத்தில் சிவந்தும், சிலவேளை புலால் மணத்துடனும் வெளிப்படும். நீர்ப் புழையில் தாங்கமுடியாத வலி, எரிச்சல் என்னுங் குறிகளை உண்டாக்கி, நீர் சொட்டு சொட்டாய் இறங்கும். இந்நோயில் ஐயங் கூடில் முகத்தில் வீக்கமும், இடுப்பில் வலியும் ஏற்படும்.

நோய் எண் : வளிநீரருகல், தீநீரருகல், ஐயநீரருகல், மேக நீரருகல் என நான்கு வகைப்படும். இன்னும் சில நூல்களில் சிறுநீர் நோய்களை, மூத்திரகாதமெனவும், மூத்திரக்கிரீச்சரம் எனவும் கூறி அதனில் வாத, பித்த, கப, சந்நிபாதம் என நான்கும், அச்மரி நோயென

வாத, பித்த, கப, சுக்ரா, சர்க்கரா என ஐந்து கல்லடைப்பையும் கூட்டி ஒன்பது என வகுத்ததல்லாமல், மீண்டும் சிறு நீர்க்குற்றத்தையே வாதவஸ்தி, வாதாஷ்டீலம், வாதா குண்டலிகம், மூத்திரசடரம்' மூத்திராதீதம், மூத்திரோச்சங்கம், மூத்திரக்கிரந்தி, மூத்திரச் சுக்ரம், விட்விகாதம், உஷ்ணவாதம், மூத்திரக்ஷயம், மூத்திரசாதம் என வகுத்த இப்பன்னிரண்டையும் கூட்டியுள்ளனர். இவைகளை முக் குற்ற அளவாய் நோக்கின், நான்கினிலேயே ஒடுங்குமாகையால், அவற்றை விடுத்து, முற்கூறிய நான்கு வகைகளை மட்டும் கூறப்படும்.

வளி நீர்ச் சுருக்கு :

" மருவவே மேகம்வந் துற்ப வித்தல்
வளர்நாபி தன்னிற்றுன் மாம்சஞ் சிக்கித்
துருவவே சுக்கிலத்தால் மாமிச முற்றிச்
சுழன்றுமே தம்பித்து வாயு தன்னால்
சிறுகவே சிறுநீர்வீழ் குதற்றான் சிக்குந்
தேகமெங்குந் துளைத்துமே கடுப்பு மாகும்
அருவவே துன்மாமிசங் கறுப்பாய் வீழும்
அருக்கமே வாதத்தின் கிரிச்சந் தானே.''

(பொருள்)—இந்நோய் இயற்கை எழுச்சியின் உணர்ச்சியை அடக்குவதால், வெண்ணீர் (தவளம்—சுக்கிலம்), வளியின் (வாதத்தின்) செயலால், இறுகப்பட்டு நீர்த்தாரையுட்டங்கி, உடல் கடுப்பு, எரிதல், நோதல் என்னுங் குறிகளைக் காட்டி, சிறுநீருடன் கலந்தும் தனித்தும் நீரிழிவதற்கு முன்போ, பின்போ இழியும். நீர்ப்புழை நெருப்புப் போல் எரியும். இஃது நாட்பட்டிருப்பின், நீர்ப்பையிலும், நீர்ப்புழையிலும் புண்ணுண்டாகி, நிணநீரை இழியச் செய்யும். அதனுடன் இற்றுப்போன சதைகள் கருத்து இழியும்.

அழல் நீர்ச் சுருக்கு :

" தான்மூத்திர மஞ்சளித்து மிகச்சி வக்குந்
தளர்ந்துமே கைகாலு மசதி யாகும்
பானருக்கிச் சிறுகலா யருவி பாயும்
பாரமாங் குதமண்ட மிலிங்கந் தானுங்

கான்வாயு தான்மீறி வயிறு முப்பும்
களகளென்று இரைச்சலாய்க் கசங்கி யேறும்
வேள்காயு வாயுலர்ந்து மிரட்சி யாகும்.
விடும்பித்த மூத்திரத்தின் விவரந் தானே.''

(பொருள்—)அழலின் கேட்டால் நீர்ப்புழை வெதும்பிச் சிவந்து செந்நீர் கசிந்து, சிறுநீர் கழிவதற்குமுன் வெளியாகும். நீர் கழிந்தபின் தாங்க முடியாத எரிச்சலும், வலியும் உண்டாகும். அல்லது அழலின் கொடுமையால் நீர்ப்புழை வெந்து புண்பட்டு அப்புண்ணினின்று வடியும் குருதியும் சீயும் சிறுநீருடன் கலந்து செந்நிறத்துடன் இழியும். சில வேளையில் பச்சைக் குருதியாய் நீர்கழிந்த உடனே வெளியாகும். இவ் வாறு எழும் நோயில் அடிவயிறு நோதல், குத்தல், எரிதல் என்னுங் குணங்களோடு கைகால் வன்மையற்றிருக்கும்.

இவ்வாறே, அழலின் கொடுமையால், நீர்ப்பையும் தாபிதப்படும். அப்பொழுது ஆங்குச் சிவந்து புண்பட்டுக் குருதி வடியும் ; சிறுநீர் வெளியாகும்போது, மேற்கூறியபடியே எரிச்சல், குத்தல் முதலிய குறிகுணங்களைக் காட்டுமாயினும், இதில் இழியும் குருதி சிறுநீருடன் கலந்து கறுத்துக் காணும் ; சிலவேளை சீழ்கலந்து புலால் நாற்றம் வீசும்.

ஐயநீர்ச் சுருக்கு :

'' விபரமாய் வற்றியண்டங் குதம்வ லிக்கு
மேனியுமோ வெளுப்பாகி மிகக்கண் பச்சை
திபரமாய்க் கிறுகிறுத்துத் தியக்க மாகுந்
தேகமெலா மிகக்கடுப்புச் சொறித லாகும்
அபரமா யிருக்கில்நீர் எரிச்ச லாகும்
அடிக்கடிக்கு நீர்க்கசிந்து அலைச்ச லாகும்
நிபரமாய் லிங்கத்திற் கூச்ச லுண்டாம்
நீச்சான கிலேட்டுமத்தின் கிரீச்சந் தானே.''

(பொருள்)—மிகுந்த ஐயத்தால், நீர்ப்பையில் சீழையுண்டாக்கி, நீர்ப்பையுள் தங்கி, நீர்க்குக் கெட்ட நாற்றத்தை ஊட்டி நீரிழியும் போது வலியையும், எரிச்சலையும் உண்டாக்கும். இழியும் நீர், கலங்கியும், சீழ்கலந்தும், மல மணத்துடனும் இறங்கும் ; அடிவயிறோ புண்பட்டது போல் நோகும். நீரிறங்கிய பின்னும் சீழ்வடியும். சில

வேளை முன்குருதி கொட்டிப் பின் சீழ்வடிவதுமுண்டு. அடிக்கடி சிறு நீர் கழிக்கவேண்டுமென உட்காரினும் சொட்டு சொட்டாய் நீர் வடியும் அல்லது நீர்க்கட்டுப்படும்.

மேகநீர்ச் சுருக்கு :

'' கிரீச்சமா யடிக்கடிக்கு வெள்ளை காணுங்
கிட்டுமே நீர்த்தாரை யடியிற் றானும்
புரிச்சமாய்ப் புறாவெச்சம் போல வீழும்
பிடுங்குமே அடிவயிற்றிற் புழுக்க ளூர்ந்து
விரிச்சமாய் வெள்ளைதான் கவிச்ச டிக்கும்
விம்மும்போ துடலுச்சி மயிரைத் தூக்கும்
குரிச்சமாங் குதமிலிங்கம் வேக்கா டுண்டாம்
குமுலுமே மேகத்தின் கிரிச்சந் தானே.''

(பொருள்)—இந்நோயின், குறிகுணங்களை வெள்ளை நோயில் விரித்துக் கூறியுள்ளமையால், இதனை இங்கு விளக்கவில்லை.

தீரும் தீராதவை :

'' மேகத்தின் கிரிச்சந்தான் பித்தக் கிரிச்சம்
மிகவிரண்டுங் குணமாகி விரைந்து போகும்
தேகத்திலிஃ திரண்டுஞ் சாத்ய மாகிச்
செயமான மருந்தினாற் றிரும்ப லாகும்
வாதத்தின் வாதமூத் திரக்கி ரிச்சம்
மருவுகின்ற சிலேட்மமூத் திரக்கி ரிச்சம்
பாதத்தி னிஃதிரண்டு மசாத்ய மாகும்
பாடுபட்டும் தீராது பரிந்து பாரே.''

(பொருள்)—அழல் குற்றத்தாலும் மேகத்தாலும் வருவன தக். மருத்துவத்தில் தீரும். மற்ற இரண்டும் எளிதில் தீராவாம்.

குற்ற வேறுபாடுகள் :

நாடி நடை.

வாதமெனு நாடியது தோன்றில்
..............................
..............................
.............................. நீர்க்கிரிச்சரங்கள்

எனச் சதக நாடியில் கூறியதால் வாத நாடியானது தன்னளவிற்கு மிகுந்து நடக்கில் சிறுநீரிழியும்போது எரிச்சலையுண்டாக்கும் நோயெனக் கொள்க.

## வெள்ளை நோய்.

வேறு பெயர் : வெட்டை நோய், பிரமியம்.

இயல் : சிறுநீர் இறங்குவதற்கு முன்போ அல்லது பின்போ வெண்ணிறத்துடன் சீழ்போல் இழிவதும், நீர்ப்புழையில் எரிச்சலையும் கடுப்பையும் உண்டாக்குதலாம்.

முற்குறிகள் : இந்நோயுற்றவரிடம் கலவி செய்த சில (இரண்டு மூன்று) நாட்கள் சென்றபின், குறியில் நமை, நீர்ப்புழையில் எரிச்சல் ஆகிய குறிகளைக் காட்டி, நீரிறங்கும்போது சீழ் கலந்தாற் போலிறங்கி, நூல் தொங்குவது போலும் வெண்டைக்காய் கழுவிய நீர்போலும் வெளியாகும்.

வருவழி : அளவு கடந்த கலவியாலும், இந்நோயுற்றோரிடம் கூடுவதாலும் உண்டாகும்.

மேலும், யோகத்தில் நிலைத்து மூலக்கனலை எழுப்பும் போதும் இந்நோய் பிறக்கும் என்பர் சிலர்.

நோய் எண் :

“ உரைத்திட்டேன் பிரமியென்ற நோயைத் தானே
உத்தமனே இருபத் தொன் றாங் கண்டாயே.”

என்பதால் இஃது இருபத்தொரு வகையென அறியலாம்.

அவைகள்,

“ எழுத்தவே பிரமியத்தின் பெயரைக் கேளாய்
வாதத்தின் பிரமியமாம் பித்தப் பிரமியம்
திழுத்தவே சிலேட்மத்தின் பிரமி யந்தான்
சீரான வாதபித்தப் பிரமிய மாகும்
நழுத்தவே பித்தசிலேட்மப் பிரமி யந்தான்
நலந்தொந்தப் பிரமியமாங் கட்டிப் பிரமியம்
தழுத்தவே சலப்பிரமியந் தந்திப் பிரமியந்
தனித்ததோ ரிரத்தப்பிர மியந்தா னென்றே.”

" தானென்ற சீப்பிரமிய மொழுக்குப் பிரமியந்
தனியரித்திராப் பிரமியமாங் கிரிச்சரப் பிரமியங்
கானென்ற கரப்பனாம் பிரமியத் தோடு
கல்விளையும் பிரமியமாந் தந்துப் பிரமியம்
நேனென்ற நீச்சுப்பி ரமியம் மலினப் பிரமியந்
நேரான மதுப்பிரமியம் விரணப் ரமியம்
ஏனென்ற பிரமியந்தா னிருபத் தொன்று
இதனுடைய உற்பத்தி யியம்பக் கேளே."

(பொருள்) வளி, அழல், ஐயம், வளிஅழல், அழலய்யம், முக்குற்றம், கட்டி, நீர், தந்தி, குருதி, சீழ், ஒழுக்கு, மஞ்சள், எரிச்சல், கரப்பான், கல், நூல், நீச்சு, மலினம், இனிப்பு,புண் என வெள்ளைகள் இருபத்தொரு வகைகளாகும்.

**வளி வெள்ளை :**

" ஆண்மையாய்க் கோசலம்போ னீரி றங்கு
மருக்கியே யடித்தண்டில் மிகவ லிக்கும்
வேண்மையாய்க் கட்டியாய்ச் சீழ்தான் வீழும்
விரையிலே கனத்துமே நோக்கா டுண்டாம்
பாண்மையா யடிவயிறு பக்கந் தன்னில்
பரபரத்து நோவாகிப் பார முண்டாம்
வாண்மையாய் வயிற்றதனி லிசிவுண் டாகும்
வற்றுமே சரீரந்தான் வாதப் பிரமியம்."

(பொருள்) : ஆண் குறியின் அடித்தண்டில் வலியை யுண்டாக்கிச் சிறு நீர், பசுவின் நீர் போல் இறங்கும். அதில் சீழ் கலந்து காணும். நீரிறங்கும் போது அடிவயிறு கனத்தும், வலித்தும், பரபரத்து நோதலோடு உடல் வற்றுதலாகிய குறிகுணங்களைப் பெறும்.

**அழல் வெள்ளை நோய் :**

" சரீரந்தான் மிகவற்றித் தியக்க முண்டாய்ச்
சந்தோடு கைகால்தா னோவுண் டாகுந்
சரீரந்தான் கறுத்துமே யெரிவுண் டாகுங்
கனமான குதங்குய்யக் கடுப்புக் காணும்

வரீரந்தான் மஞ்சள்போற் சீயாய் வீழு
மனந்தானு மருபியாய்க் கைகா லோயும்
புரீரந்தான் லிங்கமது புளகி விம்மும்
பேரான லிங்கமனோ பித்தப் பிரமியம்.''

(பொருள்) : இதில், கீழ்வாயிலும் பிட்டத்திலும் வலியை உண்டாக்கிச் சிறுநீரிழியும்போது நீர்ப்புழை கடுத்து, தாங்கமுடியாத எரிச்சலையுண்டாக்கிச் சீழ்கலந்தும், கறுத்தும், மஞ்சளித்தும், நீர் வெளியாகும். ஆண் குறி வீங்கி நோகும். உடல் வற்றும்.

ஐய வெள்ளை :

'' லிங்கத்தில் நோயுண்டாய்க் கடுப்புக் காணும்
நீரிறங்கி வெள்ளையாய்ச் சலமாய் வீழும்
பங்கத்தில் மேனியெலாம் பழுப்பாய்க் காணும்
பாண்டுவாய்க் கண்ணகங்க ளிரத்த மில்லை
சுங்கத்திற் சுருக்கிட்டு நீரி றங்குந்
துரிசாக வடிக்கடிக்குக் கருக்கல் காணும்
அங்கத்தி லனல்மிகவே யழன்று மேனி
அசாத்திய சிலேட் மப்பிரமிய மறிந்து கொள்ளே.''

(பொருள்) : இந்நோயில் ஆண் குறியில் வலியை உண்டாக்கி நீரை இழியச் செய்யும். இழியும் நீரில், வெண்மையும் சீழும் கலந்திருக்கும். அப்போது நீர்ப்புழை மிகுதியாய் எரியும். அடிக்கடி நீர்ச் சுருக்குண்டாகி உடலில் அழல் காணும்.

வளி அழல் வெள்ளை :

'' அறியவே யாக்கையெலாம் வலியுண் டாகி
அடிலிங்கத் தடியில்சலா கைவைத் தாற்போல்
மறியவே யடிக்கடிக்கு வருத்த மாகு
மாப்போலச் சிறுநீரிற் கரைந்து வீழும்
வெளியவே யுதரத்திற் கட்டி கண்டு
மேன்மையாய் மலமதுதா னிறுகிக் கொள்ளுந்
துரியவே சுருக்கென்று நீரி றங்குந்
துடிக்குமே வாதபித்தப் பிரமியத் தானே.''

(பொருள்) : இந்நோய் நீர்ப் புழையுள் ஏதோ அடைத்துவைத்தது போல் வலித்து அடிக்கடி சிறுகச் சிறுக நீரிழியும் ; இறங்கும்போது தாங்க முடியாத எரிச்சலையும் துடிப்பையும் உண்டாக்கும்.

அழலைய வெள்ளை :

“ பித்தமாய் வாயெல்லா மிகவே கைத்துப்
பொருமியே யடிவயிறு இசிவு காணுஞ்
சுத்தமாய் மஞ்சளித்து வெள்ளை வீழுஞ்
சுருக்குத்தான் லிங்கத்தில் மிகுதி யாகும்
பத்தமாய்க் கணுக்களுக்கு நோயுண் டாகும்
பகலுறக்க மிகுதியாம் பசியெ டாது
பித்தமா யுடம்பெல்லா மூதிக் காணும்
பித்தசிலேட்மப் பிரமியத்தைப் பேசுங் காலே.”

(பொருள்) : அடிவயிறு பொருமி ஊதி இழுத்தல் போல் வலிக்கும் . ஆண் குறியில் சுருக்குண்டாகி, மஞ்சள் நிறத்தோடுங் கூடிய சீழுடன் நீரிறங்கும், கீல்கள் தோறும் வலி காணும், உடல் வெளுத்தூதும். ஆகிய குறி குணங்களைக் காட்டும்.

முக்குற்ற வெள்ளை :

“ பேசுமென்ற சரீரத்திற் றினவுண்டாகிப்
பேரான புழுக்கள்தா னூர்தல் போல
ஆசுமென்ற அடிவயிற்றிற் சுரப்புண் டாகு
மடிக்கடிக்கு நீர்தானுங் கடுத்தி றங்குங்
கூசுமென்ற லிங்கத்திற் கசிவுண் டாகிக்
குறிகள்தான் பலவன்ன மாகக் காணுந்
தூசுதா னடிதன்னிற் றோய்ந்தி ருக்குந்
தொந்தமாம் பிரமியத்தின் சூக்ஷந் தானே.”

(பொருள்) : இந்நோயில், அடிவயிற்றில் சுரப்புண்டாக்கி அடிக்கடி நீரிழியும் ; அத்துடன் வெள்ளை காணும். சிறுநீரைத் தெளிய வைக்கின் அதனடியில் தூசு படிந்தது போலிக்கும். உடலில் தினவு, புழு ஊருவது போன்ற ஓர் உணர்ச்சி ஆகியவைகள் உண்டாகும்.

கட்டி வெள்ளை :

" தானாகச் சடமெங்குங் கட்டி யாகித்
தரிக்காமல் வலியுண்டாய்த் தளர்ச்சி கேடாய்த்
தோனாக லிங்கத்தில் தினவுண் டாகிச்
சொறியாகி விரையிரண்டிற் றீநீர் பாயும்
ஊனாகக் கட்டியாய் லிங்கந் தன்னில்
உறுதியாய்ப் பருக்கைபோற் சீயும் வீழும்
மானாக வுடம்பதுதான் வற்றிக் காணு
மருவுக்கட்டிப் பிரமியத்தின் வன்மை தானே."

(பொருள்) : வெள்ளை நோய் நாட்பட நிலைத்திருப்பின், உடலில் ஊறி, கட்டிகளை உண்டாக்கி, உடலை வற்றச் செய்து, வன்மையைக் குறைக்கும். ஆண் குறியிலும் நீர்ப் புழையிலும் தினவையும் எரிச்சலையும் உண்டாக்கும். பின் ஆண் குறியின் கீழ்ப்பக்கத்தில் கட்டி தோன்றி உடைந்து நீர்ப் புழையுடன் சேர்ந்து துளையுண்டாகி அத்துளையின் வழியே நீர் கசியும்.

நீர் வெள்ளை :

" வண்மையாய் வடிவமெல்லாம் வலியுண் டாதல்
வாய்கைத்து வாந்தியொடு மயக்க மாதல்
தண்மையாய் லிங்கத்திற் சலங்க சித்தல்
தாக்கான வடிவயிற்றிற் பிடுங்க லுண்டா
வெண்மையாய் மலந்தனிலே சீதங் காணல்
வெளுப்பாகி நீரிறங்கிக் குத்த லுண்டாய்
அண்மையா யரையாப்புக் கட்டி யுண்டா
யழுந்துமே சலப்பிரமிய வாண்மை தானே."

(பொருள்) : ஆண் குறியில் வலியும், நீர்ப் புழையினின்று வெள்ளை கசிதலும், அடிவயிற்றிற் பிடுங்கலும், வெளிக்குப் போகையில், சீதத் துடன் வெண்மையாய்க் கழிதலுமாகிய குறிகுணங்களுண்டாம்.

தந்தி வெள்ளை :

" ஆண்மையா யடிவயிறு புண்போ னொந்து
அடித்தண்டு விறுவிறுத்து உச்சங் காணுந்
தாண்மையாய் லிங்கத்தில் கின்ன ரத்தின்
தந்திபோல் நீருக்கு முன்னே வீழு

மேன்மையாய் வெளுப்புத்தான் சீலை தன்னில்
விந்தையா யடிக்கடிக்கு நனைவு காணும்
நாண்மையாய்க் கால்கையு மெரிச்ச லாகும்
நாறுதந்திப் பிரமியத்தி னாட்டந் தானே.''

(பொருள்) : அடிவயிறு புண்போல் நொந்து, ஆண் குறியின் அடித் தண்டு விறுவிறுத்துப் பூரிக்கும். நீரிறங்கும் முன்னே கம்பியைப் போல் ஒரே தொடர்ச்சியாய் வெள்ளை தொங்கி விழும். எப்பொழுதும் வெள்ளை கசிந்து சீலையில் ஒட்டும். கையும் காலும் எரிச்சலாகும். இத்தன்மைய குறிகளைக் காட்டும்.

சீழ் வெள்ளை :

'' கடுத்துமே சீப்போல வெள்ளை காணுங்
கட்டுமே அரையாப்பு பவுத்தி ரந்தான்
நடுத்துமே நாபியெலாம் விரண மாகும்
நற்சந்துக் கணுக்காலிற் குடைச்ச லுண்டாம்
அடுத்துமே யடிக்கடிக்கு நீரி றங்கும்
அதிகமாய்க் குளிரோடு சுரமு முண்டா
மடுத்துமே வருத்தமாய் மயக்க மாகும்
வடிவமெலா நொந்திடுஞ்சீப் பிரமிய மாமே.''

(பொருள்) : இந்நோயில் குறிநொந்து, நீர்ப்புழை கடுத்து அடிக் கடி நீரிழியும் ; அத்துடன் வெள்ளை சீழ்ப்போலிறங்கும். சுரம், குளிர், அரையில் கட்டி, மயக்கம், உந்திப்புண் என்னும் இவைகளும் தொடரும்.

ஒழுக்கு வெள்ளை :

'' சீயாகித் தண்ணீராய் ரத்தம் போலச்
சிறுகியே ஒழுகுமெந்த நேர முந்தான்
காயாகிக் கட்டியாய் முளையுண் டாகிக்
கனமான விரணமாய்க் காய மெல்லாம்
ஆயாகி யங்கமெலாங் குடைச் சலாகு
மழன்றுமே யக்கினியா யண்டிக் கொள்ளும்
நோயாகிப் பாய்க்குள்ளே கிடையு மாகி
நுண்மையா யொழுகுமென்ற மேகந் தானே '',

(பொருள்) : இந்நோய், சீயும் குருதியும் கலந்த நீர் போல் வெள்ளை எந்நேரமும் ஒழுகிக்கொண்டே இருக்கும். உடல் முழுமையும் சிறு பருக்கள் உண்டாய் அவைகள் உடைந்து புண்ணாகும். உடல் முழுமையும் குடைந்து நோகும். வயிற்றில் தீப்போன்ற அனலை உண்டாக்கி, மிகுதியாய்ப் புசிக்கச் செய்து படுக்கையில் கிடக்கச் செய்யும்.

மஞ்சள் வெள்ளை :

" தானுமே மஞ்சள்போல் வெள்ளை காணுந்
தழலாக வெதும்பியே நீரி றங்குங்
காணுமே கதிர்தனையே ஏற்றி னாற்போல்
கடுப்பாக விறுவிறுக்குங் கடூஷ்ண மாகும்
வாணமே மதியம்போற் றானி ருந்த
மதிமுகங்கள் மஞ்சள்போற் றானி ருக்குந்
தேனுமே கசப்பாகு நாவு தானுந்
திடுக்குண்டா மரித்திராப் பிரமியந் தானே. "

(பொருள்) : நீர்ப்புழையில் நெருப்புப் போல் எரிந்து கடுத்துப், பசுமஞ்சள் நிறத்துடன் வெள்ளை கசியும். முகம் மஞ்சள் நிறமடையும், நாக்கைக்கும் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

நீர்க்கட்டு வெள்ளை :

" அரித்திரம்போ னீரிறங்கு மாண்மை குன்று
மருக்கியே மிகக்கடுத்து நீர்தான் வீழும்
நெரித்திரம்போ னீர்தனையே கட்டிக் கொள்ளும்
நிரசியம்போற் சரீரத்தி லுறக்க மில்லை
தரித்திரம்போ லன்னத்தைப் பொசிக்கொட்டாது
சஞ்சலமாய் மனதுதான் றரிக்கொட்டாது
விரித்திரம்போ லுடம்பெல்லா முளைச்ச லுண்டாம்
விகிமூத்திரக் கிரிச்சரப் பிரமியந் தானே."

(பொருள்): நீர்ப்புழைமிகக்கடுத்து, நொந்து மஞ்சளித்த வெள்ளை இழியும். அடிக்கடி நீரடைக்கும். இரவில் தூக்கமிராது. உணவில் விருப்பமின்றி மனநிலைக்குக் கேடுண்டாம். உடலுளைச் சலாகும். ஆகிய இக்குறிகுணங்களைக் காட்டும்,

கரப்பான் வெள்ளை.

“ உளைஞ்சுமே வயிறுதான் சீதங் காணும்
உஷ்ணமாய் மூத்திரந்தா னுருக்கி வீழும்
அளைஞ்சுமே யங்கமெலாஞ் சொறியுண்டாகு
மழலாக வெதும்பலாய்க் கைகா லோயும்
புளைஞ்சுமே லிங்கத்திற் புண்போல் குத்திப்
பொடிபொடியாய்ச் சுண்ணாம்புக் கற்போல் வீழுங்
களைஞ்சுமே நீரோடு மலமுஞ் சிக்குங்
சுசியுமே கரப்பானாம் பிரமியந் தானே.”

(பொருள்) : வயிறு உளைந்து நொந்து சீதத்துடன் கழிச்சல் உண்டாதலும், சிறுநீர் மிகுந்த சூடுடன் இழிதலும், உடல் முழுதும் வெப்பத்தால் பொங்கி யெழுந்த புண்கள், கரப்பான் நோய்போல் பொங்குதலும், ஆண்குறி புண்போல் நொந்து குத்தி, நீரிறங்கு கையில் பொடிப் பொடியான சிறு கற்கள் சுண்ணப்பொடி போல் நீரில் கலந்து வெளியாதலும், மலமும் நீரும் கட்டுதலும், கைகால் சோர்தலுமான குறிகளைப் பெறும்.

கல் வெள்ளை :

“ கசியுமே லிங்கத்திற் கள்ளைப் போலக்
கற்றாழை நாற்றந்தா னுடம்பில் வீசுந்
தசியுமே சாந்தரைத்துப் படுத்த கற்போல்
தயங்கியே நீர்சிக்கி வயிறு விம்மும்
விசியுமே விறுவிறுப்பாய் வயிறெல் லாந்தா
மீறான நாபிதொட்டுப் பிசமு மாகும்
பசியுமே யில்லாமற் பார மாகும்
பளிங்குநிற மாகுங்கற் பிரமியந் தானே.”

(பொருள்) : இந்நோயில், உடலில் கற்றாழை நாற்றம் வீசல், கற்கள் கருநிறத்துடன் வெளியாதல் அவைகள் வெளியாகும்போது நீர்ப் புழையில் அடைக்குமாயின், வயிறு விம்முதல், அல்லது உந்தி முதல் விரை வரையும் விறுவிறுத்து நோகுதல், பசியில்லாமை; சிறுநீர் பளிங்கு நிறமாயிருத்தலாகிய குறிகள் காணும்.

தந்து வெள்ளை :

'' கல்லான சிலந்தியநி றூலைப் போலக்
கனமான லிங்கத்திற் கலந்து வீழும்
வல்லான வண்மையோ டுதிரங் காணும்
வலியெடுக்கு மடித்தண்டு விம்மும் போது
சல்லான கல்மிஷந்தா னடியிற் றங்குஞ்
சமத்தானா விலாப்பக்கந் தனிலே குற்றம்
துல்லான மூத்திரந்தான் றுளியாய் வீழுந்
தந்துபிர மியத்தினிடச் சுருக்குத் தானே.''

(பொருள்) : இந்நோயில் சிறுநீரிறங்கும்போது, சிலந்தியின் நூல்போல் மெல்லியதாய் வீழ்தலன்றி, குறி விம்மும் போது தாங்கமுடியாத வலியெடுக்கும். மேலும் சிறுநீரைத் தெளியவைக்கின் அடியில் சீழ்த் தங்குவதோடு விலாப்பக்கம் நோகும் என்னுங் குறிகளைப் பெறும்.

நீச்சு வெள்ளை :

'' சுருக்காகக் கள்ளுபோ னீரிறங்குஞ்
சூக்ஷமாய் வெள்ளையோடு சீயுங் காணு
மருக்காக லிங்கமுச்ச மாகும் போது
வருத்தமா யடித்தண்டு குடத்தோடொக்க
விருக்காக விறுவிறுப்பாய் வலியுண் டாகும்
விசையான நரம்பெல்லாஞ் சுருக்க மாகுங்
குருக்காக வடிவயிறு தனிலே குத்தும்
குளிருமே நீச்சுப்பிர மியத்தின் கூறே.''

(பொருள்) : சிறுநீர் இறுகி கள்ளைப்போல், வெளுத்து இழிவதோடு, அடித்தண்டு வீங்கி இறுகிப் பிடித்தாற்போலும், விறுவிறுப் போடும் மிகுதியாய் வலிக்கும். நரம்புகள் சுருங்கி, அடிவயிற்றில் குத்தல் ஆகிய குறிகளையும் காட்டும்.

வலி வெள்ளை ;

'' கூறாக வடிநரம்பு குதங்குய் யந்தான்
குத்தியே யடிக்கடிக்கு வலியுண் டாகும்
வாறாக வடிவெல்லா மிகவ ழற்றி
மயக்கமாய் நாவோடு கைத்த லாகும்

பாறாகப் புறங்காலிற் றிமிருண்டாகும்
பருத்துமே லிங்கத்தில் வெள்ளை வீழுந்
தூறாகத் துன்மாங்கிசஞ் சுருண்டு காணுந்
தூசிமிகப் படியும்வலிப் பிரமியந் தானே.''

(பொருள்) : ஆண்குறியின் அடிநரம்பு, பிட்டம் இவைகள் அடிக்கடி குத்தி வலித்தல், உடல் வற்றி மயக்கம் உண்டாதல், நாக்கசத்தல், காலின் அடிப்பக்கம் திமிருண்டாதல், குறிவீங்கு நீரிறங்கும் போது, அதில் இற்றுப்போன சதைதுணுக்குகளும் வெள்ளையும் சேர்ந்து இழிதல் ஆகிய குறிகுணங்கள் இந்நோயில் காணும்.

தேன் வெள்ளை :

'' வலியாகி லிங்கமெல்லாம் வருத்த மாகி
வண்டலாய்த் தேன்போல நீரி றங்கும்
எலியாகி யெறும் பரிக்குஞ் சிறுநீர் தன்னில்
இறைச்சிபோ லுள்ளுக்குள் விரண மாகும்
நலியாகி நாற்றமா முடம்பெங் குந்தான்
நாவிலே யுணர்ச்சியிலா துருசி போகும்
மலியாகி நாவறண்டு மயக்க மாகும்
வருத்தமா மதுப்பிரமிய மார்க்க மாமே.''

(பொருள்) : இந்நோயில் குறி மிகவும் நொந்து, நீர் வண்டலாய்த் தேன்போல் இறங்கும். அதில் கறியைக் கழுவிய நீர்போல் சற்று சிவந்து, கொழுப்பும் சதையுங் கலந்தது போல் காணும். நீர்ப்புழைப் புண்ணாய் நீரிறங்கும் போதே ஒரு வித நெடியும் நாற்றமும் உண்டாகும். உடலும் நாற்றம் வீசும். நாவரண்டு சுவையறியாது. மயக்கம் உண்டாகும் என்னுங் குறி குணங்களைப் பெறும்.

புண் வெள்ளை :

'' மார்க்கமா யுடம்பெங்கும் விரண மாகி
மகாவருத்த மாகவே மயக்க மாகி
தேர்க்கமாய் லிங்கமது பருத்து வீங்கிச்
சீயோடி ரத்தந்தான் மிகவே காணும்

கார்க்கமாய் கறடோடு கணுக்க ளெல்லாங்
கட்டியே நோவாகிக் கருப்பு முண்டாம்
வேர்க்கமாய் மேனியெல்லாம் வெதும்பலாகும்
விறுவிறுக்கும் விரணபிர மியந்தா னாமே.''

(பொருள்) : இந்நோயில், உடம்பெங்கும் பொங்கிப் புண்ணாக ஆண்குறியும் வீங்கிச் சிறுநீருடன் குருதியும் சீழுங் கலந்திறங்கும். முட்டிக் கீல்கள் நொந்து கரடு கட்டியது போல நீட்டவும் மடக்கவும் முடியாமல் வலியை உண்டாக்கும். உடல் வெதும்பி விறுவிறுத்த லாகிய குறிகளைப்பெறும்.

பொதுக் குறிகுணங்கள் : வெப்பப் பொருளையுட் கொள்ளுவ தாலும், யோக நிலையிலிருத்தலாலும் கீழ்க் கனலெழும்பி, அழற் குற்றத்தைக்கெடுத்து நீர்ப் புழை, நீர்ப்பைஇவைகளில் தாபத்தை உண்டு பண்ணிப் புண்படுத்தி அதினின்று வெள்ளை யிழியச் செய்யும். அன்றியும், இந்நோயுற்றவரிடம் கூடுவதால், பிறக்கும் தொத்து நோயாகிய இது புணர்ந்த இரண்டு முதல் எட்டாம் நாளுக்குள் வந்து சேரும் என்னும் மற்றொரு கொள்கையுமுண்டு. இஃது எவ்வாறாயிருப்பினும், நோயின் குறிகுணங்கள் ஒன்றேயாகும்.

அந்நோய் தொடங்கும் போதே, குறியின்நுனி சிவந்து நமைத்துக் கடுத்து வீங்கி, சிறுநீரிறங்குகையில் நூல்போல வெளுத்த சீழ், நீருக்கு முன்னிழியும், சீழ் சிலனாட்களில் கடினப் பட்டுச் சீழ் மிகுதியாய்த் தாங்க முடியாத எரிச்சலை உண்டாக்கும். நாள் செல்லச் செல்ல சீழ் கடினப்படு வதுடன் அதிக அளவில் மஞ்சள் நிறத்துடன் வெளியாகும். அன்றியும், இடுப்பு, முதுகு, துடை முதலியன நோகும். சிலவேளைகளில் சுரமுங்காணும். வெப்பமிகுதியால் மலம் வெளிப்படுதலைத் தடுக்கும். பசியுமிராது. மிகுந்த வெப்பத்தினளவாய் நீர்புழை நெருப்புப்போல் எரிந்து, புண்பட்டுக் குருதி மிகுதியாய் இழியும். அப்போது நீரிறங்க முடியாது உயிர் போகின்றது போல வலிக்கும். இதனைத் தாங்க முடியாது சிலர் மிக வருந்துவர்.

இந்நிலை வருதற்கு முன்பே தக்க மருத்துவம் செய்து நோயைப் போக்காவிடின், உடலில் ஊறி, சீழ் வரண்டு நீர்ப்புழை பெரிதும் புண்பட்டு, நீர் அடிக்கடி தாங்க முடியாதவாறு இறங்கும் அல்லது நீரைக் கழித்தற்காக உட்காரினும் எளிதில் நீரிறங்காமல் அடைத்தல்,

குத்தல் போலும் ஒருவகையான வலியும், பளுவாக இருத்தல் போன்ற உணர்ச்சியும் விரையில் வீக்கமும், தாங்க முடியாத நோயும் உண்டாகும். போகப் போக சதையடைப்பை உண்டாக்கி நீர் கட்டும். இஃது நிலைத்துவிடின், சீழ் மிகுந்து சதையை அழுகச் செய்து நீர்ப் புழையைத் துளைத்து, தண்டின் அடியிலேனும், முனையிலேனும் பகந்திரம் போலுண்டாய் அவ்வழியே நீரிறங்கும். நாட்கள் செல்லச் செல்லக் குறியின் முனையை அடைத்து நீரும் விந்துவும் பகந்திரத்துளைவாயிலேயே இழியும்.

இந்நோய் இதனோடு நில்லாமல், கீல்வாய்வு, நரித்தலை வாயு, தமரகவாயு, மலடு, கண்நோய் என்னும் நோய்களையும் உண்டாக்கும் என அறிக.

குற்ற முதலிய வேறுபாடுகள் : உணவு செயல் ஆகியவற்றால், அழல் குற்றம் தன்னளவில் மிகுந்து, கீழ்நோக்குக்காலைக் கேடடையச் செய்து. தனக்குத் துணையாய்ப் பரவுகாலையும் கெடுத்து, சிறு நீர்த்துளையிலும் எரு வாயிலும் கனலை மூட்டி, குருதியைக் கேடடையச் செய்யும். இதனால் பசித்தீயின் வன்மை இழந்து, உடல் வன்மையும் குறைந்து மனமுஞ் சோர்வடையும்.

### நாடி

" வளர்ந்திடும் பித்த நாடி வலமிடம் பிசகா வண்ணம்
பிளந்தது தனித்துப் பச்சைப் புழுவுக ளதுபோ லோடில்
உளந்தனில் வரட்சி தங்கி யுடம்புலர்ந் தத்தி தன்னில்
வளர்ந்திடு சுரங்கள் வந்து வளர்பிற மேக மாமே''.

(பொருள்) அழலைக்குறிக்கும் நாடியானது அதனின் இயற்கை அளவிற்கு மிகுந்து வலம் இடம் பிசகாது நேராக பச்சைப் புழுவானது எவ்வாறு தலையாலூர்ந்து உடலை வளைத்து நடக்குமோ அவ்வாறு நடக்கின், உடல் வரட்சியுண்டாய் உடல் வரண்டு சுரம் தொடர்ந்து இந்நோயைப் பிறப்பிக்குமென அறிக.

பொருளான வாதத்தில் பித்தஞ் சேர்ந்து......
..........................நீரிற்சிவப்பு

சதக நாடி.

வளியழல் நாடிகள் ஒன்றுகூடி நடக்கில் சிறுநீர் எரிச்சலோடு சிவந்து காணும்.

வாத மெனும் நாடியது தோன்றில்......

......................தந்து மேகம்

சதக நாடி

நீர் சுருங்கும் ; சீழ் குருதி கலந்து காணும். எருக் கட்டும்.

## மருத்துவம்.

I எருவும் (மலமும்) நீரும் கழிதற் பொருட்டுச் செய் மருத்துவம்.

(1) குடிநீர் வகையில் கண்டங்கத்திரி வேர், பறங்கிச்சக்கை, வெள்ளறுகு, நெருஞ்சில், சுரைக்கொடி, பூவரசுப் பட்டை, ஏலம், புங்கு வேர்ப்பட்டை இவற்றை வகைக்குப் பலமாக எடுத்து, ஒருபடி நீர் விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்த்து, குடி நீராக்கியதில் காலை மாலையாய் இரு வேளைகளிலும் கொள்ள கழிச்சலையும் நீரையும் பெருக்கும்.

(2) பேய்க்கரும்பு, வெட்டிவேர், விலாமிச்சு. தேற்றான் கொட்டை, நெருஞ்சில், பூவரசம் பட்டை, வல்லாரைக்கீரை, சிவதை வேர், வால் மிளகு, குரோசாணி ஓமம், சோம்பு, சதகுப்பை இவைகள் வகைக்குப் பலமாய்க் கொண்டு விதிப்படி குடிநீராக்கி அதைக் காலை மாலைகளில் கொள்ளலாம்.

II. எண்ணெய் வகையில் ;

(1) மேக நாதத் தைலம்

(2) இரசத் தைலம்

(3) தண்ணீர் விட்டான் நெய்.

இவைகளுள் ஏதேனும் ஒன்றை அளவறிந்து கொடுக்கலாம்.

குறிப்பு : இவைகளின் செய்முறைகளைச் சித்த மருத்து[illegible] திரட்டில் காண்க.

நோய்க்கான மருந்து.

பற்ப செந்தூரங்களில், முத்து, பவழம், கந்தகம், இரசம், வெள்ளி, நாகம் இவைகளுள் ஒன்றை நோயின் வன்மைக்குத் தகுந்தபடி அளவிட்டுத் தக்க துணை மருந்தோடுங்கூட்டிக் கொடுக்கவும், அல்லது இரசகந்தி மெழுகு, இரச மெழுகு, இடிசேங்கொட்டை, சேங்கொட்டை நெய் இவைகளுள் ஏதேனும் ஒன்றைக் கொடுக்கலாம். தைலங்களுள் கந்தகச் சுடர்த் தைலம், கந்தகத் தைலம் முதலியனவும் பயன்தரும்.

உணவு.—உடலின் வெப்பத்தைப் பெருக்கக்கூடிய கார முதலியவற்றை நீக்கிக் குளிர்ச்சி தரும் பொருள்களையும், நீர்ப் பெருக்கை உண்டாக்கக் கூடிய பொருள்களையும் கொள்க.

நீரினைப் பெருக்கல் நோய்கள்.

வேறு பெயர்கள்,—மிகுநீர், வெகு மூத்திரம், இனிப்பு நீர், மேக நீர், மதுமேகம்.

இயல். மிகுந்த அளவில் அடிக்கடி சிறு நீரிழிதல், ஏழு உடற்கட்டு கரும வன்மையிழத்தல், உடல் இளைத்தல் என்னும் இயல்புடையதாம்.

நோய்வருவழி. அளவு கடந்து நெய்ப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருள்களை உண்ணல், மிகுதியும் கலவி செய்தல், எப்பொழுதுமே மனம் நைதல், உட்கார்ந்திருத்தல், சோம்பிதிரிதல் ஆகிய இவைகளால் கீழ் நோக்குக்கால், மேல் நோக்குக்கால், பரவுகால் ஆகிய இம் மூன்றும் மிகுந்து முதல் நிலையைத் (மூலாதாரம்) தூண்டி அங்குள்ள கனலை யெழுப்பி இந் நோயைப் பிறப்பிக்கும்.

" கோதையர் கலவி போதை
கொழுத்தமீ னிறைச்சி போதை
பாதுவாய் நெய்யும் பாலும்
பரிவுட னுண்பீ ராகில்
சோதபாண் டுருவ மிக்க
சுக்கில பிரமே கந்தான்
ஓதுநீ ரிழிவு சேர
வுண்டென வறிந்து கொள்ளே."

(அகத்தியர்-1200)

" சரியாக மேகத்தா லபான வாயு
தான்புகைக்கு மேலேறிக் கபாலச் சூடாம்
பெரிதான மேகத்தா லத்தி வெந்து
போமப்பா தசைவெந்து ரத்தம் வற்றிப்
பரிவாகித் தசவாய்வால் மந்தங் கொண்டு
பெருந்தீனி மலபந்தம் உதான வாயு
வரிவாகித் தேகமெலாம் விடநீ ராலே
மெய்யழிந்த மேகமென்ற திருப தாச்சே."

முற்குறிகள். அளவு கடந்த பசி, நீர் வேட்கை என்னும் குறிகளைக் காட்டி, பசி கொண்ட அளவு புசிக்கினும், உடல் வன்மை பெருகாது, நாளுக்கு நாள் குறைந்து மெலிவடைதல், நீர் வேட்கையைத் தடுக்கும் பொருட்டுப் பருகும் நீரின் அளவிற்கேற்ப, சிறுநீர் இறங்குதல், தூக்க மின்மை, மனக்கலக்கம். பிசுபிசுத்த வியர்வை, இளைப்பு, பெருமூச்சு, மயக்கம் என்னும் முற்குறிகளைக் காட்டி, நோய் வன்மையில் மிகும்.

எண்.

" உட்டிண ரோகத் தாலும் முறும்பெரும் பசியினாலுங்
கட்டவிழ் கோதைமாதர் கலவிமட் டிலா மையலாலு
முட்டறா நாலுமாறு மும்மூன்று மொன்று மென்று
திட்டமாய் வருவதென்று திருமமுனி யருளிச் செய்தார்."
(அகத்தியர்-1200).

எனக் கூறியதில் இந் நோயினைக குற்ற அளவாய், வளி (வாதத்தில்) நான்கு அழல் (பித்தத்தில்) ஆறு, ஐயம் (கபத்தில்) பத்து ஆக இருபதென வகுத்துள்ளனர். இவ் விருபதையே, யூகிமுனியும் திருகண்ட முனியும் மற்றும் ஏனைய நூலோரும் கூறுவாராயினும், ஒவ்வொரு நூலோரும், அவற்றின் பெயர்களை அவரவர்கள் கருத்துப் போல வழங்கினர். அன்றியும், தீக் குற்றத்தில் வரும் நோயின் பெயரினை, ஐய நோயில் மாற்றியும் வழங்கியுள்ளனர். ஆதலின் இஃது எவ்வாறிருப்பினும், நாம் தமிழ் நூல் வழியே வகுத்தோம். இதிலும் சில இடையூறுகளிருத்தலாலும் நூலில் கூறியது கூறியவாறே இங்குச் செப்பி நன்கு விளக்கி அதற்குப் பின், நோயினை எளிதில் அறியக் கூடிய வகையில், குற்றங்கள், உடற்கட்டுகள் இவைகளின் கேட்டால் பிறக்கக் கூடிய நோய்களனைத்தும், மக்கட்கு எளிதில் விளங்குமாறு அவைகளை வெண்ணீர், தெளிநீர், நீரிழிவு என்னும் தலைப்பிட்டு விரித்துத் தனியாக கூறியுள்ளோம்.

வளிக் குற்றத்தால் வருவன நான்கு.

1. நெய்மண நீர் :

'' குறீப்பாச்சி யகந்திசல மிறங்கும் போது
குணமான நெய்போலத் தானி றங்கும்
நெறிப்பாகச் சீலைதோய்த் துக்கொ ளுத்தில்
நேரான விளக்குப்போ லெரியும் பாரு
தெறிப்பாகத் தினவொன்றிற் குறுணி தானுஞ்
சீக்கிரமா யிறங்கிவிடும் தேகம் வாடும்
எறிப்பாக மேகங்கண் டேழு நாட்கு
ளெய்துவா ரெமபுரத்தி லெய்து வாரே.''

(பொருள்: இந் நோயில் இழியும் சிறு நீர்,நெய்யின் மணத்தையும், பிசுபிசுப்பையும் பெறும். இந் நீரைச் சீலையில் துவைத்துத் திரியாக்கி விளக்கேற்றின் நெய் விளக்குப் போல எரிவதன்றி, அம்மணமும் பெற்றிருக்கும், இறங்கும் நீர் மிகுதியாகக் காணும். உடல் வாடிக் கொண்டே வந்து நோய் கண்ட ஏழு நாட்களுக்குள் கொல்லும். இதனை ஆச்சி யகந்தி மேகம் என்பர்.

2. பசுமண நீர் :

'' எய்துவார் சுத்தமா மேகந் தானு
மிறங்குமே கோசலம்போல் வன்ன மாக
நைதுவார் நாற்றமுமப் படியே யாகும்
நானாழி தானிறங்கு மொருவே ளைக்குக்
கைதுவார் காய்ச்சினால் விளக்குத் தானுங்
கடுந்துலக்க மாயெரியுங் களைமெத் தாகும்
பைதுவார் பதினைந்து நாளிற் கொல்லும்
பாலன் போலிருந்தமுகங் கிழமு மாமே.''

(பொருள்): இந் நோயில் இழியும் சிறுநீர், பசு நீர்போலிருத்தல் மட்டுமே யன்றி, அதனின் மணத்தையும் பெறும். நாழிக்கு நாழி படி படி யளவாக நீர் இறங்கும். இந்நீரையும் மேற் கூறியபடி சீலையில் நனைத்துத் திரியாக்கி எரிக்கப் பசுநீர் மணம் வீசும். உடல் மெலிந்து சோர்வுண்டாய், நோய் கண்ட பதினைந்தாம் நாளில் கொல்லும். இதனைச் சுத்தமேகம் எனக்கூறுவர்.

3. சீழ்நீர் :

“ கிழமாகப் பிரமியந்தா னிறங்கும் போது
கேவலமாங் கொழுப்பா மாமிச நாற்றம்
பழமாக வேளைக்குநா னாழி தானும்
பருந்துதா னிறங்குமே யடிக்க டிக்கு
அழமாக அந்தநீர் காய்ச்சி னக்கா
லதின்வாடை தேன்போலத் தானி ருக்கும்
இழமாக விப்படித்தான் கண்ட மேக
மெமபுரத்துக் கறுமாதத் தினிற்றா னேகும். ”

(பொருள்) : சீழ் போல் சிறுநீர் நாழிக்கு படிப்படியாய் இறங்கும். அஃது கவிச்சு நாற்றம் பெறும். அதனைக் காய்ச்சின் தேன் போல் மணம் வீசும். இந்நோய் ஆறு திங்களில் கொல்லும். இதனைப் பிரமிய மேகம் என்பர்.

4. சதைநீர் :

“ ஏகுமே மாங்கிசநீர் இறங்கும்போது
இளவாட்டின் கொழுப்புபோற் றானி றங்கும்
ஆகுமே காய்ச்சினா லாட்டி னெய்போ
லடைவாக வேளைக்குக் குறுணி காணும்
காகுமே கருப்பஞ்சாறு போல நாறுங்
கனத்துத்தான் மூன்றுநா ளெட்டு நாளில்
சாகுமே யைந்தாமா தத்திற் றானுஞ்
சதுர்விதமாம் வாதசலந் தானு மாச்சே. ”

(பொருள்) : இந் நோயில் நீர்ப்புழை, நீர்ப்பை, இவ்விடங்களில் உள்ள சதை சவ்வு முதலியவைகள் இற்றுச் சிறுநீருடன் கலந்து ஆட்டுக் குட்டியின் கறியைக் கழுவிய நீர்போல் வேளைக்கு குறுணி யளவாக இறங்கும். இந்நீரைக் காய்ச்சின், ஆட்டு நீர் மணத்தையும், புளித்த கருப்பஞ்சாற்றின் மணத்தையும் வீசும். இந்நோய் கண்ட மூன்று தினத்திற்குள்ளேனும் எட்டு நாட்கட்குள்ளேனும் இறப்பர். தவறின் ஐந்தாம் திங்களில் இறப்பது திண்ணம். இதனை மாங்கிச சிராவக மேகம் எனவும் கூறுவர்.

வளிநீரின் பொதுக்குறி குணம் :

"ஆச்சென்ற நாலுக்குங் குணத்தைக் கேளா
யழகான கைகால்கண் ணுடல முற்றும்
நாச்சென்ற நாவறளும் பல்லு நாக்கு
நடுத்தொண்டை கறுப்பேறு முதலெட் டாந்தான்
பேச்சென்ற பிலக்ஷயமாங் கண்மேல் நோக்கும்
பெருகவன்னந் தண்ணீரு மிகவே வாங்குந்
தாச்சென்ற சரீரந்தான் கத்தி வெட்டுத்
தான்போலக் கடுத்துமே தழலுண் டாமே."

(பொருள்) : மேற்கூறிய நான்குவகையான வளிநீர் நோயில், பொதுவாய்க் கை, கால், கண் இவைகள் அழல் போல எரியும். நாவறளல், பல், நா, தொண்டை இவைகள் கருத்தல் பேச்சுவன்மை குறைதல் கண்மேல் சொருகுதல், அடிக்கடி பசியும் நீர்வேட்கையும் உண்டாதல் உடல் முழுமையும் கத்தியால் வெட்டியது போல் வலித்தல், ஆகிய குறி குணங்களைக் காட்டும்.

அழல் குற்றத்தால் வருவன ஆறு.

1. யானைக்கொழுப்பு மணநீர் :

"சுருவமா யப்பியந்தா னிறங்கும் போது
துடியானை மதம்போலத் தானி றங்கும்
வெருவமாய் வேளைக்குநா னாழி தானும்
விரிசாகத் தானிறங்குங் காய்ச்சி னக்கால்
உருவமா யுவர்மண்போற் படியும் பாரு
உக்கிரமாக் கண்டவெட்டா மாதந் தன்னில்
இருவமா யெமபுரத்துக் கெய்து வார்க
ளேற்றமா மப்பியத்தின் மேகந் தானே."

(பொருள்) : இதிலிழியும் நீர் யானையின் நீர்போல் குழப்பி வேளைக்குப் படிக்கணக்கில் இறங்கும். இதனைக் காய்ச்சின், நீர் அடியில் உவர்மண் போல் படிந்திருக்கும். நோய்கண்ட ஆறு திங்களில் கொல்லும். இதனை அப்பிய மேகம் எனக்கூறுவர்.

2. கற்றாழை மனுநீர் :

" தானென்ற கற்றாழஞ் சாறு போலுந்
தன்னாற்றம் போலவே மிகவே நாறுங்
கானென்ற காய்ச்சினாற் கடிதா நாற்றங்
கடிகைக்கு ளிருநாழி தானி றங்கும்
ஏனென்ற விக்குணமா மேகந் தானு
மிறங்கினதோர் மூன்றாகு மாண்டு தன்னில்
பானென்ற பரமபத மெய்துமென்று
பரமனுரை பித்தப்பிரமியப் பண்பு தானே. "

(பொருள்) : இதில் வீழும் நீரானது கடிகைக்குப் படிக்கணக்காவும், கற்றாழை நாற்றத்துடனும் இறங்கும். காய்ச்சின் மிகுந்த நாற்றமுள்ள தாய்க்காணும். இந்நோய் பிறந்த மூன்றாம் ஆண்டில் கொல்லும்.

சிறுநீர் நோய்

3. சுண்ணமண் நீர் :

" பண்பாகச் சுண்ணாம்பு வழலே நாறும்
படியுமே யடிதனிலே நீறு போல
நண்பாக வேளைக்கு நானாழி தானும்
நாறியே விறங்குமிக வெதும்ப ரிக்குங்
கண்பார்க்கக் காய்ச்சினாற் சுண்ண நீறுங்
கனமாகப் படியுமே யடியிற் றானுந்
தண்பாகக் கண்டசல மிரண்டா மாண்டிற்
சாகுவரே சவிரணத் தாண்மை தானே. "

(பொருள்) : நீரானது வேளைக்குப் படியளவாகவும் சுண்ணநீர் போன்ற மணத்துடனும், நீர் அடியில் சுண்ணாம்பு தெளிந்து படிந்து காணும். நோய் கண்ட இரண்டாம் ஆண்டிற்கொல்லும். இதனைச் சவிரண மேகம் எனவுங்கூறுவர்.

4. இனிப்பு மேகம் :

" தண்மையாய்ச் சலந்தானும் பசுப்பு மஞ்சள்
தானிறங்கும் பீசமுங்கோ சமுங்க டுக்கும்
ஆண்மையா யடிக்கடிக்கு நீரி றங்கு
மடிக்கடிக்கு அரைநாழி தனிலே காணு ம்

வெண்மையா யடியதனிற் றான்பி டிக்கும்
மிக்கான சடம்வெளுத்து மேனி கன்றும்
பண்மையாய்ப் பஞ்சவாண் டதனிற் கொல்லும்
பகர்கின்ற மதுமேகப் பாங்கு தானே. ''

(பொருள்) : இந்நோயில் வேளைக்கு அரைப்படி அளவாய் அடிக்கடி நீரிழியும். நீரிறங்கும் போதெல்லாம் நீர்ப்புழை கடுத்து, விரை நோகும். நீரைக் காய்ச்சின் தேனின் மணமுண்டாகும். அடியிற்றங்குவன வெண்மை நிறத்துடன் பிசுபிசுத்து அடிபிடிக்கும். உடல் வெளுத்துக் காணும். நோய் கண்ட ஐந்தாண்டிற் கொல்லும்.

5. பளிங்கு நீர் :

'' பாங்கான பளிங்குநிறம் போலி றங்கும்
பரிபீச கோசமுமே கடுத்துக் கூசுந்
தாங்கான தாழையோடு விழுது சாறு
தனைப்போலத் தானிறங்குங் காய்ச்சிக் காணில்
தேங்கான சீப்போல மிகவே நாறுஞ்
சீக்கிரமாய் வேளைக்கோர் படிதா னாகும்
ஏங்கான விப்படித்தான் கண்ட சாந்த்ர
மெய்திடுமே ஐந்தாண்டி லசாத்யந் தானே. ''

(பொருள்) : நீரிறங்குகையில் நீர்ப்புழையில் எரிச்சலையும் விரையில் நோயையும் தந்து, நீர் தாழை விழுதின் சாற்றைப்போல இழியும். காய்ச்சின், பார்வைக்குச் சீழ்போலும், அதன் நாற்றத்தோடுமிருக்கும். வேளைக்குப் படியளவாய் அடிக்கடி நீர் போகும். நோய் கண்ட ஐந்தாம் ஆண்டிற்குள் கொல்லும்.

6. முயற்குருதி நீர் :

'' சாத்தியமாய் முயலிரத்தம் போல வீழுஞ்
சாதகமா யிருநாழி தானி றங்குங்
காத்தியமாய்க் காய்ச்சினாற் புலால்போல் நாறுங்
கனமான பீசகோ சங்க டுக்கும்
ஊத்தியமா யிப்படித்தான் கண்ட மேக
மொன்பதா மாதத்தி லொடுங்குஞ் சீவன்
ஆத்தியமா மாக்கமா மேக மென்றே
அவனியுள்ளோர் தங்களுக் கறியச் சொல்லே. ''

(பொருள்) : இந்நோயில் சிறுநீர் அடிக்கடி இரண்டுபடி அளவாய் முயலின் குருதியைப் போல் சிவந்து, நாற்றத்துடன் இழியும். காய்ச்சின் புலால் நாற்றம் வீசும். நீர் இறங்கும்போதெல்லாம் நீர்ப் புழை எரியும். விரைப்பக்கம் கடுக்கும். நோய் கண்ட ஒன்பதாம் திங்களில் கொல்லும்.

அழற்குற்ற நீரின் பொதுக்குறி குணங்கள் ;

" அறியவே பித்தசல மாறு மேதா
னங்கமதிற் செய்கின்ற குணத்தைக் கேளாய்
தறியவே உடல்வற்றி யெரிவுண் டாகுஞ்
சடத்திலுந் நீரிலும் கவிச்சுண் டாகுந்
தெறியவே சீப்போல்கற் றாழை போலுஞ்
சேல்போலுந் தேன்போலு நாற்ற முண்டாம்
வெறியவே பீசத்திற் கோசத்திற் குத்தல்
மிகுமீரல் நாபியிலும் வேக்கா டாமே."

(பொருள்) : உடல் முழுமையும் வெப்புண்டாய், எரிச்சல், உடல் வரண்டு சுருங்கல், மிகுந்த வியர்வை, அவ்வியர்வை கவிச்சு நாற்ற மடித்தல், இழியும் நீர் சீழ்போலும் தேன் போலும், கற்றாழை நீர் போலும் இருத்தல், நீர்ப்புழை, விரை, ஈரல், உந்தி ஆகிய இவ் விடங்களில் வேக்காடு உண்டாதல் முதலிய குறிகுணங்களை இந் நோய் தோற்றுவிக்கும்.

ஐயக்குற்றத்தால் வருவன பத்து.

ஐயநீர் :

" தானென்ற வாசமேக மிறங்கும் போது
சலத்தின்மேல் நிணம்போலு மாடையுண்டாம்
வேனென்ற வேளைக்குக் குருணி தானும்
விடுபட்டுத் தானிறங்குங் காய்ச்சி னக்கால்
நேனென்ற நிணமுருக்குப் போல நாறும்
நிலையாக விப்படித்தா னிறங்கு மேகம்
ஏனென்ற வேழாண்டு தன்னிற் றானு
மெமபுரத்துக் கேகுமென்றே யியம்பி டாயே."

(பொருள்) : இந்நோயிலிழியும் நீர் முறைக்குக் குறுணியளவாய், கொழுப்பு நிறைந்து அம் மணத்தைப் பெற்று, நிணத்தின் நாற்றமும் பெற்றிருக்கும். ஆண்குறியும் விரையும் நோகும். ஏழாண்டிற்குள் சாக்காட்டை விளைவிக்கும், இதனை வசா (கொழுப்பு) மேகநீர் என்பர்.

தூய்மை நீர் :

" இயம்பவே நற்றண்ணீர் போலி றங்கு
மெடுத்ததனைக் காய்ச்சினால் நல்ல தண்ணீர்
நயம்பவே நாற்றமது நல்ல தண்ணீர்
நல்வேளை தனக்குமொரு குருணி யாகும்
அயம்பவே அப்படித்தான் கண்ட மேக
மையிரண்டு வருஷத்தி லறியக் கேளாய்.
மயம்பவே மறலியிட வூர்புக் காகு
மகத்தான வுத்தமமா மேகந் தானே."

(பொருள்) : இந்நோயிலிழியும் சிறுநீர், பனிநீர்போல் தூய்மை யாய் அளவு கடந்து அடிக்கடி வெளியாகும். பத்தாண்டிற் கொல்லும்.

மூளை நீர் :

" உத்தமமா யெலும்புக்குட் சதையைப் போல
உருகியே தானிறங்குங் காய்ச்சி னக்கால்
நித்தமமாய் நிணநாற்ற மாயி ருக்கும்
நிசமாக வேளைமுந் நாழி யாகும்
பத்தமமா யப்படிந்தான் கண்ட மேகம்
பரமசிவ னடியாரைச் சாரா தாகும்
இத்தமமா யேமனிட ஊர்புக் காகு
மிசைந்தவைந்து வருஷத்தில் மச்சை மேகம்."

(பொருள்) : கை, கால் முதலிய விடங்களிலுள்ள எலும்பு முறிவ தால் எலும்பிலுள்ள மூளை வெளியாகியதை நீரில் கரைந்தாற்போல் காணப்படும். ஒவ்வொரு வேளைக்கும் நாழியளவாய் நிணநாற்றத் துடன் வெளியாம் கொழுப்பை நீரில் கரைத்தாற் போல வெளுத்த பால் நிறத்துடன் வெளியாகும். காய்ச்சிய பால் கட்டிபோலக்காணும். அதிலும், இரவில் போகும் நீர் மிகவும் பால்போலக் காணும் என்பார் சிலர். இந்நோயுற்றான் ஆயுளளவு ஐந்தாண்டாகும்.

இளநீர் :

" மேகந்தா னிளநீர்போற் றானி ருக்கு
மிகக்காய்ச்சி லிளநீர்போற் றானி ருக்கும்
வாகந்தான் வாடையது இளநீர் வீசும்
வகையான வேளைக்கு நாழி யாகுந்
தாகந்தான் மிகவுண்டா யுடம்பி ளைக்குஞ்
சஞ்சலந்தான் மிகவுண்டாங் கண்ட ஏழு
பாகந்தான் வருஷத்திற் சாவு மாகும்
பாங்கான ஆதிக்கமே கத்தின் பண்பே."

(பொருள்) : இந்நோயிலிழியும்நீர் பார்வையிலும் மணத்திலும் இள நீரைப் போலக் காணப்படும் ; காய்ச்சின் தேங்காய் நெய்யின் மணம் பெறும் ; அளவிலோ படிப்படியாய் வெளியாகும் ; இஃதன்றி உடல் மிக இளைத்து மிக மன கலக்கமுண்டாம். நோய்கண்ட ஏழு ஆண்டிற் கொல்லும்.

கள்நீர் :

'' பண்பாக நுரையோடே வெளுப்புப் போலப்
பனங்கள்ளுப் போலவே தாளி றங்குங்
கண்பாக வேளைக்கு நாழி யாகுங்
காய்ச்சினாற் கள்மணந்தான் மிகவே வீசும்
மண்பாக மாப்போல மணந்தா னுண்டா
மயக்கமா மிப்படித்தான் கண்ட மேகம்
எண்பாக ஏழுவாண் டதனிற் கொல்லு
மேற்றமாஞ் சுராவென்ற மேகந் தானே.''

(பொருள்) : இதிலிழியும் சிறுநீரானது கள்ளைப்போல வெளுத்தும் நுரைத்தும் புளித்தும் வேளைக்குப் படியளவில் அடிக்கடி இறங்கும். மயக்கமுண்டாகும். இக் குறிகுணங்களைக் காட்டி ஏழாம் ஆண்டில் கொல்லும், இதனைச் சுராமேக மென்பர்.

வெண்ணீர் (தவளநீர்) :

'' என்றதோர் மேகந்தா னிறங்கும் போது
ஏற்றமாஞ் சுக்கிலத்தி னிறமே போலுந்
தன்றதோர் தாளியிடச் சாறு போலுந்
தரித்துமே மெழுகூர்ந்து சிறுகி வீழுங்
கன்றதோ ரிதைக்காய்ச்சிற் கட்டி போலக்
கனமான ஈரல்போற் றோய்ந்து போகும்
முன்றதோர் கண்டசலம் மூன்றா மாண்டில்
முயற்சியாய்க் கொலுஞ்சுக்ல மேகந் தானே.''

(பொருள்) : இந்நோயில், சிறுநீர் குழகுழத்து விந்து கலந்து இழியும். இதனைக் காய்ச்சின் உறைந்து கறுத்து ஈரல் போல் தோன்றும். மூன்றாம் ஆண்டில் கொல்லும். இதனைச் சுக்கில மேக மென்பர்.

கழநீர் :

'' மேகமாய்க் கழநீர்போற் சிக்கிச் சிக்கி
மிகுதியாய்த் தானிறங்குங் காய்ச்சி னக்கால்
சாகமாய்ச் சங்குசுண் ணாம்பு போலத்
தாழவே மண்டிமிகப் பாயும் பாரு
பாகமா யிப்படித்தான் கண்ட மேகம்
பாங்கமா யோராண்டு தனிலே கொல்லும்
வேகமாய் மிகநாறும் சரீரந் தானு
மிக உதக மேகமென்றே விளம்பு வாயே.''

(பொருள்) : இந்நோயில் நீர் அடைத்துச் சிக்கிச்சிக்கி, அடிக்கடி கழுநீர் போல இறங்கும். இதனைக் காய்ச்சின் அடியில் சங்கைச் சுட்ட சுண்ணாம்புப் போலப் படியும். உடல் நாற்ற மடிக்கும். ஓராண்டிற் கொல்லும்.

தேன் நீர் :

'' விளம்பவே தேன்போல மிகவி றங்கு
மிக்கான தேன்போன்ற நாற்ற மாகும்
அளம்பவே மெழுகுபோ லடியி னிற்கு
மதிகமாகயீ யெறும்பு மிகவே மொய்க்கும்
குளம்பவே வேளைக்குக் குருணி யாகுங்
குறிகண்ட வைந்துமா தத்திற் கொல்லுந்
தளம்பவே சரீரத்தில் மதுத்தா னாகுந்
தனித்ததோர் பிரசமென்ற மேகந் தானே.''

(பொருள்) : இதிலிறங்கும் நீர் தேனின் நிறத்தையும் கனத்தையும் மணத்தையும் பெற்றிருக்கும். ஈ, எறும்பு மொய்க்கும் ; அடிக்கடி குருணி அளவாகப் போகும். உடலின்மேல் தேன் மணம் வீசும்.' இஃது ஐந்து திங்களுக்குள் கொல்லும். இதனைப் '' பிரசமேகம் ' எனவும் கூறுவர்.

உப்புநீர் :

'' தனித்ததோர் மேகந்தா னிறங்கும் போது
தழலான சுண்ணாம்புக் கார நீர் போல்
மினித்ததோர் மிகுதியாய்த் தானி றங்கும்
வேளைக்கு நானாழி தானு மாகும்

கனித்ததைக் காய்ச்சினாற் படியு முப்புக்
கண்டசலம் பதினைந்து வருஷத்திற்றான்''
வனித்ததோர் மறலியிட வூர்புக்காகும்
வசனித்த சாரமேக வன்மை தானே

(பொருள்) : உப்பு நிறைந்த பொருள்களாகிய பழவகைகள் காய்கறிகளை யுண்ணின், அஃது உணவின் சாரத்தினின்றும் பிரிக்கப் படும்போது மிகுந்த உப்புகள் சிறுநீர் வழியே வெளியாகும். இழியும் உப்பின் வகைக்கு ஏற்பக் குறி குணங்கள் வேற்றுமையடையும். இந்த நோயில் இழியும் நீர்சுண்ணம் கலக்கிய நீர்போல் வெளுத்தும், அதன் மணம் பெற்றும், தெளிய வைக்கின் அடியில் சுண்ணம் படிந்தும், அள வில் மிகுந்தும் காணும். காய்ச்சின் உப்புப்படியும். மேலும், உடல் இளைத்தல், மனக்கவலை, ஏக்கம், பசியின்மை, செரியாமை என்னுங் குறிகுணங்களையும் காட்டு மெனக் கூறுவாருமுளர். நோய் கண்ட பதினைந்தாண்டிற் கொல்லும் என யூகி கூறுவர். இதனைச்சார மேகம் எனவும் கூறுவர்.

கவிச்சிநீர் :

'' வண்மையாய் மேகந்தா னிறங்கும் போது
மகாவிறைச்சி கழுவினதோர் தண்ணீர் போலாம்
கண்மையாய்க் காய்ச்சினாற் கவிச்ச டிக்கும்
கனமான நீர்த்தாரை முறுக்கி வீழும்
வெண்மையாய் வேளைக்கு முந்நாழி யாகு
மிக்கான குறிகண்ட மூன்றா மாண்டு
தண்மையா யேமனிடப் புரத்துக் கேகுந்
தைத்தியமே கந்தானுந் தசமு மாமே.''

(பொருள்) : சிறுநீரானது கறியைக் கழுவியது போன்ற நிறத்துட னும், புலால் நாற்றத்துடனும், இழிவதன்றி, நீர்போகும் போதெல் லாம் ஆண் குறியைப் புரட்டி நீரடைத்தது போல முறுக்கும். அடிக் கடி மிகுந்த அளவிலும் போகும். இது கண்ட மூன்றாம் ஆண்டில் சாக்காட்டை உண்டாக்கும். இதனைத் தைத்திய மேகமெனவுங் கூறுவர்.

ஐயநீர்களில் பொதுக் குறிக்குணங்கள்.

தசமான பத்துக்குங் குணத்தைக் கேளாய
சரீரந்தான் பருத்துமே வெளுப்புண் டாகும்
அசமான தினவுண்டா மடிக்க டிக்கு
அன்னமுமே தண்ணீரு மிகவே தேடுங
கசமான விருமலுடன் கோழை யுண்டாங்
கனவரிவா யாயாச முழலை யாகுங்
குசமான குணங்களெல்லாஞ் சிலேட்மந் தன்னில்
கொடியசலக் குணமென்றே கூறி னாரே.

பொதுவாக ஐயமிகுதியால் உண்டான பத்து வகை நோய்களிலும், உடல் பருத்து வெளுத்து ஊதிக்காணும். உடலில் தோல் கேடடைந்து சொறி, சிரங்கு, தினவு முதலியன உண்டாம். அடிக்கடி உணவும் நீரும் தேடும். இருமலும், தொண்டையில் கோழைகட்டலும் உண்டாகும் என அறிக.

நீரழிவு நோயினை இருபது வகையாய்க் கூறப்பட்ட நோய்கள் யாவற்றுக்கும் பொதுவாய்க் காணும் குறி குணங்களைப் பற்றி யூகிமுனி கூறியனவற்றைக் கீழ்க்கூறும் பாக்களால் அறிக :

''கூறான மேகமது விருப துக்குங்
குணந்தனைச் சிவன்சொல்லத் தேவி கேட்கத்
தாறான தாகமொடு சோக மேக்கந்
தரியாமல் நீரழித விருமல் மூச்சு
ஆறான அருசிசர்த்தி சித்தப் பிரமை
யடிக்கடித் தண்ணீர்தா னன்னங் கேட்டல்
ஈறான விடுப்புக்குக் கடுப்பு காணல்
எலும்புழற்ற லழற்றலோ டெரிவுண் டாமே.''

எரிவோடு சரீரமெலா மறைபட் டாற்போ
லெழிலுடம்பு நோதல்நித் திரையில் லாமை,
வரிவொடு வாயுமைத் தவும்ப ரித்தல்
மனதுசஞ் சலப்படுதல் காற்று வேண்டல்
மெரிவோடு மேல் மூச்சு மிகவுண் டாதல்
விக்கலோடு மயக்கந்தான் மெத்தக் காணல்
தெரிவோடு தேகமெங்கும் வெளிறுண் டாதல்
தேகமெத்த வாலோபப் படுதல் காணே.''

(பொருள்) முற்கூறிய இருபது வகை நீர் நோய்களின் குணத்தைக் கூறின் நீர் வேட்கை, அறியாமல் அடிக்கடி நீரழிதல், இருமல், மேல் மூச்சு, சுவையின்மை, சித்தம் கலங்கல், அடிக்கடி நீரும் சோறும் கேட்டல், இடுப்புக் கடுத்த எலும்பு உழன்று எரிதல், உடல் மெலிந்து நோதல், தூக்கமின்மை, வாயுமி குந்தும் பரிதல், மனக் கலக்கம், காற்று வேண்டுதல், சூடாக மூச்சு வெளியாதல், விக்கல் மயக்கம் மிகக் காணல், உடல் மிகவும் வெளுத்துப் போதல், உடல் அரட்டல் புரட்டல் ஆதலாகிய குறி குணங்களைப் பெறும்.

நோயிற் காணும் துன்பங்கள் :

''காணவே முதலவத்தைச் சரீரந் தானுங்
கனமாகப் பருத்திறுகி நீர்த்து வாரம்
வேணவே வேண்டாக்கி யகலம் பண்ணு
மிக்கவிரண் டாமவத்தை விளம்பக் கேளாய்
மூணவே மூத்திரப்பீ டையுமாச் சுக்ல
முகமுழுகித் தேஜசுதான் மிகவே குன்றும்
நாணவே மூன்றாகு மவத்தைக் குத்தான்
நாவறளும் வாயுவது மீறுந் தானே.''

தாறான நாலவத்தை யங்க தாகஞ்
சன்னியது பாதமுண்டா மைந்த வத்தைத்
தேறான நீர்ப் பெருகுந் தாது நஷ்டம்
நிலையாளு மவத்தையுடற் கிடைகொள் ளாது
மூனான மூர்ச்சைவரு மேழ வத்தை
மிக்கவரோ சகஞ்சுவாசந் தேக சாட்டியம்
ஏனான எட்டாவ தவத்தை தானே
எழுகிரந்தி பிளவையுந்தான் மிகவுண் டாமே.''

''உண்டாகு மொன்பதா மவத்தை கேளாய்
ஒழுக்கான வாசாரங் கிருமி யுண்டாம்
பண்டான பத்தாந்த னவத்தைக் கேளாய்
பாரமாம் சயங்கண்டு பரத்துக் கேகும்
வெண்டாகு மேகந்தா னிருப துக்கும்
விளங்கியதோர் தசவத்தை விவரஞ் சொன்னோம்
................................ ..............
................................

(பொருள்): நீரழிவு நோயில் காணும் பத்து வகை (அவத்தை) துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும். அவைகள் : (1) நோய் தோன்றுவதற்கு முதற் குறியாக உடல் பெருத்துக்கொண்டே வருவதோடு நீர்ப் புழை அகன்று வரும். (2) நீர் பெருகி இழிவதோடு வெண்ணீர் கெட்டு உடலின் ஒளி குன்றிக் காணும். (3) நாவரட்சியும், வயிற்றுள் காற்றுக் கூடிப் பெருக்கும். (4) நீர் வேட்கை மிகுந்து முப்பிணித் தொடரும்.(5) சிறு நீர் பெருகி இழிந்து விந்தையழிக்கும், (6) படுக்கையில் கிடக்கவொட்டாது மூச்செரியும். (7) உடலில் கழலை, கட்டியுண்டாம். (8) வாய்குமட்டி சுவையற்றுப் பெருமூச்சுண்டாய் உடல் சோரும். (9) உடலில் நுண் புழுக்கள் உண்டாய் உடலை மெலியச் செய்யுமாம். (10) இளைப்பு நோய் உண்டாய்க் கொல்லும்.

''மேகநீ ரிருபதில் மேவுந் துன்பம்
ஆகத் துருவ வவைபத் தாகும்
அவற்றி லொன்றி லாகம் பளுவே
இவர்ந்து சிறுநீர் இழியுந் தொளையைப்
பருக்கப் பண்ணல் பன்னுமி ரண்டில்
வருத்தத் துடனே வந்திடுஞ் சிறுநீர்
மேவு மதிலே விரவும் வெண்ணீர்
வாவு முடலின் வன்மை குறைதல்
மூன்றில் நாவு முற்றும் வறளல்
ஆன்றா வாயு வதிக மாதல்
நாவி லுறுப்புகள் நன்றாய்த் தவித்தல்
ஆலுஞ் சன்னி பாத மைந்தில்
நீரைப் பெருக்கி நிறைவெண் பாலை
நாரைப் போல நாட்ட லாறில்
பாயிற் படுக்கைப் பண்ணா மூர்ச்சை
ஏயும் எழிலும் இசைசுவை மாறல்
மேல் மூச் சாதல் மெய்யுடன் நோதல்
சாலு மெட்டிற் சாற்றுங் கிரந்தி
கோலும் பிளவை கொள்வொன் பதனில்
மிகுமலக் கழிவு தகுமொழுக் கந்தவ
ருகுபு கோண லோதும் பத்தில்
சயமெனு இளைப்பு காண லாகி
அயனார் விதிதீர்ந் தகலு மென்ன
முன்னோர் சொன்ன முறைமை யாகும்

ஆயினும் துன்பம் அவைகள் பத்தில்
நோயுறு மூன்றா நுவலுந் துன்பம்
வரையு மருத்துவ வகைசெய லாமென்
றறைவர் சிலரே யாயினும் மொன்பான்
துன்ப மளவும் துயர்நீக் குறைகள்
வன்பாய்ச் செயவென மருத்துவ
ரன்பாங் குரையை நாடிடு வாயால்.''

என்று மொருபாடல் உண்டு.

தீரும் தீராதவை :

''செய்யவே வச்சிரமாந் தண்ட மான
செயமான முதுகுதண்டைப் பற்றி நிற்கும்
பெய்யவே பெருநரம்பில் மேகந் தானும்
பிறக்குமென்றே தானறிந்து வாதந் தன்னால்
பிய்யவே பிறந்தகல மாநா லசாத்தியம்
பித்தத்திற் பிறந்தசல மாறும் யாப்யம்
பையவே சேட்டுமத்திற் பிறந்த பத்தும்
பரமனுரைத் தார்சாத்யம் பராப ரிக்கே.''

நீரிழிவு நோயில், வளிக்குற்றத்தால் வருவனவற்றுள் நான்கு எளிதில் தீரும். பித்தக் குற்றத்தால் வருவகைகள் யாவும் தக்க மருத்துவத்தில் தீரும். ஐயத்தால் வருவன கடினமாகும் என அறிக.

## நீரிழிவு.

வேறு பெயர்கள் : மதுமேகம், இனிப்பு நீர்.

இயல் : அடிக்கடி சிறு நீர் பெருவாரியாய் இழிதல், நீரிழந்த இடத்தில் ஈ, எறும்புகள் மொய்த்தல், அதனைக் காய்ச்சின் சர்க்கரை மணம் வீசல், உடல் நாளுக்கு நாள் இளைத்தல் என்னுமியல்புடைய தாம்.

நோய் வரும் வழி : ''கன்னி மயக்கத்தால் கண்டிடும் மேகமே'' என நாடி நூலும், ''கிரந்திப் புண்ணிரண மேகக் கீச்சக னென்னுந் துன்மார்க்கனருந்ததி யென்னும் பாஞ்சாலி யன்னையைக் கண்ணுற் றானே.'' என மருத்துப் பாரதமும் கூறியதால், நீரிழிவு நோய்

அளவு கடந்த கலவியால் மேகத்தைத் தொடரச் செய்து வரு நோய் எனக் கொள்ளப்படும். அன்றியும், மிகு உணவு, சோம்பித் திரிதல், மனக்கலக்கம், பொருளின் மீது மிகுந்த இச்சை என்னும் இவற்றாலும் தாய் தந்தையின் வழியாயும் வரக் கூடுமென அறிதல் வேண்டும். ஈதன்றி நெய், பால், கள், இறைச்சி, மிக்க சுவையுள்ள மீன்கள், இனிப்புச் சுவைபொருந்திய உணவுகள், வேகாப் பொருள்கள், ஈரப் பொருள்கள், வெறுப்பைத் தரத்தக்க உணவுகள் என்னும் இவைகளும் நோய் வரு வழிக்குக் கருவாம்.

முற் குறிகள் : சிறு நீர், தெளிந்த நீர்போல் அடிக்கடி படிக்கணக் கில் இழிதலும், இழிந்த நீர்த்துளிகள் சற்று உலரின் பிசுபிசுத்துக் காணுதலும் உடல் வன்மை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வரு தலும், நாவறட்சியும் ஆகிய முற்குறிகளைக் காட்டும்.

நோயின் குறிகுணங்கள் :—மேற் கூறிய குறிகளைக் காட்டி, நீர் மிகுந்த அளவில் இறங்கும் ; நீருக்குக் கூறிய, நிறம், நிறை, எடை, மணம் என்னுமிவற்றுள், நிறம் தண்ணீரைப் போலும், நிறை அளவு கடந்தும், எடை கனத்தும், மணம் தேன் போலும் காணப்பட்டு, காய்ச்சின தேன் மணம் வீசுதலும் உண்டாகும். உடல் நாளுக்கு நாள் மெலிவடைந்து கொண்டே வருவதுடன் , தோலில் நெய்ப்பசை யற்று வறண்டு சுருங்கிக் காண்பதுடன் வெளுத்த மஞ்சள் நிறத்தை யுமடையும். நாவரட்சி, மிகுந்த நீர் வேட்கை, மிகுந்த பசி, புசித்த சற்று நேரத்துக்குள் பசியெடுப்பது போன்ற தோற்றம் உண்டாம். நெய், பால் முதலிய ஊட்டம் தரும் பொருள்களை உண்ணினும், உடல் ஊட்டம் பெறாமை முதலிய குறிகளை நிலைக்கச் செய்யும். இந் நோய் பெரும்பான்மையும், ஐயக்காலமாகிய முதுமையிலுண்டாம் நோயாம். சிறுபான்மை இளமையிலும் வருவதுண்டாயினும், தக்க மருத்துவத்தில் போம். நடுவயதில் உண்டாயினும் எளிதில் தீருவ துண்டு. இஃது மருத்துவத்தில் எளிதில் தீராவிடின், நோய் முதிர்ந்து தனக்குத் துணையாகப் பலவகைப் பட்ட கேடுகளையும் வருவிக்கும். சிறு நீர் அடிக்கடி மிகுந்து வெளியாவதுடன் அஃது உடல் சத்தை உருக்கிச் சர்க்கரையாய் நீர் வழியே வெளியாக்கிவிடும். மயக்கம், தலை சுற்றல், களைத்து வீழ்தல், தன் மரணையில்லாமற் படுத்திருத்தல், மூச்சு, வியர்வை இவைகள் தேன் ணம் வீசல், கண் மங்கல் அல்லது கண்ணில் திரையுண்டாதல்(படலம் ஆகிய குணங்களைக் காட்டி, மிகுந்த அளவில் போய்க்கொண்டிருந்த

சிறு நீரானது, நாளுக்கு நாள் அளவில் குறைந்துகொண்டே வந்து நீர்க்கட்டு நோயை உண்டாக்கி, பசியின்மை, செரியாமை, ஓக்காளம், வாந்தி, வயிற்றுநோய், மனக்கலக்கம், சினம், மயக்கம், ஆகிய குறிகளைக் காட்டிப் படுக்கையில் கிடத்தி மூச்சுத் தடுமாறி, திணரல் செய்து கொல்லும் ; அல்லது இருமல், இரைப்பு, இளைப்பு (கபம், க்ஷயம்), தமரகவாயு, நரம்புத் தளர்ச்சி முதலிய நோய்களைத் துணை கொண்டு கொல்லும்.

சிலவேளை சொறி, சிரங்கு, கட்டி முதலியவைகளை வருவித்து துன்பம் பல காட்டும். இந்நோயில் உண்டாம் கட்டி வகைகள் தனித்துக் கூறப்பட்டுள்ளன.

குற்ற முதலிய வேறுபாடுகள். நோய் வருவழியில் கூறியவாறு தன் வினை பிற வினைகளின் அளவாக ஐயம் தன்னிலையில் கேட டைந்து கீழ் நோக்குக்கால், அத்துடன் கெட்ட, உடற்கட்டுகள் ஏழை யும் ஒன்றன்பின் ஒன்றாய்க்கெடச் செய்து நாளடைவில் பசித்தீயைக் கெடுக்கும். ஊட்டம் தரும் பொருள்களை உண்ணினும், உடல் வன்மை யடைவதில்லை. கேடடைந்த அக்குற்றத்தால் மற்ற விரண்டும் தன் னிலை பிறழ்ந்து தங்களுக்குத் துணையாய்க் கால்களை (வாயுக்களை) யும் கூட்டி ஏழு உடற்கட்டுகளின் வன்மையைக் கெடச்செய்து பல வகைப்பட்ட நோய்களையும் முதல் நோய்க்குத் துணையாக்கும். இத னைக் "குறியுடனே மேகந்தான் கொடுமை செய்து, குறைந்து வந்து வருந்தாது வெல்லாங் குன்றிப்போகும்" எனப் பதினெண் சித்தர் நாடி நூலில் கூறியதால் அறிக.

நாடி :

"இருமியே வாதமும் பித்தமூங் கூடில்
மருவுசல மேகம் வாருதி போலாகும்
உருவம்வே ராகும் உண்டவுடல் காந்திடும்
உருகவே ஊனோடு உறிஞ்சி இனிக்கும்
பார்த்திடு மூன்றும் பதிந்துமெலிந்து நிற்கில்
தேர்ந்திடு மேகம் உள்ளே தோன்றியே பொருந்திமெய்யில்."

(பொருள்) வளி (வாத) நாடியும் அழல் நாடி (பித்தம்)யும் கூடி நடக்கின், பெருமழையால் ஓடும் நீர்போலச் சிறுநீர் இறங்கும். உருவம் வேற்றுமையடையும். அளவுகடந்து உண்ணினும் மேன்மேலும் பசியுண் டாகும். உடலின் ஊன் கரைந்து சிறுநீராக வெளியாகும். அன்றியும் சிறுநீர் இனிக்கும்.

''இனிக்கின்ற வாதத் திடைசேரில் ஐயந்தான்
பனிக்கின்ற கள்ளும் பதனிபோல் நீரோடும்
கனிக்கின்ற மேனி கரைந்து வெளுப்பேறும்
கனிக்கும் மதுமேகம் தப்பாதே ஐயமும்.''

(பொருள்) வளி (வாத) நாடியின் இடது பக்கத்தே ஐய நாடிக்கூடி நடந்தால், நீரிழிவு காணும். அந்நீர், கள்ளைப்போலும், பதனி நீர்ப் போலும் காணப்படும். உடல் இளைத்து வெளுப்பாகும். ஐய நோய்களும் துணைக் கொள்ளும் என அறிக.

'' துரணமுடன் நீர்பாடு நேர்பா டானால்
சொல்லுகின்றேன் நாடியெல்லாம் தளர்ந்து காணும்''.

(பொருள்) என்பதால், நீரிழிவு நோய் முதிர்ந்த நிலையில் நாடிகள் மூன்றும் தளர்ந்து நடக்குமென அறிக.

'' பற்பிடத்த மேகமென்றால் பித்த மீளும்
பாலகனே காங்கை கொண்டு நீராம் பாரே.''

(பொருள்) பித்த நாடி விரைந்து நடக்குமாயின், நீரழிவு நோய் என அறிக.

''நீர்மேக மானவர்க்கு நாடி தானும்
நீர்மயமாய் நாடியெல்லாம் பலமே கெட்டுக்
கார்மேகம் போலேவந் தெரிமேல் புரண்டு
விழும்புழுப் போலவே புரண்டு காட்டும்.''

(பொருள்) நீரிழிவு நோயில், உடல் வன்மை குறைந்து கார்மேகம் போல் பல பிணிகள் கூடின், நாடி தளர்ந்து வன்மையின்றி நீரோடுதற் போலும் அல்லது நெருப்பில் விழுந்த புழுபோலும் நாடிகளும் புரண்டு நாடி நடக்கும் என்பதாம்.

'' வளர்ந்திடு பித்த நாடி வலமிடம் பிசகா வண்ணம்
பிளந்தது தனித்துப் பச்சைப் புழுவது போலே யோடின்
உளந்தனில் வரட்சி தங்கி உடம்புலர்ந் தத்தி தன்னில்
விளைந்திடும் சுரங்கள் வந்து வளர்நீரின் போலா கும்மே.''

(பொருள்) இந்நோயில், உடலில் வரட்சி மிகுந்து உடல் உலர்ந்து இருக்கும் நிலையில், அழல் (பித்த) நாடியானது வலப்பக்கம் அல்லது இடப் பக்கம் பாயாமல், நேராக நடக்குமேயாயினும், அதனின் துடிப்பு

பச்சைப் புழு எவ்வாறு தன் தலையை முன்வைத்து, உடலை மேல் எழுப்பி, தலையிருந்த விடத்தே வாலைக் கொணர்ந்து வளைத்து நடக்குமோ, அவ்வாறே நடக்கும். இவ்வாறான நாடி நடையில் சுரமும் காணும் என்பதாம்.

நிர்க்குறி நெய்க்குறி.—வளி (வாத)க் குற்றத்தால் உண்டாகும் நான்கு வகைப்பட்ட நீரிழிவிலிழியும் நீர்.

(1) நெய் நிறத்தையும், மணத்தையும், இனிப்புச் சுவையையும் பெறும்.

(2) பசுவின் நீரைப்போன்ற நிறத்தையும் மணத்தையும் பெறும்

(3) ஆட்டுக் கறியைக் கழுவிய நீரின் மணத்தையும், நிறத்தையும் பெறும்.

(4) கள்ளின் மணத்தையும், நிறத்தையும் பெறும்.

இந்த நான்கு வகைப்பட்ட வளி நீரிழிவின் நீரை, வெள்ளைப் பீங்கான் கோப்பையில் விட்டு ஒரு துளி எண்ணெய்விடின் அவ்வெண்ணெய் சிதறியோடின், நோய் நீங்காததாகும் என நூல்கூறினும், தக்க மருந்தால் நீங்குமென்பது, மற்றொரு சார்பார் கருத்து. அழல் (பித்தம்) குற்றத்தில் இழியும் நீர், சிறிது மஞ்சள் நிறத்தைப் பெற்று, ஈயும் எறும்பும் மொய்க்கும்.

ஐய நீரில்.—தடித்து, மாசுபடிந்தாற்போல் வெளுத்தும் நுரைத்தும் காணும்; நீரில்விட்ட நெய்த்துளி மிதக்காமல், கீழ் அழுந்தும்.

எரு (மலம்).—வளி நோயில், தீய்ந்து கறுத்துக் கடின பட்டு, புழுக்கை போல இறங்கும். அழல் நோயில், மிகுதியாய்க் கழிந்து மஞ்சள் நிறம் பெற்று எருவாய் எரிச்சலை உணடாக்கி இறங்கும்.

ஐய நோயில்.—வெண்மையாயும், மாக்கரைந்தாற்போல நுரைத்தும் அடிக்கடி இறங்கும்.

மருத்துவம்.—இந்நோயில் முக்குற்றங்களும், கால்களும் (வாயுக்களும்), உடற்கட்டுகள் ஏழும் (சப்ததாதுக்களும்) வேற்றுமையடைவதால், அவைகளைத் தன்னிலைப்படுத்தற்பொருட்டு, உடற்கட்டுகளை வன்மைப்படுத்தித் தன்னளவில் மிகுந்த குற்றங்களையும் கால்களின் கெடுதிகளையும் நீக்கவேண்டும். ஈதன்றி இந்நோய் மேகத்தால் பிறக்குமெனக் கூறியதால், அதனைப்போக்குதற்கான மருந்தை முதன்மையாய்க் கொள்ளல் வேண்டும்.

ஈதன்றியும், இந்நோய்க்கு நம்நாட்டு மருத்துவர் கையாளும் குடிநீர், பொடி, இளகியம், நெய், பற்பம், செந்தூரம் முதலிய மருந்து வகைகளையும் இங்குக் கூறுவாம்.

மருத்துவம் :

குடிநீர் வகைகள்.

(1) '' ஆவா ரந்துளிர் கல்மதங் கொன்றைவேர்
நீவ ரைத்துப் புளிமோரி லுண்பையேல்
தீவி ரைத்து வரி னுந் திரைகடல்
காவி பைந்து வரினுங்கடக்குமே.''

(பொருள்) என்றதில் ஆவாரைத்துளிர், கல்மதம், கொன்றைவேர் ஆகிய மூன்றையும் ஒன்றுபட அரைத்து, மோரில் கலக்கிக் குடிக்க நீரிழிவு நீங்கும்.

(2) '' ஆவிரை கொன்றை நாவல் அலைகடல் முத்தங் கோட்டம்
மேவிய மருதந் தோலும் விரைந்துட னொன்றாக் கொண்டு
பூவிரி குழலினாளே பொருந்தவே தன்னை யுண்ணக்
காவிரி நீரும் வற்றிக் கடல்நீரும் வற்றுந் தானே.''

(தேரன் குடிநீர் 100)

(பொருள்) ஆவாரையின்இலை, வேர், பூ, பட்டை, காய் ஆகியவைகளைச் சேர்த்து ஒரு பலம் கொன்றைவேர், நாவல் கொட்டை, கடல் அழிஞ்சில், கோரைக்கிழங்கு, கோட்டம், மருதம்பட்டை இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து, ஒன்றுபட இடித்து, எட்டுபங்கு நீர்விட்டு அரை ஆழாக்காகக் காய்த்துச் சாப்பிட்டு வர, நீரிழிவு போம். அடிக்கடி இழியும் நீர்ப்பிணி நீங்கும்.

தேற்றான் விரை, கடுக்காய், சிவப்பு ஆவாரை விதை, விளாம் பிசினி ஆகிய இந்நான்கையும் பங்குக்குக் கால் பலமாய் எடுத்து. பசுவின் மோரில் கொள்ள, பொங்கி வரும் நீரழிவு போகும்.

தேற்றான் விதை— பலம் $\frac{1}{4}$
கடுக்காய்த் தோல்— பலம் $\frac{1}{4}$
ஆவாரைவித்து — பலம் $\frac{1}{4}$
விளாம் பிசின் — பலம் $\frac{1}{4}$

இவைகளை முதல் நாள் இரவில் மோரில் ஊரப்போட்டு மறுநாள் காலை அரைத்து, பசுவின் மோரில் கலந்து சாப்பிட, நீரிழிவு நீங்கும்.

'' வெள்ளையுடன் மாறாநீர் மேகம்போந் தேகமிசை
யுள்ள பலபிணியு மோடுமே—யுள்ள
பொலாங்ககலு நீர்முள்ளிப் பூமகரத் தோடே
இலாங்கலியின் வட்டயிலை யில்.''

(தே. வெ. 405)

(பொருள்) நீர்முள்ளிப் பூவினை அதன் மகரத்தோடு எடுத்துத் தெங்கின் வட்டும் கூட்டிக் காலை மாலை மென்று அயிலுகையில் நீரிழிவு போம்.

'' திருந்துவிளா வாவாரை செப்புவரட் பூலாவேர்
விருந்திற் விலவங்கைக் காட்டுமல் லிகையுங்கூட்டிப்
பொருந்தவே மேதிமோரிற் போதவே வேகவைத்து
அருந்திடத் தயிரில்வார்த்தே யதீதநீ ரிழிவுபோமே.''

(பொருள்) விளாவேர், ஆவாரைவேர், பூலாவேர், இலவங்கம், காட்டு மல்லிவேர் இவைகளை ஓர் அளவாக எடுத்து, எருமை மோரில் வேகவைத்து வடித்து, அம் மோர் சிறிது புதிதாகக் கூட்டிக் குடிக்க, நீரிழிவு நீங்கும்.

பொடி (சூரண) வகைகள் :

சிந்தில் பொடி : முற்றிய சீந்தில் தண்டில் எடுத்த சர்க்கரை படி நான்கு, ஆவாரம்பூ, தண்ணீர் விட்டான் கிழங்கு, தாமரைப்பூவின் மொட்டு, செவ்வந்தியிதழ், வெள்ளைச்சந்தனம், சிவப்புச்சந்தனம், நன்னாரிவேர் நீர்முள்ளிவிரை, சுக்கு, அமுக்கனாங்கிழங்கு, பச்சிலை, இரேணுகம், செம்பருத்திவிரை, நெற்பொரி, பூனைக்காலிவிதை, தக்கோலம், அதிமதுரம் மான் கொம்பு, கல்நார், குந்திரீகம், சாதிப்பத்திரி, ஏலம், உலர்ந்த திராட்சை, பேரீந்து, நாகப்பூ, திப்பிலி, சீரகம், தேவதாரு கற்பூரம் என்னும் இவைகளைத் தனித்தனியாகப் பொடித்த பொடி ஒன்றுக்கு, ஐந்து கழஞ்சியாகக் கூட்டுத் தொகைக்கு கற்கண்டுப் பொடி கூட்டிக்கலந்த வெருகடித் தூளைத் தேனில் கொள்ள நீரிழிவும், கைகால் எரிச்சல், வாய்குமட்டல் முதலியனவும் போம்.

நாவல் பொடி : நாவல் விரையின் பருப்பு, கொன்றைப்பூ, ஆவாரம்பூ நீர் முள்ளிப்பூ, சுத்தி செய்த இரும்புப்பொடி இவற்றை ஓர்அளவாகக் கொண்டு பொடித்து நாவல் பழச்சாற்றில் மைபோல் அரைத்து, வாய் அகன்ற சட்டியிலிட்டு வெயிலில் வைத்து, சிறுகச்சிறுக நாலுபடி நாவல் பழச்சாறு விட்டு, வெயிலில் உலர்த்தி நன்றாய் உலர்ந்தபின் பொடித் தெடுத்ததில், ஒரு சிட்டிகை அளவு காலை மாலை கொள்ளவும். நீரிழிவும் நீர் எரிச்சலும் குணமாம்.

சந்தனப்பொடி : சந்தனத் தூள், விலாமிச்சு, வெட்டிவேர், இலவங்கம், அக்கராகாரம், கல்மதம் வகைக்கு ஒருபலம், சீந்தில் சக்கரை ஆறு பலம் இவற்றைக் கூட்டிக்கொள்ள நீர்வேட்கை வாய்குமட்டல் போம்.

## இளகங்கள்

1. இலவங்க இளகம் : இலவங்க இளகம் (தேரையர் யமுக வெண்பா). வில்வாதி, தேற்றான் கொட்டை, செங்கொட்டை, இவை களை முதலாகக் கொண்ட இளகங்களைத் தக்க அளவில் கொடுக்க லாம். இவைகளைச் சித்த மருத்துவத் திரட்டில் காண்க.

உணவு : உடற்கட்டுகள் ஏழும் வன்மை பெருகுமாறு உணவை அளவிட்டுக் கொடுத்தல் வேண்டும். அன்றியும், சிறு நீரைப் பெருக்க கூடிய உணவுப்பொருள்களைத் தவிர்த்து, நீரை அளவில் போகச் செய் யும் பொருள்களைக் கொள்ளல் நன்று.

செரிப்புத் தன்மை நன்றாய் இருக்கும் பொழுது, கோதுமை, சம்பா கோதுமை, கேழ்வரகு இவைகளால் ஆக்கிய சோறு அல்லது மாப்பண்டங் களும், கறிவகையில் ஆட்டுக்கறி, காடை, கௌதாரி முதலியவைகளும், காய்கறிகளில் கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, நெய், பால், தயிர், மோர் போன்றவைகளும் கொள்ளலாம்.

சிறுநீர் எரிச்சல் உள்ளபோது, வெண்டைக்காய், பீர்க்கங்காய், புடலங் காய் இவைபோன்றனவும், கழிச்சல் உள்ளபோது, சுண்டைக்காய் அத்தி இளம்பிஞ்சு, மாம்பருப்பு போன்றனவும், நீர் அளவு கடந்து எரு (மலம்)கடினப்பட்டுள்ளபோது, தாளிக்கிரை, அறுகீரை, முருங்கைக்கீரை, முருங்கைப்பூ, ஆவாரம்பூ போன்றனவும் கொள்ளலாம்.

உடல் மிகவும் மெலிந்த நிலையில் பெருங்கழிச்சல் உண்டாகும். அப்பொழுது இருமுறை வடித்த அரிசியின் கஞ்சி, வால்கோதுமையை அரைத்து நீரில் வடித்துக் காய்ச்சிய கஞ்சி, அவ்வாறே செய்த வாதுமைப் பருப்புக்கஞ்சி இவைகளில் சிறிது பால் கூட்டிக்கொடுத்தல் வேண்டும்.

**தேரர்** மருத்துப்பாரத நாடகமென்னு நூலில், இந்நோய்க்கு முதன்மையான மேக நோய்க்குக் கீசகனையும், நீரிழிவிற்குச் சயிந்தவனையும் ஒப்பிட்டுக் கூறினார்.

எங்ஙனம் பீமனால் கீசகனும், தருமன், அர்ச்சுனன், கண்ணன் முதலியவர்களால் சயிந்தவனும் கொல்லப்பட்டனரோ, அங்ஙனமே பீமனாகிற இரசத்தினால் மேகத்தையும் தருமன் முதலியவராகிற அயம், எஃகு வெள்ளி, பொன், காரீயம், செம்பு இவற்றுள் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களினால் நீரிழிவையும் போக்குதல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு உருவகப்படுத்திக் கூறிய கதையைக் கீழ்க் கூறப்படும்.

தேரன் மருத்து பாரதக் கதை.

" பதின்மூன்றா நாட்சண்டை யிரண்டு வர்க்கப்
படைகள் வெளிப் படச்சேனா பதிகள் வீரப்
பதினாரா யிரக்கஞ்ச ரதரை மாட்டப்
பற்குணன்சென் றானொருபாற் பவனன் சேயு
மதிலகன்றா னவ்வேளை தருமன் தன்னை
யார்க்கவந்தார் கவுரவர்மற் றபிமன் கண்டே
யிதுசமயங் கவுரவரைக் கொல்வ னானென்
றேறினா னிரதமிசைச் சீறி னானே. "

பல்லவி.

பாய்ந்தானே யபிமன்னு கவுரவர் படையிலே
யிடிபோல யூகமும் யுடைபட

அனுபல்லவி.

மாய்ந்தானே யிலக்கணனுந்துச் சாதனன்
மைந்தனு மோடத்துரை மைந்தரெல்லாரும்
கண்டானே சிலைக்குருவும் அபிமனுங்
கடிந்தானே தொடுத்தனு வொடித்தோடினானே

எதிர்த்தாரே கண்ணன்மக்க ளிரண்டுபே ரிறந்தாரே
யுறுந்தானை பறந்த போதே
அங்கர்கோமா னெதிர்த்தானவ னையுமடித்தான்வில்
லொடித்தான்பின் பொடித்தானி ரதத்தை

அச்சுவதா மன்வந்த னவன்சிலை யறுத்தான்
கொலைமறுத்தான் சொலவெறுத்தா னப்பாலே
மத்திரதே யன்வந்தா னவரொடு மலேந்தான்
கைகலந்தான் கைப்பலந்த னைக்குறைத்தான்

பார்த்தானே மன்னர் மன்னன்இனி யென்ன
பசையெலா மடியுதே தடையென்ன சொல்வீர்
அபிமனை யென்று சொல்ல வஞ்சனை
யாலே வில்மேவேதேர் காலொடு கையும்

போக்கின ரப்பாலும் அபிமன்னுபுலி
யென்னவலி செய்ய உலவை சேய்கேட்டு
பதினாலு பேர்மன்னர் கொண்டுசோ தரரைப்
பதைத்திட வரைத்துமேற் கதிக்கவொட்டாமல்

கொன்றை மாலையைப் போட்டு சயிந்தவனைக்
கொல்லெனக் சொல்லமன்ன னல்ல தப்படியே
ஆகுதென்றுசிந் துபதியபிமனை யடித்தனல்
முடித்தலை படிக்குளே விழவே
சேர்ந்தனன்வீர சொர்க்கமபிமன்னு
செங்க திருங்கடல் தங்கின மறைய
நானாயீரெண் ணாயிரவெங்கல ரதத்தரை
வதைத்தபின் மதத்தோடு திருப்பி

வருகிற விசையனிக்கும் தருமத்தின் மன்னவர்க்கும்
பின்னவர்க்குந் தன்னவர்க்குந் தெரியப்
பண்ணிய விசையனைத் தேற்றியப் பாலே
பாடியி லோடிய வாடிய பேரைத்
தேற்றிவியாச ராலேவிசையனைத் தெளிவித்து
வெளிவெற்பின லெளிதினற் கொடுபோலப்
பரமசிவனைத் தொழுது பாசுபதக் கணையைத்
தொடுவித் ததையுங் காட்டி

வந்து சொன்னசூள் முடிக்கச் சயிந்தவ வதைக்கு
ளமிதத்தை யுமிதத்தொடு சொலவே
பருதியுதையஞ் செய்தா னிரண்டு படைகளும்
கடலென வடலுடன் வரவே

றிலாலா நாட்சண்டை யருச் சுனர்க்குப்
பாசுபத நிலையைக் காட்ட கிருஷ்ணமூர்த்தி
யதிவேக மாயிரத மூர்ந்து துன்னா ணியூக
மூன்றில்முன் வில்லாசான் தன்னை

யுதவு நெறியெனச் சமர்செய் தப்பாலேகி
யுருந்துவந்த மித்திரன் சேயுடன் போர்செய்தே
கதமெனவே கைற்றனது வில்லினாண்மை காட்டினா
னெதிர்த்தவரை மாட்டினானே.

பல்லவி

அருச்சுன னடித்தானே கையிலே
பருத்தவில் பிடித்தானே

அனுபல்லவி

அருச்சுன னடித்தானே திரட்படை மடித்தானே
யரிரதமூறவே தரியலர் நேரவே

சரணங்கள்

யாதவ மித்திரப் படை சீதரபுரத்திரக்தொடை
யுனைத்தையு மாட்டி னானே
கவுரவசனத்தையு மோட்டினானே
வருணன் மகனாவியைப் பரித்தானே

மச்சரனென்னும் பாவியைக் குறித்தானே
யவனைக் கொன்றே ஆயிரம் புஜத்தானை
மாயவுங் துணிந்தானே யடந்தானே
தூஷிதனை சிலையினாலே யிடந்தானே

தோஷிததன பின்னுமப்பலே யடிக்கிற காற்றென
நடைக் கையிலாற்றிலே யண்ணனுந் திரும்பினனே
மாருதி நண்ணினன் விரும்பினனே
மன்னர்மன்னர் அனுசர்ப னிருவர்கண்

முனமெதிர் வீயவே யரைந்தானே
விரைவாகத் தம்பியை யுரைந்தானே
நிரையாக சாத்தகி யரியன் கையாலே
பூரிசிராவையு மரிந்தானே

பற்குனனும் கெட்டவாகருச் சொரிந்தானே
நற்குணனும் சயிந்தவனை அலறி மறையுமுனே
கொலுதல் சபதமென வறிந்தாரே
கவுரவர்கள் அவனையுள்ளே செறிந்தாரே

பவுரவர்கள் நினைக்கு முன்னே யாழியாற் பருதியை
நாழிகைத் திருதிகை யடங்கவு மொளித்தானே
சயிந்தவனைத் திடங்கொடு விளித்தானே
சக்கரத்தை யகலச் செய்தான் பகலைச் செய்தான்

விசையனுக் கெதிரி காட்டினானே
சிந்துமன் தலையினைக் கணையோட்டினானே
யவன் தந்தை யத்தகுதிலாகவே செத்துடன் போகவே
யரசரெலாங் கண்டுஅதிசய பரவசமே கொண்டு
மகிமையை யரிதென வோதின ரிரவினுமெய்
மாடத்தோடு புரிந்தாரே கவுரவ திடத்தோடு திரிந்தாரே
நகுலவே அந்திரநேர் சோமதத்தனு மிறந்தான்
அவனுக் கனுசனாலே பார்க்கபு வனத்தைவிட்டான்.

### கதைச் சுருக்கம்.

கீசகன், பாஞ்சாலியை இச்சித்தது, ஆணும் பெண்ணும் இச்சித்துக் கூடியதால் பிறந்த மேகநோய் எனக்கொண்டு, அம்மேகத்தால் பிறந்த நீரிழிவைப் போக்க, முதல் முதல் கெந்தகமும், பிறகு இரசம் இவற்றால் செய்த மருந்துகளைக் கொடுத்து, பின் நிரீழிவுக்கு (ஒப்பிட்ட சயிந்தவனுக்கு)த் துணை நோய்களாகிய, ஐயநோய்களைத் தொலைக்கும் பொருட்டு, பொன்பற்பம், செந்தூரங்கள் வழங்கி, உடல் வன்மை பெறச் செய்து, கருவங்கம் வழங்கி' அதற்கு அடுத்தாற்போல் செம்பு வழங்கல் வேண்டும் மென்பதாம்.

குறிப்பு : கதையில் சயிந்தவனுக்குக் கொன்றைமாலை யிட்டது, கொடுக்கும் மருந்தினிற்குக் கொன்றைப் பூச்சாறு துணையாகக் கொள்ளவேண்டும் எனக் குறிக்கும்.

அர்ச்சுனன் சிவன் அளித்த பாசுபதாஸ்திரம் கைக்கொண்டான் என்பது பாசுபதாஸ்திர மாத்திரையாகும்.

## மருத்துப்பாரத்திற் கூறிய மருத்துவம்.

இந்நோயில் கெடுதி அடைந்த உடற் கட்டுகளை வன்மைப்படுத்த முதலில் இரசத்திற்காக, கெந்தகத்தாலாகிய கந்தபற்பம், கந்தகரசாயனம், கந்தகச் சுடர்த்தைலம் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றைப் பொடி (சூரணம்) வகைகளில் ஏதேனுமொன்றைத் துணைபாகக் கொடுத்து, குருதியைப் பெருக்குவதற்கு இரும்பு எஃகுகளால் ஆகிய பற்பச் செந்தூரங்களை வழங்கி, அவைகளுக்குத் துணையாக நாவல் பட்டைச் சாறாகிலும், அல்லது நாவற்பழச் சாறாகிலும் அல்லது ஆவாரை குடிநீராகிலும் கொடுத்தல் நன்று.

ஊன் பெருகவும், உடலில் மேகத்தால் பிறந்த அழலைப் போக்கவும், வெள்ளி பற்பம் அல்லது செந்தூரத்தை, நீர்முள்ளிப்பூ, மணத்தக்காளி வித்து இவைகள் போன்ற நீரின் எரிச்சலையும் போக்கக்கூடியவைகளைக் கொண்டு செய்த, குடிநீர், பொடி (சூரணம்), நெய், இளகம் முதலியவற்றுள் ஒன்றினைத் துணை மருந்தாகக் கொடுத்தல் வேண்டும்.

கொழுப்பைப் பெருக்கவும், என்பை வன்மைப்படுத்தவும் பொன்னாலாகிய பற்பம், செந்தூரம், மாத்திரைகள் ஆகியவற்றைத் தக்க துணை மருந்தோடு கொடுக்க, உடலின் வன்மை மிகுந்து, மேனி சிவந்து காணினும், இதுவரை செய்த மருத்துவத்தை, இஃதோடு விட்டுவிடின் பயன் அற்றதாகும். ஆகலின், மூளையையும், தவளத்தையும் (விந்துவையும்) பெருக்குமாறு காரீயம், செம்பு இவைகளாலாகிய மருந்துகளில் காரீய மருந்தை ஒன்று அல்லது இரு முறை தக்க துணை மருந்துகளோடு கொடுத்தபின், செம்பாலாகிய மருந்தை வழங்கின், நோய்முற்றிலும் போம் என்பது தேரன் துணிபு என அறிக.

'' ஈயம் செம்புக்கு அரசன் '' என்னும் பழமொழி ஒன்றுண்டு. ஆதலால், செம்பின் பற்பச் செந்தூரங்களை வழங்கும் போதுண்டாகும் கெடுதிகளை வராமல் தடுத்துக் காக்க, ஈயத்தாலாக்கிய மருந்தினையும் துணைகூட்டினார் தேரர் எனக் கொள்ளல் வேண்டும்.

இந்நோய்க்கு நாவரட்சி, நீர்வேட்கை, கழிச்சல், உடல் எரிச்சல், மயக்கம், விக்கல் போன்ற பலவகைப்பட்ட குறிகளும் தொடருமாகலின், அவ்வப்போது எழும் குறிகளைத் தடுத்தற்கான மருந்துகளைத் தனித்தேனும், நோய்க்குக் கொடுக்கும் மருந்துகளுடன் கூட்டியேனும் கொடுக்கலாம்.

## தெளி நீர்.

வேறு பெயர்கள் : தூய்மை நீர் ; உதகமேகம் என்பன.

இயல் : மாசுமருள் இல்லாமல் பனிநீர் போலத் தெளிவாய் இருத்தலும், எடையற்றதாயும், அளவில் மிகுந்தும் இழிதலும், நீர்வேட்கை உண்டாதலும் ஆகிய இயல்புகள் இந்நோயில் காணப்படும்.

வருவழி : மனக்கவலை, அடிக்கடி திடுக்கிட்டுப் பயப்படுதல், உணவின் வேறுபாடுகள் ஆகியவைகளாலும், தாய் தந்தையர் வழியாலும் இந்நோய் வருவதுண்டு. தலை மண்டையில் அடிபடினும் இந்நோய் வருமெனச் சில நூலோர் கூறுவர். இந்நோய் பெரும்பான்மையும் சிறு வயதினர்க்கும், நடுவயதினர்க்கும் வரும் நோயாம்.

குறிகுணங்கள் : இயலில் கூறியக் குறிகளைக் குறியாகக் கொண்டு, பின் நீர்வேட்கையை மிக யெழச் செய்து நாவை வறளச் செய்யும். உடல் நாளுக்குநாள் இளைத்து, நீரிழிவு நோயில் சிறுநீர் எப்படி அளவு கடந்து வெளியாகுமோ அதற்கும் மேலாகவே இழியினும், இந்நோயில் அதில் காணக்கூடிய இனிப்பும் எடையும் இருத்தல் இல்லை. ஆயினும், நோய் முற்ற றற்றத் தோல் சுருங்கி வறண்டு, பசித்தீயினைக் கெடுத்து, கழிச்சலையாகிலும், எருக்கட்டையாகிலும் (மலக்கட்டு) உண்டாக்கும். தலைநோய், மயக்கம், அடிக்கடி சினந்து பேசல், சோம்பல், தூக்கமின்மை, கண்ணிமை நோதல், கைகால் முதலியன குடைதல், மூக்குத்தண்டு நோதல், வலித்தல், கொருக்குவலி, கண்டைச்சதை துடித்தல், ஆகிய உடலின் வன்மைக் குறைவாலுண்டாம் குறிகளைக் காட்டும். அன்றியும் சில வேளைகளில் சுரமும் வருவ துண்டு.

நோயின் வன்மை மிகுந்து வாராதிருப்பின், சில ஆண்டுகள் வரை நோயை நிலைக்கச் செய்து, தக்க மருத்துவத்தினாலும், உண்ணும் உணவின் ஊட்டத்தினாலும் நோய் தீரும். இன்றேல், நோய் வன்மை பெற்று, உடலில் ஊறி உடற்கட்டுகளைக் கெடுத்து, மயக்கத்தை உண்டாக்கி கிடக்கச் செய்து, காக்கை வலியைப் போன்ற வலியைப் பிறப்பித்து ஒரு திங்களில் கொல்லும். அல்லது உடல் மெலிந்த நிலையில், மற்ற நோய்களையும் துணைகொண்டு, இளைப்பு நோய், ஐயசுரம் முதலியன பிறந்து கொள்ளும்.

இந்நோயில் உடல் நாளுக்குநாள் சந்திரன் தேய்வது போலத் தேய்ந்து வருதலும், தேய்த உடல் குருதியின்மையால் வெளுத்து போவதாலும் இந்நோயினைச் சோமநோய் எனச்சில நூலோர் கூறுவர்.

## வெண்ணீர்.

வேறு பெயர் : சுக்கிலநீர், தவளநீர்.

இயல் : உடற்கட்டுகளில் (தாதுக்களில்) ஆறாவதான தவளம், (சுக்கிலம், விந்து) மெலிவடைந்து, அதன் இயற்கை ஒளி, நிறம், எடை, கனம் முதலியன குறைந்து தானாகவே நீருடன் கலந்து இழிதலும் நீரிழிவதற்கு முன்னும் பின்னும் இழிவதுமான இயல்புடைய நோயாம்.

நோய் வரும்வழி : இளம் வயதிலேயே பெண் இச்சையில் ஈடுபடல், பெரும் பொருள் வேண்டுமென்னும் இச்சையுடன் அதையே எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருத்தல், மனத்தளர்ச்சி, ஊக்கமின்மை ஆகிய இவைகளாலும், தாய் தந்தையர் வழியிலும் இந்நோய் பிறக்கும்.

முற்குறிகள் : அடிக்கடி நீரிழிதல், தன்னை அறியாமலே இரவில் தவளம் வெளியாகிவிடல், உடல் நாளுக்குநாள் மெலிவடைதல், உடல் நடுக்கல் என்னும் குறிகளைக் காட்டும்.

குறிகுணங்கள் : மேற்கூறிய முற்குறிகளைக் காட்டி அடிக்கடி, இழியும் நீர் தடித்த நூல்போல் இழிவதும், இவ்வாறு அடிக்கடி இறங்குவதைக் கண்ட நோயாளன், அச்சங் கொண்டு, மனந்தளர்ந்து தன்வன்மையே நீர்வடிவாய் இழிந்து விடுகின்றது என்னும் ஏக்கம் நாளுக்கு நாள் மிகுந்து, அதே கவலையால் மெலிவடைவான். இக் கவலை பெருகப் பெருக, இரவில் தூக்கமின்மை, கனவிற்றவளம் (விந்து) நழுகல், கைகால் அயர்தல், எப்போதும் முக்காடிட்டுத் தனித்துக் காலங்கழித்தல், பிறரைப் பார்ப்பதற்கு நாணமடைதல் முதலிய மனத்தைப் பற்றிய குறிகுணங்களும், செரியாமை, வாந்தி, ஓக்காளம், கழிச்சல் அல்லது எருக் கட்டல், கைகால் நடுங்கல், விதிர்விதிர்த்தல் ஆகிய உடலைப்பற்றிய குறிகுணங்களும் உண்டாம்.

நோய் தோன்றிய சில நாட்களுக்குள் தக்க மருத்துவரைக் கொண்டு நோயினைப் போக்காவிடில், மனக்கவலை மிகுந்து, உலகின் வாழ்வை வெறுத்து, உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிவும் ஏற்படும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் : அகச் செயல் புறச் செயல்களால் அழல் குற்றம் தன்னளவில் மிகுந்து, ஐயத்தை இளகச் செய்யும். அதனால் , தவளம் (விந்து), எடை, கனம், நிறம் முதலியன கெட்டு, நீருடன் கலந்து வெளியாகும். உடற் கட்டுகளும் முறையே தத்தம் வன்மை இழந்து மெலிவடையும்.

மருத்துவம் : தன்னளவில் மிகுந்த அழல் குற்றத்தைத் தன்னிலைப் படுத்த, கழிச்சலை உண்டாக்கக்கூடிய குளிர்ச்சி தரும் குடிநீர் வகை களில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்த பின்னர், இளகிய ஐயத்தை வன்மைப்படுத்தி, உடற்கட்டுகளைத் தேற்றி வன்மை பெறத்தக்க மருந்து களைக் கொடுத்தல் வேண்டும்.

கழிச்சலுக்கு : அத்திப்பழம், ரோசாமொட்டு, அதிமதுரம், சீமைக் காசினிவிரை, வகைக்கு ஒரு பலமாய்க் கொண்டு, நீர்படி ஒன்றுவிட்டு, ஆழாக்காய்க் காய்த்து, அதில் சிறிது பனைக்கற்கண்டு கூட்டிக் குடிக்க ஒன்று அல்லது இரண்டு முறை கழியும்.

மருந்துவகையில் : உடற்கு ஊட்டத்தை அளித்து, உடற்கட்டு களை வன்மைப்படுத்தக்கூடிய வெள்ளி, தங்கம், முத்து, பவளம் முதலிய பற்பச் செந்தூரங்களை அளவிட்டு, அதற்குத் துணையாய் நீர்முள்ளி, வெள்ளரிவித்து, முருங்கை வித்து, தேற்றான்கொட்டை இவைகள் கூட்டிக் குடிநீர் வகைகளையேனும் இளகங்களையேனும் கொடுக்க லாம். மனநிலையை அலையாதபடி தடுத்துவரின் எளிதில் நோய் நீங்கும்.

## நீர்க்கட்டிகள்.

வேறு பெயர் : மேகக்கட்டி, மதுமேகக்கட்டி, நீரிழிவுக்கட்டி, நீர்க் கட்டிகள்—நீர் நோயாகிய இனிப்பு நீர்க்கட்டி நீர்நோய்க்குத் துணை யாய்ப் பிறக்கும் கட்டிகள் எனப்பொருள்படும்.

இயல் : நீரிழிவு நோய் உடலில் ஊறி உடல் வன்மையைக் குறைத்து, ஆங்காங்குச் சிறு பருக்களையேனும், பெருங் கட்டிகளை யேனும் பிறப்பிக்கும் நோயாகும். சில வேளைகளில் பருக்கள் அல்லது கட்டிகள் பிறக்காமலே, சொறிந்த இடத்திலேனும், அடிப்பட்ட இடத்தி லேனும் புண்பட்டுச் சினைத்து, பெருந்துன்பத்தையும் உண்டாக்குவ தான இயல்புடைய நோயாம்.

முற்குறிகள் : நீரிழிவு நோயின் வன்மை பெருகப் பெருக, உடல் இளைத்தல், வியர்த்தல், தோல் சுருங்கி உலர்தல், மிகுநமை ஆகிய குறிகளைக் காட்டி, சொறிதலால் குருதி வெளியாகிய இடத்திலேனும், அடிப்பட்டுப் புண்ணாகிய இடத்திலேனும் புண் பரவிக்கொண்டே புரையோடியேனும், புண்படாமலே வீங்கிக் கட்டிபோலேனு முண்டாகித் துன்புறுத்தும்.

எண் : குற்ற அளவாய் நான்கும், குருதியளவாய் ஒன்றும், அடிபடல் வெட்டுப்படலால் ஒன்றுங் கூடி ஆறு வகை எனப்படும். அவைகள் முறையே வளி, அழல், ஐயம், முக்குற்ற, குருதி, காயக் கட்டிகள் என வழங்கப்படும். சில நூலோர் பத்து எனவுங் கூறுவர்.

அவைகள்.

''மேகத்தா லுண்டாகும் நீரிருப திற்பிளவை நிகழும் பத்தாம்
ஆகுமவை கடுகொடு கடலைநிலம் பூசினிய மறிய கட்டி
வாகுபெரு மடக்காலைப் பேய்ச்சுரக் காய்க்கூன் வலைக
ணாகும்
நாடுபெறு கூட்டென்னும் பிளவை வகைகளிங்கவர்
நவிற்றி னாரே.''

1. மடக்குக்கட்டி, 2. ஆமையோட்டுக்கட்டி, 3. வலைக்கண் கட்டி, 4. அதோமுகக்கட்டி (கட்டிப்பிளந்து கீழ்நோக்கிப் பெருத்து வருவது), 5. கடுகுக்கட்டி, 6. பேய்ச்சுரைச்கட்டி, 7. விப்புருதி கட்டி, 8. புத்திராதிக்கட்டி, 9. நிலப்பூசினிக்கட்டி, 10. கடலைக் கட்டி என்பனவாம்.

**1.** கடுகுப் பிளவை.

''கடுகுப் பிளவையே காணுடல் முற்றிலும்
கடுகி னளவதாய் கடுகிட விடமின்றி
கடுகத் தோன்றியும் கடுக உடைந்துமே
கடுக மிகவலி காட்டு முணரிதே.''

(பொருள்) இப்பிளவை கடுகைப் போன்ற வடிவத்துடன், சிறு கட்டிகளாய், ஒன்றன் பின் ஒன்றாய் இடைக்கிடை கடுகு இடவும் இடமின்றி, உடல் முழுவதையும் விரைவாய்க் கவர்ந்து கொள்ளும். கட்டிகள் பார்வைக்குச் சிறிதளவாய்க் காணினும் மிக வலிக்கும்.

2. கடலைப்பிளவை.

''கடலைப் பிளவையே காணுடல் முற்றிலும்
கடலை யளவிலுங் கண்டத்தில் வடிவிலும்
இடமில் லாதுரி இயற்றிடு வலியதைத்
திடம தாயறி செப்பினர் சித்தரே.''

(பொருள்) கடலைக் கழலையானது, கடலை அளவாய் உடல் முழுவதும் சிறிதும் இடமில்லாமல் பரவி விடும். தாங்க முடியாத வலியைத் தரும்.

3. நிலப்பூசினிப் பிளவை :

''நிலப்பூ சினியை நிகழ்த்தக் கேளாய்
நிலப்பூ சினியை நேர்வட் டமதாய்
தலத்திற் றடித்துச் சார்பல துன்பம்
அலமா யளிக்கு மதுவென் றறியே.''

(பொருள்) நிலப்பூசினி அளவையும் வடிவையும் ஒத்த அவ்வளவு பருமனான கட்டி உண்டாய் அது தாங்க முடியாத வலியையும், கிளை நோய்கள் பலவற்றையும் உண்டாக்குமென அறிக.

4. கட்டிப் பிளவை :

'' கட்டிப் பிளவை தனைக்கூறின்
கட்டி யாயுள் வெளிவிரண்டில்
கெட்டி யாய்மிகு நோயினோடு
கிளைநீள் வட்ட வடிவங்கள்

திட்ட மாப்பெற் றும்புடைத்துச்
சோர்ந்த விடத்தில் இருப்பொன்று
விட்டவ் விடத்தை யோடுவ்து
மேவு மென்று விள்ம்பினரே. '

(பொருள்) இப்பிளவை நோயில், தோலின் மேலாவது சதையின் மேலாவது கட்டிபோலப் பெருத்து, வட்டமாகவேனும் நீளமகாவேனும் வளர்ந்து, சிலவேளை உடைந்து சீழ்வழிவதும், சில வேளை உடையா மலே அழுந்திப் போவதும் உண்டு. அதன்றியும், ஓரிடத்தில் தோன் றிய அஃது உலருமுன் அவ்விடத்தை விட்டு மற்றோரிடத்தில் புதிதாய்த் தோன்றுவதுமாகி மாறி மாறி வரச் செய்யும் எனக் கூறுவர்.

5. மடக்குப் பிளவை :

''மடக்குப் பிளவை குறித்தன்மை
வருமே கீலில் தசைஇடங்கள்
அடிக்க ணகன்று சுற்றியேதான்
அணைக ளுயர்ந்து நடுப்பள்ளம்
படவே விழுந்து கருஞ்செம்மைப்
பாங்காய் வியர்வை வலியுண்டாய்
மடக்குக் கவிழ்த்தாற் போல்வடிவாம்
வருமே நீரும் எனக்கூறே.''

(பொருள்) மடக்குக் கட்டியானது, பெரும்பான்மையும் தசைப் பற்றுள்ள இடங்களாகிய பிட்டம், தொடை முதலிய இடங்களில் உண்டாம். அது தோன்றும்போதே, அவ்விடத்தில் கனத்து வீங்கி, அடி பருத்து, அகன்று அதன் ஓரங்களைச் சுற்றி அணையிட்டது போல் தோல் தடித்துச் சிவந்து, நடுக்குழிந்து கருநிறமடைந்து அல்லது கருஞ் செம்மை நிறமடைந்து காணும். இக்கட்டி, தாங்கமுடியாத வலியை யும், இவ்வலி தாங்க முடியாமையால் உடல் வியர்த்தலையும் உண்டாக் கும். இது பார்வைக்கு அகலைப் போலக் குழிவிழுந்திருப்பதால், இதனை அகற்கழலை அல்லது அகற்பிளவை எனக் கூறுவர்.

6. ஆமையோட்டுப் பிளவை :

''ஆமைப் பிளவை குறித்தன்மை
ஆழக் குழிகள் விழுமினுப்பாம்
ஆமைப் படிவந் தனைத்தொட்டால்
அதுவும் வழுக்கும் பலமருந்து

மாமைப் படவே கொடுத்தாலும்
மாருப் பலவாய் வருத்துவிக்கும்
ஆமை யோட்டைக் கழித்தாற்போல்
ஆகும் வடிவமாய்ந்துணரே''

(பொருள்) ஆமை ஓட்டைக் கவிழ்த்ததுபோல்க் கட்டி நாளுக்கு நாள் பெருத்துக் கொண்டே வந்து, அதில் சிறுசிறு கண்கள் தோன்றி, அக்கண்களிலிருந்து சீவடியும். மற்றைய இடங்கள் வழுவழுத்து ஒளிரும். வன்மையுள்ள பெருமருந்துகளைக் கொடுக்கினும், எளிதில் உலராது பல கேடுகளை விளைவிக்கும்.

7. பேய்ச்சுரைப் பிளவை :

''பேய்ச்சுரைப் பிளவை பேசின்
பிறப்பிடம் நெருப்பாற் சுட்ட
தாய்மிகு வெரிச்ச லுண்டாய்
தரும்செம்மை கருமை நிறமும்
ஆய்வருங் கொப்பி ளங்கள்
அவைகள்பேய்ச் சுரைபிஞ் சாகும்
காய்வுநோ மயக்கஞ் சோர்வு
கழிதல்நீர் வேட்கை யாமே.''

(பொருள்) இக்கட்டி உண்டாகு மிடத்தே, நெருப்பாற்சுட்டது போல எரிச்சல் உண்டாகி, பின் அவ்விடத்தே கருஞ் செம்மை நிறமான கொப்புளம் பிறந்து, அது பேய்ச்சுரை வடிவம் போலப் பெருகும். அதன் அடி சிவந்து வீங்கி மிகவலிக்கும். அத்துடன் சுரம், மயக்கம், சோர்வு, கழிச்சல் முதலியனவும் தொடரும்.

8. கூன் பிளவை :

''கூன்பிளவை தன்மையது கூறக் கேண்மோ
கூறவயிற் றேனுமிடுப் பிடத்தி லேனும்
வானுகும் பருமனுய் எழும்பி மிக்க
வருத்தத்தை வியர்வைதன வருவித் துற்ற
தானுக வலியினுடன் கெட்ட நீரும்
தனிச்சுரந் துற்றகரு நிறமாய் மேலில்
ஆனமல் பூசினர் போற ழிந்தி
யாகநிமி ரெண்ணுத வாற தாமே.''

(பொருள்) கூன் பிளவையானது, வயிற்றிலாவது, இடுப்பிலாவது உண்டாய், பெருத்துத் திரண்டு, மேல் பூசினாற்போலும், உள்பக்கம் அழுந்தினாற்போலும், மிகுந்த கருநிறத்தோடும் தோன்றும், வியர்வை, தாங்க முடியாதவலி, சுரம் முதலிய குறிகுணங்களைக் காட்டி, கட்டியி லிருந்து நாற்றத்துடன் நீர் வடிதல், கூனனைப் போல் நிமிரவும் வளையவும் முடியாமை முதலிய பலவகைப்பட்ட குறிகளையும் தொடரச் செய்யும்.

9. வலைக்கண்கட்டி :

''வலைக்கண் பிளவை வழுத்திவிடின்
வன்மை யாக வெழும்பிமரத்
தலைக்கண் வேர்போல் பலகொடிகள்
சேர்ந்து குழம்பு நீர்சொரிந்து
நிலைத்து நாட்கு நாள்பரவி
நேரும் வலையைப் போல்கண்கள்
வலிக்குஞ் சிலகா லில்லாமை
வருநோய் குறையும் போடுமன்றே.''

(பொருள்) இக்கட்டியானது உண்டாகும்போதே அவ்விடத்தில் எரிச்சல், குத்தல், குடைதல் என்னுங் குறிகளைக் காட்டி, தடித்துச் சிவந்து வீங்கி வளரும். பின்பு நாளுக்கு நாள் மிகப் பெருத்து, வலையின் கண்போலச் சிறுசிறு கண்கள் தோன்றி, அதினின்று சீழ் கசியும். எளிதில் உலராமல் பரவிக்கொண்டே போகும்.

10. கூட்டுப்பிளவை :

''கூட்டுப் பிளவை தனையுரைக்கின்
கூடும் பலவாம் கொப்புளங்கள்
காட்டிச் சிலபல பிளவைகளே
கலந்தொன் ருகத் திரள்வதுவாம்
வாட்டி யுடலை மிகவெரிச்சல்
வருவித் தந்த நோயினனை
நாட்டி லிருப்பா னேவென்று
நாடச் செய்யு மீதறியே.''

(பொருள்) பல சிறு கட்டிகள் ஒரே கூட்டமாய்ப் பிறந்து, அவைகள் வளர வளரச் சிறுகட்டிகள் யாவும் ஒன்ருய் இணைந்து, ஒரு பெருங் கட்டியாய்த் தேறும். இக்கட்டியில் தாங்க முடியாத வலியும் எரிச்சலும் உண்டாம். நோயினனை வாட்டி ஐயப் பெருக்கையும் உண்டாக்கும்.

இவ்வாருக நீர்நோயில் காணும் கட்டிகளைப் பத்து வகையாய்க் கூறி, அவைகளின் குறிகுணங்களையும் தனித்தனியே கூறினும், அவைகள் யாவும் சீழ் கூடியே வருவதாகையாலும், அவைகளுக்கான மருத்துவங்களும் ஒன்றே ஆகையாலும் பொதுக் குறிகுணங்களையும், மருத்துவத்தையும் ஒன்றுபடுத்தியே கூறுவோம்.

பொதுக் குறிகுணங்கள் : முன்பு முற்குறியில் கூறியபடி, உண்டான கட்டிகள் தடித்து வீங்கி மிகுந்த வலியை உண்டாக்கி, நாளுக்குநாள் பரவிக்கொண்டே வரும். கட்டிப் பழுக்குந் தறுவாயில், தோல் சுருங்கிக் கருத்துக்காணும். பின் அதில் சிறு கொப்புளங்களைப் போல் பருக்கள் உண்டாய் உடைந்து அதினின்றும் சீழ் வடியும். சீழ் முற்றிலும் வெளியாகாமல், கட்டியில் அழுகிய சதையும் சீழும் கூடி அழுகி எளிதில் உலராமலிருக்கும். மருந்துகளிட்டுக் கழுவின் அழுகிய சதை சிறிது சிறிதாய் நைந்து இற்று வெளியாம். சில வேளை சிலையோடி கீழ் நோக்கிப் பரவும். இதனை அரசப் பிளவை (இராசக்கட்டி) என்றும் கூறுவர். இது பெரும்பாலும் முதுகிலும், பிட்டத்திலும், புறங்கழுத்திலும், தோளிலும் வருவதுண்டு. இவ்விடங்களில் காணின் துன்பங்கள் பல தொடரும்.

மற்ற விடங்களில் கட்டி தோன்றின், அதனை பக்கப் பிளவை என்று கூறுவர்.

மேலே கூறப்பட்ட பத்து வகைக் கட்டிகளுக்கும் அவைகளின் உருவத்தைக்கொண்டு பெயரிடப்பட்டன. ஆதலின் அரசப்பிளவை (இராசக் கட்டி)யும் பக்கப்பிளவையும் இங்குக் கூறப்பட்ட பத்தினுள் அடங்கி விடும்.

தீரும் தீராதவை : மேற்கூறிய பத்து வகைக் கட்டிகளுள் எவ் வகைக் கட்டியாயினும் கழுத்தின் பின்புறத்து மேல் பாகத்திலேனும், நடுமுதுகிலேனும் வரின் எளிதில் தீராவாம். இவ் விரண்டில் கழுத்துப் பின் புறத்திலுண்டாவது தீமையே விளைவிக்குமென்பர்.

குற்றவேறுபாடுகள் : இந்நோய் நீரிழிவிற்குத் துணை நோயாகையால், அந்நோயில் தோன்றும் வேற்றுமைகளோடு, உடல் வன்மையும் குறைந்து ஐயத்தை மிகச் செய்து, குருதியைக் கேடடையச் செய்யும்.

மருத்துவம் : நீரிழிவுக்கான மருத்துவம் செய்வதோடு புறமருந்து களையும் கையாளல் வேண்டும். வேண்டுமாயின் அறுவை மருத்துவமும் செய்யலாம்.

புறமருந்து : நீரிழிவு நோயுடையார், சொறிந்து புண்படினும், அடிப்பட்டுப் புண்படினும், அவைகள் உடனே எளிதில் உலர்ந்து போகக் கூடிய வழிகளை நாடல் வேண்டும். அவ்வாறு சிறு பரு அல்லது கொப்புளங்கள் காணினும் உடனே மருத்துவம் செய்தல் நல்லது. புண் அல்லது அடிப்பட்ட விடம் பெரிதாகா வண்ணம் அமிர்த வெண்ணெய், பச்சை எருவை, புங்கு எண்ணெய் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பூசி உலர்த்தல் வேண்டும். பருக்கள் தோன்றின், அவைகளுக்கு வெந்நீர், வறுத்த தவிடு முதலியவற்றை ஒற்றடமிட்டுப் போக்கவேண்டும். அதற்கு அடங்காமல் பெருகுமாயின், சீதா இலை, அந்திமல்லி இலை, எருக்கிலை இவைகளுள் ஏதேனும் ஒன்றை, எண்ணெய் பூசி அனலில் வெதுப்பி, சூடுடன் கட்டிக்கு வைத்துக்கட்டப் போகும். இதற்கும் அடங்காமல் சீழ் கோத்துப் பெருகுமாயின் :

பிராயம் பட்டைப்பால் (குட்டிப்பலா), அத்திப்பால் இவைகளைக் கட்டியின் மேல் பற்றிடலாம்.

தேன்மெழுகு 1 பலம், வெள்ளைப் பாடாணம் விராகனெடை கொண்டு, தேன்மெழுகை உருக்கி வெள்ளைப் பாடாணத்தைப் பொடித் துத் தூவிக்கிண்டி அதை மெல்லியதாய்த் தட்டி, கட்டியின் மீதுவைத்துக் கட்ட, கட்டி பழுத்து உடையும், கட்டி பழுத்து உடைந்த பின், வெந்நீர் விட்டுக்கழுவி சீழை வெளிப்படுத்தியபின், துணியை மத்தன் எண்ணெயில் துவைத்துப் புண் குழியிலிட்டுக் கட்டிவைக்கவும். இவ்வாறு புண் உலரும் வரை கழுவிக் கொண்டு மருந்திட்டு வரவும். மத்தன் எண் ணெய்க்குப் பதிலாய், ஆடு தீண்டாப்பாளை எண்ணெய், புங்கு எண் ணெய், விரண சஞ்சீவி எண்ணெய் இவைபோன்றவைகளையும் வழங்க லாம்.

கட்டி பழுத்து உடைந்ததும், சிலவேளை எளிதில் உலராமல், சிலை யோடிய புண்போலப் புடம் வைப்பதுண்டு. அப்போது வீரம், பூரம், இலிங்கம் முதலியவைகளால் செய்யப்பட்ட களிம்பு வகைகளைத் திரியில் ஊட்டி, புரையோடும் வழியே செலுத்திப் புண்ணை உலர்த்தலாம். அல்லது அறுவை செய்து புண்ணை ஆற்றலாம். சீழ் பெருகாதவாறு உள்ளுக்குப் பூரபற்பம் கொடுத்தல் நன்று. நீர்ப்போக்கையும் அதில் உள்ள சர்க்கரையும் குறைத்தற்கான மருந்தும் கொடுத்து வருதல் வேண்டும்.

உணவு : நீரிழிவு நோய்க்குக் கூறிய உணவே இதற்கும் பொருந் தும்.

## குடிவெறி நோய்

வேறு பெயர் : மதாத்தியம்.

இயல் : இது, கள், சாராயம், புளிப்பேறிய பழச்சாறுகள் முதலிய வற்றை அளவிற்கு விஞ்சிப் பருகலின் பயனாக, அறிவு குன்றிக் கண்டது கண்ட வாறாகப் பேசச் செய்யும் இயல்புடைய நோய்.

குடிவகைகளின் பண்பும் செய்கையும் : இது வெப்பு, வறட்சி, புளிப்பு அல்லது காரம், பரவுந் தன்மை, காற்றில் கலக்குந் தன்மை, நுண்மை ஆகிய பண்புகளையுடையதாகும். உண்டபின் உடற்குள் ஒருவித அனலை எழுப்பி, மனத்தைத் தூண்டி, ஒரு விதக் களிப்பைத் தந்து இனிதாகவும், கடுமையாகவும் பேசச் செய்து, பின்பு அறிவையும் உடல் நிலையையும் குன்றச் செய்யும்.

இதில் காணுங் குறிகுணங்களை நான்கு நிலைகளாகச் சில நூல்கள் கூறும்.

1. முதல் நிலையில், குடிவகைகளுள் ஏதேனும் ஒன்றைப் பருகின், மனத்திற் கொருவிதக் கிளர்ச்சி, ஊக்கம், களிப்பு இவற்றைத் தந்து, புத்திக் கூர்மையையும் அளித்து, முன்பு மறந்துபோனவற்றை ஞாபக மூட்டி, உடலுக்கு ஒருவித வெப்பத்தையும், உடல் வன்மை பெற்றது போன்றஉணர்ச்சியையும் உண்டாக்கி,ஆண்மை உடையவனெனச்சிற்றின் பத்திலீடுபட நினைக்கவும் செய்யும். அன்றியும் உண்ட உணவை எளிதில் செரிப்பிக்கும் ; உணவைப்பெரிதும் விரும்பச் செய்யும், மனக் கிளர்ச்சியாலும், உடல் வன்மையாலும் மகிழ்ச்சியைப் பிறக்கச்செய்து இனிமையாகப் பாடல், ஆடல்களில் தலைப்படுத்தும்.

2. குடியின் இரண்டாம் நிலையில், குடியினால் வன்மை குறையக் குறைய முன்பு கூறிய மனக்கிளர்ச்சி, உடல் வன்மையாவும் படிப்படியே தாழ்ந்து, அறிவு குன்றி, இயற்கையான நன்னடக்கை நீங்கி, அதற்கு மாறாக வெறி பிடித்தவன் போலப் பிறரை அடித்தல், உதைத்தல், திட்டல் என்னுல் தீச்செயல்கள் உண்டாகும், பின்பு தன்னை அறியாமல் தூங்கச் செய்யும்.

3. மூன்றாம் நிலையில், குடியின் அளவுக்குத் தக்கவாறு, முற்கூறிய இரண்டு நிலைகளில் காணுங் குறி குணங்களுள், தூக்கம் தவிர மற்றக் குறி குணங்கள் யாவும் பதிந்து, அடங்கா வெறி பிடித்தவன் போலத்

திரிவதன்றி, அடாது செய்யத் துணிவதோடு எவரையும் மதிக்கமாட்டான் ; அறி வழிந்து தான் செய்வதும் அறியமாட்டான் ; மனத்தில் உள்ளவற்றை ஒளிக்காமல் வெளியிடுவான்.

4. நான்காம் நிலையில், மனநிலை அழிவதோடு, உடல் நிலையும் அழிந்து, கைகால் தளர்ந்து நடைதட்டுத்தடுமாறி, மரம்போலக் கீழ் விழுவான். நாடி நடைதளரும். உடல் வியர்த்துக் கைகால் சில்லிடும். சில வேளை உயிரையும் மாய்க்கும்.

பொதுக்குறி குணங்கள்: குடிவகைகளைக் கொண்ட உடனே, ஒரு வித மனமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தந்து, உடல் வன்மை பெருகியதுபோன்ற தோற்றமும் ஏற்படும். இதனால், போகப்போக அறிவு மயங்கி,மயக்கமும், கைகால் தளர்ந்து, உதறலும் நாவரட்டலோடு நீர் வேட்கையும் கண் இருளடைதலும், தலை சுற்றலும், மார்பு படபடத்துத் துடித்தலும் ஆகிய குறிகளைக் காட்டிப் பின்பு மனத் தடுமாற்றம், புலம்பல், ஆடல், பாடல் வாயில் சொள்ளுவடிதல், வாந்தியாதல் என்னுங் குறிகுணங்கள் காணப்படும். அளவு கடந்து குடிக்கில், இது மேற்கூறிய குறி குணங்களோடு சோகத்தையும் இடைவிடா வாந்தியையும் உண்டாக்கும். அதைத் தொடர்ந்தே, மயக்கத்தையும் உரத்த குறட்டையையும் வருவிக்கும். அப்போது மல்லாந்து கைகால்களை நீட்டிச் சுரணையற்றுக் கிடப்பதுமல்லாமல், உடல் முழுமையும் வியர்த்தல், நாடி நடைதளர்தல், கைகால்கள் துவண்டு போதல், மூச்சு திணறல் என்னுங் குறிகளையும் காட்டிச் சிலவேளை கொல்லுவதுமுண்டு.

குற்ற முதலிய வேறுபாடுகள் : இக்குடி அழல் (பித்த) குற்றம், தன்னிலையில் பிறழ்ந்து தனக்குத் துணையாக மற்றைய இரு குற்றங்களையுங் கூட்டிக்கொண்டு, கால்களில் (வாயுகளில்) கீழ் நோக்குக்கால், மேல் நோக்குக்கால், பரவுகால் ஆகியவைகளையும் தன்வழி பிறழச் செய்யும் ; தன்னளவில் மிகுந்த அழல் குற்றத்தின் அளவாக, வெறிநோய் போன்று ஆட்டம் பாட்டம் போன்ற குறிகுணங்களையும் காட்டும் ; கீழ் நோக்குக்கால் கேடடைவதால், எருக்கட்டு அல்லது கழிச்சலை உண்டாக்கும் ; மேல் நோக்குக்கால் தன்னிலை திரிவதால், வாந்தி பெரு மூச்சு, மூச்சுத் தடுமாறல் போன்ற குறிகுணங்களையும், பரவுகாலின் செயலால், நடுக்கம், தளரல், வியர்வை முதலியவற்றையும் பிறப்பிக்கும்.

நாடி : நோய்க்கு முதலாய் நின்றது அழலேயாகையால், அதன் நடையே இந் நோய்க்குமாம் அவ்வாறே, முதல் நோய்க்குத் துணையான மற்றைய குற்றங்களையும் அவைகளின் நடையால் அறிக.

மருத்துவம் : குடிவெறியில் காணும் குறிகுணங்களை நான்கு நிலைகளாக வகுத்ததில், முதல்நிலையில் அழல் குற்றமும், இரண்டாம் நிலையில் வளிக் குற்றமும், மூன்றாம் நிலையில் ஐயக் குற்றமும், நான்காம் நிலையில் முக்குற்றமும் தன்னிலை மிகுந்து காணுமாகையால் நோய்க்கான மருத்துவமும், மிகுந்த குற்ற அளவுக்கு ஏற்றதாக விருத்தல் வேண்டும்.

முதல் நிலைக்கு :

1. நாவற் பழச்சாறு, தேன், இஞ்சிச்சாறு ஆக மூன்றையும் ஓர் அளவாக கூட்டி அரை முதற் ஒரு ஆழாக்கு வரை பருகச் செய்யலாம்.

2. சீரகத்தை வெடிக்கவிட்டு, அரை ஆழாக்குத்தேனும், அரை ஆழாக்கு எலுமிச்சம் பழச்சாறும் விட்டு, ஒரு கொதி வந்தவுடன் வடித்து, சிறிது சிறிதாகக் கொடுக்க வெறி போவதன்றி நாவரட்சியும் நீங்கும்.

3. அரிசிக்காடி அரைப் படியில் எலுமிச்சம் பூ அரைப்படி சிதைத்து அதில் இட்டுப் பிசைந்து வடித்த நீரைக் கால் ஆழாக்களவாக நீர் வேட்கைக்குக் கொடுத்தல் நன்று.

4. கருப்பஞ் சாற்றொடு, சீரகம், ஏலம், சுக்கு இவற்றைச் சிறிது பொடித்துக் கூட்டிக்கொடுக்க, விக்கல், பெருமூச்சுபோம், வெறி தெளியும்.

5. பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, பற்பாடகம், சீந்தில், கோரைக்கிழங்கு வகைக்கு ஒரு பலம் எடுத்து, நீர் ஒரு படி விட்டு எட்டிலொன்றாகக் காய்த்துக் குடி நீர் அரை ஆழாக்குடன் கருப்பஞ்சாறு அவ்வளவு கூட்டிக் கொடுக்க, வாய் குமட்டலும் வாந்தியும் நீங்கும்.

6. கொட்டை முந்திரி (திராட்சை) சாறுபடி கால் கொண்டு, அதில் உலர்ந்த பேரீந்தும், இலந்தங்கொட்டைச் சதையும் கூட்டிப் பிசைந்து வடித்த நீரை, அடிக்கடி பருகச் செய்ய, உதடு நாவரண்டு போதல், நா இழுத்துக் கொள்ளல், அரட்டல், புரட்டல் முதலியன போம். அல்லது, திராட்சை பழத்தின் சாறு, தமரத்தங்காய் சாறு, புளித்தகாடி, புளிப்புமாதுளம் பழச்சாறு, புளியாரைச்சாறு ஆகிய இவைகள் வகைக்குக் கால் ஆழாக்காகக் கொண்டு, அதில் இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாபத்திரி வகைக்கு ஒரு விராகனெடை பொடித்துக் கூட்டிப் பிசைந்து வடித்தல் நீரில், உச்சிக்கரண்டி அளவு எடுத்துச் சிறிது நீர் கூட்டிப் பருகச் செய்யலாம்.

7. உடல் எரிச்சல், உடல் சூடாக இருத்தல் என்னுங் குறிகள் காணின், குளிர்ந்த நீரில் குளிக்கச் செய்வதுண்டு.

இரண்டாம் நிலைக்கு.—புளியாரைக் கீரை, வல்லாரை, பேரீந்து, அத்திப் பழம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை ஆகிய இவைகளை ஓரளவாகக் கூட்டி முறைப்படி குடிநீராக்கியதில் அரை ஆழாக்காக அடிக்கடி கொடுக்கலாம்.

2. சுக்கு, ஆடாதோடை, நிலவேம்பு, பேய்ப்புடல், வேப்பம்பட்டை, கொத்துமல்லி வகைக்குப் பலமிரண்டு ஒன்றிரண்டாக இடித்து, அதில், காடிநீர், மாதுளம் பழச்சாறு, மோர் தெளிநீர் இவற்றை ஓர் அளவாக எடுத்து அதில் ஒருபடியிட்டுக் காய்த்து, நாலில் ஒன்றாக வடித்ததில் அரை ஆழாக்களவு காலை மாலை கொடுக்கவும்.

3. பசு நெய் படி அரை, பால் படி அரை கூட்டி அத்துடன் இரண்டு காடையின் கறி சேர்த்து வெந்துவரும்போது, இலவங்கப்பட்டை, சாதிக்காய், மிளகு, சீரகம் வகைக்கு ஒரு வராகன் எடையைச் சிறிது பால் விட்டரைத்து அதில் கூட்டி, நெய் காய்த்து வடிப்பதுபோல் வடித்தெடுத்ததை, காலை மாலைகளில் ஓர் உச்சிக் கரண்டி அளவு கொடுக்கலாம்.

4. உளுந்து தைலம் போன்றவைகளைக்கொண்டு, தலை உடல் முழுமையும் பூசிப் பிடித்துத் தலை முழுகுமாறு செய்யலாம்.

மூன்றாம் நிலைக்கு.—1. அரை ஆழாக்கு இஞ்சி சாற்றில் இரண்டு வராகனெடை சுக்கும் திப்பிலியும் பொடித்துக் கூட்டிக் கொடுக்கலாம்.

2. சிறு காஞ்சொறி, சிறு தேக்கு, திப்பிலி, திப்பிலி வேர், ஓமம், இலவங்கம் இவற்றை ஓர் அளவாகக் கூட்டி, முறைப்படி குடிநீராக்கி அரை ஆழாக்களவு காலை மாலை கொடுக்கலாம்.

2. ஆட்டு எலும்பு, இலவங்கம், இஞ்சி, மிளகு கூட்டிச் சாறிறக்கியும் கொடுக்கலாம்.

4. மேலுக்குச் சித்தாமுட்டித் தைலம், அரக்குத் தைலம், சுக்குத் தைலம் போன்றவற்றை உடல் முழுமையும் பூசிப் பிடித்து வெந்நீரில் குளிக்கச் செய்யலாம்.

நான்காம் நிலைக்கு.—இந்நிலையில் முப்பிணி தொடருமாகையால் முப்பிணிக்கான கண் மருந்து, மூக்குப்பொடி, புகை, என்னும் இவைகளை கொண்டும் அகமருந்து கொண்டும் பிணியை நீக்கவேண்டும்.

## செருக்கு நோய்.

வேறு பெயர் : மனச்செருக்கு, அகங்கார நோய், மத நோய்.

இயல் : இது, மனத்தினுள்ளே ''தான் மிகு வன்மையுடையவன்'' என்னுஞ் செருக்குக் கொண்டு கண்டதைக் கண்டவாறாகப் பேசல் சீறி விழுதல், சினங்கொள்ளல், காரணமின்றிக் களிப்படைதல்'' என்னுமியல் புடைய நோயாகும்.

நோய் வரு வழி : வேளையும் நேரமுமின்றிக் கண்டபோதெல்லாம் குடியிலேயே மூழ்கி இருத்தல், அளவு கடந்து குடித்தல், உணவு உண்பதற்கு முன்பும் பின்பும் குடித்தல் வேலை செய்து முடித்தவுடன் குடித்தல், படுக்கைக்குப் போகுமுன் குடித்தல் ஆகியவற்றால் இந் நோய் பிறக்கும்.

முற்குறிகள் : குடியின் கேட்டால், அறிவு குன்றல், உடல் வன்மை கெடல், உடல் இளைத்தல், வாய் சுவை அறியாமை, நீர்வேட்கை, உடல் எப்போதும் சூடாக இருப்பது போன்று இருத்தல், மார்பு துடித்தல் முதலியன ஏற்படும்.

நோய் எண் : குற்ற அளவாக நான்கும், குருதி முதலியனவற்றால் வருவன மூன்றுங் கூடி ஏழென்பர். அவை வளி, தீ, ஐயம், முக்குற்றம், குருதி, நஞ்சு செருக்கு முதலியனவாம்.

## குறிகுணங்கள்.

**1. வளி செருக்கு நோய் :**

இந் நோயில், உடல் வன்மை குறைந்து கருத்து, தோல் சுருங்கி முகம் வரண்டு, விக்கல், மேல் மூச்சு, நாடி தளர்தல், கை, கால் தலை, முதலியன நடுங்கல், தூக்கமின்மை, உடல் முழுமையும் குத்தல், பக்க சூலை, குரற்கம்மல், எப்பொழுதும் தன்னைமறந்து வாய் பிதற்றல் என்னுங் குறிகள் உண்டாகும்.

**2. அழல் செருக்கு :**

இந் நோய், நாவறட்சி, உடல் எப்போதும் சூடாகவே இருத்தல் வியர்த்துக்கொண்டே இருத்தல், தலை சுற்றல், கிறுகிறுத்தல், அடிக்கடி சுரம் வருதல், நீர் வேட்கை, மயக்கம், பெரு அளவில் அடிக்கடி கழிதல்

உடல் குருதி குன்றி வெளுத்து அதில் மஞ்சட் சாயை பொருந்தி, காணல் என்னுங் குறிகுணங்களைப் பெறும்.

3. ஐய செருக்கு நோய் :

இஃது உடல் பருத்தல், பளுவாகத் தோன்றல், எப்போதும் உடல் சில்லிட்டிருத்தல், இடைவிடாத வாந்தி, நாசுவை அறியாமை, மார்பு துடித்தல், சோம்பல், மிகுதூக்கம் என்னுங் குறிகளை யுடையதாம்.

4. முக்குற்ற செருக்கு நோய் :

இதில், மேற்கூறிய மூவகைப்பட்ட நோய்களின் குறி குணங்களுள், சிலவேனும் பலவேனும் ஒன்றுகூடிக் காணும்.

5. குருதிச் செருக்கு நோய் :

குடி வெறியின் பெருக்கால், குருதி கொதிப்படைந்து பெருகி, கண்கள் சிவக்கும், அத்துடன் அழல் நோயில் கூறிய குறி குணங்களும் சில சேரும். அன்றியும், குருதியின் கொதிப்புக்கேற்ப, மயக்கம், மூர்ச்சை தன்னை அறியாது மரம்போல் வீழ்ந்து கிடத்தல் என்னுங் குறிகளும் தொடரும்.

6—7 இச் செருக்கு நோய்கள் குற்றத்தின் அளவாகவே அடங்குமாகையால், தனித்துக் கூறவில்லை.

## வெறி நோய்.

வேறு பெயர்கள் : இதற்குப் பித்து நோய், பயித்திய நோய், பித்த நோய், உன்மாதம் எனப் பல பெயர்கள் உண்டு.

இயல் : இது மன நிலை மாறி, அறிவழிந்து, கண்டது கண்டவாறாகப் பேசல், ஆடல், பாடல், அடாது செய்தல், அடித்தல், திட்டல் முதலிய தன் இயற்கைக்கு மாறாகச் செயல்களைக் கொண்ட நோயாம்.

முற்குறிகள் : இதில், மனநிலை குன்றல், எதற்கும் அஞ்சுதல் அல்லது துணிபு கொள்ளல், பெண்ணின்மேல் இச்சை அல்லது வெறுப்பு, மெலிந்து பேசல் அல்லது உரத்துப் பேசல், முக்காடிட்டிருத்தல், மனச் சோர்வு, முணமுணத்தல், செயல், பேச்சு முதலியவற்றில் தன் இயற்கைக்கு மாறுபட்டிருத்தல் என்னும் முற்குறிகளைக் காட்டும்.

நோய் வருவழி : உடல் நிலையும் மன நிலையும் கெடுவதனால், இந்நோய் பிறக்கும். அவைகள் கெடுதற்குக் காரணங்கள்; அளவுகடந்து உண்பது, உணவில்லாமல் பட்டினி கிடப்பதும், கள் முதலிய மயக்கத்தைத் தரக்கூடியவைகளை மிகுதியும் கொள்ளல், பொருளின்மீது அளவு கடந்த இச்சை வைத்தல், அடிக்கடி அஞ்சக்கூடிய நிலையேற்படுதல், அடிக்கடி சினங் கொள்ளல், அளவு கடந்து இன்புறல், துயரமடைதல் முதலியன வாகும். அன்றியும் இவ் வெறிநோய், வளி (வாத) நோயச் சார்ந்த பக்கவாதம், வலி நோய்கள் முதலியன நோய்களுக்குத் துணை நோயாகவும் ; நெடு நாட்களாக நோயிலீடுபட்டோர்க்கும் பிள்ளை, பெறறவர்கட்கு உடல் நிலை கெட்டிருக்கும்போதும் இந்நோய் வரக் கூடும். ஈதன்றித் தாய் தந்தையர் வழியாகவும் தொடருவதுண்டு.

ஒக்கல் (யோக) நிலையில் ஒவ்வொரு நிலையையுங் (ஆராதாரங் களையுங்) கடந்து, கண்ட நிலையாகிய துரிய நிலையடையும்போது சிறிது தவறினும் வெறி பிடிக்கும் என்பாருமுளர்.

இந்நோயை வருவிப்பது அழற்குற்றமே (பித்தமே) ஆதலின், இந் நோயினைப் பயித்திய நோய் என வழங்குவாராயினர். இயற்கை நிலை மாறிக் கண்டது கண்டவாறாகப் பேசுபவனைப் பித்தன் என வழங்குவது இயல்புதானே. சுந்தரனும், சிவனைப் '-பித்தாய் பிறைசூடி என'' வாழ்த்தினார்.

நோய் எண் : இது குற்ற அளவாக, வளி, தீ, ஐயம், முக்குற்றம் என நான்கு வகைப்படும்.

வளி வெறி நோய் : (வாத உன்மாதம்) :

இந்நோய் பிறக்குமுன்பே, உணவில் வெறுப்புண்டாகும்; அன்றியும், தடித்த (மட்டி) உணவு, குளிர்ந்தாறிய உணவு, தாழ்ந்த வகை உணவு இவற்றை விரும்பி உண்ணுமாறு செய்யும். இவற்றால், உடல் வன்மையும் மன நிலையும் கெட்டு, வளிக் குற்றம் தன்னளவில் மிகுந்து, சிரித்தல், ஆடுதல், பாடுதல், அழுதல், வாயைக் கோணிப் பேசுதல், இயற்கை நடை மாறி நடத்தல் என்னுங்குறிகள் உண்டாகும். உண்டு சிறிது நேரங்கழித்தபின், இவ்வெறி நோய்க்குறி குணங்கள் மிகக் கடுமையாகக் காணப்படும்.

அழல் வெறிநோய் (பித்த உன்மாதம்) :

அழலை உண்டாக்கக்கூடிய உணவாகிய காரப் பொருள்களையும், புளிப்புப் பொருள்களையும், சூட்டைப் பெருக்கக்கூடிய உணவுகளையும் கொள்ளுவதாலும், மாறுபட்ட நடத்தைகளாலும் அழல் குற்றம் தன்னிலையில் மிகுந்து, உடல் வன்மையும் மனநிலையும் கெட்டு, அறிவழிந்து கொடுமை, பல செய்யும். இந்நோயில், தன்னை அறியாமலே, பரபரப்புடன் ஓடுதல், பொறுமையின்மை, துணியை அவிழ்த்தெரிந்து உலாவல், கடிந்து பேசல், அடிக்கடி சினந்து பேசல் என்னுங் குறி குணங்களோடு, குளிர்ந்த இடத்தையும், நிழலையும் விரும்பல் குளிர்ந்த நீர், குளிர்ந்து ஆறிய உணவு இவைகளைக் கொள்ள விரும்புதல் ஆகிய குணங்களும் உண்டாகும்.

ஐய வெறி : (கப உன் மாதம்):

அளவு கடந்த ஐயத்தைப் பெருகச் செய்யும் உணவுகளைக் கொள்ளல், உடல் வன்மைக்கு மிகுந்த உழைப்பு, எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டே இருத்தல் என்பவைகளால் இந்நோய் பிறக்கும். இதனால் அறிவழிந்து புத்தி கெட்டு மனமழுங்கும். பெண்களின் மேல் மிகுந்த இச்சை கொள்ளல், அவர்களுடன் தனித்துக் பேசவும் தனித்து இருக்கவும் விரும்புதல் அடிக்கடி தூக்கமுண்டாதல், வாயின் சுவை கெடல், வாய்நீர் ஊறல், வாயிலிருந்து எச்சில் வடிதல், உடல் வெளுத்துப் போதல்,செயலற்று ஓரிடத்தே படுத்திருத்தல்,பேச்சு மாறாட்டம் என்னுங் குறி குணங்கள் ஏற்படும். உணவு உண்ட உடனே வெறிக் குறிகள் மிகுந்து காணும்.

முக்குற்ற வெறி (சன்னி உன்மாதம்) :

இதில், முற்கூறிய முக்குற்றங்களில் காணும் குறி குணங்கள் யாவும் சேர்ந்திருப்பதோடு, அவைகளைக்காட்டிலும் கொடுமைகள் பலவற்றை உண்டாக்கும்.

சோக வெறி :

கைப் பொருளை இழத்தல், மக்கள் மனைவியை இழத்தல், தீடீரென வந்த பயம் முதலியவைகளால், மனநிலை உடனே கெட்டு வெறி உண்டாகிறது. இது கண்டவாறாகத் தன்னை அறியாமல் பேசல், சிரித்தல், மனத்திலுள்ளதை வெளிப்படையாகக் கூறி விடுதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

நச்சு வெறி :

இது மூளையைக் கெடுக்கக்கூடிய நச்சுப் பொருள்களைக் கொள்ளு வதால் உண்டாகும் நோய். இதனில் அழல் குற்றத்தால் வரும் வெறிநோயின் குறி குணங்கள் யாவும் காணும். அவைகளுடன், உடல் ஒளி, நிறம், ஐம்புலன்களில் செயல் யாவும் குன்றும். உடல் கருத்தல், கண்கள் சிவத்தல் ஆகிய குறிகளும் காணும்.

பொதுக் குறி குணங்கள்.—இந்நோயில், மனச்சஞ்சலம், ஓரிடத்தும் நிலையாமை, தன்னைத் தான் அடக்கிக்கொள்ள முடியாமை, எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பது போலிருத்தல், உரத்துப் பேசல், தூக்க மின்மை, பேசுதலில் பொருளில்லாமை, சிலவேளை பேச்சில் தெளி விருத்தல், கடவுள் வழிப்பாட்டைப்பற்றிப் பேசல், அடக்கமுடியாத வெறி யனைப் போலக் கண்டவாறு பேசல், அடித்தல் என்னுங் குறிகளும் காணும்.

பொதுக் குறி குணங்கள்.

சிலர்க்கு இந்நோயில், மனங்குன்றி ஏதும் பேசாது ஓரிடத்தில் உட்கார்ந்திருத்தல், இல்லாத பொருளை இருப்பதாகக் கூறல், மக்களை வெறுத்தல், ஊக்கமின்மை, கொலை செய்துகொள்ள முற்படல் என்னுங் குறிகள் தோன்றும். அன்றியும், மேற்கூறிய குறிகள் நாளுக்கு நாள் முதிர்ந்துகொண்டே வந்து, தகாத நடத்தைகளையும், கெட்ட குணங் களையும் கபடத்தன்மையையும் உண்டாக்கி, பிறரை வஞ்சிக்கவும், கொல்லவும் ஊக்க மூட்டினும் ஊட்டும். எவர் எது பேசினும், தன்னை நிந்திப்பதாகக் கொண்டு உண்ணாது பட்டினி இருக்கச் செய்யும். இவ் வாறு சிறிது காலம் சென்றபின் நோயுற்றோர் உடல் இளைத்து, தூக்கமில்லாது, பேசவும் அசையவும் முடியாமல் படுக்கையில் பிணம் போல் இருந்து, சிறுநீர், எரு கழியாமலும் கிடப்பதுண்டு. அல்லது எடுத்ததற்கெல்லாம் எதிர்த்தலாயினும், அடித்துத் துரத்தும் தன்மை கிடையா; இத்தகைய குறிகள் சிலருக்குப் போகப் போகக் குறைந்து கொண்டே வந்து, உடல் நிலையும், மன நிலையும், இயற்கை நிலையை அடைந்து தெளிந்து, மீண்டும் முன்னிருந்தது போலவே யெல்லா வெறி குணங்களும் தோன்றுவதுமுண்டு. இவ்வாறாகச் சிலருக்கு நோய் மாறி மாறி வருவதும் போவதுமாக இருப்பதுமுண்டு.

வளிக்குற்றத்தால் வரும் நோய்களில், பக்கவாதத்திற்கும் மேக நோய்க்குந் துணையாக இவ்வெறி நோய் தொடருவதும் உண்டு. இது கை கால் சூம்பிப் போதல், உடல் வன்மை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருதல், கை கால் நடுக்கம், மனத்தடுமாற்றம், கண் மங்கல், வாய் குளறல், தலை நோய், அடிக்கடி சினங்கொள்ளல், ஞாபகமறதி, தான் எதிலும் மேன்மையுள்ளவன் என நினைத்து அவ்வாறே நடக்க விரும்புதல், அடிக்கடி மயக்கமுண்டாய் மூர்ச்சித்தல், வலியுண்டாதல் என்னுங் குறிகளோடு முகம் வேறுபட்டுக் கண்விழி பிதுங்கி மிரண்டவன் கண்போல் விழித்தல் என்னுங் குறிகுணங்களையும் காட்டும்.

**தீரும் தீராதவை.**—எல்லா வெறி நோய்களும் தக்க மருத்துவத்தி லும், நோயின் மனப்பான்மை மாற்றும் வழியிலும் தீருமேயாயினும் மண்டையில் அடிபடுவதால் உண்டான வெறி நோயும், வெறி நோயில் கண்கள் வெளியில் பிதுங்கிக் காணல், வாயிலிருந்து சொள்ளு வடிதல், விரைந்து நடத்தல் அல்லது ஓடித் திரிதல், கை கால் நடுங்குதல் முதலிய குறிகளை உள்ள நோயும் எளிதில் தீராதாம்.

**குற்ற முதலிய வேறுபாடுகள்.**—முன்பு கூறியபடி உணவு, செய்கை, முதலியனவற்றால், அழல் குற்றம் (பித்த தோடம்) தன்னளவில் மிகுந்து, உடற்கட்டுகள் தாதுகள் ஒன்றன்பின் ஒன்றாக மெலிந்து உடல் நிலையும் மன நிலையும் கெட்டு இந்நோய் வருவதும் உண்டு.

ஈதன்றியும், யோக நிலையில் துரிய நிலையாகிய கண்டத்தை யடையும்போது, சிறிது பிசகின் இந்நோய் பிறக்குமெனவுங் கூறுவர்.

குணவாகடம் 45

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

நாடி.

உறுதியுள்ள பித்தமது தோன்றில்
உறுதியுடன்—பைத்திய ரோகம்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

சதக நாடி

அழல் நாடியானது தான் இயற்கையாக நடக்கவேண்டியதற்கு மிஞ்சி நடக்குமாயின் அஃது வெறி நோயைக் குறிக்குமென்க.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பித்தமே கதித்தபோது பிதற்றிடும் பித்தே கேளு.
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பிறந்திடும் பித்த நாடி பிரண்டுமே நிற்கு மாகில்
வறண்டிடு மூலாதாரம் வாதையால் முடிவு செய்யும்
கறண்டது பித்த நாடி கதிப்போடு துடித்து நின்றால்
அறண்டிடும் பைத்தி யந்தான் அடைவொடு வந்து கூடும்.

நாடிநூல் பக்கம் 43.

உற்றிடும் பித்த நாடி யொழுங்கொடு எழும்பி நின்றால்
வற்றிடாப் பேசு கின்ற வசனமு மெழும்பி நிற்கும்
மத்திமம் பித்த நாடி மடங்கியே துடித்து நின்றால்
உத்தமப் பேச்சு தானும் ஒடுங்கவாய் குளறிப் பேசும்.

நாடிநூல் பக்கம் 43.

1. ''பித்தமாம் நாடிதானே
பெலத்தோடு தனித்து நிற்கில்
மத்திய பயித்தி யத்தை
வளர்த்திடும் வறட்சி சேரும்
உத்தம மூளை தானும்
உருகியே குறைந்து நிற்கும்.''

(பொருள்) அழல் நாடியானது வலிந்து தனித்து நிற்கில், வெறி நோயைப் பெருகச் செய்யும். வறட்சி உண்டாகும். மூளை உருகி அதன் வன்மையில் குறையும்.

2. ''உற்றிடும் வாதத்தோடு
உறவதால் பித்த மீறில்
நித்தமும் பிதற்றிப் பேசி
நினைவிழந் திருப்ப ரென்று.''

(பொருள்) வாத நாடியுடன் பித்தநாடி கூடி நடக்கின், தன் நினைவு ழந்து பிதற்றிப் பேசுவர்.

3. ''உதறியே பித்த நாடி
உழுவைப்போல் துடித்து நிற்கில்
பதறியே உடம்ப ழற்றும்
பாய்ந்திடும் சிறுநீர் வற்றும்,''

(பொருள்) அழல் நாடியானது உதறிப் புலிபோல் துடித்து நடக்கின் உடல் அழற்சிகொண்டு சிறுநீர் வற்றி வெறி நோய் உண்டாகும்.

மருத்துவம்.—தன்னிலையில் மிகுந்த அழல் குற்றத்தையும், அதனுடன் கூடிக் கேடடைந்த மற்றைய குற்றங்களையும் தன்னிலைப்படுத்தி, கேடடைந்த மனநிலை, மீண்டும் இயற்கை நிலையையடையவும் உடல் வன்மையைப் பெறவுமான மருத்துவங்கள் செய்தல் வேண்டும். அவை தலை முழுகச் செய்தலும், அறிவைத் தெளிவடையும் வழிகளைத் தேடலுமாம்.

குடிநீர்.—1. முலைப்பால், காலை மாலை இருவேளையும் கால் ஆழாக்கு அளவாக, ஐந்து முதல் ஏழு நாட்கள் வரையில் கொடுக்கலாம்

2. செங்கருப்புச் சாற்றைப் பிழிந்து அரை ஆழாக்களவு மேற்குறித்த நாட்களாகவும் கொடுத்தல் நன்று.

3. திராட்சைப் பழம், கோரைக் கிழங்கு, அதிமதுரம், தண்ணீர் விட்டான், மஞ்சள், சந்தனம் வகைக்குப் பலம் ஒன்றாகக்கொண்டு, ஒன்றிரண்டாக இடித்து, அதைப் பத்துப் பங்காக்கி, ஒன்றுக்கு, கால் படி நீரிட்டு எட்டில் ஒன்றாகக் காய்த்து வடித்து, ஒரு வேளை கொடுக்கவும். மேற்கூறிய பத்துப் பங்கையும் இவ்வாறே காலை மாலை ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு பங்கு எடுத்துப் புதிது புதிதாகச் செய்து கொடுக்கவும்.

செய் வகைகள்.—வெண்பூசனைச் சாறு படி இரண்டு, தாழை விழுதுச் சாறு படி ஒன்று, தென்னம்பாளைச் சாறு படி ஒன்று, கற்றாழைச் சாறு படி ஒன்று, செவ்விளநீர் படி ஒன்று, பசுநெய் படி இரண்டு, பசும்பால் படி இரண்டு இவற்றை ஒன்றாகக் கலந்து, சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கொட்டை நீக்கிய கடுக்காய், தான்றிக்காய், நெல்லி, சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டாத்திப்பூ, கடுக்காய்ப் பூ, கொத்துமல்லி, குரோசாணி, ஓமம் இவை வகைக்கு $3\frac{8}{1}$ விராகனாகக் கொண்டு இடித்து, சிறிது பால் கூட்டி நன்றாக அரைத்தெடுத்து, முன் கலந்து வைத்துள்ள சாறு முதலியவைகளுடன் சேர்த்து, சிறு தீயாக எரித்துப் பதத்தில் வடித்துக் கொள்க. அந்நெய்யில் சீனாக்கற்கண்டு பலமிரண்டு பொடித்துக் கூட்டிக் கலந்து, அதை ஒரு கரண்டி அளவாகக் காலை மாலை சாப்பிட்டு வரவும். அத்துடன் அப்பிரகபற்பம் கூட்டி 10 நாள் கொடுக்க நன்று.

பற்பச்செந்தூரம் : பேரண்ட பற்பம், எஃகுச்செந்தூரம், காந்தர் செந்தூரம், வல்லாரை நெய், வெள்ளாட்டுத் தலை மூளையால் செய்த எண்ணெய் இவைகளையும் வழங்கலாம்.

தலை முழுக்கு.—வல்லாரைக் கீரை, அகத்திக் கீரை, வெட்டிவேர் இவைகளால் ஆக்கிய எண்ணெய்களைச் செய்து, தலையில் தேய்த்து முழுகச் செய்வதும், எலுமிச்சம் பழச்சாற்றைத் தலைக்குத் தேய்த்துக் காலையில் குளிர்ந்த நீரில் முழுகச் செய்வதும் நல்லது.

மனநிலை தன்னிலைப் படும்படி, நோயின் வன்மை மாறும் வழியைத் தேடவேண்டும். கோயில் குளங்களுக்குக் கொண்டுபோதலும், கடவுளைப் பற்றிப் பேசுதலும், கற்பித்தலும் நன்மை தரும்.

உணவில், எளிதில் செரிக்கக்கூடிய உணவுகள், அழலைப் (பித்தம்) பெருக்கக்கூடிய உணவுகள் இவற்றைத் தவிர்த்து, குளிர்ச்சி தரக்கூடிய உணவுகளைக் கொடுத்தல் வேண்டும்.

## மயக்க நோய்.

வேறு பெயர்கள் : களைப்பு நோய், மூச்சடைப்பு நோய், மூர்ச்சை நோய் என்பனவாகும்.

இயல் : இது திடீரெனக் கண்ணிருண்டு, சுரணையற்று, அறிவழிந்து, மயக்கமுற்று மூச்சடைந்து மரம்போல் விழச்செய்யும் இயல்புடைய நோயாகும்.

நோய் தோன்றும் வழி : எளிதில் செரிக்கக்கூடாத உணவுவகைகளைக் கொள்ளுதலாலும், உடல்வன்மை கெட்டு, குருதி தன் அளவில் குறைந்து வருதலாலும், தகாத நடத்தையாலும், நாடி நரம்புகள் தளர்ந்து முப்பண்புகளுள், முதற்பண்பாகிய சத்துவகுணம் அடங்கி மந்த (தமோ) குணமுண்டாவதாலும், சிறுநீர், எரு முதலிய கழிவுகளை வெளியாக்காது அடக்கலாலும் இந்நோய் பிறக்கும் எனக்கூறுவர்; அன்றியும் சிலர்க்குக் குருதியின் மணத்தை முகருவதாலும், அதனைப் பார்த்தலாலும் மயக்கம் வருவதுண்டு. மற்றும் சிலர்க்குச் சிறிது சூடான நீரில் முழுகினும் அல்லது காற்றில்லாது மூடிவைத்துள்ள அறையில் நுழையினும் மயக்கம் உண்டாவதுண்டு.

முற்குறிகள் :

இதனில், தலைசுற்றல், வாய்குமட்டல், வாய் நீருறல், கொட்டாவி விடல், கைகால் சோர்வடைதல், தன்னை மறந்து அறிவழிதல், தமரகந் துடித்தல் என்னும் முற்குறிகளைக்காட்டி, கீழ்விழுந்து மயக்கமாகுமாறு செய்யும்.

நோய் எண்: எண்ணில் குற்ற அளவாக, வளி, தீ, ஐய, முக்குற்றம் என நான்கும், குருதி, நஞ்சு என இரண்டுங்கூடி ஆறு வகைப்படும். சிலர் இதைக் குற்ற அளவாக நான்கு வகை எனவுங் கூறுவர்.

1. வளிமயக்க நோய் (வாத மூர்ச்சை) :

இந்நோயில், மயக்கம், தலை சுற்றல், பார்வைக்கு எல்லாப் பொருள்களும் சிவப்பு, கறுப்பு அல்லது நீல நிறமாகத் தோன்றல், கண்ணிருளல் என்னுங் குறிகளைக்காட்டும், பின்பு வாய் நீரூறல் வாய்குமட்டல், வாயில் நுரை தள்ளல், உடல் நடுக்கம், கை, கால்' விதிர்விதிர்த்தல், தமரகத்துடிப்பு என்னுங் குறிகளைக்காட்டி, அறிவிழந்து கிடக்கச் செய்யும். உடல் கருக்கும். சற்றுப் பொறுத்துத் தெளிந்து எழுந்து இயற்கைத் தொழிலைப் புரியுமாறு செய்யும்.

2. அழல் மயக்க நோய் (பித்த முர்ச்சை) :

இந்நோயில், கண் பார்வைக்கு எப்பொருளும் சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாகத் தோன்றி தலைசுற்றல் முதலிய குறிகளைக் காட்டி, கண் இருண்டு மயக்கம் உண்டாகும். உடல் முழுவதும் வியர்க்கும். வாயில் நுரை தள்ளும். சிறிது நேரங் கழித்துத் தெளிவடைந்து, நீர் வேட்கை மிகுதியால் நீரைப் பருகச் செய்யும். மனச் சோர்வுண்டாம். உடல் கரு நிறத்தோடு மஞ்சளித்துக் காணும்.

3. ஐய மயக்க நோய் (கப மூர்ச்சை) :

இதில் அடிவயிற்றில் ஒன்றும் இல்லாதது போலத் தோன்றி, எங்கும் இருள் சூழ்ந்தது போன்ற தோற்றத்தோடு, கண்கள் இருண்டு, மயக்க முண்டாய், சுரணையற்றுக் கிடக்கச் செய்யும். வாயில் நுரைத்தள்ளு தலும், வாய் கோணிப் பற்கடித்தலும், மிகவும் உடல் வியர்த்தலும் ஆகிய இக்குறிகளைக்காட்டி பல நாழிகள் கழித்து தெளிவை உண்டாக்கும். தெளிவடைந்து எழுந்த பின்பு உடல் முழுமையும் நோதல், உடல் ஊதிக்காணல் என்னும் குறிகளும் காணும்.

4. முக்குற்ற மயக்கம் (சன்னி மூர்ச்சை நோய்) :

இது முற்கூறிய வளி, தீ, ஐயம் ஆகிய குற்றங்களால் வரு நோய் களில் காணுங் குறிகுணங்களில் சிலவேனும் பலவேனும் ஒன்றுகூடிக் காணும் நோயாம், இந் நோயில் மற்றவற்றில் காணும் வாயில் நுரை வடிதலாகிய குறிகள் காணாவிடினும், நோய் மிகுந்தெழுந்து எளிதில் தன் உணர்ச்சி அற்று விழச் செய்யும்.

குருதி மயக்கம் (இரத்த மூர்ச்சை) :

சிலர், ஆடு, மாடு, கோழி முதலிய உயிர்ப் பொருள்களை அறுக்குங் கால் வடியும் குருதியை காணினும், அக் குருதியின் மணத்தை முகரினும் கட்டி முதலியவற்றை அறுத்து மருத்துவஞ் செய்வதைக் காணினும் அவ்விடத்திலேயே வாய்குமட்டித், தலைசுற்றிக் கண்ணிருண்டு மயங்கி அறிவழிந்து மரம்போல் சாய்ந்து விழுவர். விழுந்தபின், மிகுந்த வியர்வை வெளியாதல், கைகால் செயலற்றுக் கிடத்தல், கண் பஞ் சடைந்தாற்போலக் காணல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும். சிலர் குரு உடலிலுள்ள குருதியின் எடை நிறம் இவைகள் குறைந் துள்ள போதும் சற்று கடினமான செயலைக் கொண்டபோதும் மயக்கம் வருவதுண்டு.

6. நஞ்சு மயக்கம் :

இது வெகு நாள் மூடிவைத்திருந்து வீட்டின் அறையில் அல்லது மக்கள் நிறைந்த வீட்டு அறையில் புகுதல், நஞ்சுத் தன்மையுடைய காற்றையோ, நஞ்சுப் பொருள்களையோ முகர்தல் அல்லது உட்கொள் ளல் ஆகியவற்றால் பிறக்கும் நோயாம். இந் நோய் மயக்கம் உண் டாகுமுன் கைகால் நடுங்கல், வாய் குளறல், கண் இருண்டு போதல் என்னுங் குறிகளைக் காட்டி, மயக்கத்தோடு படுக்கையில் கிடத்திவிடும். அந்நச்சுப் பொருள்களுக்கு ஏற்றவாறு குறிகுணங்களும் வேற்றுமை யடையுமாயினும், இந் நோயில் மூச்சடைப்பு மிகுந்தே காணும். விடும் மூச்சும் மெலிந்து காணும்.

அன்றியும், பாம்பு முதலிய நஞ்சுக்கடியாலும், அபினி, கஞ்சா, ஊமத்தை, எட்டி முதலிய தாவர நஞ்சுப் பொருள்களைக் கொள்வதாலும் மயக்கம் உண்டாமென அறிக. இவைகளைக் குறிகுணங்களைக் கொண்டும் காரணத்தைக் கொண்டும் பகுத்தறிய வேண்டும்,

இவ்வறுவகை நோயில் கூறிய குறி குணங்களல்லாமல், சிலர்க்கு வரும் மயக்கத்தில், தாம் நின்று கொண்டிருப்பதாகவும், தம்மைச் சூழ்ந்து இருக்கும் பொருள்கள் யாவும் தம்மைச் சுற்றி வருவது போன்றும் மற்றும் சிலர்க்குத் தம்முடலே சுழல்வது போலும் தம் தலை சுற்றிவருவது போலும் காணப்படும். இதனால், அவர்கள் கால் இடறி மயக்கத் தோடு விழுவது முண்டு.

பெரு மயக்கம் (சன்னியாசம்) : மேற்கூறிய மயக்க நோய்களே பன்னாட்கள் தொடர்ந்து நின்று, உடல் நிலையைக் கெடுத்து, முச் குற்றங்களைத் தத்தம் வழியிலிருந்து பிறழச் செய்யின், மயக்கம் வரும் போதெல்லாம் நோயினனை மரம்போல் சாய்ந்து வீழச்செய்து பிணத் திற்கு ஒப்பாகக் கிடக்கச் செய்யும். இந்நோயைச் சன்னியாசம் எனவும் கூறுவர்.

பொதுக் குறிகுணங்கள் : இந்நோய் பெரும்பாலும் சிறுவயதி லிருந்தே தொடருவதாகும். ஆண்களுக்குப் பதினெட்டு வயதிற்கு மேலும், பெண்களுக்குப் பதினைந்து வயதிற்கு மேலும் இந்நோய் நீடித்திருப்பதில்லை. ஆயினும், சிலர்க்கு வாழ்நாட்கள் வரையும் தொடருவதுமுண்டு.

நோய் வருமுன்பே அடிவயிற்றில் யாதொன்றும் இல்லாது போலத் தோன்றி, அத்தோற்றம் என்னவெனச் சொல்லமுடியாத ஒரு வகையான துன்பத்தையுங் காட்டி, வாய் நீர் சுரத்தல், தலை வலித்தல், மயக்கம் என்னுங் குறிகளைக் காட்டி, கண்கள் இருண்டு, மூச்சுத் தடுமாறி அறி விழந்து கிடக்கச் செய்யும். விடுமூச்சு மெலிந்துங் காணும்.

தீரும் தீராதவை : ஐய மயக்கம், முக்குற்ற மயக்கம், நெடு நாள் மருத்துவத்திற்கு அடங்காத மயக்கம் (சன்னியாசம்) ஆகிய இவைகள் எளிதில் தீராவாம். மற்றவை எளிதில் தீரக்கூடியவை களேயாம்.

குற்றம் முதலிய வேறுபாடுகள் : உணவு, செயல் முதலியவை களால், உடலின் குருதியின் வன்மை கெட்டு, வளி முதலாகிய குற் றங்களைத் தனித் தேனும் ஒன்றுகூடியேனும் தத்தம் வன்மையில் மிகுந்தததின் அளவாகவும் மேல்நோக்கு (உதானன்) கீழ்நோக்கு (அபானன்) கால்கள் மிகுந்தததின் அளவாகவும் மயக்கம், வாய் நீரூறல், வாயில் நுரைதள்ளல், கொட்டாவி, தூக்கம், கழிச்சல் முதலிய கேடுகளை விளைவிக்கும்.

நாடி :

சிறப்பான பித்தத்தில் வாதநாடி சேரில்..........
.................................
.......................மயக்க மூர்ச்சை
.........................
உறுதியுள்ள பித்தமது தோன்றில்........
.........................
.........................
.........................மயக்க மூர்ச்சை
.........................

சதகநாடி.

மருத்துவம் :

1. மயக்கங்கண்டு விழுந்த உடனே, முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்துத் துடைத்தலும், அல்லது குளிர்ந்த நீரில் துணியைத் துவைத்துத் துவைத்து அடிக்கடி முகத்தைத் துடைத்தலும், உடல் முழுமையும் குளிர்ச்சியடையும்படி ஈரத்துணியால் துடைத்தலும் செய்யின், எளிதில் மயக்கந் தெளிந்துவிடும்.

2. கரித் துணியைத் திரித்துக் கொள்ளுத்திப் புகை காட்ட மயக்கந் தெளியும்.

3. நோய் மீண்டும் வாராதிருக்க உடலின் வன்மையையும் குருதியையும் பெருக்கக்கூடிய செய்மருந்து வகைகளையும் உணவுகளையும் வழங்கல் வேண்டும்.

(1) செய்மருந்துகளில் இரும்பர்ல் ஆகிய பற்பம், செந்தூரம் முதலியனவும், வெள்ளி, துத்துநாகம் இவைகளின் பற்பச் செந்தூரங்களும் கொடுக்கலாம்.

(2) பொடி வகைகளில், ஏலாதி, பஞ்சதீபாக்கினி, சீரகப்பொடி, இஞ்சிப் பொடி முதலியவைகளும் தரலாம்.

(3) இளகியங்களில், கேசரி இளகம், நாரத்தை இளகம், வில்வாதி இளகியம் வழங்கலாம்.

(4) நெய்வகைகளில் புளியாரை நெய், தண்ணீர் விட்டான் நெய், வல்லாரை நெய்களும் கொடுக்கலாம்.

## வலி நோய்.

வேறு பெயர் : இழுப்பு.

இயல் : இந்நோய் அறிவு குன்றித்த நிலை யற்று ரட்டைந்து, தன்னை அறியாமலே, கையுங் காலும் வலித்து இழுத்தல், வாயில் நுரை தள்ளல், வாய் கோணிக் கொள்ளுதல், கண் பார்வை ஒரு புறமாக இழுத்துக் கொள்ளல் என்னும் இயல் டையதாகும்.

நோய்தோன்று வழி :

'கா வே மேகத்தின் காங்கை யாலும்
கடிதான வழிநடக்கை கோபத் தாலும்
பூணவே பிரமாலயம் தேவா லயங்கள்
புகழான வேரிகுளம் பின்னஞ் செய்தோர்
நாணவே பண்டீர்கற் பழித்த லாலும்
நலமான போகங்கள் மிஞ்ச லாலும்
தோணவே காலபேத நடக்கை யாலும்
துலையாத வடைக்கலத்தைப் பரித்தோர்க் காமே.''

'பரித்துமே சீதளமாம் பண்டத் தாலும்
பாங்கான லபிகடந்த ஞானி யோரைச்
சிரித்துமே பரியாசஞ் செய்து மல்லே
சீண்டியே யடிக்கடிக்கு இடரே செய்து
குரித்துமே மனனோக மிகவும் பேசிக்
குடிகெடுக்கும் பாவிகட்கு இந்த ரோகம்
நெரித்துமே சண்டாள வலிதா னாகி
நெருங்குமே யிவ்வலியில் நொறுங்கு வாரே.''

(பொருள்): இந்நோய் மேகநோய்க்குத் தொடர்பாக வரும் என யுணர்த்தும். அன்றியும் உடல் நிலையும் மனநிலையும் கெடுதலாலும் வரும். அவைகள் ஐயத்தைப் பெருக்கக்கூடிய உணவு வகைகளும் பெண்ணிச்சையில் பெரிதுமீடுபடல், பெரும் அறிஞர்களைப் பழித்தலாகிய நடக்கைகளுமாம்.

நோய் எண் : ஒரு சாரார் இந்நோயினை (1) முப்பிணி வலி (குமர கண்டன்), (2) குதிரை வலி (அமரகண்டன்), (3) குரங்கு வலி (பிரம கண்டன்), (4) காக்கை வலி, (5) முயல் வலி என ஐந்து எனவும்

மற்றோர் சாரார் (1) அமரகண்டன் வலி, (2) குமர் கண்டன் வலி. (3) பிரம கண்டன் வலி. (4) காக்கை வலி. (5) முயல் வலி. 6) திமிர் வலி. (7) கோணு வலி. (8) சண்டாள வலி. (9) மரண வலி. (10) மனோ வலி. (11) நஞ்சு வலி. (12) முக்குற்ற வலி. (13) ஐய வலி. (14) வில் வலி (தனுர் வலி). (15) சுரவலி. (16) விக்கல் வலி. (17) தலைவலி. (18) கோழைவலி. (19) ஒடு வலி. (20) மார்பு வலி. (21) தமரக வலி எனவுங் கூறுவரா தலின் இவையாவற்றையும் கூறுவோம்.

முற்குறிகள் : வலி தோன்றுமுன்பே, தலை சுற்றல், கை கால்கள் தளர்ந்து போதல், மயக்கத்தினால் ஒரு புறம் இருத்தல், விரல் நுனி திமிர்தல் அல்லது துடித்தல், அறிவில் தெளிவற்றுப் போதல், கண்ணிருளல் கம்மல், ஒருகால் இருந்த இடத்திலேயே கிடத்தல், கண்ணிமை துடித்தல், ஊமையைப் போலப் பேசாதிருத்தல், உடல் முழுமையும் நோதல், நீர் வேட்கை உண்டாதல், உடல் வியர்த்தல், வாயில் நீர் சுரந்து சொள்ளு வடிதல், தூக்கமின்மை ஆகிய குறிகளைக் காட்டி, பின்பு வலி வரும்.

**1. முப்பிணி வலி நோய் (குமரகண்டன்).**

''தானான கண்ணிரண்டு மிழுத்துக் கொள்ளல்
தாக்கான தாடையது கோணிக் கொள்ளும்
பானான கழுத்தைமிகத் திருப்ப வொட்டா
பக்கமெல்லாம் நரம்பிழுத்துப் பிடரி நோவாம்
மானான சந்நிபாத மதிக மாகி
மயக்கமுட னெந்நேரம் வயிற்றில் நோயாம்
கானான கருப்பைக்குள் தங்கி நின்று
காட்டுமே குமரகண்ட தோட மாமே.''

''குணமாம் குமர கண்டவலி
குறுகும் நாக்கு முகங்கோணும்
பணமாம் கழுத்துத் தோள்விம்மிப்
பார்க்கப் பக்கத் திருத்திடுமே

சணமாம் முகம்நோய் செவிகண்ணுஞ்
சாய்ந்தே புறத்தில் வலிந்துநிற்கும்
வணமாம் வாத பித்தையம்
வருகுஞ் சன்னி குணமிதுவே.''

(பொருள்): முக்குற்றங்களும் ஒன்று கூடி வரும் நோய்களுள் இஃதும் ஒன்றாகக் கொள்ளப்படினும், பெரும்பான்மையும் இது, வளி ஐயக் குற்றங்களால் பிறக்கக் கூடியதாம். இக் குமரகண்டம் என்னும் வலியில் நாவும் முகமும் கோணும். கழுத்தும் தோளும் விம்மும், செவிகள், தாடை, உதடு முதலியன ஒரு பக்கத்தில் சாய்ந்து நிற்கும்.

2. குதிரைவலி (அமரகண்டன்) :

''நெருங்குமே தேகமெங்கும் தினவுண் டாகி
நெடிதான மூர்ச்சையது மதிக மாகும்
குருங்குமே தந்தத்தை யிளித்துக் காட்டும்
கூரான நகந்தன்னால் சுறண்டிக் கொள்ளும்
தருங்கவே பிணம்போல வசதி யாகும்
தரிக்கொணாக் குடைச்சலுடன் வியர்வை காணும்
பருகவே சோரியது கட்டிக் கொள்ளும்
பாங்கான வமரகண்ட வலிப்புத் தானே.''

''இதுவே யமர கண்டவலி
இறுகும் நாக்கு முகங்கோணும்
மதுவே கைகால் மெய்யெங்கு
மடித்துத் துடித்தாற் போலுளையும்
பொதுவே கண்டஞ் சிரசுமுகம்
புதுவெள்ளம் போற் நீரொழுகும்
பதுவே நெஞ்சுந் தோள்முதுகும்
பற்றி வலிக்கும்உதரமுமே.''

(பொருள்): இந் நோயின், குறிகுணங்கள் காணுமுன்பே உடல் முழு மையும் நோவுண்டாகி, கையும் காலும் அடித்துத் துவைத்தது போல வன்மையுற்று, குத்தலும் குடைச்சலுமுண்டாய் மயக்கம் (மூர்ச்சை) மிகும். பின் இசிவு வரும். பல் இளிக்கும். கழுத்திலும், தலையிலும் தோளிலும், முகத்திலும் மிகுதியாக வியர்வை யுண்டாகும். நாக்கும்

முக்கும் கோணலாகி ஒரு பக்கத்தே இழுத்துக் கொள்ளும், வலிப்பு நின்ற பின், தொண்டை, தோள், முதுகு இவைகளில் குருதியின் கொதிப்பாலுண்டான வீக்கங்களில் காணுவது போன்ற எரிச்சலும் வலியும் காணும்.

3. குரங்கு வலி (பிரம கண்ட வலி) :

''ஆமேதான் சிலேத்துமத்தில் பிறந்த ரோகம்
அதட்டியே பற்கடித்து கோபங் காட்டித்
தாமேதான் சூரியனைப் பார்த்துப் பார்த்துத்
தாங்காமற் கண்சிமிட்ட லதிக மாகும்
போமேதான் சர்வாங்க வலியே காணும்
பொல்லாத துடிதுடிப்பு புகல லாகும்
சேமேதான் குரங்குவல யிதுதான் ஆகும்
சண்டாள பிரமகண்டம் சாற்றி னாமே.''

இதுவே பிரம கண்டவலி
எடுத்த கைகால் தான் உதறும்
கதுவாய் கண்ணுந் தான்பார்க்க
காணா நீட்டிக் கிடைத்திவைக்கும்
பொதுவாய்ப் பார்த்த பண்டிதரும்
பிழையா தென்பார் கைபார்த்து
அதுவே வாத பித்தமையம்
அடர்ந்த சன்னி யறிந்திடுமே.''

(பொருள்) இந்நோய் முக்குற்றங்களும் கேடடைந்த நிலையில் வருதலால், எளிதில் தீரா நோயாகும். இதனில் கைகால்கள் நீட்டியபடியே இருந்து, உதறுதல் கண்களைச் சிமிட்டாது மேல்நோக்கியே பார்த்துக் கொண்டிருத்தல் ஆகிய குறிகுணங்கள் ஏற்படும்.

4. காக்கை வலி :

''சாற்றினோம் கண்களையு மலரப் பார்க்கும்
சாங்கமாய் மலசலமும் சருகி வீழும்
மாற்றினோம் சிலேத்மத்தில் பிறந்த ரோகம்
மயக்கமுடன் கால்கைகள் முறைத்துக் கொள்ளும்

கூற்றுவனாந் தொண்டைதனில் கோழை சேர்ந்து
குறிப்பான நாவுலரல் குளறிப் பேசும்
காற்றினிலும் வேகமதா யோட்டிக் கொல்லும்
காலானாங் காக்கைவலி தன்மை யாமே.''

''அறியுங் காக்கை வலிதானும்
அலரும் கண்ணும் மேல்நோக்கி
பிரியும் மலமுஞ் சலநீரும்
பெருக்காற் றுடையு மடக்காமல்
செறியும் தொண்டை நாவுலர்ந்து
சிலேத்மம் மிஞ்சி சளிவேர்வை
குறியாம் வாத பித்தமையங்
கொண்ட சன்னி யிதுதானே.''

(பொருள்) இந் நோயில், அலண்டு அலண்டு பயப்படுதல், கண், மேல் நோக்கி மலர மலர விழித்தல், தொடை மடக்க முடியாமல் விறைத்துக் கொள்ளல், தொண்டையும் நாவும் உலர்தல், ஐயப் பெருக்கினால் தொண்டையில் கோழை கட்டிக்கொண்டு அதைக் கக்குதல், சிறு நீரும் மலமும் அதிகமாகப் போதல், வியர்வை உண்டாதல் முதலியனற்றைக் காட்டும்; இந்நோய் வளி ஐயக்குற்றத்தால் வருவனவாகும்.

5. முயல்வலி (முயலகன்) :

''தானே முசல கண்வலிதான்
தண்ணீர் தீயுங் காண்போதில்
ஊனே உடலில் வாய்வெழுப்பி
உற்று முகத்தைத் தான்வலித்துத்
தேனே யொழுகும் வாய் தன்னில்
திரைபோல் நுரையுந் தள்ளிவிடும்
கானே கண்ணுங் கைகாலுங்
கனத்து முளைக்குஞ் சன்னியிதே.''

(பொருள்) இவ்வலி, உடலில் முக்குற்றம் மிகுந்து வருநோயாகும். இவ்வலி, நெருப்பை அல்லது நீரைக் கண்டாலும். தலையில் நீரைக் கொட்டினாலும், நெருப்பின் அனல்பட்டாலும், உடனே வலித்து இழுக்கும், பின்பு வயிற்று நோய், வாயில் நுரை தள்ளுதல், கைகால் கண் இவைகள் விறைத்துக் கொள்ளல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும்.

6. திமிர் வலி :

''தன்மையாம் கைகளைத்தான் கட்டிக்கொள்ளும்
தரியாமல் கொட்டாவி யதிக மாகும்
புன்மையாம் நகைப்புடனே ஆடல் செய்யும்
பொருந்தாது எழுந்திருக்க நடக்கச் செய்யும்
நன்மையா மொருவரைப்போய் பிடிக்கச் சொல்லும்
நளினமா மகளிரோடு நரம்பு நோவாம்
துன்மையாம் ராப்பகலுந் துயிலு மாகா
துரத்துமே திமிர்வலியின் குணமி தாமே.''

(பொருள்) இந் நோயினில், கொட்டாவி மிகுதியும் எழல், அடிக் கடிச் சிரித்தல், ஆடல், பாடல், படுக்கையில் இருக்கவொட்டாமை, உடல் குளிர்ந்து நரம்பு நோதல், இரவு பகல் எல்லாம் தூங்காதிருத் தல் என்னுங் குறிகளைக் காட்டி வலி தோன்றும்.

7. கோணு வலி :

''குணமுடனே கோரியது கட்டி யேதான்
குறிப்பாக விருகையு முறுக்கிக் காட்டும்
மணமுடனே வாசனையும் நாசிக் கேறா
மார்க்கமுடன் சர்வாங்க வலியே காணும்
திணமுடனே நெஞ்சுதனிற் குறுக்கிப் பேசும்
நினைவுதடு மாறியல்லோ நீங்காப் பித்தம்
கணமுடனே யுட்காய்ச்ச லதிக மாகிக்
காட்டுமே கோணுவலி குணந்தான் பாரே.''

(பொருள்) உடலில் சொறி, கட்டிகள் தோன்றி, மூக்கில் மணமறிய முடியாது, தொண்டைக் கம்மலாகிப் பேச்சொலிகுன்றல், அறிவுதடு மாறல், சுரம் என்னுங் குறிகளைக்காட்டி, இருகைகளையும் முறுக்கி வலிக்கத் தொடங்கும்.

8. கொடிய வலி (சண்டாள வலி) :

''பாரேதான் முறுக்கலுடன் வரம்போ மெத்த
பதைபதைத்து எந்நேர மயக்க மாகும்
சீரேதான் திமிருடனே பெருமூச் சாகிச்
சிணுக்கென்று இருமலுடன் வாந்தி யாகும்

கூரேதான் விக்கலுடன் சுவாசங் காணும்
குடிகெடுக்கும் நரம்பெல்லா மசதி யாகித்
தீரேதான் கழுத்துமிக நொந்து மேதான்
திகைக்குமே சண்டாள வலிதான் காணே.''

(பொருள்) இந் நோயில், உடல் பதை பதைத்து, முருக்கி வலி தோன்றும், அத்துடன் திமிருடன் பெருமூச்சுவிடல், சிணுக்கிருமல், வாந்தி, விக்கல், மேல்மூச்சு, நரம்பெல்லாம் வன்மையற்றுப் போதல், கழுத்து நோதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

9. மரணவலி :

''காணவே யெந்நேரங் கண்ணீர் சோர்வாம்
கருத்திலே தெய்வத்தை நினைத்து நோதல்
பூணவே பிரலாபம் தொண்டைக் கம்மல்
பொருந்தாது வடிக்கடி வமன மாகும்
நாணவே நடுக்கலுடன் தேக மெங்கும்
நளினமாம் நரம்பெல்லா மசைவு தோன்றல்
கோணவே கால்கையு முடக்கி வாங்கும்
குடிகெடுக்கு மரணவலி குணமிதாமே.''

(பொருள்) இஃது நோயிலீடுபட்டு மெலிந்து, சாகும்போது உடல் அழியும் தறுவாயில் வரும் வலியையொத்த வலியாம் இதனில் தொண்டைக் கம்மல், உடல் நரம்புகள் துடித்து அசைதல், உடல் நடுக்கல், வாந்தியாதல், கடவுளை நினைத்து மனங்கசிதல் என்னுங் குறிகளைக் காட்டிக் கால் கைகளை முடக்கி வலித்து உயிரைப் போக்கும்.

10. மனோவலி :

''குணமான மனைவியைப்போக் கடித்த லாலும்
கோடான கோடிபொரு ளிழத்த லாலும்
கணமான சூடதுதான் தலைமேற் கொண்டு
கண்ணீரைச் சதாகாலம் பெருகச் செய்யும்
பிணம்போல வொருவேளை புரளச் செய்யும்
பிசகான வார்த்தைகளைப் பேசச் சொல்லும்
சிணநேரம் ஞானிகள்போ லிருக்கச் செய்யும்
சிரித்துமே யழுவுமனோ வலியின் பண்பே.''

(பொருள்) இது மனைவி மக்கள் இறத்தலின் துன்பத்தாலும், பொருளை இழந்த கவலையாலும் உண்டான அழல் குற்றத்தின் பெருக்கால் வருநோயாம், இதனால் அழல் குற்றம் தலைக்கேறிச் சூடுண்டாய்க் கண்களிலிருந்து நீரை வடியச்செய்தல், கண்டவாறு பேசச்செய்தல், பிணத்தைப்போலும், ஞானிகள் போலும், சும்மாயிருத்தல், அல்லது சிரித்தல், அழுதல் என்னுங் குறிகளைக் காட்டும்; இருந்திருந்து அடிக்கடி வலி உண்டாம்.

11. நஞ்சுவலி :

''மண்பான இடுமருந்து சேர்ந்த தாலும்
மயக்கமுடன் பஞ்சேந்திரிய மற்றுப் போகும்
பண்பான திகைப்பூண்டு மிதித்தாற் போல
பயங்கரமாய் திகைத்துமே திரிய லாகும்
கண்பான கண்ணிரண்டு மிரட்டிப் பார்க்கும்
கருவான விடமதுதான் கலங்கிச் சித்தம்
நண்பான நரம்பெல்லா மிழுத்துக் கொள்ளும்
நலியான விடவலியின் நன்மை பாரே.''

(பொருள்) இந்நோய் நஞ்சுத் தன்மையுடையதான இடுமருந்து, எட்டி, நாபி போன்றவைகளைக் கொண்டதால் வருநோயாகும். இதனில் உடலில் ஊறிய நஞ்சுக்கேற்ப ஐம்பொறிகளும் கெட்டு, அறிவு கலங்கி, திகைப்பூண்டு மிதித்தவனைப்போல் திரியச்செய்யும், கண் மிரண்டவன் போல் காணப்பட்டு சித்தங்கலங்கும் என்னும் குறிகளைக்காட்டி, நரம்புகளையெல்லாம் இழுத்து வலியை வருவிக்கும்.

12. முக்குற்றவலி :

''பாரேதான் சிந்திப்பின் துக்கத் தாலும்
பயத்தினால் வாதபித்த மதிக மாகிச்
சீரேதான் மனதுக்கு தெளிவைத் தந்து
சித்தமுடன் கலங்கிமிகக் கம்ம லாகி
வேரேதான் மனோலயத்தின் மார்க்கந் தன்னை
விகர்ப்பமுடன் சற்குணத்தை மாற்றிப் பேசும்
தீரேதா னிருளடைந்து சோதி மின்னும்
திடுக்கான தொந்தவலி குணமி தாமே.''

(பொருள்) முக்குற்றத்தின் கேட்டால் பிறந்த இவ்வலி நோயானது மனதின் தெளிவும், அறிவும் நற்குணமுமிழந்து யாவரையும் கண்டவராகப் பேசிக்கொண்டே இருக்கச் செய்யும்; கண்ணிருண்டு அல்லது மின்னல் போல ஒளி எழுந்து வலிக்கத் தொடங்கும்.

3. ஐய வலி.

தானான தொண்டைவலிக் கம்ம லாகி
தாக்கான இருவிலாவில் குத்தல் காணும்
தேனான கண்ணிமையில் விகாரப் பார்வை
தெளியாது காதுகே ளாமை யாகும்
கோனான சர்வாங்க வியர்வை காணும்
கொடிதான வலியுடனே தோடங் காணும்
வேனான பிரமையது மெத்த வாகும்
விரட்டுமே சேத்துமத்தின் வலியி தாமே.

(பொருள்) ஐயப் பெருக்கால் வரும் இவ்வலி நோயில், இருமல், விலாப் பக்கங்களில் குத்தல், கண்ணிமை கோணலாகிப் பார்வையும் கெடுதல், காது கேளாமை, உடல் வியர்த்தல், மயக்கம், அறிவு கலங்கல் என்னுங் குறிகளைக் காட்டி வலி உண்டாகும். இசிவு அடங்கிய பின்னும் அசையாமல் கிடக்கச் செய்யும்.

14. வில்வலி (தனுர்வலி) :

வலியுடனே நுரைநுரையாய்ப் பேதி காணும்
வளம்பெரிய ரோகமது மிகவே பொங்கி
மெலிவுடனே கைகாலும் காந்தல் காணும்
மிக்கான நரம்பெல்லாம் திமிர்ந்து காட்டும்
சலியாம லெந்நேரம் வாந்தி கோழை
சார்வாக நோயுடனே வியர்வை தோன்றும்
நலியுடனே மார்புவந்து அடைக்குங் கண்ணீர்
நாள்தோறும் தனுர்வலியி னாட்ட மாமே.

(பொருள்) உடலின் தலையையும், கால்களையும், முன்புறத்தேனும், பின்புறத்தேனும், பக்கத்தேனும் வில்போல் வளையச் செய்து வலி தோன்றுவதால், இந்நோயினை வில்வலி என்றும் தனுர்வலி அல்லது தனுர்வாதமெனவும் வழங்கலாயினர். இவ்வலி வலிக்கும் பக்கத்திற்கேற்ப,

முன்னிசிவு, பின்னிசிவு, பக்கயிசிவு எனவும் கூறுவர். இந்நோயில் தாடையும், கழுத்திற்குப் பின்புறமும் நோயுண்டாய் வாயில் நுரையோடு கூடிய கோழை பெருகும். நோயின் வன்மை பெருகப்பெருக நரம்பெல்லாம் திமிர்த்து மேற்கூறியவாறு முன்னிசிவு, பின்னிசிவு, பக்கவிசிவுகளில் ஒன்று காணும்; இழுத்துச் சற்று விட்டு மறுபடியும் இழுக்கும். இசிவு விட்டவுடன் தாங்க முடியாத நோயைத் தோற்றுவிக்கும். மார்பு, தொண்டை இவைகள் நொந்து மூச்சு அடைக்கும். இக் கொடுமைகளைக் காட்டிக் கொல்லும்.

5. சுர வலி :

தாமேதான் தேகமது மறதி யாகும்
 தாக்கான கண்முகமு மஞ்சள் போலாம்
ஆமேதான் சிலநேரம் வெளுப்புத் தோன்றும்
 அடைவாகக் கண்ணிரண்டுஞ் சினங்கொண் டாற்போல்
போமேதான் பார்வையது வெறிபோ லாகும்
 பொல்லாத வெரிச்சலுடன் மண்ணைக் கீறும்
நாமேதாஞ் சொன்னமொழி வரைதப் பாது
 நளினமாஞ் சுரவலியி னாண்மை பாரே.

(பொருள்) சுரம் மிகுந்து காய்வதால் வரும் வலிக்குச் சுரவலியெனவாயிற்று. இந்நோயில் சுரத்தின் கொடுமையால் குருதி வெப்படைந்து, மண்டையிற்றாக்கிக் கண் சிவந்து, முகம் வெளுத்து அல்லது மஞ்சளித்து, உடல் எல்லாம் எரிச்சல் உண்டாகி, வெறி கொண்டவன் போல் மிரண்ட பார்வையொடு வலி தோன்றும். இஃது பெரும்பான்மை சிறுவயதினர்க்கே வரும் நோயாம்.

16. விக்கல் வலி :

பாரப்பா வெந்நேரம் பசிமே லாகிப்
 பரதவித்துச் சுவாசமது மேலே நோக்கிச்
சீரப்பா கபந்தானு மிகவுண் டாகிச்
 சீறியே கண்ணிரண்டும காந்த லாகி
நேரப்பா திரிதோட சேட்டை யாலே
 நெருங்கியே தொண்டைதனை வலித்துக் காட்டும்
தேரப்பா சினங்கொண்டு பற்க டித்துத்
 திகைக்குமே விக்கல்வலி திண்ணந் தானே.

(பொருள்) முக்குற்றங்களும் கூடிய நோயாகு மிஃது; இதனில் எழுந்த வளிக்குற்றத்தால், வலிநோயும், அழல்குற்றத்தால், மிகுந்த பசியும், ஐயக்குற்றத்தால் விக்கல், மார்பில் கோழைகட்டல், பெருமூச்சு, தொண்டை வலித்தல் என்னும் குறிகளையும் முக்குற்றத்தால் தவித்தல், பல்லைக் கடித்தல் கண்சிவத்தல் என்னும் குறிகுணங்களும் ஆகிய யாவும் ஒன்று கூடி வலியைத் தோற்றுவிக்கும்.

17. தலைவலி.

குடியான வாயுவது வதிக மாகிக்
குருமூளையில் நீர்தங்கிக் குடிலங் கெட்டுத்
துடியான நரம்புடனே வலியுங் கண்டு
தொடருமே நீர்க்கம்ம லதிக மாகும்
முடியான சிரசுவலி நிசிநீர்த் தும்மல்
மூட்டோடே தலையிடியும் பிடரி நோவாம்
இடியான ஈட்டிபோல் குத்தல் தோன்றும்
எழிலான தலைவலியி னியல்பு தானே.

(பொருள்) மேல் நோக்குக்கால் (உதானவாயு) ஆனது மிகுந்து தலை மூளையைத் தாக்கி அதனால் அங்கு நீர்சுரந்து தங்கி, நரம்புகளை வலித்து நோகச்செய்யும். அன்றியும் ஐயப்பெருக்குண்டாகித் தொண்டை கட்டி, குரல் ஒலிக்காமல், தலையில் இடித்தல், நோதல், மூட்டுகளில் நோதல், பிடரி வலித்து நோதல், ஈட்டியால் குத்துவது போன்ற குத்தல் என்னுங் குறிகளோடு வலிக்கத் தொடங்கும்.

18. கோழை வலி:

திண்ணமாந் திரிதோட வாதத் தாலே
திகைப்பூண்டு மிதித்தாற்போல் தியங்கிக் காட்டும்
வண்ணமாந் தேகத்திற் நோயுண் டாகி
வலிக்குமே மார்புதனில் கபந்தான் றங்கி
எண்ணமுடன் பலவார்த்தை மிகவே பேசும்
எழிலான மூர்ச்சையுடன் வாந்தி காணும்
குண்ணியே மிகுவியர்வை யதிக மாகும்
குறட்டுடனே கோழைவலி குடியாம் பாரே.

(பொருள்) இஃது வளிக்குற்ற மிகுதியாலுண்டான முப்பிணியால் வருமாதலால் நோய்பிறக்கும்போதே, தயக்கத்தைக் காட்டி, உடல் முழுமையும் நோயையுண்டாக்கும், அதனோடு மார்பில் கோழைசேரல் முப்பிணி நோயினைப்போல் வாய் பிதற்றல், கண்டவாறு பேசல், மூச்சடைத்தல் வாந்தியாதல், உடல் வியர்த்தல், குறட்டைவிடல், கோழை கக்கல் என்னுங் குறி குணங்களோடு வலிக்கத் தொடங்கும்.

19. ஓடுவலி:

நாட்டமா மிருதொடையு மோய்ந்து போகும்
நடுங்கியே நாவுலர்ந்து வியர்வை தோன்றும்
நீட்டவே காலசதி யதிகங் காணும்
நெடிதான பேதியது நுரை போலாகும்
வாட்டமுடன் சுரமதுதான் கொடிய கோபி
வருத்தமுட னெந்நேரங் கண்ணில் நோவாம்
ஓட்டமுடன் விரல்தானும் திமிர்ந்து காட்டும்
ஓடுவலி யின்குணத்தி னுண்மை தானே.

(பொருள்): இந்நோயில், தாங்கமுடியாத சுரம்கண்டு தொடை ஓய்ந்து போதல், நாவுலர்தல், வியர்வை காணல், கால் வன்மையற்றுப்போதல் கழிச்சல் நுரைத்து மிகுதியுமாதல், அடிக்கடி சினத்தல், கண் நோதல் விரல்கள் திமிர்த்தல் என்னுங் குறிகளைக் காட்டி வலியுண்டாகும்.

20. மார்பு வலி:

இயல்பான பித்தமது மிகவே பொங்கி
யெழிலான பிறவலி மிசிவு காணும்
கயலான நெஞ்சுதனில் கபமுண் டாக்கிக்
கனலுடனே யெந்நேரங் காந்தல் பற்றி
முயலான இருமலுடன் வாந்தி கோழை
முறுக்குமே குடல்தனையே மிகப்பு ரட்டும்
மயலான கன்னிகளின் மோகத் தாலே
வந்துதித்த மார்புவலி வண்மை பாரே.

(பொருள்): இந்நோயில் அழல் குற்றம் தன்னளவில் மிகுந்து தனக்குத் துணையாக ஐயக்குற்றத்தையும் கூட்டிக்கொண்டு, தொண்டையில் கோழையைக்கட்டும். அதனோடு இடைவிடாச் சுரமும், இருமலும்,,

கோழையோடு கூடிய வாந்தியும் உண்டாக்கி உடலை முறுக்கி வலியெழும். இந்நோய் பெண்ணிச்சையாலுண்டான கெடுதிகளாலும் வருவதாகும்.

21. தமரகவலி:

வண்மையா மார்பதனில் கோழை தங்கி
வாகாகத் தலைவலியு மசதி காணும்
திண்மையாம் வாயுவது மிகவே மிஞ்சி
திடுக்கிட்டு மெய்மறந்து சினமுங் கொண்டு
கண்மையாம் நரம்புகளில் சிலேத்மந் தங்கிக்
காட்டுமே வாததிப் பித்தந் தன்னை
எண்ணமுடன் மார்பதனில் கபமே தங்கி
ஏங்கிடுமே தமரகன்ற னியல்பு தானே.

(பொருள்): இந்நோயில் வளிக்குற்ற மிகுந்து ஐயத்தையுங் கூட்டி, தலை வலி, மார்புவலி, அடிக்கடி திடுக்கிடுதல், மிகுந்த சினமுண்டாதல், மார்பில் கோழைகட்டல் என்னும் குறிகளைக்காட்டி முக்குற்றமும் ஒன்று கூடி வலி நோயை வருவிக்கும்.

பொதுக் குறி குணங்கள் : வலி நோய் பெரும்பான்மையும் சிறுவர்களுக்கு வருவதாகும். சிறுபோதில் வரும் வலியை மருந்துகொண்டு நீக்கினும், அது நடு வயது வரையும் தொடர்ந்து, நாற்பது வயது வரையிலும் நிலைப்பதுண்டு. கைக்குழந்தைக்கு வரும் வலி, பன்னிரண்டு அல்லது பதினைந்து வயது வரையிலும் விட்டு விட்டு வருவதுமுண்டு.

சிலர்க்குப் பேசிக்கொண்டிருக்கும் போதோ, அல்லது வேலை செய்து கொண்டிருக்கும் போதோ முன்பு கூறிய முற்குறிகளுள் சிலவற்றைக் காட்டித் திடீரென வலி வரும். மற்றுஞ் சிலர்க்கு, வலி வருவதற்கு முன்பே வலி வரப் போகின்றது என்னும் உணர்ச்சியை உண்டாக்கி மிக்க சினம், மயக்கம். மனச்சோர்வு, சோம்பல், மிகுந்த பசி, வெருண்ட பார்வை ஆகிய இக்குறிகளைக் காட்டி இழுப்புத் தொடரும். அன்றியும், அடிக்கடி தும்முதல், கொட்டாவி விடுதல், உடலின் சதை துடித்தல், மயக்கத்தோடு உணர்ச்சியற்றுக் கிடத்தல், சிறு நீர் பெய்யாதிருத்தல், வாயில் நுரைதள்ளல் என்னுங் குணங்களையும் கொள்ளும். ஆயினும், சில நாழிகை கழிந்த பின்பு தெளிந்து எழுந்து விடுவர். இவ்வாறு வரும்

வலியானது, சிறிது நேரத்தில் எளிதில் விட்டு விடினும், ஒரு நாளைக்குப் பன் முறை வருவதும் அல்லது நாள் கணக்கின்றி நினைத்தபோதெல்லாம் வருவதும் உண்டு.

மற்றும் சில இழுப்புகளில், கை கால்களின் விரல்கள் கொறுக்குவலி போல் மடங்கி துடிப்புண்டாகும். அப்போதே வலி தொடரப் போகின்ற தென ஓர் உணர்ச்சியைப் பெற்று உட்கார்ந்துகொள்ள முயலு முன்பே வலி தொடர்ந்து மரம்போல் கீழே விழச்செய்யும். அதற்கு மேல், தலையும் கண்ணும் ஒருபுறத்தே இழுக்கும். அறிவு குறைந்து, மயக்கமுண்டாகும். கையுங்காலும், மடக்க முடியாமல் விறைத்து உதறுமேயாயினும் கண்விழித்துக்கொண்டே இருக்கச் செய்யும். உணர்ச்சியைக் கெடுத்து, உடலைப் பின்னும் முன்னும் வளைத்து இழுத்து, அஞ்சக்கூடிய நிலையில் கூக்குரலிடும். அடிக்கடி வாய் கோணலாகிப் பற்களைக் கடிக்கும். சிலவேளை நாவைக் கடித்துக் கொள்வதுமுண்டு. வலியின் கொடுமையால், மூச்சுத் திணறி, தொண்டை கட்டி, உடல் கறுத்துப்போம். மூச்சடைப்பு சிறிது குறைந்துவரின், வாயில் நுரையும் குருதியும் கலந்து வெளியாகும். மூக்கிலிருந்தும் குருதி கசிவதுண்டு; இவ்வாறு கொடுமைகள் பல செய்து, சில மணிகளுக்குள் வலி குறைந்து கொண்டே வந்து பின்பு உணர்ச்சி பெற்று எழுந்திருக்கச் செய்யும். வலி விட்டு எழுந்தபோதிலும், தாங்க முடியாத தலைவலியும், சோர்வும் தூக்கமும் எழும்.

சிலர் வலிவந்தபோது, முகத்தைக் கீழ்ப்புறமாகத் தரை மேலாகிலும், கிடுக்கை மேலாகிலும் வைத்துக்கொள்வர். இதைக் காக்கை வலி யெனக் கூறுவர். இவ்வலி இரவில் படுக்கையிலுள்ள போதுவரின் சில வேளை மரணத்தையும் உண்டாக்கும்.

மற்றும் சிலர்க்கு இவ் வலியில், சிறுநீர் தன்னை அறியாமலே இழிவது முண்டு; வலிக்கொடுமையால், சிலபோது உடம்பில் அடிப்பட்டு வீங்குதல், உடல் முழுமையும் மிகவும் நோதல், எலும்புகள் முறிதல், குருதி குருதியாக வாந்தி எடுத்தல் முதலியன உண்டாக்கக்கூடும். நோயின் கொடுமைக்கு ஏற்பச் சிலர்க்கு இந் நோயுடன் பக்கவாயும் (பாரிசவாதமும்) தொடருவதுண்டு.

குழந்தைகளுக்கு வரும் வலி நோயில் காணும் குறி குணங்கள் பெரியவர்களுக்கு வருவது போல அவ்வளவு கொடுமையாக இல்லாதிருப்பினும், வலி வருவதற்கு முன்பே இடைவிடாது சுரம் காய்ந்து, விரல்கள் துடிப்பதும், கைகால் முதலிய இடங்களிலுள்ள சதைகள் துடிப்பதுமாக இருந்து பின் குழந்தை தாங்கமுடியாத இழுப்பை வருவிக்கும். இவ்விசிவு ஒரு நாளைக்குள் பல முறைகள் வருவதும் உண்டு. வலி வரும் போதெல்லாம் கண்கள் மேல் நோக்கி இழுத்துக்கொள்ளல், வாய் கோணி ஒரு புறமாக வலித்துக்கொள்ளல் ஆகிய குறிகளோடு, தலை ஒரு பக்கமாகத் திரும்பி இருத்தல், வாயும் நாக்கும் ஒரு புறமாக இழுத்துக்கொள்ளல் என்னுங் குறி குணங்களையும் காட்டும்.

பெரியவர்களுக்கு வருவது போலவே, குழந்தைகட்கும் இந்நோயில் பக்கவாதமும் பிறப்பதுண்டு. சில குழந்தைகட்குக் கண் பார்வை குறைவதும் கண் செதிர்வதும் ஏற்படும்.

பொதுவாக வலி நோய் நீண்ட நாளாகத் தொடர்ந்து மருந்துகளுக் கடங்காது நீடித்திருப்பின், சிலவேளை கொஞ்சம் கொஞ்சமாக அறிவைக் கெடச் செய்து வெறிநோயை வருவிப்பதுமுண்டு.

இவ்வகைப்பட்ட வலி நோய்கள் சிறுவயதில் தொடங்கி சில மாதங்சள்கழித்தபின் நோய் தீர்ந்துவிட்டது போலிருந்து, நடு வயதில் மீண்டும் வரக்கூடும். சிறு வயதில் வலி தோன்றாமலே நடு வயதில் தோன்றுவதுமுண்டு. பெண்களுக்கு வரும் வலி பெரும்பான்மையும் வீட்டுவிலக்கம் ஏற்படும்போது வரும்.

சில குழந்தைகளுக்கு வரும் வலி நோயில் அறிவு குன்றாமலே, கையும் காலும் தூக்கி தூக்கிப்போடுதல், வாய் கோணுதல் ஆகிய குறிகளைக் காட்டி சிறிது நேரத்திற்குள் அவ்வலி நின்று விடுவதுண்டு. இங்ஙனம் ஒரு நாளைக்கு நான்கு ஐந்து முறை வலித்தலும் உண்டு. இஃது எளிதில் தீராதெனச் சிலர் கொள்ளினும் இஃது எளிதில் தீரக்கூடிய நோயென்றே கொள்ளலாம்.

தீரும் தீராதவை.கள் :

இதுதான் வலிக ளஞ்சுக்கு
மெடுத்த குணத்தைத் தானுரைத்தேன்
மதுதான் குமர னமர்கண்டன்
மறியுங் காக முசகன்வலி

சதுரா ணாலுஞ் சாந்தமதாந்
தயில மொத்த மருந்துசெய்தால்
பிதுராம் பிரம கண்டவலி
பிணந்தான் றிரும்பிப்பேசாதே.

இவ்வைந்து வகை வலி நோய்களில் பிரமகண்டவலி எளிதில் தீராதாம். மற்ற நான்கும் தக்க மருத்துவத்தால் தீரக்கூடும் என்பர்.

குற்ற முதலிய வேறுபாடுகள்: இஃது உணவு, செயல் முதலியவைகளால், வளிக்குற்றம் மிகுந்து தனக்குத்துணையாக அழல் குற்றத்தையும் ஐயக் குற்றத்தையும் கூட்டிக்கொண்டு, கீழ்நோக்குக்காலின் செயலைக் கெடுத்து, எருவை (மலத்தை)க் கட்டி, மற்றக் கால்களின் செயல்களையும் கெடுத்து நோயை வருவிக்கும். அன்றியும், நடுக்கால்(சமான வாயுவும்) தன்னிலை பிறழும்.

நாடி:

சிறுவிர லிரண்டு பக்கம் நாடிதான் சிதறி யோடில்
மருவிய காலுங் கையும் வலித்துடன் மிகவே நோகும்.

— — — — — — — — —
— — — — — — — — —

குணநாடி 48

மருத்துவம்: இந்நோயில், தன்னளவில் மிகுந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்தும் பொருட்டும், இயற்கைத் தொழிலை விட்டு மாறுபாடாகத் தொழில் புரியும், கால் (வாயு)களைத் தன்னிலைப் படுத்தவும், கழிச்சல் மருந்துகளை நோய்க்குத் தக்க அளவுடன் கொடுத்து, பின்பு நோய்க்கேற்ற மருந்துகளை வழங்கல் வேண்டும். வலியுள்ள காலத்தில், கண்ணிற்கு மருந்தும், மூக்கிற்குப் பொடியும் இடுப்பிற்கு மேல் பூச்சு எண்ணெயும் கொடுத்தல் வேண்டும்.

குடிநீர் வகைகள்:

(1) கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கடகரோகணி, நிலாவாரை வகைக்குப் பலம் அரை, சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, வாலுழுவை அரிசி, சிறுநாகப்பூ வகைக்குப் பலம் கால் ஆகக் கூட்டி இரண்டுபடி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து அதில் அரை ஆழாக்களவு, காலை மாலை கொடுக்கக் கழிச்சலை யுண்டாக்கும். வலியின் கொடுமை தணியும்.

(2) முட்காய் வேளைவேர், முருங்கை வேர்ப்பட்டை, கொத்து மல்லி, நிலப்பனைக்கிழங்கு, அமுக்கரா, சீந்திற்றண்டு, வில்வ வேர், கோரைக் கிழங்கு, கோட்டம் வகைக்குப் பலம் ஒன்று கொண்டு முறைப் படி கூட்டி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து வடித்துச் சிறிது சீனி கூட்டி அரை ஆழாக்காக, காலை மாலை கொடுக்கலாம்.

(3) கண்டங்கத்திரி வேர், ஆடாதோடை வேர், ஆமணக்கு வேர் வகை பலம் ஒன்று, சடாமாஞ்சில், குரோசாணி ஓமம், அதிமதுரம், கருஞ்சீரகம், சிற்றரத்தை, விளாப்பழத்தோடு, சாதிக்காய், சாதிபத்திரி. சந்தனம் வகைக்குப் பலம் அரை ஆகக்கூட்டி இரண்டுபடி நீரிலிட்டு எட்டிலொன்றாகக் காய்த்து வடித்து அரை ஆழாக்காக, காலை, மாலை சாப்பிடலாம்.

(4) நெய்தல் கிழங்கு, சங்கம் வேர், அமுக்கரா, சீந்திற்றண்டு, தேற்றான் விரை, சிவதை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி ஆக வகைக்கு ஓர் பலம் கொண்டு முறைப்படி குடிநீராக்கி அரை முதல் ஒரு ஆழாக் காகக் கொள்ளவும்.

கழிச்சல் மருந்துகள்: கால் (வாத) குற்றத்தை அடக்கக் கூடிய எண்ணெய் வகைகளும், கழற்சி எண்ணெய், மெருகன் எண்ணெய், சித்தாதி எண்ணெய் முதலியவைகளும், மெழுகு வகைகளுள் அகத்தியர் குழம்பு, புலத்தியர் மெழுகு, குமட்டி மெழுகு முதலியவைகளும் கொடுக் கலாம்.

உள்மருந்து—பற்பசெந்தூரங்கள்: இரச பற்பம், துருசு பற்பம், வெள்ளி பற்பம், நாக பற்பம், வங்க பற்பம் போன்றவைகளும், சண்டரச பற்பம், சண்டமாருத செந்தூரம், அயவீரச் செந்தூரம் போன்றவை களும் பயன்படும்.

மெழுகு வகைகளுள்: வான்மெழுகு, நந்திமை, சண்டமாருதக் குழம்பு, ரசகந்தி மெழுகு, இரசமெழுகு இவைகளுள் ஏதாவதொன்றை நோய்க்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக்கலாம்.

எண்ணெய் நெய் வகைகளுள்: கந்தகசுடர் நெய், பச்சோந்தி எண்ணெய், வேப்பெண்ணெய், ஐங்கூட்டெண்ணெய் முதலியவை களையும் வேண்டுமாயின் வழங்கலாம்.

மேல்பூச்சு : மெழுகுத் தைலம், முட்டைத் தைலம், சடாமாஞ்சித் தைலம், ஆலகால விடத்தைலம், விடமுட்டித் தைலம் இவைகளை வலியுள்ள போது மேல் பூச்சாக வழங்குக.

புகை : வலி தோன்றிய உடனே அடுக்களையில் பயன்படுத்தும் கரித்துணியில் சிறிது சீரகம் வைத்துத் திரியாக்கிக் கொளுத்தி அதினின்றும் எழும் புகையை மூக்கில் ஊட்ட வலியின் கொடுமை தணியும். அல்லது அகத்தியர் குழம்பு மூன்று குன்றி எடை எடுத்துச் சீலையிற் றடவிக் கொளுத்தி எழும் புகையை ஊட்டவும்.

பொடி : மூக்கிற்கு இடும் பொடி (நசியம்) வகைகளுள் ஏதேனும் ஒன்றையும் இடலாம்.

கண்ணிற்கு இடும் மை அல்லது தயிலங்களுள் ஏதேனும் ஒன்றைக் கண்ணிலிடலாம்.

## சிறப்பு மருத்துவம்.

குதிரைவலி (அமரகண்டவலி) :

1. வெங்காரம், உள்ளி, வாளம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, பெருங்காயம், சீரகம், வெந்தயம், காந்தம், வசம்பு, வெள்ளிற்பிசின், படிகாரம், ஓமம், துருசுசெந்தூரம், குதிரைவாலி (அவ்வையார் கூந்தல்), அவுரிவேர், குருந்து, நொச்சிவேர், ஆடாதோடை வேர், குருந்தொட்டி வேர், முருங்கைப் பட்டை, தூதுவேளைவேர், வேல்வேர், சாறடை வேர், கொடுவேலி வேர்ப் பட்டை, இவைகள் வகைக்குப் பலம் ½ இடித்து, ஒரு படி வேப்பெண்ணெயில் இட்டுக் காய்ச்சி வடித்ததில் ஒரு காசு எடை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிவர இவ்வலி தீரும்.

2. சுக்கு, மிளகு, இந்துப்பு, வெள்ளுள்ளி, வாளம், வசம்பு இவைகளை ஓர் அளவாகக் கொண்டு இடித்து, வேண்டிய அளவு எலுமிச்சம் பழச்சாற்றிலூறவைத்து, மைபோல் அரைத்து, மாத்திரையாக உருட்டி வைத்துக் கொண்டு, அதை மேற்படி சாற்றிலிழைத்து வலியுள்ளபோது கண்ணிலிட வலி நீங்கும்.

குரங்குவலி குமரகண்டன் : பொன்முசுட்டைவேர், வாளம், ரசம், கந்தகம் இவைகளை ஒரு நிறையாய் எடுத்து, வில்வ இலைச் சாற் றாலரைத்து, மிளகளவு உருண்டை செய்து உலர்த்தி, மிளகு தக்காளிச் (மணத்தக்காளி) சாற்றில் கொடுக்கத் தீரும்.

முயல்வலி (முயலகன்) : முயலின் குருதி (இரத்தம்), வேப்பெண் ணெய், எள்நெய் வகைக்குப்படி காலில் , பெருங்காயம், யானைத் திப்பிலி, கல்மதம், குரோசாணி ஓமம், புனலித்தண்டு, நொச்சிவேர், கத்திரிப் பழம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றைச் சிதைத்துப் போட்டுக் காய்த்து, வடித்த எண்ணெயில் ஒரு காசெடை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச நோய்போம்.

காக்கைவலி :

1. நல்லெண்ணெய படி ஒன்றும், எலுமிச்சம்பழச்சாறு படி இரண் டும் கூட்டிக் கலந்து எரியிலிட்டுக் காய்ச்சி நீர் வற்றி வரும்போது, அதில் சுத்தி செய்த மண்புழு (நாகப்பூச்சி) ஒரு தேங்காய் அளவு போட்டு, அது சிவந்து வருகையில், வேப்பங் கொட்டையின் பருப்பு, குங்கிலியம், மஞ்சள், கம்பிளிப்பிசின், கொன்றைப்பிசின் வகைக்கு விராகனெடை மூன்று பொடித்துப் போட்டு, சிவந்து மிதக்கும்போது எடுத்துவடித்து அதில் ஒரு உச்சிக்கரண்டி அளவு உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிவர நோய் போம்.

2. முந்திரிப்பழம், பேரீந்து, பொன் முசுட்டைவேர், முசுமுசுக்கை வேர், பேய்ப்புடல், இலுப்பைப்பூ வகைக்கு ஒரு பலமாகக் கொண்டு அத்துடன் வாளம், கெந்தகம், தாளகம் வகைக்குக் கால் பலமாகக் கூட்டி, கல்வத்திட்டு வலியன் (ஓர் புள்ளினம்) பிச்சாலும் எலுமிச்சம் பழச்சாற்றாலும் அரைத்து, குன்றி அளவு உருட்டி உலர்ந்தபின், அதில் ஓர் உருண்டை காலை மாலையாகத் தேன் அல்லது சீனியில் கொள்ள நோய் போம்.

3. அண்டங்காக்கையின் இறகு, குடல், தலை, கால் முதலியவற்றை நீக்கி வயிற்றைத் திறந்து, அதனுள் சுக்கு, மிளகு, சீரகம், கல்லுப்பு, இந்துப்பு, பொட்டிலுப்பு இவைகள் வகைக்கு இரண்டு விராகனெடை யாகப் பொடித்து அடைத்து, வயிற்றைத் தைத்து, அதை ஒரு படி

சாராயத்தில் போட்டு, சட்டிவாயை நன்றாக மூடி, சிறு தீயாக எரித்து வெந்தபின் எடுத்து, அதன் எலும்பை நீக்கி மைபோல் அரைத்து, பாக்களவு மூன்று நாட்கள் காலை மாலைகளில் கொடுக்க, காக்கைவலி போம்.

முயல்வலி :

1. நான்கு கழஞ்சு சுக்கை நறுக்கி ஒரு படி நீரிலிட்டுக் கால்படியாகக் காய்த்து வடித்து, அத்துடன் இஞ்சிச்சாறு, முட்டை மஞ்சள் கருத் தைலம், வெள்ளுள்ளித் தைலம், வேப்பெண்ணெய் வகைக்குப படி கால் ஆகக் காய்ச்சும்போது, அதில் மயிலிறகு, ஆகாசத் தாமரைக் கிழங்கின் பொடி, மண்புழு, கீழாநெல்லிவேர் இவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்த்து வடித்ததில் வேளைக்கு ஒரு கரண்டி அளவு காலையில் மட்டும் உள்ளுக்குக் கொடுத்தும் மேலுக்குப் பூசியும் வர முயல்வலி போம்.

2. எள் நெய், ஆமணக்கு நெய், இலுப்பை நெய், வங்க நெய், புங்கு நெய், வகைக்குப்படி இரண்டு, தழுதாழை, காட்டாமணக்கு, நாயுருவி, தைவேளை, குப்பைமேனி, மாவிலிங்கு, வேம்பு, புங்கு, வெண்ணொச்சி, தூதுளை, கண்டங்கத்திரி, குருந்து, கருவாகை, முட் சங்கு, கொடுவேலி, நிலக்கடம்பு, சடச்சி, இண்டு, அவுரி, மருக் காரை, எருக்கு, புனலி முருங்கை, முருங்கை, வெள்ளைச் சாறடை, மருதோன்றி, காட்டுமல்லிகை, ஊமத்தை, உத்தாமணி, கழற்கொடி, மிளகரணை, திருகுகள்ளி, குமிழ், அமுக்கரா, பிரப்பங்கிழங்கு, குன்றி, எட்டி, வெட்பாலை, கடம்பு, சின்னி, இலுப்பைப் புல்லுருவி, ஆயில் இவைகளின் வேர் வகைக்குப் பலம் பத்து எடுத்து இடித்து, எட்டு மரக்கால் நீர் விட்டு ஆறுபடி வருமளவும் காய்த்து வடித்த நீரில், கலியாணப் பூசுணைச் சாறு படி நாலு கூட்டி, திப்பிலி, திப்பிலி மூலம், யானைத் திப்பிலி, ஓமம், அரத்தை, தாளிசபத்திரி, சுக்கு, குரோசாணி ஓமம், கருஞ்சீரகம், கிராம்பு, குக்கில், சதகுப்பை, அழிஞ்சில், பழம், சிறுதேக்கு, காயம், உள்ளி, இஞ்சி, வெள்ளிற்பிசின், சிறுநாகப்பூ, சடாமாஞ்சில் வகைக்குப் பலம் அரை கொண்டு இடித்து, வெள்ளாட்டு நீரால் மைபோல் அரைத்து அத்துடன் மயில் இறகுச் சுட்டகரி பலம் அரை கூட்டி, மேற்படி காய்த்த குடிநீரில் கலந்து, முட்டை மஞ்சள் கரு, தைலம், உள்ளித்தைலம், முசுருமுட்டைத் தைலம் வகைக்குக் கால் படியாக அத்துடன் கூட்டி, சிறு தீயாக இட்டு எரித்துப் பக்குவத்தில்

வடிக்கும்போது, வடிமுகத்தில், சாதிலிங்கம், கத்தூரி வகைக்குக் கழஞ்சு இரண்டைப் பொடித்து வைத்து, வடித்த தைலத்தில், காசெடை வீதம் உள்ளுக்கும், மேலுக்கும் பூசி வர முயல்வலியும் மற்றைய எல்லாவகை வலிநோய்களும் போம். அன்றியும், வளிக்குற்றத்தால் வரும் நோய் என்பதும் நீங்கும்.

குறிப்பு : இந்நோயில், வலி வரும்போது அறிவு குன்றுதலால் நாக்கைக் கடித்துத் துண்டித்துக் கொள்வதுமுண்டு. ஆதலின், வலி வரும்போது பல் கிட்டிக் கொள்ளாதபடி அதற்கிடையே ஒரு கரண்டிக் காம்பையிட்டுப் பிடித்துக் கொண்டிருப்பது நன்மை தரும்.

இந்நோயினன், மெல்லிய மெத்தை, தலையணை இவைகளின்மேல் கவிழ்ந்து படுத்துள்ளபோது வலிவரின், தலையின் பளுவு அழுத்த அழுத்த மூச்சு விடமுடியாமல் மூச்சடைத்து இறப்பதுமுண்டு. ஆதலின், வலி நோயுடையோர் மேற்கூறிய படுக்கைகளில் படுத்தல் கூடாது. மல்லாந்து படுத்தல் வேண்டும்.

## வளிநோய்.

வேறு பெயர் : வாதநோய் :

இயல் : இது, வளிக்குற்றம் தன் அளவில் மிகுந்து, குத்தல், குடைதல், நோதல், தொழில் அற்றுப்போதல் முதலியவைகளை உண்டாக்கி, பல வகைப்பட்ட நோய்களைப் பிறப்பிக்கும் இயல்புடையது.

முற்குறிகள் : உடலில் நோதல், குத்தல், பிளத்தல் போற்காணல், நரம்பு முதலியன குன்றல், நடுக்கல், இறுக்கமாதல், நீர்ப்பசையின்மை, சதை, நரம்புகள் அசைதல், இளைத்தல், குடைதல், அடிபட்டது போன்று வலித்தல், கை கால்கள் விட்டுப்போதல், பூட்டு நழுவுதல், உறுப்புகள் தளர்தல், மரத்துப்போதல், சிறுநீரும் எருவும் கட்டுப்படுதல் அல்லது தீய்தல் ; நீர்வேட்கை, எலும்புக்குள் குடைதல், குத்தல், அல்லது எலும்பு, எலும்பின் பூட்டு இவைகள் வீங்கிக்காணல்; கைகால் முதலிய பூட்டுகள் நீட்டவும், முடக்கவும், அசைக்கவும் முடியாமலிருத்தல் ; தோல், கண், எரு முதலியன கருத்துக்காணல் என்னும் வளிக்குற்றத்தின் குறிகளுள் சிலவற்றையேனும் பலவற்றையேனுங் கூட்டிக்காண்பிக்கும்.

நோய் எண் : ஒவ்வொரு நூலோரும், அவரவர் மனப்பான்மைக் கேற்ப, எண்பதெனவும், எண்பத்துநான்கு எனவும் கூறுவர். அவை கட்குப் பெயரிடுங்கால், உறுப்பினை யொட்டியும், குறிகுணங்களை யொட்டியும் முதல் நோய்க்குத் துணையாகுங் குற்றங்களை ஒட்டியுமே பெயரினையமைத்தனர். அவர்களில் யூகி முனி தம் நூலில், நோய் எண்பதெனக் கூறி, நோயின் பெயரைக் கூறுங்கால், எண்பத்தேழு எனச் செப்பினர். ஆயினும், அவற்றுள் நாற்பது வகை நோய்களின் குறிகுணங்களை மட்டும் கூறி விடுத்தனர்.

ஈதன்றி, பெருவளி நோயை (மகா வாத நோயை)த் தனித்துக் கூறுவாரு முளர். மற்றும் சிலர், தலை முதல் கால் வரையிலுள்ள உறுப்புகளையும் மனத்தையும் ஒட்டி வரு நோய்களை எண்பது எனக் கூறியுள்ளனர். ஆயினும் இந்நூலில், அன்னவர்கள் கூறியபடி யாவற்றையுங் கூறிவிட்டு, நோய்க்கான பொது மருத்துவத்தையும் கூறிய பின், மக்கள் எளிதில் அறியும் வகையில், வழக்கைக் கொண்டு சில நோய்களை மட்டும் விரித்துக் கூறுவாம்.

நோய் எண் :

என்னவே வாதமது எண்ப தாகும்
ஏற்றமாம் பேருடைய வெழிலைக் கேளாய்
வன்னவே வாதஸ்தம்பம் வாத கர்ஷணம்
வகையான சுரஸ்தம்பம் தலஸ்தம் பந்தான்
பொன்னவே பூசுவா தத்தி னோடு
பெரியகா ளாஞ்சகமு மூருஸ் தம்பம்
குன்னவே வாதகர்னங் குரிஷ கிரிஷம்
கூறான நரித்தலையின் வாத மாமே.

தலைக்கும்ப வாதமொடு மலைத்த கம்பம்
தருக்கான பாணிகம்பங் கூனி வாதம்
அலையவா குனிவாத மக்ஷேகவாதந்தான்
அதிவாதம் உபகதமும் நெற்றி சூலை
கலைகர்ன சூலைசெவி படுவாத மாகும்
கடுபக்க வாதமொடு பட்ச வாதம்
திலையபேய் வாதமொடு பிராணா லயந்தான்
சலஸ்தம்ப மொடுசந்து வாத மாமே.

சந்துவா தத்தோடு சகன வாதந்
தரித்தவற் புதவாத முரகன் வாதம்
உந்துமுர காரியொடு வஸ்வ தம்பம்
உறுதிபா சத்தம்பம் நேத்ரப வுத்ரம்
அந்துதண்ட வாதமொடு வஷ்ட தந்திரம்
அதிவசனா வாதமொடு மகாவா தந்தான்
முந்துமிருந்து வாதமோ டுதர வாதம்
முகிழ்மூத்திர வுதிரவா தமுமா மென்னே.

என்றசுக்ல வாதஞ்சவ் விரங்க வாத
மெழிலூர்த்வ வாதமொடஞ் ஞானத் தம்பத்
தென்றசிரக் கம்பவாத முஞ்சதஸ் தம்பம்
செயவச்சிர ரூபமொடு கண்டக் கிரகம்
நன்றதாம் நகாரியொடு பதித வாதம்
நலியோனி சூலையோடு கெற்ப சூலை
குன்றவஷ்ட சூலையொடு குடல்வா தந்தான்
குறியசுவ வாதமெச்சு வாதந் தானே.

தான்மூடு வாதமாம் வசுவா தந்தான்
தனுபீஜத் தம்பமொடு தந்திர வெட்டி
வான்வாத சுரோணிதஞ் சித்து வாத
மகத்தான வைகிதவா தச்சு ரோணிதம்
ஊனுதிர வாதசுரோ ணிந்தா தானோடு
உறுபயித்ய வாதசுரோ ணிதமு மாகும்
தேன்சிலேட்ம வாதசுரோ ணிதந்தான் மிக்க
சினத்துதர வாதசுரோ ணிதமுங் காணே.

காணவே குணவவதா னகமாம் வாதங்
கண்டகவ தானகமாம் வாத மாகுந்
தேணவே சிரக்கம்ப வவதா னந்தான்
சீரியதோர் வாதத்தின் றலைநோக் காடு
பூணவே பித்தத்தின் றலைநோக் காடு
புகழான சிலேட்மத்தின் றலைநோக் காடு
சாணவே சன்னிவாதத் தலைநோக் காடு
தருரத்த பித்தத்தின் தலைநோக் காடே.

நோக்கான கிருமிகுந்த தலைநோக் காடு
நுதற்சூரியா வர்த்தமொடு சந்திரா வர்த்தம்
ஊக்கான கர்னாவா தந்தன் னோடு
ஒருதலையின் னர்த்தவா தமுமே யாகும்
வாக்கான வாதகர்ன சூலை யோடு
மருவியதோர் பித்தகர்ன சூலை யாகுந்
தேக்கான சிலேட்டும் சூலை யோடு
செயமான கிருமிகர்ன சூலை தானே.

தானான தந்தவாயு வின்ற னோடு
தாக்கான வாதந்தா னெண்ப தாகும்
ஆனான வரன்றனையே மதியா மாந்தர்
அகதிபர தேசியர்கட் கன்ன மீயார்
கோனான குருமொழியை மறந்த பேர்கள்
கொலைகளவு பொய்காமங் குறித்த பேர்க்கு
ஊனான சடந்தன்னில் வாதம் வந்து
உற்பவிக்கும் வேதத்தி னுண்மை தானே.

என யூகி முனி தம் நூலில் வளி நோயை வகுத்த முறை வருமாறு :—

1. வாதஸ்தம்பம்
2. வாதகர்ஷணம்.
3. கரஸ்தம்பம்.
4. தலஸ்தம்பம்.
5. பூசுவாதம்.
6. காளாஞ்சகவாதம்.
7. ஊருஸ்தம்பவாதம்.
8. வாதகர்னகம்.
9. குரிஷகிரிஷவாதம்.
10. நரித்தலைவாதம்.
11. கும்பவாதம்.
12. மலைத்த கம்பவாதம்.
13. பாணிக்கம்பவாதம்.
14. கூனிவாதம்.
15. ஆகுனிவாதம்.
16. அனோபகவாதம்.
17. வாத உபகதம்
18. நெற்றிசூலை வாதம்.
19. கர்ன சூலைவாதம்.
20. செவிபடுவாதம்.
21. பக்கவாதம்.
22. பக்ஷவாதம்.
23. பேய்வாதம்.
24. பிராணாலயவாதம்.
25. சலஸ்தம்பவாதம்.
26. சந்துவாதம் (கீல்வாயு).
27. சகனவாதம்.
28. அற்புதவாதம்.
29. உரகவாதம்.
30. உரகாரிவாதம்.
31. அஸ்வதம்பவாதம்.
32. பாசத்தம்பவாதம்.

33. நேத்திர பவுத்திரவாதம்.
34. தண்டகவாதம்.
35. அஷ்டதந்திரவாதம்.
36. வசனாவாதம்.
37. மகாவாதம்.
38. மிருத்வாதம்.
39. உதரவாதம்.
40. மூத்திர உதிரவாதம்.
41. சுக்கிலவாதம்.
42. சவ்விரங்கவாதம்.
43. ஊர்த்துவாதம்.
44. அஞ்ஞானத்தம்பம்
45. சிரக்கம்கவாதம்.
46. சதஸ்தம்பவாதம்.
47. வச்சிரரூபவாதம்.
48. கண்டகிராகவாதம்.
49. நகாரிவாதம்.
50. பதிதவாதம்.
51. யோனி சூலைவாதம்.
52. கர்ப்ப சூலைவாதம்.
53 அஷ்டசூலைவாதம்.
54. குடல்வாதம்.
55. அசுவவாதம்.
56. மெச்சுவாதம்.
57. மூடுவாதம்.
58. வசுவாதம்.
59. பீஜஸ்தம்பவாதம்.
60. தந்திரவெட்டிவாதம்.
61. வாதசுரோணிதம்.
62. சித்துவாத சுரோனிதம்
63. வைகித வாத சுரோணிதம்.
64. உதிரவாத சுரோணிதம்.
65. பயித்தியவாத சுரோணிதம்.
66. சிலேட்டும வாத சுரோணிதம்.
67. உதரவாதசுரோணிதம்.
68. குண அவதானகம்.
69. கண்டக அவதானகம்.
70. சிரக்கம்ப அவதானகம்
71. வாதத்தலை நோக்காடு.
72. பித்தத்தலை நோக்காடு.
73. சேட்டுமதலை நோக்காடு.
74. சன்னிவாத நோக்காடு.
75. இரத்தபித்த நோக்காடு.
76. கிருமிகத நோக்காடு.
77. சூரியாவர்த்தம் நோக்காடு.
78. சந்திராவர்த்தம் நோக்காடு.
79. கர்னாவர்த்தம் நோக்காடு,
80. ஒருதலையின் வர்த்தம்.
81. வாதகர்ன சூலை.
82. பித்தகர்ன சூலை.
83. சிலேட்டும கர்ண சூலை.
84. கிருமிகர்ன சூலை.
85. தந்திரவாயு.

குறிப்பு.—யூகி முனிவர் தம் நூலில் இந்நோயைத் நொகை கட்டுங் கால், ''வாதமது எண்பதாகும்'' எனக் கூறினார். அவைகளின் பெயர்களையும், குணங்களையும் கூறும்போது எண்பத்தைந்து வகையினைக் கூறிப்போந்தனர். ஆயினும் பாக்கள் எண்பதேயாகும்.

வாதத்தம்பம் :

உற்பவிக்கும் வாதமது எழுந்து பொங்கி
உயர்காலின் புறவடியைக் குடைந்து பற்றி
தெற்பவிக்கும் வீக்கமாய்ச் செழும்ப லுண்டாய்த்
தேகமெங்கு நோவாகித் திமிரு மாகி
விற்பவிக்கும் வில்லுபோல் விதன மாகி
மிடுக்கான மாந்தனைப்போல் விதன மாகிப்
பற்பவிக்கும் பரன்றனையே நினையா மூடர்
படுகின்ற வாதஸ்தம் பமுமாம் பாரே.

(பொருள்) : வளிக்குற்றமானது, தன்னளவில் மிகுந்து, கால்புற வடியிற்றங்கி ஆங்குக் குடைதல், எரிச்சல், தெறிப்பு, வீக்கம் முதலிய குறிகளைஉண்டாக்கி உடல் முழுமையும் நோகச் செய்து, திமிரை உண்டாக்கி, உடலை வில்போல் வளைக்கச் செய்யும்.

2. வாதகர்சணம் :

பார்க்கின்ற வாதவுள் ளடியிற் சாணி
பதித்துவைத் ததுபோலப் பாத மெங்கும்
நோக்கின்ற குதினரம்புக் கால்க ளெங்கும்
கொடிதான பாரமாய்த் திமிர்ப் புண்டாகி
வார்க்கின்ற வார்த்தைகள் மிகவே செய்து
வளைந்திடினு நிமிர்ந்திடினும் வசங்கொ டாமல்,
ஏர்க்கின்ற காலுளைக்கும் வாத கர்ஷணம்
ஈதலற மில்லாதார்க் கெய்துங் காணே.

(பொருள்) இதில், காலடியிற் சாணியைப் பூசியது போன்று ஒருவித அருவருப்பை உண்டாக்கி, குதிக்கால் நரம்பு வலித்துக் கொண்டு, காலெங்கும் கனமாகவும் காலில் வலியுண்டாகி திமிராகவும் காணும். உடலை வளைக்கவும் நிமிர்க்கவும் முடியாதவாறு நோகும் ; ஆகிய இக் குறிகளைக் காட்டும்.

**3. கரத்தம்ப வாதம் :**

எய்தியே விரிவுதனி லிரண்டு காலு
மிசைந்தவுள் ளடிதனிலு மெரிந்து நோவாம்
ஐதியே யக்கினியில் வைத்தாற் போல
வங்கமெலா மிக வெளுத் துலர்த்தி யாகும்
பொய்தியே புரைதனிலே புழுக்க ளூர்தல்
போலவே மிகவூர்ந்து நடைகொ டாது
கைதியே வாயுலர்ந் துடல்க னக்கும்
கணக்கான கரஸ்தம்பங் கருதிப் பாரே.

(பொருள்) இதில், இரண்டு கால்களின் உள்ளடியிலும் எரிச்சலும் நோயுமுண்டாகும். உடல் முழுவதுமாக நெருப்புப் பட்டது போல் எரிதலோடு உடல் வெளுத்தலும் உலர்ந்து போதலுமாவிருந்தும், தோலின் கீழ் புழு ஊர்தல் போன்ற ஓர் உணர்ச்சி தோன்றி நடக்க முடியாதபடி செய்யும், வாய் நீர் வற்றி, உலர்ந்து போதல், உடல் கனத்திருத்தல் ஆகிய குறிகளும் காணும்.

**4. தலத்தம்ப வாதம் :**

கருதியே மிகக் கனத்து முள்ளங் காலைக்
கனக்கவே குடைந்துநொந்து கருகிக் காணும்
வருதியே வணக்கஞ்சற் றில்லா மற்றான்
வலித்துமே மேனோக்கி வருத்தங் காணுஞ்
சருதியே சடமுலர்ந்து மேல்மூச் சுண்டாய்த்
தாகமா யுடம்புலர்ந்து தளர்ந்து காணுங்
கருதியே கடுவுப்பு புளிப்பு தன்னாற்
கனவாதங் கோபித்தே தலதம்பங் காணே.

(பொருள்) இந்நோயில் கால் வீங்கி உள்ளங்கால் கனத்துக்குடைந்து நொந்து, உடல் கருத்துக் காணும். உடலை வளைக்க முடியாமல் வலியுண்டாம். உடல் வறட்சியடைந்து மேல் மூச்சு வாங்கல், நீர் வேட்கை மிகுதியாதல், உடல் உலர்ந்து தளரல் முதலிய குறிகளும் காணும். மிகுதியாகக் காரம், உப்பு உள்ள பொருள்களைக் கொண்டதனளவாக இந்நோய் மேன்மேலும் பெருத்துத் துன்புறுத்தும்.

5. பூசுவாதம் :

தம்பமா மலத்துவா ரந்த னைத்தான்
　　தைத்ததோ ரம்புபோற் குடைந்து னொந்து
உம்பமா முள்ளடியி னளவாய்ப் பற்றி
　　உறுதியாய் மிகநொந்து குடைச்சல் காணும்
நம்பனார் பதம்போற்றா நபர்கள் தம்மை
　　நணுகியே யுருக்குலைத்து நலிக்கப் பண்ணுங்
கம்பமாங் கனத்துதிரம் வலியுண் டாக்குங்
　　கனத்ததோர் பூசுவா தந்தா னாமே.

(பொருள்) இவ்வாத நோயில், எருவாய்த் தொளையில் அம்பைக் கொண்டு தைப்பது போன்று குத்திக் குடைந்து நொந்து, முள்ளந் தண்டினைப் பற்றி வலித்துக் குடையும். இவ்வாறாகத் தாங்க முடியாத நோய்களை உண்டாக்கி, உடலை உருத் தெரியாமற்படி நலியச் செய்யும். உடலை வளைக்க முடியாமல் கொம்பைப்போலத் நிமிரச் செய்து வலியை உண்டாக்கும். அன்றியும் கொடுமைகள் பலவும் செய்யும்.

6. காளாஞ்சக வாதம் :

வாதமாங் கால்கையிற் குறங்கி ரண்டும்
　　வகுத்துசந்து முறுக்கியே குடைந்து நொந்து
நாதமா நடைதானுந் தான்கொ டாம
　　னலிந்துமே முடமாகிக் கரடு கட்டிச்
சேதமாஞ் சடந்தானு மிகவெ ளுத்துத்
　　தினவோடு சிரங்குமாய்ச் சிலேட்ம மாகிக்
காதமா யருசியொடு மயக்க மாகுங்
　　கருதியகா ளாஞ்சகமாம் வாத மாமே.

(பொருள்) இந்நோயில் கைகால், தொடை, மூட்டு இவைகளில் (ளப்பது போன்றும், முறுக்குவது போன்றும், குடைவது போன்றும், நொந்து, நடக்கவொட்டாமற் செய்து, உடல் மெலிந்து, சந்துகள் தோறும் முடங்கி, கரடு கட்டிக் கொள்ளும். உடல் மிக வெளுத்துத் தினவெடுத்துச் சொறி சிரங்குண்டாம். அன்றியும் உடலில் ஐயங்கூடி, சுவையின்மை, மயக்க முதலியனவும் உண்டாகும்.

7. ஊருத்தம்பவாதம் :

ஆமென்ற வாதமது உள்ள டங்கி
அடித்துடைதான் குறங்கிரண்டு மளவாய்ப் பற்றிக்
காமென்ற கைகாலில் விரலுஞ் சுற்றிக்
கனத்துமே சாணியது பொதிந்தாற் போலத்
தேமென்ற சிரந்தனிலே பார முண்டாய்த்
தேமெங்கு மூதியே திமிருண்டாகும்
நாமென்ற நடக்கொணா வொடுக்க மாகி
நலியூருத் தம்பமது நணுகுங் காணே.

(பொருள்) இந்நோயில் வளியானது தன்னளவில் குறைந்து, அடித்தொடைகள் இரண்டையும் பற்றி, கைகால் விரல்களைச் சுற்றிக் கனத்து, சாணியைப் பூசியதுபோல ஓர் உணர்ச்சி உண்டாக்கி, தலை பாரமாக இருத்தல் போற்றோன்றி, உடல் வீங்கி, உடல் முற்றும் திமிருண்டாய், நடக்க முடியா வண்ணம் செய்யும்.

8. வாத கர்ணகம் :

தம்பமா நடக்கும்போ துந்த ரித்தும்
தாவியே யுயரமா யெட்டும் போதும்
வம்பமாய் வெள்ளத்தி லிறங்கும் போது
மயக்கமாய்த் தள்ளாடி இடைந்து வீழ்ந்தும்
வெம்பமாம் பாம்புவிட மேறும் போல
மிக்கான சரீரமெலாந் தளர்ச்சி யாகும்
சிம்பமாம் புள்ளுப்போல் பரப்பு காணும்
செறிவாத கர்ணகச் சிறப்பு மாமே.

(பொருள்) இந்நோயில், நடக்குகையில் காலை உயர்த்தித் தூக்கி வைக்கும்போதும், நீரிலிறங்கும்போதும், மயக்கத்தோடு தள்ளாடி அஞ்சி விழுவது போலக் காணப்படும். உடல் வெப்பங்கொண்டு பாம்பின் நஞ்சு ஏறுவது போன்றும், பறவை வெளியில் பறப்பது போன்றும் பிணி உடலெங்கும் விரைவில் பரவி தளர்ச்சியை உண்டாக்கும்.

9. குரிசகிரிச வாதம் :

சிறப்பான பாம்புவிஷம் போலே யேறிச்
செறிவாக விறங்கியதோர் செய்கை போலுந்
துறப்பான சூரையா யறையிற் றட்டைச்
சுழலவே சுருக்கித்தான் பற்றி யங்கம்
பிறப்பான பீறியதோர் குடலைப் போலப்
பிதிர்கின்ற வன்போலும் பிரமி யென்ன
மிறப்பான தோலில்முள் பொதிந்தாற் போல
முயன்றிடுங்காண் குரிசகிரிச மூர்க்கந் தானே.

(பொருள்) இந்நோயில், வளிக்குற்றம், உடலெங்கும் பாம்பு நஞ்சு பரவுவதுபோல் பரவி இறங்குவதுபோல அரையிற்றங்கி அங்குச் சுழன்று குடலைப்பற்றி நோயையுண்டாக்கித் தோள் முதலிய இடங்களிலும் தங்கி அங்கு முள்ளில் குத்துவதுபோல நோயையுண்டாக்கும்.

10. நரித்தலை வாதம் :

மூர்க்கமாய் முயன்று முழங் கால்தான் வீங்கி
முதிர்ந்துரத்த முந்திரண்டு முயற்சி யாகி
நீக்கமாய்த் தின்றிடவொ ணாமற் றானும்
நிமிர்ந்திடுகில் சந்துந்தான் முடக் கொணாமல்
தீர்க்கமாய்த் துண்டித்து மிகச் சிக்கென்று
செழுமைநரித் தலைபோல மிகவே வீங்கி
நார்க்கமாய் நாடியுமே படப டக்கும்
நரித்தலையின் வாதமென்றே நவில லாமே

(பொருள்) இந்நோயில், முழங்கால் மூட்டில் செந்நீர் நிரம்பி சிவந்து வீங்கி, மடக்கவும், நீட்டவும், நிற்கவும் முடியாமல் நரியின் தலையைப் போல் மிகுதியும் வீங்கிக் காணும். நாடி படபடத்தோடும்.

11 கும்ப வாதம் :

நவிலவே தோண்மீதுங் கரத்தின் மீது
நலிந்து மெத்த வாகியே நசவுண் டாகும்
கவிலவே கன்னமொடு நயனந் தானுங்
கடுத்துமே விறுவிறுப்பு மெரிவுங் காணும்

துவிலவே துடிப்பாகுஞ் சிரசு தன்னிற்
சுழற்றியே நாபிக்கீழ் வலியு முண்டாம்
அவிலவே யடிநாக்கி லழன்று காணு
மலருமே வருகும்ப வாதந் தானே.

(பொருள்) தோட்பட்டை, கை முதலிய இடங்களில் மிக்க நோயுண்டாகி அவைகளை நீட்டவும் முடக்கவும் ஒட்டாமல் நோதலும், கன்னமும், கண்ணும் கடுத்து விறுவிறுத்து எரிதலும், உடல் துடித்துத் தலை சுற்றி மிகு சுர முண்டாய் நாபியின்கீழ் வலியும், அடிநாக்கில் அழற்சியும் ஆகிய குறி குணங்கள் இந்நோயிற் காணும்.

12. மலைத்தகம்ப வாதம் :

கும்பமாங் கையின்மணிக் கட்டு தன்னிற்
குவிந்தரையில் மொத்தைபோ லுரத்துக் காணுந்
தும்பமா மங்கங்கள் துடிப்ப தாகுந்
துண்டுமே கால்கையு நடுக்க மாகும்
அம்பமா மரைக்குங்கீழ் திமிருண் டாகும்
அதரமே மிகக்கறுத்து வெடிப்புண் டாகும்
வம்பமாம் வாயுதான் புரிய நாற்றம்
வருமலைத்த கம்பத்தின் மார்க்க மாமே.

(பொருள்) : கையின் மணிக்கட்டுப் பூட்டுகளில் வீங்கித் தடித்துக் காணும், உடற்றுடிக்கும், கை கால் நடுங்கும். அரைக்குக் கீழ்த்திமிருண்டாகும். உதடு மிகக் கருத்து வெடிப்புண்டாகும். மிக்க நாற்றத்துடன் காற்றுப் பரியும் என்னுங் குறிகுணங்களை இந்நோய் பெறும்.

13. பாணிக்கம்ப வாதம் :

மார்க்கமாய் வாய்வுமாய் மெய்நி றைந்து
வயிறுதனிற் பசியிலாதூணு மற்று
நார்க்கமாய் ஞாலத்து நடக்கையற்று
நடுக்கமாங் கையிரண்டுந் திமிரு முண்டாம்
ஊர்க்கமா யுறக்கமில்லா துணர்ச்சி யற்று
உதறியே சரீரமெங்கு முலர்ந்து காணும்
பார்க்கமாய் வாய்விட்டு அலத்த லாகும்
பாணிகம்ப வாதத்தின் பாங்கு தானே.

(பொருள்): இந்நோய், உடல் முற்றிலும் வளிக் குற்றத்தை நிறைத்துப் பசித் தீயைக் கெடுத்து, நடக்கமுடியாமை, கைகால் நடுக்கம், கை திமிர்தல், தூக்கமின்மை, உணர்ச்சியின்மை, உடல்வற்றிப் போதல், வாய் பிதற்றல் ஆகிய குறிகளையும் காட்டிக் காலை மடக்க முடியாமற் கொம்பைப்போல் நிலைக்கச் செய்துவிடும்.

14. கூனி வாதம் :

பாங்கான மலபாண்டப் பையிற் றானும்
பண்பாகத் துடங்கியே மலத்து வாரம்
நீங்காம லடக்கியே நோவு மாகி
நினைவில்லாச் சத்தியோடு மயக்க மாகித்
தேங்கான தேகமெங்கும் வலியு மாகிச்
சீதளமாய்க் குளிர்ந்துமே காணுங் கண்டாய்
கோங்கான கோழிப்பே னூர்தல் போலுங்
குறிகாணுங் கூனியாம் வாதந் தானே.

(பொருள்): இந்நோய் உடலில் ஐயப் பெருக்கையுண்டாக்கி, பெருங்குடலில் தொடங்கி, எருவாய்வரையில் பரவி, நோயைப் பிறப்பித்து, வாந்தியையும் மயக்கத்தையும் உண்டாக்கும். உடம்பு முழுமையும் வலி, உடல் சில்லிட்டுக் குளிர்தல், உடலிற் கோழிப்பேன் ஊர்தல் போலிருத்தல், கூன் உடையவனைப்போல வளைந்திருத்தல் ஆகிய குறிகளையும் காட்டும்.

15. ஆகுனி வாதம் :

கூனியே தேகமெங்குங் குத்த லுண்டாய்க்
குளிர்குளிர்ந் திருமியே வாய்நீ ரூறி
ஆனியே யங்கமெல்லா மசை தலாகி
யடிக்கடிக்கும் வியர்வைதா னதிகமாய்
மேனியெலாங் குறுகியே யூத லுண்டாய்
வெளுக்குமே சரீரந்தான் வீக்க மாகும்
பானியே யடிக்கடிக்கு வருந்திக் கேட்கும்
பண்பான ஆகுனியின் வாதந் தானே.

(பொருள்) : இதில், உடம்பு முழுமையும் குத்தலாய்க் குளிர்ச்சி யடைந்து இருமி வாய்நீர் ஊறுதலும், உடல் அசைதலும், அடிக்கடி உடல் வியர்த்தலும், உடல் குறுகி வெளுத்து ஊதுதலும் உண்டாகும், அந்நோயாளி ' நான் பிழைப்பேனா ' என்று அடிக்கடி கேட்பன் ஆகிய இக்குறி குணங்களைக் காட்டும்.

16. அட்சேபக வாதம் :

வாதமே கோபித்துச் சரீரந் தன்னில்
வயிறுவிலாப் பக்கங்கள் வாடி யோடி
நாதமே யுட்புகுந்து இருபத் தஞ்சு
நலமறிய ஈரலைத்தான் பற்றி நொந்து
காதமே கை காலு மோய்ந்து போகுங்
கனக்கவே நோவாகிச் சுருள நொந்து
ஆதமே யங்கமெலா மசைத லாகு
மஷேவகமாம் வாதத்தி னாண்மை தானே.

(பொருள்): இது, வளிக் குற்றம் தன்னளவில் மிகுவதனால் வயிறு, விலாப் பக்கங்களில் ஒடிப்பாய்ந்து, ஈரலைப்பற்றிக் கொண்டு, குத்தல் நோதலை உண்டாக்கும். அன்றியும், கையும் காலும் ஓய்ந்து போதல், வீங்கல், நோதல், உடல் அசைதல் ஆகியவற்றையும் பிறப்பிக்கும்.

17. வாத உபகதம் :

ஆண்மையாங் காலோடு கையுஞ் சந்து
மங்கமெலா மிகத்திமிர்ந்து சாணி தானும்
பூண்மையாய்ப் பூசினது போலே காணும்
புரண்டுதான் விறுவிறுத்துப் புளக மாகிப்
பாண்மையாங் காதசையு முஷ்ண மாகிப்
பசித்துமே மிகநாணி நடைகொ டாது
வாண்மையாம் வாட்டமுறு மயக்க மாகும்
வாதவுப கதந்தன்னை வகுத்த வாறே.

(பொருள்): இந்நோய், கால், கைகளின் கீல்களை மிகவும் திமிரச் செய்து, சாணி பூசியது போன்ற ஓர் உணர்ச்சியையும், விறுவிறுப்பையும் உண்டாக்குவதோடு, உடலில் சேர்ந்த அழற்குற்றத்தினால் பசியைத்

தூண்டி காதடைப்பை உண்டாக்குவதன்றியும், மயக்கத்தையும் உண்டாக்கி, நடக்க முடியாமற் செய்து ஆண்மையைக் கெடுத்தலாகிய குறி குணங்களைக் காட்டும்.

18. நெற்றி சூலை வாதம் :

வாறான நயனந்தான் புருவ மற்றை
மத்தியத்திற் குடைந்துமே மூக்குத் தண்டு
கூறான குரலின்னத்தான் பற்றி நொந்து
குடைந்துமே கையோடு கால்கள் ரண்டும்
ஆறான அங்கமெலாங் கடுப்புண் டாகு
மழுகுரலாய் நித்திரையு மயக்க மாகுந்
தேறான சிரசுனிற் குத்த லுண்டாம்
சிறுநெற்றிச் சூலையின்றன் செய்கை தானே.

(பொருள்) : வளிக்குற்றத்தால், இருபுருவங்களின் இடையில் குடைதல், மூக்குத் தண்டு, குரல்வளைகளில் நோக்காடு, குடைதல் முதலியவற்றைத் தோற்றுவித்து கை, கால், உடல் முழுமையும் கடுப்பையுண்டாக்கும். அதனைத் தாங்கமுடியாது அழச் செய்வதோடு, தூக்கத்தையும் மயக்கத்தையும் பெருக்கித் தலையில் குத்தலை வருவிக்கும்.

19. செவிச்சூலை வாதம் :

செய்கையாஞ் செவித்துவாரந் தன்னி னின்று
சிக்கெனவே குச்சிகொண்டு குடைந்தாற் போலச்
சைகையாய் நோவுண்டாய்ச் சலிக்குஞ் சிந்தை
சலத்தின்மேல் மனதுண்டாய்த் தாக முண்டாம்
வைகையாய் வயிறுதனில் மந்த முண்டாய்
மயக்கமாய் மனதுதனிற் பயமு முண்டாய்க்
கைகையாய் வாய்கசந்து புளிப்புண் டாகுங்
கர்னசூ லையின்குணத்தைக் காணுங் காலே.

(பொருள்) : இந்நோய், செவியின்றுளை தன்னிற் குச்சு கொண்டு குடைந்தால் போன்று நோதல், மனக்கலக்கம், நீர்வேட்கை, மந்தம், மயக்கம், அடிக்கடி அச்சங் கொள்ளல், வாய்கைத்துப்புளித்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டும்.

20. செவிபடு வாதம் :

காணுமே செவிதனிலே சத்தம் போலக்
கடலிரைச்சல் போலவே முழக்கங் காணும்
நாணவே செவியுறுதல் நரம்பைப் பற்றி
நனைவுகளில் மண்கொண்டு அடைத்தாற்போலத்
தோணவே தொண்டைதனிற் கபந்தி ரண்டு
சுப்பிரமாய்க் கட்டியா யிறுகி வீழும்
ஊணவே பிறர்சத்தஞ் செவியிற் கேளா
துண்மையாஞ் செவிபடு வாதந் தானே.

(பொருள்) : இதில் கடலிரைதல் போன்று காதினில் ஒலித்தலும், செவியின் நரம்பில் மண் அடைத்தது போன்று தோன்றலும், தொண்டையில் ஐயம் பெருகி அடைத்தது போன்றும் தோன்றலுமான குறிகளைக் காட்டி இருமிக் கோழைக் கக்கல், பிறர் பேசுவது செவியிற்படாமை எனுங் குறிகளும் காணும்.

21. பக்க வாதம் :

உண்மையா யுடம்பெல்லாம் வாயு வாகி
உயர்கின்ற நாடியது அசைவு மின்றிக்
கண்மையாய்க் காயமீ தினிலே யேறிக்
கசக்கியே யிழிந்துமே வலித்துக் காணும்
பண்மையாய்ப் பக்கத்தி லிசிவு முண்டாய்ப்
பாரித்துப் பணைக்கையுங் காலுங் கோணும்
வெண்மையா யுடம்பெங்கும் வியர்வை காணும்
மெலிவுபக்க வாதத்தின் விவரந் தானே.

(பொருள்) : இஃது, உடல் முற்றும் வாயு மிகுந்து பரவி, நாடி மெலிந்து அசைவற்று உடலை நையும்படி செய்து, உடலில் தாங்கமுடியாத வலியுண்டாக்கிப் பக்கத்திலிசிவு, கைகால் கோணுதல், உடல் வெளுத்தல், வியர்த்தல் என்னுங் குறிகளையும் தோற்றுவிக்கும் நோயாம்.

22 பட்ச வாதம் :

தானான கால்கோணிச் செத்தாற் போலத்
தாக்கான தரைதனிலே நடக்கொணாது
கானான கைகளொன்றும் பிடிகொ டாது
கனமான உணர்ச்சியின்றிக் கைகள் சோறும்
மானான மயிர்க்கூச்சுந் திமிர்வுண் டாகும்
வாய்தானுங் கோணியே தண்ணீர் வீழும்
பேனான பித்தம்பொ லழன்று காணும்
பிரிவுபட்ச வாதத்தின் பெற்றி யாமே.

(பொருள்) : இந்நோயில் செத்தவனுடைய கால்போல் கால் துவண்டு அசைக்க முடியாமலும், நடக்கமுடியாமலும், கைகள் ஒன்றையும் பிடிக்க முடியாமலும் உணர்ச்சியின்றிச் சோரும். அன்றியும் மயிர்க்கூச்செறிதல், உடல் திமிர் கொள்ளுதல், வாய் கோணி உமிழ்நீர் தானாகவே வடிதல், உடல் பித்தம் பெருகியதுபோல் வெப்பமடைதல் ஆகிய இக்குறி குணங்களைத் தோற்றுவிக்கும் இந் நோயின் விரிவை 590-ம் பக்கம் பார்க்கவும்.

23. பேய் வாதம் :

பெற்றியாம் பெருமையாங் காலுங் கையும்
பெருவயிறு நெஞ்சோடு விரலு மூக்கும்
எற்றியா மெறிகழுத்து மெங்கும் பற்றி
ஏக்கமாய் நொந்துடவும் பெங்கும் வீங்கி
உற்றியா மூணவே திமிர்த் தெடுத்து
உறுதியாய்ப் பிடிக்கவு மொணாம லாகும்
சத்தியாய் வாய்கசந்து மயக்க மாகுந்
தரித்திடவொண் ணாதுபேய் வாதந் தானே.

(பொருள்): கை, கால், வயிறு, நெஞ்சு, விரல், மூக்கு கழுத்து என்னு மிவ்விடங்களில் வாயுவானது பற்றி இந்நோயை அவ்வவ்விடங்களில் உண்டாக்கி வீங்கச்செய்து வலிக்கும். மேலும் அவ்வுறுப்புகளில் திமிரை உண்டாக்கி எதையும் பிடிக்க ஒட்டாமற் செய்வதன்றி, வாந்தி, வாய் கைத்தல், மயக்கம் என்னுங் குறிகளையும் காட்டி ஓரிடத்திலும் இருக்க முடியாமல் துன்புறுத்தும்.

மேலுக்குப் பூச்சு : சுரமுடன் முட்டி வீங்கிச் சிவந்து காணும் வேளையில் ஒற்றடம் இடுவது நன்றன்று. ஆதலின், மெழுகு தைலம் குக்கில் தைலம், உளுந்து தைலம் போன்றதைக் கொண்டு மெலிதாகப் பூசி, பட்டிகட்டி வைத்தால் போதும். கீலின் சிவப்பு நீங்கிய பின், வாத கேசரிதைலத்தைப் பூசி, நொச்சியிலையை வதக்கிக் கட்டி ஒற்றடமிட லாம்.

(2) வளிதீக்கில் வாயு : இந்நோயில் தன்னிலை திரிந்த வளி; தீக்குற்றத்தைப் கோக்கும் பொருட்டு வாந்தி செய்வித்து, கழியச் செய் வது நன்றாகையால், கழிச்சலையும் வாந்தியையும் உண்டாக்கக் கூடிய தான, கோடாசூரி, அல்லது சஞ்சீவி மாத்திரைகளில் ஏதேனும் ஒன்றில் இரண்டு மாத்திரைகளை உத்தாமணிச் சாறு ஒரு உச்சிக் கரண்டி அள வில் குழைத்துக் கொடுக்க ஒன்று அல்லது இரண்டு முறை வாந்தியை உண்டாக்கிக் கழியச் செய்வது நல்லது. அன்றி, மாந்த எண்ணெயில் அரை அல்லது ஒரு உச்சிக் கரண்டி கொடுக்கலாம்.

உள்ளுக்கு : (1) வங்கச் சுண்ணம், பவள பற்பம் ஓர் உளுந்தளவு கூட்டி, பசுப்பாலில் கொடுக்கவும். (2) அல்லது வங்கச் சுண்ணம், முத் துப் பற்பம், தங்கப் பற்பம் இவற்றை வகைக்கு ஓர் அரிசி எடைக் கூட்டிப் பாலில் கொடுக்கவும்.

மேலுக்கு : குக்கில் வெண்ணெய், அழற்சி வெண்ணெய், உளுந்து தைலம் முதலியவைகளைப் பூசி, பட்டி கட்டவும் ஒற்றடமிடலாகாது.

(3) வளிஐயக் கீல்வாயு : ஐயமே மிகுந்தெழு நோயாதலால், இதன் மருத்துவம் மிகவும் அறிந்து செய்தல் வேண்டும்; உணவும் அதற்குத் தக்க வாறாக இருத்தல் வேண்டும்.

(1) கழிச்சலுக்கு கோடாசூரி, மேகநாதக் குளிகை முதலியவை களில் எதேனும் ஒன்றை, சிற்றரத்தை ஊறல் குடிநீரில் கொடுக்கலாம்; அல்லது, வாத நாசத்தைலம் மேகநாதத் தைலங்களில் ஒன்றில் ஓர் அவுன்ஸ் கொடுக்கலாம்; அல்லது கழற்சித் தலைத்தில் ஒரு தேக் கரண்டி கொடுக்கலாம். இவ்வாறு வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை நோயின் வன்மைக்குத் தக்கவாறு கொடுத்தல் வேண்டும். கழிச்ச லுக்கு மருந்து கொடுக்கும் நாளில் உள்மருந்துகள் கொடுத்தல் கூடாது.

24. பிராணாலய வாதம் :

வாதமாய் வலித்துமே கண்கள் தானும்
　　வரிசையாங் கருவிழியிற் சோதி தன்னில்
ஊதமாய் முழுவெளுப்பாய் தான்ம றைந்து
　　உக்கிரமாய்ப் பருமுதுகே கிட்ட லாகும்.
நாதமாய்க் கையிரண்டு காலும் வற்றி
　　நடுக்கமே யுண்டாகி நலியுந் தேகம்
வேதமாய்ச் சொன்னதுதான் தீரா தென்று
　　விளங்குபிரா ணாலயமாம் வாதந் தானே.

(பொருள்) : இந்நோயில், வளிக்குற்றம் மிகுந்தெழுமாதலின் உடலில் வலியையுண்டாக்கி, கண்களைக் குழித்து வெளுத்துப் பார்வையை மறைத்தும், முதுகிற் பாய்ந்தோடி கைகால்களை வற்றச் செய்தும், நடுக்கலை உண்டாக்கும். இந்நோய் தீராதாம்.

25. நீர்க்கட்டுவாதம் (சலஸ்தம்ப வாதம்)

தானென்ற மலத்துவா ரத்தி னோடு
　　தாக்கியே சலத்துவா ரந்தொ டங்கி
வேனென்ற நீரிறங்கும் போது தானும்
　　வெடிபுண்ணில் நோவுபோற் கிலேசம் பண்ணும்
வானென்ற மலங்கடுத்துச் சிறுகி வீழும்
　　மயிர்க்கூச்சுண் டாகியே வருத்தம் பண்ணுந்
தேனென்ற தித்திப்புப் போல்நீ ராகும்
　　சிறுகிவிழுஞ் சலத்தம்பச் செய்கை யாமே.

(பொருள்) : வாயுவாலெழுந்த அனல், எருவாய்த்துளையைத் தாக்கி நீர்த் தாரையை வெதுப்பி, நீரிறங்கும்போது வெடித்த புண்ணில் எரிந்து நோவதுபோலத் துன்பத்தை விளைவித்தும். வெளிக்குப் போகையில் எருவாய் கடுத்துச் சிறுகச் சிறுக வெளியாகும். மயிர்க்கூச்செறியும். இனிப்பு நீர் போல் நீர் சிறுக அடிக்கடி கழியும் என்னும் குறிகுணங் களைச் காட்டும்.

**26.** சந்து வாதம் :

செய்கைதான் சந்துகளு மிகத்தி மிர்ந்து
சடமெங்கு நொந்துமே மிகவ ழற்றி
நைகையாய் நலுத்துமே மயிர்க்கூச் சிட்டு
நாணியே முன்போல நடைகொ டாது
மைகைதான் மயக்கமொடு வாய்நீ ரூறும்
வரண்டிடுமே நாவுதா னடிக்க டிக்குக்
கைகால்தான் தரணிதனிற் றரிக்கொ ணாது
சஞ்சலிக்குஞ் சந்துவாம் வாதங் கேளே.

(பொருள்) : இதில் கீல்கள் தோறும் திமிர்த்து, உடலெங்கும் நொந்து, மிகுந்த அழற்சி யுண்டாகும். மயிர்க்கூச்செறியும்; நடக்க முடியாமை, மயக்கம், வாய் நீருறல், நாவறட்சி முதலிய குறிகுணங் களுங்கூடி அடிக்கடி கைகால்கள் நிலத்தில் படியாதவாறு துன்புறுத்தும்.

**27.** சகன வாதம் :

கேளுமே கழுத்தின்கீ ழரைக்கு மேலுங்
கெடியான கரமிரண்டு மிகவே நொந்து
வாளுமே சரீரமெலாங் கனத்தி ருக்கும்
வாலிபர்க்கு மனங்கண்ணு மயக்க மாகும்
ஏளுமே யிரண்டுகண்ணு மெரிச்ச லுண்டா
மேற்றமாய் சலந்தானு மிறுகிக் காணுந்
தேளுமே கொட்டினது போற்க டுக்கும்
சகனவா தத்தினிட தீர்க்கந் தானே.

(பொருள்) : இந் நோய், கழுத்தின் கீழிருந்து அரையின் மேல் வரையும் உள்ள இடமும், கைகால்களும் மிக நோதல், உடல் முற்றுங் கனத்துக் காணல், மயக்கமுண்டாதல், கண்கள் எரிதல், சிறுநீர் கட்டல் உடல் முழுமையும் தேள் கொட்டியது போன்று கடுத்து நோதல் ஆகிய குறிகளைப் பெறும்.

**28.** அற்புத வாதம் :

தீர்க்கமாய் ஸ்திரீசங்கம் பண்ணும் போதுந்
திடுக்கெனவே வார்த்தைகோ பித்த போதும்
ஊர்க்கமா யுறத்துதான் பாடும் போதும்
உண்ணுமவல் கச்சாயம் பாக்குத் தானும்

ஆர்க்கமாய்த் தட்டியே கடித்த போது
மழகான முகந்தன்னில் வாயு கோபித்
தார்க்கமாய் மிகச்சிதறி வாயுங் கோணுஞ்
சாங்கமா யற்புதவா தந்தா னாமே.

(பொருள்) : இது பெண்ணுடன் கூடியபோதோ, திடீரெனச் சினங் கொள்ளுங் காலத்திலோ. உரக்கப் பாடும்போதோ, சாயப்பாக்கைக கடிக்கும் போதிலோ, ஒருவரை அதட்டித் திட்டும்போதோ வளிக்குற்ற மானது தன்னளவில் மிகுந்து வாயைக் கோணச் செய்யும் நோயாம்.

29. உரகத வாதம் :

அற்புதமாய் நோவாகிப் புருவங் காது
அங்கத்திற் பாதிதான் வலித்தெப் போதுந்
தற்புதமாய்க் கோணியே தலையும் வாயுந்
தாவவே மிகநடுங்கிக் குளிர்ந்து கூசும்
விற்புதமாய் விழிகளுந்தான் மிமைப்பு றாது
மெலிவாகிச் சரீரமெலாம் வியர்வை யாகும்
புற்புதமாய் வாய்நீரு மிகவே யூறும்
புகலுமோ ருரகவா தத்தின் பேரே.

(பொருள்) : இந்நோயில் புருவம், காது, பாதி உடம்பு ஆகிய இவ்விடங்களில் எப்போதும் வலியுண்டாதல், கோணுதல், தலை வாய் நடுங்கல், உடல் குளிர்ந்து மயிர்க்கூச்செறிதல், கண் இமை கொட்ட முடியாமை, உடல் முற்றும் வியர்த்தல், வாய்நீர் மிகவும் ஊறுத முதலிய குறிகுணங்கள் உண்டாகும்.

30. உரகாரி வாதம் :

பேரான நெஞ்சுடனே குரலு நொந்து
பெருமீரல் தன்னிலே நோக்கி வாயு
ஆரான வன்னத்தை இறங்கொட் டாம
லார்வசனங் கொள்ளாம லுதரம் விம்மிப்
பாரான வாயுதான் மிகவு மூறிப்
பாரமாய் நெஞ்சடைத்துப் பசித்தி ருக்குங்
கூரான மேனியுமே கூச்ச லுண்டாம்
கொடிதான வுரகாரி வாத மாமே.

(பொருள்) : இதில், நெஞ்சும் குரல் வளையும் நோகும்படி செய்தல், பெருஈரலில் வாயுகூடி உணவில் வெறுப்புண்டாக்கி அதை உட்கொள்ள முடியாமற் செய்தலால், குருதி மிகுந்து, அதனளவாக வளிக்குற்றத்தை மேலுக்குமேல் பெருகி, உடலைப்பருமனாக்கி நெஞ்சடைப்பையும், உடற் கூச்செறிதலையும் உண்டாக்கலான குறிகுணங்கள் காணும்.

31. ஆசுவதம்ப வாதம் :

வாதமா யுடல்வெளுத்து வடிவெல் லாநோம்
மயக்கமோ டிருமலா யூளை யுண்டாம்
நேதமாய் நெஞ்சடைத்துப் பொறிக லங்கும்
நெருப்பாக உடல்காணு நெடுமூச் சுண்டாம்
கோதுதான் மயக்கத்தில் மருந்தி னீட்டால்
குளிர்ச்சியாய்க் கோபிக்குங் கூச்ச லுண்டாம்
பாதந்தான் றிமிருண்டாய் முட்போ லாகும்
பருத்தஆ சுவதம்பம் பகர லாமே.

பகரவே வாதமது கோபித் தப்போ
பண்பாக ஸ்திரீகோஷ்டி யதுதான் செய்யில்
நகரவே வெகுதூர வழிந டக்கில்
நளிரான காற்றுமே பனிமேற் பட்டால்
மிகரவே காய்கள்கனி கிழங்கு தன்னை
மிகவருந்தி மீறியே தயிர்தான் கொண்டால்
முகரவே முதுகெலும்பை முறுக்கி நொந்து
முழங்காலுங் கனைக்காலுங் கடுப்புண் டாமே.

(பொருள்) : உடலில் குருதி மிகுதியும் குறைந்துள்ளபோது பெண்ணுடன் கூடல், மிக்க தொலைவு நடத்தல், குளிர்காற்று, பனி இவைகளிலீடுபடல் காய்கறி, கனி, கிழங்கு வகைகளையும் தயிரையும் ஆகிய இவற்றை மிகுதியாக உண்ணுதல் என்னும் இவற்றால் வளிக் குற்றம் தன்னளவில் மிகுந்து முதுகெலும்பைப்பற்றி முறுக்கி நோகச் செய்து, முழங்காலிலும் கணுக்காலிலும் கடுப்பை உண்டாக்கும்.

ஈதன்றி, உடல்வெளுத்து, மயக்கம், இருமல், ஈளை முதலிய நோய் களும் காணும். நெஞ்சடைப்பு, பொறிகலக்கம், உடல் நெருப்புப் போலிருத்தல், பெருமூச்சுவிடல், மருந்தீட்டால் வரும் நோயைப்போல உடல் குளிர்ச்சியடைந்து நாளுக்குநாள் இளைத்து, அடிக்கடி சினத்தல், காலடிதிமிர்தல் ஆகிய இக்குறிகளும் உண்டாகும்.

32. பாசத்தம்ப வாதம் :

கடுத்துமே சரீரமெங்குஞ் சோம்ப லாகிக்
கண்மயங்கிப் புகைந்துமே கூசிக் காணும்
வடுத்துமே சரீரமெலா மிகவும் பற்றி
வாய்வரண்டு புளித்தேப்பாய் மந்த மாகி
நடித்துமே நாடியெங்கும் படப டத்து
நரம்போடு சதைகளெல்லாம் பித்த மாகும்
அடுத்துமே இவ்வாத மசாத்திய மாகு
மடுபாசத் தம்பமென்றே யறைய லாமே.

(பொருள்) : இந் நோயில் உடல் முழுமையும் வாயுபற்றிச் சோம்ப லுண்டாய்க், கண் மயங்கி புகைந்து கூசும். வாய் வறண்டு புளித் தேப்பமாகி மந்தமுண்டாகும். நாடியெங்கும் படபடத்து ஓடும். முன்பு மிகுந்த வாயுவுடன் பித்தங் கூடுமானால் நரம்பு சதைகள் எல்லாவற்றி லும் பித்தம் கூடியே நிற்கும். இந்நோய் எளிதில் தீராதாம்.

33. நேத்திர பவுத்திர வாதம் :

அறையவே நெற்றியோடு புருவங் காது
அதட்டியே நோவாகிக் குடைச்ச லாகும்
நிறையவே யுடம்பெங்கு மூத லாகும்
நிற்கவுந்தா னொட்டாமற் றள்ளிப் போடுங்
குறையவே தேகமெலாம் குடைச்ச லாகும்
குறுவியர்வை மயக்கமொடு கூச்ச லுண்டா
மறையவே நேத்ரபவுத் திரமு மாகு
மறைசொன்ன படியானும் வழுத்தி னேனே.

(பொருள்) : இந் நோய் நெற்றி, புருவம், காது என்னு மிவ்விடங் கள் நொந்து குடைதலோடு, உடல் முழுமையும் ஊதச்செய்து, நடக்க முடியாமற் படுக்கச் செய்து, உடம்பெலாம் குடைச்சல், வியர்வை, மயக்கம், கூச்சிடுதல் என்னுங் குறிகளையும் காட்டும்.

34. தண்டக வாதம் :

வழுத்தவே மூலாதா ரத்தைப் பற்றி
மருவியே மேலேறி முதுகு மட்டாய்
விழுத்தவே சிரசில்வந்து வியர்வு மாகி
விகுவாக நோவாகி மேனி கன்றிப்

பழுத்தவே யுடம்பெங்கும் பஞ்சு போலாம்
பாங்கான மலசலமு மஞ்ச ளாகுங்
குழுத்தவே தண்டகமாம் வாதந் தன்னைக்
கூறினோங் குணமெலாம் கூர்ந்து பாரே.

கூர்ந்திட்ட மலசலங்கள் துரித மானால்
கொண்டடக்கிப் பின்புதான் கொடிதாய்த் தள்ளி
ஊர்ந்திட்ட சரீரத்தி லுதிர மீறி
உறத்தேய்த்துத் தலையதனி லெண்ணெய் வர்க்கில்
வார்ந்திட்ட வழிநடக்கில் மெத்த வுந்தான்
வாதந்தா னுற்பவித்து நடைகொ டாமல்
நார்ந்திட்ட நரம்போடு எலும்பிற் சூழ்ந்து
நணுகியே யோடிநெஞ்சி லேறுந் தானே.

(பொருள்) : இஃது யோகத்தின் முதல் நிலையில் நுழையும்போதுண் டாகும் கேட்டால், முதுகுத்தண்டின் கீழ்ப்புறமிருந்து தலைவரையிலும் கிளம்பிய வாயுவினால் ஏற்படும் நோயாகும். இந் நோயில் வியர்த்தல், உடல் இறுகுதல், வலித்தல், உடல் பழுத்துப் பஞ்சுபோல் வெளுத்தல், எருவும் (மலமும்) சிறுநீரும் மஞ்சளாதல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

தண்டக வாயுவிலுண்டாகும் கழிச்சலை அடக்கி வருதலால், சின்னாட்கள் சென்ற பின்பு, அக் கழிச்சல் அடக்க முடியாத அளவில் மிகுந்து கழியத் தொடங்கும். அதனால், உடல் முழுமையுமுள்ள குருதி தன்னளவில் மிகுந்துபாயும். அன்றியும், இந்நோய் முழுமையும் போகாதிருக்கையில், தலைமுழுகல், அதிக தொலைவு நடத்தல் இவற்றை மேற்கொள்ளில், வளிக் குற்றம் மிகுந்து நரம்பு எலும்பு களைப் பற்றிச் சூழ்ந்து நடக்கமுடியாமற் செய்து, அவ்வாயு நெஞ்சு (விசுத்தி) வரையும் பாயுமென அறிக.

35. அட்டதந்திரவாயு

ஏறியே புணர்ச்சியற்று உள்ளுக் குள்ளே
இருந்தால் தானழைத்தாற்போர் சத்த முண்டாங்
காறியே கண்ணீருமுண்டாய் வாய்நீர் கசந்துமே
முன்போல் விழித்திடாமல்

பாரீயே பற்கிட்டி முச்சு மற்றுப்
பல்காலும் பிதற்றியே பிணத்தைப் போலச்
சீறியே யடிக்கடிக்குச் சிலேட்மமுண்டாம்
செருக்குமட்ட தந்திரத்தின் செயலதாமே

(பொருள்) : இந்நோய், மேற்கூறியவாறு நெஞ்சு (விசுத்தி) வரை பரந்துநின்ற அவ் வாயுவினால் தோன்றி, உடல் உணர்ச்சியற்றுப் போதல், உள்ளுக்குள்ளே ஒரொலியுண்டாதல், கண்ணீர் வடிதல், வாய்நீர் கசந்து ஊறல், கண்ணைத்திறக்க முடியாமலிருத்தல், பற்களைக் கடித்தல், மூச்சுவிட முடியாமை, பலகாலும் வாய் பிதற்றல், பிணத்தைப்போல் கிடத்தல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும். அன்றியும், இந் நோயில் ஐயப் பெருக்கும் உண்டாம்.

36. வசனாவாதம் :

கானான தேகமெங்குந் தான்வ லித்துச்
சங்கற்ப விகற்பமாய்க் கிலேச மாகிப்
பானான பலகுணங்கள் மிகவே யாகும்
பரமசிவ னடியார்கட் கணுகி டாது
தூனான துஷ்டரையே பற்றி நிற்குந்
துடிப்புண்டாய்ச் சோரவே சொருகி வீழுந்
தானான காயமது கதித்துக் காணுங்
கனவசனா வாயுவின்றன் கணக்குத் தானே.

(பொருள்) : உடல் முழுமையும் வலித்து நொந்து மனத்தில் வருத்தம் தோன்றும், குணம் பலவிதமாக மாறும். உடல் துடிக்கத் தொடங்கும். அதனோடு கண் சொருகல், மயக்கமுண்டாதல், உடல் கனத்தல் என்னும் குறிகுணங்களும் காணும்,

37. மகவாதம் :

கணக்காகக் கதித்துமேல் வயிற்றைப் பற்றிக்
கருகியே பொருமித்தான் வலித்து வீங்கிக்
கிணக்காகக் கீழ்முதுகில் விதன மாகிக்
கிஞ்சுகமாய் விதனவூ ணற்ப மாக்கும்
வணக்காக மலசலந்தான் பலகா லுண்டாம்
வருத்தமாய்ச் சடந்தானு மழன்று போகும்
மணக்காக மேனியுமோ மஞ்ச ளாகு
மகவாத குணமென்றே மருவ லாமே.

(பொருள்) ; இந் நோய், உடல் வெப்படைந்து வயிற்றைப்பற்றி இறுக்கிப் பொருமலை உண்டாக்கி, வலித்து வீங்கச் செய்து கீழ் முதுகில் நோதல், உணவு செல்லாமை, நீரும் எருவும் பலமுறை போதல் என்னுங் குறிகளைக் காட்டி எளிதில் நோய் தீராமல் உடலினை வாட்டி வெப்படையச் செய்து உடல் முழுமையும் மஞ்சளாக்கும்.

38. மிருத்துவாதம் :

மருவலாய் முடியவாய் தனிலொ துங்கி
மண்டியே மேனோக்கி யபான வாயில்
எருவலா யெருவாயில் நுரைப்பட் டிறுகி
எப்போதும் தேகமெலாம் வலிக்குங் கண்டாய்
துருவலாய் மலந்தள்ளுஞ் சோபை யாகும்
சுறுக்கென்று கால்கையுஞ் சோர்ந்து போகும்
பருவலாய் மனதுதான் பயமு முண்டாய்ப்
பாரமிருத்து வாதத்தின் பண்பு தானே.

(பொருள்) : வளிக்குற்றமானது கீழ் நோக்குக்குக் காலைத் தூண்டச் செய்து, எருவாயை அடைத்து எருவை இறுக்கி இந் நோயை வருவிக்கும். இதில், உடலெல்லாம் வலித்தல், அடிக்கடி கழியச் செய்தல், உடல் வெளுத்து வீங்குதல், காலும் கையும் சோர் வடைதல், மனதில் அடிக்கடி அச்சமுண்டாதல் என்னுங் குறிகளைக் காட்டும்.

39. உதரவாதம் :

பண்பான குட்சியைத்தான் பொருமி நொந்து
பருத்துமே மிடருதான் கனத்து மெத்த
எண்பான விக்கலுமே இளைப்புண் டாகி
இணைவிழிநீர் பாய்ந்தேக மிளைப்புண் டாகி
மண்பான வாதமது நிரம்பி யேறி
வாயினால் மலந்தானும் புறப்பட் டாற்போல
விண்பான நீரதுவும் விடுத்து நிற்கும்
மிகுமுதர வாதமென்றே விளம்ப லாமே.

**(பொருள்):** மேல்நோக்குக் கால், வயிற்றைப்பற்றித் தீனிப்பையை யணுகி ஆங்குப் பொருமலையுண்டாக்கி, கழுத்துக்கனத்தல், விக்க லெழுதல், இளைப்புண்டாதல், கண்ணீர்பாய்தல், என்னுங் குறி குணங்களோடு, தன்னளவில் மிகுந்த வாயுவின் பயனாக எரு வாய் வழியாக வெளிப்படுவது போலத் தோற்றுவித்து, அஃது ஒரு வழியிலும் வெளிப்படாமல், சிறுநீர் மட்டும் வெளிப்படும்.

40. மூத்திர வாதம்

விளம்பவே விடுமூத்ரம் வாயிற் றோன்று
மீறியே நெஞ்சுதனி லழன்று நோகும்
நிளம்பவே நெஞ்சுதனில் வீக்க முண்டாம்
நித்திரையில் லாமலே வெதும்ப லாகும்
வளம்பவே வயிறுதனில் நோவு மாகும்
மகத்தான விக்கலுட னிரும லுண்டாம்
அளம்பவே அடிவயிறு கனத்து நோகு
மசைமூத்ர வுதிரமென்ற வாதந் தானே.

(பொருள்) : இந் நோயில், வாயுமிஞ்சி நெஞ்சுதனில் அழல்போல் எரிச்சலுண்டாகி நோகும். அன்றியும், நெஞ்சில் வீக்கம் உண்டாய் தூக்கமின்மை, உடல் வெதும்பல், வயிற்றுநோய், விக்கல், இருமல் அடிவயிறு கனத்து நோதல், சிறுநீர் அளவுக்கு மிஞ்சியிறங்கல் என்னுங் குறிகளுமுண்டாம்.

41. சுக்கிலவாதம் :

வாதமா முடலுருகி மிகவும் வற்றி
மலமூத்திரஞ் சிக்கியே கீழ்வி ழாமல்
நாதமாம் நாக்கோடு மூக்கு தன்னில்
நணுக்கமா யுதிரந்தா னருவி பாயுஞ்
சேதமாய்ச் சேட்டுமமுங் கோழை யுண்டாஞ்
செயலோடு சுவாசமா யருசி யுண்டாஞ்
சூதமாய்ச் சுக்கிலந்தான் றுன்னி யாகுந்
துரியசுக் கிலவாத சூட்சந் தானே.

(பொருள்) : இதில், உடல் மிகவும் உருகி வற்றிச் சிறுநீரும் எருவும் (மலமும்) சிக்குப்பட்டு வெளியாகாமல், நாக்கு, மூக்கு இவைகளில் குருதிப் போக்குண்டாகி, ஐயம் பெருகி, கோழை கட்டல், மேல் மூச்சுவிடல், சுவையின்மை என்னுங் குறிகள் தோன்றி வெண்ணீர் (சுக்கிலம்) கெடும்.

42. சவ்விரங்கவாதம் :

சூக்கமாய்த் தெய்வவுடல் திகைத்தங் கூர்ந்து
தேகமோ வெளுத்துப்பின் கறுப்பு மாகும்
ஆட்சமா யருசியொடு வாந்தி யுண்டா
மடிக்கடிக்குத் தண்ணீர்தா னதட்டிக் கேட்கும்
ஊட்சமா மன்னத்தை முன்னே காணில்
ஒக்காளந் தன்னொடுப் புசமு மாகுந்
தாட்சமாய்ச் சலிப்போடு உறக்க மாகுஞ்
சவ்விரங்க வாதமென்றே சாற்று நூலே.

(பொருள்) : இந்நோய், உடலைக்கெடுத்து வெளுத்துப் பின் கருமையாகி, சுவைகேடு, வாந்தி, உணவில் வெறுப்பு, நீர்வேட்கை, ஒக்காளம், அடிக்கடி தூங்கல் என்னுங் குறிகுணங்களைக் காட்டும்.

43. ஊர்த்துவவாதம் :

நூலான சுவாசந்தான் மேலே நோக்கி
நுணுக்கமா மிடையுடனே வயிறு விம்மி
வாலான வாய்தனிலே நுரையு முண்டாய்
வாய்கழுத்து மார்புமே மிகவு நொந்து
ஆலான வங்கமெலா மழன்று காணு
மடித்துடையு மடிக்கையு மிகவே வற்றும்
பாலான மேனியுமே பசுமை காணும்
பருவூர்த்வ வாதமென்றே பகர லாமே.

(பொருள்) : மேல்நோக்கி மூச்சுவிடல், இடுப்பு, வயிறு, இவைகள் விம்மிக்காணல், வாயில் நுரை தள்ளல், வாய், கழுத்து, மார்பு இவ்விடங்களில் மிகவும் நோதல், உடல் முழுமையும் அழன்று காணல், அடித்தொடையும் அடிக்கையும் மிக வற்றிப்போதல், உடல் பசுமை யாகக் காணல் என்னுங் குறி குணங்களையும் இந்நோய் கரட்டும்.

44. அஞ்ஞானத்தம்பம் :

பகர்கின்ற குரலதனைப் பற்றி நொந்து
பாரமாய் வலித்துமே கீழ்நோக் கெய்தி
நிகர்கின்ற கண்ணதனை மூடிக் கொண்டு
நெறுநெறென மூக்காலே சுவாசம் போகுந்
திகர்கின்ற விரண்டுசெவி தன்னி னொந்து
செழுமையாங் கொட்டாவி வாய்மூ டாமல்
மகர்கின்ற வாய்வறண்டு நெஞ்சு காயும்
அஞ்ஞானத் தம்பமாம் வாத மாமே.

(பொருள்) : இந்நோயில், வாயுவானது, குரலைப்பற்றிக் கொண்டு அதை நோகச் செய்யும். அன்றியும் இது கண்ணை மூடுதல், பெரு மூச்செறிதல், காது நோதல், வாய் ஓயாமல் கொட்டாவி விடுதல், வாய் வறளல், நெஞ்சுலர்தல் முதலியவற்றையும் பிறப்பிக்கும்.

45. சிரக்கம்பவாதம் :

தம்பமாய் உதிரகண்ட நரம்பிற் புக்கித்
தலையோடு சரீரமெலாந் தாக்கிப் புக்கும்
கம்பமாங் காதிரண்டு மிகவுங் கேளா
கையோடு காலிரண்டும் வசக்கே டாகும்
நிம்பமாய் நினைவுதான் கலங்கிக் காணும்
நெடுமூச்சுங் கொட்டாவி நித்ரை யாகும்
சிம்பமாய் தலைநடுங்கிக் கனப்பு முண்டாஞ்
சிரக்கம்ப வாதமென்றே செப்ப லாமே.

(பொருள்) : வாயுவினால் குருதி பொங்கி, அது நரம்புகளிற் புகுந்து, தலைமுதல் உடம்பு முழுவதையும் தாக்கி, காது கேளாமை, கைகால்கள், வசமழிதல், நினைவு கலங்கல், நெடுமூச்சு, கொட்டாவி, மிகு தூக்கம் முதலியன ஏற்படல், தலைநடுங்கல், தலைகனத்தல் என் னுங் குறிகளைக் காட்டும்.

6. சதஸ்தயம்பவாதம் :

செப்பவே நடுநாக்கு நுனிநாக் குந்தான்
தெறித்துமே தேள்விஷம்போற் கனவு மாகும்
அப்பவே யடிநாக்குத் தான்து டிக்கு
மழகான வாய்தானும் அதிர்தல் தோன்றும்
உப்பவே யுண்ணாக்கிற் கட்டு தூக்கு
முருசிதா னில்லா மலூறும் நாக்கு
வெப்பவே விஷந்தானு மமுதம் போலாம்.
வெளியான சதஸ்தம்ப விதியி தாமே.

(பொருள்) : நடுநாக்கிலும் நுனிநாக்கிலும் தேள் கொட்டினாற் போல் விறுவிறுத்து, அடிநாக்குத் துடிக்கும். வாய்நடுக்கல், உள் நாக்கு வீங்குதல், நாச்சுவை யறியாமை, நச்சுப் பொருள்களை யுணணி னும் அதன் உண்மைச் சுவையை அறியமுடியாமல் இருப்பினும் நஞ்சுப் பொருளும் இனிக்கும் ஆகிய குறிகளைக் காட்டுவிக்கும்.

47. வச்சிரரூபம் :

விதியான பிடரிதனை மிகவி ழுத்து
மிகக்கண்க ளசைவின்றி மேலே நோக்கித்
ததியான குறோக்கைபோற் சத்தம் பெற்றுத்
தலைநோவு மிகுதியாய் நடுக்க லுற்றுக்
குதியான நரம்பிழுத்துத் திமிருண் டாகிக்
கொட்டாவி சோம்பலாய்க் கூச்ச லுண்டாய்
வதியான மலசலமுஞ் சுருக்கி வீழும்
வச்சிரரூ பந்தன்னின் வகையி தாமே.

(பொருள்) : இந்நோயில், பிடரியல், இழுப்புண்டாகி கண்கள் இமைகொட்டாமல் மேல் நோக்கி நிற்கும், மிக்க குறட்டை யுண்டாம் தலை நோதல், மிகுதியாய் நடுங்கல், நரம்பிழுத்துத்திமிர்தல், கொட் டாவி வருதல், சோம்பலுண்டாதல், மயிர்க்கூச்செறிதல், மலமும் நீருங் கட்டல் என்னுங் குறிகளை காட்டும்.

48. கண்டகிராகம்:

வகையான குரலதனைப் பற்றி நொந்து
மார்போடு பிடரியினில் வலியுண் டாகி
நுகரான சரீரமெலாம் நொந்த ழாற்றி
நுணுக்கமாய்ச் சுவாசமது புறப்ப டாமல்
முகையான நாவாலே மூச்சு மாறி
முகத்திலே வியர்வாகி விலாநோ வுண்டாம்
பகையான வன்னத்தைப் பருகொட் டாது
பரியகண்ட கிரகத்தின் பண்பு தானே.

(பொருள்) : இந்நோய் குரல்வளையைப்பற்றி நொந்து, மார்பு, பிடரி இவைகளில் வலியை உண்டாக்கும். உடம்பு முழுமையும் நொந்து அழலும். மூக்கின் வழி மூச்சு வெளிப்படாமல் வாயின் வழியே வெளிவரும். அன்றியும், முகத்தில் வியர்த்தல், விலாப்பக்கம் நோதல், உணவை உண்ண ஒட்டாமை ஆகிய குறிகளையுங் காட்டும்.

49. நகாரிவாதம் :

பண்பான குரலதனை விலாப்பக் கங்கள்
பல்கியே பருநரம்பைப் பற்றி நோகும்
வண்பான கீழ்வாய்தான் மேல்வாய் தன்னில்
வாயுவங்கே பூரித்து வசனங் கொச்சை
நண்பான நடுநாக்கு மரம்போ லாகுந்
தசையான தேகமெங்குஞ் சொறித லாகும்
விண்பான மேலுதடு தடிப்பு மாகு
மீறியதோர் நகாரியாம் வாத மாமே.

(பொருள்) : இந்நோய், குரல்வளை விலாப்பக்கம் என்னுமிவ்விடங்களிலுள்ள பெரிய நரம்புகளைப்பற்றி நோகச் செய்யும். கீழ்வாயில் வாயு பெருக்குண்டாம். வார்த்தைகளைக் குழறச் செய்யும். நடு நாக்கை மரம் போலாக்கும். உடல் முற்றிலும் நமையுண்டாகும். மேலுதட்டைத் தடிக்கச் செய்யும்.

50. பதிதவாதம் :

காரியாய் மிகவார்த்தை பேசும் போது
கழுத்திலுள்ள நரம்புமிக விசைத்து நோவாம்
வாரியாய் வார்த்தைகள்தான் விக்கிப் பேசி
வார்த்தைகள்தான் பேசுவதிற் றெரிந்தி டாது
நாரியார் போகமது விரும்பி டாது
நலுக்கமாய்த் தாதுவெலா மிளைத்துக் காணும்
பாரியா யடிக்கடிக்குப் பசியே யுண்டாம்
பதிதமாம் வாதமென்றே பகர லாமே.

(பொருள்) : இந்நோயில், மிதியாகும் பேசின் கழுத்து நரம்பு மிகுதியும் நோகும். தெற்றிதெற்றிப் பேசுவதால், அவ்வார்த்தைகள் யாரும் அறியுமாறு தெளிவாயிரா, ஆண்மை (தாது) குறைவதால் போகத்தில் விருப்பம் உண்டாகாது. அடிக்கடி பசியுண்டாகும்.

51. யோனி சூலை :

பகரவே மலத்துவாரந் தன்னிற் றோன்றிப்
பக்கமா யிறங்கியே யோனி பற்றித்
திகரவே குறங்கடியு மறையு முளளுஞ
சிக்கெனவே கோல்கொண்டு குடைந்தாற் போல
அகரவே யடிக்கடிக்கு நோவு மாகு
மாசனமுங் கடுத்துமே நீரி றங்கும்
நகரவே நடக்கும்போ துறக்க மாகு
நவில்யோனி சூலையென்றே நாட்ட லாமே.

(பொருள்) : இதில், வாயுவானது எருவாயிற் றொடங்கி (மூலம்) அதின் பக்கமாகவே பாய்ந்து கருவாயை (யோனினை)ப் பற்றி, தொடை, மறைவிடம், இவற்றுள் கோல்கொண்டு குடைவது போன்று வலியை உண்டாக்கும். எருவாய் கடுத்துச் சிறு நீரிரங்கும் ; நடக்கும்போதும் தூக்கம் வருவது போலிருக்கும்.

52. கர்ப்ப சூலே:

நாட்டமாய்க் கன்னியர்கள் துடக்குக் காலை
நலமான கெற்பத்தின் ரேகை தன்னிற்
பாட்டமாய்ப் பற்றியே வாயு தோன்றிப்
பழகியே புருஷசங்கை பண்ணும் போது

தாட்டமாய்த் தடைப்பட்டு மலத்தைச் சிக்கித்
தத்தளித்துக் கடுப்பாகி விலாப்பக் கம்போம்
கேட்டமாய் மனதுதனிற் கிலேச முண்டாங்
கெற்பமாஞ் சூலையென்றே கீர்த்திப் பாயே.

(பொருள் ) : சூலகத்தில் வாயு கூடியுள்ளபோது, சூலகத்தில் (கருப்பையில்) வெப்பமுண்டாகி எருவை (மலத்தை)க் கட்டும். அதனால், தாங்க முடியாத வலி, அடிவயிற்றிலிருந்து விலாப்பக்கம் வரையிலும் பாய்ந்து துன்புறுத்தும். மனதில் கவலையுமுண்டாகும்.

53. அட்ட சூலை :

கீர்த்தியாய் மலங்கடுக்குங் கெடியாஞ் சோபங்
கீழான வருரேகை தனிலே நின்று
ஆர்த்தியா யலந்திடக்கோ பித்து நின்று
அதட்டியா யிருகுறங்கும் யோனி தாழும்
கார்த்தியா யுமித்தணலின் காற்ற ளாவிக்
கடினமாய் நீர்தானுந் துளியாய் வீழும்
வேர்த்தியாய் நெறுநெறெனக் கடிக்கும் பல்லை
மீறுமட்ட சூலையிட வினையந் தானே.

(பொருள்) : இந் நோய், கீழ நரம்பில் வாயுகூடி மிகுந்து, தனக்குத் துணையாக அழலையுங் கூட்டிக் கருவாயைத் தாக்குவதனால், எருவைக் கட்டுப்படுத்தி, இறுக்கிய அவ் வாயு, சூலகத்தையும் தாக்கி, அதனைக் கீழிறங்கச் செய்து, அதினின்று துளித் துளியாக நீரைக் கசியச் செய்யும்,. இதனில் காணும் வலியின் கொடுமையால் பல்லை நறநறவெனக் கடிக்கவும் செய்யும்.

54. குடல் வாதம்:

வினையாகப் பலவிதமாய்க் குடலைப் பற்றி
மிடுக்காக வலித்துமே நாபி தன்னில்
அனையாக வடிவயிற்றில் நொந்து நொந்து
அழகான விரைதன்னில் வலித்து வீங்கி
மினையான மிக்கவலி யிழிந்து நோவாம்
மிடுக்கான நளிரோடு காய்ச்ச லுண்டாந்
தினையாகத் திடுக்கிட்டுக் தலையு நோவாஞ்
செப்பினோங் குடல்வாதச் சேதி தானே.

(பொருள்) : இவ்வாதமானது, குடலைப் பற்றிப் பலவிதமான வலியை யுண்டாக்கி நாபி முதல் அடிவயிறு வரையில் நோயைப் பிறப்பிக்கும். விரையை வலித்து வீங்கச் செய்து, குளிர்ச்சுரம், தலை நோய் இவைகளையும் வருவிப்பதான குறி குணங்களைப் பெறும்.

55. அசுவ வாதம் :

சேதியாய்ச் சிறு குதிரைப் பாய்ச்ச லாகிச்
செகமெல்லா மிகக்குலுக்கிக் கோட்டி பண்ணி
மேதியாய் மேலேறிக் கீழே நோக்கி
வெறிகொண்டாற் போல்மிரண்டு அண்டம் வீங்கி
ஏதியா யிரண்டுவிரை யுள்ளே புக்கி
இணையிலிங்க முட்சுருக்கி யிழிந்து நோவாம்
ஆதியா மடிவயிறு இசிவு காணு
மணியசுவ வாதமென்றே யறிய லாமே.

(பொருள்) : இந்நோயில் வாயுவானது, சிறு குதிரை துடித்துப் பாய்வது போல உடம்பு முழுமையும் பாய்ந்து, உடலைக் குலுக்கித் துன்புறுத்தும். மேலும் எருமை பாய்வதுபோல மேலேறிக் கீழ் பாய்ந்து, நோயினனை வெறி பிடித்தவன் போல் மிரளச் செய்து, விரை இரண்டையும் உள்ளே புகச் செய்து, ஆண் குறியைச் சுருங்கச் செய்து, அங்கு முட் சொருகியது போல வலிப்பதாகும். அடிவயிற்றில் இசிவுமுண்டாகும்.

56. மெச்சுவாதம் :

அறியவே யாண்மையா மிலிங்கந் தன்னை
டைவாகச் சுருக்கியே குழிந்து நோவாம்
நெறியவே நீர்கடுத்துச் சிவந்து காணும்
நேர்மையாய் குளிரோடு சுரமு முண்டாம்
வறியவே தியக்கமொடு மயக்க முண்டாம்
வாடியே தேகமெங்கு மசதி யாகுங்
குறியவே கொட்டாவி சோம்ப லாகுங்
குறிப்பான மெச்சுவா தமுமா மென்றே.

(பொருள்) : இந்நோயானது, ஆண் குறியைச் சுருங்கச் செய்து நோயை யுண்டாக்கி, சிறு நீரைச் சிவந்து கடுப்புடன் இழியச் செய்யும். அதனோடு, குளிர்சுரம், தயக்கம், மயக்கம், உடல் வன்மைக் குறைவு கொட்டாவி யெழுதல், சோம்பல் முதலிய குறிகளையும் காட்டும்.

57. மூடு வாதம் :

மெச்சான பிடரிநரம் பதனைப் பற்றி
மிடுக்காக விரங்கியே மலத்து வாரம்
மிச்சான ததுகலங்கி மேலே யேறிப்
புறவடியுங் குறங்கடியுஞ் சுற்றி நொந்து
குச்சான கோவணந்தான் தளைத்தாற் போலக்
குறுக்காகி லிங்கத்தில் வலித்து நொந்து
கச்சான காற்றுக்கு மிகுதி யாகுங்
கடுமூடு வாதத்தின் கருமந் தானே.

(பொருள்) : இந்நோயில் வாயுவானது, பிடரி நரம்பைப் பற்றிய கீழ் நோக்குக் காலைத் தூண்டி எருவைக் கட்டிய அவ்வாயுவே மேல் நோக்கி உடல் முழுமையும் பரவப்பட்டு, புறங்காலையும், தொடையின் கீழ்ப்பிரிவையும் ஆண் குறியையும் நோகச் செய்யும் என்னுங் குறி குணங்கள் காணும்.

58. வசு வாதம் :

கருமமாய்க் குடல்முடங்கி வயிறு ளைந்து
கனமாக நொந்துமே மயிர்க்கூச் சிட்டுப்
பருமமா யுடம் பெங்குந் தடிப்புண் டாகிப்
பாரமா யுடல்கனத்துப் பங்க மாகும்
வருமமாய்த் தோலெல்லா மிறுகிக் கொண்டு
மாசற்ற வுடம்பெல்லாம் வாட்ட மாகும்
உருமமாய் அசனந்தான் வேண்டா தாகும்
உயர்வசுவா தத்தினிட வுண்மை தானே.

(பொருள்) : இந்நோய், குடல் சுருங்கி, வயிறு கனத்து, நொந்து, மயிர்க் கூச்செறிதல், உடலெங்கும் தடித்தல், பாரமாக உடல் கனத்தல், தோல் இறுகுதல், உடல் சோர்தல், உணவு வேண்டாமை என்னுங் குறிகளைக் காட்டும்.

59. பீஜஸ்தம்பம் :

உண்மையா யிரண்டுவிரை தானும் வீங்கி
யுயர்கின்ற புண்போல் வலித்து நொந்து
ண்மையாய்ச் சலாகையது ஏற்றி னாற்போற்
றாக்கான பீசமெங்கும் வலித்து நொந்து
வெண்மையாய் நீரருவி துளியாய் வீழும்
விம்முமே யடிக்கடிக்குத் தண்டு தானும்
பெண்மையாய் மனமதுதான் பித்தல் காணும்
பீசமாந் தம்ப மென்றே பேசலாமே.

(பொருள்) : இந்நோயில், இரண்டு விரைகளும் வீங்கி, புண்போல மிக்க நோயுற்று, அதில் ஈட்டி கொண்டு குத்தியதுபோன்று வலிக்கும். சிறு நீரருகிக் துளித்துளியாய் விழும். ஆண் குறியும் அடிக்கடி விம்மிக் காணும். மனத் தளர்ச்சியும் வாய் பிதற்றலும் உண்டாகும்.

60. தந்திர வெட்டி :

பேசவே விரையிரண்டும் பருத்து வீங்கிப்
பெருக்கவே நோயோடு இசிவு மாகிக்
காசவே களகளவென் றிரைச்ச லாகிக்
கனமான குடல்தனிலே சத்தித் தேதான்
வாசவே வயிற்றினைத்தான் முறுக்கி மெத்த
வலியோடு குளிர்தானுஞ் சுரமு முண்டாம்
ஆசவே யடிவயிற்றிற் குத்த லுண்டாந்
தந்திரமா வெட்டியென்றே யறிந்தி டாயே.

(பொருள்) : இதில் இரண்டு விரையும் பெரியதாக வீங்கி வலியும் இசிவு முண்டாகும். குடலில் காற்றிரைவது போல் ஒரொலியை எழச் செய்து வயிற்றை முறுக்கி மிகுந்த வலியை உண்டாக்கி குளிர்ந்து சுரமுண்டாய், அடிவயிற்றிற் குத்தலையும் உண்டாக்கும்.

61. வாத சுரோணிதம்:

அறிந்திட்ட வங்கமெலா மெலிவு மாகி
அசைவான தவ்விடங்கள் வீக்க மாகி
நறிந்திட்ட நடைகொடா தானி ருத்தல்
நலியாகி மொழிமொழிய வீக்க மாகச்

சொறிந்திட்டு தேகமெங்கு மசைவு காணல்
சோற்றின்மே னினைவின்றித் தூக்க மாதல்
வறிந்திட்ட வாயதனி னீர்தா னூறல்
வாதசுரோ ணிதந்தானும் வகுத்தவாறே.

(பொருள்) : இந்நோய் உடல் மெலிந்து அசையக்கூடிய பூட்டுகளில் வீக்கத்தை உண்டாக்கி நடக்க முடியாமற் படுக்கையிற் கிடக்கச் செய்யும். நோய் முதிர முதிர வீக்கம் மிகுந்து சொறியச் செய்யும். மேலும் உடல் நடுக்கம், உணவில் நினைவின்றி மிக்க தூக்கத்தை வருவித்தல், வாயில் நீரூறிக்கொண்டே இருத்தல் ஆகியவற்றையும் பிறப்பிக்கும்.

2. சித்து வாத சுரோணிதம் :

வாறான சரீரமெலா நுழைந்தே யூதும்
மாசற்ற தோல் தானுந் திரைந்து போகும்
நாறான நார்போல நரம்பு கட்கும்
நாக்குத்தான் வழவழத்துக் கோழை யாகும்
நூறான நெருப்புத்தான் பட்டாற் போல
நொந்துமே சடமெல்லாங் கொப்பு ளிக்கும்
வீறான உரிந்து பின்னை வெதும்பி வீங்கும்
மிக்கசித்து வாதசுரோ ணிதம தாமே.

(பொருள்): வாயுவானது, உடல் முழுமையும் நுழைந்து தனக்குத் துணையாக அழல் குற்றத்தைக் கூட்டிப் பெருக்கி, குருதியின் வன்மையைக் கெடுத்து உடலில் வீக்கத்தை யுண்டாக்கி, தோலை சுருங்கச் செய்து, நரம்புகளை நார் போல் துவளச் செய்யும். அத்துடன் நா வழுவழுத்து கோழையைப் பெருக்கும். நெருப்புப் பட்டது போல உடலெல்லாம் கொப்புளித்துப் பின்பு சூடாகி வீங்கும் என்னும் குறிகளையும் உண்டாக்கும்.

63. வைகித வாதசுரோணிதம் :

ஆமென்ற வீங்கினதோர் இடத்தில் ரத்த
மழுத்தமாய்த் திரண்டுமே யெங்கும் பாய்ந்து
ஓமென்று ஒட்டியே திரண்டி ருக்கு
முறுதியாய்த் தொட்டுடனே மெத்தென் றாகுந்

தேமென்ற தேகமெங் கணுகிச் சிக்குஞ்
சீறியதோ ரிருமலோடு காய்ச்ச லுண்டாம்
பாமென்ற சடந்தனிலே திமிருண் டாகும்
பாரமாய் வைகிதமாம் வாதந் தானே.

(பொருள்) இந்நோய், மேல் கூறிய நோய்க்குத் துணை நோயாக வருதலின், இதனில் வீங்கின இடத்தில் தங்கிய இரத்தம் இறுகித் திரண்டு எங்கும் பரவி, உடலிலுள்ள கணுக்களில் கூடிச் சீறுவதோடு இருமல், சுரம், உடற்றிமிர் முதலிய குறிகளைக் காட்டும்.

64. உதிரவாத சுரோணிதம் :

வைகிதமாய்க் கணைக்காலு முழங்கால் தானு
மற்கடஞ் சந்துபுற வடியும் வீங்கிச்
செய்கிதமாஞ் சிறுவிரல்கள் மிகவு நொந்து
சிந்தைதடு மாறியே சலிப்புண் டாகும்
பைகிதமாம் பயித்தியத்தில் வாத மிஞ்சிப்
பாரமா யுற்பவித் தழலுண் டாகும்
உய்கிதமா மசனமது தானும் வேண்டா
உதிரவாதச் சுரோணிதத்தி னுணர்ச்சி யாமே.

(பொருள்) இந்நோய் கணைக்கால், முழங்கால், சந்து, புறவடி, பூட்டு இவைகளில் வீங்கி சிறு விரல்களில் மிகவும் நோயைப் பிறப்பிக்கும். அதனோடு, சிந்தை கலக்கம், சலிப்பு, பித்து, உணவு வேண்டாமை, என்னும் குறிகளை யுண்டாக்கும். இஃது அழல் குற்றத்தோடு மிகுந்து கூடிய வாயுவால் உண்டாவதாகும்.

65. பயித்திய வாத சுரோணிதம் :

உணர்ச்சியாய்ச் சுரோணிதந்தான் மிகவெ தும்பி
ஊக்கமாய்த் தேகமெங்கு மிகவே நொந்து
முணர்ச்சியாய் முழங்கால்கள் முழங்கை யொக்க
முனையான சிறுவிரல் கன்னம் நெற்றி
தணர்ச்சியாய்ச் சந்துசரு வாங்க மெங்குந்
தாட்டிக மாய்க்குடைந்து சுரமு முண்டாம்
பணர்ச்சியாய்ப் பாண்டதுபோன் மேனி யாகும்
பயித்தியவாத சுரோணி தத்தின் பண்பு தானே.

(பொருள்) : இந்நோயில் உடலில் உள்ள குருதி, பித்தவாதக் குற்றப் பெருக்கால் மிகக் கொதித்து, உடல் முழுமையும் பாய்ந்து, நோகச்செய்து; முழங்கால், முழங்கை, சிறுவிரல்கள், கன்னம், நெற்றி முதலியவைகள் சோர்ந்து, எல்லா உறுப்புகளும் நொந்து, சுரத்தையும் பாண்டு சோபை நோயையும், பயித்தியத்தையும் பிறப்பிக்கும்.

66. சிலேட்டும வாத சுரோணிதம் :

பண்பாக வுடல்குளிர்ந்து வயிறு வீங்கிப்
பதைப்பான விடந்தொட்டாற் போல நோவாந்
திண்பான சிரசு நெற்றி நோக்கா டுண்டாஞ்
சிலேட்டுமமாய்க் கோழையொடு சுவாசமாகும்
மண்பாக மயக்கமொடு கனவுமுண்டாம்
வாய்வறண்டு ருசியில்லா வருத்த மாகும்
நண்பாக நாடியுமே படப டக்கும்
நற்சிலேட்ம சுரோணிதமாம் நாடுங் காலே

(பொருள்) : இந்நோயில் உடல் குளிர்ந்து, வயிறு வீங்கி, தேள் முதலியவைகள் கொட்டியது போன்று நோகும். அன்றியும் தலையிலும் நெற்றியிலும் வலியுண்டாகும். உடலிலெழுந்த ஐயப் பெருக்கால் கோழை வெளிப்படுவதோடு இருமலும் சுவாசமும் மயக்கமும் வாய் வறண்டு சுவையறியாமலிருத்தலுமன்றி, நாடியும் படபடத்து நடக்கும். கனவும் உண்டாம்.

67. உதர வாத சுரோணிதம் :

நாடுமே சுரம் வந்து நடுக்க லுண்டாம்
நாவறண்டு தலை நொந்து உடம்பழுந்தி
வாடுமே தேகமெலா மனிச்சப் பூப்போல்
மகாவருத்த முண்டாகி மயக்கமாகுஞ்
சாடுமே யடிக்கடிதான் பேதி தானுந்
தவிக்குமே தண்ணீர்தா னாட்ட மாகித்
தேடுமே சோற்றின் மேல் நினைவு தானும்
செயவுதர வாதசுரோ ணிதந்தா னென்னே.

(பொருள்) இதில் சுரம் காய்ந்து நடுக்கலுண்டாகி, நா வறண்டு தலை நோகும். உடல் அழுந்தி வாடுவதுடன் அனிச்சபூ நிறம் பெறும். மயக்கமும், அடிக்கடி கழிச்சலும் கண்டு, நீர் வேட்கையுண்டாகித் தவிக்கச் செய்யும். உணவின் மேல் நினைவு செல்லாதெனும் ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

68. குண வவதானகம் :

என்னவே குமரிதான் கெற்ப முண்டா
யேறியே நாண் மூன்று திங்கட் குள்ளே
வன்னவே வயிறிழிந் திரத்தம் வீழ்ந்து
வாடியே வயிற் றெல்லாஞ் சுருங்கிக் கொண்டு
கன்னவே கால் கையு முடக்க மாகி
கருதியே தேகமெங்கு காந்த லாகுங்
குன்னவே கோபமது மிகுதி யாகுங்
குணவவதா னகமென்றே கூறிடாயே.

(பொருள்) : சூல்கொண்ட பெண்களுக்கு மூன்று தினங்களுக்குள் வளிக்குற்றம் சாடுமானால், கருவாயிலிருந்து குருதி வெளியாகி, உடல் வாடி, வயிறு சுருங்கி, கைகால்கள் முடங்கி, உடல் முழுமையும் வெப்ப மடைந்து மிகுந்த சினத்தையும் உண்டாக்கும் என்னும் இக்குறி குணங் களை இந்நோய் பெறும்.

79. கண்டக அவதானகம் :

கூறியே கெற்பமுண்டாய்ப் பயின்றபோது
குணகியே பச்சுடம்பில் வலிப்புத் தோன்றி
மூறியே மூக்கோடு புருவந் தன்னி
லுக்கிரமாய் மிக நொந்து வலிப்புண் டாகி
நாறியே நாக் காடு உண்ணாக் குத்தான்
நலித்துமே பல்லெல்லாங் கடுப்புண் டாகும்
ஆறியே முன்சொன்ன தநுவ சாத்திய
மரியகண்ட கவவதானகந்தா னாமே.

(பொருள்) : இந்நோய் சூல் கொண்ட பெண்களுக்குண்டாம். வலி நோய்க்குத் துணை நோயாகப் பிறந்து மூக்கிலும், புருவத்திலும் மிக்க நோயையும் உண்டாக்கி, நாக்கு , உள்நாக்கு, பல் இவைகளில் கடுப்பையும் உண்டாக்கும், இந்நோய் எளிதில் தீராதாம்.

80. சிரக்கம்ப அவதானகம் :

அவதான வடிசிரசு தன்னைப்பற்றி
அதட்டியே பின்னெல்லாம் பற்றி நொந்து
வவதான வடிம்புகுறங் கடியிற் சென்று
வளைத்துடம் பெல்லாநொந்து வாட்ட மாகிச்
சிவதான தேகமெங்குந் திமிருண் டாகுஞ்
சடம்போகுங் காலத்தில் மூன்றுங் காணும்
பவதான சிரக்கம்ப வவதானகந்தான்
பாடியதோ ரிம்மூன்று மசாத்திய மாமே.

(பொருள்) வளிக் குற்றமானது முதலில் காலையும் தலையையும் பற்றிப் பின் எல்லா உறுப்புகளிலும் சூழ்ந்து, தொடையிற் சென்று உடலை வட்டமாக்கி வளையச் செய்து நொந்து திமிரையுண்டாக்கும். இம்மூன்றும் உடலழியுங்காலத்திலே ஏற்படும் குறிகளாதலால் இவை நீங்காதனவாகும்.

உறுப்புகளைப் பற்றி வரும் வளி நோய்

எண்.

தலையைப் பற்றி வருவன மூன்று, மயிரை ஒட்டி வருவது ஒன்று, நெற்றியில் ஒன்று, கண்ணில் ஆறு, காதில் நான்கு; மூக்கில் இரண்டு, கழுத்தில் இரண்டு, வாயில் இரண்டு, பற்களில் இரண்டு நாவில் மூன்று தாள்களில் ஒன்று, கன்னத்தில் நான்கு, குரல் வளையில் மூன்று, தோளில் ஒன்று, மார்பில் ஒன்று, முலையிலொன்று, விலாப்பக்கத்திலொன்று, கையி லொன்று முள்ளந்தண்டினிலொன்று, முதுகிலொன்று, விரல்களி லிரண்டு, உடலில் நான்கு, கீழ்வாயிலிரண்டு, சிறுநீர்ப்பையுளொன்று. ஆண்குறிதனில் ஒன்று, விரையிலிரண்டு, தொண்டையுள் நான்கு, முழங்காலில் மூன்று, காலிலாறு, குடலிலேழு, முண்டத்திலிரண்டு நிறத்தாலிரண்டு, செந்நீரால் இரண்டு, மூளையின் கேட்டால் வருவன ஒன்று, நரம்பையொட்டிய நோய் மூன்று, மனத்தின் அளவாகப் பிறப்பது ஒன்று ஆக எண்பதென கூறுவனவற்றையும் இங்குச் சுருக்கிக் கூறுவாம்.

தலை :

1. தலை நடுக்கல் நோய் : இந்நோய் வயது முதிர்ந்தவர்க்குப் பெரும்பான்மையும் வரும். இந்நோயில் ஐயம் மிகுந்து வளிக்குற்றத்தைக் கேடடையச் செய்வதால், அதன் வன்மை குறைந்து நரம்புகளைச் சோர்வடையச் செய்யும். அக்கால் தலையை நிலைக்க ஒட்டாமல் இரு பக்கத்தேனும் முன்னும் பின்னுமேனும் நடுக்கலுடன் அசையச் செய்யும்.

ஓகிகட்கும் இந்நோய் வருவதுண்டு. அவர்கள் யோக நிலையில் படிப்படியாக ஒவ்வொரு நிலையைக் கடந்து கொண்டே வரும் பொழுதும்,சில வேளைகளில் நிலைக்குத் தகுந்தவாறான நோய்களைத் தூண்டுவதுண்டு, கண்டத்தின் நிலையை அடைந்துள்ளபோது ஏற்படும் சில கேடுகளால் பிறக்கும் நோய்களுள் இஃதொன்று எனக் கூறுவர்.

2. தலை வலித்தல் : இது சுரம், இருமல், மூக்கடைப்பு, என்னுங் குறிகள் யாதுமில்லாமல், சூரியன் தோன்றும்போதும், மறையும் போதும் வரும் தலை நோயினை, சூரியா வர்த்தம், சந்திரா வர்த்தம் என இயம்புவர். இவற்றுள் ஒன்று காலையிற்றொடங்கி மாலை வரையில் வலி எடுத்து மாலைப்பொழுதில் விட்டு விடும். மற்றொன்று மாலைப் பொழுதிற்றொடங்கி, காலை வரையில் இருந்து விட்டு விடும். இவ்விரு பொழுதிலும் வரும் தலைவலி தாங்க முடியாததாகும். குத்தல் குடைதலோடுங்கூடியதாகவும் காணப்பட்டு கண்ணின் இமையை இடுக்கச் செய்யும்.

3. தலை ஊறுதல் : இந்நோயில், தலையில் புழு ஊருவது போன்றும், நமைச்சல்போலும் உணர்ச்சிதோன்றி எப்பொழுதும் தலையைச் சொறிந்து கொண்டே இருக்கச் செய்யும். அன்றியும், வளிக் குற்றத்தால் மிகுந்த அழற்சியின் அளவாகத் தலையின் தோல் வறண்டு மீன் தோல் (மீன் செதிள்) போல் உதிரும்.

நெற்றி :

புருவம் நெளிதல் : வளிக் குற்றத்தால் புருவத்தின் மெலிந்த நரம்புசத்தற்ற நிலையில் புருவம் நெளிந்து ஒரு பக்கத்தே இழுத்துக் கொள்ளும், சில வேளைகளில் கண்ணும் புருவமும் கூட ஒரு புறம் சாய்ந்து விடும்.

கண் :

1. கண் குழிவிழுதல் : இது வளிக்குற்றம் ஒடுங்கி அதன் நடை அடங்கி வருவதாலும், சில நோய்களில் இயல்பாகவும் வருவதுண்டு. நெடு நாட்களாகப் படுக்கையில் இருத்தல், அளவு கடந்த வாந்தி, கழிச்சல், மிகுதியான குருதிப் போக்கு ஆகிய பிணிகளால் கண்குழி விழுதல் உண்டு ; சூல்கொண்ட பெண்களுள் சிலருக்கும் கண் குழி விழும்.

உடல் மெலிந்தோர்க்கும், வளிக் குற்றமடைந்த உடலோர்க்கும் இயற்கையாகக் கண் குழி விழக்கூடும்.

2. கண் சிவத்தல் : தீக்குற்றத்தினளவாக எழுந்த வளிப் பெருக்கினால் கண் சிவந்து, சிறிது வெளிச்சத்தையும் பார்க்கமுடியாது, கண் கூசுதல், கண்ணீர் வடிதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

3. கண்சொருகல் ; தனித்த வளிக் குற்றத்தால் வரும் வலி (இசிவு) நோய்களிலும், மற்றைய வளி நோய்களிலும் கண்சொருகலுண்டாம்.

4. கண்ணில் பீளைசாடுதல் : கண் சிவத்தலுக்குத் துணையாக ஐயங்கூடி பீளையை உண்டாக்குதலாம்.

செவி :

5. செவியடைப்பு : இது காதினுள் வளிக்குற்றத்தால் மிகுந்த ஐயத்தால் தாபிதத்தை உண்டாக்கி ஒலியை யூடுருவிச் செல்லாது தடுத்துச் செவியடைப்பு உண்டாக்கும்.

செவிக்குத்தல் : செவித்தினவு, குறும்பி சேர்த்தல் என்னும் இம் மூன்று மேற்கூறியவாறே எழுந்து செவியிடைப்புக்குத் துணை நோயாக வரும். அன்றியும், காதில் சீழ் வடிவதும் உண்டு.

மூக்கு :

6. மூக்கடைத்தல் : உளைவோடு தும்மல் என இரண்டில் (1) வளிக் குற்றம் தன்னளவில் மிகுந்து மூக்குத்தண்டுகளிலுள்ள சதையை வீங்கச் செய்தாகிலும் அல்லது சதையிலிருந்து முளைபோல் வளர்ந் தாகிலும் மூச்சு விடவும் வாங்கவும் முடியாமல் தடுக்கும்.

(2) வளிக்குற்றத்தோடு ஐயம் மிகுந்து, மூக்கில் நமை, உளைச்சல், எரிச்சல் இவற்றை உண்டாக்கி மூக்கு நீர்பாய்ந்து தும்மலை உண்டாக்கும். இஃது உளைவோடு தும்மல் நோய் எனப்படும்.

7. கன்னம் : (1) கன்னம் உள் வாங்கல், (2) ஆழக்குழிதல், (3) கனத்தல், (4) குத்தல் என நான்கு வகைப்படும்.

(1) கன்னம் உள்வாங்கல்.—வளிக்குற்ற மிகுதியோடு அழல் குற்றமுங் கூடிக் கன்னப்பகுதியினுள் நீரை வறட்டிச் சதையை வற்றச் செய்து தோலைச் சுருக்கிக் கன்னத்தை உள்வாங்கச் செய்யும்.

(2) மேற்கூறிய குற்றங்கள் மிகுந்த காலையில் ஆழக்குழி விழும்.

(3) வளிக்குற்றத்தோடு அழல் கூடி வீக்கத்தை உண்டாக்கிக் கன்னத்தைக் கனக்கச் செய்யும். வளிக்குற்றத்தோடு ஐயங்கூடி சீழ் உண்டாய் கன்னத்தில் குத்தல், சிறு சுரம் முதலிய குறிகளைக் காட்டும்.

8. வாய் : (1) கொட்டாவி விடல் : தனித்த வளிக்குற்றத்தால் உடல் வறண்டு, நீர்சுருங்கி, மேல் நோக்குக்காலை எழச்செய்து அடிக்கடி கொட்டாவி யெழும். அதனுடன் உடற் சோம்பல், தூக்கம், உடல் அனலாக இருப்பது போன்ற உணர்ச்சி முதலிய குறிகளும் தொடரும்.

(2) வாய் வலித்து நுரைத்தல் : வளிக் குற்றத்தோடு சிறு ஐயமும் பெருகுமாயின் வாய் மெல்ல முடியாமலும், அசைக்க முடியாமலும் வலித்து வாயில் நீர்கோர்த்து நுரைத்துத் துப்பச்செய்யும்.

9. பல்கூசல்: புளிப்பு வகைப்பொருள்களை மிகுதியாகக் கொள்வதாலும் மற்றையவற்றாலும் மிகுந்தெழுந்த குற்றத்தின் அளவாகப் பொறுக்கும் அளவிலிருந்து தாங்கமுடியாத அளவு பல் கூசும்.

உள்நா :

10. உள்நா தடித்தல் : மிகுந்த குற்றத்தினளவாக நாத்தடித்து சுவையறியாது, பேசும்போது வாய் குளறும்.

11. தாள் குத்தல் : வளியின் கேட்டால் தாளின் சந்துகளின் பசையற்றுத்தாளை அசைக்கவும் ஆட்டவும் முடியாதபடி செய்தல்.

12. **கழுத்து :** கண்டநரம்புகளிற்றங்கிய வளியினால் அங்குப் புடைத்தலோடு கழுத்தின் புறத்தில் அசைக்க முடியாதவாறு நோயை உண்டாக்கும்.

13. குரல்வளை கனத்தல் : வளிக் குற்றத்தோடு ஐயமுங்கூடி வீக்கத்தை உண்டாக்கி, குரல்வளையைக் குறுகச் செய்து குத்திக் குரற்கம்மலை உண்டாக்குவதுடன் இருமலையும் வருவிக்கும்.

1 (2) குறட்டை விடுதல் : வள்ளிக்குற்றத்தோடு அழலுங்கூடி ஆங்குள்ள நரம்புகளில் தாபிதத்தை உண்டாக்கி, நமை, எரிச்சல் முதலிய குறிகளைக் காட்டும்.

2. (3) குரல்வளை நரம்பெரிதல் : தனித்துத் தன்னளவில் மிகுந்த வளிக் குற்றத்தின் அளவாக சிறு அளவில் குறட்டையும் அண்டை பக்கம் கேட்கும்படியான பெரு ஒலியோடுங்கூடிய குறட்டையும் விடச் செய்யும்.

14. தோள் கட்டை : தோள் கட்டைகள் இரண்டுமாகிலும் அல்லது தோள் ஒன்றாகிலும் மேலுக்கு எழுந்து தானாகவே கீழ் இறங்கி இவ்வாறாக அடிக்கடி அடக்க முடியாமல் தானாகவே மேலும் கீழுமாக அசைந்து கொண்டே இருக்கும்.

15. மார்பு : மார்பதைத்தல் வளிக்குற்றத்தோடு அய்யமும் கூடி வீங்கியதுபோலக் காணும்.

16. முலை : வளிமிகுதியால் உடல் வரண்டு போவதுடன், முலையும் வரண்டு சுருங்கி முலையைத் திருகி வைத்ததுபோல் உள்ளடங்கிக் காணுவதன்றி சரிந்தும் தொங்கும்.

17. விலா : விலாப்புற மிறங்கியதுபோல ஒரு புறத்தில் காணும். இது வளி ஐயக்கூட்டால் பிறப்பதாகும்.

18. முதுகு : வளியின் கேட்டால் முதுகுத் தண்டு, முதுகின் தோல் ஆகியவைகள் வறண்டு வலித்து விறுவிறுக்கும்.

19. முள்ளந்தண்டு : ஐயக்காலமாகிய கிழ வயதிலும், உடல் வன்மை மெலிந்து நாடி நரம்பு தளர்ந்தபோது, சிறிது சிறிதாக முள்ளந்தண்டு வளைந்து கூன்போல் நிமிரவும் அசையவும் முடியாமல் வலிக்கும். அன்றியும், சிறு வயதினர்க்கும் மேற்கூறிய குற்றங்களின் அளவாக முள்ளந்தண்டு புண்ணாகி இளகி, கூனை வருவிக்கும்.

கை :

20. கை கால் எரிதல் : இதனைக் கரவாத சன்னி எனவும் கூறுவர். வளிக்குற்றத்தோடு மற்றைய இரண்டுங்கூடி அதனால், உள்ளங்கை உள்ளங் கால்களில் தாங்கமுடியாத எரிச்சல் உண்டாகும். பெண்களுக்கு இந்நோய் பிள்ளை பெற்றபின் தோன்றி உடலை வற்றச் செய்யும். நீரழிவு முதலிய நோய்களிலும் இவ்வெரிச்சல் காணுவதுண்டு.

21. விரல் : கை கால், விரல்களிற்றங்கிய வளிக்குற்றத்தால் உளைதலும் அதன் நுனிகளில் உணர்ச்சியற்று திமிர் உண்டதாலும் ஏற்படும்.

22. குடல் : உணவின் வேறுபாட்டாலும், உடல் வன்மைக்கு மிகுந்த உழைப்பாலும் வளிக்குற்றம் மிகுந்து, உண்ட உணவு செரியாமலும் அது மேல் நோக்கி வாந்தியாகாமலும், கீழ் நோக்கிக் கழியாமலும், கீழ்நின்று குடற்றெறித்தல், குடற் புரட்டல், குடலேற்றம், குடலிறங்கல் ஆகிய இந்நான்கு நோய்களையும் தனித்தாகிலும் சேர்ந்தாகிலும் பிறப்பிக்கும்.

23. கீழ்வாய் : வளிக்குற்றத்தோடு கூடிய அழலின் கேட்டால், கீழ்வாய் கதித்தலும் வாயுப் பொருள்களை மிகுதியாகக் கொண்டதால் காற்றுப்பரிதலுங் காணும்.

24. சிறுநீர்ப்பை : (1) வளியோடு அழல் கூடியதால், ஆங்கு வெப்பத்தை உண்டாக்கி, சிறு நீரை வெளியாகாமல் தடுத்தும் ஒரு கால் சிறிது நீர் கழியினும் தாங்கமுடியாத எரிச்சலையும் குத்தலையும் பிறப்பிக்கும்

25. குறி.—1. வளிக்குற்றத்தால் தன் அளவுக்கு மிஞ்சி கனத்து காணும், 2. விரைப்பையோடு (பீசம்) சுருங்கி உள்வாங்குதலாம்.

26. இடுப்பு.—மிகுந்த வளிக்குற்றத்தால், (1) சகனம் திமிர்தலும், (2) மருங்குளைதலுமான குறிகளைச் காட்டும்.

27. தொடை.—வளிக்குற்றமும் ஐயமுங்கூடி, (1) தொடையை கனக்கச் செய்து குத்தல், குடைச்சல் முதலியவைகளை உண்டாக்கும். அன்றியும், (2) மயிர்ச்சிலிர்த்தல், (3) திமிர்தல், (4) இழுத்தல் முதலியவற்றையும் உண்டாக்கும்.

28. முழங்கால்.—வீங்குதல், இதன் குறிகுணங்களைக் கீல் வாயு நோயில் காண்க.

29. கால்: (1) கெண்டை ஏறுதல் : பட்டினி இருத்தல், மிகு உழைப்பு, மிகு கழிச்சல் முதலியவைகளால் வளிக்குற்றமிகுந்து, உடல் நீரை வற்றச் செய்து, கெண்டைச் சதையை முறுக்குவதுபோல் வலித்து, குரங்குவலி வலிப்பது போல் நோகச் செய்யும்.

(2) கால் கனத்தல் : மிகுந்த வளிக்குற்றத்தோடு ஐயங்கூடில், கால்சதை கனத்து வலியை உண்டாக்கி எடுத்தடிவைக்கும் போதெல்லாம் கெண்டைச்சதை நோகும்.

(3) குத்தலையும் :

(4) புறவடி தடித்தலையும் :

(5) உள்ளடி கனத்தலையும் உண்டாக்கும். பிற்கூரிய இரண்டும் கீல் வாயு நோய்க்குத் துணையாக வருவதுமுண்டு.

(6) புறடுதிருகல் : இந்நோய் வளியின் பெருக்கால் வரும் இளம்பிள்ளை வாதத்தில் வருவதன்றி, சிறுபிள்ளைக்குப் பிறவியிலேயே வருவதுண்டு.

30. உடல். — (1) இருத்தல்: வளிப்பெருக்கால் உடல் மெலிந்து, சோம்பலும் மனத்தளர்ச்சியும் உண்டாய், இயற்கையாய்ச் செய்யும் வேலைகளைச் செய்ய இயலாது ஓரிடத்திலேயே இருக்கச் செய்யும்.

(2) கிடத்தல் : வளியினால் உண்டான கேட்டால், மயக்கம், தெளிவின்மை இவை உண்டாய்ச் மரம்போலப் படுத்த இடத்திலேயே கிடக்கச் செய்யும்.

(3) வளிநோய்களிலீடுபட்டு மெலிந்த நிலையில், உடல் முழு மையுமோ ஒரு பகுதியோ புண்போல் நோகும்.

(4) இஃதும் வளிசுரத்தின் பகுதியே.

(5) வளிக்குற்றத்தோடழல் கூடின், உடல் முழுமையும் கனத்துத் தோன்றும்.

(6) வளிநோய்களில், பக்கவாதம், கரவாதசந்நி முதலியவைகளில் காணும் திமிரைப்போல் இடப்புறம் அல்லது வலப்புறம் திமிரை உண்டாக் கும்.

(7) வளிக்குற்றதாலுண்டான மந்த குணத்தினால், (தமோ குணத்தினால்) தூய்மைப் பண்பும், தீவிரப் பண்பும் (சத்துவ ரசோகுணம்) மங்கி மற்ற வேலைகள் ஒன்றிலும் மனஞ் செல்லாது சோம்பித்திரியச் செய்யும்.

31. முண்டம். — முண்டம் துடித்தல், முண்டமானது தலையைத் தரித்த பின்னால் ஆஞ்ஞையிலிருந்து மூலாதாரம் வரையில் ஓடுங்கால் கலையைத் தடுக்கச் செய்து, முண்டம் துடிக்கும். தூக்குப் போடுதல், கண்ட எலும்பை உடைத்தல் என்னுமிவைகளாலும் முண்டம் துடித்து உயிர்போகும்.

32. நிறம். — வளியானது ஐம்பெரும் பொருள்களுள் விண், காற்று இவ்விரண்டிலும் அடங்கும் விண்ணின் நிறம் கருமையாகையால் வளிநோய்கள் அனைத்திலும் உடல் கருமை நிறமடையும்.

33. செந்நீர். — வளிக்குற்றத்தோடு அழல் கூடி செந்நீரைக் கொடுக்கின், அதன் எடை நிறம் ஆகியன நிலைமாறும். எடை குறைந்து நீர்போல் தெளிந்து காணும். அல்லது வலியுடன் மிகுந்து குருதியைக் கட்டுப்படுத்தும்.

34. குருதிக்குழல். — குருதிக்குழல் மேற்கூறியவாறே வளியும் தீயுங்கூடி குருதிக்குழல்களை உளையச் செய்யும்.

35. நரம்பு. — (1) நரம்பு புடைத்தல், (2) புடை நரம்பேறல், (3) கடை நரம்புருகல் என்னுமிம்மூன்று நோய்களும், உடல் வன்மை குறையுங்கால் ஏற்படும் நோய்களாம்.

36. மனம். — அச்சம். திடுக்கிடல் என்னுமிவைகளால், நெஞ்சில் ஒரு விதத் தோற்றமுண்டாகும்.

## பக்கவாயு.

வேறு பெயர்கள் — பாரிச வாயு, பக்ஷவாயு.

இயல். — இது கை கால், விரல்கள், நா, வாய், கண் முதலியவைகளின் தொழிலைக் கெடச் செய்யும் இயல்புடைய நோயாம்.

முற்குறிகள். — உடலில் வளிக்குற்றம் மிகுங்கால் உடல் கனத்தல், எரு கட்டுப்படல், அடிக்கடி கோபமிகுந்தெழுதல். நாடி தீவிரமாக நடத்தல், மயக்கம் உண்டாதல் என்னும் குறிகள் காணும்.

நோய் வரும் வழி: வளிக்குற்றத்தைப் பெருக்கக்கூடிய உணவு வகைகளையும், மயக்கந்தரும் கள் முதலிய குடிவகைகளையும் உட்கொள்ளுதலாலும், மிகுந்த சினம் இவற்றைக் கொள்ளுதலாலும் இந்நோய் வரும். இது மேக நோய்களுக்கும் தமரக நோய்களுக்கும் துணை நோயாக வருவதுமுண்டு.

குறி குணங்கள். — பெரும்பான்மையும், ஒருவர் தம் தொழிலைப் புரிந்து வரும் போதே முற்குறி ஒன்றும் இல்லாமலே, திடீரென மயக்க முண்டாய்க் கீழே விழச் செய்து, இந்நோய் பிறப்பதுண்டு. அல்லது உழைத்துவிட்டுத் தூங்குகையில் தன்னை அறியாமலே இந்நோய் பிறந்து காலையில் எழுந்திருக்கும்போது இந்நோய் வந்து சூழும். மற்றும் சிலர்க்குச் சிறுகச் சிறுகக் கை கால்களில் திமிர்த்தல் போலும், தத்துவது போலும் காட்டி நோயின் குறிகள் நாளுக்கு நாள் பெருத்துக் கொண்டே வந்து இந்நோயினை வருவிக்கும்.

இது சிறு குழந்தை முதல் வயது முதிர்ந்தோர் வரையில் வரக்கூடிய நோயாகும். சிறு குழந்தைகளுக்கு பெரும் சுரங் காய்ந்து, வலிகண்டு ஒருகால் ஒருகை அல்லது இரண்டு கால்கள் மட்டும் செயலற்றுப் போகும். இதனை இளம் பிள்ளை வாதமெனவுங் கூறுவர்.

நடுவயதினர்களுக்கு உண்டாம் வலி (இசிவு), மேகநோய், தமரக நோய் என்னும் இந்நோய்களுக்குத் துணையாக வருவதாம்.

இவ்வகைப்பட்ட நோய்களில் பொதுவாக, கால், கை, வாய், கண், நா இவைகள் தாக்கப்படினும், இவற்றுள் காணும் குறிகுணங்கள் ஒரே விதமாக இருப்பதில்லை.

சிலர் திடீரென மயக்க மடைந்து தலை சுற்றிக் கீழே விழுந்து, பேச்சு மூச்சற்று கிடந்து, எழுந்தவுடன் ஒருகையும் ஒருகாலும் அல்லது இரு காலும் அடைக்கமுடியாத நிலையில் இருப்பர். அவை முற்றும் தொழிலற்றுப்போம். நாட் செல்லச் செல்லக் காலடியை (பாதத்தை) வளைக்கவும், காலை நீட்டவும் முடியாமலும் இடுப்பை வளைக்க முடியாமலும் ஆகிவிடும். நடக்கும் போது கால் பெருவிரலைத் தேய்த்துக் கொண்டும் காலை வளைத்து நடத்தலும், வாய் கோணுதலும், கண் இமை பாதி மூடி இருத்தலும், நாச் செயலற்று அசையாது வாயினின்று உமிழ்நீர் வடிதலும், பேச்சு அற்றுப் போதலுமான குறிகுணங்களைக் காட்டும்.

இந்நோயில், சிறு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்குங்கூட, நோயுற்ற கால்கைகள் சூம்பிக் கொள்வதும் முட்டிகள் கரடு கட்டி வாழ்நாள் மட்டும் அசைக்க வொட்டாமற்படி நிலைத்து விடுவதுமுண்டு. அன்றியும் பெண்களுக்குப் பிள்ளை பெற்றபின் வலிப்பு நோய்போல் கண்டு நோய்க்குத் துணையாக வருவதும் உண்டு.

இப்பக்கவாத நோயில், வாயும் கண்ணும், வலது அல்லது இடது புறமாகக் கோணிக் கொள்வதுமுண்டு. நோயிலீடுபட்ட கண் இமை முழுதும் மூடமுடியாமலிருக்கும் ; வந்த நோய் வன்மைப் படுமாயின் நோய்க்கான குறிகுணங்கள் முழுமையுங் காணும்.

குறிப்பு. — நாடியில் இடகலை, பிங்கலை, சுழுமுனை என்பவற்றுள் சுழு முனையைக் கத்திரிக்கோல் மாறல் எனச் சொல்வர். மூளையிலிருந்து இடகலை நாடியானது வலப்புறத்திலிருந்து புறப்பட்டும், பிங்கலையானது இடப்பக்கமிருந்து புறப்பட்டும் இறங்கிக் கத்தரிக்கோலின் ஒரு பகுதி மற்றப்பகுதியைமாறி இருப்பதுபோல மேற்கூறிய நாடிகளும் வலப்பக்க முள்ளது இடப்பக்கமும், இடப்பக்கம் உள்ளது வலப்பக்கமுமாக மாறி சுழன்று கீழ் நிலையாகிய மூலாதாரம் வரை பாயும்.

பக்கவாயு நோயில், இடப்பக்க உறுப்புகள் தாக்கப்படுமாயின் மூளை யின் வலப்பக்க நாடியும், வலப்பக்க உறுப்புகள் தாக்கப்படுமாயின் இடப் பக்க நாடியும் கேட்டையுறும் என அறிய வேண்டும்.

குற்ற முதலிய வேறுபாடுகள் — உணவு செயல் முதலியவை களாலும், வளிக்குற்றம் அளவில் மிகுந்து அழலையோ ஐயத்தையோ தனக்குத் துணையாக்கிக் கொள்வதாலும் இம்நோயில் ஏழும் வளிக் குற் றத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல் கீழ் நோக்குக் காலைத் தூண்டி சிறுநீர் எரு (மலம்) இவைகளைக் கட்டுப் படுத்துவதும், மேல் நோக்கு காலைத் தூண்டி தமரகம், மார்பு, வாய் கண் இவைகளைத் தாக்குவதும், பரவு காலைத் தூண்டி, குருதி ஓட்டத்தைக் கெடுத்து கை கால்களின் உணர்வு அழிதலும், உணவுச் சாற்றையும் பரவ ஒட்டாமல் உறுப்பு களைச் சூம்பச் செய்வதும், மயக்க முதலியவற்றை உண்டாக்குவதும், நடுக் காலைத் தூண்டி உண்ட உணவு செரியாமை, பக்க சூலை, வயிறு நோய், வயிற்றுவலி முதலியவற்றை எழச் செய்தலுமான வேற்றுமை களைப் பிறப்பிக்கும்.

மிகுந்த குற்றங்களின் அளவாக உடற்கட்டுகளில், பெரிதும் குருதியும் தசையும் மூளையும் கெடும்.

நாடிநிலை பக்கவாயு

கண்டாயே சிலேற்பனத்தில் வாதநாடிகலந்திடுகில் —

... ... ... ...

... ... ... ... ... ... ...பக்கவாதம்

... ... ... ... ... ... ... ...

தீரும் தீராதவை :— இந்நோய், ஆண்களுக்கு வலதுபுறமும் பெண்களுக்கு இடதுபுறமும் வரின் எளிதில் தீராதெனக் கூறுவர். அதினும் பேச்சிலாதிருப்பின் எளிதில் தீராதாம். அன்றியும், உடல் மெலிந்து நோயுற்ற கால்கைகள் சூம்பிக்காணினும். நோயில் அடிக்கடி வலிகாணினும்,பசியின்மை, பெருமூச்செறிதல், உடல் வீங்கிப்போதல், உறுப்புகள், உணர்ச்சியற்றுப் போதல், மூட்டுநழுவி, கையாயினும் காலாகினும், தளர்ந்து காலனல், கைகால் நடுங்குதல் ஆகிய குறிகள் காணினும் எளிதில் தீராதாகும்.

வளி நோய்க்குப் பொது மருந்துவ முறை : — இந்நோயிலெழுந்த வளிக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்துதற்கான கழிச்சல் மருந்துகளையும், மேல் பூச்சு மருந்துகளையும், நெய்ப்புத்தன்மையுடைய பொருள்களாகிய மருந்துகளையுமே வழங்குவது நலமாம். வேண்டுமாயின், கேட்டைந்த உறுப்புகளுக்கு வன்மை தந்து, வளிக்குற்றத்தைப் போக்கக் கூடிய சரக்குகளைக் கொண்டு, தேரன் கூறிய கிழி, ஒற்றடம், பிழிச்சல், தட்டுதல் முதலியன செய்யலாம். இவைகளைச் செய்வதால், நோயிலீடு பட்ட உறுப்புகளில் உள்ள வலி, குத்தல், குடைதல், இசிவு, பிடிப்பு வீக்கம், விறைப்பு முதலியன மெல்ல மெல்லக் குறைந்து, அவைகளின் தளர்ச்சி, செயலின்மை, மெலிதல் என்னுங் கேடுகள் குறைந்து கொண்டே வரும். அன்றியும், குற்றத்தால் பிறந்த நோயைப் போக்குவதற்கு இரச கந்தகப் பாடாணங்களால் ஆக்கிய மருந்துகளையும் உள்ளுக்கு வழங்கல் வேண்டும். அதற்கான உணவு வகைகளையும், ஆகும் ஆகாப் பொருள்களையும் வரையறுத்துக் கொள்ளல் வேண்டும்.

(1) கழிச்சல் மருந்துகள் : —

வாத நாசத்தைலம், கழற்சித்தைலம், இரசத்தைலம், மேகநாதத் தைலம், வாதகேசரித்தைலம், மெருகுள்ளித்தைலம், சித்தாதி எண்ணெய் ஆகிய இவைபோன்றவற்றுள் நோயினன் உடல் வன்மைக்கும், நோயின் வன்மைக்கும் தகுந்தவற்றை அளவுடன் கொடுத்தல் வேண்டும்.

இவ்வகை மருந்தை மருத்துவம் தொடங்குமுன் உடலின் வன்மைக் கேற்ப ஒன்றுமுதல் மூன்று நாள் வரை கொடுத்தபின், உள் மருந்துகளையும் மேல்பூச்சு எண்ணெயையும், உடலில் தேய்த்துப் பிடித்தபின் வியர்வை பிடிக்கலாம்.

மெழுகு வகைகள் : வான்மெழுகு, இரசகந்தி மெழுகு, வீர மெழுகு, நந்திமை, பஞ்ச சூதமெழுகு, நவஉப்பு மெழுகு, சேங்கொட்டை மெழுகு (இடிவல்லாதி), சித்திரவல்லாதி என்னு மிவற்றில் ஏதேனும் ஒன்றை, நோயின் வன்மைக்குத் தக்கவாறு கொண்டு உடல் வன்மைக் கேற்ப அளவிட்டு, துணைமருந்தோடு காலை மாலை உட்கொண்டு வர நோய் நீங்கும்.

மேல் பூச்சு எண்ணெய்கள் : மெழுகுத்தைலம், எருக்கம்பால் எண்ணெய், (அர்க்கசீரத்தைலம்), சாரணைக்கள்ளி எண்ணெய், சூலை குடாரி உளுந்து எண்ணெய், வாதகேசரி முதலிய எண்ணெய் வகைகளில் மெழுகுத் தைலத்தை மெல்லியதாகப் பூசிப்பட்டி கட்டி வைத்தால் போகும். மற்ற எண்ணெய்களைப் பூசிப்பிடித்து, நொச்சி, தழுதாழை, வாதநாராயண இலை, கழஞ்சிக்கொழுந்து இவைகளுள் ஒன்றை நோய்க்குத் தக்கபடி கொண்டு குறுகத்தறித்துச் சிறிது தைலத்தைக் குத்திப் பிசிறி, இருகிழியாகக் கட்டி அதை ஓர் அகண்ட மட்கலத்தில் சிறிது எண்ணெய் விட்டு சூடேறிய பின், கிழியைமாற்றி, மாற்றி ஒற்றிஒற்றி நோயுள்ள இடத்தில் ஒற்றடமிட்டுச் சிறிது நேரங்கழிந்தபின், கொள்ளு, உளுந்து, கறுப்பு அரிசி இவைகளின் மாவைக் கொண்டு கூழாக்கி அதனால் எண்ணெய்போக்கத் தேய்த்துக் குளிக்கச் செய்யவும்.

உணவு : வளிக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்தக்கூடிய உணவுகளாகவே இருத்தல் வேண்டும். அவைகள் இருமுறை வடித்த சோறு, கத்திரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, வெள்ளாட்டுக்கறி, காடை, கௌதாரி, உடும்பு முதலியவைகளும், கீரைவகையில், முடக்கத்தான், அறு கீரை, பொன்னாங்காணிக் கீரை, தூதுவேளை, வேளைக் கீரை, மூக்கிரட்டை, திராய் ஆகியவைகளை மாற்றிக் கொள்ளுவது நன்று. வளிக்குற்றத்தோடு ஐயமுங் கூடி இருப்பின், தும்பைக்கீரையும் கரிசாலையும் கொள்ளலாம். பருப்பு வகையில் துவரை ஒன்றே ஆகும்.

ஆகாப் பொருள்கள் : சுரை, பூசுணை, வெள்ளரி, புடலை, ீர்க்கு, முதலிய நீர் கூடிய காய்கறி வகைகளையும், மொச்சை, ாராமணி, உளுந்து, கொள்ளு ஆகிய பருப்பு வகைகளையும், கடுகு ுதலிய ஆகாத பொருளையும் நீக்குதல் வேண்டும்.

படுக்கை : ஈரமில்லாதத் தரையிலும், ஈரமில்லாப் படுக்கையிலும் படுத்தல் வேண்டும். காய்ந்து ஆறிய தரையிற் படுத்தலாகாது, மிக்க காற்றோட்டமான இடங்களிலும் குளிர்காற்றும், மோதுகின்ற காற்றும் உடலில் படும்படியான இடங்களிலும் படுக்கக்கூடாது.

## கீல்வாயு

வேறு பெயர்கள்: சந்துவலி, மூட்டுவலி, மேகசூலை, முடக்கு வாயு, ஆமவாதம் எனப்பல பெயர்கள் உண்டு.

இயல் : இது, கீல்களில் வளிக்குற்றம் கூடி நோயை உண்டாக்குவதால், கீல்வாயுயெனவும், மூட்டுகளில் நோயையுண்டாக்குவதால் மூட்டு வலி என்றும், இந்நோய் பெரும் பான்மையும் மேகத்தின் தொடர்பு நோயாக வருவதால் மேகசூலை என்றும், பூட்டுகளை முடக்கி வைப்பதால் முடக்குவாயு என்றும், வயிற்றில் மந்தம் உண்டாகி ஐயத்தைப் பெருக்கி இந்நோய் உண்டாவதால் ஆமவாதம் எனவும் பெயர் பெற்றது. கீல்களில் வீங்குவது, குத்துவது நோவது முதலியவற்றை உண்டாக்கி, மடக்கவும், நீட்டவும், அசைக்கவும் ஒட்டாமற் செய்து, படுக்கையில் இருத்தி, ஐயமும் கூட்டி சுரமுதலிய துணை நோய்களையும் உண்டாக்கும் இயல் புடையதாம். இதனைக் கீழ்க்கூறிய பாவாலறிக.

"வளியு மையுந் தன்னிலை கெட்டு
வலியுடன் வீக்கச் சுரமும் காய்ந்து
மூட்டுக டோறும் முடுக்கியே நொந்து
மூட்டுக டன்னின் நீரும் சுரந்து
தாங்கொணா வலியுடன் நொந்திடு மம்மே." (சபாபதி கையேடு)

எண் : பத்து என்பர், அவை, வளிக்கீல்வாயு, தீக்கீல்வாயு, ஐயக்கீல்வாயு, வளித்தீக்கீல்வாயு, வளிஐயக்கீல்வாயு, தீவளிக்கீல் வாயு, தீஐயக்கீல்வாயு, ஐயவளிக்கீல்வாயு, ஐயத்தீக்கீல் வாயு, மூக்குற்றக் கீல்வாயு என்பனவாம்.

நோய் வருவழி : வளிக்குற்றத்தைத் தூண்டும் உணவுகளாகிய வாழைக்காய், உருளைக்கிழங்கு, முதலிய பொருள்களையும், செயல்களையும், குளிர்ச்சிதரும் பொருள்களையும் உண்பதாலும், குளிர்க் காற்றிலீடுபடல், மழையில் நனைதல், பனிவாடையில் படுத்திருத்தல், உயர்ந்த மலையில் தங்குதல் ஆகிய ஐயக்குற்றத்தை தூண்ட செய்யும் வகைகளைாலும் இந்நோய் பிறக்கும். அன்றியும், பெண் கூட்டால் பிறந்த மேக நோய்க்குத் துணையாயும், தாய் தந்தையரின் வழியாகவும் வருவதுமுண்டு.

'' வளிதரு காய்கி ழங்கு வரைவிலா தயிலல்கோழை
முளிதயிர் போன்மி குக்கு முறையிலா வுண்டி கோடல்
குளிர்தரு வளியிற் றேகங் குனிப்புற வுலவல் பெண்டிர்
களித்தரு முயக்கம் பெற்றோர் கடிசெயல் கருவியாமால்.''

(சபாபதி கையேடு)

முற்குறிகள்: இந்நோய் பிறக்கு முன்னர், மூக்கு அடைப்பு, மூக்கில் நீர் பாய்தல், தொண்டைக் கட்டல், சிறு சுரம், கை கால் நோதல், குத்தல், குடைதல் என்னும் முற்குறிகளைக் காட்டிப் பின் நோய் தொடங்கும்.

## குறிகுணங்கள்.

வளிக்கில் வாயு :

'' வலிக்குத்தல் வீக்கங் காணும் வாய்தொண்டை வரட்சி காய்ச்சல்
தலைவலி மார்து டிப்புத் தாங்கொணா வலிவீக் கந்தான்
நிலவுகாற் கணுக்கு றங்கு நீடுதோள் முழங்கைக் காற்காம்
மலக்குடற் கட்டு வேர்வை வாதத்தில் வாய்வி தாமே.''

சபாபதி கையேடு

முற்கூறிய முற்குறிகளைக் காட்டி, தொண்டையில் வலி, மார்பு நோய், கீல்கள் சிவந்து வீங்குதல் ஆகிய குறிகள் உண்டாய், வீங்கிய கீல்கள் நாளுக்கு நாள் பெருத்து வீங்கி, குத்தல் குடைதல், நீட்டவும், மடக்கவும், அசைக்கவும் முடியாமை முதலியவற்றை உண்டாக்கிப் படுக்கையில் கிடத்தும், சுரமும் வீங்கிய வீக்கத்திற்கேற்ப மிகும். வலி குடைதல், குத்தல்களால் தாங்கமுடியாமல் அழச் செய்யும். இந்நோயில்

தோன்றும் முட்டி வீக்கங்கள், பெரும்பான்மையும் பெரிய முட்டிகளாகிய முழங்கால், கணுக்கால், இடுப்புச்சந்து, மணிக்கட்டை, முழங்கை, கைச் சட்டை முதலிய கீல்களிலேயே உண்டாகும்.

இப்பெருங் கீல்களில் உண்டான நோயின் வீக்கம் முதலியவைகள் குறையக் குறையச் சுரமும் தணிந்து வரும். அவ்வாறு நோய் வன்மை குறைந்துகொண்டே வருகையில், புதிதாய் மற்றைய கீல்களில் சிவந்து நொந்து வீங்கத் தொடங்குகையில் சுரமும் கூடத் தொடங்கும். இவ்வாறாய், சில முட்டிகள் வீங்கி, சுரத்தைத் துணைக்கொள்வதும் அக்கீல்களின் வலி குறைந்துகொண்டே வருகையில், பின்னும் மற்றைய கீல்கள் சுரத்துடன் வீங்கி சுற்றிச் சுற்றி உழல்வதும் உண்டு. இவ் வியல்பு வளிக்கீல் வாயு ஒன்றுக்கே உரியதாம். நோயின் வன்மை பெருகப் பெருக, வலி, குத்தல், குடைதல் இவைகள் தாங்க முடியாத வாறு மிகுந்து நோயாளனை வாட்டும். அன்றியும், பெருமூச்சு, அயர்வு, பிசு பிசுத்த வியர்வை, நாடி தளரல், அடிக்கடி மயக்கம் உண்டாதல், மார்பு துடித்தல், உடற்சோர்வு முதலிய குறிகளையும் தொடரச் செய்யும்.

அன்றியும் இந்நோய், வளிக்குற்றத்தைத் தனக்குத் துணைகொண்டு வருவதால், தமரகமும், தன்னிலை திரிந்த வளிக்குற்றத்தின் கேட்டால் கேடடைந்து தமரக வாயு என்னும் நோயையும் பிறப்பிக்கும். தமரக நோயால் குருதியும் (இரத்தமும்) கேடடைந்து, உடல் வன்மை குறைந்து உடல் வெளுப்பதுமல்லாமல், குருதி தங்குமிடமெல்லாம், கழலைப் போலக் கட்டிகட்டியாக, முழங்கால் முட்டி, முழங்கைமுட்டி முதலிய இடங்களில் தோன்றும்.

எருவும் (மலமும்) சிறுநீரும் (மூத்திரமும்) கட்டும். எரு தீய்ந்து கறுத்துக் காணும் ; நீர் சுருங்கிச் சிவந்து காணும்.

அழல்கீல் வாயு :

“ பித்தக்கீல் வாய்வு தன்னாற் பிறங்குகீன் முட்டு வீங்கிச்
சித்தர்செய் மருந்து வத்துஞ் சீர்படாத் தன்மைத் தாகித்
தத்தறு காய்ச்சல் கண்டு சாலவே தனைதான் தந்தே
மெத்தறு சிகிச்சை தன்னால் மென்மெல நீங்கு மப்பா.”

(சமாபதி கையேடு)

(பொருள்) இது, வளிக்குற்றம் தன்னிலையில் மிகுந்துள்ளபோது, அழல் குற்றத்தைத் தூண்டக்கூடிய உணவு செய்கை முதலியவற்றால் பிறக்கும் நோயாம். இந்நோயில், முட்டிகளில் உண்டாகும் வீக்கம் நாளுக்குநாள் பெருத்துக் கொண்டே வந்து, மிகுந்த தீக்குற்றத்தால் கீல்களினிடையேயுள்ள பசை வரண்டு, பசையற்றுக் கீல் அசையும் போதெல்லாம் நட்டையுடைதலும் ‘‘ கலுக் ’’ ‘‘கலுக் ’’ கென்ற ஓர் ஒலி உண்டாவதுமாய் இருக்கும். சிலவேளைகளில், கீலுக்குக் கீல் கூடி ஒட்டிக்கொண்டு, ஒரு கழிபோல மடக்க முடியாமலே நின்றுவிடுவதும் உண்டு. இந்நோயில் சிறுசுரமும் வரும்.

ஐயக்கீல் வாயு :

‘‘ கருதருங் கபக்கீல் வாயு கண்டிடின் உடலி ளைக்கும்
உருமெலி வாக்குங் கொள்ளும் உண்டியைச் சுருக்கும் இன்பந்
தருதுயில் நீங்கு முட்டிற் றாங்கொணா வலுவை யாக்கும்
இருமலே விக்கல் வாந்தி சோபைபாண் டெழுப்பும் பாரே.’’

(சபாபதி கையேடு
)

(பொருள்) ‘‘சேட்பச் சீதமாய்துடைத்து’ என்று தேரன் மருத்துப் பாரதத்தில் கூறியவாறு, சேட்பமாகிய ஐயத்தைத் துணைகொண் டெழும் இந்நோயில் மாலைப்பொழுதாகிய ஐயவேளையில் உடல் குளிர்ந்து, சுரம் உண்டாய், உடலை நாளுக்கு நாள் இளைக்கச் செய்து, கீல் வீங்கி அவ்வீக்கம் எளிதில் தீராமல், உள்ளுக்குள்ளே புண்பட்டு, சீழ் சேர்ந்து எலும்பைத் துளைத்துக்கொண்டே அழுகச் செய்யும். அல்லது முட்டி வீங்கி நீர் கோர்த்து நரித்தலை வாயு போல வீங்கும். மற்றக் கீல் வாயுகளைப் போலவே நீட்டவும் மடக்க வும் முடியாமை, குத்தல், குடைதல், நோதல் என்னுங் குறிகுணங்கள் ஆகியவற்றைப் பெற்றிருக்கும். அன்றியும், இடைவிடாச் சுரம், இருமல் இரைப்பு, விக்கல், வாந்தி குருதியற்று உடல் வெளுத்தல் என்னுங் குறி குணங்களையும் காட்டும்,. தக்க மருத்துவஞ் செய்யாவிடின் தேரன் கூறியபடி துடைக்கும் (கொல்லும்) எனவறிக.

பெரும்பாலும் இந்நோய், முதுகுத்தண்டு, இடுப்பு, தொடை சந்திடுக்கு, முழங்கால் சந்து முதலியவைகளில் உண்டாகும்.

வளிஅழல் கீல் வாயு :

"வாதபித் தக்கீல் வாய்வின் வருங்குறி சாற்றக் கேளாய்
ஏதமார் மந்த மேப்பம் இரைச்சலும் வயிற்றிற் காணும்
ஓதருங் குத்தல் வீக்கம் ஒய்தலில் எரிச்ச லுண்டாம்
காதறு முறக்க மின்மை காய்ச்சலும் காணுங் கண்டாய்."
(சபாபதி கையேடு).

(பொருள்) இஃது, பெரும்பான்மையும் வளிக்குற்றத்தையும் தீக் குற்றத்தையும் பெருக்கக்கூடியதான ஆட்டுக் கறி, மீன், முட்டை, உருளைக் கிழங்கு, சுறாமீன் முதலிய பண்டங்களை மிகுதியாய்ப் புசித்தலாலும், கள், சாராயம் முதலியவைகளை அடிக்கடி அருந்துவ தாலும், உண்ட உணவுக்குத் தகுந்த உழைப்பில்லாமையாலும் வரும் நோயாம். இந்நோயில், முதல் முதல் உண்ட உணவு செரியாமல் புளித்த ஏப்பம் உண்டாதல், வயிற்றுள் காற்றுக்கூடி அடிக்கடி காற்றுப் பரிதல், வெளிக்குப் போகாமை, உடல் பெருத்தல் என்னுங் குறிகளைக் காட்டி, மணிக்கட்டு, கணுக்கால், விரல்கள், ஆகிய கீல்களில் சிவந்து எரிச்சலையும் வலியையும் உண்டாக்கும். இந்நோய் எளிதில் மருத்து வத்திற்கு அடங்காமலும், மருத்துவத்திற்கு அடங்கினும் மீண்டும் திரும்பிவருவதுமாயிருந்து, அக்கீல்கள் கரடு கட்டினதுபோல நீட்டவும் நன்றாய் மடக்கவும் முடியாதவண்ணம் நிலைத்துவிடச் செய்வதுமுண்டு. அன்றியும், இந்நோயில் தூக்கமின்மை, படுக்கையில் நிலையாமல் புரளல், சிறுசுரம் முதலிய குறிகளும் காணும்.

5. வளி ஐயக் கீல்வாயு.

"ஐயினை விலைக்கு முண்டி யயிறலே கூதிர்க் காற்று
மெய்யினை யலைக்கு மாங்கண் மேவலோ டோதஞ் சார்ந்த
வையத்தின் உறங்கன் மாரி பனியினான் வாட்ட மெய்தல்
மெய்யயர் வுறவு ழைத்தல் கவலையான் மேவு மிந்நோய்.

"வயங்வா தக்க பக்கீல் வாயுவான் வலிமி குந்தே
உயங்குநீர் கோத்துக் கீல்கள் ஒரியின் தலைபோற் காணும்
நயங்கொள முடக்கல் நீட்டல் நண்ணிடா மெய்யுங் காயும்
மயங்குறு முறக்க மின்னாம் மன்னிய நெரிக்கட் டாமே."

" உடலது வெதும்பிக் கையால் உடலது கடுத்து நொந்து
கடலுதாங் கால்க ரங்கள் கனத்தாற்போ லுயர்ந்து காணும்
சடமது விழுந்த தாகுஞ் சலங்கெட்டு தோட முண்டாம்
முடமதாங் கைகால் தானு மு ங்கின வாத மாமே."
(சபாபதி கையேடு).

(பொருள்) என்றதில், வளிக்குற்றம் மிகுந்த நிலையில் ஐயத்தைப் பெருக்கக்கூடிய உணவு முதலியவைகளாலும் குளிர்க்காற்று, மழை, பனி முதலியவைகளில் திரிதலாலும், ஓதம் உள்ள இடங்களில் படுத்துத் தூங்குவதாலும், உடல் வன்மைக்குத் தகுந்தபடியோ, அல்லது மிகுதி யாயோ உழைத்தலாலும், மனக் கவலையாலும் இந்நோய் பிறக்கு மென்பர்.

இந்நோயில் தன்னளவில் மிகுந்த குற்றங்கள் கீல்களுள் தங்கி, அங்கு இயற்கையாயுள்ள ஐயத்தைப் பெருக்கி, நீரைச் சுரப்பிக்கச் செய்து, நீர் கோர்த்து வீங்கச் செய்யும். வீங்கிய முட்டியில் தாங்க முடியாத வலி, குத்தல், குடைதல் உண்டாவதோடு, கை கால்களை நீட்டவும், மடக்கவும் ஒட்டாமை, தூக்கமின்மை நாளுக்கு நாள் உடல் இளைத்தல், அக்குள், துடையிடுக்கு இவைகளில் கழலைப்போல நெரி கட்டிக் கொள்வதுமாகவிருந்து, வீக்கங்கண்ட கையோ காலோ சூம்பி மெலிவடைந்து செயலற்றுப்போம்.

அழல்வளிக்கில் வாயு,

வெயிலிடைத் திரிதல் பித்த மிகுமுண வருந்த லுள்ளம்
பயிலுறு கவலை யாதிப் பண்பினால் பித்த வாதம்
கயிலுறு வாய்வு தோன்றிக் கைப்புடன் மயக்கம் வாந்தி
இயலுறு பல்லிற் செந்நீர் இறங்கநால் நோக்குங் கொள்ளும்.
(சபாபதி கையோடு).

(பொருள்) என்றதால் வளிக்குற்றம் உடலுள் தங்கி யுள்ளபொழுது, தீக்குற்றத்தைப் பெருக்கக் கூடியவாறு வெய்யிலில் திரிதல், புளிப்பு, துவர்ப்பு உள்ள பொருள்களை மிகுதியாகப் புசித்தல் என்பவைகளாலும், மனக் கவலையாலும் வளியொடு தீக்குற்றமுஞ் சேர்ந்து, இவ்விரண்டிற் கும் துணையாய்ப்பரவுகால் (வியானனும்) மேல் நோக்குக்கால் (உதான னும்) கூடி வாய்க் கைப்பு, புளி ஏப்பம், மயக்கம், குருதி வாந்தி, ஈறு களினின்று குருதி வடிதல் அல்லது குருதிக் கழிச்சல் என்னும் குறிகளைக்

காட்டி, பின் கணுக் கால் வீங்கும், வீங்கிய கணுக்கால் சிவந்து மடக்கவும் நீட்டவும் முடியாமல், மிகுதியும் வலித்தல் குத்தல் நோதலுமாய் இருக்கும்.

தக்க மருத்துவம் செய்யாவிடில், முட்டிகளில் கரடு கட்டிவிடும்.

அழல் ஐயக்கில் வாயு :

" மிதமிலாக் கலவி யையை மிகுவிக்கு முண்டி பித்தக்
கதமுறு செயவி வற்றிற் காண்பித்தக் கபக்கீல் வாயு
இதமறு மயக்கம் வாந்தி எரிசுரந் தலைநோய் வீக்கம்
மதகரி நனயின் மார்பு துடிப்புடன் எரிவும் செய்யும். "

(சபாபதி கையேடு).

(பொருள்) : என்பதால், இந்நோய் தீக்குற்றம் மிகுந்த காலைக் குளிர்ச்சியைத் தரும் பொருள்களையுண்பதாலும், குளிர்காற்றிலீடுபடு தலாலும் ஐயம் பெருகி, தீக்குற்றத்தோடும் கூடியுண்டான நோயெனக் குறிக்கும், அன்றியும், இந்நோய் கலவியால் உண்டான மேகத்தாலும் வருமெனக் கொள்க.

நோய் பிறக்கும் போதே தன்னுடன் தலைநோய், வாந்தி, வாய் குமட்டல், மயக்கம், உடல் முழுமையும் நோதல் என்னுங் குறிகளைக் காட்டி, பெருஞ் சுரம் உண்டாய், முழங்கால் முழங்கைகளின் கீல்களில் வீக்கம் கண்டு, அக்கீல்கள் மடக்கவும் நீட்டவும் முடியாமல், குத்திக் குடைந்து வலித்து, நீண்ட நாள் வரையிலும் நோய் நீங்காமல் நிற்கும், நாட் செல்லச் செல்ல அக்கீல்கள் அளவில் பெருத்துக் கொண்டு நரியின் தலைபோல் அடிபருத்தும் நுனி சிறுத்தும் நீண்டும் காணும்.

ஐயவளிக் கீல்வாயு :

" ஐவளிப் பெருக்கு முண்டி அணங்குடன் கலவி மற்று
ஐவளி வினைமு ழக்கே அளவிலா மதுவ ருந்தல்
மெய்யுறு மேக வாதக் கோழையின் மிகுதி காணல்
ஐவகை கபவா தக்கீல் வாயுவின் அறிகூ றாமல். "

" நரித்தலை வாத நரம்பு கள்வாயு கோபித் தொன்றாய்
அரிந்திடுந் தலைமேல் கைகால் அங்கமொடு வளைந்து வெம்பி
முரித்தது இறங்கி வந்து முழங்கால் கை கால்க டுக்கும்
நரித்தலை வாத மென்று நவின்றனர் முனிவர் தாமே. "

(சபாபதி கையேடு).

(பொருள்); இப்பாவில் கூறியபடி இஃது ஐயக்குற்றத்தைப் பெருக்கக் கூடிய உணவுவகையாலும் மிகுதியாய்க் கள் முதலியனவற்றைக் குடிப்பதாலும் அடிக்கடி கலவியில் ஈடுபடுதலாலும் உண்டான ஐயம், கீல் சந்துகளில், அதனிலும் பெருங்கீலாகிய முட்டியிலும் தங்கிப் பெருத்து நீர்கோத்து வரும் நோயாம். நோய் பிறக்கும் போதே, குளிர்ச்சுரம், உடலெலாம் நோதல் முதலியன ஏற்பட்டு, முட்டி நொந்து சிவந்து வீங்கும். அவ்வீக்கம் எளிதில் நீங்காமல் நின்று, கீலுக்கும் மேல் மூடித் தோலுக்கும் இடையிலுள்ள இடத்தே நீர்கோத்து பெருத்துக்கொண்டே வரும். அக்கீல் அசைக்கவும், மடக்கவும், நீட்டவும் முடியாமல் தாங்க முடியாத வலியைத்தரும்.

ஐயத் தீக்கீல் வாயு :

'' ஐயினைப் பெருக்கு முண்டி யயிலலாற் குளிருங் காற்றால்
மெய்யுறு கோழை மிக்கு மிகுவலி தொண்டை கட்டல்
ஐயுறு காய்ச்சல் வாந்தி அயர்வுடன் இருமல் வீக்கம்
செய்யுங்கீல் மடக்கல் நீட்டல் செய்திடாத் துயருண் டாமே.''

(சபாபதி கையேடு).

(பொருள்): என்றார். ஆதலின் குளிர்ச்சி தரும் உணவு, குளிர்காற்று முதலியனவற்றால் ஐயக்குற்றம் மிகுந்து, முன்பே தன்னிலை திரிந்த தீக்குற்றத்துடன் கூடி, நோய் முகமாகத் திரும்பி, மூக்கில் நீர் பாய்தல், தொண்டை கட்டல், தும்மல், இருமல், வாந்தி, உடம்பெல்லாம் நோதல், அஞ்சக் கூடியவாறு சுரம் காய்தல் என்னும் முற்குறிகளையுங் காட்டி, கீல்களில் குத்தல் முதலிய வலியையுண்டாக்கி, கீல்களை வீங்கச் செய்யும். அன்றியும் கீல்களை நீட்டவும் மடக்கவும் ஒட்டாமற் செய்யும். தக்க மருத்துவத்தில் எளிதில் தீரும்.

முக்குற்றக் கில் வாயு :

'' மிக்குற வியர்த்தல் மூச்சு மேலிடல் தலைகி றுத்தல்
மக்குறு மயக்கந் தோன்றல் வாந்தியே வாய்பி தற்றல்
பொக்குறு மலநீர் கட்டல் பொருமிய வீக்கங் காணல்
முக்குற்றக் கீலின் வாயு முகிழ்த்திடுங் குறிக ளாமே. ''

(சபாபதி கையே[illegible]).

(பொருள்) : என்பதால், இது முக்குற்றங்களும் ஒன்று கூடியதால், முப்பிணியும் தொடர்ந்து நோயோடு (சன்னியோடு) கூடிய கீல்வாயு வாதலால் இந் நோயில் முதலில், முட்டிகள் வீங்கி, மற்றைய கீல்வாயு களைப் போல் சுர முதலிய குறிகுணங்களோடு நெடுநாள்வரை வாட்டி, ஐயத்தைப் பிறப்பித்து, முட்டிவீக்கத்தை நாளுக்கு நாள் பெருகச் செய்து சீழ்கோர்த்து, அச்சீழ் முட்டிக்கு மேலும் கீழுமாய்ப் பாய்ந்தோடி, மீளா ஐயத்தையும் முப்பிணி (சன்னி) குறிகள் அனைத்தும் முதிர்ந்தகாலையில் இந்நோய் காணக் கூடும். தக்க மருத்துவம் செய்யாவிடின் கொன்று விடும். ஆதலின், அறுவை மருத்துவம் செய்வதே நலம்.

குற்ற முதலிய வேறுபாடுகள் :

'' வளிமிகு வபான வியான வாயுக்க ளதிக ரிக்கும்
இளமிக மலநீர்க் கட்டும் இயம்பிய வபானன் செய்யும்
விளிவிலா வியானன் கீலின் விளங்குறு புழைக டோறும்
ஒளியுறு குற்ற மெல்லா மொன்றிலென் றுலவச் செய்யும்.''

(சபாபதி கையேடு).

(பொருள்) : தன்செயல், புறச்செயல், நிலத்தில் எழும் தட்பவெப் பங்கள் ஆகியவற்றால் வளிக்குற்ற மிகுந்து, ஐயத்தைத் தனக்குத் துணை கொண்டு வளியின் தொழில் செய்யும், கால்களாகிய ஐந்தில் (அபான முதலிய ஐந்து வாயுகளில்) பரவுகால் (வியானவாயு) கீழ் நோக்குக்கால்களை (அபான வாயுவை)த் தூண்டச்செய்து முதலில் மிகுந்த குற்றங்களாகிய வளியும் ஐயமும் கூடி, கீல்களில் வலி முதலி யனவற்றை உண்டாக்கி வீங்கி, நீர் கோர்த்தலையும் அசைய ஒட்டாமை யையும் செய்தல் பரவுகாலின் தொழிலாம். ஓரிடத்திலுள்ள வீக்கத்தை மற்றோரிடத்திற்கு மாற்றுதலும் கீழ்நோக்குக்காலின் செயலாம். எரு (மலம்) வும், சிறு நீரும் கட்டும்.

கேடடைந்த குற்றத்தின் அளவாய் உடற்கட்டுகளில் (சப்த தாதுக் களில்), முதலில் இரசமும் குருதியும் கேடடையும், ஆதலால், பசி யின்மை, உடல் வெளுத்தல் (பாண்டு) உடல் ஊதல் (சோகை) என்னும் நோய்களையும் தொடரச் செய்யும். நோய் நீண்ட நாள் நிலைக்கு மாயின் மற்றைய உடற்கட்டுகளை முறையே கேடடையச் செய்து உடல் வன்மையைக் கெடுக்கும்.

நாடி நடை :

" வாதத்தில் சேத்தும மாகில் வலியோடு வீக்க முண்டாம். "

(அ. நாடி).

" வாட்டிடும் சேத்து மத்தில் வந்திடும் வாதமாகில்
நாட்டிய கால்கள் போல நரம்பெல்லாம் வலித்து நிற்கும். "

(அ.மு. நாடி).

" அறிந்துபார் வாதமே தனித்ததானால்
சரிந்திடவே கால்முடக் கும்."

(அ. ரத்தின சுருக்கம்).

" திருத்தமாம் வாதத் தோடே தீங்கொடு பித்தஞ் சேரிற்
பொருந்நுகள் தோறும் நொந்து போதவே பிடிக்கும். "

(நோயின் சாரம்).

" காணப்பா வாத மீறில் கால்கைகள் பொருந்தி நோகும்."

(காவிய நாடி).

" சொல்லிய ஐயத் தோடு பித்தமுங் கூடிற் றானால்
வல்லியம் போலக் குத்தும் மைந்தனே எலும்பு தோலும்
மல்லிய சரீரம் நோகும் வரிசையாய்ச் சுரமுங் காணும்."

(காவிய நாடி).

" வாதமெனும் நாடியது தோன்றில்
சீதமந்தமொடுவ யிறுபொருமல் திரட்சிவாயு ."

(சதக நாடி).

" இடமான சேத்துமத்தில் பித்த நாடி
எழுந்தணுகில் விடமுடனே வீக்க முண்டாம் ."

(சதக நாடி).

" கண்டாயோ சிலேற்பனத்தில் வாத நாடி
கலந்திட்டால் வயிறுபொருமல் கனத்த விக்கம்
உண்டாகும் ஓங்கார சத்தி விக்கல்
உறுதிரட்சி வாயு வலி..........

"வாய்த்திடும் வாதமிரண்டு மொருசிலேத்ம மோடுமாகில்
உயத்திடும் கைகால் நொந்து உயர்கனத் திடுப்பு நோகும்."

(சதக நாடி)

மருத்துவம் : இது வளிக்குற்றத்துடன் ஐயக்குற்றமும் மிகுந்து, கீழ் நோக்குக்காலும், பரவுகாலும் கேடடைந்து வருநோய் என்று கூறிய தால்,இந்நோயின் மருத்துவத்தில் முதல் முதல் வளியையும் கால்களையும் தன்னிலைப்படுத்தும் பொருட்டுக் கழிச்சல் மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். மற்றைய குற்றங்களைப்போக்கத்தக்க மாத்திரைகள், பற்ப செந்தூரங்கள், மெழுகு முதலியவற்றையும், அவைகட்குத் துணையாய்க் குடிநீர்களையும் கொடுத்து, கீல்களுள் தங்கிய ஐயத்தைப்போக்க, மேல் பூச்சு எண்ணெய், ஒற்றடம், பற்றுகைகள் ஆகியவற்றை வழங்கி நோயைப் போக்கவேண்டும்.

கழிச்சல் உண்டாக்க :

மாத்திரையில் : கோடாசூரி 2 முதல் 3 மாத்திரைகள், சஞ்சீவி 2 முதல் 4 மாத்திரைகள், அட்டபயிரவம் 3 முதல் 4 மாத்திரைகள், மேக நாத குளிகை 2 முதல் 3 மாத்திரைகள்.

எண்ணெயில் : கழற்சி எண்ணெய் 4-2 உச்சிக் கரண்டி, மெருகுள்ளி எண்ணெய் ஒரு உச்சிக் கரண்டி, வெள்ளை எண்ணெய் ஒரு அவுன்ஸ், வாதநாச எண்ணெய் ஒரு அவுன்ஸ், மேக நாத எண்ணெய் ஒரு அவுன்சாக நோய்க்கு ஏற்பக் கொடுக்கலாம்.

மெழுகு :

அகத்தியர் குழம்பு—1 முதல் 2 குன்றி அளவு.

உள் மருந்துகள்

| | | | | |
|---|---|---|---|---|
| அயவீரச் செந்தூரம் .. .. | 1 | முதல் | 2 | உளுந்து அளவு |
| ஆறுமுகச் செந்தூரம் .. .. | 1 | ,, | 2 | ,, |
| சண்டமாருதச் செந்தூரம் .. | 1 | ,, | 2 | ,, |
| காளமேகச் செந்தூரம் .. | ½ | ,, | 1 | ,, |
| தங்கச் செந்தூரம் .. .. | ½ | ,, | 1 | |
| பூரணசந்திரோதயம் .. .. | ½ | ,, | 1 | |

| | | |
|---|---|---|
| வெள்வங்கச் சுண்ணம் | .. .. | $\frac{1}{2}$முதல்2உளுந்து அளவு |
| வங்கபற்பம் | .. .. | $\frac{1}{2}$ ,, 1 ,, |
| வெள்ளி பற்பம் | .. .. | $\frac{1}{2}$ ,, 1 ,, |
| வீரமெழுகு | .. .. | ஒரு குன்றி அளவு. |
| ரசகந்தி மெழுகு | .. .. | 5 ,, |
| வான் மெழுகு | .. .. | உளுந்தளவு |
| நந்தி மெழுகு | .. .. | ஒரு குன்றி அளவு |

சுரம் உள்ளபோது :

வசந்த குசுமாகர மாத்திரை—1
பிரமானந்த பயிரவ மாத்திரை—1

வெளிமருந்துகளில் :

பற்றுவகை : மூசாம்பரபற்று, கழற்சிபற்று, காவிக்கல் பற்று குக்கில் வெண்ணெய், அழற்சி வெண்ணெய்.

கட்டு வகை : பிரமி இலை, முருங்கை இலை, வேளைக் கீரை, தராக் கீரை.

மேல்பூச்சு எண்ணெய் : வாதகேசரி எண்ணெய், எட்டி எண்ணெய், குக்கில் எண்ணெய், சடாமாஞ்சில் எண்ணெய், உளுந்து எண்ணெய், மெருகுள்ளி எண்ணெய்.

இவற்றுள் கடையிற் கூறியது தவிர, மற்றவைகளைத் தடவி, நோயில் ஏற்பட்ட குற்றத்திற்குத் தகுந்தவாறு நொச்சி, தழுதாழை, வாதநாராயணன், ஆமணக்கு, முடக்கத்தான், வல்லாரை, தரா இவ்விலைகளில் ஏதேனும் ஒன்றையாவது, கோதுமை தவிடு, செங்கல் மா, மணல் இவைகளில் ஏதேனும் ஒன்றையாவது வறுத்துக் கிழிகட்டி ஒற்றடமிடவும். மெழுகுத்தீ எண்ணெய் பூசின் கம்பளப்பட்டி சுற்றி வைத்தாற் போதும்.

சிறப்பு மருத்துவம் : இந்நூலில் கூறிய பத்து வகையான நோய்களில் நாம் பல காலமாய்க் கையாண்டு வந்ததைத் தனித்தனியே கூறுவோம்.

I. வளிக்கில் வாயு : (1) இந்நோயில் பரவுகால், (வியானன்) மற்றவைகளைக் காட்டிலும் மிகுதியாகச் செயலில் பெருகுமாதலால், அதனைத் தன்னிலைப் படுத்தும் பொருட்டு, கழிச்சல் ஒன்று அல்லது இரண்டு மூன்று முறை ஆகும்படி, இரண்டு அல்லது மூன்று அட்டபயிரவ மாத்திரைகளை, சிற்றரத்தை ஒரு பலத்தை நன்றாய் இடித்து, நன்றாய்க் கொதித்த நீரிலிட்டு அரைமணி நேரம் ஊறியபின் வடித்த குடி நீருடன் கொடுக்கக் கழியும். நோயில் சுரம் தொடர்ந்து வருமட்டும், வாரத்திற்கு ஒரு முறையாய் நோய் தீருமட்டும் இக்குடி நீரைக் கொடுத்து வருவது நன்று.

(2) சுரம் இல்லாவிடின், சிவதை, நிலாவாரை, காக்கட்டான் வேர் வகைக்கு அரை பலம், சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை, பேரரத்தை, கண்டுபாரங்கி வகைக்குப் பலம் அரைக்கால் கூட்டி இடித்ததை நான்கு பங்குகளாக்கி ஒரு பங்கைக் குடிநீரிட்டு மாத்திரையுடன் வழங்கலாம்.

(3) சுரம் அல்லது நோய் வன்மை குறைந்து கொண்டு வரும் பொழுது, மேகநாத தைலத்தில் $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அவுன்ஸ் வரையில் கொடுத்து, வாரத்திற்கு ஒரு முறை கழிச்சலுக்குக் கொடுத்து வரலாம்.

உள்ளுக்கு :—

கழிச்சலுக்குக் கொடுத்த மறு நாள் (1) வங்கச் சுண்ணம் ஒரு துவரை அளவும், பூரண சந்திரோதயம் ஒரு உளுந்தளவும் கூட்டி, தேனில் குழைத்துக் கொடுத்து, சிற்றரத்தை ஊறல் குடிநீர் கொடுக்கவும்.

(2) வங்கச் சுண்ணம் ஒரு துவரை அளவு, அயவீரச் செந்தூரம் ஒரு உளுந்து அளவு, தேன் கூட்டிக் கொடுத்து மேற்படி குடிநீர் கொடுக்கவும்.

(3) சுரம் மிகுதியாகக் காயின், மேற்படி மருந்துடன் ஒரு வசந்த குசுமாகர மாத்திரை வைத்து, தேனில் இழைத்துக் கொடுத்த பின், சித்த வைத்தியத் திரட்டில் கூறியுள்ள நிலவேம்பு குடிநீர் கொடுக்கவும்.

(4) இந்நோயில் தமரகவாயு மிகுந்து, நாடி படபடத்து மார்பு துடிக்குமாயின், உணவு போல், ''தமரக குடிநீர்'' கொடுக்கலாம்.

மேலுக்குப் பூச்சு : சுரமுடன் முட்டி வீங்கிச் சிவந்து காணும் வேளையில் ஒற்றடம் இடுவது நன்றன்று. ஆதலின், மெழுகு தைலம் குக்கில் தைலம், உளுந்து தைலம் போன்றதைக் கொண்டு மெலிதாகப் பூசி, பட்டிகட்டி வைத்தால் போதும். கீலின் சிவப்பு நீங்கிய பின், வாத கேசரிதைலத்தைப் பூசி, நொச்சியிலையை வதக்கிக் கட்டி ஒற்றடமிடலாம்.

(2) வளிநீக்கில் வாயு : இந்நோயில் தன்னிலை திரிந்த வளி; தீக்குற்றத்தைப் கோக்கும் பொருட்டு வாந்தி செய்வித்து, கழியச் செய்வது நன்றாகையால், கழிச்சலையும் வாந்தியையும் உண்டாக்கக் கூடிய தான, கோடாசூரி, அல்லது சஞ்சீவி மாத்திரைகளில் ஏதேனும் ஒன்றில் இரண்டு மாத்திரைகளை உத்தாமணிச் சாறு ஒரு உச்சிக் கரண்டி அளவில் குழைத்துக் கொடுக்க ஒன்று அல்லது இரண்டு முறை வாந்தியை உண்டாக்கிக் கழியச் செய்வது நல்லது. அன்றி, மாந்த எண்ணெயில் அரை அல்லது ஒரு உச்சிக் கரண்டி கொடுக்கலாம்.

உள்ளுக்கு : (1) வங்கச் சுண்ணம், பவள பற்பம் ஓர் உளுந்தளவு கூட்டி, பசுப்பாலில் கொடுக்கவும். (2) அல்லது வங்கச் சுண்ணம், முத்துப் பற்பம், தங்கப் பற்பம் இவற்றை வகைக்கு ஓர் அரிசி எடைக் கூட்டிப் பாலில் கொடுக்கவும்.

மேலுக்கு : குக்கில் வெண்ணெய், அழற்சி வெண்ணெய், உளுந்து தைலம் முதலியவைகளைப் பூசி, பட்டி கட்டவும் ஒற்றடமிடலாகாது.

(3) வளிஐயக் கீல்வாயு : ஐயமே மிகுந்தெழு நோயாதலால், இதன் மருத்துவம் மிகவும் அறிந்து செய்தல் வேண்டும்; உணவும் அதற்குத் தக்க வாறாக இருத்தல் வேண்டும்.

(1) கழிச்சலுக்கு கோடாசூரி, மேகநாதக் குளிகை முதலியவைகளில் எதேனும் ஒன்றை, சிற்றரத்தை ஊறல் குடிநீரில் கொடுக்கலாம்; அல்லது, வாத நாசத்தைலம் மேகநாதத் தைலங்களில் ஒன்றில் ஓர் அவுன்ஸ் கொடுக்கலாம்; அல்லது கழற்சித் தலைத்தில் ஒரு தேக் கரண்டி கொடுக்கலாம். இவ்வாறு வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை நோயின் வன்மைக்குத் தக்கவாறு கொடுத்தல் வேண்டும். கழிச்சலுக்கு மருந்து கொடுக்கும் நாளில் உள்மருந்துகள் கொடுத்தல் கூடாது.

உள்மருந்து: (1) காளமேக நாராயண செந்தூரம் ஓர் உளுந்தளவு, வங்கச் சுண்ணம் இரண்டு உளுந்தளவு, தங்க பற்பம் ஒரு அரிசியெடை இவற்றைக் கூட்டித் தேனில் கொடுக்கவும்.

(2) சண்டமாருதம் ஒன்று, வங்கச் சுண்ணம் இரண்டு, பூரணசந்திரோதயம் ஒன்று உளுந்து எடைகளாகக் கூட்டித் தேனில் கொடுக்கவும்.

வெளிக்கு: வாதகேசரி எண்ணெயைத் தடவி, மெதுவாகத் தேய்த்து, தழுதாழையைக் கிழியாய்க்கட்டி, கடுகு எண்ணெயைச் சட்டியிலிட்டு, காப்பணம் கொடுப்பது போலத் தொட்டுத் தொட்டு ஒற்றடம் கொடுக்கவும். அல்லது விடமுட்டி எண்ணெயை முன் கூறியது போலவே பூசி, வாற்கோதுமையை இரண்டு மூன்று கிழிகளாய்க்கட்டி, நீரிலிட்டு வேகவைத்து தாளியில் வைத்துக்கொண்டு, ஒன்றன் பின் ஒன்றாய் ஒற்றடங் கொடுத்துக் கொண்டே, மெதுவாய்த் தேய்த்துத் தேய்த்து எண்ணெய் போகும்படி செய்து வரவும்.

கீல் வீங்கி நீர் கோர்த்தது போலக்காணின், மூசாம்பரத்தை முட்டை வெண்கருவிட்டு அரைத்துக் கனக்கப் பூசி, அதன் மேல் பஞ்சு ஒட்டி, அதற்கு மேல் மெல்லிய சீலையை இரண்டு மூன்று முறை சுற்றி, அதன் மேல் கிளிஞ்சல் சுண்ணமும் முட்டை வெண்கருவும் கூட்டிக் குழைத்துப் பூசி விடவும். அது கல்போல இறுகிக் கொள்ளும். மூன்று அல்லது நான்கு நாட்கள் வரை அவ்வாறே இருக்கச் செய்து, ஐந்தாம் நாள் பற்றிட்டதைக் கத்தரித்தெடுத்து, தேங்காய் எண்ணெயைத் தடவி விடவும். வீக்கம் குறைந்து நீர் வற்றும். வேண்டுமாயின், மேற்கூறியவாறே மறு படியும் இரண்டு மூன்று பற்றுகளிடலாம். இதனால் நோய் நீங்காவிடின் இரண்டு மூன்று அட்டைகளை வீக்கத்தின் மீது கடிக்கவிட்டு, நீரை வாங்கும் வரையில் ஈரத்துணியிட அவை நீரைக்குடித்துத் தானாகவே விழுந்து விடும். வீக்கம் கரையும், அல்லது பிரமிவழுக்கை இலையை சிற்றாமணக்கு நெய்யில் வதக்கியேனும், பச்சையாகவேனும் வீக்கத்தின் மீது வைத்துக்கட்ட வீக்கங்கரையும். இம்மூவகைப்பட்ட முறைகள் நற்பயன் தரத்தக்கதேயாம்.

4. தீக்கீல் வாயு: தீக்குற்றம் தன்னளவில் மிகுதியடைந்தமையால், இயற்கையாய்க் கீல்களின் இடையிலுள்ள நீர்ப்பசை குறைந்து, உலர்ந்து கீழும் மேலுமாய் உள்ள கீல்கள் ஒன்றோடொன்று அசையும் போது தேய்ந்து, புண்பட்டு அப்புண் உலர உலர ஒன்றொடொன்று

இணைந்து, ஒட்டிக் கொள்ளும். அக்கீலை நீட்டவும் மடக்கவும் முடியாது. நாட்செல்லச் செல்லக் கீலும், கீலுக்குக் கீழ் உள்ள பாகமும் இளைத்துச் சூம்பிப்போகும். அதனால், தொழில் அற்றுப் போம்.

மருத்துவம் : முதல் முதலில் தீக்குற்றத்தைத் தன்னிலைப் படுத்த பன்னீர்ப்பூ(ரோசா), திராட்சை, சரக்கொன்றை, நிலாவாரை ஓர் அளவாகக்கூட்டி முறைப்படி குடிநீராக்கி அரைமுதல் ஓர் ஆழாக்குக் கொடுக்க, இரண்டு மூன்று முறை வயிறு கழியும். இவ்வாறு வாரத்திற்கு இரண்டு மூன்று முறை கொடுத்து தீக்குற்றம் குறைந்த பின் வேண்டுமாயின், இந்நோய்க்கு முதன்மையான வளிக்குற்றத்தைப் போக்கும் பொருட்டு, வாதகேசரி அல்லது கழற்சி எண்ணெய் முதலியவற்றைச் சிறு அளவில் கொடுக்கலாம.

உள்மருந்துகள் :—

1. வங்கச் சுண்ணம், ஒரு உளுந்தெடை கலைக்கோடு (சிங்கி), ஒரு உளுந்தெடை, பவழ பற்பம்—வகைக்கு ஒரு உளுந்தெடை நெய்யில் கொடுக்கவும்.

2. காளமேக நாராயணச் செந்தூரம், பவழ பற்பம், முத்து பற்பம்—வகைக்கு ஓர் உளுந்தளவு நெய்யில் கொடுக்கவும்.

3. பூரண சந்திரோதயம், முத்து, கலைக்கோடு—வகைக்கு ஓர் உளுந்தளவு கொடுக்கவும்.

வெளிக்கு : உளுந்து எண்ணெயைத் தளரப் பூசி, துணிச்சுற்றி வைத்து, உலர்ந்து போகப் போக கொஞ்சம் கொஞ்சமாய் அவ்வெண்ணெயை அதன் மேல் துளித்துக் கொண்டே வரவும், அல்லது வல்லாரை நெய், குக்கில் வெண்ணெய் இவை போன்றவைகளைப் பூசி வைக்கவும்.

5. தீவளிக் கீல்வாயு : இந்நோயில், வளிக்குற்றமும் தீக்குற்றமும் கேடடைவதன்றி அவைகளுக்குத் துணையாய்ப் பரவுகால், மேல் நோக்குக் கால் ஆகிய இவ்விரண்டும் கூடி வருமாதலால், இவைகள் யாவற்றையும் தன்னிலைப்படுத்தக்கூடிய முறையில் முதன்மையாகத், தீக்குற்றத்தை அடக்கும் பொருட்டு குளிர்ச்சி தரத்தக்க குடிநீர் வகைகளைக் கொண்டு கழிச்சல் உண்டாக்கிய பின் மற்றவைகளைக் கவனித்தல் வேண்டும்,

கழிச்சலுக்கு, முன்பு கூறிய ரோசாப்பூக் குடிநீர் கொடுத்துக் கழிச்சல் ஆன பின், உள்ளுக்கு மருந்து கொடுத்தல் வேண்டும்.

உள்ளுக்கு மருந்து வகைகள் : (1) காளமேகச் செந்தூரம், வங்கச் சுண்ணம்,வெள்ளி பற்பம் வகைக்கு ஓர் உளுந்தளவு தேனில் கொடுக்கவும்.

(2) வங்கச் சுண்ணம், முத்துச்சிப்பி பற்பம், சங்கு பற்பம் வகைக்கு ஒரு குன்றி எடை கூட்டி நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்கலாம்.

(3) பூர்ண சந்திரோதயம், முத்து வங்கச் சுண்ணம் வகைக்கு ஒரு குன்றி தேனில் தரலாம்.

வெளிக்கு மருந்து : (1) குக்கில் வெண்ணெயைக் கனக்கப் பூசி, பட்டுத் துணியைக் கொண்டு பட்டிக்கட்டுவதுபோலக் கட்டி வைக்கவும் வீக்கத்தின் சிவப்பு மாறிய பின், உளுந்து எண்ணெய் பூசி, இலந்தை இலையைச் சிதைத்துக் கிழிகட்டி, குருவை அரிசி மாக்கஞ்சியைக் கொண்டு பிழிச்சல் கொடுக்கவும்.

(2) கீல்கள் மிகச் சிவந்து வீங்கி வலி கொடுக்குமாயின், காவிக்கல், காந்தக் கல், கழற்சிப் பருப்பு இவைகளை ஓர் அளவாய்க் கொண்டு, முட்டை வெண் கருவால் மைபோலரைத்து, முட்டிக்குப் பற்றிட்டுச் சீலை சுற்றி வைக்கவும்; இரண்டு மூன்று நாள் சென்றபின் வேண்டு மாயின் அடிக்கடி பற்றிடவும்.

6. தீ ஐயக் கீல்வாயு : இஃது மேகத்தைத் துணைகொண்டு வரு நோயாலின், அதனைப் போக்கக்கூடியதான கழிச்சல் மருந்துகளையும் உள் மருந்துகளையும் கையாளல் வேண்டும்.

கழிச்சலுக்கு : மேகநாதத் தைலம். ரசத் தைலம், கழற்சித் தைலம்போன்றவைகளுள் ஒன்றைத் தக்க அளவில் கொடுத்தல் நன்று

உள் மருந்து: (1) இரசச் சுண்ணம் ஒரு கடுகளவு வங்கச் சுண்ணம் ஒரு குன்றி அளவு இரண்டையும் கூட்டி வெண்ணெயில் கொடுக்கலாம்

(2) காளமேகம் தாளகச் செந்தூரம் அயவீரச்செந்தூரம் ஒரு குன்றி அளவு தேனில் கொடுக்கவும்.

(3) வெள்ளி பற்பம், கந்தக பற்பம் காரீய பற்பம் ஓர் உளுந்தெடை தேனில் கொடுக்கலாம்.

வெளிக்கு : முதலில் எண்ணெய் வகைகளில் நொச்சி, வாதகேசரி, விடமுட்டி இவைகளில் ஏதேனும் ஒன்றைப் பூசி ஒற்றடமிட வீக்கம் கரையும். இவைகளில் தீராவிட்டால், மூசாம்பரப் பற்றிடவும், அவற்றிலும் தீராவிடின் அட்டை விடுதல் நன்மை பயக்கும்.

7. ஐயக் கீல்வாயு : கீல் வாயுகளில் ஐயத்தையே முதன்மையாய்க் கொண்டுவரும் இந்நோயினை தீர்க்கும்பொருட்டு, ஐயத்தைப் போக்குந் தன்மை பொருந்திய அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு, சஞ்சீவி மாத்திரை இவைபோன்றவைகளுள் யாதாவதொன்றை நோய்வன்மைக்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுக்க, கழியச்செய்து ஐயத்தின் வன்மையைக் குறைக்கும்.

உள்ளுக்கு : (1) கத்தூரிக் கருப்பு ஒரு குன்றி, சண்டமாருதம் ஒரு குன்றி, வங்கச் சுண்ணம் ஒரு குன்றி இம்மூன்றையும் கூட்டித் தேனில் கொடுக்கவும்.

(2) வங்கச் சுண்ணம்,வெள்ளி பற்பம் வகைக்கு ஒரு குன்றியுடன், ரசச் சுண்ணம் ஓர் அரிசி அளவு கூட்டி, வெண்ணெயில் கொடுக்கவும் இவ் விரண்டு கூட்டு மருந்துகளில் முதற் கூறியதில் பயன் இல்லையாகின் இரண்டாவதைக் கொள்க. இந்நோய்க்கு வான்மெழுகு, நந்திமை போன்றன நன்மை தரும்.

வெளி மருந்து : வாதகேசரி, சடாமஞ்சில், குக்கில் தைலம் இவைகளை மேலுக்குப் பூசி, நொச்சித் தழையை இடித்துக் கிழிகட்டி, ஒற்றடமிடவும் ; வீக்கம் சற்றும் நீங்காது நீர்கோர்த்திருக்குமாயின் மூசாம்பரப் பற்றையாகிலும், அட்டை விடுதலையாகிலும் கையாள்க.

8. ஐயவளிக் கீல்வாயு : இந்நோய் ஐயம், வளி என்னும் இரு குற்றங்களும் கூடி வருவதல்லாமல், மேகத்தையும், துணைகொண்டு வருதலால், கேடடைந்த குற்றங்களையும் மேகத்தையும் போக்கக்கூடிய கழிச்சல் மருந்துகளில், காக்கட்டான் மாத்திரை, மேகநாத தைலம், கழற்சித் தைலம் போன்றதை அளவிட்டுக் கொடுத்தல் வேண்டும்.

உள் மருந்து : (1) வங்கச் சுண்ணம், காளமேகச் செந்தூரம் வகைக்கு ஒரு குன்றியுடன் சிற்றரத்தைப் பொடி பத்துக் குன்றி கூட்டித் தேனில் கொடுக்கவும்.

(2) இரச செந்தூரம், கந்தக பற்பம்,வங்கச் சுண்ணம் ஒவ்வொரு குன்றி தேனிலும் கொடுத்தல் வேண்டும்.

வெளி மருந்து : மெழுகுத் தைலம், சடாமாஞ்சித் தைலம், வாத கேசரித் தைலம் இவைகளுள் ஒன்றைப் பூசிப் பட்டி கட்டவும்.

9. ஐயத்திக் கீல்வாயு : இந்நோயில் தீயின் கேட்டால், பரவுகால் (வியான வாயு) கேடடைவதால் கீல்களின் வலி அம்மட்டோடு நில்லாது, உடல் முழுமையும் பரவித் தலை முதல் கால்வரையிலும் நோய் எடுக்கும். ஆகலின், அடிக்கடி கழியச் செய்யும் மருந்துகளை வழங்கல் வேண்டும்.

(1) முட்டை எண்ணெய் (அண்டத் தைலம்) வயதுக்கு ஏற்ற வாறு 2 முதல் 15 துளிவரையில் கொடுக்கலாம்.

(2) உத்தாமணித் தைலம், வாதநாசத் தைலம், சித்தாதித் தைலம், குமட்டி மெழுகு இவை போன்றவைகளில் ஒன்றை அளவிட்டுக் கொடுக்கவும்.

உள் மருந்து : (1) வான்மெழுகு (2) நந்திமை (3) சண்டமாருதக் குழம்பு இவைகளில் ஒன்றை ஓர் உளுந்தளவு முதல் ஒரு கடலை அளவு பனை வெல்லத்துள் வைத்துக் கொடுக்கலாம். அல்லது ரசபற்பம் அரை உளுந்தளவு, சண்டமாருதம் மூன்று உளுந்தளவு வைத்துத் தேனில் கொடுக்கலாம்.

வெளி மருந்து : உளுந்து தைலம், குக்கில் தைலம், வாதகேசரி இவைகளைக் கொண்டு, நோகுமிடமெல்லாம் பூசி, கோதுமைத் தவிடு அல்லது நொச்சித் தழை கொண்டு ஒற்றடம் இடவும்.

10. முக்குற்ற கீல்வாயு : முக்குற்றங்கள் யாவும் ஒன்றுகூடி ஒரே பொழுதில் உடலில் சேர்ந்து உடற்கட்டுகளனைத்தையும் கேடு செய்யு மாதலால், இந்நோய்க்குத் துணையாய் முப்பிணி-சுரம், மயக்கம், வாந்தி முதலிய பல பிணிகளும் இந்நோய்க்குத் துணை கொள்ளுமென அறிந்து பெரு மருந்துகளை வழங்குவதோடு கூர்ந்து அறிவோடு மருத்துவம் செய்தல் வேண்டும்.

வெளிக்குப் போக : (1) சித்தாதி எண்ணெய், (2) குமட்டி மெழுகு (3) அகத்தியர் குழம்பு இவைகளில் நோய் வன்மைக்குத் தக்கவாறு அளவிட்டுக் கொடுத்துக் கழிச்சலை உண்டாக்கவேண்டும். வேண்டு

மாயின், இலைக் கள்ளியை வதக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் ஒன்று இரண்டு உச்சிக்கரண்டி எடுத்து, அதில் சஞ்சீவி மாத்திரை இரண்டு சேர்த்துக் கொடுக்கில், வாந்தியுடன் கழிச்சலையும் உண்டாக்கும். அல்லது கோரோசனைக் கருப்பில் இரண்டு அல்லது மூன்று குன்றியெடை உத்தாமணிச் சாற்றில் கொடுக்கலாம்.

உள்ளுக்கு : முதல் முதல், சுரம், முப்பிணி (சன்னி) இவைகளைப் போக்குவதற்கான மருந்துகளாகிய இராஜராஜேஸ்வரி குளிகை, சந்நி பாதவயிரவம், இரசச் சுண்ணம் இவை போன்றவைகளைத் தக்க அளவில் கொடுத்து அத்துடன் குடிநீர் வகைகளில் ஒன்றை வழங்கி, சுரமும், முப்பிணியும் நீங்கியபின், கீல்வாயுக்கான உள் மருந்துகள் கொடுத்தல் நன்று. அவைகள்—

(1) இரசச் சுண்ணம், வங்கச் சுண்ணம், முட்டை ஓடு பற்பம் வகைக்கு ஒரு உளுந்தெடையை உத்தாமணிச் சாற்றில் கொடுக்கலாம்.

(2) காளமேக நாராயணச் செந்தூரம் ஒரு குன்றி எடை, கரு வங்க பற்பம் ஒரு குன்றி எடை சேர்த்து தேனிலும் கொடுக்கலாம்.

வெளிக்கு : மெழுகு, தைலம், சடாமாஞ்சித் தைலம் போன்றதைப் பூசிப் பட்டிகட்டவும்.

சுரம் முதலிய கொடுமையான குறிகள் நீங்கியபின், வாதகேசரி முதலிய வற்றைப் பூசி, ஒற்றடம் கொடுக்கலாம்.

உணவு : சுரம் உள்ளபோது நீர் வடிவான கஞ்சி வகைகள் மட்டும் கொடுத்தல் வேண்டும். சுரம் நீங்கியபின் எளிதில் செரிக்கக்கூடியதான இருமுறை வடித்த சோறு, கத்திரிப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு போன்றவைகளின் பொரியல், துவரம் பருப்பு ரசம் கொடுத்து, நோய் குறைந்துவரும்பொழுது சிறிது சிறிதாகச் செரிக்கக்கூடிய உணவு களைப் பெருக்கிக் கொண்டே வரவேண்டும் ; அன்னிய (பொருள்) பதார்த்தங் கொள்ளுவோர்க்கும் மார்க்கண்டம், முட்டி எலும்பு இவை களால் ஆக்கிய ரசம் (சூப்) இவற்றைச் சில நாள்வரை கொடுத்து, பின்பு ஆட்டிறைச்சி, காடை, கவுதாரி முதலியவைகளைக் கொடுக்கலாம் ; மருந்து உண்ணும் வரை மீன் வகையை நீக்குதல் வேண்டும். வேண்டு மாயின், சிறு இறாலைக் கத்திரிக்காய், அவரைக்காய் முதலிய பொரியல் களோடு கூட்டிச் செய்து தரலாம்.

இந்நோயில் தமரக வாயு உண்டாவது இயல்பெனக் கூறியதால், தமரகக் குடிநீர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுவரையில் கொள்வது நன்மை தரும்.

## அழல் நோய்

வேறு பெயர் : பித்த நோய்

இயல் : இஃது உடலில் அழல் குற்றம் மிகுந்து வாய் நீரூறல், வாந்தி, மயக்கம், தலை சுற்றல், குருதி வன்மை கெடல், பித்தமாக வாந்தி செய்யல் ஆகிய பல துன்பங்களை விளைவிக்கும் நோயாம்.

நோய் வ ம் வகை :

மருவுமே புளிப்புறைப் புவர்ப்பு மிஞ்சல்
மனதிலே துக்கங்க ளடைத லாலும்
நெருவுமே நெருப்புவெயில் கோபந் தன்னில்
நித்திரைதா னில்லாமல் விழித்தி ருத்தல்

அருவுமே யக்கினியிற் பொசிக்கா துண்ட
லதிகமாய்ப் பெண்போக மனுப வித்தல்
நருவுமே நாபிக்கு மேலே நின்று
ணாடியே கண்டமட்டா யிருக்கும் பாரே.

(பொருள்) என்பதால் புளிப்பு, காரம், உப்புள்ள பண்டங்களை அளவுக்கு மிஞ்சி உட்கொள்வதாலும், மனத்தில் துயர்கொள்வதாலும், நெருப்பு, வெய்யில் இவற்றில் மிகுதியும் ஈடுபடுதலாலும் அடிக்கடி சினத்தையும், தூங்காது விழித்திருத்தலையும் மேற்கொள்வதனாலும், வேகாப் பொருள்களை உண்பதாலும், பெண்கலவி மிகுதியாலும் உண் டான வெப்பமானது உந்தியிலிருந்தெழுந்து கழுத்துவரையும் பாய்ந்து, அழல் குற்றத்தைப் பெருக்கும்.

முற்குறிகள் : வாய் நீரூறல், வாய்கைத்தல், நீர்வேட்கை, விக்கல், ஒக்காளம், உடல் அனலாயிருத்தல், வியர்த்தல், கற்றாழை நாற்றம், தின வெடுத்தல், சொறி சிரங்கு உண்டாதல், தோல் வறண்டு காணல், கண்ணொளி குன்றல், முகம் வெளுத்தல் அல்லது மஞ்சளித்தல், சிறுநீர்க் கட்டு, எரிச்சல், அடிக்கடி கழிதல் என்னும் குறிகளில் சிலவேனும் பல வேனுங் காணல்.

இருக்குமே பித்தவர்த் திக்குங் கால
மேதென்றா லாவணியுங் கன்னி தானும்
அருக்குமே யைப்பசிகார்த் திகைக்கு மெத்த
வாட்சியா யெழுந்துமே பொங்கிக் காணுங்
கருக்குமே சமிக்கின்ற காலந் தானே
தனியான மார்கழியிற் றையிற் றானும்
பருக்குமே பங்குனியு மேஷந் தானும்
பெருகுமே சரீரமெங்கும் பித்தந் தானே.

(பொருள்) இப்பித்த நோய் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய இம்மாதங்களில் தன்னளவில் மிகுந்து பொங்கி எழும். மார்கழி, தைத் திங்களில் தணியும். மீண்டும் பங்குனி, சித்திரை மாதங்களில் பெருகி உடல் முழுமையும் பரவும்.

நோய் எண் : இந்நோய் நாற்பத்திரண்டு வகைப்படும் என யூகி கூறுவர்.

நாட்டினேன் பித்தத்தின் பெயரைத் தானும்
நாற்பத்தி ரண்டான குணா குணங்கள்
ஆட்டினே னாவுருபித் தந்தன் னோடு
ஆமலபித்த மதனோடுன் மாத பித்தந்
தாட்டினேன் தமந்தபித்தம் வாத பித்தந்
தனித்ததோர் வன்னிபித்தஞ் சிலேட்ம பித்தந்
தூட்டினேன்சு ரோணித பித்தம் விகார பித்தந்
துடியான விரணபித்தந் தொகையைக் கேளே.

தொகையான வுரத்தபித்த மிரத்த பித்தஞ்
சுழிகாசப் பித்தமொடு சுவாசப் பித்தம்
வகையான சிலேட்மபித்தங் கரும்பித் தந்தான்
மாகரப்பான் பித்தத்தோ டசீர்ண பித்தம்
அகையான வருசிபித்த மெரிபித் தந்தான்
அழல்பித்தந் துடிப்பித்தம் விஷப்பித் தந்தான்
[illegible]யான அதிசாரப் பித்தந் தானும்
மூலபித்த முதிர்பித்த முறைமை யாமே.

முறைமையாங் கண்டபித்த மோடு பித்தம்
மூடுபித்த நடுக்குபித்தங் கபால பித்தம்
தறமையாஞ் சர்த்திபித்தந் தாக பித்தந்
தருக்கான விக்கல் பித்தம் க்ஷயபித் தந்தான்
திறமையாந் கிமிர்பித்தம் வலிபித்த மோடு
சீதபித்தங் திருமிபித்த மசாத்ய பித்தம்
மறமையாம் மார்க்கபித்த மருந்தீடு பித்தம்
வகையதுநாற் பத்ரண்டு மகிழ்ந்து பாரே.

மகிழ்ந்துமே பித்தந்தான் வருகு மாறு
மகதேவர் தமைப்பணிய மாட்டா தார்க்கும்
மகிழ்ந்துமே குருவடியை வணங்கா தார்க்கும்
மாதாவின் மனமகிழா மார்க்கத் தார்க்கும்
மகிழ்ந்துமே தந்தையை வஞ்சித் தோர்க்கும்
மகாலயங்கள் தொழுதிடா மார்க்கத் தார்க்கும்
மகிழ்ந்துசிவ திரவியத்தை யபக ரித்த
மாபாத கர்க்கும்வந்து மருவும் பாரே.

1. ஆவுரு பித்தம்
2. ஆமில பித்தம்
3. உன்மாத பித்தம்
4. தமந்த பித்தம்
5. வாத பித்தம்
6. வன்னி பித்தம்
7. சிலேட்டும பித்தம்
8. சுரோணித பித்தம்
9. விகார பித்தம்
10. விரண பித்தம்
11. உரத்த பித்தம்
12. இரத்த பித்தம்
13. காச பித்தம்
14. சுவாச பித்தம்
15. செம் பித்தம்
16. கரும் பித்தம்
17. கரப்பான் பித்தம்
18. அசீரண பித்தம்
19. அருசி பித்தம்
20. எரி பித்தம்.
21. அழல் பித்தம்
22. துடி பித்தம்
23. விட பித்தம்
24. அதிசார பித்தம்
25. மூல பித்தம்
26. முதிர் பித்தம்
27. கண்ட பித்தம்
28. ஒடு பித்தம்
29. மூடு பித்தம்
30. நடுக்கு பித்தம்
31. கபால பித்தம்
32. சர்த்தி பித்தம்

33. தாக பித்தம்
34. விக்கல் பித்தம்
35. க்ஷய பித்தம்
36. திமிர் பித்தம்
பித்தம்
38. சீத பித்தம்
39. கிருமி பித்தம்
40. அசாத்திய பித்தம்
41. மார்க்க பித்தம்
42. மருந்தீடு பித்தம்

நாற்பத்திரண்டாகும்.

சிலநூலோர் இதனை நாற்பது எனவும் கூறுவர்.

பொதுக்குறி குணங்கள்: நோய் வரும் வழியில் கூறியவாறு உணவு, செயல், காலங்களின் வேறுபாடுகளால் தன்னளவில் மிகுந்த அழல் குற்றமானது, உணவைச் செரிக்காவண்ணம் செய்து, வாய் நீரூறல், வாய் குமட்டல், வாய்கைத்தல், புளித்தேப்பம், குடித்தநீர் எதிர்த்து வெளியாதல், அத்துடன் சிறிது பித்த நீர் கலந்து வருதல் அல்லது வெப்பத்தால் மிகுந்த குருதியுங்கூடி வெளியாதல், கண், உடல் யாவும் எரிதல் முதலிய குறிகளை முன்பு காட்டிப் பின்பு நோயை வருவிக்கும்.

நோ றி குணம்

1. ஆவுரு பித்தம் :

தானான சரீரந்தான் வெதும்புந் தாகஞ்
சளியிளைப்புக் கடுப்புமா யழற்சி யாகும்
பூனான வாய்தனிலே புளிப்பு றைப்புப்
புகழான மலசலந்தான் மஞ்ச ளிக்குங்
கோனான குறுமொழிகொண் டெங்கும் பார்க்குங்
கூத்தாடுங் கொக்கரிக்குங் கூவ லாகும்
ஆனான வடிக்கடிக் கெழுந்தி ருக்கு
மாவுருபித் தக்குணத்தி னாண்மை தானே.

(பொருள்) இந்நோய், உடல் வெதும்பி, நீர்வேட்கை, இருமல், அதனோடு சளிவெளியாதல், இளைப்பு, உடல்கடுத்தல், வெப்பமாதல், வாய் புளிப்பும் உறைப்புமாதல், எருவும் சிறுநீரும், மஞ்சளித்தல், வெறியனைப் போன்று சுற்று முற்றும் பார்த்துக் கூத்தாடல், ஆரவாரித்துக் கூவுதல், அடிக்கடி எழுந்தோடுதல் என்னுங் குறிகளையுடையதாம்.

2. ஆமில பித்தம் :

ஆண்மையா யங்கமெல்லாங் கருக லாகு
மதிசயமாய்த் தலைதிருப்பு மாவே சம்போல்
தாண்மையாய்ச் சாப்பிட்ட வசனந் தானுந்
தரித்தொருநாள் பின்புதான் வாந்தி பண்ணும்
பூண்மையாய்ப் புளிப்போடு கசப்பெ டுக்கும்
புகலரிய கால்கைதா னசதி யாகும்
வேண்மையாய் விக்கலொடு வயிறு முப்பும்
மிகவாமல் பித்தத்தின் விகற்பந் தானே.

(பொருள்) இந்நோயில், உடல் கறுத்து சத்தற்றுப்போம், ஆவேசங் கொண்டது போல தலை சுற்றும். உண்ட உணவு செரியாமல் மறுநாள் அப்படியே வாந்தி செய்யும். வாய் புளிப்பும், கசப்புமாக இருக்கவிருந்து கையும் காலும் சோர்ந்து போகும். அன்றியும், விக்கல், வயிறு உப்புதல் முதலியவையும் உண்டாகும்.

3. உன்மாத பித்தம் : (வெறியழல் நோய்)

விவரமாய் மேனியெலா மிடுக்குண் டாகு
மிக்கான தீபனந்தான் மெத்த வாகுந்
தபரமாய்த் தலைதானுங் கனத்துக் காணுந்
தரிக்குமோ ரிடந்தன்னில் மிகவி ருக்கும்
உபரமா யொருவருடன் பேசி டாம
லூமையைப்போல் விழித்திருக்கு முறக்க மில்லை
திபரமாய் வாய்நீர்தான் வடித்து நிற்குஞ்
சித்தமது கலங்குமுன் மாத மாமே.

(பொருள்) அழல் நோயில், உடல் நிலைகெட்டு, தாங்க முடியாத பசி உண்டாதல், தலை கனத்தல், ஓரிடத்திலேயே உட்கார்ந்திருத்தல், பிறருடன் பேசாது ஊமையைப் போலிருத்தல், எப்பொழுதும் தூங்காமலே விழித்திருத்தல், வாய் நீர்சொட்டல், நெஞ்சம் கலங்கி இருத்தல் ஆகிய குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

4. தமந்த பித்தம் :

மாதமாய் மதுத்தானு முண்ட வன்போல்
மறதியதா யிருக்குமே சரீரந் தானும்
நாதமாய்ச் சரீரந்தான் மிகத்து டித்து
நாவடியி னரம்பெல்லா மஞ்ச ளிக்கும்
பேதமா யழைக்கழைக்கப் பிரேதம் போலப்
பேசாம லடிக்கடிக்குத் தாக மாகுஞ்
சாதந்தான் மிகவுண்டு மவுன மாகுந்
தமந்தபித் தத்தனிட தரிப்புத் தானே.

(பொருள்) இந்நோயில், கள்ளுண்டவனைப்போல், தன்னை மறந்து கிடப்பதன்றி, உடல் துடித்தல், நாவறட்சி, நா நரம்பு மிக்க மஞ்சளாதல், பிணத்தைப் போலப் பலமுறை அழைத்தாலும் பேசாதிருத்தல், அடிக்கடி நீர்வேட்கை கொள்ளல், மிகுந்த உணவு உண்ணுதல் ஒன்றும் பேசாது மௌனமாக இருத்தலான குறிகள் காணப்படும்.

5. வாத பித்தம் :

தரிப்பான கண்தனையே மிகம றைக்குந்
தரியாத மிகவிரைச்சல் புகைச்ச லுண்டா
மிரிப்பான கண்மின்மினி யாய்ச்சு ழன்று
மிக்கநீர்த் ததும்பியே கலங்கி நிற்கும்
வரிப்பான மின்னுடம்பு வியர்வை யாகு
மயக்கமொடு தியக்கமாய் வாந்தி யாகுங்,
குறிப்பான கொம்பேழும் அன்னம் வேண்டாங்
கூறினோம் வாதபித்த கொள்கை தானே.

(பொருள்) இவ்வாத பித்த நோயில், கண் புகைந்து இரைச்சலுண்டாகிக் கண்ணை மறைப்பதன்றி கண்ணை மின்மினிப்பூச்சுப் போலச் சுழலச் செய்து, கண்ணீரை வடித்துக் கலங்கச் செய்யும். மேலும் உடம்பு முழுமையும் வியர்வை, மயக்கம், தயக்கம், வாந்தி, உணவு வேண்டாமை என்னுங் குறிகுணங்களையும் காட்டும்.

6. வன்னி பித்தம் :

கொள்கையாய்ப் பேதமாய் வயிறு ளைந்து
கொடிதான கனல் தானுங் கபால மேற்
வள்கையாய்ச் சீதமாய்ச் செந்நீர் பாய்ந்து
வாட்டமாய்க் கருகியே யுடல்வெ ளுத்து
மங்கையாய் மயக்கமொடு தியக்க மாகி
வாறான வசனமிகத் தானுஞ் செல்லா
நங்கையாய் நாவழன்று புளிப்புக் காணும்
நளினமாம் வன்னிபித்த நாட்ட லாமே.

(பொருள்) வயிறு நொந்து கனல் போலெழுந்து மண்டை வரையிலும் பாயும், வெளிக்குப் போகையில் சீதக் கழிச்சலைப் போலக் கழிவதன்றி, செந்நீர்க் கழிச்சலும் உண்டாகும். சிலவேளை அஃது கருத்துங்காணும். உடல் வெளுத்து மயக்கமும், தியக்கமும் உண்டாகும். சோறு வேண்டாது நாவானது வெந்து வாய் புளிப்பதுமன்றி உணவைக் கொள்ளமுடியாதபடி எரிச்சலை உண்டாக்கும். ஆகிய இவைகள் இந்நோயின் குறிகளாம்.

7. சிலேட்டும பித்தம் :

நாட்டவே மிகவுடம்பெல் லாம்வெ ளுத்து
நளிர்ந்துமே யுடம்பெல்லா நோக்கா டாகி
மாட்டவே மனமதுதான் கோப மாகி
மயங்கியே யறிவழிந்தி ரும லுண்டாய்க்
காட்டமே கண்களெல்லா மிகப் பச்சென்று
கருதியே பசிகாணுங் கலக்க மாகித்
தேட்டமாய்த் தும்மலொடு சிரங்க னக்குஞ்
சிலேட்டுமத்தின் பித்தமென்று செப்பி டீரே.

(பொருள்): இப்பித்த நோயில் ஐயமுங்கூடிற்றாகையால் உடல் முழுமையும் வெளுத்து, குளிர்ந்து வலியுண்டாகும். மனம் மயங்கி அறிவழிந்துக் காணும். இத்துடன், இருமல், கண்கள் பச்சையாதல், மிகுந்த பசியுண்டாதல், அடிக்கடி தும்மல் வருதல், தலை கனத்தல் என்னும் குறிகளும் உண்டாகும்.

8. சுரோணித பித்தம் :

செப்பவே சுரோணிதந்தான் மிகவெ தும்பித்
தேகமெங்குங் குடைந்துமே சந்து நோவாஞ்
செப்பவே மேனிமுட் பொதிந்தாற் போல
விடாயாகித் தாகமாய் மேனி கன்றும்
தப்பவே தலைநோவு மிகுதி யாகுஞ்
சஞ்சலிக்குஞ் சிந்தைதான் தயக்க லாகுந்
துப்பறவே வாந்தியொடு கோழை யாகுஞ்
சுரோணிதமாம் பித்தமென்றே சொல்லு வீரே.

(பொருள்): இந்நோயில், இரத்தம் (சுரோணிதம்) மிகவெதும்பி, உடல் முழுமையும் பரவிக்குடைந்து கீல்களில் நோயுண்டாகும். உடம்பில் முட் செருகியது போலக்குத்தி, உடலை நையச் செய்து, மிகுந்த நீர் வேட்கையைப் பிறப்பிக்கும், அன்றியும், தலைநோய், மனவாட்டம், தயக்கம், வாந்தி, கோழைகக்கல் என்னுங் குறிகளையும் காட்டும்.

9. விகார பித்தம் :

சொல்லவே துயிலொழிந்து கசந்து வாயைத்
துப்பரவாய்ப் பலபேச்சும் விரும் பிடாது
கல்லவே கண்சிவந்து கலக்க முண்டாங்
கடுத்துடம் பெலாம்வெளுத்துக் கருகிப் போகும்
மல்லவே வாந்தியொடு மயக்க மாகு
மனமருக லாகியே வாய்நீ ரூறும்
பல்லவே பட்டினிதான் மிக விருக்கும்
பாரமாம் விகாரபித்தப் பண்ப தாமே.

(பொருள்): இந்நோய் தூக்கமின்மை, வாய்கைத்தல், பலவாறாகப் பேசல், எவற்றிலும் விருப்பமின்மை, கண்சிவந்து கலங்கிக் காணல், உடம்பு வெளுத்துக் கடுத்துத் தீய்தல், வாந்தியாதல், மயக்கமுண்டாதல், மனம் மயங்கல், வாய்நீரூறல், உணவு கொள்ளாது பட்டினியாக இருத்தல் என்னுங் குறிகுணங்களைப் பெறும்.

10. விரண பித்தம் :

பண்பாக உடம்பெங்குந் திமிருண் டாகிப்
பாரமாய்த் தினவெடுத்து விரண மாகும்
நண்பான நாவெல்லாங் கசப்புக் காணும்
நாடியெலாம் படபடத்துத் துடிப்புண் டாகுந்
திண்பான லிங்கமெலாஞ் சிவந்து காணுந்
திடுக்கிட்டு நித்திரையி லெழுந்தி ருக்கும்
வெண்பாக வாய்நீர்தான் மிகவு மூறும்
விரணமாம் பித்தத்தின் மூர்க்க மாமே.

(பொருள்): இதில், உடம்பு முழுமையும் திமிர் தோன்றிக் கனத்து தினவுண்டாகிப் புண்ணாதல், வாய் கைத்தல், நாடி படபடத்துத் துடித்தல், ஆண்குறி சிவத்தல், திடுக்கிட்டுத் துயிலெழுதல், வாய் நீர் ஊறல் ஆகிய குறி குணங்கள் தோன்றும்.

11. உரத்த பித்தவாதம் :

மூர்க்கமாங் கோபமது மிகவுண் டாகு
முனையாக வடிக்கடிக்குச் சண்டை கொள்ளும்
ஆர்க்கமாய்க் கூவியே விரைச்ச லாகு
மாதான பாதாளம் பேதி யாகும்
நார்க்கமாய் நன்மைதுன்மை தோன்றா மற்றான்
நலக்கமாக் கண்சிவக்குந் தூக்க மில்லை
ஊர்க்கமா யுடம்புதூ லிக்கு முப்பு
முரத்தபித்த வாதத்தி லுண்மை தானே.

(பொருள்): இந்நோயில், கோபம் மிகுதியாக உண்டாதல், அடிக்கடி சண்டையிடுதல், வயிறு கூவி இரைச்சலிட்டு அடிக்கடி கழிதல், நன்மை தீமை அறிய முடியாமை, கண்சிவத்தல், தூக்கமின்மை, உடல் நாளுக்கு நாள் பருத்துக் கொண்டே வருதல் என்னுங் குறிகள் உண்டாகும்.

12. இரத்த பித்தம் :

உண்மையா யிருமற்றான் மிகவு முண்டா
யுதட்டியாய்க் குத்தியே ரத்தம் வீழ்ந்து
அண்மையாய்ச் சரீரமது மிகவும் வற்றி
அடிவயிறு சுருங்கியே வற்றிக் காணும்

வண்மையாய் வாய்நீரிற் கவுச்ச டிக்கு
மறுகியே வல்லுடம்பு வாட்ட மாகும்.
இண்மையா யிடுப்புதான் குடைச்ச லாகு
மிரத்த பித்தத்தி னியற்கை தானே.

(பொருள்): இந்நோய், மிகுந்த இருமலை யுண்டாக்கி, கோழையைத் துப்பும் போதெல்லாம் குருதியை வெளியாக்கும். உடலை மிகுதியாய் நாளுக்குநாள் இளைத்துக்கொண்டே வரச்செய்வதோடு அடிவயிற்றைச் சுருங்கி வற்றச் செய்யும். வாய்நீர் புலால் நாற்றத்தோடிழியச் செய்து உடம்பை நாளுக்குநாள் வாட்டமடைவிக்கும், இடுப்புக் குடைந்து நோயுண்டாக்கும்.

**13.** காச பித்தம் :

இயற்கையா யிருமியே மிகப்பு ரட்டி
ஈண்டியே விக்கலொடு சர்த்தி யாகும்
உயற்கையா யுடம்புதான் மிகவ லிக்கு
முஷ்ணமாய் வெதும்பியே குரலே கம்மும்
தியற்கையாய் வாய்நீரு மிகவே யூறுந்
தித்திப்பு மிகவிரும்புந் துயரங் காணுங்
கயற்கையாய் நெஞ்சுதனிற் கனமாய்க் காணுங்
கரும்பினுக்குங் காசபித்தங் கருத்து தானே.

(பொருள்) இந்நோய், இயற்கையாகவே கண்ட இருமல் நோய் நீடித்து நிலைபெற்றுள்ளபோது பித்தப் பெருக்கின் கேட்டால் துணையாக விளைவதாகும். இந்நோயில் விக்கல், வாந்தி, உடல்முற்றும் வலி, உடல் வெப்பத்தினால் வெதும்பல், குரல் கம்மல், வாய்நீரூறல், இனிப்புப் பொருள்களில் இச்சை, மனத்துயரம், நெஞ்சுதனில் கனமாக இருப்பது போற்றோன்றல் என்னுங் குறிகுணங்களுண்டாம்.

**14.** சுவாச பித்தம் :

கருத்தாகச் சுவாசமது மிகவுண் டாகுங்
கனமாக வயிறுமே ஊதிக் காணும்
உருத்தாக உடலதுதான் மிகவ லிக்கு
'மூறுமே கேணி போல்' வாய்நீர் தானும்

மருத்தாக மயங்கியே கண்மறைக்கும்
மார்பிலே வலியோடு இருமலுண்டாந்
துருத்தாக வயிறதனிற் பசியோ வில்லை
சுவாசமாம் பித்தத்தின் சூட்சந் தானே.

(பொருள்) இந்நோயில், இரைப்பிருமல் போல மேல் மூச்சு பெரிதுமுண்டாய் வயிறு ஊதிக்காண்பதோடு, உடல் முழுமையும் வலிக்கும், வாயில் ஊற்றைப் போன்று நீர் ஊறலும், மயக்கமும், கண் மறைப்பும், மார்பில் தாங்க முடியாத வலியோடு இருமலும், வயிறு பசியில்லாமையும் ஆகிய குறிகளுண்டாம்.

**15.** செம்பித்தம் :

சூட்சமாஞ் செம்புதனிற் களிம்பு போலுந்
துரிதாக வாயெடுக்குஞ் சிகப்பாய் வீழும்
மாட்சமா மலமிறுக்கிச் சிவப்புப் போலாம்
மயக்கமொடு வியர்வைதான் செந்நீர் பாயுந்
தாட்சமாந் தண்ணீர்தான் மிகத்த விக்குந்
தலைதானுந் திருப்பியே தவக்க முண்டாந்
தேட்சமாந் திடுக்கோடு பயமு மாகுஞ்
சிறுகதிர்போல் மேனிச்செம் பித்த மாமே.

(பொருள்) இந்நோய், வாயில் செம்பின் களிம்பைப் போற் சுவையை உண்டாக்கி, வாந்தியை வருவிக்கும். அவை செந்நிறமாய்க் காணப்படும். எருவை (மலத்தை)க் கட்டுப்படுத்தி அவைகளைச் சிவந்த நிறமாய் வெளிப்படுத்தும். மயக்கத்தைப் பிறப்பித்து உடலை வியர்க்கச் செய்யும். அவ்வியர்வையும் செந்நிறமடையச் செய்யும். நீர் வேட்கையை மிகுதியாக்கும், தலையைச் சுழலச் செய்து தயக்கத்தை உண்டாக்கும். அடிக்கடி திடுக்கிட்டுப் பயப்படச் செய்யும். உடலை இளஞ்சூரியனைப் போல் சிவக்கச் செய்யும்.

**16.** கரும் பித்தம்:

செம்பித்த மாகியே தியக்க முண்டாய்ச்
சிரசோடு மெய்நடுக்குந் தலைவ லிக்கும்
கம்பித்த மாகியே கண்ணு றங்குங்
கடைக்கண்தான் சிவத்துமின் மினிய தாகும்

நம்பித்தஞ் சடமெல்லாங் கனத்து வற்றும்
நாவுதனில் ருசியில்லைப் பசியு மில்லை
வம்பித்தங் கருப்பாகி வாந்தி யுண்டாம்
மாசடையுங் கரும்பித்த வளப்பந் தானே.

(பொருள்) இந்நோயில், தலை, உடல் முதலியவைகள் நடுங்குதல், தலைவலி யுண்டாகி கண் உறங்கச் செய்தல், கடைக்கண் மிகச் சிவந்து மின்மினி போலத் தோன்றுதல், பித்தக் குற்றம் மிகுந்து உடல் கனத்து வறளுதல், நாச்சுவையறியாமை, பசியின்மை, வாந்தியாதல் என்னும் இக்குறிகளைக்காட்டி, உடலில் அழுக்குப்படிந் தாற் போன்று கருத்துக்காணும்.

17. கரப்பான் பித்தம்:

வளப்பமாய்ச் சரீரமெலாஞ் சொறி யுண்டாகி
வருத்தமிக வாகியே கட்டி கட்டுங்
குளப்பமாய் வயிறுதான் பேதி யாகுங்
குமுறலா யிருமியே யிழுத்துக் கொள்ளும்
இளப்பமாய்க் கால்தானும் பெலக்கே டாகு
மிடுப்பிலே வலியுண்டாய்த் திமிருண் டாகுங்
களப்பமாய்க் கருகியே மேனி யெல்லாங்
கன்றுகரப் பான்பித்தங் கண்டி டாயே.

(பொருள்) : உடல் முழுமையும் சொறியுண்டாகி, அஃது குறு கட்டிகளாக மேலெழும்பி, அத்துடன் அடிக்கடி கழிதல், வயிறு குமுறி இரைதல், குடலை இழுத்துக் கொள்ளல், கால் வன்மையற்று துவண்டு போதல், இடுப்பு வலித்தல், திமிருண்டாதல், உடல் வற்றி ஒளி குறைதல் என்னுங் குறிகள் இந்நோயில் காணும்.

18. அசிரண பித்தம்:

கண்டிட்ட மந்தமாய்ப் பசியோ வில்லை
கடுத்துமே நளிராகி மலமி றுக்கும்
வெண்டிட்ட விழிகரித்து நீர்தான பாயு
மிக்கதலை வலிக்கும்வயி றிரைச்ச லாகும்

அண்டிட்ட அடிவயிறு வழுத்த மாகு
மசனமிகச் செல்லாது கைகா லோயும்
பண்டிட்ட புளித்தேங்காய் போல்வா யூறும்
பண்பான வசீர்ணபித்தம் பயின்றி டாயே.

(பொருள்) இந்நோயில், பசியின்மை, உடல் கடுத்துக் குளிர் உண்டாதல், எருக்கட்டுப் படுதல், கண்களில் எரிச்சலுண்டாகி நீர் பாய்தல், மிக்க தலை வலி, வயிறிரைதல், அடிவயிறு இழுத்துப் பிடித்தாற்போல் நோதல், உணவு வேண்டாமை, கைகால் ஓய்ச்ச லாதல், வாய்ப்புளித்துத் தேங்காய் பாலைப்போல் வாய்நீர் ஊறல் என்னுங் குறிகளைக் காட்டும்.

19. அருசி பித்தம்.

20. எரிபித்தம்:

அதட்டியே அடித்துடைதா னிரண்டு பாத
மழகான கண்ணோடு உள்ளங் கால்கள்
கதட்டியே யுள்ளங்கை யெரிவு காணுங்
காதிரண்டு மூக்கோடு வறண்டு போகும்
முதட்டியே முதுகுகை கால்க டன்னில்
முதிர்ந்த விறுவிறுப்புமே மெத்த வாகும்
பதட்டியே காற்றுத்தான் மிகவே வேண்டும்
பாரமா மெரிபித்தம் பயின்ற வாறே.

(பொருள்): இதில், அடித்தொடை, இருபாதங்கள், கண், உள்ளங் கால், உள்ளங்கை இவைகளில் எரிச்சலுண்டாகும்; இருகாதும் மூக் கும் வறண்டுபோகும். முதுகு, கை, கால் இவைகளில் மிகுந்த விறுவிறுப்பு உண்டாகும். இவைகளைத் தாங்கமுடியாமல் காற்றை மிக விரும்பும்.

21. அழல் பித்தம்:

வாறான விளமைதனில் மிகந ரைக்கும்
வடிவமெல்லா மிகவெளுப்பாய்த் தானிருக்கும்
காறான கடைக்கண்தான் மிகச்சி வக்குங்
கண்டபல ஞானங்கள் மிகவே பேசுந்

தூறான வார்த்தைகள்தான் மிகச்சிக் கேன்று
துடியிடையார் மேலின்பந் திறந்து கூறல்
பாறான பலகலைதான் மிகவு ரைத்தல்
பாடுமே யழற்பித்தப் பரிசு தானே.

(பொருள்): இந்நோய், இளமையில் மயிர் நரைத்துப் போதல், உடல் வெளுத்தல், கடைக்கண் மிகச் சிவத்தல், பல கலைகளையும் அறிந்த ஞானியைப் போலப் பலவற்றைப் பேசல், பெண் இச்சையிலீடுபடல் என்னுங் குறிகளைப் பெறும்.

22. துடிபித்தம்:

பரிசுதா னுடம்பெல்லா மிகத்து டித்துப்
பாண்டுவாய் மேனியுந்தான் பச்சென் றாகும்
உரிசைதா னில்லாம லுண்ண மாட்டா
தோட்டமே மிகுதியா யுலையப் பண்ணும்
அரிசுமே யாயிழைமேல் மனப்புண் ணாகு
மடிக்கடிக்கு யாரோடுஞ் சண்டை கொள்ளுந்
துரிசுதான் மிகப் பண்ணும் உண்டி மீது
துடிபித்தந் தன்னுடைய சொரூப மாமே.

(பொருள்): இந்நோயில், உடம்பிலுள்ள எல்லா உறுப்புகளும் துடித்தல், பாண்டு நோயைப் போல் உடல்ஊதி, பச்சை நிறமாகத் தோன்றல், வாய் சுவை யறியாமையால் உணவு உண்ண இச்சை கொள்ளாமை, சிறிது தூரம் ஓடினும் பெருமூச்சுண்டாதல், கீழ்வாய் (மூலத்தில்) புண்போல் எரிதல், பெண்களின்மேல் விருப்பங்கொண்டு மனப்புண் ணாதல், அடிக்கடி எவருடனும் சண்டையிடுதல் முதலிய குறிகளுண்டாம்.

23. விடபித்தம்:

சொருபமாய்ச் சோர்ந்துமே வீழ்ந்தி ருக்குந்
தூற்றுமே கொடுமைதனை யாரோ டுந்தான்
உருபமா யுள்ளங்கால் தனிலி ருந்து
உயரமா யேறுமுச்சந் தலைதன் னிற்றான்
திருபமாய் விடமிறங்கும் போலே ஏறுந்
தேகமெல்லாம் வலியுண்டாய்க் கண்டிப் பாகும்
அருபமாக யசனமிகத் தானுஞ் செல்லா
வரிதான விடப்பித்த மசாத்திய மாமே.

(பொருள்): இந்நோய்,, அழலின் எழுச்சியாலுண்டாய் நஞ்சு போல் கிளம்பி உள்ளங்காலிருந்து உச்சி வரையிலும் பாய்ந்து, கொடுமை பல செய்யும்; அன்றியும், உடல் முழுமையும் வலித்தல், உணவு ஏற்றுக் கொள்ளாமை, எருவாயில் எரிச்சல் உண்டாதல் ஆகிய குறிகளைப் பெறும்.

**24. அதிசாரப்பித்தம்:**

அரிதான வயிறதனி லிரைச்ச லாகு
மடிவயிறு பிடுங்கியே பேதி யாகும்
உரிதான உப்பசந்தான் மெத்த மாகு
மொளிவிலாப் பக்கத்தில் வலியு மாகும்
எரிவான ஈரலெல்லாங் குமுறல் காணு
மேற்றமாய்த் தாகமொடு மயக்க மாகுங்
கரிதான வரோசகமா மசாத்திய மாகுஞ்
சலிக்குமே யதிசாரப் பித்த மாமே.

(பொருள்): இந்நோயில், வயிறு இரைதல், அடிவயிறு நொந்து கழிதல், வயிறு உப்பிக்காணல், பக்கத்தில் வலித்துக் குத்தல், ஈரல் களில் எரிச்சலுங் குத்தலுமுண்டாதல், மிகுதியாக நீர் வேட்கை உண்டாதல், வாய் குமட்டுதல், சுவையின்மை, மயக்கம் உண்டாதல் என்னுங் குறிகுணங்கள் தோன்றும். இஃது எளிதில் தீராது.

**25. மூலபித்தம்:**

சாரமாய் வயிறிரைந்து பேதி யாகுஞ்
சலிப்பான கோபமாய்த் தடுமா றாடும்
கோரமா மூலத்தில் முளையுங் காணுங்
குறங்கினோ டடித்துடையுங் கடுப்பு முண்டாஞ்
சோரமா யுடல் வெளுத்து சோபை யாகுந்
தூக்கமே மிக மிஞ்சிச் சோம்ப லாகுங்
காரமாய்க் கண்ணுந்தான் கரிச்ச லுண்டாங்
கனமூல பித்தத்தின் காட்சி யாமே.

(பொருள்) இந்நோயில், வயிறு இரைந்து உணவின் சாரத்தை அப்படியே கழியச் செய்தல், மனஞ்சலித்துச் சினங்கொள்ளல், தடு மாற்றம் உண்டாதல், எருவாயின் முளை வெளிக்காணல், தொடை

கடுத்தல், உடல் வெளுத்துக் காணல், உடல் ஊதுதல், தூக்கம் மிகுதியாகிச் சோம்பி இருத்தல், கண் கரிசலாக இருத்தல் என்னுங் குறிகளைக்காட்டும்.

26. முதிர்பித்தம்:

ஆமென்ற வங்கமெல்லா மம்மை வார்த்து
வாட்டினாற் பேலவே தினவு மாகும்
போமென்ற சரீரமெலாம் புண்க ளாகும்.
புழுதியள்ளிப் பூசினாற் போன்ற சரீரம்
வாமென்று வடிவமது மஞ்ச ளாகு
மலசலமுஞ் சுருங்கியே வாட்ட மாகும்.
தாமென்ற நாடியது துவண்டு காணும்
நாட்டமுண்டா முதிர்ப்பித்த நாடு வோர்க்கே.

(பொருள்) : உடம்பு முழுமையும், அம்மையிலுண்டாகும் கொப்புளங்களைப் போல் சிறு கொப்புளங்கள் பிறந்து தினவெடுத்து உடம்பு முற்றும் புண்ணாகும். உடம்பில் புழுதியை அள்ளிப் பூசியதுபோல் மஞ்சள் நிறம் பெறும். காணப்படும் சிறு நீரும் எருவும் தீய்ந்து சுருங்கும். நாடி துவண்டாற் போல் நடக்கும். ஆகிய இக்குறி குணங்கள் இந்நோயில் காணக்கூடும்.

27. கண்ட பித்தம்:

நாடியே குரலினைத்தான் கனத்துக்கொண்டு
நற்கசப்பாய் சர்த்தியது தானெ டுக்கும்
வாடியே கண்டத்திற் புண்போ லாகும்
வழவழத்து நாவெல்லாம் வறண்டி ருக்குந்
தாடியே தாளடியிற் கனப்புண் டாகுஞ்
சமுத்திரத்தி னோசைபோற் காதி லுண்டாம்
பேடியா மயிருஞ்செம் பட்டையாகும்
புறவிசிவாங் கண்டபித்தப் பிரதாபந் தானே.

(பொருள்) : கண்ட பித்தத்தில், அழல் குற்றமானது குரல் வளையத்தைத் தாக்கித் தாபிதப்படுத்தி வீங்குதல், மிகுந்த கைப்பாக வாந்தியாதல், வாந்தி யெழயெழத் தொண்டையும் கழுத்தும் புண்போல் நோதல், தொண்டையில் குழ குழத்துக் காணல், நாவறளல்

தாள் அடி கனத் திருத்தல், காதில் கடலிரைதற் போல் இரைதல், மயிர் செம்பட்டை நிறமாதல், புறஇசிவு உண்டாதல் என்னும் இக் குறிகளைக் காட்டும்.

28. ஒடு பித்தம் :

பிரதாப மாகியே யோடி யெங்கும்
பிதற்றலா யுதாசனங்கள் மெத்தப் பேசும்
நிரதாப மாகவே பற்கடிக்கும்
நெருப்பாக கண்சிவக்கும் நிமைத்து மூடும்
குரதாப மாகவே கூவற் போடுங்
கொக்கரிக்குங் கூத்தாடுங் குறித்தே பார்க்கும்
அரதாப மாகவே யாண்மை யுண்டா
மசாத்தியமா மொடுபித்த மணுகி னோர்க்கே.

(பொருள்) : இந்நோய், பார்ப்பவர்கள் மனமிரங்குமாறு வெறியனைப் போல் பேசிக்கொண்டு இங்குமங்கும் ஓடித்திரிதல், அடிக்கடி பற்களை கடித்தல், நெருப்பைப்போல் கண் சிவத்தல், கூச்சலிடல், கொக்கரித்தல், கூத்தாடல், உற்றுப்பார்த்தல், ஆண்மையோடு பிறரை எதிர்த்தல் என்னும் வெறியின் குறி குணங்களைப் பெறும். நாட்கள் செல்லச் செல்ல உடல் வன்மையற்றுக் காணும்.

29. மூடு பித்தம் :

அணுகியே யாபரணப் பொன்ற னைத்தா
னகப்பட்ட விடந்தனிலே புதைத்துப் போடும்
மணுகியே மனிதரைத்தான் கண்டபோதே
வார்த்தைகள்தா னுதாசினங்கள் வசனிப் பாகும்
நணுகியே நாக்குக்குள் தானே பேசும்
நலத்தண்டி பண்ணியே யிருக்குங் கைகள்
மிணுகியே வெந்நேர மன்னம் வேண்டா
மிக்கான மூடுபித்த மீறி னோர்க்கே.

(பொருள்) : இந்நோய், தன்கையில் கிட்டிய பொன் அணிகள் முதலிய வைகளைப் புதைத்து வைத்தல், மக்களைக் கண்ட போதெல்லாம் இழிவாகப் பேசுதல், தானாகவே பேசிக்கொள்ளல், கை கால் சும்மா இராமல் ஏதோ செய்து கொண்டிருத்தல், உணவு வேண்டாமை என்னுங் குறிகளைக் காட்டும்.

30. நடுக்குப் பித்தம் :

மீறியே தலையோடு சிரசு நெற்றி
மிக்கான பிடரியோடு முதுகுத் தண்டு
காறியே கண்டங்கள் கதிப்போ டொக்கக்
கனமாக நடுக்கியே காந்தி யாகுஞ்
சீறியே கசப்பாக வாந்தி யாகுஞ்
சிணுக்கிரும லாயிருமுந் தூக்க மில்லை
ஊறியே வாய்நீர்தான் மார்பில் வீழும்
மூறுமே நாத்தானு நடுக்கு பித்தம்

(பொருள்) : இதில் தலை, மண்டை, நெற்றி, பிடரி, முதுகுத் தண்டு, கழுத்து இவைகள் கதித்து கனமாக வீங்கி நடுங்கும். அன்றியும் கசப்பாக வாந்தியாதல், சிறு இருமல் உண்டாதல், தூக்கமின்மை சொள்ளுவடிதல் என்னுங் குறிகுணங்களையும் காட்டும்.

31. கபால பித்தம் :

நடுக்குமே கபாலந்தான் சிரசோ டொக்க
தளிராகி யுடம் பெங்கும் கடுப்பு மாகும்
விடுக்குமே அம்புபோற் சிரசெல் லாந்தான்
மேனியுமே மஞ்சணிற மாகுங் கண்டாய்
முடுக்குமே மூக்குதண் டெல்லா நோகு
முகமெல்லாம் வீங்கியே மூர்ச்சை காணும்
படுக்குமே வடிக்கடிதா னெழுந்தி ருக்கும்
பாரமாங் கபாலபித்தப் பண்பு தானே.

(பொருள்) : கபாலபித்தமாகிய இந்நோயில், தலைநடுக்கல், குளிருண்டாகி உடல் முழுதும் நோதல். அம்பைக்கொண்டு பாய்ச்சுவது போலத் தலை குத்தல், உடல் மஞ்சளித்தல், மூக்கந்தண்டு நோதல், முகம் வீங்கிக் காணல், மூர்ச்சையுண்டாதல், படுக்கை யிறங்காமல் அடிக்கடி யெழுந்திருத்தல் என்னுங் குறிகள் காணும்.

32. வாந்தி பித்தம் :

பாரமா யுடம்பெங்குந் திமிருண்டாகும்
பதைத்துமே ஈரலுக்குள் வலியுண் டாகும்
வாரமாய் வாய்கைத்து வாந்தி யுண்டா
மகத்தான தலையெடுக்க மயக்க மாகும்

ஆரமாய் அக்கினிதான் மிகவுண் டாகு
வரோசகமா யெந்நேர மாண்மை குன்றுந்
தாரமாய்த் தண்ணீர்தான் மிகவே நாடும்
சமிக்காது சர்த்திபித்தத் தாண்மை தானே.

(பொருள்) : இந்நோயில், உடல் முழுமையும் திமிருண்டாதல், ஈரலுக்குள் வலித்தல், வாய்கைத்து வாந்தியாதல், தலை எடுக்க முடியாமல் மயக்கம் உண்டாதல், உடல் வெப்பமடைந்து சுவையின்மை ஏற்படுதல், ஆண்மை குன்றல், அடிக்கடி மிகுந்த நீர் வேட்கையாதல், செரியாமை என்னுங் குறிகளைக் காட்டும்.

32. நீர்வேட்கைப் பித்தம் :

ஆண்மையா யடிவயிற்றிற் பதைப் புண்டாகு
மங்கமெல்லாம் வெவ்வழல்போ லழன்று காணுந்
தாண்மையாய்த் தண்ணீர்தான் மிகக்கு டிக்குஞ்
சமித்தியமாம் பண்டத்தி லிச்சை யாகுங்
காண்மையாய் கண்டத்தில் வியர்வை காணுங்
கழுத்தடியு நாவடியு மிசித்துக் கொள்ளும்
பூண்மையாய்ப் புளிப்புமே லிச்சை யாகும்
புகலரிய தாகபித்தம் பேச லாமே.

(பொருள்) : இதில் அடிவயிற்றில் துன்பமுண்டாக்கி, உடம்பெல்லாம் நெருப்புப் போல வழன்று நீர்வேட்கை மிகுந்து நீரை மிகுதியாகப் பருகச் செய்யும். குளிர்ச்சி தரும் பண்டங்களில் விருப்பம் உண்டாகும். கழுத்தில் வியர்க்கும். கழுத்துக்குக் கீழும் நாவடியிலும் இழுப்புண்டாகும், புளிப்புப் பொருள்களிலிச்சை ஏற்படும்.

33. விக்கல் பித்தம் :

தாகமுடன் சர்த்தியதாய் விக்க லாகுந்
தவிப்பெய்தி சரீரமெலாஞ் சயித்ய மாகும்
பாகமுடன் தலைபுரட்டுக் கிடைகொ டாது
பால்போல வாயினிலே நுரையுந் தள்ளுஞ்
சாகமுடன் சயித்தியத்தில் மிகக்கி டக்குந்
தணலாக வுடல்வெதும்புந் தளர்ச்சி யாகுஞ்
சோகமுடன் கைகால்தா னோய்ச்ச லாகுஞ்
சுருக்கிடுமே விக்கல்பித்தஞ் சுருதி தானே.

(பொருள்) : இந்நோய் நீர்வேட்கையும் வாந்தியு முண்டாய் அதற்குத் துணையாக விக்கலெழுந்து தவிப்பை உண்டாக்குதல், உடலில் பித்தசயித்தியங்கூடி; தலைபுரட்டல், படுக்கையிற்றங்காமை, பாலைப் போல வாயினின்று நுரை தள்ளல், உடல் தணல் போல் வெதும்பித் தளர்ச்சியாதல், சோகத்தோடு கைகால் ஒய்ச்சலாதல் என்னுங் குறி களைப் பெறும்.

34. இளைப்பிருமல் பித்தம் (க்ஷயபித்தம்)

சுருதியா யிருமலது மிகவு முண்டாய்ச்
சூக்ஷமாய் வெதும்பலோடு தண்ணீர் தாகம்
பருதியா யுடல்வெளுத்துப் பாண்டு வாகும்.
பஞ்சுபோற் கண்களெல்லாம் வெளுப்பாய்ப் போகும்.
குருதியாய் நெஞ்சுதனிற் கோழை கட்டுங்
குணுக்காகக் கட்டிபோற் சளியே வீழும்
நிருதியாய் நெஞ்சுதனி லெரிவுண் டாகு
நித்திரையே மிஞ்சுக்ஷய பித்தந் தானே.

(பொருள்) : இந்த நோயில், இருமல் சின்னாட்கள் நிலைபெற்று நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்து, உடல் வெதும்பி, நீர் வேட்கை, உடல் வெளுத்தல், கண் பஞ்சுபோல் வெளுப்பாதல், தொண்டையில் கோழை சேர்ந்து குருதி கக்கல், அத்துடன் கட்டி கட்டியாகச் சளி வெளிப்படுதல், நெஞ்சில் எரிச்சல், தூக்கமின்மை என்னுங் குறிகளும் தோன்றும்.

36. திமிர் பித்தம் :

பித்தமா யுடம்பதுதான் மிகம யக்கும்
பேதமாய் வயிறெங்கு முள்ளு போலாம்
நித்தமாய்க் காலமே வாந்தி யாகும்
நினைவோடு நித்திரையு மசதி யாகும்
பத்தமா யொன்றையே படித்து நிற்கும்
பாரமா யுடம்பெங்குந் திமிருண்டாகுஞ்
சுத்தமாய் உடலெலாந் தூசுண் டாகுந்
துருகநடை கொடாதுதிமிர் பித்தந் தானே.

(பொருள்) : இந்நோய் உடலிலழற் குற்ற மிகுந்து, மயக்கத்தையும் வயிற்றில் முள் சொருகியதுபோற் குத்தலையும், நாளும் காலையில் வாந்தியையும் உண்டாக்கும். இன்னும், நினைவு மாறாமலே தூக்கம் கொள்ளுதலும், சோர்வடைதலும் உடல் முழுமையும் கனத்துத் திமிரா தலும், உடலில் அழுக்குப் படிதலும், நடக்க முடியாமையும் இந் நோய்க்கான குறிகுணங்களாம்.

37. வலி பித்தம் :

நடைகொடா தடிவயிற்றி லிழுத்து நொந்து
நாவரண்டு தலையெல்லா மிகக்க னத்து
இடைகொடாச் சந்தெல்லா நோயுண் டாகி
ஈரல்தனிற் குதைனிலே வலித்து நோவாம்
படைகொடா மலந்தானும் பச்சென் றாகும்
படபடத்து உடம்பெங்கும் பக்கங் கொள்ளும்
மடைகொடா வயிற்றெரிச்சல் மெத்த வாகு
மார்படைக்கும் வலிபித்த வண்மை தானே.

(பொருள்) : நடக்க முடியாமை, அடிவயிற்றிலேதோ எழுவதுபோல நோதல், நாவரளல், தலையெலாம் மிக வலித்தல், பூட்டுகளில் நோயுண்டாதல், ஈரல் குலையில் வலித்தல், பச்சை நிறமாகக் கழிதல், உடல் படபடத்து எங்கும் நோதல், வயிற்றுள் மிகவும் எரிச்சலுண்டாதல், மார்பு அடைத்தல் ஆகிய இக்குறிகள் இந்நோயிற் காணும்.

38. சீத பித்தம் :

வண்மையா யுடம்பெங்கும் வடியுந் தண்ணீர்
மயக்கமா யுடல்கனத்துப் பார மாகும்
புண்மையாய்ப் பிடரிதனி லிசிவுண் டாகும்
பொருமியே வயிறுப்ப சந்தா னாகுந்
திண்மையா யுடல்கனத்துச் செக்கு போலாஞ்
சீறியே மிகவிருமிச் சிந்தை கேடாஞ்
செண்மையாய் வாய்நீர்தான் உப்பு றைக்குஞ்
சிறுநீருஞ் சிகப்பாகுஞ் சீத பித்தம்.

(பொருள்) : உடலில் எல்லாப்பாகத்திலிருந்து வியர்த்துத் தண்ணீர் மிகக் கொட்டுவதோடு மயக்கமும் உண்டாகும். உடல் கனத்துப் பளுவாகிப் (பாரமாகிப்) புறங்கழுத்து இசிவெடுத்து வயிறுபொருமி ஊதலும், உடல்கனத்துக் காணினும் பலமற்றிருக்க மிகுதியும் இருமலுண்டாகி உடல்சிதைந்து நெஞ்சம் புண்ணாகும். வாய்நீர் உப்புக்கரித்தலும் சிறுநீர் சிவந்திழிதலும் ஆகிய இக்குறி குணங்களைக்காட்டு மிந்நோய்.

**39. கிருமி பித்தம் :**

சீதமா யடிவற்றிற் றிமிருண் டாகிச்
செழுமையா யுடம்பெங்குந் தினவு மாகி
வாதமா யுடம்பெங்குங் கடுப்புண் டாகி
வற்றியே மலசலமும் வரண்டு போகுங்
காதமாய்க் கால்கைகள் கதலித் தண்டு
கனத்ததுபோல் வெச்சென்று கடுப்பு மாகும்
நாதமாய் மலந்தன்னிற் கிருமி வீழும்
நாறுமே யுடல்கிருமிப் பித்த மாமே.

(பொருள்) : இந்நோயில், சீதத்தினால் வயிற்றுள் திமிருண்டாகி உடல் முழுமையும் தினவும் வலியும் ஏற்படும். வளிநோயில் காணுவது போன்று சிறுநீரும் எருவும் வற்றிக் கட்டுப்படும். அன்றியும், கைகால்கள் கனத்து வாழைத்தண்டு போலச் சில்லிடு வதன்றி மலத்தில் கிருமியுங்கூடி நாற்றத்தோடு கழியச் செய்யும் ஆகிய இக் குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்.

**40. திராப்பித்தம் :**

உடம்பதுதான் லாகிரிகள் தின்ற வன்போ
லுணர்ச்சிதா னில்லாமற் புடவை கட்டா
உடம்புதா னழலாகுந் தன்மை போலத்
தவிச்சுமே தாகந்தான் மிகவுண் டாகும்
மடம்புதான் வாதாடு மனித ரோடே
வார்த்தைகள்தான் பலபேச்சும் வசனிப் பாகும்
வடம்புதா னுக்கிரமாய்க் கண்சி வக்கும்
வாய்வறளு மசாத்யபித் தந்தா னன்றே.

(பொருள்) : இந்நோயுற்றான், கள், சாராயம் முதலிய பானங்களை உண்டவன் போன்று உணர்ச்சியற்று உடை உடுக்கவும் நிலையற்றிருத்தலும், தவித்து உடல் வெப்பமடைந்து நீர் வேட்கை மிகுதியும் உண்டாகுதலும் பிறரோடு வாதிட்டுப் பல வார்த்தைகளைப் பேசுதலும் கண்கள் சிவந்து. வாய்வரளுதலும் ஆகிய குறிகுணங்களைப் பெறுவன். இந்நோய் நீங்குதல் அருமையே.

41. மார்க்க பித்தம் :

தானென்ற சகலநூல் தான்றான் பேசுஞ்
சடுதியினி லுட்காரு மோட்டம் பாயும்
போனென்ற புடவையைத்தான் கிழித்துப் போடும்
புலம்புமே வாய்வந்த தெல்லாம் பாடும்
தேனென்ற சிரசோடு பிடரி யெல்லாஞ்
சிக்கெனவே இசிவாகுந் தேகம் வாடும்
பானென்ற பலபலவாங் கருமஞ் செய்யும்
பழிக்குமே பிறரைத்தான் மாக்க பித்தம்.

(பொருள்) : இந்நோயில், தான் கற்றவற்றை யெல்லாம் பேசல், உட்காருதல், உடனே எழுந்து ஓடல், தான் உடுத்த துணியைக் கிழித்தல், புலம்பல், வாய்க்கு வந்தவாறு பாடல் முதலியன செய்யும். அன்றியும் தலையிலும் புறங்கழுத்திலும் இசிவுண்டாகி உடல் வாடும் இன்னும் பற்பல காரியங்களைச் செய்யும், உடலின் வன்மையெல்லாம் குறைந்து மனநிலையழிந்து பிறரைப் பழித்தல் ஆகிய குறிகுணங்களைக் காட்டிவிக்கும்.

42. மருந்திட்டு பித்தம் :

மார்க்கமா மனமதுதான் மௌன மாகும்
வடிவெங்கு மூதியே நெஞ்சு வற்றும்
ஊக்கமா றுடம்பதுதானசதி யாகு
மூணுறக்க மில்லாம லுழலு மெங்குந்
தேர்க்கமால் திடுக்கிட்டுச் சிதைவாம் புத்தி
சேயிழையார் மருந்தினாற் றிரட்சி யாகி
ஆர்க்கமா யடிக்குடலில் மிகுந்து பாழி
யடங்காது மருத்தீடு பித்த மாமே.

(பொருள்) : இந்நோய், மருந்தீட்டால் விளைந்தெழுந்த அழல் குற்றத்தால் உண்டாம் நோயாம், இதனில், ஒன்றும் பேசாமல் ஓரிடத்தில் மௌனமாயிருத்தல், உடல் ஊதிக்காணல், நெஞ்சு வறண்டு போதல், ஊக்கமின்மை, உடல் அசதி, உணவும் தூக்கமுமில்லாமல் எங்கும் சுற்றித்திரிதல், அடிக்கடி திடுக்கிட்டுப் புத்தி தடுமாறல், உந்தியில் கட்டி போற்றிரண்டு அடிக்குடலிற் வலியுண்டாதல் ஆகிய குறிகளைக் காணும்.

குறிப்பு : இந்நோயை நாற்பத்திரண்டென வகுத்து அவைகளின் குறி குணங்களைக் கூறியிருப்பினும், இங்குக் கூறியுள்ள நோய்களை மற்றைய இடங்களிலும் கூறியுள்ளோமாகையால், ஈண்டுக் கூறிய ஒவ்வொரு நோய்களுக்கும் குற்றவேறுபாடுகளையும் மருத்துவ முறைகளையும் விடுத்தனம். ஆயினும் அழல் நோய்களுக்கான சிறப்பு மருத்துவங்களை மட்டும் சிறிது கூறுவோம்.

மருத்துவம் : இஃது அழல் குற்றத்தைப் பெருக்கக்கூடிய செயல், உணவுகளால் வருநோயெனக் கூறியதால், இந்நோயைப் பரிகரித்தற்கும் மிகுந்த அழலைத் தன்னிலைப்படுத்தற்கும், உடலின் வன்மையைப் பெருக்குதற்குமான மருந்துகளைத்தருதல் வேண்டும். முதலில் நெய், பால் இவற்றால் ஆகிய மருந்துகளையும், குடிநீர் வகைகளையும் கொடுத்து, பின்பு வாந்திக்கும் வயிற்றுப் போக்குக்கும் மருந்தீந்து இறுதியில் சிறுகச் சிறுகப் பெரு மருந்துகள் வழங்கல் வேண்டும். அவைகள்.

வாந்திக்கு :

1. நெய் வகை :—(1) வாந்தியை எழச்செய்து கழிச்சலை உண் டாக்கவேண்டின், பேய்ப்பீர்க்கு விதை பலம் ஒன்று, பற்பாடகம், சீந்தில், சூரத்து நிலாவாரை, சிவதை, கடுக்காய், அதிமதுரம், சீமை சாமந்தி வகைக்குப் பலம் நான்கு இவற்றை நன்றாக இடித்து, 2 படி நீரிட்டு உழக்காக வற்றக் காய்த்து வடித்து, மறுபடியும் பசு நெய் உழக்குக் கூட்டிக்காய்த்து, கடுகு திரளும்போது வடித்து, அதில் பூனைக்கண் குங்கிலியம் பலம் அரை பொடித்துத் தூவிக் கலந்து வைத்துக்கொண்டு, அரை முதல் ஒரு கரண்டி கொடுக்க, வாந்தியும் கழிச்சலும் உண்டாகும்.

(2) மருக்காரைப் பழம்: சீந்திற் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சிவதை வேர், காக்கட்டான் வேர், சிற்றா மணக்கு வேர், பற்பாடகம், பேய்ப்புடல், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வெள்ளை நீர்முள்ளிப்பூ வகைக்குப் பலம் நான்கு கொண்டு, நாலு படி நீர்விட்டு அரைப்படியாக வற்றக் காய்த்து வடித்து அதில் பால் படி ஒன்று, நெய் படி அரை கூட்டிக் காய்த்து வடித்து, ஒரு திங்கள் கழிந்த பின் வழங்க வேண்டும். இதனை உச்சிக்கரண்டி அளவு கொடுக்க, வாந்தி உண்டாகும்.

(3) பேய்த்தும்மட்டிக்காயை வரகு வைக்கோலால் சுட்டு, தோல், கோது நீக்கிப் பிழிந்த சாறுபடி அரையும், கள்ளிப்பால் படியும் கூட்டி, கொத்து மல்லி, சோம்பு, போஸ்தக்காய்த் தோல், அமுக்கிராக்கிழங்கு, பற்பாடகம், சதகுப்பை, தண்ணீர்விட்டான் கிழங்கு, ஏலம், நெல்லி வற்றல், சிறுகீரைவேர், வெள்ளை வெங்காம்யத்தின் வித்து வகைக்குப் பலம் ஐந்து எடுத்து இவைகளை ஒன்றிரண்டாக இடித்து, நான்கு படி நீரிட்டு எட்டொன்றாகக் காய்த்து, வடித்ததில் பால் படி இரண்டு, காடி நீர் படி இரண்டு, நெய் படி ஒன்று ஆகியவற்றையும் சேர்த்துக் காய்த்து மெழுகு போற்றிரண்டு வரும்போது வடித்து, அதில் தூய்மை செய்து பொடித்த பனங்கற்கண்டு பலம் பத்தும் கூட்டிக் கிண்டி வைத்துக் கொண்டு, ஒரு சிறு கரண்டி அளவு கொடுக்கவும். மிகுதியாக வாந்தியோ, கழிச்சலோ ஆகின், எலுமிச்சம் பழச்சாறு, தயிர் முதலியவைகள் கொண்டு முறித்துக் கொள்க.

2. குடிநீர் வகைகளில்.—(1) பேய்ப்புடல், சீந்தில், பற்பாடகம், கொட்டை முந்திரி, பன்னீர்ப்பூவிதழ், அத்திப்பழம், காக்கணவேர், மருக்காரை வேர் வகைக்குப் பலம் கால் கூட்டி, போதிய நீர்விட்டு ஒரு படியாகக் காய்த்து வடித்து, வடித்த அரை ஆழாக்கு நீரில் சிறிது தேனை விட்டுக் கூட்டிச் சாப்பிடக் கழிச்சலும், வாந்தியும் உண்டாகும்.

(2) சிவதை வேர், சீந்திற்றண்டு, நில விளாவேர், மூக்கிரட்டை வேர், சாரணைவேர், பேய்ப்பீர்க்கு, கொட்டை முந்திரி வசம்பு, சோம்பு, சீரகம் வகைக்குக் கால் பலம் கூட்டி, அரைப் படி நீர்விட்டு அரை ஆழாக்காகக் காய்த்து வடித்து, சிறிது நெய் கலந்து குடிக்கவும்.

செய் மருந்துகள்.

1. நெய்கள்.—சீந்தில் நெய், தண்ணீர்விட்டான் கிழங்கு நெய் வல்லாரை நெய் இவற்றுள் ஒன்றைத் தனித்தேனும் அல்லது பற்பசெந்தூரங்களுக்குத் துணையாகவேனும் நோய்களுக்குத் தக்க வாறு கொடுக்கலாம்.

2. பற்பத்தில்.—முத்து, பவளம், முத்துச்சிப்பி, மாணிக்கம் அயநாகம். சிலாசத்து, வெள்வங்கம் இவைகளுள் ஒன்றை நோய்க் குத் தக்கபடி துணை மருந்துகளோடு கொடுக்கலாம்.

குக்கில் வெண்ணெய், குக்கில்பொடி, காவிக்கல், கருங்குங்கி லியம் போன்றவைகளையும் கொடுக்கலாம்.

உணவு.—அழலை (பித்தத்தை) மிகுதியும் பெருக்காததும், அதனைத் தன்னிலைப்படுத்தி உடற்கு ஊட்டத்தைத் தரக்கூடியதுமான உணவுப் பொருள்களைக் கொடுத்தல் வேண்டும்.

சோறு.—மணக்கத்தை அரிசி, குறுவை அரிசி, காரரிசி முதலிய வைகளைக்கொண்டு சமைத்ததாக இருத்தல் மிக நன்று.

காய் கறிகளுள்.—கத்திரிப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு அத்திப் பிஞ்சு, பீர்க்கு, புடல், வாழைக்கச்சல், புளியாரைக்கீரை, மணத்தக் காளிக்கீரை, தாளிக்கீரை, கொத்துமல்லிக்கீரை, வெள்ளை வெங்காயம், உளுந்து, துவரை, பச்சைப்பயறு, வெந்தயம், கொத்துமல்லி, சோம்பு, நெய், பால், தயிர், மோர் இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். அன்னிய பொருள்களுள், மார்க்கண்டம் காடை, கௌதாரி ஆகும். மீன் ஆகாது.

படுக்கை.—இலவம்பஞ்சு படுக்கை மிகவும் நல்லது.

## ஐய நோய்.

வேறு பெயர் : கப நோய், சிலேத்தும நோய்.

இயல்.—இஃது, உடலில் ஐயம் பெருகி, மூக்கு நீர்பாய்தல், தொண்டையில் கோழை கட்டல், குரற்கம்மல், இருமல், வயிறு இரைத்துக் கடுகடுத்து வெண்மையாகவும், சீதங் கலந்தும் பேதியாதல் ஆகிய இயல்புடைய நோயாகும்.

நோய் வரும் வழி; குளிர் காற்றிலீடுபடல், குளிர்ந்த நீரையும், குளிர்ச்சிதரும் பொருள்களையும் மிகுதியாக உட்கொள்ளல், இனிப்பும் புளிப்புமுள்ள பொருள்கள், கிழங்கு வகைகள், பழைய சோறு இவைகளை அடிக்கடி புசித்தல் இவற்றாலும், மாசி பங்குனி மாதங்களின் தட்ப நிலையினாலும் ஐயப் பெருக்குண்டாம்.–

நோய் எண் : இருபத்தொன்றென்ப :

1 இருமல்.
2 காசம்.
3 சுவாசம்.
4 தீபனம்.
5 மந்தம்.
6 வளி.
7 அழல்.
8 முக்கூட்டு.
9 சுகசன்னி.
10 சுரம்.
11 அதிசாரம்.
12 நீர்க்கோவை.
13 அனல்.
14 பூதம்.
15 முயலகன்.
16 வெறி.
17 விகாரம்.
18 சுரோணிதம்.
19 விரணம்.
20 துர்க்கந்தம்.
21 நித்தியம்.

இவற்றைப் பின்வரும் செய்யுட்களால் அறிக :—

முற்றான சிலேட்மந்தானிருபத் தொன்று
முனியுரைத்த சொற்படியே மொழியக் கேளாய்
சிற்றான விருமலாஞ் சிலேட்மத் தோடு
செறிகாசச் சிலேட்மமாஞ் சுவாசச் சிலேட்மம்
மற்றான தீபனசி லேட்மத் தோடே
மந்தசிலேட் டுமவாத சிலேட்ம மாகும்
துற்றான பித்தசிலேட் மந்தொந்த சிலேட்மஞ்
சுகசன்னி வாதசிலேட் டுமந்தா னாமே.

ஆகுமே சுரசிலேட்ம மதிசார சிலேட்ம
மதிகசல சிலேட்மமா மக்கினி சிலேட்மம்
போகுமே பூதசிலேட்ம முயல கன்றான்
பொறிவெறிச் சிலேட்மமாம் விகார சிலேட்மம்
சோகுசுரோ னிதசிலேட்மம் விரண சிலேட்மந்
துற்கந்த சிலேட்த்மமா நித்திய சிலேட்மம்
நாகுமே இருபத்தொன் றாஞ்சி லேட்மம்
நாட்டினேன் வரலாறு நயந்து கேளே.

குறி குணங்கள்.

**1. இருமல் ஐயநோய் :**

சாற்றியேயினிப்பு நெய்ப்பாய்ச் சளியே வீழுந்
தளுக்காகும் முகந்தானுங் குளிருண் டாகு
மாற்றியே மூக்கதனில் நீரோ பாயு
மாசற்ற வுடம்பெல்லாம் வெள்ளை யாகுஞ்
சீற்றியே மலந்தன்னிற் சீத முண்டாய்ச்
சிறுநீரு மஞ்சளித்துச் சிறுக வீழுங்
காற்றியே யுடம்புக்குள் வெகுகு டாகுங்
கனவிரும லாஞ்சிலேட்மக் கணக்குத் தானே.

(பொருள்) இந் நோயில், உடலில் குளிருண்டாகி முகத்தில் நீரேற்றங்கொண்டு ஊதித் தளதளவென்று காணும், மார்பில் சளிகட்டி இளகலாயும் இனிப்பாயும் வெளிப்படுதலும், உடம்பு முழுமையும் வெளுத்து, அடிக்கடி சீதத்தோடு வெளுத்துக் கழிச்சலுண்டாம். அன்றியும் சிறுநீரானது மஞ்சளித்துச் சிறுகச் சிறுக இறங்குவதன்றி உட்சுரம் காய்ந்து உடல் மிக்க வெப்பம் பெறுதலாகிய குறி குணங்கள் தோன்றும்.

**2. நாட்பட்ட (காச) இருமல் ஐயநோய் :**

கணக்காகச் சரீரந்தான் சீதள மாகிக்
கனத்துமே மதத்திட்டுப் பார மாகி
மணக்காக நாடியெல்லா நுணுக்க மாகு
மருவுசிலேட் மத்தடைந்து வாய்வ றண்டு
அணக்காக அக்கினிதான் மிகவுண்டாகி
அடிமூக்குத் தண்டெல்லா மிகக்க னத்துத்
திணக்காக இருமலொடு திணவு முண்டாம்
செயலாகச் சிலேட்டுமத்தின் றிறமை தானே.

(பொருள்) உடலில் மேற்கூறிய ஐய நோய் நிலைத்திருப்பின், உடல் கனத்துப் பாரமாகி, நாடிகள் தளர்ந்து வன்மையற்று, வாய் வறண்டு, உடலில் மிக்க சூடுண்டாகி, அடிமூக்குத்தண்டு வீங்கி, வாய் ஓயாத இருமலொடு நமையும் காணும்.

3. இரைப்பு ஐய நோய் :

திறமையாய் நெஞ்சுதனிற் கோழை கட்டுஞ்
சிக்கென்று தானிருமி மூக்க டைக்குங்
குறுமையாய் குறட்டென்று சுவாசங் காணுங்
குளிரோடு சுரமுண்டாய் மயக்க மாகும்
மறமையாய் மார்போடு நெஞ்ச டைக்கும்
வாய்வறண்டு மூக்கதனில் நீரே பாயும்
வெறுமையாய் மிகத்தண்ணீர் தாப முண்டாய்
விடுசுவாச சிலேட்டுமத்தின் விவரந் தானே.

(பொருள்) இந்நோயில், நெஞ்சில் கோழை கட்டி, மூக்கடைத்துக் குறட்டை விடுவதுபோன்று மேல்மூச்சு வாங்கும். குளிருடன் சுரங் காய்ந்து மயக்கமுண்டாகும். மார்பும் நெஞ்சும் அடைக்கும். வாய் வறண்டு போதல், மூக்கில் நீர் பாய்தல், நீர்வேட்கை மிகுதல் முதலியன வாகிய குணங்கள் காணும்.

4. பசி ஐயநோய் :

விபரமாய்த் தீபனந்தான் மிகவுண் டாகு
மிக்கான வுடம்பெல்லா மெரிவுண் டாகும்
அபரமாம் நெஞ்சடைக்கு மழுகை யாகு
மாக்கையெல்லாம் வலியுண்டா யழலுண் டாகுங்
கபரமாய்க் கைகாலுஞ் சயித்ய மாகுங்
கனத்துமே சரீரந்தான் பருத்துக் காணும்
உபரமா யுண்ணாக்கிற் பசப சக்கு
முறுதியாய்த் தீபனசிலேட் மந்தா னென்னே.

(பொருள்) இந் நோயில், மிகுதியாகப் பசியுண்டாதல், உடல் முழு மையும் எரிதல், நெஞ்சடைத்துத் தாங்க முடியாத வலியுண்டாய்த் துன்பஞ் செய்தல், உடல் முழுமையும் அழன்று நோய் உண்டாதல், கையும் காலும் குளிர்ந்து போதல், உடல் கனத்துப் பருத்துக் காணல், உள் நாக்கில் பிசுபிசுப்புண்டாதல் ஆகிய குறிகளைப்பெறும்.

5. மந்த ஐயநோய் :

தானென்ற வயிறதனில் மந்த முண்டாய்ச்
சலங்கட்டு மலங்கட்டுஞ் சயித்திய மாகும்
ஊனென்ற வுடம்பதனில் வியர்வை யாகு
மோக்காள மிகவாகி உயர்மூச் சாகுங்
கானென்ற அடிவயிறு கல்லுப் போலாங்
கனத்திரும லாகியே காற லுண்டாம்
வானென்ற வாய்கைத்துத் துவர்ப்பு காணு
மந்தமாஞ் சிலேட்மமென வழுத்த லாமே.

(பொருள்) இந்நோயில், வயிற்றுள் மந்தமுண்டாகி, சிறுநீரும், எருவும் (மலமும்) கட்டுப்பட்டு, ஐயம் மிகும். இன்னும் உடம்பு முழுமையும் வியர்வையுண்டாதல், வாய் குமட்டி ஓக்காளித்தல், பெருமூச்சு வாங்குதல், அடிவயிறு கனத்துக் கல்லு போலாதல், நெஞ்சு வறண்டு மிக்க இருமலுண்டாதல், வாய் கைப்பு, துவர்ப்புச் சுவைகளைப் பெறுதல் ஆகிய குறிகளைக் காட்டும்.

6. வளி ஐயநோய் :

வழுத்தவே வயிறுதான் பொருமிக் கொள்ளும்
வலித்துமே வலியிறங்கி நீர்க்க டுக்கும்
அழுத்தவே யங்கமெலாங் குழிகள் வீழு
மதரங்கள் பல்லெல்லாங் கறுத்துக் காணும்
விழுத்தவே மேனியெலாம் வலியுண் டாகு
மேகம்போல் நீரிறங்கும் வெள்ளை காணும்
பழுத்தவே பல்லுக்குட் குடைச்ச லாகும்
பாரமாய் வாதசிலேட் மத்தின் பண்பே.

(பொருள்) இந் நோயைப்பற்றிச் செப்பப்புகின், இதில் வயிறு பொருமிக்கொண்டு, அடி வயிறு வலித்து நீரிறங்கும். அக்கால் நீர்த் துளையில் கடுப்புண்டாகி, உடல் வீங்கிக் காணும். அதனை அழுத்தில் குழி விழும். உதடும் பற்களும் கறுக்கும். உடல் முழுமையும் வலிக்கும். மேக நோயாளர் போன்று நீரில் வெள்ளை கலந்து இறங்கும், பல் வலியுண்டாகும். இவ்விதக் குறி குணங்களை இந்நோய் பெறு மெனவறிக.

7. அழலையம் :

பண்பாகக் கண்மயங்கிக் கிறுகி றுக்கும்
பத்தியந்தான் மிகுதியா யசதி யாகும்
உண்பாக வசனமிகத் தானுஞ் செல்லா
ஊறியே வாய்நீர்தான் மிகவுண்டாகுங்
கண்பாகக் கண்டத்திற் கோழை கட்டுங்
கனக்கவே யிருமலொடு மூச்சு மாகு
மிண்பாக மேனியுமோ மஞ்ச ளிக்கு
மிக்கபித்த சிலேட்மத்தின் விவரந் தானே.

(பொருள்) இந்நோய் கண்களை மயக்கித் தலை கிறுகிறுகச் செய்தல், பத்தியத்தின் கடுமை மிகுந்து அதனால் உடற்கு அசதியுண்டாதல், உணவு கொள்ளாமை, வாய்நீர் மிகுதியும் ஊறல், தொண்டையிற் கோழை கட்டல், இருமலோடு பெருமூச்சு வாங்குதல், உடல் மஞ்சளித்தல் ஆகிய குறிகளைக் காட்டும்.

8. இரு குற்ற கலப்பு ஐயநோய் :

விபரமாய் மேனியெங்கு மழற்சி யாகும்
விக்கலோ டிருமலாய்ச் சுவாச முண்டாம்
அபரமாய்ச் சுரமுடனே யசதி யாகு
மழன்றுமே யுடம்பெங்கு மெரிவுண் டாகுந்
தபரமா யன்னமுந்தான் பொசிக்கொட் டாது
சளியோடு இருமலுமாய்ச் சண்ணா நிற்குங்
குபரமாய்க் குளிரோடு மயிர்க்கூச் சுண்டாங்
கொடிதான தொந்தசிலேட் டுமம்ம சாத்தியம்.

(பொருள்): இந்நோயில், உடம்பு முழுமையும் வெப்பமாகி, விக்கல், இருமல், பெருமூச்சு, மிகுந்த சுரம் முதலியன உண்டாம். மேலும், உடல் வன்மையற்றுப்போதல், உடலெங்கும் எரிதல், தாபத்தோடு உணவு செல்லாமை, இருமலுண்டாகிக் கோழை வெளியாதல், உடல் குளிர்ந்து மயிர்க் கூச்செறிதல் என்னுங் குறிகளையும் காட்டும் ; இது எளிதில் தீராதாம்.

முப்பிணி ஐயம் :

கொடிதாக நாவறண்டு கறுப்பு மாகுங்
குளிர்ந்துமே சுரமுண்டா மெரிவுண் டாகுங்
கடிதான உடம்பெங்கு மிசிவு காணுங்
கனமான வசதியொடு மறதி யாகுந்
தடிதாகத் தாடையொடு கன்னங் காதுந்
தாக்கான புருவமொடு நாசி யுச்சி
படிதாகத் துடித்துமே படப டக்கும்
பாகசன்னி சிலேட்மமென்றே பகர்ந்தி டாயே.

(பொருள்): இந்நோயில், நா மிகவும் வறண்டு கறுத்துக் காணல், உடல் குளிர்ந்து சுரமும் எரிச்சலும் உண்டாதல், உடம்பெங்கும் கடுமையான இசிவு காணல், உடல் வன்மையற்று ஞாபகமறதி ஏற்படல், தாடை, கன்னம், காது, புருவம், மூக்கு, உச்சி இவைகள் துடித்துப் படபடத்தல் என்னுங் குறிகளைக் காட்டும்.

10. சுர ஐயம் :

பருகவே சுரந்தானும் பலகா லுண்டாம்
பாரமா யுடம்பெங்கும் வலியுண் டாகும்
அருகவே யடிக்கடிக்கு வியர்வை யாகு
மன்னந்தான் கொண்டுடனே வாந்தி யுண்டாம்
உருகவே வயிறெல்லா முளைச்ச லாகு
முப்புசமு மேல்மூச்சு மிரும லுண்டாங்
கருகவே நாவறண்டு நீர்தா கிக்குங்
கனமான சுரசிலேட்மங் காணச் சொல்லே.

(பொருள்): பல முறை விட்டுவிட்டு சுரம் காய்தல், உடலெங்கும் கனத்து வலித்தல், அடிக்கடிக்குத் தோன்றும் சுரம் காய்ந்து விடும்போதெல்லாம் உடல் வியர்த்தல், உணவு உண்ட உடனே வாந்தி எழச்செய்தல் வயிறு நொந்து உப்பி, மேல்மூச்சும் இருமலும் உண்டாதல், நா கறுத்து வறண்டு நீர் வேட்கை மிகுதல் ஆகிய குறிகளை இந்நோய் உண்டாக்கும்.

11. பெருங்கழிச்சலையம் (அதிசார சிலேட்டுமம்)

சொல்லவே வயிறுதனிற் குத்த லுண்டாஞ்
சூலையாய் வலித்துமே சுழன்று விம்மும்
அல்லவே விலாப்பக்க மிரைச்ச லாகி
யதிசாரம் போற்சிவந்து அசதி யாகு
மல்லவே மார்போடு நெஞ்சு நொந்து
வாய்வறண்டு இருமலொடு மூச்சுண் டாகுந்
தல்லவே தாகமுட னெரிவு முண்டாந்
தவிக்குமே யதிசார சிலேட்டுமந் தானே.

(பொருள்) : இந்நோயுற்றோர்க்கு வயிற்றுள் குத்தலுண்டாதல், சூலை நோயைப் போன்று வயிறு சுழன்று வீங்குதல், விலாப் பக்கங்களில் இரைச்சலுண்டாதல், சிவந்த நிறத்தோடு மிகுதியும் கழிதல், அதனாலுடல் சோர்வு அடைதல், மார்பும் நெஞ்சும் நோதல், வாய் வறண்டு இருமலோடு மூச்சு வாங்குதல், மிகுந்த நீர் வேட்கையோடு உடல் எரிதல் ஆகிய இவ் வகையான கொடிய துன்பங்கள் உண்டாம்.

12. நீரையம் :

தவிக்குமே தண்ணீர்தான் மிகவுங் கேட்குஞ்
சலந்தானுஞ் சிக்கென்று தடித்தி றங்கும்
அடிக்குமே யடிக்கடிக்கு நீரி றங்கும்
மனலாகத் தழன்றுமே யாலோ சிக்குங்
கவிக்குமே குரல்தானுங் கம்ம லாகுங்
கனமாகக் கோழையொடு சிலேட்டுமம் வீழும்
பவிக்குமே பல்லெல்லா மலைச்ச லாகும்
பாகமென்ற சலசிலேட்டுமம் பகர்ந்தி டாயே.

(பொருள்) : இந்நோயில், நீர் வேட்கை மிகுந்து நீரை அடிக்கடி பருகச் செய்யும். நீரைக் குடிக்கும்போதெல்லாம் தொண்டையில் தட்டுப் பட்டு உள்ளிறங்கும். அடிக்கடி சிறுநீர் வெளியாகும். இவைகளோடு குரல் கம்மல், இருமிக் கோழை கக்கல், பற்கள் குடைதல் ஆகிய குணங் களும் ஏற்படும்.

13. நெருப்பையம் (அக்கினி சிலேட்டுமம்) :

என்றதோ ரிருமலொடு கோழை யுண்டா
மெழிலுடம்பு அக்கினியா யெரிப றந்து
கன்றெனவே கால்கையு மழற்சி யாகிக்
கண்ணோடு மூக்குமே யெரிவாய்க் காணுந்

தன்றெனவே தாகமது மிகவுண் டாகுஞ்
சயித்தியமாய்க் கால்கைகள் குளிர்ந்து காணும்
உன்றெனவே யுண்ட பின்பு பசியே யாகு
முறுதியக் கினிசிலேட்மத் துண்மை தானே.

(பொருள்) : இந்நோயில், மிகுந்தெழுந்த ஐயத்தோடு வெப்புக் கூடியதனால் இதில், இருமலுடன் கோழையும் மிகுந்து, உடல் நெருப்புப் போன்று சுரம் மிகுதியாகக் காய்ந்து, கால் கைகள் மூக்கு இவைகளில் எரிச்சலுண்டாகும். நீர் வேட்கை மிகும். சிலபோது, சயித்தியத்தைப் போலக் கையும் காலும் சில்லிடும். வயிறு நிறைய உண்ணினும், உடனே பசியெடுக்கும் என்னுங் குறிகுணங்கள் தோன்றும்.

**14. பெருஐய நோய் (பூத சிலேட்டுமம்) :**

உண்மையாய்க் கண்ணுருட்டி விழித்துப் பார்க்கு
மூமையைப்போற் றானிருந்தே உரத்துப் பேசுங்
குண்மையாய்க் குறட்டோடு மூச்சு வாங்குங்
கொடிகொடியாய்ச் சளியோடு மிரும லாகுந்
தெண்மையாய் மேனியெங்கும் மிகவே வேர்க்கும்
நெறுநெறெனப் பல்தனையே மிகக்க டிக்குந்
தன்மையாய்ச் சந்தோட வார்த்தை பேசிச்
சண்டைகொளும் பூதசிலேட் டுமந்தா னாமே.

(பொருள்) : வெறிகொண்டவனைப் போலக் கண்களை உருட்டி விழித்துப் பார்த்தல், ஊமையைப் போன்று பேசாதிருப்பினும், ஒரு கால் உரத்துப் போதல், குறட்டையோடு மூச்சு வாங்கல், இருமலோடு கொடி கொடியாகச் சளி வெளியாதல், உடலெங்கும் வியர்த்தல், பல்லை மிகக் கடித்தல், இனிமையாக மகிழ்வுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே சண்டையிடத் தொடங்குதல் முதலியன இந்நோயின் குறிகளாம்.

**15. முயலக ஐயம் :**

தானான சடமெல்லாம் வலிப்புக் காணுஞ்
சரீரத்தி லுணர்ச்சி தளர்ச்சி கேடாம்
வேனான கண்தானுஞ் சிவந்து காணு
மிகக்கண் ணீர் பாய்ந்துமே மேனி கன்றும்

ஊனான உடம்பெங்குங் கருகிக் காணு
முறுதிமல சலம்விழுதல் தெரிந்தி டாது
மூனான மூச்சோடு விரும லாகு
மூர்க்கமா முயலகசி லேட்மம சாத்தியம்.

(பொருள்) : இந்நோயில், உடம்பெங்கும் வலித்து, உணர்ச்சி யற்றுத் தளர்ந்து கண் சிவந்து நீர்வடியும். உடல் கன்றிக் கறுத்துக் காணும். தன்னை யறியாமலே சிறுநீரும் எருவும் வெளியாகும். இருமலோடு பெருமூச்சு வாங்கும். ஆகிய குறிகள் காணப்படும்.

16. வெறி ஐயம் :

முயல்போலே விழித்துமே முறுக்கு மீசை
முனையாக வெழுந்திருந்து முறுக்கிப் பாயும்
பயல்போலப் பல்லையே மிகுத்தி றக்கும்
பாடுமே சங்கீதம் பலகா லுந்தான்
கயல்போலக் கண்களெல்லாஞ் சிவந்து காணுங்
காகம்போ லுடம்பெங்கு மிகக்க றுக்கும்
உயல்போல உறுமியே யுதடு காயு
முலைச்சலாம் வெறிசிலேட்ம உண்மை தானே.

(பொருள்): இந்நோயில், வெறி நோயிற் காணும் குறிகளாகிய கண்களை விழித்துப் பார்த்தலும், மீசையை முறுக்குதலும், எழுந்து பிறர்மேல் பாய்தலும், பல்லைக்காட்டிப் பலமுறையும் பாடுதலுமான இயற்கைக்கு மாறான செயல்களைத் தோற்றுவித்தல் அன்றியும், கண் சிவத்தல், உடல் கறுத்தல், உதடு காய்ந்து போதல் ஆகிய குறிகளும் காணும்.

17. கவலை ஐயம் (விகார சிலேட்டுமம்) :

வெறிச்சுமே மேனியெல்லா மோடி யெங்கு
மிடுக்காகப் பாடுமே சங்கீ தந்தான்
மறிச்சுமே மங்கையர்மேற் சிந்தை யாகு
மனதொன்று மற்றொருகா ரியத்திற் செல்லா
வறிச்சுமே சஞ்சலங்கள் தனக்குட் பேசுஞ்
சாப்பாட்டு மேனினைவு தரிகொ டாது
குறிச்சுமே மயக்கமாம் விகார மாகுங்
கூறினோம் விகாரசிலேட்டு மத்தி னுண்மை.

(பொருள்) : உடலின் எல்லாப் பாகங்களிலும் ஏதோ ஓடுவது போன்று தோன்றல், மனம் போனபடி பலவகைப்பட்ட பாடல்களை மிடுக்குடன் பாடல், பெண்களின் மேற்கொண்ட இச்சையால் வேறொன்றிலும் மனஞ் செல்லாதிருத்தல், மனம் வருந்தி பலவாறாகப் பேசல், உணவின்மேல் நினைவு செல்லாமை, மயக்கமும், முகம் வேறுபாடாதல் ஆகிய குறிகளை இந்நோய் காட்டும்.

18. சூதகச்சிலேட்டுமம் (சுரோணித சிலேட்டுமம்) :

உண்மையாய் முழங்காலில் மிகக்கு டைந்து
 உளைந்துமே முதுகோடு விலாப்பக் கங்கள்
கண்மையாய் முழங்கைகள் முழங்கைச் சந்து
 கடினமாய் வீங்கியே குடைச்ச லுண்டாந்
தன்மையாய்ச் சளிகட்டுந் தாக மாகுஞ்
 சாதகமா யிருமியே மூச்சுண் டாகுந்
திண்மையாய் நாவரண்டு தித்திப் பாகுஞ்
 செயமான சுரோணித சிலேட்டுமந் தானே.

(பொருள்) : இதில், முழங்கால் குடைதல், முதுகும் விலாப் பக்கமும் உளைந்து நோதல், முழங்கால் முழங்கைகளின் பூட்டுகள் வீங்கிக் குடைச்ச லுண்டாதல், இருமிக் கோழை கக்கல், பெருமூச்சுண்டாதல், தொண்டையில் சளிகட்டல், நாவறண்டு நீர்வேட்கை மிகுதல், நா இனித்தல் என்னும் குறிகளைக் காட்டும்.

19. புண் ஐயம் (விரணசிலேட்டுமம்) :

தானென்ற தொண்டையினிற் புண்ணு மாகிச்
 சளியோடு சீத்தானுங் கலந்து வீழுங்
கானென்ற கழுத்தோடு பிடரி கன்னங்
 கனமாக வீங்கியே காய்ச்ச லுண்டாங்
கோனென்ற குளிரோடு எரிவுண் டாகுங்
 கொக்கென்றே இருமியே கூவலுண் டாம்
வேனென்ற மிடறெல்லாம் நாவும் புண்ணா
 மிகவிரண சிலேட்மத்தின் விவரந் தானே.

(பொருள்); தொண்டையிற் புண்ணாகிச் சளியும் சீழும் கலந்து வெளிப்படுதல், புறங்கழுத்து, கழுத்து. கன்னம் ஆகிய இவைகள் வீங்கிச் சுரமுண்டாதல், அத்துடன் குளிரெடுத்தல், உடம்பு எரிதல், இருமல், நோயைத் தாங்கமுடியாமல் கத்துதல், தொண்டையும் நாவும் புண்ணாதல் ஆகிய துன்பங்களை இந்நோய் உண்டாக்கும்.

20. நாற்ற ஐயம் :

விரணமாய்ச் சீயோடு ரத்த முண்டா
மிகவிருமி மீன்றண்ணீர் போல நாறும்
அரணமா யன்னத்தை இறங்கொட் டாது
அடிவயிறு வீங்கியே கால்கை வீங்குந்
தரணமாய்த் தாகமே மிகவுண் டாகுஞ்
சரீரந்தான் மிகவற்றித் தழலாய் வேர்க்குந்
துரணமா யவிழ்தந்தான் பலித்தி டாது
துற்கந்த சிலேட்டுமந்தா னசாத்ய மாமே.

(பொருள்) : நாற்றைய நோயில், உடலெங்கும் புண் உண்டாய் எளிதில் உலராது ; அப்புண்களில் சீழும் குருதியும் மிகப் பெருகி மீன் கழுவிய நீர் போன்று ஒழுகி நாற்றமுண்டாகும். அன்றியும் சோற்றை விழுங்க முடியாமற்போகும். அடிவயிறும் கால் கைகளும் வீங்கும். நீர்வேட்கை, உடல் வற்றிப்போதல், வியர்த்தல் என்னுங் குறிகளைக் காட்டும். இந்நோய் மருந்துக் கடங்காத ஒரு தீரா நோயாம்.

21. துடைக்குமைய நோய் (அநித்திய சிலேட்டுமம்) :

கந்தமாங் காசமொடு இரும லாகிக்
கனக்கவே தும்மலாய்க் கருகி வற்றிப்
பந்தமா மேனியெங்கு மெரிவுண் டாகும்
பாண்டுவாய் மேனியெங்கு மிகவெ ளுத்து
உந்தமா யோக்காள மிகவுண் டாகு
முயரமாய்க் கிறுகிறுத்துக் கீழே தள்ளுஞ்
சந்தமாய்க் குரல்கம்மிப் பேசொட் டாது
தனிநித்ய சிலேட்டும தாட்டிகந் தானே.

(பொருள்) : இந்நோயில், தும்மலையும், இருமலையும் உண்டாக்கி உடலைக் கருக வற்றசெய்து எரிச்சலையும் குருதியையும் கெடுத்து உடலை வெளுக்கச் செய்யும். அத்துடன் வாந்தி செய்தல், தலை கிறுகிறுத்துக் கீழே விழுதல். குரற் கம்மல், ஒலி குன்றல், பேசமுடியாமை ஆகிய குறிகள் உண்டாகும். இந் நோய் படுக்கையில் மிக நாளாகக் கிடந்தோர்க்கும், வயது முதிர்ந்தோர்க்கும் வரும் நோயாதலால் தீராதாம்.

பொதுக் குறி குணங்கள் : ஐயக்குற்ற மிகுதியாகி நோய்க்குரிய குறி குணங்கள் பெருகுமென விரிக்காமற் விடுத்தோம்.

மருத்துவம் : பொதுவாக ஐயக்குற்றத்தாலெழு நோய்க்கான மருத்துவங்கள் இந் நோய்களுக்கும் ஒவ்வும்.

ஐயத்தை (கபத்தை) வெளிப்படுத்த வாந்தியை எழச்செய்யும். குடிநீர் வகைகளும் கழிச்சல் மருந்துகளும் கொடுத்தல் வேண்டும். பின்னர் நோயினைப்போக்கி ஐயத்தைத் தன்னிலைப் படுத்தற்கான பொடி வகைகள். இளகி யங்கள், பற்பச் செந்தூர வகைகள் ஆகியவற்றைத் தரல் நல்லது. அன்றியும் இம்மருந்துகளுக்குத் துணையாக ஐயத்தைப் போக்கும் குடி நீர்களையும் இலைகளின் சாறுகளையும் கையாளுவது பல நன்மைதரும்.

அவைகள் :

குடிநீர்களுள் இலைக்கள்ளிவேர், காக்கட்டான்வேர், சீந்திற்றண்டு, தாளிசபத்திரி, கண்டுபாரங்கி, திப்பிலி இவைகளை ஓர் நிறையாகக் கொண்டு முறைப்படி குடிநீர் செய்ததில் அரைமுதல் ஒரு ஆழாக்குக் கொடுக்க, வாந்தியையும் கழிச்கலையும் உண்டாக்கி ஐயத்தைத் தன்னிலைப்படுத்தும்.

அன்றியும், ஐய நோய்கட்காகச் செய்யும் பெருமருந்துகளையும் வழங்க வேண்டும். அவைகள் இரச் சுண்ணம், இரசபற்பம், வெள்ளைப்பாடாண பற்பம், அயபற்பம், கோரோசனைக் கருப்பு, கத்தூரிக்கருப்பு போன்றவை களைக் கொடுத்தலோடு, ஐயத்தைப் போக்கக்கூடியதான தும்பைப்பூ துளசி போன்றவைகளின் சாறேனும் குடி நீரேனும் துணைகூட்டிக் கொடுத்தல் நன்று. ஈதன்றிக் கண், மூக்குகளுக்கிடும் மருந்து வகை களையும் வழங்கி ஐயத்தைத் தன்னிலை அடையும்படி செய்தல் வேண்டும்.

# பெரு நோய்

வேறுபெயர் : குறைநோய், அழுகு நோய், குட்ட நோய், தொழு நோய் என்பன.

இயல் : இந்நோயில் உடல் மினுமினுத்தல், படைகளுண்டாதல் கழலைகள் காணுதல், கைகால்களின் விரல்கள் அழுகுதல் அல்லது அவைகள் வளைந்து குறைதல் ஆகிய இயல்புகளையுடையதாகும்.

நோய் வரும்வழி: அழுகிய மீன், நண்டு, நத்தை, இப்பி இவைகளை மிகுதியும் உண்ணல். வேகா உணவுகளைக்கொள்ளல், வயிறு நிறைய உண்டபின் யோகநிலையில் நிற்றல், இந்நோயுற்றவரிடம் நெருங்கி இருத்தல், அவர்கள் படுக்கையில் படுத்தல் ஆகியவைகளாலும், தன்வினை, பழவினைகளாலும், தாய் தந்தையரின் வழியாலும் இந்நோய் பிறக்கும்.

அன்றியும்

"வியாதியுள் மூவாறு விளங்கிய குட்டங்கேள்
சுயாதிக் கிரந்தி சுழன்மேகத் தாலும்
பயாதி மண்ணுளிப் பலவண்டி னாலெட்டு
நீயாதிப் பழுநாலாய் நின்றதிக் குட்டமே."

திருமூலர் கூறியதால்.

இப்பதினெட்டு நோயில், கழலை (கிரந்தி) நோய்களாலும், மேக நோய்களாலும், எட்டு வகைப்பட்ட பெருநோய்களும், மண்ணுளிப்புழுக் களாலும், வண்டு முதலிய பூச்சிகளாலும் தொத்து நோயாக எண்வகைப் பட்ட பெரு நோய்களும் பிறக்குமென அறிதல் வேண்டும்.

முற்குறிகள் : முகம், கால் மார்பு, தொடை, காது, மூக்குத்தண்டு இவைகள் முதல் முதல் மினுமினுத்துப் பின்பு தோல் கடினப்பட்டு, மயிர்க் கால்களின் இடையகன்று, மிகுந்த வியர்வை உன்டாகும். நாட் செல்லச் செல்ல மிகக்கடினப்பட்டு, தோல் உருண்டு திரண்டு கருத்தேனும் சிவந் தேனும் காணும். அதில் மிகுந்த தினவு உண்டாம். அத்தோலானது திமிருடனேனும், உணர்ச்சியின்றேனும் காணப்படும். நோயுற்ற பாகத்தில் தீயிற் சுடினும் உணர்ச்சியிராது. தீப்பட்ட புண்ணும் எளிதில் ஆறாது. கை கால்களில் அடிப்பட்ட புண்ணாயினும் உலராது நாளுக்குநாள் பெருத்துக் கொண்டே எளிதில் உலராது துன்புறுத்தும்.

**நோய் எண் :** இந்நோயினைச் சிலர் குற்றளவாக வளி, தீ, ஐய முக்குற்றங்களைக் கொண்டு, வளிக்குற்றத்தால் மண்டைப் பெருநோயும், அழல் குற்றத்தால் அத்திக்காய்ப் பெருநோயும், ஐயக்குற்றத்தால் வளைப்பெரு நோயும், அழுகு பெருநோயும், வளி அழல் குற்றத்தால் நாக்குப் பெருநோயும், ஐயழல் குற்றத்தால் தோல், புண், புடை, கட்டிப் பெரு நோய்களும், ஐயவளிக்குற்றத்தால் வெடிப்பெரு நோயும், முக் குற்றத்தால் தடிப்பு, புறை, தாமரை, கொப்புளம், சிரங்கு, தோல் வெடிப்பு, கறுப்புப்பெரு நோய்களும் பிறக்குமெனக்கூறுவர். இவற்றுள் குற்ற அளவாக வருவனவற்றைக் கொண்டு எண்ணில் ஏழெனச்சிலரும் நோயிற்காணும் குறிகளைக் கொண்டு பதினெண்ணெனவும் கூறுவாரு முளர். ஈதன்றி வெண்புடையை (வெண்குட்ட) தனித்தும், இப் பதினெட்டில்ஒன்றை நீக்கி, வெண்புடையைக்கூட்டி பதினெண்ணெனவும் கூறுவது யூகி நூலாம். ஈண்டு யாம் யூகி நூலில் கூறியவற்றையும், வழக்கில் கண்டனவற்றையுமொட்டி இயம்புவோம்.

யூகி முனி நுலில் கூறியவாறு இந்நோய் புண்டரீகக்குட்டம், விச் போடகக் குட்டம், பாமாகுட்டம், கஜ குட்டம், கர்ணகுட்டம், சர்மகுட்டம் கிருட்ண குட்டம், அவுதும்பர குட்டம், மண்டலகுட்டம், அபரிசகுட்டம் விசர்ச்சிகா குட்டம், கிடீபகுட்டம், சர்மதலகுட்டம், தடிப்புகுட்டம் சித்மாகுட்டம், சதாருகுட்டம், சுவேதகுட்டம் எனப் பதினெட்டு வகை யாகும். இவ்வாறமைத்த பெயர்கள் யாவும் வட சொற்களால் ஆகியன ஈண்டுத் தமிழர் வழக்கில் கூறும் பெயரால் அமைக்கப்பட்டன.

## குறிகுணங்கள் :

1. படர்தாமரைப் பெருநோய் (புண்டரீகக் குட்டம்) ;

கூடுமே தாமரையின் பூவி தழ்ப்போல்
குவிந்துமே கறுப்போடு வெளுப்பு மாகுந்
தேடுமே சிவப்புபல வண்ண மாகுந்
தினவுமிக வாகியே சொறியும் செந்நீர்
வாடுமே ஐயத்தினுற் பத்தி யாகி
வருத்தமிக வுண்டாகி நோவு மாகும்
போடுமே சரீரங்கள் முகங்கள் கால்கள்
புண்டரீகக் குஷ்டத்தின் புதுமை தானே.

(பொருள்) : இந்நோய் உடலெங்கும் தாமரைப்பூ இதழ்போற் றோலில் குவிந்து படை யுண்டாய், கருப்பு, வெளுப்பு, சிவப்பு நிறங் களைப்பெற்று, தினவுண்டாகிச் சொறியச் செய்யும். சொறிந்த விடத் தினின்று செந்நீரைப் பெருக்கும். பின்பு வாடும். இவ்வாறு மிக்க நோயுண்டாக்கி வருத்தும்.

2. கொப்புளப் பெரு நோய் (விச்போடகக் குட்டம்) :

புதுமையாய்ச் சரீரமெங்குந் தினவுண் டாகும்
பெருவெடியாய்த் திக்கெனத்தீக் கொழுந்து போல
மெதுமையாய் விட்டெரியும் விரியன் பாம்பின்
விஷப்படம்போ லேதடித்து வெளுப்பு மாகுஞ்
சுதுமையாய் மிகச்சொறியுஞ் சிவப்பு மாகுந்
துக்கமொடு சஞ்சலமு மிகவுண் டாகுங்
கதுமையாய்த் தோலெல்லா தடிப்புண் டாகுங்
கனத்தவிச்போ டகமான குட்டந் தானே.

(பொருள்) உடம்பு முழுமையும் தினவுண்டாகித் தீயினால் கொளுத் தியதுபோல எரிச்சல் உண்டாகிக் கொப்புளங்கள் கிளம்பும். தோல்வெடிப் பதுமன்றி விரியன் பாம்பு கடியின் நஞ்சால் உண்டாம் வீக்கத்தைப் போன்று தடித்து வீங்கி வெளுக்கும். நமை உண்டாகிச் சிவக்கும். உடலின் தோல் முழுமையும் தடித்து வீங்குவதுமுண்டு. அதனால் மண வருத்தம் ஏற்படும்.

3. சிரங்குப் பெருநோய் (பாமாகுட்டம்) :

தானான தினவுண்டாய் வெளுத் திருக்குந்
தங்கியே சீப்பாயுந் தேகங் குன்றுங்
கானான சரீரமெலா மெரிவுண் டாகுங்
கனமான தாமரையின் குடைபோ லுண்டாம்.
பானான சொறியோடு தினவுண் டாகும்
பாம்பினிடத் தோல்போலே யுரிந்து வீங்குங்
கானான கால்கையுங் குறைந்து காணுங்
கனமான பாமாகுட்ட மாகுந் தானே.

(பொருள்) உடலில் தினவும் சொறியும் கண்டு சொறிந்த இடத்தெல்லாம் வெளுத்துப் புண்ணாகி, அப்புண்களிலிருந்து சீழ்வடிதல், உடல் குன்றல், உடல் எரிச்சல், பாம்பின் தோல்போல் தோல் உரிதல், வீங்குதல், புண்பட்ட இடங்கள் எளிதில், உலராமல் கால் கைகள் அழுகி நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருதல் என்னுங் குறிகுணங்களை இந்நோய் பெறும்.

4. யானைத்தோல் பெரு நோய் (கஜ குட்டம்) ஏகசரும குட்டம் :

தானாகச் சடந்தானு மிகக்க றுப்பாஞ்
சடமெங்குந் தோலுரியுஞ் சிவப்பு மாகும்
வேனான வறவறெனத் தானி முக்கும்
வெடிக்குமே சொறிதலாய்த் தினவுண் டாகுங்
கானாகச் சர்மகுஷ்ட மிதிலுண் டாகுங்
கடினமாய்க் கால்விரல்கள் கணப்புண் டாகுங்
கூனாகத் தேகமெங்கும் வலியெ டுக்குங்
குறியான ஏகசர்ம குட்டந் தானே.

(பொருள்) இந்நோயினால் உடல் முழுமையும் கறுநிறமடைந்து தோலுரிந்து சிவக்கும். தோல் வறட்சியடைந்து வெடித்து நமையுண்டாகும். யானையின் தோல்போல் கடினப்பட்டு வரவரத் தோல் சுருங்கி இழுத்துக் கொள்ளும். உடலெங்கும் வலித்தல், கால் விரல்கள் கனத்தல் என்னுங் குறிகளும் காணும்.

5. காது பெருநோய் (கர்ண குட்டம்) :

சர்மந்தான் மிகவெடிக்கும் பொரிபோற் றானுஞ்
சடமெல்லாம் வேதனைபச் சென்றி ருக்குந்
தெர்மந்தான் றிரிதோட குணமுண் டாகுந்
தேகமெங்கும் பாரிக்குந் திமிருண் டாகுங்
கர்ணந்தான் காக்கணம்பூ நிறம தாகுங்
கண்டிப்பு வீக்கமாய்த் தானி ருக்கும்
வர்மந்தான் மனக்கிலேச மிகவுண் டாகு
மாகர்ண குட்டத்தின் மார்க்கந் தானே.

(பொருள்) இந்நோயில், தோல், பொரி போல் வெடித்து உடம் பெங்கும் வலிக்கும், முக்குற்றத்தின் குணங்கள் தோன்றும். உடல் பருத்துத் திமிருண்டாகும். காதுகளின் விளிம்புகள் காக்கணம் பூவின் நிறத்தைப் போல் கறுத்த நீலம் நிறம் ஆகும் என்னும் குறிகளைப் பெறும்.

6. தோற் பெருநோய் (சர்ம குட்டம்) :

மார்க்கந்தான் பசுமையாய் வெளுப்புண் டாகு
மாசிவப்புக் கறுப்புமாய்த் தினவுண் டாகுந்
தார்க்கமாய்த் தடிப்புச்சீப் பாய்ச்ச லாகுந்
தசைவயிறு கடிதடத்திற் சொறியு மாகுந்
தேர்க்கமாய்த் திமிரோடு தாசையுஞ் பாயும்
தேக்கான எரிச்சலா யுட்ண மாகுஞ்
சீர்த்தமாய் வயிறுதனிற் கண்டிப் பாகுஞ்
சர்மகுட்டந் தன்னுடைய சேதி கேளே.

(பொருள்) இந்நோயில், தோல் பசுமை, வெண்மை, சிவப்பு, கருமை ஆகிய நிறங்களாகமாறித் தினவுண்டாகித் தடித்து வெடித்து, அதினின்று சீழ் கசியும். அடிக்கடி அடிவயிற்றிலும் குறிக்குமேலிடத் திலும் சொறியுமாறு செய்யும். சொறிந்த விடங்களில் எரிச்சல், வெப்ப மாகத் தோன்றல் ஆகிய குறிகளைக் காட்டும்; திமிருமுண்டாகும்.

7. கரு பெருநோய் (கிருட்ண குட்டம்) :

சேதியாய்த் தேகமெங்குந் தான்க றுக்குஞ்
சிவப்புடனே சிலேட்டுமத்தி லுற்ப வித்துக்
காதியாய்த் தோல்திமிர்த்தே கதித்து நாறுங்
கனமான தாதுவிது முட்ணந் தாக்கும்
நூதியா யுடம்பெங்கும் நோவுண் டாகும்
நுட்பமாம் புறங்காலி லரையிற் காணும்
நாதியாய்த் தலைதன்னில் மிகுதி யாகுஞ்
சஞ்சலிக்குங் கிருட்ணகுட்டத் தாண்மை தானே.

(பொருள்) இதில், உடல் முழுமையும் கறுநிறமாகித் தோல் தடித்துச் சற்றுச் சிவந்து திமிர்த்து நாற்றத்தோடு காணப்படும். அன்றியும், உடலில் அழற்குற்றம் கூடி மிகச் சூட்டையும் வலியையும் பிறப்பிக்கும். இந்நோய் பெரும்பான்மையும் புறங்காலிலும், தலையிலும், வருவ தாகும்.

8. அத்திக்காய்ப் பெருநோய் (அவுதும்பர குட்டம்) :

ஆண்மையா யத்திக்காய்ப் போல ரும்பி
யடுக்கடுக்காய் முளைத்துமே பெருத்து மெத்தக்
காண்மையாய்க் காய்ந்துமே உடம்பெங் குந்தான்
கறுகியே உடம்புதோல் திரைந்து தொங்குந்
தோண்மையாய்த் தேகமெங்குந் திமிருண் டாகுஞ்
சொறியுமே சரீரத்திற் செந்நீர் பாயும்
வாண்மையாய் மயக்கந்தான் மிகவுண் டாகும்
வகுத்ததோ ரவுதும்பர குட்டந் தானே.

(பொருள்) இந்நோயில், அத்திக்காய்ப்போல் சிறிதும் பெரிதுமான கழலைகள் போன்று தோலிலிருந்து முளைத் தெழுந்து, நாளுக்கு நாள் பெருத்து அத்திக்காய், மரத்தில் காம்போடு தொங்குவதுபோல கழலை கழலையாக உடம்பு முழுமையும் தொங்கும். உடல் கறுத்துச் சுருங்கும். அன்றியும் உடல் முழுமையும் தினவு, சொறி, திமிர் உண்டாகிச் சொறிந்த விடத்தில் செந்நீர் பாய்தல், மயக்கமுண்டாதல் என்னுங் குறிகளையுங் காட்டும்.

9. வளையப் பெருநோய் (மண்டல குட்டம்) :

வகுத்ததோர் பச்சை வண்ணமிரத்த வண்ண
மாயிருக்கு முடம்பெல்லாஞ் சிரசெல் லாந்தான்
விகுத்ததோர் தலையிலே வெளுப்பு மாகும்
மேனியெல்லா மிகத் தடித்துக் கறுப்புண் டாகுந்
திகுத்ததோர் தினவாகுஞ் சொறியு மாகுஞ்
சிகப்பான சலம்வீழுஞ் சடமெங் குந்தான்
வகுத்ததோர் மண்டலகுட் டத்தின் செய்தி
மார்க்கமெல்லாம் பார்த்துணர்ந்து மருவு வீரே.

(பொருள்) இந்நோயில், தலையிலிருந்து உடல் முழுமையும், பச்சை நிறத்தோடுங்கூடிய சிவப்பாக வளைவான படையைப் போலத் தோலுக்குமேல் தடித்துக் கறுக்கும். அன்றியும், தினவெடுத்துச் சொறியும்படி செய்தல், சொறிந்த இடமெல்லாம் சிவந்து அதினின்று நீர் வடிதல், தலைமயிர் வெளுத்துப் போதல் ஆகிய குறிகுணங்களும் காணும்.

10, வலிப் பெருநோய் (அபரிச குட்டம்) :

மருவவே தேகமெலா மிகவே நொந்து
மாசற்ற ரத்தமெல்லா மிகக்க றுக்குஞ்
செருவவே சிந்தையெலா நோவுண் டாகுந்
தேகமெங்குந் துடிபடா நோவுண் டாகும்
அருவவே வாயுமிஞ்சி யதிக நோவாம
அதிரல்வே தனையாகு மிகநீர் கொட்டல்
பருவவே வீங்கியே வெடிப்புண் டாகும்
பரந்தவப ரிசகுட்டப் பண்பு மாமே.

(பொருள்) இந்நோயினால், உடம்பு முழுமையும் நோதல், குருதி கருநிறமடைதல், மனந்துன்புறுதல், உடல் துடித்து நோதல், உடலின் வளிக்குற்ற மிகுந்து குடைச்சல், குத்தல் உண்டாவதோடு உடல் நடுங் கல், நீர் கொட்டல், உடல் வீங்கி வெடித்துப் புண்ணாதல் ஆகிய இக் குறிகுணங்களும் தோன்றும்.

11. சொறிப் பெருநோய் (விசர்ச்சிகா குட்டம்) :

பரிசமாய் வாதபித்தத் துற்ப வித்துப்
பரிந்துதொட்டா லெண்ணெய்போல் வெளுப்பு மாகும்
விரிசமாய்த் தினவெரிப்பு வேதனையு மாம்
மிகச்சிவப்புத் தடிப்புத்தோ லுறப்பு மாகும்
மரிசமாய்க் காலெரிப்புஞ் சலிப்பு மாகு
மகத்தான வெட்கிப்பு வயிறி ரைப்பு
துரிசமாய்க் கோபிப்புச் சுறு சுறுப்பு
துரிசான விசர்ச்சிகாக் குட்ட மாமே.

(பொருள்) இந்நோயில், வளி, அழல், ஆகிய குற்றங்கள் தன் னளவில் மிகுந்து, தோலைத் தடிக்கச் செய்து, தினவு, எரிச்சல், தாங்க முடியாத வலி இவைகளை உண்டாக்கும். அன்றியும், தோல் வெடித்து வீங்கிப் புண்ணாகிப் பாம்பின் தோல்போன்று மினுமினுத்து உடலும் கறுத்து போதலாகியக் குறிகுணங்கள் காணும்.

12. செம்படை (செங்குட்டம்) விபாதிகா குட்டம் :

சுரப்பாகச் சிலேட்டுமபித் தந்தன் னிற்றான்
துனித்துடம்பி லேவெடித்தங் காற்ற வொண்ணா
அறுப்பாக அண்டவொண்ணாத் தணல தாகி
அழன்றுகைகால் கண்காது கண்டந் தானும்

வெறுப்பாக வெடித்துமே வீங்கிப் புண்ணும்
மேனியெல்லா நற்பாம்பு மின்ன லாகும்
கறுப்பாகச் சந்தெல்லாம் பரவி நிற்குங்
கரணமாம் விபாதிகா குட்ட மாமே.

(பொருள்) இந்நோய் ஐயஅழல் கூட்டால் பிறந்து உடலின் தோல் வெடித்து, தாங்கொணா எரிச்சலையும், சூட்டையும் உண்டாக்கி, கை, கால், கண், காது, கழுத்து என்னுமிவ்விடங்களில் தோல்வெடித்து சீகோர்த்து இவ்விடங்களில் வீக்கத்தையும் புண்களையும் உண்டாக்கும். வெடித்துப் புண்ணாகாவிடங்களின்றோல் பாம்பின்றோலைப்போல மினு மினுத்துக்காணும் என்னுங் குறிகுணங்களோடு கை கால் சந்துகளில் தோல் கறுத்துத் தடித்துக் காணும்.

13. பன்றித்தோல் பெருநோய் (கிடீப குட்டம்) :

காரணமாய்ச் சரீரமெங்கும் பச்சை யாகுங்
கனத்துயா னைத்தோலின் தடிப்பு மாகும்
மாரணமாய் மகாதினவு சொறியு மாகு
மகத்தான மூத்திரந்தா னடிக்க டிக்கு
நாரணமாய் செந்நீர தாகு மேனி
நலக்கமாய் நாற்றந்தான் மிகவுண் டாகுஞ்
சீரணமாய்ச் சிவப்பட்ச வாத மாகுஞ்
சடந்தானு மூதுமே கிடீப குட்டம்.

(பொருள்) உடலின் நிறம் பச்சையாகித் தோல் பன்றியின் தோல் போற்றடிக்கும். தினவும் சொறியுமுண்டாம். சிறுநீர் அடிக்கடி செந் நிறத்தோடும் நாற்றத்தோடும் இறங்கும். உடலில் பொறுக்க முடியாத நாற்றமெழும் என்னுங் குறி குணங்களைக் காட்டி, நோய் முதிர்ச்சி யடையும்போது பட்சவாதமும் தொடரும்.

14. தோல்வெடி பெருநோய் (சர்மதல குட்டம்)

கிடீபமா யுடம்புவலி யதிக மாகுங்
கீற்றாக வெடித்துவே தனையு மாகும்.
தடீபமாய்த் தடிப்பாகிச் செம்மை யாகுந்
தனைத் தொட்டால் நோக்காடாய்த் தினவெடுக்கும்
வடீபமாய் மயக்கோடு அசதி காணும்
மாருத நோக்காடு மிகவே யுண்டாம்
திடீபமா யுதரத்தில் வலியுமாகுஞ்
செப்புகின்ற சர்மதல குட்ட மாமே.

(பொருள்) இந் நோயில் உடலெங்கும் வலித்துக் கீறல் கீறலாக வெடித்துத் தடித்துச் சிவப்பு நிறமாகும். நோயுற்ற விடங்களைத் தொடினும் நோயாகும். தினவெடுக்கும், மயக்கமும் தளர்ச்சியும் உண்டாகும். வயிறு வலிக்கும் என்னுங் குறிகளைக் காட்டும்.

15. தடிப்புப் பெருநோய் (தத்துரு குட்டம்) :

சர்மந்தான் சிவப்பாக வட்ட ணித்துச்
சலவைப்போல் வெளுக்குமே தினவுண் டாகும்
வர்மந்தான் ரோகமது மிகவுண் டாகும்
மயிரெல்லாஞ் சுருண்டுமே உண்டையாகும்
கர்மந்தான் பித்தசிலேட் டுமமி குக்குங்
காயந்தான் கதித்துமே திமிருண் டாகுந்
தர்மந்தான் சடமெல்லா மூத லாகுந்
தாக்கான தத்துருக் குஷ்டந் தானே.

(பொருள்) இந் நோயில், தோலில் வட்ட வட்டமாகப் படை யுண்டாகிச் சிறிது வெளுத்தாற்போலச் சிவந்து தினவை உண்டாக்கும். மயிர்கள் சுருண்டு திரட்சியாகும். அழலையம் பெருகி உடலைக் கதிக்கச் செய்து திமிரை உண்டாக்கி உடலை ஊதச் செய்தல் ஆகிய குறிகள் தோன்றும்.

16. நாப் பெருநோய் (சித்மா குட்டம்)

தக்கரன வாதபித்தத் துற்ப வித்துத்
தளிரான சுரைப்பூவின் வண்ண மாகி
வாக்கான வடிவ மெலாந் திமிருண் டாகி
வட்டணித்துப் பசுமஞ்சள் வண்ண மாகுந்
தேக்கான திமிரோடு செந்நீ ருண்டாய்த்
தேமெங்கு மசைக்கொணாச் செழுமை யாகும்.
நீக்கான நினைவோடு மறதி யாகும்
நிலவரமாஞ் சித்மாவெனுங் குட்டந் தானே.

(பொருள்) வளி, தீக் குற்றப் பெருக்கால் ஏற்பட்ட இந் நோய், உடலை சுரைப் பூவைப்போன்று வெண்மையாக்கும். உடல் முழுமையும் திமிரச் செய்து, பசு மஞ்சள் நிறத்தைப் பிறப்பிக்கும். உடலை அசைக்க முடியாதபடி நோதல், நினைவு அழிதல் என்னுங் குறிகளையும் உண்டாக்கும்.

17. புரைப் பெருநோய் (சதாரு குட்டம்) :

சித்தான தண்டிப்பாய் ரத்த வன்மை
செழும்பச்சை வெள்ளையாய்ச் சிவப்பு மாகும்
எத்தான வெரிப்போடு தினவு மாகு
மெளிதான சிலேட்டுமவா தத்துற் பத்தி
பத்தான கரடுகட்டிப் புண்ணு மாகும்
பாம்புதோல் போற்றிரைந்து பருத்துக் காணும்
வித்தான மூக்கோடு காது கன்னம்
மிகத் துடிப்பாஞ் சதாரு குட்டந் தானே.

(பொருள்) இந் நோயில், உடல் குருதியைப் போல் சிவப்பாகவோ, அல்லது பசுமையும் வெண்மையும் கலந்த சிவப்பு நிறமாகவோ மாறும். படைகள் உண்டாகி, அதில் எரிச்சல் தினவு உண்டாகிச் சொறிந்த விடங்களிலெல்லாம் கரடு கட்டிப் புண்ணாகிப் புரையோடும். இவ்வாறாக கரடுகட்டியது பாம்பைப்போல் உருண்டும் நீண்டும் பருத்தும் காணும். அன்றியும், மூக்கு, காது, கன்னம் இவைகள் துடிக்கும். ஆகிய இக் குறிகுணங்கள் காண்பதோடு, வளி அழல் குற்றங்கள் இந்நோயில் மிகுந் தெழுமென அறிக.

18. வெண்படை, வெண் பெருநோய் (சுவேத குட்டம்—வெண் குட்டம்)

தடிப்பாகத் தவள நிறம் போல்வெ ளுத்துச்
சர்வாங்கமும் வெளுத்தாற் றான்றி ரும்பும்
மடிப்பாக மயிர் வெளித்தா லசாத்திய மாகும்
வரிவுதடு உள்ளங்கை குதங்குய் யந்தான்
நெடிப்பாக நெருப்புப்பட் டதுபோற் புண்ணாய்
நிறமிருந்தா லசாத்தியமென் றுரைக்க லாகும்.
வெடிப்பாக மேனியெல்லாம் வெளுத்து வீங்கில்
வெண்சுவேத குட்டமென்றே விளம்ப லாமே.

(பொருள்) இந் நோயில், உடலிற்றோற்றடித்தேனும் அல்லது தடிக்காதேனும் வெளுத்துக் காணும். அல்லது உடல் முழுமையும் மயிரும் வெளுத்துக் காணல், உதடு, உள்ளங்கை, எருவாய், குறி முதலிய விடங்களில் நெருப்புப் பட்டாற்போல் எரிச்சலும், தீப்புண் உலராது இருக்கும்போது காணும் வெண்மை கலந்த செந்நிறம்போல் காணல், வெண் புடைகளில் கறும் புள்ளி காணல் என்னுங் குறி குணங்கள் காணப்படுமாயின் தீராதாம் என நூல் கூறினும், தோல் தடித்துக் கீறினும் நோய் அறிய முடியாத வெண்புடைநோய்ப் பெருநோயால் வருத

லாதலின், இஃது பெருநோய் போலவே தொத்து நோயாகும். எளிதில் தீராதாம். தோலோடொட்டி வரும் வெண்புடைகளில் சில ஆண் பெண் கூட்டால் பிறக்கும் மேக நோயாகிய கொறுக்கு (பொக்கு) நோய்க்கட்குத் துணையாகவும் வருவதுண்டு. அம் மேக நோய்க்கான மருத்துவத்தையும் இந் நோய்க்கான மருத்துவத்தையும் செய்வித்து, மேலுக்கும் பற்றிட நோய் தீரக்கூடும். சில வெண் புடைகள் (வெண் குட்டங்கள்) தொத்து நோயாக இல்லாதிருப்பினும் சில வேளை நோயினர் மக்கட்கும் வருவதும் உண்டு ; ஆயினும் மருத்துவத்திற்குக் கட்டுபடும்.

தீரும் தீராதவை :

குட்டந்தான் பதினெட்டில் சாத்தி யந்தான்
கூறக் கேள் விச்போடம் பாமாக் குட்டம்
கிட்டந்தான் கச்சரும் குட்ட மோடு
கிருட்ணகுட்ட மவுதும்பர குட்டந் தானும்
திட்டமாந் தத்துருக் குட்ட மோடு
செயசித்மா குட்டங்கி டீப குட்டந்
தட்டந்தான் மிகுந்தசா தாரு குட்டம்
சம கிருட்ண குட்டம் சாத் தியமா மென்னே.

ஆமென்ற பத்துந்தான் சாத்திய மாகு
மசாத்தியமது தானெட்டு அறிந்து பாரு
போமென்ற பூர்வத்தின் கன்மத் தாலும்
புவிதனக்கும் மிகுகன்மஞ் செய்த பாவம்,
பாமென்ற பெரியோர்கள் சாபத் தாலும்
பாதகங்கள் மனதறியப் பண்ணும் பேர்க்கும்
கோமென்ற குட்டமாம் ரோகம் வந்து
கூடுமென்று யூகிமுனி கூறி னேனே.

(பொருள்) என யூகிமுனி கூறியதில் : (1) கொப்பிளப் பெருநோய் (விட்போடிகக் குட்டம்), (2) கருப்புப் பெருநோய் (கிருட்ண குட்டம்), (3) யானைத் தோல் பெருநோய் (கச குட்டம்), (4) அத்திக்காய் பெருநோய் (அவுதும்பர குட்டம்), (5) தடிப்புப் பெருநோய் (தத்துரு குட்டம்), (6) நாப்பெருநோய் (சித்மாக் குட்டம்), (7) பன்றித் தோல் பெருநோய் (கிடீபக் குட்டம்), (8) போரைப் பெருநோய் (சதாருக் குட்டம்), (9) தோல் பெருநோய் (சர்மக் குட்டம்), (10) தோல் வெடிப்புப் பெருநோய் (சர்ம தல குட்டம்) ஆகிய இப் பத்துப் பெருநோய்களும் தீராவாம் ; மற்றவைகள் தக்க மருத்துவத்தாலும், உடலையும் மனதையும் தூய்மைப்படுத்தலாலும் தீரக் கூடியனவாம்.

பொதுக் குறிகுணம் : இந்நோயில் பொதுவாக, உடல் நிறம் வேற்றுமையடைதல், தோல் மரத்துப் போதல், கழலைகள் போலத் தோல் தடித்துப் புண்ணாகி எளிதில் உலராது அழுகிக் குறையச் செய்தல் என்னுங் குறிகளைப் பெறுவது தொத்து நோயாகும்.

நோயை அறியுமுன்பே, முகம், மார்பு, தொடை இவைகளின் இயற்கை நிறம் வேறுபாடாகி, அவ் விடங்களில் மிகுதியாக வியர்த்தல், உடல் கற்றாழை நாற்ற மடித்தல் என்னுங் குறிகளைக் காட்டி, உடலைப் பருக்கச் செய்யும். பின்பு உடல் நிறம் மாறிய இடத்தில் புடைகள் போலத் தடித்தேனும் அல்லது விளிம்புகள் சற்று உயர்ந்தேனும் தோன்றி, அவ்விடத்தில் ஊசியால் கீறினும், குத்தினும், சுடினும், உணர்ச்சியறும்; இதனோடு, சிறு கொப்புளங்கள் போல் உடல் முழுமையும் படைப் படையாக இங்குமங்கும் பிறந்து, சிவந்து காண்பதுமுண்டு. அல்லது வெண்மையான (வெண் குட்டம் போல்) படைகளும் வருவதுமுண்டு. அல்லது நெற்றி, புருவம், காது, மூக்குத் தண்டு இவைகளின் தோல் கறுத்து மினுமினுப்போடு சிறு கழல்களைப் போல் பிறந்து அடி கனத்துப் பெருந்துக் கொண்டே வரும். நோய் முற்ற முற்றக் கை, கால் விரல்களின் நரம்புகளைக் குறுகச் செய்தாகினும், இவைகளில் புண்ணுண்டாகி எலும்பு வரையிற் பாய்ந்து அழுகச் செய்தாகிலும் குன்றச் செய்யும். ஆதல்பற்றி இந்நோயினைக் குறைநோய் அழுகு நோய் எனக் கூறப்பெற்றது போலும் இந் நோயினை வினைப் பயனால் உண்டாகக் கொண்டமையால் நோயினில் விளைந்த வினையொழியுமட்டும் வாட்டி வதைத்து வினை தீர்ந்த பின் கொல்லுவது போல் நோய் நீடித்து வாட்டிக் கொல்லும்.

குற்ற முதலிய வேறுபாடுகள்:

" வாதமலாது மேனி கெடாது " எனத் தேரையர்

கூறியதால், உணவு செயல் முதலியவைகளால், வளிக் குற்றம் தன்னளவில் மிகுவதாலோ குறைவதாலோ, இரசம், குருதி இவ் விரண்டும் உடற் கட்டுகளைக் கெடுத்து, மேனியின் நிறத்தைக் கெடுத்து, பின் முறையே மற்ற உடற் கட்டுகளையும் கெடச் செய்து நோயை வருவிக்கும்.

முதன் முதல் வளிக்குற்றமே கெடுதலால், மற்றக் குற்றங்களும் குறையுமேயாயினும் ஐயமே பெரிதும் கெடுமாதலால், இந்நோயின் கடையில் ஐயப் பெருக்கு மிகுந்து கொல்லும்.

அதன் அளவாக, நோயில் காணும், புண் ஆறாதிருத்தல், கோழை கட்டுதல், மயக்கமுண்டாதல், உடல் வீங்குதல் முதலிய சாக்குறிகளையும் தொடரச் செய்யும்.

அன்றியும், குற்றக் கேட்டால் உடற் கட்டுகளேழும் ஒன்றன் பின் ஒன்றாக கேடடைந்து கொண்டே வருமாதலின், இரசக் கட்டால், தோல் வறண்டது போல் நிறம் மாறுபாடாதலும், குருதியின் கேட்டால் உடல் வியர்த்தல், ஊதல் என்னுங் குறிகளும், ஊன் கட்டின் கேட்டால், கொப்புளம், புண், சிலை நீர் கசிதல் ஆகிய இவைகள் காணப்படுவதும், கொழுப்பின் கேட்டால், உடல் கனத்தல், உடல் நாற்றமடித்தல், உடல் வெடிப்புப் புண்ணாதல், கை கால்களை அசைக்க முடியாமை என்னுங் குறிகளையும், மூளையையும் எலும்பைப் பற்றிவரின் மூக்குத்தண்டு, என்பு இவைகளைத் தாக்கி ஆங்கு வீக்கத்தை யுண் டாக்கியும், மூக்கு, கை, கால், விரல்களைக் குட்டையாகச் செய்வதும் தவளத்தை (விந்துவைப்) பற்றிவரின் பிறக்கும் பிள்ளைகளும் இந் நோயைப் பெறும்படி செய்விக்கும்.

மருத்துவம் :—இந் நோய் மருத்துவத்தில் முதலாகக் கேடடைந்த வளிக் குற்றத்தைத் தன்னிலை பெறுவதற்கான கழிச்சல் மருந்துகளைக் கொடுத்து, உடற்கட்டுகளை வன்மைப்படுத்துவதற்கான மருந்து களையும், நோய்க்கான பெரு மருந்துகளையும் உள்ளுக்கும் வெளிக்கும் கொடுக்க வேண்டும்.

கழிச்சல் மருந்துகள் :

(1) முற்றிய பூவரசு அடி மரத்தின் பட்டையைச் செதுக்கிப் புரனி நீக்கி உட்சதையை மர உலக்கையாலிடித்துச் சாறு பிழிந்ததில் நோயினன் வன்மைக்குத் தக்கவாறு $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ ஆழாக்களவு சிறிது பசுப்பால் கூட்டிக்கொடுக்க இரண்டு மூன்று முறை கழியச்செய்யும் மிகுதியாகக் கழிச்சலுண்டாயின் மோரும் சோறும் கொடுக்க நின்று விடும். சிலர்க்கு ஒருமுறை வாந்தியும் ஆவதுண்டு.

(2) இவ்வாறே புங்கின் வேரைக் கழுவிக் கோணி கொண்டு நன்றாகத் தேய்த்து மேற்றோலை நீக்கிய பின் கூர்மையான கத்தி கொண்டு சுரண்டினதைப் பால் பிழிந்ததில் ஒன்றிரண்டு பாலாடை அளவு கொடுக்கக் கழியச் செய்யும்.

(3) குடிநீர்.—சிவனார்வேம்பு, நிலவேம்பு, பேய்ப்புடல், வேம்பின் பட்டை, வாய்விளங்கம், சீந்திற்றண்டு, மஞ்சள், கடுக்காய், நெல்லிக்காய். தான்றிக்காய், கடகரோகணி வகைக்குப் பலமாகக் கொண்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொண்டு, அதனை ஒரு கைந்நிறைய எடுத்து ஒரு படி நீரிட்டு ஆழாக்காக வடித்ததில் அரை முதல் ஒரு ஆழாக்குக் குடிக்கக் கழிச்சலாகும்.

(4) பலாப்பட்டை, புங்குப்பட்டை, கொன்றைப்பட்டை, எழிலைப்பாலைப் பட்டை வகைக்குப் பலம் ஒன்று, நன்னாரி, சந்தனம், வாலுழுவை, கோரைக் கிழங்கு, சிவதைவேர், நிலாவாரை, கடகரோகணி வகைக்குப் பலம் அரை ஆகிய இவைகளை ஒன்று சேர்த்திடித்ததில் அரைச் சிரங்கை எடுத்து ஒரு படி நீரிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும்.

(5) கொன்றைப்பட்டை, ஆயில்பட்டை, உசிலம்பட்டை, கொடிவேலி, வேர்ப்பட்டை, சிவனார்வேம்பு வகைக்குப் பலம் $\frac{1}{4}$ வாய் விளங்கம், சன்னி நாயகம், வாலுழுவை, கடுக்காய், நெல்லி, தான்றி வகைக்குப் பலம் $\frac{1}{2}$ ஆகக்கூட்டி இடித்ததில் இரண்டு பலம் கொண்டு ஒரு படி நீரிட்டு ஆழாக்குக் குடி நீராக்கிக், காலை மாலை கொள்ளவும்.

(6) காட்டு மல்லிகை வேர், சரக் கொன்றை வேர்ப்பட்டை, கள்ளி வேர்ப்பட்டை, தேற்றாங் கொட்டை, எட்டி விதை, சிறு தேக்கு, பேய்க்குமட்டிக் கொடி, பேய்ப்புடல், பேய்ப் பீர்க்கு விரை, வாலுழுவை அரிசு, கார்போகரிசி வகைக்கு ஓரளவாகக் கொண்டு இடித்து வைத்துக் கொண்டு, ஒரு கை அளவு எடுத்து இரண்டு படி நீரிட்டு ஆழாக்காகக் காய்த்ததில் $\frac{1}{4}$ ஆழாக்காக, காலை மாலை கொள்ளவும்.

(7) மாலனந்தற் றோலு மறியுணா மூலிவித்தும்
மாலெச்சிற் பூவும் வரிசையாய்க்—கால்வாசி
யாகக் குடிநீ ரருந்தவொரு மத்தியில்
மேகதுட்ட மெல்லாம் விடும். [தேரையர் வெண்பா]

பொடி வகை :

(1) ஆயில் பட்டை, பூவரசின் பட்டை, புங்குப்பட்டை, தூதுளை வேர், கொல்லன் கோவைக் கிழங்கு வகைக்குப் பத்து பலமாக எடுத்து சிறுகத் தறித்து இடித்து ஐந்து படி நீரிலிட்டு நாலிலொன்றாகக் காய்த்து வடித்த நீருடன், வெள்ளறுகுச்சாறு, சிறு செருப்படைச்சாறு,

ஆடு தீண்டாப்பாளைச் சாறு, சத்திச்சாரணைச்சாறு, கோடிவேலிச் சாறு ஆக வகைக்குப்படிகால் கூட்டி வாய்குறுகிய பானையிலிட்டு, ஒரு கருங் கோழியின் மயிர், தலை, கால், குடல் முதலியவைகளை நீக்கி, அதன் வயிற்றுக்குள், சீரகம், ஓமம், கார்போகரிசி, நீரடிமுத்து பருப்பு, கொடி வேலிவேர்ப் பட்டை, திப்பிலி, இலவங்கம், வாலுழுவை அரிசி, சங்கம் பட்டை, அமுக்கரா இவைகள் வகைக்கு ஒரு பல மாகக் கொண்டு நுண்ணிய பொடியாக்கியதை அடைத்து ஊசிநூலால் தைத்து கயிற்றைக்கட்டித் தொங்கவிட்டு, சிறு தீயால் இரண்டு நாளைக்கு எரித்து நீர் சுண்டிவரும்போது கோழியை எடுத்து எலும்பு களை நீக்கி உலர்த்திப் பொடித்து எடுத்ததில் மூவிரல் அளவு தேனில் காலை மாலை நாற்பது நாள் கொள்ளவும்.

(2) வெள்ளறுகு வேர்ப்பட்டை, ஆயில் பட்டை, ஊழலாற்றிப் பட்டை, சுரபுன்னைப்பட்டை, கார்போகரிசி, நீரடி முத்து, மண்ணுளிப் பாம்பின் தோல் வகைக்குப்பலமிரண்டு இவைகளை ஒன்றிரண்டாக இடித்து, ஓர் வாயகன்ற மட்சாலில் நான்குபடி கழுதையின் சிறுநீரும், பத்துபலம் சதுரக் கள்ளித் துண்டும் சேர்த்திட்டு, வாய்க்குத் துணி கட்டி அதன் மேல் மேற்படியாக இடித்த சரக்குகளை வைத்து, சால் வாய்க்குப் பொருந்தும்படியாக வோர் சட்டிமூடிப் பன்னிரண்டு மணி நேரம் எரித்துக் குளிர்ந்தபின் உலர்த்திப் பொடி செய்து வடிகட்டவும். இப்பொடியில் வேண்டிய அளவு எடுத்து, கழுதைச் சிறுநீரில் குழைத்துத் தடிப்புள்ள விடங்களிலும் பூசிவர, நோய் போம்.

குழித் தைலம் :

சிவனார் வேம்பு, விளாம்பட்டை, பேய்ப்பீர்க்கின் விரை, கழற்சிப் பருப்பு, அழிஞ்சில் வித்து, குன்றிப்பருப்பு, பிரண்டை விதை, கொடி வேலி வேர், அழிஞ்சில் வேர், உசிலம்பட்டை, கள்ளிப்பட்டை, ஆயில் பட்டை, வகைக்குப் பலம் ஐந்து, சேராங்கொட்டை சுத்தி செய்தது பலம் நாற்பது இவைகளை வாயகன்ற சட்டியிலிட்டுத் ததும்ப வெள்ளாட்டுப்பால் விட்டு உலர்த்தவும். மீண்டும் ஐந்து முறை வெள்ளாட்டுப் பால்விட்டு உலர்த்தி எடுத்த எடைக்கு ஆட்டுப் புழுக்கைக் கூட்டிக்கலந்து பானையிலிட்டுக் குழித்தயிலமாக வடித் தெடுத்து, மேல் மிதக்கும் நீரைவடித்துவிட்டு எண்ணெயை வெய்யி லிட்டு எடுத்துக் கொள்ளவும். இதில், ஒன்று முதல் இரண்டு துளி குறுவையரிசி மாவிலிட்டு நாற்பது நாள் சாப்பிட்டு வரப் பெருநோய் நீங்கும்.

**நெய் வகைகள் :**—(1) பிரமதண்டின்விரை, புங்கு விரை, பூவரசின் காய், கார்போகரிசி, நீரடிமுத்து வகைக்குப் பலம் ஒன்று; எட்டிவித்து, தேற்றான் வித்து வகைக்குப் பலம் அரை, சரக்கொன்றைப்பட்டை, ஆயில் பட்டை நன்னாரி, மருதோன்றி வேர்ப்பட்டை, பேய்த்தும்மட்டி, நிலவேம்பு, சிவனார் வேம்பு வகைக்குப் பலம் பத்து ஆக எடுத்து இடித்து எட்டு படி நீரிட்டு ஒரு படியாகக் காய்த்து வடித்ததில், ஒரு படி பசு நெய்விட்டு அதில், ஏழிலைப் பாலை, பங்கம்பாளை, பெரு குரும்பை, விலாமிச்சு, கோரைக்கிழங்கு, சந்தனம் இவைகள் வகைக்கு இரண்டு விராகனெடை கொண்டு பால்விட்டு அரைத்துக் காய்த்து வடித்தெடுக்கும்போது ஒரு பலம் சுத்தித்த கந்தகம் நுண் பொடியைத் தூவிக்கிளறி, 40 நாள் நெல்மறைவில் மூடிவைத்தபின் எடுத்து 5 முதல் 10 துளிவரையில் பொரிமாவில் நடுவில் விட்டுக் காலை மாலை யாக நாற்பது நாட்கள் வரையில் கொடுத்து, மருந்திற்கு ஆகாப் பொருள்களை நீக்கி வர, பெருநோய் நீங்கும்.

(2) சேங்கொட்டை அரை வீசை, கடுக்காய் ஒரு வீசை, காட்டுச் சீரகம், ஆயில் பட்டை, சிவனார் வேம்பு, பேய்ச்சீந்தில் கிழங்கு வகைக்குப் பலம் பத்து இவைகளை நன்றாக இடித்து நாலுபடி நீர் விட்டு அரைப்படியாகச் சுண்ட வைத்து, அத்துடன் நெய் படி அரை கூட்டி, அதில், விலாமிச்சு, வெட்டி வேர், சந்தனம், கருங்காலிக்கட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் ஒன்று கொண்டு பால் விட்டு நெகிழ அரைத்துக் கலக்கிச் சிறு தீயால் எரித்துப் பதத்தில் வடித்ததில் கோரோசனை இரண்டு விராகனெடை பொடித்துத் தூவிக்கலந்து வைத்துக்கொள். இதில் ஒரு காசெடை சர்க்கரையுடன் கொள்ளவும்.

**எண்ணெய் வகைகள் :**—(1) ஊழலாற்றிப்பட்டை, ஆயில் பட்டை அழிஞ்சில் பட்டை, பூவரசுப்பட்டை, புங்கு வேர்ப்பட்டை, சுரப்புன்னைப்பட்டை வகைக்குப் பலம் பத்தாகக் கொண்டு குறுகத் தறித்து ஆறு படி நீரிட்டு, சிறு தீயால் காய்த்துக் குளிர்ந்தபின் பட்டை வகைகளைப் கசக்கிப்பிழிந்த நீருடன், ஆடுதீண்டாப்பாளை, சிறு செருப்படை, சிறு நெரிஞ்சில், வெள்ளறுகு, கற்றாழை, கள்ளியின் குருத்து இவைகளின் சாறு வகைக்குப் படி கால் பசுப் பால் படி இரண்டு, சிற்றாமணக்கு நெய்படிநான்கும் கூட்டிச் சிறு தீயாக எரித்துச் சுண்டி வரும்போது அதில், கார்போகரிசி, நீரடிமுத்து, கருவாப்பட்டை, சீந்திற் கிழங்கு, கொல்லன் கோவைக்கிழங்கு, கருவூமத்தை விரை, சோம்பு, குரோசாணி, ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு ஒரு பலமாகக்

கொண்டு பால் விட்டரைத்துக் கரைத்து, மெழுகுபோற்றிரண்டு வரும் போது தீயாற்றி இளஞ்சூடோடே வடித்து நெல் மறைவில் இருபதுநாள் வைத்தெடுக்கவும். இதனில் கால் முதல் அரை உச்சிக்கரண்டி அளவு கொடுக்க கழிச்சலுண்டாம், வாரத்திற்கு மூன்று நாள் மட்டும் கொடுத்து, ஆகாப்பொருள்களை நீக்கி, சாப்பிட்டுவந்து நான்கு நாள் விட்டு, கடைநாளில் தலைமுழுகவும். இவ்வாறு விட்டுவிட்டு நான்கு முறை சாப்பிட்டு வந்தும், மேலுக்குக் கூறிய எண்ணெய்களைக் கொண்டு உடலில் பூசியும் வர, நோய் போம்.

மாத்திரைகள் (1) தூய்மைப்படுத்திய தாளகம், கந்தகம், இரசம் வகைக்குப்பலம் ஒன்று செம்புச் செந்தூரம் பலம் அரை, வெள்வங்க பற்பம் பலம் கால், ஆயில் பட்டை, வாலுழுவை, 'கருஞ்சீரகம், கார்போகரிசி, நீரடிமுத்து வகைக்குப்பலம் ஒன்று ஆக இவைகளைக் கல்வத்திட்டு, வெள்ளாட்டுப் பிச்சு, சிவனார்வேம்புக் குழித்தைலம், ஆடுதீண்டாப்பாளை, புங்கம்பால் இவைகளில் தனித்தனி ஒவ்வோர் நாள் அரைத்துக் குன்றி அளவு மாத்திரை செய்து வைத்துக்கொள்ள வும், ஒரு மாத்திரை காலை மாலையாகத் தேனில் சாப்பிட, படை நிறம் மாறும்.

(2) கருஞ்சீரகம், சேராங்கொட்டை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவைகளைப் பொடியாக்கிச் சட்டியிலிட்டு நாற்பது நாள் வரையில் ஆட்டுப் பிச்சில் ஊறவைத்துப் பின் நன்றாக உலர்ந்தபின் அப்பிச்சால் அரைத்துக் கடலை அளவு மாத்திரைகளாக உருட்டிவைத்துக் கொண்டு ஒன்று முதல் இரண்டு மாத்திரை தேனில் கொள்ளவும்.

அசமதா கத்தரிசி யாமலக வித்து
வசலை விரைசமனாய் வைத்து—மசகத்தேன்
விட்டரைத்து ருட்டியப்பு விட்டிழைத்தி டப்பறக்கும்
நொட்டழுத்து குட்டமெட்டு நோய்.

(தேரன் வெண்பா)

(பொருள்) ஓமத்தைக்குத்தி, தோல் நீக்கி எடுத்த அரிசியும், நெல்லி விரையும், வசலையின் விரையும் ஓரளவாகக்கொண்டு, பொடித்துக் கொசுத் தேன் விட்டு நன்றாக அரைத்து, சுண்டை அளவு உருட்டி உலர்த்தியதில் காலை மாலையாகத் தண்ணீரிலிழைத்துண்ணப் பெரு நோய் வகை யாவும் போம்.

பற்பச் செற்தூரங்கள்.—செம்பின் பற்பமோ செந்தூரமோ இந் நோய்க்கு மிகச் சிறந்ததென்பர் ; ஆயினும் தேரையர், பிசகில் ''இடையறாக்களிம்பால் கொல்லுவததுவே'' எனக்கூறியதால் செம்

பால் ஆக்கிய பற்பச்செந்தூர சுண்ண முதலியவைகள் சரிவர செய்து முடியாததாகில், தீங்கை விளைவிக்குமேயன்றி நன்மை பயக்காதென அறிதல்வேண்டும். ஆதலின், செய்முறை சிறிதும் வழுவாது செய்த செம்புபற்பம்,செந்தூரம், சுண்ணம் இவைகளாகிலும் செம்பின் உப்பாகிய துருசின் செந்தூர, பற்ப சுண்ணமாகினும் நோயினன், உடல் வன்மையையும் நோயின் நிலையையும் நன்கறிந்து அளவிட்டுக் கொடுத்தால் நன்கு பயனளிக்கும்.

அன்றியும் இரசத்தால், நன்முறையில் செய்த பற்பச் சுண்ணங்களும் இந் நோக்கான நன்மருந்துகளேயாம்.

செம்பிற்கு இரண்டாவதாக இரச பற்பம் அல்லது இரசச் சுண்ண நன்மருந்தாகும். இவ்விரண்டிற்கும் அடுத்தபடியாக வெள்ளீயம், காரீயம், இவைகளின் பற்ப செந்தூரங்களையும் வழங்கலாம்.

மெழுகுவகைகளில், இரசகந்தி மெழுகு, சேங்கொட்டை இடி மெழுகு, நந்தி மெழுகு இவைபோன்றவைகளையும் நோய்க்குத்தக்கவாறு வழங்கலாம்

**மேல் பூச்சு மருந்துகள் :**

(1) கார்போகரிசி படி ஒன்று, கருஞ்சீரகம் படி அரை, நீரடிமுத்தின் பருப்பு படி கால், புங்கு வித்து படி அரைக்கால் இவைகளை நன்றாக இடித்து எட்டு படி நீரிட்டுக் குழம்பு பதத்தில் வரும்போது அதில் சிற்றாமணக்கு நெய் படி இரண்டு கூட்டி, மருக்காரை வித்து, கோட்டம், ஞாழல், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் வகைக்குப் பலம் ஒன்றெடுத்து இடித்துப் பால் விட்டரைத்துக் கலக்கி, சிறு தீயால் எரித்து வடித்துக் கொண்டு உடல் முழுமையும் பூசி இரண்டு முதல் நாலு மணி நேரம் ஊறவைத்துப் பின் அரைப்பிட்டுக் குளித்து வரவும்.

(2) சித்திரமூலம், வெட்பாலைப் பட்டை, அவுரிவேர்,சிவனார் வேம்பு வேர் இவைகளை ஓரளவாக நன்றாக இடித்துப் பொடித்து வைத்துக் கொண்டு வேண்டிய அளவு எடுத்து புங்கம்பாலும், பசும்பாலும் ஓர் அளவாகக்கூட்டிக் குழைத்து உடலில் பூசி, சூரியன் கதிர்படும்படி சிறிது நேரம் காய்ந்தபின் இளவெந்நீரிலாகிலும் குளிர்ந்த நீராகிலும் குளிக்க செய்யவும்.

(3) காரை வேர், சாரணை வேர், கொடிவேலிவேர் இவைகளைத் தனித் தனியே பொடியாக்கி ஒரு பலமாகக் கொண்டு கூட்டி எருக்கிலைச் சாறு, சதுரக் கள்ளிச்சாறு, பசுநீர் ஆகிய மூன்று வகைக்கு உழக்காகக் கூட்டி வெயிலில் உலர்த்தியபின் ஒரு படி எண்ணெய் விட்டு, சூரிய புடமாக வைத்திருந்து எண்ணெயைத் தெளிந்த உடலில் பூசிக் குளிக்கவும்.

காஞ்சரத்தின் வித்துங் கணிப்பிசினுங் தாதகியின்
பூஞ்சுனையு மொன்றாய்ப் புடைத்ததனில் — வாஞ்சநெய்யை
வாய்வனமா வோடுண் டதைமாத் திரம்பூச
நோய்வனமாய்ப் போம்பெரிய நோய்.

(தேரன் வெண்பா)

வெண்படை (வெண் குட்டத்திற்கு)

தங்க பற்ப மாத்திரை.

ஒரு தோலா தங்கத்தைச் செம்முள்ளிக்கீரைச் சாற்றால் காய்த்துக் காய்த்துத் தோய்த்தபின் நுண்ணிய பொடியாக அராவிய பொடியை மேற்படி சாலில் மூன்று நாள் ஊறவைக்கவும். பின் நீர்விட்டுக் கழுவி உலர்ந்த பின் கல்வத்திலிட்டு சிவப்புச் சிறு அம்மான் பச்சரிசிப் பூண்டின் சாற்றில் கை விடாமல் நான்கு ஐந்து நாட்களுக்குக் குறையாமலரைத்துத் திரளும் போது ஓர் வில்லையாகத்தட்டி உலர்த்தவும். உலர்ந்தபின் இவ்விலைக்குத் தகுந்தாற் போல் கடம்பினிலையை அரைத்துக் கீழும் மேலுமாக மூடிச் சீலை மண் பூசி நன்றாக உலர்ந்தபின் நூறெருவிற் புடத்தை யிட்டெடுக்க, நீறாகும். இல்லையேல் மீண்டும் ஒன்றிரண்டு முறை சிவப்பு அம்மான் பச்சரிசி இலைச் சாற்றில் மேற்கூறியவாறே புடமிட்டெடுக்கவும்.

பின்பு, சவுரி இலைச் சாறு, ஆடாதோடை இலைச்சாறு ஆகிய இவ்விரண்டையும் வாயகன்ற சட்டியிலிட்டுச் சூரியனில் காயவைத்து மெழுகு போல் திரளும் போது எடுத்து வகைக்குப் பலம் பத்தாகக் கொண்டு அத்துடன் முற்கூரிய தங்க பற்பத்தையும் ஒரு பலம் புனுகையுங் கூட்டிக் கல்வத்திலிட்டு அரைத்து நெல்லிக் கனியளவு உருட்டி நிழலி லுலர்த்திய உருண்டைகளை ஒரு வீசை எள் நெய்யிலிட்டு வைத்துக் கொண்டு ஒரு உருண்டை காலை மாலையாக உண்டு அவ் வெண்ணை யைக் கொண்டு வாரத்திற்கு ஒரு முறையாகத் தலை முழுகி வர வெண் குட்டம் போம்.

விளாம்பட்டை, கருஞ்சீரகம், சிவனார் வேம்பு, சேங்கொட்டை, ஆட்டுப் புழுக்கை, ஓர் அளவாகக் கொண்டு உலர்த்திக் குழித்தைலம் செய்யவும்; இதனில் ஒன்று முதல் இரண்டு துளிவரையில் அரிசி மாவும் பனைவெல்லமும் கலந்து காலை மாலையாக ஐந்து நாட்கள் வரையும் உட்கொண்டு மறு நாள் பூவரசம்பட்டைச் சாற்றைக் கழிச்ச லாகும் அளவிற்குக் கொடுத்து அதன் மறு நாள் எண்ணெய் தேய்த்துத் தலை முழுக்காட்டவும்; இவ்வாறாக நான்கு ஐந்து முறை கொடுக்க வெண் புள்ளிகள் மறைந்துவிடும். எளிதில் தீராவிடின் மீண்டும் மேற் கூறியவாறே கொடுக்கவேண்டும்.

மேல் பூச்சு மருந்து :

(1) தாளகம், துருசு, அன்ன பதி வகைக்குப்பலம் ஒன்று, ஆயில் பட்டை, காட்டு மல்லி இலைக் கொழுந்து, எருக்கிலையின் பூவும் தளிரும், சரக்கொன்றைப் பட்டையும் வகைக்குப் பலம் நான்கு இவைகளை நன்றாக அம்மியிலிட்டு அரைத்துக் கல்வத்தில் மாற்றி, சிவப்பு சிறு அம்மான் பச்சரிசி இலைச் சாற்றிலும், அழவன விலைச் சாற்றிலும், புங்கம் பாலிலும் முறையே தனியாக ஐந்து நாட்கள் வரை அரைத்து மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு வெண்படைகட்கு, பசு நீராலாகிலும், அழவன இலைச் சாற்றிலாகிலும் உரைத்துப் பூசிவர வெண் படை சிவந்து கொண்டே வந்து இயற்கை நிறமடையும்.

(2) பூவரசம் பட்டையினுட் சதையைச் சிறிது வாயிலிட்டு மென்று அதன் பாலை உதட்டில் படும் படியாக நாவினால் பூசிக் கொண்டே சாற்றையும் சிறுகச் சிறுக விழுங்கி விடல் வேண்டும். இவ்வாறு காலையில் மட்டும் உதட்டில் காணும் வெண் புள்ளி நிறம் மாறும் வரை செய்து வரவும்.

(3) இவ்வாறே காட்டுமல்லி இலைக்கொழுந்தைக் கற்பம் போல் சிறிது மிளகு கூட்டிக் காலையில் ஒரு எலுமிச்சங்காயளவு வாயிலிட்டு உதட்டில் பூசுவது போலப் பூசி விழுங்க, உதட்டின் வெண் புள்ளிகளே யன்றி மற்ற இடத்தில் காணும் புள்ளிகளும் நீங்கும். இப்புள்ளிகளுக்கும் இதனையே பூசலாம்.

உணவு. — இந் நோய்க்கு மீன், நண்டு, நத்தை வகையே ஆகாப் பொருள்களாம்.

படுக்கை. — ஈச்சம்பாய்ப் படுக்கை நன்று. நோயினன் படுக்கையிலும் அவன் உட்காரும் இடங்களிலும் மற்றவர் படுத்துக் கொள்வதோ உட்கார்ந்து கொள்வதோ நோயினைத் தொத்திக் கொள்வதாகும். அவர்களின் மூக்குச் சளி, புண்நீர், எச்சில், கோழை, வியர்வையாவும் கூட நோயினைப் பரவச் செய்யுதல் பற்றி அந்நாளில் நோயினரை நாடு நகரங்களின் எல்லைகளுக்கப்பால் தனிப்படுத்தி வைத்திருந்ததாகக் காணப்படுகிறது. ஆதலின் இந்நாளிலும் அத்தகைய நோயினரைத் தனியே வைத்திருப்பது நலமென அறிக.

வாழ்த்து

கலி விருத்தம்.

மன்னும் தமிழகம் மாணசிவன் தன்னருள்
துன்னும் சித்தரும் தொல்சித்த மருத்துவம்
நன்னர்ச் சைவமும் நற்குரு சாமியும்
உன்னுமிந் நூலென்றும் ஓங்கி வாழ்கவே.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 23 | மாறுபாட்டைதல் | மாறுபாடடைதல் |
| 12 | 18 | முழுமையு | முழுமையும் |
| 17 | 6 | யுறக்ககுண்டாம் | யுறக்கமுண்டாம் |
| 26 | 3 | தல் | போதல் |
| 30 | 28 | எறிதல் | எரிதல் |
| 83 | 17 | கேரை | கோரை |
| 84 | 14 | ளிப்பிணிசுரம் | வளிப்பிணிசுரம் |
| 160 | 29 | இதபைன | இதனைப் |
| 166 | 26 | டுதலை | பொடுதலை |
| 220 | 21 | வன்னம் | வண்ணம் |
| 224 | 20 | நுரையூரல் | நுரையீரல் |
| 241 | 2 | ரில் | நீரில் |
| 246 | 6 | நடத்கைளாலும் | நடத்தைகளாலும் |
| 315 | 1 | நிற். . .கால் | நிற்காமல் நாட்கு |
| 407 | 26 | வரட்சி | வறட்சி |
| 417 | 7 | குறுதி | குருதி |
| 427 | 5 | தேரார் | தேரர் |
| 437 | 8 | கேவைக்காய் | கோவைக்காய் |
| 443 | 12 | கறடுமுறடா | கரடுமுரடா |
| 447 | 19 | கழித்தலும் | கழிதலும் |
| 467 | 12 | தாபத்தை | தாபிதத்தை |
| 469 | 17 | வகைநில் | வகைகள் |
| 475 | 1 | கற்றாமை | கற்றாழை |
| 489 | 5 | நிர்க்குறி | நீர்க்குறி |
| 524 | 15 | கொள்ளுத்தி | கொளுத்தி |
| 542 | 17 | சாறடை | சாரணை |
| 587 | 7 | வள்ளி | வளி |
| 592 | 22 | இம்நோயில் ஏழும் | இந்நோயில் எழும் |
| 606 | 1 | உளுற்து | உளுத்து |
| 611 | 20 | நோய லின் | நோயாதலின் |